


zeevaa



zeevaa

# விஜய மகாதேவி

( பாகம் 1 )

**சாண்டில்யன்**

51வது சரித்திர நாவல்

SCAN & EDIT
ZEEVAA
zeevaa99@gmail.com

பாரதி பதிப்பகம்
126 / 108, உஸ்மான் சாலை,
தியாகராய நகர், சென்னை-600 017.
த.பெ.எண் : 4984 போன் : 24340205

zeevaa

# பதிப்புரை

சாண்டில்யன் அவர்களின் 51ஆவது சரித்திர நாவல் இந்த விஜய மகாதேவி. இந்நூல் குமுதத்தில் தொடர்ச்சியாக வெளிவந்த சமயம் இதை வெளியிட வேண்டும் என்று கேட்டேன். மிகவும் மகிழ்ச்சியுடன் தந்தார்கள். ஆனால் எந்த ஒரு பதிப்பாளரும் ஒரு ஆசிரியருக்கு இதுவரை உரிமைக்காக ரூ. 50 ஆயிரம் ஒரே சமயத்தில் கொடுத்ததாக சரித்திரம் இல்லை. பலருக்கு பணம் இருந்தும் கொடுக்க மனம் வருவதில்லை. ஆனால் என்னிடம் இவ்வளவு பெரிய தொகை கொடுக்கும்படியான நிலை இல்லை.

சாண்டில்யன் அவர்கள் 40 ஆண்டுகள் என்னுடன் பழகி வந்தவர்கள். அவர்கள் என்னிடம் கொண்டுள்ள அளவுக்கு மீறிய அன்பின் காரணமாக இந்தப் பணம் எதற்குத் தேவை என்பதைச் சொன்னார்கள். அவர்கள் சொன்னதைக் கேட்டதும் மனநிறைவுடன் நான் எப்படியும் அளிக்கிறேன் என்றேன். அதன்படி செய்தேன். அளவில்லா ஆனந்தத்துடன் இந்நூலை வெளியிட எனக்கு உரிமை தந்தார்கள். அவர்கட்கு என் உளம் நிறைந்த நன்றி. இந்நூல் வெளி வர எங்களுக்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்த தி. நகர் ஸ்டேட் பாங்க் ஆப் திருவாங்கூர் மானேஜர் அவர்கட்கும் எங்கள் நன்றி.

சென்னை - 17
டிசம்பர் - 1985

பழ. சிதம்பரம்
பாரதி பதிப்பக நிறுவனர்

**இரண்டு புத்தகங்களும் (மூன்று பாகங்களும் சேர்ந்து) விலை ரூ. 500.00**

VIJAYA MAHADEVI PART I & II ❑ Historical Novel by : CHANDILYAN ❑ First Edition: Dec.1985 ❑ Second Edition: April 1995 ❑ Third Edition: March 1998 ❑ Fourth Edition: July 2004 ❑ Fifth Edition: Sep.2010 ❑ Sixth Edition: April 2012 ❑ Price (Three parts of Two books) Rs. 500.00 ❑ © with the Author ❑ Published by : BHARATHI PATHIPPAGAM, 126/108 Usman Road, T. Nagar, Chennai - 600 017, P.Box No.4984 Phone : 24340205 ❑ Printed at: Sivakami Printo Graphics, 160, Big street, Triplicane, Chennai-600 005. ❑ Phone : 28445051 ❑ Email : bharathipathippagam@gmail.com ❑

zeevaa

# முன்னுரை

விஜய மகாதேவி சரித்திரக் கதை மட்டும் அல்ல; சரித்திரம் படைத்த கதை. பதிப்பக வரலாற்றில் பெரும் புரட்சியை உண்டு பண்ணிய கதை. இதை ஒட்டுமொத்தமாக கொஞ்சமும் தயங்காமல் பெரும் நம்பிக்கையோடு ரூபாய் ஐம்பதாயிரம் கொடுத்து பாரதி பதிப்பகத்தார் வாங்கியதை கேட்டு மலைத்து நின்றவர் பலர்.

விஜய மகாதேவியை முதலில் எழுத யோசித்து பின்பு வேண்டாமென்று நிறுத்திவிட்டேன். சிங்களர், தமிழர் பண்டைக்கால உறவைப்பற்றி நீண்ட நாளாக நல்லதொரு நவீனம் படைக்க எண்ணி சிங்களம் செல்ல தீர்மானித்தேன். குமுதம் நிர்வாகிகளும் உடனே ஒப்புக்கொண்டார்கள். ஆனால் சிங்கள அரசு ஒத்துக்கொள்ள வில்லை. நேர்முகமாக எதிர்க்காமல் அங்கே இருக்கும் அப்பாவி தமிழ் மக்களை பைசல் செய்யத் தொடங்கினர். வேண்டாம் இந்த முயற்சி என்ற மனப்போக்கில் இருந்த என்னை, என் ரசிக நண்பர்கள் வற்புறுத்தி இக்கதையை எழுதச் சொன்னார்கள். வேறு வழி யில்லாமல் எழுத முற்பட்டேன். சிங்களத்துக்கு போயிருந்தால், விஜய மகாதேவி போன்ற ஒரு நல்ல சரித்திர நாவல் தமிழ் உலகிற்கு கிடைத்திருக்காது. என்னுடைய சரித்திரக் கதை வரும் வாய்ப்பு சிங்களத்திற்கு கிடைத்திருக்காது.

இந்நூல் பலமான அசைக்க முடியாத சரித்திர ஆதாரங்களுடன் எழுதப்பட்டது. ஆங்காங்கே குறியிட்டு ஆராய்ச்சித் தொகுப்புகளை கொடுத்திருக்கிறேன். ஈழ-தமிழ் உறவு முறைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் வரலாற்று மாணவர்களுக்கு இவை மிகவும் உபயோகமாக இருக்கும். பண்டைய ஈழ-தமிழர் சரித்திரத்தைப் பின்னணியாகக் கொண்டு பின்னப்பட்ட இந்நூல் குமுதத்தில் சுமார் 3 வருட காலம் தொடர்கதையாக பரிமளித்தது. பல்லாயிரக் கணக்கான ரசிகர்களின் பாராட்டைப் பெற்ற இந்நூல் புத்தக வடிவிலும் அதே ஆதரவைப் பெறும் என்பதில் எனக்கு துளியும் சந்தேகம் இல்லை.

zeevaa

பாரதி பதிப்பகத்தின் உரிமையாளர் பழ. சிதம்பரம் அவர்கள் செலவைப் பொருட்படுத்தாமல் மிகவும் அழகான முறையில் இந்நூலை வெளியிட்டதற்கு என் நன்றி. இதைத் தொடராக குமுதத்தில் பிரசுரித்த ஆசிரியருக்கும் நான் மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன்.

சாண்டில்யன்



# விஜய மகாதேவி

## (முதல் பாகம்)

## 1. புதுப்பயணி

மகா வீரனான விஜயன் மயக்கம் தரும் அந்த மாலை வேளையில் தனது கரிய புரவியின்மீது அமர்ந்த வண்ணம், புரவி நின்ற இடத்திலிருந்து சில அடிகளே தள்ளியிருந்த *ரிஷிகுல்யா நதியின் பூர்ண பிரவாகத்தையும், சற்றுத் தூரத்தே தெரிந்த மகேந்திர மலையின் உச்சிகளையும் பக்கச் சரிவுகளையும் பார்த்து, இந்த மாயா பிரபஞ்சத்தில் நிர்வாண நிலையைவிட ஆடை சுற்றிய மறைந்த நிலையே அழகை அள்ளி வீசுகிறது என்று உள்ளத்தே நிர்ணயம் செய்து, அந்த நிர்ணயத்துக்குப் பச்சைப் பசேலென்ற மரங்கள் அளித்த மரகத ஆடையும், கண்களைப்போல் பளபளத்த இரண்டு உச்சிகளைத் தழுவி லேசாக மறைந்துவிட்ட இரு சிறு மேகத் துண்டுகளுமே உதாரணம் என்று தனக்குள் சொல்லியும் கொண்டான். "நல்லது பொல்லாதது, சலம், அசலம் ஆகிய எல்லாவற்றுக்குமே ஒரு மறைவு வேண்டியிருக்கிறது. அதன் தேவையை முன்னிட்டுத்தான் பிறந்தவுடன் மனிதனின் கண்களை மாயையெனும் திரை மூடிக்கொள்கிறது" என்று வேதாந்தத்தையும் தனது வலிய உதடுகளால் முணுமுணுத்துக்கொண்டான்.

"ஐப்பசி கார்த்திகை அடைமழை"யென்று தமிழகப் பழமொழி சுட்டிக்காட்டியிருந்தும், வர்ஷருது புகுந்து ஒரு மாதமாகியும் மழை

* Rishikulya River is the ancient name for Modern Ganjam River-'Geography of Ancient India' - By Gunningham-P. 592.

zeevaa

அதிகமாகத் தலைகாட்டாமல் லேசாக ஆங்காங்கு தூறல்களை உதறிவிட்டுச் சென்றிருந்ததால், ஏதோ பேருக்கு நனைந்து புதிதாக நீராடிவிட்டு வரும் பருவ மங்கையைப்போல, தனது மரகத ஆடையைச் சிறிதளவே நனைத்துக்கொண்டு, அப்படி நனைந்த காரணத்தினாலேயே எழில்கள் புலப்பட நின்ற மகேந்திர மலையையும், பெருவெள்ளத்திலிருந்த ரிஷிகுல்யா நதியையும் நோக்கி ''இந்த வருடத்தில் வர்ஷமில்லையா அல்லது பருவம் தள்ளிப் போகிறதா?'' என்று ஒரு வினாவையும் எழுப்பிக் கொண்டான் வாலிபனான விஜயன்.

''மனிதர்களின் பாவத்தால் பருவங்கள் மாறுகின்றன. மனிதனின் பாவ நெஞ்சத்தால் பஞ்சங்களும் ஏற்படுகின்றன. இதற்கு இயற்கை பொறுப்பாளியல்ல'' என்று தத்துவம் பேசிக்கொண்ட விஜயன், ''கலிங்கமெனும் இந்தப் புண்ய பூமியிலும் இத்தகைய விபரீதங்கள் ஏற்படுமானால், அதற்குப்பிந்திய தலைமுறைகளே காரணமே யொழிய பழைய தலைமுறைகள் காரணமல்ல'' என்று திட்டமாக எண்ணமிட்டான். ''ஐந்தாவது வேதமென்று வேத விற்பன்னர்களால் கருதப்பட்டதான மகாபாரதத்திலேயே பிரஸ்தாபிக்கப்பட்டதும், விஷ்ணு புராணத்தில் ரிஷிகுல்யா நதியின் உற்பத்தி ஸ்தானமாகச் சொல்லப்பட்டதுமான புனிதமான மகேந்திர மலைகூடப் பிற்கால சந்ததிகளுக்குத் தனது வளப்பத்தைப் பங்கிட்டுக் கொடுக்க வில்லையென்றால், அதற்குக் காரணம் மனித கர்மாக்களே'' என்றும் சொல்லிக்கொண்ட விஜயன், வாலிப வயதின் காரணமாக வேதாந்த எண்ணங்களுடன் அழகின் ஆராய்ச்சியிலும் இறங்கினான்.

''எட்ட இருக்கும் மலையை நான் அடைந்தால் அதன் அழகை அனுபவிக்கலாம். ஆனால் கற்புடைய பெண்களின் மனம்போல எதற்கும் சலியாமல் நிற்கும் அந்த மலை எனக்கு இடம் தருமா என்பது சந்தேகம். ஆனால் அதன் உள்ளே எத்தனை மரங்கள், கொடிகள், மலர்கள், புதர்கள்! ஒவ்வொன்றிலும் அழகு உண்டு. ஆனால் அண்ட விட்டால் தான் அழகை அனுபவிக்க முடியும். அந்த அனுபவத்துக்கு மனிதனுடைய கர்ம பலன்கள் காரணமாகின்றன''

zeevaa

என்று மனத்துள் சொல்லிக் கொண்டு ரிஷிகுல்யா நதியின் பிரவாகத்தை நோக்கி "இதை எப்படிக் கடப்பது?" என்று பெருமூச்சு விட்டான். அப்படிப் பெருமூச்சு விட்டுத் தனது பக்கத்தில் இன்னொரு பழுப்பு நிறப் புரவியில் ராட்சஸனைப் போல் அமர்ந்திருந்த மூர் இனத்தைச் சேர்ந்த இன்னொருவனை நோக்கினான்.

நன்றாக வழித்து விடப்பட்ட தலையுடனும், நன்றாக வளர்ந்தாலும் அவ்வப்பொழுது கத்திரித்துவிடப்பட்டதால் கட்டையாக இருந்த பழுப்பு மீசையுடனும், கூரான தாடியாலும், புஷ்டியான கரிய முகத்தில் முளைத்துச் சிவந்து விழித்த பயங்கர விழிகளாலும் சாட்சாத் ராட்சஸனாக விளங்கிய அந்த மூர் இனத்தானும் விஜயனின் அழகிய வதனத்தின்மீது தனது பார்வையை நிலைக்க விட்டு, 'எசமான்! இன்றிரவை இங்கேயே கழித்துவிடும் நோக்கமில்லையென்று நினைக்கிறேன்,' என்று கரகரத்த குரலில் கூறினான்.

வாலிபனான விஜயனின் அழகிய வதனத்தில் அதுவரை இருந்த சிந்தனைச் சாயை மறைந்து அது இருந்த இடத்தை மகிழ்ச்சியின் ஒளி ஆக்ரமித்துக் கொண்டது. சிறிய அரும்பு மீசைக்குக் கீழே பெண்களின் உதடுகளைப் போல் சிவந்து மென்மையாகத் தெரிந்த உதடுகளிலும் இளமுறுவலொன்று படர்ந்தது. அந்த உதடுகள் அந்த வாலிபனின் உடலைப்போல் பார்ப்பதற்குத்தான் மென்மையே தவிர உண்மையில் மிகக் கடினமானவை, வலுவானவை என்பதை அவற்றின் லேசான மடிப்பு ஒன்று வலியுறுத்தியது. இருபத்திரண்டு வயதுக்கு மேல்மதிக்க முடியாத அந்த வாலிபனின் முகத்தின் உச்சியை அவன் தலையின் கரியகுழல்கள் சிறிதே மறைத்திருந்த தால் மேகங்கள் தொங்கிய மகேந்திர மலையின் மற்றொரு உச்சியைப்போலவே அவன் அழகிய முகம் காட்சியளித்தது. அவன் கண்களின் பார்வையில் அதிகக் கூர்மையில்லை. பெண்களின் கண்களைப்போல் அழகாகவும் புஷ்பம்போல் மென்மையாகவும் இருந்ததென்றாலும், அவ்வப்பொழுது திடீர் திடீரென்று தோன்றிய

zeevaa

ஒளிகள் அந்த மென்மை நம்பத் தகுந்ததல்லவென்பதை நிரூபித்தன. அவன் மெல்லிய நீண்ட கைகளும், உறுதியாய்ப் புரவியின் விலாவில் உதைத்திருந்த கால்களும், சிறிய இடையும், எல்லாமே அவனுக்கு ஒரு கம்பீரத்தை அளித்திருந்தன. அவன் இடைக் கச்சையிலிருந்து நீளமாக இடது புறத்தில் தொங்கிய மெல்லிய வாள் உயிரைக் குடிக்கும் சர்ப்பம் போல் புரவியின் அசைவுக்குத் தகுந்தபடி நெளிந்து கொண்டிருந்தது. அந்த வாளின் பிடி சிங்கத்தைப்போல் நல்ல தங்கத்தால் செய்யப்பட்டிருந்ததன்றி, அந்தச் சிங்கத்தின் கண்களிரண்டிலும் மாணிக்கக் கற்கள் இரண்டு புதைக்கப்பட்டிருந்ததால் சிங்கம் எப்பொழுதும் சினத்திலிருக்கும் நிலையை அறிவுறுத்தியது. அந்த வாலிபன் காலில் இருந்த பாதக் குறடுகள் மொராக்கோ தோலால் செய்யப்பட்டிருந்தாலும், அதிலிருந்த சித்திர வேலைப்பாடு அவை பாரதத்தில் செய்யப்பட்டவை என்பதைச் சந்தேகமற விளக்கியது.

இப்படி உயிர்த் துடிப்பின் இலக்கணமாய்ப் புரவியில் உட்கார்ந் திருந்த அந்த வாலிபன் தனது நண்பனும் மெய்க்காவலனுமான அந்த மூர் இனத்தானின் வினாவினால் சிறிதே முறுவல் கொண்டு, "சமத், இந்த நதியையும் அந்த மலைகளையும் விட்டுவர மன மில்லைதான். இருப்பினும் உள்மனம் காமுகர்களின் இதயத்தைப் போல எதிர்க்கரைக்குத் தாவிவிட்டதால் இனி இங்கிருப்பதில் அர்த்தமில்லை. சரி வா. நதியைக் கடக்கும் வழியைப் பார்ப்போம்" என்று கூறிக்கொண்டே தனது புரவியை விலாவில் லேசாகக் காலால் உதைத்து அதை நடக்கவிட்டான். அவனை சமத் என்ற மூர் இனத்தானும் பின் தொடர்ந்தான்.

முதல் நாளின் தூறலால் நதிக்கரையில் உளை மிகுந்து வழுக்கும் நிலையில் இருந்தாலும், எந்த நிலையையும் சமாளிக்கும் அந்த அரபிப் புரவிகள் இரண்டும் குளம்புகளை ஊன்றி வைத்துத் திடமாகவே நடந்தன. அப்படி நடந்ததால் அடிக்கடி புடைத்த அவற்றின் கால்களின் நரம்புகள் அவற்றின் வலுவுக்கு மட்டுமின்றி அவற்றின் வளைவுக்கும் எடுத்துககாட்டாக இருந்தன. இப்படி

zeevaa

நடந்த இரு புரவிகளும் நதிக் கரைக்கு அருகாமையில் வந்ததும் விஜயன் எதிரே தெரிந்த பெரும் பிரவாகத்தை நோக்கி, "சமத்! இதை எப்படி தாண்டுவதாக உத்தேசம்?" என்று வினவினான்.

ரிஷிகுல்யா நதியின் வேகமான நீரோட்டத்தையும் பயங்கர ஆழத்தையும், பிரவாகத்தில் தெரிந்த சுழிகளாலும் மிதந்து வந்த நுரைகளாலும் சமத் நிலைமையைப் புரிந்து கொண்டான். அதனால் கூறினான், "தாண்டுவது கஷ்டந்தான்," என்று.

விஜயனும் நீரோட்டத்தையும் அதில் மிதந்து சென்ற நுரை மகுடங்களையும், அதன் சுழல்களில் அகப்பட்டுச் சுழன்று கொண்டிருந்த சிறு மரக்கிளைகளையும், மகேந்திர மலையிலிருந்து மிதந்து வந்த மலர்களையும் நோக்கினான். "ஆம், கடப்பது கஷ்டந்தான். ஆனால் கஷ்டமில்லாமல் மனிதன் எந்தப் பலனை அடைய முடியும் சமத்?" என்று மெய்க்காவலனைக் கேட்டான்.

"அப்படியானால் புரவியை நதியில் இறக்கட்டுமா?" என்று வினவினான் சூர்சமத்.

"புரவி இந்த வேகத்தைச் சமாளிப்பது கஷ்டம். இங்கு ஏதாவது படகு இருக்கிறதா பார்த்து வா. அதோ சில குடிசைகள் தெரி கின்றன," என்று கூப்பிடு தூரத்திலிருந்த குடிசைக் கூட்டத்தைக் காட்டினான்.

சமத் அடுத்த ஆணைக்குக் காத்திருக்கவில்லை. சட்டென்று தனது புரவியைத் திருப்பி, குடிசைக் கூட்டத்தை நோக்கிச் சென்றவன் சிறிது நேரத்தில் ஒரு கிழவனுடன் திரும்பி வந்தான். "இவன் நம்மை எதிர்க்கரைக்குக் கொண்டுபோக ஒப்புக் கொள்கிறான்," என்று அறிவித்தான்.

விஜயன் கிழவனை நோக்கினான். "உன்னால் இந்தப் பிரவாகத்தைக் கடக்க முடியுமா?" என்று வினவவும் செய்தான்.

"ஏன் முடியாது?" - கிழவனின் கேள்வியில் சிறிது சினம் தெரிந்தது.

zeevaa

''உன் வயது?'' என்று ஏதோ சொல்ல முயன்ற விஜயனைப் பார்த்து நகைத்த கிழவன், ''உங்களுக்குத் தான் சிறு வயதாயிற்றே. நதியைக் கடப்பதுதானே,'' என்று இகழ்ச்சியுடன் கூறினான். ''பிரபு, வயது வேறு துணிவு வேறு,'' என்று சுட்டிக் காட்டினான்.

இந்தச் சமயத்தில் மூர்சமதின் முகத்தில் சினத்தின் சாயை பூர்ணமாகப் படர்ந்தது. கண்கள் பயங்கரமாக உருண்டன. ''கிழவா! நீ யாருடன் பேசுகிறாய் என்பதை உணர்ந்து பேசு,'' என்றான் நெருப்பைக் கக்கிய குரலில்.

''உணர்ந்துதான் பேசுகிறேன். நதியைக் கடக்க முடியாது என் உதவியை நாடும் இருவருடன் பேசுகிறேன்,'' என்ற கிழவன், ''என் பின்னே வாருங்கள்,'' என்று குடிசைகளை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

அவன் திரும்பி நடக்க ஆரம்பிக்கும் முன்பு ''இவர்...'' என்று ஏதோ சொல்ல முயன்ற சமத்தை ஒரே பார்வையால் அடக்கிய விஜயன் தனது புரவியைக் கிழவனைத் தொடர்ந்து நடக்கவிட்டான்.

கிழவனுடன் குடிசைக் கூட்டத்தை விஜயனும் சமத்தும் அடைந்தபோது மாலை மறைந்து விளக்கு வைக்கும் சமயம் வந்துவிட்டதால், சின்னஞ்சிறு அகல் விளக்குகள் அந்தக் குடிசைக் கூட்டத்தை அலங்கரிக்க ஆரம்பித்தன. வானில் நட்சத்திரங்கள் தோன்றி மழைக்கு முற்றுப்புள்ளி வைத்துக் கொண்டிருந்தன. ஏழைகளின் அந்தக் குடிசைக் கூட்டம் ஏதோ பல வைரங்கள் பொருந்தி மாலையணிந்த இளமங்கையைப் போல இரவின் ஆரம்பத்தில் பார்ப்பதற்கு மிக ரம்மியமாயிருந்ததால், அவற்றின் அழகைப் பருகிக்கொண்டு புரவியைச் செலுத்திய விஜயனை, ''பிரபு! இந்த ஏழையின் குடிசையை தங்கள் பாதங்கள் புனிதப்படுத்த வேண்டும்,'' என்று விண்ணப்பித்துக் குடிசைக்குள் புகுந்த அந்தக் கிழவன் மற்ற இருவருக்கும் வழி காட்ட நீளமான வெண்கல அலங்கார விளக்கு ஒன்றை எடுத்துக்கொண்டு வந்தான்.

zeevaa

அவன் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய மூர்சமதுக்கு இஷ்டமில்லாவிட்டாலும் விஜயன் புரவியைவிட்டு இறங்கியதால் அவனும் இறங்கினான். உள்ளே அவர்களை அழைத்துச் சென்ற கிழவன் ஒரு பாயில் அவ்விருவரையும் உட்கார வைத்து, ''பிரபு! என் மனைவி உங்கள் இருவருக்கும் சூடாகப் பால் கொடுப்பாள். அருந்துங்கள். அதற்குள் நான் படகைச் சித்தம் செய்துவிட்டு வருகிறேன்,'' என்று கூறி வெளியே சென்றான்.

கிழவி பாலைக் காய்ச்சி இரு பித்தளைக் குவளைகளில் கொடுக்க அதைச் சுவைத்து அருந்திய விஜயன் தனது மெய்க்காவலனை நோக்கி, ''சமத்! ஏழையின் அன்பில் எத்தனை சுவை சேருகிறது பார்த்தாயா?'' என்று கேட்டான்.

அந்தச் சுவையை விஜயன் அளவுக்கு ரசிக்க முடியாத மூர்சமத், ''இது ஆட்டுப்பால்,'' என்றான் எரிச்சலுடன்.

''ஏழையின் கையால் கொடுத்ததால் பாராட்டத்தக்கது,'' என்று கூறிய விஜயன், ''பாட்டி! பாத்திரங்களை எடுத்துச் செல்லுங்கள்'' என்று கூறி இருவர் பாத்திரங்களையும் எடுத்துக் கொடுத்தான்.

கிழவியின் நன்றி மிகுந்த கண்கள் விஜயனை நோக்கின. அந்த சமயத்தில் மூர் தனது கச்சையிலிருந்து எடுத்த இரண்டு பொற் காசுகளைத் தனது கையின் ஓர் அசைவினால் தடுத்தாள் கிழவி. ''இங்கு பால் விற்பனை கிடையாது. படகு ஓட்டப் பணம் கொடுத்தால் போதும்.'' என்று கூறிவிட்டுக் குடிசையின் ஓரத்துக்குச் சென்றாள்.

சிறிது நேரத்தில் உள்ளே வந்த படகோட்டி கிழவன், ''பிரபு, படகு சித்தமாகி விட்டது. ஆனால் தங்களுடன் வர இன்னொரு பயணியும் இருக்கிறார். தங்களுக்கு ஆட்சேபணை ஏதுமில்லையே?'' என்று வினவினான்.

''இல்லை,'' என்று கூறிக்கொண்டு விஜயனும் சமதும் எழுந்த சமயத்தில் கிழவன் குறிப்பிட்ட அந்த மூன்றாவது பயணியும்

zeevaa

உள்ளே குனிந்து வந்தார். அந்தப் பயணியைப் பார்த்துத் திகைத்தான் விஜயன். வந்தது ஒரு பெண். அவள் குனிந்து குடிசைக்குள் நுழைந்தபோது அவளது காசுமாலையின் சலங்கைகள் இன்ப இசையைச் சலசலவென்று கிளப்பின. அந்தப் பெண்ணைப் பார்த்ததும் விஜயனும் சமதும் கண்களால் மௌனமாகச் சைகை செய்து கொண்டார்கள். வந்த கட்டழகி அந்த இருவருக்குமே புதியவள்ல்ல.



# 2. காவியக் காரிகை

கழுத்தை வளைத்து இளமார்பில் புரண்ட காசுமாலை சலசலத்து இன்னிசை பாட, கரிய தலைக்குழல் இரண்டு நெற்றி உச்சியில் காற்றில்மெல்ல அலைய, குடிசைக் கோடியில் வைக்கப்பட்டிருந்த கலிங்கத்தின் அலங்காரக் கைவிளக்கில் இரு கண்களும் நட்சத்திரங்களைப் போல ஒளி வீச, குனிந்த நிலையில் ஒடிந்த இடை சற்றே அசைய, குடிசைக்குள் நுழைந்து வந்த கட்டழகியைக் கண்டதும் அவ்வளை இன்னாரென்று புரிந்து கொண்டாலும் ஏதும் புரியாதவர்களைப்போலவே நடந்து கொண்ட விஜயனும் அவன் மெய்க்காவலனும் குனிந்த தலையை நிமிர்ந்தார்களில்லை. விஜயன் மட்டும் ஓரக் கண்ணால் அந்தக் காவியப்பாவையை மீண்டும் ஒரு தரம் நோக்கினான். முன்னமே அந்த அழகியை அவன் பார்த்திருந்தாலுங்கூட அத்தனை அருகாமையில் பார்க்காத காரணத்தால், தனது அரைப் பார்வையிலேயே அவள் லாவண்யத்தை அளவெடுக்கத் தொடங்கினான்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அவளைப் பார்த்திருந்ததற்கும் இன்று பார்ப்பதற்கும் மாற்றங்கள் பல அவள் உடலமைப்பில் இருந்ததை உணர்ந்ததால், 'பெண்கள் எவ்வளவு சீக்கிரம் வளர்ந்து விடுகிறார்கள்!' என்று உள்ளூர வியந்து கொண்டான் விஜயன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒல்லியாயிருந்த அவள் உடலை இயற்கையின் கரங்கள் நன்றாகச் செப்பனிட்டு அளவு மீறாத புஷ்டியை அளித்திருந்ததையும், அதன் விளைவாக இடைக்கு மேலும் கீழும் தெரிந்த லேசாகப் பருத்த எழில் மேடுகளும், உருண்ட

zeevaa

மணிக் கைகளும், யானையின் துதிக்கையைப்போல மேலே புஷ்டியாகித் திரண்டு பிறகு சாட்டைபோல் கீழே இறங்கிய கால்களும் பருவத்தின் செழிப்பைக் காட்டினவென்றால் மறைந்த இடங்கள் எல்லையற்ற ஊகங்களுக்கு இடம் கொடுத்தன.

அவள் காலில் அணிந்திருந்த பாதரசத்தின் முத்துக்கள் பாண்டிய நாட்டு உயர்ந்த முத்துக்களால் செய்யப்பட்டிருந்தாலும், அவற்றில் கண்ணுக்கு உடனடியாகப் புலப்படாத சின்னஞ்சிறு சலங்கைகள் இணைக்கப்பட்டிருந்ததாலும், அவள் நடந்து வந்தபோது அவள் பாதங்களை முத்தமிட்ட பாதசர முத்துக்களும், பாதசரம் நெளிந்ததின் விளைவாக லேசாக ஒலித்த சலங்கைகளும் அவளை நடனச் சித்திரமாகக் காட்டின. அவள் கால் விரல்களின் நுனியில் தீட்டியிருந்த மருதாணியின் செந்நிறம் விரல்களைப் பவளங்களாக அடித்திருந்ததல்லாமல் அவள் நடந்தபோது விரிந்தும் கூடியும் ஏதோ பவளக் கொடி அசைந்து வருவதைப் போன்ற பிரமையை அளித்தன. போதாக் குறைக்கு அவள் அணிந்திருந்த கலிங்கத்தின் நுண்ணிய ஆடை நடந்த நிலையில் அசைய நேரிட்டதால் அடிக்கடி கால்களின் வெண்மையை அவ்வப்பொழுது காட்டி மறைத்து மனத்தை அலைக்கழிக்கவே செய்தது.

அந்தமெல்லிய கலிங்கத்து *மஸ்லின் ஆடை அடிக்கடி அவள்மீது தவழ்ந்தும் அலைந்தும் சரிந்தும் விழுந்ததால் அதைச் சரிப்படுத்திக் கொள்ள அவள் அவ்வப்பொழுது முனைந்ததுகூட அழகின் உயர்வுக்கும் பண்பாட்டுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கியது. அந்தப் பண்பாட்டின் விளைவாக தோளிலிருந்து வழுக்கி விழுந்த சேலையை எடுத்து அவள் அழகிய மார்பை மறைத்துக் கொண்டதுங்கூட அவள் எழிலைப் பன் மடங்கு

---

* From early times Kalinga was noted for its manufacture of fine Muslins-James Princep in 'Journal of Asiatic Society. Bengal' vi-1082.

zeevaa

உயர்த்திக் காட்டியதால், இடையிடையே கண்களுக்குப் புலப்பட்ட எழிலிடங்களால் சித்தம் கலங்கிய விஜயன், மேற்கொண்டு அவளைப் பார்க்காமல் பக்கத்திலிருந்த சமதைக் கவனித்தான். சமதின் இதழ்களில் இகழ்ச்சி நகை படர்ந்து கிடந்தது. அவன் பெருத்த விழிகளிலும் விஷமம் மொட்டிக் கொண்டிருந்தது.

நீண்ட நேரம் மௌனமாக நின்றிருந்த அவ்விருவரையும் சிறிதே நோக்கிய அந்த அழகி, ''நந்தா! இவர்கள் யார்?'' என்று படகோட்டிக் கிழவனை வினவினாள். அப்படி அவள் வினவியபோது அவள் கேள்வியில் ஏதோ குழப்பம் ஒலித்ததை விஜயன், சமத் இருவருமே புரிந்து கொண்டார்கள்.

நந்தனுக்கும் அது புரிந்தாலும் அவன் அதன் காரணத்தை அறிய விரும்பாமல், ''இவர்கள்தான் உங்களுடன் வரப்போகும் பயணிகள்'' என்று பதில் சொன்னான்.

தரையிலிருந்த பாயின்மீது புதுநாட்டுப் பெண்களைப் போலத் தலைகுனிந்து உட்கார்ந்திருந்த அவ்விருவரையும் கூர்ந்து சில விநாடிகள் நோக்கிய அந்தக் காரிகையின் வதனத்தில் மீண்டும் சிந்தனைச் சாயை படர்ந்தது. ''உங்களை இதற்கு முன்பு எங்கோ பார்த்ததாக ஞாபகம் வருகிறது...'' என்று அவள் மெல்ல மதுர மொழிகளை உதிர்த்தாள் விஜயனையும் ராட்சஸ சமதையும் நோக்கி.

விஜயன் குனிந்த தலையை லேசாக உயர்த்தினான். ''பார்த்திருக்க முடியாது'' என்று மெதுவாகப் பேசினான்.

''நீங்கள் இந்தப் பக்கந்தானே?'' என்று மீண்டும் ஒரு கேள்வியைத் தொடுத்தாள் அவள்.

விஜயன் உடனடியாக அவளுக்குப் பதில் சொல்லவில்லை. அவள் பேசியபோது இழைந்த அவள் இரத்தின இதழ்களையும், அவற்றிலிருந்த நீரோட்டத்தையுமே கவனித்தான். அடுத்து அவள்

zeevaa

சிறிது கண்டிப்பாகப் பேச முற்பட்டு, ''உங்களை ஒரு கேள்வி கேட்டேன்'' என்றாள் சிறிது கடுமையாக.

அந்த இன்பச் சிலையின் இதழ்களிலிருந்து கடுமையும் உதிர முடியும் என்பதையும், அந்தக் கடுமையில்கூட ஏதோ ஒரு சுகம் இருந்ததையும் கவனித்த விஜயன், ''ஆமாம், கேட்டீர்கள்'' என்றான்.

''நீங்கள் அதற்குப் பதில் சொல்லவில்லை'' என்றாள் அவள் மீண்டும் கடுமையாக.

''தவறுதான். மன்னிக்க வேண்டும். எண்ணங்கள் எங்கோ ஓடிவிட்டன...'' என்று முணுமுணுத்தான் விஜயன்.

இதைக் கேட்ட அந்தக் கட்டழகி சட்டென்று மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டாள். அவள் எண்ணங்கள் எங்கு ஓடியிருக்கும் என்பதைப் புரிந்து கொண்டதால். அதனால் ஏற்பட்ட சங்கடத்தை மறைத்துக்கொள்ள, ''எண்ணங்களை அடக்குபவன்தான் விவேகி. இப்பொழுது கூட நீங்கள் பதில் சொல்லலாம்'' என்றாள் அவள்.

விஜயன் இதழ்களில் இளநகையொன்று விரிந்தது. அவன் கண்களில் திடீரென அந்தப் பழைய புத்தொளி ஒருமுறை மின்னியது. ''அழகுக்கு முன்பு விவேகம் மறைந்து விடுகிறது'' என்ற விஜயன், ''நாங்கள் இந்தப் பக்கமல்ல. கலிங்கத்தில் காலடி எடுத்து வைத்து ஒரு வாரம்கூட முடியவில்லை'' என்று பதில் சொன்னான்.

அவன் பதிலில் தனது அழகுக்கும் பாராட்டிருந்ததால் அவன் துணிவை எண்ணி வியந்தாள் அந்தப்பெண். படகோட்டிக் கிழவனுக்கும் விஜயன் போக்கு வினோதமாயிருந்ததால், ''வாலிபனே! நீ பேசும் முறையிலிருந்தே நீ இந்த ஊருக்குப் புதிது என்பது விளங்குகிறது. நீ யாருடன் பேசுகிறாயென்பதைப் புரிந்து கொள்ளவில்லை'' என்று சற்றுக் கண்டித்துப் பேசினான்.

''பெண்ணே! தவறாக நான் ஏதாவது பேசியிருந்தால் மன்னிக்க வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டே உட்கார்ந்த நிலையிலிருந்து

zeevaa

எழுந்த விஜயனை மீண்டும் வியப்புடன் நோக்கினாள் அவள்.

நந்தன் முகத்தில் வியப்பில்லை. கடுங்கோபமே தாண்டவ மாடியது. ''வாலிபனே! இவர்களை நீ பெண்ணே என்று அழைப்பது அவமரியாதையாகும். இதற்கு உன்னைத் தூக்கில் கூடப்போட இந்த நாட்டில் சட்டமிருக்கிறது'' என்றான் சொற்களிலும் சினம் துலங்க.

விஜயன் கண்கள் நகைப்பை உதிர்த்தன. ''பெண்ணைப் பெண்ணென்று அழைப்பது குற்றமா? அதற்குத் தூக்குத் தண்டனையா?'' என்று வியந்து கேட்ட விஜயனைக் கிழவன் நோக்கினான் குழப்பத்துடன். ஏதோ சொல்லவும் முயன்றான்.

அவனைக் கண்களின் அசைப்பினாலேயே தடுத்து விட்ட அந்தப் பெண், ''வீரரே! உங்களைப் பார்த்தால் புத்திசாலியாகத் தெரிகிறது. ஆகவே உங்கள் தவறைத் திருத்த அவசியமில்லை. எல்லாப் பெண்களையும் பெண்ணே என்று அழைக்க முடியாது. உங்கள் மகளை அப்படி அழைக்கலாம். மனைவியைக்கூட அழைக்கலாம். ஆனால் பக்கத்து வீட்டுக்காரன் மனைவியை அழைக்க முடியாது. நம்மைவிட அதிக அந்தஸ்து உள்ளவர்களையும் அழைக்க முடியாது. உங்கள் நாட்டு மகாராணியை நீங்கள் பெண்ணே என்று அழைக்க முடியுமா?'' என்று பாதி விளக்கியும் பாதி கண்டித்தும் பேசிய அந்தப் பாவை, ''நேரமாகிறது. அதிகமாக இருண்டபின் ரிஷிகுல்யாவைக் கடக்க முடியாது. நாழிகை ஏறஏற அதன் வேகம் அதிகமாகும்,'' என்றாள். ''நந்தா! கிளம்பலாமா?'' என்றும் வினவினாள்.

அந்தக் கேள்வியில் கிளம்ப வேண்டும் என்ற கட்டளையும் தொனித்ததை உணர்ந்து கிழவன், ''அம்மணி! தாங்கள் சிறிது பாலை அருந்தலாமா?'' என்று கேட்டான்.

அவன் சொல்லி வாயை மூடுமுன்பு குடிசை மூலையிலிருந்து கிழவி பாலும் பாத்திரமுமாக வந்து பால் கிண்ணத்தை அந்தப்

zeevaa

பெண்ணிடம் நீட்ட அவள் அதை வாங்கிச் சுவைத்து அருந்தினாள். ''நந்தா உனக்கு மட்டும் இத்தனை நல்ல பால் எப்படிக் கிடைக்கிறது?'' என்று பாலை அருந்திப் பாராட்டவும் செய்த அந்தப் பெண் குடிசை மூலைக்குச் சென்று பால் பாத்திரத்தைக் கிழவியிடம் கொடுத்துவிட்டுத் திரும்பி யாரையும் நோக்காமல் குடிசைக்கு வெளியே சென்றாள்.

கிழவன் அவளுக்குப் பின்னும் அவனுக்குப் பின்னால் விஜயனும் கடைசியாக மூர்சமதும் நடக்க நால்வரும் நதிக்கரையை நோக்கிச் சென்றனர். அந்த ஐப்பசி அமாவாசை இருட்டிலும் ரிஷிகுல்யா நதிப் பிராந்தியமும் குடிசைக் கூட்டமிருந்த சிறிய தோப்பும் மிக ரம்மியமான தோற்றத்தை அளித்தன. பல வைரங்களை அணிந்த மங்கை போல் வானத்தழகி மின்ன, அமாவாசையின் இருளே தாரகைகளின் ஒளியை மிகைப்படுத்த, தூரத்தே குடிசை விளக்குகள் வானத் தாரகைகளுடன் போட்டி போட முயல, எட்ட ரிஷிகுல்யா நதியின் பிரவாக ஓசை மெல்ல அதிகரிக்க இயற்கை காட்டிய விந்தையை அனுபவித்துக் கொண்டே நடந்த விஜயன், ''இவள் எங்கு வந்து சேர்ந்தாள்? எதற்காக வந்திருக்கிறாள்?'' என்று தனக்குள் வினாக்களை எழுப்பிக் கொண்டானே தவிர, விடை காண முடியவில்லை. இத்தகைய சிந்தனையில் அவன் மௌனமாக நடந்தான். மற்றவர்களும் மௌனத்தின் சிறப்பை உணர்ந்தாலும் விஜயன், மூர்சமத் இருவர் புரவிகளும் உணராததால் சிறிது கனைத்துக்ணெண்டும் தலையை ஆட்டி சேணத்திலிருந்து ஒலியைக் கிளப்பிக் கொண்டும் அவர்களைப் பின்தொடர்ந்தன.

சுமார் ஒரு நாழிகைப் பயணத்துக்குப் பிறகு ரிஷிகுல்யாவின் படகுத் துறைக்கு வந்த அந்த நால்வரில் நந்தனே முன் சென்று கரையில் பிணைத்திருந்த தனது பெரும் படகைச் சுட்டிக்காட்டி, ''படகின் முகப்பிலும் கடைசியிலும் இரண்டு புரவிகளையும் ஏற்றி நிற்க வையுங்கள். நாம் நால்வரும் படகின் மத்தியிலிருப்போம்.

zeevaa

படகு சம பாரத்தில் மூழ்காமல் கரையைக் கடக்கும்,'' என்று கூறினான்.

அவன் விருப்பப்படி விஜயன் தனது புரவியைக் கடிவாளத்தை இழுத்து ஒரு தட்டுத் தட்ட அது கரையிலிருந்து படகின்மீது அனாயாசமாகத் தாண்ட மூர்சமதின் புரவியும் அதைத் தொடர்ந்தது. அவற்றைத் தொடர்ந்து முதலில் ஏறிய மூர்சமத் இரண்டு புரவிகளையும் கிழவன் கூறியபடி முகப்பிலும் கடைசிப் பகுதியிலும் நிற்க வைத்தான். அடுத்து விஜயனையும் அந்தப் பெண்ணையும் படகில் ஏறும்படி சொல்ல இருவரும் படகில் ஏறி நடுவில் உட்கார்ந்து கொண்டதும் நந்தன் படகுத் தளையை அவிழ்த்துப் படகில் குதிக்கவே படகு ஒருமுறை சுழன்று பிரவாகத்தில் விரைந்தது. அடுத்த விநாடி நந்தன் படகின் நடுவில் நின்று நீளமான ஒரு மூங்கிலை நதிப்பிரவாகத்தில் அழுத்தி, படகு நட்ட நடுவே போகும்படி இயக்கினான்.

பார்ப்பதற்கு அமைதியாகவும், ஆனால் பயங்கர வேகத்துடனும், அவ்வப்பொழுது ஆங்காங்கிருந்த சுழல்கள் படகை அணைத்தும் இழுத்தும் புஸ்புஸ்ஸென்று நாக சர்ப்பத்தைப்போல் சீறியதால் எழுந்த அச்சமூட்டும் ஓசையுடன் பிரவாகித்த ரிஷிகுல்யா நதி, இரவோ பகலோ இருளோ வெளிச்சமோ எதுவும் தன்னை அசைக்க முடியாதென்ற கர்வத்துடன் பிரவாகித்தது. கரையில் இரு புறங்களிலும் இருந்த தோப்புகளின் மரங்கள் அந்த இருளில் பெரும் பிசாசுகளைப் போல் காட்சியளித்தன. அந்த தோப்புகளிலிருந்த சில நரிகளும் ஆந்தைகளும் போட்ட கூச்சல்கள் இரவின் பயங்கரத்தை அதிகப்படுத்தியதால் பெரும் பீதியை அளித்தன. இத்தனைக்கும் அசையாமலும் அலட்சியமாகவும் உட்கார்ந்திருந்தாள் அந்த அழகி.

இரவிலும் கம்பீரமாகத் தெரிந்த அவள் அழகையும், அவள் உட்கார்ந்திருந்த அலட்சியத்தையும் பருகி மெய் மறந்திருந்த விஜயன் படகு செல்லும் மார்க்கத்தைக் கவனிக்காவிட்டாலும் மூர்சமத் கவனித்துவிட்டானாதாலால் ''கிழவா! படகு எதிர்க்

zeevaa

கரைக்குப் போவதாகத் தெரியவில்லையே?'' என்று சந்தேகத்தைக் கிளப்பினான்.

அப்பொழுதே அதைக் கவனித்த விஜயன், கிழவன் படகு தள்ளும் கோலைப் படகில் போட்டுவிட்டுப் படகில் தானும் ஒரு பயணியாக உட்கார்ந்திருந்ததையும், படகு இஷ்டப்படி நதிப் பிரவாகத்தில் ஓடுவதையும் கண்டான். ஆகவே சட்டென்று எழுந்து ''கிழவா! படகு ஏன் கரை நோக்கிப் போகவில்லை?'' என்று வினவினான்.

''போகும், போகும்'' என்று அசட்டையாகப் பதில் சொன்னான் கிழவன்.

''எப்பொழுது போகும்?'' விஜயன் கேள்வியில் சினம் ஒலித்தது.

''மண்டபத்துறை வந்ததும் போகும்,'' என்றான் கிழவன்.

விஜயன் முகத்தில் சினம் ஏறிக் கொண்டிருந்தது. ''மண்டபத் துறையில் எங்களுக்கு வேலையில்லை,'' என்று கூறினான் கடும் சொற்களில்.

அதைக் கண்டு கிழவன் அஞ்சியதாகத் தெரியவில்லை. ''இவர்களுக்கு வேலையிருக்கிறது,'' என்று படகின் நடுவில் உட்கார்ந்திருந்த அந்த அழகியை காட்டிக் கூறினான்.

மூர்சமத் தமது ராட்சஸ விழிகளை உருட்டிப் பார்த்தான் கிழவனை. கிழவன் வேறு பக்கம் பார்த்துத் திரும்பினான். சற்றுத் தூரத்தே நதியின் அக்கரையில் நாலைந்து விளக்குகள் தென்பட்டதும் சுறுசுறுப்பைக் காட்டிய கிழவன், தள்ளுகோலை எடுத்துப் படகை எதிர்க்கரையை நோக்கித் திருப்பினான். படகும் இருமுறை திரும்பி எதிர்க்கரையை மெல்ல மெல்ல அடைந்தது. நதியில் இரண்டு படிகள் மூழ்க ஐந்தாறு கால்களுடன் எழுந்து நின்ற கருங்கல் மண்டபத்தில் தெரிந்த படிகளை ஒட்டிப் படகைச் செலுத்திய கிழவன் படிகள் மீது

zeevaa

பாய்ந்து அங்கிருந்த இரும்புத் தளையொன்றில் படகின் கயிற்றைப் பிணைத்தான்.

மண்டபத்தை நோக்கிய விஜயன் தனது மெய்க்காவலனையும் நோக்கினான். மண்டபத்தில் வாளை உருவிய வண்ணம் பத்து வீரர்கள் நின்றிருந்தனர். படகிலிருந்த அந்தக் காவியக் காரிகை, சேலை நனையாதிருக்க அதைச் சற்றே தூக்கிப் பிடித்துக்கொண்டு படியில் இறங்கி மேலேயிருந்த படிகளில் ஏறி நடந்தாள். மண்டபத்தை அவள் அடைந்ததும் வீரர் பதின்மரும் அவளுக்குத் தலை வணங்கினார்கள்.

அந்தப் பெண் படகிலிருந்த மற்ற இருவரையும் சுட்டிக் காட்டி அந்த வீரர்களிடம் ஏதோ சொல்லிவிட்டு மண்டபத்தைத் தாண்டிச் சென்றாள். மண்டபத்துக்கு மறுபுறம் திரைகளால் மறைக்கட் பட்ட ஒரு ரதம் நின்றிருந்ததையும், அவள் ஏறியதும் அந்த ரதப் புரவிகள் இரண்டும் பறந்ததையும் விஜயன் படகிலிருந்தபடியே கவனித்தான். பிறகு தனது புரவியைப் படிகளில் தாவவிட்டுத் தானும் தாவினான். மூர்சமதும் அவனைப் பின் பற்றிப் புரவியுடன் படிகளில் தாவவே இருவரும் மண்டபத்தின் மீது ஏறியதும் பத்துக் காவலரும் அவர்களைச் சூழ்ந்து கொண்டனர்.

விஜயன் கண்கள் அவர்களை ஒருமுறை சுழன்று நோக்கின. ''இதற்கு என்ன அர்த்தம்?'' என்று அவன் உதடுகள் கேள்வியை உதிர்த்தன.

''நீங்களிருவரும் எங்களுடன் வர வேண்டும்,'' என்றான் பத்து வீரர்களில் ஒருவன்.

''தேவியின் கட்டளை,'' என்றான் இன்னொருவன்.

''யார் அந்தத் தேவி?'' என்றான் இன்னொருவன்.

''சொல்ல உத்தரவில்லை,'' கடுமையுடன் வந்தது பதில்.

zeevaa

"எனக்கும் வர உத்தேசமில்லை," என்ற விஜயன் தனது புரவிமீது தாவப் போனான்.

அவன் தோளின்மீது இரு வீரர்களின் கைகள் பலமாக அழுத்தின. மற்றும் இரு வீரர்கள் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டார்கள். அவனைப் பலவந்தமாக இழுக்கவும் முற்பட்டார்கள்.



# 3. வரவேற்பு

முன்னதாகவே மண்டபப் படிகளில் ஏறி மேலே இருந்த சமதரையில் நின்றுவிட்ட தனது கரிய புரவிமீது தாவி ஏறப்போன விஜயன், தன்னைப் பத்து வீரர்கள் சூழ்ந்து கொண்டதையும், இருவர் தன் தோளைப்பிடித்து அழுத்தியதையும், மற்றும் இருவர் கைகளைப் பிடித்து இழுக்க முற்பட்டதையும் கண்டவுடன், அவர்களுக்குப் பைத்தியம் பிடிக்கவில்லையென்பதை உறுதி செய்து கொள்ளத் தனது உடலைச் சரேலென்று நிமிர்த்தி விறைத்து நின்றுவிட்டான். பார்ப்பதற்கு ஒல்லியாகத் தெரிந்த அவன் உடல் சரேலென இரும்பாக மாறிவிட்டதாலும், இருவர் இழுத்தும் அவனை நகர்த்தக்கூட முடியாததாலும், ''வீரரே! தங்களை மரியாதையுடன் நடத்தும்படி தேவி கட்டளையிட்டிருக்கிறார்கள். வீணாக அடம் செய்யாமல் தாங்களாகவே எங்களுடன் வந்து விடுவது நல்லது'' என்று கையைப்பிடித்து இழுக்க முற்பட்ட இரு வீரரில் ஒருவன் கூறினான்.

விஜயன் பதில் ஏதும் சொல்லாமலே இரும்பாகிவிட்ட தனது உடலைச் சற்று நிமிர்த்தி, பிறகு சரேலென்று குனிந்து எழுந்து கைகளிரண்டையும் மடக்கி நிமிர்த்தி உதறவே, அவன் கைகளைப் பிடித்திருந்த காவலர் இருவரும் முன்புறத்தில் யாரையோ நமஸ்காரம் செய்யும் உத்தேசம் கொண்டவர்களைப்போல் துரிதமாக இரண்டடி ஓடி, தரையில் குப்புற விழுந்து தண்டனிட்டார்கள். அதே சமயத்தில் விஜயனுக்குப் பின்புறம் படகிலிருந்து தனது பழுப்பு நிறப் புரவியைத் தொடர்ந்து ஏறிவந்த மூர்சமத், விஜயனை மீண்டும் நெருங்கப்போன இன்னுமிரு வீரர்களைக் கண்டு தனது ராட்சஸக் கைகளை அவர்கள் கழுத்துக்களில் போட்டு இழுத்து

zeevaa



zeevaa

ரிஷிகுல்யாவின் மண்டபப் படிகளில் உருட்டினான். விஜயன் இரு வீரர்களை மண்ணில் தள்ளியதாலும், மண்டபப் படிகளில் மற்றுமிருவரை சமத் உருட்டி விட்டதாலும், தங்கள் பலம் குறைந்து விட்டதைக் கண்ட மற்ற வீரர்கள் வாட்களை உயரத் தூக்கிக் கொண்டு விஜயனையும் சமதையும் நெருங்கினார்கள்.

அதுவரை அந்த இரு வீரர்கள்தான் போாிட முடியுமென்று எண்ணிய கலிங்க வீரர்களை வேறொரு ஆபத்தும் சூழ்ந்தது. தனது எஜமான்மீது கை வைக்கப்பட்டதுமே காதுகளை உயரத் தூக்கிக் கண்களை உருட்டிப் பார்த்த விஜயனின் கரிய புரவி, தனது பெரும் பற்களைக் காட்டி ஒருமுறை பயங்கரமாகக் கனைத்துவிட்டுக் கலிங்க வீரர்கள்மீது பாய்ந்து அவர்களை முட்டிக் கீழே தள்ள முயன்றும் மிதித்தும் கடித்தும் போரில் இறங்கியதால், மீதியிருந்த வீரர்களின் கதி நிர்க்கதியாகும் நிலைக்கு வந்தது. போதாக்குறைக்கு ராட்சஸ சமதும், படிகளில் வீரர் இருவர் ஓங்க முற்பட்ட வாட்களோடு அவர்கள் கழுத்தைப் பிடித்து நெறித்துக் கீழே தள்ளியதுமின்றி, குனிந்து அவர்களை ஒவ்வொருவராகத் தூக்கி ரிஷிகுல்யா நதிப் பிரவாகத்தில் எறியவும் செய்தான். விஜயனும் தனது புரவியின் தாக்குதலுக்கு இலக்கான இன்னொருவனின் உடலைப்பற்றித் தலைக்குமேல் தூக்கி ஒரு சுழற்றுச் சுழற்றி நதியில் எறிந்து இன்னொருவனையும் அவனுக்குத் துணையாக அனுப்பினான். சுமார் இரண்டு நிமிடங்களுக்குள் இரு வீரரக்ள் மண்ணில் குப்புறக் கிடக்கவும், இருவர் படிகளில் உருளவும், நால்வர் நதியின் பிரவாகத்தில் திக்கு முக்காடி நீந்தித் தப்ப எத்தனிக்க விளைந்துவிட்ட அற்புதத்தை, படகின் அருகில் நின்ற கிழவன் விந்தை நிரம்பிய கண்களுடன் பார்த்தான்.

மெல்லியதாய்க் காணப்பட்ட விஜயனின் உடல் ஓரளவு வலிமை மிக்கதென்பதை அதன் வாளிப்பிலிருந்தே கிழவன் உணர்ந்து கொண்டாலுங்கூட, வீரர்களை அனாயாசமாகத் தலைக்குமேல் ஆட்டுக்குட்டிகளைப்போல் தூக்கி நதியில் வீசக்கூடிய அத்தனை சக்தி அவனுக்கு இருக்குமென்று கனவிலும் நினைக்காததால், பிரமை

zeevaa

பிடித்து மண்டப அடிப்படிகளின் அருகிலேயே நின்றான். இத்தனைக்கும் விஜயனோ அவன் மெய்க் காவலனோ தங்கள் வாட்களைக்கூட உருவாததையும், எதிரி வாட்கள் அவர்களை நோக்கி இறங்க முற்பட்ட போது கூட அவர்கள் பக்கவாட்டில் நகர்ந்து எதிரி வீரர்களை விளையாட்டுப் பொம்மைகளைப்போல் தூக்கி எறிந்து விட்டதையும் கண்ட படகோட்டி, பாரதத்தின் இணையற்ற வீரர்களை அன்று கண்டுவிட்டதை உணர்ந்து கொண்டான். மூர் ஜாதியானின் பழுப்பு நிறப் புரவி நின்ற இடத்தில் நின்றிருந்தும் வாலிபனின் கரிய புரவி தனது எஜமானனுக்கு உதவிப் போரிட முற்பட்டதையும் பார்த்த படகோட்டிக் கிழவன், அந்த வாலிப வீரன் வீரர்களைப் பழக்குவதோடு விலங்குகளையும் பழக்கி வைப்பதில் வல்லவன் என்பதைப் புரிந்துகொண்டு, மேலும் அந்தச் சண்டையை வளர விட்டால் மிஞ்சியுள்ள கலிங்க வீரர்களும் நதியில் விளையாடுவார்களென்ற அச்சத்தால் சண்டையை நிறுத்தப் படிகளில் ஏறி வந்தான்.

மேலே வீரர்கள் ஏற்றிய பந்தங்களில் ஒன்று தரையில் விழுந்து எரிந்து தரை மணலைக் கரியாக்கிக் கொண்டிருந்ததால், அதன் வெளிச்சம் மட்டும் ஓரளவு சண்டை நிலையை விளக்கிக் கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் இன்னொரு வீரன் சமதை நோக்கி வீசிய பந்தம் அவனைத் தாக்காமல் நதியின் நீர் மட்டத்தில் இறங்கி 'உஸ்' என்று சென்று தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ளவே, கிடந்த ஒரே பந்தத்தின் வெளிச்சமும் வானிலிருந்து இந்தச் சண்டையைப் பார்த்து நகைத்த விண்மீன்களின் சொற்ப வெளிச்சமும் மேலிருந்த தரைக்குச் சிறிது பயங்கரத்தை அளித்தன.

கிழவன் படிகளில் ஏறி உச்சியின் சம தரையை அடைவதற்கும், விஜயன் தான் சம்பந்தப்பட்டவரை சண்டை முடிந்ததற்கு அறிகுறியாகத் தனது கைகளை அங்கியில் துடைத்துக்கொண்டு, உள்ளங்கைகளைத் தேய்த்துக்கொண்டு, எட்ட நின்ற மீதி வீரர்களை நிதானத்துடன் நோக்குவதற்கும் சமயம் சரியாயிருக்கவே, ''வீரனே! இத்தகைய விசித்திரத்தை நான் இதுவரையில் பார்த்தது கிடையாது''

zeevaa

என்று பாராட்டினான். அப்பொழுது நகர முற்பட்ட கலிங்க வீரர் இருவரைப் பார்த்து, ''நீங்கள் போரிட்ட அழகு போதும். வாட்களைத் தீவட்டிகள்போல் பிடித்துக்கொண்டு நிற்க வேண்டாம்'' என்று அதட்டவே, வீரர்களில் ஒருவன் விழித்தான் என்ன செய்வதென்பதை அறியாமல்.

''வாளைக் கீழே போட முடியாது'' என்றான் இன்னொரு வீரன்.

''அதை வைத்துக்கொண்டு என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று கிழவன் மிகுந்த இகழ்ச்சி நிரம்பிய குரலில் வினவினான்.

''வாளைக் கொண்டு என்ன செய்வார்கள்?'' என்று வினவினான் வீரனும் இகழ்ச்சியுடன்.

கிழவன் முகத்தில் வெறுப்புடன் இகழ்ச்சியின் சாயையும் படர்ந்தது. ''அதைத்தான் நானும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்'' என்ற கிழவன், ''இந்த விளையாட்டு இத்துடன் நிற்கட்டும்'' என்று கடுமையான குரலில் கூறினான்.

''இங்கு நடந்தது விளையாட்டா?'' என்று வினவினான் அந்த வீரன்.

''வேறென்னவென்று அபிப்பிராயம்?'' - கிழவன் மிகுந்த விஷமத்துடன் கேட்டான்.

அந்த விஷமத்தை வீரனும் புரிந்து கொண்டிருக்க வேண்டும். ''நந்தா! எங்களுடன் விளையாடாதே. உனக்கு எப்பொழுதும் இந்த இருவரும் துணையிருக்க மாட்டார்கள்'' என்று எச்சரித்தான்.

''தனியாக அகப்பட்டுக் கொண்டால் வெளுத்து விடுவாய்?'' என்று மேலும் இகழ்ச்சியைக் காட்டிய கிழவன், ''இப்பொழுதுகூட உன் கைவரிசையைக் காட்டலாம். இவர்கள் இருவரும் தலையிட மாட்டார்கள்'' என்று தைரியம் சொன்னதன்றி, கீழே விழுந்து எழுந்திருக்க முயன்று கொண்டிருந்த ஒரு வீரனின் வாளை எடுத்துக் கொண்டான்.

zeevaa

வாளைப் பிடித்த கிழவன் கை உறுதியாயிருந்தது. பிடித்திருந்த முறையும், அவன் இடது கையால் அதன் கூர்மையைப் பரிசோதித்த விதமும் கிழவன் போருக்குப் புதியவனல்ல என்பதை நிரூபித்தது.

கிழவன் சித்தமாகிவிட்டதைக் கண்ட வீரன், "நந்தா! உன்னிடம் எனக்குச் சண்டை போட உத்தரவில்லை. அந்த இருவரையும் அழைத்து வரத்தான் உத்தரவு" என்றான் சற்றுத் தணிந்த குரலில். "அதுமட்டுமல்ல நந்தா! நமது தலைவியார் உன்னைப் பெரிதும் மதிக்கிறார்களென்பதும் எங்களுக்குத் தெரியும். உன்னை நாங்கள் தொட முடியாத நிலையில் நீ எங்களை விரட்டலாம்" என்று தனது தர்மசங்கடமான நிலையையும் சுட்டிக் காட்டினான்.

கிழவன் இதழ்கள் இகழ்ச்சியால் ஒரு கோடிக்கு இழுக்கப்பட்டன. "இந்த யோசனை முன்பு இல்லை போல் இருக்கிறது?" என்று வினவினான் இகழ்ச்சி குரலிலும் ஒலிக்க.

"எப்பொழுது?"

"நான் தனியாக வந்தால் வீரத்தைக் காட்டுவதாகச் சொன்னபொழுது."

வீரன் அதற்குப் பதில் சொல்லவில்லை. "நந்தா, இந்த நிலையில் நீயும் ஓர் உதவி செய்ய முடியும்" என்று குரலைச் சற்று தாழ்த்திப் பேசினான்.

கிழவன் அவனை வெறுப்புடன் நோக்கி, "ஓகோ! வீரத்திலிருந்து வினயத்துக்கு வந்து விட்டோமோ? சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட, சண்டைக்காரன் காலில் விழுவது நல்லது என்ற தமிழகப் பழமொழி உனக்குத் தெரிந்து இருக்கிறது" என்று மேலும் ஏதோ சொல்லப் போனான்.

அதை இடைமறித்த வீரன், "நந்தா, நான் யார் காலிலும் விழ அவசியமில்லை. நான் போருக்குப் பயந்தவனல்லவென்பதும் உனக்குத் தெரியும்" என்று சற்றுக் கடுமையாகவே பேசினான்.

zeevaa

சிறிது சிந்தித்த கிழவன் விஜயனை நோக்கி, ''வீரரே இவன் சொல்வதில் பொருளிருக்கிறது. கலிங்கத்தின் சிறந்த வீரர்களில் இவன் ஒருவன். தேவியின் மெய்க்காவலர் படையின் தலைவன். பெயர் நீலன். நீங்கள் இவனுடன் செல்வதால் தவறில்லை. எதற்கும் நானும் உங்களுடன் வருகிறேன்'' என்றான்.

கிழவனை உற்று நோக்கினான் விஜயன். அவன் நம்பத் தகுந்தவன் என்பது அவன் முகத்தில் ஒட்டியிருந்ததால், ''கிழவரே! எங்கு போக வேண்டும்?'' என்று வினவினான்.

''இவர்கள் தலைவியிருக்கும் இடத்திற்கு'' என்றான் கிழவன்.

''அங்கு எதற்காகப் போக வேண்டும்?'' என்று வினவினான் விஜயன்.

''தேவியைப் பரிச்சயம் செய்துகொள்ள'' என்று கிழவன் சொன்னான்.

''எதற்கு அவள் பரிச்சயம்?'' - விஜயன் கேள்வியில் வெறுப்பு இருந்தது.

''அதனால் பயனுண்டு'' - கிழவன் மீண்டும் வலியுறுத்தினான்.

விஜயன் புருவங்கள் சிந்தனைக்கு அறிகுறியாகச் சிறிதே உயர்ந்தன. குறுகின. பிறகு ஒரு முடிவுக்கு வந்து, ''சரி நந்தா! உன்னிஷ்டப்படியே போவோம். இந்த மாதிரி விளையாட்டு அங்கு ஏதாவது நடந்தால் நான் பொறுப்பாளி அல்ல'' என்று கூறிவிட்டுத் தனது புரவியின் கடிவாளத்தைப் பிடித்து இழுத்து அதன்மீது ஏறிக்கொண்டான்.

எசமானுக்கு அனுசரணையாகப் போரிட்டதைத் தவிர பேச்சு எதிலும் ஈடுபடாமல் மௌனம் சாதித்துக் கொண்டிருந்த சமதும் தனது பழுப்புப் புரவியின்மீது ஏறிக்கொண்டான். அதற்குப் பிறகு நீலனை நோக்கிய நந்தன், ''நீலா, உங்கள் புரவிகள் எங்கே?'' என்று வினவ, சற்று எட்ட மேய்ந்து கொண்டிருந்த புரவிகளைச் சுட்டிக்காட்டினான் நீலன்.

zeevaa

அவனுக்கும் தனக்கும் இரு புரவிகளைக் கொண்டு வரப் பணித்த படகோட்டி, தானும் ஒரு புரவியில் ஏறி நீலனை வழிகாட்டச் சொன்னான்.

நீலன் பதிலேதும் சொல்லாமல் தனது புரவியை முன்னால் நடத்தினான். விஜயன் தனது புரவிமீது அமர்ந்தவண்ணம் மண்டபத் துறையைத் திரும்பி நோக்கினான். அப்போதும் இரு வீரர்கள் அதன் பிரவாகத்தைச் சமாளிக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்தனர். சமாளித்து ஒரு வீரன் மட்டும் படியில் ஏறி நின்று தனது அங்கித் துணியைப் பிழிந்து கொண்டிருந்தான். குப்புற நிலத்தில் தள்ளப்பட்ட இரு வீரர்களும் சரணாகதியில் நம்பிக்கை இழந்து எழுந்து நின்று கலிங்கத்தின் புழுதியை ஆடைகளிலிருந்து தட்டிக் கொண்டார்கள். வாயில் புகுந்துவிட்ட மணலையும் துடைத்தும் உமிழ்ந்தும் தாங்கள் பிறந்த மண்ணின்மீது தங்களுக்கு இருந்த வெறுப்பைக் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

கலிங்க வீரர்களின் அந்த அவல நிலையைக் கவனித்தும் அதனால் எந்தவித சந்துஷ்டியும் அடையாத விஜயன் வருத்தம் துலங்கிய முகத்துடன் புரவியில் பயணம் செய்தான். இப்படி மூன்று நாழிகைப் பயணத்துக்குப் பிறகு நெடுஞ்சாலையிலிருந்து கிளைச் சாலைக்குத் திரும்பிய நீலன் தனது புரவியைச் சற்று வேகமாக நடக்க விட்டான். சாலை நெடுக மரமல்லி மரங்கள் பெரிதாக வளர்ந்திருந்ததால், அவற்றின் மலர்கள் சுகந்தத்தை எங்கும் பரப்பின. நீண்ட அந்த மலர்களில் சில விஜயன் தலைமீதும் விழுந்ததால், அவன் அவற்றில் இரண்டை எடுத்து முகர்ந்தான். பிறகு சேணத்தைப் புரவிமீது போட்டுவிட்டு அவற்றில் இரண்டைப் பாதியாகக் கிள்ளி மலர் முகப்புகளுடன் கூடிய காம்புகளை வாயில் வைத்து லேசாக ஊதினான்.

அதிலிருந்து கிளம்பிய மெல்லிய நாதத்தைக் கேட்டதும் கிழவனான நந்தன் சட்டென்று திரும்பி நோக்கினான். உலகத்தையே லட்சியம் செய்யாத முகத்துடன் பூக்களை வாயில் வைத்து ஊதிக்கொண்டும், கடிவாளம் ஏந்தாமலே புரவியில் திடமாக

zeevaa

உட்கார்ந்து கொண்டும், ஏதோ விளையாட்டுப் பிள்ளைபோல வந்து கொண்டிருந்த விஜயனை நோக்கிய கிழவன், எதற்கும் அசையாத ஒரு யுக புருஷனைத் தான் சந்தித்து விட்டதை உணர்ந்தான். அந்த எண்ணத்துடன் கிழவனின் கடந்த கால எண்ணங்களும் சேர்ந்து கொண்டதால், 'நாமும் இவனுடன் போய்விட்டால் என்ன?' என்று சிந்தித்தான். அந்த எண்ணம் பின்னால் பலிக்கப் போவதை உணராமல், 'வயதாகிவிட்டது, என்னை யார் சேர்த்துக் கொள்வார்கள்?' என்று நினைத்ததால் பெருமூச்செறிந்தான். மூர்சமது எங்கே போகிறோமென்பதைச் சிறிதளவும் அறியாமலும் அதைப்பற்றிக் கவலைப்படாமலும் எஜமானைப் பின்தொடருவது தனது கடமையென்று கர்மவீரனாகப் பின்தொடர்ந்தான்.

இப்படி சுமார் நான்கு நாழிகைகள் பயணம் செய்த பிறகு எதிரே பெரிய நந்தவனம் ஒன்றும் சுற்றுப்புறங்களில் சில மாளிகைகளும் தெரிந்தன. அந்தப் பெரிய நந்தவனத்தை நோக்கித் தனது புரவியைச் செலுத்திய நீலன், அந்த நந்தவனத்தின் பெரிய நுழைவாயிலின் எதிரே வந்து சற்று நின்று, ''யாரங்கே!'' என்று குரல் கொடுக்கவே விளக்குகளுடன் ஓடிவந்த இரு பணியாட்கள் அந்த நுழை வாயிலின் பெரும் இரும்புக் கதவுகளைத் திறக்க நீலன் மற்றவர்கள் பின்தொடர நந்தவனத்துக்குள் புகுந்து சென்றான்.

நந்தவனப் பாதையும் சற்று நீண்டே இருந்தது. அரை நாழிகைப் பயணத்துக்குப் பிறகே நந்தவனத்தின் நடுவிலிருந்த பெருமாளிகை கண்ணுக்குப் புலப்பட்டது. அந்த மாளிகை சற்று எட்ட இருக்கையிலேயே அதன் கனத்த சுவர்களையும் வட்ட வட்டமாகக் கட்டப்பட்ட முன் அறைகளையும், அவற்றின் மீது எழுந்த உப்பரிகைப் பகுதிகளையும் கவனித்த விஜயன், 'இதை மாளிகை என்று சொல்லுவதைவிட, கோட்டை என்று சொல்லுவது பொருந்தும்,' என்று எண்ணினான்.

மாளிகையை நெருங்கியதும் அதன் படிகளுக்கு முன்னால் படகில் தன்னுடன் பயணம் செய்த பாவையின் ரதம் நிற்பதைக்

zeevaa

கண்டான் விஜயன். மாளிகைக்கு அருகில் வந்ததும் புரவியிலிருந்து இறங்கிய நீலன், அதன் படிகளை நோக்கி நடந்தான். விஜயனும் மற்றவர்களும் இறங்கி அவனைத் தொடர்ந்து சென்றதும் அந்த மாளிகைப் படிகளின் உச்சியில் அந்தக் கட்டழகியே நின்றிருந்தாள்.

பக்கத்தில் ஒரு பணியாள் ஏந்தி நின்ற விளக்கொளியில் சுந்தர முகம் பளிச்சிட, முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல் குவித்த கால்களுடனும் நன்றாக நிமிர்ந்து சாட்சாத் ராணிபோல் நின்றிருந்தாள் அவள். ஏற்கனவே படகில் உடுத்தியிருந்த சேலையை மாற்றி மஞ்சள் நிறப் புடவை கட்டி இருந்ததாலும், முன்பு தென்படாத மிக மெல்லிய ஹம்ஸ வடிவில் தங்க ஒட்டியாணமொன்று இடையை இறுக்கிப் பிடித்திருந்ததாலும், கம்பீரமாய், கம்பீரத்திலும் அழகு சிறிதளவும் குறையாமலும் அதிகாரத் தோரணையுடன் குற்றவாளிகளை விசாரிக்க முற்படும் அரசியைப் போல வந்தவர்களைத் தனது விழிகளால் ஆராய முற்பட்டாள்.



zeevaa

# 4. அழைப்பும் ஆதரவும்

மாளிகை முகப்பின் மேல்படியில் நின்று எதிரே நின்ற மூவர் முகங்களையும் ஆராய்ந்த அந்த அழகியின் கண்களில், பெண்களின் விழிகளுக்கு இயற்கையான மருட்சியில்லை, சலனமில்லை, வெட்கச் சாயையுமில்லை. நன்றாகக் காய்ச்சி வார்ப்படம் செய்யப்பட்டு, தீட்டவும் பட்ட இரும்புச் சலாகையின் உறுதியும், கூர்மையும், அதிகாரத் தோரணையுமே அவற்றில் பளிச்சிட்டதை யும், தன்மீது அவள் வாள்விழிகள் நிலைத்தபோது தனது உள்ளத்துக்குள் பாய்ந்து அலசும் ஆற்றலைப் பெற்றிருந்ததையும் கவனித்த விஜயன், தனது கண்களை அவளது கண்களுடன் இணைய விட்டு நின்றான் சில விநாடிகள். அப்படிக் கண்களோடு கண்கள் கலந்ததால் இரண்டு கூர்மையான வேல்கள் ஒன்றையொன்று உராயும் உணர்ச்சியே இருவருக்கும் ஏற்பட்டதன் விளைவாக அந்த மாளிகை முகப்பில் மௌனமே சில விநாடிகள் நிலவியது. அந்த மௌனத்தைத் தாள முடியாததாலோ எதிரே நின்ற வாலிபனின் கண்கள் தனது கண்களைக் கவ்வ நின்றதால் உள்ளத்தே எழுந்த உணர்ச்சிகளுக்கு ஈடு கொடுக்க முடியாததாலோ, தேவி தனது கண்களை விஜயன் கண்களிலிருந்து விடுவித்துக் கொண்டு நீலனை நோக்கி, "நீலா! மற்றவர்கள் எங்கே?" என்று வினவினாள் முகத்தின் சீற்றம் குரலில் ஒலிக்க.

அவள் சீற்றத்திலும் ஓர் அழகு இருந்ததையும், சொற்களை உதிர்த்த உதடுகள் சற்றே துடித்ததால் அவற்றின் கவர்ச்சி ஆயிரம் மடங்கு அதிகமாகி விட்டதையும் கவனித்த விஜயன், 'தணலில் காய்ச்சப்பட்டாலும் தங்கத்தின் ஒளி அதிகமாகிறதே தவிர குறைவதில்லை. உணர்ச்சிகளின் உஷ்ணத்தினால் அதிகமாகச்

zeevaa

சிவந்துவிட்ட இவள் வதனமும் அதிகமான பொலிவைத்தான் காட்டுகிறது' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அவள் நிமிர்ந்து நின்ற அரச தோரணையிலும் அடியோடு பெண்மையை அவள் அழிக்க முடியாததையும், நிமிர்ந்த நிலையிலும் அவள் கமலப் பாதங்கள் சிறிதே அசைந்ததையும், இடைகூட மேலிருந்த சிறுசுமையைத் தாங்க முடியாமல் லேசாக ஒடிந்ததையும், சற்றே சரிய முற்பட்ட மேலாடையைக்கூட அவள் சரிசெய்து கொள்ள முயன்றதையும், அதனால் ஏற்பட்ட அசைவையும் கண்ட விஜயன், 'என்னதான் முயன்றாலும் இயற்கையை யாரும் வெற்றி கொள்ள முடிவதில்லை' என்று எண்ணமிட்டான்.

இப்படி அந்த வாலிபனும் தேவியும் ஒருவரையொருவர் ஆராய்ந்து நின்றதால் தேவியின் கேள்விக்கு உடனடியாகப் பதில் சொல்லாத நீலனை நோக்கி, "கேட்டது உன் காதில் விழவில்லை?" என்று மீண்டும் கடுமையுடன் கேள்வியைத் தொடுத்தாள் அவள்.

நீலன் சிறிது தடுமாறினான். "விழுந்தது தேவி" என்று துவங்கியவன் வாசகத்தை முடிக்க முடியாமல் திணறினான்.

அவன் சங்கடத்தைக் கண்ட விஜயன் தனது உதடுகளிலிருந்த இரண்டு மரமல்லி மலர்களையும் துப்பிவிட்டு, "தேவி! மற்ற வீரர்கள் விரைவில் வந்துவிடுவார்கள். அவர்களைப்பற்றி கவலை வேண்டாம்" என்று பதில் சொன்னான்.

தேவி மீண்டும் விஜயனை நோக்கினாள். அவன் இதழ்களில் தவழ்ந்த இளநகையைக் கண்டாள். அதனால் மீண்டும் சினத்தை வரவழைத்துக் கொண்டாள். "உங்களுடன் அவர்கள் ஏன் வரவில்லை?" என்று வினவவும் செய்தாள் கடுமை ஒலித்த குரலில்.

விஜயன் இதழ்களிலிருந்த இளநகையில் சிறிது ஏளனமும் கலந்துகொண்டது. "ரிஷிகுல்யா நதியில் பிரவாகம் அதிகமாயிருக்கிறது" என்று இழுத்தான் விஜயன்.

zeevaa



zeevaa

''என்ன உளறுகிறீர்கள்?'' நதியின் பிரவாகத்துக்கும் அவர்கள் வருவதற்கும் என்ன சம்பந்தம்?'' சீறினாள் தேவி.

''அதன் பிரவாகத்தில் நீச்சலடிப்பது அவ்வளவு சுலபமல்ல. நீச்சலடித்துக் கரையேறிய பிறகும் ஆடைகளைப் பிழிந்து சரிசெய்து கொண்டு வரும் வேலை இருக்கிறது'' என்று சுட்டிக் காட்டினான் விஜயன்.

அவன் சொற்களின் பொருள் தேவிக்கு நன்றாகப் புரியவே சுட்டெரித்து விடுவதுபோல் விஜயனை ஒருமுறை பார்த்தாள். பிறகு அந்தப் பார்வையை நீலன்மீது திருப்பி, ''நமது வீரர்களில் எத்தனை பேர் மாண்டார்கள்?'' என்று வினவினாள்.

''ஒருவர்கூடச் சாகவில்லை'' இதைச் சற்றுப்பெருமையுடன் சொன்னான் நீலன்.

தேவியின் உள்ளம் எரிமலையாயிற்று. ''ஏன் சாகவில்லை?'' என்று இகழ்ச்சியும் சினமும் இணைந்து விளையாடிய குரலில் வினவினாள் தேவி.

அதுவரை உரையாடலில் ஈடுபடாத படகோட்டி தனது தொண்டையைச் சிறிது கனைத்துக்கொண்டு, ''தேவி குற்றம் அவர்களுடையதல்ல'' என்றான்.

''எதைப் பற்றிய குற்றம்?'' - தேவியின் கண்கள் கிழவன்மீது திரும்பின.

''சாகாத குற்றம்.'' மிகுந்த பணிவுடன் சொன்னான் கிழவன்.

''வேறு யார் குற்றம்?'' என்றாள் தேவி.

''இவர்கள் குற்றம்'' என்று விஜயனையும் மூர் ஜாதியானையும் சுட்டிக் காட்டிய கிழவன், ''நமது வீரர்களை நதியில் தூக்கி எறிந்து விட்டார்கள். சிலரைக் கீழே தள்ளினார்கள். யாரையும் காயப்படுத்த முயலவில்லை. இருவரும் வாட்களை உருவவே இல்லை'' என்று நடந்த சண்டையை விவரித்தான்.

zeevaa

தேவியின் முகத்தில் அவநம்பிக்கை படர்ந்தது. "நந்தா! வீரர் பதின்மர்" என்று குறிப்பிட்டாள்.

"ஆம் தேவி!"

"பதின்மரா இந்த இருவரைச் சமாளிக்க முடியவில்லை."

"எண்ணிக்கை மட்டும் சண்டைகளை ஜெயிப்பதில்லை."

கிழவனின் பதில் தேவியின் கோபத்தை அதிகமாகக் கிளறவே நீலனை நோக்கி, "நமது வீரர்கள் வாட்களை வைத்துக் கொண்டு என்ன செய்தார்கள்?" என்று வினவினாள்.

நீலன் சங்கடத்தால் நின்ற இடத்தில் சிறிது அசைந்தான். "வாட்களை உபயோகப்படுத்த அவகாசமில்லை."

"எல்லாம் கண்ணிமைக்கும் நேரத்தில் முடிந்து விட்டது" என்று கிழவன் நீலனுக்கு ஆதரவாகப் பேசினான்.

அதுவரை ஏதும் பேசாமல் நின்ற மூர்சமது சிறிது முனகினான். தொண்டையில் இருந்து கரகரத்த குரலை வெளியிட்டான், அதன் குறிப்பை உணர்ந்துகொண்ட விஜயன், "தேவி! வாயிலிலேயே நிற்க வைத்துப் பேசுவது கலிங்கத்தின் மரபு போலிருக்கிறது? விடை கொடுத்தால் நாங்கள் பயணப்படுகிறோம்" என்றான்.

அப்படி அவர்களை வெளியே நிற்க வைத்து, குற்றவாளிகளை விசாரிப்பது போல விசாரித்த தன் தவறை உணர்ந்து கொண்டதால் தேவியின் முகத்தில் சிறிது சாந்தமும் வெட்கமும் உதயமாயின. "நீங்கள் எங்கு போக வேண்டும்?" என்று வினவினாள் சாந்தப்பட்டுவிட்ட இதமான குரலில்.

"சிம்மபுரம் போகிறோம்" என்ற விஜயன் சொற்கள் அவளுக்கு அதிர்ச்சியை அளித்திருக்க வேண்டும். அதிர்ச்சியும் அச்சமும் மிகுந்த கண்கள் அவனை நோக்கின. திடீரென அவள் தோரணையே மாறியது. 'சிம்மபுரம் நீண்ட தூரம் இருக்கிறது" என்றாள் குரலில் அனுதாபம் தொனிக்க.

zeevaa

''தெரியும்'' - விஜயன் குரல் சர்வசாதாரணமாக இருந்தது.

''வழியில் அபாயம் இருக்கிறது''

''அதை நதிக்கரையிலேயே உணர்ந்து கொண்டோம். அபாயத்துக்கு அஞ்சுபவன் நாட்டைவிட்டு வேறு நாட்டுக்கு வரக் கூடாது.''

விஜயனின் இந்தச் சொற்களைக் கேட்ட அந்தக் கட்டழகியின் சுந்தர வதனத்தில் சிறிது சந்தேகச் சாயை படர்ந்தது. ஏதோ யோசனை மனத்தில் உலாவுவதை வண்டுக் கண்கள் விளக்கின. மின்னல் வேகத்தில் தனது மன ஓட்டத்தை மறைத்துக் கொண்ட அவள் ஏதோ முடிவுக்கு வந்து, ''நீலா! இவர்களை எனது அறைக்குப் பின்புறத்தில் இருக்கும் பெரிய அறையில் தங்க வை. எல்லா சௌகரியங்களையும் செய்து கொடு. நாளைக் காலையில் இவர்களைப் பார்க்கிறேன்.'' என்று கூறிவிட்டுத் திரும்பி மாளிகைக்குள் சென்றுவிட்டாள்.

தேவியின் கட்டளையை நிறைவேற்ற முற்பட்ட நீலன், விஜயன், சமது இவர்களின் புரவிகளைக் கவனிக்கப் பணியாட்கள் இருவருக்கு உத்தரவிட்டு,விஜயனையும் சமதையும் மாளிகைக்குள் அழைத்துச் சென்று இரண்டாவது கட்டிலிருந்த பெரிய அறையைக் காட்டி, ''இங்கு சகல சௌகரியங்களும் இருக்கின்றன. ஏதாவது தேவையானால் குரல் கொடுத்தால் பணியாட்கள் வருவார்கள்'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

நீலன் சென்ற சில விநாடிகளுக்குள் விஜயன் குரல் கொடுக்காமலே பணியாட்கள் இருவர் வந்து, ''பிரபு! நீங்கள் நீராட வேண்டுமானால் இந்த அறைக்கோடியில் நீராட்ட அறை இருக்கிறது. உடைகள் கொண்ட பெட்டி இந்த அறையின் அந்தக் கோடியில் இருக்கிறது. நீராடி உடை புனைந்ததும் உணவு கொண்டு வருகிறோம்.'' என்று அறிவித்தார்கள்.

zeevaa

அவர்கள் சொன்னபடி நீராட்டத்தை முடித்துக் கொண்டதும் பணியாட்கள் ராஜ உணவைப் பரிமாறினார்கள். உணவு அருந்தி முடிந்ததும், "ஏதாவது தேவையானால் உத்தரவிடுங்கள்." என்று கைகட்டி நின்ற பணியாட்களை, "எதுவும் தேவையில்லை" என்று அனுப்பிவிட்ட விஜயன், அவர்கள் சென்றதும் அந்த அறையைக் கவனிக்கலானான். அறை மிக விசாலமாக இருந்ததையும் சுவர்களின் கனம் அவசியத்துக்கு அதிகமாக இருந்ததையும், அந்த ஓர் அறையே எந்தத் தாக்குதலையும் சமாளிக்க முடியும் என்பதையும் புரிந்து கொண்டான். அந்த அறையிலிருந்து இரு பெரும் சாளரக் கதவுகளும் வைரம் பாய்ந்த மரத்தால் செய்யப்பட்டிருந்ததையும், சாளரத்திலிருந்து நந்தவனத்தில் குதிக்க நல்ல இடைவெளி இருந்ததையும் கவனித்த விஜயன், 'இத்தனை பலமான அறையில் இந்தப் பலவீனத்தை ஏன் வைத்திருக்கிறார்கள்?' என்று எண்ணமிட்டான். பிறகு அறை முழுவதையும் சுற்றி வந்து சற்றே புன்முறுவல் கொண்டு சமதை அழைத்து, "சமத்! இதோ பார்" என்று சாளர உச்சிகளையும், அறையின் பாரியான வாயிற்கதவையும் காட்டினான்.

அவன் காட்டிய இடங்களைக் கண்ட சமத் பயங்கரமாக முறுவல் செய்தான். புரிந்து கொண்டதற்கு அடையாளமாகத் தலையையும் அசைத்தான். அந்த இருவர் ஆராய்ச்சியையும் கவனித்த நந்தன் இதயத்தில் சந்தேகம் பெரிதாக எழுந்து ஓரளவு அச்சத்தையும் விளைவித்தாலும் அவன் வாய்விட்டு ஏதும் பேசவில்லை. சற்று நேரத்தில் அறை ஆராய்ச்சியை முடித்துக் கொண்டு வந்த விஜயனை நோக்கிக் கிழவன் வினவினான். "இந்த அறையில் விசேஷம் ஏதாவது உண்டா?" என்று.

"உண்டு" என்றான் விஜயன்.

"என்னவென்று நான் அறியலாமா?" என்று நந்தன் கேட்டான்.

"இரண்டாவது ஜாமத்தில் தெரியும்" என்று கூறிய விஜயன், "நேரத்தை வீணாக்க வேண்டாம். முடிந்த போது தூங்கிவிடுவோம்"

zeevaa

என்று கூறிவிட்டு அறையில் ஒரு பகுதியிலிருந்த பெரிய கட்டிலில் படுத்துக் கொண்டான். மூர்சமத் அந்தக் கட்டிலுக்கு அருகில் தரையில் தனது கால்களை நீட்டிப் படுத்தான். கிழவன் படுக்காமல் சாளரத்தடியில் உட்கார்ந்து சுவரில் சாய்ந்து கண்களை மூடினான்.

விஜயன் மட்டும் கண்களை மூடவில்லை. ஒருக்களித்துப் படுத்தவண்ணம் அறைக் கதவையும் சாளரங்களையும் கவனித்த வண்ணமிருந்தான்.

மெள்ள மெள்ள நடு நிசியும் வந்தது. அறையின் கதவு பூட்டப்படும் என்று எதிர்பார்த்தான். ஆனால் பூட்டப்படவில்லை. கதவு திறந்தே கிடந்தது. அடுத்த வினாடி திறந்த கதவின் வாயிற்படிக்கு மேலிருந்து பெரிய கம்பிக் கதவொன்று சப்தம் ஏதுமின்றி இறங்கிவந்து தரையில் பதிந்து வாயிலை அடைத்தது. அதே சமயத்தில் நந்தவனத்துக்குப் பக்கத்திலிருந்த சாளரங்களிலும் இரண்டு கம்பிக் கதவுகள் இறங்கி அவற்றையும் அடைத்தன. தாங்கள் இருந்தது அறையல்ல, சிறை என்பதை விஜயன் புரிந்து கொண்டான். அந்தச் சமயத்தில் அறை வாயிலில் கம்பிக் கதவின் ஓரமாக யாரோ நடந்து சென்றார்கள். நடந்தவரைக் கண்ட விஜயன் திக்பிரமை கொண்டான்.

zeevaa

# 5. பள்ளியறையில் பயங்கர நிலை

அர்த்த ராத்திரியில் ஆகாயத்திலிருந்து இறங்கியவை போல சர்ரென்று இறங்கிய கம்பிகள் அறை வாயிலையும் சாளரங்களையும் அடைத்து அந்தச் சயன அறையையே சிறையாக அடித்து விட்டதைக் கண்டும் உணர்ச்சிகளை அணுவளவும் இழக்காத விஜயன் கம்பி ஓரமாக நடந்து சென்ற மனிதனைக் கண்டதும் லேசாக உணர்ச்சிகளைக் காட்டவே செய்தான். அதுவரை அந்த அறைக் கோடியில் வைக்கப்பட்டிருந்த விளக்கின் சிற்றொளியில் மென்மையாகவும் அழகாகவும் தெரிந்த அந்த வாலிபனின் கண்களின் திடீரென்று இருமுறை பயங்கர ஒளிகள் தோன்றி மறைந்து விட்டதல்லாமல், மறைந்த பின்னும் கண்களில் கூர்மையும் கடுமையும் நிலைத்துவிட்டதன் காரணமாக அவன் கட்டிலில் சிறிது புரண்டு ஒருக்களித்துப் படுத்து அறைவாயில் கம்பிகளை உற்று நோக்க முற்பட்டான். முதலில் கம்பி ஓரமாகச் சென்ற மனிதன் இரண்டாம் முறையும் திரும்ப வந்து கம்பிகளுக்கருகில் நின்று கொண்டு அறையின் உட்புறத்தை நோக்கினான். அந்தச் சமயத்தில் அவன் முகத்தின் மீது அறை விளக்கின் வெளிச்சம் நன்றாக விழவே, விஜயன் கால்வாசியே திறந்த கண்களால் அந்த மனிதனை நன்றாக ஆராய்ந்து தனது சந்தேகத்தை நிவர்த்தித்துக் கொண்டானாதலால் மீண்டும் கண்களை மூடி உறங்குவது போல் பாசாங்கு செய்தான்.

அந்தப் பாசாங்கில் அந்த மனிதனும் ஏமாந்திருக்க வேண்டும். சற்று எட்ட மறைவில் நின்றிருந்த ஒருவனை நோக்கி, "நன்றாக உறங்குகிறான். இன்னும் அரை ஜாமத்துக்குப் பிறகு இவனையும் அந்த மூர் தடியனையும் பிணைத்து விடுவோம். பிறகு இவர்களைக் கொண்டு போவது கஷ்டமல்ல" என்று மிக மெதுவாகச் சொன்னான்.

zeevaa




zeevaa

அவன் மிக மெதுவாகவும் எச்சரிக்கையுடனும் பேசினாலும் அர்த்தராத்திரியின் நிசப்தத்தின் காரணமாக அவன் சொன்னது விஜயன் காதில் தெளிவாக விழுந்ததால் அவன் இதழ்களில் புன்முறுவலொன்று தவழ்ந்தது. சில வினாடிகளுக்கெல்லாம் அந்த மனிதன் கம்பிக் கதவிடமிருந்து அகன்றதும், கட்டிலுக்கு அருகாமையில் தரையில் படுத்திருந்த மூர்சமதைத் தனது கையை நீட்டித் தொட்டான் விஜயன்.

சமதும் சிறிதும் தூங்காததால் எழுந்திருக்காமலே தனது கரகரத்த குரலில் பேசினான், ''கவனித்தேன் எஜமான்!'' என்று.

தனது மெய்க்காவலனது விழிப்பையும், தன்னைக் காப்பதில் அவனுக்கிருந்த எச்சரிக்கையையும் கண்டதால் ''மூர்சமத் இருக்கும் வரையில் என்னை அணுக யமனால் கூட முடியாது...' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்ட விஜயன், ''சமத்! வந்தவன்...'' என்று துவங்கினான் வெளிப்படையாக மெதுவான குரலில்.

''ஆதிமால்யன் என்ற ஆதிமல்லன். சிங்களத்திலிருந்தே தொடர்ந்து வருகிறான்.'' என்று எசமான் வாசகத்தை முடித்தான் மூர்சமத்.

''சிங்களத்திலிருந்து தொடர்ந்து வந்தால் நாம் வந்த மரக்கலத்தில் காணவில்லையே?'' என்று வினவினான் விஜயன்.

''மரக்கலத்தில் வரவில்லை. ஆனால் •கோரிங்காவில் நாம் மரக்கலத்திலிருந்து இறங்கும் போது பயணிகளை எதிர்கொள்ள வந்த கும்பலில் இவனைப் பார்த்தேன். என்னைப் பார்த்ததும் கும்பலில் மறைந்து ஓடிவிட்டான். சற்று தாமதித்திருந்தால் இன்றிரவு

---

• The Calingoe is mentioned by Pliny. The name points out to the great port town of Coringa which is situated an a projecting piece of land at the mouth of Godavari River"

Cunningham's Geography by Surendra Nath Majumdar Sastry- Page 592.

zeevaa

இங்கு வந்திருக்க மாட்டான். அவனை கோரிங்காவின் கடற்கரையிலேயே'' என்ற சமத் வாசகத்தை முடிக்கவில்லையே தவிர தனது உலக்கைக் கைகளை ஒன்றோடு ஒன்று பிசைந்தான்.

மூர்சமதின் உக்கிரத்தையும் கைகளைப் பிசைந்ததையும் கண்ட விஜயன் 'இந்தக் கைகளில் மட்டும் ஆதிமல்லன் சிக்கியிருந்தால் அவன் கழுத்தை நெறித்து, கழுத்தின் பின்புற எலும்பு மளமளவென முறிந்து, ரத்தம் குமிழிட்டுப் பீறிட்டு மூர்சமதின் கைகளைக் கழுவியிருக்கும்' என்று உள்ளூர நினைத்ததால் உதடுகளில் ஏற்கெனவே தவழ்ந்த புன்னகையைச் சிறிது அதிகப்படுத்திக் கொண்டான். அடுத்துச் சொன்னான் : ''சமத்! கிழவனை எச்சரித்து விடு. எது நடந்தாலும் உறங்குவது போல் பாசாங்கு செய்யச் சொல். விளக்கை ஊதி அணைத்து விடு.'' என்று.

மூர்சமதின் முகத்தில், ஆடுகளை எதிர்பார்க்கும் புலியின் முகம்போல, பொலிவொன்று தவழ்ந்தது. அவன் தனது கடினமான பருத்த உதடுகளைத் திறந்து நாவினால் அவற்றைத் துழாவிக் கொண்டு மெள்ள எழுந்திருந்து, காட்டில் வேட்டையை எதிர்பார்த்து நடக்கும் வேங்கையைப் போல நடந்து சற்று எட்ட இருந்த சாளரத்தில் வைக்கப்பட்டிருந்த விளக்கை ஊதி அணைத்தான், திரும்ப வரும் போது கிழவன் சாய்ந்து உறங்கிக் கொண்டிருந்த இன்னொரு சாளரத்திடம் வந்து ''பெரியவரே!'' என்று மெதுவாக அழைப்பதற்குப் பூர்வாங்கமாக அவன் தோளில் கையை வைத்தான்.

''எழுப்ப அவசியமில்லை!'' என்ற கிழவன் சொற்கள் அவனை அசர வைத்தன.

''பெரியவரே'' மூர்சமத் அழைத்தான்.

''என்னவாம்?''

''ஆபத்து நெருங்குகிறது.''

''நெருங்கவில்லை.''

zeevaa

''நெருங்கவில்லையா?''

''இல்லை. இந்த மாளிகையில் நுழைந்தபோதே ஆபத்துக்குள் நுழைந்து விட்டோம்.'' இதை சர்வ சகஜமாகச் சொன்ன கிழவன், ''இப்பொழுது வந்தவன் உங்களுக்கு முன்பே என் குடிசைக்கு வந்தான். உங்களைப் பற்றி விசாரித்தான்.'' என்றும் கூறினான்.

''இதை ஏன் முன்னமே சொல்லவில்லை?'' என்று கேட்டான் மூர்சமத்.

''சொல்ல அவசியமில்லை. உங்கள் இருவரைக் கண்டதும் உங்களைக் காப்பாற்றத் திட்டமிட்டு விட்டேன்!'' என்று கிழவன் முணுமுணுத்தான்.

''என்ன திட்டம்?'' மூர்சமதின் குரலில் மூர்க்கத்தனம் பரிபூர்ணமாக இருந்தது.

''எங்கள் ராஜகுமாரியிடம் உங்களை ஒப்படைத்தேன்.'' என்றான் கிழவன்.

''அந்தப் பெண்ணா!'' வியப்புடன் வினவினான் மூர்சமத்.

''ஆம்'' என்ற கிழவன், ''நமது நண்பர்கள் வரும் நேரமாகி விட்டது; போய்ப் படுத்துக் கொள்'' என்றும் மூர்சமதின் பேச்சுக்கு முடிவு கட்டினான்.

''நீங்கள்?'' என்று கவலையுடன் கேட்டான் மூர்சமத்.

''என்னைக் கவனித்துக் கொள்ள என்னால் முடியும். உங்களை நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள். போ அனாவசியமாகப் பேசாதே'' என்ற படகோட்டிக் கிழவன் நந்தன் மீண்டும் சாளரத்தில் சாய்ந்து கொண்டான்.

மூர்சமதின் வியப்பு சொல்லுக்கும் நினைவுக்கும் அடங்காதிருந்தாலும், அதை அவன் வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் மெதுவாக நடந்து கட்டிலின் பக்கத்தில் தரையில் படுத்துக்

zeevaa

கொண்டான். அவன் கிழவனுடன் என்ன பேசினான் என்பதை விஜயன் கேட்டானில்லை. அவன் படுத்தவனை நோக்கிக் கட்டிலிலிருந்தே குனிந்து, "சமத்! யார் வந்தாலும் எதைச் செய்தாலும் நீ எந்தச் செயலிலும் முதலில் இறங்காதே. நான் துவங்கிய பின் எதை வேண்டுமானாலும் செய். எதைச் செய்தாலும் சத்தமில்லாமல் செய்து முடித்துவிடு" என்று கூறிவிட்டு ஒருக்களித்து மீண்டும் கண்களை மூடினான்.

கண்களை மூடினானே தவிர உணர்ச்சிகளை மூடவில்லை அந்த வாலிபன். ஐந்தாவது வயது முதலே ஆபத்தில் வளர்ந்த விஜயன் உணர்ச்சிகள் எப்பொழுதும் ஊசி முனையில் நிற்கும் என்பதையும், அவன் உறங்குகிறானென்று மட்டும் ஏமாறக்கூடாதென்றும் சிங்களத்தில் சர்வ சாதாரணமாக மக்களால் பேசப்பட்டு வந்தது. அதை அர்த்த ராத்திரியில் வந்து கவனித்தவனும் உணர்ந்திருக்க வேண்டும். ஆகையால் அவன் அடுத்து வந்த போது மிகுந்த எச்சரிக்கையுடனே வந்தான்.

அர்த்த ராத்திரி நகர்ந்து அரை ஜாமமே ஆகியிருந்த சமயத்தில், எங்கும் நிசப்தம் தீவிரமாக நிலவிக் கிடந்த சூழ்நிலையில், நான்கு வீரர்களின் துணையுடன் கம்பிக் கதவுக்கு அருகில் வந்த ஆதிமல்லன் இரண்டு விநாடிகள் கதவுக்கருகில் எந்தவித செயலிலும் ஈடுபடாமல் நின்றான். பிறகு கையால் ஏதோ சைகை செய்தான் பக்கத்திலிருந்த ஒருவனை நோக்கி. அவுன் என்ன செய்தானோ சொல்ல முடியாது. கீழே பதிந்து கிடந்த கம்பிக் கதவு மெள்ள மேலே ஏறியது எந்தவித அரவமும் செய்யாமலே, கம்பிகள் கதவுக்கு மேலே பழையபடி மறைந்ததும் ஆதிமல்லன் தனது பெரும் சரீரத்துடனும் பயங்கர மீசையுடனும் உருண்ட விழிகளால் அறையை அளவெடுத்த வண்ணம் உள்ளே நுழைந்தான். அவனுடன் நுழைந்த வீரர்களுக்கு ஏதோ சைகை செய்து விட்டு மெள்ள அடிமேலடி எடுத்து வைத்து விஜயன் படுத்திருந்த கட்டிலண்டை வந்தவன், கட்டிலின் அடியில் படுத்திருந்த மூர்சமதிடம் சில விநாடிகள் நின்றான். அடுத்து அவன் காட்டிய

சைகையைத் தொடர்ந்து அவன் வீரர்கள் இருவர் தங்கள் உருவிய வாள்களை மூர்சமதின் ஊட்டியை நோக்கிக் குறிவைத்து நின்றார்கள். இன்னொருவன் கிழவன் இருந்த சாளரத்திடம் சென்று கிழவன் கழுத்தருகில் வாளை நீட்டிக் கொண்டு நின்றான்.

இப்படிச் சுற்றுப்புறத்தை சரிசெய்து கொண்ட ஆதிமல்லன் மூர்சமதைத் தெய்வமாக நினைத்து அடிமேலடி வைத்துப் பிரதட்சிணம் செய்து விஜயன் அருகில் வந்து அவனைத் தனது கையிலிருந்த வாளின் நுனியால் மெதுவாகத் தட்டினான். அதற்கும் அவன் எழுந்திருக்காமல் போகவே, 'என்ன இப்படிக் கும்பகர்ணனாகிவிட்டான்?' என்று தனக்குள் அலுத்துக் கொண்டு மெதுவாக விஜயனை நோக்கிக் குனிந்தான். குனிந்து விஜயன் தூக்கம் பொய்த் தூக்கமா நிஜத் தூக்கமா என்பதை அறிய நன்றாக இருட்டில் அவனை உற்று நோக்கினான் குனிந்த நிலையிலேயே.

அப்பொழுதும் விஜயன் கண் திறந்தானில்லை. நல்ல உறக்கத்தில் இருப்பவன் போல் ''உம்'' என்று முனகிச் சிறிது அசைந்தான். அந்த அசைவினாலும், ஆயாசத்தை உதிர்த்த உங்காரத்தினாலும் எச்சரிக்கை குலைந்த ஆதிமல்லன் தனது பணியாளருக்கு ஏதோ சைகை செய்ய முயன்ற சமயத்தில் அவன் கழுத்து சரேலென்று இரண்டு இரும்புக் கைகளால் வளைக்கப்பட்டு இறுக்கப்பட்டு கட்டிலை நோக்கி இழுக்கவும் படவே அந்த யமப் பிடியிலிருந்து திமிற முயன்றான் ஆதிமல்லன்.

அந்த திமிறல்தான் கீழே கிடந்த மூர்சமத்துக்குச் சைகையாயிற்று. அவன் உலக்கைக் கால்கள் நந்தன் மீது வாட்களை ஊன்றி நின்ற இருவரின் கால்களை வேகமாக உதைத்தன. அதனால் தடுமாறி விழப்போன வீரரில் ஒருவனின் கையை சமதின் கை பிடித்து அதை முறுக்கவே ஏதோ மணிக்கட்டு மளமளவென்று முறியும் சத்தம் கேட்கவே, அந்தக் கையிலிருந்த வாளைப் பறித்துக் கொண்ட மூர்சமத் எழுந்தான் வேகமாக. அறைக்கு வெளியே ஓட முயன்ற இன்னொரு வீரனின் அங்கியைப் பின்புறத்தில் பிடித்து இழுத்து

zeevaa

அவன் மென்னியையும் இன்னொரு கையால் பிடிக்க அவன் சுரணையற்றுக் கீழே விழுந்தான்.

அடுத்துக் கட்டிலை நோக்கிய மூர்சமதின் முகத்தில் கவலை தட்டியது. விஜயன்மீது ஆதிமல்லன் பூதாகாரமாகப் படுத்துக் கிடந்தான். அவனை விலக்கும் நோக்கத்துடன் மூர்சமத் விரைய முற்பட்ட சமயத்தில் ஆதிமல்லன் கட்டிலிலிருந்து சரிந்து தரையில் இறங்கி மல்லாந்து படுத்தான். சுரணையை அடியோடு இழந்திருந்த அவன் முகத்தில் மரணக்களை தட்டியிருந்தது. அவனை அணுகிப் பார்த்த மூர்சமத், ''எசமான்! இவன் இன்னும் இறக்கவில்லை'' என்று வருத்தத்துடன் கூறினான்.

''இவனை இங்கு மாளவிட்டால் சிங்களத்தின் தண்டனையிலிருந்து தப்பிவிடுவான். இவனைப் பிறகு கவனித்துக் கொள்வோம்.'' என்று கூறிவிட்டுக் கிழவன் என்ன ஆனானென்று அறிய சாளரத்தை நோக்கித் திரும்பினான்.

சாளரத்தருகே கிழவன் சர்வசாதாரணமாகச் சாய்ந்து கொண்டிருந்தான் பழையபடி. அவன்மீது கத்தியை ஊன்றியிருந்த வீரன் சாளரத்துக்குக் கீழே கிடந்தான். அவன் கத்தி அவன் உடல்மீது குறுக்கே கிடந்தது.

இந்த விசித்திரத்தைத் தூரத்திலிருந்தே பார்த்த விஜயனும் மூர்சமதும் வயதை வைத்து யாரையும் எடைபோடக் கூடாதென்று தீர்மானித்தனர். அவர்கள் தன்னைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்ததைக் கண்ட கிழவன் சாளரத்திலிருந்து இறங்கி வந்து விஜயனை நோக்கி, ''இவர்களை நான் கவனித்துக் கொள்கிறேன். அடுத்த அறையிலிருக்கும் அரசகுமாரியைப் பார்த்துவிட்டு வாருங்கள்'' என்றான்.

''பார்ப்பதற்கு என்ன இருக்கிறது?'' என்று கேட்டான் விஜயன்.

''அரசகுமாரி ஆபத்திலிருக்கிறாள்!'' என்றான் கிழவன்.

zeevaa

அதை நம்பவில்லை விஜயன். இருப்பினும் கிழவன் சொல்லைத் தட்டாமல் அந்த அறையிலிருந்து பக்கத்து அறையை நாடிச் சென்றான். பக்கத்து அறைக் கதவு பிரும்மாண்டமாயிருந்தது. நன்றாகச் சாத்தியும் இருந்ததால், கிழவன் நினைத்த ஆபத்து மனப்பிரமை என்று நினைத்த விஜயன் மெள்ளக்கதவைத் திறக்க முயன்றான். கதவு உட்புறம் தாளிடப்பட்டிருந்ததால் வாயிற்புறமாக ஓடி நந்தவன வழியாக சாளரத்தின் மூலம் எட்டிப் பார்த்தான்.

அரசகுமாரியின் பள்ளியறையின் உட்புற நிலை மிகப் பயங்கரமாய் இருந்தது. அங்கு தனது கண் முன்பாக நிலவிய காட்சியைக் கண்ட விஜயன் பெரும் அதிர்ச்சியாலும் அரசகுமாரியின் கதியைப்பற்றிய அச்சத்தாலும் செயலிழந்து நின்றுவிட்டான். சாளரத்தின் ஓரத்திலேயே பல விநாடிகள். அடுத்து அவன் முற்றும் எதிர்பாராத நிகழ்ச்சிகள் மிகத் துரிதமாகத் தொடங்கின.



# 6. மறைந்த மாயக்காரி

அரசகுமாரியின் அறைவாயிற் பெருங்கதவு அசைக்கவும் முடியாத அளவுக்கு உட்புறம் தாளிடப்பட்டிருந்ததால், மாளிகையைச் சுற்றி ஓடிவந்து நந்தவனத்துச் சாளரத்தின் பக்கமாக நின்ற விஜயன், பள்ளியறையின் உள்ளிருந்த நிலைகண்டு பல வினாடிகள் பிரமித்து நின்று விட்டானென்றால், அதற்குக் காரணம் இருக்கவே செய்தது. அந்தப் பள்ளியறைப் பஞ்சணையில் கலிங்கத்து மெல்லிய வெண்ணிற ஆடையணிந்து அப்ஸர மங்கைபோல் அழகெல்லாம் அள்ளி வீச உட்கார்ந்திருந்தாள் அரசகுமாரி. பள்ளியறை அமைப்பும் பஞ்சணைச் சிறப்பும் முற்றும் துறந்த முனிவர்களின் மனங்களையும் குலையச் செய்யும் அளவுக்கு உன்மத்தம் ஊட்டும்படியாய் இருந்ததால், 'இத்தனை அழகுடன் இத்தனை பயங்கரம் எப்படிப் பிணைந்தது?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான் விஜயன்.

கலிங்கத்து மெல்லிய சித்திர வேலைப்பாடமைந்த பட்டுகளால் தயாரிக்கப்பட்டிருந்த பஞ்சணை முகப்பில், பருவத்தால் செழித்த அங்கங்கள் அழுந்த, கால்கள் கீழே தொங்கலாட உட்கார்ந்திருந்த அரசகுமாரி தனது இடையின் முன்பகுதியில் வலது கையை வைத்து இடது கையைக் கன்னத்தில் ஊன்றிக் கொண்டிருந்தாள். அவள் ஆடை சிறிது குலைந்து தோளின் ஒரு புறத்தில் லேசாக இறங்கியும் கிடைப்புறத்தின் வழவழத்த அழகைப் புறம்பே காட்டியும், தொடைகள்மீது தவழ்ந்த சேலைப் பகுதி சில இடங்களில் கலைந்தும் சில இடங்களில் மடிந்தும் அழகைப் பலவிதமாக விளக்கியதால், பெண்களின் அலங்கோலத்திலும் ஆண்களை வசீகரிக்கும் அழகிருப்பதைப் புரிந்து கொண்டான் விஜயன். அவள்

zeevaa



zeevaa

பஞ்சணைக்கு மேலே கூரையிட்ட பட்டிலும், பக்கவாட்டில் தொங்கிய சீலைகளிலும் காவியக் காட்சிகள் நெய்யப் பட்டிருப்பதையும், சுவர்களிலும் துஷ்யந்தன்-சகுந்தலை, அஜமகாராஜா-இந்துமதி இவர்களின் காதல் காட்சிகள் கண்ணைக் கவரும் வண்ணங்களால் தீட்டப்பட்டிருப்பதையும் கண்டவிஜயன் மனம் அத்தனை அழகிலும் இரண்டு வினாடிகளுக்குமேல் நிலைக்கவில்லை, அந்தப் பள்ளியறையில் நிலவிய ஆபத்தின் விளைவாக.

இந்தச் சித்திரங்களிடையே ஒரு சித்திரப் பாவையாக பஞ்சணையில் உட்கார்ந்திருந்த அரசகுமாரிக்கு எதிரே பத்தடிகள் தள்ளி வீரனொருவன் உருவிய வாளுடன் நின்றிருந்தான். இன்னொரு வீரன் தனது கச்சையிலிருந்த வாட்பிடியின்மீது கையை வைத்த வண்ணம் அறை வாயிற் கதவின்மீது சாய்ந்து கொண்டிருந்தான். மற்றும் ஒருவன் விஜயன் நின்றிருந்த சாளரத்தின்மீது அலட்சியமாக உட்கார்ந்திருந்தாலும், அவன் கையில் இருந்த குறுவாள் அவன் அந்தப் பள்ளியறையை அழகு பார்க்க வரவில்லை என்பதை நிரூபித்தது. சாளரத்தின் அருகே தரையில் நின்ற விஜயன், சாளரம் மிகவும் தாழ்ந்திருந்ததன் காரணமாக யார் கண்ணிலும் படாமல் சுவர் ஓரமாகச் சிறிது மறைந்தே நின்று உள்ளே நடப்பதை கவனிக்கலானான்.

அஃறக்குள்ளிருந்த வீரர்களின் முகங்களிலிருந்து அவர்கள் எந்தச் செயலுக்கும் சித்தமாய் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்ட விஜயன், தான் அஜாக்கிரதையாக எந்தச் செயலில் இறங்கினாலும் அரசகுமாரி ஆபத்துக்குள்ளாகி விடுவாள் என்ற எண்ணத்தில், எதற்கும் சித்தமாக, ஆனால் உடனடியாக எந்த நடவடிக்கையிலும் இறங்காமல் தான் பிரவேசிக்க வேண்டிய சமயத்தை எதிர் பார்த்திருந்தான். அந்த அறையில் இருந்தவர்கள் ஆதிமல்லன் ஆட்கள் என்பது சந்தேகமறத் தெரிந்தாலும் அவர்கள் அரசகுமாரிக்கு ஆபத்தை விளைவிக்க வேண்டிய அவசியம்

zeevaa

என்னவென்பது அவனுக்குப் புரியவில்லையாதலால் உட்புற நாடகத்தைக் கவனித்தவண்ணமிருந்தான்.

அந்த நாடகம் துவங்கவும் அதிக நேரம் பிடிக்கவில்லை அரசகுமாரி எதிரே வாளை உருவி நின்றவன். "அரசகுமாரி! இந்த ஆபத்தை நீங்களாகத்தான் வரவழைத்துக் கொண்டீர்கள். சிங்களத்து விஜயனைக் காக்க முயன்றது பெரும் குற்றம். அதனால்தான் உங்களையும் சிறை செய்ய எங்கள் தலைவர் உத்தரவிட்டிருக்கிறார்" என்றான் கடினம் சிறிதும் புலப்படாத குரலில்.

அரசகுமாரியின் கண்கள் ஈட்டிகளெனப் பளபளத்தன. அறை விளக்கில். எதிரே வாளுடன் நின்றவனைச் சிறிதும் அச்சமின்றியும் அதிகாரத் தோரணையிலும் ஏறெடுத்து நோக்கிய அரசகுமாரி, "எந்த விஜயனையும் எனக்குத் தெரியாது. யாரைக் காப்பாற்றவும் நான் முயலவில்லை. யார் நீ? யார் அந்தக் கொலைகாரர்கள்? யார் உங்கள் தலைவன்?" என்று வினாக்களைத் தொடுத்தாள்.

"எங்கள் தலைவர் ஆதிமால்யர். சோழர்களின் வலது கை போன்றவர். சோழ மன்னர்களால் பெரிதும் மதிக்கப்பட்டவர். நாங்களும் சோழ நாட்டவர்" என்று பதில் சொன்னான் எதிரே நின்ற வீரன்.

"சோழ வீரர்களுக்குக் கலிங்க நாட்டில் என்ன வேலை? இந்த ராஜ்யத்துக்குள் நுழைய உங்களுக்கு யார் அனுமதி கொடுத்தது?" என்ற அரசகுமாரி, சீற்றத்தைக் குரலில் சிறிதும் காட்டாமல், குற்றவாளியை விசாரிக்கும் நீதிபதியின் தோரணையில் வினவினாள்.

எதிரே நின்ற வீரனுக்கு அரசகுமாரியின் கேள்விகள் சங்கடத்தை விளைவித்ததால் அவன் நின்ற இடத்திலேயே சிறிது அசைந்தான். "அரசகுமாரி! அனுமதி பெற அவகாசமில்லை எங்களுக்கு. தவிர, இப்பொழுது உள்ள நிலையில் அனுமதியும் கிடைக்காது. அவசர நடவடிக்கைகளுக்கு அரசாங்க அனுமதி, விதிமுறைகள், இவற்றைக்

zeevaa

கவனிக்க முடியாது'' என்ற அந்த வீரன், ''அரசகுமாரி! நீங்கள் பேசாமல் எங்களுடன் வந்துவிட்டால் உங்களுக்கு ஆபத்து ஏதுமில்லை. நீங்கள் இங்கிருப்பதாலும் பயனில்லை. இத்தனை நேரம் விஜயனும், அந்த மூர் தடியனும் கொல்லப்பட்டிருப்பார்கள். இந்த மாளிகை எங்கள் வீரர்கள் வசமிருக்கிறது. விஜயனோ உங்கள் வீரர்களோ உதவிக்கு வருவார்கள் என்ற எண்ணம் இருந்தால் அதை விட்டு விடுங்கள்'' என்றும் நிலைமையை விளக்கினான்.

அந்த விளக்கத்திற்குப் பிறகும் அரசகுமாரி மசியவுமில்லை, பஞ்சணையிலிருந்து இறங்கவும் இல்லை. விற்புருவங்களை மட்டும் சிந்தனைக்கு அறிகுறியாகச் சிறிது உயர்த்தினாள். ''என் வீரர்களை என்ன செய்தீர்கள்?'' என்று மட்டும் வினவினாள்.

''அவர்களை ஒன்று திரட்டி இந்த மாளிகைத் தோட்டத்தின் பாசறையில் வைத்துப் பூட்டிவிட்டோம். பாசறைப் பெரும் கதவுகளை எங்கள் வீரர்கள் பாதுகாத்து நிற்கிறார்கள்'' என்று வீரன் விளக்கம் சொன்னான்.

அரசகுமாரியின் இதழ்கள் லேசாக அசைந்தன. ''உங்களுக்கு நல்ல துணிவிருக்க வேண்டும்'' என்று பாராட்டினாள்.

''ஆதிமல்லர் துணிவு சிங்களத்திலும் பிரசித்தம், சோழ நாட்டிலும் பிரசித்தம், அவர் சாதிக்க முடியாதது எதுவுமில்லை'' என்ற அந்த வீரன், தனது நிதானத்தைச் சிறிது இழந்து, ''அரசகுமாரி! எழுந்து வாருங்கள். இங்கு விவாதம் செய்து கொண்டிருக்க எனக்கு அவகாசமில்லை. பேச்சு போதும். செயலில் இறங்குவோம்'' என்று கூறிக்கொண்டே பஞ்சணையை நெருங்க ஓர் அடி எடுத்து வைத்தான்.

அதுதான் அவன் செய்த தவறு. வேண்டுமென்றே பேச்சுக் கொடுத்த அரசகுமாரியின் கண்கள், உள்ள நிலையைப் பேசிய சில நிமிடங்களில் ஊகித்துக் கொண்டன. நந்தவனத்துச் சாளரத்தருகே வந்து நொடியில் மறைந்து விட்ட உருவத்தின் நிழலை

zeevaa

உட்கார்ந்ததுமே கவனித்த அரசகுமாரி, அந்த நிழலின் பரிணாமத்திலிருந்து அது யாரென்பதை ஓரளவு ஊகித்தும் கொண்டாள். தவிர, பேச்சுக் கொடுத்த சமயத்தில் அவள் இடைக் கச்சையிலிருந்த அலங்காரப் பிடிகொண்ட குறுவாளும் மெள்ள உறையிலிருந்து நீக்கப்பட்டது. "செயலில் இறங்குவோம்" என்று கூறிக்கொண்டு எதிரே நின்றவன் பஞ்சணையை அணுக முற்பட்டதும், "செயல்தானே வேண்டும் உனக்கு? இந்தா பெற்றுக் கொள்," என்று கூறிய வண்ணம் அரசகுமாரி தனது கச்சையிலிருந்து குறுவாளை எடுத்துக் கண்ணிமைக்கும் நேரத்தில் வீசிவிட்டாள் அந்த வீரனை நோக்கி.

அனாயாசமாக வீசப்பட்ட குறுவாள் அந்த வீரன் இதயத்தில் தைத்துவிடவே அலறவும் அவனுக்குத் திராணியில்லாமல் கையிலிருந்த வாள் நழுவ இதயத்தைத் தன் இரு கைகளாலும் பிடித்துக் கொண்டான். அடுத்த விநாடி துவண்டு தரையில் சாய்ந்தான். அரசகுமாரி குறுவாளை எறிந்த அதே சமயத்தில், சாளரத்தில் குறுவாளும் கையுமாக உட்கார்ந்திருந்த இன்னொருவன் அரசகுமாரி மீது குறுவாளெறியக் கையைத் தூக்கினான். "வேண்டாம் கீழே போட்டு விடு குறுவாளை," என்று அவன் காதில் சொற்கள் மிக ரகசியமாக ஒலித்தன. சொற்களைத் தொடர்ந்து அவன் முதுகுப் புறத்தில் ஒரு குறுவாளும் ஊன்றவே, அவன் கையிலிருந்த குறுவாள் கீழே விழுந்தது.

அதே வினாடியில் அறைக் கதவைக் காவல் செய்து கொண்டிருந்தவனும் வாளை உருவிக் கொண்டு வரவே, தனது தலையணைப் புறத்தில் கிடந்த நீண்ட வாளைக் கையில் எடுத்துக் கொண்டாள் அரசகுமாரி.

அதைக் கண்ட அந்த வீரன் வியப்படைந்தானென்றால், சாளரத்தில் உட்கார்ந்திருந்தவனைக் குப்புறத் தள்ளிவிட்டு அவன் பின்னால் சாளரத்தில் ஏறி உள்ளே குதித்த விஜயனைக் கண்டதும் சொல்லுக்கடங்காத அதிர்ச்சியையும் அடைந்ததன் காரணமாக தனது

zeevaa

வாளை யாருடைய உத்தரவும் இல்லாமலே கீழே போட்டான். அடுத்து விஜயன் எந்தத் தாமதத்தையும் காட்டவில்லை. சாளரத்திலிருந்து விழுந்தவனுடைய கச்சையிலிருந்து அவன் வாளை உருவிக் கொண்டு, அறைவாயிலைக் காத்து நின்றவனை அருகில் வரச் சொல்லி இருவரையும் சேர்த்து உட்காரப் பணித்தான். பிறகு அரசகுமாரியை நோக்கி, ''அரசகுமாரி! இங்கு ஏதாவது கயிறு இருக்கிறதா?'' என்று விசாரித்தான்.

அரசகுமாரி ஏதும் பேசாமல் நடந்து பஞ்சணைக்குப் பின்னாலிருந்து ஒரு நீண்ட பிணைக் கயிற்றை எடுத்து வர, அதை வாங்கிக் கொண்ட விஜயன் இருவரையும் ஒன்றாகச் சேர்த்துக் கட்டினான். அடுத்துக் கீழே விழுந்தவனிடம் சென்று அவனைக் குனிந்து நோக்கினான். பிறகு கண்களை உயர்த்தி அரசகுமாரியை நோக்கி, ''அரசகுமாரி! இவனால் இனிமேல் ஏதும் செய்ய முடியாது. இறந்து விட்டான்,'' என்று கூறினான்.

ஆமென்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தாள் அரசகுமாரி. ''பண்பாடற்றவர்கள் நாட்டில் உலாவும்போது பெண்களுக்குத் தற்காப்பு அவசியமாகிறது,'' என்று காரணம் சொன்னாள் அரசகுமாரி தனது செயலுக்கு.

விஜயன் இதற்குப் பதிலேதும் சொல்லவில்லை. ''இவர்களைக் கவனிக்க உங்கள் ஆட்களை அழைத்து வருகிறேன். கீழே ஆதிமாலயனும் அவனது சகாக்களும் காத்திருக்கிறார்கள். இவர்களுடன் சேர்ந்து கொள்ள அவர்களையும் கட்டிக்கொண்டு வருகிறேன். அதுவரை எச்சரிக்கையாயிருங்கள்,'' என்று கூறிவிட்டுச் சாளரத்தை நோக்கிச் சென்றான்.

அரசகுமாரி அந்த அறையில் நிற்கவில்லை. அவளும் சாளரத்தை நோக்கிச் சென்றாள். விஜயன் சாளரத்தின் மறுபக்கத்தில் காலை வைத்து நந்தவனத் தரையில் குதித்ததும் அவளும் சாளரத்தின் மூலம் வெளியே குதிக்க முற்பட்டாள். ஆழம் கீழே சற்று அதிகமாயிருந்ததால் சிறிது சிந்தித்தபோது விஜயன் திரும்பி,

zeevaa

''அப்படியே இறங்குங்கள். அஞ்ச வேண்டாம்,'' என்று கூறி சாளரக் கட்டையிலிருந்து சரிந்த அவள் உடலைத் தனது இரு கைகளாலும் பிடித்துக் கொண்டான். அவள் பூவுடல் தனது உடலைத் தடவிக்கொண்டு சரிந்ததாலும், கைகளில் அவளைத் தாங்கிப் பிறகு இறக்கி விட்டபோது அசைப்பில் பட்டுவிட்ட அவள் கடினமான மார்புப் பிரதேசத்தாலும், கையில் இணைந்த சிற்றிடையின் பட்டுச் சதையாலும், தனது கால்களோடு சேர்ந்து இறங்கிய அவளது அழகுக் கால்களின் திண்மையாலும், அவன் கன்னத்தில் லேசாக விசிறியும் தவழ்ந்தும் விட்ட குழல்களினாலும், அவளைத் தாங்கிப் பிடித்து இறக்கி, பிறகு சுற்றிவிட்ட அவன் கைகளில் மோதிய அவளது பின்னழகுகளின் எழுச்சியாலும், உணர்ச்சிகளை அறவே பறக்க விட்ட விஜயன் அவளைச் சுற்றிய கைகளை எடுக்காமலே நின்றான்.

அரசகுமாரியின் மனோ நிலையும் விவரிக்க இயலாதிருந்தது. எங்கிருந்தோ வந்த ஒருவனைத் தான் காப்பாற்றப் போய் அவன் தன்னைக் காக்கும் நிலை ஏற்பட்டதை நினைத்து அவள் சிந்தை குலைந்தாள். தனது உடல் நெருங்கிய சமயத்திலும் அந்த வாலிபன் தன்மீது பட்டும் படாமலும் நின்றான் என்று நினைத்து அவன் பண்பைப் பாராட்டியது அவள் மனம். இருந்தாலும் அவள் துஷ்ட மனம், 'இவர் ஏன் பெண்ணைப் போல் வெட்கப்படுகிறார்?' என்றும் வினவவே, அவள் உள்ளூர நகைத்தும் கொண்டாள், வேட்கையும் கொண்டாள். அதன் விளைவாக அவன்மீது சாய்ந்து, ''இன்னும் ஏன் தாமதம்?'' என்று வினவினாள் மெதுவாக.

அவள் சொல்வதன் பொருள் அவனுக்குச் சரியாக விளங்காததாலும், தவறாகப் பொருள் கொள்ள அவன் மனம் இடங் கொடாததாலும், ''என்ன கேட்கிறீர்கள் அரசகுமாரி?'' என்று அவனும் வினவினான்.

அவன் வெள்ளை மனத்தை உணர்ந்த அவள் லேசாக நகைத்தாள். ''வேறு எதற்குமில்லை. இங்கிருந்து வெளியேற,'' என்றும் சொன்னாள் நகைப்பின் ஊடே.

zeevaa

விஜயன் சிறிது சிந்தித்தான். ''ஆதிமாலயன் ஆட்கள் செயலிழந்து விட்டார்கள். அவனும் சுரணையற்றுக் கிடக்கிறான். நான் சென்று முர்சமதையும் கிழவரையும் அழைத்துக் கொண்டு புரவிகளையும் கொண்டு வருகிறேன்'' என்று சொல்லி மாளிகைக்குள்ளே ஓடினான்.

அவன் அறையில் ஆதிமால்யனையும் அவன் ஆட்களையும் கட்டிப் போட்ட மூர்சமதும் கிழவனும் புறப்படத் தயாராயிருக்கவே, விஜயன் தனது வாளை பஞ்சணையிலிருந்து எடுத்துக்கொண்டு, ''அரசகுமாரி நந்தவன முகப்பில் இருக்கிறார்கள். நீங்கள் அவர்களைப் பார்த்துக் கொள்ளுங்கள். நான் சென்று புரவிகளை அவிழ்த்து வருகிறேன்,'' என்று கூறிவிட்டு மாளிகையின் பின்புறமாகக் குதிரைக் கொட்டடியை நோக்கி விரைந்தான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் புரவிகளுடன் வந்த விஜயன் மாளிகை வாசலிலேயே பிரமித்து நின்றுவிட்டான். அரசகுமாரியின் ரதம் மாளிகையின் தோட்டத்துப் பெரும் வாயிலைத் தாண்டி விரைந்து கொண்டிருந்தது. மூர்சமத், கிழவன் இருவர் இருந்த சுவடும் அடியோடு தெரியவில்லை. 'அரசகுமாரி நான் வருமுன் ஏன் ரதத்தில் ஓடிவிட்டாள்? மூர்சமதும் கிழவனும் என்ன ஆனார்கள்?' என்று சீற்றத்துடன் வினவிக்கொண்ட விஜயன், ''மறைந்த இந்த மாயக் காரியை நான் சும்மா விடப் போவதில்லை,'' என்று கருவியும் கொண்டான்.

இப்படிச் சீறி நின்ற விஜயனின் தோளில் பின்புறமிருந்து ஒரு கை இறங்கியது. ''கவலைப்படாதே. அவளைப்பிடிக்க நான் உதவுகிறேன்,'' என்ற சொற்களும் அவன் காதுகளில் ஒலித்தன.

# 7. சத்திரத்து சோலை நிகழ்ச்சி

கலிங்க ராஜகுமாரியின் திடீர் மறைவாலும், தான் அவளை நினைத்துச் சீறிய சமயத்தில் தன் தோள்மீது பலமான கையொன்று இறங்கியதாலும், அந்தக் கைக்கு உடையவர் அரசகுமாரியைப் பிடித்துக் கொடுக்க உதவுவதாகத் தனது காதில் ரகசியமாக ஓதிய சொற்களாலும் வியப்பின் வசப்பட்ட விஜயன், சில விநாடிகள் ஏதும் பேசாமலும் எந்தச் செயலிலும் ஈடுபடாமலும் அசைவற்று நின்றான். அசைவற்ற நிலையை அடுத்து அவன் செயலில் இறங்கக் கூடிய வேகத்தையும் பின்னால் அவன் தோளைப் பற்றி நின்றவர் உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். ஆகவே அந்த மனிதர் தொடர்ந்து சொன்னார். •''கிட்டி! ஆத்திரத்துக்கோ அவசரச் செயலுக்கோ இப்பொழுது அவசியம் ஏதுமில்லை. இப்பொழுது உனக்குத் தேவை நிதானம்,'' என்று.

பின்னால் நின்றவர் சொன்ன சொற்களைக் கேட்டுப் பெரும் வியப்புக்கும் பிரமிப்புக்கும் உள்ளான விஜயன், ''சிங்களத்தில் எனக்குள்ள செல்லப் பெயரை இவன் எப்படி அறிந்தான்? இவன் யார்?'' என்று தனக்குள்ளேயே வினவிக்கொண்டு, ''நீ யார்? என்னைப்பற்றி உனக்கென்ன தெரியும்?'' என்று அவரையே கேட்கவும் செய்தான்.

அதுவரை விஜயன் தோள்மீது கையை வைத்து நின்றவர் கையை அகற்றி, ''நீ சிங்களத்தின் அரசகுமாரன் என்பது எனக்குத் தெரியும்.

---

• Finally the hopes of the Sinhalese centred in the person of the Young Prince Kitti who was born about A.D. 1039"-A short History of Ceylon By H.W. Codrington, Ceylon Civil Service Chapter IV Page 56.

zeevaa

உனது அரசைப் பறிக்க முயன்ற போலியான லோகிஸாரனை முறியடித்து உபராஜாவானதும் எனக்குத் தெரியும். சிங்கள மக்கள் தங்கள் அடிமைத் தனத்திலிருந்து விடுதலையடைய உன்னை நம்பியிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும்,'' என்று கூறியதன்றி, ''இங்கேயே நின்று பேசுவதைவிட அடுத்துச் செய்ய வேண்டிய அலுவல்களைக் கவனிப்போம்,'' என்றும் சொன்னார்.

அந்த மனிதர் தன்னைப் பற்றி அணு அணுவாக அறிந்து வைத்திருந்தபடியால் பேச்சுக்கு ஏதும் அவசியம் இல்லையென்ற காரணத்தால் மெதுவாகத் திரும்பி, பின்னால் நின்ற மனிதனை ஏறெடுத்து நோக்கினான் விஜயன். பின்னால் நின்றவர் ஆஜானுபாகுவாய் இருந்ததன்றி அவர் கைகள் உருண்டு திரண்டு நல்ல வலுவுக்கு அத்தாட்சியாய் இருந்ததையும், அவர் விசாலமான கண்களில் கூர்மையுடன் சாந்தமும் உறுதியும் நிலவி இருந்ததையும், பார்வையிலும், நின்ற தோரணையிலும் அதிகாரம் சுடர் விட்டதையும் கண்ட விஜயன், கலிங்கத்தில் அந்த மனிதன் பெரிய வம்சமெதிலோ சேர்ந்தவர் என்பதைப் புரிந்துகொண்டான். அவர் விசாலமான நெற்றியும் வெட்டப்பட்டு நடு வகிடு எடுக்கப்பட்டு நுதலை அணைத்துத் தொங்கிய குழல்களும் அவருக்கு அதிக கம்பீரத்தை அளித்ததையும், அவர் கழுத்தை வளைத்துத் தொங்கிய சங்கிலியின் வைர முகப்பு ஒன்று மார்பில் அலைந்ததையும், அதில் பதிக்கப் பெற்றிருந்த பெரு வைரங்களின் மதிப்பு அளவிட முடியாதது என்பதையும் கவனித்த விஜயனுக்கு அந்த மனிதர் முகத்தைத் தான் ஏற்கெனவே பார்த்திருந்தது போன்ற நினைவு மட்டும் ஏற்பட்டாலும் எப்பொழுது எங்கு பார்த்திருக்கிறான் என்பது புரியாததால் சிறிது குழப்பத்தையும் முகத்தில் படரவிட்டுக் கொண்டான்.

அவன் குழப்பத்தை அந்த மனிதரும் கவனித்திருக்க வேண்டும். அவர் பெரிய சிவந்த இதழ்களில் புன்முறுவலொன்று அரும்பியது. ''வீரனே! சிந்தனைக்கு நிரம்ப அவகாசமிருக்கிறது. முதலில்

zeevaa

அரசகுமாரியின் இந்த வசந்த மாளிகையைச் சீர்திருத்துவோம்.'' என்று கூறிக்கொண்டே அந்த மனிதர் விஜயனைத் தன் பின்னால் வரும்படி சைகை காட்டி மாளிகைக்குள் நுழைந்தார். அங்கு அரச குமாரியின் அறைக் கதவைத் திறக்க முயன்று அது உட்புறம் தாளிடப்பட்டிருந்ததால் அதைப் பற்றிக் கவலைப்படாமல் அடுத்த அறைக்குச் சென்றார். அங்கிருந்த அலங்கோல நிலை கண்டு அதைப் பற்றியும் லட்சியம் செய்யாமல் மாளிகையின் பின்புறம் சென்று அங்கிருந்த காவலர் பாசறையை அடைந்து, அது பூட்டப்பட்டிருப்பதைக் கண்டு தனது கச்சையிலிருந்த குறுவாளை எடுத்து அதன் நுனியைப் பூட்டின் துவாரத்தில் விட்டுப் பலமாக ஒரு திருகு திருக, பூட்டுக்குள் சரசரவென்று ஏதோ சத்தம் கேட்டுப் பூட்டுத் திறக்கவே அதை எடுத்துத் தரையில் விட்டெறிந்த அந்த மனிதர் பாசறைக் கதவுகளைத் திறந்தார். முதலில் வெளியே வந்த நீலன் வாயைப் பிளக்கவே, அவனைத் தனது கண்ணின் ஒரு பார்வையாலேயே சிலையாக்கிவிட்ட அந்த மனிதர், ''நீங்கள் காவல் புரிவது நன்றாயிருக்கிறது! சீக்கிரம் அரச குமாரியின் அறையையும் இவர் இருந்த அறையையும் சரிப்படுத்துங்கள். உயிருடன் இருப்பவர்களைச் சிறை செய்யுங்கள், '' என்று உத்தரவுகளைப் பிறப்பித்துவிட்டு மீண்டும் மாளிகை வாசலுக்கு வந்து சற்று கிட்ட இருந்த மரத்தடியில் இணைக்கப்பட்டிருந்த தனது புரவியையும் இழுத்துக் கொண்டு வந்தார். ''நமது வீரர்கள் வரும் வரையில் இப்படியே சிறிது உட்காருவோம்,'' என்று சொல்லி மாளிகை மேல்படியில் உட்கார்ந்து விஜயனையும் உட்காரச் சொன்னார்.

அதுவரை பேசாமல் இருந்த விஜயன் மெள்ள உரையாடலை ஆரம்பித்து, ''நீங்கள் யார் என்பதைச் சொல்ல வில்லையே?'' என்று மிகுந்த மரியாதையுடன் வினவினான், அந்த மனிதர் பக்கத்தில் உட்கார்ந்த வண்ணம்.

நீ யார் என்ற ஆரம்பக் கேள்வி நீங்கள் யார் என்று மரியாதைக் கேள்வியாக மாறிவிட்டதைக் கவனித்த அந்த மனிதர் மீண்டும்

zeevaa

முறுவல் கொண்டு. "நான் உன் தூரத்து உறவினன். உன் நலனில், உன் பிற்காலத்தில், மிகவும் அக்கறை உள்ளவன்," என்று சொல்லிவிட்டு அதற்கு மேல் பேச இஷ்டம் இல்லை என்பதைக் காட்ட, "இந்த நீலனை ஏன் இன்னும் காணவில்லை? நாம் போகவேண்டிய இடம் அதிக தூரமிருக்கிறதே!" என்று பேச்சை மாற்றினார்.

அந்த மனிதர் தம்மைப்பற்றி எதையும் அறிவிக்கும் உத்தேசம் இல்லை என்பதை உணர்ந்து கொண்ட விஜயன் மேற்கொண்டு எந்தக் கேள்வியும் கேட்காமல் அடுத்து நடக்கப்போவது என்ன என்பதை எதிர்பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தான். சிறிது நாழிகையில் நீலன் வந்து, "அரசகுமாரியின் அறையில் ஒருவன் இறந்து கிடந்தான். அவன் இதயத்தில் அரசகுமாரியின் இந்தக் குறுவாள் இருந்தது," என்று கூறி அதை அந்த மனிதரிடம் நீட்டினான். அதை வாங்கிப் பார்த்து விஜயனிடம் கொடுத்து, "இதுவும் பெண்களைப் போலத்தான். எத்தனை மென்மையாய் இருக்கிறது! எத்தனை நாசத்தை விளைவிக்கக் கூடியது!" என்று கூறினார். அடுத்து நீலனை ஏறெடுத்து நோக்கினார். "மற்றவர்களை அரசகுமாரியின் அறைக்குப் பக்கத்து அறையிலேயே அடைத்து விட்டேன். வழக்கம்போல் எல்லோரும் சோழ நாட்டவர். ஆதிமல்லனும் அவர்களில் ஒருவன்," என்று நீலன் அறிவித்ததைச் சர்வ சாதாரணமாகக் கேட்டுக்கொண்ட அந்த மனிதர், "நானும் இவரும் இன்னும் சிறிது நேரத்தில் புறப்படுவோம். நீ முன்னால் சென்று சிம்மபுரத்து சாலைச் சத்திரத்தில் நாங்கள் தங்க ஏற்பாடு செய். அனாவசியமான தடபுடல் ஏதும் வேண்டாம்," என்று உத்தரவிட, நீலன் தலைதாழ்த்தி அந்த மனிதரை வணங்கிவிட்டு, புரவிக் கொட்டடியிலிருந்து ஒரு புரவியை அவிழ்த்து வந்து அதை மதில் வாயிற் கதவுகள் வரை நடத்திச் சென்று பிறகு அதன்மீது தாவி எதிரேயிருந்த நெடுஞ்சாலையில் பறந்தான்.

zeevaa

அவன் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் அந்த மனிதரும் எழுந்து, "இனி நாமும் செல்வோம்," என்று கூறித் தனது புரவிமீது அனாயாசமாக ஏறினார். விஜயன் மூர்சமதின் புரவியின் கழுத்திலே சேணத்தைச் சுற்றி விட்டுத் தனது கரிய புரவிமீது ஏறியதும் அந்த மனிதர் தனது வெண்புரவியை நகர்த்தினார். விஜயனின் கரிய புரவியையும் அந்த மனிதரின் வெண்புரவியையும் தொடர்ந்து மூர் சமதின் பழுப்புப் பரவி சென்றது. விஜயன் புரவியும் அந்த மனிதர் புரவியும் சாலையில் வேகமாகச் செல்ல முற்பட்ட போது சமதின் புரவி அவற்றைத் தொடர்ந்தே ஓடியது. மூன்றாம் ஜாமம் கடந்து நான்காம் ஜாமம் அடியெடுத்து வைத்தாலும் இருள் மட்டும் சிறிதும் நீங்காமல் நன்றாகக் கவிந்து கிடந்ததாலும், ரிஷிகுல்யாவில் மிதந்து வந்த காற்றும் மிக இன்பமாய் இருந்ததாலும், பயணம் சிறிதும் சிரமமில்லாமல் நடந்தது.

நான்காம் ஜாமமும் மெள்ள நகர்ந்து பொழுது புலரும் சமயம் வந்தபோது விஜயன் கண்ணெதிரிலே விரிந்த காட்சி மிக ரம்மியமாயிருந்தது. எதிரிலே தூரத்திலிருந்த மகேந்திர மலையின் சிகரங்கள் அருணோதயத்தில் லேசாகச் சிவப்பும் கருமையும் கலந்து ஏதோ ஒருவித புது சோபையைப் பெற்றுப் பிரகாசித்ததைக் கண்ட விஜயன், 'இயற்கையெனும் ரசவாதி எத்தனையோ புது உலோகங்களைச் சிருஷ்டிக்கிறான். இருப்பினும் மகேந்திர மலையின் காட்டு மரங்களை மட்டும் அவனால் ஏதும் செய்ய முடியவில்லை. மனிதனுடைய எந்த யுக்திக்கும் விஞ்ஞானத்துக்கும் எல்லை இருக்கத்தானே செய்யும்?' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். சாலையின் அக்கம்பக்கத்தில் ஓடிய சிற்றருவிகளும் சின்னஞ்சிறு அல்லிக் குளங்களும் அவன் மனத்தை ஈர்த்து தமிழகத்தின் ஆதி காப்பியங்களுக்கும் அழைத்துச் சென்றன. "சிம்மபுரத்தின் வழியே இத்தனை கவர்ச்சியாய் இருக்கிற தென்றால் சிம்மபுரம் எத்தனை சிறப்பாயிருக்கும்?" என்று தனக்குள் வினவிக்கொண்டான். "கடிபொழிலுடுத்த கலிங்க நன்னாட்டு

zeevaa

புனற்பழனச் சிங்கபுரம்'' என்று சிலப்பத்திகாரத்தின் வரிகளையும் ''காசி பூம்பொழில் கலிங்க நன்னாட்டு சிங்கபுரம்'' என்ற மணிமேகலையின் வர்ணனையையும் விஜயன் மனத்தில் நினைத்துப் பேருவகைகொண்டான். கலிங்கத்தின் வாசமலர்த் தோட்டங்களும். பூம்பொழில்களும் அந்த நாளிலேயே தமிழர்களைக் கவர்ந்ததை எண்ணித் தனக்குள்ளேயே பெருமையும் கொண்டான். இப்படி அக்கம் பக்கத்திலிருந்த பூம்பொழில்களையும் வாசமலர் தோப்புக்களையும் பார்த்து ரசித்துக் கொண்டு நேரம் போவது தெரியாமல் பயணம் செய்தான். இப்படி மந்திரமலையை நோக்கி பயணம் செய்த விஜயனைப் பார்த்த அந்த மனிதர், ''விஜயா! கதிரவன் உதித்து ஒரு ஜாமம் கடந்துவிட்டது. நாம் அடுத்த தோப்பில் நீராடப் போகிறோம்.'' என்று அறிவித்தார். விஜயன் ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான்.

அடுத்த தோப்பு அளித்த மறைவில் சிற்றருவி ஒன்றில் நீராடிப் பழைய ஆடைகளையே அணிந்த அந்த மனிதர் ''இன்று பகல் வழியிலிருக்கும் குடிசைகள் ஒன்றில் ஏதாவது உணவு அருந்துவோம். மாலைக்குள் நாம் சத்திரத்தை அடைந்து விடுவோம். அங்கு உனக்குச் சகல வசதிகளும் கிடைக்கும்,'' என்று கூறினார். அவர் சொன்னபடி நடுவழியில் உள்ள ஒரு குடிசைக் கூட்டத்துக்குள் நுழைந்து பழங்களும் இரு மண்குவளைகளில் பாலும் வாங்கி வந்தார். அந்தச் சிற்றுணவுடன் மீண்டும் பயணத்தைத் துவங்கி வேகமாகப் பயணம் செய்தனர்.

விஜயன் மனத்தில் ஏதேதோ யோசனைகள் எழுந்து நடமாடியும் அவன் அவற்றைப்பற்றி அந்த மனிதரிடமும் எதுவும் கேட்க வில்லை. எப்படியும் அன்றைய பயணத்தின் முடிவில் உடன் வருபவரைப்பற்றி ஏதாவது செய்தி தெரியும் என்ற எண்ணத்துடன் பயணம் செய்தான். அன்று மாலை மறைந்து இரவு புகுந்த நேரத்தில் இருவரும் சிம்மபுரசாலைச் சத்திரத்தை அடைந்தனர். அந்தச் சத்திரத்தைப் பார்த்த விஜயனுக்கு அது சத்திரமா அல்லது கலிங்கத்து

zeevaa

எல்லைக் கோட்டைகளில் ஒன்றா என்பது விளங்கவில்லை. அதன் வெளிப்புறத்தில் வீரர்பலர் நடமாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடன் பயணிகள் பலர் இருந்தாலும் அவர்கள் அனைவரும் சத்திரத்தில் தாழ்வரைகளில் வீரர்களைச் சிறிதும் லட்சியம் செய்யாதவர்களாய் உட்கார்ந்திருந்தனர். விஜயனையும் அந்த மனிதரையும் வாயிலிலேயே எதிர் கொண்ட நீலன், "தங்கள் இருவருக்கும் சத்திரத்துப் பின்புறத்தில் அக்கம் பக்கத்து அறைகள் சுத்தம் செய்யப்பட்டிருக்கின்றன. நீராட்டத்துக் கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது," என்று அறிவித்தான்.

அந்த மனிதர் நீலனுக்குப் பதில் ஏதும் சொல்லாமல் புரவியிலிருந்து இறங்கி விஜயனையும் தன்னைத் தொடரும்படி சைகை செய்துவிட்டு, சத்திரத்துக்குள் நுழைந்து சென்றார். அவரைத் தொடர்ந்து சென்ற விஜயன் அது சத்திரமா படை வீடா என்று புரியாமல் திகைத்தான். சத்திரத்தின் முதல் கட்டில் பயணிகள் இருந்தாலும் அடுத்த இரண்டு கட்டுகளில் ஆயுதம் தாங்கிய வீரர்கள் காட்சியளித்தார்கள். கடைசிக் கட்டின் அறைகளுக்கு எதிரில் காவல் ஏதும் இல்லாவிட்டாலும் தூரத்தே நாலைந்து வீரர்கள் ஏதும் அறியாதவர்கள் போல் உலாவிக் கொண்டிருந்ததை விஜயன் கண்டான்.

அவர்கள் யாரையும் கவனிக்காதது போல் நடந்து கொண்ட அந்த மனிதர் விஜயனுடைய அறையைக் காட்டி, "அது நீ தங்கும் அறை. நான் பக்கத்தில்தான் இருக்கிறேன். நீராடி உணவருந்தி, சிறிது இளைப்பாறுவோம்," என்று கூறிவிட்டுப் பக்கத்து அறையில் நுழைந்தார். விஜயன் அறைக்குள் சென்று அங்கிருந்த மஞ்சத்தில் உட்கார்ந்த சில விநாடிகளுக்கெல்லாம் பணிமக்கள் இருவர் வந்து அவனை நீராட அழைத்துச் சென்றனர். நீராடியதும் மாற்றுடை அளித்தனர். உணவும் அவனுக்கு அந்த அறையில் பரிமாறப் பட்டதால் தனியாகவே அவன் உணவருந்தினான்.

zeevaa

நேரம் ஓடியதாலும் நித்திரை வராததாலும் விஜயன் அறைக் கதவைத் திறந்துகொண்டு சத்திரத்துப் பின்புறத் தோட்டத்துக்குள் நுழைந்து நடந்தான். தோட்டத்தில் இருந்த இரு வாவிகளிலும் செங்கழுநீர்ப் புஷ்பங்கள் வாய் திறந்து முகம் மலர்ந்து அவனை வரவேற்றன. ஒரு வாவியைச் சுற்றி நடந்த விஜயன் இன்னொரு வாவியை நோக்கிச் சென்றான். வாவியைச் சுற்றி அதன் கரையின் நறுமணப் புஷ்பச் செடிகளும் கொடிகளும் அடர்ந்திருந்தன. அந்த அடர்த்தியை விலக்கிக் கொண்டு வாவிக்குள் இறங்க முற்பட்டவன் செடிகளின் மறைவிலிருந்து யாரோ மெதுவாகப் பேசும் அரவம் கேட்டதால் சட்டென்று நின்ற இடத்தில் நின்றே உற்றுக் கேட்டான். முதலில் கேட்டது அரசகுமாரியின் குரல். ''அவரை அழைத்து வந்துவிட்டீர்களா?'' என்று அரசகுமாரி மெதுவாகக் கேட்டாள்.

''ஆம். உன் உத்தரவை மறுக்க முடியுமா?'' என்றது அந்த மனிதனின் குரல்.

''இப்பொழுது நான் இங்கிருப்பது...'' அரசகுமாரி சந்தேகத்துடன் கேட்டாள்.

''தெரியாது.'' திட்டமாகச் சொன்னார் அந்த மனிதர்.

''நான்.''

''நாளை விடியற்காலையில் கிளம்புகிறாய்.''

''நம் திட்டப்படி சகலமும் நடக்கிறது'' என்ற அரசகுமாரி நகைத்தாள் மெதுவாக.

''வேறெப்படி நடக்கும்?'' என்று அந்த மனிதர் வினவியதும் அந்த இடத்திலிருந்து நகர முற்பட்டான் விஜயன்.

ஆனால் மற்றொரு நிகழ்ச்சி அவன் கால்களைத் தேக்கியது. ''இப்படி வா'' என்று அந்த மனிதர் அழைத்தார் அரசகுமாரியை.

zeevaa

அடுத்து அவர் அவளை முத்தமிட்ட சத்தம் விஜயன் காதில் விழுந்தது. திகைத்தான் விஜயன் ஒரு விநாடி. அடுத்த விநாடி அந்த இடத்தில் நிற்கவில்லை அவன். கொந்தளித்த உணர்ச்சிகளுடன் அந்த இடத்திலிருந்து வெகு வேகமாக நடந்துவிட்டான் சத்திரத்துப் பின் வாயிலை நோக்கி.



# 8. வாவியும் தேவியும்

சுக்லபக்ஷத்துப் பிரதமை சிருஷ்டித்த மையிருளில், விண்மீன்களும் தூரத்தே சத்திரத்து அறைகளிலிருந்த தூங்கா விளக்குகளும் அளித்த சிறு வெளிச்சத்தின் உதவி கொண்டு சத்திரத்துச் சோலையில் உலாவிய சிங்களத்துச் செல்வன், செங்கழுநீர் வாய் திறந்து கிடக்கும் வாவியின் சுந்தரத் தோற்றத்தைக் கண்டுகளிக்க எண்ணி அந்த வாவிக் கரையிலிருந்த மலர்ச்செடிகளை நீக்கிச் செல்ல நினைத்த சமயத்தில், அங்கு அரசகுமாரியின் குரல் கேட்டதாலும் அவளை அருகில் வரச்சொல்லித் தன்னுடன் வந்த மனிதர் முத்தமிட்டதாலும் சித்தம் சிதறச் சத்திரத்துப் பின்புற வாயிலை நோக்கி விரைந்தானென்றால், அதற்குக் காரணம் அவனுக்கே புரியவில்லை. அதைப்பற்றி அவன் தனது அறைக்குள் வந்து கதவைத் தாழிட்டுக்கொண்டு, பஞ்சணையில் படுத்த பின்பே சிந்திக்கலானான். 'இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சிங்களத்தில் ஏதோ ஒரு சமயம் பார்த்திருக்கிறேன். மீண்டும் நேற்று கிழவன் குடிசையில் சந்தித்தேன். இவளுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்ட விஜயன் விடையேதும் காணாமல் தவித்தான். 'இவள் அழகு பிரமிக்கத் தக்கது தான். இருப்பினும் வந்த காரியம் அழகிய பெண்களைப் பார்த்து ரசிப்பதற்கோ, மையல் கொள்வதற்கோ அல்லவே. ஏற்கெனவே ஒருத்தியிடம் எனது மனதைப் பறி கொடுத்திருக்கிறேனே' என்றும் நிலைமையை அலசினான். என்ன அலசியும் அவன் மனத்திலிருந்த அரசகுமாரியின் அழகிய வடிவம் மறையவில்லை. அவள் மைவிழிகள் அப்பொழுதும் அவன் இருதயத்திற்குள்ளிருந்து எட்டிப்பார்த்தன. அவள் செவ்விய உதடுகளில் விஷமச் சிரிப்பு

zeevaa




zeevaa

ஒன்று படர்ந்து கிடந்தது. அந்த இதழ்களைக் கண்டு அவன் சினத்தின் சிகரத்தை எட்டினான். ''உன்னை அழைத்து வந்தவன் இந்த இதழ்களைத் தானே சுவைத்திருப்பான்?'' என்ற எண்ணம் அவன் ஆத்திரத்தை ஆயிரம் மடங்கு அதிகப்படுத்தியது.

பஞ்சணையில் மல்லாந்து கிடந்தவண்ணம் அறையின் கூரையை நோக்கிய விஜயன் அங்கிருந்த வண்ணச் சித்திரங்களில் ஒன்று அரசகுமாரியைப் போலவே இருந்ததைக் கவனித்தான். அந்தச் சித்திரமும் உயிர்பெற்று அசைவதாகத் தோன்றியது அவன் காமக்கண்களுக்கு. 'மேலே அசைந்த அந்தச் சித்திரச் சுந்தரி அப்படியே கீழே இறங்கிவிட்டால் என்ன செய்வது? என் மீதல்லவா இறங்குவாள்?' என்ற விபரீத எண்ணங்களை எழுப்பிக் கொண்ட அந்த வாலிபன், 'சே! வீரனுக்குத் தகாத எண்ணம் இது. அவள் இன்னொருவன் சொத்து. அவளை நினைப்பது பண்பாட்டுக்கு உகந்ததல்லவே' என்றும் தனக்குள் சொல்லிக்கொண்டு அறைக் கூரையைப் பார்க்காதிருக்கப் பஞ்சணையில் திரும்பி ஒருக்களித்துப் படுத்துக்கொண்டான்.

எந்த விதத்திலும் மனம் ஒரு நிலைக்கு வராததால் மெள்ள கட்டிலிலிருந்து எழுந்து அறையில் அங்கும் இங்கும் நடமாடினான். அடியோடு உறக்கம் வராததாலும், மூர்சமதும் படகோட்டிக் கிழவனும்என்ன ஆனார்களென்பது தெரியாததாலும் மீண்டும் அறைக் கதவைத் திறந்துகொண்டு சத்திரத்து வாசலுக்கு வந்து சத்திரத்தைச் சுற்றிப் பார்த்தான். சத்திரத்தின் வாயிலிலும் சரி பக்கத் தாழ்வறைகளிலும் சரி பலமான காவல் இருந்தது. மதிலின் பெருவாயில் கதவுகளுக்கு அருகில் இருபுறத்திலும் இரு புரவி வீரர்கள் உலாவிக்கொண்டிருந்தார்கள்.

சத்திரத்துக்கு இத்தனை பலமான காவல் எதற்கு என்பதை உணர முடியாததால் சிந்தனை மிகுந்த உள்ளத்துடன் எங்கு போகிறோம் என்பதை அறியாமலே நடந்த விஜயன் சத்திரத்து வாயிலைத் தாண்டி வெளியே செல்ல முயன்றபோது அங்கிருந்த புரவிவீரர்

zeevaa

இருவரும் அவனைத் தடுத்தார்கள். ''தாங்கள் வெளியே செல்ல உத்தரவில்லை'' என்று ஒரு வீரன் கூறினான்.

விஜயன் முகத்தில் சினம் அதிகமாகத் துளிர்த்தது. ''யார் உத்தரவு?'' என்று வினவினான்.

''பெரிய இடத்து உத்தரவு'' என்றான் புரவி வீரரில் ஒருவன்.

''பெரிய இடத்துக்குப் பெயர் உண்டா? இல்லையா?'' என்று மீண்டும் கேட்டான் விஜயன்.

''உண்டு. ஆனால் பெயரை நாங்கள் சொல்வதற்கில்லை'' என்றான் மற்றொரு புரவி வீரன்.

ஒரு விநாடி சிந்தனை வசப்பட்ட விஜயன், ''அரசகுமாரி உத்தரவிட்டாளா?'' என்று வினவினான் சற்றுக் கடுமையான குரலில்.

இதைக்கேட்ட இருவரும் வியப்பின் வசப்பட்டார்கள். ''அரசகுமாரியா!'' என்று அவர்கள் இருவரும் கேட்ட கேள்வியில் வியப்பு அதிகமாகவே ஒலித்தது.

''ஆம்.'' விஜயன் திட்டமாகச் சொன்னான்.

''இங்கு ஏது அரசகுமாரி?'' என்று வினவினான் ஒரு காவலன்.

''முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்காதே. அரசகுமாரி சத்திரத்தில் இருப்பது எனக்குத் தெரியும்'' என்ற விஜயன், ''சற்று முன்புதான் அவள் பேசியதைக் கேட்டேன்'' என்றும் கூறினான்.

''பிரபு! நீங்கள் சொப்பனந்தான் கண்டிருக்கிறீர்கள். இங்கு எந்த அரசகுமாரியும் வரவில்லை. எங்களுக்குத் தெரியாமல் யாரும் இந்தச் சத்திரத்துக்குள் நுழைய முடியாது'' என்று திட்டமாகச் சொன்னான் அந்த வீரன்.

அதற்குமேல் அவனுடன் பேசுவதில் அர்த்தம் இல்லை என்பதை உணர்ந்துகொண்ட விஜயன் அங்கிருந்து கிளம்பி, சத்திரத்தைப்

zeevaa

பிரதட்சிணமாகச் சுற்றிப் பழையபடி பின்புறச் சோலைக்கு வந்தான். மனச் சாந்தியை முன்னிட்டுப் பழையபடி செங்கழுநீர் வாவியை நோக்கி நடந்து அதன் கரையிலிருந்த மலர்ச் செடிகளை நீக்கிக் கொண்டு வாவியின் நீர் இருக்குமிடத்திற்கு இறங்கிச் சென்றான்.

நட்சத்திரங்களின் சிறு வெளிச்சத்தில் வாவியின் புஷ்பங்கள் மிக அழகாகத் தெரிந்தன. மகேந்திர மலையிலிருந்து கிளம்பி வந்து கொண்டிருந்த லேசான காற்று வாவி நீரில் சிற்றலைகளைக் கிளப்பித் தரையில் மெதுவாக மோதவிட்டுக் கொண்டிருந்தது. செங்கழுநீர்ப் புஷ்பங்களும் தங்கள் அழகிய தலைகளை நீர் மட்டத்துக்கு வெளியே ஆட்டிக்கொண்டிருந்தன. அந்த வாவியின் கரையில் அமர்ந்து நீரில் காலை நீட்டிக்கொண்ட விஜயன் மனமும் வாவியின் சிற்றலைகளைப்போலவே அலைந்து கொண்டிருந்ததால் அவன் வாவியளித்த வண்ணக் காட்சியை அனுபவிக்க சக்தி யற்றவனானான். மறுநாள் காலையில் எப்படியும் சத்திரத்தி லிருந்து தனியாகப் புறப்பட்டுச் சென்றுவிடத் திட்டமும் இடலானான். அவன் மனத்தில் திடீரென ஒரு திட்டமும் உருவானதால் மகிழ்ச்சி கலந்த சாந்திப் பெருமூச்சொன்றையும் விட்டான்.

சோலையெங்கும் நிசப்தம் நிலவி நின்றது. சோலையின் கோடியில் தெரிந்த புரவிக் கொட்டடியிலிருந்து புரவிகளின் கனைப்பும், அவ்வப்பொழுது புரவிகள் அசைந்தபோது ஏற்பட்ட குளம்புகளின் ஒலியையும் தவிர வேறெந்த ஒலியும் கேட்கவில்லை. இரண்டாவது ஜாமம் துவங்கி விட்டதால் பட்சிகள்கூட உறங்கிக் கிடந்தன. அந்த மோனச் சூழ்நிலையில் கலந்து கொண்ட விஜயன் உணர்ச்சிகள் திடீரென உலுக்கப்பட்டன பலமாக. அவன் உட்கார்ந்திருந்த இடத்துக்கு நேர் எதிர்க்கரையில் யாரோ வாவி நீரிலிருந்து எழுந்து கரைமீது ஏற முற்பட்டதைக் கண்ட விஜயன் ஒரு விநாடி திகைத்தான். அப்படி ஏறியது அரசகுமாரி என்பதை உணர்ந்த பின்பு அவன் திகைப்பு ஆயிரம் மடங்கு அதிகமாயிற்று.

zeevaa

இருள் மூண்டிருந்தாலும் விண்மீன்களின் அற்ப வெளிச்சத்தில் அரசகுமாரியின் அங்கங்களில் சேலை ஆங்காங்கு ஒட்டிக் கிடந்ததைக் கண்ட விஜயன் பேசுவதற்கும் சக்தியற்று உட்கார்ந் திருந்தான். பிறகு நீராடிய பெண்ணைப் பார்ப்பது தவறு என்ற எண்ணத்தால் துரிதமாக எழுந்து அந்த இடத்திலிருந்து அகன்று செல்ல முயன்றான். வேகத்துடன் கரையேறி, கரையிலிருந்த புஷ்பச் செடிகளின் கூட்டத்தில் மறைந்தும் நின்று கொண்டான்.

அவன் அங்கிருப்பதை அறியாத அரசகுமாரியும் அதே செடிகளின் மறைவுக்கு வந்து மெள்ளத் தனது ஈரச் சேலையை அவிழ்க்கத் தொடங்கினாள். அரசகுமாரி நின்ற இடத்துக்கும் விஜயன் நின்ற இடத்துக்கும் இடையே இருந்தது இரண்டே செடிகள். ஆதலால், அவள் ஈர ஆடையை அவிழ்த்தபோது ஏற்பட்ட சரசரவென்ற சப்தமும், அது முடிவில் 'சத்சத்' என்று மண்ணில் விழுந்தபோது ஏற்பட்ட ஒலியும் விஜயனைப் பெரும் திகைப்புக்கு உள்ளாக்கினாலும் அவன் செய்யக் கூடியது ஏதும் இல்லையாதலால் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு நின்றான். அவள் தலையைத் துவட்டிக் குழலை உதறியபோது ஏற்பட்ட ஒலியும் குழலிலிருந்த வாசனைத் தைலத்தின் சுகந்தமும் அவனை வேறு எந்த் உலகத்துக்கோ அழைத்துச் சென்றன.

தனக்கு எதிரேயிருந்த இரண்டு செடிகளுக்கு அப்பால் ஆடையற்ற அழகி நிற்கிறாள் என்பதே அவனைச் சித்திரவதைக்கு உள்ளாக்கி இருந்ததென்றால், அவள் அடுத்து அந்த இடத்திலிருந்து தன்னை நோக்கிப் பின்னடைய முற்பட்டபோது, போர் அரங்கத்திலும் அசையாத அவன் உடல் சிறிது நடுங்கவே செய்தது. அந்த நடுக்கத்தைத் தடுக்க எதிரேயிருந்த ஒரு செடியை அவன் பிடித்துக் கொண்டபோது ஏற்பட்ட செடியின் அசை அவளைத் திகிலடையச் செய்ததால், ''யார் அது?'' என்று அதிகாரக் குரல் கொடுத்தாள் அரசகுமாரி.

பிடித்த செடியை விட்டுவிட்ட விஜயன் மீண்டும் சிலையென நின்றான். அதனால் கொடியின் அசைவு ஏதோ பிரமையென

zeevaa

நினைத்த அரசகுமாரி காலுக்குக் கீழே கிடந்த ஈரச்சேலையை எடுத்துப் பின்னாலிருந்த செடியில் போட்டுவிட்டு வேறு சேலையை எடுத்துத் தனது அழகிய உடலில் சுற்றிக் கொண்டாள் அரையும்குறையுமாக. ''நீ இங்கேயே காவலிரு. நான் மரங்களின் மறைவுக்குச் சென்று சேலையைச் சரியாக உடுத்திக் கொண்டு வருகிறேன்,'' என்று யாரிடமோ சொல்லிவிட்டு அவ்விடத்தி லிருந்து எதிர்த் திசையை நோக்கி நடந்தாள். விஜயனும் தனது மறைவிடத்தைவிட்டு விலகி வெளியே வந்து அவள் சென்ற திசையை நோக்கிக் கொண்டு நின்றான்.

சோலையின் வட திசையிலிருந்த மரக்கூட்டம் அடர்த்தியாகவே இருந்ததால் அரசகுமாரி சேலையைக் கட்டிக்கொள்ள அது தகுந்த இடந்தான் என்று நினைத்த விஜயன், தான் மேலும் அங்கிருப்பது சரியல்ல என்று சத்திரத்தை நோக்கித் திரும்ப முற்பட்டவன் தனக்குப் பின்னாலிருந்த புதரில் ஏதோ அசையும் சத்தத்தைக் கேட்டு நின்றான் சில விநாடிகள். பிறகு திரும்பிப் புதரை நோக்கவும் செய்தான். புதர் பெரியதாயிருந்தது. அதை முழுதும் மறைக்க அதில் முளைத்துக் கொடியோடியிருந்த முல்லை நன்றாகப் படர்ந்து அடுத்திருந்த மரமல்லி மரத்தின் கிளையில் ஏறி இயற்கைத்திரையைச் சிருஷ்டித்திருந்தது. அந்த இடத்துக்குச் சென்ற விஜயன் முல்லை மலர்க்கொத்து ஒன்றைக் கிள்ளிக் கையில் எடுத்து முகர்ந்தான். அப்படி அவன் அதை ரசித்துக் கொண்டிருந்த சமயத்தில் வடக்குப்புற மரக்கூட்டத்தின் மறைவிலிருந்து அரசகுமாரி வெளியே வந்து சுற்றுமுற்றும் பார்த்தாள். அவள் பார்வை முல்லைக் கொடியிடம் வந்ததும் சில விநாடிகள் நின்றுவிட்ட அரசகுமாரி, அங்கு நின்றிருந்த விஜயனை நோக்கி நடந்து வந்தாள். முற்றும் அருகில் வந்திருந்தால் முல்லையைக் கிள்ளி ஏந்தி நிற்பது யாரென்பதை உணர்ந்திருப்பாள். ஆனால் நிற்பது யாரென்று இருட்டில் தெரியாததால் சற்றுத் தூரத்தில் வாவிக்கரை செடிகளின் அருகிலேயே நின்று இருபுறமும் கைகளை ஆட்டி ஏதோ சைகை செய்து விட்டு சத்திரத்துப் பின்புற வாசலை நோக்கி வேகமாக நடந்துவிட்டாள்.

zeevaa

அவள் நடந்தபோது நெளிந்த அழகுகளைக் கவனித்துக் கொண்டே நின்ற விஜயன், அவள் சேலையை மார்புக்கு குறுக்காகப் போட்டு ஒரு தோளின்மீது இழுத்து விட்டதால் யவனப் பெண்களைப்போல ஒருபுறத்து மார்பு மட்டும் தெரிந்ததையும், அத்தனை இருட்டை விலக்கவே வெளேரென்று விளக்கு வைத்ததைப்போல அவள் சருமம் பளிச்சிட்டதையும், அதன் பக்கத்தில் நீண்டு கிடந்த உருண்ட மணிக்கைகள் புஷ்பமாலை போல் தவழ்ந்து இடையை அணைத்துக் கிடந்ததையும் கண்டான். இன்னொரு கையின் முக்கால் பாகம் சேலையில் மறைந்து கிடந்ததால் அதன் மணிக்கட்டும் கீழுள்ள உள்ளங்கையும் விரல்களும் விரிந்த மலர்போல் அவள் தொடைப் பகுதியில் பதிந்து கிடந்ததையும் பார்த்தான். இந்த அலங்காரத்துடன் சீராக முடியாத தலைக் குழலும் சேர்ந்து அவளை யவன நாட்டுப் பளிங்குச் சிலையாக அடித்திருப்பதைக் கண்ட விஜயன் அவள் நடந்த அழகையும் பருகினான் கண்களால்.

அந்தப் பூஞ்சோலைக்காகச் செதுக்கி வைக்கப்பட்ட அழகுச் சிலைபோல் ஒரு விநாடி நின்று அர்த்த ராத்திரி மோகினியைப்போல் நடந்து விட்ட அரசகுமாரி சிறிது தூரம் நடக்கட்டும் என்றிருந்த விஜயன், அவள் சத்திரத்துப் பின்புற வாசலை அடைந்ததும் அவளைத் தொடரத் தீர்மானித்து அவள் சென்ற திசையில் வேகமாக நடந்தான்.

அவளை மடக்கி, சென்ற ஓர் இரவில் நடந்த நிகழ்ச்சிகளுக்கு விளக்கம் கேட்கத் தீர்மானித்த விஜயன் சுமார் பத்தடி தூரம் நடந்ததும் பின்னால் தன்னை யாரோ தொடரும் சத்தம் கேட்டுச் சட்டென்று நின்றான். இடையிலிருந்த குறுவாளை உருவவும் கையை வைத்தான். அவன் கையை வைத்ததுமே அவன் தலைமீது பெரிய கம்பளியொன்று வீசப்பட்டது. கம்பளியை அகற்ற அவன் முயன்ற சமயத்தில் அவன் மீது மலைபோன்ற ஓர் உருவம் பாய்ந்து அவனைக் கீழே தள்ளியது. இன்னொருவனின் மெல்லிய பலமான கை அவன் மென்னியை இரும்புப் பிடியாகப் பிடித்தது. அதையும்

zeevaa

மீற முயன்று தனது மெல்லிய வலிய உடலை வளைந்து நிமிர முற்பட்ட விஜயன் தலைமீது பலமான அடியொன்றும் விழவே விஜயன் நினைவிழந்தான்.

அவனுக்கு நினைவு வந்தபோது ஒரு பெரிய கம்பளியில் தான் சுருட்டிக் கட்டப்பட்டிருப்பதையும் தன்மீது இரண்டுபேர் உட்கார்ந்திருப்பதையும், ஏதோ ஒரு வண்டியில் தான் பயணம் செய்து கொண்டிருப்பதையும் உணர்ந்தான். ''அரசகுமாரி சொன்னதற்காக இவனை யாரென்று அறியாமலே பிடித்துக் கட்டிவிட்டோம். இவன் யாராயிருக்கும்?'' என்று மேலே உட்கார்ந்த இருவரில் ஒருவன் கேட்டதுமே அதிர்ச்சிக்குள்ளானான் விஜயன்.

''யாராயிருந்தால் நமக்கென்ன? உத்தரவை நிறைவேற்றுகிறோம். நமது கடமை அத்துடன் முடிந்துவிடுகிறது.'' என்று இன்னொருவன் பதில் சொன்னான். அந்தப் பதில் பேரதிர்ச்சியைத் தந்தது விஜயனுக்கு.

முதலில் வினா எழுப்பியவன் படகோட்டிக் கிழவன், பதில் சொன்னவன் மூர்சமத்.

zeevaa

# 9. அருவிக்கரை அபாயம்

கம்பளியில் சுற்றப்பட்டுப் பலமாகக் கட்டப்பட்டிருந்தாலும், தன்மீது உட்கார்ந்திருந்தவர்கள் படகோட்டிக் கிழவன் நந்தனும் தனது மெய்க்காவலன் மூர்சமதும் என்பதை அறிந்ததும் சிறிது நிதானப்பட்ட சிந்தனையுடன் நடந்த நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்க்கலானான் விஜயன். அரசகுமாரி சத்திரத்தில் தங்கியிருக்க அங்கிருந்த காவலர்களோ அரசகுமாரி அங்கு வராததுபோல் நடித்த காரணம் அவனுக்குப் புரியவில்லை. தன்னை அரசகுமாரியின் வசந்த மாளிகையிலிருந்து அழைத்து வந்தவர் பெரிய அந்தஸ்துடையவர் என்பதைச் சத்திரத்துக் காவலர் நடத்தையி லிருந்து புரிந்து கொண்டாலும் திட்டமாக, 'அவர் யார்? என்ன பதவி அவருக்கு? அவர் பெயர் தான் என்ன?' என்றெல்லாம் நினைத்துப் பார்த்தும் ஏதும் விளங்கவில்லை விஜயனுக்கு. தான் யாரென் பதையும் கலிங்கம் வந்திருக்கும் காரணம் தனக்குத் தெரியும் என்பதையும் அந்த மனிதர் சொன்னாரே, அவருக்குத் தான் வந்த அலுவல் எத்தனை தூரம் தெரியும் என்பதையும் சிந்திக்கலானான் கம்பளிக்குள்ளிருந்தே. அந்தச் சமயத்தில் கைகள் கட்டப்படாமை யால் இடது கையால் தன்னுடைய இடையைத் தடவி அதில் குறுவாள் இருப்பதைக் கண்டு, தேவையானால் இதைக் கொண்டே நான் விடுதலை அடைய முடியும் என்றும் உள்ளூரச் சொல்லிக் கொண்டான். இருப்பினும் விடுதலைக்கான முயற்சி எதையும் செய்யவில்லை அவன்.

வண்டியின் அமைப்பிலிருந்தே அது சாதாரண வண்டியல்ல என்பதையும், அரச குடும்பத்து ரதம் என்பதையும் உணர்ந்து கொண்டான் சிங்களத்துச் செல்வன். வண்டி நன்றாக நீளமாகவும்

zeevaa

# விஜய மகாதேவி



- சாண்டில்யன் -

zeevaa

மெத்தை போட்டிருந்தபடியாலும் பயணம் சுகமாகவே இருந்தது. அந்த நீள ரதத்தின் முன்புறத்தில் கேட்ட குளம்படிகளிலிருந்து அதை இரண்டு புரவிகள் இழுத்துச் செல்வதையும், அதன் காரணமாக ரதம் நல்ல வேகத்துடன் ஓடுவதையும் புரிந்துகொண்ட விஜயன், ரதத்துக்கு இருபுறத்திலும் புரவிகள் குளம்படி கேட்காததால் காவல் ஏதும் இல்லை என்பதையும் உணர்ந்து கொண்டான். ஆனால் அடிக்கடி யாரோ புரவிகளைத் தூண்டி அதட்டிக் கொண்டிருந்ததால் ஒரு ரத சாரதி மட்டும் அதிகப்படியாய் இருப்பதை அறிந்து மெல்ல நகைத்துக் கொண்டான். தனது இடையில் இருக்கும் குறுவாளால் கம்பளியைக் கிழித்து, கயிறுகளைத் துண்டித்து மூர்சமதையும் கிழவனையும் உருட்டிவிடத் தன்னால் முடியும் என்று நினைத்தாலும் அவ்வாறு ஏதும் செய்ய முயலவில்லை அவன். மூர்சமதும் கிழவனும் மீண்டும் பேச்சைத் துவக்கிவிட்டபடியால் என்ன பேசுகிறார்கள் என்பதைக் கேட்கக் காதைத் தீட்டிக் கொண்டான்.

படகோட்டிக் கிழவனே மீண்டும் பேச்சுக் கொடுத்து, "சமத்! இவனை நீ வலுவாகத் தலையில் அடித்து விட்டாயே! இவன் செத்துவிட்டால் என்ன செய்வது?" என்று வினவினான்.

"அப்படி சாகும்படி அடிக்கவில்லை நான். என் எசமான் எப்படி அடித்தால் மனிதனுக்கு நினைவு மட்டும் போகும் என்று சொல்லிக் கொடுத்திருக்கிறார். அந்த அளவுக்குத்தான் அடித்திருக்கிறேன்," என்றான் மூர்சமத்.

"இவனைக் கட்டிப்போட்டு எடுத்துச் செல்லும் அளவுக்கு என்ன குற்றம் செய்துவிட்டான் இவன்?" என்று கிழவன் விசாரித்தான்.

"வேறென்ன செய்ய வேண்டும்? அரசகுமாரி வாவியில் நீராடும்போது பார்த்தான்," என்று சமத் கூறினான்.

"நீராடியது அரசகுமாரி என்பது இவனுக்குத் தெரியுமோ தெரியாதோ?" என்று கிழவன் மீண்டும் கேட்டான்.

zeevaa

''யாராய் இருந்தால் என்ன? ஒரு பெண் தனித்து நீராடும்போது பார்ப்பவன் சுத்த அயோக்கியன். இருட்டில் நீராடுவது தெரியாதிருந்திருக்கலாம். கரையேறிய பின்பு தெரியும் அல்லவா? அப்பொழுது அவன் போய்விடலாம் அல்லவா?'' என்றான் சமத்.

''போய்விடலாம்....'' கிழவன் இழுத்தான்.

''போனானா?''

''இல்லை. செடி மறைவில் நின்றான்.''

''எதற்கு? பெண் ஆடை களைவதைப் பார்க்கத் தானே?''

''ஆம். அது தவறுதான்.''

''அதுதான் போகட்டும். அரசகுமாரி சத்திரத்துப் பின்புற வாயிலுக்குள் போகும்போது எத்தனை வேகமாகப் பின்தொடர்ந் தான்.''

இதற்குக் கிழவன் பதில் சொல்லவில்லை. மூர்சமதே சொன் னான். ''இவன் வடிகட்டின அயோக்கியன் இல்லாவிட்டால் இவனைக் கவனிக்கும்படி அரசகுமாரி நமக்குச் சைகை செய்திருக்க மாட்டாள். சமயத்தில் இவனை நாம் பிடித்திராவிட்டால் அரசகுமாரியை இவன் கண்டிப்பாகப் பிடித்துக் கட்டியிருப்பான். வேறு என்ன அக்கிரமம் செய்திருப்பானோ தெரியாது. தெரிந்துதான் மன்னர் நம்மை அரசகுமாரிக்குக் காவலாளிகளாக நியமித்திருக் கிறார்,'' என்று.

கிழவன் சிறிது சிந்தனையில் இறங்கினான். பிறகு சமதை நோக்கி, ''சமத்! நானாவது கலிங்க நாட்டவன். கலிங்க மன்னன் ஆணையை மறுக்க முடியாது. நீ எப்படி உன் எசமானை விட்டு அரசன் மகளைத் தொடர்ந்தாய்?'' என்று கேட்டான்.

மூர்சமது லேசாக நகைத்தான். ''அரசகுமாரியைத் தொடருவது என் கடமை என்று நினைக்காவிட்டால் நான் எந்த மன்னன் எப்படிச் சொன்னாலும் அந்த மாளிகையிலிருந்து நகர மாட்டேன். ஆனால்

zeevaa

மன்னர் எனது எசமான் பெயரைச் சொன்னார். 'நீயும் கிழவனும் அரசகுமாரிக்குத் துணை செல்லுங்கள். விஜயனை அழைத்துக் கொண்டு நான் துரிதமாக வருகிறேன்,' என்று கூறினார். சோழ வீரர்கள் கலிங்கத்தின் எல்லைகளில் உலாவுவதால் அரசகுமாரிக்குத் துணை அவசியம் என்றும் சொன்னார். அதனால் தான் கிளம்பினேன். என் புரவியை அவிழ்த்துக் கொண்டு வரக்கூடச் சமயம் இல்லாததால் அரசகுமாரியின் ரதத்திலேயே பயணம் செய்தோம். நாம் வந்த ஒரு ஜாமத்திற்கெல்லாம் மன்னரும் நமது எசமானும் வந்ததை நாம் பார்க்கவில்லையா? அவர்கள் புரவிகளுடன் எனது பழுப்புநிறப் புரவியும் வரவில்லையா?'' என்று சமது தான் புறப்பட்டு வந்ததற்குக் காரணம் சொன்னான். ''ஆனால் பெரியவரே! என் கடமையை நான் மறக்கவில்லை. எசமான் எப்படியும் வருவார். அப்பொழுது அவரது கறுப்புப் புரவியுடன் எனது பழுப்புப் புரவியும் வரும். இப்பொழுதே எசமான் கிளம்பி இருப்பார். எந்த நிமிஷத்திலும் அவர் நம்முடன் சேர்ந்து கொள்வார். எப்பொழுதும் அவர் என்னுடன் இருப்பதாக ஒரு பிரமை எனக்கு உண்டு,'' என்று விளக்கிய மூர்சமத் அதற்குப் பின் மௌனம் சாதித்தான்.

கிழவன் சொன்னான் ''இன்னொரு சந்தேகம்.''

''பெரியவரே! உமது சந்தேகங்களைத் தீர்ப்பதிலேயே காலம் ஓடிவிடும் போலிருக்கிறது. சரி. கேட்டுத் தொலையும்,'' என்றான் சமத்.

''சத்திரத்தில் காவலர் பலர் இருக்கும்போது அரசகுமாரி நம்மை ஏன் தனக்குத் துணையாக இருக்கும்படி உத்தரவிட வேண்டும்? தவிர, நந்தவனப் பொய்கையில் நீராடும்போது காவல் செய்ய ஏன் அழைக்க வேண்டும்? அங்கு யாராவது வரலாமென்ற பயமா?'' என்று கிழவன் கேட்டான்.

''அரசகுமாரி நந்தவனத்தில் யாரையோ எதிர்பார்த்திருக்கிறாள். ஆதிமாலயன் அவள் மாளிகையிலேயே புகுந்து அவளைச்

zeevaa

சிறையெடுக்க முயன்றதுபோல் இங்கும் ஏதாவது நடக்கலாம் எனறு நினைத்திருக்கலாம். எமது எசமானும் நாமும் அவளைக் காப்பாற்றியதால் நம்மீது அதிக நம்பிக்கை ஏற்பட்டிருக்க வேண்டும். எப்படி இருந்தாலும் அவளைத் துரத்திப் பிடிக்க இந்த அயோக்கியன் வந்தானல்லவா?'' என்று கம்பளிக்குள்ளிருந்த விஜயன் உடலைத் தட்டிக் காட்டினான் சமத்.

பிறகு இருவரும் நீண்ட நேரம் மௌனம் சாதித்தனர். சுமார் இரண்டு நாழிகை நேரம் ரதம் சாதாரணப் பாதையில் ஓடி, திடீரென்று கற்கள் எழுந்திருந்த பாதையில் தூக்கிப் போட்டு உலுக்கி ஓடியது. அப்பொழுது கிழவன் ரதசாரதியைக் கேட்டான்: ''ஏனப்பா! நாம் போக வேண்டிய இடம் எத்தனை தூரமிருக்கிறது?'' என்று.

''இன்னும் இரண்டு *யோஜனை தூரம் இருக்கிறது. இன்று மாலைக்குள் மடத்துக்குப் போய்விடலாம்,'' என்றான் சாரதி.

மூர்சமத் சாரதியைத் தோளில் தட்டி, ''மாலைவரை இவனைக் கட்டிவைக்க முடியாது,'' என்று கூறினான்.

''அப்படியானால் அவிழ்த்து விடுங்கள். நாம்தான் மூவர் இருக்கிறோமே?'' என்றான் சாரதி.

''அது முடியாது. இவனைப் பிடித்திருக்கும்போதே இவன் திமிறிய திமிறலை நீ பார்க்கவில்லை.'' என்றான் சமத்.

''முண்டனுக்கு இரண்டு ஆள் என்று தமிழ்ப் பழமொழி இருக்கிறது,'' என்றான் சாரதி.

''வெயில் ஏறிவிட்டது. எங்காவது ஓர் இடத்தில் ரதத்தை நிறுத்து. போஜனத்தை முடித்துக் கொண்வோம்.'' என்றான் படகோட்டிக் கிழவன்.

---

* YOJANA, A measure of distance generally reckoned as 16 miles - THE RAJAVALIYA - Edited by GUNA SEKHARA - opening page GLOSSARY.

zeevaa

சாரதி சற்றுத் திரும்பி அவர்களை நோக்கி, "அது முடியாது. எங்கும் நிறுத்த உத்தரவில்லை. மடத்துக்குப் போன பின்புதான் உணவு. மன்னர் உத்தரவு திட்டமாயிருக்கிறது." என்று கூறினான்.

"வண்டியை எங்காவது நிறுத்து. பசி வந்தால் நான் மனிதனல்ல" என்றான் மூர்சமத்.

"மன்னர் உத்தரவு..." என்று துவங்கிய சாரதியை, "மன்னர் இங்கில்லை. இப்பொழுது உத்தரவிடக் கூடியது நான்தான். ஒருபுறமாக வண்டியை நிறுத்து. அதோ ரிஷிகுல்யா மெலிந்து அருவியாக ஓடுகிறது. அது நல்ல இடம். பக்கத்தில் தோப்பும் இருக்கிறது," என்று எட்ட இருந்த தோப்பைச் சுட்டிக் காட்டினான். அத்துடன் தனது இடையிலிருந்த குறுவாளை எடுத்து, சாரதியின் கழுத்தின் பின்புறத்திலும் லேசாகத் தடவினான்.

அதற்கு மேல் சாரதி ஏதும் பேசவில்லை. மூர்சமத் சொன்னபடி கேட்டான். அருகில் ரிஷிகுல்யா அருவியாக ஓடிய இடத்தில் ரதத்தை நிறுத்த, மூவரும் ரதத்திலிருந்து கீழே குதித்தனர். "சாரதி! இங்கு எங்கு உணவு கிடைக்கும்?" என்று விசாரித்தான் சமத்.

"தோப்பில் சில குடிசைகள் உண்டு." என்றான் சாரதி.

"நீ போய் ஏதாவது உணவு வாங்கி வா. இந்தா கலிங்கத்துப் பணம்" என்று இரண்டு வெள்ளி நாணயங்களை எடுத்துச் சாரதியின் கையில் திணித்தான். சாரதி தோப்பை நோக்கிச் சென்று சிறிது உணவுடன் திரும்பி வந்தான். அருவியில் கை அலம்பி உண்ண மூவரும் ஏற்பாடு செய்துகொண்டு உணவை அருந்தி முடித்ததும் கிழவன் சொன்னான், "கம்பளியில் இருப்பவனுக்கும் ஏதாவது கொடுக்க வேண்டும்," என்று.

அதற்கு உட்பட்ட மூர்சமத், "பெரியவரே! நான் கம்பளிக் கட்டைச் சிறிது அவிழ்க்கிறேன். சிறிது சிறிதாக இரண்டு மூன்று கவளம் அவன் வாயில் போட்டுவிடும்." என்று கூறி விஜயன் தலைமாட்டில் உட்கார்ந்து பக்கத்திலிருந்து கட்டை லேசாக

zeevaa

அவிழ்த்தான். கிழவனும் கம்பளிக்குள் கை விட்டு உணவை அவ'ன் வாயில் புகட்ட முற்பட்டான். உள்ளே இருந்தவன் ராட்சசனைப் போல கவளங்களை விழுங்கினான். பிறகு, ''தண்ணீர் வேண்டும்,'' என்று கேட்டான். சிறு குவளையில் நீரைக் கொடுத்ததும் களகளவென்ற சப்தத்துடன் அருந்தினான். பிறகு தலைமீது கம்பளியை இழுத்து மூடிக்கொண்டான்.

அவன் உணவருந்திய வேகத்தையும் தண்ணீரைக் குடித்த முறையையும் கண்ட கிழவ்ன். ''சமத்! இவன் பெரிய ராட்சதன் போல் இருக்கிறது. இன்னும் சிறிது நேரம் சென்றால் நம்மையே விழுங்கி இருப்பான் போல் இருக்கிறது.'' என்றான்.

மூர்சமத் பதில் சொல்லவில்லை. விஜயன் கம்பளியைத் தானாக இழுத்துவிட்டுக் கொண்டதைக் கவனித்ததால் சிறிது எச்சரிக்கையுடன், ''டேய்! உணவு போதுமா உனக்கு?'' என்று விசாரித்தான்.

''உம்'' என்று மாத்திரம் பதில் கிடைத்தது.

அந்தச் சமயத்தில் நடந்த வேறொரு நிகழ்ச்சியை சமதோ கிழவனோ கவனிக்கவில்லை. தோப்பிலிருந்து நான்கு புரவி வீரர்கள் வேகமாக ரதத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். ரத சாரதியும் ரதத்திலிருந்து இறங்கி ஓட முயன்றான். அதைக் கவனித்த மூர்சமத் அசுர வேகத்தில் இயங்கினான். தனது பெரிய வாளை உருவிக் கொண்டான். கிழவனும் தனது மடியில் இருந்த இரு குறுவாள்களில் ஒன்றை எடுத்துக் கொண்டான். ரதசாரதி இறங்கி ஓட முயன்றானே தவிர ஓட முடியவில்லை. அவன் பின்புறத்தில் எழுந்து முதுகில் ஊன்றிய குறுவாள் ஒன்று அவனை அசையவொட்டாமல் செய்தது. அதே சமயத்தில் ஏற்கெனவே கிழிக்கப்பட்டிருந்த கம்பளியிலிருந்து எழுந்த இன்னொரு மெல்லிய கரம் அவன் இடையில் இருந்த வாளை உருவிக் கொண்டது. அடுத்த விநாடி கிடைத்த பலமான உதையொன்று அவனை ரதத்துக்கு முன்பாகத் தள்ளிவிடவே அவன் புரவிகள் மீது விழ, புரவிகள் கட்டுக்

zeevaa

கடங்காமல் பறந்தன. அப்படிப் பறந்த ரதத்தின் மீது பாய்ந்து ஏறிக்கொண்ட கிழவனும் மூர்சமதும் ரதத்தைக் கம்பளியிலிருந்து எழுந்தவன் செலுத்துவதையும், புரவிகள் மீது விழுந்து கீழே இழுத்துக் கொண்டுவந்த கடிவாளக் கயிறுகளை எடுக்க அந்த மனிதன் புரவியொன்றின் மீது தாவிப் பற்றியதையும் கண்டதும் பிரமித்துச் செயல் புரியாமல் சிலையென உட்கார்ந்து விட்டனர். தாம் கட்டிக் கொணர்ந்தது விஜயன் என்பதை அறிந்ததும் பெரும் பிரமிப்புக்குள்ளானான் சமத். சட்டென்று பிரமிப்பை உதறித் தனது வாளை உருவிக் கொண்டு ரதத்தில் ஏறி நின்று கொண்டான். பின்னால் வந்த புரவி வீரர்களைச் சமாளிக்க.

தோப்பிலிருந்து வந்த நான்கு வீரர்களும் வெகு விரைவில் ரதத்தை அணுகி விட்டதால் கிழவன் தன் கையிலிருந்த குறுவாள்களில் ஒன்றை எடுத்துப் புரவி வீரன் ஒருவன் மீது வீச அவன் புரவியிலிருந்து சாய்ந்தான் தரையில். மற்றொரு குறுவாளை எடுக்கும் முன்பு தோப்பிலிருந்து இன்னும் பல புரவி வீரர்கள் வருவதைக் கவனித்த சமத். ''எசமான்! இன்னும் பலர் வருகிறார்கள். என்ன செய்யலாம்?'' என்று கேட்டான்.

''என் வாள் இருக்கிறதா உன்னிடம்?'' என்று கேட்டான் விஜயன் ரதப் புரவிகளைத் துரத்திக் கொண்டே.

''இல்லை.''

''எங்கே?''

''அரசகுமாரியிடம் இருக்கிறது.''

''யார் கொடுத்தார்கள் அவளிடம்?''

''நான்தான்.''

''ஏன்?''

''அரசகுமாரி விரும்பிக் கேட்டார்கள். உங்களிடம் தானே கொடுப்பதாகச் சொன்னார்கள்?'' என்று விளக்கினான் சமத்.

zeevaa

மேற்கொண்டு விஜயன் ஏதும் கேட்கவில்லை. ரதத்தை காற்று வேகத்தில் செலுத்தினான். அருவிபோல் பளிங்குக் கற்களுடன் ஓடிய ரிஷிகுல்யாவுக்குக் குறுக்கே கற்கள் மீது ரதத்தை கடுவேகத்தில் செலுத்தினான். அக்கரையை அடைந்ததும் ரதத்தை நிறுத்திப் புரவிகளை அவிழ்த்தான். ஒரு புரவிமீது தான் ஏறிக் கொண்டு ரதத்தை அரணாக வைத்துக் கொண்டான். ''சமத்! பெரியவரே! அவர்கள் வரட்டும். நான் சொல்லுமுன்பு சண்டையைத் துவக்க வேண்டாம்.'' என்று கூறிவிட்டு ரிஷிகுல்யாவின் அக்கரையில் நின்றுவிட்ட புரவி வீரர்களைக் கவனித்தான். புரவி வீரர் கூட்டத்தின் முகப்பில் ஆதிமால்யன் ராட்சசனைப்போல் உட்கார்ந்து அருவியைத் தாண்டலாமா என்று சிந்தனை செய்தான்.



# 10. துறவியின் தழுவல்

அருவியின் தென்கரையில் ரதத்தின் புரவிகளை அவிழ்த்து விட்டு ஒருபுரவிமீது மட்டும் தான் ஏறிக் கொண்டு நுகத்தடியை உயர்த்தி ரதத்தை அரணாகச் செய்து கொண்ட விஜயன், எதிர்க்கரையில் ஆதிமால்யன் அவனது புரவியைத் திடீரென நிறுத்திவிட்டதையும் சிந்தனை வசப்பட்டதையும் கண்டு, எதனால் அவன் அருவியைத் தாண்ட முடியவில்லை என்று நினைத்துப் பார்த்தும் விடை கிடைக்கவில்லை சிங்களத்து வீரனுக்கு. ஆதிமால்யனுக்குப் பின்னால் சுமார் பதினைந்து புரவி வீரர்கள் பூர்ண ஆயுதந்தரித்து நின்றிருந்தார்கள் போருக்குத் தயாராக. ஆதிமால்யன் அச்சமற்றவனென்பதும், அதுவும் பதினைந்துபேர் கொண்ட சிறுபடை துணையிருக்கும் போது அவன் தங்கள் மூவரைக் கண்டு அஞ்ச நியாயமில்லையென்பதும் விஜயனுக்குத் தெரிந்தேயிருந்தது. இருப்பினும் அவன் ஏன் அருவியைத் தாண்டிவரச் சிந்திக்கிறான் என்று எண்ணமிட்ட விஜயன் அருவி மீது கண்களைச் செலுத்தினான்.

படகோட்டிக் கிழவனின் குடிசைகளிருந்த இடத்தில் படகு விடும் அளவுக்கு ஆழமாகவும் பயங்கரமாகவும் தோற்றமளித்த ரிஷிகுல்யா நதி அதன் ஆரம்பத்தில் சின்னஞ்சிறுசாக கணுக்கால் ஆழத்துக்குமேல் நீரில்லாத நிலையில், தன் உள்ளேயிருந்த வெளேரென்ற கூழாங்கற்களையும் பகிரங்கமாகக் காட்டிக் கொண்டு சலசலவென்று நகைத்து ஓடிக்கொண்டிருந்ததைக் கண்ட விஜயன், நதியும் மனிதர்களைப்போலத்தான் என்று நினைத்தான். கல்மிஷமில்லாத சிறுவயதில் உள்ளதை ஒளிவு மறைவில்லாமல்

zeevaa

திறந்து காட்டிச் சலசலவென்று நகைக்கும் மனிதன், காலம் ஏற ஏற மன ஆழத்துடனும் விகார எண்ணங்களுடனும் மாறுவது போலத்தான் நதியும் மாறுகிறதென்று எண்ணினான் வாலிபனான விஜயன். தத்துவ விசாரணைக்கோ, நினைப்புக்கோ இடமும் காலமும் அதுவல்லவென்றாலும் இயற்கையாக வேதாந்த மனப்பாங்குள்ள விஜயனுக்கு, அத்தகைய சிந்தனையில் இறங்காதிருக்க முடியவில்லை. அப்படி நினைத்த வண்ணம் எதிர்க்கரையிலிருந்த ஆதிமால்யனை நோக்கி லேசாக நகைத்தான்.

அந்த நகைப்பொலி அருவியின் சலசலத்த நகைப்பொலியுடன் இணைந்து சற்றுப் பெரிதாகக் கேட்கவே, ஆதிமால்யன் முகத்தில் சிந்தனை அகன்று சினம் சுடர் விடலாயிற்று. அதன் விளைவாக எதிர்க்கரையிலிருந்த விஜயனையும் நோக்கி, தனக்குப் பின்னாலிருந்த வீரர்களையும் நோக்கினான். பிறகு தனது புரவியின் காலின் கீழ். ரதத்திலிருந்து விழுந்து ரதப் புரவிகளின் குளம்புகளாலும் கீழிருந்த கற்களாலும் முகம் முழுவதும் காயமடைந்து ரத்தமொழுகக் கிடந்த ரதசாரதியை வெறுப்புடன் பார்த்தான். ரதசாரதியிடம் ஆதிமால்யனுக்குக் கடுகளவும் கருணையில்லாதிருந்தாலும் ரிஷிகுல்யா கருணைகொண்டு தனது பளிங்கு நீரால் அவன் காயங்களைக் கழுவ, சிறிது சுரணை பெற்று அசைந்தான் ரதசாரதி. அப்படி அவன் அசைந்ததைக் கண்டதும், ''டேய்! பாசாங்கு செய்யாதே எழுந்திரு'' என்று ஆதிமால்யன் அதட்டினான்.

அந்த அதட்டலின் விளைவாக ஏற்பட்ட அச்சம் முகத்தில் விரிய, தள்ளாடி எழுந்து களைத்த கால்கள் நடுங்க நின்ற சாரதி சற்றுத் தன்னைத் திடப்படுத்திக் கொள்ளப் புரவி வயிற்றிலிருந்த ஆதிமால்யனின் காலொன்றைப் பற்றினான். அப்படிப் பற்றிய கையைக் காலால் உதைத்துத் தள்ளிய ஆதிமால்யன் ''முட்டாள்! ரதத்திலிருந்து எதற்காக விழுந்தாய்?'' என்று அதிகாரத் தோரணையில் கேட்டான்.

zeevaa

ரதசாரதி பரிதாபம் கலந்த பார்வையை ஆதிமால்யன் மீது செலுத்தி, "எசமான், தாங்கள் நீலனை ஏமாற்றிக் கட்டிப்போட்டுச் சத்திரத்தில் ரதத்தின் உண்மைச் சாரதியைக் குத்திப்போட்டு, என்னைச் சாரதியாக நியமித்ததும் நீங்கள் சொன்னபடிதான் செய்தேன். ரதத்திலிருந்து நானாக விழவில்லை. உதைத்துத் தள்ளப் பட்டேன்" என்று அச்சம் நிரவிக் கிடந்த குரலில் கூறினான்.

"யார் உதைத்துத் தள்ளியது உன்னை?" ஆதிமால்யன் சினத்துடன் வினவினான்.

"கம்பளியில் சுருட்டிக் கட்டப் பட்டிருந்தவன்" என்றான் சாரதி.

"என்ன உளறுகிறாய்? கம்பளியில் கட்டப்பட்டிருந்தவன் உன்னை எப்படி உதைக்க முடியும்?" -ஆதிமால்யன் சீற்றம் அதிகமாயிற்று.

ரதசாரதி சொன்னான்: "எசமான்! உதைத்தபோது அவன் கம்பளிக்குள் இல்லை. கம்பளியைக் குறுவாளால் கிழித்துக் கொண்டு திடீரென வெளியே வந்தான். குறுவாளை என் முதுகில் ஊன்றினான். என் வாளையும் உருவிக் கொண்டான். பிறகு உதைத்து என்னைத் தள்ளினான். தங்கள் புரவி பின்னால் உதைத்தால் கூட உதை அத்தனை பலமாயிருக்காது" என்று.

ஆதிமால்யன் சினம் முன்னைவிட அதிகமாயிற்று. "என் புரவி என்ன கழுதையா, பின்னால் உதைக்க?" என்று வினவினான் கோபம் குரலிலும் துலங்க.

"தெரியாது எசமான். ஒரு முறை என்னைப் பின்னங்காலால் உதைத்திருக்கிறது. அதனால் ஒருவேளை..." என்று ரதசாரதி தனது நகைச்சுவையைக் காட்டினான்.

அந்த நகைச்சுவையே அவனுக்கு யமனாயிற்று. ஒரே உதையில் அவனை மீண்டும் அருவியில் தள்ளிய ஆதிமால்யன், "டேய்! இவர்களுக்குத் துணைப்படை ஏதாவது வருகிறதா?" என்று நீரில் கிடந்த ரதசாரதியை வினவினான்.

zeevaa

நீரில் விழுந்த ரதசாரதி மெள்ள எழுந்து மண்டியிட்ட வண்ணம், ''இல்லை யாருமில்லை. அரசகுமாரியே இன்று மாலையில்தான் புறப்படப் போகிறார்கள்'' என்றான்.

அதற்குமேல் அவனைப் பார்க்காத ஆதிமால்யன், ''சரி, வாருங்கள். அதோ அந்த மூவரையும் முதலில் பிடித்துக் கட்டுவோம்'' என்று கூறிக்கொண்டு மற்றவர்களைக் கரையில் நிற்கச் சொல்லிவிட்டு மூன்று வீரர்களை மட்டும் அழைத்துக் கொண்டு நதியைக் கடக்கத் துவங்கினான்.

அவன் முக்கால் நதியைக் கடந்தவுடன் கிழவன் தன்னிடமிருந்த ஒரே குறுவாளை எடுத்து ஆதிமால்யன் இதயத்துக்காக் குறி வைத்தான்.

''வேண்டாம் பெரியவரே. அவனைக் கொல்ல வேண்டாம். சிங்களத்தில் அவனுக்குத் தூக்குக் கயிறு காத்திருக்கிறது'' என்று தடுத்த விஜயன், உருவிய வாளுடன் ஆதிமால்யனை எதிர்பார்த்து நின்றான்.

அதற்குமேல் தாமதிக்காமல் வெகுவேகமாக அருவியைக் கடந்த ஆதிமால்யனை அருவிக்கரை ஏறவிட்ட விஜயன், அவன் கரை ஏறியதும் தனது புரவியை அவன் புரவியுடன் நெருக்கி ஆதிமால்யனின் ஓங்கிய வாளைத் தனது வாளால் தடுத்தான். அடுத்து அவனை அப்படியே அணைத்துக் கொண்டு அருவிக் கரையில் விழுந்து அருவிக்குள் புரண்டான். ஆதிமால்யன் கையிலிருந்த வாள் இரும்புக் கையொன்றால் பிடுங்கி எறியப்பட்டது. அடுத்து விஜயன் அருவியிலிருந்த ஒரு பெரிய கூழாங்கல்லை எடுத்து அவன் மண்டையில் தாக்கினான். ஆதிமால்யன் மண்டையில் குருதி கிளம்பியது. அவனைக் காப்பாற்றவும் விஜயனைப் பின்னால் குத்தவும் வந்த வீரர்கள் இருவர் செயலிழந்து நின்றனர். விஜயன் கையொன்று ஆதிமால்யன் ஊட்டியைப் பிடித்துக் கொண்டிருந்தது. ஆதிமால்யனே ஒரு கையை எழுப்பி, அவர்களை விலகிச் செல்லச் சைகை செய்தான். இதற்குள்

இன்னுமிருவர் கிழவன் குறுவாளுக்கும் மூர்சமதின் வாள் வீச்சுக்கும் பலியானார்கள். இருப்பினும் பின்னால் வந்த ஆதிமால்யனின் பெரும் கூட்டம் அவர்களை வளைக்கலாயிற்று.

பெரும் கூட்டத்தால் வளைக்கப்பட்ட மூர்சமத் மிகுந்த உற்சாகத்துடன் ராட்சஸ நகைப்பாக நகைத்து, தனது பெரிய வாளைப் பயங்கரமாகச் சுழற்றிக் கொண்டு ஆட்டுக் கூட்டத்திற்குள் பாயும் புலியைப் போல் பாய்ந்தான். அவன் பெரிய மீசை உதடுகளின் இகழ்ச்சி நிரம்பிய இழுப்பால் இருபுறத்திலும் அசைந்தது. அவன் ராட்சஸ விழிகள் சுற்றுமுற்றும் சுழன்று சூழ்ந்த வீரர்களை அலட்சியமாக நோக்கின. இரும்புக் கை வாளைக் கரகரவென்று சுழற்றியதால் உருண்ட புஜங்களில் கொழுத்த இடங்கள் ஏதோ கல்மேடுகளைப் போல் காணப்பட்டன. இந்த நிலையில் போரில் இறங்கிய மூர்சமத் நீண்ட நாளாகக் கிடைக்காத விருந்து கிட்டியதைப்போல் முகத்தில் மகிழ்ச்சியைக் காட்டிப் போரிட்டான். அவன் பெரிய வாள் இறங்கிய இடங்களிலெல்லாம் இருவராவது மாண்டு விழுந்தனர். இப்படி அசுரன்போல் தங்களை வெட்டிமாய்த்த மூர்சமதை மற்றவர்கள் சுற்றிக் கொண்டனர். அவன் வாளுக்கு ஏழெட்டுப் பேர் பலியானாலும் மேலும் பத்துப் பேர் இருந்ததால் போர் கடினப்பட்டது. படகோட்டிக் கிழவன் வீரனொருவனால் தாக்கப்பட்டு விழுந்தான். மூர்சமதின் மண்டையிலும் இரண்டு பலமான வாட்பிடிகளின் அடி விழுந்ததால் அவனும் சிறிது திகைத்தான். இப்படித் தனது நண்பர்கள் கதியைக் கண்ட விஜயன், ஆதிமால்யனைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு அவனை வெட்டித் தள்ளத் தன் வாளை ஓங்கினான். ஆனால் ஓங்கிய வாள் இறங்கவில்லை. விசித்திரமான நிகழ்ச்சியொன்று ஏற்பட்டது.

அடுத்த வினாடி போர் நிறுத்தப்பட்டது. திடீரென்று எங்கிருந்தோ பெரும் கற்கள் எதிரிகள்மீது வந்து விழுந்தன கல்மழைபோல், பலர் வரும் பெரும் கூச்சலும் கேட்டது. அதனால் ஆதிமால்யன் ஆட்கள் தங்கள் புரவிகளைத் திருப்பிக் கொண்டு வந்த வழியே பறந்தார்கள். ஆதிமால்யனை மட்டும் விடவில்லை விஜயன். அவனை

zeevaa

அப்படியே தூக்கி நிறுத்தினான் முரட்டுத்தனமாக. அந்தச் சமத்தில், "உபராஜா! விடுங்கள் என்னை" என்று கெஞ்சினான் ஆதிமால்யன்.

விஜயன் அவனது திடீர் மாற்றத்துக்குக் காரணம் தெரியாமல் தனது பிடியை அகற்றினான். ரிஷிகுல்யாவின் கரையில் தென்திசை நோக்கி மண்டியிட்டான் ஆதிமால்யன். திடுதிடுவென்று வந்த புரவிக் கூட்டத்தின் முன்னணியில் பெரிய புரவிமீது துறவியொருவர் அமர்ந்திருந்தார். புரவியின் காலில் விழுந்த ஆதிமால்யன், "சுவாமி; சரணம் சரணம்," என்று கூவினான்.

ஆதிமால்யன் மண்டியிட்டுச் சரணடைந்த துறவியை விஜயன் ஏறெடுத்து நோக்கினான். நன்றாகச் சிரமுண்டனம் செய்திருந்த துறவியார் கடோத் கஜன் போல் புரவியின்மீது அமர்ந்திருந்தார். அவர் உடுத்தியிருந்த காவி அவர் உடலை ஓரளவே மறைத் திருந்ததால், புஷ்டியான சதைகள் உடலிலிருந்து பிதுங்காமல் நன்றாகக் கெட்டிபட்டுச் செக்கச் செவேலென்று வயிரம் பாய்ந்து காணப்பட்டன. கரணை கரணையாகத் திரண்டிருந்த புஜங்களும் புரவியை அணைத்த கால்களும் துறவியார் காயக்கிலேசத்தில் நம்பிக்கையில்லாதவர் என்பதை நிரூபித்தன. அவர் உட்கார்ந் திருந்த புரவி நல்ல வலுவான ஜாதிப் புரவியானாலும் துறவியார் கனத்தைத் தாங்க முடியாத காரணத்தால் அவர் உட்கார்ந்த இடத்தில் முதுகை நன்றாக வளைத்துக் கொண்டிருந்தது. துறவியார் கடிவாளத்தைப் பிடித்த இடது கையில் நீண்ட தண்டமொன்றும், வலது கையில் ஒரு பெரிய கூழாங்கல்லும் வைத்துக் கொண்டிருந்தார்.

இப்படித் துறவியை அளவெடுத்துக் கொண்டிருந்த விஜயனை அவன் பக்கத்தில் மண்டியிட்ட கிழவன், "சிங்களத்து வீரரே! கோகர்ணஸ்வாமியின் திருவடிகளில் வணங்குங்கள்," என்று ரகசியமாக ஓதினான்.

கிழவன் சொற்படி வணங்கி எழுந்த விஜயனைத் துறவி புன்முறுவலுடன் நோக்கினார். அத்துடன், "இது இனி அவசிய

மில்லை,'' என்று கூறிய கோகர்ணஸ்வாமி கையிலிருந்த பெரும் கூழாங்கல்லை வீசி எறிந்தார்! அது நெடுந்தூரம் சென்று விழுந்த இடத்தைப் பார்த்துப் பெரிதும் மகிழ்ந்தார். ''அங்கு யாராவது இருந்தால் இத்தனை நேரம் சிவலோகம் போயிருப்பான்,'' என்று குதூகலத்துடன் சொல்லவும் செய்தார்.

கோகர்ணஸ்வாமிக்குக் கொலையிலிருந்த உற்சாகத்தைக் கண்ட விஜயன் பிரமித்தான். துறவி புரவியிலிருந்து இறங்கி. ''விஜயா! கலிங்கத்துக்கு உன் வரவு நல்வரவாகட்டும்,'' என்று கூறி; அவனை மார்புறத் தழுவினார். விஜயனின் மார்பு எலும்புகள் முறிந்து விடும் போலிருந்தது. அவன் மூச்சுத் திணறலாயிற்று. அடுத்துத் துறவி அவனை விடுவித்து அவனது முதுகில் தட்டி, ''ஆதிமல்லன் போகட்டும். இனி அவன் இங்கு தலைகாட்டமாட்டான் புத்தியிருந்தால்,'' என்று கூறினார்.

ஆதிமல்லனைப் பற்றிச் சிந்திக்கும் நிலையில் கூட இல்லை விஜயன். அவன் முதுகில் துறவியார் தட்டிக் கொடுத்த இடத்தில் மரணவலி எடுத்துக் கொண்டிருந்தது. அந்த இடம் சிறிது வீங்கவும் தொடங்கியது.

zeevaa

# 11. திரிலோகசுந்தரி

கரடியின் தழுவலைப் போல் தனது எலும்புகளை முறித்திடும் துறவியின் தழுவலாலும், அவர் ஆசையுடன் தட்டிக் கொடுத்த முதுகின் வலியாலும், முதுகில் லேசாக எழும்பத் தொடங்கிய ஊமைக்காயத்தாலும் பிரமை பிடித்துப் பல விநாடிகள் நின்றுவிட்ட விஜயன், கோகர்ணஸ்வாமியின் ராட்சஸ உருவத்தை ஒரு முறைக்கு இரு முறையாகக் கவனித்து, ஸ்வாமியிடம் விளையாடுவது யமனுடன் விளையாடுவதற்குச் சமானம் என்பதைச் சந்தேகமறப் புரிந்து கொண்டான். அத்துடன் ஸ்வாமியின் உடலில் இருந்த காயத்தழும்புகள் சிலவற்றைக் கண்டதும், ஸ்வாமி அவர்கள் துறவறத்துக்கு முன்பு போர் அறத்தையும் கைப்பிடித்திருக்க வேண்டுமென்ற முடிவுக்கும் வந்தான். அதுமட்டுமின்றி ஸ்வாமியுடன் வந்த புரவி வீரர் கூட்டத்தினர் வேல்களைத் தவிர வேறு ஆயுதங்கள் எவற்றையும் தாங்கிவராவிட்டாலும் குறைந்தபட்சம் நூற்றைம்பது பேரைச் சமாளிக்கும் ஆற்றல் ஸ்வாமியின் சிறு படைக்கு உண்டு என்பதையும் உணர்ந்து கொண்டான். இரண்டு பிரிவாகப் பிரிந்து நின்ற அந்தப் புரவி வீரர் கூட்டத்தினிடையே நின்ற நான்கு புரவிகளால் இழுக்கப்பட்ட கூண்டில்லா வண்டி நிரம்பக் குழவிகளைப் போன்ற கூழாங்கற்கள் இருந்ததையும் கவனித்த விஜயன், சற்று முன்பு பெய்த கல்மாரிக்குக் காரணத்தையும் புரிந்து கொண்டதால், கூழாங்கற்களைக் கொண்டு போரிடும் புதுமையை நினைத்து ஸ்வாமி சகலவிதங்களிலும் புதுமையானவர் என்று தனக்குள் சொல்லியும் கொண்டான்.

zeevaa

அவன் இப்படித் தன்னையும் பார்த்துத் தனது ஆட்களையும் பார்த்துக் கூழாங்கல் வண்டியையும் பார்த்து நினைப்பில் திளைத்துவிட்டதைக் கண்ட கோகர்ண ஸ்வாமி ''விஜயா! சிந்தனையைப் பிறகு வைத்துக்கொள். முதலில் ஆசிரமத்துக்குப் போவோம் வா.'' என்று அழைத்தார்.

அதற்குமேல் தாமதிக்காத விஜயன் ரதப் புரவிகளில் ஒன்றில் ஏறிக் கொண்டு கிழவனையும் ஒரு புரவியில் ஏறிக் கொள்ள உத்தரவிட்டான். பிறகு மூர்சமதைக் காட்டி ''ஸ்வாமி! இவனுக்கு ஒரு புரவி வேண்டுமே,'' என்று பணிவுடன் கேட்டான்.

கோகர்ண ஸ்வாமி மூர்சமதைக் கூர்ந்து நோக்கிவிட்டு, ''இவன் இந்தக் கூழாங்கல் வண்டியில் வரட்டும். மாலையில் இவன் புரவியும் உங்கள் இருவர் புரவிகளும் நமது ஆசிரமத்துக்கு வந்துவிடும்.'' என்று கூறி, ''அப்பனே! வண்டியில் ஏறிக்கொள்,'' என்று மூர்சமதுக்கு அன்புக் கட்டளையும் இட்டார்.

அதுவரை எல்லோரையும்விட அதிகப் பிரமை பிடித்து நின்ற மூர்சமத் கூழாங்கல் வண்டியில் ஏறிக் கொள்ள, ஸ்வாமிகள் தமது புரவியை ரிஷிகுல்யாவின்கரையிலிருந்து தென்கிழக்குத் திசையில் திருப்பினார். அவரைத் தொடர்ந்து. விஜயனும் படகோட்டிக் கிழவனும் செல்ல ஸ்வாமியின் காவல் கூட்டம் அவர்களைத் தொடர்ந்தது. இந்தப்பவனி செல்ல ஆரம்பித்தது முதல் மகேந்திரமலை மெள்ளக் கிட்டக்கிட்ட நெருங்குவதையும், அந்தப் பகலின் தீட்சண்யத்தில் கூட மகேந்திர மலையிலிருந்து சில்லென்று காற்று வீசிப் பெரும் இதத்தை உடலுக்குத் தந்ததையும், அதுபட்ட காரணத்தினாலேயே துறவியார் தழுவலினால் ஏற்பட்ட வலி பெருமளவு குறைந்து விட்டதையும் உணர்ந்த விஜயன், ''ஸ்வாமி! இந்த மலையில் மூலிகைகள் அதிகமோ?'' என்று வினவினான்.

கோகர்ணஸ்வாமி மகேந்திரமலை உச்சியைச் சுட்டிக் காட்டி, ''விஜயா! பரதகண்டத்திலுள்ள எல்லா மலைகளிலும் மூலிகைகள் உண்டு. அது பாமரர்களுக்குத் தெரியாது. ஆனால் மகேந்திர

zeevaa

மலையில் எல்லாவற்றுக்கும் மேலான மூலிகை ஒன்றிருக்கிறது'' என்று கூறினார். அவர் பேச்சில் குழைவு இருந்தது. பணிவும் இருந்தது. அதில் பக்தியும் ஒலித்தது.

ஸ்வாமியின் குரலின் குழைவையும் பணிவையும் கண்ட விஜயன், ''அது என்ன மூலிகை ஸ்வாமி?'' என்று விசாரித்தான்.

''அருமருந்தொரு தனிமருந்து அம்பலத்தே இணையற்ற மருந்து. மருந்துக்கெல்லாம் ஆதி மருந்து,'' என்றார் ஸ்வாமிகள்.

''அதற்குப் பெயர் இல்லையா?'' என்று விஜயன் வினவினான்.

''அதற்குப் பலர் பல பெயர்களைச் சொல்லுகிறார்கள். ஆனால் அது ஒன்றுதான்,'' என்று மர்மமாகப் பேசினார் ஸ்வாமி.

ஸ்வாமி வேதாந்தம் பேசுகிறார் என்பதைப் புரிந்து கொண்ட விஜயன், ''நீங்கள் நம்பும் ஆண்டவனைச் சொல்கிறீர்களா?'' என்று கேட்டான்.

விஜயன் கேள்வியிலிருந்த மர்மத்தை ஸ்வாமி புரிந்து கொண்டதால் மந்தகாசம் செய்து. ''ஆம் நீ நம்பாத. ஆனால் எங்கும் வியாபித்துள்ள ஆண்டவனைச் சொல்லுகிறேன். நீ பௌத்தன், ஆண்டவனிடம் நம்பிக்கையற்றவன். இருப்பினும் இன்று உன்னைக் காத்தவன் அவன்தான். மகேந்திர மலையிலிருக்கும் சிவகோகர்ண ஸ்வாமிதான் உன்னைக் காப்பாற்றினார்'' என்று விளக்கியதன்றி, ''விஜயா! சிவகோகர்ண ஸ்வாமி என் சொப்பனத்தில் வந்து உன் அபாயத்தைத் தெரிவிக்காவிட்டால் நான் எனது சிறுபடையுடன் உன்னைக் காக்க வந்திருக்க மாட்டேன்'' என்று தெரிவித்தார்.

''சொப்பனமா ஸ்வாமி! என் வரவைப் பற்றியா?'' என்று வியப்புடன் கேட்டான் விஜயன்.

''ஆம் விஜயா! உணவருந்தியதும் சிறிது கண்களை மூடினேன். உன்னைத் தேடி ஒருவன் வருகிறான். ரிஷிகுல்யாவுக்குப் போ என்று உத்தரவாயிற்று. உடனே புறப்பட்டேன்'' என்றார் ஸ்வாமிகள்.

zeevaa

பௌத்தனான விஜயன் அதை நம்பவில்லை. ''நல்ல சொப்பனம் ஸ்வாமி!'' என்றான் நம்பிக்கையற்ற குரலில்.

''விஜயா! உலகமே ஒரு சொப்பனம். அதில் நாம் நடமாடும் பாவைகள். நமக்குப் புரியாததை எல்லாம் இல்லையென்று நினைக்கிறோம். ஆனால் நம் நினைப்பில் என்ன இருக்கிறது? எல்லாம் அவன் திருவிளையாடல்'' என்ற ஸ்வாமிகள் அதற்கு மேல் பேசவில்லை.

விஜயனும் பேசவில்லை. ஆனால் கூழாங்கல் வண்டியையும் ஸ்வாமிகள் படையையும் கவனித்தான். 'எல்லாம் ஆண்டவன் செய்வதானால் இத்தனை ஏற்பாடு, காவல் இவை எதற்கு ஸ்வாமிகளுக்கு?' என்று எண்ணினான்.

அவன் உள்ளத்தில் ஓடிய எண்ணங்களை ஸ்வாமிகள் உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். ''விஜயா! நம்மைக் காக்க ஆண்டவ னிருக்க இந்த வீரர் எதற்கு என்று நினைக்கிறாய். 'தெய்வம் காட்டும், ஊட்டாது' என்றொரு தமிழ்ப் பழமொழி இருக்கிறது. எதற்கும் நமது முயற்சியும் அவசியம். கண்ணன் ஒருவனால் துரியோதன சைன்னியம் அனைத்தையும் அழித்திருக்க முடியும் ஆனால் அர்ஜுனனை போரிடச் செய்தான். ஏன்? கடமையென்பது பிறந்த எந்த மனிதனுக்கும் உண்டு. அந்தக் கர்மாவை, கர்ம பலன்களை பௌத்த மதமும் ஒப்புக் கொள்கிறது. ஆகையால்தான் உன்னைப் போன்ற நம்பிக்கையற்றவர்களையும் காப்பாற்ற இந்த மாதிரி சிறுபடையை வைத்திருக்கிறேன்'' என்று விளக்கினார்.

அதற்கு மேல் ஸ்வாமிகள் ஏதும் பேசவில்லை. விஜயனும் அக்கம் பக்கத்தில் எழுந்த பிரமாண்டமான காட்சிகளைப் பார்த்துக் கொண்டே பயணம் செய்தான். நேரம் ஏற ஏற மகேந்திர மலையின் அடிவாரம் கிட்டே வந்து கொண்டிருந்தது. எங்கும் பெரும் கூழாங்கற்களும் அவற்றின் இடையே பசுமையான செழித்த செடிகளும் காணப்பட்டன. அவன் பயணம் செய்த தரையில் ஆசிரமம் வரை பாதை போட்டிருந்ததால் அந்தப் பாதையின் இரு

zeevaa

பக்கங்களிலும் பசும்புல் நீளமாகவும் அகலமாகவும் கோரை போல் வளர்ந்திருந்தது. அவற்றில் மேய்ந்து கொண்டிருந்த சில பெரிய பசுக்களும் காளைகளும் ஸ்வாமியின் வரவைக் கண்டதும் புற்களை மேய்வதை விட்டு தலையைத் தூக்கிக் கத்தின. அவற்றைக் கண்ட ஸ்வாமியின் முகத்தில் சொல்லொணா மகிழ்ச்சி படர்ந்தது. ''விஜயா! இவை நமது ஆசிரமத்துக் குழந்தைகள். அவற்றின் அன்பைப் பார்'' என்று சுட்டிக் காட்டினார்.

விஜயன் அந்தப் பசுக்களின் புஷ்டியையும் பருத்த மடிகளையும் தடித்த காம்புகளையும் பார்த்து 'எல்லாம், வங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள். சில நாட்கள் நான் ஆசிரமத்தில் இருந்தால் ஸ்வாமியின் வலு எனக்கும் வந்துவிடும்' என்று உள்ளூர எண்ணமிட்டான்.

அவன் பார்வையை கவனித்த ஸ்வாமிகள், ''விஜயா! இந்த மாதிரி ஆயிரம் பசுக்கள் என்னிடம் இருக்கின்றன. இவற்றைப் பார்த்து மலைத்துவிடாதே. ஆசிரமத்துக்கு வந்ததும் எனது மற்றக் குழந்தைகளையும் பார்'' என்று உற்சாகத்துடன் கூறினார்.

''ஆசிரமம் இன்னும் எத்தனை தூரம் இருக்கிறது ஸ்வாமி?'' என்று கேட்டான் விஜயன்.

''அதிக தூரமில்லை. வம்சதாராவின் கரையில் இருக்கிறது. ரிஷிகுல்யாவுக்கும் வம்சதாராவுக்கும் இடையே அரையோஜனை தூரம் தான்,'' என்று கூறிவிட்டு மேலும் சொன்னார். ''விஜயா! உன் மூதாதையார் கலிங்கத்திலிருந்து இலங்கைக்குச் சென்றிருக்க அவசியமேயில்லை. கலிங்கத்தின் அழகும் வளப்பமும் உலகில் எங்கும் கிடையாது. இந்த மகேந்திர மலையிலிருந்து திரிஸாமா, ரிஷிகுல்யா, வம்சதாரா, இக்ஷுதா, திரிதிவாசா, லாங்குலினியா ஆகிய ஆறு நதிகள் புறப்படுகின்றன. இவற்றில் வம்சதாராவும் லாங்குலினியாவும் மரக்கலங்கள் செல்லக் கூடியவை. கடல் அலைகள் இவை இரண்டிலும் பின்னோக்கிப் பாய்கின்றன. இந்த

zeevaa

*மகேந்திரியின் புத்ரிகள் இந்த ஆறுகள் என்று வாயு புராணம் கூறுகிறது. அந்தப் புத்ரிகளில் இருவர்களான வம்சதாராவும், லாங்குலினியாவும் அலைகள் நிரம்பியவை. எனது ஆசிரமத்தில் வம்சதாரா சிறியதாகவும் அழகாகவும் இருக்கும். போகப் போகப் போருக்கு உதவும் மரக்கலங்களைத் தாங்கும் பயங்கர ஆழம் அதற்கு உண்டு. அதனால்தான் நீ எதிர்பார்த்து வந்திருக்கும் மனிதன் வம்சதாராவுக்கும் லாங்குலினிக்கும் இடையிலுள்ள சிம்மபுரத்தில் வசிக்கிறார்'' என்று ஸ்வாமிகள் விளக்கிக்கொண்டே வருகையில் மாலை நெருங்கிக் கொண்டிருந்தது. வம்சதாரா சலசலப்புடன் ஓடும் ஒலியும் கேட்டது. தூரத்தே ஸ்வாமிகளின் ஆசிரமும் தெரிந்தது.

ஆசிரமத்தின் வாயிலிலேயே ஸ்வாமிகள் இறங்க முற்பட்டதும் சலசலவென்று சிறகடித்த கிளிகளும் புறாக்களும் பறந்து வந்து ஸ்வாமிகளின் தோள்கள் மீதும் தலையிலும் புரவிமீதும் உட்கார்ந்து கொண்டன. அவர் புரவியின் கழுத்திலும் இரண்டு மைனாக்கள் உட்கார்ந்திருந்தன. ஆசிரமத்திலிருந்த பசுங்கன்றுகள் 'அம்மா' என்று ஆவலுடன் கூவின. ஸ்வாமிகள் தன்மீது உட்கார்ந்த பக்ஷிகளை ஆசையுடன் தடவிக்கொடுத்தார். தனது வலது கையில் இருந்த பெரிய தண்டத்தைக் கீழே போட்டு விட்டு, பிறகு புரவியிலிருந்து இறங்கி மூங்கிற் படல்களால் செய்யப்பட்ட கதவுகளைத் திறந்துகொண்டு உள்ளே சென்றார். விஜயன் உடனடியாக உள்ளே செல்லவில்லை. வெளியிலிருந்தே ஆசிரமத்தைக் கவனித்தான். ஆசிரம நிலத்தின் விஸ்தீரணம் மிகப் பெரியதாய் இருந்தது. சுற்றிலும் மூங்கிற் புதர்களாலும் மூங்கில் தட்டிகளாலும் வளைக்கப்பட்ட நிலப்பரப்புக்குள்ளே அருமையாக வேலைப்பாடமைந்த குடிசைகள் பல இருந்தன. அந்த நிலப்பரப்பின் நட்ட நடுவில் அரண்மனை போலிருந்த பெரும் குடிசையே ஸ்வாமியின் இருப்பிடம் என்பதைப் புரிந்து கொண்டான் விஜயன். ஆசிரமத்தின் நிலப்பரப்புக்கு ஓர் ஓரத்தில்

---

• *த்ரிஸாமா, ரிஷிகுல்யா, இக்ஷுதா, த்ரிதிவாச யாலாங்குலினி வம்சதாரா மகேந்த்ர தனயா ஸ்ம்ருதா :* Rajendra Misra's edition of Vayupurana-Page 52.

zeevaa

ஓடிக்கொண்டிருந்த வம்சதாரா நதி மிகச் சிறியதாய் இருந்தாலும் அதன் நீர் பளிங்கைத் தோற்கடித்தது. அதில் நீர் அருந்திய சில கன்றுகளும் ஆட்டுக்குட்டிகளும் ஆசிரமத்தின் இயற்கை வனப்பை அதிகப்படுத்தின.

இயற்கையின் கைவண்ணத்தால் செப்பனிடப்பட்ட அந்த ஆசிரம அமைப்பைப் பார்த்த விஜயன் புரவியிலிருந்து இறங்கி உள்ளே சென்றான். கூழாங்கல் வண்டியிலிருந்து குதித்த மூர்சமதும் புரவியிலிருந்து இறங்கிய படகோட்டிக் கிழவனும் அவனைத் தொடர்ந்தனர். ஸ்வாமிகளுடன் வந்த புரவி வீரர்களும் கீழே இறங்கி ஆசிரம எல்லைக்குள் புரவிகளை இழுத்துக் கொண்டு நுழைந்து எட்டத் தெரிந்த புரவிக் கொட்டடிக்குச் சென்றனர்.

விஜயனும் மூர்சமதும் கிழவனும் ஆசிரமத்துக்குள் நுழைந்ததும் ஸ்வாமியின் பெருங்குடிசையை நோக்கிச் சென்றனர். அந்த ஆசிரம வாயிலை அடைந்த விஜயன் அதன் அழகைக்கண்டு விவரிக்க இயலாத வியப்பை எய்தினான். ஆசிரம வாயிலில் காவி தரித்த பருவப் பெண்கள் நால்வர் நின்று அவனை வரவேற்றனர். ''சிங்களத்து உபராஜா வருக!'' என்று முகமன் கூறினர். ''நீங்கள் தங்கி இளைப்பாறியதும் ஸ்வாமிகள் உங்களுக்குப் பேட்டி தருவார்'' என்று கூறி, ''இப்படி வர வேண்டும்'' என்று ஆசிரமத்தின் இன்னொரு பகுதிக்கு வழியும் காட்டினர்.

''இப்பொழுது ஸ்வாமிகளைப் பார்க்க முடியாதா?'' என்று அந்தப் பெண்களை விசாரித்தான் விஜயன்.

''முடியாது. ஸ்வாமிகள் சாயங்கால பூஜையை முடித்த பின்புதான் பார்க்கலாம். தவிர ஸ்வாமி இப்பொழுது முக்கியமான ஒருவருடன் பேசிக் கொண்டிருக்கிறார்'' என்றாள் ஒரு பெண்.

''அந்த முக்கியமானவரை பூஜைக்கு முன்பு ஸ்வாமி ஏன் பார்க்கிறார்?'' என்று விஜயன் கேட்டான்.

''அவரது பெண் மாதிரி அவர்'' என்றாள் இன்னொருத்தி.

''சந்நியாசிக்குப் பெண் ஏது?'' என்றான் விஜயன்.

zeevaa

''வளர்ப்புப் பெண். நாங்களும் அப்படித்தான்'' என்றாள் இன்னொருத்தி.

''இப்பொழுது பேசிக்கொண்டிருக்கும் முக்கியமானவர் யாரோ?'' விஜயன் குரலில் ஏளனம் இருந்தது.

அந்தப் பெயரை உடனே உச்சரிக்கவில்லை அந்த ஆசிரம அழகிகள். முதலில் மரியாதைக்கு அறிகுறியாகத் தலைவணங்கினர். பிறகு ஒருத்தி சொன்னாள் ''திரிலோக சுந்தரி'' என்று.

''திரிலோகசுந்தரியா! பெயருக்கும் அவளுக்கும் சம்பந்தமுண்டா?'' என்று விஜயன் கேட்டான்.

''அவளைப் போன்ற அழகி கலிங்கத்தில் கிடையாது'' என்றாள் ஆசிரம அழகி ஒருத்தி.

''யாரவள்?'' விஜயன் குரலில் வியப்பு இருந்தது.

ஆசிரம அழகியின் பதில் விஜயனை மட்டுமல்லாமல் மூர்சமதையும் கிழவனையும்கூட திகைக்க வைத்தது.

''கலிங்கத்து ராஜகுமாரி'' என்று கூறிய அந்தப் பெண் மீண்டும் தலைவணங்கினாள்.



# 12. அழகும் விதியும்

முதன் முதலில் படகோட்டிக் கிழவன் குடிசையிலே தான் சந்தித்த அரசகுமாரியின் பெயர்தான் திரிலோக சுந்தரி என்பதை அறிந்ததும் விஜயன் திகைப்பும் வியப்பும் ஒருங்கே அடைந்தானென்றால் அதற்குக் காரணம் இருக்கவே செய்தது. அவளைச் சில ஆண்டுகளுக்கு முன்பு அவன் அகஸ்மாத்தாகச் சிங்களத்தில் பார்த்தபோதுகூட அவளை அனைவரும் கலிங்கத்து ராஜகுமாரி என்று அழைத்தார்களே தவிர வேறு எந்தப் பெயராலும் அழைக்காததாலும், அவளும் சிங்களத்தில் அதிக நாள் தாமதிக்காமல் இரண்டே மாதங்களில் கலிங்கத்துக்குக் கிளம்பி விட்டபடியாலும் அவளைப்பற்றிய முழு விவரங்களை அவனால் அறிய முடியவில்லை. சிங்களம் இருந்த குழப்பமான நிலையில் அதைப்பற்றி ஆராயவோ சிந்திக்கவோ அவகாசமில்லாமையால் அவள் சந்திப்பு இடையே ஏற்பட்ட சொப்பனம் போலவே இருந்தது அவன் சிந்தையில். இத்தனைக்கும் அவளுடைய இணையற்ற அழகு மட்டும் அவன் மனத்தைவிட்டு அகலவேயில்லை. அந்தக் காலத்திலும் அதற்குப் பிறகும் கலிங்கத்து அரசகுமாரிகள் பலரில் திரிலோகசுந்தரி என்ற இணையற்ற அழகி ஒருத்தி இருக்கிறாளென்றும், அவளுக்குக் குதிரையேற்றம், யானையேற்றம், வாட்போர் முதலிய அரசகுமாரர்களுக்கு அவசியமான சகல வித்தைகளையும் யாரோ ஒரு துறவி சொல்லி வைத்திருக்கிறாரென்றும் பெரும் பிரசித்தியும் இருந்ததாலும், அவள்தான் தான் சந்தித்த அழகியென்பதையும் அந்தத் துறவிதான் கோகர்ண ஸ்வாமி என்பதையும் விஜயனால் நினைத்தும் பார்க்க முடியவில்லை.

zeevaa



zeevaa

இத்தகைய பிரசித்தியாலும், திரிலோகசுந்தரியென்ற பெயராலும் மூர்சமதும் தன்னைப் போலவே பிரமித்ததற்குக் காரணம் இருந்தாலும் கலிங்கத்தைச் சேர்ந்த படகோட்டிக் கிழவன் ஏன் வியப்படைந்தான் என்பதை உணர முடியாத காரணத்தால் கிழவனை ஒரு விநாடி உற்று நோக்கினான் விஜயன். அவன் நினைப்பை முகபாவத்திலிருந்தே உணர்ந்துகொண்ட கிழவனான நந்தன், ''உபராஜா! இந்தச் செய்தி எனக்கும் புதிது. இந்த அரசகுமாரி பலமுறை என் குடிசைக்கு வந்திருக்கிறார்கள். என்னிடம் படகோட்டவும் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். இருப்பினும் இவர்தான் மன்னனின் மூத்தமகள் என்பது எனக்குத் தெரியாது. அரசகுமாரிகள் பெயரைக் கேட்பது தவறாகையால் நானும் கேட்கவில்லை. அவர்களும் சொல்லவில்லை'' என்று தனது வியப்புக்குக் காரணம் கூறினான்.

இவ்வண்ணம் இவர்கள் அரசகுமாரியைப் பற்றி விவாதிப் பதைக் கேட்டுக்கொண்டு ஆடாமல் அசையாமல் பதுமைகள்போல் நின்ற ஆசிரமத்துப் பருவப்பெண்கள் நால்வரில் ஒருத்தி, ''உபராஜா! இனி தாங்கள் தங்க வேண்டிய இடத்துக்குச் செல்லலாமா?'' என்று பணிவுடன் கேட்டாள். அத்துடன் வழிகாட்டி ஆசிரமத்தின் இன்னொரு பகுதியை நோக்கி நடக்கவும் செய்தாள். அவளை மற்ற பருவப் பெண்களும் தொடர்ந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து தீர்க்க சிந்தனையுடன் விஜயனும் மற்ற இருவரும் செல்ல, ஆசிரமத்தின் கிழக்குக் கோடியில் இருந்த ஒரு பெரிய அறையின் தட்டிக் கதவைத் திறந்து விட்ட பெண்கள் வாயிலிலேயே நின்றுவிட, விஜயன் அந்த அறைக்குள் நுழைந்தான். அவனைத் தொடர முற்பட்ட மூர்சமதையும் கிழவனையும் தடுத்த ஆசிரமப் பெண்களில் ஒருத்தி, ''நீங்கள் இருவரும் பக்கத்து அறையில் தங்கலாம். இது அரச குலத்தார் மட்டும் தங்கும் அறை'' என்று கூறினாள். இன்னொருத்தி மூர்சமதையும், கிழவனையும் அடுத்த அறைக்கு அழைத்துச் சென்றாள்.

zeevaa

அறைக்குள் சென்று அதைப் பார்வையிட்ட விஜயன் அதன் அழகையும் அதிலிருந்த வசதிகளையும் கண்டு பிரமித்துப் பல விநாடிகள் நின்றுவிட்டான். அறையின் சுவர்கள் பாதி உயரத்துக்கு மலைக்கற்களால் கட்டப்பட்டு மேல் பாதியில மூங்கில் கழிகளாலும் தட்டிகளாலும் அமைக்கப்பட்டிருந்தாலும், அவற்றில் பலவித வண்ண ஜாலங்கள் காணப்பட்டதைப் பார்த்தான். மூன்று பக்கங்களிலிருந்த மூங்கில் தட்டி சாளரங்களில் முல்லைக் கொடிகளும், வசந்த மல்லிகைக் கொடிகளும் படர்ந்து சுகந்தத்தை அளித்துக் கொண்டிருந்தன. ஒரு புறத்திலிருந்த குருக்கத்திக் கொடியின் நீல மலர்கள் வெள்ளை மல்லி மலர்களுடன் வாசனையில் போட்டி போட முடியா விட்டாலும் வர்ணத்தில் போட்டி போட்டுக்கொண்டு அறைக்குள்ளே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன. அறையின் கூரை அடர்த்தியாக ஓலைகளால் நிரப்பப்பட்டிருந்தாலும் கூரையின் அடியே விரித்து அணைத்து அடிக்கப்பட்டிருந்த மூங்கில் பாய்களும் அதில் போடப்பட்டிருந்த நானாவித வர்ணக் கட்டங்களும் கண்ணுக்குப் பெரு விருந்தாய் இருந்தன. அறை நடுவே போடப்பட்டிருந்த கயிற்றுக் கட்டிலில் பஞ்சணையொன்று போடப்பட்டு அது காவித் துணியால் மூடப்பட்டிருந்ததைக் கண்ட விஜயன் துறவறத்திலும் சுகமுண்டு என்பதைப் புரிந்து கொண்டான்.

அவன் அந்த அறையை பிரமிப்புடன் பார்ப்பதைக் கண்ட ஆசிரமப் பெண்களில் இருவர் உள்ளே நுழைந்து, ''உபராஜா! அதோ அந்த மண்பாண்டத்தில் அருந்த நீர் இருக்கிறது. மேலுள்ள வெண்கலக் குவளையும் சுத்தமானது. தாங்கள் நீராடுவதானால் இடம் காட்டுகிறோம். பிறகு புத்துடைகள் கொண்டு வருகிறோம்'' என்று கூறி அவன் ஆணையை எதிர்பார்த்து நின்றார்கள்.

''முதலில் நீராடுகிறேன். பயணக்களைப்பு அதிகமாய் இருக்கிறது'' என்ற விஜயனை, ''வாருங்கள் பிரபு'' என்று ஆசிரமத்தின் கிழக்குக் கோடிக்கு அழைத்துச் சென்றார்கள் சீடப் பெண்கள். வம்சதாரா வேறு எங்கிருந்தோ வளைந்து வந்து அந்த

zeevaa

இடத்தில் முழங்கால் அளவுக்குப் பிரவாகித்துக் கொண்டிருந்தது. அவன் அதன் கரையில் நின்று அதை நோக்கியதும் சீடப்பெண்களில் ஒருத்தி தனது கையிலிருந்த சிறு மூட்டையொன்றை அருவிக் கரையில் இருந்த ஒரு பாறையில் வைத்துவிட்டு அகன்றாள். வம்சதாரா அருவியின் அந்தக் கரையில் நின்ற விஜயன் சுற்றுமுற்றும் ஆசிரமத்தை நோக்கினான். தூரத்தே வீரர் பலர் உலாவும் ஒலிகள் கேட்டன. அந்த நீராட்டத் துறையைச் சுற்றி தலைமட்டத்துக்குச் செடிகள் பல வளர்ந்திருந்ததால் வேறு இடங்கள் கண்ணுக்குப் படவில்லையாதலால் தனித்து நீராடவே இந்த இடம் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறதென்பதை உணர்ந்து கொண்ட விஜயன் தன் கண்ணெதிரே எழுந்த மகேந்திர மலையைக் கவனித்தான். அதன் உச்சியில் தெரிந்த ஒரு கோயிலைக் கண்டு அதுதான் கலிங்க மன்னர்களின் குல தெய்வமான சிவகோகர்ண ஸ்வாமியின் ஆலயம் என்பதையும் அந்தப் பெயரைத்தான் ஆசிரமவாசியான ஸ்வாமியும் வைத்துக் கொண்டிருக்கிறார் என்பதையும் புரிந்து கொண்டான்.

அவன் இப்படிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில் மாலையும் முற்றலாயிற்று. ஆகவே ஆசிரமப் பெண்கள் பாறைமீது வைத்துப்போன சிறு மூட்டையை அவிழ்த்துப் பார்த்தான். அதில் நீராட ஒரு துண்டும், பிறகு உடுத்திக் கொள்ள ஒரு காவித் துணியும், ஒரு சிறு சருகில் சிறிது வாசனைப் பொடியும் இருப்பதைக் கண்டு ''ஏற்பாடு கனகச்சிதமாய் இருக்கிறது'' என்று சொல்லிக்கொண்டு தனது ஆடைகளை அவிழ்த்துவிட்டுத் துண்டை மட்டும் கட்டிக்கொண்டு அருவியில் இறங்கி உட்கார்ந்து கொண்டான். பிறகு அதிலிருந்த சிறிதே உயர்ந்த பாறையில் தலையை வைத்து மல்லாந்து படுத்தான். வம்சதாராவின் குளிர் நீர் அவன் மார்புமீது ஓடியதால் சுக ஸ்நானம் செய்தான் சிறிது நேரம், பிறகு கரைக்குச் சென்று இலையில் இருந்த வாசனைப் பொடியைத் தேய்த்துக் கொண்டு மீண்டும் பழையபடி நீரில் படுத்தான். வம்சதாரா அவனை ஆசையுடன் நீராட்டியது. அதன் நீர் வேகம் பயணத்தால் சிரமப்பட்டிருந்த அவன் அங்கங்களை உருவி அலுப்பைத் தீர்த்தன.

zeevaa

நீரில் அடித்துக்கொண்டு வந்த சில மூலிகை இலைகள் அவன் உடலைத் தடவிச் சென்றன.

இப்படி நீண்ட நேரம் நீராடிய விஜயன் எழுந்திருக்க மனமில்லாமல் எழுந்திருக்க முயன்ற சமயத்தில் அவன் மார்புமீது வாச மலர்கள் சில ஓடின. ஒரு முல்லைச் சரமும் கழுத்தை வளைத்தது. திடீரென்று பெரும் சுகந்தமும் நீரை ஆட்கொண்டது. இந்த மாறுதல்களுக்குக் காரணம் புரியாத விஜயன் கழுத்தை வளைத்த முல்லைச் சரத்தை மட்டும் கையில் எடுத்துக்கொண்டு கரையேறி, தலை துவட்டி, உடல் துடைத்துக் காவி உடை புனைந்தான். பிறகு நீராடிய துண்டைப் பிழிந்து கழுத்தில் போட்டுக் கொண்டு வம்சதாரா வளைந்தோடிய கரையை நோக்கி நடந்தான். தானிருந்த மறைவிடத்திலிருந்து (சற்றுத் தூரத்தில் இன்னொரு மறைவிடத்திலிருந்து) அருவி பாய்ந்து கொண்டிருந்தது. அந்த இடத்தைச் சுற்றிலும் வாசமலர் கொடிகளும் வளர்ந்திருந்தன. இடையே ஓடிய அருவியின் கரையில் ஆசிரமத்துப் பெண்கள் நின்றிருந்ததையும், அருவியின் நீருக்குள்ளே திரிலோகசுந்தரி மெல்லிய ஆடையணிந்து நீராடிக் கொண்டிருந்ததையும் கண்ட விஜயன் பிரமை பிடித்து நின்றான். மாலை அடியோடு மறையாத காரணத்தால் அரைகுறையாகத் தெரிந்த அவள் அழகிய உடல் அவன் உணர்ச்சிகளை அள்ளிச் சென்றது. வெள்ளை வெளேரென்ற கலிங்கத்து மெல்லிய மஸ்லின், அவள் உடல்மீது படர்ந்திருந்தாலும், படர்ந்து இரண்டாகவும் மூன்றாகவும் நீரில் மறைந்த இடங்களைத் தவிர மற்ற இடங்களை மறைக்காத காரணத்தால் அவள் கவர்ச்சி அம்சங்களில்முக்கால்வாசி தெரியவே செய்தன. விரிந்து நீரில் அலைந்த கருங்குழலை அவள் தனது கையொன்றால் அலசி எடுத்துக் கழுத்துப் புறமாக மார்புமீது போட்டுக் கொண்டதால் ஏற்கெனவே வெளேரென்று தெரிந்த மார்பகம் ஓரளவு மறைக்கப்பட்டாலும் வம்சதாராவின் நீர்வேகம் அதையும் இரண்டொரு இடங்களில் கலைத்துத் தாமரையின் அடித்தள அளவையும் அழகை மறைக்க முடியாத மஸ்லினையும் சிறிது

zeevaa

அசைத்து அவ்வப்போது அவள் தனது அழகிடங்களை மறைக்கும் அவசியத்தையும் ஏற்படுத்தியது.

அசதியை அகற்றும் வம்சதாராவின் அமுத நீர் தழுவிய தனது கலசங்களை மறைக்க அரசகுமாரி சிறிது நேரம் குப்புறவும் படுத்து நீந்தும் வகையில் நீராடினாள். குப்புறப் படுத்ததில் முன்னெழுச்சிகள் இரண்டும் மறைந்தாலும், பின்னால் அளவுடன் மஸ்லினால் மறைக்கப்பட்ட திண்ணிய எழில்கள் நீர்த் தாமரைகளைப்போல் எழுந்து கா'-சியளித்தன. அவற்றுக்கு ஆதரவு தந்த நுண்ணிய இடையை அ‹ ள் வளைத்து வளைத்து நீராடவே அந்த வளைப்பின் விளைவாகப் பலவாறு அசைந்த அவள் முதுகுப் புறமும், இடைக்குக் கீழ் காணப்பட்ட லாவண்யமும், பருவத்தால் செழித்த காலின் மேற்பகுதிகளும், தண்டைகளை அணிந்த கணுக்கால்களும், இயற்கையின் அற்புத சிருஷ்டியொன்று வம்சதாராவில் இறங்கிவிட்ட பிரமையை ஏற்படுத்தின.

இப்படி அவள் மல்லாந்தும், குப்புறவும், பக்கவாட்டிலும் துளைந்து நீராடிய பின்பு எழுந்து நிற்க முற்பட்டதும் அவளுக்கு முன்பாக காவித் திரையொன்றை கரையிலிருந்த ஆசிரமப் பெண்கள் பிடித்தார்கள். அந்தத் திரையின் மறைவில் அவள் களைந்த மஸ்லின் ஆடை அவள் காலின் அடியில் விழுந்ததும் உள்ளேயிருக்கும் மோகன ரூபம் எப்படி இருக்கும் என்பதைப் புறக்கண்ணால் பார்க்காவிட்டாலும் அகக்கண்ணால் பார்த்த விஜயன் அதற்குமேலும் அங்கு நிற்பது உசிதமல்ல என்ற காரணத்தால் வந்த வழியே திரும்பித் தனது அறைக்கு வந்து சேர்ந்தான்.

அவன் மனத்தில் ஏதேதோ எண்ணங்கள் புரண்டு கொண்டிருந்தன. தான் ஏற்கெனவே சிங்களத்தில் காதலித்த லீலாவதியைப் பற்றி நினைத்துப் பார்த்தான். அவள் அழகுக்குமேல் திரிலோக சுந்தரியின் அழகை நினைத்துப் பார்க்க முடியுமா என்பதை எண்ணிப் பார்த்த விஜயன் விடை காணாமல் தவித்தான். இவளைப் பார்த்ததும் தான் அவளை எப்படி மறக்க முடிந்தது என்பதையும்

நினைத்து, 'என் மனம் அத்தனை கேடுள்ளதா? பார்த்த பெண்களிடத்திலெல்லாம் மனத்தைக் கொடுக்கும் சபல சித்தனா நான்?' என்று தன்னைத்தானே வினவிக் கொண்டான். ராஜபுத்திர வம்சத்தைச் சேர்ந்தவரும் சிங்களத்தைச் சில காலம் ஆண்டு சோழர்களால் கொல்லப்பட்டவருமான ஜகதிபாலனின் மகளும் தற்சமயம் தஞ்சைச் சிறையில் இருப்பவளுமான அபலை லீலாவதியைக் கை விடுவது புருஷ தர்மமா எனறும் தன்னைக் கேட்டுக் கொண்டான்.

இத்தனைக்கும் லீலாவதியின் அழகும் சாதாரணமானதல்ல. ராஜ புத்ரர்களின் கம்பீர வதனமும், அழகிய விழிகளும், சற்று அதிகமாகவே பருத்த மார்பும், திண்மையும் மென்மையும் கலந்த சரீரமும், தந்தம் போன்ற கை கால்களும் படைத்த அவளைச் சிங்களமே பேரழகியென்பதைப் பறைசாற்றியிருந்தது. அவளுடன் எத்தனையோ நாட்கள் அவன் பழகியிருந்தான். அவள் பூவுடலை ஆசையுடன் அணைத்த நாட்களும் பல. அதையெல்லாம் இவளை நினைத்து மறந்து விடுவதா என்று எண்ணிய விஜயன் எந்தவித முடிவுக்கும் வர முடியாதவனாய்த் திகைத்த சமயத்தில், ஆசிரமப் பெண்கள் அவனுக்குப் புத்தாடை கொணர்ந்தார்கள். ''ஸ்வாமிகள் பூஜையை இன்னும் ஒரு நாழிகையில் ஆரம்பிப்பார்கள். மணியடித்ததும் வந்து சேருங்கள்,'' எனறு கூறிவிட்டுச் சென்றார்கள்.

விஜயன் புத்தாடைகளை அணிந்து கொண்டான். அந்த ஆடைகள் அரச உடையானதால் கச்சையில் தனது குறுவாளையும் அணிந்து கொண்டான். அவன் உடையணிந்து முடித்த சமயத்தில் ஆசிரமத்தில் பெருமணி அடிப்பதைத் தொடர்ந்து ஆசிரமத்தின் பல பகுதிகளிலிருந்தும் வீரர்களும் சீடர்களும் சீடப் பெண்களும் ஸ்வாமிகளின் பெருங் குடிசையை நோக்கி வரத் தொடங்கினார்கள். விஜயனும் தனது அறையினின்றும் புறப்பட அடுத்த அறையில் இருந்த கிழவனும் அவனுடன் சேர்ந்து கொண்டான். அறையிலிருந்து தலை நீட்டிய மூர்சமத் தான் வரவில்லை என்பதைத் தலையசைப்பினாலேயே தெரிவித்தான்.

zeevaa

ஸ்வாமிகளின் பூஜை அறை பெருங் கூடம் போலிருந்ததால் சீடர்கள், சீடப் பெண்கள் அனைவரும் தனித்தனியாக உட்கார வசதியாய் இருந்தது. ஸ்வாமி தனியாக நிர்மாணிக்கப்பட்ட பெரிய மேடைமீது தமது பூஜைப் பெட்டியின்மேல் வைக்கப்பட்ட லிங்கத்தின் அருகில் அமர்ந்திருந்தார். இரண்டு மூன்று கூடைகளில் புஷ்பங்கள் நிரம்ப வைக்கப்பட்டிருந்தன. இரு பெரும் குத்துவிளக்குகள் ஐந்து முகங்களிலும் ஏற்றப்பட்டு ஜொலித்தன. அவற்றின் ஒளியில் ஸ்வாமிகளின் திடமான திருமேனி தங்கம் போல் ஜொலித்துக் கொண்டிருந்தது. அவர் கழுத்தில் தொங்கிய நவரத்ன ஆரமும் அதன் நடுவில் தங்கத்தில் திணிக்கப்பட்டிருந்த ருத்திராட்சமும் பூஜைக்கு ஏழ்மை அவசியம் இல்லையென்பதை நிரூபித்தன.

ஸ்வாமிகள் அமர்ந்திருந்த மேடைக்கு வெகு அருகில் கலிங்க மன்னனும் திரிலோகசுந்தரியும் அமர்ந்திருந்தனர். வேறு இடமின்மையால் திரிலோகசுந்தரிக்கு சற்றுத் தள்ளி உட்கார்ந்து கொண்டான் விஜயன். அவனுக்குப் பின்னாலிருந்த கும்பலுடன் கிழவன் உட்கார, சுவாமி பூஜையைத் துவங்கினார். சுவாமி அவர்கள் கற்பூரத்தைக் கொளுத்தியவுடன் அரசன் முதல் ஆசிரமவாசிகள் அனைவரும் ருத்ரம் சொல்லத் தொடங்கினார்கள். பிறகு புருஷ சூக்தத்தின் ஒரு பகுதி சொல்லப்பட்டது. அடுத்து மௌனம் நிரம்பியது. கூடத்தில் ஸ்வாமிகள் புஷ்பங்களால் அர்ச்சனை செய்தார் சிவலிங்கத்திற்கு பூஜை எதிலும் கலந்து கொள்ளவில்லை பௌத்தனான விஜயன்.

கடைசியாக கற்பூர ஆரத்தி எடுத்த ஸ்வாமிகள் ஆரத்தித் தட்டை எடுத்துக்கொண்டு மேடையின் முகப்புக்கு வந்ததும் அனைவரும் எழுந்து நின்றனர். முதலில் கற்பூர ஜ்வாலையின் மீது கைகளை வைத்து கண்களில் ஒற்றிக் கொண்டான் மன்னன். அடுத்து திரிலோக சுந்தரி கற்பூரத்தின் மீது கைகளைக் கொண்டு போனாள். அந்தச் சமயத்தில் ஸ்வாமி, விஜயனையும் அரசகுமாரியின் அருகில் வர சைகை செய்து கற்பூரத்தைக் காட்டினார். மரியாதையை முன்னிட்டு

zeevaa

விஜயனும் தனது உள்ளங்கைகளைக் கற்பூர ஜ்வாலையை நோக்கிக் கொண்டு போனான். அந்தச் சமயத்தில் ஜ்வாலை மீதிருந்த அரசகுமாரியின் கை அவன் கையை தீண்டவே திகைத்தான் விஜயன்.

ஸ்வாமிகள் இதழ்களில் புன்முறுவல் அரும்பிற்று. மருண்டு நோக்கினாள் திரிலோகசுந்தரி. "தெய்வ சித்தம் அப்படி இருக்கிறது திரிலோகசுந்தரி." என்ற கோகர்ண ஸ்வாமி விஜயன் சிரத்தின் மீதும் கையை வைத்தார். பிறகு மேடையிலிருந்து கீழே இறங்கி மற்றவர்களுக்குக் கற்பூர ஆர்த்தியைக் காட்டு முன்பு, "விஜயா! இன்றிரவில் என் சயன அறைக்கு வா. செய்தி இருக்கிறது உனக்கு." என்று ரகசியமாகச் சொல்லி மேலே நடந்தார் சீடர் கூட்டத்துக்குள்.

அந்தச் செய்தி எத்தனை அதிர்ச்சி தரும் செய்தி என்பதை அப்பொழுது அறியவில்லை விஜயன். அறிந்த போது அவன் சித்தம் சுக்கு நூறாக வெடிக்கும் நிலைக்கு வந்தது. அந்தச் சமயத்தில் அவன் அருவியை நினைத்தான். அதில் நீராடிய அழகியையும் நினைத்தான். அவள் சுந்தர எழிலையும் நினைத்தான். இவற்றுடன் ஸ்வாமியின் செய்தியும் இணையும், அது இத்தனை விபரீதமாக இருக்கும் என்பதை அவன் அணுவளவும் நினைக்கவில்லை. அழகும் விதியும் தன்னை எங்கோ தள்ளிக் கொண்டு செல்கின்றது என்பதை மட்டும் அவன் புரிந்து கொண்டான்.

zeevaa

# 13. விஜயன் சபதம்

சிவகோகர்ண ஸ்வாமிகள் பூஜையை முடித்து, வந்திருந்தவர் அனைவருக்கும் கற்பூர ஆரத்தியைக்காட்டி விட்டு விபூதியும், குங்குமமும் அளித்துவிட்டு மீண்டும் தமது பூஜாமேடைக்கு வந்து கால்களை பத்மாசனமாகப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து, எல்லோரும் போகலாமென்பதற்கு அடையாளமாகக் கையை ஆசீர்வாத முறையில் காட்டிவிட்டுக் கண்களை மூடிக்கொண்டார். அப்புறம் ஸ்வாமிகள் யோகத்தில் ஆழ்ந்து விடுவார்கள் என்பதை அறிந்த ஆசிரமவாசிகள் சிறிதளவும் சத்தம் செய்யாமல் பூஜா மண்டபத்திலிருந்து மெள்ளக் கலைந்தார்கள். கலிங்க மன்னனும் திரிலோகசுந்தரியும்கூட மெள்ள அடிமேல் அடிவைத்து அறையி லிருந்து வெளியேறியதும், படகோட்டிக் கிழவன் ஆடாமல் அசையாமல் மேடைக்கு அருகே நின்று கொண்டிருந்த விஜயனை நோக்கிக் கிளம்புமாறு சைகை செய்தும் அவன் சிறிதும் அசையாததால் தான் மட்டும் வெளியேறினான்.

அந்த அறையில் ஸ்வாமியையும் விஜயனையும் தவிர வேறு யாருமே இல்லாத காரணத்தால் பரிபூர்ணமான மௌனம் குடிகொண்டிருந்ததன் காரணமாக விஜயன் ஸ்வாமிகளின் முகத்தையே நோக்கிக் கொண்டு நின்றான். ஸ்வாமியின் முகத்தில் புருவங்கள் மேலேறிச் சிறிது குறுகி ஒன்றையொன்று தொட்டும் விடும் நிலையில் இருந்தன. அவருடைய நல்ல திடமான பருத்த உடலின் சதைகளில் கூடச் சிறிது சலனமும் இல்லையென்றாலும் ஸ்வாமி சுவாசத்தை நன்றாக இழுத்துப் பிடித்திருந்ததால் பெரிதாக முன்பு காணப்பட்ட வயிறு முழுவதும் உள்ளடங்கிப் பள்ளமாகத் தெரிந்தது. மூச்சு அடியோடு ஸ்தம்பிக்கப் பட்டிருந்ததால், மார்புகூட

zeevaa

எழுந்து தாழாமல் சலனமின்றி நின்றிருந்தது. ஸ்வாமிகளின் இந்த யோக சித்தியையும், அதனால் அவயவங்கள் அவர் இஷ்டத்துக்குக் கட்டுப்பட்டு விட்டதையும் கண்ட பௌத்தனான விஜயன் அதை ஒருவித தேகப்பயிற்சியே என்று எண்ணினான். ஆனால் எந்தத் தேகப்பயிற்சியிலும் மூச்சை இத்தனை நீண்ட நேரம் பிடித்து நிறுத்துவது அசாத்தியமென்பதை உணர்ந்த விஜயன் ஏதோ பெரும் சக்தி ஸ்வாமியிடத்தில் இருப்பதை உணர்ந்தான். அதற்குமேல் அங்கு நிற்பது தகாது என்பதை தெரிந்து கொண்ட சிங்களத்து வீரன் அந்த அறையிலிருந்து மற்றவர்களைப் போல அடிகளை மெதுவாக வைத்து வெளியே வந்து கதவை சாத்த முயன்றான். அங்கு கதவருகில் நின்ற பணிப்பெண் ஒருத்தி கதவை மூடவேண்டாம் என்று சைகை செய்து, தானே மிக மெதுவாக ஓசை எதுவும் கேட்காத வண்ணம் கதவை மூடினாள்.

ஸ்வாமிகளின் அறையிலிருந்து வெளியே வந்த விஜயன் நேராகத் தனது அறைக்குச் சென்றானில்லை. அரண்மனைபோல் பெரிதாக இருந்த ஸ்வாமியின் குடிசைப் படிகளில் இறங்கி ஆசிரமத்தின் புறப்பகுதிகளைப் பார்வையிட நடந்தான். அவன் நடையைத் தவிர, வம்சதாரா அருவியின் சலசலத்த சப்தத்தைத் தவிர வேறு எந்தச் சப்தமும் ஆசிரமம் எதிலுமே கேட்கவில்லை. ஆங்காங்கு தென்பட்ட பல குடிசைகளின் வாயில்களில் வீரர்கள் பலரும், ஆசிரமப் பணிப் பெண்களும் தனித்தனியாக உட்கார்ந் திருந்தார்களே தவிர வாயைத் திறக்கவும் இல்லை. உடல்களை அசைக்கவும் இல்லை. குடிசைகளிலிருந்து தள்ளிச் சிறிது தூரத்தி லிருந்த புரவிக் கொட்டடியில் கூடச் சத்தம் எதுவும் காணோம். மரக்கூண்டுகளிலும், பொந்துகளிலுமிருந்த பட்சிகள் கூடக் கூவாமல் உறங்கிக் கிடந்தன போல் தோற்றமளித்தன. காற்றில் அசைந்த மரக்கிளைகள் ஏற்படுத்திய ஒலி மிக மென்மையாகவே இருந்ததால் ஆசிரம அமைதியைச் சிறிதும் குலைக்கவில்லை. கோடியிலிருந்த மாட்டுத் தொழுவத்தில் காணப்பட்ட பசுக்களும் கன்றுகளும் கூட ஸ்வாமிகளின் யோகத்தால் கட்டுப்பட்டவை போல் படுத்துக் கிடந்தன.

zeevaa

இந்தப் பெரு விசித்திரத்தைப் பார்த்த விஜயன் பிரமிப்பின் எல்லையை அடைந்தான். பெரிய ராணுவத் தலைவர்கள் சாதிக்க முடியாத கட்டுப்பாட்டை ஸ்வாமிகள் அந்த ஆசிரமத்தில் ஏற்படுத்தியிருந்ததைக் கவனித்த விஜயன், ஸ்வாமியிடம் யோக சித்தியைத் தவிர ஏதோ மந்திர சக்தியும் இருப்பதைப் புரிந்து கொண்டான். அவன் அப்படி ஆசிரமத்தைச் சுற்றிப் பார்த்து வியப்படைந்து கொண்டிருந்த சமயத்தில் ஸ்வாமிகளின் குடிசையிலிருந்த பெரிய மணி மூன்று முறை பெரிதாக ஒலிக்கவே, ஆசிரமம் திடீரென உயிர் பெற்றது. அதுவரை உட்கார்ந்திருந்த பணிமக்கள், வீரர்கள் அனைவரும் அப்பொழுதுதான் உயிர் வந்ததைப் போல் விரைவில் எழுந்து தங்கள் பணிகளைக் கவனிக்கத் தொடங்கினார்கள். வீரர்கள் புரவிக் கொட்டடிக்குச் சென்று புரவிகளின் முதுகுகளையும் கால்களையும் வருடி அவற்றுக்குத் தீனியும் வைக்கத் துவங்கினார்கள். மாட்டுத் தொழுவத்தில் பசுக்கள் எழுந்திருக்க, கன்றுக்குட்டிகளை ஊட்டவிட்ட ஆயர்களும் ஆய்ச்சியரும் மாடுகளைக் கறக்கலானார்கள். ஆசிரமச் சீடப் பெண்கள் சமையல் கட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். மரக் கூண்டுகளிலும் பொந்துகளிலுமிருந்த பறவைகள் இன்பக் கூச்சலிட்டன. இன்னொரு விசித்திரத்தையும் விஜயன் கண்டான். மகேந்திர மலை உச்சியில் காணப்பட்ட சிவகோகர்ண ஸ்வாமி ஆலயமணியும் ஆசிரம மணி ஒலித்த அதே சமயத்தில் ஒலித்தது.

ஆசிரமமெங்கும் ஏற்றப்பட்ட விளக்குகள் அதற்குத் தனிச் சோபையை அளித்தாலும் திடீரென மலைக்கோவிலில் பெரிதாக எரிந்த தீபம் எங்கும் தனது பிரகாசத்தைக் கிளப்பியது. அது நன்றாகக் கொழுந்துவிட்ட மகேந்திர மலைப் பாறையைப் பொன்னாக அடித்த சமயத்தில், தமது பெருங்குடிலிலிருந்து வெளியே வந்த ஸ்வாமிகள் அந்தத் தீபத்தை நோக்கிக் கைகளை உயர்த்திக் கூப்பி வணங்கினார். அப்பொழுது அவர் திருமேனி அந்தத் தீபஜோதியில் பெரிதும் பளபளத்ததையும், யோக சித்தியின் போது அடியோடு உள்ளே போய்விட்ட வயிறு மீண்டும் வெண்கலப் பானை போல் உருண்டு

zeevaa

திரண்டு கெட்டிப்பட்டுத் தெரிந்ததையும் கவனித்த விஜயன், ஸ்வாமியின் தேகம் அவர் இஷ்டப்படி இயங்கக் கூடியது என்பதைப் புரிந்து கொண்டான். தீபதரிசனம் முடிந்ததும் ஸ்வாமி பசுக்களின் தொழுவத்திற்குச் சென்று மாடுகளையும் கன்றுகளையும் தடவிக் கொடுத்துவிட்டு வந்தார். தொழுவத்திலிருந்து வந்து, தமது தோள் மீதும் தலை மீதும் உட்கார்ந்த பறவை இனங்களை எடுத்துத் தடவி மரங்களுக்கு செல்லும்படி பறக்கவிட்டு ஆசிரமம் திரும்பினார். திரும்பியவர் தமது பெருங்குடிலுக்குப் பக்கத்தில் நின்றிருந்த விஜயனைக் கண்ணெடுத்துப் பார்க்காமல் உள்ளே சென்றுவிட்டார்.

விஜயனும் தனது அறைக்கு வந்து அங்கு தரையில் உட்கார்ந்திருந்த கிழவனையும் மூர்சமதையும் பார்த்து, ''ஏன் இங்கு உட்கார்ந்திருக்கிறீர்கள்?'' என்று விசாரித்தான்.

''உணவு வரும் சமயம்,'' என்று கிழவன் பதில் சொன்னான்.

மூர்சமதுக்கு அந்த ஆசிரம விஷயம் ஏதும் புரியாததால் சிறிது உறுமினான். விஜயன் சமதைத் தட்டிக் கொடுத்து, ''சமத்! நாளை எப்படியும் இந்த இடத்தை விட்டு கிளம்பி சிம்மபுரம் போய்விடுவோம். அதுவரை பொறுத்திரு'' என்று சமாதானப் படுத்தி விட்டுத் தனது கட்டிலில் உட்கார்ந்து கொண்டான்.

அந்தச் சமயத்தில் ஆசிரமப் பணி மக்கள் உணவு கொண்டு வந்தார்கள். கிழவனுக்கும் சமதுக்கும் தரையில் இலைபோட்டுப் பரிமாறினார்கள். விஜயனுக்கு மட்டும் ஒரு பெரிய மரத்தட்டில் வாழை இலை போட்டு உணவைப் பரிமாறி இன்னொரு இலையால் மூடி, தனிப் பட்ட ஒரு சீடப் பெண் கொண்டுவந்து அதை அவன் கட்டிலிலேயே வைத்தாள். மீண்டும் சென்று பல பழவகை யறாக்களும் ஒரு தாமிரச் செம்பில் நீரும் கொண்டு வந்தாள். விஜயனுக்கு நல்ல பசியிருந்ததாலும் நாகரீகமாக உணவு வகைகளில் சிலவற்றையே சாப்பிட்டான். பிறகு பழங்களில் இரண்டை எடுத்து

zeevaa

உண்டு நீரும் பருகினான். கிழவன் இரண்டொரு கவளமே உண்டாலும், மூர்சமத் பசி மிகுதியால் பீமனைப் போல் உணவைப் பெரும் உருண்டைகளாக்கி உள்ளே தள்ளினான். பெரும் பழங்கள் இலையிலிருந்து மின்னல் வேகத்தில் மறைந்தன. குவளையிலிருந்த நீரை மடமடவெனக் குடித்துவிட்டு வெளியே சென்று விட்டான் சமத்.

அடுத்து அந்த அறை, பணிப் பெண்களால் வெகு விரைவில் சாப்பிட்ட சுவடு தெரியாமல் சுத்தப்படுத்தப்பட்டது. விஜயன் தட்டை எடுத்துச் செல்ல வந்த சீடப் பெண், ''இன்னும் இரண்டு நாழிகைகளில் ஸ்வாமிகள் தங்களைச் சந்திப்பார்கள்'' என்று கூறிச் சென்றாள்.

ஆசிரமத்தில் சகலமும் ராணுவக் கட்டுப்பாட்டில் நடப்பதைக் கண்ட விஜயன், ஸ்வாமிகளின் பூர்வாசிரமத்துக்கும் ராணுவத்துக்கும் நிச்சயமாகச் சம்பந்தம் இருக்கும் என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அத்துடன் பூஜை அறையில் கற்பூரத்தின் மீது தனது கையும் அரச குமாரியின் கையும் ஒன்றையொன்று தீண்டியதையும், ஸ்வாமி அரசகுமாரியைப் பார்த்து, ''தெய்வ சித்தம் அப்படியிருக்கிறது.'' என்று சொன்ன சொற்களையும் எண்ணிப் பார்த்து, ஸ்வாமிகளின் சித்தத்தில் ஏதோ எண்ணங்கள் உதயமாகி இருப்பதையும் புரிந்து கொண்டதால் ஸ்வாமியின் அழைப்பு வரும் சமயத்தை எதிர்பார்த்திருந்தான்.

கொஞ்சத்தில் அழைப்பு வரவில்லை. இரவு ஏறி எட்டு நாழிகைகளுக்குப் பிறகுதான் வந்தது. உணவு பரிமாறிய அந்தச் சீடப் பெண்ணே வந்து, ''ஸ்வாமிகள் தங்களுக்காகச் சயன அறையில் காத்திருக்கிறார்கள்'' என்று கூறிவிட்டு அவனைத் தன்னைத் தொடர்ந்து வரும்படி கையால் சைகையையும் செய்தாள்.

zeevaa

விஜயன் ஏதும் பேசாமல் அவளைத் தொடர்ந்து சென்றான் அந்தப் பெருங்குடிலின் இரண்டு கட்டுக்களை கடந்து கிழக்குப் புறத்திலுள்ள ஓர் அறை முன்பு நின்ற அந்தப்பெண், அந்த அறையின் மூடு தட்டியைத் திறந்து உள்ளே எட்டிப் பார்த்தாள். பிறகு திரும்பி விஜயனை உள்ளே செல்லும்படி கூறி, தட்டியின் ஒருபுறத்தில் நின்று வழிவிட்டாள். அவன் உள்ளே சென்றதும் தட்டியை மூடிவிட்டுக் காவலாக நின்றாள்.

ஸ்வாமிகளின் சயன அறையைக் கண்ட விஜயன் பிரமையின் உச்சக் கட்டத்தை அடைந்தான். ஓலைகளாலும் மூங்கிற்பாய் களாலும் கட்டப்பட்டிருந்த அந்த அறை மகாராஜாக்களின் சயன அறையை விடச் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்ததை விஜயன் கண்டான். அறையின் நாலா பக்கங்களிலும் தெய்வீக சித்தர்களின் உருவங்கள் நெய்யப்பட்ட காவித்திரைகள் தொங்கிக் கொண்டிருந்தன. அறையின் ஒரு மூலையிலிருந்த பெரும் கட்டிலில் பெரிய படுக்கையொன்று விரிக்கப்பட்டுத் திண்டு திவாசுகளுடன் காவித் துணியால் மூடப்பட்டிருந்தன. அந்தக் கட்டிலுக்குப் பின்னால் மகேந்திர மலையிலுள்ள பெரும் சிவலிங்கத்தின் பிரதிபிம்பம் பட்டால் நெய்யப்பட்டு அவர் படுக்கைக்கு அழகிய பின்னணியை அளித்திருந்தது. அவர் படுக்கைமீது இரண்டு பஞ்சவர்ணக் கிளிகள் உட்கார்ந்திருந்தன. அவற்றை அவர் திரும்பிப் பார்த்ததும் இரண்டும், "சிவா சிவா!" எனக் கூவின.

ஸ்வாமிகள் சதா சிவபக்தியிலும் சிவஸ்மரணையிலும் கழிப்பதை உணர்ந்து கொண்டாலும் விஜயனுக்கு அவர் எதற்காக லௌகீக விஷயங்களில் ஈடுபடுகிறாரென்பது புரியவில்லை. தவிர, தான் வருவதற்கு முன்பே ஸ்வாமியின் கட்டிலுக்கு முன்பிருந்த ஆசனங்களில் கலிங்க மன்னனும் திரிலோகசுந்தரியும் அமர்ந்திருந்ததைக் கண்டு, "இவர்களை எதற்காக ஸ்வாமி அழைத்திருக்கிறார்?" என்று தன்னைத் தானே கேட்டுக்

zeevaa

கொண்டான். அதன் காரணத்தை ஸ்வாமிகளே விளக்க முற்பட்டு, "விஜயா! இதோ அமர்ந்திருப்பவன் கலிங்க மன்னனென்று உனக்குத் தெரியும். ஆனால் அவன் பெயர் வஜ்ரஹஸ்தன் என்பது உனக்குத் தெரியாது. இவனுக்கு முன்பு கலிங்கத்தில் நான்கு அரசர்கள் இதே பெயருடன் இருந்திருக்கிறார்கள். ஆனால்இவன் பராக்கிரமம் அவர்களுக்குக் கிடையாது. சாதாரணச் சிற்றரசர்களாய் இருந்தார்கள். கலிங்கத்தின் மூன்று பகுதிகளையும் வெற்றி கொண்டு 'திருகலிங்காதிபதி' என்ற சிறப்புப் பெயரையும் பெற்றவன் இந்த *ஐந்தாவது வஜ்ர ஹஸ்தன். வஜ்ரம் போன்ற கைகளை உடையவனாததாலும் மகாவீரனாதலாலும் இந்த இயற்பெயர் இவனுக்கு காரணப் பெயராகவும் அமைந்தது. சிங்களத்துக்கு விமோசனம் இவனால் தான் ஏற்பட முடியும்." என்று சொன்ன ஸ்வாமிகள் விஜயனை ஏறிட்டு நோக்கினார்.

விஜயன் இதழ்களில் இளநகை அரும்பியது. "புரிகிறது ஸ்வாமி! இவர் அரசகுமாரியின் வசந்த மாளிகையில் என் தோளைப் பற்றினார். ஆனால் தோள் எலும்பு முறியவில்லை" என்றான். "அது மட்டுமல்ல...." என்றும் தொடர்ந்தான்.

"வேறென்ன விஜயா?" என்று கேட்டார் ஸ்வாமிகள்.

"தாங்களும் விஜய ஹஸ்தருக்கு குறைந்தவர் அல்ல. தாங்கள் என்னைத் தழுவியபோது என் எலும்புகள் ஏன் முறியவில்லை என்பது அவருக்குப் புரியவில்லை" என்று கூறினான்.

ஸ்வாமிகள் மெல்ல நகைத்தார். "விஜயா! நிஷ்டை இந்த ஊன உடலுக்கு தரும் சக்தி அது" என்று நகைப்பின் ஊடே கூறிவிட்டு, "விஜயா! நீ இப்பொழுது சிங்களத்தின் உபராஜா அல்லவென்றும்

---

* In the 11th century A.D. Vajrahastha of Kalinga Nagara assumed the title of Tri-Kalinga Adhipathi and ascended the throne. He was really the fifth king of that name: History of Orissa-By R.D. Banerji-Chapter XV-page-244.

zeevaa

தென்சிங்களத்தின் அரசனென்றும் எனக்குத் தெரியும். நீ வந்திருக்கும் காரியத்தை முடிக்கும் முன்பு வேறொரு காரியத்தையும் முடிக்க வேண்டும்'' என்றார் ஸ்வாமிகள்.

விஜயன் வினவினான். ''வேறு என்ன காரியம் ஸ்வாமி?'' என்றான்.

ஸ்வாமிகள் திரிலோகசுந்தரியை நோக்கி ''அரசகுமாரி எழுந்திரு'' என்றார்.

அரசகுமாரி எழுந்து நின்றாள். அவளை நோக்கிய விஜயன் அவள் லாவண்யத்தைக் கண்டு மயங்கினான். அவள் கண்கள் அவன் கண்களை ஒருமுறை சந்தித்துத் தாழ்ந்தன. ஆனால் விஜயன் கண்கள் அவளது ஒவ்வோர் அவயத்திலும் நிலைத்து நிலைத்து மீண்டன. ஸ்வாமிகள் அவன் நினைப்பை மாற்ற ''விஜயா! என்னைப் பார்'' என்று அழைத்தார்.

இஷ்டமில்லாமல் அவள் அழகிய தேகத்திலிருந்த தனது கண்களை ஸ்வாமிகளின் கண்களை நோக்கித் திருப்பினான் விஜயன். ''விஜயா! இதற்குள் இவளைக் கண்டு மயங்காதே. ஆயுள் முழுவதும் இவளிடம் மயங்கிக் கிடக்கும் பேறு உனக்குக் கிடைத்திருக்கிறது. இன்று பூஜையில் அது நிர்ணயமாகிவிட்டது'' என்ற ஸ்வாமிகள் சிறிது பேச்சை நிறுத்தினார்.

விஜயன் மலைத்தான். ''என்ன நிர்ணயமாகிவிட்டது ஸ்வாமி?'' என்றும் வினவினான்.

''பூஜை கற்பூர ஜ்வாலையில் அவள் கரத்தை நீ தீண்டி விட்டாய். அப்பொழுதே அவள் உன் தேவியாகி விட்டாள். இவளை மணந்து கொள்'' என்றார் ஸ்வாமி.

அதிர்ச்சியடைந்து நின்றான் விஜயன். ''திருமணமா ஸ்வாமி!'' என்று அதிர்ச்சியுடன் வினவவும் செய்தான்.

zeevaa

''ஆம்'' என்றார் ஸ்வாமிகள்.

''இப்போழுது முடியாது ஸ்வாமி'' என்றான் விஜயன்.

''அது உன் கையில் இல்லை விஜயா'' என்ற ஸ்வாமிகள், ''உன் கச்சையிலிருக்கும் முல்லைச் சரத்தை எடு,'' என்றார்.

விஜயன் அதிர்ச்சி அதிகமாயிற்று. தான் நீராடுகையில் மிதந்து வந்த முல்லைச் சரத்தை என்ன காரணத்தினாலோ எடுத்து வைத்திருந்தான் விஜயன். அதை ஸ்வாமி எப்படியறிந்தார் என்பது தெரியாவிட்டாலும் அதைக் கச்சையிலிருந்து மெள்ள எடுத்தான். அது அப்பொழுதும் விழாதிருந்ததைக் கண்டு வியந்தான். அதைக் கண்ட ஸ்வாமிகள் நகைத்தார். அரசகுமாரி அதிர்ச்சியுற்றாள். ''இந்த முல்லைச்சரம் நீ அருவியில் களைந்தது தானே சுந்தரி?'' என்று வினவினார் ஸ்வாமிகள்.

''ஆம்'' என்று அரசகுமாரி தலை குனிந்தாள்.

''வம்சதாராவும் உங்களை இணைத்துவிட்டாள்.'' என்ற ஸ்வாமிகள், ''விஜயா! அதை அவள் கையில் கொடு'' என்று உத்தரவிட்டார்.

ஏதும் பேசாமல் அதை அரசகுமாரியின் கையில் விஜயன் கொடுக்க, அதைத் தலையில் சூடிக்கொண்டாள் அரசகுமாரி.

ஸ்வாமிகள், ''விஜயா திருமணத்தை எப்பொழுது வைத்துக் கொள்ளலாம்?'' என்று வினவினார்.

''சிறிது காலம் போக வேண்டும்.'' விஜயன் சொல் திடமாய் இருந்தது.

''உடனே செய்து கொள்ள என்ன தடை?'' என்று அதுவரை மௌனமாயிருந்த வஜ்ரஹஸ்தர் கேட்டார்.

''எனது சபதம்'' என்றான் விஜயன்.

zeevaa

''என்ன சபதம் விஜயா?'' என்று கேட்டார் ஸ்வாமிகள்.

சபதத்தை விவரிக்கலானான் விஜயன். அவன் விவரணத்தால் எதற்கும் அசையாத ஸ்வாமிகளே திகைப்பும் அதிர்ச்சியும் அடைந்து உட்கார்ந்து விட்டார். விசித்திர சபதம் அது.



## 14. அவன் கட்டளை

விஜயன் தனது சபதத்தைப் பற்றி விவரிக்கத் தொடங்கு முன்பாகத் தனது ஆசனத்திலிருந்து எழுந்து நின்று கொண்டு பக்கத்து ஆசனத்தில் கைதேர்ந்த சிற்பி வடித்த சிலையென உட்கார்ந்திருந்த திரிலோகசுந்தரி மீது ஒருமுறை தனது கூர்விழிகளை ஓட்டி, பிறகு சிவகோகர்ண ஸ்வாமியின் திடமான தேகத்தையும், வஜ்ர ஹஸ்தரின் இரண்டு உருண்ட புஜங்களையும் கவனித்தான். அடுத்து அவன் ஸ்வாமிகளின் அறையின் கோடியில் இருந்த குத்துவிளக்குச் சுடரின் மீது தனது கண்களைச் செலுத்தினான். அப்படிச் செலுத்திய சில வினாடிகளுக்கெல்லாம் அவன் அழகிய கண்களில் கனலொன்று விரிந்து, அவன் எண்ணங்கள் அந்தச் சகாப்தத்திலிருந்து பின்னால் பல ஆண்டுகளுக்கு ஓடிவிட்டதைத் தெளிவுபடுத்தியது. அதற்குப் பிறகு அவன் ஸ்வாமிகளையும் பார்க்கவில்லை, திரிலோக சுந்தரியையுங்கூடக் கவனிக்கவில்லை. ஏதோ சொப்பனத்தில் பேசுவது போல் பேசினான்.

''ஸ்வாமி! திரிலிங்காதிபதி! திரிலோகசுந்தரி நீயும் கூடத்தான்! நான் சொல்வதை கவனமாகக் கேளுங்கள். என் கண்களின் முன்பு இப்பொழுது நிற்பது பெண்ணாசை மண்ணாசை, பொருளாசை எதுவுமே அல்ல. பெரும் கொலைகள், சிங்களத்துப் பெண்களுக்கு இழைக்கப்பட்ட தீமைகள் அனைத்தும் நிற்கின்றன. படையெடுத்து போர்க் களத்தில் வெற்றிகண்டு நாட்டைப் பிடிப்பது வேறு. பிடிபட்ட நாட்டின் பெண்களின் மூக்குகளையும் கை கால்களையும் வெட்டி அலங்கோலம் செய்வது வேறு. மன்னர்களைப் பிடிக்கலாம், கொல்லலாம். அவர்கள் மனைவிமார்களையும் பெண்களையும்

zeevaa



zeevaa

தூக்கிச் சென்று சிறையில் அடைப்பதும், சித்திரவதை செய்வதும் கைகால்களை வெட்டுவதும் கொலை செய்வதும் எந்தத் தர்ம சாஸ்திரமும் அனுமதிக்காது.

*இத்தனை அட்டுழியங்களையும் சோழ மன்னர்கள் எங்கள் நாட்டுக்கு இழைத்திருக்கிறார்கள். ராஜேந்திர சோழன் எங்கள் நாட்டின் வட எல்லை முழுவதையும் வெற்றி கண்டான். சிங்கள மன்னன் மகிந்தன் மனைவியையும் பெண்ணையும் கூடச்சிறை பிடித்து, சோழ நாட்டுக்குக் கொணர்ந்தான். அங்கேயே அவர்கள் மாண்டார்கள். அடுத்து ராஜாதி ராஜன், அயோத்திராமன் குலத்தில் பிறந்து சிங்களம் வந்து சிங்களத்தின் தென்கிழக்குப் பகுதியான ரோகணாவை ஆண்ட ஜகதிபாலனைக் கொன்று அவன் மனைவியையும் மகள் லீலாவதியையும், தஞ்சைச் சிறையில் அடைத்தான். அவர்கள்இன்னும் சிறையில் வாடுகிறார்கள். பாரதத்தின் ராமன் மனைவி சீதையை இலங்கை இராவணன் தூக்கிக் கொண்டுபோனதாகப் புராணம் இருக்கிறது. ஆனால் சிங்களத்து ராஜாத்திகளைப் பாரத நாட்டவர் தூக்கி வந்ததாகப் புராணமும் கிடையாது. வரலாறும் கிடையாது. ஆனால் அந்தப் புதுவரலாற்றை, புதுப் புராணத்தைச் சோழர்கள் சிருஷ்டித்து இருக்கிறார்கள். இத்தகைய அநீதிகளை, அவமானங்களை, அக்கிரமங்களை அழிக்க, சோழர்களை ஈழத்திலிருந்து விரட்டச் சபதம் செய் திருக்கிறேன் நான். ஈழம் சோழர்களிடமிருந்து விடுதலையடைந்து ஈழத்தின் பெண்மணிகள் மானத்துடன் வாழக்கூடிய சுதந்திரத்தைச் சம்பாதிக்கும் வரை நான் திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை. இந்தச் சபதத்தை எனது பதினாறாவது வயதில் ரோகணாவை நான் கைப்பற்றிய போது செய்து விட்டேன். என்னையும் சோழர்கள் முறியடிக்கலாம், கொல்லலாம். ஆனால் என் ராணியைப் பிடிக்க முடியாது. சிறை செய்ய முடியாது.

* "Cholas seem to have adopted savage methods of repression such as transportation, decapitation, and mutilation, even against the royal family of Ceylon" -'CHOLAS' -by K.A. Neelakanta Sastry-page 253

zeevaa

ஏனென்றால் சிங்களம் சுதந்திரம் பெறுமுன்பாக பலப்படும் முன்பாக நான் திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை. திருமணம் செய்து கொண்டால் தான் ராணி இருப்பாள். ராணி இருந்தால்தான் சோழர்கள் சிறை செய்ய முடியும். இப்படிப் பேசிய விஜயன் உணர்ச்சி மிகுதியால் தனது பேச்சைச் சிறிது நிறுத்தி அறையில் அங்கும் இங்கும் உலாவினான்.

இடையில் அவனை ஏதோ கேட்க வஜ்ரஹஸ்தர் சற்றே தனது தலையைத் திருப்பினார். ஏதும் பேச வேண்டாம் என்று ஸ்வாமிகள் தனது கையால் சைகை செய்யவே கலிங்க மன்னர் மீண்டும் மௌனம் சாதித்தார். இரண்டுமுறை அறையில் உலாவிய விஜயன் சட்டென்று நின்று ஸ்வாமிகளை நோக்கி, ''ஸ்வாமி! நான் சிறுவயதில் கிட்டி என்ற செல்லப் பெயரால் அழைக்கப்பட்டேன். அது வஜ்ரஹஸ்த மகாராஜாவுக்குக் கூடத் தெரியும். அவரே அந்தப் பெயரால் என்னை அழைத்தார். அந்த வயதிலேயே என்மனம் எனது நாடு பட்ட அவதியால் வெறுப்படைந்திருந்தது. உலக சுகங்களை வெறுத்தேன். ஜகதிபாலன் மகளான லீலாவதியை மணந்திருப்பேன். அவளை நான் காதலித்தேன் முதலில். ஆனால் எனது சபதம் என்னைத் தடுத்தது. நான் சபதம் செய்வதற்கும் ஜகதிபாலன் உயிரிழப்பதற்கும், அவன் மனைவியும் மகளும் சோழர் சிறை புகுவதற்கும் சமயம் சரியாய் இருந்தது. என் நாட்டுக்கு விடிமோட்சம் ஏற்பட்டால்தான் எனக்குத் திருமணம். இந்தத் திரிலோகசுந்தரியை சிங்களம் வந்த போது ஓரிருமுறை தூரத்திலிருந்து பார்த்திருக்கிறேன். அப்பொழுது லீலாவதியைவிட ஓர் அழகியைச் சந்தித்தது எனக்குப் புரிந்தது. ஆனால் இவள் கலிங்க ராஜகுமாரியென்று சொன்னார்கள். எட்டாக் கனி என்று விட்டுவிட்டேன். ஆனால் விதி இப்படி எங்களை மீண்டும் கூட்டு விக்கும் என்பதை சிங்களத்தில் நான் உணரவில்லை. இப்பொழுது இவள் கைக்கு எட்டுகிறாள். ஆனால் என் சபதம் என் கைகளைக் கட்டியிருக்கிறது...'' என்று பேசினான், பெருமூச்சு விட்டான்.

zeevaa

அதற்குமேல் விஜயன் பேசவில்லை. மௌனமே சாதித்தான். ''விஜயபாகு!'' என்ற அவனது சரித்திரப் பெயரைச் சொல்லி ஸ்வாமிகள் அழைத்த பின்புதான் விஜயன் விழித்துக் கொண்டான், ஸ்வாமிகளை ஏறெடுத்தும் நோக்கினான். ஸ்வாமிகள் அவனை அருகில் வரச் சொல்லி தனது இடையிலிருந்த பட்டுவிபூதிப் பையை எடுத்து விபூதியை அவன் நெற்றியில் இட்டார். ''ஸ்வாமி! நான் பௌத்தன்,'' என்று ஆட்சேபித்தான் விஜயன் ஆனால் விபூதியை அழிக்கவில்லை.

ஸ்வாமிகள் அவனை நோக்கி, ''விஜயபாகு! உணர்ச்சி வேகத்தில் நீ பேசிவிட்டாய். உன்னை இடையில் தடுக்க நான் விரும்பவில்லை. ஆனால் நீ சொன்ன அத்தனை அநீதிகளும் போர்க்காலங்களில் சகஜம். போர் என்று வரும்போது. நிலத்து ஆசை மேம்படும்போது மனிதன் மிருகமாகிறான். நீ சொன்ன அத்தனை அநீதிகளையும் சோழ மன்னர்கள் நேராக விளைவித்திருக்க முடியாது. வெற்றி கொண்ட படைகள் வேறு நாட்டில் நுழையும்போது தங்கள் வெறிகளைப் பலவிதங்களில் தீர்த்துக் கொள்கின்றன. அவை தர்மமில்லைதான். ஏன் காரணமில்லாத போரே தர்மமான காரியமல்ல. ஆகையால்தான் அசோகனைப் போல் எல்லா மன்னர்களும் இருந்தால் உலகம் சொர்க்கமாகும். ஆனால் அதை நாம் எதிர்பார்க்க முடியாது. பழைய விரோதங்களை மனதில் வளர்த்துக் கொண்டால் புதுப் போர்கள் ஏற்படும். புது அழிவுகள் ஏற்படும். ஆகையால் பழையதை மறந்துவிடு. உன் நாட்டின் விடுதலைக்கு ஏற்பாடு செய். அதற்குத் தான் நீ இங்கு வந்திருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். நீ தேடிவந்த மனிதன் சிம்மபுரத்தில் இருக்கிறான். அவனைப் பார்க்க ஏற்பாடு செய்கிறேன். சோழர்களிடம் இருக்கும் கப்பல் பலம் உன்னிட மில்லை. அவற்றைக் கட்டக்கூடிய ஒரே மனிதன் சிம்மபுரத்தில் இருக்கிறான் என்பதைக் கேள்விப்பட்டு வந்திருக்கிறாய். அது நியாயம். அத்துடன் இதர அரசுகளின் உதவியும் உனக்குத் தேவை.

zeevaa

திரிலோக சுந்தரியின் திருமணம் உனக்குக் கலிங்கத்தின் உதவியை அளிக்கும்'' என்று கூறினார்.

அதுவரை தலைகுனிந்து உட்கார்ந்திருந்த திரிலோக சுந்தரி சட்டென எழுந்திருந்து, ''ஸ்வாமி! அரசியலுக்காக நான் விற்கப்படுவதை விரும்பவில்லை'' என்று உஷ்ணத்துடன் கூறிவிட்டு, வெளியே செல்ல எத்தனித்தாள்.

''மகளே! சற்றுப் பொறு!'' என்று அவளை நிற்க வைத்து ஸ்வாமிகள் விஜயனைத் தமது அருகில் வரும்படி ஜாடை காட்டினார். விஜயன் வந்ததும், ''விஜயா! திருமணம் என்பதை நீயோ நானோ கலிங்கமன்னனோ நிர்ணயிப்பதில்லை. எந்த சமயத்தில் வம்சதாரா இவள் மல்லிகைச் சரத்தை உன்னிடம் அனுப்பினாளோ எந்த சமயத்தில் கற்பூர ஜ்வாலையில் அக்னிசாட்சியாக உங்கள் இருவர் கரங்களும் தீண்டினவோ, அப்பொழுதே உங்கள் திருமணம் முடிந்து விட்டது. மீதி சடங்குகள் கூடத் தேவையில்லை. அதற்குக் காரணம் திரிலோகசுந்தரிக்கே தெரியும்.'' என்று புதிர் போட்டார்.

'என்ன சொல்கிறீர்கள் ஸ்வாமி?'' என்று விஜயன் வினவினான் ஏதும் புரியாமல்.

''உன் வாள் எங்கே விஜயா?'' என்று ஸ்வாமிகள் வினவினார்.

''அரசகுமாரியிடம் இருப்பதாக மூர்சமத் சொன்னான்,'' என்றான் விஜயன்.

''அந்தக் கத்தியை வைத்துக்கொண்டு ஒரு திருட்டுத் தனம் செய்திருக்கிறாள் அரசகுமாரி,'' என்றார் ஸ்வாமிகள்.

அரசகுமாரி ஸ்வாமிகளைச் சுட்டுவிடுவது போல் பார்த்தாள். ''ஸ்வாமி!'' என்று எச்சரிக்கைக் குரலும் கொடுத்தாள்.

ஸ்வாமிகள் அதற்கு மசிந்ததாகத் தெரியவில்லை. ''விஜயா' உன் வாளை நிறுத்தி அதற்கு மாலையிட்டு விட்டாள் திரிலோகசுந்தரி.

zeevaa

க்ஷத்திரியர்கள் மீள முடியாத திருமணம் அது. ஆகவே நேற்றே உங்கள் திருமணம் முடிந்துவிட்டது. இனி நீங்கள் எப்படி நடந்து கொள்வீர்கள் என்பது உங்களைப் பொறுத்தது." என்று கூறி ஸ்வாமி தனது கட்டிலில் உட்கார்ந்தபடியே மற்றவர்களை வெளியே செல்லக் கட்டளையிட்டார். அந்தக் கட்டளைக்கு அறிகுறியாகச் சிறு மணியொன்றையும் அடிக்கவே, வெளியே காவலிருந்த வீரன் உள்ளே வந்து திரையைத் தூக்கிப் பிடித்தான். மற்றவர்கள் வெளியேற, முதலில் வஜ்ரஹஸ்தர் சென்றார். கடைசியாக அரசகுமாரியும் விஜயனும் சென்றார்கள் ஒருவரையொருவர் சினத்தால் இடித்துக்கொண்டு.

சிவகோகர்ண ஸ்வாமிகள் அறையிலிருந்து வெளியேறிய போது நடுநிசி நெருங்கிக் கொண்டிருந்ததால் ஆசிரம விளக்குகள் பலவும் அணைக்கப்பட்டிருந்தன. எங்கோ தெரிந்த ஓரிரு விளக்குகளில் ஆயுதம் தாங்கிய பல காவலர் எங்கும் நடமாடுவது மட்டும் தெரிந்தது. அதையெல்லாம் பார்த்த வண்ணம் தனது அறைக்குள் வந்த விஜயன் தனது கட்டிலில் தீர்க்காலோசனையுடன் உட்கார்ந்து கொண்டான். ஸ்வாமிகளின் பூஜை அறையில் வெளியான விசித்திர செய்தி அவன் மனத்தில் ஏதேதோ உணர்ச்சிகளை விளைவித்துக் கொண்டிருந்தது. சோழர்கள் செய்த அக்கிரமம் ஒருபுறம் தலைகாட்ட இன்னொரு புறத்தில் திரிலோக சுந்தரி தலை காட்டினாள். அவள் சுந்தர முகம் அவனை மிகப் பரிதாபத்துடன் பார்த்தது. அவள் பங்கய விழிகளில் அவனை அடைய முடியவில்லையே என்ற ஏக்கம் இருந்தது. "ஏன் என்னைக் கண்டால் உங்களுக்குப் பிடிக்க வில்லையா?" என்ற கேள்வியை அவள் கேட்பது போன்ற பிரமையை துடித்து அசைந்த அவள் பவள இதழ்கள் விளைவித்தன. அப்பொழுதுதான் தனது வாள் அவளிடமிருந்தது அவனுக்கு நினைப்புக்கு வந்தது. அதைக் காரணமாக வைத்துக் கொண்டு தனது அறையிலிருந்து கிளம்பி வெளியே வந்தவனை, அவன் அறை வாயிலில் படுத்திருந்த மூர்சமத், "எஜமான்!" என்று அழைத்தான்.

zeevaa

''ஏஜமானனுக்கு என்ன வந்துவிட்டது?'' என்று சினத்துடன் கேட்டான் விஜயன்.

''இந்த இரவில் எங்கு போகிறீர்கள்?'' என்று மூர்சமத் கேட்டான்.

''சமத்! எப்பொழுதும் போகிறவர்களை எங்கு போகிறீர்கள் என்று கேட்கக் கூடாதென்று எத்தனை தடவை சொல்லி யிருக்கிறேன்?'' என்றான் விஜயன்.

''இல்லை எஜமான். துணை வரட்டுமா என்பதற்காக கேட்டேன்'' என்றான் சமத்.

''தேவையில்லை'' என்று கூறிவிட்டு விஜயன் வேகமாக நடந்தான் ஆசிரமத் தாழ்வறையில். அங்கிருந்து பெண்கள் தங்கும் பகுதியை நோக்கிச் சென்றான். அந்தப் பகுதியின் முன்னணி யிலேயே ஆசிரமப்பெண் ஒருத்தி அவனைத் தடுத்து ''இங்கு நுழையக்கூடாது'' என்றாள்.

''ஏன்?'' சுள்ளென்று கேட்டான் விஜயன்.

''இது பெண்கள் இருக்குமிடம்'' என்றாள் அவள்.

''அங்குதான் போக வேண்டும்.''

''ஏன்?''

''அரசகுமாரியைப் பார்க்க வேண்டும்.''

''எதற்காக?''

''என் வாள் அவளிடமிருக்கிறது.''

''இங்கேயே இருங்கள். நான் வாங்கி வருகிறேன்.''

''வேண்டாம். நானே வாங்கிக்கொள்கிறேன்'' என்ற விஜயன் அரசகுமாரியின் அறையை நோக்கிச் சென்றான். அங்கிருந்த அறைகளில் ஒன்று பெரிதாயிருந்ததைக் கண்டு அதுதான்

zeevaa

அரசகுமாரியின் அறையாயிருக்க வேண்டும் என்று தீர்மானித்து அந்த அறைக் கதவைத் தட்டினான்.

''யார் அது?'' உள்ளிருந்து கேட்டது அரசகுமாரியின் குரல்.

''விஜயன்'' என்றான் மெதுவாக.

''இரவில் இந்த நேரத்தில் இங்கென்ன வேலை?'' அரசகுமாரியின் குரல் கோபத்துடன் ஒலித்தது. ஆனால் அதில் லேசாகத் தெரிந்தது ஆவல்.

''என் வாளை எடுத்துப் போக வந்தேன்'' என்றான் விஜயன்.

''இருங்கள். கொண்டு வருகிறேன்'' என்று கூறிய அரசகுமாரி சற்றுத் தாமதித்தாள். உள்ளே கேட்ட சல சலத்த சத்தத்திலிருந்து அவள் ஆடையைச் சரிசெய்து கொள்கிறாளென்று தெரிந்ததால் சிறிது சங்கடத்திற்கு உள்ளானான் விஜயன். ''அப்படியே வந்தால்தான் என்ன கெட்டுவிடும்?'' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

சில விநாடிகளில் கதவைத் திறந்த அரசகுமாரி விஜயனின் மெல்லிய சர்ப்பம் போன்ற வாளை உறையுடன் நீட்டினாள். அந்த வாளை மட்டும் பிடிக்கவில்லை விஜயன். வாட் பிடியுடன் அவள் கையையும் சேர்த்துப் பிடித்தான்.

அவள் முகத்தில் கோபம் தெரிந்தது, ''கையை ஏன் பிடித்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''உன்னை அழைத்துப்போக'' என்றான் விஜயன்.

''எங்கு?''

''அருவிக்கரைக்கு?''

''அங்கென்ன வேலை?''

''சொல்கிறேன் வா.''

zeevaa

சிறிது சிந்தித்தாள் திரிலோகசுந்தரி. பிறகு உள்ளே சென்று ஒரு சீலையை எடுத்துத் தலையிலிருந்து கால்வரை போர்த்திக்கொண்டு கிளம்பினாள். அவ்விருவரும் சென்றதைக் கண்ட பணிப்பெண் வாயைப் பிளந்தாலும் ஏதும் சொல்லாமல் சிலையென நின்றுவிட்டாள். விஜயனும் கலிங்க ராஜகுமாரியும் ஆசிரமத்தின் பின் கட்டுத் தாழ்வறை வழியே சென்று வம்சதாராவின் அருவியின் மேல் பகுதியை அடைந்தார்கள். ''இது பெண்கள் நீராடுமிடம்'' என்று மெதுவாகக் குறிப்பிட்டாள் அரசகுமாரி.

''இங்குதானே நீ நீராடினாய்?'' என்று விசாரித்தான் விஜயன்.

''ஆம்.'' ஒற்றைச் சொல்லோடு பதிலை நிறுத்திக் கொண்டாள் அரசகுமாரி.

''இங்கு தானே முல்லைச் சரத்தை அவிழ்த்தாய்?'' என்று விஜயன் கேட்டுக் கொண்டே அருவியின் கரையில் உட்கார்ந்தான். அவள் உட்காரவும் இடம் அளித்தான் தனது பக்கத்தில்.அவள் உட்கார்ந்ததும் அவள் தலையில் குடியிருந்த முல்லைச் சரத்தை எடுத்துத் தனது கையிலிருந்த வாளைக் காட்டி ''இதன் பிடியில் அதை சூட்டிவிடு'' என்றான் விஜயன்.

அவன் சொன்னபடி செய்தாள் அவள். அவன் வாளைத் தனது பக்கத்தில் நீட்டமாகப்படுக்க வைத்தான்.

''சரி. அடுத்து என்ன கட்டளை?'' என்று ஏளனத்துடன் வினவினாள் அரசகுமாரி.

அதிர்ச்சி தரத் தக்க கட்டளையை இட்டான் விஜயபாகு. ''படுத்துக்கொள்'' என்று சொன்னான்.

zeevaa

# 15. இயற்கையும் அரசியலும்

வேறெந்தப் பெண்ணாயிருந்தாலும் வெலவெலத்துப் போகும். அதிர்ச்சியைத் தரும். அந்தக் கட்டளையைக் கேட்ட வஜ்ரஹஸ்தன் மகள் மட்டும் வெலவெலக்கவுமில்லை. அணுவளவும் அதிர்ச்சியை அடையவுமில்லை. அதுவரை குனிந்திருந்த தலையை நிமிர்த்தி, தனது வேல் விழிகளைப் பக்கவாட்டில் திருப்பி, பக்கத்தில் தன்னுடன் மிக நெருங்கி உட்கார்ந்திருந்த விஜயனை நோக்கினாள். தலையை அவள் நிமிர்த்தியதால் தலைக்குழலை மறைத்திருந்த அவள் போர்வை நழுவிக் கழுத்தில் விழுந்துவிட்ட தாலும், அவள் கண்களில் அச்சம் லவலேசமுமற்ற சீரிய பார்வை இருந்ததாலும், அந்தப் பார்வையிலும் ஏதோ ஒரு கேள்விக்குறி தொக்கி நின்றதாலும், திரும்பிய கழுத்தின் வெண்மையோடு அவள் கழுத்தைச் சுற்றிக் கிடந்த முத்து மாலையின் வெண்மை போட்டி போட்டதாலும், கம்பீரமும் அழகும் கலந்து நின்ற அவள் எழிலைக் கண்டு விஜயன் பிரமிப்பும் சலனமும் அடைந்தான். தன்னைக் கண்டு அவள் சலனமடைவதற்குப் பதில் தான் சலனப்பட வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டதை நினைத்துப் பார்த்த விஜயன், ஆணும் பெண்ணும் நிலைமாறும் கால ரீதியும் மனித வாழ்க்கையில் உண்டு என்பதை அந்தச் சில விநாடிகளில் சந்தேகமறப் புரிந்து கொண்டான். தவிர இப்படித் தனது மனத்தை நிமிஷ நேரத்தில் கலக்கிவிடக்கூடிய கட்டழகியைத் தான் அங்கு அழைத்து வந்தது சரிதானா என்ற எண்ணமும் அவன் மனத்தில் எழுந்து உலாவியது. அக்கம் பக்கத்தில் உட்கார்ந்து இருந்ததால், அவள் பருத்த பின் எழில், தனது உடலுடன் உராய்ந்த காரணத்தால், உணர்ச்சிகள் அவன் இரும்பு உள்ளத்தையும் ஊடுருவிச் சென்றதன் விளைவாக, அவன்

zeevaa

அவற்றை அடக்க சிறிது சினமும் கொண்டான் மேலுக்கு. அதனால் சொன்னான் மீண்டும் ''படுத்துக்கொள்'' என்று. அதற்கும் அவள் மசியாது வம்சதாராவின் கரையில் வடித்து வைக்கப்பட்ட பளிங்குச் சிலையாக ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தாள். திருப்பிய தலையையோ அவன்மீது நிலைக்கவிட்ட பார்வையையோ அவள்சிறிதளவும் மாற்றவில்லை.

அடுத்து சிங்களத்துச்செல்வன் கலிங்கத்துச்செல்விக்கு உத்தரவு ஏதும் இடாமல் செயலில் இறங்கினான். தலையிலிருந்து கழுத்தில் இறங்கியிருந்த போர்வையை முழுவதும் அகற்றி, தனது இரு கைகளாலும் அவளது தோள்களைப்பற்றி அருவிக்கரையில் படர்ந்த புற்கள் விரித்திருந்த மரகதப்பாயில் அவளை மெதுவாகப்படுக்க வைத்தான். அப்படிப் படுத்த நிலையில், போர்வை முழுவதும் நீக்கப்பட்ட நிலையில், அவள் அழகு ஆயிரம் மடங்கு அதிகப்பட்டு விஜயனின் சலிக்காத மனத்தையும் சலிக்க வைத்தது. கூனிக்குறுகி உட்கார்ந்திருந்த நிலையில் பதுங்கிக் கிடந்த அவள் எழில்கள் பெரிதும் விடுதலையடைந்து, மலர்ந்தும் நிமிர்ந்தும் குறுகியும் விரிந்தும் பற்பலவிதமான விசித்திரங்களை விளைவித்ததால், அவளைப் பிரமை தட்டும் கண்களுடன் நோக்கினான் விஜயன்.

ஆசிரமத்தை அடுத்து எழுந்திருந்த மரகதமலைப் பாறையில் பட்டு வம்சதாராவின் நீர்மீதும் அதன் கரையில் படுத்துக்கிடந்த கட்டழகிமீதும் பிரதிபலித்த மலைக்கோயிலின் பெரும் தீபம். அந்த இருவருக்குமே தனது பொன்னொளியைப் பூசிவிட்டதால் இருவரிலும் அழகு யார் என்ற சந்தேகத்தைக் கிளப்பிவிட்டது. அதன் பொன்னொளியில் பளபளத்த வம்சதாராவின் நீரோட்டம், கரையில் கிடந்த பருவ மங்கையின் எழிலோட்டத்தின் விளைவாகச் சிறிது அழகு குறைந்தே தெரிந்தது. அருவியையும் அருவிக்கரை சுந்தரியையும் மாறிமாறிப் பார்த்த விஜயன், ''அருவி நேராக சலசலத்து ஓடுகிறதே தவிர இந்த அழகியின் உடலில் காணப்படும் நெளிவுகளும் சுழிவுகளும் அதில் இல்லையே'' என்று நினைத்தான். அந்த நினைப்போடு அதிக அழகில்லாத வம்சதாராவுக்குத் தனது

zeevaa

முதுகைக் காட்டிய வண்ணம் அவளை நோக்கித் திரும்பி உட்கார்ந்து அவள் உடலைத் தாண்டி தனது ஒரு கையைப்போட்டுத் தரையில் அதை நன்றாக ஊன்றிக் கொண்டான். தனது உடலில் பிரதி விநாடி பாய்ந்து கொண்டிருக்கும் உணர்ச்சி நடுக்கத்திலிருந்து தன்னைத் திடப்படுத்திக்கொள்ள.

அப்படி அவன் உட்கார்ந்தாலும் அவன் கை தனது உடல் மீது சிறிதளவும் படாததையும் கண்களை மட்டும் அவன் மல்லாந்து கிடந்த தனது உடல்மீது ஒட்டுவதையும் உணர்ந்த அந்த எழில் வதனத்தாள், ''எந்த ஆண் மகனும் சமயம் வரும்போது கோழைதான்'' என்ற நினைப்பால் தனது உதடுகளை லேசாக விரித்துப் புன்முறுவல் காட்டினாள். அந்தப் புன்முறுவலால் வெளிப்பட்ட இரண்டு முத்துப் பற்கள் நல்ல ஜாதிப் பவளத்தின்மீது உட்கார்ந்திருக்கும் நல்முத்துக்களையும், சற்றே வெடித்த மாதுளையின் உட்புறத்தையும், அழகில் தோற்கடித்ததை அவன் கண்டான். முதன் முதலாக வசந்த மாளிகையின் படிகளில் சிறிதும் சலனமின்றி நோக்கிய அரசகுமாரியின் விழிகள், சலனமுற்று அப்புறமும் இப்புறமும் பார்ப்பதைக் கண்ட விஜயன் ''இந்த மருண்ட பார்வையைப் பெண்மான்களிடமிருந்து இவள் கற்றாளா அல்லது இவளிடமிருந்து பெண் மான்கள் கற்றனவா'' என்று சந்தேகங்கொண்டான். அந்தச் சந்தேகத்திலும் இந்தப் பார்வைதான் அச்சமற்ற பார்வையைவிட அழகானது என்றும் சொல்லிக் கொண்டான். சந்திரன், தாமரை, நீலோத்பலம் மூன்றும் தனித்தனி அழகுடையதானாலும், அவை மூன்றையும் சேர்த்துப் பார்க்கும் ஆவலினால்தான் பிரமன் இவள் முகத்தை சிருஷ்டித்திருக்க வேண்டும் என்றும் எண்ணினான் அந்த வாலிபன். அந்த வதன மலர்களுக்குக் கீழே கழுத்துடன் போட்டி போட்ட வெண்முத்து மாலை தனது பதக்கத்தை மட்டும் அவள் ஆடைக்குள்ளே மறைத்துவிட்டாலும், அது படுத்திருக்கும் இடத்தை எண்ணிப் பார்த்த விஜயன் அதன் அதிர்ஷ்டம் மதிப்பிட முடியாதது என்று நினைத்தான். அவள் கழுத்தை சிறிது அசைத்ததால் அசைந்த அந்தப்

பதக்கம் அவள் வெண்ணிற மெல்லிய ஆடைக்குள்ளிருந்து எட்டிப் பார்த்துத் தன்னைப் பார்த்து நகைப்பதாக விஜயன் எண்ணினான். அதன் பக்கத்தில் இருபுறமும் எழுந்திருந்த இரண்டு தாமரை மொட்டுகள் அவனது திருஷ்டியால் சினப்பட்டன போல் சிறிது விம்மி நிமிர்ந்தன. அவற்றைப் பார்த்த விஜயனின் எண்ணம், ஒரே ஒருகணம் லீலாவதியின் பணைத்த பெரிய தாமரைகளையும் *தாமரைத் தண்டை உடைத்து இழுத்தால் வரும் மிக நுண்ணிய நூல்கூட அவற்றின் இடைவெளியில் நுழைய முடியாத தன்மையையும் நாடிச் சென்றது. ''அதுவும் பிரமிக்கத்தக்க அழகுதான். ஆனால் இதுவும் மனத்தை ஈர்க்கிறது. அசையவிட வில்லை. பிரமன் ஏன் இப்படிப் பலவித அழகுகளை விசித்திர விசித்திரமாகப் படைக்கிறான்?'' என்றும் தன்னைக் கேட்டுக் கொண்டான்.

கேட்டுக் கொண்டானே தவிர அவன் மனநிலை கேள்விகளை விஸ்தரிக்கும் நிலையில் இல்லை. மல்லாந்து கிடந்த அந்த மார்பின் லாவண்யத்திலிருந்து விடுபட, அவள் உடலைத்தாண்டி மண்ணில் ஊன்றியிருந்த கையை எடுத்து அவள் தொடைமீது வைத்தான். அவளுடைய இடைக்குக் கீழே ஆரம்பத்தில் பருத்து, போகப்போக அளவோடு குறைந்து நீண்டுவிட்ட தொடைகளைக் கவனித்த விஜயன் உணர்ச்சி வெள்ளத்தில் திண்டாடினான். **''அவள் தொடைகளை யானைத் துதிக்கைக்கு ஒப்பிடலாமென்றால் யானைத் துதிக்கைகளின் தோல் கடினம். உவமை சரியாகாது. சிறந்த வாழைத் தண்டுகளுக்கு ஒப்பிடலாமென்றால் அதுவும் சரியாகாது. வாழை மரத்தண்டு எப்பொழுதும் குளிர்ச்சியாயிருக்கும். ஆனால் இவை உஷ்ணமாயிருப்பதால் அந்த உவமையும் சரியில்லை. இவை உவமைக்குப் புறம்பானவை'' என்று நினைத்தான். அப்படி

---

* *காளிதாஸன் ''குமார ஸம்பவம்'' முதல் ஸர்க்கம் பார்வதியைப் பற்றிய வர்ணனை. சுலோகம் 40.*

** *காளிதாஸன் ''குமார ஸம்பவம்'' முதல் ஸர்க்கம். பார்வதியைப் பற்றிய வர்ணனை. சுலோகம் 36.*

zeevaa

நினைத்தபோது சிறந்த வாழை என்பதற்கு விசாலமானது என்று பொருளும் உண்டு என்பதை எண்ணி, இணைந்த அவள் தொடைகளின் பரிமாணத்தையும், அவை இணைந்த இடத்தில் அவள் மெல்லிய சேலை நுழைந்து ஊகத்துக்கு இடமளித்த விந்தையையும் நினைத்து, காமத்தை காமவிகாரம் என்று சொல்வதில் எவ்வளவு பொருளிருக்கிறது என்பதையும் எண்ணினான். ஆகவே அவள் தொடையிலிருந்த கையை அகற்றி அவள் முழங்கால்மீது வைத்து, சற்று இறுக்கியே பிடித்தான்.

அப்படிப் பிடித்ததால் அவள் முழங்கால் சிறிது வலித்ததாலும் அந்த வலியும் தனக்குத் தேவையாயிருந்ததை எண்ணித் தனக்குள் வியந்து கொண்டாள் திரிலோகசுந்தரி. அவன் கை முதலில் காலின் மேற்புறத்தில் சாதாரணமாக ஊன்றிய சமயத்தில் ஏற்படாத உணர்ச்சி வேகம், முழங்கால் கன்றிச் சிவக்க, வலிக்க பிடித்த போது ஏற் பட்டதை நினைத்துக் கலிங்கத்துப் பேரழகி வலிக்கும் காமத்துக்கும் பெரும் சம்பந்தம் இருக்க வேண்டுமென்று நினைத்தாள். அவன் தன்னை அணு அணுவாக ஆராய்ந்த போதும், படக்கூடாத இடங் களில் அவன் கண்கள் பட்டபோதும் ஏற்பட்ட நெகிழ்ச்சியைவிட முழங்காலின் வலி அதிக மன நெகிழ்ச்சியை ஏற்படுத்தி விட்டதை நினைத்த கலிங்க ராஜகுமாரி, 'இவர் ஏன் இன்னும் தாமதிக்கிறார்' என்ற விகார எண்ணத்தையும் மனத்துள் எழுப்பிக் கொண்டு, 'சே! இது ஒரு பெண் நினைக்கக்கூடிய நினைப்பா?' என்று தன்னைக் கடிந்தும் கொண்டாள்.

அந்தச் சமயத்தில் விஜயன் என்ன காரணத்தாலோ அவள் பக்கத்தில் கிடந்த தனது வாளை எடுத்து அதன் பிடியிலிருந்த முல்லைச்சரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, ''சுந்தரி! சற்றுத் திரும்பு'' என்றான்.

அவள் பேசும் நிலையில் இல்லாததால் சற்றுத் திரும்பினாள். அவள் தலையைத் தனது ஒரு கையால் நன்றாகவே திருப்பிய விஜயன் அவள் குழலில் மீண்டும் முல்லைச் சரத்தைச் சூட்டினான்.

zeevaa

அவனுக்குச் சரியாகச் சூட்டத் தெரியாததால் லேசாக முடியப் பட்டிருந்த அவள் குழல் அவிழ்ந்து அதன் நடுவில் தொங்கியது முல்லைச்சரம். அதை முகர்ந்து பார்க்க அவள்மீது சாய்ந்த விஜயன் ''சுந்தரி! முல்லைச்சரம் உன் குழலில் தொங்குகிறது. ஆனால்...'' என்று சொற்களை முடிக்காமல் விட்டான்.

அவள் ''உம்?'' என்று உங்காரத்திலேயே ஒரு கேள்வியை எழுப்பினாள், அவன் தேக ஸ்பரிசம் அவளைத் திக்குமுக்காடச் செய்து கொண்டிருந்ததால்.

''சுந்தரி!''

''உம்.''

''நான்...''

''உம்.''

''முல்லைச்சரத்தைப்போல் இல்லை.''

''ஊம்.''

''அது குழலில் தொங்குகிறது. நான் உன் அழகு முழுவதிலுமே ஈடுபட்டுத் தொங்குகிறேன்...''

மேற்கொண்டு இருவரும் பேசவில்லை. அவன் கைகள் இரண்டும் அவள் பூவுடலைச்சுற்றின. முல்லையை முகர்ந்த முகம் அவள் முகத்தைத் திருப்பி முகத்தை முகர்ந்தது. இதழ்கள் இதழ்களை நோக்கி இறங்கலாயின. பக்கத்திலிருந்த வம்சதாரா, 'என்ன இருந்தாலும் நீ என்னைப்போல் ஒரு பெண்தானே?' என்று சலசலத்துச் சிரித்தது. மகேந்திர மலையின் சுகமான காற்று காட்டுமரம் எதிலிருந்தோ ஒரு சுகந்தத்தைக் கிளப்பியது. நேரம் ஏறிவிட்டதால் மலைக்கோவில் விளக்கும் அணைக்கப்பட்டு இருளும் இயற்கையும் அந்த இருவரையும் சூழ்ந்து கொண்டன. இயற்கையின் ஆட்சி அவன் அரசியலை மறக்க அடித்தது. அவன் சபதத்தை, அரசியலை, தேடி வந்த பணியை, அவன் மார்பில்

zeevaa

புதைந்து கடினப்பட்டுச் சுற்று குழையவும் முற்பட்ட எழில்கள் உடைத்தெறிந்து கொண்டிருந்தன. குமார ஸம்பவத்தின் பூர்வ பாகம் ஆட்சி செய்து கொண்டிருந்தது. இரண்டு காவியங்களுக்குள் ஒரு வித்தியாசம். அங்கு மாறன் எரிந்தான். இங்கு இருவரையும் அவன் எரித்துக்கொண்டிருந்தான்.



# 16. திருமணப் பூர்த்தி

நடுநிசி ஆட்சி செய்யத் தொடங்கி நாலாபக்கங்களிலும் இருளைக் க்வித்து மாறன் ஆட்சிக்கு இடங்கொடுத்துவிட்ட அந்தச் சாமத்தில், கலிங்கத்துக் கட்டழகியின் கனி இதழ்களை அவன் கடின இதழ்கள் கவ்வ, அவன் கைகள் வலிய அவள் பூவுடலைச்சுற்றி நெருக்க, உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்து இருவரும் சுயநிலை இழந்துவிட்ட சமயத்தில், அவள் கைகளும் அவன் முதுகைச் சுற்றித் தவழத் தொடங்கியதன்றி அவள் பெருமூச்சும் விட்டதால், விஜயன் கைகளிரண்டும் என்ன காரணத்தினாலோ தங்கள் முரட்டுப் பிடியை விட்டு லோசாகத் தளர்ந்தன. அப்படித் தளர்ந்த கைகளில் வலது கை அவள் பருவ மலர்க்காலின் மேல்புறத்தில் இலேசாகப் பதிந்தது. அப்படிப் பதிந்த கை, மலர்போல் வழவழத்த மென்மையான அந்தக் காலின் மேற்பகுதி உணர்ச்சிகளின் கொந்தளிப்பால் கெட்டிப்பட்டு விட்டதை உணர்ந்து அந்தப் பகுதியை இறுகப் பிடித்ததால், அவள் உடல் முழுவதுமே கெட்டிப்பட்டு விட்டதையும், நாண் இழுக்கப் பட்ட வில்லைப்போல் வளைந்து தன்மீது இதர பாணங்களைத் தொடுக்க முற்பட்டுவிட்டதையும் உணர்ந்த விஜயன், அவள் இதழ்களிலிருந்து தனது இதழ்களை மீட்க முயன்றான். அவள் முதுகில் தவழ்ந்து அவன் உடல் முழுவதையுமே தாங்கிக் கொண்டிருந்த அவன் இடது கை, படுத்துக்கிடந்த அவளை லேசாகத் தூக்கவும் முற்பட்டது.

வம்சதாராவின் கரை விரித்த மரகதப் பாயில் மல்லாந்து கிடந்த அவள் உடலை அவன் தூக்கிவிட்டதன் காரணமாக அவள்

zeevaa

உன்மத்தம் சிறிதும் குறையவில்லை. தனது இதழ்களிலிருந்து மீள முயன்ற உதடுகளை அவள் முத்துப்பற்கள் இரண்டு சிறைப்படுத்திக் கொண்டன. அவன் முதுகில் ஏற்கனவே தவழ்ந்த கைகளுடன் அவளும் அவன் மீது லேசாகச் சாய்ந்தாள். அவள் லேசாகச் சாய்ந்த நிலை அவள் வலிய அணைத்த நிலையைவிட அதிக உணர்ச்சி களை அவன் உடலில் சுழலவிட்டாலும், அவன் அவற்றிடமிருந்து தப்பிக்கொள்ளவே முயன்றான். அவள் உதடுகளிலிருந்து தனது உதடுகளை மீட்டுக் கொண்ட சிங்களத்து வாலிபன், அவளைச் சற்றே திருப்பி உட்கார்ந்த நிலையில் தன்மீது மெதுவாகச் சாத்திக் கொண்டான். பிறகு தன்மீது அவிழ்ந்து தொங்கிய அவள் அடர்ந்த கூந்தலை மெள்ள விலக்கி அவள் மிருதுவான கழுத்தில் தனது வலிய உதடுகளைப் புதைத்தான். இருப்பினும் அவிழ்ந்த கூந்தலின் நறுமணம் அவனைத் திக்கு முக்காடச் செய்தது. அவள் கழுத்தின் பின்புறத்தில் அழுந்திய உதடுகளை முன்பக்கத்துக்குக் கொண்டு போக முயன்று அவளைத் தன்மீது நன்றாகவே சாய்த்துக் கொண்டு, அவள் தலையைத் தனது தோள்மீது படுக்க விட்டு முன்புறம் நோக்கினான். அவள் அழகு அவனை விடுவதாயில்லை.

அவன் இறுக அணைத்த சமயத்தில் நழுவிவிட்ட சேலையால் அவள் கஞ்சுகமும் இடைவெளி கொடுத்து விடவே கழுத்துக்குக் கீழே தெரிந்த இரண்டு நிமிர்ந்த அழகுகள் அவன் கண்களில் இருமலர் கணைகளெனப் பாய்ந்தன. சேலை நழுவியதன்றி, இடை உடையிலும் சிறிது இடைவெளியிருந்ததால் வெளேரென அவள் ஆலிலை வயிறும் சிறுத்த இடையின் ஒருபுறமும் தெரிந்ததாலும், இடைக்குக் கீழே அரை விளிம்பாக எழுந்த பின் புற அழகின் திண்மையும் புடைப்பும் கண்களுக்குப் பட்டதாலும் அவன் உள்ளம் மீண்டும் எரிமலையாகியது. அவள் முதுகு அவன்மீது சாய்ந்திருந்ததால் அவள் உட்கார்ந்த பெரும் எழிலில் வலதுபுறம் அவன் வலது புறக்காலின்மீது படிந்திருந்ததால், அதுவே பெரிய

zeevaa

விசிறியாக மாறி எரிமலையை வெடிக்கும் நிலைக்குக் கொணர்ந்தது.

விஜயனைத் தவிர வேறெந்த ஆண் மகனாயிருந்தாலும் நிலை தவறி வீழ்ந்துவிடக்கூடிய அந்த நிலையிலும் அவன் தன்னைச் சிறிது திடப்படுத்திக் கொண்டான். உணர்ச்சிகளை உடைப்பதற்காக உரையாடலில் இறங்க முற்பட்டு அவள் கழுத்திலிருந்து தனது உதடுகளை விடுவித்து, ''சுந்தரி!'' என்று மெதுவாக அழைத்தான்.

அவள் அதற்குப் பதில் சொல்லுவதற்குப் பதிலாக பின்னா லிருந்த அவன் கையொன்றை எடுத்துத் தோள் வழியாகத் தன்மீது முன்பக்கத்தில் இழுத்து தனது கையொன்றை அந்தக் கையுடன் இணைத்தாள். அவள் விரல்கள் அவன் விரல்களுடன் இணைந்து நெறித்தன. அவள் விரல்களின் விஷமத்துக்கு இடங்கொடுத்த விஜயன் மீண்டும் அவள் காதுக்கருகில் தனது வலிய அதரங்களைக் கொண்டு சென்று, ''சுந்தரி!'' என மீண்டும் அழைத்தான்.

இம்முறை அவள் பதில் சொன்னாள். ''என்ன?'' என்று கடுமையாகக் கேட்டாள்.

அவள் குரலிலிருந்த கடுமை வேட்கையின் விளைவு என்பதை அவன் உணர்ந்திருந்ததால், ''ஏன் இத்தனை கோபம் உனக்கு?'' என்று மெதுவாகக் கேட்டான்.

''கோபமில்லை எனக்கு,'' என்ற அவள் சொற்களில் கோபம் அதிகமாயிருந்தது.

அவன் மெதுவாக நகைத்து, ''கோபம் இல்லையானானால் ஏமாற்றமா?'' என்று வினவினான்.

பெண்ணின் குணத்தை மேற்கொண்டும் காட்ட முயன்று உடலையே அவனை நோக்கித் திருப்பி அவன் கண்களுடன் தனது கண்களைக் கலந்தாள். காந்தங்கள் அவன் கண்களைக் கவர்ந்து

zeevaa

நின்றதால் சிறிது தடுமாறிய விஜயன், "காலம் இன்னும் வரவில்லை சுந்தரி," என்றான் அவள் தோள்கள் இரண்டிலும் தனது கையைப் போட்டு.

இத்தகைய உரையாடலாலும் அவன் சமீபம் சிறிது விலகிவிட்டதாலும் அவள் பெண்மையின் பிடிவாதம் நன்றாகத் துளிர்விடவே அவள் துணிவுடன் கேட்டாள். "எதற்கு?" என்று.

"திருமணப் பூர்த்திக்கு," என்ற அந்த வாலிபன், "நான் சொல்வது புரியவில்லையா சுந்தரி?" என்றும் வினவினான்.

இம்முறை அவளே நகைத்தாள் லேசாக. அந்த நகைப்பு இன்பமானதா. வம்சதாராவின் சலசலத்த நகைப்பு இன்பமானதா என்பதை விஜயனால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவன் அதைத் தீர்மானிக்கும் முன்பாக அவளே வினவினாள், "சிங்களத்தில் அரை குறை திருமணம் வழக்கமோ?" என்று. அந்தக் கேள்வியிலும், நகைப்பும் ஏளனமும் கலந்து ஒலித்தன.

"நீ சொல்வது புரியவில்லை," என்று புரிந்தாலும் புரியாதது போல் கேட்டான் விஜயன்.

"நமக்குத் திருமணமாகி விட்டது. இதை ஸ்வாமி சொல்லவில்லையா?" என்று அவள் வினவினாள் துணிவுடன் அவனை நோக்கி.

"ஆம்..." சற்று சங்கடத்துடன் சொன்னான் விஜயன்.

"நான் உங்கள் வாளுக்கு மாலையிட்டதைச் சொன்னார்..." அவள் குரலும் குழைந்தது.

"ஆம்!"

"பிறகு...."

"பிறகு?"

zeevaa

''நமது கைகள் கற்பூர தீபத்தின் அக்னி ஜ்வாலையிலும் இணைந்தன.

''ஆம்!''

''உங்களுக்கு அது இஷ்டமில்லாதிருந்தால், இரண்டு நிகழ்ச்சி களும் திருமணப் பூர்த்தியாகாது என்ற எண்ண மிருந்தால்...'' சொற்களை அவள் முடிக்கவில்லை. அவனை நன்றாக ஏறெடுத்து நோக்கினாள்.

அவள் கண்களை அவனால் சந்திக்க முடியவில்லை. பேசும் சக்தியிழந்து நின்றான். அவள் சொன்ன அனைத்தும் உண்மை யென்பதை அவன் உணர்ந்திருந்தான். சத்தியத்துக்கு முன்பாக அவன் பேசும் திறனை அறவே இழந்து ஒரு 'உம்' மட்டும் கொட்டினான்.

''நமக்கு நடந்தது திருமணமில்லை என்ற எண்ணமிருந்தால், உங்களுக்குக் கண்ணியமும் இருந்தால்...'' என்ற அவள் சினத்தினால் ஏற்பட்ட உணர்ச்சிப் பெருக்கால் விம்மினாள். சட்டென்று எழுந்திருக்கவும் செய்தாள்.

விஜயனும் அவளுடன் எழுந்தான். அவள் பழைய அரசகுமாரியானாள். வசந்த மாளிகைப் படியில் நின்ற போதிருந்த அதிகாரம் அவள் தோரணையில் தெரிந்தது. கண்கள் சலனமற்று அவனை நோக்கின. ''சிங்களத்தின் விமோசனத்தை எண்ணத்தில் உடையவர் என்னை இங்கு அழைத்து வந்திருக்கக் கூடாது. என்னை... என்னை...'' 'படுக்கச் சொல்லியிருக்கக் கூடாது,' என்று சொல்ல முயன்ற அவள் நாவை, கற்புடைய மகளிரின் உடலில் ஓடும் நாணக் கயிறுகள் கட்டின.

மேற்கொண்டு அவள் ஏதும் பேசாமல் ஆசிரமப் பெருங்குடிலை நோக்கி நடக்க முற்பட்டாள். நழுவியிருந்த மேலாடையை எடுத்துத்

zeevaa

தோளில் போட்டுப் போர்த்திக் கொண்டாள். இடையில் நழுவியிருந்த சேலைப் பகுதியை நடக்க முற்பட்டபோதே இறுக்கி முடிய முற்பட்டாள். அதற்குள் தாவி அவளைப் பிடித்த விஜயன் அவள் முன்பு மண்டியிட்டு இடைச்சேலை முடிப்பைத் தானே இறுக்கி முடிந்து விட்டான். அவள் கால்களிரண்டையும் சுற்றிக் கைகளைச் செலுத்திப் பற்றி, தனது தலையை அவள் வயிற்றுக்குச் சிறிது கீழே புதைத்தான். ''இப்படி நாம் பிரியக் கூடாது சுந்தரி,'' என்று முணு முணுக்கவும் செய்தான்.

தனது காலைப் பற்றி நின்ற அந்த மகாவீரன் நிலையைக் கண்ட திரிலோகசுந்தரியின் நயனங்களில் நீர்த்துளிகள் பனித்தன. அவன் தலையின் முரட்டுக் குழல்களைத் தனது கையினால் சிலுப்பினாள். கலிங்கத்து அரசகுமாரி. ''சரி சரி! எழுந்திருங்கள்,'' என்று கூறினாள்.

அப்படிப் பேசியபோது அவள் குரலில் அனுதாபம் பெரிதும் தெரிந்ததால் தனது தலையை நிமிர்த்தி அவள் கண்களை நோக்கினான் விஜயன். அவள் கரிய பெரு விழிகளில் இரண்டு நீர்த்துளிகள் தேங்கி நின்றன. அதைக் கண்ட அவன் மனம் தடுமாறியதால் சரேலென எழுந்து அந்த நீர்த்துளிகளைத் தனது உதடுகளால் துடைத்தான்.

அவள் இதழ்கள் புன்முறுவல் கொண்டன. ''வீரரே! இன்னும் திருமணம் பூர்த்தியாகவில்லை. பூர்த்தியானதும் சந்திப்போம்,'' என்று கூறிவிட்டு நடக்கத் தொடங்கினாள்.

அவனும் அவள் இடையைப் பற்றிய வண்ணம் அவள் பக்கத்தில் நடந்தான். அவள் இடைக்குக் கீழிருந்த பணைத்த பேரெழில் ஒன்று அவன் நடந்தபோது அவன் உடலின் ஒரு பகுதியில் பட்டுக்கொண்டே வந்ததால் அவன் ஏதோ சொப்பனத்தில் நடப்பவன்போல் நடந்தான். 'சரேலென்று இவளைத் திருப்பி அடியோடு தூக்கிக் கொண்டு மீண்டும் அருவிக் கரைக்குச் சென்று விட்டாலென்ன?' என்றும் நினைத்தான்.

zeevaa

அவன் நினைப்பை அவள் உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். சட்டென்று திரும்பி, ''ஆமாம், உங்கள் வாளெங்கே?'' என்று வினவினாள்.

அப்பொழுதுதான் அவன் வாளை அருவிக்கரையில் வைத்துவிட்டது நினைப்புக்கு வந்தது. ''இங்கேயே இரு. இதோ வந்து விடுகிறேன்,'' என்று ஏதோ கொள்ளை போகிறதுபோல் அருவிக்கரையை நோக்கி ஓடினான்.

அங்கிருந்த வாளைக் கையிலெடுத்துக் கொண்டு கச்சையில் கட்டிக்கொள்ளக்கூட அவகாசம் செலவழிக்காமல் ஓடி வந்தான். அவன் அத்தனை வேகமாக வந்தும் அந்த இடத்தில் கலிங்கத்து அரசகுமாரி இல்லை. ஆசிரமக் குடிலுக்கருகில் அவள் காற்சிலம்புகளின் இன்ப ஒலி கிளம்பி சலங்கை கட்டிய கஞ்சீராவின் சப்தம்போல் காற்றில் மிதந்து வந்தது. எப்படியும் அவளைப் பிடித்து விடத் தீர்மானித்து வேகமாக நடந்தான், அவன் குடிலை நோக்கி.

குடிலின் பின்புற வாயிலிலும் அவள் இல்லை. அவளுக்குப் பதில் பணிப்பெண்ணொருத்தி நின்றிருந்தாள். உள்ளே நுழைய முயன்ற அவனைத் தடுத்து, ''இது ஆசிரமத்தில் பெண்கள் தங்கும் பகுதி. தாங்கள் வாயில் வழியாகவே வந்து விடுங்கள். குடிலைச் சுற்றிச் சென்றால் வாயிற்புறம் வந்துவிடும்,'' என்று கூறினாள். அவன் உள்ளே நுழையாதிருக்க தனது இரு கைகளையும் வாயிற்படிக்குக் குறுக்கே வைத்துக் கொண்டாள்.

அவளைச் சினத்துடன் பார்த்த விஜயன் வேறு வழியின்றிக் குடிலைச் சுற்றி முன்புறம் வந்தாலும் உள்ளே செல்ல மன மின்றி ஆசிரமத்தின் வெளிப்பகுதிகளைச் சுற்றி வந்தான். எங்கும் நிசப்தம் இருந்தாலும் கூடியவரையில் காவல் வீரர்கள் ஆங்காங்கு மௌனமாகக் காவல் புரிந்து கொண்டிருந்தனர். அவர்கள் காவலைக் கவனித்துக் கொண்டே வெளிப்புறப் பெருங்கதவண்டை சென்ற

zeevaa

விஜயன் இரு காவலரால் சட்டென்று தடுக்கப்பட்டான். "யாரும் வெளியே செல்ல அனுமதியில்லை." என்று ஒருவன் விஜயனை நோக்கிக் கூறவும் செய்தான்.

அந்தச் சமயத்தில் தூரத்தே புரவியொன்று வேகமாக வரும் குளம் பொலிகள் கேட்கவே, நின்ற இடத்திலேயே விஜயன் நின்றான். அந்தப் புரவி வாயிற் கதவுகளை அணுகியதும் வாயிற்கதவுகள் திறக்கப்பட்டன. புரவி மீதமர்ந்து வந்த ஒரு வாலிபனைக் காவலர் வணங்கவும் செயதனர். அவன் யாரென்பதை அறியாத விஜயன் நட்ட நடுவிலேயே நின்றிருந்தான். புரவிமீது வந்த வாலிபன், "டேய்! வழியை விட்டு நில்," என்று அதிகாரத் தோரணையில் கூறினான்.

விஜயன் நகரவில்லை. நின்ற நிலையில் அந்த வாலிபனை ஏறெடுத்து நோக்கினான் வியப்புடன். "நீ யார்?" என்று வினவவும் செய்தான்.

"யாராயிருந்தால் உனக்கென்ன? வழியை விடு," என்று மீண்டும் கூறினான் அந்த வாலிபன் அதிகாரத்துடன்.

அதற்கும் மசியாமல் விஜயன் நிற்கவே அவன் மீது புரவி மோதும் படி புரவியைச் செலுத்தினான் புதிதாக வந்தவன். புரவி அருகில் வந்ததும் நடந்தது ஒரு விசித்திரம். புரவியின் கழுத்தை இரு கைகளாலும் பிடித்துச் சற்றே திருகிய விஜயன் சட்டென்று ஒரு திருப்புத் திருப்ப புரவி கீழே சாய முற்பட்டது. அதன் மேலிருந்த வாலிபன் சட்டென்று கீழே குதித்துத் தனது வாளை உருவி ஓங்கி விஜயன் தலையை நோக்கி இறக்கினான்.

ஆனால் வாள் இறங்கவில்லை. தூரத்திலிருந்து "போதும் நிறுத்து." என்று ஸ்வாமியின் குரல் அந்த வாலிபனின் கையைத் தேக்கியது. அவ்விருவரையும் நோக்கி வந்த ஸ்வாமிகள் "நாளை அந்தச் சண்டை நடக்கட்டும். இன்று இருவரும் இளைப்பாறுங்கள்."

zeevaa

என்று உத்தரவிட்டுத் திரும்பியவர், மீண்டும் திரும்பி. விஜயனை நோக்கி வந்தவன் யாரென்பதைத் தெரிவித்தார்.

விஜயன் சிலலையென நின்றான். இப்படி ஒரு சந்திப்பு ஏற்படுமென்பதை அவன் சொப்பனத்திலும் நினைக்க வில்லை. 'திருமணப் பூர்த்தி இப்பொழுதில்லை,' என்று மட்டும் அவன் உள்ளம் சொல்லிக் கொண்டது.



zeevaa

## 17. வாளும் கலையாகும்

திரிலோகசுந்தரியின் பிரிவால், திரும்பத் திரும்ப மனதில் சுழன்ற அவள் லாவண்யப் பகுதிகள் கிளப்பிய உணர்ச்சிகளின் எழுச்சியால், திரும்பவும் ஆசிரமப் பெருங்குடிலுக்குச் சென்று தனது அறையில் படுத்துக் கண்களை மூடும் திறன் இல்லாத காரணத்தால், ஆசிரமத்தைச் சுற்றித் திரிந்த விஜயன், தன்னை வெளியே செல்ல அனுமதிக்காத ஆசிரமப் பெரும் நுழைவாயில் காவலர் வேறொரு வாலிபனை உள்ளே அனுமதித்ததால் சிறிதே சினமடைந்திருந்தா னென்றால், உள்ளே வந்த வாலிபன் தன்னை வெட்ட வாளைத் தூக்கியதும் ஸ்வாமிகளின் ஆக்ஞையால் வாளைத் தேக்கியதையும் கண்டதால் பெரும் வியப்புக்கும் உள்ளானான். ஆனால் ஸ்வாமிகள், "இந்தச் சண்டை நாளை நடக்கட்டும்," என்று சர்வ சாதாரணமாகக் கூறிவிட்டுச் செல்ல முயன்றதும், சில அடிகள் தமது குடிலை நோக்கி நடந்தவர் திரும்பி வந்து, வந்த வாலிபன் யாரென்பதைத் தெரிவித்ததும், சொல்ல வொண்ணா உணர்ச்சிகளை அவன் உள்ளத்தில் எழுப்பவே செய்தன.

மூன்றாவது ஜாமம் உட்புகுந்து பாதி ஓடியும்விட்ட சமயத்தில் சிவகோகர்ண ஸ்வாமிகள் விஜயனையும் வெளியேயிருந்து வந்த வாலிபனையும் நோக்கி, "நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் புரிந்துகொள்வது நல்லது." என்று பொதுவாகக் கூறிவிட்டு விஜயனை மட்டும் பார்த்து, "இவன் அபயன். சோழ சாம்ராஜ்யாதி பதி ராஜேந்திரன் பெயரை உடையவன். இரண்டாவது ராஜேந்திரன் எனவும்அழைக்கப்படுகிறான். தற்சமயம் வேங்கி நாட்டு இளவரசன். உன்னைப் போலவே எதற்கும் துணிந்த மகாவீரன்,"

zeevaa




zeevaa

என்று சொல்லிவிட்டு மீண்டும் திரும்பித் தமது குடிலை நோக்கி வேகமாக நடந்து விட்டார்.

அவர் சென்றதும் இரண்டு வாலிபர்களும் ஒருவரை ஒருவர் அளவெடுக்க முயன்றனர். சோழப் பேரரசரின் பேரன் கிட்டத்தட்ட தனது வயதே உள்ளவனென்பதைப் புரிந்து கொண்டதாலும், அவன் கொடிய திடமான உடலும் தீட்சண்யமான பார்வையும் தூக்கிய வாளைத் திரும்பவும் உறையில் போட்ட சமயத்திலும் அவன் தோரணையில் தெரிந்த கம்பீரமும் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்ததாலும், தனது இதழ்களில் சிறிது புன்முறுவலைப் படரவிட்டான் விஜயன். புரவி பக்கத்தில் நின்று அதன் மீது ஒரு கையை வைத்துக்கொண்டு சற்றே தலை சாய்த்து நின்ற அபயனின் கண்களில் ஏதோ சந்தேகக்குறி தோன்றுவதையும் கண்டவிஜயன் மேற்கொண்டு ஏதும் பேச விரும்பாமல் சற்று வழியைவிட்டு விலகி நின்று, ''தாங்கள் செல்லலாம்,'' என்று கூறினான்.

ஆனால் அபயன் அந்த இடத்தை விட்டு நகர்ந்தானில்லை. விஜயனின் மெல்லிய நீண்ட கைகளையும் நோக்கி திடமான தனது புரவியையும் நோக்கி, 'இந்த மெல்லிய கைகள் எப்படி என் புரவியைச் சாய்க்க முடிந்தது?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். விஜயனின் வாளிப்பான சரீரத்தை குறைத்து எடைபோடுவது பைத்தியக்காரத்தனம் என்பது, அந்த வாலிபனுக்குத் தெளிவாகவே விளங்கியதாலும், விஜயனை நெருங்கிப் பார்த்த பிறகு அவன் ஏதோ பெருங்குடி மகனென்பதை உணர்ந்து கொண்டதாலும், அவனைத் தான் மரியாதையின்றி முதலில் அழைத்தது தவறென்பதைப் புரிந்து கொண்டதாலும் அபயன் விஜயனை ஏறெடுத்து நோக்கி, ''தங்களிடம் மன்னிப்புக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்,'' என்று கூறினான். அந்தச் சொற்களில் பணிவில்லை. ஆனால் பண்பு இருந்தது. சொற்களில் சிறிது வருத்தத்தின் சாயையும் இருந்தது.

zeevaa

குரலிலிருந்தே பிற்கால குலோத்துங்கனின் குணத்தின் சிறப்பைத் தெரிந்துகொண்ட விஜயனும் சொன்னான். ''நானும் மன்னிப்புக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்,'' என்று.

அபய குலோத்துங்கனின் கண்களில் வியப்பு விரிந்தது. ''நான் தங்களை அவமரியாதையாகப் பேசினேன். அதற்கு மன்னிப்புக் கேட்டேன். நீங்கள் என்ன தவறு செய்தீர்கள் மன்னிப்புக் கேட்பதற்கு?'' என்று கேட்ட அவன் குரலிலும் வியப்பு ஒலித்தது.

''ஒரு நாட்டு இளவரசனைப் புரவியோடு கீழே தள்ள முயன்றது அபராதமல்லவா?'' என்று விஜயன் வினவினான்.

குலோத்துங்கன் சிறிது சிந்தித்தான், ''நீங்கள் தள்ள முயன்றதற்குக் காரணம் இருந்தது,'' என்றான் சிந்தனைக்குப் பிறகு.

''நீங்கள் என்னைத் துச்சமாகப் பேசியதற்கும் காரணமிருந்தது,'' என்று அபயன் குற்றத்திற்குச் சப்பைக்கட்டு கட்டினான் விஜயன்.

குலோத்துங்கள் புருவங்கள் கேள்வி கேட்கும் பாவனையில் மேலே ஏறின. ''என்ன காரணமோ?'' என்று கேள்வியை வெளிப் படையாகவும் தொடுத்தான்.

விஜயன் முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டவில்லை. ''என்னைச் சாதாரண வீரன் என்று நினைத்திருக்கலாம்,'' என்று கூறிய விஜயன் புன்முறுவல் கொண்டான்.

அந்தப் புன்முறுவலில் ஏளனமும் சிறிது கலந்திருப்பதை அபயன் கண்டாலும் அதைவெளிக்குக் காட்டிக் கொள்ளாமலே, 'வீரரில் சாதாரண வீரன் அசாதாரண வீரன் என்ற வேறுபாடு கிடையாது. குலமோ அந்தஸ்தோ வீரனின் தவறான நடத்தைக்குக் காரணம் கற்பிக்க முடியாது,'' என்று சொன்னான். அத்துடன், ''ஸ்வாமிகள் என்னை உங்களுக்கு அறிமுகப்படுத்தினாரே யொழிய உங்களை எனக்கு அறிமுகப்படுத்தவில்லையே,'' என்றும் சொன்னான்.

''காரணம் ஸ்வாமிக்குத்தான் தெரியும்,'' என்ற விஜயன் அதற்குமேல் அங்கு நிற்கவோ பேசவோ இஷ்டப்படாமல் வாயிலின் பெரும் மூங்கிற்கதவுகளை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

அவன் பேச்சிலிருந்தும் தோரணையிலிருந்தும் அவனும் அரச குலத்தைச் சேர்ந்தவனாயிருக்க வேண்டுமென்பதை அபயன் புரிந்து கொண்டாலும், என்ன காரணத்தினாலோ அவன் பெயரைச் சொல்ல இஷ்டப்படவில்லை என்று நினைத்ததால் 'சரி, இவன்தான் பெயரைச் சொல்லவில்லை, ஸ்வாமிகள் ஏன் சொல்லவில்லை?' என்றும் தன்னை வினவிக் கொண்டான். அதற்கு ஏதோ ஆழ்ந்த காரணம் இருக்க வேண்டுமென்பதை உணர்ந்த அபயன் காவலரிடம் தனது புரவியை ஒப்படைத்து விட்டுக் குடிலை நோக்கி நடந்தான். பற்பல எண்ணங்களால் சிதைந்த சிந்தையுடன். அப்படி அவன் தீர்க்க சிந்தனையுடன் சென்று குடிலை நெருங்கிய சமயத்தில் ராட்சஸ உருவமொன்று குடிலின் படிகளில் தடதடவென இறங்கி வந்து வாயிலை நோக்கி நடப்பதைக் கண்டு யாரிவன் என்று வியந்து நின்றான் ஒரு விநாடி. பிறகு படியில் நின்ற பணிப்பெண்ணை நோக்கி, ''பெண்ணே! இந்த ஆசிரமத்துக்குப் புதுப் புது விருந்தாளிகள் வந்திருக்கிற மாதிரி தெரிகிறதே?'' என்றான்.

பணிப்பெண் தலைவணங்கி, ''ஆம் பிரபு! சில நாட்களாகவே இங்கு யார் யாரோ வருகிறார்கள்.'' என்று சொன்னாள்.

''இப்பொழுது போனானே, இவன் யார்?'' என்று கேட்டான் பணிப்பெண்ணை நோக்கி.

''மூர்சமத்'' என்று பணிப்பெண் சொன்னதும் அபயன் முகத்தில் வியப்பும் அதிர்ச்சியும் கலந்து தாண்டவமாடின. எந்தச் சமயத்திலும் நிதானத்தை இழக்காத அபயன் அந்தச் சமயத்தில் தனது நிதான புத்தியை அடியோடு பறக்கவிட்டுப் பணிப்பெண்ணின் தோள்களைப் பற்றி, ''இன்னொரு முறை சொல்'' என்று கடினமான குரலில் சொற்களை உதிர்த்தான்.

zeevaa

அந்த ஆசிரமப் பணிப்பெண் முகத்தில் சினம் துளிர்த்தது. ''வேங்கி நாட்டு இளவலே! பண்பைக் கை விடாதீர்கள். நான் இந்த ஆசிரமப் பெண். என்னைத் தொடுவதே அபசாரம். அதட்டுவது அதைவிட அபசாரம். ஸ்வாமிகளுக்குத் தெரிந்தால் நீங்கள் வேங்கி நாடு திரும்புவது கஷ்டம். எடுங்கள் உங்கள் கைகளை,'' என்று சீறினாள். அத்துடன் அபயனைச் சீற்றம் மிகுந்த விழிகளுடன் நோக்கவும் செய்தாள்.

அபயன் மறுவார்த்தை பேசாமல் தனது வலிய கைகளை அவள் தோள்களிலிருந்து அகற்றினான். ''ஆத்திரத்தில் அதனால் ஏற்பட் அவசரத்தில் தொட்டு விட்டேன். என்னை மன்னித்து விடு,'' என்று மன்னிப்பும் கேட்டான்.

ஆசிரமப் பெண் லேசாக நகைத்தாள். ''ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு என்ற பழமொழி சரியாகத்தானிருக்கிறது'' என்றும் சொன்னாள் நகைப்பின் ஊடே.

அவள் அலட்சியம் அபயன் சினத்தைக் கிளறியதால் அவளைச் சினம் மிகுந்த கண்களால் பார்த்து, ''பெண்ணே என்னைப் பார்த்து இப்படிப் பேச உனக்குத் துணிவு வேண்டும்,'' என்றான்.

''துறவிக்கு வேந்தன் துரும்பு என்று உங்கள் பாட்டன் நாட்டில் பழமொழி உண்டு. நான் துறவிக்குப் பணிசெய்பவள். அவர் கருவி நான். எனக்குத் துணிவிருப்பதில் என்ன வியப்பு இருக்க முடியும?'' என்று வினவினாள்.

அதற்குமேல் விவாதத்தை வளர்த்த இஷ்டப்படாத அபயன் ''பெண்ணே அவன் பெயர் மூர்சமதா?'' என்று திரும்பவும் கேட்டான்.

''ஆம்.''

''அப்படியானால் இவன் சிங்களத்து விஜயபாகுவின் மெய்க்காவலனாயிருக்க வேண்டும்.''

zeevaa

''ஆம்.''

''இவர்கள் இங்கு எதற்கு வந்தார்கள்.''

''ஸ்வாமி அழைத்து வந்தார்'' என்ற பணிப்பெண், ''வாருங்கள் உங்கள்அறைக்குச் செல்வோம். மீதி சந்தேகங்களை ஸ்வாமிகளிடம் காலையில் கேட்டுக் கொள்ளலாம்,'' என்று கூறி அபயனுக்கு வழிகாட்டி முன் நடந்தாள்.

முன்னைவிட அதிக சிந்தனையுடன் அபயன் அவளைத் தொடர்ந்து அவள் காட்டிய அறைக்குள் நுழைந்து அங்கிருந்த கட்டிலில் மேலங்கியைக்கூடக் களையாமலும் வாளைக் கழற்றி வைக்காமலும் தொப்பென்று விழுந்தான். சற்று முன்பு ஏற்பட்ட சந்திப்பைப் பற்றியே அவன் மனம் சுழன்று கொண்டிருந்தது. 'நாம் சிங்களத்தில் இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் விஜயபாகு எதற்காகக் கலிங்கம் வந்திருக்கிறான்? ஸ்வாமி எதற்காக இவனை ஆசிரமத்துக்கு அழைத்து வந்தார்?' என்று திரும்பத் திரும்ப தன்னைக் கேட்டுக் கொண்டு விடை காணாமல் தவித்தான். அத்துடன் மூர்சமதைப் போல் இரட்டைப் பருமனுள்ள தனது மெய்க்காவலர் இருவர் விடியற்காலையில் வரப்போவதை எண்ணி, 'அப்பொழுது மூர்சமதின் வலுவைப் பார்ப்போம்.' என்றும் திருப்தியுடன் சொல்லிக் கொண்டு கண்களை மூட முயன்றான். நெடுந்தூரப் பயணத்தின் அலுப்பின் காரணமாக துயில் அவனையும் மீறி அவனை ஆட்கொண்டது.

ஆனால் முதல்நாள் சம்பவங்களைவிட அதிக வியப்பைத் தரும் சம்பவங்கள் மறுநாள் பொழுது புலருவதற்கு முன்பே ஏற்பட்டது. உஷத்கால ஆசிரம மணி ஒலித்ததும் எழுந்த அபயன் தனது அறைக்கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தவன் ஒரு விநாடி நின்றான். வாயிற்படிக்கருகில் தனது மெய்க்காவலர் படுத்துக் கிடப்பதையும் அவர்கள் தலைகளில் சிறு காயங்களிருந்ததையும் அவர்கள் உடைகள் நனைந்து கிடந்ததையும் பார்த்து அவர்களில் ஒருவனைத் தனது வாளால் தட்டி எழுப்பினான். கண்விழித்த

zeevaa

மெய்க்காவலன் முனகிக்கொண்டே எழுந்திருந்து, ''மன்னிக்க வேண்டும். தாங்கள் சொன்ன நேரத்துக்கு முன்பாக வந்துவிட்டோம். அதன் பலனையும் அனுபவித்தோம்,'' என்றான்.

''என்ன உளறுகிறாய்?'' என்று அபயன் வினவினான்.

''வழுக்கைத் தலையுடனும் தாடி மீசையுடனும் இருந்த ஒரு ராட்சஸன் எங்களைப் புரவிகளிலிருந்து தூக்கி வம்சதாராவில் எறிந்து விட்டுப் போய்விட்டான். இந்தக் காயங்கள் வம்சதாராவின் கூழாங்கற்களால் ஏற்பட்டவை,'' என்றான் ஒருவன்.

மற்றொரு மெய்க்காவலனும் எழுந்து, ''ஆம் பிரபு,'' என்று முதல்வனுக்குத் தாளம் போட்டான்.

''உங்களிருவரையும் ஒருவன் எப்படித் தூக்கி எறிய முடிந்தது?'' என்று அபயன் வினவினான் வெறியும் வியப்பும் கலந்த குரலில்.

''அவன் மனிதனல்ல,'' என்றான் ஒரு மெய்க்காவலன்.

''ராட்சஸன்,'' என்றான் இன்னொருவன்.

அவர்களிடம் ஏற்பட்ட வெறுப்பாலும் மூர்சமதைப் பற்றிய பெரும் புகழுக்குப் பொருளிருக்கிறதென்பதைப் புரிந்து கொண்டதாலும் அபயன் அவர்களை நோக்கி, ''நீங்கள் போய் நீராடி வாருங்கள். சீக்கிரம் ஸ்வாமியின் பூஜை தொடங்கும் சமயம் வந்துவிடும்,'' என்று கூறிவிட்டு வெளியே சென்று விட்டான். ஆசிரம தாழ்வறையிலேயே அவனைச் சந்தித்த ஆசிரமப் பெண் ஒருத்தி அவனிடம் ஒரு மூட்டையைக் கொடுத்துவிட்டு, ''காலை பூஜைக்குப் பிறகு நீங்கள் விஜயனைச் சந்திக்கலாம் என்று ஸ்வாமிகள் சொல்லச் சொன்னார்,'' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.

ஆசிரமத்துக்குப் பலமுறை வந்து பழகியிருக்கும் அபயன் அந்த மூட்டையில் நீராட்டத்துக்கு வேண்டிய துண்டு, வாசனைப்பொடி, முதலியனவும், பிறகு அணிய வேண்டிய உடையும் இருப்பதை

zeevaa

அறிந்திருந்ததால் அந்தப் பணிப்பெண்ணை ஏதும் கேட்காமல் அருவியை நோக்கிச் சென்றான். நீராடி மூட்டைகளிலிருந்து சாதாரண வேஷ்டியை அணிந்துகொண்டு திருநீறு பூசித் தனது அறைக்கு வந்தான். காலைப் பூஜையின் மணியும் அடிக்கவே பூஜை அறையை நோக்கி நடந்தான். அங்கு தனக்கு முன்பே விஜயன் அவன் பக்கத்தில் திரிலோகசுந்தரி, அவளுக்குப் பக்கத்தில் வஜ்ரஹஸ்தர், இவர்களுக்கும் பின்னால் ஆசிரமவாசிகள் இப்படி அமர்ந்திருந்ததைக் கண்டதும் சற்று எட்டவே அமர்ந்தான் அபயன். ஸ்வாமிகள் வழக்கப்படி ருத்திரம், புருஷசூக்தம் இவற்றைச் சொல்லி புஷ்பார்ச்சனை செய்து கற்பூரார்த்தி முடித்து, கற்பூரத்தை ஓர் ஆசிரமப்பெண் மூலம் எல்லோருக்கும் காட்டச் செய்தார். விபூதி, குங்குமம் முதலியவஃற்றை அவரே வினியோகிக்க எல்லோரும் பூஜை மேடையருகில் வந்து விபூதி குங்குமப் பிரசாதங்களை வாங்கி நெற்றியில் தீட்டிக் கொண்டனர். பௌத்தனான விஜயன்கூட வந்த இடத்தில் யார் மனமும் புண்படக்கூடாதென்ற காரணத்தால் தனது நெற்றியிலும் விபூதியையும் குங்குமத்தையும் சிறிதளவு அணிந்து கொண்டான்.

பிரசாதங்களை வழங்கியதும் கலைய இருந்த கூட்டத்தை ஸ்வாமி தனது கையை உயர்த்தி நிறுத்தினார். "ஆசிரமவாசிகளே! உங்களுக்கு இன்று வீர விருந்து இருக்கிறது. இன்னும் இரண்டு நாழிகைகளில் இரு நாடுகளைச் சேர்ந்த இரு வீரக் காளைகளின் வாட்போர் நடக்கும்" என்று அறிவித்ததும் ஆசிரமவாசிகளின் முகத்தில் பெரும் திருப்தி நிலவியது. இருப்பினும் மெதுவாகவும் கட்டுப்பாடுடனும் கலைந்தார்கள்.

அடுத்த இரண்டு நாழிகைகளில் போர் அரங்கம் சிருஷ்டிக்கப் பட்டது. ஆசிரமக் காவலர் அடங்கிய சிறுபடை சக்கர வட்டமாக ஆசிரமத்தின் நடுவிலிருந்த சமவெளியில் நின்றது. மற்ற ஆசிரமவாசிகள் ஆண்களும் பெண்களுமாக ஒருபுறம் நின்றனர். அரங்கம் சித்தமானதும் ஸ்வாமிகள் உட்கார மஞ்சமொன்று ஒருபுறம் போடப்பட்டு வியக்கிராசனம் (புலித்தோல் ஆசனம்)

zeevaa

விரிக்கப்பட்டது. அடுத்த சில விநாடிகளில் ஸ்வாமிகள் விஜயன் அபயன் இருவரோடும் அரங்கத்துக்குள் வந்தார். அவர்களைத் தொடர்ந்து வஜ்ரஹஸ்தரும் கலிங்க ராஜகுமாரியும் வந்தார்கள். வியக்கிராசனத்தில் அமர்ந்த ஸ்வாமிகள் தமது இருபுறத்திலும் வஜ்ரஹஸ்தரையும் கலிங்க ராஜகுமாரியையும் நிற்க வைத்துவிட்டு, இரு அரசகுமாரர்களையும் ''நீங்கள் இனி அரங்கத்து மத்திக்குப் போகலாம்'' என்று உத்தரவிட்டார்.

இரு வாலிபர்களும் அரங்க மத்திக்குச் சென்று அங்கிகளைக் களைந்து ஒருபுறம் போட்டுவிட்டு இடையிலிருந்த சல்லடத்துடன் கைகளில் வாட்களை உருவிக் கொண்டனர். ஸ்வாமிகள் முதலில் பேசினார்: ''ஆசிரமவாசிகளே! நமது உத்தரவில்லாமல் இந்த ஆசிரம எல்லையில் யாரும் சண்டையிடக்கூடாது என்ற கட்டுப்பாடு இருக்கிறது. நமது வீரர்களைக்கூடப் பயிற்சிக்கு மட்டுந்தான் வாளை உருவ அனுமதிக்கிறோம். பயிற்சியும் ஆசிரமப் பாதுகாப்பை முன்னிட்டு அளிக்கப்படுகிறது. ஆனால் நேற்று நமது உத்தரவில்லாமல் ஆசிரம எல்லையில் வாள் உருவப்பட்டது. ஆகவே இந்தச் சண்டைக்கு இடங்கொடுத்தோம். போரிடும் இந்த வாலிபர் இருவரும் தங்கள் நாடுகளின் விரோதங்களைச் சண்டையில் புகவிடக் கூடாது. வாள் திறமையைக் காட்டலாம். காயப்படுத்தவும் அனுமதி உண்டு. ஆனால் கொலை, மரணகாயம் இரண்டும் தவிர்க்கப்பட வேண்டும்'' என்று பேசிய ஸ்வாமிகள், ''வீரர்களே! நான் சொல்வதைக் கேட்டுக் கொண்டீர்களல்லவா? அதன்படி போரிடுங்கள். இருவரில் யார் விதிகளை மீறினாலும் அவர்களை அடியவனே தூக்கி...'' என்று சொல்லித் தமது புஷ்டியான புஜங்களை ஒருமுறை பார்த்து மகிழ்ச்சியை முகத்தில் படரவிட்டுக் கொண்டார். 'அவசியமானால் ஸ்வாமி தங்களைச் சிவலோகம் அனுப்பவும் தயங்கமாட்டார்' என்பதைப் புரிந்துகொண்ட இரு வாலிபரும் ஸ்வாமிகளை நோக்கித் தலைவணங்கி வாட்களைத் தாழ்த்தி மரியாதை செய்து பிறகு பரஸ்பரம் பார்த்துக் கொண்டனர். அடுத்து ஸ்வாமிகளின்

zeevaa

சைகையைத் தொடர்ந்து இருவர் வாட்களும் பலமாக மோதின. பிரமிக்கத்தக்க வாட்போர் தொடர்ந்தது. அகன்ற பட்டையும் நீளமும் உள்ள கனமான குலோத்துங்கன் வாளும், மெல்லியதாய் எஃகில் வடிக்கப்பட்டு சர்ப்பம்போல் வளைந்த விஜயன் வாளும், சந்தித்துச் சந்தித்து மீண்டது பெருவிந்தையா யிருந்தது பார்ப்பவர்களுக்கு. தன்னை நோக்கிக்குனிந்த திரிலோகசுந்தரியிடம் ஸ்வாமிகள் சொன்னார் காதோடு காதாக, ''இருவரும் பெரிய வாட்போர் வீரர்கள். இந்தச் சண்டையைப் பார். வாட்போர் எத்தனை கலையழகு வாய்ந்தது என்பது புரியும்'' என்று.

''வாட்போர் ஒரு கலையா!'' என்று பிரமிப்புடன் கேட்டாள் திரிலோகசுந்தரி.

''ஆம். சரியான வீரன் கையில் வாளும் ஒரு கலையாகத்தான் சுழலும். அவன் வாள் எதிரியைக் கொன்றால் அதிலும் ஓர் அழகு இருக்கும்'' என்று ஸ்வாமிகள் தமது கைகளையும் பார்த்து பெருமூச்செறிந்தார். ''ஒரு காலத்தில் இந்தக் கைகளும் அந்தக் கலையில் ஈடுபட்டிருந்தன'' என்று முணுமுணுத்துக்கொண்டார். பிறகு தலைநிமிர்ந்து அபயனையும் விஜயனையும் கவனித்தார். அபயனின் வேகமான முன்னேற்றமும் இருந்த இடத்தைவிட்டு நகராமல் விஜயன் தனது வாளால் எதிரி வாள் தன் எல்லைக்குள் வராமல் தடுத்துக் கொண்டிருந்ததையும் பார்த்தார். மகிழ்ந்தார். அடுத்து அவர் மகிழ்ச்சியைக் கலைக்கக்கூடிய விபரீதம் நிகழ்ந்தது. அந்த நிகழ்ச்சி இரு நாடுகளின் வரலாற்றையே பிற்காலத்தில் மாற்றியது.

zeevaa

# 18. சொன்னவண்ணம் செய்த வண்ணக்கிளி

சிவகோகர்ண ஸ்வாமிகளின் ஆணைப்படி இரு வாலிப வீரர்களும் தங்கள் வாட்களை உருவிக்கொண்டு முன்னேறாமலும், வாட்களை இணைத்துப் போரை உடனடியாகத் துவங்காமலும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டே சில வினாடிகள் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் காரணமில்லாமல் வாளுடன் நிற்கவில்லையென்பதையும், ஒருவரையொருவர் எடை போடு கிறார்கள் என்பதையும் ஸ்வாமிகள் புரிந்துகொண்டாலும் அரங்கத்தைச் சூழ்ந்து நின்ற ஆசிரமவாசிகளுக்குப் புரியாததால் முணுமுணுக்கலாயினர். அந்தச் சமயத்தில் அங்கு வந்து கூட்டத்துக்கு வெளியே நின்ற மூர்சமத் மட்டும் அந்த அனாவசிய தாமதத்தை தாங்க முடியாமல் கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்னால் வந்து, ''எஜமான்! என்ன யோசிக்கிறீர்கள்? வாளை உருவிய பின்பு யோசனை கூடாதென்று எத்தனைமுறை நீங்களே சொல்லியிருக்கிறீர்கள்?'' என்று சற்று உரத்த குரலிலேயே கேட்டான். அத்தனை தூண்டுதலுக்குப் பிறகு தாமதிக்க இஷ்டப்படாத விஜயன் நீண்ட சர்ப்பம் போன்ற தனது மெல்லிய வாளைக் காற்றில் ஒருமுறை வீசினான். அடுத்த வினாடி அபயனை நோக்கிச் சென்ற அவன் வாளை அதே நீளமும் ஆனால் அதிக பருமனும் உள்ள அபயன் வாள் தடுத்தது.

விஜயன் வாளை அபயன் மிக அனாயாசமாகத் தடுத்தான். ஆனால் அந்தத் தடுப்பில் அபயனின் பலம் பூராவும் பிரயோகிக்கப்பட்டதைத் தனது வாள் அகற்றப்பட்டவிதத்திலிருந்து

zeevaa




zeevaa

புரிந்துகொண்ட விஜயன் எதிரியின் கைபலத்தைக் கண்டு பெரிதும் வியந்தான். புன்முறுவலும் செய்தான். அபயனின் பலமான அகலமான பெருவாளால் தடுக்கப்பட்ட போதிலும் விஜயனின் நீண்ட வாள் வளையவுமில்லை, தாக்கப்பட்ட இடத்திலிருந்து அகலவுமில்லை. அதனால் எதிரியின் வாள் சிறந்த எஃகினால் செய்யப்பட்டிருக்கிறதென்பதை உணர்ந்து கொண்ட அபயன் மேலும் தாமதிக்க விரும்பாமல் தனது வாளை இழுத்து மீண்டும் விஜயன் வாளைத் தாக்கிக் கொண்டு அரங்கத்தின் மத்தியில் சுழன்றான். அபயன் வாள் எந்த இடத்தில் தோன்றினாலும் அந்த இடத்தில் தனது வாளும் தோன்றச் செய்த விஜயன், போரில் முன்னேறாமல் தற்காப்புப் போர் மட்டுமே செய்து வந்தான். அபயன் வேகத்தையும், அவன் சுற்றிச் சுற்றி விஜயனைத் தாக்கியதையும், நின்ற இடத்திலிருந்து நகராமல் விஜயன் தனது வாளை மட்டும் சுழற்றி அபயன் முன்னேற்றத்தைத் தடுத்து வந்ததையும் கண்ட ஸ்வாமிகள் திரிலோகசுந்தரியைப் பார்த்து, ''சுந்தரி! வாட் போரின் இருவிதக் கலைகளைப் பார். ஒருவன் முன்னேறும் வழிகளைக் காட்டுகிறான். இன்னொருவன் தற்காப்புக் கலையைக் காட்டுகிறான்,'' என்று சொல்லிக் குதூகலித்தார்.

அவர் குதூகலத்தில் திரிலோகசுந்தரி ஈடுபடாமல் அச்சத்தை லேசாக மனமும் அதன் மூலம் முகமும் வெளியிட இருவரின் போரையே கவனித்துக் கொண்டிருந்தாள். ''எதற்காக இவர் தாமதிக்கிறார்? எதிரியிடம் அத்தனை அன்பு என்ன இவருக்கு?'' என்று விஜயனிடம் கோபமும் கொண்டாள். அதனால் சீற்றம் மிகுந்த விழிகளை விஜயனை நோக்கித் திருப்பவும் செய்தாள். விஜயன் போரில் ஈடுபட்ட சமயத்திலும் அவ்வப்பொழுது திரிலோக சுந்தரியின் மோகனகரமான அழகையும் கடைக்கண்ணால் கவனித்துக் கொண்டிருந்ததால், அந்த விழிகள் அள்ளி வீசிய சீற்றத்தையும் பார்க்கவே செய்தான். அவனது விழிகளும் அவளது விழிகளைச் சந்தித்ததும், அவற்றின் சீற்றத்தை நோக்கிச் சிரிப்பை உதிர்த்துக்கொண்டு இருந்ததாலும், அவனது வாள் மட்டும்

zeevaa

மிகத்திடமாகச் சுழன்று அபயன் வாளைத் தன்னிடம் அணுகாமல் செய்து கொண்டிருந்தது.

அவன் விழிகள் சென்ற இடத்தையும், அவன் திரிலோக சுந்தரியைப் பார்த்தபோதும் அவன் கை மட்டும் தன் வாள் போகுமிடங்களில் திரும்பித் தடுத்துக் கொண்டிருந்ததைக் கண்ட அபயன், "இவன் கைகளிலும் கண்கள் இருக்க வேண்டும்," என்று தனக்குள் சொல்லிக் கொண்டு தனது போர் மும்முரத்தையும் சிறிது தளர்த்திக் கொண்டான். எதிரி வேண்டுமென்றே போரைத் தளர்த்துவதைக் கண்டவிஜயன் தனது முழுக் கவனத்தையும் போரில் திருப்பி, வாளை எதிரி வாளுடன் உராயவிட்டும், இழுத்தும், மின்னல் வேகத்தில் தாக்கிக் கொண்டும் முன்னேற முற்பட்டான். அவன் வேகத்தையும் முன்னேற்றத்தையும் கண்ட அபயன் தற்காப்புப்போரில் இறங்கி விஜயன் வாளைத் தடுத்தான் பலமுறை. இருவர் போர் முறையும் ஒன்றாக இருந்ததால் அபயன் தற்காப்பு வளையத்துக்குள் நுழைய முடியவில்லை விஜயனால். தான் பயின்ற வாட்போர் முறையையே அபயனும் பயின்றிருக்க வேண்டுமென்று புரிந்துகொண்ட விஜயன் தனது போர் முறையை லேசாக மாற்றினான். தனது வாளை நேராகப் பாய்ச்சாமல் சிறிது பக்கவாட்டில் பாய்ச்சலானான். அந்த வாளும் அவன் சுழற்றிய முறையில் வளைந்து வளைந்து வரவே பலமுறை அதைத் தடுக்க முயன்றும் முடியாமல் அதன் நுனி தனது தோள்களையும், ஒருமுறை மார்பையும் தொட்டுவிட்டு மீண்டாலும் தன்னுடைய உடலில் ஒரு கீறல்கூட விழாததைக் கண்ட அபயன் சிறிது சீற்றம் கொண்டான். விஜயன் தன்னுடன் விளையாடுகிறான் என்பதை அறிந்ததால் சிறிது நிதானத்தைக் கைவிட்ட அபயன் தனது போர் முறையையும் மாற்றி, தனது வாளை எதிரியின் முகத்தையும் கண்களையும் நோக்கிச் செலுத்த முற்பட்டான். ஆனால் அது ஒவ்வொரு இடத்திலும் தடுக்கப்பட்டதால் கோபத்திற்கு இலக்கான அபயன் வாளை வேகமாகச் செலுத்தினான். அவன் கோபமே விஜயனுக்குத் துணையாயிற்று. எதிரி நிதானத்தைக் கைவிட்டதையும், அதனால்

zeevaa

அவன் தாக்குதல் மிகவும் பலப்பட்டு விட்டதையும் உணர்ந்த விஜயன், அபயன் வாளை ஒரு வினாடி விலக்கி அவன் தற்காப்பு அரணுக்குள் புகுந்து அவனது வலது தோளில் மட்டும் இரு கீறல்களை விளைவித்தான். அந்த சர்ப்பவாளின் நுனி கீறிய இடங்களில் ரத்தம் லேசாகப் புள்ளி புள்ளியாக துளிர்த்து உறைந்தது. குருதி வந்ததையும் கவனித்தான் குலோத்துங்கன், அது புள்ளி புள்ளியாக உறைந்ததையும் கவனித்தான். விஜயன் வேண்டுமென்றே மிக மெல்லியதாகத் தனது வாளால் கீறியிருக்கிறான் என்பதையும் புரிந்து கொண்டான். அந்த வடு தன் தோளில் மாறாது என்பதையும் தெரிந்து கொண்டதால் நிதானத்தை அடியோடு இழந்து சினத்தின் சிகரத்தை எட்டிச் சரேலென்று விளைவை எதிர்பாராமல் விஜயன் தற்காப்பு அரணுக்குள் நுழைந்துவிட்டதாலும், அந்த நிகழ்ச்சியை அடியோடு விஜயன் எதிர்பார்க்காததாலும், விஜயன் வாட்கரம் சட்டென்று எதிரி வாளின் நுனியால் குத்தப்பட்டது. அதைப் பற்றி விஜயன் லட்சியம் செய்யாவிட்டாலும், அபயன் வேகமாகத் தனது அரணுக்குள் புகுந்து விட்டதால், திசைமாற இருந்த அவன் மெல்லிய வாள் அபயனின் இடைப் பக்கத்தில் புகுந்துவிட்டதன் விளைவாக அபயன் ஒரு நிமிடம் தள்ளாடி நின்றான். மறு நிமிடம் தனது இடையின் குருதியை அழுத்திப் பிடித்து, தனது வாளை ஓங்கினான் விஜயனை நோக்கி முதல் நாளைப் போலவே. ஆனால் விஜயன் அந்த வாளைத் தடுக்க முயலவில்லை. தனது வாளை எட்ட இருந்த மூர்சமதிடம் எறிந்துவிட்டு, சற்று நகர்ந்து அபயன் வாளின் தாக்குதலிலிருந்து தப்பித்துக் கொண்டு அபயனைத் தனது இரு கைகளாலும் தூக்கிக்கொண்டு ஸ்வாமிகளை நோக்கி நடந்தான். இடையில் விஜயன் வாளின் காயத்துக்கு உள்ளான அபயன் எதிரியிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றும் முடியவில்லை. விஜயனின் இரும்புக் கைகள் அவனை அணைத்த வண்ணம் தூக்கியிருந்தன. விஜயன் கால்கள் வேகமாகப் பாவி நடந்து ஸ்வாமிகளிடம் வந்தன. ''ஸ்வாமி! இது எதிர்பாராமல்

zeevaa

நடந்துவிட்டது. இவருக்கு உடனடியாகச் சிகிச்சை தேவை. நானே செய்ய அனுமதி உண்டா?'' என்று வினவிய விஜயன் சொற்களில் துன்பம் தோய்ந்து கிடந்தது. அனுமதி உண்டு என்பதற்கு அறிகுறியாக ஸ்வாமிகள் தலையசைக்கவே, ''சுந்தரி! வா என்னுடன்,'' என்று கலிங்க ராஜகுமாரியை அழைத்த வண்ணம் வம்சதாராவின் அருவியை நோக்கி வேகமாக நடந்தான். அவர்கள் இருவருக்கும் பின்னால் மூர்சமத் நடந்தான். அவர்களைப் பின்பற்ற இருந்த வஜ்ரஹஸ்தரையும் ஆசிரமவாசிகளையும் தடுத்த ஸ்வாமிகள் கூட்டத்தைக் கலைந்து போகும்படி உத்தரவிட்டார். பிறகு. ''வஜ்ரஹஸ்தா! வா. எனது அறைக்குச் செல்வோம்,'' என்று அவரை அழைத்துக் கொண்டு தனது அறையை நோக்கி நடந்தார். அவர் முகத்தில் மகிழ்ச்சி அடியோடு இல்லை. இருமுறை மகேந்திர மலைமீதிருந்த கோயிலை நோக்கினார். ''சிவ சிவா! உன் சித்தம் இப்படியா இருக்கிறது?'' என்று கேட்டார். பிறகு வேகமாக நடந்தார் தமது பெருங்குடிலை நோக்கி. வஜ்ரஹஸ்தர் ஏதும் பேசாமல் பின் தொடர்ந்தார். ஸ்வாமியின் வேதனைக்குக் காரணம் இருக்கிறது என்பதை உணர்ந்தார். 'ஸ்வாமி மீது தவறில்லை. இந்த ஆசிரமத்தில் அபயன் வாளை ஓங்கிய பிறகு சண்டையை அவர் அனுமதிப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் இந்த விளைவை அவர் எதிர்பார்க்கவில்லை. சரி, மிகவும் நிதானஸ்தனான அபயன் எதற்காக எதிரியின் தற்காப்புக்குள் நுழைந்தான்?' என்று தன்னுள் கேள்விகளை எழுப்பிக் கொண்டார்.

ஆனால் அன்று எல்லோர் வேதனையையும்விட விஜயன் வேதனையே அதிகமாய் இருந்தது. அபயனுக்கு ஏற்பட்ட காயம் தனக்கே ஏற்பட்டது போல் துன்பமடைந்தான். அபயன் மகாவீரனென்பதிலோ, அவன் இஷ்டப்பட்டிருந்தால் இந்தக் காயம் தனக்கே கிடைத்திருக்கக் கூடும் என்பதிலோ விஜயனுக்குச் சிறிதும் சந்தேகமில்லை, ''போரின் விளைவுகளை எந்த மனிதனும் கணிக்க முடியாது என்பதற்கு அபயனுக்கு ஏற்பட்ட காயமும் உதாரணம்,'' என்று சொல்லிக் கொண்டு வேகமாக நடந்து அருவிக்கரையை

zeevaa

அடைந்து அங்கு சற்று நிழலடித்த இடத்தில் அபயனைப் படுக்க வைத்தான். பிறகு தனது அங்கியில் ஒரு பகுதியைக் கிழித்து அருவியில் நனைத்து வந்து அபயன் இடையில் இருந்த காயத்தின்மீது பிழிந்தான். பிறகு ரத்தத்தைத் துடைத்துக் காயத்தைப் பரிசோதித்தான். காயம் மிக ஆழமாகவே இருந்தது. தனது வாள் நுனி சிறிது அதிகமாகவே அபயன் இடைக்குள் புகுந்து விட்டதைக் கவனித்து, பக்கவாட்டில் இரு கைகளாலும் சிறிது அழுத்திப் பார்த்தான். காயம் பட்ட இடத்திற்கு மேலே இருந்த எலும்புகளில் வாள் பாயாததைக் கண்டு சிறிது ஆறுதலும் அடைந்து, ''வெறும் சதைக் காயந்தான். இரண்டு மூன்று நாட்களில் குணமாகிவிடும்,'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். பிறகு பக்கத்தில் நின்ற திரிலோகசுந்தரியின் சேலையைக் கால்புறத்திலிருந்து மேல்புறமாகச் சிறிது கிழித்து அதைக் காயத்துக்குள் திணித்தான். அவள் சேலையை மேலும் சிறிது கிழித்துக் காயத்தை அழுத்திக் கட்டினான், இடையைச் சுற்றி. குருதி நின்றதைக் கவனித்து, திருப்தியுடன் திரிலோக சுந்தரியை நோக்கி, ''சிறிது நீர் கொண்டு இவர் முகத்தைத் துடைத்துவிடு,'' என்று உத்தரவிட்டான். பதில் ஏதும் சொல்லாமல் அவன் சொன்ன வண்ணம் செய்ததால் அபயன் கண்ணை விழித்தான். பிறகு லேசாக நகைத்தான். ''விஜயா! நீ மகா வீரன். என் முட்டாள் தனத்துக்கு நீ பொறுப்பாளி அல்ல,'' என்று கூறினான் நகைப்பின் ஊடே. பிறகு தன்னைத் தூக்க நீட்டிய விஜயன் கைகளை அகற்றி எழுந்து நின்றான். பிறகு அனாயாசமாக நடந்து ஆசிரமப் பெருங்குடிலை நோக்கிச் சென்றான்.

அவனைத் தடுக்க முயலவில்லை விஜயன். அத்தனை காயத்திலும் அவன் சீரான கம்பீர நடையைப் பார்த்துக் கொண்டே நின்றான். ''இவன் பல நாடுகளை ஆள்வான். சிங்களத்தின் மீது இவன் படையெடுக்காதிருந்தால் என் அதிர்ஷ்டம்,'' என்று உரக்கவே சொன்னான்.

பக்கத்தில் நின்றிருந்த திரிலோகசுந்தரி கேட்டாள்: ''காயத்திற்கு நீங்கள் மருந்து ஏதும் போடவில்லையே?'' என்று.

zeevaa

''வாள் அதிகமாக உட்புகவில்லை. குருதி சேதப்படக் கூடாது. அதற்காகக் கட்டுப் போட்டேன். அதுவே போதும்,'' என்றான் விஜயன்.

அவள் அவனை உற்று நோக்கி, ''நான் எப்படி என் அறைக்குப் போவது?'' என்று வினவினாள்.

''நடந்து போவது,'' என்று தனது நகைச்சுவையைக் காட்டினான் விஜயன்.

''எப்படி நடப்பது?'' என்று அவள் வினவினாள், கண்களைத் தரையில் செலுத்தி.

அவள் கண்கள் சென்ற திசையைப் பார்த்த விஜயன் அவள் நிலையை அப்பொழுதுதான் புரிந்து கொண்டான். அவள் சேலையை நேராகத் தொடை வரையில் தான் கிழித்து விட்டதைப் பார்த்தான். சேலை இடம் கொடுத்ததால் வெளேரென்று தெரிந்த அவள் அழகிய, வாழையின் வழவழப்புக் கொண்ட தொடையின் சிறு பகுதிகூட அவனுக்கு வெறியை ஊட்டியதால் அவன் கண்களை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான். தனது மேலங்கியைக் கழற்றி அவள் மீது போர்த்தி, தெரிந்த தொடைப் பகுதியை மறைத்து, ''நீ போய்ச் சேலையை மாற்றிக் கொள். நான் வந்து அங்கியை வாங்கிக் கொள்கிறேன்.'' என்றான்.

அரசகுமாரியின் வதனம் சிவந்தது நாணத்தால். அவள் மீது போடப்பட்டிருந்த அவன் அங்கி தன்னைத் தழுவுவது போல் பிரமை ஏற்பட்டது திரிலோகசுந்தரிக்கு. அதனால் ஏற்பட்ட உணர்ச்சிகளால், ''உங்களுக்கு லவலேசம் புத்தி இருக்கிறதா?'' என்று வினவினாள்.

''அதில் என்ன சந்தேகம்?'' -விஜயன் குரலில் குழப்பம் தெரிந்தது.

''உங்கள் அங்கியை நான் போர்த்திக் கொண்டு போனால் ஆசிரமவாசிகள் என்ன நினைப்பார்கள்?'' என்று வினவினாள்.

zeevaa

"ஆம் ஆம். என்னதான் செய்யச் சொல்கிறாய்?" என்று விஜயன் கேட்டான்.

"எனது அறை பணிப்பெண்ணை ஒரு சேலை கொண்டு வரச்சொல்லுங்கள். விழித்துக் கொண்டு நிற்காதீர்கள்," என்று கூறிவிட்டு அருவிக்கரையில் உட்கார்ந்து சேலையைச் சிறிது இழுத்து விட்டு, கால்களை ஒரு பக்கமாகப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து கொண்டாள்.

அந்தச் சமயத்தில் மூர்சமத் கேட்டான்: "எசமான்! அரசகுமாரிக்குச் சேலை நான் வாங்கி வரட்டுமா?" என்று.

அரசகுமாரி களுக்கென்று சிரித்தாள். "வேண்டாம், நீ போ நமது அறைக்கு." என்று சினந்து கூறிய விஜயன் தானே பெருங்குடிலில் பெண்கள் இருக்கும் பகுதிக்குச் சென்றான். அங்கு அரசகுமாரியின் அறையை அடைந்து அங்குள்ள பணிப்பெண்ணை அழைத்து, "பெண்ணே! அரசகுமாரிக்கு ஒரு சேலை கொடு," என்று கேட்டான்.

பணிப்பெண் விழித்தாள். "அரசகுமாரிக்குச் சேலை வேண்டுமா?" என்று வியப்புடன் கேட்டாள்.

"ஆம்."

"கட்டிய சேலை என்ன ஆயிற்று?"

"கிழிந்துவிட்டது."

"கிழிந்துவிட்டதா?"

"நான் கிழித்துவிட்டேன்," என்று பேசுவதை உணராமல் உளறினான் விஜயன்.

காதலில் உளறலுக்கு இடம் உண்டு என்பதைப் புரிந்து கொண்ட பணிப்பெண் உள்ளூர நகைத்துக் கொண்டு உள்ளே சென்று ஒரு சிவப்புச் சேலையை கொண்டு வந்து, "இது அரசகுமாரிக்கு நன்றாய் இருக்கும். எடுத்துச் செல்லுங்கள்," என்றாள்.

zeevaa

அதை வாங்கி தன் தோளில் போட்டுக் கொண்டு விஜயன் மீண்டும் அருவிக்கரையை நோக்கி நடந்தான். அவனைக் கண்ட பணிப்பெண்கள் புன்முறுவல் செய்தனர். எதிரே வந்த இரு ஆசிரம வீரர்கள் அவன் அப்புறம் சென்றதும் நகைத்தனர். இவை எதையும் கவனிக்காமல் அருவிக்கரையை அடைந்த விஜயன் மீது எரிந்து விழுந்தாள் திரிலோகசுந்தரி. ''இப்படியே நடந்து வந்தீர்களா?'' என்று ஆத்திரத்துடன் வினவினாள்.

''ஆம்.''

''தோளில் என் சேலையைப் போட்டுக் கொண்டு...?''

''ஆம்.''

''உங்களுக்குப் புத்தி அடியோடு கிடையாது'' என்று சீறி விழுந்த அரசகுமாரி அவன் தோளிலிருந்த புடவையை இழுத்துத் தன் உடல் முழுதும் சுற்றிக் கொண்டு பெரும் குடிலை நோக்கி நடக்க முற்பட்டவள், ''சுந்தரி!'' என்ற விஜயனின் அதட்டலைக் கேட்டுச் சிறிது நின்று திரும்பி, ''என்ன?'' என்று வினவினாள்.

''சேலையை அந்த மரத்து மறைவில் கட்டிக்கொண்டு போனால் என்ன?'' என்று கேட்டான் விஜயன்.

''இப்பொழுதே ஆசிரமம் முழுவதும் என்னைப் பார்த்து நகைக்கும். தவிர வேறு சேலை உடுத்தி, கிழிந்த சேலையைக் கையில் எடுத்துக் கொண்டு போனால் என்ன நினைக்கும்?'' என்று கேட்டாள்.

''யார் என்ன நினைத்தால் நமக்கென்ன?'' என்று விஜயன் கேட்டான்.

அதைக் கேட்டுச் சிறிது சிந்தித்த அந்த வண்ணக்கிளி அவன் சொன்னவண்ணம் செய்ய மரத்தின் மறைவை நாடிச் சென்றாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு மரங்கள் அடத்தியை நோக்கி விஜயனும் நடந்தான். முக்கால்வாசி சேலை கட்டியிருந்த அந்தக்

zeevaa

கட்டழகியின் பின்னால் சென்று அவளைத் தனது கைகளில் சிறைப்படுத்தினான்.

''உம். இது பகல்'' என்றாள் அவள்.

''அப்படியா!'' என்று கேட்ட அவன், ''சுந்தரி! நீ அருகில் இருக்கும்போது எனக்கு இரவு பகல் தெரியவில்லை. அக்கம் பக்கம் தெரியவில்லை. குருடாகி விடுகிறேன்'' என்றான். ''இப்படித் திரும்பு'' என்றும் சொன்னான். அவன் சொன்னவண்ணம் செய்தாள் அந்த வண்ணக்கிளி. அவன் ஆராய்ச்சிக் கண்களை நோக்கி, ''இந்தக் கண்களா குருட்டுக் கண்கள்?'' என்றாள்.

''வேறென்ன சுந்தரி?'' என்று அவன் வினவினான்.

''திருட்டுக் கண்கள்'' என்றாள் அவள்.

காதலர் இருவரும் இப்படி சல்லாபத்திலிருக்கையில் ஆசிரமத்தில் பெரும் விபரீதம் விளைந்து கொண்டிருந்தது. சிவகோகர்ண ஸ்வாமியையும் மீறிய விபரீத நிலை அது.

zeevaa

# 19. புது ஆபத்து! பழைய வேதாந்தம்!!

அருவிக்கரை மரத்தடியில் மறைவில் சேலையை அரைவாசி கட்டிய அரசிளங்குமரியைப் பின்புறமாக அணுகிய விஜயன் வம்பு செய்ய முற்பட்ட அதே சமயத்தில், ஆசிரமப் பெருங்குடிலில் சிவகோர்கர்ண ஸ்வாமியின் அறையில் பெரும் விபரீதம் விளைய முற்பட்டதைக் காமத்தின் வசப்பட்ட வாலிபனும் கன்னிகையும் உணரவில்லையென்றாலும், அதை ஆசிரமம் முழுதுமே உணர்ந்து கொண்டதால் ஆசிரமத்தின் எல்லாப் பகுதிகளிலும், பரபரப்பு ஏற்பட்டிருந்தது. காவலர் திடீரென ஆயுதம் தரித்து புரவிகளில் ஏறி அணிவகுத்து வாயில் பக்கம் விரைந்தார்கள். கூழாங்கற்கள் நிரம்பிய வண்டியும் இழுக்கப்பட்டு வாயிலின் பெரும்படலுக்கு அருகில் கொண்டு வரப்பட்டது. அந்த ஏற்பாடுகளைக் கவனித்த மூர்சமதும் படகோட்டிக் கிழவனும் நடக்கப் போவதைக் கவனிக்க வாயிலின் முகப்புக்குச் சென்றனர். வாயிலில் பெரும் மூங்கிற் படலுக்கு அப்புறத்தில் சுமார் பத்துப் புரவி வீரர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

அவர்களில் தலைவனாகக் காணப்பட்டவன் உள்ளிருந்த வீரர்களை நோக்கி. ''கதவைத் திறவுங்கள்'' என்று அதட்டினான்.

அந்த அதட்டலுக்குச் சிறிதும் மசியாத உள்ளிருந்த ஆசிரமக் காவலர் தலைவன், ''யார் நீ? எதற்கு இங்கு வந்திருக்கிறாய்?'' என்று வினவினான் எந்தவித உணர்ச்சியும் தெரியாத வறண்ட குரலில்.

வெளியேயிருந்த தலைவன் சுற்றுக் கடுமையாகவே சொன்னான், ''சொன்னதைச் செய். காலதாமதம் செய்யாதே'' என்று.

zeevaa

''இங்கு உத்தரவிடக் கூடியவர் ஸ்வாமிகள் ஒருவர் தான். அவர் உத்தரவில்லாமல் இங்கு யாரும் உள்ளே நுழைய முடியாது. நீ யாரென்று சொன்னால் ஸ்வாமிகளின் அனுமதி கேட்டு வருகிறேன்'' என்றான் ஆசிரமக் காவலர் தலைவன் திட்டமாக.

வெளியே இருந்தவன் முகத்தில் சினம் பெரிதும் உதயமாயிற்று. ''யார் அனுமதியும் உங்களுக்குத் தேவையில்லை. இந்த மூங்கிற்படல் கதவைத் திறப்பதோ, உள்ளே நுழைவதோ எனக்குப் பிரமாதமல்ல. திறக்கிறாயா இல்லையா?'' என்று சீறினான் வெளியிலிருந்த கூட்டத்தின் தலைவன்.

உள்ளேயிருந்த கூட்டத்தின் தலைவனது சீற்றமும் தலைக்கு ஏறவே, ''முடிந்தால் படலைத்திறந்து நுழையப்பார்'' என்று கூறிவிட்டுத் தனது புரவியைச் சற்றுப் பின்னால் நகர்த்திக் கொண்டான்.

வெளியே இருந்த தலைவன் ஒருவிநாடி சிந்தித்தான். பிறகு பின்னாலிருந்தவர்களுக்குச் சைகை காட்டவே, இருபுரவி வீரர்கள் புரவிகளிலிருந்து குதித்துப் படலை நாடிச் சென்று படலைத் திறந்தும் விட்டனர். அவன் வீரர்கள் உட்புக முற்பட்ட சமயத்தில் வண்டியிலிருந்த கூழாங்கற்களில் இரண்டு முதலில் புக முற்பட்ட வீரர்களைத் தாக்கின. மேலும் கூழாங்கற்கள் வீசப்பட இருந்த சமயத்தில் சரேலெனத் தனது புரவியை வாயுவேகத்தில் உட்புக விட்ட வெளியிலிருந்த தலைவன் தனது வாளை உயர்த்தி உள்ளிருந்த தலைவனை வெட்ட முயன்றான். வெகுதுரிதமாக விளைந்துவிட்ட அந்த விபரீதத்திலிருந்து தப்ப வழியில்லாத ஆசிரமக் காவலன் தனது உயிர் போய்விட்டதாக எண்ணிய சமயத்தில் எதிரியின் வாள் கீழே இறங்கவில்லை. எதிரி புரவிமீதும் இல்லை. புரவியிலிருந்து இரு ராட்ஸக் கைகளால் உயரத் தூக்கப்பட்ட அந்தத் தலைவன் ஒருமுறை சுழற்றப்பட்டான். அடுத்து அவன் வாள் பறிக்கப்பட்டுத் தூரத்தில் எறியப்பட்டது. அவன் கீழே இறக்கப்பட்டு அவன் கழுத்தை இரண்டு ராட்சஸக் கைக்ள் பிடித்து

zeevaa

மெல்ல நெரிக்க முற்பட்டன. அப்படி எதிரியைச் சிறைப்படுத்திக் கொண்ட மூர்சமத், மற்ற எதிரி வீரர்களை நோக்கி, "அசையாதீர்கள். உங்கள் புரவிகள் மேற்கொண்டு ஒரு அடி எடுத்து வைத்தாலும் இவன் கழுத்தை முறித்து இவனைத் தரையில் அடித்துப் பிண்டமாக்கி மகேந்திர மலைக் கழுகுகளுக்குப் போட்டுவிடுவேன்" என்று பயங்கர ஒலியில் பேசி மேலும் கழுத்தை நெரிக்கவே எதிரிகள் தலைவன் கண்கள் பஞ்சடையத் தொடங்கின. அவன் கையிலிருந்த வாள் தானாகவே தரையில் விழுந்து அங்கிருந்த கூழாங்கல்லில் பட்டுக் கலீரென அபசப்தத்தைக் கிளப்பியது. அதற்குமேல் கழுத்தை இறுக்கினால் எதிரி பிணமாகி விடுவா னென்ற காரணத்தால் அவனைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்ட மூர்சமத், மற்ற வீரர்களை நோக்கி, "டேய் வாட்களைக் கீழே போடுங்கள். தீவட்டிகளைப்போல் அவற்றைப் பிடித்துக்கொண்டு நிற்காதீர்கள்" என்று கூறியதோடு, "இவர்களைச் சிறைச் செய்யுங்கள். இந்தப் பிணத்தை ஸ்வாமிகள் காலடியில் போட்டு வருகிறேன்" என்று ஆசிரமக் காவலனிடம் கூறிவிட்டு, தான் சொன்னது நடக்கிறதா என்று பார்க்காமலே ஆசிரமப் பெருங்குடிலை நோக்கி நடந்தான்.

அந்த ராட்சஸனுடைய அசகாய வேலையைப் பார்த்து பிரமிப்பினால் இருதரப்பு வீரர்களும் வாயைப் பிளந்து கொண்டு நின்றார்களே தவிர, செயல் எதிலும் இறங்கவில்லை. பிறகு சுரணை வந்ததும் எதிரிகள் வாட்களைக் கீழே எறிந்தார்கள். ஆசிரமக் காவலர் அவர்களைத் திரட்டிக் கால்நடையாகக் கொட்டகை ஒன்றுக்கு அழைத்துச் சென்று தங்க வைத்துவிட்டு, அவர்கள் புரவிகளைப் புரவிக் கொட்டியின் முகப்பிலிருந்த மூங்கில்களில் பிணைத்தார்கள்.

இந்த ஏற்பாடுகள் இங்கு நடந்து கொண்டிருக்கையில் எதிரித் தலைவனைத் தூக்கிக் கொண்டு ஒரு கையை விசிறிய வண்ணம் கிழவன் நந்தன் பின்தொடர நடந்து ஆசிரமப் பெருங்குடிலை அடைந்த மூர்சமத் "பெரியவரே! ஸ்வாமிகளிடம் நடந்ததைச்

zeevaa

சொல்லுங்கள். நான் உள்ளே வரலாமா என்று கேட்டு வாருங்கள்'' என்றான்.

கிழவன் உள்ளே சென்று சில விநாடிகளுக்குள் திரும்பினான். ''ஸ்வாமிகள் உடனே வரச்சொன்னார். உள்ளறையில் இருக்கிறார்'' என்று கூறி வழிகாட்டிச் செல்ல, மூர்சமத் பின்தொடர்ந்தான்.

அவன் உள்ளறைக்குள் நுழைந்தபோது ஸ்வாமிகள் வஜ்ரஹஸ்தரிடம் மிகவும் ரகசியமாக ஏதோ பேசிக் கொண்டிருந்தார். எதற்கும் கவலையைக் காட்டாத அவர் முகத்திலும் கவலை தெரிந்தது. ''வஜ்ரஹஸ்தா! இன்றைய விளைவு நாம் அடியோடு எதிர் பார்க்காதது. இதனால் விபரீத விளைவுகள் ஏற்படலாம்'' என்று கவலையுடன் சொல்லிக்கொண்டிருந்தபோது அவரது பீடத்தை அணுகிய மூர்சமத் அவர் காலடியில் தனது தோளிலிருந்த சுமையைப் போட்டான். சுமையைப் போட்டவன் எதிரியைக் குப்புறப் போட்டதால், ''யார் இவன்?'' என்று ஸ்வாமிகள் வினவினார். மூர்சமத் அவனைத் தனது காலால் திருப்பவே, அவன் மயக்கமடைந்த நிலையில் மல்லாந்து கிடக்க அவன் முகம் நன்றாகத் தெரிந்தது ஸ்வாமிகளுக்கு. அந்த முகத்தைக் கண்ட ஸ்வாமிகளும் வஜ்ரஹஸ்தரும் ஏககாலத்தில் பிரமிப்படைந்து ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். இருவரும் பல வினாடிகள் பேசவில்லை. ஸ்வாமிகளே முதலில் பேச முற்பட்டு, ''சமத்! இவனைக்கொன்று விட்டாயா?'' என்று வினவினார்.

''இல்லை. ஸ்வாமிகள் உத்தரவில்லாமல் இந்த ஆசிரம எல்லையில் எந்தக் கொலையும் நடக்கக்கூடாதென்று உத்தரவிருப்ப தாகக் கேள்வி'' என்றான் மூர்சமத்.

ஸ்வாமிகள் மீண்டும் யோசித்தார். ''சமத்! இவனை நீ கொல்லாமல் விட்டது தவறு'' என்று கூறினார்.

அவர் குரலில் கொலை உணர்ச்சி இருப்பது புரிந்தது மூர்சமதுக்கு. அதனால் தனது பற்களை நன்றாகக் காட்டித் திருப்தியுடன் தலையை அசைத்த மூர்சமத். ''இப்பொழுதும்

zeevaa

குடிமுழுகிப் போய்விடவில்லை. ஸ்வாமிகள் இப்பொழுது உத்தரவிட்டாலும்...'' என்று வாசகத்தை முடிக்காமல் விட்டான்.

முடிக்காமல் விட்ட வாசகத்தைப் பூர்த்தி செய்து கொள்வது ஸ்வாமிகளுக்கோ வஜ்ரஹஸ்தருக்கோ ஒரு பிரமாதமாயில்லாததால் ஸ்வாமிகளின் இதழ்களில் புன் முறுவல் அரும்பிற்று. வஜ்ரஹஸ்தர் முகத்தில் மட்டும் ஈயாடவில்லை. ''ஸ்வாமி! இதனால் கலிங்கம் சோழப் பேரரசின் சீற்றத்துக்கு இலக்காகலாம்'' என்று கவலையுடன் சொன்னார்.

''அதற்கு அஞ்சுகிறாயா வஜ்ரஹஸ்தா?'' என்று ஸ்வாமிகள் வினவினார்.

''வஜ்ரஹஸ்தன் போருக்கு அஞ்சுபவன் அல்ல. ஆனால் அனாவசியப் போரும் விரும்பத்தக்கதல்ல. கலிங்கத்தின் மீது ஏற்கனவே சோழ வேந்தன் ஒரு கண் வைத்திருக்கிறான். படையெடுக்கச் சாக்கை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். அந்தச் சாக்கை இந்த நிகழ்ச்சி அளிக்கும்'' என்று வருத்தத்துடன் சொன்னார் கலிங்க வேந்தர்.

அது உண்மை என்பதற்கு அறிகுறியாகத் தலையாட்டிய ஸ்வாமிகள் மூர்சமதை நோக்கி, ''இவனை ஏன் தாக்கினாய்?'' என்று வினவினார்.

''இவனும் இவனைச் சேர்ந்த பத்துப் பேர்களும் ஆசிரமத்தில் நுழைய முற்பட்டார்கள். தங்கள் காவலர் தடுத்தும் கேட்கவில்லை. இருதரப்பு வீரர்களும் கை கலக்கும் நிலை ஏற்பட்டது. அதைத் தவிர்க்க முதலில் நுழைந்த இவனை நான் புரவியிலிருந்து தூக்கிக் கொண்டேன். சிறிது திமிறினான். அதை அடக்க லேசாகக் கழுத்தைப் பிடித்துச் சமாதானம் செய்தேன். இல்லாவிட்டால் ஆசிரமத்தில் இத்தனை நேரம் பலர் மாண்டிருப்பார்கள்'' என்று கூறினான் மிகப் பணிவுடன்.

zeevaa

அதுவரை மௌனமாக இருந்த நந்தன், ''அத்தனையும் உண்மை ஸ்வாமி. ஆசிரமக் காவலர் கூழாங்கல் வண்டியையும் இழுத்து வந்தார்கள். இவனுடன் பத்துபேர் வந்திருக்கிறார்கள். ஆசிரம விதிகளை மதிக்காதவர்கள்'' என்று விஷயத்தை விளக்கினான்.

''சரி, நீங்கள் சென்று விஜயனை அழைத்து வாருங்கள்'' என்று அவர்களை அனுப்பிய ஸ்வாமிகள், ''விஜயஹஸ்தா! கதவைச் சாத்து'' என்று உத்தரவிட்டார்.

விஜயஹஸ்தர் கதவைத் தாளிட்டுத் திரும்பியதும் ஸ்வாமிகள் தமது கமண்டலத்திலிருந்து நீரைக் கீழே மயங்கிக் கிடந்தவன் முக்கத்தில் அடித்தார். அதற்கும் அவன் கண் விழிக்காது போகவே, அவன் கழுத்தைப் பரிசோதிக்கும்படி விஜயஹஸ்தருக்கு உத்தரவிட்டார். விஜயஹஸ்தர் மண்டியிட்டு உட்கார்ந்து அவன் கழுத்தை ஊன்றிக் கவனித்து, ''ஸ்வாமி! கழுத்தில் சிறிது கருரத்தம் கட்டியிருக்கிறது. ஆனால் அதிகமாக நெறிக்கப்படவில்லை'' என்றார்.

அதைக் கேட்ட ஸ்வாமிகள் தமது அறையின் ஒரு மூலைக்குச் சென்று சில பச்சிலைகளைக் கொண்டு வந்தார். அவரும் மண்டியிட்டு, கிட்டிக் கிடந்த அவன் பற்களை வஜ்ரஹஸ்தரைத் திறக்கச் சொல்லி, பச்சிலைகளைத் தமது இரு கைகளாலும் கசக்கி இரண்டு மூன்று பச்சிலை ரசத்துளிகளை அவன் வாயில் பிழிய, அவன் கண்களை மெதுவாகத்திறந்தான். ஸ்வாமிகளை மிரள மிரளப் பார்த்தான். பிறகு ஸ்வாமிகளை நோக்கி, ''துறவி! உனக்குக் கேடு காலம் பிறந்திருக்கிறது. என்னைத் தொட்டவர் யாரையும் நான் சும்மா விடவில்லை'' என்று முணுமுணுத்தான்.

அவனது திமிரான பேச்சைக் கேட்ட விஜயஹஸ்தர் முகத்தில் சினம் துளிர்த்தது. ''ஸ்வாமி! இவனை மூர்சமத் கொல்லாமல் விட்டது பிசகு. இவனைச் சிறை செய்யட்டுமா. ஆசிரமத்தில் துராகிருதமாக நுழைய முயன்றதற்கு?'' என்று வினவினார் திரிகலிங்காதிபதி விஜய ஹஸ்தர்.

ஸ்வாமிகள் விஜயஹஸ்தரைச் சமாதானப்படுத்தும் வகையில் கையை அசைத்து, ''வஜ்ரஹஸ்தா! இவன் உயிரோடிருப்பதைவிடப் பிணமாகிவிட்டால் ஏற்படும் தொல்லை அதிகம்'' என்று கூறிவிட்டுக் கீழே கிடந்தவனை நோக்கி, ''சோழ மன்னன் செய்தி அனுப்பியிருக்கிறானா?'' என்று வினவினார்.

கையைத் தூக்க முடியாததால் தனது கச்சையைக் கண்களால் நோக்கினான் அவன். அந்தக்கச்சையிலிருந்த ஓலையை எடுத்து விஜயஹஸ்தரிடம் கொடுத்து, ''படி!'' என்று சொன்னார் ஸ்வாமிகள்.

சோழ முத்திரை வைக்கப்பட்டிருந்த ஓலை முத்திரைகளை உடைத்து விஜயஹஸ்தர் ஓலையைப் படித்தார். ''திரிகலிங்காதிபதி விஜயஹஸ்த மன்னனுக்கும் சிவகோகர்ண ஸ்வாமிகளுக்கும் சோழ வேந்தன் வீரராஜேந்திர மாமன்னன் விடுக்கும் ஓலை. சோழ நாட்டின் பெரு விரோதியும், சிங்களத்துச் சோழப் படைகளைப் பெரிதும் நாசம் செய்தவனும், சோழர்களால் முறியடிக்கப்பட்டுச் சிங்களத்தில் மறைந்து உறைந்தவனுமான விஜயபாகு கலிங்கத்துக்கு வந்திருப்பதாகவும், ஸ்வாமிகள் தமது ஆசிரமத்தில் அவனுக்குப் புகலிடம் அளித்திருப்பதாகவும் அறிகிறோம். சோழ நாட்டு எதிரிக்குப் புகலிடமளிப்பது சோழ நாட்டுக்குத் துரோகம் செய்வதாகும். அவனை உடனடியாக இந்த ஓலை கொண்டுவரும் எனது வீரர்களிடம் ஒப்படைக்கவும்.'' அதற்குக் கீழே சோழராஜா முத்திரை பொறிக்கப்பட்டிருந்தது.

இதை விஜயஹஸ்தர் படித்த பிறகு இருவருமே சில வினாடிகள் சிந்தனைவசப்பட்டனர். ''சோழ மன்னன் வேண்டுகோளை நாம் மீற முடியாது'' என்றார் ஸ்வாமிகள்.

''கலிங்கம் சுதந்திர நாடு. அதற்குச் சோழ வேந்தன் உத்தரவிட முடியாது'' என்றார் விஜயஹஸ்தர்.

ஸ்வாமிகள் சொன்னார்: ''ஆனால் ஏதாவதொரு சாக்கை வைத்துப் படையெடுக்க முடியும்'' என்று.

zeevaa

''அதற்குச் சித்தமாயிருக்கிறேன்'' என்றார் விஜய ஹஸ்தர்.

''சோழர் பலம் பெரிது'' என்றார் ஸ்வாமிகள்.

''அதையும் பார்ப்போம்'' என்றார் விஜயஹஸ்தர்.

ஸ்வாமிகள் சிந்தித்தார். ''போர் விரும்பத்தக்கதல்ல...'' என்றார் சிந்தனைக்குப் பிறகு.

''நம்மிடம் வந்திருக்கும் விஜயபாகுவைப் பிடித்துக் கொடுப்பது விரும்பத்தக்கதா?'' என்று கேட்டார் விஜய ஹஸ்தர்.

''இல்லை'' என்ற ஸ்வாமிகள், மீண்டும் சிந்தனையில் இறங்கினார். அந்தச் சமயத்தில் கீழே கிடந்தவன் மயக்கம் தெளிந்ததால் லேசாக நகைத்தான். அந்த நகைப்பை நோக்கிய ஸ்வாமிகள், ''நல்லது நல்லது'' என்று கூறிவிட்டு விஜயஹஸ்தரை நோக்கி, ''இந்த ஓலை நம்மிடம் கிடைத்திராவிட்டால்?'' என்று வினவினார்.

''எப்படிக் கிடைக்காதிருக்கும்?'' விஜயஹஸ்தர் வினவினார்.

''இவன் இங்கு வராதிருந்தால் ஓலை எப்படி நமக்குக் கிடைக்கும்?'' என்று கேட்ட ஸ்வாமிகளின் கருணைக் கண்கள் அர்த்த புஷ்டியுடன் விஜயஹஸ்தரை நோக்கின.

விஜயஹஸ்தர் முகத்தில் பேரதிர்ச்சி தெரிந்தது. ''ஸ்வாமி தாங்கள் சொல்வது...'' என்று இழுத்தார் கலிங்க மன்னன் அதிர்ச்சியுடன்.

''அர்த்தசாஸ்திர சம்மதம். நம்மை நாசம் செய்ய முயலும் எதிரிகளுக்கு நற்கதி அளிப்பது தர்மம். அதுவும் நம்மைப் பார்த்து நகைக்கும் இவனும் இவனுடன் வந்திருப்பவர்களும் ஏதாவது விபத்துக்கு ஆளானால் நாமா பொறுப்பாளி?'' என்று கேட்ட ஸ்வாமிகள். தமது உருண்டு திரண்ட கைகளை ஒருமுறை நோக்கினார். பிறகு விரல்களை இணைத்துச் சொடுக்கினார்.

zeevaa

கண்களைத் தரையில் கிடந்தவன் மீது நிலைக்க விட்டார். அவன் முகத்திலிருந்த சிரிப்பு உறைந்தது. முகத்தில் கிலி தாண்டவமாடியது.

''விஜயஹஸ்தர் மூர்சமதை அழைத்து வா'' என்று மீண்டும் இட்ட உத்தரவைக் கேட்டதும் கீழே கிடந்தவன் இனி தான் எழுந்திருக்க அவசியம் ஏற்படாது என்பதை உணர்ந்தான்.

அந்தச் சமயத்தில் அவனுக்கு பக்தி ஏற்பட்டு. ''சிவசிவா!'' என்று ஸ்மரித்தான்.

''அபாயம் வரும்போது, மனிதக் கொழுப்பு பயன்படாதபோது, ஆண்டவன் மனிதர் மனங்களில் துளிர்க்கிறான்'' என்று ஸ்வாமிகள் வேதாந்தம் பேசினார். ''யாரும் என்றாவது அவன் திருவடிகளுக்குப் போக வேண்டியது அவசியம்'' என்றும் முடிவு கட்டினார்.



zeevaa

# 20. மரத்தில் தைத்த வாளி

மூர்சமதை அழைத்துவரும்படி வஜ்ரஹஸ்தருக்கு உத்தர விட்டதன்றி, தனக்கு சிவலோகப் பிராப்தி அளிப்பது ஒன்றுதான் சரியான மார்க்கம் என்பதை ஸ்வாமிகள் வலியுறுத்தியதைக் கேட்ட சோழ தூதன் தனக்கு முடிவுகாலம் நெருங்கி விட்டதை உணர்ந்து கொண்டதால் கோபத்தைவிட்டு கிலிக்கு இலக்காகி, "ஸ்வாமி! நீங்கள் செய்வது நியாயமல்ல," என்று கெஞ்சினான்.

தூதன் சொற்களைக் கேட்ட ஸ்வாமிகள் முகம் மலர்ந்து வஜ்ரஹஸ்தரை நோக்கி, "வஜ்ர்ஹஸ்தா! இவன் குணம் மாறிவிட்டதைக் கவனித்தாயா?" என்று வினவினார்.

ஸ்வாமிகள் சொன்னதின் அர்த்தம் புரியாததால், "குணம் மாறிவிட்டதா! எப்படி?" என்று விசாரித்தார் வஜ்ரஹஸ்தர் என்ற இயற்பெயரையும், பல போர்களை வென்று திரிகலிங்க ஏகாதிபத்தியத்தை ஸ்தாபித்ததால் விஜயஹஸ்தனென்ற சிறப்புப் பெயரையும் பெற்ற திரிகலிங்காதிபதி.

ஸ்வாமிகள் சொன்னார்: "முதலில் என்னைத் துறவி என்று அழைத்தான். இப்பொழுது ஸ்வாமிகள் என்கிறான். சிவ சிவா என்று நாமஸ்மரணை செய்கிறான். மரணம் தலை நீட்டும் போது மனிதன் எவ்வளவு சீக்கிரம் மாறுதலடைகிறான்?" என்று. அடுத்து ஸ்வாமிகள் சிறிது சிந்தனையில் இறங்கினார். "எதற்கும் நாம் அபயனை கலந்து கொண்டு ஒரு முடிவுக்கு வருவோம்," என்று முடிவாகக் கூறிவிட்டு வெளியிலிருந்த பணிப்பெண்ணை அழைத்து மூர்சமதைக் கூட்டி வரும்படி உத்தரவிட்டார். சற்று நேரத்திற் கெல்லாம் வந்த மூர்சமதை நோக்கி, "சமத்! இவன் நமக்கு

zeevaa

# விஜய மகாதேவி





சாண்டில்யன்

zeevaa

வேண்டியவன். இவனை உனது அறையில் வைத்து வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடு. இவனை இன்று மாலை சந்திக்கிறேன்,'' என்று கூறினார்.

மூர்சமத் கீழே கிடந்தவனை நோக்கினான் சில வினாடிகள். பிறகு ஸ்வாமிகளைப் பார்த்து, ''இவனுக்கு இன்னும் என்ன சௌகரியம் செய்ய வேண்டும்? முடிந்ததை ஏற்கனவே செய்திருக்கிறேன். இன்னும் செய்தால் இவன் தாங்கமாட்டான்,'' என்றான் மூர்சமத்.

ஸ்வாமிகள் மெல்ல நகைத்தார். ''சமத்! நீ இவன் கழுத்துக்குச் செய்த சௌகரியத்தைச் சொல்லவில்லை. உண்மையாகவே இவனுக்கு உணவளித்து கவனித்துக் கொள்,'' என்று கூறினார் ஸ்வாமிகள் நகைப்பின் ஊடே.

ஸ்வாமிகளுக்குத் தலைவணங்கி, ''தங்கள் உத்தரவு,'' என்ற சமத். கீழே கிடந்தவனைத் தனது இருகைகளாலும் தூக்கப்போனான். அவன் அதற்கு இடங்கொடாமல் மெள்ள எழுந்து தலையை ஒருமுறை இப்படியும் அப்படியும் ஆட்டினான். ''என்னை யாரும் தூக்க அவசியமில்லை. என்னால் நடக்க முடியும்.'' என்ற சோழதூதன் இரண்டு அடிகள் தள்ளாடித்தள்ளாடி எடுத்து வைத்தான்.

அதைக் கண்ட மூர்சமத், ''ஸ்வாமி! இவன் நடக்கிறானே?'' என்று வியப்பைக் காட்டினான்.

''ஆம், நடக்கிறான்,'' என்றார் ஸ்வாமிகள் விஷமம் ஒலித்த குரலில்.

''நடக்கவேண்டுமா?'' என்று சமத் கேட்டான்.

''நடக்கட்டும். இல்லாவிட்டால் இவனைத் தூக்கிக் கொண்டு போய் சோழ நாட்டில் விடும்படியாயிருக்கும்.'' என்ற ஸ்வாமிகள், ''மாலையில் இவனை இங்கு கொண்டு வா,'' என்றார்.

zeevaa

தளர்நடை போட்ட சோழ தூதன் ஸ்வாமியை நோக்கித் திரும்பி ''ஸ்வாமி என்னிடம் அதிகமாக விளையாட வேண்டாம்,'' என்று எச்சரித்தான். ''மாலை யாரும் என்னை இங்கு கொண்டுவர வேண்டாம். நானே வருவேன். தவிர என் வீரர்கள் பத்துப்பேர் இருக்கிறார்கள்,'' என்றும் எச்சரித்தான்.

''இவனுடன் பத்துப் பேரா வந்திருக்கிறார்கள்?'' என்று ஸ்வாமிகள் விசாரித்தார் மூர்சமதை நோக்கி.

''ஆம். ஆசிரமக் கோடிக் கொட்டகையில் இருக்கிறார்கள். அவர்களிடம் ஆயுதங்கள் இல்லை. மிகவும் நல்லவர்கள். தலைவன் அகப்பட்டதும் வாட்களைக் கீழே எறிந்தார்கள்,'' என்ற மூர்சமத், ''வாருங்கள் வீரர் தலைவரே,'' என்று மிக மரியாதையாக அழைத்து அவன் கையொன்றைப் பிடித்து பலவந்தமாக வெளியில் இழுத்துச் சென்றான்.

அவன் சென்றதும் வஜ்ரஹஸ்தரை நோக்கிய ஸ்வாமிகளின் முகத்தில் பெரும் கவலை தெரிந்தது. ''வஜ்ரஹஸ்தா! இன்று காலை வேங்கி நாட்டு இளவல் அபயன், விஜயனால் காயப்படுத்தப் பட்டிருக்கிறான். இதனால் வேங்கி நாட்டு விரோதம் ஏற்படும். அவன் சோழன் பேரனானதால் சோழநாட்டு விரோதம் ஏற்படலாம். இப்பொழுது வீர ராஜேந்திர சோழன் ஓலையில் கண்ட ஆணையை மீற வேண்டியிருக்கிறது. கலிங்க நாட்டின் மீது சோழன் படையெடுக்க இந்த ஒரு சாக்கே போதும். விஜயனால் இரண்டு நாடுகளின் விரோதம் உனக்கு ஏற்பட்டிருக்கிறது,'' என்று சுட்டிக்காட்டினார் கவலை குரலிலும் தெரிய.

வஜ்ரஹஸ்தர் என்ற விஜயஹஸ்தர் சிந்தனையில் இறங்கினார். ''இந்த அற்ப காரணங்களுக்கெல்லாம் வேங்கி நாடும் சோழ நாடும் கலிங்கத்துடன் பகை கொள்வதென்றால் அதைக்கண்டு நாம் அஞ்ச முடியாது. ஏதாவது சாக்கை வைத்துக்கொண்டு சோழன் படையெடுக்க ஆசைப்பட்டால் அதை நாம் பொருட்படுத்துவதும் தவறு. முதலில் சோழ வீரர்கள் அனுமதியின்றி கலிங்கத்துக்குள்

zeevaa

வந்ததே தவறு. வந்து இங்கு என் பாதுகாப்பில் இருப்பவர்களை சிறைசெய்ய முயலுவது பெரும் தவறு. முதலில் ஆதிமல்லனும் அவன் ஆட்களும் கலிங்கத்தில் புகுந்து என் பெண்ணையே சிறை பிடிக்கப் பார்க்கிறார்கள். அடுத்து சோழ தூதன் பத்துப் பேருடன் வந்து துராக்கிருதமாகக் கலிங்கத்தின் எல்லைக்கு உட்பட்ட ஆசிரமத்தில் நுழைகிறார்கள். இந்த ஒவ்வொரு செயலும் நட்பைக் குறிப்பதல்ல. சோழர்கள் ஆணவத்தைக் குறிக்கிறது. அதற்கு நாம் அஞ்சவில்லை,'' என்று விளக்கினார் சிறிது சிந்தனைக்குப் பிறகு.

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையிலேயே அந்த அறையின் கதவு தட்டப்பட்டது. ''வரலாம்,'' என்று ஸ்வாமிகள் குரல் கொடுத்தபின்பு அபயன் உள்ளே நுழைந்தான்.

அவன் இடையிலிருந்த காயத்தைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. ஸ்வாமிகளை நோக்கி, ''ஸ்வாமி! ஆசிரமத்தில் ஏதோ பரபரப்புக் காணப்படுகிறதே,'' என்றான்.

ஸ்வாமிகள் முகத்தில் சாந்தம் நிலவியது. ''அபயா! சில வீரர்கள் துராக்கிருதமாக ஆசிரமத்துக்குள் நுழைய முயன்றார்கள். அதனால் ஏற்பட்டன சில சில்லறை நிகழ்ச்சிகள்,'' என்று கூறினார்.

''ஸ்வாமி, நான் அருவிக் கரையிலிருந்து வரும் போது அந்த நிகழ்ச்சிகளைப் பார்த்தேன்,'' என்று அபயன் கூறினான்.

ஸ்வாமிகள் வஜ்ரஹஸ்தரை நோக்கி, ''அபயனிடம் அந்த ஓலையைக் கொடு,'' என்று சொன்னார். வஜ்ரஹஸ்தர் ஓலையைக் கொடுக்க அதை வாங்கிப் படித்த அபயன், ''சோழ மன்னர் தங்களுக்கோ கலிங்க மன்னருக்கோ எப்படி உத்தரவிட முடியும்!'' என்று கேட்டான் ஸ்வாமிகளைப் பார்த்து.

''அதுதான் எனக்குப் புரியவில்லை,'' என்றார் ஸ்வாமிகள்.

''இந்த ஓலையை எழுதியது சோழ தேவரல்ல,'' என்று திட்டவட்டமாகக் கூறினான் அபயன். ''இந்த மாதிரிப் பண்பாடற்ற

zeevaa

வழிகளில் சோழமன்னர் ஒருக்காலும் இறங்க மாட்டார்,'' என்றும் சொன்னான்.

''சோழ நாட்டு முத்திரைகள் இருந்தன ஓலையில்,'' என்று சுட்டிக்காட்டினார் வஜ்ரஹஸ்தர்.

''அதே மாதிரி முத்திரைகள் செய்வது கஷ்டமல்ல,'' என்ற அபயன்'' எதற்கும் வந்த தூதனை விசாரிப்போம்,'' என்றார்.

''மாலையில் விசாரிக்கிறேன். இப்பொழுது அவன் உடல் நலம் சரியில்லை'' என்றார் ஸ்வாமிகள்.

புரிந்ததற்கு அறிகுறியாக தலையை அசைத்த அபயன். ''மூர்சமத் தூதனைப் புரவியிலிருந்து தூக்கியதையும் கழுத்தை நெறித்ததையும் நான் பார்த்தேன். ஆனால் நான் மாலைவரை காத்திருக்க முடியாது'' என்றான்.

''ஏன் அபயா! என்ன அவசரம் உனக்கு? ஒரு நாள் தங்கிப் போகலாமே,'' என்று ஸ்வாமிகள் சொன்னார்.

''நான் இங்கு வந்தது தங்களிடம் மற்போர் பயிற்சி பெற. ஆனால் அதற்குத் தற்சமயம் சூழ்நிலை சரியில்லை. இன்னொரு சமயம் வருகிறேன். இன்றைய சூழ்நிலை என் மனச்சாந்தியைக் கெடுத்து விட்டது.'' என்ற அபயன், ''எனக்கு விடை கொடுங்கள்,'' என்றான்.

''உன் இடைக்காயம்?'' என்று ஸ்வாமிகள் விசாரித்தார். கவலையுடன்.

''சொற்பம். அதற்குச் சிங்கள மன்னன் கட்டும் போட்டு விட்டான். அந்தக் கட்டை அவிழ்க்கவோ வேறு வைத்தியம் செய்து கொள்ளவோ நான் விரும்பவில்லை.'' என்ற அபயன் வெளியே செல்லத் திரும்பினான்.

''பொறு அபயா!'' என்று அவனைத் தடுத்த ஸ்வாமிகள் அவனை அணுகி அவனது அங்கியைத்தூக்கி இடையிலிருந்த கட்டைப்

zeevaa

பார்த்தார். ''நல்ல கட்டு! கலிங்கத்துச் சேலை மிக இதமாயிருக்கும். யார் சேலை இது'' என்று ஸ்வாமிகள் கேட்டார் புன் சிரிப்புடன்.

''என் சகோதரியின் சேலை,'' என்று சொன்னான் அபயன்.

''யாரவள்?''

''கலிங்கத்து அரசகுமாரி.''

''அவள் சேலையையா கிழித்துக் கட்டுப்போட்டாள்?''

''அவள் கிழிக்கவில்லை. அவள் காதலன் கிழித்தான். அவள் மறுக்கவில்லை.''

இதைக் கேட்ட ஸ்வாமிகள் புன்முறுவல் கொண்டார். வஜ்ரஹஸ்தர் முகம் உணர்ச்சியற்ற கல்லாயிருந்தது. அபயன் ஸ்வாமிகளின் புன்முறுவலையும் வஜ்ரஹஸ்தர் முகக்கடினத்தையும் கண்டான். அதனால் லேசாகப் புன் முறுவல் செய்து, ''வருகிறேன் ஸ்வாமி,'' என்று கூறிவிட்டு வெளியே சென்றான்.

அடுத்த இரண்டு நிமிடங்களில் அபயன் புரவி ஆசிரமத்தி லிருந்து பறந்ததைக் குறிக்க அதன் குளம்படிகள் வேகமாக ஒலித்தன, ஸ்வாமிகள் வஜ்ரஹஸ்தர் இருவர் காதுகளிலும். வஜ்ரஹஸ்தனும் ஸ்வாமிகளிடம் விடைபெற்று, ''மாலை சந்திக்கிறேன் ஸ்வாமி,'' என்று கூறிவிட்டுத் தனது அறையை நோக்கி நடந்தார்.

இந்த அரசியல் தர்க்கங்கள் ஸ்வாமிகளின் அறையில் நடந்து கொண்டிருந்ததைச் சிறிதும் உணராத விஜயனும் திரிலோகசுந்தரியும் மரத்தடியில் உணர்ச்சிகளில் மூழ்கி நின்றிருந்தனர். அவள் புதுச்சேலையைப் பாதி கட்டிய சமயத்தில் பின்புறமாக வந்து தழுவிய விஜயன், ''சுந்தரி! எந்தச் சமயத்திலும் எந்த உடையிலும் நீ அழகாயிருக்கிறாய்,'' என்றான் குரலில் அன்பு சொட்ட.

''பாதிச் சேலையைத்தான் கட்டியிருக்கிறேன்,'' என்றாள் அவள் சினத்துடன்.

zeevaa

''போதும்,'' என்றான் விஜயன்.

''உங்களுக்குப் போதும், சரி விடுங்கள் என்னை யாராவது பார்க்கப் போகிறார்கள்,'' என்று மேலும் சினந்தாள் அவள்.

''அப்படியானால் வா. தோப்புக்குள் சென்று விடுவோம்,'' என்றான் விஜயன்.

அவள் முகத்தில் தவழ்ந்த இன்பச் சாயையைப் பின்னால் நின்ற விஜயன் கவனிக்கவில்லை. ''இப்பொழுது தோப்பில் என்ன வேலை?'' என்று கேட்டாள் அவள்.

''அங்கு மறைவு நன்றாயிருக்கும்,'' என்று சுட்டிக் காட்டினான் விஜயன்.

''எதற்கு மறைவு?''

''சேலையைக் கட்டிக்கொள்ள.''

''பாரதப் பெண்களுக்கு அத்தகைய மறைவு தேவையில்லை. சேலையின் ஒரு பகுதியால் உடலைச் சுற்றிக் கொண்டு இன்னொரு பகுதியைக் கட்ட முடியும். முடிவில் உடலைச் சுற்றி மறைத்த பகுதி மேலாடையாகிவிடும்.''

''அப்படியா! முடியுமா?''

''முடியும்.''

''அப்படியானால் தோப்புக்குள் வா. கட்டுவதை நான் பார்க்கிறேன்.

அரசகுமாரி நகைத்து அவனை நோக்கித் திரும்பினாள். ''அட வெட்கம் கெட்டவரே! உமக்குப் புத்தியில்லை. இருவரையும் நீண்ட நேரம் காணவில்லை என்று எனது பணிப்பெண்கள் தேடுவார்கள். ஸ்வாமிகளும் தேடுவார்.'' என்ற அரசகுமாரி அவனைத் தனது கையால் விலக்கி விட்டுச் சேலையை அவசர அவசரமாகக் கட்டிக் கொண்டு ஆசிரமப் பெருங்குடிலை நோக்கி நடந்து விட்டாள்.

zeevaa

விஜயன் மட்டும் நீண்ட நேரம் அந்த மரத்தடியிலேயே நின்றிருந்தான். அவன் சிந்தனையெல்லாம் திரிலோக சுந்தரியின் மோகன அழகில் லயித்திருந்தது. அப்பொழுது அவனுக்குத் தான் வந்த பணி, சிங்களம் எல்லாமே மறந்து விட்டது. முதல் காதலியைக் கூட மறந்தான். திரிலோகசுந்தரியின் எழில் வீசிய மோகனாஸ்திரத்தில் கட்டுண்டு நிலை குலைந்து நின்றான். பிறகு மெள்ளத் தனது அறையை அடைந்தபோதும், படுக்கையில் கிடந்த போதும் அவளைப் பற்றிய சிந்தனையிலேயே இருந்ததால் பணிப்பெண் கொண்டு வந்த உணவைக்கூட அரை குறையாகத்தான் சாப்பிட்டான்.

விநாடிகள் நிமிடங்களாகி நிமிடங்கள் ஜாமங்களாகி காலம் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. எப்படியும் இரவில் அரசகுமாரியைச் சந்தித்து விடுவது என்ற தீர்மானத்துடன் கட்டிலில் படுத்துக்கிடந்தான் அவன். ஆனால் இரவு வந்தும் அரசகுமாரியைப் பார்க்க முடியவில்லை அவனால். அரசகுமாரி அறைப் பக்கம் சென்று அங்கிருந்த பணிப்பெண்களை விட்டு அரச குமாரியை அழைக்கச் சொன்னான். ஆனால் காலையிலிருந்தே அரசகுமாரி அறைப்பக்கம் வரவில்லை," என்று பணிப்பெண் கூறவே மீண்டும் தனது அறைக்குத் திரும்பினான்.

இரவு நன்றாக ஏறியதும் ஆசிரமப் பின்புறம் பொழில்களிருந்த இடத்துக்குச் சென்று பார்த்தான். அங்கும் அவளில்லை. அதனால் சலித்த மனத்துடன் அறைக்குத் திரும்பி வந்து படுத்த அவன் உறங்க எண்ணிக் கண்களை மூடினான். அவன் மனம் பெரிதும் குழம்பிக் கிடந்தது.

குழம்பிக் கிடந்தது அவன் மனம் மட்டுமல்ல, வஜ்ரஹஸ்தர் மனமும் பெரும் குழப்பத்திலிருந்தது. சோழ தூதனை மாலை விசாரிப்பதாகச் சொன்ன ஸ்வாமிகள் இரவு முதிர்ந்ததும் தனக்குச் செய்தி ஏதும் அனுப்பாததை எண்ணி, காரணம் என்னவாயிருக்கும் என்று நினைத்துப் பார்த்தார். எதற்கும் ஸ்வாமிகளைக் கேட்டு

zeevaa

விடுவோம் என்று ஸ்வாமிகள் அறைக்குச் சென்றார். விசாரணையைப் பற்றி அவர் பிரஸ்தாபித்ததும், "ஓ! அதுவா? நாளை விசாரிப்போம்" என்று அசட்டையாகச் சொல்லிவிட்டார் ஸ்வாமிகள், அதனால் மீண்டும் தனது அறையை அடைந்த வஜ்ரஹஸ்தர் கட்டிலில் படுத்து நித்திரை வசப்பட முயன்றார்.

இரவு நன்றாக ஏறி நள்ளிரவும் வந்த சமயத்தில் ஸ்வாமிகள் தமது அறையிலிருந்து வெளியே வந்து ஆசிரமத்தை ஒருமுறை சுற்றினார். பிறகு ஆசிரமக்காவலரிடம் ஏதோ சொல்லிவிட்டுத் தமது பெருங்குடிலுக்குத் திரும்பி அரசகுமாரியின் அறையை நாடிச்சென்று அங்கு அரசகுமாரியிடம் ஏதோ பேசிவிட்டு விஜயன் அறைக்கு வந்தார்.

கட்டிலில் படுத்துப் பொய்த்துயில் கொண்டிருந்த விஜயனைத் தட்டி எழுப்பினார். கண்ணைத் திறந்து துள்ளி எழுந்த விஜயனைப் பேச வேண்டாமென்று சைகை செய்து, "விஜயா! உன்னைப் பெரிய ஆபத்து சூழ்ந்திருக்கிறது. ஆகையால் இப்பொழுதே கிளம்பி மூர்சமத், நந்தன் இவர்களுடன் சிம்மபுரச் சாலையில் சென்றுவிடு. அரசகுமாரி உன்னைப் பாதி வழியில் சந்திப்பாள். பிறகு குறுக்குப் பாதையொன்றில் உன்னை அழைத்துச் செல்லுவாள், அவள் சொல்கிறபடி கேள். நீயாக எதுவும் செய்யாதே" என்று சொன்னார்.

அதற்குமேல் தாமதிக்காத விஜயன் மூர்சமதுடனும் கிழவனுடனும் புறப்பட்டு ஆசிரமத்திலிருந்து கிளம்பி சின்னஞ்சிறு அருவியாக ஓடிக்கொண்டிருந்த வம்சதாராவைத் தாண்டி சிம்மபுரச் சாலையில் பயணம் செய்தான். எங்கும் நிற்காமல் பயணம் செய்த அவன் பொழுது விடிய ஒரு ஜாமம் இருக்கையில் லாங்குனியா நதிக்கரைக்கு வந்து புரவியிலிருந்து இறங்கி நதிக்கரையிலிருந்த ஒரு மரத்தின் பக்கத்தில் மண்டியிட்டு உட்கார்ந்து அதனருகே ஓடிக் கொண்டிருந்த நதியின் நீரை எடுத்துப் பருக வாயில் வைத்தான். அந்தச் சமயத்தில் அவன் பக்கத்திலிருந்த மரத்தில் எங்கிருந்தோ பறந்து வந்த ஒரு அம்பு சர்ரென்று பாய்ந்து சிக்கித் துடித்தது. எடுத்த

zeevaa

நீரைக் குடிக்கவில்லை விஜயன். அம்பை நோக்கினான். அதன் இறகில் ஓர் ஓலை கட்டியிருந்தது. அந்த ஓலையைப் பிரித்துப் பார்த்தான். அந்தச் சிறு வெளிச்சத்திலும் ஓலையின் எழுத்துக்கள் பளிச்சென தெரிந்தன. அந்த ஓலையில் பின்வரும் வாசகம் இருந்தது.

'சிம்மபுரத்தில் உனக்கு ஆபத்து காத்திருக்கிறது. அங்குள்ள பழைய அரண்மனைக்குப் போகாதே. அப்படியே போனாலும் அதன் கண்ணாடி அறைக்குள் நுழையாதே. -நண்பன்.'





zeevaa

# 21. குகையில் அலறிய குரல்

விடிய ஒரு ஜாமம் முழுக்க இருந்தாலும் விண்மீன்கள் வீசிய அல்ப வெளிச்சத்தில், மரத்தில் தைத்த வாளியின் அடி இறகில் கட்டடப்பட்டிருந்த ஓலையைப் பிரித்துப் படித்த விஜயன் சற்று எட்டப் பழுப்பு நிறப் புரவிமீது அமர்ந்திருந்த மூர்சமதை நோக்கி, ''சமத்! இதைப் பார்'' என்று அழைத்து, அவன் அருகில் வந்ததும் அவனிடம் ஓலையைக் கொடுத்தான். தனது பழுப்புநிறப் பெரும் புரவியிலிருந்து கீழே குதித்த மூர்சமத் விஜயனை அணுகி ஓலையை வாங்கிப் படித்தான். அவனுடன் தனது புரவியை நடத்தி வந்த கிழவனும் தனது கழுத்தை நீட்டி ஓலையைப் படித்ததும், ''சிங்கள வீரரே! இந்த ஓலையில் எழுதப்பட்டிருப்பது உண்மை. இதை அலட்சியம் செய்ய வேண்டாம்'' என்று யோசனை சொன்னான்.

மூர்சமத் அபிப்பிராயம் ஏதும் சொல்லவில்லையென்றாலும் அந்த ஓலையைச் சட்டை செய்ததாகத் தெரியவில்லை. ''ஒரு நாட்டின் அரசன் இன்னொரு நாட்டுக்குப் பாதுகாப்பின்றி வரும்போது அபாயத்தை எதிர்பார்க்கத்தான் வேண்டும். அபாயத்தையும், அவ்வப்பொழுது ஒவ்வொருவரும் நேர்முகமாக வும் மறைமுகமாகவும் செய்யும் எச்சரிக்கைகளுக்கும் அஞ்சுவதென்றால் இங்கு வந்ததே தவறு'' என்று மூர்க்கத்தனம் நிரம்பிய கரகரத்த குரலில் கூறினான்.

இருவர் சொற்களையும் கேட்ட விஜயன் மெதுவாகப் புன்முறுவல் செய்தான். ''இந்த ஓலை நாம் சிம்மபுரத்துக்கு போவதைத் தடை செய்யவில்லை'' என்று மெள்ள இழுத்து அர்த்தபுஷ்டியுடன் கிழவனையும் மூர்சமதையும் நோக்கினான்.

zeevaa

மூர்சமதின் மூளை அப்பொழுதுதான் வேலை செய்யத் தொடங்கியது. ''ஆம் ஆம். தடை செய்யவில்லை'' என்று எசமான் சொன்னதை ஆமோதித்தான்.

கிழவனான நந்தன் அதை முன்கூட்டியே அறிந்திருந்ததால், ''சிம்மபுரத்துக்குப் போவதைத் தடை செய்யவில்லைதான். ஆனால் நம்மை அங்குள்ள அரண்மனைக்குப் போக வேண்டாமென்று தடைசெய்கிறது'' என்று மெதுவாகப் பேசினான்.

மூர்சமதின் விழிகள் சற்றே உருண்டன. ''அதில் என்ன விசேஷம்?'' என்று வினவினான்.

விஜயன் மூர்சமதை நோக்கிக் கேட்டான்; ''நாம் பழைய அரண்மனைக்குக் போவதாக யாரிடமாவது சொல்லியிருக் கிறோமா?'' என்று.

மூர்சமதின் முகம் பளிச்சிட்டது விஷயத்தை மெள்ள உணர்ந்ததால், ''இல்லை'' என்ற அவன் பதிலில் வியப்பு இருந்தது.

''ஆனால் அதைப்பற்றி ஓலை குறிப்பிடுகிறது'' என்று சுட்டிக்காட்டினான் விஜயன்.

''ஆம்'' கிழவன் பதில் சட்டென்று வந்தது. ''இந்த ஓலையை அனுப்பியவனுக்கு நீங்கள் போகும் ஊர் மட்டுமின்றி இடமும் தெளிவாகத் தெரிந்திருக்கிறது'' என்றும் தொடர்ந்து சொன்னான் படகோட்டிக் கிழவன்.

கிழவன் சொற்களை ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த விஜயன், ''பெரியவரே! இதிலிருந்து இன்னொரு விஷயமும் தெரிகிறது'' என்றான்.

''என்ன வீரரே?'' -கிழவன் குரலில் சிறிது குழப்பம் தெரிந்தது.

''நான் யாரைத் தேடி கலிங்கம் வந்தேனோ அந்த மனிதன் இருக்கும் இடமும் தெரிகிறது. அவன் பழைய அரண்மனையில் தான் இருக்க வேண்டும். நாம் அவனைப் பார்ப்பதைத் தடை செய்ய

zeevaa

யாரோ முயலுகிறார்கள். முயலுபவன் சோழர்களைச் சேர்ந்தவன், என் மனத்தை அறியும் திறனும் வாய்ந்தவன்'' என்று விளக்கிய விஜயன், ''சரி வாருங்கள். மற்றவற்றை சிம்மபுரம் சென்றதும் சிந்திக்கலாம்'' என்று கூறிய அவன் மரத்தில் தைத்த வாளியையும் ஓலையையும் தன் கையில் செருகிக்கொண்டு தனது கரிய புரவிமீது ஏறினான். மூர்சமதும் தனது புரவிமீது ஏறிக்கொண்டதும் மூவரும் லாங்குனியா நதிக்கரையோரமாகச் சென்ற சிம்மபுர நெடுஞ்சாலையில் விரைந்தனர்.

இப்படி இரண்டு நாழிகைகள் பயணம் செய்ததும் அதுவரை நெடுஞ்சாலைப் பக்கமிருந்த புல்வெளி மறைந்து விட்டதையும், சாலையின் ஒரு பக்கத்தில் காடு அடைய முற்பட்டதையும் கண்ட விஜயன், ''பெரியவரே! இந்தக் காடு எதைச் சேர்ந்தது?'' என்று வினவினான்.

''மகேந்திர மலையைச் சேர்ந்ததுதான். லாங்குனி நதி குறுகி வருவதைப்பாருங்கள். அந்த மலைகளிலிருந்து உற்பத்தியாகும் ரிஷிகுல்யா, வம்சதாரா, லாங்குனியா ஆகிய மூன்று நதிகளின் பக்கங்களில் காடுகள் மிக அடர்த்தி. திருடர்களும் அதிகம்'' என்று பதில் சொன்னான் கிழவன்.

''நாம் ஸ்வாமிகளின் ஆசிரமத்திலிருந்து பாதித் தூரம் வந்திருப்போமா?'' என்று மீண்டும் கேட்டான் விஜயன்,

''இந்தக் காடே பாதித் தூரத்தில்தான் துவங்குகிறது'' என்று கிழவன் சொன்னான்.

''இங்கு அரசகுமாரி என்னைச் சந்திப்பாள் என்று ஸ்வாமிகள் சொன்னார்'' என்ற விஜயன், ''இங்கிருந்து சிம்மபுரத்திற்குக் குறுக்குப் பாதை ஏதாவது இருக்கிறதா?'' என்றும் வினவினான்.

கிழவன் சிறிது சிந்தித்துவிட்டு. ''சிறிது தூரம் போனால் இருக்கிறது. அது ஆபத்து நிறைந்தது. புரவிகள் நடப்பதும் கஷ்டம்'' என்று கூறினான்.

zeevaa

அதுவரையில் வாளாவிருந்த மூர்சமத் பெரிதாக நகைத்தான். "ஆபத்தைக் கண்டு அஞ்சுபவரல்ல என் எஜமான். எங்கள் புரவிகள் நடக்க முடியாத பாதையை இனிமேல்தான் ஆண்டவன் சிருஷ்டிக்க வேண்டும்" என்றும் கூறினான் நகைப்பின் ஊடே.

"புரவிகள் நடக்க முடியுமென்பதற்காகக் கஷ்டமான பாதையில் செல்ல வேண்டிய அவசியமில்லை. ஆபத்துக்குள் நாமாகத் தலையை நுழைக்கவும் தேவையில்லை. நமது சாமர்த்தியத்தை இங்குள்ளவர்களுக்கு நிரூபிக்கவும் நாம் வரவில்லை" என்று கிழவன் இடக்காகப் பேசினான்.

இதனால் வெகுண்ட மூர்சமத் தனது பழுப்பு நிறப்பெரும் புரவியைக் கிழவன் புரவியை நோக்கி நகர்த்திக் கிழவனை தூக்கப் போனான். "சமத்!" என்று விஜயனின் எச்சரிக்கைக் குரல் மூர் இனத்தானின் கைகளைத் தேக்கியது. "எசமான்! இவர் புரவி கரடுமுரடான பாதையில் நடக்க முடியாவிட்டால் அவரைத் தூக்கி எனது புரவியில் வைத்துக் கொள்ளலாமென்று பார்த்தேன்" என்று சமாதானம் சொன்னான் சமத்.

"என் புரவி கரடுமுரடான பாதையில் நடக்காதென்று யார் சொன்னது?" என்று கடுமையுடன் கேட்டான் கிழவன்.

"குறுக்கு வழியில் போக முடியாதென்று நீர்தானே தடுத்தீர்?" என்றான் சமத்.

"தடுக்கவில்லை. உள்ள ஆபத்தைச் சுட்டிக் காட்டினேன். உங்கள் தலைவிதி சரியில்லையென்றால் உங்களை யாரும் காப்பாற்ற முடியாது." என்று சினந்த கிழவன், "சரி வாருங்கள் வழி காட்டுகிறேன்." என்று முன்னால் தனது புரவியை நகர்த்தினான்.

அதற்குப் பிறகு மூவரும் பேசவில்லை. பயணம் மிக மௌனமாகவே நடந்தது. கிழவன் இப்புறமோ அப்புறமோ

zeevaa

பார்க்காமல் தனது புரவியை நடத்தினான். லாங்குனியா நதி மெள்ள குறுகலாகி பக்கத்துக்காடு வரவர அடத்தியாகத் தொடங்கியது. மகேந்திரமலையின் கடைசிப் பகுதியின் பெரும் பாறைகளும். இடையே செங்குத்தாக வளர்ந்திருந்த சந்தன மரங்களும் ஏதோ வீரர்கள் அணிவகுத்து நிற்பதைப் போன்ற பிரமையை ஏற்படுத்தின. விடிய இன்னும் இரண்டு நாழிகைகள் இருந்ததன் விளைவாக மிகக் கறுத்துவிட்ட சூழ்நிலை பக்கத்துக் காட்டுப்பகுதியைப் பயங்கரமாக அடித்திருந்தது. காட்டுக்குள் எங்கிருந்தோ நரிகள் ஓவென்று ஊளையிடும் சத்தமும், ஓநாய்களின் பயங்கர அரவமும் கேட்டன. அந்த இடம் வந்ததும் தனது புரவியை நிறுத்திய கிழவன் நந்தன் சற்றே திரும்பி, ''எசமான்! இதோ பிரிகிறது குறுக்குப்பாதை,'' என்று சுட்டிக் காட்டினான்.

விஜயன் அந்தப் பாதையைப் பிரமிப்புடன் கவனித்தான். குறுக்குப் பாதை மிகக்குறுகிய பாதையாகவே காணப்பட்டது. அதில் ஒரே சமயத்தில் அக்கம்பக்கத்தில் இரண்டு புரவிகளுக்கு மேல் போகமுடியாதென்பதைப் புரிந்து கொண்டான். பாதையின் அக்கம்பக்கத்தில் காடு மிக அடர்ந்ததாயிருந்ததையும், சில முள் மரங்கள் பாதையின் குறுக்கே லேசாகத் தலையை நீட்டிக் கொண்டிருந்ததையும் கண்ட சிங்களத்து இளவல், அந்தப் பாதையில் சில இடங்களில் குனிந்தும் சில இடங்களில் சாய்ந்தும் பயணம் செய்யவேண்டியிருக்குமென்பதைப் புரிந்து கொண்டதால், ''பெரியவரே! பாதையில் நான் முன்னால் செல்கிறேன். நீங்கள் என்னைத் தொடர்ந்து வாருங்கள்,'' என்று கூறிவிட்டுத் தனது புரவியை முன்னால் நடத்திக் குறுக்குப் பாதையில் புகுந்து விட்டான். புகுந்து சிறிது தூரம் சென்றதும் புரவி கூழாங்கற்கள் மேல் நடக்க வேண்டிய அவசியமேற்பட்டாலும் பக்கங்களில் இடையிடையே மகிழமல்லி மலர்கள் ஆகாயமளாவி நின்றதையும், அந்த மகிழ மலர்கள் எங்கும் சுகந்தத்தைப் பரப்பியதையும் கவனித்தான் விஜயன். அந்தச் சூழ்நிலை அவனுக்கு அரசகுமாரியின்

zeevaa

நினைப்பைத் தூண்டிவிடவே, "இங்கு சுந்தரி இருந்தால் அவள் மீது இந்த மகிழ மலர்கள் விழுமே. அதனால் அவள் கருங்குழல் எத்தனை நறுமணம் பெறும்?" என்று சிந்தித்தான். அந்த நினைப்பால் ஏற்பட்ட இன்பத்துடன், "அரசகுமாரி இங்கு என்னை நிச்சயமாகச் சந்திப்பாள் என்று ஸ்வாமிகள் சொன்னாரே, அவள் ஏன் சந்திக்கவில்லை?" என்று யோசனையும் துன்பமும் அவன் சித்தத்தை ஆட்கொண்டது.

இப்படி யோசித்துக் கொண்டே சிறிது தூரம் சென்றதும் குறுகலான வழி சிறிது அகன்றது. காடும் அத்தனை அடர்த்தியாயில்லை. இருப்பினும் அகன்ற பாதையை சிறிது தூரத்துக்கு அப்புறம் காணாததையும் குறுக்கே பல செடிகள் போடப்பட்டுப் பாதை அடியோடு மறைக்கப்பட்டிருப்பதையும் கண்ட விஜயன் திரும்பிக் கிழவனை நோக்கி, "பாதை அடைக்கப்பட்டிருக்கிறது," என்றான்.

கிழவனும் தனது புரவியை விஜயனுக்கு அருகில் கொண்டு வந்து நிறுத்தி, "பிரபு! இதை யாரோ வேண்டுமென்றே அடைத் திருக்கிறார்கள். அதோ சற்றுத் தூரத்தில் மீண்டும் பாதை தொடர்கிறது பாருங்கள்," என்று எட்ட இருளில் லேசாகத் தெரிந்த பாதையைச் சுட்டிக் காட்டினான். "இந்த மரக்கிளைகளை அப்புறம் எடுத்துப் போட்டுவிட்டுப் போவோம்." என்றும் கூறி இறங்க முற்பட்ட கிழவனைத் தனது கையின் சைகையால் தடுத்த விஜயன் தனது புரவியைச் சிறிது பின்னுக்கு நகர்த்தி மீண்டும் முன்னால் வேகமாகச் செலுத்தி அதன் வயிற்றில் உதைக்க அந்த அரபு ஜாதிப் புரவி ஆகாயத்தில் பறக்கும் தெய்வீகப் புரவிபோல் பெரிதாக எழும்பி அம்புபோல் பாய்ந்து அடைப்புக்கு அப்பால் குதித்து விட்டது. அந்த லாவகம் கிழவன் புரவிக்கு இல்லாததால் கிழவன் சமதை நோக்கி, "சமத்! உன்னால் முடியுமானால் நீயும் எசமானனுக்குத் துணையாகப் பாய்ந்துவிடு. நான் வேறு வழியில் சிறிது தாமதித்து வருகிறேன்," என்றான்.

zeevaa

மூர்சமத் தலையை அசைத்துத் தனது புரவியைத் தூண்டினான். விஜயன் புரவி பாய்ந்ததுமே நிலை கொள்ளாமல் தவித்த பழுப்புநிறப் புரவி சமதின் கால் பட்டதும் அசுர வேகத்தில் அந்த அசுரனையும் சுமந்து தாண்டியது. அது தாண்டிய சமயத்தில் கிழவன் பக்கத்திலிருந்த காட்டில் புகுந்து விட்டான். பாதையின் அடைப்பைத் தாண்டிவிட்ட விஜயனும் மூர்சமதும் சிறிது நேரம் பாதையில் நின்றனர். அங்கிருந்தே சுற்றுமுற்றும் கவனித்த விஜயன் மகேந்திர மலையின் கடைசிப் பகுதி அருகில் தெரிந்ததையும் அதன் அடிவாரத்தில் ஒரு குகை தெரிவதையும் கண்டு அந்த குகையை நோக்கித் தனது புரவியை நடக்கவிட்டான். அவன் புரவி நாலடிகூட நடந்திராது. குகைக்குள்ளிருந்து யாரோ ஒருவன் ஒரு பந்தத்தை எடுத்துக் கொண்டு வெளியே வந்து அதை இருபுறமும் ஆட்டினான். அடுத்த கணம் எங்கிருந்தோ புரவிகள் வரும் சத்தம் கேட்டது. அதனால் சட்டென்று புரவியை நிறுத்திய விஜயன், குகைவாயிலில் சுமார் நாலைந்து வீரர்கள் வந்து இறங்கியதையும் பந்தத்தைக் கொணர்ந்தவனிடம் ஏதோ கூறியதையும் கவனித்தான்.

பந்தக்காரன் கூறிய பதிலைக் கேட்டதும் புரவியில் வந்தவன் தலையை அசைத்துத் தரையில் குதித்தான். அதே சமயத்தில் வேறுபல புரவிகள் வரும் ஒலிகள் கேட்டன. கேட்டது மட்டுமல்ல. குகைக்குள்ளிருந்து கிரீச்சென்று ஒரு பெண் அலறும் அரவமும் கேட்டது. அல்றிய குரல் அவன் கேட்ட குரல்தான். அதற்குமேல் ஒரு கணமும் தாமதிக்கவில்லை விஜயன். தனது புரவியைக் குகை வாயிலை நோக்கிப் பறக்க விட்டான். அவன் குகை வாயிலை அடைந்ததும், ஒரு விசித்திரம் நடந்தது. அதன் முன் நின்ற புரவி வீரர் பறந்தனர். பந்தத்தைப் பிடித்தவன் மட்டும் நடுங்கி நின்று கொண்டிருந்தான். விஜயன் புரவியிலிருந்தவாறே கேட்டான். பந்தம் வைத்துக் கொண்டிருந்தவனை, "டேய் உள்ளே அலறிய பெண் யார்?" என்று.

அவன் பதில் சொல்ல வாயைத் திறந்தான். அதே சமயத்தில் அக்கம் பக்கத்திலிருந்த மரங்களின் மறைவிலிருந்து வெளியே வந்த ஐந்து வீரர்கள் அவன் கழுத்தில் வேல்களை ஊன்றினார்கள். ''அசையாதே! சிறிது அசைந்தாலும் உள்ளே இருக்கும் அரசகுமாரி கொல்லப்படுவாள்.'' என்ற குரல் ஒன்று குகைக்குள்ளிருந்து அதிகாரத் தோரணையில் ஒலித்தது.




zeevaa

# 22. உள்ளே விளைந்த வினை

சிம்மபுரம் செல்லும் குறுக்குப் பாதை மரக்கிளைகளைக் கொண்டு அடைக்கப்பட்டதும், தனது புரவி அந்தத் தடையைத் தாண்டியதும், எதிரே தெரிந்த குகைக்குள்ளிருந்து பந்தம் தாங்கிய ஒருவன் வெளியே வந்ததும், குகைக்குள்ளே ஒரு பெண் அலறியதும், அதனால் குகையை நோக்கி விரைந்த தன்னை மரங்களின் மறைவுகளிலிருந்து வந்த ஐந்து வீரர்கள் சூழ்ந்து தனது கழுத்தில் வேல்களை ஊன்றியதும், பிறகு குகைக்குள்ளிருந்து, தான் அசைந்தாலும் உள்ளேயுள்ள அரசகுமாரி கொல்லப்படுவாள் என்று ஒருவன் குரல் கொடுத்ததும், எல்லாமே திட்டமிட்ட நாடகம் போல் நடத்தப்பட்டதை உணர்ந்த விஜயன் சட்டென்று தனது கரிய புரவியின் கடிவாளத்தை இழுத்துப் புரவியை அசையாமல் நிற்க வைத்தான். தானும் அசையாமல் புரவியிலேயே உட்கார்ந்து அடுத்து நடக்கக்கூடியதைக் கவனிக்கலானான். மீண்டும் குகையிலிருந்து அந்தப் பழைய குரல் ஒலித்தது: ''நல்லது, சிங்களத்துச் சிங்கமே! மெதுவாக உன் புரவியிலிருந்து இறங்கு. உன் வாளையும் கச்சையையும் பந்தம் வைத்திருப்பவனிடம் கொடுத்து விடு. பிறகு நீ மட்டும் உள்ளே வா,'' என்று.

குகையிலிருந்தவன் சொன்ன அத்தனைக்கும் பணிந்தான் விஜயன். புரவியிலிருந்து மிக மெதுவாக இறங்கித் தனது கச்சையையும் மிக நிதானமாக அவிழ்க்கத் தொடங்கியவன், கச்சையின் முடிச்சில் வாளின் உறை சிக்கியிருந்ததால் மிகவும் சிரமப்பட்டு அதை அவிழ்த்து எடுத்து, பந்தம் வைத்திருப்பவனிடம் நீட்டினான். பந்தம் வைத்திருந்தவன் அந்த வாளை வாங்கத் தனது இடது கையை நீட்டவே கத்தியைக் கொடுக்காத விஜயன்

zeevaa



zeevaa

''என்னிடமிருந்து யாரும் இடதுகையால் எதையும் வாங்கியது கிடையாது. வலது கையை நீட்டு,'' என்று அதிகாரத்துடன் கூறினான்.

பந்தம் வைத்திருந்தவன் விஜயன் இஷ்டப்படி நடக்க வலது கையிலிருந்த பந்தத்தை இடது கைக்கு மாற்றி வலது கையை நீட்டினான். அந்தப் பந்தம் ஒரு கையிலிருந்தது. இன்னொரு கைக்கு மாறும் இடைவெளியில் இரு கணங்களில் குகை வாயிலில் மின்னல் வேக நிகழ்ச்சிகள் தொடங்கின.

பந்தத்தை அவன் வலது கைக்கு மாற்றத்தொடங்கிய வினாடியில் விஜயன் கச்சையுடனிருந்த தனது வாளை உறையுடன் வீசினான் பந்தக்காரன் முகத்தில். அதனால் அலறிய பந்தக்காரன் வலது கையிலிருந்த பந்தத்தைக் கீழே போட்டு விடவே. அதை எடுப்பவன் போல் சரேலென்று குனிந்துவிட்ட விஜயன், பந்தத்தை தனது இடது கையில் எடுத்துக் கொண்டு, கீழே கிடந்த வாளை உறையுடன் வலது கையில், எடுத்து தன்மீது வேல்களை ஊன்றித் தான் குனிந்து விட்டதால் வேல்களின் ஆதிக்கம் நீக்கப்பட்ட ஐந்து வீரர்களில் முன்னாலிருந்தவன் முகத்தில் பந்தத்தை வைத்துத் தீய்க்க அந்த வீரன் பெரிதாக அலறினான். அடுத்த வினாடி சரேலென்று விஜயனின் வாள், உறையிலிருந்து எழுந்து சர்ப்பம்போல் மற்ற வீரர்களை நோக்கிச் சீறியது. அதன் வேகத்தைக் கண்டு பின்னடைய முயன்ற வேல் வீரர்களைப் பழுப்புநிறப் புரவிமீது பறந்து வந்த மூர்சமத் அகலமான பருத்த வாளைக் கொண்டு அவர்கள் மண்டைகளைத் தாக்கினான். அதனால் இரு வீரர்கள் விழுந்ததாலும் மற்றவர்கள் வாட்களை ஏந்திப் போரிட்டதால் தனது புரவியை அவர்கள் நடுவில் செலுத்திய மூர்சமத் அவர்களில் தலைவனாகக் காணப்பட்டவனைச் சரேலென்று தரையிலிருந்து கழுத்தைப் பிடித்துத் தூக்கித் தனது புரவியின் குறுக்கே போட்டுக் கொண்டு, வாளினால் மற்றவர்களைச் சமாளித்துக் கொண்டு குகைவாயிலில் போரிட்டு நின்ற எசமானை அணுகினான். புரவியிலிருந்தபடியே கையை நீட்டி, ''எசமான்! அந்தப் பந்தத்தை இப்படிக் கொடுங்கள்''

zeevaa

என்று கேட்டு வாங்கிக் கொண்டு அந்தப் பந்தத்தைத் தன்னை எதிர்த்து வந்த வீரர்கள் தலைகளிலும் முகத்திலும் வைக்கலானான்.

இந்தப் புதுப் போர் முறைக்கு இலக்காக விரும்பாத எதிரி வீரர்கள் மீண்டும் மரத்தடிக்குப் போக நகர்ந்த சமயத்தில் பல புரவிகள் வரும் சத்தம் கேட்கவே மறுபடியும் நின்று வாட்களாலும் வேல்களாலும் போரிட்டார்கள்.

இப்படி இருவரை ஐந்தாறு பேர் சூழ்ந்து போராடிக் கொண்டிருந்தபோது முதலில் குகை வாயிலில் தோன்றி மறைந்துவிட்ட புரவி வீரர்கள் ஐந்தாறு பேர் அரங்கத்துக்குள் வாள்களைச் சுழற்றிக் கொண்டு நுழையவே, சண்டை மிகக் கடுமையாயிற்று. எதிரிகளில் மூன்று நான்கு பேர்கள் விஜயன் வாளுக்கும் மூர்சமதின் பந்தத்துக்கும் பலியாகிக் கொண்டிருந் தாலும், மீண்டும் எதிரிகள் எண்ணிக்கை அதிகமாகி விட்டதால் விஜயன் சட்டென்று குகை வாயிலை அடைத்தபடி நின்று தனது மெல்லிய வாளை நீட்டிப் போரிட்டான். அதன் முன்பு தோன்றிய ஒவ்வொருவரும் ஏதோ நாக சர்ப்பத்தால் தீண்டப்பட்டவர்கள் போல் அலறினர். "இவன் வாளின் நுனியில் விஷம் தீட்டப்பட்டிருக்கிறது. இது அதர்மப் போர்," என்று ஒருவன் பலமாகக் கூறினான்.

அதைக் கேட்ட விஜயன், பெரிதாக நகைத்தான். "ஒருவனைப் பத்துப் பேர் சூழ்ந்து கொள்வதும், பெண்களைச் சிறை பிடிப்பதும், அலறவைப்பதும் தான் உங்கள் நாட்டு தர்மம் போலிருக்கிறது," என்று நகைப்பின் ஊடே பேசிய விஜயன், "இந்தா உன் தர்மத்துக்குப் பரிசு," எனறு தனது வாளின் நுனியை அவன் வாள் கரத்தில் பாய்ச்சவே அவன் அலறிக் கீழே விழுந்தான்.

மூர்சமத் எதுவும் பேசவில்லை. வாளைக்கூட அவன் அதிகமாக உபயோகப்படுத்தவில்லை. பந்தத்தை எதிரே வந்தவர்கள் கண்களில் வைக்கலானான். அதனால் அலறி முகத்தை மூடிக்கொண்ட இருவரைப் புரவியிலிருந்து குதித்துத் தனது இரு

zeevaa

கைகளாலும் ஒவ்வொருவராகத் தூக்கிக் காட்டுக்குள் எறிந்து கொண்டிருந்தான். இடையிடையே தன்னை வாள் கொண்டு வெட்ட முயன்ற புரவி வீரர் மீது பாதையிலிருந்து பெரும் கூழாங்கற்களை எடுத்து, "ஸ்வாமிகளே! உமக்கு அருள்," என்று கூறி வீசினான்.

ஸ்வாமிகளின் பெயரை மூர்சமத் உச்சரித்த காரணத்தாலோ அல்லது அவன் வைத்த சரியான குறியாலோ, சிறு பாறாங்கற்கள் அளவுக்கிருந்த கூழாங்கற்கள் இரண்டு மூன்று பேர் மண்டைகளில் தாக்க அவர்கள் அலறி விழுந்தனர். இப்படி விஜயன் வாளாலும் மூர்சமதின் பந்தம், கூழாங்கற்கள் இவற்றாலும் தாக்கப்பட்ட வீரர்களில் நாலைந்து பேருக்கு மேல் காயமடைந்ததும் மற்றவர்கள் காட்டுக்குள் புரவிகளைத் திருப்பிக் கொண்டு ஓடி விட்டதால் திடீரென்று துவங்கிய போர் திடீரென நின்றுவிடவே, குகைக்குள் இருக்கும் நிலையைக் காணத் தீர்மானித்த விஜயன், மூர்சமதிடம் ஏதோ ரகசியமாகச் சொல்லிவிட்டுக் குகைக்குள் நுழைந்தான்.

அந்த மகேந்திர மலைக்குகை மிகவும் நீண்டு கிடந்தது. உள்ளே போகப் போகத் திருப்பங்களும் சில தெரிந்தன. எந்தத் திருப்பத்தில் எதிரி ஒளிந்திருந்தாலும் தனது முதுகில் வாளையோ குறுவாளையோ பாய்ச்சி விடலாம் என்ற காரணத்தால் மிக நிதானமாகக் குகைக்குள் நுழைந்து சென்றான் விஜயன். சில இடங்களில் குகையின் உயரம் குறைவாயிருந்ததால் குனிந்து செல்ல வேண்டிய அவசியம் நேரிட்டாலும் எச்சரிக்கையை மட்டும் கைவிடாமல் உருவிய வாளுடன் நடந்தான் விஜயன்.

சுமார் பதினைந்து அடிகளுக்கு மேல் நடந்தும் குகைக் குள்ளிருந்து பேசியவனையோ அரசகுமாரியையோ காணாததால், குகையிலிருந்து வெளியே செல்ல வேறு ஏதாவது வழி இருக்கிறதா என்று அறிய முற்பட்ட விஜயன், 'வழியிருந்தால் மேலிருந்து வெளிச்சம் விழும் அப்படி எதையும் காணோமே' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டு குழம்பிய சமயத்தில், சற்று எட்ட இருந்து ஒரு பெண்ணின் முனகல் கேட்கவே, அந்த ஒலி வந்த

zeevaa

இடத்தை நோக்கி மெதுவாக நடந்தான். இரண்டு மூன்று அடிகளுக்கு அப்பால் குகையைப் பாதி மறைத்து நீட்டிக் கொண்டிருந்த ஒரு சிறு பாறைக்கு அப்பாலிருந்து ஒலி வருவதை உணர்ந்து அந்த மறைத்த பாறையைத் தாண்டினான்.

அங்கு அவன் கண்ட காட்சி அவன் சீற்றத்தை உச்சத்துக்குக் கொண்டு போயிற்று. குகையின் குறுக்கே நீட்டிய பாறையில் அமைக்கபட்டிருந்த இரு இரும்பு வளையங்களொன்றில் கலிங்க ராஜகுமாரி கயிற்றால் இழுத்துக் கட்டப்பட்டிருந்தாள். அவள் வாயில் துணி அடைக்கப்பட்டிருந்தது. அவளுக்குப் பக்கத்தில் கை கால்கள் பிணைக்கப்பட்டுக் கீழே உருட்டப்பட்டிருந்த ஒரு பெண் அப்பொழுதும் முனகிக்கொண்டிருந்தாள். அவள் ஆடை கீழே சிறிது விலகிக் கிடந்ததால் அவள் அழகிய தொடையும் அதில் இரும்பைக் காய்ச்சி இழுக்கப்பட்டிருந்த நீண்ட காயமும் செக்கச் செவேலெனத் தெரிந்தன.

இந்தக் காட்சியைக் கண்ட விஜயன் முகத்தில் சீற்றத்துக்குப் பதில் பெரும் வெறுப்பே காணப்பட்டது. முதலில் அரசகுமாரியின் கட்டுக்களையும் வாயிலடைத்திருந்த துணியையும் நீக்கி அவள் கையில் தனது வாளைக் கொடுத்துவிட்டுத் தரையில் மண்டியிட்டு உட்கார்ந்து அந்த இன்னொரு பெண்ணின் கை கால் கட்டுக்களை அவிழ்த்தான். பிறகு அவள் தொடைக் காயத்தைத் தொட்டுப் பார்க்கவே அவள் மீண்டும் அலறினாள். அதனால் அந்தப் பரிசோதனையில் அதிகமாக இறங்காத விஜயன், அரசகுமாரியை நோக்கி, ''சுந்தரி! இந்தக் குகையிலிருந்து தப்ப வேறு வழியிருக்கிறதா?'' என்று வினவினான்.

அரசகுமாரி பதில் சொல்ல வாயெடுத்தாள். ஆனால் சொற்கள் வெளிவரவில்லை. அவள் கண்கள் பஞ்சடைந்தன. தலை துவண்டு அவளும் அந்த இன்னொரு பெண்ணுக்குப் பக்கத்தில் கீழே விழுந்தாள்.

zeevaa

அரசகுமாரியைத் தான் விடுதலை செய்த பின்பும் அவள் தன்னிடம் ஏதும் பேசாமலிருந்ததற்கும், எந்த உணர்ச்சியும் காட்டாததற்கும் காரணத்தைப் புரிந்து கொண்ட விஜயன் முகத்தில் சினம் சிறிது சிறிதாக துளிர்க்கலாயிற்று. ''அரசகுமாரிக்கு ஏதோ மயக்கமருந்து புகட்டப்பட்டிருக்கிறது.'' என்று தனக்குள் சொல்லிக் கொண்ட விஜயன், அந்த இரு பெண்களையும் இந்த நிலையில் விட்டுவிட்டுக் குகையிலிருந்து வெளியே செல்ல வேறு வழி எங்கேயிருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க மேலும் உள்ளே சென்றான்.

சிறிது தூரத்தில் மேலே ஓர் ஆள் நுழையக் கூடிய துவாரம் தெரிந்தது. அதற்கும் மேலே பொழுது புலருவதற்குப் பூர்வாங்க மான வெளிச்சமும் தெரிந்ததால் இனிகுகைக்குள் தாமதிப்பது உசிதமல்ல என்ற முடிவுக்கு வந்து அரசகுமாரியும் அந்த இன்னொரு பெண்ணும் கிடந்த இடத்தை நோக்கி நடக்கத் திரும்பிய சமயத்தில் அந்தப் பழைய குரல் மீண்டும் ஒலித்தது. ''கிட்டி! உன் முடிவு காலம் கிட்டிவிட்டது. இந்தக் குகைதான் உனக்குச் சமாதி. அந்தப் பெண்கள் அப்படியே கிடக்கட்டும். நீ உன் வாளைக் கீழே எறிந்துவிடு,'' என்று.

அதைக் கேட்ட விஜயன் பெரிதாக நகைத்தான். ''ஆதிமால்யா உனக்குப் பைத்தியம்தான் பிடித்திருக்கிறது. இல்லாவிட்டால் திரிகலிங்காதிபதியான வஜ்ரஹஸ்தர் மகளை அவர் அரசாங்கத்திலேயே அபகரிக்க முயலுவாயா?'' என்று கூறி மீண்டும் பெரிதாக நகைத்தான். ''நீ வீரனானால் அந்தத் துவாரத்தி லிருந்து குதித்து உள்ளே வா'' என்றும் அழைத்தான் விஜயன்.

இந்த அறைகூவலுக்குப் பதிலேதும் கிடைக்காததால் விஜயன் பழையபடி நடந்து அரசகுமாரியும் அந்த இன்னொரு மங்கையும் கிடந்த இடத்துக்கு வந்து மண்டியிட்டு அரசகுமாரியைத் தூக்க முயன்றவன் தனக்குப் பின்னால் மேலிருந்த துவாரத்திலிருந்து ஒருவன் குதிப்பதை அறிந்தான். அறிந்தும் பேசாமல்

zeevaa

அரசகுமாரியை மெதுவாக எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டான். ஆனால் பின்னால் குதித்தவன் எந்தச் செயலிலும் இறங்கவில்லை. காரணம் என்னவென்று திரும்பிப் பார்த்த விஜயன் பெரும் பிரமிப்புக்கு உள்ளானான். கீழே ஒரு வீரன் விழுந்து கிடந்தான். ஆனால் அவன் குதித்ததாகத் தெரியவில்லை. அப்படியே மல்லாந்து கிடந்தான். அரச குமாரியைத் தூக்கியபடியே அவன் உடலைத் தனது காலால் திருப்பிய விஜயன் வியப்பால் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டான். அந்த மனிதன் முதுகில் ஓர் அம்பு தைத்திருந்தது. அந்த அம்பு தனக்கு எச்சரிக்கை செய்ய வந்த அம்பைப் போலவே இருப்பதை விஜயன் கண்டான். பிறகு அங்கு நிற்காமல் அரசகுமாரியுடன் வெளியே செல்ல முயன்ற விஜயனைப் பாதிக் குகையில் மூர்சமத் சந்தித்தான். ''உள்ளே ஒரு பெண் மூர்ச்சையாகிக் கிடக்கிறாள். அவளை எடுத்து வா,'' என்று மூர்சமதுக்கு விஜயன் கட்டளையிட்டான்.

மூர்சமத் அசையவில்லை. பதிலும் சொல்லவில்லை. கையிலிருந்த ஓலையை விஜயனிடம் நீட்டினான். அந்த ஓலையைப் படித்த விஜயன் விஷயம் தலைக்கு மேல் போய்விட்டதை உணர்ந்தான். அந்தக் குகையிலிருந்து தானோ மூர்சமதோ தப்ப முடியாதென்பது திட்டவட்டமாகத் தெரிந்தது விஜயனுக்கு.

zeevaa

# 23. எழுந்த வேல்

அப்பொழுது ஓரளவு பொழுது புலர்ந்துவிட்டதால் அந்தக் குகையின் கோடியில், அரசகுமாரியும் இன்னொரு பெண்ணும் விழுந்து கிடந்த இடத்துக்கு அப்பாலிருந்து சிறு விளக்கு வீசிய ஒளியின் உதவியில்லாமலே, ஓலையில் தீட்டப்பட்டிருந்த இரண்டு வரிகளைச் சிறிதும் சிரமமில்லாமல் விஜயனால் படிக்க முடிந்தது. ''சுமார் ஐம்பது வீரர்கள் இந்தக் குகையைச் சூழ்ந்து ஆங்காங்குள்ள மரங்களின் மறைவில் நிற்கிறார்கள். ஆகவே குகையிலிருந்து வெளிவர முயல வேண்டாம்.'' என்று ஓலையில் எழுதியிருந்த செய்தியைப் படித்த விஜயன் மூர்சமதை நோக்கி ''இந்த ஓலையிலுள்ள கையெழுத்தும், முன்பு மரத்தில் தைத்த வாளியிலிருந்த ஓலைக் கையெழுத்தும் ஒரே மாதிரிதான் இருக்கிறது,'' என்று கூறினான்.

மூர்சமத் அதை ஒப்புக் கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்து, ''இந்த ஓலையும் அம்பு மூலம்தான் வந்தது. நம்மைச் சூழ்ந்த சிலரை நான் வெட்டித் தள்ளிக் குகைக்குள்ளே நுழைய முயன்ற சமத்தில் இந்த ஓலையும் ஒரு அம்பில் கட்டி எய்யப்பட்டு என் காலடியில் விழுந்தது,'' என்று ஓலை கிடைத்த முறையை விளக்கினான்.

இதைக் கேட்டுச்சிறிது நேரம் சிந்தனையில் இறங்கிய விஜயன், ''சமத்! நீ குகையின் வாயிலில் மறைவாகப் பாறையில் சாய்ந்து நில். உள்ளே எவன் தலையை நீட்டினாலும் வெட்டிவிடு. குகை வாயிலும் அத்தனை பெரிதல்ல. ஒரே சமயத்தில் இரண்டு பேருக்கு மேல் நுழைய முடியாது,'' என்று சுட்டிக் காட்டினான்.

zeevaa



## 23

## எழுந்த வேல்!

zeevaa

மூர்சமத் தனது தாடிக்கும் மீசைக்கும் இடையில் மறைந்திருந்த வாயைத் திறந்து பற்களைப் பயங்கரமாகக் காட்டி, ''எசமான்! இருவர் தலைகளைத் தனித்தனியாக வெட்ட அவசியமில்லை. ஒரே வெட்டில் இரண்டு பனங்காய்களும் குகையின் உள்ளே உருளும்,'' என்று தனது நகைச்சுவையையும் கொலை ஆசையையும் விளக்கியதன்றிக் கையில் பிடித்திருந்த ரத்தம் தோய்ந்த தனது பெரிய பட்டையான வாளையும் ஆவலுடன் நோக்கினான். பிறகு குகை வாயிலை நோக்கி நடக்கத் துவங்கிய சமதை, சமத்!, ''அதோ ஒருவன் அம்பு பாய்ந்து கிடக்கிறான். கவனித்தாயா?'' என்று வினவினான் விஜயன்.

சுற்றிலும் சூழ்ந்திருந்த ஆபத்தாலும் அதன் விளைவாக உள்ளே எழுந்த எச்சரிக்கையாலும் விஜயன் தோள்மீது போட்டுக் கொண்டிருந்த அரசகுமாரியை அதிகமாகக் கவனிக்காமலிருந்த மூர்சமத் அரசகுமாரியையும் நோக்கி, சற்று எட்டியிருந்த மனிதனையும் கவனித்ததால், ''எசமான்! அரசகுமாரி மயக்கமாக இருப்பது போல் தெரிகிறதே'' என்றான்.

''ஆம் சமத்! மயக்க மருந்து ஏதோ புகட்டப்பட்டிருக்கிறது. அரசகுமாரியை நான் கவனித்துக் கொள்கிறேன். நீ முதலில் அம்பு பட்டு இறந்திருப்பவனைத் தூக்கிக் குகைக்கு வெளியே எறிந்துவிடு. உள்ளிருக்கும் பெண்ணையும் அசையாமல் தூக்கிக் கொண்டு குகையின் நடுப்பகுதியில் கிடத்திவிடு,'' என்று கூறவே மூர்சமத் எசமான் இட்ட பணிகளில் இறங்கினான்.

அம்பு பட்டு இறந்த வீரனிருக்குமிடம் சென்று அவனையும் மேலிருந்த குகை துவாரத்தையும் பார்த்தான். 'இவர் இந்த வழியாகத்தான் வந்திருக்கிறார் போலிருக்கிறது,' என்று உற்சாகத்துடன் உள்ளூரச் சொல்லிக் கொண்டு பயங்கரப் புன்முறுவலும் செய்த மூர்சமத் அந்த வீரனை அலட்சியமாகத் தரதரவென்று காலைப்பிடித்து இழுத்துவந்து குகைவாயிலை அடைந்ததும் அவனை இருகைகளாலும் தூக்கிக் குகைக்கு வெளியே

zeevaa

வேகமாக வீசி விட்டு, சிறிது நிதானித்தான். அந்த வீரனின் சடலம் தூரத்திலிருந்து மரங்களின் முகப்பில் 'தட்' என்ற சத்தத்துடன் விழுந்ததும் மரங்களின் மறைவிலிருந்து சிறிது சலசலப்பு கேட்டதைக் கவனித்துப் பெரிதாக நகைத்தான் சமத். ''நீங்களும் வாருங்கள், ஒவ்வொருவராக. நீங்கள் விரும்பும் மோட்சத்தைத் தருகிறேன்,'' என்று கூவவும் செய்தான் நகைப்பின் ஊடே. பிறகு குகைக்குள் சென்று அந்த இன்னொரு பெண்ணையும் அசையாமல் எடுத்து வந்து எசமானின் காலின் கீழே கிடத்தினான் மெதுவாக. ''எசமான் இனி நான் குகை வாயிலுக்குச் செல்லட்டுமா?'' என்றும் வினவினான்.

''சரி சமத். நீ போய்க் குகை வாயிலைக் காத்து நில் நான் இந்தப் பெண்களைச் சிறிது கவனித்துவிட்டு அதோ அந்த மேல் துவாரத்துக்கு அப்பால் நிலைமை எப்படியிருக்கிறது என்று பார்க்கிறேன்.'' என்று கூற மூர்சமத் குகை வாயிலை நோக்கி நடந்தான்.

அவன் சென்றதும் தோளில் துவண்டு கிடந்த அரசகுமாரியை மெதுவாக இறக்கித் தரையில் படுக்க வைத்தான். அந்த மலைக்குகையின் தரை கரடு முரடாக இருந்ததைக் கவனித்து அரசகுமாரியின் பூவுடலைக் கீழிருக்கும் கற்கள் குத்தி விடுமே என்ற எண்ணத்தால் தனது அங்கியைக் கழற்றி தரையில் விரித்து அரச குமாரியை அதன் மீது லேசாகப் புரட்டினான். அடுத்து மூர்சமத் கிடத்திய அந்த இன்னொரு பெண்ணையும் அரசகுமாரிக்கு அருகில் புரட்டிப் படுக்க வைத்துவிட்டு இருவர் நிலையையும் ஆராய முற்பட்டான்.

இதற்குள் பொழுது பூர்ணமாகப் புலர்ந்து குகையிலும் வெளிச்சம் நன்றாகத் தெரியவே இரு பெண்களின் நிலைமையை ஆராய்வது அதிகக் கஷ்டமாயில்லை அந்த வாலிப வீரனுக்கு. அரசகுமாரியின் கண்கள் மூடி முகம் குவிந்து அந்தித் தாமரை போல் விளங்கியதைக் கண்ட விஜயன், 'மயக்கத்திலும் இவள் அழகு மயக்கும்

படியாகத்தானிருக்கிறது,' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். பிறகு அவள் கண்களின் கிளிஞ்சல் இமைகளைத் தனது விரல்களால் திறந்து பார்த்தான். விழிகள் நன்றாகவே இருந்ததாலும் அவள் உடலும் சிறிது அசைந்ததாலும், மயக்க மருந்து அளவுக்கு மீறிச் செலுத்தப்படவில்லையென்பதை விஜயன் புரிந்து கொண்டதால் சிறிது ஆசுவாசப் பெருமூச்சும் விட்டான். பிறகு அவள் நாடிகளைப் பரிசோதித்து 'ஒரே சீராக இருக்கிறது. நாடித் துடிப்பில் சிறிது தெம்பும் இருக்கிறது' என்று உள்ளூர சொல்லிக் கொண்டு திருப்திக்கு அறிகுறியாகத் தலையையும் அசைத்தான். அடுத்து, தான் தூக்கிக் கொண்டதால் கலைந்து கிடந்த அவள் சேலையை அவள் மார்பிலும் கால்களிலும் நன்றாக இழுத்துவிட்டு அழகிடங்களை மூடினான்.

அரசகுமாரியின் சுரணை மருத்துவ உதவியில்லாமலே திரும்பிவிடும் என்று புரிந்து கொண்ட விஜயன் அடுத்து அந்த இன்னொரு பெண்ணைக் கவனிக்கலானான். ஏற்கெனவே அவன் பார்த்துப் பேசியவள் தான் அவள். ஆசிரமத்தில் அரசகுமாரிக்குப் பணிவிடை செய்ய ஸ்வாமிகளால் நியமிக்கப்பட்ட பணிப்பெண் தான் அவள் என்பதை உணர்ந்ததால் அவள் தொடைக் காயத்தைப் பரிவுடன் பார்க்கலானான். அதை ஆற்றுவதற்குப் பச்சிலை தேவை என்பதைப் புரிந்து கொண்டதால் தன்னால் உடனடியாக ஏதும் செய்யமுடியாதென்பதை உணர்ந்த விஜயன், அவள் அடிக்கடி முனகியதிலிருந்து அரசகுமாரியைப் போல் அடியோடு சுரணையை அவள் இழக்கவில்லை என்பதை அறிந்ததால் 'இருவருக்கும் ஏதாவது உணவு புகட்டப்பட வேண்டும்' என்றும் தீர்மானித்தான். அந்தத் தீர்மானத்துக்கு வந்ததும் எழுந்து குகையின் கோடிக்குச் சென்று அங்கு மேலே தெரிந்த துவாரத்தைக் கவனித்தான். மேற்பாறையில் தொத்தித் தன்னால் ஏறமுடியும் என்பதை அவன் உணர்ந்து கொண்டாலும், மேலே ஆதிமல்லனோ அவன் ஆட்களோ இருந்தால் தான் தலையை நீட்டியதும் வெட்டத் தாமதிக்க மாட்டார்கள் என்பதைப் புரிந்து கொண்டதால், அந்த சாகச அலுவலில் உடனடியாக அவன் இறங்கவில்லை. மெதுவாகப்

zeevaa

பாறையில் தொத்தி ஏறித் தலையை வெளியே நீட்டாமலே வெளியே இருந்த நிலைமையைக் கவனிக்க முற்பட்டான்.

அருணோதயம் பூராவாக மறைந்து கதிரவன் ஆட்சி தொடங்கி விட்டபடியால் வெளியில் பெரு வெளிச்சம் தெரிந்தது. ஓரிரு கதிர்கள் குகைத் துவாரத்தின் வழியாக உள்ளேயும் விழுந்து குகையின் இருட்டையும் பூராவாகக் கிழித்தாலும், குகை ஒரே சீராக இல்லாமல் இரண்டு இடங்களில் மங்கிச் சென்றதால் பாதுகாப்பும் இருந்தது. விஜயன் ஏறி நின்ற பாதையின் நீட்டமும் உள்ளடங்கியிருந்ததால் வெளியில் இருந்தவர்கள் பார்வையில் படாதிருக்கவே மெள்ளத் தலையை ஒரு பக்கமாகச் சாய்த்து வெளியே கவனித்த விஜயன், குகையின் மேற்புறம் பெரிய பாறாங்கல்லாய் இருந்ததையும், அந்த இடத்திலிருந்து சிறிது தள்ளியே காட்டின் அடர்த்தி துவங்கியதையும் பார்த்தான். சட்டென்று துவாரத்தின் மேற்புறத்தில் ஏறி வேகமாகப் புரண்டுவிட்டால் எந்த வாளியோ வாளோ தன்மீது பாயமுடியாதென்று கணக்குப்போட்ட விஜயன் மனத்தில் திடீரென்று ஒரு வழி தோன்றியதால் அவன் முகம் உற்சாகத்தில் மலர்ந்தது. ஆனால் அந்தத் திட்டம் பலிப்பதற்கு வெளிச்சம் உதவாது ஆகையால் தான் மாலை மட்டும் குகையிலேயே காத்திருக்க வேண்டிய அவசியமிருந்ததை உணர்ந்து கொண்டாலும், அதைப் பற்றிக் கவலைப்படாமல் நேரம் செல்லச் செல்ல நிலைமை எப்படி மாறுகிறது என்பதை நிதானித்துப் பார்க்கத் தீர்மானித்துப் பழையபடி குகையின் தரையில் குதித்தான். எப்படியும் மாலைவரை எதிரிகள் வாளாவிருக்க முடியாதென்ற தீர்மானம் அவனுக்கு இருந்தது. அரசகுமாரியைப் பணிப் பெண்ணுடன் அனுப்பிய ஸ்வாமிகளும் வஜ்ரஹஸ்தரும் செய்தி ஏதும் கிடைக்காவிட்டால் உதவிக்கு விரைவார்கள் என்றும் நினைத்தான். யாராவது துணைக்கு வருமுன்பு எதிரிகள் தங்கள் அலுவலை முடிக்கத் துடிப்பார்கள் என்பதிலும் அவனுக்குச் சந்தேகம் இல்லாததால், அரசகுமாரியைக் கிடத்திய இடத்தை நோக்கி நடந்து அவள் பக்கத்தில் உட்கார்ந்து

zeevaa

அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். துயின்ற நிலையிலும் அழகு அள்ளிச் சொரிய விளங்கிய அவளது மகோன்னத உருவம் அவன் கருத்தை உலுக்கியது. 'பஞ்சணையில் படுக்கவேண்டியவள் எனக்காக ஆபத்தில் சிக்கிப் பாறையில் கிடக்கிறாள்' என்று உள்ளூரச் சொல்லிக்கொண்ட விஜயன் எப்படியும் அரசகுமாரிக்கு ஏதாவது நீரையாவது புகட்ட வேண்டும் என்று எண்ணினாலும் அதைச் செயலாற்றும் வழியைக் காணாமல் திகைத்தான்.

அப்படி அவன் அரசகுமாரியின் நினைப்பில் ஆழ்ந்திருந்த சமயத்தில் குகை வாயிலிலும், மேல் துவாரத்தின் மூலமும் நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. குகை வாயிலுக்கு எதிரில் புரவிகளில் வந்து திடீரெனக் குதித்த இரு வீரர்கள் குகையில் நுழைவதைப் பற்றித் தங்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டார்கள். உள்ளே நுழைந்ததும் அவர்களை வெட்டத் தனது பெரிய வாளை ஓங்கிக் கொண்டு கிடாவெட்டுக்குத் தயாராகும் அம்மன் கோவில் பூசாரிபோல் மூர்சமத் சித்தமாக நின்றான்.

ஆனால் குகை வாயிலுக்கு நாலடி தள்ளியே நின்ற இரு வீரர்களும் உள்ளே நுழையவில்லை. காரணமில்லாமல் திடீரென நாட்டியக்கலை பயின்றவர்களைப் போல் கால்களைக் குறுக்கே போட்டு ஆடினார்கள் ஒருமுறை. அடுத்து குகை வாயிலுக்குள் நுழைந்து தடாலென்று விழுந்தார்கள். மூர்சமத் தனது ஓங்கிய வாளை இறங்காமல் குடைவரைக் கோவில்களில் செதுக்கப்பட்ட துவாரபாலகனைப் போல் அசையாமல் நின்றுவிட்டான். வியப்பின் மிகுதியால். குகைக்குள்ளே பாதி உடலுடன் விழுந்த அந்த இருவர் முதுகிலும் இரு அம்புகள் பாய்ந்திருந்தன. அவை பாய்ந்த இடங்களில் குருதி பெருகிக் கொண்டிருந்தது.

"எசமான்! எசமான்! இந்த வேடிக்கையைப் பாருங்கள்!" என்று மூர்சமத் கூவினான்.

இருந்த இடத்திலிருந்தே விழுந்த வீரர்களைப் பார்த்த விஜயன் பெருவியப்புக்குள்ளாகியதன்றி, தங்களை இன்னொரு கரம்

zeevaa

பாதுகாத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் புரிந்து கொண்டான். அது யாராயிருக்கும் என்ற சிந்தனையில் இறங்கினான். அவன் அப்படி சிந்தனையில் திளைத்த சமயத்தில் வேறொரு அதிசயமும் நிகழ்ந்தது. குகையின் கோடியில் இருந்த மேல் துவாரத்தின் மூலம் பெரிய வேலொன்று ஒரு சிறு மூட்டையைத் தாங்கி விழுந்த தன்றி, வேலின்முனை கீழ்ப்பாறையில் தாக்கியதால் 'கிளாங்' என்ற ஒலியையும் குகையில் பரப்பியது.

அந்த வேலை நோக்கி விரைந்த விஜயன் வேலுடன் மூட்டையையும் எடுத்து அரசகுமாரியின் பக்கத்தில் நின்றபடி மூட்டையை அவிழ்த்தான். அதற்குள் ஒரு பெரிய வெண்கலக் குப்பி இருந்தது. அதில் ஒரு சீலையும் சுற்றப்பட்டிருந்தது. ''தமிழகத்தின் சிறந்த மது இது. இதை அரசகுமாரிக்குப் புகட்டி நீங்களும் அருந்தலாம். எதற்கும் எச்சரிக்கையாய் இருக்கவும்'' என்று சீலையில் மயிலிறகு கொண்டு எழுதியிருந்ததை மூர்சமதிடம் காட்டிய விஜயன், ''சமத்! இதைப்பற்றி என்ன நினைக்கிறாய்?'' என்று வினவினான்.

''என்ன நினைப்பது எசமான்?இந்த நாட்டிலும் நமக்கு உதவ ஒரு வீரன் இருக்கிறான்,'' என்ற மூர்சமத் குப்பியை வாங்கி மூடியை அகற்றித் தனது நாக்கில் இரண்டொரு சொட்டுகளை விட்டு, ''எசமான்! முதல் தரமான மது. அரசகுமாரிக்குப் புகட்டுங்கள்'' என்றான்.

அவன் சொற்படி அரசகுமாரிக்கும் பணிப்பெண்ணுக்கும் மதுவைப் புகட்டிய விஜயன் சில வினாடிகளில் இருவரும் லேசாகக் கண் விழித்ததைப் பார்த்து மகிழ்ந்தான். அந்த மது மிகச் சக்தி வாய்ந்ததாயிருக்க வேண்டும். சிறிது நேரத்தில் அரசகுமாரி கண்களை நன்றாக விழித்து எழுந்ததும் உட்கார முயன்றாள். அவளைத் தூக்கிக் குகையின் பாறைச்சுவரில் உட்கார வைத்த விஜயன் மெல்லப் பணிப்பெண்ணையும் தூக்கினான். பணிப்பெண் கண் விழித்ததும் தொடையிலிருந்த காயத்தால் அலற வாயைத் திறந்தவள் சட்டென்று அடக்கிக் கொண்டாள்.

zeevaa

கண்விழித்த அரசகுமாரி விஜயனை நோக்கி, ''நீங்கள் இங்கு எப்படி வந்தீர்கள்?'' என்று தீனமான குரலில் வினவினாள்.

''இந்தக் குறுக்குப் பாதையில் நீ என்னைச் சந்திப்பாய் என்று ஸ்வாமிகள் கூறினார். உன்னை பாதை துவங்கும் இடத்தில் காணாதபடியால் நானே குறுக்குப் பாதைக்குள் புகுந்தேன். உன்னை சிறையெடுத்தவர்கள் என்னையும் மூர்சமதையும் வளைத்தார்கள், ஆனால் பிடிக்க முடியவில்லை'' என்றான் விஜயன்.

அதுவரை விஜயன் அடியோடு மறந்திருந்த விஷயத்தைப்பற்றி அரசகுமாரி கேள்வியொன்றைத் தொடுத்தாள். ''நந்தன் எங்கே?'' என்று.

தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்ச்சிகளால் கிழவனை அடியோடு மறந்துவிட்ட விஜயன். ''சமத்! படகோட்டிக் கிழவன் என்ன ஆனான்?'' என்று வினவினான்.

அப்பொழுதுதான் கிழவன் ஞாபகம் வரவே, ''தெரிய வில்லையே எசமான்! நமக்குப் பின்னால்தான் வந்தான்'' என்றான் சமத் கவலை ஒலித்த குரலில்.

''இந்தக் கொலைகாரர்கள் அவனை வெட்டியிருப்பார்களோ?'' என்று விஜயன் வினவினான்.

மூர்சமதிடமிருந்து பதிலேதும் கிடைக்கவில்லை. அவன் ஆழ்ந்த சிந்தனையில் இறங்கியிருந்தான். கிழவன் அத்தனை சுலபமாக யாரிடமும் சிக்க மாட்டான் என்ற நம்பிக்கை மூர்சமதுக்கு இருந்தது. அரசகுமாரியின் மாளிகையில் ஆதிமல்லன் ஆட்கள் புகுந்தபோது சிறை அறையில் ஒரு வீரனை அனாயாசமாகக் கொன்றுவிட்டு உட்கார்ந்திருந்ததை எண்ணிப் பார்த்த சமத், ''எசமான்! அவனை யாரும் கொல்ல முடியாது'' என்றான்.

பிறகு குகையிலிருந்த யாரும் பேசவில்லை. மெள்ளப் பகல் ஓடி மாலை வேளையும் தொடங்கியது. மீதியிருந்த மதுவை

zeevaa

அரசகுமாரிக்கும் பணிப்பெண்ணுக்கும் புகட்டிய விஜயன், ''சமத்! சிறிது இரவு புகுந்ததும் இந்தக் குகைச் சிறையிலிருந்து நாம் கிளம்புகிறோம்'' என்று திட்டவட்டமாகச் சொன்னான்.

எசமான் ஏதோ ஒரு முடிவுக்கு வந்துவிட்டாரென்பதை உணர்ந்துகொண்ட மூர்சமத் சம்மதத்திற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான். மாலை மறைந்து வெண்மதியின் ஒளி அந்தக் காட்டுப் பகுதியில் வீசத் தொடங்கியது. அந்தக் குகையின் மேல் துவாரத்தின் மூலமும் நிலவு பட்டையாக குகையின் ஓர் ஓரத்தில் விழுந்தது. அந்த அழகை ரசித்துக்கொண்டு, ''அரசகுமாரி! அதோ பார் பால் நிலவு. நீ இருப்பதால் இந்தக் குகையும் சொர்க்கமாகிறது'' என்றான்.

அரசகுமாரி நிலவு விழுந்த இடத்தை உற்று நோக்கினாள். அந்த நிலவு அத்தனை சொர்க்கமாகத் தெரியவில்லை அவளுக்கு. நிலவு விழுந்த இடத்திற்கு அப்பால் நீட்டிக் கொண்டிருந்த பாறையின் நிழலில் நின்று கொண்டிருந்த ஓர் உருவத்தைக் கூர்ந்து நோக்கினாள். அந்த உருவமும் மெல்ல அசைந்து அவர்கள் இருந்த இடத்தை நோக்கி இருளடித்த இடங்களில் மறைந்து நகரலாயிற்று. அதன் கையில் நீண்ட வேல் ஒன்றும் இருந்தது. திடீரென அந்த வேலும் மேலே எழுந்தது அதிக வேகமாக.



23

எழுந்த வேல்!

zeevaa

# 24. எத்தனை புஷ்பங்கள்

குகையின் மேல் பாகத்திலிருந்த துவாரத்தின் வழியாகப் பட்டையாக உள்ளே விழுந்த நிலவை அடுத்து நீண்டிருந்த பாறாங்கற்கள் அளித்த இருளைத் துணையாகக் கொண்டு நகர முற்பட்ட உருவமொன்றைக் கண்டதும் அச்சத்தின் வசப்பட்ட அரசகுமாரி, அந்த உருவம் வேலொன்றை எடுத்து வீச முயன்றதும் அச்சத்தின் எல்லையை அடைந்ததன் விளைவாக, தனது இடையில் பதித்திருந்த விஜயனின் இரும்பு போன்ற இடது கரத்தைத் தனது வலது கரத்தால் இறுகப் பிடித்துக்கொண்டாள். அவனை வேலின் குறியிலிருந்து தப்ப வைக்கக் கீழே தள்ளி விடவும் முயன்று தனது உடலை அவன் உடலுடன் சேர்த்து அசைக்க முயன்றவள், அடுத்து விளைந்த வினோத நிகழ்ச்சியால் செயல் எதிலும் ஈடுபடாமல் சிலையென நின்றாள். குகைக்கோடியிலிருந்த உருவம் வேகமாக எடுத்த வேலை மிகத்துரிதமாகக் குகைத் துவாரத்தின் வழியாக வெளியே வீசிவிட்டதையும், அந்த வீச்சைத் தொடர்ந்து குகைக்கு மேலே கேட்ட அலறல் ஒலியையும் கேட்டதால் பிரமித்து நின்றுவிட்ட அரசகுமாரியும், அரசகுமாரியை அணைத்து நின்ற விஜயனையும் நோக்கி அந்த உருவம் விரைந்தபோது, அதன் முகத்தில் விழுந்த நிலவு வெளிச்சத்தின் ஒரு பகுதி அது யாரென்று விளக்கி விட்ட படியால், ''நீயா! நீயா!'' என்று வியப்பு ஒலித்த சொற்களை அரசகுமாரி தனது அழகிய அதரங்களிலிருந்து உதிர விட்டாள்.

வந்தவன் ரிஷிகுல்யா நதிக்கரையில் முதல் நாளிரவு தன்னைச் சிறை செய்ய முயன்ற அரசகுமாரியின் மெய்க் காவலனான நீலனே என்பதைப் புரிந்துகொண்ட விஜயன், அவன் எப்படி அந்தக்

zeevaa

குகைக்குள் வரமுடிந்தது என்ற சிந்தனையில் இறங்கினான். 'மேலிருந்து இவன் குதித்திருக்க முடியாது. நமது கண்களுக்குத் தப்பி வாசல் வழியாகவும் வரமுடியாது. நம்மைக் காத்திருப்பவன் அம்பிலிருந்து தப்பி. அப்படியிருக்க, இந்தக் குகைக்குள் எப்படி நுழைந்தான்?'' என்ற கேள்விகளை விஜயன் உள்ளூர எழுப்பிக் கொண்ட சமயத்தில், நீலன் அவர்கள் அருகில் வந்து அரச குமாரியின் முன்பு மண்டியிட்டுத் தலைதாழ்த்தி வணங்கி அவள் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டான். பிறகு எழுந்து விஜயனையும் நோக்கித் தலைதாழ்த்திவிட்டு அரச குமாரியை நோக்கி ''தேவி! உங்கள் மெய்க்காவலனிடம் உங்களுக்கு நம்பிக்கை இல்லைப் போலிருக்கிறது?'' என்றும் வினவினான்.

அவனை அன்பு சொட்டும் கண்களுடன் நோக்கிய அரசகுமாரி, ''நீலா! உன்னிடம் நம்பிக்கையில்லையென்று யார் சொன்னது. ஆனால் நீ....'' என்று ஏதோ சொல்ல சொற்களை இழுத்தாள்.

அவள் சொற்களை இடையில் வெட்டிய நீலன், ''இந்தக் குகைக்குள் எப்படி வந்தாய் என்று கேட்கிறீர்கள்? அது பெரிய மர்மமல்ல. இந்தக் குகையை அடுத்துத்தான் சித்தர் குகை யிருக்கிறது'' என்று அறிவித்தான்.

அரசகுமாரியின் முகத்தில் ஏதோ பழைய நினைவு சித்தத்திலிருந்து பளிச்சிட்ட சாயை ஒன்று படர்ந்தது. இருப்பினும் அவள் சந்தேகத்துடன் கேட்டாள். ''நீலா! சித்தர்தான் காலமாகி விட்டாரென்று ஸ்வாமிகள் சொன்னாரே?'' என்று.

நீலன் மீண்டும் தலைதாழ்த்தி, ''சித்தர் இறந்து விட்டாரே தவிர குகை இறக்கவில்லை அரசகுமாரி'' என்று விளக்கினான்.

''ஆனால் சித்தரை அங்கேயே சமாதி செய்து பெரிய பாறாங்கல்லால் குகையை அடைத்துவிட்டதாகக் கேள்விப் பட்டோமே?'' என்று அரசகுமாரி வினவினாள்.

zeevaa

''உண்மைதான் அரசகுமாரி. அந்தப் பாறாங்கல்லைத் திரும்பப் புரட்டுவது சிறிது சிரமமாகத்தானிருந்தது. ஆனால் புரட்டி உள்ளே நுழைந்தேன். அங்கு சித்தர் சமாதியானதாகத் தெரியவில்லை. எலும்புக்கூடு எதுவும் இல்லை. சடலம் இருந்ததற்கான அறிகுறிகள் எதையும் காணோம். அவர் சமாதியான இடத்தில் வைத்திருந்த அகல்விளக்கு மட்டும் எண்ணெய் தீர்ந்து சாம்பல் பூத்துக் கிடந்தது. இந்தக் குகைக்கு வழியைக் காட்ட ஒரு பாறை மீது கையொன்றின் சின்னம் நீண்ட ஆள்காட்டி விரலுடன் சித்திரமாக எழுதப் பட்டிருந்தது. அந்த விரலிருந்த திசையிலிருந்த கல்லைப் புரட்டினேன். இந்தக் குகையின் வெளிச்சம் தெரிந்தது. உள்ளே வந்து அந்த வழியை மூடிவிட்டேன்'' என்று விளக்கமாகச் சொன்னான் நீலன்.

இதைக் கேட்ட அரசகுமாரி, விஜயன் இருவருமே பெருத்த பிரமைக்குள்ளானார்கள். சித்தரைப்பற்றி விஜயனுக்கு ஏதுமே தெரியாததால் மந்திரமலைக் குகைகளில் சதா தவம் செய்யும் துறவிகளில் அவரும் ஒருவராயிருக்கலாமென்று முடிவுக்கு வந்து, ''அப்படியானால் நமக்கு வெளியேற ஒருவழி கிடைத்துவிட்டது.'' என்று கூறினான் சிறிது மகிழ்ச்சியுடன்.

அந்த மகிழ்ச்சியை உடைக்க நீலன் பதில் சொன்னான், ''சிங்கள வீரரே! அந்தக் குகைக்குள் நாம் மீண்டும் போவது உசிதமல்ல'' என்று.

''ஏன்?'' விஜயன் கேள்வியில் சந்தேகம் ஒலித்தது.

அரசகுமாரியும் தனது அழகிய புருவங்களைக் கேள்வி கேட்கும் பாவனையில் உயர்த்தினாள். நீலன் விஜயனைப் பார்க்காமல் அரசகுமாரியைப் பார்த்தே பேசினான். ''தேவி! முழுக்கதையையும் நீங்கள் கேட்கவில்லை! சித்தர் குகையில் கையையும் ஆள்காட்டி விரலையும் வரைந்த சித்திரம் பழைய சித்திரமல்ல. மாக்கட்டியால் சமீபத்தில் எழுதப்பட்டது. எனக்கு முன்பு அங்கு யாரோ நுழைந்து இருக்கிறார்கள்'' என்று அறிவித்தான் நீலன்.

zeevaa

இதைக் கேட்டதும் விஜயன் எண்ணங்கள் துரிதமாக இறங்க முற்பட்டதால், ''அதெப்படி நிச்சயமாகத் தெரியும் உனக்கு?'' என்று வினவினான்.

''சிங்கள இளவலே! யாரும் உட்புகுந்திராவிட்டால் புதிதாக எழுத்துக்களை எழுத முடியாது. தவிர மாக்கல் எழுத்து நீண்டநாள் நிற்காது. குகைக்குள் இரண்டு இடங்களில் காலடிச் சுவடுகளும் தெரிந்தன'' என்று விளக்கினான் நீலன்.

விஜயன் மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தான். ''இந்தக் குகைக்கும் அந்தக் குகைக்கும் வழியிருப்பது உனக்கு முன்னமே தெரியுமா?'' என்று வினவினான் சில வினாடி சிந்தனைக்குப் பிறகு.

''தெரியாது'' -திட்டமாக வந்தது நீலனின் பதில்.

''வழியிருப்பதை யார் சொல்லிக் கொடுத்தது?'' என்று மீண்டும் கேட்டான் விஜயன்.

அடுத்து ஒரு பெரிய வெடியை எடுத்து வீசிய நீலன், ''வேறு யார் சொல்ல முடியும்? இந்தக் கலிங்கத்தின் ரகசியங்களை உள்ளங்கை ரேகைபோல் உணர்ந்த நந்தன் தான்'' என்றான்.

''படகோட்டிக் கிழவனா'' விஜயன் கேள்வியில் வியப்பு மண்டிக் கிடந்தது.

''ஆம்'' நீலன் பதில் மிகச் சுருக்கமாக அமைந்தது.

''அவன் எங்கிருக்கிறான்?'' -விஜயன் ஆவலுடன் கேட்டான்.

''நெடுஞ்சாலை வழியாகச் சிம்மபுரம் போவதாகச் சொன்னான்.''

''எங்களுக்கு உதவ முயற்சி ஏதும் எடுக்கவில்லையா?''

''இல்லை.''

''ஏன்?''

''தங்களைச் சிறை செய்யக்கூடியவர் இனிமேல் பிறந்தால்தான் உண்டு என்று சொன்னான். அதுமட்டுமல்ல...''

zeevaa

"சொல் நீலா!"

"தங்கள் பாதுகாப்பை வேறொரு பலமான கரம் ஏற்றுக் கொண்டிருப்பதாகச் சொன்னான்."

"யாரது?"

"பெயரைச் சொல்ல மறுத்தான். சித்தர் குகை வாயிலில் என்னை விட்டுப் போய்விட்டான்."

நீலன் சொன்ன செய்தியிலிருந்து அந்த இன்னொரு கரம் அம்பெய்யும் கரம் தானென்பதை உணர்ந்துகொண்ட விஜயன் மேற்கொண்டு தர்க்கத்தால் பயனில்லை என்பதைப் புரிந்து கொண்டு, "நீலா! எப்படியும் இரவின் மூன்றாம் ஜாமத்தில் இந்தக் குகையைவிட்டுக் கிளம்பத் தீர்மானித்து விட்டேன். அதற்குப் பூர்வாங்கமாகச் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் சில உள்ளன. முதலில் அதோ கீழே கிடக்கும் பெண்ணின் காயத்தைக் கட்டி அவளை யாராவது எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று கூறிவிட்டுச் சற்று எட்டத் தரையில் கிடந்த பணிப் பெண்ணைக் காட்டினான்.

நீலன் அரசகுமாரியை நோக்கி, "தேவி! யாரவள்?" என்று வினவினான்.

"உன் தங்கைதான் நீலா" என்றாள் அரசகுமாரி.

"ஆசிரமத்துக்கு அனுப்பினேனே, அவளா?" என்று அச்சம் நிரம்பிய குரலில் கேட்டான்.

"அவளேதான். அவளுக்கு ஆதிமல்லன் வீரர்கள் செய்த அநியாயத்தைப் பார். ஆனால் மனம் கொதிக்காதே. அவனைக் கொல்வது என் கடமை" என்று அரச குமாரி கூறியதும் கீழே கிடந்த பெண்ணை நோக்கி நடந்து அவளருகில் மண்டியிட்டு உட்கார்ந்த நீலன் அவள் தொடையிலிருந்த காயத்தைப் பார்த்தான்.

zeevaa

உள்ளம் குமுறினாலும் அதை வெளிக்குக் காட்டாமல் அதற்கு தனது கச்சையால் லேசாக ஒரு கட்டுப் போட்டு, கச்சையிலிருந்த வாளைக் கையில் எடுத்துக் கொண்டான். பிறகு அவள் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த மதுக்குப்பியிலிருந்து இரண்டு சொட்டு மதுவை அவள் வாயில் புகட்டினான். அவள் சிறிது முனகினாள். அசையவும் முயன்று முடியாததால் மீண்டும் மல்லாந்தாள் விஜயன் விரித்திருந்த அங்கியில். தான் நினைத்ததுபோல் அவள் நிலை அத்தனை ஆபத்தில்லையென்பதைப் புரிந்து கொண்டதால் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்ட நீலன் மெள்ள அவள் பக்கத்திலிருந்து எழுந்து விஜயனை நோக்கி, ''எசமான்! நான் இவளைத் தூக்கிவர முடியும்'' என்றான். அத்துடன் ''இங்கிருந்து எப்படிப் போவதாக உத்தேசம்?'' என்றும் வினவினான்.

''மேல் துவாரத்தின் வழியாக'' என்றான் விஜயன்.

''அங்கு எதிரிகள் கண்காணிப்பு இருக்கிறது. இப்பொழுதுதான் மேல் துவாரத்தருகில் வரமுயன்ற ஒருவனை வேல்வீசிக் கொன்றேன்'' என்றான் நீலன்.

அந்த நிகழ்ச்சியைப்பற்றிக் கவலைப்படாத விஜயன் துரித நடவடிக்கை தொடங்கி, ''சமத்! நீ வாயிலைவிட்டு நகராதே'' என்று எச்சரித்துவிட்டு அரசகுமாரியை அங்கி விரித்திருந்த இடத்திலேயே நிற்க வைத்துவிட்டுக் குகையின் மேல் துவாரமிருந்த இடத்தை நோக்கிச் சென்றான்.

அங்கிருந்த பக்கத்துப் பாறாங்கல்லில் காலை ஊன்றி ஏறித் தனது தலையைச் சாய்த்து வெளிப்புறத்தை நோக்கினான். குகையின் மேல்புறத்தில் வேல் பாய்ந்து விழுந்துகிடந்த வீரனைத் தவிர யார் நடமாட்டமும் இல்லை. தூரத்திலிருந்த மரங்களின் மறைவுகளில் வீரர்கள் இருந்தாலும் மூன்றாம் ஜாமத்தில் யார் கண்ணும் சிறிது மூடுமாகையால் அந்த நேரத்தில் துவாரத்தின் வழியாக மேலே ஏறி, தான் பாறையில் புரண்டு விட்டால், தன்னைத் தூரத்திலிருந்து வரும் வேலோ வாளோ தாக்க முடியாதென்று தீர்மானித்தான். பிறகு

zeevaa

மூர்சமத் இருந்த இடத்திற்குச் சென்று, ''சமத்! மூன்றாம் ஜாமத்தில் நான் வெளியே சென்று விடுவேன். பிறகு காட்டுப் பகுதியிலிருந்து மும்முறை வாயால் ஊதுவேன். அந்தச் சமயத்தில் நீ அரசகுமாரியை அழைத்துக் கொண்டு குகை வாயிலுக்கு வந்துவிடு. நீலன் அந்தப் பணிப்பெண்ணைத் தூக்கிக் கொண்டு வருவான். உனக்கும் மற்றவர்களுக்கும் புரவிகளை அனுப்பி வைக்கிறேன். அவற்றில் ஏறிக்கொண்டு நான் காட்டும் காட்டு மார்க்கத்தில் நுழைந்து விடு,'' என்று உத்தரவிட்டான்.

மூர்சமத் பதிலேதும் சொல்லவில்லை. அத்தகைய உறுதியான குரலில் எசமான் பேசும்போது குறுக்கே பேசுவதில் அர்த்தமில்லையென்பதை அனுபவத்தால் உணர்ந்திருந்த மூர் இனத்தான் தலையை மட்டும் அசைத்தான், உத்தரவைப் புரிந்து கொண்டதற்கு அறிகுறியாக, அடுத்து விஜயன் நீலனிடம் வந்து, ''நீலா! உன் சகோதரியை அதிகமாக அசைக்காமல் தூக்கிக் கொள். மற்றபடி அசரகுமாரியை ஏதும் பேசாமல் பின்பற்று,'' என்று கூறிவிட்டு, ''அரசகுமாரி! இப்படி வா,'' என்று அவள் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு குறுக்கே நீண்ட கற்பாறைகள் நிலவிலிருந்து அளித்த இருளில் மறைந்து நடந்தான். கோடிப் பாறையின் மறைவுக்கு வந்ததும் அரகுமாரியை இரு கைகளினாலும் வளைத்து. ''சுந்தரி! இரண்டாம் ஜாமத்தில் பாதியாகி விட்டது. மூன்றாம் ஜாமம் துவங்கியதும் அதோ அந்த மேல் துவாரத்தின் வழியாக நான் மேலே ஏறிப் புரண்டு விடுவேன். அதற்குப் பிறகு, சுமார் அரை ஜாமத்திற்குப் பிறகு குகை வாயிலுக்குப் புரவிகள் வரும். பிறகு நீங்கள் தப்பலாம். வழியைச் சமதிடம் சொல்லியிருக்கிறேன். புரவியில் ஏறியதும் வேகமாகச் சமதின் புரவியைத் தொடர்ந்து விடு,'' என்று கூறினான்.

அரசகுமாரியின் முகத்தில் வேதனை தெரிந்தது. பாறை அளித்த இருளில் அவள் அவனைச் சற்று அதிகமாகவே நெருங்கி நின்றாள். ''எனக்குச் சிறிது அச்சமாக இருக்கிறது,'' என்றும் சொன்னாள்.

zeevaa

விஜயன் தன் கைகளில் நெருங்கிய அவள் பூவுடலை மேலும் நெருக்கினான். உடலோடு உடல் உராய்ந்து நின்ற நிலையில் சொன்னான், "அரசகுமாரிகள் அச்சத்தை உதறவேண்டும். அதுவும் சிங்களத்து விஜயபாகுவின் வாழ்வில் பங்குபெறப் போகிறவள் பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். சிங்களத்தின் வரலாறே ராணிகளைச் சோழர்களுக்குச் சிறை கொடுத்த வரலாறு," என்று அவள் பூவுடலை அளவுக்கு அதிகமாகவே நெருக்கிய வண்ணம் கூறினான்.

திரிலோக சுந்தரி தனது அழகிய வதனத்தைச் சற்றே உயர்த்தி அவன் கண்களுடன் தனது கண்களை இணைத்தாள். "கணவன் சுகத்திலும் துக்கத்திலும் மனைவிகளுக்குச் சமபங்கு உண்டு. ஆனால் எனக்குக் கால்பங்கு தான்," என்று லேசாகப் புன்முறுவல் செய்தாள்.

இந்த இருட்டில் அவள் புன்முறுவலை அவனால் பார்க்க முடியவில்லைதான். ஆனால் அவள் என்ன சொல்கிறாளென்பதையும் அவள் மன நிலையையும் அவன் புரிந்து கொண்டான். தனது முதல் காதலியான லீலாவதியைப் பற்றி அவள் குறிப்பிடுகிறாளென்பதை உணர்ந்து கொண்ட விஜயன், "சுந்தரி! லீலாவதி சோழர் சிறையிலிருக்கிறாள்," என்றான்.

"நான்?" என்று அவள் கேட்டாள் ஏதோ கேட்க வேண்டுமென்பதற்காக.

"என் கைகளின் சிறையிலிருக்கிறாய்," என்று கூறிய விஜயன் அவள் இடையைத் தன்னை நோக்கி நன்றாக இழுத்து அவள் இடையெலும்பை நொறுக்கிவிடுவது போல் பிடித்தான். பிறகு கைகளை அவள் பூவுடலில் சுற்ற விட்டு, "சுந்தரி! உன் உடலில்தான் எத்தனை புஷ்பங்கள்!" என்று கூறிவிட்டுப் பெருமூச்சு விட்டான்.

அவள் பதிலுக்குப் பெருமூச்சு விட்டாள் நெருக்கத்தின் காரணமாக ஏற்பட்ட உணர்ச்சி அலைகளின் மோதலால். விஜயன் முகத்தில் வீசிய பெருமூச்சு அவன் ஆசை அலைகளைக்

zeevaa

கிளறிவிடவே, ''அடி சுந்தரி!'' என்று சொந்தமாக அழைத்து, ''இதோ உன் கன்ன செம்பருத்தி மலர்கள். இது உன் நயன நீலோத்பலங்கள், இதோ பின்னழகு பெருந்தாமரைகள், இதோ... இதோ...'' என்று மேலும் பேச முயன்று பேச முடியாதவனாய் முகத்தைத் தாழ்த்தித் தத்தளித்த அவனை, தனது இரு கைகளாலும் பிடித்த அரசகுமாரி தனது செவ்விய அதரங்களை அவன் முரட்டு அதரங்களுடன் இணைத்தாள். அவனும் இழைத்தான் பிறகு அவன் உதடுகள் அகன்று அவள் கழுத்துக்கும் கீழே புதைந்தன. ''எத்தனை புஷ்பங்கள்! எத்தனை புஷ்பங்கள்!'' என்று அவள் இரட்டை அழகுக் கிடையில் முணுமுணுக்கவும் செய்தன.

அரசகுமாரி இவ்வுலகை மறந்தாள். வேறு உலகத்துக்கு அவள் இதயம் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் குகை வாயிலிலிருந்து மூர்சமதின் குரல் ஒலித்தது. ''மூன்றாவது ஜாமம் போல் தெரிகிறது,'' என்று.

அந்தக் கரகரத்த குரல் விஜயனை இவ்வுலகுக்கு இழுத்துவிடவே அரசகுமாரியைத் தன்னிடமிருந்து விலக்கி, ''சுந்தரி! குகை நடுவே போய்விடு. நான் வருகிறேன்,'' என்று கூறிவிட்டு மறைவை விட்டு வெளியே வந்து பாறைமீது காலை வைத்துத்தொற்றி துவாரத்தின் மேல்பகுதியைக் கவனித்தான். அங்கு அரவம் ஏதுமில்லாது போகவே, துரிதமாகத் தாவி ஏறி மேல்புறப் பாறையில் உருண்டான். ஏற்கனவே நீலன் வேல் பாய்ந்துகிடந்த வீரன் பக்கத்தில் ஆடாமல் அசையாமல் படுத்தான் சில வினாடிகள். பிறகு ஏதோ மரங்களிடையிலிருந்து அரவம் கேட்கவே எழுந்து குனிந்த வண்ணம் மரங்களிருந்த இடத்தை நோக்கி ஓடினான். அவனைச் சுற்றிலும் திடீரென வேல்களும் குறுவாள்களும் பறந்துவந்து விழுந்தன. குறுவாள்களிலிருந்து தப்பக் குனிந்தும் தவழ்ந்தும் மாறிமாறி ஓடிய விஜயன் கூடியவரை அருகிலிருந்த ஒரு மரக் கூட்டத்துக்குள் நுழைந்தான். ''இனி எனது புரவியை அழைக் கிறேன்,'' என்று கூறி, தனது வாயில் இருவிரல்களை வைத்தான்.

zeevaa

அவன் கை மற்றொரு பலமான கையால் அகற்றப்பட்டது. ''அரவம் செய்யாதே! பேசாமல் வா'' என்ற சொற்கள் அவன் காதில் விழுந்தன ரகசியமாக.

அவனது இன்னொரு கையும் சொற்களை உதிர்த்தவனால் பற்றப்பட்டு இழுக்கப்பட்டது.



zeevaa

# 25. துணைவன் ஒரு விடுகதை

மகேந்திர மலையின் இறுதிப்பகுதியிலிருந்த அந்தக் காட்டுப் பகுதிகளில் மரங்கள் மிக அடர்த்தியாயிருந்ததால், மேலிருந்து இறங்கிய மதியின் கிரணங்கள் ஓரிரு இடங்களில் மட்டுமே ஊடுருவியதன் காரணமாகத் திட்டை திட்டையாக வெள்ளி நாணயங்களைப் போல் சில இடங்களில் மட்டுமே விழுந்திருந்த ஒளி வீச்சு அந்த இடத்தில் அதிக சோபையைக் கொடுக்காததால், தன் கையைப் பற்றியவன் முகத்தைச் சிறிதும் பார்க்க முடியவில்லை விஜயனால். அத்துடன் அந்த மனிதன் தலையில் கட்டியிருந்த துணியொன்று முகத்திலும் சிறிதளவு குஞ்சலம் போல் விழுந்து பிரிந்தும் இருந்ததால் முகத்தின் முக்கால் பகுதி மறைக்கப்பட்டும் இருந்ததன் விளைவாக, கையைப் பற்றியவனை யாரென்று அறிவதும் இயலாமல் போயிற்று சிங்களத்து வாலிபனுக்கு. தனது கையைப் பற்றிய கையில் மிக வலு இருந்ததை விஜயன் உணர்ந்து கொண்டாலும், அது மெலிவாக இருந்தது பிடியிலிருந்தே தெரிந்ததால், திடமான பெரிய வஜ்ரஹஸ்தர் கையல்ல அது என்பதைச் சிங்கள வீரன் புரிந்து கொண்டான். மேற்கொண்டு அவனைச் சிந்திக்க விடாத அந்தப் புதுத் துணைவன், ''வா! நேரமாகிறது. நீங்கள் இங்கிருப்பது ஆதிமால்யனுக்குத் தெரியுமுன்பு சீக்கிரமாகச் செயலில் இறங்க வேண்டும்'' என்று அறிவித்தான்.

அத்துடன் விஜயன் கையையும் விட்டு அவனுக்கு வழிகாட்டியும் அழைத்துச் சென்றான். அவன் மிக வேகமாகவும் தட்டித் தடவாமலும் மலைப் பாறைகளிலும் கூழாங்கற்களிலும் நடந்து சென்றதிலிருந்து அந்த மனிதன் அந்தக் காட்டுப் பகுதிக்குப்

zeevaa

புதியவனல்லவென்பதை விஜயன் ஊகித்துக் கொண்டான். ஒவ்வொரு இடங்களில் சந்திர கிரணங்கள் ஓரிரண்டு அவன் கால்கள் மீது பட்டபோது விஜயன் சிறிது சிந்தனைக்கே உள்ளாகி, 'இந்த நடை எனக்கு புதிதல்ல,' என்று சொல்லிக் கொண்டாலும் 'இருக்காது, அவராயிருக்க முடியாது,' என்றும் மனத்துக்குள் முணுமுணுத்துக் கொண்டான்.

அந்த முணுமுணுப்பு முன்னே சென்றவன் காதில் விழுந்ததோ என்னவோ தெரியவில்லை. அவன் சட்டென்று ஒரு மரத்தின் முன்பு நின்று, ''காட்டின் இந்தப் பகுதியில் யாரும் வரமாட்டார்கள்,'' என்றான்.

''ஏன்?'' விஜயன் ஏதோ கேட்க வேண்டுமென்பதற்காகக் கேட்டான்.

''இங்கு பேய்கள் உலவுவதாக ஒரு வதந்தி இருக்கிறது. அந்தப் பேய்கள் சற்று எட்ட உள்ள ஒரு குகையொன்றில் இருக்கும் மகாகாளியை நள்ளிரவில் வணங்க வருவதாகவும் பக்கத்துக் கிராம மக்கள் நம்புகிறார்கள். ஆகையால் இந்தப் பகுதிகளில் பழக்கமுள்ள யாரும் இந்த இடத்துக்கு வருவதில்லை,'' என்ற அந்த மனிதன், ''சிங்கள வீரரே! மகேந்திர மலை பல குகைகளை உடையது. ஒவ்வொரு குகையைப் பற்றியும் ஒவ்வொரு கதையும் உண்டு. ஆனால் மகேந்திர மலையின் நதிகளால் இந்தக் கலிங்கம் பிழைக்கிறது, செழிக்கிறது,'' என்றும் சொன்னான்.

புரிந்து கொண்டதற்கு அறிகுறியாக விஜயன் தலையை ஆட்டினான். அத்தனை இருட்டிலும் அந்த மனிதனுக்கு விஜயன் தலையாட்டியது தெரிந்திருக்க வேண்டுமென்பது அவனது அடுத்த சொற்களிலிருந்து தெளிவாயிற்று. ''விஷயத்தை நீங்கள் தெளிவாகப் புரிந்து கொள்வதைப் பற்றி மகிழ்ச்சியடைகிறேன். இங்கிருந்து உங்களைத் தப்ப வைத்தால் ஓர் உத்தரவாதம் கொடுக்க முடியுமா?'' என்று வினவினான் அந்த மனிதன்.

zeevaa

''என்ன உத்தரவாதம்?'' விஜயன் மிக மெதுவாகக் கேட்டான்.

''சிம்மபுரத்துக்குப் போகாமல் இங்கிருந்து திரும்பி விடுகிறீர்களா?'' என்று அவன் வினவினான்.

''முடியாது.'' - விஜயன் பதில் திட்டமாயிருந்தது.

இந்தப் பதிலைக் கேட்ட அந்த மனிதன் சிறிது நிதானித்து விட்டு, ''நினைத்தேன் அப்பொழுதே. சரி, யார் தலையெழுத்தையும் யாரும் மாற்ற முடியாது. சிங்கள வீரரே, விதி உம்மை ஆபத்தை நோக்கி உந்துகிறது,'' என்று கூறினான். அத்துடன் சொன்னான், ''இப்பொழுது நாமிருக்கும் இடத்திலிருந்து நேர் கிழக்கில் சிறிது தூரம் சென்றால் சதுரமான ஒரு வெளியிடம் வரும். அதில் பசும்புல் நிறைய இருக்கும். அந்த இடத்தில் ஆதிமால்யன் புரவிகள் நிற்கின்றன. உங்கள் புரவியும் அங்குதானிருக்கும். நீங்கள் உங்கள் புரவியில் ஏறி, சத்தம் செய்யாமல் இங்கு வாருங்கள். உங்கள் புரவியை விட்டு உங்கள் மெய்க்காவலனின் பழுப்புப்புரவி பிரியாதாகையால், அதுவும் தொடர்ந்து வரும். அந்த இரண்டையும் இங்கிருந்து குகை வாயிலுக்கு அனுப்புவோம். பிறகு நீங்கள் மறுபடியும் சென்று மீதிப் புரவிகளைக் கடிவாளக் கயிறுகளைக் கொண்டு அடித்து எதிர்ப்பக்கமாக விரட்டி விடுங்கள்'' என்றான்.

விஜயன் அந்த மனிதனின் முகத்தைப் பார்க்க முயன்றாலும் முடியவில்லையாகையால் அவன் உத்தரவுப்படி செய்யத் தீர்மானித்தான். அங்கிருந்து நடந்த விஜயன் சிறிது தூரத்திலிருந்த அந்த வெளியிடத்துக்கு வந்து சேர்ந்ததும் அந்த இடம் பார்ப்பதற்குக் கண்ணையும் கருத்தையும் அள்ளும்படியா யிருந்ததைக் கவனித்தான். நன்றாக முழங்கால் உயரத்துக்கு அங்கங்கு பளிங்குக் கற்கள் மேல் வளர்ந்த பசும்புல்லின் பச்சை நிறத்துக்கு வெண்மதி தனி மெருகு கொடுத்திருந்தாலும், தெற்குக் காற்றில் அவை மரகதக்கீற்றுகள் போல் அசைந்தாலும், அதன் அழகு வர்ணனைக்கு அப்பாற்பட்டதாயிருந்தது. எந்தக் கெடுதலுக்கும் பக்கத்தில் ஒரு சிறப்பையும் இயற்கை சிருஷ்டிக்கும் விசித்திரத்தை எண்ணி வியந்த

zeevaa

விஜயன், 'இந்த ஆபத்து மட்டுமில்லையேல் அரசகுமாரி இந்த மரகதப் பாயில் படுக்கலாமே, வெண்ணிலவில் அவள் மேனி பளபளக்குமே, அதைக் கண்டு அந்தக் கண்கள் மயக்கத்தை ஊட்டுமே எனக்கு,' என்று எண்ணமிட்டான்.

அப்பொழுது அந்தப் புல்வெளியில் மேய்ந்துகொண்டிருந்த புரவிக்கூட்டத்திலிருந்து அவனது கரிய புரவி கனைத்து அவனை நோக்கி வரவே கனவுலகத்திலிருந்து மகேந்திர மலைக்குத் திரும்பிய விஜயன் தனது புரவியைத் தழுவிக் கொண்டான். அதே சமயத்தில் அதைத் தொடர்ந்து மூர்சமதின் பழுப்புப் புரவியும் வரவே, விஜயன் புன்முறுவல் கொண்டு, "என்னை இங்கு அனுப்பியவர் உங்களை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்," என்று அந்தப் புரவிகளிடம் கூறிவிட்டுத் தன் புரவிமீது ஏறி அதைத் தான் வந்த இடத்துக்கு நடக்க விட்டான்.

அந்தக் கரிய புரவியும் முன்னமே அந்தப் பாதையை அறிந்தது போல் நடந்தது. அதைப் பழுப்பு நிறப் புரவி தொடர்ந்தது.

இப்படி விஜயன் புரவியை நடத்திக்கொண்டு அந்த மனிதன் இருந்த இடத்துக்கு வந்ததும் அந்த மனிதனைக் காணாததால் சுற்றும் முற்றும் நோக்கிய விஜயனை மரத்தின் மேலிருந்து அந்த மனிதன் மெதுவாக அழைத்து, "குகை வாயிலை நோக்கி ஆதிமால்யன் வீரர்கள் சென்று திரும்பி விட்டார்கள். இனி காக்க அதிக நேரமில்லை. உங்கள் புரவியைக் குகைவாயிலுக்கு அனுப்புங்கள்" என்றான்.

விஜயன் தனது புரவியிலிருந்து இறங்கி அதன் காதில் ஏதோ சொல்ல அது மெதுவாக நடக்க முற்பட்டது. காட்டின் முற்பகுதியை நோக்கி பழுப்பு நிறப் புரவியும் அதை நிதானமாகத் தொடரலாயிற்று. "இப்பொழுது நீங்கள் பழைய சதுக்கத்துக்குச் சென்று அங்கிருக்கும் புரவிகளில் இரண்டைக் கடிவாள வாரினால்

zeevaa

அடித்து எதிர்ப்பக்கமாக விரட்டுங்கள். அங்கிருந்தே குகைக்குச் சேதி சொல்ல ஊதுங்கள் கையை வைத்து முதலில் முயன்றது போல். அடுத்து, குகையிலிருந்து உங்கள் புரவிகள் வரும் வழியில் நில்லுங்கள். அரசகுமாரி வந்ததும் அதேபுரவியில் நீங்களும் ஏறி இந்த அடவியின் வலது புறத்திலிருக்கும் குறுக்குப் பாதையில் வேகமாகச் சென்று விடுங்கள்,'' என்று செய்ய வேண்டியதை விவரித்துச் சொன்னான் அந்த மனிதன். அடுத்து, மரத்திலிருந்து குதித்து வேகமாக ஓடி அடவியில் மறைந்து விட்டான்.

அந்த மனிதன் திட்டம் மிக நன்றாகப் புரிந்தது விஜயனுக்கு. புல்வெளியில் மேய்ந்த புரவிகள் நல்ல அரபு சாதிப் புரவிகளாதலால் ஒன்று செல்லும் பக்கம் மற்ற எல்லாமே செல்லும் என்பதை விஜயன் அனுபவத்தால் புரிந்து கொண்டிருந்தான். அப்படி அந்தப் புரவிகள் எதிர்ப்பக்கம் விரையும் பட்சத்தில் அவற்றை ஆதிமால்யன் ஆட்களால் தடுக்க முடியாதென்பதையும் அவர்கள் ஓடி சேணங்களைப் பிடிக்குமுன்பு குகைவாயில் புரவிகளின் நெருக்கத்தால் பிரளயமாகி விடுமென்பதையும் புரிந்து கொண்ட விஜயன், தனது புதுத் துணைவன் வெளிநாட்டுப் புரவிகளின் இயற்கையை நன்றாக அறிந்து கொண்டதால் சதுக்கத்துக்கு வந்ததும் புரவிகளில் இரண்டை அவற்றின் கடிவாளக் கயிறுகளால் அடிக்கவே அவை எதிராகத் திரும்பிக் குறுக்குப் பாதையை நோக்கி விரைந்தன. அதே சமயத்தில் தனது விரல்கள் இரண்டை வாயில் வைத்துப் பெரியதாக ஊதினான் விஜயன்.

அடுத்து மகேந்திர மலையின் அந்தக் காட்டுப்பகுதி, புரவிகள் வேகமாகச் சென்ற குளம்படி ஒலிகளாலும், அவற்றைப் பிடிக்க ஆங்காங்கு மறைந்து நின்ற வீரர்கள் ''பிடியுங்கள் புரவிகளை யாரோ விரட்டியிருக்கிறார்கள்,'' என்று போட்ட கூச்சலாலும், குகைவாயிலுக்குச் சென்று விட்ட விஜயனின் கறுப்புப் புரவி பெரிதாகக் கனைத்ததாலும் அந்தக் கனைப்பைக் கேட்டதால்

zeevaa

விரைந்த புரவிகள் பலவும் கனைத்ததாலும் ஏற்பட்ட சத்தம் மலைமீது தாக்கி, பயங்கரமாக எதிரொலி செய்ததால் காடே விழுந்து எழுந்துவிட்ட பிரமை ஏற்பட்டது. அந்தப் பிரமையால் மறைந்திருந்த ஆதிமால்யன் வீரர்கள் அங்குமிங்கும் ஓடியதாலும், ''யாரையும் தப்ப விடாதீர்கள், பிடித்துக் கொல்லுங்கள்,'' என்று ஆதிமால்யன் பெரிதாக இரைந்து பிறப்பித்த உத்தரவாலும் அந்தக் காட்டுப்பகுதி அமர்க்களப்பட்டது.

அடுத்து விஜயன் சிறிதும் தாமதிக்காமல் புதுத் துணைவன் கூறியதுபோல் காட்டின் மேல்புறம் விரைந்து அங்கு தோன்றிய குறுக்குப் பாதையின் பக்கவாட்டில் நின்றான். தூரத்தே புரவிகள் வரும் பேரொலி கேட்டது. சந்திர வெளிச்சத்தில் ஏதோ வனதேவதை போல் கரிய புரவிமீது அரசகுமாரி வந்து கொண்டிருந்தாள். மற்ற புரவிகளை விடக் கரிய புரவியின் வேகம் அசுர வேகமாயிருந்ததால் அது மிகவும் முன்னால் வரவே, அதைக் குறுக்கே சென்று பிடிக்கப் போன விஜயனை யாரோ விரோதியென்று நினைத்து, குதிரைச் சவுக்கின் கட்டையால் ஓங்கி அடிக்க முயன்ற அரசகுமாரியின் கையைப் பிடித்துப் புரவியையும் நிறுத்தி அதன் மீது துள்ளி ஏறிய விஜயன், பின்னடைந்து விட்ட அரசகுமாரியை, ''சுந்தரி! என்னை ஜாக்கிரதையாகப் பிடித்துக் கொள்,'' என்று கூறிப் புரவியின் காதில் குனிந்து ஏதோ சொல்ல, புரவி பறந்தது காற்றைப் போல.

பின்னால் திரும்பிக் கவனித்த அரசகுமாரி பெருவியப் பெய்தினாள். விஜயன் புரவியை அடுத்து பழுப்புப் புரவியில் மூர்சமதும், அதற்கடுத்த புரவியொன்றில் பணிமகளுடன் நீலனும் விரைந்து வந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் ஆதிமால்யன் வீரர் புரவிகள் நாலைந்து வீரர் யாருமின்றிப் பறந்து வந்தன. அவற்றை நோக்கி வீசப்பட்ட இரு குறுவாள்களால் தாக்கப்பட்ட ஒரு புரவி பெரிதாக அலறிக் கீழே விழுந்து கால்களை உதைத்துக் கொண்டது. மீதிப் புரவிகள் அதன் மீது ஏறித் தாவி வந்தன. அவற்றை அடுத்து வீரர்கள் பலர் ஓடி வந்தார்கள்.

zeevaa

வெண்ணிலவில் சிம்மபுரக் குறுக்குப் பாதையின் அந்தப் பவனி பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமாயிருந்தது. தனது புரவியும், மூர்சமதின் புரவியும், நீலன் புதிதாகப் பிடித்து ஏறிய எதிரிப் புரவியொன்றும் வேகமாக ஓடவும், மற்றப் புரவிகள் ஓரிரண்டு வெறிபிடித்தவைபோல் பின் தொடரவும், கோடியில் ஆதிமால்யன் பெரிய ராட்சஸன் போல் நின்று பக்க மலைப் பாறையில் ஏறித் தனது ஆட்களுடன் ஓடிவரவும், நிகழ்ந்த அந்தப் பவனி ஏதோ இந்திர ஜாலம் போல் தெரிந்தது வானத்தில் வெள்ளி ஒளி வீச்சில். பக்கப் பாறையில் உச்சிக்கு ஏறி விட்ட ஆதிமால்யன் தனது குறுவாளைக் கையிலெடுத்துக் குறி வைத்தான். விஜயன் புரவியின் வேகத்தில் அந்தக் குறி பயனற்று கூழாங்கற்களில் விழுந்து ஒலி கிளப்பவே, வெறுப்புடன் பாறையிலிருந்து இறங்கினான் ஆதிமால்யன். அதற்குமேல் திரும்பிப் பார்க்காமல் விரைந்த விஜயன் சற்றுத் தூரத்திற்கு தனக்கு முன்பு ஒரு புரவி கனவேகத்தில் செல்வதையும், அதன் முதுகில் வில்லும் அம்பும் தரித்த ஒரு வீரன் அமர்ந்திருந்ததையும் கவனித்ததால் அவனைப் பிடிக்கப் புரவியை முடுக்கினான். ஆனால் அந்த வீரன் சட்டென்று பக்கத்துப் பாறையில் தனது புரவியை ஏறவிட்டு வெண்மதியொளியில் நின்றான். தனது முகத்தின் திசையை அகற்றி விஜயனைப் போகச் சொல்லிக் கையால் சைகையும் செய்தான்.

விரைந்த கரிய புரவிமீது அரசகுமாரியின் கை தனது கழுத்தைச் சுற்ற உட்கார்ந்திருந்த விஜயன், பாறை மீது நின்ற அந்த மனிதனின் முகத்தை நிலவொளியில் கண்டதும் விவரணத்துக்கும் அப்பாற்பட்ட பிரமையை அடைந்தான். ''இவர் எதற்காக எனக்கு உதவ வேண்டும்? புரியாத புதிராயிருக்கிறதே?'' என்று இரைந்தும் சொல்லிக் கொண்டான்.

''காரணம் சிம்மபுரத்தில் சொல்கிறேன்,'' என்று அரசகுமாரி விஜயன் காதுக்கருகில் முணுமுணுத்தாள்.

zeevaa

''இப்பொழுது சொன்னாலென்ன?'' என்று விஜயன் புரவி சென்ற வேகத்திலேயே கேட்டான்.

''சந்தர்ப்பம் சரியில்லை. சொன்னால் நீங்கள் சிம்மபுரம் போக மாட்டீர்கள்,'' என்றாள் கலிங்கத்தின் காரிகை.

தன்னைத் தப்புவித்த துணைவன் ஒரு விடுகதையாகி விட்டதை விஜயன் உணர்ந்து கொண்டான். சிம்மபுரம் சென்றதும் அந்தப் புதிரை அவிழ்ப்பதென்ற முடிவுக்கும் வந்தான்.



zeevaa

# 26. தவறாத கணக்கு

மகேந்திர மலையின் சிம்மபுரக் குறுக்குப் பாதையின் பக்கத்துப் பாறைமீது புரவியைத் தாவவிட்டு அதன்மீது அமர்ந்தவண்ணமே முகத்தை மறைத்திருந்த தலைத்துணியை நன்றாக அகற்றி லேசாக நகைத்தபடியே தன்னைப் போகவும் சைகை செய்த துணைவனின் முகத்தைக் கண்டதும், பெரும் பிரமைக்கு உள்ளான விஜயன் தனது ஆரம்ப ஊகம் சரியாகிவிட்டதை உணர்ந்ததால், அந்த மனிதன் அங்கு வந்ததற்கும் தனக்கு உதவி செய்ததற்கும் காரணத்தை அறிய முடியாமல் திகைக்கவே செய்தான். சிவகோகர்ண ஸ்வாமியின் ஆசிரமத்தில் வாட்போரில் தன்னால் இடையில் காயப்படுத்தப் பட்டவனும், வேங்கி நாட்டு இளவரசனுமான அபய குலோத்துங் கன் தன்னை எதற்காக எப்பொழுது தொடர்ந்து வந்தான். எதிரிகள் உலாவிய மலைக்காட்டில் மறைந்து எதற்காகத் தன்னைக் காத்து நின்றான் என்ற விவரங்களை அறிய முடியாததால் மலைப் பாறையில் சிரித்தபடி நின்ற அந்த மகாவீரனை நோக்கியவண்ணம் புரவியைச் செலுத்தினான்.

நிலவொளியில் பால் வடியும் வதனத்துடனும், சிரிப்பு உறைந்து புன்சிரிப்பாகிவிட்ட உதடுகளுடனும், உடலுக்குக் குறுக்கே இருந்த வில்லும் பின்னால் தோளில் தொங்கிய அம்பறாத் தூணியும் இடையே கச்சையில் தொங்கிய பெருத்த நீளவாளும் இணையிலாக் கம்பீரத்தை கொடுத்த வாளிப்பான வாலிப சரீரத்துடனும், புரவியில் சேணத்தின் இருபுறத்திலும் இருந்த இரும்புப் பூண்களில் கால்களை ஊன்றி எழுந்து நின்றதால் ராஜதோரணை விளங்கிய தோற்றத் துடனும் காட்சியளித்த வீரனைக் கண்ட விஜயன், தனது புரவியின்

zeevaa

வேகத்தைச் சிறிது தளர்த்தி அவனை ஒரு விநாடி உற்று நோக்கினான் அபய குலோத்துங்கன் குறுகிய வேங்கி நாட்டை மட்டும் ஆளப்பிறந்தவனல்ல, குவலயத்தையே ஒரு நாள் ஆளக்கூடியவன் என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

இப்படி அவன் புரவியின் வேகத்தைத் தளர்த்தியதை அபயனும் கவனித்திருக்க வேண்டும். ஆகவே துரிதமாகச் செல்லும்படி கையால் மீண்டுமொருமுறை சைகை செய்யவே, மறுபடியும் கடிவாளத்தை ஒருமுறை இழுத்துப் புரவியைப் பறக்கவிட்ட வண்ணம் கேட்டான். சற்று இரைந்து, "இவர் எதற்காக எனக்கு உதவவேண்டும்?" என்று.

சிம்மபுரத்தில் சொல்வதாக அரசகுமாரி அவன் காதுக்கருகில் திட்டமாக அறிவித்து விட்டதாலும், அப்பொழுது ஏதும் சொல்லச் சந்தர்ப்பம் சரியாயில்லை என்று கூறிவிட்டதாலும், அந்த விடுகதையைச் சிம்மபுரத்தில் அவிழ்க்கும் தீர்மானத்துடன் ஏதும் பேசாமல் எதிரே குறுகி ஓடிய வழியை நோக்கலானான். அந்தச் சிம்மபுரக் குறுக்குப் பாதை சில இடங்களில் அதிகமாகக் குறுகியும், சில இடங்களில் லேசாக விரிந்து சென்றபடியாலும் போகப் போக மரங்களும் அக்கம் பக்கங்களில் சிறிது அடர்த்தியாகத் தொடங்கியதாலும் மிகவும் எச்சரிக்கையாகவே பயணம் செய்தான் சிங்கள வாலிபன்.

போகப் போக வழி மிகக் குறுகலாயிற்று. மகேந்திர மலையின் கடைசிப் பகுதி கண்ணுக்கெதிரே எழுந்து வழியை அடைப்பது போன்ற பிரமையை அவ்வப்பொழுது அளித்ததாலும், விஜயன் கரிய புரவி அணுகியதும் சற்று நகர்ந்து பெரும் பாறைகளைச் சுற்றி ஓடிய குறுக்குப் பாதைக்கு வழிவிட்டது. இப்படி நகர்ந்தும் குறுக்கே வந்தும் ஜாலவித்தை காட்டிய மகேந்திரமலையின் விசித்திரத்தையும் அதன் காட்டின் அமைப்பையும் பார்த்து தனது கரிய புரவியை மிகுந்த எச்சரிக்கையுடன் நடத்திய விஜயன் வெண்மதியின் ஒளி

zeevaa

அதிகப்பட்டு நாலாம் ஜாமத்தின் முடிவு நெருங்குவதைப் புரிந்து கொண்டான். நாலாவது ஜாமம் முடியும் தருவாயில் திடீரெனச் சூழ்நிலை கறுத்து விடுமாகையால் போகும் வழியைத் தெரிந்து கொள்ள, ''சுந்தரி, இந்தப் பாதை இன்னும் எத்தனை தூரம் இருக்கிறது?'' என்று விசாரித்தான்.

அவன் தோளில் சாய்ந்து தனது ஒரு கையால் அவன் கழுத்தையும் இன்னொரு கையால் அவன் இடையையும் வளைத்திருந்த திரிலோகசுந்தரி, ''இப்பொழுதுதான் பாதி தூரம் வந்திருக்கிறோம்'' என்றாள்.

''பாதை குறுகி வருகிறது. அதோ குறுக்கே அடர்த்தியான காடும் தெரிகிறது'' என்றான் விஜயன் புரவியில் உட்கார்ந்த நிலையில் சிறிது பின்னுக்குச்சாய்ந்து. அப்படி அவன் சாய்ந்ததால் அவன் முதுகில் அதுவரை லேசாக அழுந்திப் புரவியின் அசைவில் இழைந்து கிடந்த அவளது இரட்டை லாவண்யங்கள் அதிகமாக இழையவே அரசகுமாரி உடனடியாகப் பதில் சொல்லவில்லை. பாதையின் கடுமையாலும் எதிரே தெரிந்த மிக அடர்த்தியான காட்டினாலும் அரசகுமாரியை ஜாக்கிரதையாகச் சிம்மபுரம் கொண்டு சேர்க்க வேண்டுமென்ற கவலையாலும், விஜயன் தன் முதுகில் இழைந்த கவர்ச்சிப் பிரதேசத்தை எண்ணிப் பார்க்கவு மில்லை, அதனால் உணர்ச்சிவசப்படவுமில்லை. ஏதோ கர்மவீரன் போல் புரவியில் அமர்ந்து சென்றான்.

அவன் கேள்விக்கு அரசகுமாரி பதில் சொன்னாள். ''பாதையின் ஒரு பகுதி அந்தக் காட்டுடன் முடிந்துவிடும். காட்டுக்குள் குகையொன்று இருக்கும். அதன் இரு புறத்திலும் வழிகள் உண்டு'' என்று.

''பாதை ஏன் வர வரக் குறுகலாகிறது?'' என்று விஜயன் வினவினான்.

''இதை யாரும் உபயோகப்படுத்துவதில்லை. ஆகையால் அரசாங்கப் பராமரிப்பு இல்லை'' என்று பதில் சொன்னாள் கலிங்கத்து அழகி.

''ஏன் ? அரசாங்கம் ஏன் தூங்குகிறது?'' என்று வினவினான் விஜயன்.

''நெடுஞ்சாலை இருப்பதால் இந்த வழி சாதாரணப் பயணிகளுக்குத் தேவையில்லை'' அரசகுமாரியின் பதிலில் லேசான நகைப்புத் தெரிந்தது.

அந்த நகைப்பின் காரணத்தைப் புரிந்து கொண்ட விஜயன், ''நாம் அசாதாரணப் பயணிகள் போலிருக்கிறது?'' என்று வினவினான்.

''ஆம். இல்லாவிட்டால் நம்மைக் கவனிக்கவும் பிடிக்கவும் எத்தனை பேர் சிரமப்பட்டிருக்கிறார்கள்? நம்மைக் காக்கக்கூட ஒருவர் இரண்டு இரவுகளாக இந்தப் பாதையின் ஆரம்பத்தின் பக்கக் காடுகளில் கண்ணும் கருத்துமாக நடமாடவில்லையா?'' என்று சொன்ன அரசகுமாரி, ''என்னுடைய பணியை வேங்கி இளவரசர் மேற்கொண்டது எத்தனை விசித்திரம்?'' என்றும் வினவினாள். அபயனைப்பற்றி அவள் குறிப்பிட்டபோது அவள் குரலில் சிறிது சங்கடத்தின் சாயை ஒலித்ததையும் விஜயன் கவனித்தான். இதில் தனக்குப் புரியாத மர்மம் ஏதோ புதைந்திருப்பது மட்டும் அவனுக்குப் புலனானாலும் அதைப்பற்றி ஏதும் கேட்கவில்லை அவன். மௌனமாகவே புரவியை நடத்தினான்.

அடுத்த இரண்டு நாழிகைகளுக்கெல்லாம் நான்காம் ஜாமம் முடிந்து பொழுது புலருவதற்குப் பூர்வாங்கமாக இயற்கை சிறிது கண்களை மூடியதால் கும்மிருட்டு எங்கும் சூழ்ந்தது. குறுக்குப் பாதையையும் திடீரென மரங்கள் சூழ்ந்ததால் பாதையை ஊகித்தவண்ணமே புரவியை நடத்தினான் சிங்கள வாலிபன். திடீரென இருட்டில் ஏதோ மலைக்குள் புகும் பிரமை ஏற்பட்டது

zeevaa

விஜயனுக்கு. அதனால் சிறிது புரவியை நிறுத்த முயன்ற விஜயனை "நிறுத்த வேண்டாம். புரவி போகட்டும். நாம் மகேந்திர மலைக்கணவாயை நெருங்குகிறோம்," என்றாள் அரசகுமாரி. அத்துடன் புரவியிலிருந்து கீழேயும் குதித்துப் புரவியின் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு மெள்ள முன்னே நடக்க லானாள்.

அடுத்த சில விநாடிகளில் பொழுதும் விடிந்து வானமும் வெளிவிட்டதன் காரணமாக, தான் இருந்த சூழ்நிலை நன்றாகத் தெரிந்தது விஜயனுக்கு. இருபுறமும் மலைக்கு உள்ளே புகும் நீண்ட குகையொன்றின் பக்கச் சுவர்கள், அந்தச் சுவர்களின் இடைவெளியில் முளைத்து வழியை ஆங்காங்கு மறைத்த குருக்கத்திச் செடிகள், எங்கோ ஏதோ நீர் விழும் சலசலத்த ஓசை, இவையனைத்தையும் கண்டும் கேட்டும் பரவசப்பட்ட சிங்கள வீரனும் தனது கரிய புரவியிலிருந்து கீழே குதித்தான்.

விஜயன் புரவியிலிருந்து இறங்கிவிட்டாலும், அரசகுமாரியும் கரிய புரவியின் கடிவாளத்தைப் பிடித்து நடந்ததாலும் தனது பழுப்பு நிறப் புரவியிலிருந்து கீழே குதித்து அவர்களை அணுகிவந்த மூர்சமத், "எசமான்! இந்தப் பாதை இத்துடன் முடிந்துவிட்டது. எதிரே குகை தான் தெரிகிறது," என்றான்.

விஜயன் மூர்சமதை மிகுந்த அன்புடன் நோக்கினான். "சமத்! குகைக்கு அப்புறம் இந்தப் பாதையின் தொடர்ச்சி இருக்கிறது," என்று தெரிவித்தான்.

"தங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான் மூர்சமத்.

"அரசகுமாரி சொன்னாள்," என்று தெரிவித்தான் விஜயன்.

"ஆம் ஆம். அவர்களுக்குத் தெரிந்துதானிருக்க வேண்டும். அவர்கள்தானே நம்மை வழிகாட்டி அழைத்துச் செல்ல வேண்டியவர்கள்?" என்ற மூர்சமத், "எசமான்!" என்று ஏதோ கேட்க

zeevaa

முற்பட்டுத் தயங்கினான். பிறகு தயக்கத்தை உதறி, ''தங்களுடன் போரிட்டாரே குரு நாதர் ஆசிரமத்தில், அவர் எதற்காக நம்மைக் காப்பாற்றினார்?'' என்று வினவினான்.

''சிம்மபுரத்தில் சொல்கிறேன்,'' என்று விஜயன் பதில் சொன்னான்.

''இப்பொழுது சொன்னாலென்ன?'' என்று மூர்சமத் கேட்டான்.

''சந்தர்ப்பம் சரியாயில்லை,'' என்று அரசகுமாரி தனக்குச் சொன்ன பதிலையே சொன்ன விஜயன் பெரிதாக நகைத்தான்.

அவன் நகைப்புக்குக் காரணம் புரியாததால் சமத் விழித்தான். தன்து மீசை தாடிகளைத் தடவி விலக்கிக் கொண்டு உறுமவும் செய்தான்.

''சமத் என்மேல் கோபித்துப் பயனில்லை,'' என்றான் விஜயன், சமதைச் சமாதானப்படுத்த. ''இதை நான் சொல்லவில்லை. இது அம்பாள் வாக்கு,'' என்றும் சொற்களைக் கூட்டினான். மறுபடியும் பெரிதாக நகைத்தான்.

அரசகுமாரியின் விழிகளில் சினம் தெரிந்தது. ''உங்கள் அசட்டுத்தனம் போதும். வாயை மூடுங்கள்,'' என்று சீற்றம் கலந்த சொற்களை உதிர்த்தாள்.

''சரி,'' என்று சொன்ன விஜயன், மூர்சமதும், அவனுக்குப் பின்னால் இறங்கிநின்ற நீலனும் பணிப்பெண்ணும் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அரச குமாரியின் கன்னத்தை இரு கைகளாலும் பிடித்து அவள் உதடுகளை நோக்கிக் குனிந்தான்.

''சீ விடுங்கள்! உங்களுக்கு வெட்கமில்லை?'' என்று திமிறினாள் அரசகுமாரி.

''நீ தானே வாயை மூடச் சொன்னாய்?'' என்று கேட்டான் விஜயன்.

zeevaa

''உங்கள் வாயை மூடச் சொன்னேன்,'' என்ற அரசகுமாரி அவனிடமிருந்து திமிறி, குகை வழியில் ஓடி விட்டாள் வேகமாக.

விஜயன் புரவியில் ஏறினான், வேகமாக அவளைத் தொடர. மூர்சமதும் நீலனும், பணிப்பெண்ணும் அவனைத் தொடர்ந்தனர். குகையின் வழி திரும்பித் திரும்பிச் சென்றதால் அரசகுமாரி அடியோடு புலப்படவில்லை விஜயன் கண்களுக்கு. 'மீண்டும் ஏதாவது ஆபத்தில் சிக்கிக் கொள்ளப் போகிறாள்,' என்ற நினைப்பால் புரவியை முடுக்கினான் விஜயன். வரவர குகை சிறிது விரிந்தது. வெளியிலிருந்து வெளிச்சமும் உள்ளே வந்தது. ஆனால் குகையின் எதிர் வாயிலைத் தாண்ட முடியாதென்று திட்டமாகத் தெரியவே புரவியிலிருந்து கீழே இறங்கிய விஜயன் எதிரே எழுந்த நீர்த்திரையை உற்று நோக்கினான்.

அந்த இடத்தில் மலையின் பாறையின் மேலிருந்து நீர் மெல்லிய திரையாக வீழ்ந்து கொண்டு மிக ரம்மியமான சூழ்நிலையைச் சிருஷ்டித்திருந்தது. அதைத் தாண்டும் வழி தெரியாமல் விஜயனும் மற்றோரும் தவித்துக் கொண்டிருந்த சமயத்தில் அரசகுமாரி அந்த நீர் வீழ்ச்சியின் பக்கத்திலிருந்து வந்து கொண்டிருந்தாள். ஏதோ நீர் வீழ்ச்சியின் அதிதேவதை போல் தோன்றிய திரிலோகசுந்தரியைக் கவனித்ததால் ஆசுவாசப் பெரு மூச்சுவிட்ட விஜயன், ''சுந்தரி! எங்கிருந்து வருகிறாய்?'' என்று கேட்டான்.

''அந்த நீர்வீழ்ச்சி இந்தக் குகையை அணைத்து இறங்குகிறது. லாங்குனி நதியின் உற்பத்தி ஸ்தானம் அருகில்தான் இருக்கிறது.'' என்று விளக்கிய அரசகுமாரி மூர்சமதையும் நீலனையும் நோக்கி, ''நீங்களும் புரவியில் இருக்க வேண்டாம். இறங்கி என் பின்னால் நடந்து வாருங்கள்,'' என்றாள்.

அரசகுமாரி முன்னால் வழிகாட்டிச் செல்ல விஜயனும், மற்றோரும் பின் தொடர்ந்தனர். லாங்குனியின் நீர் இட்ட திரையை அடைந்ததும் வலதுபுறத்தில் ஓடிய சிறுபாறைப் பாதையில்

zeevaa

அரசகுமாரி நடந்து மற்றவர்களையும் பின்வரப் பணித்தாள். நீர்த்திரைக்கும் குகைக்கும் இடையே இருந்த ஒற்றையடிப் பாதை வழியில் ஓரமாக சாய்ந்த வண்ணம் புரவியையும் அழைத்துக் கொண்டு மிகுந்த எச்சரிக்கையாக விஜயன் நடந்தானானாலும் மூர்சமதின் பிரும்மாண்டமான சரீரத்துக்கு அது போதாதிருக்கவே சமத் மிகுந்த கஷ்டப்பட்டே எசமானைப் பின் தொடர்ந்தான்.

அந்த வழி அபாயமாயிருந்தாலும் மிகுந்த எச்சரிக்கையுடனும் சாமர்த்தியத்துடனும் அரசகுமாரி மற்றவர்களை அழைத்துச் சென்றாள். அந்தப் பாதையைக் கடந்ததும் எதிரிலே மனத்தை அள்ளும் காட்சி விரிந்தது. பற்பல வாசமலர்களுள்ள சிறு தோட்டம் விஜயன் கண்ணுக்கெதிரே தெரிந்தது. அதை அடுத்து அவன் நடந்துவந்த வழியின் பின்புறத்தில் எழுந்த பாறையில் சிறு குகை யொன்றும் இருந்தது.

''இந்தக் குகை...'' என்று ஏதோ கேட்க இழுத்தான் விஜயன்.

''இந்த நீர்வீழ்ச்சியில் நீராட வரும் அரச குலத்தார் ஆடைகளை அணியும் குகை. ஒரு காலத்தில் இது மிகவும் பிரசித்தம். இங்கு அரச குடும்பத்தார் வனபோஜனத்துக்கும் நீர்வீழ்ச்சியில் துளையவும் வருவார்கள்,'' என்று விளக்கினாள் அரசகுமாரி.

அப்பொழுது அவ்விருவரும் மகேந்திர மலையின் அந்த அடிவாரத்தில் நெருங்கி நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் நெருக்கத்தை, நீர்வீழ்ச்சியின் மேற்புறத்தில் முளைத்திருந்த ஒரு பெரிய மரத்தின் அருகில் நின்ற இருவர் கவனித்துக் கொண்டிருந்ததை மனோராஜ்யத்தில் திளைத்திருந்த விஜ''னும் கலிங்க ராஜகுமாரியும் கவனிக்கவில்லை.

மேலே நின்றவரில் ஒருவர் சொன்னார், ''உமது கணக்குச் சரியாகப் போய்விட்டது.'' என்று.

''நமது கணக்கு என்றும் தவறியதில்லை,'' என்றார் இன்னொருவர்.

''அப்படியானால் நாம் போய் ஆட்களை அனுப்புவோம்,'' என்றார் முதலில் பேசியவர்.

''அதுதான் சரி,'' என்று இன்னொருவரும் ஒப்புக் கொண்டார்.

அடுத்து இருவரும் அந்த இடத்திலிருந்து மறைந்து விட்டனர்.



zeevaa

## 27. நால்வர்

மகேந்திரமலைக் கடைசிப் பகுதியின் அடிவாரத்தில், லாங்குனி நதி சிற்றருவியாக பாறைகளிலிருந்து இறங்கியதால் ஏற்பட்ட சின்னஞ்சிறு நீர்வீழ்ச்சியின் அருகாமையில், உலகம் முழுவதுமே தங்களுக்குத்தான் என்ற நினைப்பில் நெருங்கி நின்று பேசிக் கொண்டிருந்த விஜயனையும், திரிலோகசுந்தரியையும் நீர்வீழ்ச்சி யின் மேற்புறத்திலிருந்த மரத்தின் அடியில் நின்றிருந்த வஜ்ரஹஸ்தர் பார்த்து "உமது கணக்கு சரியாகப் போய் விட்டது," என்று பக்கத்திலிருந்த சிவகோகர்ண ஸ்வாமியிடம் கூறவே, அவரும், "நமது கணக்கு என்றும் தவறியதில்லை," என்று உற்சாகத்துடன் கூறியதன்றி, "நாம் போய் ஆட்களை அனுப்புவோம்," என்று சொன்னதை வஜ்ரஹஸ்தரும் ஆமோதிக்க, இருவரும் அவ்விடத்திலிருந்து பக்கத்திலிருந்த அடத்தியான சோலைக்குள் நடந்து விட்டனர். அந்தச் சோலையில் பற்பல மரங்களும் நானாவித புஷ்பச் செடிகளும் இருந்ததைப் பார்த்த வஜ்ரஹஸ்தர், "ஸ்வாமி! நமது ராஜ்யத்தில் இப்படியொரு ரம்மியமான இடமிருப்பது இன்றுவரை எனக்குத் தெரியாதே," என்றார்.

பதிலுக்கு ஸ்வாமிகள் லேசாக நகைத்துவிட்டு, "கலிங்க மன்னனே! நீ பிறந்த நாள் முதல் போரிடுவதிலும் சிதறியிருந்த முக்கலிங்கங்களை ஒரே கலிங்கமாக இணைப்பதிலும் காலம் தள்ளிவிட்டாய். ஆகவே உன் நாட்டு எல்லைக் கரைகளை உன்னால் கவனிக்க முடிந்ததே தவிர உள்நாட்டு பூரேகைகளை, அவற்றின் அழகுகளை, காடுகளை, ஆங்காங்கு மறைந்துள்ள நந்தவனங்களை உன்னால் அறிய முடியவில்லை. உன் மூதாதையரின் உல்லாச

zeevaa

இடங்களைக் கூட உன்னால் பார்க்க முடியவில்லை,'' என்று நகைப்பின் ஊடே கூறினார்.

வஜ்ரஹஸ்தர் பக்கத்திலிருந்த ஒரு மரத்தில் சாய்ந்து சட்டென்று நின்று, ''என் முன்னோர்களின் உல்லாச இடங்களா!'' என்று வினவினார் வியப்பின் சாயை விரிந்த விழிகளுடன்.

''ஆம் மன்னவா! இப்பொழுது உன் மகளும் விஜயனும் நிற்கும் இடம் உன் பாட்டன் காலத்தில் வசந்த கால நீராட்ட கட்டமாக இருந்தது. லாங்குனியின் நீர்த்திவலைகள் விழும் இடத்திலுள்ள ஆழ்ந்த பளிங்குக் குளத்தில் ராஜ ஸ்திரீகள் நீந்துவதுண்டு, அவர்கள் ஆடைகளைக் களைந்து வைக்கவும் பிறகு மாற்றுடை புரியவும் குகை யொன்றுமிருக்கிறது'' என்று விளக்கினார்.

''இதெல்லாம் உங்களுக்கெப்படித் தெரியும்?'' என்று வஜ்ரஹஸ்தர் வினவினார்.

''மலைகளில் அலைவது துறவிகள் வேலை'' என்று பதில் சொன்னார் ஸ்வாமிகள்.

வஜ்ரஹஸ்தர் பெருவிழிகள் ஸ்வாமிகளை நோக்கின விஷமமாக. ''ராஜஸ்திரீகள் நீராட்டத்தைப் பார்ப்பதும் ஸ்வாமி களைப் போன்ற துறவிகளின் வேலை போலிருக்கிறது?'' என்று வினவிய அவர் சொற்களிலும் விஷமம் இருந்தது.

''சிவசிவா! இங்கு தவம் புரிய அடியவன் வருவதுண்டு. கண்களை மூடி உட்கார்ந்திருக்கிறோம். விழித்ததும் விகாரக் காட்சிகள், துறவறத்தை உடைக்கும் மாதர்களின் இந்த விபரீதங்கள் கண்களில் படும். மீண்டும் கண்களை மூடிக்கொள்வோம். உள்ளே எழும் அம்பாளின் அற்புத உருவம், மகாசக்தி நமது உணர்வுகளை ஆட்கொண்டு விடுவாள். பிறகு நாம் உலகத்துக்குத் தெரிவோம். நமக்கு உலகம் தெரியாது'' என்று தமது தவமார்க்கத்தைச் சொல்லியருளினார் ஸ்வாமிகள்.

zeevaa

வஜ்ரஹஸ்தருக்கு ஸ்வாமிகளிடம் மிகுந்த மரியாதை இருந்த போதிலும், அப்படி ஒரேயடியாகக் கண்களை மூடிப் பார்வையை உட்பக்கம் திருப்பிவிடுவார் என்ற நம்பிக்கை இல்லாததால், ''ஸ்வாமி! தங்கள் தவத்தைக் கெடுக்க யாரும் முயலவில்லையா? விசுவாமித்திரர் தவத்தை இருமுறை இருபெண்கள் குலைத் திருக்கிறார்களே?'' என்று விசாரித்தார்.

ஸ்வாமிகளும் விடவில்லை. ''விசுவாமித்திரன் அரசனாயிருந்து முனிவனாக முயன்றவன். அரசபோகங்களை முன்பே அனுபவித்தவன். அதனால் பலவீனனாக இருந்தான். நீயும் தவம் செய்ய முயன்றால் உனக்கும் அந்தக் கஷ்டம் நேரும். நமக்கு அப்படியில்லையே! கண்களை மூடினால் இந்த ஸ்வாமிகளை அசைக்க ஆயிரம் அப்ஸர மங்கையர் வந்தாலும் முடியாது. ஓரிருசமயம் கீழே அருவிக்குளத்தில் நீராடிய இரண்டொரு ராஜஸ்திரீகள் இந்த இடத்திலும் வந்து உடை மாற்றியிருக்கிறார்கள். அதை இந்த ஊனக்கண்கள் கவனிக்கவில்லை. சர்வம் சக்திமயம்!'' என்று கூறிப்பெருமூச்செறிந்தார் ஸ்வாமிகள்.

வஜ்ரஹஸ்தர் இதயத்தில் பல சந்தேகங்கள் ஓடின. 'ராஜஸ்திரீகளின் நீராடும் கட்டடத்தில் ஸ்வாமிகள் எதற்காகத் தவம் செய்ய வேண்டும்? வேறு இடமில்லையா? தவிர, பெண்கள் தாமிருக்கும் இடத்தில் உடைமாற்றுவதாகச் சொன்னாரே, அது எப்படி இவருக்குத் தெரியும்? என்று தன்னுள் கேட்டுக் கொண்ட கலிங்க மன்னன், ''ஸ்வாமிகள் நிஷ்டையிலிருந்தபோது ராஜஸ்திரீகள் உடைமாற்றுவது எப்படித் தெரிந்தது?'' என்று வினவினார்.

கலிங்க மன்னன் தன்னைச் சந்தேகிப்பதை உணர்ந்து கொண்ட ஸ்வாமிகள், ''அப்பனே! கண்கள் மூடினாலென்ன? உணர்வுகள் இல்லையா? ஈர உடை சரசர வென்று கீழே விழும் ஒலியில்லை? பின்பு புத்தாடை சுற்றப்படும் சலசலப்பு ஒலி இல்லை? இருவர் சிரிக்கும் சிரிப்பில்லை?'' என்று வினவினார்.

வஜ்ரஹஸ்தர் நகைத்தார். ''ஸ்வாமிகளின் பரிபூர்ண நிஷ்டை அற்புதம். கண்கள் உள்ளே திரும்பினாலும் புலன்கள் வெளியில் திரிந்து கொண்டிருக்கின்றன'' என்று கூறினார் நகைப்பின் ஊடே.

சிவகோகர்ண ஸ்வாமிகள் தமது திடமான உடலை ஒருமுறை அசைத்தார் சங்கடத்தால். ''மன்னனே! புலன்கள் வேலை செய்யாவிட்டால், நான் மட்டும் சற்று அயர்ந்திருந்தால் ஆதிமால்யன் இவர்களைத் தொடர்ந்தது இந்த அடியவனுக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டவர், ''வஜ்ரஹஸ்தா! கண்கள் விழித்திருந்தாலும் உலக மாயையில் துறவிகள் ஈடுபடுவதில்லை. வஸ்துக்களிடத்தில் இச்சையில்லாதவன் எதையும் பார்க்கலாம். சுகபகவான் நீராடிய நிர்வாண ஸ்திரீகளைப் பார்த்தும் அவர்கள் ஆடையணியவில்லை. அவர் தந்தை வியாசன் வயதில் முதியவன் வந்ததும் ஆடைகளை அவசரமாக உடுத்தார்கள். காரணமென்ன? சுகன் விழிகளால் சகலத்திலும் பரப்பிரம்மத்தை பார்த்தான். வஸ்து இச்சையில்லாத காரணத்தால், வியாசனால் அது முடியவில்லை. அதனால்தான் வியாசன் வந்ததும் ஆடை புனைந்தார்கள்'' என்று புராணத்தைச் சான்றாக எடுத்துக் காட்டினார்.

வஜ்ரஹஸ்தர் இதழ்களில் புன்முறுவல் அரும்பியதால் அவர் மீசை ஒரு புறம் அசைந்தது. ''ஸ்வாமிகள் சுகபகவான் போலிருக்கிறது?'' என்று கேட்டார்.

''சந்தேகமென்ன!'' என்ற ஸ்வாமிகள் சரேலென்று நீர்வீழ்ச்சி மலைப்பாதைக்குக் கீழே நோக்கினார். ''அதோ பார் மன்னவா! உன் மகள் நீராடப் போகிறாள் போலிருக்கிறது. இனி நாம் இங்கிருப்பது உசிதமில்லை'' என்று கூறி வேகமாகத் தலையைத் திருப்பிக் கொண்டார்.

வஜ்ரஹஸ்தர் புன்முறுவல் அதிகமாக விரிந்து. ''கடைசியில் ஸ்வாமிகள் சுகபகவானில்லை, வியாச பகவான்தான் போலிருக் கிறது?'' என்று சொன்னார்.

zeevaa

அதற்கு ஏதும் பதில் சொல்லாமல் ஸ்வாமிகள் அந்த மலைக் காட்டுக்குள் வேகமாக நடந்து விடவே மன்னரும் அவரைத் தொடர்ந்தார். மலையின் கரடுமுரடான பாறைகளிலும், அவற்றில் அடர்த்தியாக முளைத்திருந்த முட் செடிகளிலும் தமது பாதரட்சையை வைத்து அனாயாசமாக நடந்து ஸ்வாமிகளைப் பின்பற்றுவது வஜ்ரஹஸ்தருக்குச் சிரமமாகவே இருந்ததால் முன்னே சென்ற ஸ்வாமிகளை நோக்கினார். ஸ்வாமிகளின் பருத்த இரும்புத் தேகத்தையும் இரும்பு உலக்கைகள் போன்ற கால்களையும், கெட்டியான ஆடுசதைகள், கால்களை மாறி மாறி வைத்தபோது இருந்த திண்மையையும் கவனித்த கலிங்க மன்னர், ஸ்வாமிகளின் தூய வாழ்க்கையும் யோகமும் அளித்த சக்தியை வியந்து, 'துறவறத்தில் பலன் இருப்பது உண்மைதான்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டார். இவர் ஸ்வாமிகளாயிருப்பதற்கு பதில் கலிங்கத்தின் சேனாதிபதியாயிருந்தால் எத்தனை பயனிருக்கும்?'' என்றும் எண்ணமிட்டார்.

அப்பொழுது மரங்களை ஊடுருவிய சூரிய கிரணங்கள் ஸ்வாமிகளின் தேகத்தைப் பொன்மயமாக அடித்திருந்தது. விடியற்காலையிலேயே வரும் வழியில் நீராட்டத்தை முடித்துக் கொண்ட ஸ்வாமிகள் தமது ஈரக்காவியையே உடுத்தியிருந்ததால் அது ஒட்டியிருந்த இடங்களின் உட்சதைகளும் பெரிதும் மெருகு பெற்றிருந்தன. இப்பொழுதே இத்தனை செழித்த உடலுடன் இருக்கும் ஸ்வாமிகள் பூர்வாசிரமத்தில் எத்தனை அழகாய் இருந்திருப்பார் என்று எண்ணமிட்ட வஜ்ரஹஸ்தர் மேற்கொண்டு ஸ்வாமிகளை அலசுவது அபசாரமாகுமென்ற நினைப்பால் பேசாமல் அவரைப் பின்பற்றினார்.

ஸ்வாமிகள் வேகமாக அந்த மலையின் பல இடங்களைத் தாண்டி மரங்கள் குறைவாக முளைத்திருந்த இடத்துக்கு வந்து சேர்ந்ததும் தமது கைகளை இருமுறை பலமாகத் தட்டினார். அடுத்த சில நிமிடங்களில் நான்கு துறவிகள் பக்கக் காட்டிலிருந்து தோன்றவே, ''ஹரஹர மகாதேவ'' என்று ஸ்வாமிகள் தலை தாழ்த்தினார்.

zeevaa

அவர்களும் ''ஹரஹர மகாதேவ'' என்று சொல்லி ஸ்வாமி களுக்குத் தலைவணங்கினார்கள். அதற்குப் பிறகு அவர்களை வஜ்ரஹஸ்தருக்கு அறிமுகம் செய்து வைத்த ஸ்வாமிகள், ''மன்னவா, இந்த நால்வரும் உன் மகளையும் மருமகனையும் பாதுகாப்பார்கள்,'' என்று கூறினார். ''இவர் தான் மகாராஜா வஜ்ரஹஸ்தர், திரிகலிங்காதிபதி.'' என்று மன்னனையும் அவர் களுக்கு அறிமுகப்படுத்தினார்.

வஜ்ரஹஸ்தர் ஸ்வாமிகளைநோக்கி, ''என் மகளுக்கு உதவ நாம் போய் ஆட்களை அனுப்பலாமென்று சொன்னீர்களே?'' என்று கேட்டார்.

''ஆம். இவர்கள் தான்.''

''இவர்களிடம் ஆயுதம் ஏதுமில்லையே?''

''அவசியமில்லை,'' என்றார் ஸ்வாமிகள். ''எதற்கும் உன்னைத் திருப்தி செய்துகொள்ள உன் வாளையாவது குறுவாளையாவது இவர்கள் மீது வீசிப்பார்,'' என்றும் சொன்னார்.

வஜ்ரஹஸ்தர் சிறிது சிந்தித்தார். எதற்கும் பரீட்சை செய்யலா மென்று தனது குறுவாளை எடுத்து அந்த நால்வர் மீதும் வீசினார். அடுத்த விநாடி வியப்பின் வசப்பட்டார். அவர் வீசிய குறுவாளைப் பாதையிலிருந்து சற்று விலகிய ஒரு துறவி அதன் கைப்பிடியை அனாயாசமாகப் பிடித்துப் பிடியைத் திருப்பி மன்னனிடம் நீட்டினார். அத்தனை லாவகமாக வேகமாக வீசப்படும் குறுவாளைப் பிடிப்பதற்கு ஆயுத வித்தையில் அசுர சாதகம் வேண்டுமென்பதை, அறிந்த வஜ்ரஹஸ்தர். ''தங்கள் சீடரின் பெயரை நான் அறியலாமா?'' என்று வினவினார்.

''இவர் பெயர் தர்மர். எனது மூத்த சீடர். பூர்வாசிரமத்தில் வேங்கி நாட்டுப் படையில் துணைத் தலைவராக இருந்தார். அதோ நிற்பவர் அர்த்தர், அடுத்தவர் காமர், கடைசியில் இருப்பவர் மோஷர். இவர்கள் நால்வரும் தர்ம, அர்த்த, காம, மோஷ ஆகிய நான்கு

zeevaa

புருஷார்த்தங்களின் பெயர்களை உடையவர்கள். தங்களைக் காத்துக்கொள்வதில் திறமை படைத்தவர்கள். கடைசியிலிருக்கும் மோஷர்தான் சிறிது கடுமையானவர். அவரிடம் வம்பு செய்பவர்களை மோஷத்துக்கு அனுப்பி விடுகிறார். அவரும் இப்பொழுது பெரிதும் கட்டுப்பட்டிருக்கிறார். நால்வருமே முன் ஆசிரமத்தில் போர்ப்பயிற்சி உள்ளவர்கள். மாமிச பலத்தை வெறுத்துத் துறவறத்தின் சக்தியை ஏற்றவர்கள்,'' என்று விளக்கிய ஸ்வாமிகள், ''வஜ்ரஹஸ்தா! இவர்கள் பாதுகாப்பு இருக்கும்வரை உன் மகளுக்கோ விஜயனுக்கோ எந்தவித ஆபத்தும் இல்லை.''

பிறகு மன்னனை விட்டு அந்த நால்வரிடம் சென்ற ஸ்வாமிகள் லாங்குனியின் பிரவாகத்தையும் நீர்வீழ்ச்சியையும் காட்டி ஏதோ சைகை செய்தார். நால்வரும் தங்கள் வழவழத்த தலைகளை ஆட்டவே, ஸ்வாமிகள் ''வா மன்னவா,'' என்று மன்னனை அழைத்துக்கொண்டு மலைப்பகுதியின் மறுபுறச் சரிவில் வேகமாக இறங்கி விட்டார்.

இந்த நிகழ்ச்சிகளை அறவே அறியாத கலிங்க ராஜ குமாரியும் சிங்கள இளவலும் தங்கள் ஆடைகளைப் பக்கத்துக் குகையில் வைத்துவிட்டு நீராட்டச் சிற்றாடைகளணிந்து அருகில் லேசாக வீழ்ந்து பளபளக்கச் சிருஷ்டித்திருந்த பளிங்குக் குளத்தில் இறங்கினர். சற்று எட்ட மூர்சமத், தனது புரவி பக்கத்தில் நிற்க, சிடுசிடுத்த முகத்துடன் உட்கார்ந்திருந்தான். நீலன் தன்னுடன் வந்த பெண்ணைப் பாறையின் மறைவொன்றில் படுக்கவைத்து, சுடப்பட்ட பணிப் பெண்ணின் தொடைக் காயத்துக்குச் சிகிச்சை செய்து கொண்டிருந்தான்.

திரிலோகசுந்தரி சுனையில் இறங்கி வேகமாக நீந்தினாள். விஜயனும் அவளைப் பிடிக்க நீரில் மூழ்கி நீந்த முற்பட்டான். பலமுறை சிங்களக் கடலில் அனாயாசமாகத் துளைந்தவனும், அக்கரையைப் பலமுறை எட்டி எட்டித் திரும்பியிருப்பவனுமான விஜயன் அவளைப் பிடிப்பது அத்தனை சுலபமல்ல என்பதை

zeevaa

உணர்ந்து கொண்டான். இருப்பினும் அந்த நீச்சல் பந்தயம் அரசகுமாரியின் அழகுப் பகுதிகளை எத்தனை முறை எப்படி யெல்லாம் காட்டிக் கொடுத்தன! நீந்த நீந்த, சிந்திக்கச் சிந்திக்கத் தெவிட்டாத அனுபவமாயிருந்தது சிங்கள இளவலுக்கு. இந்த விந்தையை அருவி மேலேயிருந்த நால்வரும் கவனித்துக் கொண்டு நின்றார்கள். அவர்கள் மட்டுமல்ல கவனித்தது. எதிரேயிருந்த நந்தவனத்தின் ஊடே ஓசைப்படாமல் நடந்து வந்த இன்னொரு மனிதனும் கவனித்தான். அவன் முகத்தில் பூர்ண திருப்தி நிலவியது.



zeevaa

# 28. சுனையாடல்

கலிங்க ராஜகுமாரி பளிங்கு நீரில் நீந்த முற்பட்ட போது கதிரவன் நன்றாக மேலே எழும் நேரம் ஆகவில்லையாதலாலும், கிழக்குப் பகுதியிலிருந்த காடும் ஓரளவு அடர்த்தியாயிருந்ததாலும், அந்த மரங்களின் கிளைகளையும் இலைகளையும் ஊடுருவிய பகலவனின் கிரணங்கள், லாங்குனியின் படர்ந்த சின்னஞ்சிறு நீர் வீழ்ச்சியின் நீர்க்கம்பிகளில் புகுந்ததன் விளைவாகப் பிளவுபட்டு ஸப்த வர்ண ஜாலங்களுடன் ராஜமாரியின் உடல் மீது தவழவே ஆடை நெசவுக்குப் பெயர் போன கலிங்கத்தின் புத்தம்புது ஆடையொன்றை அவள் திடீரெனத் தரித்துக் கொண்டது போன்ற பிரமையை இயற்கை அளித்தது. அந்த ஆடை தவழ்ந்த இடங்கள் போக மீதி இடங்களில் அவள் செங்கமல உடல்மீது சூரியன் தனது கிரணங்களை ஏவியதால் அவள் செந்நிற மேனியைப் பொன்னிறமாக அடித்தது. தவிர, அவள் நீந்திய பளிங்கு நீரின் சிற்றலைகளையும் பொன்னிறமாக அடித்து, பல பொன் தட்டுகளை அவள்மீது தாக்கவிட்டான். அப்படித் தாக்கிய அந்தத் தங்க நீர்த்தட்டுகள் அவள் நீச்சலின் விளைவாகத் தாக்கிய இடத்தில் தங்காமல் பற்பல இடங்களையும் தொட முற்பட்டதால், தங்கத்தை இஷ்டப்படி எடுத்து வீசும் வனதேவதை போல் விளங்கினாள் கலிங்கச்செல்வி. சூரியன் சற்று மேலெழும்பிவிட்ட காரணத்தாலோ, அல்லது சுனையாடும் சுந்தரிக்கு அழகு செய்ய வேண்டுமென்ற ஆசையாலோ மரங்களிலிருந்து பொல பொலவென உதிர்ந்து விட்ட பவழ மல்லிப் பூக்களும், மேலே முளைத்திருந்த சின்னஞ்சிறு மகிழமர மலர்களும் நீர்க் கம்பிகளில் தாவிக் குதித்து வந்து அரசகுமாரியின் உடல் மீது ஆங்காங்கு தவழ்ந்து தனியொரு

zeevaa



28

சுனையாடல்

zeevaa

அழகையும் மணத்தையும் அளித்ததால், அவள் மலர்களால் அர்ச்சனை செய்யப்பட்ட நீர்த்தேவதை போல் விளங்கினாள். அவள் காலுக்கு எதிரே நீர்வீழ்ச்சி விளைவித்த ஸப்த வர்ணஜாலங்கள் லேசாக வளைந்து, அந்த நீர்த்தேவதையின் கர்ப்பக் கிருகத்துக்கு அழகிய நுழைவாயிலைச் சிருஷ்டித்துக் கொண்டிருந்தன. இத்துடன் முந்திய இரவில் அந்தச் சுனையில் நீர் பருகவந்த காட்டுயானை ஒன்று உடைத்துப் போட்ட மரக்கிளை யொன்றும் சுனையில் சுழன்று அவளுக்குக் கீழே பாய்ந்து ஒரு மரகத இலைப் பாயையும் அவளுக்குக் கொடுக்கவே அந்தக் கிளைமீது மல்லாந்து படுத்து நீந்திய இளவரசி அடியில் கிடந்த கிளைப் பஞ்சணையுடனும் மேலே தவழ்ந்த மலர்களுடனும் அவளே ஒரு புஷ்பச் செடியாகிவிட்ட பிரமையை உண்டாக்கினாள்.

அவள் சுனையில் இறங்கியபின் இறங்கிய விஜயனும் இந்த அற்புதங்கள் அனைத்தையும் கவனிக்கவே செய்ததால், உடனடியாகச் சுனையில் இறங்காமல் அவள் அழகையும், அதற்கு இயற்கை அளித்த சிறப்பையும் பருகிக்கொண்டே நின்றான். சில வினாடிகள் அப்படி நின்ற சமயத்தில் அவள் மல்லாந்து நெளிந்து நீந்தியதால் புலனான மேனியின் அழகிய இடங்களாலும், அவற்றின் புஷ்டியாலும், சிலவற்றின் மறைவாலும் மதியைப் பறிகொடுத்த இலங்கை இளவல் நீரில் வேகமாக இறங்கி நீந்தி அவளை அணுக முற்பட்டான். அவளது நீண்ட மெல்லிய திடமான கரங்கள் மாறிமாறித் துடுப்புகள் போல் நீரில் துழாவியதால் அவன் தேகம் புயலால் உந்தப்பட்ட மரக்கலம் போல் விரைந்து முன்னேறியது. அவன் தன்னை நோக்கி வெறியுடன் வருவதைக் கவனித்த கலிங்கத்து அழகி அதனால் ஆனந்தத்தில் ஆழ்ந்தாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் தான் படுத்திருந்த இலைக் கிளையிலிருந்து தாவி மேற்கொண்டு நீந்தினாள். கைகளை மாற்றிப் போடாமலே கால்களை மாத்திரம் சுழற்றி வாளை மீன்போல நீந்திவிட்ட ராஜகுமாரி அந்தப் பளிங்குச் சுனையின் நடுவிலிருந்த

zeevaa

ஒரு பாறைமீது தாவி ஏறி உட்கார்ந்து கால்களை மட்டும் நீரில் துளைய விட்டாள்.

நீந்திய வண்ணம் அவளைப் பார்த்த விஜயன் 'அப்படி உட்கார்ந்த நிலையிலும் எத்தனை அழகாய் இருக்கிறாள் ராஜகுமாரி' என்று வியந்து கொண்டான். அவள் பாதங்கள் நீரில் கிடந்தாலும் அவள் கால்களின் மேற்பகுதியின் திண்மை செந்நிறக் கிரணங்களில் பளபளத்ததையும், அவற்றின் மீதிருந்த நீர்த்துளிகள் அவற்றின் வழவழப்பில் நிற்கமுடியாமல் உருண்டோடியதையும் கண்ட விஜயன் அந்த நீர்த்துளிகளுக்கு அழகை ரசிக்கும் ஆற்றலில்லை என்று நினைத்தான். அந்த நீர்த்துளிகளிருந்த இடத்தில் தன் முகமிருந்தால் எப்படியிருக்கும் என்பதையும் எண்ணி நீந்திய வாக்கில் பெருமூச்செறிந்தான். இப்படி அவன் கண்குத்தலிலிருந்து ராஜகுமாரியின் எழிலுடலைக் காப்பாற்ற லேசாக எழுந்த காற்று, சுனையில் சிற்றலைகளைக் கிளப்பி அவள் கால்மீது ஏறி இறங்கச் செய்தது. காற்று செய்த இந்தத் தந்திரம், சுனையுடன் இணைந்து விளைவித்த இந்தச் சாதனை, சில வினாடிகளுக்குமேல் நீடிக்காததால் சாதனை வேதனையாக மாறியது விஜயனுக்கு. சிற்றலை அவள் கால்களின் மீது ஏறி இடைச் சீலையில் மறைந்து மீண்ட சித்திரம் விசித்திர ஊகங்களுக்கு இடம் கொடுத்ததால் உணர்ச்சி வேதனைக்கு இலக்கான இலங்கை வீரன் வேகமாக நீந்தி அவள் உட்கார்ந்திருந்த பாறைக்கு வந்து அவள் கால்களைப் பிடித்து இழுத்தான். ஆனால் அவள் கால்களை உதறி உதைத்துத் தன்னை விடுவித்துக் கொண்டு மீண்டும் நீரில் பாய்ந்துவிட்டாள். அந்தச் செயல் மார்பில் பஞ்சுபோல் பட்ட மலர்ப் பாதங்களின் உதையை அனுபவித்த விஜயன் அவள் இறங்கிய வேகத்தில் கால்களின் மேல்புறத்தைப் பற்றவே அவற்றிலொன்று அவன் கையில் அகப்பட்டாலும் வழவழப்பின் காரணமாக நழுவி ஓடிவிட்டதால் அவள் இடையையாவது பற்றப்போன விஜயன் அதுவும் தனக்கு எட்டாக் கனியாகிவிட்டதையும், ராஜகுமாரி வேகமாக நீந்திச் சென்று விட்டதையும் உணர்ந்ததால், 'உனக்கு இத்தனை கர்வமா?' என்று சீறி

zeevaa

நீரில் அமிழ்ந்து மூழ்கி நீந்தினான். உள்ளேயே கண் விழித்து அவள் சென்று கொண்டிருந்த இடத்தைக் கவனித்தான். அவள் வாளை உடல் சற்று எட்டத் தெரியவே, அதை நோக்கி நீந்தி அது இருந்த இடத்துக்கு நேராக அடிப்புறத்தில் வந்தான். அப்படி அடியில் வந்ததால் மேலிருந்த அழகு மேனியின் அற்புதப் பகுதிகள் அவன் முகத்தில் இருமுறை தாக்கின. பிறகு அவனிருப்பதை உணர்ந்த ராஜகுமாரி அவன் பிடியிலிருந்த தப்ப மேலே வேகமாக நீந்தினாள். அதனால் விஜயன் முகத்தின் மீது தவழ்ந்த பட்டு வயிறும், அடுத்துச் சீலை மறைத்த விந்தையும் பிறகு அவன் முகத்தில் அழுத்திவிட்ட வழவழத்த வாழைத் தண்டுகளும், அவன் மன விகாரத்தை அதிகப்படுத்தவே செய்தன. ஆகவே, அவன் மீண்டும் மேலெழுந்து நீந்திய போது அவள் இன்னொரு பாறைமீது உட்கார்ந்திருந்தாள். இம்முறை எப்படியும் பிடித்துவிடுவதென்று அவன் முயன்றபோது அவள் மீண்டும் நீரில் குதித்து மூழ்கிச் சென்று விட்டாள்.

அவள் மூழ்கிய இடத்தை நோக்கி அவனும் மூழ்கி நீந்தினான். பளிங்கு நீரின் அடியில் இருவர் முகங்களும் வெகு அருகில் வரவே, இருவரும் கண் விழித்தும் பரஸ்பரம் நோக்கிக் கொண்டனர். பிறகு இருவரும் கண் மூடிய சமயத்தில் விஜயன் கையொன்று அவள் கழுத்தை வளைத்தது. அவன் முரட்டு இதழ்கள் அவள் மலர் இதழ்களைக் கவ்வின, இழைந்தன. வினாடி நேரத்தில் அப்படி இணைந்து நீங்கிவிட்ட இதழ்கள் இச்சையை அள்ளித் தெளித்ததால் அடுத்து இரு உடல்களும் ஒன்றையொன்று தழுவி நீந்தின. பிறகு மேலே எழுந்தபோது இருவரும் ஒருவரை நோக்கி ஒருவர் கலகலவென்று நகைத்தனர். அத்துடன் நீந்திக் கரை சேர்ந்து கரை மீது அமர்ந்து சுற்றுமுற்றும் நோக்கவே, எங்கும் யாரையும் காணாது போகவே நெருங்கி உட்கார்ந்தனர்.

''இவர்கள் எங்கு போயிருப்பார்கள்?'' என்று விசாரித்தாள் கலிங்கத்தின் காரிகை.

''எங்கு போயிருந்தால் நமக்கென்ன?'' என்று வினவினான் விஜயன்.

zeevaa

''நமக்கென்னவா!'' வியப்புடன் வினவினாள் கலிங்கன் மகள்.

''ஆம், நமக்கென்ன?'' விஜயன் கையொன்றை அவள் இடையில் செலுத்தினான்.

''நாமிருக்கும் நிலை!'' அவள் குரல் குழைந்தது. சிறிது நடுங்கவும் செய்தது.

''நம்மைப் பொறுத்தது.''

''இல்லை. சூழ்நிலையையும் பொறுத்தது.''

''சூழ்நிலைக்கும் சுனையாடலுக்கும் சம்பந்தமுண்டு. ஆனால் தவறு ஏதுமில்லை.''

''யாராவது பார்த்தால்?''

''பார்த்தாலென்ன? என்ன தவறு செய்து விட்டோம்?''

''தவறு செய்யாததையெல்லாம் பார்க்க அனுமதியுண்டா?''

''ஏனில்லை?''

''ரகசியம் என்பது கிடையாதா?''

''சாஸ்திரப்படி கிடையாது. மனிதன் எதையும் ரகசியமாகச் செய்ய முடியாது. பதினான்கு சாட்சிகள் மனிதனுடைய நடவடிக்கையைச் சதா பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்,'' என்ற விஜயன், ''ஆம் சுந்தரி! *பதினான்கு சாட்சிகள்! சூரியன், சந்திரன், காற்று, நெருப்பு, வானம், நிலம், நீர், இதயம், யமன், பகல், இரவு, இரண்டு சந்தியா காலங்கள், தர்மம் இவை அனைத்தும் மனிதனுடைய அலுவல்களைச் சதா கவனித்த வண்ணம் இருக்கின்றன. ஆகவே ரகசியம் எதுவும் கிடையாது,'' என்ற

---

★ *ஆதித்ய சந்த்ரா அனிலோ நலச்சத்யௌள் பூமி ஆபோ ஹ்ருதயம் யமச்ச, அகச்ச ராத்ரிச்ச உபேச ஸ்ந்த்யே தர்மஸ்ய ஜாநாதி நரஸ்யவ்ருத்தம்'' - சாடு சுலோகம்.*

zeevaa

விஜயன் அவளைச் சுனை நீரின் கூழாங்கல் படுக்கையில் மெல்லப் படுக்க வைத்தான்.

வெண்மையான கூழாங்கற்களில் அவள் நெளிந்தாள். புயல்காற்றில் அடித்துக் கொண்டுவரப்பட்ட புஷ்பக் கொடியொன்று சுனையில் விழுந்து கரையில் ஒதுக்கப்பட்டது போல் காட்சி யளித்தாள் கலிங்கத்துப் பைங்கொடி. அவள் நெளிவு அந்தக் கொடி பூங்காற்றில் அசைந்தால் ஏற்படக் கூடிய அழகை அழகற்றதாக அடித்தது. அவளை நோக்கி மெள்ளக் குனிந்த விஜயன், ''கூழாங்கல் கடினமாயிருக்கிறதா சுந்தரி?'' என்று வினவினான்.

அவள் பதில் சொல்லவில்லை. கண்களை மூடிப் படுத்திருந்தாள். சிறிது எதையோ சிந்தித்த விஜயன் அவளைத் திடீரென்று வாரியெடுத்துக் கொண்டு நடந்தான் மலையை நோக்கி.

அவள் மெதுவாக கண் விழித்து, ''எங்கே என்னைக் கொண்டு போகிறீர்கள்?'' என்று வினவினாள்.

அவள் சொற்களிலிருந்த உணர்ச்சி வேகத்தைக் கவனித்தான் விஜயன். ஆதலால் சொன்னான், ''குகையின் மறைவுக்கு,'' என்று.

''எதற்கு?'' என்று அவள் கேட்டாள்.

''நீ ஆடையைக் களைய,'' என்றான் விஜயன்.

''உம்!'' அதிர்ச்சியால் அவள் அந்த 'உம்'மைக் கொட்டினாள்.

''பிறகு புத்தாடை புனைய,'' என்ற விஜயன் மெதுவாக நகைத்தான்.

குறிப்பு: இந்தச் சுனையாடல் படலம் ஸ்ரீ வால்மீகி ராமாயணத்தின் ஆரண்ய காண்டம் 63' ஆவது ஸர்க்கத்தில் 'அஸ்மின்மயா ஸார்த்தம்' என்கிற 12' ஆவது சுலோகத்தைத் தழுவி எழுதப்பட்டிருக்கிறது. அங்கு நீச்சலில் சீதையிடம் ராமன் தோற்கிறான், லஷ்மணனும் சீதையும் ராமன் தோல்வி கண்டு

zeevaa

நகைக்கிறார்கள். இந்தச் சுனையாடலைப் பற்றிச் சீதையை ராவணன் அபகரித்துக் கொண்டுபோன பிறகு ஆதி கவி பிரஸ்தாபிப்பதால் இது விப்ரலம்ப சிருங்காரம் என்ற பிரிவில் சேர்க்கப்படுகிறது. முழு விளக்கத்துக்கு, பெரியவாச்சான் பிள்ளை யின் 'தனிச்லோகீ' என்ற விமர்சன நூலைப் பார்க்கவும்.



28

சுனையாடல்

zeevaa

# 29. ஸ்வாமிகளின் கடமை உணர்ச்சி

பகலவன் வீசிய பொன்னிறக் கிரணங்களால் பொன் தட்டுகளாகி விட்ட பளிங்குச் சுனையின் சிற்றலைகள் தாங்கி வந்த பவழமல்லி மலர்களும் மகிழ மலர்களும் அள்ளி வீசிய சுகந்தத்துடன் இணைந்த சுந்தரியின் சுந்தர உடலை, வாவிக் கரையிலிருந்து வாரியெடுத்துக் கொண்டு மலைக்குகை வாயிலை நோக்கி நடந்த சிங்கள வாலிபன் அவளைத் தூக்கிச் செல்லும் காரணத்தைச் சொன்னதும் அதிர்ச்சி வசப்பட்ட அரசகுமாரி, ''புத்தாடை புனைய,'' என்ற சொற்களை அவன் அடுத்தபடி கூட்டியதும் சிறிது ஆறுதலடைந்தாலும், அவன் திடீரென நகைத்தது அவள் சீற்றத்தையே கிளப்பியதால், ''விடுங்கள், என்னை,'' என்று சீறி அவன் கைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றாள். ஆனால் தான் திமிறத் திமிற தனது பூவுடலின் செழித்த மொட்டுகள் அவன் மார்பு மீது இழைவதை நினைத்துத் திமிறலைச் சிறிது நிறுத்தினாள். அவள் திமிறல் உந்திய உணர்ச்சிகளால் சிறிது தடுமாறிய சிங்களத்துச் செல்வன் அவளை மெதுவாகக் குகை வாயிலிலேயே இறக்கிவிட்டுச் சிறிது விலகி மரியாதையுடன் தலைகுனித்து நின்றான். அவன் தன். முன்பு தலைவணங்கிப் பிச்சைக்காரன் போல் நிற்பதைக் கண்டதால் மனம் இளகிய ராஜகுமாரி, ''எதற்காக இப்படி நிற்கிறீர்கள்?'' என்று கனிந்த குரலில் வினவினாள்.

விஜயன் தலையைத் தூக்காமலே சொன்னான், ''அதிகமாக அபசாரம் செய்து விட்டேன்,'' என்று.

zeevaa

அரசகுமாரி தனது இடையிலும் தொடைகளிலும் ஈரத்தால் ஒட்டிக்கிடந்த ஆடைப்பகுதிகளைச் சற்றே பிழிந்து விட்ட வண்ணம், ''என்ன அபசாரம் செய்தீர்கள்?'' என்று கேட்டாள்.

விஜயன் சிறிது தடுமாறிப்பேசத் துவங்கி, ''நீருக்கு அடியில்...'' என்று இழுத்தான்.

''என்ன சொல்கிறீர்கள்?'' போலிக் கோபத்தைக் காட்டினாள் ராஜகுமாரி.

''தங்கள் அழகிய உடல் என் தலையில் படும்படி நடந்து கொண்டேன்...'' என்று துயரத்தைக் காட்டினான் விஜயன்.

அது சுத்த வேஷம் என்பதை திரிலோகசுந்தரி புரிந்து கொண்டாள்.

''சொல்லுங்கள். உங்கள் அயோக்கியத்தனம் எத்தனை தூரம் போகிறது பார்க்கிறேன்'' -சுந்தரியின் குரலில் சிரிப்பொலி இருந்தது.

''என் முகமும் உங்கள் கால்களில் பட்டு விட்டது,'' என்று மன்னிப்புக் கேட்கும் பாவனையில் பேசினான் விஜயன்.

''முகம் பட்டுவிட்டதா?'' சீறினாள் ராஜகுமாரி.

''சத்தியமாக அதுதான். வேறெதுவுமில்லை,'' என்ற சிங்கள வாலிபன் சட்டென்று அரச வார்த்தைகளை நிறுத்தி, ''சுந்தரி! குகைக்குள் போய் ஆடையை மாற்றி வா. என் ஆடையையும் வாளையும் வெளியே எடுத்து நீட்டு.'' என்றான்.

''ஏன் இந்தத் திடீர் மாறுதல்?'' என்று கேட்ட அரச குமாரியின் குரலில் சந்தேகம் ஒலித்தது.

விஜயன் தலையைச் சற்றுத் திருப்பித் தன்னிடமிருந்து சில அடிகள் தள்ளி விழுந்திருந்த நீண்ட நிழலைச் சுட்டிக் காட்டி, ''இன்னும் யாரோ நம்மைக் கவனிக்கிறார்கள்,'' என்று கூறினான்.

zeevaa

அந்த நீண்ட நிழலைப் பார்த்த சுந்தரி அந்த நிழல், மேலே நிற்கும் மனிதனுடைய நிழல் என்பதைப் புரிந்து கொண்டாள். சட்டென்று ஒரு நிழல் இரண்டாகிப் பிறகு மூன்றாகி நான்காகவும் ஆகிவிட்டதாலும், அதற்குமேல் நிழலேதும் விழாததாலும் தங்களைக் கவனித்தவர்கள் நால்வரேயென்ற முடிவுக்கு வந்த விஜயன், "சுந்தரி நீ சீக்கிரம் ஆடையைப் புனைந்துகொள். நான் மூர்சமதையும் நீலனையும் அழைத்து வருகிறேன்," என்றான்.

கலிங்கன் மகள் குகைக்குள் சென்று அவனது ஆடையையும் வாளையும் எடுத்து வெளியே கொண்டுவந்து வைத்துவிட்டு மீண்டும் குகைக்குள் மறைந்தாள். விஜயனும் ஈர ஆடைகளை களைந்து தனது பழைய ஆடைகளை அணிந்து வாளையும் இடையில் தரித்துக் கொண்டு கச்சையை இறுக்கிக் கட்டியதும், எட்டத் தெரிந்த நிழல்கள் நான்கும் ஒவ்வொன்றாக மறைய ஆரம்பித்தன. சில விநாடிகளுக்குள் நான்கும் மறைந்துவிடவே மூர்சமதை நாடிச் சென்ற விஜயன் அவன் நீர்வீழ்ச்சியின் அருகில் உட்கார்ந்திருப்பதைக் கண்டு, "சமத்! நீ நீராட வில்லையா?" என்று வினவினான்.

"இல்லை," மூர்க்கத்தனமாக வந்தது பதில்.

"ஏன்?"

"தினம் நீராட அவசியமில்லை."

"வேறெதற்கு அவசியம்?"

"நீங்கள் நீராடும்போது உங்களைப் பாதுகாப்பது அவசியம். அதுதான் மெய்க்காவலன் பணி," இதைத் தெரிவித்த மூர்சமத், "எசமான்! ஒன்று சொல்கிறேன் கோபித்துக் கொள்ள மாட்டீர் களே?" என்றும் கேட்டான்.

"சொல் சமத். உன்னிடம் நான் எப்படி கோபிக்க முடியும்?" என்று விஜயன் வினவினான்.

zeevaa

''இந்தக் கலிங்கம் வந்த காரியம் கப்பல் கட்டுபவனைக் கண்டு பிடித்து அழைத்துப் போக. ஆனால் இதுவரை தாங்கள் அருவி களைக் கண்டதும் அரசகுமாரியுடன் அவற்றில் இறங்கிவிடுகிறீர் கள். பிறகு இந்த உலகமே உங்கள் கண்களுக்குத் தெரிவதில்லை.'' என்று அலுப்புடன் பேசினான் மூர்சமத்.

''சமத்'' விஜயன் அழைப்பில் அன்பிருந்தது.

''எசமான்!'' சமதின் பதிலில் அன்பும் பணிவும் கலந்திருந்தன.

''மூர்சமத். நீ ஒரு மூர்க்கன். வாழ்க்கையின் மென்மையான அம்சங்களை நீ அறியமாட்டாய்'' என்றான் விஜயன்.

''அறிய இஷ்டமில்லை எசமான். நீங்கள் சொல்லும் மென்மை கண்களை மூடி விடுகிறது. கண்கள் மூடுவதை மூர்சமத் திரும்பவில்லை. எசமானைப் பாதுகாக்க அவை திறந்திருக்க வேண்டியிருக்கிறது,'' என்றவன் சட்டென்று பேச்சை நிறுத்தி. ''எசமான்! அதோ பாருங்கள்!'' என்று சற்றுத் தூரத்தில் அசைந்த நிழலுருவங்களைக் காட்டினான்.

''அதை முன்பே பார்த்தேன் சமத். யாரோ நம்மை மலைமீதிருந்து பார்க்கிறார்கள்,'' என்றான் விஜயன்.

''யாரென்று பார்த்து வரட்டுமா?'' என்று கேட்ட சமத் தனது பழுப்புநிறப் புரவியின் சேணத்தைக் கையில் ஏந்தினான்.

''சற்றுப் பொறு சமத்! யாராயிருந்தாலும் அவர்கள் நம்மைத் தேடி வரட்டும்,'' என்று சமத்தைத் தடுத்த விஜயன், ''நீலன் எங்கே?'' என்று கேட்டான்.

''அந்த ஆசிரமப் பெண்ணுடன் அதோ அங்கே மறைந்து கிடக்கிறான்,'' என்ற மூர்சமத் அருவி விழும் இடத்துக்குப் பின்னாலிருந்த ஒரு மறைவிடத்தைக் காட்டினான்.

''என்ன செய்கிறான்?''

zeevaa

''தெரியாது எசமான். ஏதோ சிகிச்சை செய்யப்போவதாகச் சொன்னான்.''

''தொடைக்காயத்தைக் கவனித்தானா?''

''என்னவோ உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனைப் பார்க்க எனக்குப் பிடிக்கவில்லை. நான் இந்தப் புறம் வந்துவிட்டேன்.''

விஜயன் புன்முறுவல் கொண்டான். ''சமத்! உனக்கு அழகை அனுபவிக்கத் தெரியாதா?'' என்று வினவினான் புன்முறுவலின் ஊடே.

''ஏன் தெரியாது? இதன் அழகை அனுபவிக்கிறேன்'' என்று தனது பழுப்புநிறப் புரவியைக் காட்டினான்.

''பெண்களை உனக்குப்பிடிக்காதா?'' என்று விஜயன் வினவினான் ஏளனக்குரலில்.

''பிடிக்காது எசமான்'' திட்டமாக இருந்தது சமதின் குரல்.

''ஏன் சமத்?''

''அவர்களால்தான் சகல தொல்லைகளும். அந்தப் பைத்தியம் பிடிக்காததால் சுய அறிவுடன் இருக்கிறேன்.''

''எனக்குச் சுய அறிவு இல்லையா?''

''அதைப்பற்றி நான் எதுவும் சொல்ல முடியாது. நான் தங்கள் அடிமை'' என்று தான் எசமானைப்பற்றி போட்ட எடையை மறைமுகமாகவும் பணிவுடனும் தெரியப்படுத்தினான் சமத்.

விஜயன் லேசாக நகைத்துவிட்டு, ''சமத்! நாம் உணவருந்திப் புறப்பட வேண்டும். பயணத்துக்குச் சித்தம் செய்'' என்று கூறிவிட்டு, சுனையில் நீர் அருந்திக் கொண்டிருந்த தனது கரிய புரவியை நோக்கிச் சென்றான்.

zeevaa

அருவியின் மேற்பகுதியில் நின்றிருந்த நான்கு துறவிகளும் கீழே நடந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் மௌனமாகப் பார்த்துக் கொண்டே நின்றனர். விஜயன் புரவியை நோக்கிச்சென்றதும் நான்கு துறவிகளும் தங்கள் வழுக்கை மண்டைகளை ஆமோதிப்பதற்கு அறிகுறியாக ஆட்டிக் கொண்டனர். பிறகு தர்மர் வழிகாட்ட மற்ற மூவரும் மலைப்பாறைமீது ராணுவத் தோரணையில் நடந்தனர் சிறிது தூரம். பிறகு நின்று காட்டின் முகப்பைக் கவனித்தனர். அங்கு மறைந்திருந்த மனிதனைச் சுட்டிக் காட்டிய தர்மர், ''ஸ்வாமிகளே! அதோ ஒருவன் மரக்கூட்டத்தில் மறைந்து நிற்கிறான்'' என்றார்.

''மிகவும் பொறுமைசாலி. நீண்ட நேரமாக நிற்கிறான்'' என்றார் அர்த்தர்.

''முன்பே பார்த்து விட்டீரா அர்த்தரே?'' என்று காமர் கேட்டார்.

''பார்த்துவிட்டேன். ஏன், நீர் கவனிக்கவில்லையா?'' என்று அர்த்தர் வினவினார்.

''இல்லை. சுனையைப் பார்த்துக் கொண்டிருந்தேன்'' என்றார் காமர்.

''காமரே! பழைய குணம் உமக்குப் போகவில்லை. அந்த யௌவனஸ்தர்கள் விளையாடலை நீர் பார்க்கலாமா?'' என்று அர்த்தர் வினவினார்.

''பார்க்கலாம். மனச்சலனம் கூடாது'' என்று காமர் தமது சிந்தனையின் தெளிவைத் தெரியப்படுத்தினார்.

தர்மர் புன்னகை பூத்தார். ''நன்கு சொன்னீர் காமரே. நமது துறவறம் எதையும் சமாளிக்கும்'' என்று சொன்னார் புன்னகையின் ஊடே. ''சரி! இனிச்செயலில் இறங்கலாமா?'' என்று வினவவும் செய்தார்.

''இறங்கலாம்'' என்பதற்கு அறிகுறியாக மற்ற மூவரும் தலையசைக்கவே நால்வரும் ஒரே சீராக மலைப்பாறைகளில் நடந்து

zeevaa

எட்ட இருந்த காட்டுக்குள் இறங்கினர். காட்டுக்குள் வந்ததும், காட்டு முகப்பில் மறைந்து நின்று அரசகுமாரியிருந்த குகையையும் கரிய புரவிக்குச் சேணம் மாட்டிய விஜயனையும் பார்த்துக் கொண்டிருந்த மனிதனுக்குப் பின்புறத்தில் தூரத்தில் நின்றனர். ''இவனை அகற்ற வேண்டும்'' என்றார் தர்மர்.

''அகற்றி விடுவோம்'' என்றார் அர்த்தர்.

''உத்தரவிடுங்கள்'' என்றார் காமர்.

அந்தச் சமயத்தில் அந்த மனிதன் குறுவாளை எடுத்து விஜயனை நோக்கி வீச முயன்றதைப் பார்த்த தர்மர், ''அர்த்தரே! ஆகட்டும்'' என்றார்.

பின்னால் நடந்து கொண்டிருந்தது என்ன என்பதை அறியாத காட்டுமுகப்பிலிருந்த மனிதன் குறுவாளை எறியக் குறிபார்த்தான். அதே சமயத்தில் அவன். பலமான இரு கைகளால் உயரத் தூக்கப்பட்டான். அவன் குறி வைக்க முயன்ற குறுவாள் அவன் கையிலிருந்து வேறொரு கையால் வேகமாக அகற்றப்பட்டது. இடையிலிருந்த மற்றுமிரு குறுவாள்களும் மிக லாவகத்துடன் நீக்கப்பட்டன. திடீரென்று தன்னை யாரோ தூக்கிக்கொண்டு நடப்பதை அந்த மனிதன் உணர்ந்தானானாலும், அவன் கழுத்தை அர்த்தர் மேல்புறமாகவே தூக்கிப் பிடித்துத் தலையை அசையாத வண்ணம் செய்துவிட்டதால், அவன் மரங்களின் இலைகள், பூக்கள், காய்கள் இவற்றைத்தான் காணமுடிந்தது. இப்படி வானை நோக்கிய நிலையில் கொண்டுபோகப்பட்ட அந்த மனிதனைச் சிறிது தூரத் திற்குப் பிறகு கீழே இறக்கிவிட்டார் அர்த்தர்.

கீழே இறக்கப்பட்ட அந்த மனிதன் தன் எதிரே நின்ற மூன்று துறவிகளையும் பக்கத்தில் நின்ற அர்த்தரையும் பார்த்தான். நான்கு முகங்களிலும் ஏளனப் புன்முறுவலும் கொலைக்குறியும் இருந்ததைக் கவனித்ததால் ஓரளவு பீதியும் கொண்டு, ''நீங்கள் யார்?'' என்று கேட்டான்.

zeevaa

''நாங்கள் உன்னைக் கேட்க வேண்டிய கேள்வி. நீ இந்த நாட்டுக்குப் புதியவனாகத் தெரிகிறது'' என்றார் தர்மர்.

''இல்லையேல் எங்களைத் தெரிந்திருக்க வேண்டும்'' என்று அர்த்தர் சொன்னார்.

இந்த நாட்டில் எங்களை அறியாதவர் கிடையாது'' என்றார் காமர்.

''நாங்கள் சிவகோகர்ண ஸ்வாமியின் சீடர்கள்'' என்றார் மோக்ஷர்.

அந்த மனிதன் முகத்தில் குழப்பம் தெரிந்தது.

''யாரந்த ஸ்வாமி? அவரும் உங்களைப்போல் கொலை காரச் சாமியாரா?'' என்று விசாரித்தான்.

தர்மர் பரிதாபமாக அவனைப் பார்த்தார். ''அப்பா! உனக்கு நீயே மரண தண்டனை கொடுத்துக் கொண்டு விட்டாய். எங்கள் குருநாதரைத் தெரியாதென்று சொன்னதே குற்றம். அவரை அவமதித்துப் பேசியது மன்னிக்க முடியாத குற்றம். அப்பா! மோக்ஷருக்கு நீயே பிடி கொடுத்துவிட்டாய்'' என்று அனுதாபத்துடன் சொன்னார்.

''மோக்ஷரா! யார் அது?'' அந்த மனிதன் கேள்வியில் லேசாக பயம் ஒலித்தது.

''அடியவன்தான்'' என்று சொல்லிக்கொண்டே முன்னுக்கு வந்த மோஷர். ''அப்பா! கவலைப்படாதே. இந்த உலக பந்தத்திலிருந்து உன்னை விடுவித்து யாரும் அடைய முடியாத மோக்ஷத்தை உனக்கு அளிக்கிறேன். பயப்படாதே. நீ போவது உனக்கே தெரியாது. கூழாங்கல்லின் ஒரே அடி தலையில். அது வேண்டாமென்றால் இரு கூழாங்கற்களைக் கழுத்திலுள்ள உணவுக் குழாயின் இருபுறம் வைத்து ஒரே திருகல். நீ மோக்ஷத்தின் வாயிலில் நிற்பாய்'' என்று கூறிக்கொண்டே அவனை அணுகினார்.

அவன் திகிலுடன் நா[illegible]புறமும் பார்த்தான். பிறகு ஓட முயன்றான், அவன் காலை எடுத்து வைக்கவில்லை. பக்கத்திலிருந்த ஒரு சீந்தல் கொடியைச் சரேலென அறுத்து வீசினார் மோக்ஷர் அவன் கால்களை நோக்கி. காலில் கொடி சுற்றிக் கீழே விழுந்த அந்த மனிதன் மீது அடுத்தகணம் பாய்ந்து ஏறி உட்கார்ந்து விட்ட மோக்ஷ ஸ்வாமிகள் கையில் இரு சின்னஞ்சிறு கற்களை எடுத்துக் கொண்டு அவற்றை அழகு பார்த்தார். "உன் கழுத்தில் அடிக்கும் நாடிக்கே இது சரியாயிருக்கும்" என்றார். அவரிடமிருந்து தப்ப முயன்றான் அந்த மனிதன். ஸ்வாமிகளின் திடகாத்திர சரீரம் அவனை அசைய விடவில்லை. அவர் கைகளின் விரல்கள் நான்கு அவன் கழுத்தின் நடுவில் இரு சிறு கூழாங்கற்களுடன் புதைந்தன. மெல்ல அவன் உணவுக்குழாய் இறுகியது. மூச்சு அடைத்துவிடும் நிலையை அடைந்தான். ஆனால் ஸ்வாமிகள் தமது கடமையை நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்.



zeevaa

# 30. ஜயபாகு

மரக் கூட்டத்தின் முகப்பில் மறைந்து நின்று குறுவாளெறிந்து விஜயனைக் கொல்ல முயன்ற மனிதன் மீது ஏறி உட்கார்ந்து, அவன் ஊட்டியில் இரு மணிக் கற்களை வைத்துத் திருக முற்பட்டதும் அவன் சுவாசம் அடைக்க முற்பட்டதால் மோக்ஷர் தமது சிசுருஷையைச் சிறிது நிறுத்தி, தர்மரை நோக்கினார். "முடித்து விடலாமா?" என்று அனுமதி கேட்கும் பாவனை அவர் கண்களிலிருந்ததால் சிறிது சிந்தித்த தர்மர், "போதும் எழுந்திரும். இவன் யாரென்பதை முதலில் அறிந்துகொள்வோம்" என்று கூறியதும் மோக்ஷர் தமது திடசரீரத்தை அவன் உடல் மீதிருந்து நீக்கி எழுந்து நின்றார். ஏற்கெனவே ஏற்பட்ட சிசுருஷை பலத்தின் விளைவாக அந்த மனிதனால் கண்களைக்கூடத் திறந்து பார்க்க முடியவில்லை. மூச்சும் மிகவும் கஷ்டப்பட்டே வந்து கொண்டிருந்ததால் இருமுறை முனகினான் அவன்.

"முனகுகிறான்" என்றார் அர்த்தர்.

"பிழைத்து விடுவான் என்பதற்கு அறிகுறி" என்றார் மோக்ஷர், அப்படிப் பிழைப்பது சரியல்லவென்று ஒலித்த குரலில்.

"சரி, எழுப்பி நிற்க வையுங்கள் அவனை" என்று தர்மர் உத்தரவிட, அதுவரை பேசாமலிருந்த காமர் எழுந்து அவனைத் தூக்கினார் மெதுவாக.

ஆனால் அந்த மனிதன் நிற்கும் நிலையில் இல்லாததால் அவன் கால்கள் துவளவே மீண்டும் சர்ரென்று கீழே இறங்கிச் சாய்ந்து

zeevaa

விட்டான். அடுத்து, தர்மர் அர்த்தர் இருவருமாக அவனைத் தூக்கி ஒரு மரத்தடியில் சார்த்தி உட்கார வைத்துப் பிடித்துக் கொள்ள, தர்மர் தனது கமண்டலத்திலிருந்து சிறிது தண்ணீரை எடுத்து அவன் முகத்தில் அடிக்கவே அவன் சற்றுத் தெளிந்து கண்களை விழித்தான். ''ஐயோ! நீங்களா?'' என்று கூறி மறுபடியும் கண்களை மூடிக் கொண்டான்.

அதைக் கண்டு அலுத்த காமர், ''சுத்தக் கோழை!'' என்றார்.

''மறைவிலிருந்து கொல்ல முயல்பவன் வேறு எப்படியிருக்க முடியும்?'' என்று அர்த்தர் அதற்கு விளக்கம் தந்தார்.

மோக்ஷர் பதிலேதும் சொல்லவில்லை. கைகளைப் பிசைந்து கொண்டு அவனை உற்று நோக்கினார். தமது கைகளிலிருந்து அவன் தப்பி விட்டதை எண்ணியதால், ஏமாற்றத்தால்.

தர்மர் மட்டும் சாவதானமாகப் பேச முற்பட்டு, ''அப்பா எழுந்திரு. உனக்கு இனி எந்தவித ஆபத்தும் இல்லை'' என்றார்.

''கண்ணை விழி அப்பனே!'' என்று அர்த்தர் கருணை நிறைந்த குரலில் கூறினார்.

''கண்களை மூடி ஜபம் செய்ய நீ எங்களைப் போல் தவசியல்ல'' என்று காமர் வலியுறுத்தினார்.

இத்தனைக்கும் அவன் கண்களைத் திறவாதிருக்கவே தர்மர், ''மோக்ஷரே! இவன் கண்களைச் சிறிது திறந்து விடும்'' என்று உத்தரவிட அந்த மனிதன் கண்களைத் திறந்தான்.

''மோக்ஷரிடம் ஏதோ மந்திரமிருக்கிறது'' என்று அறிவித்த தர்மர் லேசாக நகைத்தார்.

அந்த மனிதன் கண்களை நன்றாக அகலவிரித்தான். கையொன்றைத் தூக்கிக் கழுத்தைச் சிறிது உருவி விட்டுக்

கொண்டான். அடுத்துத் தனது கச்சையிலிருந்து சிறு கண்ணாடி யொன்றை எடுத்து முகத்தையும் கழுத்தையும் பார்த்தான்.

''அழகு பார்க்கிறான்'' என்றார் அர்த்தர் ஏளனத்துடன்.

''ரசிகன்'' என்றார் காமர்.

ஆனால் அவன் உற்றுப் பார்த்ததெல்லாம் அவன் ஊட்டியில் (கழுத்தின் குழாயில்) தெரிந்த இரண்டு மணிக்கற்கள் விளைவித்த காயத்தைத்தான். இரண்டும் இரண்டு புள்ளிகளாக ஒரே சீராக அழுந்தி, கழுத்தில் குருதியை இரண்டு இடங்களில் வெளிக் கிளப்பி, அந்தக் குருதி உறைந்துபோய் இரண்டு சிவப்புக் கற்களாகத் தெரிந்தன. இன்னும் சற்று நேரம் அந்த இடத்தில் கற்கள் திருகப் பட்டிருந்தால் தான் சிவபதம் எய்தியிருக்க முடியும் என்பதை எண்ணியதால் அவன் உடல் ஒருமுறை நடுங்கியது. அந்த இரு அடையாளங்களைச் சிறிது நேரம் பார்த்த அந்த மனிதன் மீண்டும் கண்ணாடியை மடியில் செருகிக் கொண்டு தனது எதிரே காட்சியளித்த துறவிகளை ஏறெடுத்து நோக்கினான்.

அவர்களில் தர்மர் மட்டும் ஒரு பாறைமீது உட்கார்ந்திருந்தார். அர்த்தர் அவருக்கு அருகில் நின்றிருக்க மற்ற இருவரும் அந்த மனிதனுக்கு நேர் எதிரில் இருந்த இரண்டு மரங்களில் சாய்ந்து கொண்டு நின்றனர். தர்மரின் கைகளில் மட்டும் ஒரு கமண்டலம் இருந்ததே தவிர மற்றவர் கைகளில் ஏதுமில்லை. தர்மரின் கமண்டல நீரே தன்னைக் காப்பாற்றியிருக்க வேண்டும் என்று புரிந்து கொண்ட அந்த மனிதன், ''தங்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக் கிறேன்'' என்று தர்மரைப் பார்த்துச் சொன்னான் தீனமான குரலில்.

தர்மர் அவனை அனுதாபத்துடன் நோக்கினார். ''தவறு அப்பனே தவறு. நீ நால்வருக்குமே கடமைப்பட்டிருக்கிறாய். மற்ற மூவரும் உன் பாவத்துக்குப் பிராயச்சித்தம் செய்ய விரும்பினால் நான் தடுக்க முடியாது. ஓம் சாம்ப சிவா!'' என்றார்.

zeevaa

அந்த மனிதன், "என்பெயர் அதுவல்ல," என்றான்.

"இருக்க முடியாது. நீ நாஸ்திகன் என்று நினைக்கிறேன். முப்புறமெரித்தவன் திவ்விய நாமம் அது," என்றார் தர்மர். அத்துடன் அனாவசியப் பேச்சை நிறுத்திய அவர், "அப்பனே! நீ யாரென்பதைத் தெரிவிப்பது நலம்" என்றார்.

அந்த மனிதன் மெள்ள சமாளித்துக் கொண்டு எழுந்து மரத்தில் சாய்ந்து நின்று கைகால்களை உதறி விட்டுக் கொண்டான். பிறகு தர்மரை நோக்கி, "நான் யாரென்று தெரிந்து கொள்வதால் உங்களுக்கு என்ன லாபம்?" என்று வினவினான்.

"உன்க்கு லாபம்," என்றார் தர்மர்.

"எனக்கா?"

"ஆம்."

"என்ன லாபமோ?"

"உயிர்," என்று தர்மர் விளக்கினார். "நாங்கள் யாரைப் பாதுகாக்க எங்கள் குருநாதரால் நியமிக்கப் பட்டோமோ அவரைக் கொலை செய்ய முயன்றாய். எங்களைக் கொலை செய்ய முயன்றாய். எங்களைக் கொலைகாரச் சாமியார்களென்று அழைத்தாய். எங்கள் குருநாதரையும் சபித்தாய். இந்த மூன்று குற்றங்களில் ஏதாவது ஒன்றுக்கே உன்னைத் தூக்கிலிடலாம். ஆனால் உன்னைத் தண்டிக்கும் பொறுப்பை எங்கள் குருநாதருக்கே விட்டு விடுவதாக இருக்கிறோம். கேட்பதற்குச் சுற்றி வளைக்காமல் நீ பதில் சொல்வது நலம்," என்ற தர்மர், "நீ யார்? எங்கிருந்து வந்தாய்? இந்தக் கொலைத் தொழிலுக்கு உன்னை ஏவியது யார்?" என்று கேள்விகளைக் கடுமையான குரலில் கேட்டார்.

அவர் குரலில் திடீரென ஏறிவிட்ட கடுமையாலும் கேள்விகள் திட்டமாகவும் ஆணித்தரமாகவும் விழுந்ததாலும் அதற்கு மேல்

zeevaa

வார்த்தைகளை வளர்த்துவது அபாயம் என்பதை உணர்ந்து கொண்ட அந்த மனிதன், "என் பெயர்...." என்று துவங்கிச் சிறிது தயங்கினான்.

அந்தச் சமயத்தில் சற்று எட்ட இருந்து ஒலித்தது ஒரு குரல், "ஜயபாகு, சிங்களத்தின் உபராஜா" என்று.

அதைக் கேட்டவுடன் அந்த இடம் நோக்கித்திரும்பிய ஜயபாகுவின் முகத்தில் விவரணத்துக்கும் அப்பாற்பட்ட கிலி விரிந்தது. சற்று தூரத்திலிருந்து மரத்தில் சாய்ந்த வண்ணம் நின்றிருந்த விஜயன் அவனைக் கடும் கண்களினால் நோக்கிக் கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் ஜயபாகு மெள்ள அவனை நோக்கி மண்டியிட்டு, "மகாராஜா, மன்னிக்க வேண்டும், மன்னிக்க வேண்டும்," என்று கெஞ்சினான்.

இந்தப் புதுத் திருப்பத்தையும் புது நாடகத்தையும் கவனித்த தர்மர் கற்பாறையிலிருந்து எழுந்து விஜயனை நோக்கி, "இவனை உங்களுக்கு முன்பே தெரியுமா?" என்று வினவினார்.

விஜயன் தர்மரையும் மற்ற துறவிகளையும் ஒரு முறை நோக்கி, "நீங்கள் யார்?" என்று வினவினான்.

"தங்களைப் பாதுகாக்க நியமிக்கப்பட்டவர்கள்," என்றார் தர்மர்.

"யார் நியமித்தார்கள்?" என்று வினவினான் விஜயன் வியப்பின் வசப்பட்டு.

"சிவகோகர்ண ஸ்வாமிகள், எங்கள் குருநாதர்." என்றார் அர்த்தர்.

"ஸ்வாமிகளா!" என்றான் அதிக வியப்புடன் விஜயன்.

"ஆம். உங்களை மகாராஜாவென்று இந்த மனிதன் அழைப்ப தால் இவனை வஜ்ரஹஸ்தரிடம் அனுப்ப அவசியமில்லை. நீங்களே

zeevaa

விசாரிக்கலாம். இவன் தங்களைக் கொல்ல முயன்றான், சிறிது நேரத்திற்கு முன்பு,'' என்ற தர்மர், ''காமரே! இவனை இழுத்துச் சென்று மகாராஜாவின் பாதங்களில் தள்ளுங்கள்,'' என்றார்.

மோக்ஷர் ஏதோ முணுமுணுத்தார். ''என்ன மோக்ஷரே?'' என்று கேட்டார் தர்மர்.

''ஸ்வாமி! யாரும் இருமுறை விசாரிக்கப்படுவதில்லை. ஏற்கெனவே இவனுக்கு மரண தண்டனை அளித்தாகி விட்டது. திரும்பவும் எதற்கு விசாரணை?'' என்று வினவினார்.

''இந்த விஜயனைப் பாதுகாக்கத் தான் தமது குருநாதர் நம்மை அனுப்பினார். இவன் இவரைக் கொல்ல முயன்றதால் இவனுக்குத் தண்டனை விதித்தோம். ஆனால் அதை நிறைவேற்றுவதற்கு முன்பாக....'' என்ற தர்மரை இடைமறித்து, ''தாங்கள்தான் கருணை காட்டிவிட்டீர்கள்,'' என்றார் மோக்ஷர்.

இவர்கள் உரையாடலே விஜயனுக்கு விசித்திரமாயிருந்ததால் அவர்களை நோக்கி நடந்து வந்த விஜயன், ''ஸ்வாமிகளே! இவன் என்னைக் கொல்ல முயன்றானா!'' என்று வினவினான் சந்தேகக் குரலில்.

''அவனையே கேட்கலாம்,'' என்றார் அர்த்தர்.

ஆனால் எந்தச் சந்தேகத்துக்கும் இடம் கொடுக்கவில்லை ஜயபாகு. நிலத்தில் மண்டியிட்டு விஜயன் கால்களில் தலைபடும்படி விழுந்தான். தனது காலுக்கு அடியில் கிடந்த ஜயபாகுவைச் சில வினாடிகள் உற்று நோக்கிக் கொண்டு நின்ற விஜயன், ''சமத்! சமத்'' என்று குரல் கொடுத்தான்.

அந்தப் பெயரைக் கேட்டதும் நடுங்கிய ஜயபாகு, ''மகாராஜா! அவனிடம்! என்னை ஒப்படைக்காதீர்கள். அதற்கு இந்த சாமியார்களிடமே ஒப்படைத்து விடுங்கள். இவர்கள் கைகளால் நான் சாவதே மேல்,'' என்று கதறினான்.

zeevaa

இதைக்கேட்ட காமர் புன்முறுவல் செய்து, "இவன் புத்திசாலி," என்றார்.

"நமது கையால் சாக விரும்புகிறான்," என்று குதூகலப்பட்டார் மோக்ஷர்.

"சிவநேசச் செல்வர்கள் கையால் மாண்டு புண்ணியம் சம்பாதிக்க ஆசைப்படுகிறான்," என்றார் அர்த்தர்.

அவர்கள் சொற்களைக் கேட்ட விஜயன் அந்தச் சிவநேசச் செல்வர்களின் கொலை ஆசையைப் புரிந்து கொண்டு, "ஸ்வாமிகளே! இவன் செய்த குற்றம் எதுவாயிருந்தாலும் பொறுத்தருள வேண்டுகிறேன்," என்று நால்வரையும் நோக்கித் தலை தாழ்த்தி வணங்கினான்.

தர்மர் மிக நிதானமான குரலில் சொன்னார்: "பொறுக்க வேண்டியது நீ. உன்னைத் தான் இவன் கொல்ல முயன்றான்," என்று.

இந்த உரையாடல் நடந்து கொண்டிருக்கையில் மூர்சமதும் கலிங்க ராஜகுமாரியும் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களை நோக்கியதும் பிரமித்தான் ஜயபாகு. விஜயன் கால்களிலிருந்து எழுந்து நின்று ராஜகுமாரியைக் காட்டி, "இவர்கள் யார்?" என்று விசாரித்தான்.

மூர்சமதின் பெரிய விழிகள் ஜயபாகுவைக் கொடூரத்துடன் நோக்கின. "எசமான்! உபராஜா இங்கு எங்கு வந்தார். எதற்காக?" என்று விசாரித்தான் மூர்சமத்.

"என்னைக் கொலை செய்வதற்கு," என்றான் விஜயன்.

"செய்தால் மகாராஜாவாகி விடலாம்," என்றான் மூர்சமத். அவன் குரலில் இருந்த கடுமை ஸ்வாமிகளைக் கூடத் திகைக்க வைத்தது. "எசமான், என்ன உத்தரவு?" என்று கேட்டான் சமத்.

zeevaa

''அவன் திரும்பிப் போகட்டும்,'' என்றான் விஜயன்.

அதுவரை சற்றுப் பின்னடைந்து நின்ற ராஜகுமாரி முன்னே வந்து, ''இவனை விடுதலையா செய்யப் போகிறீர்கள்!'' என்று வினவினாள் வியப்புடன்.

''ஆம்.'' வெறுப்புடன் ஒலித்தது விஜயன் குரல்.

''உங்களைக் கொலை செய்ய முன்றதாகச் சொன்னீர்களே?''

''ஆம்.''

''அப்படியும் விடுதலை செய்கிறீர்கள்?''

''ஆம்.''

''ஏன்?''

''இவன் என் சகோதரன்,'' என்று சொற்களை மிக நிதானமாகவும் வேதனையுடனும் உதிர்த்தான் விஜயன்.

''சகோதரனா!'' ஆச்சரியம் ததும்பிய குரலில் கேட்டாள் திரிலோகசுந்தரி.

''ஆம்.''

''இவனுக்குத் தண்டனை ஏதும் கிடையாதா?''

''இவன் போகட்டும் இலங்கைக்கு,'' என்றான் விஜயன்.

அதுவரை மௌனமாயிருந்த தர்மர், ''முடியாது சிங்கள மகாராஜா,'' என்றார் மெதுவாக.

''ஏன்?'' விஜயன் கேட்டான் சினத்துடன்.

''இது கலிங்கம். இங்கு கலிங்க மகாராஜா வஜ்ரஹஸ்தர் நீதிதான் செல்லும். தாங்கள் விடுதலையளித்தாலும் நாங்கள் உபராஜா அவர்களை கலிங்க நாட்டுத் தலைநகருக்குத் தான் அனுப்புவோம்.''

zeevaa

என்று தர்மர் திடமாகக் கூறினார், சந்தேகத்துக்குக் சிறிதும் இடமின்றி.

இதைக் கேட்ட ஜயபாகு நடுங்கினான். இந்த விநோத நிலையை எப்படிச் சமாளிப்பது என்று தெரியாததால் விஜயன் சிறிது தயங்கினான். அந்த நெருக்கடியிலிருந்து அவனை மீட்கவும் ஜயபாகுவுக்கு உயிர்ப்பிச்சை அளிக்கவும் முற்றும் எதிர்பாராத இடத்திலிருந்து அவனுக்கு உதவி வந்தது.



# 31. பாலத்தருகில் ஒருவன்

கலிங்க நாட்டில் கலிங்க மன்னன் ஆணையே செல்லுமாதலால் ஜயபாகுவைக் கலிங்கத் தலைவரிடம் அனுப்புவதைத் தவிர வேறு வழியில்லை என்பதைத் தர்மர் தீர்மானமாகச் சொல்லிவிட்டதால், ஜயபாகுவை எப்படிக் காப்பாற்றுவது என்று தெரியாமல் திகைத்த விஜயன் பெரும் சங்கடத்திற்குள்ளானான். மூர்சமதிடம் கண்ணைக் காட்டினால் நான்கு சாமியார்களும் லாங்குனியின் பளிங்கு வாவியில் தூக்கி எறியப்படுவார்கள் என்பதையும் அத்தகைய வன்முறையால் சகோதரனை விடுவித்தாலும் கூட, தான் கலிங்கம் வந்த பணியை நிறைவேற்றுவது சாத்தியமில்லாமல் போய்விடு மென்பதையும் உணர்ந்ததாலும், தன் உயிரைத் தனது சகோதரனிட மிருந்து காப்பாற்றிய துறவிகளுக்குத் தான் அத்தகைய துரோகம் செய்வது தகாத காரியமென்பதையும் நினைத்துப் பார்த்ததாலும் விஜயன் சற்றுக் குழப்பத்திற்கும் உள்ளானான். அவன் குழப்பத்தைக் கண்ட ஜயபாகு மீண்டும் நடுங்கினான். ''அண்ணா! இந்த ஒருமுறை என்னை மன்னித்து விடு, என்னைக் கைவிடாதே,'' என்று கூறவும் செய்தான்.

அவன் கிலியைக் கண்டு வெறுப்பை முகத்தில் படரவிட்டுக் கொண்ட விஜயன், ''ஜயபாகு, உயிர் அத்தனை வெல்லமா உனக்கு? இந்த மாதிரி அலறுவது வெட்கமாயில்லை?'' என்று வினவினான் வெறுப்புக் குரலிலும் ஒலிக்க.

அதுவரை பேசாமல் அந்த நாடகத்தை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்த கலிங்க ராஜகுமாரி, ''உயிர் தேவையானவர்கள்

zeevaa

வெட்கம் மானம் எல்லாவற்றையும் துறப்பதுதான் நல்லது," என்று இழிவாகப் பேசினாள்.

"அரசகுமாரி சொல்வதில் பொருள் இருக்கிறது," என்றார் தர்மர்.

"வஜ்ரஹஸ்தர் மகளல்லவா?" என்று அர்த்தர் சிலாகித்தார்.

"அர்த்தமிருக்கிறதே தவிர, பயனில்லை" என்றார் சாமர்.

"உண்மை.," என்று தர்மர் கூறினார்.

"இம்மாதிரி கொலைக் குற்றத்துக்கு மன்னிப்பு அளிக்க அரசகுமாரிக்குக்கூட அதிகாரமில்லை," என்று மோக்ஷர் தெரிவித்தார்.

இந்த விவரங்களைக் கேட்டதால் திகிலின் எல்லையை அடைந்த ஜயபாகு, "அண்ணா!" என்று கெஞ்ச வாயெடுத்தவன், "அரசகுமாரி, இவர்கள் சொல்வதை நம்பாதீர்கள். எங்கள் நாட்டில் அரசகுமாரிகளுக்கு எல்லா அதிகாரமும் உண்டு. இங்கும் அப்படித்தானிருக்க வேண்டும். என்று அரசகுமாரியை நோக்கிப் பேசினான். அவன் கண்களில், காப்பாற்றுங்கள் என்ற கெஞ்சல் இருந்தது.

ஜயபாகுவின் நிலையையும் கெஞ்சலையும் கவனித்த தர்மர், "சட்டம் பேசுகிறான் குற்றவாளி," என்றார்.

"குறுக்குச் சட்டம் அவன் கண்களில் தெரிகிறது," என்ற அர்த்தர் புன்முறுவல் பூத்தார்.

அப்பொழுது கேட்டான் விஜயன், "குறுக்குச் சட்டமா! அது என்ன?" என்று.

அர்த்தர் விளக்க முற்பட்டு, "இந்த நாட்டில் கொலைக் குற்றத்துக்குத் தூக்கிலிட வேண்டியவரைக் குறுக்குச் சட்டத்தில் முதலில் சாதாரணமாகத் தொங்கவிடுவார்கள். அந்தச் சட்டத்தில்

zeevaa

இரு கைகளையும் விரித்துக் கொண்டு குற்றவாளி முதலில் தொங்கவேண்டும். பிறகு தான் கழுத்தில் கயிறு சுற்றப்படும். சில வேளைகளில் தூக்கிலிட மாட்டார்கள். குறுக்குச் சட்டத்தைப் பிடித்துத் தொங்கும் குற்றவாளியை, கீழே கழுவைத்து மேலிருந்து கழுவின் முனைமீது இறக்கி மெதுவாக அழுத்துவார்கள். இந்த முறையில் உயிர் சிறிது மெதுவாகத்தான் போகும். ஆனால் கோழைகள் அந்தச் சில நிமிடங்களாவது வாழ இஷ்டப் படுவார்கள்!'' என்று விவரமாகச் சொன்னார்.

இந்தக் கொடூர தண்டனையைக் கேட்டதும் ஜயபாகுவுக்கு மயக்கமே வந்துவிடும் போலாகிவிட்டது. அவன் திடீரெனப் பாய்ந்து ராஜகுமாரியின் கால்களைப் பிடித்துக் கொண்டு, ''தேவி! என்னை நீங்களே கொன்றுவிடுங்கள், உங்கள் தலைநகருக்குப் போக நான் விரும்பவில்லை,'' என்று கதறினான்.

அவன் கூவல் விஜயனுக்கு நாராசமாக இருக்கவே அவன் திரும்பி அரசகுமாரியை நோக்கினான். திரிலோகசுந்தரி செய்வ தென்னவென்று தெரியாமல் திகைத்து நான்கு துறவிகளையும் நோக்கி, ''பெரியவர்களே! இந்தக் கோழை தப்பித்துத்தான் போகட்டுமே'' என்று விண்ணப்பித்துக் கொண்டாள்.

அதனால் சிறிது நம்பிக்கை உதயமாகி அவள் காலடியிலிருந்து எழுந்த ஜயபாகுவை நோக்கிய தர்மர், ''அரசகுமாரி! நாங்கள் இந்தச் சிங்கள மன்னரைக் காப்பாற்ற எங்கள் குருநாதர் சிவகோகர்ண ஸ்வாமிகளால் அனுப்பப்பட்டிருக்கிறோம். இந்த மன்னரைக் கொல்ல யார் முயன்றாலும் அவர்களைத் தீர்த்துகட்ட உத்தர விருக்கிறது. அந்த உத்தரவை ஒன்று ஸ்வாமிகளே மாற்றலாம் அல்லது திரிகலிங்காதிபதி மாற்றலாம். வேறு யாரும் மாற்ற முடியாது. எங்கள் நிலை இப்படி இருக்கிறது,'' என்று விளக்கம் கொடுத்தார்.

zeevaa

அவர் அப்படிச் சொல்லி முடித்ததும் ஜயபாகுவை நோக்கி அர்த்தரும் காமரும் நகர்ந்தார்கள். அதுவரை பொறுமையாய் இருந்த விஜயன் இரண்டடி முன்னுக்குக் காலை எடுத்து வைத்து ஸ்வாமிகளுக்கும் சகோதரனுக்கும் இடையில் நின்றான். ''ஸ்வாமிகளே! இவன் மீது யாரும் கையை வைக்க வேண்டாம். அப்படிக் கையை வைத்தால் நீங்கள் துறவிகளென்பதை நான் மறந்துவிடுவேன்,'' என்று மிக நிதானமான குரலில் பேசினான். ''சமத்! இவனை நீ அழைத்துக் கொள்,'' என்றும் உத்தரவிட்டான்.

அவன் தலையீட்டையும் உத்தரவையும் கண்ட அர்த்தரும் காமரும் மேற்கொண்டு முன்னேறாமல் சிலையென நின்றனர் ஒரு வினாடி. பிறகு தர்மரை நோக்கித் தலையைத் திருப்பி என்ன செய்யலாம் என்று வினவும் பாணியில் கண்களை நாட்டினார்கள் தங்கள் தலைவர்மீது.

தர்மர் ஒரு வினாடி யோசித்தார். பிறகு விஜயனை நோக்கிக் கேட்டார். ''விஜயபாகு, உங்கள் முடிவு இது தானா?'' என்று.

''ஆம்.'' சந்தேகத்துக்கு இடமின்றி வந்தது விஜயபாகுவின் பதில்.

தர்மரின் கண்களில் சினம் படர்ந்தது, ஒரு முடிவும் தெரிந்தது. ''சிங்கள மன்னனே! சகோதர பாசத்தால் உன் தலையில் நீயே மண்ணை அள்ளிப் போட்டுக்கொள்கிறாய். இந்தக் கொலைகாரப் பாவியை நீ காப்பாற்றினால், எங்கள் நாட்டுச் சட்டத்தையும் எங்கள் குருநாதர் உத்தரவையும் மீறினால் நாங்கள் உடனடியாகத் திரும்புகிறோம் எங்கள் இருப்பிடத்திற்கு. ஆனால் ஒன்று சொல்ல முடியும். எங்கள் உதவி இல்லாமல் நீ சிம்மபுர அரண்மனைக்குள் நுழைய முடியாது. நுழைந்தாலும் திரும்ப முடியாது. அந்த அரண்மனையே உனக்குச் சமாதியாகும். சிந்தித்துப் பார். இப்பொழுதுகூட ஒன்றும் குடி முழுகிப் போய் விடவில்லை. முடிவை மாற்றிக் கொள்கிறாயா?'' என்று வினவினார், சினம் குரலிலும் பரவி நிற்க.

zeevaa

"ஸ்வாமிகளே, விஜயன் எடுத்த முடிவு என்றும் மாறியதில்லை," என்று தெரிவித்தான் விஜயன். கலிங்க ராஜகுமாரியும் அவனுடன் சேர்ந்துகொண்டு, "குற்றவாளியை மன்னரிடம் ஒப்படைக்கும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன்," என்று திட்டமாக அறிவித்துவிடவே தர்மர் விஜயபாகுவைச் சுடச்சுட நோக்கினார்.

"விதியை மாற்ற யாராலும் முடியாது விஜயபாகு. சரி, செல். ஆனால் ஒன்று தெரிந்து கொள். சிம்மபுரம் கலிங்கத்திலிருந்தாலும் அந்த ஒரு நகரத்தில் மட்டும் கலிங்க மன்னர் சட்டம் செல்வதில்லை," என்று கூறிவிட்டுத் தமது சகாக்களை நோக்கி, "சரி, வாருங்கள். நமக்கு இனி இங்கு வேலையில்லை," என்று கூறி மலைப்பாறையில் ஏற முயன்றார். மற்ற மூவரும் அவரைத் தொடர்ந்தனர்.

நான்கு ஸ்வாமிகளும் ஒரே சீராக மலைப்பாறைமீது நடந்து செல்வதைக் கவனித்த விஜயன், சற்றுத் திரும்பி, "சமத்! புறப்பட ஏற்பாடுகளைச் செய்," எனறு கூறிவிட்டு, "ஜயபாகு! எனக்கு உதவ வந்தவர்களை உதறிவிட்டு உன்னைக் காப்பாற்றிவிட்டேன். அதுவும் கலிங்க ராஜகுமாரி இடையீட்டால் துறவிகள் இத்துடன் திரும்பிச் சென்றார்கள். இனி எப்படியாவது தொலைந்து போ," என்று சீறிவிட்டு, மீண்டும் பளிங்குச் சுனையை நோக்கி நடந்தான்.

அங்கிருந்த தனது புரவிமீது சேணத்தைப் போட்டு இறுக்கினான். அடுத்து அரசகுமாரியைப் புரவியிலேற்றித் தான் மட்டும் சேணத்தைப் பிடித்துக்கொண்டு நடக்கத் தொடங்கினான். அவனுக்குப் பின்னால் மூர்சமதும், அவனுக்கும் பின்னால் நீலனும் பணிப்பெண்ணும் வந்தனர். இந்தப் பயணம் அன்று நடுப்பகல் வரை நடந்தது. அரசகுமாரி அவ்வப்பொழுது முன்னே செல்ல வேண்டிய திசையைக் காட்டி வந்தாள். பயணம் மௌனமாகவே நடந்து வந்தது. இவர்கள் எல்லோருக்கும் பின்னால் ஜயபாகு தொடர்ந்து வந்த காரணத்தால்.

zeevaa

வரவரக் குறுக்குப் பாதை மிகவும் குறுக ஆரம்பித்ததால் அரசகுமாரி புரவியிலிருந்து கீழே இறங்கி, ''இனி நாம் மிகுந்த எச்சரிக்கையாகச் செல்ல வேண்டும். இந்தக் குறுகிய பாதையை அடுத்து ஒரு சமவெளி வரும். அங்கு லாங்குனி நதி சற்றுத் திசை திரும்பும். அதன் கரையில் நாம் சென்றால் இடையே சிறு பாலம் ஒன்று வரும். அந்தப் பாலத்தை நாம் தாண்டவேண்டியதில்லை. நதிக்கரை ஓரமாகப் பயணம் செய்தால், சிம்மபுரத்தின் வெளிச்சத்திரம் வரும். அங்கு நாம் இரவு சிறிது நேரம் தங்கலாம்,'' என்று விளக்கினாள்.

குறுக்குப் பாதை அவள் சொன்னபடிதான் இருந்தது. மிகவும் குறுகி மரங்கள் அடர்ந்து நெருங்கி வந்தது. சில சமயங்களில் அரசகுமாரியின் சேலை அவற்றின் கிளைகளில் சிக்கியது. அதைச் சர்வசாதாரணமாக எடுத்துக் கொண்டு நடந்தாள் சுந்தரி.

மூர்சமதுக்கும் மற்றவர்களுக்கும் பயணம் சிறிது கஷ்டமாகவே இருந்தது. மூர்சமதின் உடம்பில் பல இடங்களில் மரக் கிளைகள் கிழித்தன. அவற்றின்மீது சீறி மூர்சமத் கிளைகளை உடைத்தெறிந்து கொண்டு பயணத்தைத் தொடர்ந்தான். அரசகுமாரியின் பணிப்பெண்ணின் தொடைக்காயம் முழுவதும் குணப்படாததால் அவள் முனகிக்கொண்டு புரவிமீது படுத்துக் கிடந்தாள். அவளையும் பிடித்துக்கொண்டு, புரவியையும் இழுத்துக்கொண்டு நடந்த நீலன், அந்தப் பெண்ணை முனகாதிருக்கும்படி எச்சரித்த வண்ணம் வந்தான்.

இப்படிப் பயணம் செய்கையில் விஜயன் கேட்டான். ''அரசகுமாரி! நீ எதற்காக ஜயபாகுவைக் காப்பாற்றத் தலையிட்டாய்?'' என்று.

''மைத்துனரல்லவா?'' என்ற அரசகுமாரி புன்முறுவல் செய்தாள்.

zeevaa

அதுவரை தம்பியின் கொலை முயற்சியால் மனம் வெதும்பிக் கிடந்த விஜயன் முதன் முதலாக வாய்விட்டு நகைத்தான். ''உடன் பிறந்தவன்'' என்றும் சொன்னான் நகைப்பின் ஊடே.

''உடன் பிறந்தே கொல்லும் வியாதி'' என்ற பழமொழியைப் பின்னால் வந்த மூர்சமத் சற்று இரைந்தே சொன்னான்.

மூர்சமதின் குரல் அந்தக் குறுகிய பாதையில் பலமாக ஒலித்ததால் கடைசியில் தலைகுனிந்து வந்த ஜயபாகு, மீண்டும் பீதிக்குள்ளாகிச் சற்று முன்னே செல்ல முயன்றவனை நீலன் தடுத்தான். ''உபராஜா! பின்னாலேயே வாருங்கள். மூர்சமத் மிகவும் கோபத்தில் இருக்கிறான்'' என்று.

மீண்டும் பின்னடைந்த ஜயபாகு உள்ளம் எரிமலையாக, ''எனக்கும் காலம்வரும்'' என்று உறுமிக்கொண்டு நடந்தான். வர வரப் பாதை குறுகியதையும் பகலும் கடந்து மாலை அணுகிக் கொண்டிருந்ததையும் கவனித்ததால் பீதி அதிகமாக நீலனை அணுகி, ''நீங்கள்தான் எனக்குத் துணைவர்,'' என்று அவனைத் துதி செய்தான்.

அவன் மீது நீலனுக்கு ஏற்கெனவே இருந்த வெறுப்பு அதிகமாகவே, ''எத்தனையோ துர்ப்பாக்கியத்தில் உனக்குத் துணையாயிருக்கும் துர்ப்பாக்கியமும் சேரட்டும்,'' என்று அவனைத் திரும்பியும் பாராமல் கூறிவிட்டுப் பயணம் செய்தான்.

இப்படி நடந்த பவனி அந்த அடவியின் மேற்கு முனையை அடைந்ததும் காடு மெலியத் தொடங்கியது. மாலை முற்றி இரவும் சூழ்ந்ததால் எதிரே தெரிந்த வானத்தின் அற்ப வெளிச்சத்தில் அரசகுமாரி குறிப்பிட்ட லாங்குனீ நதியின் திருப்பமும், திருப்பத்தை அடுத்த பாலமும் தெரிந்தன. அன்று முழுவதும் பயணம் செய்ததால் ஆயாசத்திலிருந்த அனைவரையும் சிறிது நேரம் தங்க அரசகுமாரி உத்தரவிடவே, அனைவரும் தரையில் உட்கார்ந்து தங்களை ஆசுவாசப்படுத்திக் கொண்டார்கள்.

zeevaa

''சிம்மபுரம் வெளிச் சத்திரம் சென்றதும் சாப்பிட வசதியிருக்கும்'' என்று அரசகுமாரி தனது பக்கத்தில் உட்கார்ந்திருந்த விஜயனிடம் கூறினாள். ''இரவு முற்றிய பிறகு பாலத்தை அணுகுவது நலம். அதுவரை இங்கேயே தங்கலாம்,'' என்றும் சொன்னாள்.

விஜயன் நன்றாகத் தரையில் மல்லாந்து படுத்து, ''எசமானி அம்மாள் சொல்கிறபடி அடிமை கேட்கச் சித்தமாயிருக்கிறேன்,'' என்று மெள்ளக் கண்களை மூடினான்.

இரவு ஏறிக்கொண்டிருந்தது. அரசகுமாரி விஜயன் பக்கத்தில் உட்கார்ந்து அவன் தலையைக் கோதி விட்டுக் கொண்டிருந்தாள். அவன் மார்பையும் கால்களையும் மெதுவாக வருடினாள். அந்தப் பட்டுக் கைகளின் ஸ்பரிசத்தில் நன்றாகத் துயில முற்பட்டான் விஜயன். திரிலோகசுந்தரி வானம் அளித்த சிறு வெளிச்சத்தில் குழந்தை போலத் தெரிந்த அவன் முகத்தின் மீது குனிந்து தனது பட்டு இதழ்களை மிக மெதுவாகப் பொருத்தினாள். சில வினாடிகள் கழித்துத் தலையைத் தூக்கினாள். தூரத்தே தெரிந்த பாலத்தின் முன்பு தனியாக ஒரு மனிதன் தங்களை நோக்கி நடந்து வருவதைப் பார்த்தாள்.

அவள் பார்த்ததை அந்த மனிதனும் பார்த்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் மெள்ள அருகில் வந்து அரசகுமாரியை எழுந்து வரும்படி சைகை காட்டினான். அரசகுமாரி தனது இடுப்பில் குறுவாளிருக்கிறதா என்பதைத் தடவிப் பார்த்துவிட்டு எழுந்தாள். அந்த மனிதன் சில அடிகள் தள்ளியிருந்த ஒரு மரத்தடிக்கு அவளை அழைத்துச் சென்றான். மரத்தை அடைந்ததும் ''எங்கு வந்தாய்?'' என்று அவனை நோக்கி வினவினாள் அரசகுமாரி.

''தங்களை அழைத்துப்போக வந்தேன்,'' என்றான் அவன்.

''யார் உத்தரவு?'' என்று கேட்டாள் அரசகுமாரி.

பெயரைச் சொன்னான் அந்த மனிதன்.

zeevaa

''சரி! நீ போ, இன்னும் இரண்டு நாழிகைக்குள் நான் வருகிறேன்,'' என்றாள் அரசகுமாரி.

அவன் அடுத்த புதர்களில் மறைந்தான். அரசகுமாரி மீண்டும் விஜயனருகில் வந்து உட்கார்ந்து தனது பட்டு இதழ்களை அவன் இதழ்களுடன் கலந்தாள். அவள் பட்டு உடலை அவன் முரட்டுக் கைகள் வளைத்தன.

''விஷமம் வேண்டாம். உறங்குவது போல் பாசாங்கு செய்யுங்கள்'' என்று உதடுகளை இணைத்த வண்ணம் திறந்து திறந்து செய்திகளை உதிர்த்தாள் அவள்.



zeevaa

# 32. அவன் கோரிக்கை

இதழ்களுடன் இதழ்கள் இணைந்த நிலையில் அரசகுமாரி தன்னை உறங்குவதுபோல் பாசாங்கு செய்யச் சொன்னதன் காரணத்தை விஜயன் உணர்ந்திருந்த காரணத்தால் அவன் மறுத்து ஏதும் பேசாவிட்டாலும் ''அந்த மனிதனுடன் நீ தனியே பேசப் போகிறாயா?'' என்று மட்டும் கேட்டான்.

அதுவரை பாலத்திலிருந்து வந்தவனை விஜயன் பார்த்திருக்க மாட்டானென்றும் அவன் துயில் கொண்டிருந்தானென்றும் எண்ணிய அரசகுமாரி அவன் முதல் தூக்கமே முழுத் தூக்க மில்லையென்பதைப் புரிந்து கொண்டதால் ''நீங்கள் விழித்துக் கொண்டா இருந்தீர்கள்?'' என்று வியப்புடன் இதழ்களைத் திறந்தும் கூட்டியும் மிக மெதுவாகப் பேசினாள்.

விஜயன் படுத்தபடியே சிறிதும் அசங்காமலும் துயிலுவதைப் போலவே மேலும் பாசாங்கு செய்து கொண்டும் பேசினான். ''சுந்தரி! சொந்த நாட்டை விட்டு ஒரு மன்னன் வருவதே முட்டாள்தனம். போதாக்குறைக்கு இப்பொழுது அந்த நாட்டு உபராஜாவும் வந்திருக்கிறான். சிங்கள ராஜ வம்சத்தைக் கூண்டோடு கைலாசமனுப்ப இதைவிடச் சிறந்த சந்தர்ப்பம் யாருக்கும் கிடைப்பது அரிது. இந்த அபாயத்தில் உறங்குவது புத்தி சாலித்தனமா?'' என்று கேட்டான்.

சுந்தரி புரிந்து கொண்டதற்கு அறிகுறியாக அவன் முகத்தில் தன் முகத்தை இழைத்தபடி 'உம்' கொட்டி ''உங்கள் சகோதரரை இங்கு யார் வரச்சொன்னது?'' என்றும் வினவினாள்.

zeevaa

விஜயன் இதழ்களில் புன்முறுவல் காட்டினான். "உபராஜா ராஜாவாக விரும்பினால் வராமல் என்ன செய்வது? அந்த நான்கு துறவிகள் தலையிடாதிருந்தால் இத்தனை நேரம் அவன் மகாராஜாவாகியிருப்பானே!" என்ற விஜயன். "சுந்தரி! அதோ அந்த மனிதன் யார்? அவனை இங்கு அனுப்பியது யார்?" என்று புதர்களை நோக்கிக் கண்களை லேசாகத் திருப்பி வினவினான்.

"சிம்மபுரத்தின் கிழக்கு வாசல் அதிகாரி. என் தந்தை அனுப்பியதாகச் சொல்கிறான்," என்றாள் அரசகுமாரி.

"அதை நீ நம்புகிறாயா?" விஜயன் கேட்டான், அவள் இடையைத் தனது கையால் இழுத்து அணைத்த வண்ணம்.

"நம்புகிறேன்-அவனை முன்பே எனக்குத் தெரியும்," என்ற அரசகுமாரி, "கையை எடுங்கள். உறங்குபவர்கள் இப்படியெல்லாம் செய்யமாட்டார்கள்," என்று கூறினாள், இடையை இழுக்கும் பாவனையில் இதர சேஷ்டைகளிலும் ஈடுபட முற்பட்ட விஜயனை நோக்கி.

விஜயன் கை மேலும் தவழ்ந்தது, துளைந்தது, அவள் வழவழத்த பட்டு உடற்பகுதிகளில். "தூக்கத்தில் கை கால்கள் அசைவது இயற்கைதானே சுந்தரி?" என்று கேட்டான் அவன்.

"ஆம். ஆம். தூக்கத்தில் இடம் பார்த்துக் கை நகருமா? சும்மா இருங்கள். இல்லையேல்...."

"இல்லையேல்?"

"கையை உடைத்துவிடுவேன்"

"அப்புறம் கை செய்யும் அலுவலையும் நீயேதான் செய்ய வேண்டியிருக்கும்."

"என்ன உளறுகிறீர்கள்?"

"காமத்தின் ஒரு அங்கம் உளறுதல்" என்ற விஜயனிடம் மேற்கொண்டு பேசவில்லை அரசகுமாரி.

zeevaa

விஜயன் செயல்களாலும் செயல்களைவிட விந்தைச் சொற்களாலும் அவள் உணர்ச்சிகள் நெறிகளை உடைக்கும் நிலையை எட்டிக் கொண்டிருந்தன. ஆகவே அவள் அவனைச் சற்று முரட்டுத்தனமாகவே அசக்கி நகர்த்தி விட்டு எழுந்தாள். தன் கையால் அவன் கையைச் சற்று இறுகப் பிடித்து விட்டு எழுந்து, பாலத்திலிருந்து வந்த மனிதன் மறைந்த புதர்களை நோக்கி மெதுவாக நடந்தாள். நடந்தபோது அப்புறமும், இப்புறமும் பார்த்துக் கொண்டே நடந்தாள்.

புதர்களை அவள் அடைவதற்கு முன்பாகவே அவற்றின் மறைவிலிருந்து வெளிவந்துவிட்ட அந்த மனிதன் அவளைப் பார்த்தும் பார்க்காதது போல் பாலத்தை நோக்கி நடக்கலானான். அரசகுமாரியும் சிறிது தூரம் அவனை வழிமறித்து விடுவதுபோல் குறுக்கே நடந்து, பிறகு அவனைப் பின்பற்றினாள். அந்த மனிதன் எந்த வழியிலும் கண்ணைத் திருப்பாமலும், எதையும் கவனிக்காமலும் பாலத்தை நோக்கி நடந்தான்.

லாங்குனியாவின் அந்தச் சிறிய பாலம் மிகப் பழமையான தானாலும், சற்று ஆங்காங்கு உடைந்த நிலையிலும் பார்ப்பதற்கு அழகாகவும் உறுதியாகவும் இருந்தது. லாங்குனியா அந்த இடத்தில் சிறிது வளைந்து பாலத்திற்கு அடியில் நுழைந்து மீண்டும் கிழக்கை நோக்கித் திரும்பி ஓடிக்கொண்டிருந்தது. அதை அடுத்து விஜயன் படுத்திருந்த பகுதியிலேயே போடப்பட்டிருந்த பாதை சீரழிந்த நிலையிலும் ஓரளவு நன்றாகவே இருந்தது.

பாலத்தருகில் வந்ததும், அந்த மனிதன் திரும்பிப் பார்த்து, ''அரசகுமாரி! அதோ இரண்டு புரவிகள் இருக்கின்றன. அவற்றிலொன்றில் நீங்கள் பயணம் செய்யலாம்,'' என்று சற்று எட்டச் சாலையின் பக்கத்தில் கட்டப்பட்டிருந்த இரு புரவிகளைக் காட்டினான் சிம்மபுரக் கிழக்கு வாயில் தலைவன்.

அரசகுமாரி சிறிது சிந்தித்தாள். ''அரை நாழிகைப் பயணத்தி லிருக்கும் சிம்மபுரத்துக்குப் புரவி எதற்கு?'' என்று வினவினாள்.

zeevaa

''அரசகுமாரி நான் மன்னரின் அடிமை, கேள்வி கேட்கவோ பதில் சொல்வோ எனக்கு உரிமையில்லை,'' என்று கூறிவிட்டு அரசகுமாரியைப் புரவிகளுக்கு அருகாமையில் அழைத்துச் சென்றான். அரசகுமாரி மேற்கொண்டு ஏதும் சொல்லாமல் புரவியில் ஏறிக்கொண்டாள். கிழக்கு வாயில் தலைவனும் இன்னொரு புரவியில் ஏறிக்கொண்டான். ஆனால் புரவியை நகர்த்தினா னில்லை.

அதைக் கண்ட ராஜகுமாரி, ''முன்னே செலுத்துங்கள் புரவியை. வழிகாட்டுங்கள்,'' என்று சொன்னாள்.

அந்த மனிதன் நகரவில்லை. ''அரச குலத்தாருக்கு முன்னால் புரவியை அடிமைகள் செலுத்துவது முறையல்ல. தவிர அரச குமாரிக்குத் தெரியாத வழி கலிங்கத்தில் என்ன இருக்கிறது?'' என்று மிக மரியாதையாக அவன் பேசினாலும் அதில் ஏதோ சூது இருப்பதை திரிலோகசுந்தரி புரிந்து கொண்டாளாதலால் அவளும் புரவியை நகர்த்தவில்லை.

''நீ முன்னே செல். இது என் கட்டளை,'' என்றாள் அரசகுமாரி.

அந்த மனிதன் புரவியிலிருந்தபடி தலை வணங்கினான். ''சம்பிரதாயத்துக்கு விரோதமாகக் கட்டளைகளை ஏற்பதும் ராஜத் துரோகம்,'' என்று சுட்டிக்காட்டினான் வணங்கிய நிலையிலேயே.

அதற்குமேல் அரசகுமாரி தர்க்கத்தில் இறங்காமல், ''கிழக்கு வாயில் தலைவரே! இந்த மாதிரிக் கடமை உணர்ச்சியும் ராஜபக்தியும் எல்லோருக்கும் இருக்குமானால் இன்று கலிங்கம் இருக்கக்கூடிய நிலையே வேறு. இப்பொழுது நான் தொடங்கி யிருக்கும் பணி நிறைவேறட்டும். உமக்குத் தகுந்த பரிசு அளிக்கிறேன். உம்மை சிம்மபுரத்தலைவனாகவே நியமிக்கும்படி தந்தையிடம் சொல்கிறேன்,'' என்று கூறிவிட்டுத் தனது புரவியை நகர்த்தினாள். அத்துடன் முதல் நாள் அருவிக்கரையிலிருந்து எடுத்துச் சூடிய மலர்க்கொத்தையும் கையில் எடுத்துக் கொண்டாள். புரவியை மிக மெதுவாக நடத்தவும் செய்தாள்.

zeevaa

அந்த மெதுவினால் கிழக்கு வாசல் தலைவன் சிறிது சினத்தின் வசப்பட்டாலும் அதை வெளிக்குக் காட்டாமல் ''அரசகுமாரி! இப்படிப் பயணம் செய்தால் கிழக்கு வாசல் முகப்பு சத்திரத்தை நாளைக்காலையில்கூட அடைய முடியாது.'' என்று சொல்லிக் கொண்டே தனது புரவியைச் சிறிது துரிதப்படுத்தி அரசகுமாரியின் அருகில் நெருங்கினான்.

அவன் நெருங்கியதைப் பார்த்ததும் புன்முறுவல் கொண்ட அரசகுமாரி, ''கிழக்கு வாசல் தலைவரே! அவசியமானால் சற்றுமுன்பு நீர் கூறிய அரசு முறைகளைக் காற்றில் பறக்கவிடுவீர்கள் போலிருக்கிறது?'' என்று வினவினாள்.

''ஆபத்துக்கு பாவமில்லை அரசகுமாரி. உங்களைக் காப்பாற்ற எல்லா முறைகளையும் கைவிடுவேன்,'' என்றான் கிழக்கு வாசல் தலைவன்.

''அப்படியானால் எனக்கு ஆபத்து காத்திருக்கிறதா?'' என்று வினவிய அரசகுமாரி கையிலிருந்த புஷ்பங்களை விஷமம் செய்து பிய்த்துக் கொண்டிருந்தாள்.

''ஆம். அரசகுமாரி,'' என்று சற்றுக் குளறினான் கிழக்கு வாசல் தலைவன்.

''நல்லது நல்லது.'' என்ற அரசகுமாரி என்ன செய்யப் போகிறாள் என்பதை அவன் உணருமுன்பு புரவியின் முதுகுச் சேணத்தில் செருகியிருந்த புரவிச் சவுக்கை எடுத்து அருகிலிருந்த அவனின் புரவியைச் சுரீலென்று அடித்துவிடவே அவன் புரவி ஒரே தாவாகத் தாவிச் சீறி அசுரவேகத்தில் பறந்தது சிம்புரச் சாலையில். அரசகுமாரியும் அவனை வேகமாகவே தொடர்ந்தாளானாலும் தொடர்ந்த வேகத்திலேயே கையிலிருந்த புஷ்பங்களின் இதழ்களைத் தூவிச் சென்றாள்.

எதிர்பாராதவிதமாகப் புரவிச் சவுக்கால் அரசகுமாரி அடித்ததால் தனது புரவியை அடக்க முயன்றும் முடியாததால் திணறிய சிம்மபுர

கிழக்கு வாசல் காவலனை நோக்கிப் பெரிதாக நகைத்தாள் அரசகுமாரி. அடுத்த இரண்டே நாழிகைகளில் சிம்மபுரக் கிழக்கு வாசலின் முகப்புச் சத்திரத்தை அடைந்துவிட்ட அந்த வீரன் தனது புரவியிலிருந்து துரிதமாக இறங்கி அடுத்து வந்த அரசகுமாரியின் புரவியின் கடிவாளத்தையும் பிடித்துப் புரவியை நிறுத்தி, ''அரசகுமாரி! இறங்குங்கள்,'' என்றான். அவன் குரலில் பணிவு லவலேசமும் இல்லை. அதிகாரத்தின் ஒலி பலமாயிருந்தது.

அதைக் கவனிக்கவே செய்தாலும் கவனிக்காததைப் போலவே பாசாங்கு செய்த அரசகுமாரி, ''கிழக்கு வாசல் தலைவரே! நாம் எதற்காக இந்தச் சத்திரத்தில் தங்க வேண்டும்? நகரத்துக்குள் நமது அரசாங்கச் சத்திரமே இருக்கிறதே,'' என்றாள். புரவியிலிருந்தும் இறங்க முயலவில்லை அவள்.

''தங்கள் வரவு தெரியாததால் அதைச் சித்தப்படுத்தவில்லை. இங்கு தங்களுக்குச் சகல வசதிகளும் இருக்கின்றன. நீங்கள் வருவதையொட்டி ஏற்பாடுகளை நானே செய்திருக்கிறேன்,'' என்றான் கிழக்கு வாயில் தலைவன்.

''மிகவும் மகிழ்ச்சி,'' என்று சொல்லிக்கொண்டே மெள்ளப் புரவியிலிருந்து கீழே குதித்த அரசகுமாரி தனது சேலையைச் சரிசெய்து கொள்வதுபோல் அசைந்து அதிலிருந்த மெல்லிய குறுவாளை எடுத்துக்கொண்டு வலப்பக்கத்தில் கீழே தொங்கிய மேலாடையின் மறைவில் வலது கையில் பிடித்துக்கொண்டு, ''சரி வீரரே, செல்லுங்கள். நான் பின்னால் வருகிறேன். நீர் எனக்காகச் செய்திருக்கும் ஏற்பாடுகளைப் பார்ப்போம்,'' என்றாள்.

''பார்த்தால் நீங்களே பிரமிப்பீர்கள் அரசகுமாரி,'' என்று கூறிய கிழக்கு வாசல் தலைவன் அந்தச் சத்திரத்துத் தாழ்வறையில் ஏறி அதன் நுழைவு வாயில் கதவைத் தட்டக் கையை மேலே தூக்கினான். அவன் காதுக்கு வெகு அருகில் ஒலித்தது அரசகுமாரியின் குரல், ''டேய் துரோகி! எனது குறுவாள் உனது முதுகுக்கு அருகில் இருக்கிறது. மனிதனுடைய சுவாசப் பைகளும் மனிதனுடைய

zeevaa

முதுகுப் புறத்தில்தான் இருப்பதாக ஆயுர்வேதம் கூறுகிறது. என் குறுவாள் அழுந்தியுள்ள இடத்திலும் ஒரு சுவாசப்பை இருக்கிறது,'' என்று. இதை அரசகுமாரி சொன்ன அதே சமயத்தில் அவள் கையிலிருந்த மிக மென்மையான குறுவாளின் நுனியும் அவன் முதுகுச் சருமத்தை லேசாகத் தடவலாயிற்று.

சில வினாடிகள் நின்ற இடத்தில் விறைத்தபடி நின்றான் கிழக்கு வாசல் தலைவன். பிறகு மெதுவாகத் தனது கையால் இருமுறை தட்டினான், வாசல் தகவு மெதுவாகத் திறக்கப்பட்டதும், ''அட முட்டாள்! எதற்காக இருமுறை தட்டினாய்? மூன்றுமுறை தட்டச்சொல்லி உனக்கு உத்தரவிடவில்லை?'' என்று வினவினான் கதவைத் திறந்தவன்.

''ஆம், ஆம், மறந்துவிட்டேன்,'' என்றான் கிழக்கு வாசல் தலைவன்.

''உன் மறதியால் பலர் உயிர்கள் போய்விடும். நல்லவேளை வேறு யாரும் கதவைத் திறக்காமல் நான் திறந்தேன்,'' என்ற அந்த மனிதன், ''அரசகுமாரி எங்கே?'' என்று இன்னொரு கேள்வியையும் கேட்டான்.

''பின்னாலிருக்கிறார்கள்,'' மிகுந்த அச்சத்தால் மென்று விழுங்கினான் கிழக்கு வாசல் தலைவன்.

''அரசகுமாரி பின்னால் நிற்பானேன்? முன்னே அனுப்பு அவர்களை,'' என்றான் கதவைத் திறந்தவன்.

''வர மறுக்கிறார்கள்!'' என்று ஏதோ சொல்ல வேண்டு மென்பதற்காகச் சொன்னான் கிழக்கு வாசல் தலைவன்.

''சரி சரி. பின்னாலேயே வரட்டும். அரசகுமாரியின் இஷ்டத்திற்கு விரோதமாக அடிமைகள் நடக்கக்கூடாது,'' என்று தனக்கு நகைச்சுவையும் வரும் என்பதைக் காட்டிய கதவைத் திறந்தவன், ''வாரும் தலைவரே! வாருங்கள் அரசகுமாரி,'' என்று கூறினான்.

zeevaa

இருவரும் உள்ளே நுழைந்ததும் அரசகுமாரி சரேலெனக் கிழக்கு வாசல் தலைவனைக் கதவைத் திறந்த சத்திரத்தான்மீது தள்ளிவிட்டதன்றி, உள்ளே பிறையில் எரிந்து கொண்டிருந்த தீபத்தையும் ஊதி அணைத்து விட்டதால் எங்கும் இருள் சூழ்ந்துகொள்ளவே வாயிற்கதவை அடுத்த இடைவழியில் பெருத்த குழப்பமும் சத்தமும் ஏற்பட்டன. கிழக்கு வாசல் தலைவன் தன்மீது விழுந்ததால், "அட மடையா! முட்டாள்! உனக்கு இன்னும் சற்று நேரத்தில் சரியான பாடத்தை நமது தலைவரே கற்பிப்பார்," என்று கூவியதன்றி கிழக்கு வாசல் தலைவனைப் பிடித்துத் தரையில் மோதக் கதவைத்திறந்தவன் முயற்சிக்க, தலைவனும் சினத்தின் வசப்பட்டு, "உன்னை எமனுலகுக்கு அனுப்பி விடுகிறேன் பார்" என்று வேகமாகப் புரண்ட சத்திரக்காரனிடமிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு அவன்மீது ஏறி உட்கார்ந்து குரல்வளையைப் பிடிக்கலானான். அதனால் அவன் அலற, அவர்கள் பரஸ்பர சண்டையால் ஏற்பட்ட குழப்பத்தில் அரசகுமாரி மீண்டும் வெளியேற முயன்று கதவைத் திறக்கப் போனாள். திடீரென இரண்டு மூன்று தீபங்கள் உள்ளேயிருந்து இடைவழியில் வீசின. ஈட்டி தாங்கிய இரண்டு வீரர்கள் அந்த வெளிச்சத்தில் காட்சியளித்தார்கள். "எழுந்திருங்கள்," என்று சண்டையிட்டுத் தரையில் கிடந்தவர்களை நோக்கிக் கூறிய அந்த இரு வீரர்களில் ஒருவன், அம்மணி! நீங்கள் வாருங்கள். உங்களை வரவேற்கத் தலைவர் காத்திருக்கிறார்," என்றான்.

ஏதும்பேசாமல் அவனைத் தொடர்ந்து சென்ற அரசகுமாரி சத்திரத்தின் பெரிய ஒரு அறைக்குள் அனுப்பப்பட்டாள். அந்த அறையின் நடுவில் பஞ்சணையில் உட்கார்ந்திருந்த ஆதிமால்யன், "வரவேண்டும் அரசகுமாரி! நீங்கள் நான் சொல்கிறபடி நடக்கிறவரையில் உங்களுக்கு எந்த ஆபத்துமில்லை," என்றான். அதைச் சொன்ன அவன் குரூரப் புன்முறுவல் கொண்டதால் அவன் பயங்கர மீசையும் திகிலூட்டும் வண்ணம் அசைந்தது.

zeevaa

''என்னிடம் என்ன எதிர்பார்க்கிறாய்?'' என்று வினவினாள் அரசகுமாரி அதிகாரத் தோரணையில்.

ஆதிமால்யன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை, ''இப்படி அமருங்கள் இந்தப் பஞ்சணையில், பஞ்சவர்ணக் கிளிக்கு ஏற்ற பஞ்சணை,'' என்று கூறி அந்தப் பஞ்சணையிலிருந்து எழுந்து சற்று விலகி நின்றான்.

''பஞ்சணை தேவையில்லை. விஷயத்தைச் சொல்,'' என்று அதிகாரத்துடன் பேசினாள் அரசகுமாரி.

''அரசகுமாரி! என் கோரிக்கையைச் சொல்கிறேன். பதட்டப்படாமல் கேளுங்கள்,'' என்ற ஆதிமால்யன் தனது கோரிக்கையை நிதானமாகவும் மிகுந்த மரியாதை தொனித்த சொற்களிலும் வெளியிட்டான். அதைக்கேட்ட அரசகுமாரி உள்ளூர நடுங்கினாள். அந்த கோரிக்கையைத் தான் நிறைவேற்றுவதும் விஜயனை அழிப்பதும் ஒன்றுதான் என்பதைப் புரிந்து கொண்டாள்.



zeevaa

## 33. பூ, பஞ்சணை, லிங்கம்

சோழர்கள் ஒற்றனும் விஜயனின் பரம வைரியுமான ஆதிமால்யன், சிவகோகர்ண ஸ்வாமியால் விரட்டப்பட்ட பிறகு அந்தப் பிராந்தியத்தில் தலைகாட்ட மாட்டானென்று எண்ணியிருந்த திரிலோகசுந்தரிக்கு, அவன் திரும்பவும் கலிங்கத்தில் நடமாடியதன்றி, தன்னைச் சிறைப்படுத்தும் துணிவையும் அடைந்திருந்ததைப் பற்றி எண்ணி அதன் விளைவாக வியப்பு மிஞ்சியிருந்ததென்றால், அவன் வெளியிட்ட கோரிக்கை வியப்பின் எல்லையையும் தாண்டி, பேரதிர்ச்சியைத் தந்தது கலிங்க மன்னன் மகளுக்கு. அதனால் ஏற்பட்ட உணர்ச்சிகளால் அவள் ஆதிமால்யன் காட்டிய பஞ்சணையில் உட்காரவுமில்லை, உடனடியாகப் பதில் சொல்லவுமில்லை. மௌனமாகவே நின்றிருந்தாள் நீண்ட நேரம்.

ஆதிமால்யன் அரசகுமாரியின் அதிர்ச்சியையும் கவனித்தான், அதனால் விளைந்த அவள் மௌன நிலையையும் கவனித்தான். ஆகவே சொன்னான்: "அரசகுமாரி! மௌனம் எதையும் சாதிக்காது நீங்கள் என் கோரிக்கைக்கு இணங்குவதைத் தவிர வேறு வழியில்லை. நீங்கள் செய்யும் இந்தச் சிறு உதவி உங்களையும் காப்பாற்றும், சிங்களத்துக் கிட்டியையும் காப்பாற்றும்."

சிங்கள மன்னனான விஜயபாகுவின் பழையபெயரான 'கிட்டி' என்பதை அலட்சியமாகச் சொல்லி விஜயன் தனக்கு ஒரு பொருட்டல்ல என்பதை ஆதிமால்யன் பேசியதாலும், விஜயன் பிழைக்க அவனது கோரிக்கைக்கு இணங்குவதே வழியென்பதை அவன் சுட்டிக் காட்டியதாலும், கலிங்க ராஜகுமாரி சிறிது சினமுற்றாலும் அதை வெளிக்குக் காட்டிக் கொண்டாளில்லை.

zeevaa

மெள்ள நடந்து இரண்டடி தூரத்திலிருந்த பஞ்சணையில் உட்கார்ந்து ஆதிமால்யனை ஏறெடுத்து நோக்கி, ''ஆதிமல்லா! உன்கோரிக்கை என்ன? திரும்பவும் சொல்,'' என்று கேட்டாள்.

ஆதிமல்லன் என்ற ஆதிமால்யனின் முரட்டுக் கட்டு மீசை மெல்ல அசைந்தது. அவன் கடின இதழ்களில் கடுமைப் புன்முறுவலொன்றும் தோன்றியது. அத்துடன் பேசத் துவங்கி, ''கலிங்க மன்னன் மகளே! நீங்கள் இப்படி மீண்டும் மீண்டும் கேள்வியைக் கேட்பதாலோ. நேரத்தைக் கடத்துவதாலோ நடக்கக் கூடிய வேலை ஏதுமில்லை. உங்களை இங்கு வரவழைத்த அதே நேரத்தில் விஜயனையும் அவன் தம்பியையும் கவனிக்கவும் ஆட்களை அனுப்பியிருக்கிறேன்,'' என்று பேசியவன் திடீரென்று அரசகுமாரியின் வதனத்தில் தோன்றிய திகிலைக் கண்டு மெல்ல நகைத்தான். ''அரசகுமாரி, அஞ்ச வேண்டாம். உங்கள் காதலனுக்கும் அவன் தம்பிக்கும் எந்தவிதத் தீங்கும் நேரிடக் கூடாதென்று என் வீரர்களுக்குத் திட்டமான உத்தரவு பிறப்பித்திருக்கிறேன்'' என்றும் சொன்னான் நகைப்பு குரலிலும் பிரதிபலிக்க.

விரோதி முன்பு அச்சத்தைக் காட்டியதற்காக உள்ளூர வருந்திய அரசகுமாரி நொடி நேரத்தில் சுயநிலையை அடைந்து, ''ஆதிமல்லா! நீ எந்தப் பஞ்சமாபாதகத்துக்கும் அஞ்ச மாட்டாய் என்பது எனக்குத் தெரியும். தவிர, சிங்கள இளவலும் கொஞ்சத்தில் உங்களிடம் சிக்க மாட்டாரென்பதும் எனக்குத் தெரியும். ஆகவே அதைப் பற்றி இப்பொழுது பேச வேண்டாம். உன் கோரிக்கை அநீதியானது. இந்தக் கலிங்க நாடு, சிங்களம் இரண்டுக்கும் பாதகம் விளைவிக்க வல்லது. அதற்கு நான் ஒப்புவேனென்றும் நீ நினைத்தது விசித்திரம்,'' என்றாள்.

ஆதிமால்யன் சற்றுத் திரும்பி, கலிங்க ராஜகுமாரியை நோக்கிக் கொண்டு நின்றான். அவன் உள்ளத்தில் சினம் கொந்தளித்ததால் அவன் ராட்சஸ விழிகளிலும் அது ஒளி வீசியது பயங்கரமாக.

zeevaa

உள்ளெழுந்த கோபாக்கினியை அடக்கிக் கொண்டு, "அரசகுமாரி. நீங்கள் செய்யத்தகாத எதையும் நான் கேட்கவுமில்லை; சிங்கள மன்னனை எந்தச் சிம்மபுர அரண்மனைக்கு அழைத்துச் செல்ல நீங்கள் சிவகோகர்ண ஸ்வாமியிடம் ஒப்புக் கொண்டீர்களோ அதே சிம்மபுர அரண்மனைக்கு என்னை அழைத்துக் கொண்டு போகும்படி கேட்கிறேன். நானும் சிங்களத்தவன். ஒரு சிங்களத்தானுக்குச் சிம்மபுர அரண்மனை ரகசியம் தெரியலா மென்றால் இன்னொரு சிங்களத்தானுக்கு ஏன் தெரியக் கூடாது. உங்கள் நாட்டு இரகசியம் விஜயனால் இன்னொரு நாட்டுக்குப் போகலாமென்றால், அது என்னால் போனால் என்ன?" என்று வினவியதுடன் நில்லாமல், "அரசகுமாரி! உங்கள் பதில் என்ன? விஜயன் போக வேண்டிய இடத்துக்கு அவனுக்குப் பதில் என்னை அழைத்துச் செல்ல ஒப்புகிறீர்களா இல்லையா? விஜயன் விதி, உங்கள் விதி, கலிங்கத்தின் தலைவிதி எல்லாம் உங்கள் பதிலைப் பொறுத்திருக்கிறது," என்று சிறிது உக்கிரம் ஒலித்த குரலிலும் வினவினான் ஆதிமால்யன்.

பஞ்சணையில் உட்கார்ந்திருந்த பைங்கிளியின் முகத்திலும் சிறிது சினம் துளிர்த்தது. "சிங்கள மன்னர் உன்னைத் தூரத்தி வரமாட்டார் என்ற துணிவில் பேசுகிறாய் ஆதிமல்லா," என்றாள். அவனை ஏறெடுத்துச் சுட்டு விடுவது போல் பார்க்கவும் செய்தாள்.

ஆதிமால்யன் முகத்தில் போலித் துயரத்தைப் பரவ விட்டுக் கொண்டு, "அரசகுமாரி! முன்பே சொன்னேன், சிங்கள சகோதரர்களைக் கவனிக்க எனது ஆட்கள் போயிருக்கிறார்கள் என்று. தவிர, நீங்கள் வந்திருக்கும் இடமும் விஜயனுக்குத் தெரியாது. பாவம்! என் ஆட்களிடமிருந்து ஒருவேளை தப்பினால் உங்களைத் தேடி வேறு இடத்துக்குப் போவான். அதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறேன். இப்படியே இரவு முழுவதும் பேசிக் கொண்டே காலத்தைக் கடத்துவது உங்களுக்கும் உசிதமல்ல எனக்கும் பயனில்லை. உடனடியாக வருகிறீர்களா என்னைச் சிம்மபுர

zeevaa

அரண்மனைக்கு அழைத்துச் செல்ல, இல்லையா,'' என்று திட்டமாகக் கேட்கவும் செய்தான்.

அரசகுமாரி மீண்டும் தலை நிமிர்ந்து, ''சிம்மபுர அரண் மனைக்கா!'' என்று வியப்புடன் வினவினாள்.

''ஆம்.'' ஆதிமல்லன் குரலில் வெறுப்பு இருந்தது. மீண்டும் அவள் வார்த்தையை வளர்த்துகிறாள் என்ற நினைப்பால்.

அரசகுமாரி அவன் முகத்தில் விளைந்த வெறுப்பைக் கவனிக்கவே செய்தாலும் கவனிக்காதது போலவே, ''சிம்மபுரத் துக்குச் சென்று அரண்மனை எங்கிருக்கிறது என்று கேட்டால் யாரும் சொல்வார்களே. இதற்காக என்னை ஏன் இங்கு கொண்டு வந்தாய்?'' என்று வினவினாள்.

ஆதிமல்லன் முகம் கடுகடுத்தது. தடித்த உதடுகள் சிறிது தடம் மாறியதால் மிக விகார நிலையை அடைந்தன. அதுவரை கடைப்பிடித்த மரியாதையைக் கைவிட்ட ஆதிமல்லன், ''பெண்ணே! உன் சாமர்த்தியத்தை என்னிடம் காட்டாதே, அரண்மனைக்கு வழி கேட்கவில்லை உன்னை. அதற்குள் அழைத்துச் செல்ல உன்னை வரவழைத்தேன். அதுவும்...'' என்றான் சற்று நிறுத்தி.

''அதுவும்?'' அரசகுமாரி கேட்டாள் அச்சத்துடன்.

''கண்ணாடி அறைக்குள் அழைத்துச் செல்ல வேண்டும்,'' என்று ஆதிமல்லன் கண்கள் அவளை உற்று நோக்கின.

திக்பிரமையடைந்தாள் அரசகுமாரி. ''என்ன கண்ணாடி அறைக்குள்ளா?'' என்றும் வினவினாள்.

''ஆம்.''

''அது அத்தனை எளிதல்ல''

''தெரியும் எனக்கு. அதனால் தான் உன்னைக் கொணர்ந்தேன்.''

''நான் உன்னை அழைத்துச் செல்ல மறுத்தால்?''

zeevaa

''விளைவு விபரீதமாயிருக்கும்.''

''என்ன செய்வாய்? என்னைக் கொன்று விடுவாயா?''

''மாட்டேன்.''

''வேறு என்ன செய்வாய்?''

ஆதிமல்லன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. சிறிது சிந்தித்தான். அவள் முன்பு அப்படியும் இப்படியும் நடந்தான் இருமுறை. ''அரசகுமாரி, பெண்கள் உயிர் போவதற்கு அஞ்ச வேண்டியதில்லை. உயிரைவிட மேன்மையானதும், இழக்க முடியாததுமான ஒன்று அவர்களிடம் இருக்கிறது...'' என்று மெள்ளச் சுட்டிக் காட்டினான் ஆதிமல்லன்.

அவன் சொன்னது அரசகுமாரிக்கு நன்றாகப் புரிந்து விட்டதால் அவள் உள்ளூர நடுங்கினாள். ''அத்தனை கயவனா நீ?'' என்று அச்சத்தை மறைத்துச் சினத்தைக் காட்டிக் கேட்கவும் செய்தாள்.

ஆதிமல்லன் முகத்தில் வெற்றியின் அறிகுறி தெரிந்தது. அரசகுமாரி மெள்ள அவள் உறுதியிலிருந்து நழுவுவதை உணர்ந்ததால் உள்ளூர உவகை கொண்டாலும் அதை வெளிக்குக் காட்டவில்லை அவன். ''சரி அரசகுமாரி! இன்னும் இரண்டே நாழிகைகளில் நாம் கிளம்புகிறோம் அதுவரை இந்தப் பஞ்சணையின் பஞ்சவர்ணக்கிளியாகச் சிறகு விரித்துப் படுக்கலாம். உன்னை யாரும் தொந்தரவு செய்ய மாட்டார்கள்,'' என்று கூறி வெளியேறினான் ஆதிமல்லன்.

அவன் சென்றதும் கதவைச் சாத்தித் தாளிட்ட அரசகுமாரி பஞ்சணையில் தொப்பென விழுந்தாள். மனம் தத்தளித்த நிலையில் பஞ்சணையும் முள்ளணையாகும் என்பதைப் படுத்த சில விநாடிகளில் புரிந்து கொண்ட அரசகுமாரி மீண்டும் எழுந்து உட்கார்ந்து முகத்தை இருகைகளிலும் புதைத்துக் கொண்டாள். இப்படி ஒரு நாழிகை ஓடியது. தான் லாங்குனியாவின்

zeevaa

பாலத்திலிருந்து புறப்பட்டு ஒரு ஜாமம் ஆகிவிட்டதைப் புரிந்து கொண்டதால், விஜயன் என்ன ஆனானோ என்று நினைத்து ஏங்கினாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அந்த அறைக் கதவு தட்டப்பட்டது. ''யாரது?'' என்று கேட்டாள் அரசகுமாரி.

''தங்களை யாரோ பார்க்க வேண்டுமாம்,'' என்றான் கதவைத் தட்டிய வீரனொருவன்.

''ஆதிமல்லனைப் பார்க்கச் சொல்,'' என்றாள் அரசகுமாரி.

''அவர் அனுமதி பெற்றுத்தான் வந்திருக்கிறார்,'' என்றான் வீரன்,

''பெயர் என்ன''

''சொல்ல முடியவில்லை.''

''ஏன்?''

''மௌன விரதமாயிருக்கலாம்.''

''என்ன உளறுகிறாய்?''

''உளறவில்லை. வந்திருக்கும் துறவி பேச மறுக்கிறார்.''

அரசகுமாரி மேற்கொண்டு ஏதும் பேசாமல் கதவைத் திறந்தாள். காவலனுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த ஒரு கிழத் துறவி கண்களை அவள் மீது ஓடவிட்டு, தோளில் மாட்டியிருந்த தனது நீண்ட காவிப் பையிலிருந்து லிங்கம் போலிருந்த ஒரு கூழாங்கல்லை எடுத்து அரசகுமாரி கைகளை நீட்டச் சைகை செய்தார். நீட்டிய அவள் கைகளில் உதிரிப் பூக்களை நிரம்பப் போட்டு, பூசை செய்யும்படி சைகை காட்டினான். லிங்கத்துக்குக் கட்ட ஒரு பட்டுத் துணியையும் லிங்கத்தின் பக்கத்தில் வைத்துவிட்டுச் சென்றார். அறைக் கதவு மூடப்பட்டது.

அறைக்குள்ளே அரசகுமாரியின் மன நிலை சொல்லத் தகாததாயிருந்தது. அவள் கையிலிருந்த உதிரிப்பூக்கள் சொன்ன

zeevaa

கதை நம்பத்தகாததாய் இருந்தது. கீழேயிருந்த லிங்கக் கூழாங்கல்லால் அறை ஒளியில் பளபளத்தது. அது ஸ்படிக லிங்கம் என்பதை உணர்ந்த அரசகுமாரி வேறு உலகத்துக்குப் போய்க் கொண்டிருந்தாள். அவள் தலை சுழன்றது. பஞ்சணையை நோக்கி நகர்ந்து அதில் விழுந்தாள்.



# 34. வீர சாமியார்

ஆதிமால்யன் அனுமதி பெற்று, அர்த்த ராத்திரி தாண்டிவிட்ட அந்த நேரத்தில் தானிருந்த தனி அறைக்குள் ஒரு துறவி வந்ததே அரசகுமாரிக்கு வியப்பாயிருந்த தென்றால், அந்தக் கிழ சன்னியாசி தனது கை நிரம்ப உதிரிப்பூக்களை கொடுத்ததும் அவள் ஆச்சரியத்தின் எல்லையையும் தாண்டி பிரமை பிடித்துத் திரும்பத் திரும்ப அந்த உதிரி மலர்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். துறவி கொடுத்த லிங்கமும் பேரொளியுடன் விளங்கினாலும், உதிரிப்பூக்களிடம் செலுத்திய அக்கறையை அவள் லிங்கத்திடமோ அதற்குக் கட்ட வேண்டிய பட்டுத் துணியிடமோ செலுத்தவில்லை. கையிலிருந்த புஷ்பங்கள் அத்தனை விசித்திரக் கதையைச் சொல்லி அவளை மயக்கின.

துறவி கையில் கொடுத்த உதிரிப் புஷ்பங்கள் ஏற்கனவே தலையிலிருந்த புஷ்பச்சரத்திலிருந்து தன்னால் பிய்த்து உதிர்க்கப்பட்டவை என்பதை அவள் சந்தேகமறப் புரிந்து கொண்டாள். ஆதிமால்யன் வீரன் தன்னைச் சிறை செய்து கொண்டு வந்தபோது தனது போகுமிடத்தை விஜயனுக்கு உணர்த்தவே அவள் தலையில் சூடிய புஷ்பங்களைப் பிய்த்துப் பிய்த்து வழிநெடுகப் போட்டு வந்தாள். அந்தப் புஷ்பங்களை பொறுக்கி, தானிருக்கும் இடத்தையும் கண்டறிந்த துறவி ஒருவேளை விஜயனாயிருக்குமோ என்று யோசித்த அரசகுமாரி, ''இருக்காது ஒருக்காலும் இருக்க முடியாது. என்னதான் வேஷம் போட்டாலும் அவர் வதன கம்பீரத்தையும் கண்களின் கூர்மையையும் மறைக்க முடியாது'' என்று திடமாக நம்பிய திரிலோக சுந்தரி அந்தச் சன்னியாசி யாராயிருக்கும் என்ற சிந்தனையில் இறங்கினாள். ஒரு வேளை

zeevaa

ஆதிமால்யனே தனது சூழ்ச்சியைக் கண்டுபிடித்திருப்பானோ என்று ஒரு கணம் எண்ணிப் பார்த்த கலிங்க ராஜகுமாரி, அப்படி இருக்க முடியாது என்ற முடிவுக்கே வந்தாள். 'அப்படியானால் இந்த சன்னியாசி யார்? அவன் எப்படி எதற்காக இங்கு வந்தான்? ஒரு வேளை சிவகோகர்ண ஸ்வாமியின் சீடர்களில் ஒருவனாயிருப் பானோ?' என்றெல்லாம் நினைத்துப் பார்த்து எந்த முடிவுக்கும் வரமுடியாமல் குழம்பினாள்.

கடைசியில் எது எப்படியானாலும் ஆகட்டும் என்று தீர்மானித்து, கீழிருந்த ஸ்படிக லிங்கத்தை எடுத்து அதன் பக்கத்திலிருந்த சிறு பட்டையும் எடுத்து லிங்கத்தைச் சுற்றிக் கட்ட முற்பட்டாள். அந்த அறை மூலையிலிருந்த ஒரு சாளரத்தின் கீழ் லிங்கத்தை வைத்து, பட்டை அதைச்சுற்றிக் கட்டினாள். கட்டி, தூரத்தில் வந்து அந்த லிங்கத்தை உற்று நோக்கினாள். நோக்கியவள் தனது பார்வையை வேறு இடத்துக்கு அகற்றவே இல்லை.

அறை விளக்கில் பிரதிபலித்த அந்த ஸ்படிக லிங்கத்தின் ஒளியில் சின்னஞ்சிறு எழுத்துக்கள் பட்டில் வரிசையாகத் தெரிந்தன. 'கண்ணாடிக்குக் கண்ணாடிதான் சாவி. அஞ்சாதே. நான் உன்னைவிட்டு அகல மாட்டேன்' என்ற வரிகள் பளீரெனத் தெரிந்தன. அதைப் பன்முறை படித்த அரசகுமாரி லிங்கத்தை நிர்வாணமாக்கி, பட்டுத் துணியை எடுத்துத் தனது இடையில் செருகிக் கொண்டாள். பிறகு மலர்களைப் பஞ்சணையில் தூவி அவற்றின்மீது படுத்துக் கொண்டாள். பஞ்சணையின் மென்மையோ மலர்களின் மிருதுத்தன்மையோ அவள் உடலுக்கும் இன்பமளிக்கவில்லை. உள்ளத்துக்கும் சாந்தியளிக்கவில்லை.

ஆதிமால்யன் வெகு சீக்கிரம் புறப்பட்டு வந்து விடுவானென்ற எண்ணத்தால் அவள் விழித்தவண்ணமே படுத்துக் கிடந்தாள். மற்ற சகலத்தையும் மறந்தாலும், அந்தச் சன்னியாசி யார் என்று மட்டும் திரும்பத் திரும்ப யோசித்தாள். திடீரென வந்த சன்னியாசியை ஆதிமால்யன் எப்படி நம்பினான் என்பதும் விசித்திரமாயிருந்தது

zeevaa

அவளுக்கு. ஒருவேளை வந்தவன் ஆதிமால்யனுக்கு வேண்டிய ராவண சன்னியாசியாயிருப்பானோ என்ற எண்ணமும் அவள் உள்ளத்தில் எழுந்தது. எது எப்படியிருந்தாலும் சிம்மபுரத்துக்கு ஆதிமல்லனை அழைத்துச் செல்வதிலிருந்து தான் தப்ப முடியாதென்ற நினைவுக்கு வந்ததால் தனது இடையிலிருந்த மெல்லிய கத்தியைத் தடவிப் பார்த்துக்கொண்டு புறப்படச் சித்தமாக இருந்தாள்.

சரியாக இரண்டு மணிநேரம் கழித்து ஆதிமால்யன் கதவைத் தட்டினான். அரசகுமாரி நிதானமாக எழுந்து கதவைத் திறந்ததும் வியப்பு நிரம்பிய விழிகளை அவள் மீது ஓடவிட்ட ஆதிமால்யன், அரசகுமாரி பிரயாணத்துக்குச் சித்தம் போலிருக்கிறது'' என்றான் குரலிலும் வியப்பு விரிய.

''தவிர்க்கமுடியாத நிலைமை ஏற்படும்போது அதற்கு வணங்குவதுதான் அறிவுக்கு அடையாளம் என்று குருநாதர் அடிக்கடி சொல்லுவார்'' என்ற அரசகுமாரி ஸ்படிக லிங்கத்தைச் சாளரத்திலிருந்து எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டாள். பிறகு படுக்கை விரிப்பை எடுத்து, தலையை முக்காடிட்டுப் போர்த்திக் கொண்டு கிளப்பினாள்.

ஆதிமால்யன் இரண்டு வினாடிகள் ஏதும் பேசாமலும் அசையக்கூட முடியாமலும் சிலையென நின்றான். பிறகு அரசகுமாரியை நோக்கி, ''அரசகுமாரி! நாமிருவரும் நேர் எதிர்க்கட்சிகளில் இருப்பது நமது துர்ப்பாக்கியம். நீங்கள் மட்டும் விஜயபாகுவிடம் மனத்தைப் பறிகொடுத்திருக்காவிட்டால் உங்களைச் சிங்களத்தின் தனிப்பெரும் ராணியாக நானே முடிசூட்டி யிருப்பேன். உங்கள் அரியணைக்குப் பக்கத்தில் நின்று உங்கள் அரசைக் காத்திருப்பேன். ஆனால் அதற்கு இடமில்லை'' என்று கூறிப் பெருமூச்சு விட்டான். பிறகு அந்தப் பேச்சுக்கு ஒரு முடிவு கட்டி, ''சரி வாருங்கள். புறப்படுவோம்'' என்று கூறிவிட்டு அந்த அறையைவிட்டு அகன்றான்.

zeevaa

அரசகுமாரி தனது இடையிலிருந்த சிவலிங்கப்பட்டை எடுத்து, தனது மார்புக் கச்சைக்குள் மறைத்துக் கொண்டாள். லிங்கத்தை மட்டும் மடியில் பத்திரப்படுத்தி, பஞ்சணையில் கிடந்த உதிரிப் புஷ்பக் கூட்டத்திலிருந்து இரண்டு செண்பகப் பூக்களையும் நாலு மல்லிகை மலர்களையும் மார்புக் கச்சையில் திணித்துக் கொண்டு அறையை விட்டுக் கிளம்பினாள்.

அவளை அழைத்துச் செல்ல வாயிலில் சித்தமாயிருந்த வாளேந்திய காவலர் இருவர் அவளுக்கு இரு புறத்திலும் சென்றனர். இப்படி காவலில் வாயிலுக்கு வந்த அரசகுமாரி தனது புரவியை மௌன சாமியார் பிடித்துக் கொண்டு நிற்பதைக் கண்டு வெகுண்டதுபோல் பாசாங்கு செய்து, ''ஆதிமல்லரே! இந்தத் துறவி எதற்குப் புரவியின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்?'' என்று வினவினாள்.

''நாங்கள் யாரும் சொல்லவில்லை. அவராகத்தான் பிடித்துக் கொண்டு நிற்கிறார்'' என்றார் ஆதிமல்லன்.

அதற்குமேல் பொறுக்காத அரசகுமாரி துறவியின் கையிலிருந்த கடிவாளத்தைப் பலவந்தமாகப் பிடுங்கினாள். ''போ, அப்புறம், வழியை மறிக்காதே'' என்று சினந்தும் கூறினாள்.

துறவி பதிலுக்கு அவளை நோக்கித் தமது ஒரு கண்ணை மூடிக்காட்டினார். அரசகுமாரி பார்த்தும் பார்க்காதது போல் நடித்து, புரவிமீது ஏறி உட்கார்ந்தாள். பிறகு ஆதிமல்லனை நோக்கி, ''சோழர்கள் நண்பரே! மூன்றாம் ஜாமம் இன்னும் முடியவில்லை. இங்கிருந்து சிம்மபுர கிழக்கு வாசல் ஒரு நாழிகைப் பயணத்திலிருக்கிறது. இவ்வளவு சீக்கிரம் போக வேண்டுமா?'' என்று கேட்டாள்.

''விடியுமுன்பு போனால்தான் நல்லது. நமது கிழக்கு வாசல் தலைவர் நம்மை உள்ளே அனுமதிப்பதற்கும். சிம்மபுர நகரில் தங்குவதற்கும் எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார்'' என்ற

zeevaa

ஆதிமல்லன், ''அவரை உங்களுக்கு எற்கனவே தெரியுமாமே'' என்றும் சொன்னான்.

''ஆம் ஆம் தெரியும். ராஜத்துரோகி. உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யும் பதிதன்'' என்று சீறினாள் அரசகுமாரி.

''உண்ட என்ற சொல் கடந்த காலம். உண்ணும் எனும் சொல் நிகழ்காலம். இப்பொழுது அவருக்கு உணவு அளிப்பது நான். ஆகவே உண்ணும் வீட்டுக்கு துரோகம் செய்ய மறுக்கிறார்'' என்று விளக்கம் சொன்ன ஆதிமால்யன், ''உம், போவோம்'' என்று சொல்லித் தனது புரவியை நகர்த்தி அரசகுமாரியின் புரவிக்கருகில் வந்தான்.

அரசகுமாரியும் புரவியில் அனாயாசமாக ஏறிக் கடிவாளத்தை இழுத்துவிட்டுப் புரவியை நடத்தினாள். அவர்கள் இருவருக்கும் பின்னால் ஆதிமால்யன் ஆட்கள் நால்வர் வந்தனர் புரவிகளில். கிழக்கு வாசல் தலைவன் மட்டும் தனது புரவியில் வேகமாக முன்னே பறந்தான்.

அவர்கள் போவதைச் சத்திரத்து வாசலில் இருளில் மறைந்து நின்றவண்ணம் பார்த்துக் கொணடிருந்த துறவியார் சட்டென்று தமது கூன் உடலை நிமிர்த்த, சத்திரத்து வாயிலிலிருந்த ஒற்றை விளக்கில் அவர் தேகம் பளபளத்தது. கண்கள் மின்னின. பிறகு சத்திரத்தின் பின் புறம் சென்று ஒரு பெரிய புரவியுடன் வந்தவர் அதன்மீது தாவி ஏறினார். ஆனால் பறக்க முயன்ற புரவியைத் தடுத்து மிக நிதானமாக நடக்கச் செய்தார். சிறிது நேரம் கழித்து எதிரே தெரிந்த சிம்ம புரத்தை நோக்கினார்.

லாங்குனீ நதிக்கரையிலிருந்த சிம்மபுரம் பெரும் மாளிகை களுடன் இரவிலும் பல விளக்குகள் எரிய, கண்ணைப் பறிக்கும் வண்ணம் ஜொலித்தது. அதன் நான்கு வாசல்களின் ஸ்தூபிகளும் அவற்றின் உச்சி விளக்குகளும் காற்றில் லேசாகச் சலித்துக் கொண்டிருந்தன. ஆங்காங்கு தெரிந்த மாளிகைச் சிகரங்களின்

zeevaa

கலையமைப்பு கலிங்கத்தின் நாகரிகத்தை உயர்த்திக் காட்டியது. விடிய ஒரு ஜாமம் முழுக்க இருந்த நேரத்திலும் நகரில் மனித நடமாட்டமும் பயணிகளின் பேச்சரவமும் பலமாகக் கேட்டன. அவற்றையெல்லாம் பார்த்து அந்த நகரத்தின் சிதைவுக்குக் காரணத்தையும், கலிங்க மன்னர்கள் அந்தப் புராதன தலைநகரை ஏன் மாற்றினார்கள் என்ற காரணத்தையும் எண்ணிப் பார்த்து, சிந்தனையில் சரித்திர நிகழ்ச்சிகள் சுழலப் பெருமூச்சு விட்டார். 'ஒரு காலத்தில் உலகை ஆட்டிய மாநகர், சிங்களத்துக்கு ஒரு சிங்கத்தைக் கொடுத்த சரித்திரச் சின்னம். இன்று இப்படி நிற்கிறது,'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டார்.

பிறகு மெதுவாகப் புரவியை நடத்திக் கிழக்கு வாசலுக்கு வந்தார். அங்கு இரு காவலர் தடுத்ததும் சினத்தின் சின்னமான சாமியார் ஒரு காவலனை அழைத்து அவன் காதில் ஏதோ ஓத அவன், ''அப்படியா? இதை ஏன் முன்னமே சொல்லவில்லை?'' என்று படபடப்புடன் பேசி, ''திறவுங்கள் கதவை. ஸ்வாமிகள் போகட்டும்,'' என்றான்.

சிம்மபுரத்தின் கிழக்கு வாசல் பெரும் கதவுகள் திறக்கவே, அதற்குள் சாமியார் நுழைந்ததும் கதவுகள் மூடப்பட்டன. கதவுக்கு அப்புறம் வாளேந்திய நான்கு வீரர்கள் துறவியை நெருங்க முற்பட்டார்கள். அவர்கள் நெருங்கும்வரை காத்திருந்த சாமியார் அவர்களில் முதலில் வந்தவன் அவரிடம் வந்து அவர்மீது கையை வைத்ததும், ''அப்பா! விட்டு விடு,'' என்று அவன்மீது சாய்ந்தார்.

அடுத்த வினாடி அந்த வீரனின் வாள் சாமியாரின் கைக்கு மாறியது. சாமியார் மிகத் துரிதமாக இறங்கினார். அவர் புரவி ஒரு சுற்றுச் சுற்ற இரு வீரர்களின் கத்திகளைத் தமது கையிலிருந்த வாளால் சுழற்றிப் பறக்க விட்டுப் புரவியை வேகமாகச் செலுத்தினார் வீர சாமியார். அதிக வீரர்கள் பின் தொடரவே, திரும்பி இரண்டொருவனைக் கத்தியால் குத்தி வீழ்த்தி விட்டுப் பக்கத்துச் சந்து ஒன்றில் நுழைந்தார். பிறகு திடீரெனப் புரவியிலிருந்து குதித்து

zeevaa

ஒரு வீட்டின் பின்புறக் கதவைத் தட்டினார். கதவு திறந்து சாமியாரை இரண்டு கைகள் பிடித்து உள்ளே இழுத்துக் கொண்டன. சாமியார் அந்த மனிதனிடமிருந்து தப்ப முயன்றார்.

''சும்மா இருங்கள். நான்தான்,'' என்ற சொற்கள் அவர் காதில் ஒலித்தன.

''அவர் எங்கே?'' என்று சாமியார் கேட்டார்.

''இதோ இருக்கிறேன்,'' என்று சொல்லிக் கொண்டு வஜ்ரஹஸ்தர் வெளியே வந்தார். வந்தவர் சாமியாரின் தாடி மீசைகளைத் தன் கைகளாலேயே மிகுந்த மரியாதையுடன் பிய்க்கலானார். பிய்த்தவர் சாமியாரின் நிஜ உருவத்தைக் கண்டு பிரமித்தார்.

தாடி மீசையிலிருந்து தோன்றியது மன்னன் எதிர் பார்த்த மனிதனல்ல.



zeevaa

# 35. மந்திர சாலை

**சி**ம்மபுரக் காவல் வீரர்களிடமிருந்து போரிட்டுத் தப்பிய வீர சாமியார் சந்தில் மறைந்து ஒரு சிறு வீட்டின் பின்புற வாயிலைத் தட்ட, அந்த வாயிற் கதவு திறக்கப் பட்டு இரண்டு கைகள் அவரை உள்ளே இழுத்துக் கொண்டதும், பிறகு வஜ்ரஹஸ்தர் வந்து கொல்லைப்புற சிறு விளக்கில் அவர் தாடி மீசைகளைக் களைந்ததும் சிறிதும் விசித்திரமாயில்லை சாமியாருக்கு. ஆனால் சாமியாரின் தாடி மீசைக்குள் ஒளிந்து கொண்டிருந்த மனிதரைக் கண்டதும் பெரும் பிரமிப்புக்குள்ளான மகாராஜா வஜ்ரஹஸ்தர் பேச நா எழாமல் அந்த *முன் விநாடி சந்நியாசியையும், அவரை முதலில் இழுத்துவிட்டு தன்னைப் போலவே பிரமித்து நிற்கும் தர்மர் ஸ்வாமிகளையும் மாறிமாறிப் பார்த்தார் சில வினாடிகள். கடைசியில் தர்மரை நோக்கி, ''ஸ்வாமி! இது நாம் முற்றும் எதிர் பாராத சந்திப்பல்லவா?'' என்று வினவினார்.

தர்மரும் பெரும் குழப்பத்திலிருக்கவே, ''ஆம் ஆம். முற்றும் எதிர்பாராத வீரனைச் சந்தித்து விட்டோம்,'' என்று சற்றுத் தடுமாற்றத்துடனேயே பேசினார்.

அதற்குமேல் தர்மரிடம் பேசாததால் கலிங்க மன்னன், ''வேங்கி நாட்டு இளவரசரே! தங்களை நாங்கள் எதிர் பார்க்கவில்லை. விஜயனைத் தான் எதிர்பார்த்தோம்,'' என்று கூறினார்.

வேங்கி நாட்டு இளவரசனும் பிற்கால சோழ சாம்ராஜ்யாதி பதியுமான அபயன் மெதுவாகப் புன்முறுவல் செய்தான். ''கலிங்க

---

★ *நாள் ஆகவில்லையாதலால் முன்னாள் என்ற பதத்துக்கு பதில் முன்விநாடி என்ற சொல் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது.*

zeevaa

மன்னரே, நாம் எதிர்பார்ப்பதுபோல் எதுவும் நடப்பதில்லை. நானும் இதில் சம்பந்தப்படுவேன் என்று எதிர்பார்க்கவில்லை. ஆனால் அரசகுமாரியை ஏமாற்றி ஒருவன் அழைத்துப் போகும்போது எந்த வீரன் அதைப் பார்த்துக் கொண்டு பேசாமல் இருக்க முடியும்?'' என்று வினவவும் செய்தான் புன்முறுவலின் ஊடே.

வஜ்ரஹஸ்தர் அதற்குமேல் சொற்களை வளர்த்த வில்லை. ''வாருங்கள், உள்ளே போவோம்,'' என்று கூறிவிட்டு அந்த வீட்டின் பின்புற உட்கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றார். அவரை முதலில் அபயனும், அபயனுக்குப் பின் தர்மர் ஸ்வாமிகளும் பின் தொடர்ந்தார்கள். உள்ளே போகப்போக அந்த வீடு மிகப் பெரிதாக விரிந்ததைக் கவனித்த அபயன் அதன் முன்புறம் சிம்மபுர ராஜவீதிகளில் ஒன்றாக இருக்க வேண்டுமென்றும், பெரு வீதியில் தொடங்கிச் சந்து வரை அது நிர்மாணிக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும் தீர்மானித்தான். அதன் காரணத்தை அவன் அறியவும் முயலவில்லை. சிம்மபுரப் பெரிய அரண்மனைகள் பலவற்றில் சாளரங்களும், ரகசிய வழிகளும் உண்டு என்பதை அவன் கேள்விப்பட்டே இருந்தான். அதை முதன் முதலில் நிர்மாணித்த சிம்மலன் என்ற அரசன் சுற்றிலுமிருந்த விரோதிகளையும் அவர்களால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களையும் சமாளிக்கப் பலவித ஏற்பாடுகளைச் செய்திருந்தானென்றும், போர்க்காலத்தில் சுரங்கத்திலேயே பாசறைகளை அமைத்துப் பல இடங்களில் வெளிப்பட்டுப் போராட ஏற்பாடு செய்திருந்தானென்றும் அவன் கேள்விப்பட்டிருந்ததால், அந்தப் பெரிய விடுதியும் அத்தகைய ரகசிய அரண்மனைகளில் ஒன்றாயிருக்க வேண்டும் என்று முடிவு செய்துகொண்ட அபயன், அந்தப் பெரு விடுதியின் அமைப்புகளை நுட்பமாகக் கண்களால் ஆராய்ந்த வண்ணமே கலிங்க மன்னனைப் பின்பற்றிச் சென்றான்.

கலிங்க மன்னன் அந்த மாளிகையின் இரண்டாவது கட்டை அடைந்ததும் அங்குள்ள அறையொன்றில் உள் நுழைந்து தானும் ஓர் ஆசனத்தில் அமர்ந்து அபயனும் தர்மரும் அமர இரு

zeevaa

ஆசனங்களைக் காட்டினார். அவர்கள் அமர்ந்ததும் எந்தப் பூர்வ பீடிகையுமில்லாமல். ''விஜயன் என்ன ஆனான்? என் குமாரத்தி எங்கே?'' என்று வினவினார் அபயனை நோக்கி.

அபயனும் காலம் தாழ்த்தாமல் உடனடியாகப் பதில் சொன்னான், ''விஜயனைப் பற்றி எனக்குத் தெரியாது. உங்கள் குமாரத்தி ஆதிமால்யனிடம் சிறைப்பட்டிருக்கிறாள். சற்றுமுன்பு ஆதிமால் யன் அரசகுமாரியுடனும் தனது வீரர்களுடனும் சிம்மபுரக் கிழக்கு வாசலில் நுழைந்தான்,'' என்று.

''யார் அனுமதித்தது அவனை?'' என்று வினவினான் மன்னன்.

''தங்கள் கிழக்கு வாசல் அதிகாரி, ஆதிமால்யன் கையாள்,'' என்றான் அபயன்.

ஏதோ புரிந்ததற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த வஜ்ரஹஸ்தர் ''இந்தப் பொய்த் தாடி மீசை உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?'' என்று வினவினார்.

''இதையும் ஸ்படிக லிங்கத்தையும், சிறு பட்டையும் அர்த்தர் ஸ்வாமிகள் கொடுத்தார் விஜயனிடம் சேர்க்கும்படி, ஆனால் அதற்கு அவகாசமில்லை. நான் இவற்றை எடுத்துக் கொண்டு வரும்போது கிழக்கு வாசல் அதிகாரியின் காவலில் அரசகுமாரி சென்று கொண்டிருந்தாள். அதைச் சிம்மபுரப் பெருஞ்சாலை பக்கத்திலிருந்த லாங்குனீயின் கரைக் காட்டிலிருந்து பார்த்தேன். ஆகவே அரசகுமாரியைப் பின் தொடர்ந்தேன், சற்றுத் தூரத்தில் புரவியைச் செலுத்திய வண்ணம். ஆகவே அரசகுமாரியும் விஜயனுக்கு வழியைத் தெரிவிக்கத் தனது தலைப் புஷ்பங்களைப் பிரித்துத் தூவிக்கொண்டு சென்றாள். நான் புரவியை விட்டிறங்கி அந்தப் புஷ்பங்களைப் பொறுக்கிக் கொண்டு நடந்தேன். கிழக்கு வாசல் முகப்புச் சத்திரத்துக்குள் அரசகுமாரியை அவர்கள் அழைத்துச் சென்றதும் நான் லாங்குனியின் கரையில் உட்கார்ந்து சாமியார் வேஷம் போட்டுக்கொண்டேன். பிறகு எனது புரவியில்

zeevaa

ஏறிக்கொண்டு அரசகுமாரி சிறையிருந்த சத்திரத்துக்குச் சென்றேன். அங்கு ஆதிமால்யனைச் சந்தித்து நான் யாரென்பதைத் தெரிவித்தேன். விஜயபாகு அரசகுமாரியை என்னிடமிருந்து பறித்து விட்டானென்றும் அவனை எப்படியாவது சிறை செய்து வேங்கி நாட்டுக்குக் கொண்டு போக அவன் துணை செய்ய வேண்டுமென்றும் கேட்டேன். முதலில் அவன் அஞ்சினான். இந்த விஷயம் சிவகோகர்ண ஸ்வாமிகளுக்குத் தெரிந்தால் பெரிய ஆபத்து என்று சொன்னான். நாம் ரகசியமாகக் காரியத்தை முடித்துவிட்டால் சிவகோகர்ண ஸ்வாமிக்கு ஏதும் தெரிய அவசியமில்லையென்றும் சொன்னேன். மெள்ள அவன் என் வலையில் விழுந்தான். அரசகுமாரியைத் தனித்துப் பார்க்கவும் அனுமதி கொடுத்தான். அரசகுமாரியிடம் நான் லிங்கத்தையும் பட்டையும், அவள் பிரித்து உதிர்த்த புஷ்பங்களையும் கொடுத்தேன். அரசகுமாரி அந்த அறையிலேயே பட்டிலிருந்த செய்தியையும் படித்திருப்பாள்,'' என்று நடந்ததையெல்லாம் விளக்கமாகச் சொன்னான் அபயன்.

அபயன் விளக்கத்தைக் கேட்ட வஜ்ரஹஸ்தரும் தர்மரும் நீண்ட நேரம் சிந்தனையிலாழ்ந்தார்கள். ''தர்மரே, அரசகுமாரி ஆதிமால்யன் சிறையிலிருக்கிறாள். விஜயன் கதி தெரியவில்லை,'' என்று கவலையுடன் சொன்னார். ''போதாக்குறைக்கு அவன் தம்பி ஜயபாகு வேறு இந்தச் சிக்கலில் சேர்ந்திருக்கிறான்,'' என்றும் பேசினார்.

தர்மரும் சிந்தனையில் இறங்கினார். பிறகு மன்னனை நோக்கித் தனது கண்களை உயர்த்தி, ''மன்னவா! இப்பொழுது விஜயன் ஆபத்திலிருந்தால் அவன்தான் அதற்குப் பொறுப்பாளி. அந்த ஜயபாகுவுக்கு நாங்கள் அளிக்க விரும்பிய தண்டனையில் அவன் குறுக்கிடாதிருந்தால் நாங்கள் அவனை கண்ணின் இமைபோல் பாதுகாத்திருப்போம். ஆனால் அவன் தன்னைக் கொல்ல வந்த தம்பியைத் தப்புவிக்கவே முடிவு செய்தான். அதற்கு அரசகுமாரியும்

zeevaa

இணங்கினாள். சிவகோகர்ண ஸ்வாமியின் கட்டளைக்குப் புறம்பாக நாங்கள் எதுவும் செய்ய முடியாததால் நாங்கள் விஜயனை எச்சரித்து வந்தோம். எங்கள் பாதுகாப்பை இழந்ததால் அவன் இப்பொழுது எந்த இக்கட்டிலிருக்கிறானோ சொல்ல முடியாது,'' என்று சொன்னார். ''நல்ல வேளை வேங்கிபுர இளவல் நடுவில் வந்தார். அரசகுமாரியின் சிறை விவரத்தைச் சொன்னார். அரசகுமாரி இந்த நகரத்தில் இருப்பதால் அவளைக் கண்டு பிடிப்பது கஷ்டமல்ல,'' என்றும் சொன்னார்.

''சரி, அதற்கு ஏற்பாடு செய்யுங்கள்,'' என்ற வஜ்ரஹஸ்தர், ''விஜயன் நிலையை அறிய நான் ஏற்பாடு செய்கிறேன்,'' என்று கூறினார். அடுத்து தர்மரையும் அபயனையும் இளைப்பாறுமாறு அறிவித்தார்.

தர்மர் அபயனைத் தன்னுடன் அந்த மாளிகையில் மற்றொரு பகுதிக்கு அழைத்துச் சென்று ஓர் அறையில் தங்க வைத்தார். ''வேங்கி நாட்டு இளவலே! காலையில் சந்திப்போம்,'' என்று கூறி அவனிடம் விடை பெற்றுச் சென்றார்.

அவர்கள் சென்ற பின்பு வஜ்ரஹஸ்தர் மாற்றுடைகளை வேகமாக அணிந்து ஏழைக் கோலம் பூண்டார். பிறகு போர்வையொன்றைத் தலையிலிருந்து கால்வரை போர்த்திக் கொண்டு கொல்லைப்புற வழியாக வெளியே சென்றார். கொல்லைச் சந்திப்பிலிருந்து திரும்பிக் கிழக்கு ராஜ வீதிக்கு வந்தார். அங்கிருந்து சிறிது தூரத்தில் இருந்த பெரும் சந்தைக்குச் சென்று கொண்டிருந்த கூட்டமொன்றில் கலந்து கொண்டு சந்தைக்கு நடந்தார்.

எப்பொழுதும் உறங்காத சிம்மமென்று பெயர் பெற்ற சிம்மலனால் ஆதி காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட அந்தப் பெரு நகரமும் அதை நிர்மாணித்தவரைப் போலவே இரவின் நான்காம் ஜாமத்திலும் விழித்துக் கிடந்தது. அந்த நகரின் பெரும் சந்தையில் வியாபாரம் அந்த நான்காம் ஜாமத்திலும் மும்முரமாக நடந்து

கொண்டிருந்தது. வேங்கி நாட்டின் எல்லையிலிருந்த அந்த மாநகரில் பல நாட்டு வணிகர்களும் பொருள்களை வாங்கிக் கொண்டிருந்த தால் அது உலகத்தின் கூட்டுச் சந்தைபோல் காட்சி அளித்தது. மூர்கள், சீனத்தார், ராஜ புத்திரர், தமானா வாசிகள் (பர்மர்) வர்த்தகர்கள், யவனர்கள், இப்படி நானாவித நாட்டு மக்களும் உலாவிக் கொண்டிருந்ததால் உலகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியைப் போலக் காட்சியளித்தது அந்தக் கடைவீதி. அப்படிப் பலதரப்பட்ட கூட்டத்தின் நடுவில் ராஜா வஜ்ரஹஸ்தரும் சர்வ சாதாரணமாக நடந்து சென்றார். அப்படிச் சென்றவர் ஒரு பெரிய ஆயுத விற்பனைக் கடைக்கு அருகில் வந்ததும் அந்தக் கடைக்காரனை உற்று நோக்கினார். அவனை எங்கோ பார்த்திருப்பது போல் தோன்றியதால் மேற்கொண்டு விசாரிக்கவும் தொடங்க, "வணிகரே! இங்கு இந்த ஆயுதங்களைத் தவிர வேறு இல்லையா?" என்று வினவினார்.

"இருக்கின்றன உள்ளே. தங்களுக்கு எந்தவித ஆயுதம் வேண்டும்?" என்று வினவினான் கடைக்காரன்.

"கிரேக்க நாட்டு வாள் வேண்டும்," என்றார் அரசர்.

"கடைமீது ஏறி வாருங்கள், பார்க்கலாம்," என்று கூறிய கடைக்காரன் தனது கையை நீட்டி மன்னனுக்குக் கைலாகு கொடுத்துக் கடைப் பலகையின் மீது ஏற உதவி செய்ய, மன்னரும் ஏறினார்.

"இப்படி வாருங்கள் என்று வழிகாட்டிய கடைக்காரன் பின்னாலிருந்த திரைச் சீலையை அகற்றி, "டேய், யாரங்கே! ஐயாவைக் கிடங்குக்கு அழைத்துப் போ," என்று கூறினார். திரைச்சீலைக்கு வெளியே தலை காட்டிய கடை ஆள் வஜ்ரஹஸ்தரை உள்ளே வரும்படி சைகை காட்ட உள்ளே நுழைந்தார் கலிங்க மன்னர்.

திரைச்சீலைக்குப் பிறகு ஒரு வீட்டின் நீண்ட ஆளோடி தெரிந்தது. அதைக் கடந்து சென்ற கடைப் பணியாள் வஜ்ரஹஸ்தரை அடுத்து

zeevaa

கீழே ஓடிய படிகளில் அழைத்துச் சென்றான், படிகளுக்கு அடியில் பெரிய கூடம் போலிருந்த அறையில் பலநாட்டு ஆயுதங்கள் ஆயிரக்கணக்கில் இருந்தன. ''நீங்கள் சென்று உங்களுக்கு வேண்டிய ஆயுதத்தை எடுத்து வாருங்கள்'' என்று சொல்லிய பணியாள் மீண்டும் படிகளில் ஏறிச்சென்றான்.

வஜ்ரஹஸ்தர் அந்த ஆயுதச் சாலையின் நடுவில் பிரமித்து நின்றார். இத்தனை பெரிய ஆயுதசாலை இருக்குமிடம் அந்த ஊரின் பெரிய அரண்மனைதான் என்று அவர் நம்பியிருந்தது. அன்று பொய்யாகிவிட்டதை உணர்ந்தார். அப்படி அவர் பிரமித்து நின்றிருந்த சமயத்தில், ''மகாராஜா! வரவேண்டும்'' என்று எங்கிருந்தோ ஒரு குரல் கேட்க அந்தத் திசையை நோக்கிய வஜ்ரஹஸ்தர் சற்று எட்ட இருந்த ஆயுதங்களின் இடைவெளியில் ஆதிமால்யன் நிற்பதைக் கண்டார். அதே சமயத்தில் தனக்குப் பின்னாலிருந்த ஆயுத வரிசைகளிலிருந்து உருவிய வாளுடன் பல வீரர்கள் வெளிப்பட்டு வருவதையும் உணர்ந்தார். இத்தனைக்கும் அசையாது நின்ற வஜ்ரஹஸ்தரை ஆதிமால்யனின் மற்றொரு அறிவிப்பு அசைய வைத்தது. ''இப்படிப் பாருங்கள் மகாராஜா'' என்று கூறிய ஆதிமால்யன் தானிருந்த இடத்திலிருந்து சிறிது பக்கவாட்டில் நகர்ந்தான். அவனுக்குப் பின்னாலிருந்த அறையின் நடுவில் ஓர் ஆசனத்தில் அரசகுமாரி கயிறுகளால் பிணைக்கப்பட்டு அமர்ந்திருந்தாள். அவள் இருபுறத்திலும் வாளேந்திய இரு காவலர்கள் நின்றிருந்தார்கள்.

''மகாராஜா! அரசகுமாரியின் இந்த நிலைக்கு அவர்கள்தான் காரணம். வாயைத் திறக்க மறுக்கிறார்கள். அவர்கள் சிறிது பேசினாலும் இந்த இக்கட்டான நிலைமாறும். தாங்களே அவர்களைப் பேசச் சொல்லுங்கள். இல்லையேல்...'' என்ற ஆதிமால்யன் பொய்யான துக்கத்தைக் காட்டிப் போலிப் பெருமூச்சும் விட்டான்.

zeevaa

அரசகுமாரியின் உயிரும் தனது உயிரும் ஆதிமால்யன் கைகளில் ஊசலாடுவதைச் சந்தேகமற மன்னர் உணர்ந்தார். அது மட்டுமல்ல, அந்த அறையில் வேறு பல விசித்திரங்களும் நிகழ முற்பட்டதையும் கவனித்தார். 'இது என்ன ஆயுதசாலையா? மந்திர சாலையா?' என்றும் எண்ணமிட்டார்.

அரசகுமாரி அமர்ந்திருந்த ஆசனம் மெள்ள அந்த அறையில் நகர முற்பட்டது.



zeevaa

# 36. மோக்ஷரின் புன்னகை

ஆதிமால்யன் நின்றிருந்த இடத்துக்குப் பின்னாலிருந்த அறையின் நடுவிலிருந்த ஆசனத்தில் தனது மகள் பிணைக்கப்பட்டு நிர்க்கதியாக உட்கார்ந்திருந்ததைக் கண்டு முதலில் வெகுண்ட வஜ்ரஹஸ்தர், அவள் உட்கார்ந்திருந்த ஆசனம் மெள்ள அசைந்து எந்தவித அரவமும் செய்யாமல் அடுத்திருந்த மறைவை நோக்கி மெதுவாக நகருவதைக் கண்டதும் பிரமிப்படைந்து நிற்கவே செய்தார். ஆதிமால்யன் அரசகுமாரியைச் சுட்டிக் காட்டிவிட்டு மீண்டும் மகாராஜா வஜ்ரஹஸ்தரை நோக்கித் திரும்பிவிட்டதாலும், எச்சரிக்கையின் காரணமாக மற்ற வீரர்களும் மன்னர் மீதே கண்களை நாட்டியிருந்ததாலும், பின் அறையில் நடந்த விசித்திரம் அவர்களுக்குத் தெரியவில்லை என்பதை உணர்ந்த கலிங்க மன்னர் தானும் எதையும் கவனிக்காததுபோல் பாசாங்கு செய்து, ''ஆதிமால்யா! இந்தச் சிம்மபுரம் எனது ஆட்சிக்கு உட்பட்டது. இதில் என்னையே மடக்க நீ எடுத்திருக்கும். முயற்சியின் விளைவை சிறிதாவது சிந்தித்தாயா?'' என்று வேண்டுமென்று பேச்சுக் கொடுத்தார்.

ஆதிமால்யன், வஜ்ரஹஸ்தர் பதவியைப் பற்றியோ அதனால் தனக்கு ஏற்படக்கூடிய விளைவைப் பற்றியோ கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ''மகாராஜா! இந்தச் சமயத்தில் இந்தக் கிடங்கு எனது ஆணைக்குட்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் செய்ய முற்படும் எந்த அலுவலும் விபரீதத்தில் முடியும். அந்த விளைவையும் சிந்தித்துப் பார்ப்பது நல்லது'' என்று நிர்ப்பயமாகக் கூறினான். ''தவிர, மகாராஜா! இரண்டு அரசுகள் மறைமுகமாக மோதும்போது

zeevaa

அவை அனுப்பும் வீரர்கள் தங்கள் உயிரைப் பற்றிக் கவலைப்படுவது அறிவீனம். இப்பொழுது சோழ நாட்டு எதிரி விஜயபாகு இங்கு வந்திருக்கிறார். அவரைச் சிறை செய்வது அல்லது கொல்வது எனது பணியாகும். விஜயபாகு அழிந்தால் சிங்களத்தில் சுதந்திரப் போர் அழிந்தது போலத்தான். அதற்குப் பிறகு சோழர் ஆட்சி சிங்களத்தில் நிரந்தரமாகும். இங்கு விஜயபாகு வந்திருக்கும் காரணம் எனக்குத் தெரியும். கப்பல் சிற்பியை அழைத்துப் போவது மட்டுமல்ல அவர் இங்கு வந்திருப்பது. வேறு ஒரு இணையிலாச் சொத்தையும் எடுத்துப்போக வந்திருக்கிறார். அதை அவர் எடுத்துச் சென்றுவிட்டால் சிங்களம் ஒருமுகமாகச் சோழரை எதிர்த்து நிற்கும். அப்புறம் அங்கு சோழர் தலையெடுப்பது பகற்கனவு," என்றும் தொடர்ந்து சொன்னான்.

"அந்தப் பொருள் என்ன?" என்று கேட்டார் வஜ்ரஹஸ்தர். "அது என் ரகசியம் சொல்வதற்கில்லை," என்ற ஆதிமால்யன், "கலிங்க மன்னனே! நாம் விடியும்வரை இங்கு பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை. சீக்கிரம் உங்கள் மகளுக்குப் புத்தி சொல்லுங்கள். விஜயனை அவள் அழைத்துச் செல்லும் இடத்துக்கு என்னை அழைத்துச் செல்ல வேண்டும். அல்லது வழியைச் சொல்ல வேண்டும். வாருங்கள்," என்று கூறிக்கொண்டே பின்னால் திரும்பியவன் அதிர்ச்சியடைந்து, "எங்கே அரசகுமாரி?" என்று கூவினான் சினத்தின் மிகுதியால்.

அவன் கூவிய அந்தச் சமயத்தில் வாளை உருவியிருந்த அவன் ஆட்கள் மன்னனைச் சூழ்ந்து கொள்ள நெருங்கி வந்தனர். "மன்னவா! இருக்குமிடத்தை விட்டுச் சிறிது அசைந்தாலும் பிணமாகி விடுவீர்!" என்று ஆதி மால்யனும் இரைந்த குரலில் எச்சரித்த சமயத்தில் பின் அறையிலிருந்த விளக்குகள் சரேலென அணைந்தன. "இன்னொரு விளக்கை ஏற்றுங்கள்," என்ற ஆதிமால்யன் உத்தரவுப்படி மற்றொரு விளக்கை ஏற்றிய வீரனொருவன் அந்த விளக்கை வைக்க அடுத்த அறைக்குச் சென்றவன் திரும்பவில்லை. அதே சமயத்தில் எங்கிருந்தோ நீண்டு

zeevaa

எல்லோருடைய தலைகளுக்கும் மேலே சர்ப்பம்போல் வந்த ஒரு கழி முதல் அறையின் விளக்குத்திரியை இழுத்து அணைத்து விடவே முன் அறையிலும் அந்தகாரம் சூழ்ந்தது.

விளக்கை ஏற்றிக்கொண்டு பின் அறைக்குள் சென்ற பணியாள் திரும்பாதது மட்டுமல்ல, விளக்கைக் கையில் ஏந்தியவண்ணம் முன்பு அரசகுமாரி உட்கார்ந்திருந்த இடத்தில் விளக்குப் பதுமைபோல் அசையாமல் நின்றிருந்தான்.

ஏதோ தனக்கும் தெரியாத திருப்பம் தனது திட்டத்தில் ஏற்பட்டு விட்டதைப் புரிந்து கொண்ட ஆதிமால்யன், ''ஏன் நிற்கிறாய் அங்கே? வா இங்கே'' என்று கோபத்தில் தோய்ந்த சொற்களை உதிர்த்தான்.

ஆனால் அவன் கட்டளையை அந்தப் பணியாள் ஏற்கவில்லை. பற்களைக் காட்டிச் சிரித்துக் கொண்டே நின்றான். இதனால் மேலும் வெகுண்ட ஆதிமால்யன், ''என்ன சிரிக்கிறாய்? வா இப்படி'' என்று மீண்டும் அதட்டினான். பதிலுக்கு அந்தப் பணியாள் தனது கையிலிருந்த விளக்கை ஆதிமால்யன் கண்ணெதிரிலேயே ஊதி அணைத்தான்.

இரு அறைகளிலும் அந்தகாரம் நிரம்பிவிடவே துரித நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. அதற்கு மேலும் தான் வாளாவிருப்பது நல்லதல்ல என்று தீர்மானித்த வஜ்ரஹஸ்தர் திடீரென தனது இருபுறத்திலு மிருந்த வீரர்களை இடித்துத் தள்ளி எதிரிலே வரிசையாயிருந்த வாட்களில் ஒரு பெரிய கனமான வாளை எடுத்துக் கொண்டு வீரர்களைச் சாட முற்பட்டார். வீரர்களும் இருட்டின் விளைவாகச் செயல்பட முடியாமல் குத்து மதிப்பாக இயங்கவே, அறையில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. ஆயுதங்களுடன் ஆயுதங்கள் மோதி ஒலிகள் பயங்கரமாகவும் பரவலாகவும் கேட்டன. மகாராஜா வஜ்ரஹஸ்தர் வாள் பயங்கர மாகச் சுழன்றதால் குறி ஏது மில்லாவிட்டாலும் யாரோ இருவர்மீது இறங்கி விட்டதால் அவர்கள் போட்ட மரண ஒலி அறையின் பயங்கரத்தை உச்சிக்குக் கொண்டு

zeevaa

போனது. அந்த விநாடியில் இன்னும் சிலர் தடதடவென அந்த அறைக்குள் நுழையும் சத்தம் கேட்கவே, அவர்கள் யாராயிருக்கும் என்று மன்னன் யோசித்தவண்ணம் வாளை சுழற்றவே, திடீரென அந்த அறையில் இரண்டுபேர் பயங்கரமாக அலறும் சத்தமும், அடுத்து அவர்கள் மூச்சுவிட முடியாமல் முனகும் சத்தமும் கேட்டன. உள்ளேயிருந்த குழப்பத்தில் நுழைந்தவன் ஒருவன் ஐந்தாறு ஆயுதங்களை எடுத்து நாலாபுறமும் வீசினான். அந்த ஆயுதங்களிலிருந்து தப்ப ஆதிமால்யன் ஆட்கள் ஆங்காங்கு ஆயுதவரிசைகளுக்குப் பின்னால் மறைய ஆரம்பித்தார்கள். எங்கும் போரிடும் ஒலி திடீரென நின்று விடவே அதற்குக் காரணத்தைக் கலிங்க மன்னர் ஊகிக்கும் முன்பாக அவரை அணுகிய ஒருவன், ''மகாராஜா! தாமதம் வேண்டாம். இப்படி வாருங்கள்'' என்று அவர் கையைப்பற்றி அழைத்தான்.

அவனை யாரென்று கேட்க முற்பட்ட மகாராஜா சட்டென்று தனது கேள்வியை நிறுத்திக்கொண்டு ''இங்கு எப்படி வந்தாய் நீ! விஜயன் எங்கே? இந்த இடம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?'' என்று சரளமாகக் கேட்டார்.

''அப்புறம் பேசிக்கொள்ளலாம் வாருங்கள்'' என்று அவன் கூற மகாராஜா அவனுடன் நகர முற்பட்டவர், ''மூர்சமத்! இங்கு எங்கோ ஆதிமால்யன் இருக்கிறான். அவனை முதலில் சிறை செய்ய வேண்டும்'' என்றார்.

''சிறை செய்தாகிவிட்டது வாருங்கள்'' என்று மகாராஜாவை பலவந்தமாக மூர்சமத் அழைத்துச் சென்றபோது தமது பக்கத்தில் யாரோ சர்ரென்று நகருவதுபோல் கேட்கவே, ''சமத்! நம்முடன் யாரோ வருகிறார்கள்'' என்றார்.

''ஆம் மகாராஜா,'' என்றான் மூர்சமத்.

''யாரவன்?'' என்று மகாராஜா கேட்டார்.

zeevaa

''என்னிடம் சிறைப்பட்டவன்'' என்று மூர்சமத் சில அடிகள் நடந்து பக்கத்து அறைக்குச் சென்று ஏதோ படிகளில் ஏற முற்பட்டான். அப்பொழுதும் மகாராஜாவின் பக்கத்தில் சர்ரென்று சத்தம் கேட்கவே மகாராஜா தமது கைகளால் துழாவினார், இருட்டில் ஏதும் தெரியாததால் ''சமத்! இவன் நல்ல பருமனாயிருக்கிறானே?'' என்று வினவினார்.

''பயனில்லாப் பருமன்'' என்று அலட்சியமாகப் பதில் சொன்ன சமத் சுமார் பதினைந்து படிகளை ஏறி முடிந்ததும் ஏதோ ஒரு கதவைத் தட்டினான் இருமுறை. கதவு மெதுவாகத் திறந்ததும், திறந்த இடம் புரவிச்சாலையென்பதையும் அறை அல்ல என்பதையும் புரிந்துகொண்ட மகாராஜா மூர்சமத் பிடித்திருந்த மனிதனை நோக்கினார்.

மூர்சமதின் பக்கத்தில் தனது பெரும் கழுத்து சிக்கிக் கிடக்க, மூச்சுவிட முடியாமல் நீண்ட நேரம் திணறிவிட்டு மூர்ச்சை யடைந்துவிட்ட ஆதிமால்யனை நோக்கிய வஜ்ரஹஸ்தர், ''சமத்! இவனையா இத்தனை நேரம் இழுத்து வந்தாய்?'' என்று வினவினார்.

''ஆம் மகாராஜா'' என்று சொல்லிய மூர்சமத் ஆதிமால்யனைத் தனது கையிலிருந்து விட்டுவிட, புரவிக் கொட்டடியின் தரையில் சரிந்து மல்லாந்து கிடந்தான் சோழர்களின் ஒற்றன். மகாராஜா அவனை உற்று நோக்கினார். ஆதிமால்யன் பிணம்போல் கிடந்தான். லேசாக விட்ட மூச்சின் விளைவாக அவன் மார்பு மட்டும் ஏறி இறங்காவிட்டால் அவனைப் பிணம் என்றே முடிவு கட்டியிருப்பார் மகாராஜா. ஆனால் அவன் உயிரோடு தானிருக்கிறான் என்பதை சுவாசத்திலிருந்து உணர்ந்து கொண்ட கலிங்க மன்னர், ''இவன் முகத்தில் யாராவது சிறிது நீர் தெளித்துப் பிரக்ஞை வரச் செய்யுங்கள்'' என்று உத்தரவிட, ''கவலைப்பட வேண்டாம். இவனை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று சொல்லிக்கொண்டே மோக்ஷர் புரவிகள் அளித்த மறைவிலிருந்து வெளியே வந்தார்.

zeevaa

அவர் சொல்லே அமுதமாயிருந்திருக்க வேண்டும். அதைக் கேட்டதுமே ஆதிமால்யன் கண்கள் விழித்தன. ''ஐயோ! மோக்ஷரா!'' என்று அத்தனை பலவீனத்திலும் சிறிது இரைந்தே கூவினான் ஆதிமால்யன்.

''நானேதான் நண்பனே!'' என்று கூறிக்கொண்டே அவனருகில் உட்கார்ந்த மோக்ஷர் அவன் கழுத்தைத் தமது கையால் தடவிப் பார்த்தார். ''ஆகா! எத்தனை பெரிய கழுத்து!'' என்று சிலாகிக்கவும் செய்தார். அவர் கைபட்டதும் பயத்தால் விழித்த ஆதிமால்யன், ''மகாராஜா! என்னை உங்கள் கையாலேயே கொன்று விடுங்கள். இந்தக் கொலைகாரரிடம் ஒப்படைக்காதீர்கள்!'' என்று அச்சம் கலந்த சொற்களை மெதுவாக உதிர்த்தான்.

மகாராஜா சற்று முன்பு ஆயுதச்சாலையில் தன்னை மிரட்டிய ஆதிமால்யன் மோக்ஷரைக் கண்டதும் நடுங்குவதைப் பார்த்துப் புன்முறுவல் கொண்டு, ''ஆதிமால்யா! உன்னை அஞ்சா நெஞ்சனென்று நினைத்தேன்'' என்றார்.

''மகாராஜா! நான் உயிருக்கு அஞ்சவில்லை. இவர் செய்யக்கூடிய...'' என்ற அவன் சொற்களை இடையில் வெட்டிய மோக்ஷர், ''சிசுருஷைக்கு பயப்படுகிறார்'' என்று முடித்தார்.

''சிசுருஷையா!'' என்று வியப்புடன் கேட்டார் மகாராஜா.

''ஆம் மகாராஜா! நீங்கள் செல்லுங்கள். இவரைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்'' என்றார் மோக்ஷர். ''இவர் உயிருக்கு ஆபத்து ஏதுமில்லாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்,'' என்றும் கூறினார் மோக்ஷர்.

அந்த உறுதிமொழியை வாங்கிக்கொண்டு மகாராஜா மூர்சமதுடன் அந்தக் கொட்டடியிலிருந்த இரு புரவிகளை அவிழ்த்துக்கொண்டு புரவிக் கொட்டடியிலிருந்து அகன்றதும் மோக்ஷர் கொட்டடியின் பெரும் கதவுகளை மெதுவாகச் சாத்தி உட்புறம் தாளிட்டார். கதவைத் தாளிட்ட அவர் முதுகைக் காட்டிக்

zeevaa

கொண்டிருந்த சமயத்தில் மெள்ளச் சமாளித்துக்கொண்டு எழுந்த ஆதிமால்யன் பக்கத்திலிருந்த ஓர் இரும்பு உலக்கையை இரு கைகளாலும் கஷ்டப்பட்டு எடுத்து அவர் தலையை நோக்கி வீசுவதற்கு அதை உயர்த்தியதன்றி வீசவும் செய்தான், குறி வைத்து. மோக்ஷர் பயங்கரமாகச் சிரித்து, சரேலெனத் திரும்பி அந்த உலக்கையை இடது கையால் பிடித்துக் கீழே போட்டார். பிறகு சிரிப்பை அடக்கிப் புன்னகை பூத்தார். அந்தப் புன்னகை யமப்புன்னகையாயிருந்தது. அதன் பயங்கரம் ஆதிமால்யன் உணர்ச்சிகளை ஓர் உலுக்கு உலுக்கியது. பிறகு நடந்தது? சொல்லுக்கு அப்பாற்பட்டது.




zeevaa

# 37. நந்தவனத்தில் ஓர் ஆண்டி

ஆதிமால்யன் வீசிய இரும்பு உலக்கையை அலட்சியமாக இடது கையால் பிடித்துக் கீழே போட்ட மோக்ஷர், புரவிக் கொட்டடியின் தாளிட்ட கதவுகளுக்கு அருகிலேயே சில வினாடிகள் நின்று புன்னகை செய்தார். அந்தப் புன்னகையின் விளைவாக லேசாக விரிந்த ஸ்வாமிகளின் உதடுகள் அவர் புஷ்டியான கன்னங்களிரண்டிலும் சிறு குழிகளைச் சிருஷ்டித்ததாலும், கண்கள் லேசாகச் சிறுத்ததாலும் புன்னகை மிகக் குரூரமாகத் தெரிந்தது ஆதிமால்யன் கண்களுக்கு. அந்த நிலையை ஆதிமால்யன் ஏற்கனவே இரண்டொரு முறை கண்டிருந்தானாதலால், அதை அடுத்து அவர் சித்தம் சிறிது வெறி கொள்ளும் என்பதையும், அந்த வெறியில் ஸ்வாமிகள் என்ன செய்வார் என்பதை யாரும் ஊகிக்க முடியாதென்பதையும் அறிந்திருந்த ஆதிமால்யன், தனக்கு என்ன கதி காத்திருக்கிறதோ என்று நினைத்து நடுங்கினான் ஒருமுறை. இருப்பினும் சற்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, ''மோக்ஷரே! இன்னும் எனது கைகள் உறுதியாகத் தானிருக்கின்றன என்பதை மறக்க வேண்டாம். நெருங்கி வந்தீர்களானால் உம்மைப் பிண்டமாகப் பிடித்து போட்டுவிடுவேன்,'' என்று எச்சரித்து உலக்கைகள் போலிருந்த தனது கைகளை நீட்டிக் காட்டினான்.

அந்தக் கைகளையும் பார்த்து அவன் முகத்தையும் பார்த்த மோக்ஷர், மூர்ச்சையின் பிடியிலிருந்து விடுபட்ட பிறகு அவனுக்குச் சிறிது சுரணை வந்திருப்பதைப் புரிந்து கொண்டாரானாலும், அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் ஆதிமால்யன் நின்றிருந்த இடத்தை நோக்கி அடிமேல் அடிவைத்து மிக நிதானமாக நடக்கலானார். அவர் எடுத்துவைத்தஅடி ஒவ்வொன்றும் தன்



zeevaa

இதயத்தின் மேல் வைக்கப்படுவதாக எண்ணிய ஆதிமால்யன் ''ஸ்வாமி! என்னை நெருங்க வேண்டாம். உங்களை விட்டு விடுகிறேன், போய்விடுங்கள்,'' என்று இரைந்து பேசினான்.

ஸ்வாமிகள் புன்னகை சற்று அகலமாகவே விரிந்தது. அவனுக்குப் பதிலேதும் சொல்லாமலே நடந்த மோக்ஷர் ஸ்வாமிகள் ஆதிமால்யனை நெருங்க முற்பட்டதும் அவன், ''வேண்டாம் ஸ்வாமி, வேண்டாம். அருகில் வர வேண்டாம்,'' என்று கூவி, தனது ராட்சஸ விழிகளை ஒருமுறை உருட்டித் தனது பிரம்மாண்டமான சரீரத்தையும் இடுப்பையும் சிறிது ஒடித்துத் திருப்பி அடுத்து வரும் ஆபத்தைச் சமாளிக்கச் சித்தமானான்.

ஸ்வாமிகள் அவனுக்கு இரண்டடி தூரத்தில் வந்ததும் உதடுகளில் ஏதோ சுலோகங்களை உச்சரிக்கலானார். ''ஹே மகாகாளி! மகாசக்தி...'' என்ற சொற்கள் மட்டும் ஆதிமால்யன் காதில் விழவே, ஸ்வாமிகள் மந்திரத்தைக் கொண்டே, தன்னைத் தீர்த்துக்கட்டி விடுவாரோ என்று அச்சத்தால் துடித்த ஆதிமால்யன், ''ஸ்வாமிகளே! இது வீரர்கள் போர் மந்திரத்தால் மாங்காய் விழாது,'' என்று எச்சரித்தான்.

அதுவரை முக்கால்வாசி மூடியிருந்த கண்களைச் சிறிது விரித்த மோக்ஷர், ''அப்பனே! வீரர்கள் என்றா சொன்னாய்?'' என்று சற்று ஏளனமாக விசாரித்தார். மீண்டும் அந்தப் பழைய யமப்புன்னகை அவர் உதடுகளில் விரிந்தது.

''ஆம் ஸ்வாமிகளே,'' என்றான் ஆதிமால்யன்.

ஸ்வாமிகள் அவனை நன்றாக நிமிர்ந்து நோக்கி ''அப்பனே! வீரர்கள் என்று பன்மையில் பேசியதால் உன்னையும் அந்த வர்க்கத்தில் சேர்த்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது,'' என்று சுட்டிக் காட்டினார் புன்னகையின் ஊடே.

ஆதிமால்யன் நிதானத்தை அறவே இழந்து, ''கிட்டே வந்து பாரும், நான் வீரனா அல்லவா என்பது தெரியும்,'' என்று சீறினான்.

zeevaa

''சரி, உன்னிஷ்டம் வருகிறேன். பின்னால் வருத்தப்படாதே,'' என்ற மோக்ஷர் அவனைப் பூர்ணமாக நெருங்கினார்.

ஆதிமால்யன் தனது பெரிய கைகளால் மோக்ஷரின் உடலை வளைத்தான், நொறுக்கவும் முயன்றான். ஸ்வாமிகளின் உடல் இரும்பாயிருந்தது. எந்த இடத்திலும் அவர் சதை அழுந்தவோ இடம் கொடுக்கவோ இல்லை. அவரை அப்படி இறுக்கிப் பிடித்ததால் அவர் உடல் அவன் உடலுடன் இணைந்து இருவர் முகங்களும் ஒன்றுக்கொன்று நேராக இருந்தபோது ஸ்வாமிகளின் கண்களில் ஏதோ ஒரு விபரீத ஒளி தோன்றியதை ஆதிமால்யன் கண்கள் கவனித்தன. அடுத்த வினாடி தான் ஏதோ நெருப்புப் பிழம்பைக் கட்டிக் கொண்டதுபோல் ஸ்வாமிகளின் உடலைத் திடீரென விட்டு விலகினான்.

விலகியவன் மூச்சுத் திணறிக் கொண்டிருந்தது. என்ன காரணத்தாலோ வயிற்றைப் பிடித்துக் கொண்டு கீழே உட்கார முயன்றான். ''ஸ்வாமி! என் வயிற்றை என்ன செய்து விட்டீர்கள்? என் மார்பு ஏன் இப்படி படபடவென அடித்துக் கொள்கிறது?'' என்று கேட்ட ஆதிமால்யன் குரல் தெளிவாயில்லை. சொற்கள் குழறிக் குழறி வெளிவந்தன.

''வீரனே! நீ பேசுவது எனக்கும் விளங்கும்படி ஸ்பஷ்டமாகப் பேசு. இல்லாவிட்டால் தர்ப்பையைப் போட்டு உன் நாவைப் பொசுக்குவேன்,'' என்ற ஸ்வாமிகள் அவன் உடலைத் தமது இரு கைகளாலும் மெதுவாகப் பிடித்து மெள்ள அவனை உட்கார வைத்தார்.

''ஸ்வாமி!'' என்று ஆரம்பித்தான் ஆதிமல்லன்.

''அட எழவே! ஷ்வாமியல்லடா நான். ஸ்வாமி என்று கூப்பிடு,'' என்று அவனை நோக்கிக் கூறி அவன் முன்பு தாமும் மண்டியிட்டு உட்கார்ந்தார்.

zeevaa

''ஸ்வாமி! பேட்ஷ....'' என்று ஆதிமல்லன் மீண்டும் பேச முற்படவே, ''அட இழவே ! இதென்னடா சமஸ்கிருதம் வரவர அதிகமாகிறது. பேச என்று சொல்லித் தொலை,'' என்று மொழித் திருத்தத்தில் ஈடுபட்டார் ஸ்வாமிகள்.

பேச முடியவில்லை என்பதற்கு அடையாளமாகத் தனது உதடுகளில் இரண்டு விரல்களை வைத்துத் தலையை ஆட்டிக் காட்டினான் ஆதிமால்யன். ''என்ன சனியனோ! பரதநாட்டியம் ஆடுகிறான், அபிநயம் காட்டுகிறான்,'' என்று அலுத்துக்கொண்ட மோக்ஷர், ''பிசகாக வேறு நாடி எதையாவது திருகி விட்டேனோ?'' என்று தம்மைத் தாமே கேட்டுக் கொண்டு அவன் வயிற்றைத் தமது கைகளால் பரிசோதிக்க முற்பட்டதும், ''வேண்டாம் வழிற்றை,'' என்று உளறி, கீழே தரையில் சாய்ந்தான் ஆதிமால்யன்.

ஸ்வாமிகள் அவன் மீது ஏறி உட்கார்ந்து வயிற்றைப் பரிசோதித்தார் மெதுவாக. ஆதிமால்யன் கை கால்கள் மெதுவாக மரக்கத் தொடங்கியதால் அவன் தனக்கு இறுதிக் காலம் வந்து விட்டதை உணர்ந்து கொண்டான். ஆனால் வயிற்றைச் சோதித்த மோக்ஷர், ''அடடா இந்த நரம்பையா திருகி விட்டேன்!'' என்று தம்மை நொந்து கொண்டு வயிற்றில் வேறொரு பாகத்தைச் சிறிது அழுத்தி நிமிண்டினார்.

ஆதிமால்யன் கை கால்கள் சிறிது சுரணை வந்ததால் அவன் மெள்ளப் பெருமூச்சு விட்டான். அடுத்து, மோக்ஷர் அவன் கழுத்தைப் பரிசோதித்தார். ''ஸ்வாமி விட்டு விடுங்கள். நான் இந்த நாட்டைவிட்டு ஓடிவிடுகிறேன்,'' என்று கெஞ்சினான் ஆதிமால்யன்.

''காலங் கடந்து வந்த ஞானம். முன்பே எங்கள் குருநாதர் உனக்கு அதைத்தான் சொன்னார். நீ கேட்கவில்லையே'' என்ற மோக்ஷர், ''பயப்படாதே ஆதிமால்யா! நான் உன்னைக் கொல்லப் போவதில்லை. கொல்லக் கூடாதென்று குருநாதரின் கண்டிப்பான உத்தரவிருக்கிறது?'' என்றார் மோக்ஷர்.

zeevaa

''பிழைத்தேன்,'' என்று ஆசுவாசப் பெருமூச்சு விட்டான் ஆதிமால்யன்.

''இல்லை,'' மோக்ஷர் சுருக்கமாகப் பேசினார்.

''இப்பொழுதுதானே சொன்னீர்கள் குருநாதரின் உத்தரவைப் பற்றி!''

''உண்மை. ஆனால் ஆதிமால்யா, இறப்பைவிடக் குரூரமான வாழ்வு உலகத்தில் இருப்பது தெரியுமா உனக்கு? இப்பொழுது நான் செய்யும் சிசுருஷை உன்னைப் பத்து நாள் படுக்க வைக்கும். அதில் படும் அவஸ்தையை அனுபவிப்பதை விட இறப்பதை நீயே விரும்புவாய்.'' என்ற மோக்ஷர், ''அப்பனே! பொழுது விடியப் போகிறது. சிறிது கண்களை மூடிக்கொள்,'' என்றார்.

''எதற்கு?'' என்று கேட்டான் ஆதிமால்யன்.

''என் சிகிச்சையை நீ பார்க்காதிருப்பதற்கு,'' என்று சொன்ன மோஷர். அவன் விழித்த கண் விழித்தபடியே இருப்பதைப் பார்த்து, ''இப்படியே கூடக் கண்ணை நிறுத்திவிடலாம்,'' என்று அவன் காது கேட்கச் சொல்லி விட்டு கையில் ஒரு நரம்பைப் பிடித்து அழுத்தினார். கைகள் இரண்டும் உதறலாயின. பிறகு அவன் மார்பில் உட்கார்ந்து மடியிலிருந்து இரண்டு மணிக் கற்களை எடுத்து அவன் கழுத்தில் துடித்துக் கொண்டிருந்த நாடியின் இருபுறத்திலும் வைத்து மெல்ல நாடியைச் சற்று அகற்றினார். ஆதிமால்யன் கண்கள்சிறிது துடித்து நின்று விட்டன. அத்துடன் தமது வேலை முடிந்து விட்டதை உணர்ந்து கொண்ட மோக்ஷர் ஆதிமால்யன் மார்பிலிருந்து எழுந்து அவனை நோக்கினார். இந்தச் சிசுருக்ஷையை விட இவனைக் கொன்று விடுவது மேல். ஆனால் கொல்ல உத்தரவில்லை. என்ன செய்வது?'' என்று பரிதாபப்பட்டார்.

ஆதிமால்யன் கைகள் துடித்துக் கொண்டிருந்தன. கால்களும் சிறிது நேரத்திற்கொருமுறை துடித்து துடித்து நின்றன. கண்கள் வெறித்துக் கூரையை நோக்கின. கீழ் இமைகள் மட்டும் சிறிது

zeevaa

அசைந்து கொண்டிருந்தன. அடுத்து ஸ்வாமிகள் கைகளைத் தட்ட, புரவிகளின் நடுவிலிருந்து அர்த்தர் தலையைக் காட்டினார். ''இவனை என்ன செய்யலாம்?'' என்று கேட்டார் மோக்ஷர்.

''அப்படியே கிடக்கட்டும். ஆயுதசாலையில் இவன் ஆட்கள் இன்னும் சிலர் உயிரோடிருக்கிறார்கள். அவர்கள் வந்து எடுத்துப் போவார்கள்,'' என்று அர்த்தர் சொன்னார்.

''இவனுக்கு மாற்றுச் சிகிச்சை எப்பொழுது?'' என்று வினவினார் மோக்ஷர்.

''இன்னும் பத்து நாள் ஆகலாம். அல்லது நாளைக்கே செய்யலாம். எதுவும் இந்த நகரில் விடிந்த பின் ஏற்படும் சில நிகழ்ச்சிகளைப் பொறுத்தது,'' என்றார் அர்த்தர்.

அடுத்து இரு துறவிகளும் புரவிக் கூட்டத்தை நோக்கி நடந்து, புரவிகளுக்கு அப்பால் இருந்த கொட்டடியின் கிழக்குப் புறச் சுவரை அணுகினார்கள். அங்கிருந்த பெரிய பாறையை இருமுறை தட்ட, பாறை நகர்ந்தது. அது கொடுதத இடைவெளியில் புகுந்து இரு ஸ்வாமிகளும் சிறிது தூரம் நடந்தனர்.

அந்தப் பாதையின் கோடியிலிருந்த ஒரு நந்தவனத்தை அடைந்த சமயத்தில் பொழுது லேசாகப் புலர்ந்து கொண்டிருந்தது. நந்தவனச் செடிகளிலிருந்து சில பக்ஷி ஜாலங்கள் இன்பமாகக் கூவ முற்பட்டன. நந்தவனத்தை சுற்றிலுமிருந்த பெரும் சுவர்களின் பொந்து களிலிருந்து புறாக்கள் சிறகடித்துப் பறந்தன.

நந்தவனத்தை நெருங்கியதும் மோக்ஷர் அர்த்தரைக் கையைப் பிடித்து நிறுத்தினார். ''ஏன் நிறுத்துகிறீர்?'' என்று கேட்டார் அர்த்தர்.

''நீர் வியாஸரா, சுகரா?'' என்று வினவினார் மோக்ஷர்.

''யாராயிருந்தாலென்ன?'' என்று கேட்டார் அர்த்தர்.

''நந்தவனச் சிறு குளத்தில் பெண்கள் குளிக்கிறார்கள்,'' என்று சுட்டிக் காட்டினார் மோக்ஷர்.

zeevaa

அந்தச் சமயத்தில் அவர்கள் இருவரும் நின்றிருந்த இடத்துக்கு எதிரேயிருந்த பெருவாயிலிலிருந்து திரிலோக சுந்தரி நீராடுவதற்காகப் பணிப்பெண் ஒருத்தியுடன் வந்து கொண்டிருந்தாள். அவர்கள் இருவருக்கும் பின்னால் ஒரு புதுத் துறவியும் வந்து நந்தவனத்தில் புகுந்தார்.

''இவர் யார்?'' என்று கேட்டார் அர்த்தர்.

''யாரோ! நந்தவனத்தில் ஓர் ஆண்டி.'' என்ற மோக்ஷரின் சிந்தனை எங்கோ ஓடிக் கொண்டிருந்தது. கடைசியில், ''இவர் வருகையை உடனடியாக நமது குருநாதருக்குத் தெரிவிக்க வேண்டும்.'' என்று மோக்ஷர் கூறினார். புரிந்து கொண்டதற்கு அறிகுறியாக அர்த்தரும் தலையசைத்தார்.



zeevaa

# 38. சிற்பியின் சிரிப்பு

புரவிக் கொட்டடியின் எதிர்ச் சுவர் ரகசியப் பாறையை நகர்த்திவிட்டு அதற்கு அப்பாலிருந்த குறுக்குப் பாதையின் முடிவிலிருந்து நந்தவன முகப்புக்கு இரு ஸ்வாமிகளும் வந்ததும், பொழுது புலர்ந்ததன் விளைவாக அந்த நந்தவனத்தில் ஏற்பட்ட அற்புதக் காட்சிகளைச் சிறிதும் பார்த்தார்களில்லை. நந்தவனத்தின் சிறு செடிகளிலும், ஒரு புறமாக இருந்த சற்றே பெரிய பன்னீர் மரக் கிளைகளிலும் தலைகாட்டிய பக்ஷி ஜாலங்களையோ, மற்றும் இயற்கை விரித்த விருந்துகளையோ பார்க்காமல் எதிர் வாசற்படியிலிருந்து வந்த புது ஆண்டியை மட்டும் உற்றுப் பார்த்தார்கள். அவரை அர்த்தரால் அடையாளம் கண்டுபிடிக்க முடியாவிட்டாலும் அவர் யாரென்பதைச் சிறிது சிந்தனைக்குப் பிறகு புரிந்து கொண்ட மோக்ஷர், ''இவர் வருகையை நமது ஸ்வாமிகளுக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்,'' என்று அர்த்தரை நோக்கிச் சொன்னார்.

அர்த்தர் அர்த்தபுஷ்டி சிறிதுமில்லாத வரட்சிப் பார்வையை மோக்ஷர் மீது வீசி, ''இவர் யார்? பெண்கள் குளிக்கும் நந்தவனத்துக்கு எப்படி வரலாம்?'' என்ற வினாக்களைத் தொடுத்தார்.

மோக்ஷர் அர்த்தரின் வினாக்களுக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல், ''இவர் வரவு விஜயபாகுவின் கதைக்கு அதிகச் சுவை கூட்டுகிறது,'' என்று பதிலிறுத்தார்.

மோக்ஷரின் மர்மப்பேச்சு அர்த்தருக்குப் பிடிக்காததால் ''விளங்கச் சொல்லும் மோக்ஷரே. விஜயபாகுவுக்கும் இந்த

zeevaa

ஆண்டிக்கும் என்ன சம்பந்தம்?'' என்று சற்று உஷ்ணமாகக் கேட்டார்.

''சாந்தப்படுங்கள் அர்த்தரே. துறவிகளுக்குக் கோபம் கூடாது,'' என்று அறிவுரை கூறினார் மோக்ஷர்.

அர்த்தர் அடியோடு நிதானத்தை இழந்து மோஷரைச் சுட்டுவிடுவது போல் பார்த்து, ''மோக்ஷரே! இன்னும் ஒரு முறை உபதேசம் செய்துபாரும்...'' என்ற அவர் சொற்கள் தணலென உதிர்ந்தன.

''உபதேசம் செய்தால்?'' மோக்ஷர் புன்னகை செய்தார்.

''உமது கழுத்தை முறித்துப் போடுவேன்,'' என்றார் அர்த்தர்.

''அர்த்தர் ஸ்வாமிகளே...'' வருத்தத்துடன் அழைத்தார் மோக்ஷர்.

''என்ன?''

''என் பணிக்குப் போட்டியாக வருகிறீரே!''

''என்ன உமது பணி?''

''கழுத்தை முறிப்பது.''

''நல்ல துறவி நீர்.''

''ஸ்வாமி மட்டும் என்னவாம்?'' என்று கேட்ட மோக்ஷரை அணுக லேசாக முற்பட்ட அர்த்தரைத் தடுத்த மோக்ஷர், ''அர்த்தரே, நாம் மூன்றாவது பேர்களைக் கொல்லவே நியமிக்கப் பட்டிருக்கிறோம். ஒருவரையொருவர் கொன்று கொள்வதற்கல்ல,'' என்று சுட்டிக் காட்டிவிட்டு, ''அர்த்தர் ஸ்வாமிகளே, வந்திருப்பவர் ஒரு பௌத்த சன்னியாசி. ஏற்கெனவே இவர் ஒரு முறை சிங்களத்திலிருந்து வந்திருக்கிறார். போர் என்று வந்தால் புத்த சன்னியாசி நமக்குச் சிறிதும் சளைத்தவரல்ல,'' என்று விளக்கினார்.

அர்த்தர் சிறிது சிந்தித்துவிட்டு, ''நீர் சொல்வது தவறு. பௌத்தம் அஹிம்சையை போதிக்கிறது'' என்று விளக்கினார்.

zeevaa

''நமது மதம் மட்டும் கொலையையா உபதேசிக்கிறது? அஹிம்ஸா பரமோ தர்ம: (அஹிம்சையே உயர்ந்த தர்மம்) என்று நமது தத்துவமும் சொல்கிறது. அதற்காக ஆதிமால்யனைத் தழுவவா செய்கிறோம்? அர்த்தரே! இந்தப் பாவி உலகத்தில் இருக்கும்வரை யாரும் எந்த மதத்தினரும் பாவிகளாக நடந்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை'' என்று விளக்கம் கொடுத்த மோக்ஷர், ''முதலில் விஜயபாகு இங்கே வருகிறான். அடுத்து சிங்களத் துறவி, அதுவும் அங்குள்ள பெரிய புத்த மடாலயத்தின் தலைவர் வருகிறார். இந்தத் தொடர்சசியில் ஏதோ விசேஷம்இருக்கிறது'' என்று சொல்லிக் கொண்டிருக்கையிலேயே எதிர்வாசலில் தோன்றிய புத்தமட ஆண்டி கலிங்க ராஜகுமாரியிடம் ஏதோ இரண்டொரு வார்த்தைகள் கூறிவிட்டு நந்தவனச் சிறு குளத்தில் நீராடிக் கொண்டிருந்த பெண்களைப் பாராமல் வானத்தையே பார்த்துக்கொண்டு நேராகப் பன்னீர் மரத்தை நோக்கிச் சென்றவர் சட்டென்று நின்று கீழே கிடந்த எதையோ கையில் மெதுவாக எடுத்துக்கொண்டு மீண்டும் வேகமாக எதிர் வாயிலுக்குள் நுழைந்து மறைந்து விட்டார்.

அவர் வந்ததையோ விரைந்ததையோ சற்றும் லட்சியம் செய்யாமல் நந்தவன வாவியில் குளித்துக் கொண்டிருந்த பெண்களை நோக்கிய அர்த்தர் ''மோக்ஷரே! இந்தப் பெண்களுக்கு வெட்கம் இல்லை போலிருக்கிறது?'' என்று கேட்டார்.

''இருக்கிறது'' என்றார் மோக்ஷர்.

''என்னய்யா இருக்கிறது?'' ஸ்வாமிகளே என்ற அழைப்பு முறைகளை காற்றில்விட்டு சாதாரண மனிதன் போல் சீறினார் அர்த்தர்.

''வெட்கம்!'' என்று சுருக்கமாகச் சொன்னார் மோக்ஷர்,

''அந்தத் துறவி....'' என்று ஏதோ பேச்சை எடுத்தார் அர்த்தர்.

''சுகர்'' என்றார் மோக்ஷர்.

''சுகரா!''

zeevaa

''ஆம். வேதவியாஸரின் பிள்ளை. வயதான வேத வியாஸர் வந்தபோது குளத்தில் குளித்துக்கொண்டிருந்த பெண்கள் சட்டென்று ஆடைகளை அணிந்துகொண்டார்கள். அடுத்து வாலிபரான சுகர் வந்தபோது நிர்வாணமாகவே நீராடிக் கொண்டிருந்தார்கள்.''

''ஏன்?''

''மகன் சுகப்பிரும்மம். ஆசைகளை அழித்தவர். பார்வையில் அழுக்குக் கிடையாது. வியாஸர் வயதானாலும் அப்படியல்ல.''

''யார் சொன்னது உமக்கு?''

''புராணம்.''

''புராணமா?''

''ஆம் அர்த்தரே. நீர் வீண் காலம் கழிக்காமல் புராணத்தையும் சில வேளைகளில் படிப்பது நல்லது'' என்ற மோக்ஷர் சிறிது சிந்தித்துவிட்டு, ''நாம் எதிர்வாசலை அடையத் தலையை தொங்கப்போட்டுக்கொண்டு துரிதமாக ஓடவேண்டும்'' என்றார்.

''ஏன்?'' என்று அர்த்தர் கேட்டார் கோபத்துடன். ''அந்த பௌத்த துறவிக்கு நான் குறைந்து போனேனா?'' என்று தொடர்ந்து வினவினார்.

''அதைப் பரீட்சை செய்து பார்க்க வேண்டுமென்றால் நீர் முதலில் நந்தவனத்தின் குறுக்கே நிதானமாக நடந்து எதிர்வாயிலுக்குப் போய்ப் பாரும்'' என்ற மோக்ஷர், ''அர்த்தரே! அந்த பௌத்தத் துறவி நந்தவனத்தில் ஏதையோ பொறுக்கினாரே, அது என்ன தெரியுமா?'' என்று வினவினார்.

''தெரியாது.'' அர்த்தர் சொல்லில் குழப்பம் தெரிந்தது.

''காயமடைந்த ஒரு அணில்...'' என்றார் மோஷர்.

''அணிலா?'' வியப்பைக் காட்டினார் அர்த்தர்.

''ஆம்.''

''அது எதற்கு இவருக்கு?''

''சிகிச்சை செய்ய எடுத்துப் போனார். சிங்கள புத்த விஹாரத்தில் அணில்களைப் பராமரிக்கும் வேலை இவருடையது.''

''என்ன விசித்திர வேலை.''

''நமக்கு விசித்திரம்தான். நமக்கு மனிதர்களே லட்சியமில்லை. அணிலையா கவனிப்போம்?''

அர்த்தர் பதில் சொல்ல முடியாததால் சிறிது சங்கடப்பட்டார். அவரை மேற்கொண்டு குத்திக் கிளப்ப இஷ்டப்படாத மோக்ஷர், ''அர்த்தரே! தலையைக் குனிந்து கண்ணை மூடிக்கொண்டு வேகமாக நடந்து வாரும். எதிர் வாயிலுக்குள் நுழைந்து விடுவோம்'' என்று சொல்லி முதலில் தாமே கண்களை மூடிக்கொண்டு தலைகுனிந்து எதிர் வாசலுக்கு ஓடினார். அர்த்தர் அவரைத் தொடர்ந்தார்.

அப்பொழுதுதான் ஆடையைக் களைந்து சிற்றாடை உடுத்தி வாவி நீரில் இறங்கிய கலிங்க ராஜகுமாரி அந்த இரு சன்னியாசி களையும் வியப்புடன் நோக்கினாள். ஏற்கெனவே நீராடிக் கொண்டிருந்த பெண்கள் கலகலவென நகைத்தனர். இவை எதையும் பார்க்காமல் துரிதமாக எதிர் வாயிலுக்குள் நுழைந்த மோக்ஷர் சிறிது நின்று அர்த்தரைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு உள்ளே சென்றார்.

போகப் போக அந்த மாளிகை பல கட்டுகளை உடையதாய்ப் பெரிதாக இருந்ததைப் பார்த்த அர்த்தர், ''மோக்ஷரே! இது எந்த இடம்? ஆயுதச் சாலையின் முன்புறமா?'' என்று வினவினார்.

''இல்லை அர்த்தரே! இது சிம்மபுரத்தின் பெரிய அரண்மனை. கலிங்க மன்னர்களின் மூலகர்த்தா கட்டிய விசித்திர அரண்மனை. இந்த நகரத்தின் மத்தியிலிருக்கிறது. ஆனால் நகரம் முழுதையும் ஆக்கிரமித்திருக்கிறது.'' என்று விளக்கிய மோக்ஷர் அர்த்தரை இன்னும் சில கட்டுகளின் வழியாக அழைத்துச் சென்றார்.

zeevaa

அம்மாதிரி சுமார் பத்துப் பெருங் கட்டுகளைக் கடந்ததும் ஒரு பலமான பெரிய கதவின் முன்பு நின்ற மோக்ஷர் சிறிது நேரம் சிந்தித்தார். பிறகு அர்த்தரை நோக்கி, ''அர்த்தரே! நீர் தட்டும் கதவை'' என்று சொன்னார்.

''ஏன்? நீர் தட்டினாலென்ன?'' என்று அர்த்தர் கேட்டார்.

''கதவுக்கு அப்புறத்தில் ஆபத்து இருக்கலாம்'' என்றார் மோக்ஷர்.

''என்ன ஆபத்து?''

''நிச்சயமாகச் சொல்ல முடியாது.''

''உயிரும் போகலாமோ?''

''போகலாம்.''

''அதற்கு நான்தான் பலி போலிருக்கிறது?''

மோக்ஷர் மெள்ளச் சொன்னார். ''கதவைத் தட்டும். நீர் பலியாகாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று.

''நீர் தான் தட்டுமே, நான் பார்த்துக்கொள்கிறேன்'' என்றார் அர்த்தர்.

''உம்மால் முடியாது, சொல்வதைக் கேளும், தட்டும்'' என்றார் மோக்ஷர்.

கதவைத் தட்டினார் அர்த்தர். கதவு மெல்லத் திறந்தது. அதன் மூலம் பாய்ந்து .வந்தது ஒரு குறுவாள். அது அர்த்தர்மீது பாயாதவண்ணம் அர்த்தரை நகர்த்தி விட்ட மோக்ஷர், ''சிற்பி! வெளியே வா. அஞ்சாதே'' என்று மெதுவாகச் சொன்னார்.

''சிற்பியா!'' என்று வியப்புடன் கேட்டார் அர்த்தர்.

''ஆம். சிம்மபுரத்தின் பெரிய சிற்பி, புத்தி பிசகி ஓர் ஆண்டு ஆகிறது. இங்கு வரும் யாரையும் கொல்ல முயலுகிறான்'' என்று மோக்ஷர் விளக்கிக் கொண்டிருக்கும் போதே உள்ளிருந்து பயங்கரச்

zeevaa

சிரிப்பு ஒன்று கேட்டது. அது அறைச் சுவர்களில் தாக்கிச் செய்த எதிரொலி அதிக பயங்கரத்தை சிருஷ்டித்தது. திரும்பி ஓடப் பார்த்தார் அர்த்தர். இன்னும் வலிய ஒரு கை அவர் கையைப் பிடித்து நிறுத்தியது. அறைக் கதவின் மூலையிலிருந்து அடுத்து வெறிபிடித்த கண்கள் அர்த்தர் கண்களுக்கு வெகு அருகில் தெரிந்தன.



# 39. பழைய மகாராஜா

கலிங்கத்தின் ஆதி மன்னர்களால் நிர்மாணிக்கப்பட்டதும், சிம்மபுரத்தின் நட்ட நடுவில் இருந்ததும், பல மர்மங்களை உடையதுமான சிம்மபுரப் பெரிய அரண்மனையின் பதினோராவது கட்டிலிருந்த அறைக்கதவை மோக்ஷர் சொற்படி தட்டிய அர்த்தர், அறைக் கதவு திறந்து தம்மை நோக்கிக் குறுவாளொன்று பாய்ந்து வந்ததையும், அறையில் காலடி எடுத்து வைத்த மாத்திரத்தில் தனது கை இரும்புக் கையொன்றால் பிடித்து நிறுத்தப் பட்டதையும், வெறிபிடித்த இரு கண்கள் தமது கண்களுக்கு வெகு அருகில் வந்து பயங்கரமாக விழித்ததையும் கண்டதும் கதிகலங்கினாலும், மோஷர் சிறிதளவும் அஞ்சாமல் சிற்பியை வெளியே வரும்படி அழைத்தது அர்த்தர் ஸ்வாமிகளுக்கு மிதமிஞ்சிய வியப்பையே அளித்ததால், ''மோக்ஷரே! உள்ளே வாரும். இந்தப் பிசாசிடமிருந்து என்னைக் காப்பாற்றும்'' என்று கூறினார்.

அதன் விளைவாக உள்ளே நுழைந்த மோக்ஷர், ''சிற்பி அவர் மீதிருந்து கையை எடுத்துவிடு. விலகி நில்!'' என்று அதட்டினார்.

அதைக் கேட்டதும் அந்தப் பயங்கரக் கண்கள் அகன்றன அர்த்தரின் முகத்திலிருந்து. அவரைப் பிடித்திருந்த கையும் சற்றே விலகியது. இந்த விடுதலையால் எதிரே அறைக்குள் நின்ற உருவத்தை ஏறெடுத்து நோக்கிய அர்த்தருக்கு எதிரில் தெரிந்தது மனிதனா, மிருகமா என்பதே விளங்கவில்லை. அந்த உருவத்தின் தலை மயிர்கள் கரடுமுரடாக அலைந்து முகத்தில் சில தொங்கிக் கொண்டிருந்தன. கைகளிலும் மார்பிலும் ரோமங்கள் மிக அடர்த்தியாக வளர்ந்திருந்தன. கண்கள் பெரிதாகக் கோரமாகத்

zeevaa

தெரிந்ததன்றி அவை சதா சலனப் பட்டும் சுழன்று கொண்டும் இருந்தன. அடிக்கடி சிகை வெட்டாத காரணத்தால் அளவுக்கதிகமாக வளர்ந்திருந்த தலைமயிரும் எண்ணெயைப் பார்க்காத உடல் ரோமங்களும் அந்த மனிதனைக் காட்டிலிருந்து பிடித்துவந்த மனிதக் குரங்கைப் போல் செய்திருந்தாலும். அதிகமாக வளர்ந்து பெரிய புருவ மயிர்களுக்கிடையில் தெரிந்த கண்களில் வெறியுடன் ஒரு கூர்மையும் கலந்திருப்பதை அர்த்தர் கண்டார். இவற்றுடன் அவன் இடையில் கட்டப்பட்டு முழங்கால் மட்டுமே மறைத்த சிறு துணிக்கும் வயிற்றுக்கும் இடையில் இரு குறுவாள்களும் காட்சியளித்ததைக் கண்ட அர்த்தர், ''இந்தப் பயங்கரப் பைத்தியத் திடம் மன்னர் ஏன் இந்தக் குறுவாள்களை அனுமதித்திருக்கிறார்?'' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டார்.

அவர் அவனை எடை போடுவதில் முனைந்திருந்த சமயத்தில் அவனை அணுகி அவன் முதுகைத் தடவிக் கொடுத்த மோக்ஷர், ''சிற்பி, அஞ்சாதே வந்திருப்பவர் தான் அர்த்தர். நமது தர்மருக்கு அடுத்தபடி சந்நியாசிகள் கூட்டத்துக்குத் தலைமை வகிப்பவர்,'' என்றார்.

அவர் முதுகைத் தடவிக் கொடுத்ததால் சிறிது வெறி அடங்கிய சிற்பி ஏதோ குழப்பத்துடன் மோக்ஷரைப் பார்த்தான். ''இவர் தர்மரின் சிஷ்யரா?'' என்று கேட்டு நகைத்தான் மீண்டும்.

''ஆம். நகைக்காதே. இவர் குரு,'' என்றார் மோக்ஷர்.

''குரு! குரு! யாருக்கு குரு? நமது பெரிய ஸ்வாமிகளுக்கா? இருக்காது. இவன் திருடன். இவனை நம்ப வேண்டாம்.'' என்று சொல்லிக் கொண்டே அர்த்தரை மீண்டும் நெருங்கக் காலடி எடுத்துவைத்த சிற்பியைப் பிடித்துத் தடுத்த மோக்ஷர், ''இவர் திருடரல்ல,'' என்றார்.

திருடரல்ல என்று மோக்ஷர் சொன்னதைக் கேட்ட அர்த்தர், ''இதில் மரியாதை வேறா? திருடனல்ல என்று தான் சொல்லுமே!'' என்றார்.

zeevaa

அவர் துணிவை வரவழைத்துக் கொண்டு பேசியதால் அவரை மீண்டும் வெறித்துப் பார்த்த சிற்பி, ''இவர் என்ன சொல்லுகிறார்?'' என்று கேட்டான்.

''தான் திருடனல்ல என்று சொல்லுகிறார்,'' என்றார் மோக்ஷர்.

''அப்படியானால் நல்லவர்!'' சிற்பியின் கேள்வியில் லேசாக அமைதி தெரிந்தது.

''ஆம் சிற்பி!'' மோக்ஷர் மீண்டும் அவன் முதுகைத் தடவி தலையையும் கோதிவிட்டார். ''பாவம்! புத்தி பிசகினால் எல்லோரும் குழந்தைகளாகி விடுகிறார்கள்,'' என்று முணுமுணுத்தார்.

அர்த்தருக்குச் சிறிது தைரியம் வளர்ந்துவிடவே, ''குழந்தை குறுவாளெறியும் போலிருக்கிறதே,'' என்று அலுத்துக் கொண்டார்.

''குழந்தை விளையாடாதா!'' என்று கேட்ட மோக்ஷர், அர்த்தரைச் சும்மா இருக்கும்படி கண்ணைக் காட்டி, ''சிற்பி! இங்கு யாராவது வந்தார்களா!'' என்று வினவினார்.

சிற்பி விறைத்து நின்றான், ''யார் வந்தது! யார் வந்தது!'' என்று இருமுறை தன்னைக் கேட்டுக்கொண்டு, ''ஆம், வந்தார்,'' என்றான்.

''யார்!'' என்று கேட்டார் மோக்ஷர்.

''இந்த அரண்மனையைக் கட்டிய பழைய மகாராஜா.'' என்றார் சிற்பி. ''அவர் சிரஞ்சீவி,'' என்று ரகசியமாகச் சொன்னான் மோக்ஷரிடம்.

மோக்ஷர் சிறிது சிந்தித்தார். அவர் சிந்தனைக்கு இடையே புகுந்த சிற்பி, ''மோக்ஷரே! குரு!'' என்று அழைத்தான்.

''என்ன சிஷ்யா?'' என்று கேட்டார் மோக்ஷர்.

''எனக்கு நீங்கள் முழு வித்தையையும் சொல்லிக் கொடுக்கவில்லையே?'' என்றான்.

zeevaa

''எது அப்பா?''

''கழுத்தை நெறிக்கும் வித்தை. உங்களைப் போல் அதைச் சரியாகச் செய்ய முடியவில்லை.''

''நரம்பைப் பார்த்து அழுத்தச் சொன்னேனே?''

''அழுத்தினேன். அப்படியும் ஒருவன் தப்பி ஓடிவிட்டான். சாகவில்லை,'' என்று சிற்பி தனது வெறிபிடித்த கண்களில் வருத்தத்தைப் படரவிட்டுக் கொண்டான்.

''நல்ல குரு! நல்ல சீடன்!'' என்று எரிந்து விழுந்தார் அர்த்தர்.

அதுதான் அவர் செய்த பிசகு. அவர் மீது சிற்பி தனது கண்களைத் திருப்பினான். ''குரு!'' என்று மோக்ஷரை அழைத்தான்.

''என்ன சிற்பி?'' என்று மோக்ஷர் கேட்டார்.

''இப்பொழுது பாடம் சொல்லிக் கொடுக்கிறீர்களா?''

''இப்பொழுது என்ன அவசரம்?''

''அதோ அர்த்தர் ஸ்வாமி கழுத்து புஷ்டியாக இருக்கிறது. நரம்புகளும் தெரிகின்றன,'' என்று அர்த்தர் கழுத்தைச் சுட்டிக் காட்டினான் சிற்பி.

அர்த்தருக்குப் பிராணனே போய்விடும் போலிருந்தது. ஆனால் அவர் உதவிக்கு மோக்ஷர் வந்து, ''சிற்பி'' என்று சற்றுக் கடுமையாக அழைத்தார்.

''குரு!''

''முன்னமே சொன்னேன், இவர் நமது பெரிய ஸ்வாமிகளின் சிஷ்யர் என்று.''

''ஆமாம். எனக்குப் பாடம் கற்றுக்கொள்ள வேறு கழுத்து இல்லையே?''

''நான் தருகிறேன்,'' என்றார் மோக்ஷர்.

zeevaa

''இதைவிடப் பெரிய கழுத்தா?''

''ஆமாம்.''

''நரம்புகள்?''

''புடைத்திருக்கும்.''

''அப்படியே நெறிக்கலாம்?''

''ஆமாம்.''

இதற்குப் பிறகு சிறிது சமாதானமடைந்த சிற்பி முதன்முதலாக விசாரித்தான், ''குரு! இங்கு எதற்கு வந்தீர்கள்?'' என்று.

''உன் கப்பல்களைப் பார்க்க வந்தேன்,'' என்றார் மோக்ஷர்.

''நீங்கள்தான் பார்த்தாயிற்றே?'' என்றான் சிற்பி.

''இவருக்குக் காட்ட வந்தேன்,'' என்று மோக்ஷர் சொன்னதும் அர்த்தரை வெறியுடன் நோக்கிய சிற்பி, ''இவர் கப்பலைத் திருட மாட்டாரே?'' என்று கேட்டான்.

மோக்ஷர் சிறிது சிந்தித்து, ''என்ன சிற்பி? ஏனிப்படிக் கேட்கிறாய்? யாராவது திருட முயன்றார்களா?'' என்று வினவினார்.

''இருவர் முயன்றார்கள். ஒருவனை முறித்துப் போட்டேன். இன்னொருவன் ஓடிவிட்டான்,'' என்ற சிற்பி, ''குரு! அவன் எப்படித் தப்பினானென்று தெரியவில்லை. ஆனால் அவனுக்கு எதையும் எடுக்க முடியவில்லை,'' என்றவன், ''குரு! அவனுக்கு நமது அரசகுமாரியைத் தெரியுமா?'' என்று வினவினான்.

''தெரியாது,'' என்றார் மோக்ஷர்.

''அரசகுமாரியை அழைத்து வருவதாகச் சொன்னானே?'' என்று கேட்டான் சிற்பி.

மோக்ஷருக்கும் அர்த்தருக்கும் விஷயம் புரிந்து விட்டது. இந்த அரண்மனையில் நுழையவும் சிற்பியைச் சரி செய்யவும்

zeevaa

ஆதிமால்யன் முயன்றிருக்கிறான். முடியவில்லை. அதனால் அரசகுமாரியின் பெயரைச் சொல்லியிருக்கிறான் என்று இருவருக்கும் தீர்மானமாகத் தெரியவே அவர்கள் அதைப் பற்றி ஏதும் பேசவில்லை. சிறிது நேரம் கழித்து மோக்ஷரே பேசினார், "சிற்பி! அவன் கழுத்தை நானே முறித்துப் போடுகிறேன்," என்று. "சரி வா! உன் அறைக்குப் போவோம்," என்றார்.

சிற்பி தலைகுனிந்து நின்றான் சில விநாடிகள். பிறகு தலையைத் தானே அசைத்துக் கொண்டான். "குரு!" என்று சிறிது மௌனத்துக்குப் பிறகு அழைத்தான்.

"என்ன சிற்பி?" என்று கேட்டார் மோக்ஷர்.

"நாம் செத்த பின்பு எங்கே போகிறோம்?" என்று கேட்டான் சிற்பி.

அவன் கண்கள் மீண்டும் சுழல முற்பட்டதைப் பார்த்த மோக்ஷர் அவன் சித்தம் மீண்டும் சிதறுவதை உணர்ந்தாரானாலும் அதைப் பற்றி எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல், "பத்ரு லோகத்துக்குப் போகிறோம்," என்றார்.

"அப்படியென்றால்?"

"நமது தந்தையர் தாய்மார் இறந்த பின்பு சிறிது காலம் இருக்கும் இடம்!"

"குரு! பொய் சொல்கிறீர். உமக்கு மூளையே இல்லை," என்று பெரிதாக நகைத்த சிற்பி, "இல்லை, யாரும் எங்கும் போவதில்லை. எல்லோரும் இங்கேயே இருக்கிறார்கள். காட்டட்டுமா?" என்று இடியென மீண்டும் நகைத்தான்.

மீண்டும் பைத்தியம் அவனுக்கு முற்றிவிட்டதைக் கவனித்த மோக்ஷர், "அர்த்தரே! அஞ்சாதேயும். இவனுக்கு வெறி இப்படித்தான் விட்டுவிட்டு வரும்." என்று கூறினார். அவர் உடல்

zeevaa

நடுக்கம் கண்டிருந்தது. சொற்கள் விட்டு விட்டு உதிர்ந்தன "அர்த்...த...ரே...! தைர்ர்...யமா...யிரும்..." என்றார் மோக்ஷர்.

அந்தச் சமயத்தில் மோக்ஷரின் கையைப் பிடித்து இழுத்தான் வெறிபிடித்த சிற்பி "ஏ முட்டாள் குரு! வா, உனக்கு இந்த அரண்மனையைக் கட்டிய மகாராஜாவைக் காட்டுகிறேன். அவர் செத்த பிறகு எங்கும் போகவில்லை. இங்கேயே சுற்றிக் கொண்டிருக்கிறார்," என்று கூறி அவரைத் தரதரவென்று இழுத்தான். அந்தச் சமயத்தில் ஓடப் போன அர்த்தரின் கையை மோக்ஷர் பிடித்துக் கொண்டு, "ஓடவா பார்க்கிறீர்?" என்று இழுத்தார்.

இப்படிச் சிற்பியால் சங்கிலித் தொடர் போல் இழுக்கப்பட்ட இரு ஸ்வாமிகளும் வேறு வழியில்லாமல் அவனுடன் சென்றனர். அடுத்திருந்த இரு கதவுகளைத் திறந்து கொண்டு சென்ற சிற்பி கடைசியாக ஒரு பெரிய அறைக்கு வந்ததும், அந்த அறையின் கதவைச் சத்தம் போடாமல் மெதுவாகச் சாத்தினான். "உஸ்! மூச்சு விடாதே! மகாராஜா கோபிப்பார்," என்றும் ரகசியமாகச் சொன்னான்.

அடுத்து அறையின் ஒரு மூலையைச் சுட்டிக் காட்டினான். அறையின் ஒரு கோடியில் உட்கார்ந்திருந்தது ஓர் உருவம். அதைக் கண்ட மோக்ஷர் நடுங்கினார். "எத்தனை நூற்றாண்டுகள் கடந்து விட்டன! இன்னும் இங்கேயே இருக்கிறார்! அவரது உருவம் இருக்கிறது! எத்தனை தத்ரூபமாக உட்கார்ந்திருந்கிறது!" என்று முணுமுணுத்தார். அந்தச் சமயத்தில் தூரத்தில் ஓர் ஆசனத்தில் அவர்களுக்கு முதுகைக் காட்டிக் கொண்டிருந்த அந்த உருவம் லேசாக அசைந்து திரும்பியது. அதன் முகத்தைக் கண்ட மோக்ஷர் அலற எத்தனித்தார். அந்த உருவம் உட்கார்ந்திருந்த இடத்திற்கு மேலே பழைய மகாராஜாவின் உருவத்தை அப்படியே தீட்டியிருந்தான் சிற்பி. அந்த அருவமும் சிற்ப உருவமும் சிறு வித்தியாசமுமில்லாமல் அப்படியே இருந்தன. அந்த உருவத்தையும் அருவத்தையும் கண்ட மோக்ஷர் நடுங்கினார்.

zeevaa

அர்த்தர் நிலை சொல்லத் தரமல்லாததாய் இருந்தது. அவர் மோக்ஷரின் இடுப்பை வளைத்துப் பிடித்துக் கொண்டார்.

செத்துப் போன மகாராஜாவின் அருவம் மெதுவாக எழுந்தது. அவர்களை நோக்கி ஒருமுறை நகைத்தது. அடுத்து மெள்ள அவர்களை நோக்கி நடந்து வரவும் முற்பட்டது. சிற்பி நகைத்தான் பெரிதாக. மோக்ஷர் மூர்ச்சையானார். அர்த்தரையும் இழுத்துக் கொண்டு நிலத்தில் சாய்ந்தார்.



zeevaa

# 40. ரத்த ஜோதி

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக இறந்துவிட்ட சிம்மபுர மகாராஜாவின் அருவம் அடிக்கடி அந்த அரண்மனையில் நடமாடுவதாகவும், தன் எதிரில் வருபவரைக் கழுத்தை முறித்துப் போடுவதாகவும் சிம்மபுரத்தில் பெரிய வதந்தி இருந்தும் அதை மோக்ஷர் நம்பவில்லை.

தாம் பலமுறை அதே அரண்மனைக்கு வந்திருந்தும் கூட எந்த அருவத்தையும் சந்திக்காத காரணத்தால் அந்த வதந்தி பெரும் புரட்டு என்றே நம்பியிருந்தார். சிவகோகர்ண ஸ்வாமியின் உத்தரவுப்படி பலமுறை சிற்பிக்கு மருத்துவம் பார்க்கவும் அவர் வந்திருந்ததால் சிற்பியின் சித்தப் பிரமையின் காரணத்தையும் தன்மைகளையும் அவர் நன்றாக உணர்ந்தேயிருந்ததால், அன்றும் மிகத் தைரியமாகவே சிற்பியிடம் நடந்து கொண்டார். ஆனால் சிற்பியின் அன்றைய போக்கு வழக்கத்துக்கு மாறாக விபரீத மாயிருந்ததாலும் செத்த மகாராஜாவை அவன் காட்டுவதாகச் சொன்னதாலும் அவன் வழியில் போகவிட்டு அவனைத் திருப்ப வேண்டுமென்ற மருத்துவ முறையை மோக்ஷர் கைப்பிடித்தா ரானாலும், பழைய மகாராஜாவைச் சிற்பி தனக்குக் காட்டுவா னென்பதை அறவே எண்ணாததால் அவன் அழைத்த அந்தப் பெரு அறைக்கு அவனுடன் சென்றார். அங்கு உண்மையாகவே பழைய மகாராஜாவின் அருவம் அமர்ந்திருந்ததையும், நூற்றாண்டுகளின் திரைகள் அவர் முகத்தில் விழுந்திருந்ததையும் கண்டு எதற்கும் அஞ்சாத மோக்ஷர் மனமும் திகில் படவே திரும்பிச் செல்ல முயன்றவர், மகாராஜா தம்மை நோக்கி நடந்து வரத் துவங்கியதும், மோக்ஷரின் தலை சுற்றி இருதயம் புரவிவேகத்தில் ஓட

zeevaa



zeevaa

முற்பட்டதால் அவர் அர்த்தரையும், இழுத்துக்கொண்டு அந்த அறையில் சாய்ந்தாரானாலும் முழுவதும் மூர்ச்சையடையவில்லை. ஆகவே நடந்து வந்த மகாராஜாவின் உருவத்தைப் படுத்தபடியே ஓரக் கண்ணால் கவனிக்கலானார்.

பழைய மகாராஜா நல்ல வாளிப்பும் ஒல்லியும் கலந்த சரீரத்தைப் படைத்திருந்ததையும், முகத்தைத் தவிர, மற்ற இடங்களில் அதிகச் சுருக்கங்கள் இல்லாததையும் கவனித்தார் மோக்ஷர். அத்துடன் பழைய மகாராஜா நடந்து வந்தபோது அவர்மீது சதா ஒரு நிழல் விழுந்து கொண்டிருந்ததையும், கால்கள் கணுக்கால்களுக்குக் கீழே அடியோடு தெரியாததையும், மகாராஜா சாதாரணமாக நடப்பதற்கு பதில் பாதங்களில்லாமல் குச்சியாக கணுக்கால்களுடன் நின்றுவிட்ட கால்களுடன் மிதந்து வருவதையும் கவனித்த மோக்ஷர் திகில் அதிகமாகவே, அவர் கைகால்கள் லேசாக நடுங்க மீண்டும் கண்களை மூடிக் கொண்டார்.

அவர் நடுக்கத்தைக் கண்ட பழைய மகாராஜா மெதுவாக நகைத்தார். ''சிற்பி! இவர்கள் இருவரும் மயக்கமடைந்திருக்க வேண்டும்'' என்றார் சிற்பியை நோக்கி.

சிற்பியின் வெறிபிடித்த கண்கள் மோக்ஷரையும் அர்த்தரையும் நோக்கி மகாராஜாவையும் நோக்கின. ''ஆம்! மகாராஜா இன்னும் இறக்கவில்லை. அனுமதி கொடுத்தால் இரண்டு பேரையும் முறித்துப் போடுகிறேன்'' என்றான்.

போலி மயக்கத்திலிருந்த அர்த்தர் இதைக் கேட்டதும் ஓடிவிட நினைத்துச் சிறிது மோக்ஷரின் பிடிப்பிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள முயன்றார். ஆனாலும் மோக்ஷரின் கையிலிருந்து சிறிதுகூடவிலக முடியாததால் சிரமப்பட்டு நெளியலானார். அப்பொழுது மீண்டும் ஒலித்தது மகாராஜாவின் குரல். ''சிற்பி! இவர் ஏன் நெளிகிறார்?'' என்று கேட்டார் மகாராஜா.

''நம்மிடமிருந்து தப்ப முயல்கிறார்'' என்றான் சிற்பி.

zeevaa

''இங்கு என்ன பயம் இவர்களுக்கு?'' என்று மகாராஜா கேட்டார்.

''எதுவுமில்லை'' என்றான் சிற்பி.

''அப்படியானால் எழுந்திருக்கச் சொல்'' என்றார் மகாராஜா.

ஆனால் இருவரும் எழுந்திருப்பதாக இல்லை என்பதை உணர்ந்து கொண்ட சிற்பி, ''மகாராஜா உத்தரவு கொடுத்தால் இவர்கள் காதில் விடத் திராவகம் கொண்டு வருகிறேன்'' என்றான்.

''வேண்டாம். அதோ இருக்கும் எனது வாளைக் கொண்டு வா'' என்று மகாராஜா உத்தரவிட, சுவரிலிருந்த பெரிய வாளை நோக்கி ஓடிய சிற்பி அது மாட்டியிருந்த ஆணியிலிருந்து அதை எடுத்துக் கொண்டு திரும்பி வந்தான். அந்தப் பெரிய வாளைக் கையில் பிடித்துக் கொண்ட மகாராஜா, ''சிற்பி!'' என்று அழைத்தார்.

''மகாராஜா!'' என்றான் சிற்பி.

''இவர்கள் எழுந்ததும்...''

''உம்.''

''இவர்களையும் என்னுடன் பாதாள அறைக்கு அழைத்துச் செல்கிறேன்.''

''நல்லது மகாராஜா நல்லது. இவர்களை அப்படிச் சிக்ஷிப்பது தான் நல்லது'' என்ற சிற்பி அறையின் குறுக்கே ஓடி மறைந்தான்.

அவன் மறையும் வரை காத்திருந்த மகாராஜா சுற்று முற்றும் நோக்கிவிட்டுத் தமது கையிலிருந்த வாளால் மோக்ஷரையும் அர்த்தரையும் தட்டினார். அந்த வாள் பட்டமாத்திரத்தில் மிதமிஞ்சிய அச்சத்தால் இரண்டு துறவிகளும் உளறினார்கள். ''மகாராஜா கருணை கருணை'' என்றார் மோக்ஷர்.

''தெரியாமல் வந்துவிட்டோம். விடுங்கள் ஓடிவிடுகிறோம்,'' என்றார் அர்த்தர்.

zeevaa

மகாராஜா அவர்களைக் கூர்ந்து நோக்கிப் புன்முறுவல் கொண்டார். ''மோக்ஷரே! அர்த்தரே! அஞ்ச வேண்டாம். நான் பிசாசு அல்ல,'' என்றும் சொன்னார்.

''இல்லை இல்லை,'' என்றார் மோக்ஷர் கண்களைத் திறக்காமலே.

''இருக்க முடியாது,'' என்றார் அர்த்தர். அத்துடன் திரும்பி மோக்ஷர் காதில், ''பிசாசு தன்னைப் பிசாசு என்று ஒப்புக் கொள்ளுமா?'' என்று மிக மெதுவாக ஓதினார்.

மோக்ஷர் பதில் சொல்லவில்லை. சிறிது தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கண்களை மெதுவாகத் திறந்து, ''மகாராஜா!'' என்றார் மெதுவான குரலில்.

''மோக்ஷரே! என்ன?'' என்று வினவினார் மகாராஜா.

''தங்களுக்குப் பாதங்கள் இல்லையே?'' என்று இழுத்தார்.

''எப்படியிருக்கும்? முதல் போரில் இரண்டு கணுக்கால்களிலும் அம்பு பாய்ந்தது உமக்கு நினைப்பில்லையா? நீரும் பக்கத்தில்தானே நின்றிருந்தீர்?'' என்று மகாராஜா கேட்டு நகைத்தார் பெரிதாக. அவர் சிரிப்பை அந்த அறையின் சுவர்கள் பயங்கரமாக எதிரொலி செய்தன.

''எந்தப் போரைக் குறிப்பிடுகிறீர்கள்?'' என்று கேட்டார் மோக்ஷர்.

''எனது மூதாதை...'' மகாராஜா மெதுவாகச் சொன்னார்.

''ஆமாம்.''

''அதுதான் சிங்கம்.''

''உமது மூதாதை சிங்கமா?''

''சிங்கத்தின் புதல்வர்.''

''ஐயோ...''

''அவருடன் நான் போரிடுகையில்...''

''தந்தையுடன் போரா?''

''காலாகாலத்தில் தந்தை சிம்மாசனத்தை விடாதிருந்தால் போரிடாமல் என்ன செய்வது?''

விஷயம் முற்றிப் போகிறதை உணர்ந்த மோக்ஷர் மெள்ளத் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்து அர்த்தரையும் எழுப்பினார். ''அர்த்தரே! எழுந்திரும்,'' என்று.

கண்களைத் திறக்காமலேயே கேட்டார் அர்த்தர், ''எதற்கு?'' என்று.

''மன்னர் பாதங்களில் வணங்க,'' என்றார் மோக்ஷர்.

''மன்னருக்குத்தான் பாதங்கள் இல்லையே,'' என்றார் அர்த்தர் குரலில் நடுக்கம் தெரிய.

''பாதகமில்லை. கணுக்கால்களில் விழுவோம்,'' என்றார் மோக்ஷர்

அர்த்தர் மெள்ளக் கண்களைத் திறந்து, ''சாஸ்திர விரோதம்'' என்றார்.

''என்ன சாஸ்திரத்தைக் கண்டீர்?'' என்று மிரட்டினார் மோஷர்.

''திருவடிகளில் விழத்தான் சாஸ்திரமிருக்கிறது. கணுக்கால் குச்சிகளில் விழ சாஸ்திரம் கிடையாது,'' என்றார் அர்த்தர்.

பழைய மகாராஜா பெரிதாக நகைத்தார், ''அர்த்தரே! உமக்கு சாஸ்திரத்தின் அர்த்தம் தெரியவில்லை. கால்களில் எங்கு வேண்டுமானாலும் பணியலாம். மகாராஜாவுக்கு முழங்கால் மட்டுமிருந்தால் முழங்கால்களில் பணியலாம்,'' என்று விளக்கிய மகாராஜா, ''சரி சரி! எழுந்திருங்கள் நேரமாகிறது,'' என்றார்.

''எதற்கு நேரமாகிறது?'' என்று கேட்டார் மோக்ஷர்.

zeevaa

''இந்த அரண்மனையின் ரகசியங்களைக் காட்ட. சிவப்பு ஜோதியில் உங்களை நீராட்ட,'' என்றார் மகாராஜா.

''ஐயோ வேண்டாம்,'' என்று கதறினார் மோக்ஷர்.

''ஏன்? அதில் நீராட எத்தனை பேர் தவம் கிடக்கிறார்கள் தெரியுமா?'' என்று மகாராஜா சட்டென்று திரும்பினார்.

''அதைப் பார்த்தவர்கள் திரும்பியது கிடையாதாம் மகாராஜா, எங்களுக்கு அது வேண்டாம். நாங்கள் ஆற்றிலாவது குளத்திலாவது....'' என்று அர்த்தர் வார்த்தையை முடிக்குமுன்பு, ''ஆற்றில், குளத்தில் விழுந்து சாவது கூடாது. அப்படிச் செத்தால் என்னைப் போல் பிசாசாக அலைவீர்கள்,'' என்று மகாராஜா தெரிவித்தார்.

''அப்படியானால் தாங்கள் பிசாசுதானா?'' என்றார் மோக்ஷர்.

''ஆம். அதனாலென்ன?'' என்று மகாராஜா கேட்டார்.

''மகாராஜா நாங்கள் இப்படியே இருந்து விடுகிறோம்,'' என்றார் அர்த்தர்.

''நீங்கள் இப்படியே இருந்தால் எனக்குத் துணை ஏது?'' என்று மகாராஜா கேட்டார்.

''அவன் தான் சிற்பி இருக்கிறானே?'' என்று மோக்ஷர் சமாளிக்கப் பார்த்தார்.

''அவன் எனக்குக் குருவாயிருக்க முடியாதே?'' என்றார் பழைய மகாராஜா.

''உமக்கு குரு எதற்கு மகாராஜா?'' என்று வினவினார் அர்த்தர்.

''அர்த்தரே! ராஜசபை என்றால் குரு, மந்திரி, ஒரு விதூஷகன், பிரதானி, சேனாதிபதி, சாமரம் வீச இரண்டு பேர் வேண்டாமா?'' என்று மகாராஜா கேட்டார்.

zeevaa

''வேண்டியதுதான் இத்தனை பேருக்கு எங்கே போவது?'' என்று மோக்ஷர் கேட்டார்.

''பயப்பட வேண்டாம்: நாளைக்குள் இன்னும் நான்கு பேரைச் சேர்த்து விடுகிறேன்.'' - மகாராஜா திட்டமாகச் சொன்னார்.

''அதாவது?'' மோக்ஷர் சந்தேகத்துடன் கேட்டார்.

''கொன்று வருகிறேன். அந்தப் பிசாசுகளையும் சேர்த்துக் கொள்வோம். சபை பூர்த்தியாகிவிடும்'' என்ற மகாராஜா சட்டென்று திரும்பி நடந்து பழைய இடத்திற்குச் சென்று உட்கார்ந்து கொண்டார். அந்தச் சமயத்தில் சிற்பி ஒரு பாத்திரத்தை எடுத்துக்கொண்டு வேகமாக வந்து உட்கார்ந்திருந்த இரு துறவிகளையும் கவனித்தார். ''உயிர் வந்துவிட்டதா? சரி, இதைக் குடியுங்கள்,'' என்றான் பாத்திரத்தை நீட்டி.

''அதில் என்ன இருக்கிறது?'' என்று கேட்டார் மோக்ஷர்.

''அமிருதம்,'' என்றான் சிற்பி.

''எனக்கெதற்கு அமிருதம்?'' என்று கேட்டார் மோக்ஷர்.

''அருவமாக.'' என்றான் சிற்பி. தனது பற்களைக் காட்டினான் வெறியுடன்.

''ஐயோ! விஷம், விஷம்!'' என்று கூவினார் அர்த்தர்.

''மனிதன் உள்ளத்திலிருக்கும் விஷத்தைவிடக் கொடிய விஷம் கிடையாது!'' என்று சிற்பி தனது முழங்கால்களை மோக்ஷர் மீதும் அர்த்தர் மீதும் வைத்து அவர்களை மல்லாக்கச் செய்து முதலில் மோக்ஷர் வாயில் அமுத பாத்திரத்தை வைத்தான். அவர் பல்லை இறுக்க மூடிக் கொண்டிருக்கவே அந்தப் பாத்திரத்தின் விளிம்பினாலேயே வாயைத் திறந்து மதுவை ஊற்றினான். அடுத்து அதே மாதிரி அர்த்தருக்கும் புகட்டினான்.

மிக மிக இனிமையாயிருந்ததை மோக்ஷர் சுவையிலிருந்து புரிந்து கொண்டார். அர்த்தர் அதை அருந்திச் சொட்டை விட்டார்

zeevaa

நாக்கினால். ''இன்னும் கொஞ்சம் கொடு,'' என்று இருவருமே கை நீட்டினார்கள்.

''முடியாது. இதுவே அதிகம்,'' என்ற சிற்பி அவர்கள் மார்பிலிருந்து எழுந்து ஓடினான். அர்த்தரும் மோக்ஷரும் தங்கள் உடம்பில் புது வேகம் பிறப்பதை உணர்ந்து எழுந்தனர். சிற்பியைப் பிடிக்க ஓடினர். சிற்பி மகாராஜாவைச் சுற்றி ஓடினான். இரு வழுக்கைத் தலை சாமியார்களும் அவனைத் துரத்தினர். இப்படி மூவரும் மகாராஜாவைப் பிரதட்சிணம் செய்து ஓடிக் கொண்டிருக்கையிலேயே இரு துறவிகளின் கண்களும் திடீரெனப் பார்வை இழந்தன. இருவரும் மயக்கமுற்று நிலத்தில் சாய்ந்தனர்.

அவர்கள் மயக்கத்தில் எத்தனை நேரம் படுத்திருந்தார்களோ அவர்களுக்கே தெரியாது. அந்த மயக்கத்திலிருக்கையில் மோக்ஷர் பல கனவுகளைக் கண்டார். வங்கத்திலிருந்து வந்த சிம்மலன் கதை அவர் சித்தத்தில் வலம் வந்தது. மிகப் பயங்கரமான விசித்திரமான கதை அது. அதைத் தொடர்ந்து வந்தது ஓர் ஒளிப்பிழம்பு. சிவந்த பெரிய ஒளி நெருப்புப்போல் விரிந்து எங்கும் வியாபித்தது பெரும் நெருப்பு. கடும் சிவப்பு. கதிர்கள் எங்கும் விரிந்தன. அற்புதமான அனுபவம். அத்துடன் பயங்கர அனுபவம். அந்த ஒளியிலிருந்து எழுந்த சிங்கம் ஒன்றும் அவரை நோக்கி வாயைத் திறந்துகொண்டு வந்தது. அதன் வாயில் ஒரே ரத்தம்! சிவப்பு ஜோதி அந்த ரத்தச் சிவப்பை ஆயிரம் மடங்கு அதிகப்படுத்தியது.

zeevaa

# 41. பாதாள யாத்திரை

சிற்பியிடமிருந்து மதுவை வலுக்கட்டாயமாக அருந்த அவனைத் துரத்தி ஓடி, அவனுடன் மகாராஜாவைப் பிரதட்சிணம் செய்த அர்த்தரும் மோக்ஷரும் திடீரென மயக்கமுற்றுக் கீழே விழுந்ததும், மகாராஜா தமது ஆசனத்திலிருந்து எழுந்து நின்று தரையில் கிடந்த துறவிகளைச் சில வினாடிகள் உற்று நோக்கினார். அவர்களைச் சிற்பியும் நோக்கினான். அவன் கண்களில் வெறி அடியோடு மறைந்து அனுதாபம் நிரம்பிக் கிடந்தது. கண்களில் துன்பம் தோய அவன் மகாராஜாவை நோக்கி, ''மன்னவா, இவர்களை என்ன செய்யலாம்?'' என்று வினவினான்.

மகாராஜா சிற்பியை நோக்கிப் புன்முறுவல் செய்தார். ''அவர்களை என்ன செய்யலாம் என்பதைப் பற்றிப் பிறகு யோசிப்போம். முதலில் எனது வேஷத்தைக் கலைத்து விடு. இந்த முகமூடி பெரும் வேதனையாக இருக்கிறது எனக்கு'' என்றார்.

சிற்பி மெல்ல நகைத்தான். ''இதோ நாலைந்து வினாடிகளில் அதைக் கழற்றி விடுகிறேன்'' என்று கூறிய சிற்பி அந்த அறைக் கோடியிலிருந்த ஒரு கதவைத் திறந்துகொண்டு பக்கத்து அறைக்குச் சென்று ஒரு மரக்கிண்ணத்தில் நீரும் இரண்டு மூன்று மண் குப்பிகளையும் கோழி இறகுகள் இரண்டையும் கைகளில் பிடித்துக் கொண்டு வந்து, ''மகாராஜா! அமருங்கள் ஆசனத்தில்,'' என்று கூறி, அவர் உட்கார்ந்ததும் அவருக்கெதிரில் கையிலிருந்த கிண்ணம் குப்பிகள் இவற்றை வரிசையாக வைத்தான்.

அடுத்து கிண்ணத்திலிருந்த நீரை எடுத்து மன்னன் முகத்தின் இரண்டு ஓரங்களிலும் தலையிலும் தெளித்தான். பிறகு கோழி

zeevaa

இறகால் லேசாகத் தலைமத்தியிலிருந்து முகமூடி ஓரங்களைக் கீறினான் மிக மெதுவாக. அடுத்து முகத்தை மூடியிருந்த சருமத்தை லேசாக எடுக்கலானான். முதலில் எடுக்கும்போது சுயசருமத்தில் பிடித்திருந்த போலி முகச்சருமம் வரச் சிறிது கஷ்டப்பட்டதால் வலியால் மகாராஜா முகம் சுளித்தாரானாலும் பிறகு பல்லைக் கடித்துச் சமாளித்துக் கொண்டார். மெள்ள அந்தப் போலி முகச் சருமம் எடுக்கப்பட்டதும் இரண்டு மூன்று தைலங்களைக் குப்பியிலிருந்து மகாராஜாவின் முகத்தில் சிற்பி தடவி இரண்டு வினாடிகள் தாமதித்து ஒரு துணியைக் கொடுத்து, "இதனால் முகத்தை நன்றாகத் துடைத்துக் கொள்ளுங்கள்," என்றான்.

அவன் சொற்படி செய்து மீண்டும் சுய உருவத்தை அடைந்த விஜயன் தனது ஆசனத்திலிருந்து எழுந்து அறை மூலைக்குச் சென்று அங்கிருந்த கண்ணாடியில் தனது முகத்தைத் திரும்பத் திரும்பப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து மீண்டும் அறை நடுவுக்கு வந்து, "சிற்பி, நீ எனக்கு அளித்தது மாறு வேடமல்ல; புத்தம் புதிய சிருஷ்டி. என் மூலம் எனது மூதாதையை மீண்டும் பிறக்க வைத்தாய்," என்று பாராட்டினான்.

சிற்பி தலையை அசைத்து, "சிங்களத்து மன்னனே! அந்த முகச் சருமத்தை நான் சிருஷ்டித்துப் பல ஆண்டுகள் ஆகின்றன. அதோ சுவரிலிருக்கும் ஓவியத்தை நான் வரையவில்லை. எந்தக் காலத்தில் யார் வரைந்தார்களோ தெரியாது. இந்தச் சிம்மபுர அரண்மனையி லிருந்த எனது தந்தை சொல்லியிருக்கிறார் - பல தலைமுறைகளாக அது இதே இடத்தில் இருப்பதாக. நாங்கள் பரம்பரைச் சிற்பிகள், ஓவியர்கள், தலைமுறை தலைமுறையாகச் சிம்மபுரத்திலிருந்து அரண்மனைப் பணிகளைச் செய்து வருகிறோம். இந்த ஓவியத்தைப் பற்றிய ரகசியமும் ஒன்றிருக்கிறது," என்றான்.

அதைக்கேட்ட விஜயன், "ஆமாம் பைத்தியமில்லாத நீ எதற்குப் பைத்திய வேஷம் போட்டாய்? இந்தத் துறவிகளை எதற்காக விரட்டப் பார்த்தாய்?" என்று வினவினான்.

zeevaa

''சிங்களத்து இளவலே! இந்த அரண்மனையின் கதை பெரிய கதை. இதன் ரகசியங்கள் கணக்கில் அடங்காதவை. உதாரணமாக, இந்த அரண்மனை சிம்மபுரத்தின் நட்ட நடுவிலிருக்கிறது. ஆனால் இது ஒரு பெரிய ஆலமரம். இதன் வேர்கள் இந்த நகரம் பூராவும் ஓடுகின்றன. இதை முதலில் நிர்மாணிக்கப் பல ஆண்டுகள் ஆனதாகச் சொல்கிறார்கள். இந்த அரண்மனையின் அறைகள் ஒவ்வொன்றுக்கும் பாதாள வழிகள் உண்டு. ஒவ்வொன்றும் சிம்மபுரத்தின் ஒவ்வொரு மூலைக்கும் செல்கிறது. அப்படி சுமார் ஐம்பது சுரங்க வழிகளுக்கு மேல் இருக்கின்றன. அவை நகரத்தைத் தொடாத இடமில்லை. ஆகையால் இங்கு யார் துராக்கிருதமாக நுழைய முற்பட்டாலும் ஏதாவது ஒரு வழியில் சிக்கிக் கொள்வார்கள். அவர்களை ஏதாவது ஒரு வழியில் விரட்டுவது என் கடமை. இதன் மர்மங்களை அறிந்து உயிருடன் வெளியேறியவர் கள் மிகக் குறைவு. அப்படி வெளியேறிய சிலரும் திரும்பி இங்கு வர முற்பட்டதில்லை,'' என்று விளக்கினான் சிற்பி.

மேலும் சொன்னான் சிற்பி: ''இந்த அரண்மனையின் ரகசியங்கள் ஆயிரம் உண்டு. ஆகவே இங்குள்ள மர்ம அறைகளில் யாரையும் அனுமதிக்க வேண்டாமென்று சிவகோகர்ண ஸ்வாமியின் கண்டிப்பான உத்தரவிருக்கிறது. வருபவர்களை விரட்ட நான் பைத்திய வேஷம் போடுகிறேன். எந்த மனிதனும், பைத்தியத்திடம் பயப்படும் அளவுக்குச் சாதாரண மனிதரிடம் பயப்படுவதில்லை. இங்கு வருபவர்களை அனுமதிக்க வேண்டுமானால் அவர்களை வஜ்ரஹஸ்த மகாராஜாவோ, சிவகோகர்ண ஸ்வாமியோ, அனுப்பியிருக்க வேண்டும்.

அப்படி வருபவர்கள் கதவைத் தட்ட மாட்டார்கள். 'சிவோஹம்' என்று சொல்லுவாரக்ள். அப்பொழுது கதவைத் திறப்பேன். இரண்டொரு முறை மோக்ஷர் அப்படி வந்திருக்கிறார். அவரும் இம்முறை அந்த மூல மந்திரத்தைச் சொல்லாமல் கதவை இடித்தார். கூட இந்த அர்த்தரையும் அழைத்து வந்தார். ஆகவே அவர்களை

zeevaa

விரட்டப் பைத்தியமாக நடித்தேன். அதன் பயனைத் தாங்களே பார்த்தீர்கள்.''

விஜயன் சிறிது சிந்தித்து விட்டுக் கேட்டான் ''நீ தான் இந்த அரண்மனையின் காவலனா?'' என்று.

''பரம்பரையாகச் சிற்ப வேலையுடன் காவல் வேலையும் பார்த்து வருகிறது எங்கள் குலம்.''

''இந்த அரண்மனையின் வேர்களென்று சொன்னாயே, அத்தனை ரகசிய வழிகளும் உனக்குத் தெரியுமா?''

''தெரியும்.''

''அப்படியானால் நான் புரவிக் கொட்டடி மூலம் நுழைந்து அரசகுமாரியை மீட்ட வழியும் இந்த அரண்மனை வேர்களில் ஒன்றா?''

''ஆமாம் மன்னவா, இல்லாவிட்டால் நீங்களும் மூர்சமதும் ஆயுதக்கிடங்குக்குள் போயிருக்கவும் முடியாது. அரசகுமாரியை ஆதிமால்யனிடமிருந்து மீட்டிருக்கவும் முடியாது. ஆனால் அதை மிக சாமர்த்தியமாகச் செய்தீர்கள். விளக்குீ இருக்கையிலே அரசகுமாரி கட்டப்பட்டிருந்த மஞ்சத்தின் கால்களில் கயிறுகளைப் போட்டுப் பின்னுக்கு இழுத்தீர்கள் மெதுவாக. அப்படி நாற்காலி பின்னுக்கு நகருவதைக் கண்டு ஆதிமால்யனே அசந்து விட்டான். வஜ்ரஹஸ்த மகாராஜாவும் அசந்திருப்பார். போதாத குறைக்கு விளக்கையும் ஊதிவிட்டார்கள். அடுத்து அரசகுமாரியின் கட்டுகளை அவிழ்ப்பதோ, அவர்களை மீட்பதோ ஒரு பிரமாதமல்ல'' என்று சிற்பி சிலாகிப்பதன் மூலம் ஆயுதக்கிடங்கில் நடந்த கதையையும் குதூகலத்தோடு விவரித்தான். ''மூர்சமதை ஏன் அங்கேயே விட்டு வந்தீர்கள்?'' என்று ஒரு சந்தேகமும் கேட்டான் சிற்பி.

''வஜ்ரஹஸ்த மகாராஜாவுக்கு உதவ,'' என்றான் விஜயன். ''அடுத்து நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டான்.

zeevaa

''சிங்களத்து மன்னவா, அடுத்து நீங்கள் வந்த காரியத்தைக் கவனிப்போம். ஆனால் இரவுக்கு முன்பு அது முடியாது. அதுவரை நீங்கள் அரசகுமாரியின் அறையில் தங்கியிருங்கள். நான் வந்து உங்களை அழைத்துப் போகிறேன்,'' என்றான்.

விஜயன் சிறிது சிந்தித்துவிட்டு, ''இவர்கள்?'' என்று துறவிகளைக் காட்டினான்.

''மோக்ஷர் இங்கு அடிக்கடி வருவார் தர்மருடனும் காமருடனும், அர்த்தர்தான் வந்ததில்லை. இவர்கள் இருவருக்கும்கூடச் சிம்மபுர ரகசியத்தைக் காட்டுவோம்,'' என்றான்.

விஜயன் கையிலிருந்த வாளைத் தனது கச்சையில் கட்டிக் கொண்டான். ''அது அத்தனை பெரிய ரகசியமா?'' என்று வினவினான்.

''இல்லாமலா அதை அறிந்துசெல்ல, இல்லை எடுத்துச் செல்ல சிங்களத்திலிருந்து வந்திருக்கிறீர்கள்?'' என்று கேட்ட பிறகு லேசாக நகைத்தான்.

விஜயன் தனது கூரிய விழிகளைச் சிற்பிமீது நாட்டினான் ஒரு வினாடி. ''சிற்பி, நான் வந்தது கப்பல்களைக் கட்டும் உன்னைப் பார்க்க, உன்னை அழைத்துச் செல்ல,'' என்றான் உறுதியாக.

''மன்னவா! இந்தக் கதையை நம்பக்கூடியவர்களிடம் சொல்லுங்கள். கப்பல் கட்ட என்னை வரவழைக்கத் தாங்கள் நேரில் வர அவசியமில்லை. உங்கள் குலதனத்தை எடுத்துப்போக வந்திருக்கிறீர்கள். ஆனால் அதை எப்படி எடுத்துப் போவீர்களோ எனக்குத் தெரியாது. இதற்கு முன்பு அதை எடுக்க முயன்ற இருவருக்குக் கண் போய் விட்டது, பித்தம் பிடித்து விட்டது. இந்த அரண்மனையின் தனி அறையில் அவர்கள் இன்னுமிருக்கிறார்கள். அவர்களுக்கு உணவளித்துக் காத்து வரும்படி வஜ்ரஹஸ்த மகாராஜா உத்தரவிட்டிருக்கிறார்'' என்ற சிற்பி மேலும் சொன்னான்: ''மன்னவா! நீங்கள் உண்மையில் சிம்மலன் வம்சத்தில் வந்து

zeevaa

சிம்மலனின் நேர்வழிப் பிறப்பாயிருந்தால் அந்தச் சொத்து - அந்த மகா அக்னி உங்களை எதுவும் செய்யாது. எதற்கும் எச்சரிக்கையாயிருங்கள்'' என்று.

விஜயன் சிற்பிக்கு எந்தப் பதிலையும் சொல்லவில்லை. நீண்ட நேரம் சிந்தனையில் இறங்கினான், கலிங்கம் வந்தது முதல் நடந்த விசித்திரங்களையெல்லாம் எண்ணிப் பார்த்தான். ஆதிமால்யனிடம் சிறைப்பட்ட அரசகுமாரியைப் பின்பற்றிச் சிம்மபுரம் வந்தது, அரண்மனையில் தன்னை வரவேற்ற சிற்பியின் உதவியுடன் அரசகுமாரியை விடுவித்தது ஆகிய விவரங்கள் அவன் சித்தத்தில் வலம் வந்தன. அரண்மனையின் முதல் கட்டில் நுழைந்ததுமே தன்னையும் மூர்சமதையும் அடையாளம் கண்டுபிடித்த சிற்பி, தனக்குச் சகல உபசாரங்களையும் செய்து அரசகுமாரியை மீட்கவும் உதவியது முதலில் விசித்திர மாயிருந்தாலும், சிற்பி காரணத்தை விளக்கிய பிறகு எல்லாம் சகஜமாகிவிட்டது அவனுக்கு. தனது முகஜாடையிலிருந்தே சிற்பி தன்னைப் பழைய சிம்மபுர மகாராஜாவின் சந்ததியென்பதைத் தீர்மானித்து விட்டதையும், தனக்கு அந்த அரண்மனையில் சகல வசதிகளையும் செய்து கொடுத்ததையும் எண்ணிய விஜயன், ஒரு மூதாதை ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பும் தனக்கு உதவுவதை எண்ணி, பரம்பரையிலும் குலத்தொடர்ச்சியிலும் ஒரு ரத்த பந்தமும் ரத்த பாசமும் இருக்கிறது'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். இத்தகைய எண்ணங்களுடன் சிற்பியைத் தொடர முற்பட்ட விஜயன், ''இவர்களை என்ன செய்வாய்?'' என்று துறவிகளைக் காட்டி மீண்டும் வினவினான்.

''கவலைப்படாதீர்கள். நான் கவனித்துக்கொள்கிறேன்'' என்ற சிற்பி விஜயனை அந்த அறையிலிருந்து அதே வரிசையில் கோடியிலிருந்த வேறு ஓர் அறைக்கு அழைத்துச் சென்று, ''மன்னவா, அரசகுமாரி இங்குதானிருக்கிறார்கள்'' என்று கூறிக் கதவையும் தட்டினான்.

zeevaa

அறைக் கதவைத் திரிலோகசுந்தரியே திறந்தாள். விஜயன் உள்ளே வந்ததும், ''நாகாநந்தா!'' என்று அழைத்தாள்.

''என்ன ராஜகுமாரி?'' என்று சிற்பி கேட்டான்.

''நாங்கள் எப்பொழுது சித்தமாக இருக்கவேண்டும்?'' என்று விசாரித்தாள் ராஜகுமாரி.

''இரவு முற்றியதும், முதல் ஜாமத்தின் ஆரம்பத்திலேயே'' என்று கூறிச் சென்றுவிட்டான் சிற்பி.

அவன் சென்றதும் அறைக்கதவைத் சாத்தித் தாளிட முயன்ற விஜயனை அரசகுமாரி தடுத்தாள். ''வேண்டாம், சாதாரணமாகவே மூடுங்கள்'' என்றாள்.

''ஏன் சுந்தரி?'' என்று வியப்புடனும் ஓரளவு ஆத்திரத்துடனும் வினவினான் விஜயன்.

''இன்றிரவு உங்கள் குலதனத்தைச் சந்திக்கும் வரையில் ஆசாரம் வேண்டும் உங்களுக்கு,'' என்றாள் அரசகுமாரி.

அவள் நந்தவனத்திலிருந்து நீராடிவந்து அதிக நேரம் ஆகவில்லை. நீராட்ட வாசனைப் பொடியின் நறுமணம் அவள் உடம்பிலிருந்து வீசி அந்த அறையையே நறுமணத்தில் மூழ்க வைத்திருந்தது. அவள் தலையில் சூடியிருந்த இரண்டு செண்பக மலர்கள் குழலில் தடவியிருந்த வாசனைத் தைலத்தின் நறுமணத்தை அர்த்தமற்றதாகச் செய்திருந்தன. அரசகுமாரியை அணுகி, ''சுந்தரி! என்னை ஏன் காக்கச் சொல்லி நரக வேதனைக்குள்ளாக்குகிறாய்?'' என்று அவள் கூந்தலை முகர்ந்தவண்ணம் கேட்டான் விஜயன். அவன் கைகள் அவளைச் சுற்றி நெருங்கின.

அதுவரை இடங்கொடுத்த சுந்தரி, அவன் கைகள் அவள் உடலை ஆராய முயன்றபோது தனது கைகளால் நீக்கி, ''இதற்கு நேரம் இருக்கிறது. இன்று நீங்கள் உங்கள் குலதனத்திடம் போகும்போது ஆசாரத்துடனும் நிர்மலமான சித்தத்துடனும் செல்ல வேண்டும்.

zeevaa

ஆகவே அவசரப்படாதீர்கள். நான் எங்கே போய்விடுவேன்? கிணற்று நீரை ஆற்று வெள்ளமா கொண்டு போய்விடும்?'' என்றாள்.

விஜயன் அவள் மீதிருந்த கைகளை நீக்கினான். ''எப்பொழுது நாம் குலதனத்தைப் பார்க்கப் பயணப்படுவோம்?'' என்று வினவினான்.

''அதுதான் நாகாநந்தன் சொன்னானே?'' என்றாள் ராஜகுமாரி.

''குலதனத்தை நீ பார்த்திருக்கிறாயா?'' என்று விஜயன் கேட்டான்.

''பார்த்திருக்கிறேன்'' என்றாள் அரசகுமாரி.

''எப்படியிருக்கும்?''

''சொல்லுக்கு அப்பாற்பட்டது.''

''அப்படியா?''

''நீங்களே புரிந்து கொள்வீர்கள்'' என்ற அரசகுமாரி அவனை நெருங்கி, ''நீங்கள் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும்'' என்று கூறி அவன் கன்னத்தோடு தனது கன்னத்தை வைத்து இழைத்தாள்.

அந்த இழைப்பு அவன் வெறியை மீண்டும் கிளறினாலும் அவன் உணர்ச்சிகளை வெற்றிகொண்டான், தான் கலிங்கம் வந்த காரியத்னித எண்ணி.

அவள் உணர்ச்சிவசப்பட்டுச் சொன்னாள்: ''என் மன்னவா! யாருக்கும் கிட்டாத பாக்கியம் இன்றிரவு உனக்குக்கிட்டப் போகிறது. யாரும் நுழைய அஞ்சும் கண்ணாடி அறைக்குள், உருளும் அக்னி குண்டத்தின் பிரகாசத்தில், அது வீசும் கதிர்களில் நீ முழுகப் போகிறாய்... யாரும் இதுவரை தொடாத, தொடமுயன்று அவதிக்குள்ளான பெரும் பொக்கிஷத்தை நீ தொடப் போகிறாய். நீ என்ன? நானும் தொடப் போகிறேன். அங்கு நாம் இருவரும்

zeevaa

சதிபதிகளாவோம். அதுமட்டுமல்ல, ஒளி வீச்சிலிருந்து தப்பி வந்தால், உன் குலதனம் உனக்குக் கிடைத்தால் நீ சிங்களத்தின் சக்கரவர்த்தி. சந்தேகமில்லை''

இதைக்கேட்ட விஜயன் ஏதும் பேசவில்லை. அவளுடன் எதிரிலிருந்த மஞ்சத்துக்குச் சென்று அவள் கழுத்தில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டான். நேரம் ஓடியது.

முதல் ஜாமத்தில் சிற்பி வந்தான். ''பாதாள யாத்திரைக்கு நேரமாகி விட்டது. புறப்படுங்கள்'' என்றான்.



சாண்டில்யன்

zeevaa

# 42. குலதனம்

கலிங்கத்து ராஜகுமாரி கட்டழகி திரிலோகசுந்தரியின் கழுத்தில் தனது முகத்தைப் புதைத்துக் கொண்டு காலத்தைக் கடத்திக் கொண்டிருந்த சிங்களத்துச் செல்வனுக்கு அவள் கழுத்தைவிட இன்பமான சொர்க்கலோகம் எதுவும் இருக்க முடியாது என்று தோன்றியதால், அவன் அதிலேயே ஓர் ஆனந்தத்தையும் சாந்தியை யும் கண்டான். அவள் மட்டும் தனக்கு முறைப்படி ஊரறியச் சொந்தமாகி விட்டால் அதைவிடச் சிறந்த குலதனம் எதுவும் இருக்க முடியாது என்ற தீர்மானத்திற்கும் வந்தாலும், சிங்களத்தில் தனது மந்திரிகளும், குலகுருவான பௌத்தத் துறவியும் குறிப்பிட்ட குலதனத்தைப் பார்ப்பதற்காக எடுத்துச் செல்வதும் தனது கடமையாகும் என்றும் முடிவு செய்து கொண்டான். அந்தக் குலதனத்துக்குத் தன்னை அழைத்துச் செல்லக் கூடியவள் அரசகுமாரி ஒருத்தியே என்பதைச் சிவகோகர்ண ஸ்வாமிகளும் வஜ்ரஹஸ்த மகாராஜாவும் கூறியிருந்ததன்றி, அதற்காகவே அரசகுமாரியை ஆதிமால்யன் சிறை செய்ததால், அவளுக்கும் அந்தக் குலதனத்துக்கும் ஏதோ தொடர்பு இருக்க வேண்டு மென்ற நிச்சயத்தை அடைந்த விஜயன், தான் சம்பந்தப் பட்டவரை குலதனம் இரட்டித்து விட்டதை எண்ணிப் பார்த்து அவள் தோளிலேயே உறங்க முற்பட்டான்.

சென்ற சில தினங்களில் ஏற்பட்ட அலைச்சலாலும் அனுபவங்க ளாலும் அலுத்துப் படுத்துக்கிடந்த விஜயன் தலைக்குழல்களை அரசகுமாரி லேசாகக் கோதி விட்டாள். அவனை அப்படியே அந்த மஞ்சத்தில் மெல்லப் படுக்க வைத்துவிட்டு மஞ்சத்தை அடுத்த

zeevaa

தரையில் தான் உட்கார்ந்துகொண்டு விசிறி கொண்டு மெதுவாக அவனுக்கு விசிறினாள். மாலை நெருங்கிய சமயத்தில் சிம்மபுர சிவாலயத்தின் ஆராய்ச்சிமணி பெரிதாக அடிக்கத் துவங்கியதும் அவள் எழுந்து பக்கத்திலிருந்த ஓர் அறையிலிருந்து ஒரு தங்கக் கிண்ணத்தில் காய்ச்சிய பாலை எடுத்து வந்து மஞ்சத்தில் உட்கார்ந்து, அவன் தலையை எடுத்துத் தனது மடியில் வைத்துக் கொண்டாள். அதனால் கண்விழித்த விஜயனை நோக்கி மோகனப் புன்னகை செய்த திரிலோகசுந்தரி பாலை மெதுவாக, சிறிது சிறிதாக அவனுக்குப் புகட்டலானாள். அவள் வழவழத்த மலர் மடியில் அவன் அசைந்த போதெல்லாம் நழுவிய சேலையை அவள் அவ்வப்போது தள்ளிவிட்டுச் சரிசெய்து கொண்டு "அசைய வேண்டாம். மெதுவாகப் பாலைப் பருகுங்கள்" என்று கடிந்து கொண்டு கிண்ணத்தின் விளிம்பை அவன் வாயில் சிறிது அழுத்தவும் செய்தாள். அவன் பாலை அருந்த மறுத்து முதலில் சிறிது பிடிவாதம் செய்தாலும் அவள் வலுக்கட்டாயத்தால் பாலை அருந்தவே செய்தான். பாதிக்கிண்ணத்துப் பாலை மட்டும் அருந்திய விஜயன் மேலும் அருந்த மறுத்து அவள் மடியிலிருந்து எழுந்து அவளைத் தனது மடியில் படுக்க வைத்து மீதிப்பாலை அவளுக்குப் புகட்டினான். "எனக்கும் தெரியும் பாலைப் புகட்ட" என்று அவளுக்குச் சொல்லவும் செய்தான். அத்துடன் நிற்கவில்லை அவன், "திரிலோகசுந்தரி! உனக்கு யார் இந்தப் பெயரை வைத்தார்களோ தெரியாது. ஆனால் பெயர்ப் பொருத்தம் உனக்கு ஏற்பட்டிருப்பதுபோல் வேறு யாருக்கும் ஏற்பட்டிருக்க முடியாது" என்றும் கூறினான்.

"இதெல்லாம் திருமணத்திற்குப் பிறகு வைத்துக் கொள்ளுங்கள்" என்றாள் திரிலோகசுந்தரி.

"திருமணந்தான் ஆகிவிட்டதே நமக்கு?" என்றான் விஜயன்.

"எப்பொழுது?" அவள் கேள்வியில் வியப்பு இருந்தது.

zeevaa

''சிவகோகர்ண ஸ்வாமிகளின் ஆசிரமத்தில்... பூஜையின் போது... கற்பூர ஜ்வாலையில் நமது கைகள் பட்டபோது... ஸ்வாமிகளே சொல்லவில்லையா?'' என்று விளக்கினான் விஜயன்.

கலிங்கச் செல்வி சிறிது சிந்தனையில் இறங்கினாள். ''சாதாரண வழக்குக்கு அது சரி. ஆனால் நீங்கள் சைவரல்ல. உங்கள் மதம் பௌத்த மதம். அதற்குச் சரியாகத் திருமணம் நடக்க வேண்டும். அப்பொழுதுதான் உங்கள் மக்கள் என்னை அவர்கள் மகேசியாக* ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் இன்று நாம் ரத்த ஜோதியில் மூழ்கிய பிறகு வேறெந்தத் திருமணச் சடங்கும் நமக்குத் தேவையில்லை. அதைப் பௌத்த குருமார்களே ஒப்புக் கொள்வார்கள்'' என்றாள் சிந்தனைக்குப் பிறகு. அந்தச் சமயத்தில் கோவில் மணி மீண்டும் ஒலிக்கவே, ''இந்துக்களின் சம்பிரதாயப் படி இந்த மணியடிப்பது நமது கோரிக்கையை ஈடேற்றும் நற்சகுனமாகும்'' என்றும் சுட்டிக்காட்டிய ராஜகுமாரி அவன் மடியிலிருந்து எழுந்தாள். ''முதல் ஜாமம் துவங்கிவிட்டது. சிற்பி இனி எந்தச் சமயத்திலும் வரலாம். நீங்கள் சித்தப்படுங்கள்'' என்றுகூறி, பக்கத்து அறைக்குச் சென்று விட்டாள் அரசகுமாரி.

அவள் சென்றதும் திடீரெனப் பக்கத்து அறையிலிருந்து முளைத்த இரு தோழிகள், ''சிங்கள மன்னரே! இப்படி வாருங்கள். பக்கத்து அறையில் நீராட நீர் வைத்திருக்கிறோம்'' என்று சொல்லித் தலை வணங்கினார்கள்.

அந்த அறையில் நீராட்டத்துக்கான சகல வசதிகளும் இருந்தன. தனக்காகத் தனிப் பட்டாடையும் வைக்கப்பட்டிருந்ததைக் கண்ட விஜயன் அலுப்புப்போக நீராடி, கலிங்கத்தின் நிகரற்ற பட்டாடை அணிந்து கச்சையில் கத்தியைக் கட்டி, குறுவாளையும் செருகிக்

---

★ *'மகேசி' என்ற சொல் மகிஷி என்ற சமஸ்கிருத சொல்லின் திரிபு. மகாராணி என்று பொருள். இலங்கையின் ''மகாவம்சம்'' என்ற நூலில் மகாராணிக்கு மகேசி என்ற சொல்லே கையாளப்பட்டிருக்கிறது.*

zeevaa

கொண்டு சாட்சாத் மன்மதனைப்போல் வெளியே வந்தான். சிறிது நேரம் கழித்து வந்த அரசகுமாரி மெல்லிய சிவந்த சேலையை அணிந்திருந்தாள். அந்த ஆடை ஆங்காங்கு கொசுவப்பட்டிருந்த தால் அதன் மடிப்புகளில் அவள் எழில்கள் லேசாக மறைந்து கிடந்தன. கலிங்கத்தின் மெல்லிய சேலைகளின் சிறப்பைப் பற்றி விஜயன் எத்தனையோ கேள்விப்பட்டிருந்தாலும் உடல் தெரியக் கூடிய நிலையில் அத்தனை மெல்லியதாகத் துணியை நெய்ய முடியுமென்பதை அவன் அன்றுவரை கண்டதில்லை. ஆகையால் வியப்புடன் அவளை விழுங்கி விடுவதுபோல் பார்த்தான்.

'அரசகுமாரியின் சிவப்புச் சேலை அவள் கன்னத்தில் தெரிந்த பட்டுச் சிவப்புத் திட்டுகளோடு போட்டி போட்டதே தவிர வெற்றியடையவில்லை' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டான் அந்த வாலிபன். நான்கு பட்டையாகச் சேலை அவள் மார்புமீது ஓடியிருந்ததால் மார்பின் பரிமாணம் அவன் கண்களுக்குத் தெரியாததால் பெரிதும் அவதிப்பட்ட விஜயன் அவளைப் பார்த்தான், மயங்கினான், நெருங்கவும் முயன்றான். "எல்லாம் குலதனத்தை நீங்கள் பார்த்த பிறகு" என்று அவனைத் தடுத்துவிட்ட ராஜகுமாரி அவன் வேட்கை விழிகளைக் கண்டு மெல்ல நகைத்தாள். ஆனால் நெருங்க முயன்ற அவனை எட்டவே நிற்க வைத்துச் சாளரத்தண்டை சென்று ஆகாயத்தைப் பார்த்தாள். "புஷ்ப நட்சத்திரம் கொத்து சற்று சாய்ந்திருக்கிறது, அதாவது முதல் ஜாமத்தின் பாதியை நெருங்குகிறோம். எந்த விநாடியிலும் நாகாநந்தன் வரலாம்" என்று அவள் கூறி முடிப்பதற்கும் அறைக்கதவு தட்டப்படுவதற்கும் நேரம் சரியாயிருந்தது.

அறைக் கதவைத் திறந்த அரசகுமாரியின் தோள்மூலம் வெளியே கண்களை ஓட்டிய விஜயன், சிற்பி நீராடி நீறு அணிந்து வந்திருப்பதையும், அவனுக்குப் பின்னால் இரு தோள்களிலும் அர்த்தரையும் மோஷரையும் போட்டுக்கொண்டு மூர்சமத்

zeevaa

நிற்பதையும் கண்டு தானும் மஞ்சத்திலிருந்து எழுந்து புறப்படச் சித்தமானான்.

அப்பொழுது அறைக்குள் வந்த சிற்பி, "சிங்களத்து மகாராஜா! இப்பொழுது வஜ்ரஹஸ்த மகாராஜாவின் கட்டளைப்படி உங்களைப் பாதாள யாத்திரைக்கு அழைத்துச் செல்கிறேன். ஒரு முக்கிய விஷயத்தை நினைப்பில் வைத்துக் கொள்ளுங்கள். வழியில் நடக்கும் எதையும் கவனிக்காதீர்கள். உணர்ச்சிகளில் சிக்காதீர்கள். பேசாமல் அரசகுமாரியைப் பின் தொடர்ந்து வாருங்கள்" என்று எச்சரித்துவிட்டு விஜயனையும் மற்றவர்களையும் அந்த அறையிலிருந்து வெளியே அழைத்துச் சென்றான்.

அறையிலிருந்து வெளிப்பட்டதும் சிம்மலன் சிருஷ்டித்த சிம்மபுரமெங்கும் விளங்குகள் ஜொலிப்பதையும், எங்கும் மக்கள் நடமாட்டமும், அரண்மனையை அடுத்துக்காவல் புரியும் புரவிக்காவலர் எச்சரிக்கைக் குரல் ஒலிகளும் கேட்பதையும்,அந்தச் சிவஸ்தலத்தில் சிவத்துதிகளுடன் பௌத்த கோஷங்களும் கலந்து கேட்பதையும் தாழ்வறையை அடுத்திருந்த கைப்பிடி மூலம் பார்த்த விஜயன், "எந்த மதத்தையும் புறக்கணிக்காத, எல்லாவற்றையும் சமப்படுத்தும் சிறந்த நாகரீகத்தை உடைய இந்தச் சிம்மபுரம் உலகத்தில் இணையற்றது" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

அத்தகைய சிந்தனைகள் சித்தத்தில் சுழல, சிற்பியைப் பின்பற்றிய சிங்கள இளவல் அரசகுமாரியின் அறையிலிருந்து நான்காவது அறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டான். அங்கு ஏற்கெனவே தர்மரும், காமரும் இருந்ததைக் கவனித்த விஜயன் இருவருக்கும் தலைவணங்கினான். இருவரும் ஏதும் பேசவில்லை. சிற்பியிடம் அந்த அறையின் தரையில் பெரிய கமலம்போல் போடப்பட்டிருந்த கோலத்தைச் சுட்டிக்காட்டினார்கள். சிற்பி தனக்குத் தெரியும் என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்துவிட்டு, தரையில் உட்கார்ந்து அந்தக் கமலக் கோலத்தின்

zeevaa

மத்தியை மிகுந்த பிரயாசைப்பட்டுத் திருகினான். மிகுந்த பிரயாசைக்குப்பிறகு அந்தக் கோலமிருந்த தரையை லேசாகக் சுழல வைத்தான் சிற்பி.

அந்தக் கமலம் முதலில் லேசாகச் சுழன்றது, பிறகு பக்கவாட்டில் நகரத் துவங்கியது. கோலம் இரண்டாகப் பிளவுபட, அதன் கீழே படிகள் ஓடின. படிகளில் தன்னைத் தொடர்ந்து வரும்படி சைகை காட்டிய சிற்பி முதலில் அந்தப் படிகளில் இறங்கினான். அரசகுமாரி விஜயன் கையைப் பற்றிக் கொண்டு அவனை மெதுவாகப் படிகளில் இறக்கினாள். மற்றவர்களும் இறங்கியதும் தாமரை இருந்த தரை தானாகவே மூடிக்கொண்டதையும் தங்களைக் காரிருள் சூழ்ந்து கொண்டதையும் விஜயன் கவனித்தான். ''சற்றுப் பொறுங்கள். வெளிச்சம் தானே வரும்'' என்று விஜயன் காதில் அரசகுமாரி சொன்னாள்.

படிகளில் இறங்கியவர்கள் மௌனமாகச் சில வினாடிகள் நின்றனர். ''ஒருவர் கையை இன்னொருவர் பிடித்துக் கொண்டு மெதுவாக இறங்கி வாருங்கள்'' என்ற சிற்பி படிகளில் வேகமாக இறங்கலானான். பழக்கத்தின் காரணமாக. இப்படிச் சுமார் ஒரு நாழிகை பயணம் செய்த பிறகு சிற்பி வழிவிட்டு, ''இனி நீங்கள் முன்னால் செல்லலாம்'' என்றான் மற்றவர்களை நோக்கி. அவன் கூறியபடி சென்றதும் ஏதோ ஓர் இடத்தில் திரும்பி, சமதரைக்கு வந்து நின்றது. அந்தச் சமதரையில் சிறிது தூரம் பயணம் செய்த விஜயன் தரை மிகக் கரடு முரடாயிருப்பதைக் கண்டான். அதுமட்டுமல்ல அவன் கண்டது. திடீரெனத் தனது பாதங்கள் சிவந்துவிட்டதையும் கண்டு அதன் காரணம் என்னவென்பதைக் கவனித்த போது எங்கிருந்தோ ஒரு சிவந்த ஒளி ஒற்றைக் கிரணமாகத் தரையில் விழுந்து கொண்டிருந்ததைக் கவனித்தான்.

அது காலில் விழுந்ததுமே முன்னால் சென்ற சிற்பி தரையில் மண்டியிட்டு அதை வணங்கினான். மேலும் அந்த ஒளி வழியே

zeevaa

வழிகாட்டிச் சென்றான். வரவர வழி குறுகி, குத்துக் குத்தாகக் கற்களைக் கொண்ட கரடுமுரடான பாதையாக இருந்தது. ஆகையால் அங்கிருந்து பயணம் மிக மெதுவாகவே நடந்தது. மேலே செல்லச் செல்ல, பல்லிகள் ஆங்காங்கு சுரங்கச் சுவர்களிலிருந்து சப்தித்தன. ஓணான்கள் இரண்டு சிவந்த ஒளியில் தங்கள் தலைகளை நீட்டிப் பிறகு கீழே குதித்து ஓடிவிட்டன. ஏதேதோ சப்தங்கள் வழி நெடுகிலும் கேட்டன.

வேறு யாரையும் குலை நடுங்கச் செய்யும் அந்தப் பயங்கர வழியில் எந்தவிதச் சலனமும் இல்லாமல் அரச குமாரியின் கையைப் பிடித்த வண்ணம் நடந்த விஜயன் முன்பு திடீரென இரண்டு இரத்தச் சிவப்பான பெரும் கதவுகள் தெரிந்தன. அந்த இரண்டும் கெட்டிக் கண்ணாடியால் செய்யப்பட்ட கண்ணாடிக் கதவுகளென்பதையும் உள்ளிருக்கும் ஏதோ ஓர் ஒளியால் அது சிவந்திருக்கிற தென்பதையும் விஜயன் உணர்ந்து கொண்டான். இத்தனை சிவப்பை அளிக்கும் அந்த ஜோதி எதுவாயிருக்கும் என்று விஜயன் சிந்தித்துக் கொண்டிருக்கையில் அந்த இரு கதவுகளுக்கெதிரில் வஜ்ரஹஸ்த மகாராஜாவும், சிவகோகர்ண ஸ்வாமியும் தோன்றினார்கள். அவர்களை நோக்கி முதலில் தர்மரும் காமரும் நடந்த பிறகு, மூர்சமதும் முன்னேறி அந்தக் கதவுகளுக்கு முன்பாக மோக்ஷரையும் அர்த்தரையும் தரையில் கிடத்தினான்.

அவர்களை மகாராஜாவோ ஸ்வாமிகளோ கவனிக்கவில்லை. "விஜயா! திரிலோகசுந்தரி! இப்படி வாருங்கள் முன்னுக்கு," என்று அழைப்பு விடுத்தார் சிவகோகர்ண ஸ்வாமிகள்.

விஜயன் அரசகுமாரியின் கையைப் பற்றிய வண்ணம் ஸ்வாமி களை நோக்கி நெருங்கி வணங்கினான். ஸ்வாமிகள் விஜயனையும் சுந்தரியையும் ஆசீர்வதிக்கும் பாவனையில் கையை உயர்த்தி விட்டுச் சொன்னார், "விஜயா ஆண்டுக்கு ஒரு முறை மட்டும் திறக்கும் இந்தக் கதவை உனக்காக இப்பொழுது திறக்கச்

zeevaa

செய்கிறேன். கண்களை நிலத்தில் தாழ்த்து. கதவு திறந்ததும் சீறிவரும் அக்னிப் பிழம்பை நேரில் பார்க்காதே. கண்கள் அதன் ஒளிக்குப் பதப்பட்டதும் மெதுவாகப் பார்," என்று.

பிறகு அரசகுமாரியை விளித்து. "மகளே! கதவைத் திற," என்று உத்தரவிட்டதும் அரசகுமாரி விஜயன் கையிலிருந்து தனது கையை விடுவித்துக் கொண்டு கதவை நெருங்கி மடியிலிருந்த கண்ணாடி சிவலிங்கத்தை எடுத்தாள். கண்களை மூடி ஏதோ பிரார்த்தனை செய்தாள் சில வினாடிகள். பிறகு சிவலிங்கத்தைக் கதவின் துவாரத்தில் செலுத்தி மெதுவாகத் திருப்பி லிங்கத்தைத் துவாரத்திலேயே விட்டுவிட்டுப் பின்னால் வந்து விஜயன் கையை இறுகப் பிடித்துக் கொண்டாள். கதவுக்குள்ளே ஏதோ ஜலதரங்கம் சப்திப்பதுபோன்ற இசை கேட்டது. பிறகு மெதுவாகக் கதவும் இரண்டாகப் பிளந்தது. திறந்தது.

உள்ளே இருந்த விசித்திரம் விஜயனையும் திகிலுறச் செய்தது. "இது உண்மைதானா? ஸ்வாமி! நான் கனவு காண்கிறேனா!" என்று மெள்ள விஜயன் வார்த்தைகளை உதிர்த்தான். அந்தக் கதவுக்குப் பின்னால் தெரிந்தது. ஓர் அற்புதம். விவரணத்துக்கு அப்பாற் பட்டது. நம்ப முடியாதது. கதவை அடுத்த நீண்ட அறையின் நட்ட நடுவில் சாண் அளவு அகலமும், கையளவு பருமனும் கொண்டு கொழுந்து விட்டெரியும் நெருப்புப் போல், பூகர்ப்பத்தின் ஜாடராக்னிபோல் சிவந்த கதிர்களைத் தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருந்தது ஒரு *மகா ரத்தினம். சிங்கள மன்னர்களின்

* MARCO POLO, in the 13th Century says the "King of Ceylon is reputed to have the Grandest Ruby that was ever seen, a span in length, the thickness of a Man's arm, brilliant beyond description and without a single flaw. It has the appearance of a glowing fire and its worth cannot be estimated in money. The grand ¬han Gublai sent ambassadors to the monarch to offer for it the value of a city, but he would not part within as it was a Jewel handed down by his ancestors on the throne" -CEYLON-By J. EMERSON TENNENT Part V. Chapter I. Page 567 to 568.

zeevaa

இணையிலாக் குலதனம் விஜயன் கண்களைக் கூசவைத்தது. வரவர அதன் ஜாஜ்வல்யம் அதிகமாயிற்று. சிவந்த அதன் கதிர்கள் வினாடிக்கொருமுறை அதிகமாகி அறைக்கு வெளியே இருந்த அனைவரையும் சூழ்ந்து கொண்டது. அந்த ரத்தின நீராட்டம் சுத்த நீராட்டத்தைப் போலிருந்ததால் பயமும் பிரமிப்பும் கூட ஏற்பட்டது விஜயனுக்கு. அடுத்து அந்த ரத்தினத்துக்குப் பின்னால் தெரிந்தது சிங்கத்தின் தலை ஒன்று. அது வாயைப் பிளந்து கொண்டு அசையலாயிற்று. மந்திரத்தால் கட்டுண்டவன் போல் விஜயன் நின்றான்.



zeevaa

# 43. சிம்ஹலன் மணவறை

சிங்கள மன்னர்களின் குலதனமாய், சீனமன்னன் குப்ளேகானும் பிற்காலத்தில் அடைய ஆசைப்பட்ட மகாரத்தினமாய், உலகத்துக்கே ஒரு புதுமையாய், சிங்கச் சரித்திரத்திற்கே ஒரு மணி விளக்காய், விளங்கிய அந்தச் சிவப்பு ரத்தினத்தின் சிவந்த எழில் ஜோதி கதிரவன் காலைக் கதிர்களையும் தோற்கடிப்பது போல் தனது கதிர்களைப் பூகர்ப்பத்திலிருந்து நிரப்புவது போல் தொடர்ச்சியாய் அனுப்பிச் சூழ்நிலையையே ரத்த நிறமாக அடித்ததால் பிரமையும் கொண்ட விஜயன், அதன் முன்பு அரச குமாரியின் கையைப் பிடித்து அவளை மண்டியிடச் செய்து தானும் மண்டியிட்டுத் தலை வணங்கினான். அப்படி மண்டியிட்டுத் தலைவணங்கிய அவ்விருவர் மீதும் பாய்ந்த ஜோதி அவர்களை ரத்தத்தில் குளிப்பாட்டிவிட்ட சமயத்தில் சிவகோகர்ண ஸ்வாமிகள், "விஜயா! உலகத்தின் அற்புத சிருஷ்டியொன்றின் முன்பு நீ தலைவணங்கு கிறாய். உன் கையை எங்கள் அரசகுமாரி பற்றி நிற்பதால் அவள் உங்கள் வம்ச மகாதேவியாகவும் உனது மனைவியாகவும் உங்கள் நாட்டு வழக்கப்படி ஆகிவிட்டாள். இனிமேல் சிங்களத்துச் சரித்திரத் தில் அவள் விஜயன் மகாராணியாய் விஜய மகாதேவியாய்ச் சிறப்பான இடத்தை அடைவாள். உன் குலதனமாக இந்த மகாரத்தினமே அவள் சீதனமாகும். அந்தச் சீதனமும் இந்த ஸ்திரீ ரத்தினமும் உன் நாட்டில் இருக்கும்வரை உன் புகழ் உலகம் எங்கும் பரந்து நிற்கும். எங்கள் வழக்கப்படி எனது ஆசிரமத்தில் எனது பூஜையின் கற்பூர ஆரத்தி முன்பு இணைந்த உங்கள் கைகள் இன்று உன் குலதனத்தின் முன்னால் உங்கள் குல வழக்கப்படி இணைந்து நிற்கிறது. இந்த வினாடி முதல் நீங்கள் இருவரும் சதிபதிகள். உங்கள்

zeevaa



zeevaa

திருமணப் பூர்த்தியை யாரும் தடுக்க முடியாது. உங்களுக்குச் சர்வ மங்களமும் உண்டாகட்டும். தர்மர் அர்த்தர், காமர், மோக்ஷர் ஆகிய என் சீடர்களால் பாதுகாக்கப்பட்ட உங்களுக்கு தர்மார்த்த காம மோக்ஷங்கள் எனும் நான்கு புருஷார்த்தங்களும் தாமாகவே கிட்டும்,'' என்று நிதானம் நிரம்பிய குரலில் பேசினார். அவருடைய ஆசீர்வாதமும், ததாஸ்து (அப்படியே நிகழக்கடவது) என்ற தர்மரும் காமரும் கூறிய ஆசிகளும் அந்த அறையில் கம்பீரமாக எதிரொலி செய்தன.

அதே சமயத்தில் கலிங்கத்தின் அதிபதியும் ஐந்தாவது வஜ்ரஹஸ்தருமான மகாராஜாவும் சற்றே இரைந்த குரலில் சொன்னார், ''விஜயபாகு! விஜயமகா தேவி! இன்று முதல் சிங்களத்தின் மரபுப்படி சதிபதிகளான உங்களைப் பிரிக்கும் சக்தி உலகத்தில் எதுவுமில்லை. சிவகோகர்ண ஸ்வாமியின் ஆசியால் ஹிந்துமத ஆசியும் சக்தியும், குலதனக் கதிர்களில் மூழ்கியதால் பௌத்த மதத்தின் பூர்ண சம்மதமும் சக்தியும், ஆக இரு மதங்களின் மகத்தான சக்திகள் உங்களைக் காக்கும். எந்தச் சமயத்தில் எந்த உதவி தேவையாயிருந்தாலும் அந்த உதவியைக் கலிங்கம் உங்களுக்கு அளிக்கும். உங்கள் குலதனம் உங்களுக்குக் கிடைப்பது திரிலோக சுந்தரியின் மகத்தான சீதனமாகும். அத்துடன் இன்னொரு சீதனமும் தருகிறேன். விலைமதிக்க முடியாத சீதனம் அது. உங்கள் நாட்டைக் காக்கும் இணையிலா பலம். இதோ இந்தச் சிற்பியையும் உங்களுக்குத் தருகிறேன். இந்த நாட்டில் காலை வைத்தது முதல் பல இன்னல்களைச் சமாளித்த விஜயனே! இனி உன்னை எதிர் நோக்கும் இன்னல்கள் தாமாகவே மறையும். இந்தச் சிற்பி சிங்களத்துக்கு மகத்தான கடற்படையை உருவாக்கித் தருவான்,'' என்று கூறி சிற்பியையும் அந்த மகாரத்தினத்தின் முன்பு மண்டியிடச் செய்தார். அந்த மூவர் மீதும் சிவந்த கதிர்கள் அதிகமாக விழுந்து அவர்களை நீராட்டின.

zeevaa

இப்படி அக்னி ஸ்நானம் செய்த விஜயன் மெதுவாகத் தலை நிமிர்ந்தபோது அந்த விசித்திரக் காட்சியைக் கண்டான். அந்த மகாரத்தினத்தின் பின்னால் எழுந்தது செஞ்சிங்கம் ஒன்று. அது வாயைப் பிளந்தபோது அதன் வாயிலிருந்து அக்னி ஜ்வாலை வீசியது. இப்படி எழுந்த சிங்கம் திடீரென முன் நோக்கிப் பாய்ந்தது. அந்தப் பாய்ச்சலைத் தான், தரையில் கிடந்த இரு துறவிகளும் கண்டனர். கண் விழித்ததும். அதனால் பெரிதாக அலறவும் செய்தார்கள். அடுத்து பாய்ந்த அந்த சிங்கம் மறையவே அவர்கள் கதறலும் நின்றது. ஆனதால் மறுபடியும் அந்தச் சிங்கம் மெல்ல மகாரத்தினத்தின் பின்னால் எழுந்திருப்பதைக் கண்ட விஜயன் அதில் ஏதோயந்திர சூட்சுமம் கலந்திருப்பதை அறிந்தான். அந்தச் சிங்கம் நன்றாக எழுந்து நிலைத்து நின்றது இம்முறை. அதன் முகத்தில் சிங்க வடிவத்துடன் மனித வடிவமும் தெரிந்தது. அந்த மனித வடிவத்தில் தனது முகச்சாயையும் கண்ட விஜயன் சிற்பியின் அறையில் முதல் முதலில் கண்ட தனது மூதாதையின் முகமே அது என்பதைப் புரிந்து கொண்டான்.

சிவகோகர்ண ஸ்வாமிகளின் குரல் மீண்டும் ஒலித்தது. இம்முறை அது எங்கோ பாதாளத்திலிருந்து பேசுவது போல் ஒலித்தது. ''விஜயபாகு! அதோ சிம்ஹலன்! உன் வம்சத்தின் ஆதிகர்த்தா. இவன் பெயரால்தான் இலங்கை முதலில் அழைக்கப்பட்டது. சிம்ஹத்தைக் கொன்றபடியால் இவன் சிம்ஹ-ஹலா என்ற காரணப் பெயர் பெற்றான். அவன் மகன் விஜயன் வங்கத்திலிருந்து துரத்தப்பட்டு இலங்கையை அடைந்து அதை ஆக்கிரமித்தபோது உன் பெயருள்ள அவன் தனது தந்தையின் பெயரால் சிம்ஹலா என்று அந்தத் தீவை அழைத்தான். அது சின்ஹலா என்று மருவியது. தமிழர் அந்த நாட்டைச் சிங்களம் என்றும் அழைத்தனர். அந்த நாட்டை ஆட் கொண்டவர்கள் சின்ஹாலிகள் என்று சிங்களவர் என்றும் பெயர் பெற்றார்கள். இதுதான் உன் நாட்டின் வரலாறு. அப்பொழுது இலங்கையிலிருந்த ஆதிகுடிகள் விஜயனாலும்

zeevaa

அவனுடன் சென்ற எழுநூறு வங்காளிகளாலும் தோற்கடிக்கப் பட்டனர். பாண்டியன் மகளொருத்தியை விஜயன் மணந்தான். மற்றும் எழுநூறு பாண்டிய நாட்டுப் பெண்களை அவனுடன் சென்ற எழுநூறு வங்காளிகள் மணந்தனர். இப்படி வங்காளிகளும் தமிழரும் கலந்த மகா சமுதாயம், சிம்ஹலர் சமுதாயமாகத் தோன்றியது. இது தான் உன் நாட்டின் பூர்வகதை. இந்தச் சிங்களவர் பௌத்த மதத்தை மேற்கொண்டு சிறப்படைந்தனர். அதோ உன் பூர்வபிதா. உன் மனைவியாளுடன் இன்றைய பொழுதை அவர் முன்பு கழித்து விடு,'' என்று சிவகோகர்ண ஸ்வாமிகள் பேச்சு மெல்ல மெல்ல ஒலி குறைந்து மங்கியது. சிவந்த கதிர்கள் அதிகமாகிக் கொண்டிருந்தன.

அப்பொழுது பக்கத்திலிருந்த சிற்பி மெதுவாக விஜயனை அழைத்தான் ''மகாப்பிரபு!'' என்று.

''என்ன!'' பிரமிப்புடன் கேட்டான் விஜயபாகு.

''சிறிது கண்களை மூடிக்கொள்ளுங்கள்,'' என்றான் சிற்பி.

கண்களை மூடினான் விஜயபாகு. நிமிடங்கள் பறந்து கொண்டிருந்தன. சில நிமிடங்கள் கழிந்து, ''கண்களைத் திறக்கலாம்,'' என்றான் சிற்பி.

கண்ணைத் திறந்த விஜயன் எதிரே தெரிந்த சிம்ம உருவம் மறைந்து விட்டதை உணர்ந்தான். சுற்றுமுற்றும் கண்களைச் சுழல விட்டு அந்தப் பாதாள அறையில் தன்னையும் அரசகுமாரியையும், சிற்பியையும் தவிர மற்ற எல்லோருமே மறைந்து விட்டதைக் கவனித்து, ''மகாராஜாவும் மற்றவர்களும் எங்கே'' என்று விசாரித்தான்.

''சென்று விட்டார்கள். நானும் சென்று விடுவேன். ஒரே ஒரு பணியை முடித்தபிறகு,'' என்றான் சிற்பி.

zeevaa

''என்ன பணி அது?''

வியப்புடன் வினவினான் விஜயன்.

பக்கத்தில் நின்ற திரிலோக சுந்தரி புன்முறுவல் காட்டினாள். சிற்பியே பதில் சொன்னான். ''உங்கள் மணவறையைக் காட்டும் பணி. ஜொலிக்கும் அந்த மகா ரத்தினத்தை உங்களிடம் அளிக்கும் பணி,'' என்று பிறகு சற்று அதிகாரத்துடனேயே சொன்னான். ''விஜய மகாப்பிரபு! உங்கள் மகாராணியின் கையைப் பிடித்துக் கொள்ளுங்கள். உங்கள் கண்களை மூடிக் கொள்ளுங்கள்'' என்ற சிற்பி ''மகாராணி! சிங்கள மகாராஜாவுக்கு வழி காட்டுங்கள்,'' என்று சொல்ல, திரிலோக சுந்தரி விஜயன் கையைச் சற்று அழுத்தமாகப் பிடித்து மெதுவாக மகாரத்தினத்தை நோக்கி நடந்தாள். பத்தடி தூரம் சென்றதும் கண்களை இறுக மூடி அந்த மகாரத்தினத்தை இரு கைகளாலும் பிடித்தாள். அவ்வளவுதான். திடீரென எங்கும் இருள் சூழ்ந்தது.

''மகாராணி! உள்ளறையை நோக்கி இரண்டு விரல்களை மட்டும் நீட்டி ரத்தின ஜோதியை உட்புறமாக விடுங்கள்,'' என்றான் சிற்பி. அவள் அப்படியே செய்த பின்பு, ''இப்பொழுது மகாராஜா கண்களை விழிக்கட்டும்,'' என்றான்.

விஜயன் கண்களை விழித்தான். எதிரே தெரிந்தது ஓர் உள்ளறை. இரண்டு விரல் பரிணாமமே கதிர்களாகப் பாய்ந்த இரண்டு சிவந்த கிரணங்கள் மூலம் அந்த அறையில் ஒரு பஞ்சணை போடப்பட்டிருப்பதை பார்த்தான் விஜயன். அறையின் அலங்காரம் பிரமாதமாயிருந்தது சிவந்த பஞ்சணை, சிவந்த மலர்கள், சுவர்களில் சிவந்த சித்திரங்கள் எல்லாம் சிவப்பு மயம். அந்த அறையை நோக்கிச் செல்லும்படி அரசகுமாரி தன் தலையசைப் பினால் ஜாடை காட்டினாள் விஜயனுக்கு.

விஜயன் ஏதும் பேசாமல் உள்ளறையை நோக்கி நடந்தான். பஞ்சணையை அவன் அடைந்து உட்கார்ந்ததும் சட்டென்று

zeevaa

மகாரத்தினத்தின் ஒளி அடியோடு மறைந்து அறையை இருள் ஆட்கொண்டது. வெளியே ஏதோ ஓரிடத்தின் கதவுகள் சாத்தப்படும் ஒலி கேட்டது விஜயன் காதில். விஜயன் பஞ்சணையில் உட்கார்ந்து தனது கச்சையிலிருந்த மெல்லிய நீண்ட வாளைப் பஞ்சணை ஓரமாக வைத்தான்.

அந்த அறையை மீண்டும் சிவப்புக் கதிர்கள் ஆட்கொண்டன. இம்முறை அந்த ரத்தினம் அறையின் மூலையிலிருந்த ஒரு பெரும் பீடத்தில் வைக்கப்பட்டிருந்தது.

அதன் கதிர்களில் திரிலோகசுந்தரி தனது சிவந்த கலிங்கத்து மெல்லிய ஆடையுடன் நடந்தாள். நடு அறைக்கு வந்ததும் அந்த ஆடையை சிறிது அகற்றி ரத்தின ஜோதியில் கலந்தாள். அந்தக் காட்சி விஜயன் கண்களை விகசிக்கச் செய்தது. சிவந்த ஜோதியில் அப்பொழுது அவள் முழுமையாகத் தெரிந்தாள். ஆடையை அவள் நீக்கியிருந்தாள் என்பது விஜயனுக்கு லேசாகப் புரிந்தாலும் அவள் நிர்வாணமில்லை என்பதை விஜயன் புரிந்து கொண்டான். சிவந்த ஜோதியில சிவந்த அவள் உருவத்தால் அவள் தேவலோக ரம்பையைப்போல் விளங்கினாள். மெள்ளச் சுழன்று சுழன்று கட்டிலை நோக்கி வந்தாள். மயங்கி விழப்பார்த்த அந்த மலரை விஜயன் கைகள் தாவிப் பிடித்தன. அவன் கைகளில் சுழன்ற அவள் மோகன உடற்பகுதிகளின் வழவழப்பு விஜயனைச் சுட்டெரித்தது.

அப்படியே அவளை எடுத்துக் கட்டிலில் படுக்க வைத்த விஜயன் காதுகளில் எங்கிருந்தே தந்தி இசையொன்று விழுந்தது. பிறகு அதுவும் நின்றது. கட்டிலில் கிடந்த கட்டழகியை அணுகிக் குனிந்தான் விஜயன். அவள் நெருங்கி இழைந்தாள். ஏதோ முணுமுணுத்தாள். பிறகு மௌனமானாள். பேசும் சக்தியை அறவே இழந்த விஜயன் சரேலென்று தனது மேற்பட்டை எடுத்து நான்காக மடித்துக் கையில் எடுத்துக் கொண்டு மூலையிலிருந்த குலதனத்தினருகிற் சென்று அதை மூடினான். அறையில் இருள் சூழ்ந்தது.

zeevaa

ஆனால் அதன் ஒளியை அவன் மேலாடையும் அதிகமாக மறைக்க முடியவில்லை. கதிர்கள் சற்றே மந்தமாகி மயக்கும் நிலையில் மேலே சென்றது. சிவப்புப் புகையைப் போல் அது அளித்த அந்த மந்தச் சிவப்பில் கட்டிலை அணுகிய விஜயனைத் திரிலோகசுந்தரியின் அழகிய கைகள் அணைத்தன. அவளை நோக்கி மெதுவாகக் குனிந்த விஜயன் அவள் மாணிக்க இதழ்களுடன் தனது இதழ்களைக் கலந்தான். பிறகு அவன் முகம் எழுந்தது சில வினாடிகளுக்குப்பிறகு. அதை அரசகுமாரி தனது மார்பில் அணைத்துக் கொண்டாள். ''விஜயமகாதேவி! விஜயமகாதேவி!'' என்று முதல் முறையாக அவன் பணைத்த மார்பில் புதைத்த இதழ்களால் அவள் இதயத்துடன் பேச முற்பட்டான் விஜயன். திடீரெனப் பேச்சு தடைப்பட்டது. ஏதோ ஒரு சுகந்தம் அவனை ஆட்கொண்டது. அவ்வளவுதான் தெரியும் அவனுக்கு. உணர்வு எங்கோ ஓடிவிட்டது.

(முதல் பாகம் முற்றும்)



zeevaa




zeevaa



zeevaa

# விஜய மகாதேவி

(பாகம் 2)

சாண்டில்யன்

51வது சரித்திர நாவல்

SCAN & EDIT
ZEEVAA
zeevaa99@gmail.com

பாரதி பதிப்பகம்
126 / 108, உஸ்மான் சாலை,
தியாகராய நகர், சென்னை-600 017.
த.பெ.எண் : 4984 போன் : 24340205

zeevaa

# பதிப்புரை

சாண்டில்யன் அவர்களின் 51ஆவது சரித்திர நாவல் இந்த விஜய மகாதேவி. இந்நூல் குமுதத்தில் தொடர்ச்சியாக வெளிவந்த சமயம் இதை வெளியிட வேண்டும் என்று கேட்டேன். மிகவும் மகிழ்ச்சியுடன் தந்தார்கள். ஆனால் எந்த ஒரு பதிப்பாளரும் ஒரு ஆசிரியருக்கு இதுவரை உரிமைக்காக ரூ. 50 ஆயிரம் ஒரே சமயத்தில் கொடுத்ததாக சரித்திரம் இல்லை. பலருக்கு பணம் இருந்தும் கொடுக்க மனம் வருவதில்லை. ஆனால் என்னிடம் இவ்வளவு பெரிய தொகை கொடுக்கும்படியான நிலை இல்லை.

சாண்டில்யன் அவர்கள் 40 ஆண்டுகள் என்னுடன் பழகி வந்தவர்கள். அவர்கள் என்னிடம் கொண்டுள்ள அளவுக்கு மீறிய அன்பின் காரணமாக இந்தப் பணம் எதற்குத் தேவை என்பதைச் சொன்னார்கள். அவர்கள் சொன்னதைக் கேட்டதும் மனநிறைவுடன் நான் எப்படியும் அளிக்கிறேன் என்றேன். அதன்படி செய்தேன். அளவில்லா ஆனந்தத்துடன் இந்நூலை வெளியிட எனக்கு உரிமை தந்தார்கள். அவர்கட்கு என் உளம் நிறைந்த நன்றி. இந்நூல் வெளி வர எங்களுக்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்த தி. நகர் ஸ்டேட் பாங்க் ஆப் திருவாங்கூர் மானேஜர் அவர்கட்கும் எங்கள் நன்றி.

சென்னை - 17
டிசம்பர் - 1985

பழ. சிதம்பரம்
பாரதி பதிப்பக நிறுவனர்

---

**இரண்டு புத்தகங்களும் (மூன்று பாகங்களும் சேர்ந்து) விலை ரூ. 500.00**

---

VIJAYA MAHADEVI PART I & II ❑ Historical Novel by : CHANDILYAN ❑ First Edition: Dec.1985❑ Second Edition: April 1995 ❑ Third Edition: March 1998 ❑ Fourth Edition: July 2004 ❑ Fifth Edition: Sep.2010 ❑ Sixth Edition: April 2012❑ Price (Three parts of Two books) Rs. 500.00 ❑ © with the Author ❑ Published by : BHARATHI PATHIPPAGAM, 126/108 Usman Road,T. Nagar, Chennai - 600 017, P.Box No.4984 Phone : 24340205 ❑ Printed at: Sivakami Printo Graphics, 160, Big street, Triplicane, Chennai-600 005. ❑ Phone : 28445051❑ Email : bharathipathippagam@gmail.com ❑

zeevaa

# முன்னுரை

விஜய மகாதேவி சரித்திரக் கதை மட்டும் அல்ல; சரித்திரம் படைத்த கதை. பதிப்பக வரலாற்றில் பெரும் புரட்சியை உண்டு பண்ணிய கதை. இதை ஒட்டுமொத்தமாக கொஞ்சமும் தயங்காமல் பெரும் நம்பிக்கையோடு ரூபாய் ஐம்பதாயிரம் கொடுத்து பாரதி பதிப்பகத்தார் வாங்கியதை கேட்டு மலைத்து நின்றவர் பலர்.

விஜய மகாதேவியை முதலில் எழுத யோசித்து பின்பு வேண்டாமென்று நிறுத்திவிட்டேன். சிங்களர், தமிழர் பண்டைக்கால உறவைப்பற்றி நீண்ட நாளாக நல்லதொரு நவீனம் படைக்க எண்ணி சிங்களம் செல்ல தீர்மானித்தேன். குமுதம் நிர்வாகிகளும் உடனே ஒப்புக்கொண்டார்கள். ஆனால் சிங்கள அரசு ஒத்துக்கொள்ள வில்லை. நேர்முகமாக எதிர்க்காமல் அங்கே இருக்கும் அப்பாவி தமிழ் மக்களை பைசல் செய்யத் தொடங்கினர். வேண்டாம் இந்த முயற்சி என்ற மனப்போக்கில் இருந்த என்னை, என் ரசிக நண்பர்கள் வற்புறுத்தி இக்கதையை எழுதச் சொன்னார்கள். வேறு வழி யில்லாமல் எழுத முற்பட்டேன். சிங்களத்துக்கு போயிருந்தால், விஜய மகாதேவி போன்ற ஒரு நல்ல சரித்திர நாவல் தமிழ் உலகிற்கு கிடைத்திருக்காது. என்னுடைய சரித்திரக் கதை வரும் வாய்ப்பு சிங்களத்திற்கு கிடைத்திருக்காது.

இந்நூல் பலமான அசைக்க முடியாத சரித்திர ஆதாரங்களுடன் எழுதப்பட்டது. ஆங்காங்கே குறியிட்டு ஆராய்ச்சித் தொகுப்புகளை கொடுத்திருக்கிறேன். ஈழ-தமிழ் உறவு முறைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் வரலாற்று மாணவர்களுக்கு இவை மிகவும் உபயோகமாக இருக்கும். பண்டைய ஈழ-தமிழர் சரித்திரத்தைப் பின்னணியாகக் கொண்டு பின்னப்பட்ட இந்நூல் குமுதத்தில் சுமார் 3 வருட காலம் தொடர்கதையாக பரிமளித்தது. பல்லாயிரக் கணக்கான ரசிகர்களின் பாராட்டைப் பெற்ற இந்நூல் புத்தக வடிவிலும் அதே ஆதரவைப் பெறும் என்பதில் எனக்கு துளியும் சந்தேகம் இல்லை.

zeevaa

பாரதி பதிப்பகத்தின் உரிமையாளர் பழ. சிதம்பரம் அவர்கள் செலவைப் பொருட்படுத்தாமல் மிகவும் அழகான முறையில் இந்நூலை வெளியிட்டதற்கு என் நன்றி. இதைத் தொடராக குமுதத்தில் பிரசுரித்த ஆசிரியருக்கும் நான் மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன்.

**சாண்டில்யன்**

zeevaa




# விஜய மகாதேவி

## (பாகம் 2)

zeevaa

# விஜய மகாதேவி

## (இரண்டாம் பாகம்)

## 1. சுங்க இல்லத்துக் கணக்கர்

தட்சிண பாரதத்திற்குக் குறுக்கே மேற்கிலிருந்து கிழக்காகப் பாய்ந்து தனது நீண்ட பயணத்தை முடித்துகொண்ட கோதாவரி, பூர்வ சாகரம் என்று ஆதிகாலத்தில் அழைக்கப்பட்ட வங்கக்கடலன் அலைகள் எவ்வளவோ எதிர்த்தும் கூட; அவை எதையுமே லட்சியம் செய்யாமல் அலைகளையும் மீறிக் கடலுக்குள் வேகமாகப் பாய்ந்து கொண்டிருந்தது. அந்த வேகத்தால், அதன் பாய்ச்சல் பிரவாகத் திலிருந்து சிறிது தள்ளியே நின்ற பல நாட்டு மரக்கலங்களும் கோரிங்கா என்ற கலிங்கத்தின் பழைய துறைமுகமும் கோதாவரி யின் வேகத்தையோ, கடலின் எழுச்சியையோ சிறிதும் லட்சியம் செய்யாமலேயே இருந்தன. கடலுக்குள் நீண்ட தூரம் துருத்தப்பட்ட நாக்கைப் போல் தனது நிலத்தை நீட்டிக் கொண்டு கோரிங்கா நின்றதைப் பார்த்த பெரிய நாவாய்கள், கோதாவரியை விட அந்தத் துறைமுகப்பகுதிதான் அடைக்கலம் என்ற எண்ணத்தால் தங்கள் நானாவித முகப்புகளைக் கரையை நோக்கி நீட்டி நீட்டி வணங்கிக் கொண்டிருந்தன. மரக்கலங்களில் சில, கழுகு முகங்களையும், சில சிங்கம் போன்ற முகப்புகளையும் இன்னும் சில முதலையைப் போன்ற முன்னணியையும் பெற்றிருந்ததால், கழுகும் சிங்கமும் முதலையும் மாறி மாறி நீருக்குள் மூழ்கி மூழ்கி, கலிங்கோ என்ற கோரிங்கா துறைமுகத்திடம் சரணாகதி செய்து கொண்டிருந்ததைப் பார்த்த துறைமுக வண்டிப் புரவிகளும், மாடுகளும் கத்தியும், கனைத்தும் மரக்கலங்களை ஏளனம் செய்வது போன்ற பிரமையை ஏற்படுத்தின.

zeevaa



zeevaa

கடற்கரையிலிருந்த பெரிய சுங்கச் சாவடிக்கு முன்னதாகவே இரவில் கடற்கரையில் தங்கத் தீர்மானித்துவிட்ட வெளிநாட்டு வியாபாரிகள் பலர் ஆங்காங்கு சிறு அடுப்புகளை மூட்டி இறைச்சி களையும் இதர மரக்கறி உணவுகளையும் தீயில் சமைத்துக் கொண்டி ருந்ததால் ஏற்பட்ட விபரீத வாசனை துறைமுகப் பகுதியெங்கும் வீசிக்கொண்டிருந்தாலும், அவற்றிற்கெல்லாம் பழக்கப்பட்ட ஊழியர் பலர் சமைப்பவர் சமைக்கட்டுமென்று தங்கள் பைகளின் குப்பிகளிலி ருந்து சிறிது மதுவை அருந்தி விட்டுத் தரையில் மல்லாந்து படுத்து நித்திரை வசப்பட முயன்று கொண்டிருந்தனர். உணவைச் சமைத்துக் கொண்டிருந்தவர்கள் சமையல் முடிந்ததும் மணலை அள்ளி நெருப்பில் போட்டுத் தணலை அணைத்துவிட்டு இறைச்சிகளைக் கடிக்கவும், மரக்கறி உண்பவர்கள் சோற்றுடன் கூடிய கலயங்களில் உணவைப் பிசைந்து உண்ணவும் முற்பட்டனர். இரவில் எந்த மரக்கலமும் பயணப்படவில்லையென்பதைச் சுங்க அதிகாரிகளிட மிருந்து புரிந்து கொண்ட வணிகர்கள் எல்லோருமே அன்று துறைமுக மணலையே இருப்பிடமாகக் கொண்டதால் துறைமுகம் ஏதோ புதிதாகச் சிருஷ்டிக்கப்பட்ட நகரம் போல் காட்சியளித்தது.

இப்படி மாலுமிகள் தங்கப்போகிறார்களென்பதை அறிந்த உள்ளூர் உணவு வணிகர்கள் பலதரப்பட்ட உணவு வகைகளையும், பயணத்திற்கு வேண்டியிருக்கக் கூடிய மடிப்புப் பாய் முதலிய சாமான்களையும் துறைமுகத்தில் விற்பனை செய்ய முற்பட்டதால் ஏற்பட்ட வணிகக் கூச்சல் உறங்க முயன்றவர்களுக்குத் தலை வேதனையை அளித்தாலும், பிச்சை வாங்க வந்த பெண்களும், ஆண்களும் கலந்த கூட்டங்கள் பாடிய பாட்டுகளும் ஆடிய ஆட்டங்களும் சிறிது சந்துஷ்டியையும் அளித்ததால் உறக்கம் கலைந்த வேதனை சிறிது அகலவும் செய்தது. ஆடிய பெண்களில் சிலர் நல்ல தேகக் கட்டுடனும் இருந்ததால் படுத்த சில வணிகர்களும் எழுந்து உட்கார்ந்து நடனங்களைக் கவனிக்கவே செய்தனர். ஆடிய சின்னஞ்சிறு கூட்டங்களும் ஒரே இடத்தில் நில்லாமல் கடற்கரை

zeevaa

பூராவும் திரிந்ததாலும், நேரம் அதிகமாக ஓடி விட்டதாலும் துறைமுகக் காவலர் அவர்களை ஊருக்குள் ஓட்ட விரைந்து வரவே, அவர்களைக் கண்டதும் ஆட்டங்களை நிறுத்தி ஓட முற்பட்ட பெண்களின் கால் சலங்கைகள் ஒலித்ததால், அந்த ஓட்டமே ஆட்டமாக, ஒலியே இசையாக மாறி, ஆட்டங்களோ இசையோ எந்தக் காவலுக்கும் கட்டுப்படாதென்ற உண்மையை வலியுறுத்தின.

அன்று கிருஷ்ண பட்சத்தின் கடைசி நாளின் காரணமாக எங்கும் மையிருள் சூழ்ந்து கிடந்ததால் நாவாய்களிலும் சுங்கக் காரியாலயத் திலும் இருந்த ஓரிரண்டு விளக்குகளும் அளவுக்கு அதிகமாகவே பிரகாசித்தன. இரவும் அதிகமாக ஏறிவிட்டதாலும், நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டு நடுஜாமத்துக்கு மேல் கடற்கரையில் அனாவசிய நடமாட்டம் கூடாதென்று கலிங்க மன்னர் பிறப்பித்திருந்த கடுமையான உத்தரவு காரணமாக, நடனக் கூட்டங்களும் பாட்டிசைப் போரும் ஒரே நாழிகைக்குள்ளாக விரட்டப்பட்டு விட்டதாலும் கோரிங்கா துறைமுகம் பூர்ண அமைதியைப் பெற்றிருந்தது. அந்த அமைதியைக் கிழித்தவை பூர்வ சாகரத்தின் அலைகளும் நாவாய் களின் மாலுமிகள் எழுப்பிய சிறு ஒலிகளும் தான்.

கலிங்க அரசரின் ஆணைப்படி நடக்க வேண்டுமென்ற நிர்ப்பந்த மிருந்ததால் நாவாய்களில்கூட அதிகக்கூச்சலோ கும்மாளமோ இல்லை. அன்று இத்தனைக்கும் கோதாவரி துறைமுகத்தில் பத்து மரக்கலங்களே நின்றிருந்ததால் மன்னரின் ஆணையை நிறை வேற்றுவது துறைமுக அதிகாரிகளுக்குச் சுலபமாக இருந்தது. துறைமுகத்தைக் காவல் செய்ய நியமிக்கப்பட்டிருந்த பிரதான தலைவரும் அன்று இரவின் ஆரம்பத்திலேயே ஒவ்வொரு கப்பலாகப் பரிசோதித்துவிட்டும், நங்கூரங்கள் பாய்ச்சப்பட்டிருக் கிறதா என்பதைப்பார்த்துவிட்டும் வந்ததால் மன்னன் ஆணைப்படி சகலமும் இருப்பதைப்பற்றி மிகுந்த சந்துஷ்டியுடனும் சாந்தியுடனும் தமது துறைமுக அறையில் உறங்கலானார்.

zeevaa

சுங்கக் காவலரும் சுங்க வருமான வரி அதிகாரிகளும் இணைந்தே பணிபுரிய வேண்டியிருந்ததால் கோரிங்கா துறை முகத்தில் அரசின் இரு பிரிவுகளுக்கும் சேர்த்து ஒரே இருப்பிடமே கட்டப்பட்டிருந்தமையால், அந்தக் கட்டிடமும் சிறியதாகவே இருந்தது. அதன் வலது புறத்தில் காவலரும், இடதுபுறத்தில் கடலை நேர்ப்புறமாக நோக்கிய பகுதியில் சுங்கவரி அதிகாரிகளும் தங்கியிருந்தனர். பகலில் மூன்று முறையும், இரவில் இரண்டு முறையும் காவலரும், அதிகாரிகளும் மாறிய காரணத்தால் அந்த இல்லத்தில் அதிகக் கூட்டமில்லை. அவசியமிருந்தால் ஒரே கூச்சலில் வீரர்களை வரவழைக்க வசதியிருந்ததால் அளவுக்கதிகமாக யாரையும் இல்லத்தில் அதிகாரிகள் தங்க வைக்கவில்லை. அதனால் பல தலைமுறைகளாக எந்த விதமான அபாயமும் இல்லாததால் கோரிங்கா துறைமுகம் எந்தவிதக் கஷ்டத்துக்கும் ஆளாகாமல் உலகத்திலிருந்து வந்த எல்லோருக்குமே இடம் கொடுத்து வந்தது.

அன்று கடற்கரையில் யவனர், அரேபியர், சீனர், தமிழர் இப்படிப் பலவிதமான மக்களும், ஒருபுறத்தில் சில புத்தபிட்சுகளும், ஒரு கோடியில் சில சநாதன சன்னியாசிகளும் தங்கியிருந்ததால் ஏதோ ஒரு சிறு உலகமே அங்கு சிருஷ்டிக்கப்பட்ட பிரமையைக் கோரிங்கா கடற்கரை அளித்துக் கொண்டிருந்தது. அத்தனை பேரும் இரவு ஏறியதன் காரணமாக நித்திரை வசப்பட்டு விட்டதால், இல்லத்தின் கணக்குப் பிள்ளையும் தமது வேலையை அன்று முடித்துக் கொள்ளத் திட்டமிட்டு வெளியே வந்து ஆகாசத்தைப் பார்த்து, "அடாடா! நள்ளிரவு தாண்டிவிட்டதே!" என்று அதுவரை தாம் விழித்திருந்தது பெரும் பிசகு என்பதை உணர்ந்தவர்போல் சொற்களை முணு முணுத்த வண்ணம் இல்லத்தின் தாழ்வறைக்கு வந்து அங்கிருந்த கணக்குச் சுவடிகளைக் காட்டினார்.

பிறகு வரிப்பணத்தைப் போட்டிருந்த கனமான சாக்கு ஒன்றையும் தூக்கிப் பார்த்து மகிழ்ச்சியடைந்த வண்ணம் ஏட்டுக் கட்டையும் பணச்

zeevaa

சாக்கையும் எடுத்துக் கொண்டு அடுத்திருந்த அறையில்வைத்து விட்டுத் திரும்பினார். கடைசியாக வரி அனுமதி இலச்சினையும், அரக்கையும் சரி பார்த்துப் பெட்டியில் போட இருந்த சமயத்தில் "அப்பனே!" என்ற குரல் கேட்டுத் தலையைத் தூக்கினார்.

அவர் எதிரே மிக உயரமான துறவி ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவர் கையில் மாட்டியிருந்த பிடியை அடுத்து, தோள் மூலமாக முதுகில் இறங்கிக் கிடந்த பெரிய பை சிறிது கனமாக இருந்ததைப் பார்த்த கணக்கர், துறவி எதைத் தூக்கிப் போகிறார் என்பதை அறிய நினைத்து, "சுவாமிகளே!" என்று அழைத்தார்.

இதைக் கேட்ட துறவி முகம் சுளித்தார் ஒரு முறை. "அப்பனே, சுவாமியென்று என்னை அழைக்காதே, பிக்கு (பிக்ஷூ) என்று அழை", என்றார் சாந்தத்துடன்.

"சரி பிக்கு! உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார் கணக்கர்.

"காலையில் ஏதாவது ஒரு மரக்கலத்தில் செல்ல வேண்டும். அதற்குச் சுங்கச் சீட்டு வேண்டும்" என்றார் பிக்கு.

அரைத் தூக்கம் கண்களைச் சுற்றியதால் சற்றுத் தடுமாறிய கணக்கர், "பிக்கு! படுத்துக் கொள்ளுங்கள். காலையில் தருகிறேன்" என்றார்.

"இல்லை அப்பனே! இப்பொழுதே கொடுத்து விடு. நான் விடியற்காலையில் போய்விடுவேன்", என்று பிக்கு பிடிவாதம் செய்தார்.

"விடியற்காலையில் எந்த மரக்கலமும் புறப்படாது". என்றார் கணக்கர்.

"ஏன் அப்பனே?" பிக்கு மீண்டும் கேட்டார்.

zeevaa

"புறப்பட யாருக்கும் அதிகாரம் கொடுக்கவில்லை" கணக்கர் திட்டமாகச் சொன்னார்.

"இல்லாவிட்டாலும் பாதகமில்லை. ஒரு சீட்டைக் கொடுத்துவிடு. நான் நிம்மதியாக உறங்குகிறேன்" என்றார் பிக்கு.

வேண்டா வெறுப்பாக, "சரி சரி, உமது பையிலிருக்கும் சாமான்களை எடும்" என்று கணக்கர் கூற, பையை முதுகிலிருந்து முன்புறமாகக் கீழே வைத்த பிக்கு, "அப்பனே நீயே பார்த்துவிடு" என்றார்.

கணக்கர் பையைப் பிரித்துப் பார்த்தார். பைக்குள் ஒரு பெரிய லிங்கமும் இரண்டு ஆடைகளும் பிச்சை எடுக்க ஓர் ஓடும் இருந்தன. "பிக்கு! உங்களுக்கு எதற்கு சிவலிங்கம்?" என்று கேட்டார் கணக்கர்.

"ஒரு நண்பருக்குக் கொண்டு போகிறேன்", என்றார் பிக்கு.

"லிங்கம் ஏன் சிவப்பாயிருக்கிறது?" என்று கணக்கர் விசாரித்தார்.

"ஸ்படிகம்", என்ற பிக்கு, "இதை சநாதனிகள் பெரிதாக நினைக்கிறார்கள், அவரவர் மதம் அவரவர் பற்று. நமக்கேன் இந்தத் தொல்லை? சீட்டைக் கொடு அப்பனே", என்றும் கேட்டார்.

கணக்கர் யோசித்தார், "நாளை வாரும்" என்று சொல்லிவிட்டுத் திரும்ப முயன்றார்.

"இப்பொழுதே சீட்டைக் கொடு", என்றார் பிக்கு கண்டிப்பான குரலில்.

"நாளை பார்ப்போம்" என்று கூறிய கணக்கர் திரும்பி இரண்டடி எடுத்து வைத்தார் தமது அறையை நோக்கி.

மூன்றாவது அடியை அவர் எடுத்து வைக்கவில்லை. அவர் தலைமீது பலமான அடியொன்று விழுந்தது. கணக்கர் கால்கள் துவளத் தரையில் சரிந்தார்.

# 2. சிந்தனைக் கப்பல்

கிருஷ்ண பட்சத்துக் கடைசி நாளான அன்று கடற்கரை எங்கும் சூழ்ந்திருந்த காரிருளைக் கிழித்து. சுங்கச் சாவடி சார்மணையில் சிறு ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்த விளக்கின் பிரகாசத்தில், கீழே விழுந்து உள்ளறை வாயிற்படியை நோக்கி சரணாகதி செய்பவர் போல் காணப்பட்ட கணக்கரை ஒரே ஒரு விநாடியே உற்று நோக்கிய பிக்கு தமது கையிலிருந்த நீண்ட கருங்கல் குழவியை ஒருமுறை திரும்பிப் பார்த்து, அதிலேயும் ரத்தக்கறை காணப்படாததால் மிகுந்த திருப்தியுடன் அதை மீண்டும் தமது பெரிய சாக்குப் பையில் மெதுவாகப் போட்டார். பிறகு கீழே உட்கார்ந்து கணக்கர் காதுக்கருகில் தடவிய துறவி, அங்கு எழும்பியிருந்த பெரிய முண்டைப் பார்த்து, 'தலை வீக்கம் அதிகமில்லை. காலையில் எழுந்து விடுவான். என்று தம்மைத் தாமே திருப்தி செய்து கொண்டார். அடுத்து கணக்கர், கைப்பெட்டியிலிருந்த இலச்சினையை எடுத்துப் பார்த்து உள்ளே சென்று ஓர் ஓலை நறுக்குடன் திரும்பி வந்தார். அரக்கை விளக்கில் காய்ச்சி, பெட்டியிலிருந்த எழுத்தாணியால் ஓலை நறுக்கில் அனுமதி எழுதி, அரக்கையும் இலச்சினையையும் பதிவு செய்து விட்டு எழுந்திருந்து பழையபடி தமது பெரிய பையைத் தோளில் போட்டுக் கொண்டதும் விளக்கை ஊதிவிட்டு, சுங்கச் சாவடிப் படிகளில் இறங்கி, கடலலைகளை நோக்கி எந்த வித அவசரத்தையும் காட்டாமல் ஒரே நிதானமாக நடந்து சென்றார்.

கடற்கரை முழுதும் மாலுமிகளும் வணிகர்களும் படுத்திருந் தாலும் யாரும் அவரைக் கவனிக்காததால், 'திருட்டுக்கு இருட்டு மிக அவசியம்'. என்று தனக்குள் சொல்லிக் கொண்டார். 'ஆனால் இது

zeevaa



zeevaa

திருட்டல்ல, சிங்கள மன்னர்களின் பரம்பரைச் சொத்து. அதைத் திரும்பக் கொண்டு போவது எப்படித் திருட்டாகும்?' என்று தம்மை வினவியும் கொண்டார். 'பெண்ணையே கொடுத்த கலிங்க மன்னன் வஜ்ரஹஸ்தன் இதையேன் கொடுக்க மறுத்தான்?' என்றும் கேட்டு, 'யாருக்கும் நப்பாசைகள் சில உண்டு'. என்று மனித ஆசையைச் சிறிது மட்டமும் தட்டினார். 'கணக்கன் எத்தனை முட்டாள்! சிவலிங்கம் இத்தனை சிவப்பாகக் கதிர்களை வெளியில் வீசுமா என்று சிந்தித்துச் சோதனை செய்திருக்க வேண்டாம்? சோதனை செய்து காவலரை அழைத்துப் பறிமுதல் செய்திருக்க வேண்டாம்?' என்று கணக்கர் கடமை வழுவியதைப் பற்றிக் குற்றமும் சாட்டினார். இத்தகைய எண்ணங்களுடன் அலை மோதும் இடத்திற்கு வந்த துறவியைக் கடற்கரைக் காவலர் இருவர் மறிக்க அவர்களில் ஒருவன், "துறவி! எங்கு போகிறீர் அவசரமாக?" என்று வினவினான்.

துறவி அவனை நிதானமாக ஏற இறங்க நோக்கினார். "அப்பனே! நீ எதற்காக இங்கு நிற்கிறாய்? காலை வரையில் எந்த மரக்கலமும் புறப்படாது என்று திட்டமாகச் சொன்னாரே கணக்கர்?" என்று பதில் கேள்வி கேட்டார்.

காவலர் சிறிது சிந்தித்தனர். இரண்டாவது காவலன் கேட்டான். 'தெரிந்தும் எதற்காக இங்கு வந்திருக்கிறீர்"கள் என்று.

"என் மரக்கலத்திற்குச் செல்ல, என்னைப் போன்ற துறவிகள் சாதாரண மனிதர்கள் போல் மணலில் புரள முடியாது. நித்திரைக்கும் எங்களுக்குப் பக்குவங்கள் உண்டு அப்பனே," என்று வாதாடினார் துறவி.

காவலர் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். மீண்டும் முதல் காவலன் கேட்டான். "துறவியாரே! மரக்கலம் செல்ல அனுமதிச் சீட்டு வேண்டும்", என்று.

துறவி உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார். 'துறவியிலிருந்து துறவியாரே என்று ஒரு யாரே சேர்ந்திருக்கிறது. மரியாதை

zeevaa

காட்டுகிறான் காவலன். இதுதான் சமயம் இவனை வளைக்க', என்று எண்ணமிட்டு, "அப்பனே! உலகுக்கெல்லாம் சட்டம் விதிக்கும் சந்நியாசி தான் சட்டம் மீறுவானா?" என்று வினவி, "இதோ பார்", என்று கையிலிருந்த அனுமதிச் சீட்டை நீட்டினார்.

அந்த இருளில் கூடக் காவலனால் அந்த இலச்சினையையும் அரக்கையும் பார்க்க முடிந்ததால் குழம்பினான். "காலை வரையில் யாருக்கும் அனுமதிச் சீட்டு இல்லையென்று சொன்னாரே?" என்று வினவினான் தனது சக காவலனை நோக்கி.

"ஆம்! அப்படித்தான் உத்தரவு", என்றான் மற்றொரு காவலனும்.

"அப்பனே! சந்தேகமிருந்தால் போய்க் கேட்டு வந்துவிடு", என்று துறவி வழி சொல்லிக் கொடுத்தார்.

ஒரு காவலன் சுங்கச் சாவடியை நோக்கி நடந்தான். இன்னொருவனுடன் பேசிக் கொண்டு படகுகள் பிணைக்கப்பட்டிருந்த இடத்தை அனுகிய துறவி ஒரு படகில் ஏறிக்கொண்டு, "அப்பனே, அவன் வரட்டும். நீயும் இப்படி உட்கார்", என்றார்.

காவலனும் படகில் உட்கார்ந்ததும், "அப்பனே! உன் சகோதரன் எத்தனை மெதுவாக நடக்கிறான்!" என்று அலுத்துக்கொண்டு பையில் கையை விட்டுத் துழாவிக் கொண்டே இருந்த துறவி சிறிது நேரத்திற்கெல்லாம் "அதோ வந்து விட்டானே! இத்தனை சீக்கிரம் சுங்கச் சாவடி போய்த் திரும்பியா விட்டான்?" என்று சொல்லவே காவலன் சிறிது திரும்பிச் சுங்கச் சாவடியை நோக்கினான். அடுத்து அவன் திரும்பித் துறவியை நோக்கவில்லை. துறவியின் குழவி அவன் தலையில் இறங்க, அப்படியே படகில் குப்புற விழுந்தான். துறவி மெல்ல எழுந்திருந்து அவனைத் தூக்கிக் கரையில் போட்டு விட்டு, படகுத் தளையை அவிழ்த்து, படகை நீரில் இழுத்துவிட்டு ஒரே பாய்ச்சலாகப் படகுக்குள் பாய்ந்து துடுப்புகளை எடுத்துத் துழாவி, படகை வெகு வேகமாகச் செலுத்தலானார். படகு கடலில் அம்பு போல் பாய்ந்து சென்றது.

zeevaa

துறவி படகுத் துடுப்புகளை மிக அற்புதமாக எந்தவித ஒலியையும் கிளப்பாமல் துழாவினார். அன்று கடலில் அலைகள் அதிகமில்லாத தால் படகு சிற்றலைகளை அனாயாசமாகத் தாண்டிச் சென்றது. படகைச் செலுத்திய பிக்கு. ஆங்காங்கு நின்றிருந்த பல மரக்கலங் களை வளைத்துச் சென்று கடைசியில் ஒரு சிறு மரக்கலத்துக்கு வந்து சேர்ந்தார். அந்த மரக்கலத்தை அடைந்ததும் பையிலிருந்த குழவியை எடுத்து மரக்கலத்தின் பக்கப் பகுதியில் இருமுறை பெரிதாகத் தட்டினார். மரக்கலத்தளத்திலிருந்து எட்டிப் பார்த்த மாலுமி 'யாரது?' என்று வினவினான்.

"சிம்மபுரம்", என்றார் துறவி.

மாலுமி மேற்கொண்டு ஏதும் பேசாமல் தளத்தில் மறைந்து விட்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு நூலேணி மரக்கலத்தின் பக்கத்தில் தொங்கவே சாக்குப் பையை தோளில் போட்டுக் கொண்டு நூலேணியில் ஏறித் தளத்தில் இறங்கினார் பிக்கு.

மீண்டும் நூலேணியைத் தூக்கிச் சுருட்டித் தளத்தில் போட்டுவிட்ட அந்த மாலுமியும் ஒரு துறவியென்பதை உணர்ந்த பிக்கு அவரை ஏற இறங்கப் பார்த்து, "சுவாமிகளே! தங்களை எங்கோ பார்த்திருக் கிறேனே?" என்று கேட்டார்.

"இந்தக் கட்டை எங்கும் திரியும்" என்று பதில் சொன்ன மாலுமித் துறவியார், "பிக்ஷு ஸ்வாமியார் யாரைப் பார்க்க வேண்டும்?" என்று வினவினார்.

"அப்பனே! ஸ்வாமியென்ற சொல்லை பிக்ஷுவுடன் கூட்ட வேண்டாம். அடியவன் மதத்தில் ஸ்வாமி கிடையாது", என்றார் துறவி.

மாலுமித் துறவியார், "அப்படியா!" என்று வினவிவிட்டு, "தாங்கள் யாரைப் பார்க்க வேண்டும்?" என்று மீண்டுமொரு முறை பழைய கேள்வியைத் தொடுத்தார்.

பிக்கு சிறிதும் சிந்திக்காமல், "பஞ்ச பாண்டவரை", என்று பதில் சொன்னார்.

zeevaa

அதற்கு மேல் மாலுமித்துறவி பதிலேதும் பேசவில்லை. தம்மைத் தொடரும்படி பிக்குவுக்குச் சைகை காட்டி முன்னால் நடந்தார். ஒரு மூலைக்கு வந்ததும் அங்கிருந்த படிகளில் இறங்கி, கீழே அறைகள் இருந்த பகுதிக்கு வந்து, "பஞ்ச பாண்டவரில் யாருடைய அறை வேண்டும்?" என்று வினவினார்.

பிக்கு தங்கு தடையில்லாமல் சொன்னார். "அர்ஜுனன் அறை," என்று.

மாலுமித்துறவி சிறிது சிந்தித்து, "அர்ஜுனன் தனியாக இல்லையே?" என்று தெரிவித்தார்.

"உடன் யார் இருக்கிறார்கள்?" என்று பிக்கு கேட்டார்.

"சுபத்திரை", என்றார் மாலுமி.

"ஏன் பாஞ்சாலி இல்லையா?" பிக்கு வினவினார் புன்சிரிப்புடன்

"இந்த நவீன பாண்டவர்களுக்குப் பாஞ்சாலி கிடையாது", என்றார் மாலுமித்துறவி.

இரு துறவிகளும் புரிந்ததற்கு அடையாளமாக நகைத்தார்கள். "ஸ்வாமிகள் பெயர் என்னவோ?" என்று வினவினார் பிக்கு.

"அடியவனை மோக்ஷர் என்று சொல்லுவார்கள்", என்ற மாலுமித் துறவியார் "தங்கள் திருநாமம்?" என்று வினவினார்.

"சத்வானந்தர்", என்றார் பிக்கு.

"என்ன அருமையான பெயர்! பிக்கு மிகவும் சாத்வீகம் போலிருக்கிறது?" என்றார் மோக்ஷர்.

சிம்மபுர மாளிகை நந்தவனத்தில் அணிலைப் பிக்கு தடவி எடுத்துச் சென்றது மோக்ஷர் கண் முன்பு விரிந்ததானாலும், பிக்கு எப்படி இரவில் மரக்கலத்துக்கு வர முடிந்தது என்ற சந்தேகம் ஏற்படவே, "பிக்கு! உங்களுக்கு அனுமதிச் சீட்டு கிடைத்ததா இங்கு வர?" என்று வினவினார்.

zeevaa

"குழவியின் உதவியால் கிடைத்தது",

"காவலர் தடுக்கவில்லையா படகை எடுக்கும்போது?"

"தடுக்காமல் இருப்பார்களா?"

"தடையை எப்படி நீக்கினீர்கள்?"

"குழவி சிகிச்சையால்",

இதைக் கேட்ட மோக்ஷர், "நன்று, நன்று சத்வானந்தரே!" என்று சிரித்துவிட்டு, "இங்கிருந்து மூன்றாவது அறை", என்று சுட்டிக் காட்டினார் காட்டியவர் திரும்பிச் சென்று படிகளில் ஏறிச் சென்றுவிட்டார்.

பிக்கு அந்த அறைக்கு எதிரில் வந்து அறைக் கதவைத் தட்டினார். கதவு உடனடியாகத் திறக்கப்பட, ஒரு கை மட்டும் வெளியே வந்தது. அதன் கையில் தமது தோளிலிருந்த பையை எடுத்துத் திணித்தார் பிக்கு. பையை வாங்கிக் கொண்ட கை மறைந்து கதவும் சாத்தப் பட்டது. பிக்கு அங்கேயே நின்று கொண்டிருந்தார். அதே கை மீண்டும் வெளி வந்து பையை நீட்ட அதைப் பெற்றுக் கொண்ட பிக்கு மறுபடியும் தளத்தை அடைந்தார்.

மரக்கலம் சிறியதானாலும் தளமைப்பு துப்புரவராகவும் அழகாகவும் இருந்தது. அதன் இரண்டே பாய்மரங்களின் தண்டுகள் மிக உறுதியாகக் காணப்பட்டன. அந்த இரண்டு பாய்மரங்களுக்கு இடையில் நான்கு துறவிகள் அமர்ந்திருந்தனர். அவர்களை நோக்கிச் சென்று அவர்களுடன் உட்கார்ந்து கொண்ட பிக்கு, "ஸ்வாமிகாள்!" என்று அழைத்துத் தலைவணங்கினார்.

"பிக்கு! இந்தச் சங்கத்தில் தாங்கள் சேர நாங்கள் எத்தனையோ தவம் செய்திருக்க வேண்டும்" என்றார் ஒருவர்.

"எங்கள் மதம் தவத்தை நம்பவில்லை", என்றார் பிக்கு.

zeevaa

முதலில் பேசிய துறவி, "பிக்கு! மதத்தை அரசியலில் கலக்கக் கூடாது. இந்த மரக்கலத்தில் மத நம்பிக்கைகளுக்கு இடமில்லை. சில செயல்களுக்குத்தான் இடம். முதலில் நமது நால்வர்களைத் தெரிந்து கொள்ளுங்கள். அடியவனை தர்மர் என்று அழைப்பார்கள். இவர் அர்த்தர். இவர் காமர், மோக்ஷரைத்தான் தாங்கள் ஏற்கனவே அறிவீர்கள்", என்று தன்னையும் அறிமுகப்படுத்திக் கொண்டு மற்றவர்களையும் அறிமுகப்படுத்திவிட்டு, "சத்வரே! மோக்ஷர் தங்களைப் பற்றிச் சகலத்தையும் சொல்லி விட்டார். இந்த மரக்கலத்தைச் செலுத்த ஆட்கள் அதிகமில்லை. தாங்கள் இதில் எந்தப் பணியை மேற்கொள்ள முடியும்?" என்று வினவினார்.

"துடுப்புகளைத் துழாவுபவர்களை மேற்பார்வை பார்க்க முடியும். சுக்கானைப் பிடித்து மரக்கலத்தைத் திசை திருப்ப முடியும்", என்றார் பிக்கு.

"பிக்கு," என்று அழைத்தார் தர்மர்.

"என்ன தர்மரே?" பிக்கு கேட்டார்.

"இன்று விடிவதற்குள் இந்த மரக்கலம் இந்தத் துறைமுகத் திலிருந்து கிளம்பிவிட வேண்டும்", என்றார் அர்த்தர்.

"துடுப்புத் துழாவ ஆட்களிருந்தால் அது சிரமமில்லை", என்றார் பிக்கு.

"நாங்கள் நால்வர் இருக்கிறோம். கப்பலைக் கிளப்பிச் சென்று விட்டால் இன்னொரு துறைமுகத்தில் மாலுமிகளைச் சேர்த்துக் கொள்ளலாம்", என்றார் காமர்.

"மரக்கலத்தை நகர்த்த நாலுபேர் துடுப்புத் துழாவினால் போதாது", என்ற பிக்கு சிறிது சிந்தித்து, "ஒரு வழி இருக்கிறது", என்றார்.

"என்ன?" தர்மர் வினவினார்.

zeevaa

"இன்னும் ஒரு நாழிகையில் வடதிசைக் காற்று வரும். அப்பொழுது மரக்கலத்தைச் செலுத்தலாம். எதற்கும் பாய்மரச்சீலையை அவிழ்த்து விடுவோம்", என்று கூறிய பிக்கு எழுந்து பாய்மரக் கயிறுகளை அவிழ்க்கலானார்.

"பிக்கு" என்றார் தர்மர்.

"என்ன" தர்மரே!"

"கப்பலோட்டுவதில் தங்களுக்குப் பரிச்சயம் உண்டு போலிருக்கிறது" என்று அர்த்தர் வினவினார்.

"அடியவன் இரண்டொரு கப்பல்களுக்குத் தலைவராயிருந்திருக்கிறேன்" என்று கூறிக்கொண்டே பாய்மரச் சீலையை அவிழ்க்கலானார் பிக்கு.

அப்பொழுது ஓர் அற்புதம் நிகழ்ந்தது. மரக்கலம் பாய்விரிக்கு முன்பாகவே நகர முற்பட்டது. பக்கங்களில் துடுப்புத் துழாவும் சத்தமும் கேட்டது.

பிக்கு சிலையென நின்றார். "மரக்கலம் நமது கையில் மட்டுமில்லை", என்று கூறினார் மெதுவாக. அவர் குரலில் கவலை தெரிந்தது. முகத்தில் சிந்தனை ரேகை படர்ந்தது.

யார் சிந்தனையைப்பற்றியும் கவலைப்படாமல் சீரொழுகு சான்றோர் சினத்தைப் போல மரக்கலம் கடல் நீரைக் கிழித்துக் கொண்டும், வேகமாகத் துறைமுகத்திலிருந்து விரைந்தது.

தர்மர் தீவிர சிந்தனை வசப்பட்டார். "பிக்கு, இதைச் சாதனைக் கப்பல் என்று நினைத்தேன். ஆனால் சிந்தனைக் கப்பலாக மாறிவிட்டது. எப்பொழுதும் சலிக்காத சிந்தனையையும் சலிக்க வைத்து விட்டது", என்றார்.

zeevaa

# 3. கப்பல் தலைவர்

மூன்றாவது ஜாமம் பாதி அகன்றுவிட்டதால், நான்காவது ஜாமம் சீக்கிரம் புகுந்து விடுமென்பதையும், அது புகும்போது வானத்தின் வெண்மதியும் தலைகாட்டி நிலவைப் பரப்புவான் என்பதையும், உணர்ந்துகொண்ட காரணத்தாலோ என்னவோ, அந்த மரக்கலம் நங்கூரமெடுத்துத் துடுப்புகளால் துழாவப்பட்டு வேகமாகத் துறைமுக எல்லையைவிட்டு விரைய முற்பட்டதன் விளைவாக பிக்கு சத்வானந்தர். தமது சத்வ குணத்தைக் காற்றில் பறக்கவிட்டு, சிந்தனை வசப்பட்டு முகம் சிவந்தார். அத்துடன் சீறினார் மற்றத் துறவிகளை நோக்கி, "இந்த மரக்கலத்தை இந்த நிலையில் வைத்திருப்பதற்குக் காரணம் நீங்கள்தானா?" என்று.

தர்மர் பிக்குவைக் கூர்ந்து நோக்கினார். நிதானம் தவறாத கண்களால், "பிக்கு! கப்பல் நிலை ஒருபுறமிருக்கட்டும். முதலில் உமது நிலையை யோசித்துப் பாரும்", என்றார்.

பிக்குவின் சினம் எல்லை கடந்தது. "ஏன், எனது நிலைக்கு என்ன?" என்று வினவினார் உஷ்ணம் குரலில் கொந்தளிக்க.

இந்தச் சமயத்தில் அர்த்தர் உரையாடலில் புகுந்து, "பிக்கு, நீங்கள் பௌத்தரல்லவா?" என்று வினவினார்.

"ஆம், அதற்கென்ன?" என்று பிக்கு கேட்டார் கொந்தளிப்புத் தணியாத குரலில்.

"போதி சத்வரின் கொள்கைக்கு முரணாக நடக்கிறீர்", என்று அர்த்தர் சுட்டிக் காட்டினார்.

பிக்கு கோப மிகுதியால் என்ன பேசுகிறோமென்பதை அறியாமல், "போதிசத்வருக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்?" என்று சீறினார்.

zeevaa



zeevaa

மோக்ஷர் இந்தச் சமயத்தில் தலையிட்டார். "நமக்கு என்று சொல்ல வேண்டாம். நாங்கள் சிவ பக்தர்கள். நீங்கள்தான் பிக்கு. போதிசத்வர் சாந்தத்தையும் அஹிம்சையையும் போதித்தார், கடற்கரையில் அஹிம்சையைத் துறந்தீர். இங்கு சாந்தத்தைத் துறந்து விட்டீர்", என்று விளக்கினார் மெதுவாக.

பிக்குவுக்கு மெதுவாக விஷயம் புரியவே அவர் சிறிது திண்டாடி, "அதற்கென்ன செய்வது? அந்தக் கணக்கனைக் குழவியால் அடிக்கா விட்டால் அவன் மயக்கமடைய மாட்டான். சாவடி ஓலையில்லா விட்டால் படகை எடுத்துக் கொண்டுவர முடியாது", என்று சமாதானம் சொன்னார்.

"உண்மை உண்மை", என்று குதூகலித்த மோக்ஷர், "முதல் பணியை நானறிவேன். இரண்டாவது எனக்குத் தெரியாது", என்று சொன்னார்.

உரையாடல் முடிந்துவிட்டதென்று எண்ணிப் பாய்மரச் சீலையை அவிழ்க்க முயன்ற பிக்கு, பாய் மரத்தை விட்டு முன்னால் வந்து, "நீர் சொல்வது புரியவில்லை", என்றார்.

"கணக்கனைக் குழவியால் அடித்தீர். எனக்கு குழவி தேவை யில்லை. என் கைகளே போதும். ஆனால் இரண்டாவது ஓலையை எழுதி அவன் கையெழுத்தையும் போட்டு இலச்சினையையும் பதித்தீரே அது எனக்குப் பரிச்சயமில்லை. இந்த யாத்திரை முடிவதற் குள் அதையும் தங்களிடமிருந்து கற்றுக் கொள்கிறேன்", என்று மிகப் பணிவாகச் சொன்னார் மோக்ஷர்.

மற்ற மூவரும் புன்முறுவல் செய்தார்கள். மோக்ஷரின் விஷமப் பேச்சால் சிறிது நிதானத்துக்கு வந்த பிக்கு. "சரி சரி! நமது சண்டை நிற்கட்டும். முதலில் கப்பலைத் துறைமுகத்திலிருந்து நெடுந் தூரம் கொண்டு போய்விட வேண்டும்", என்று சொல்லிக் கடற்கரையைக்காட்டினார்.

துறைமுகம் திடீரென உயிர்பெற்று எழுந்திருந்தது. கரைப்பகுதி முழுவதிலும் பந்தங்கள் வேகமாக உலவின. சுங்கக் காவலர்

zeevaa

அப்படியும் இப்படியும் ஓடிக் கொண்டிருந்ததும், சிலர் படகுகளை அவிழ்ப்பதும் பந்தங்களின் வெளிச்சத்தில் மிக நன்றாகத் தெரிந்தது. காவலரின் ஆரவாரத்தின் விளைவாக மணலில் உறங்கிக் கொண்டிருந்த நானா தேசப் பயணிகளும் எழுந்து பேச முற்பட்ட தாலும் கூச்சலிட்டதாலும் எல்லா மொழிகளுமாகக் கலந்து விபரீதமான கூச்சலைத் துறைமுகக் கரையில் எழுப்பின. அதே சமயத்தில் பல படகுகள் வேகமாகத் துழாவப்பட்டுச் சிறு சிறு விளக்குகளுடன் கடல் நீரில் விரைந்ததால், கார்த்திகை மாதத்தில் ஏற்றிவிடப்பட்ட கற்பூர தீபங்களுடன் ஜகஜ் ஜோதியாக விளங்கும் கோதாவரியைப் போலக் காட்சி அளித்தது கோதாவரி பிரவேசித்த அந்தத் துறைமுகம்.

வேகமாகத் தங்கள் கப்பலை நோக்கி வந்து கொண்டிருந்த படகுகளைக் கண்ட பௌத்த துறவி, "தர்மரே! சுக்கானைப்பிடியும். இந்த மரக்கலத்தின் பக்கங்களிலிருக்கும் வேல்களை எடுத்து ஒவ்வொன்றாகக் குறிபார்த்து வரும் படகுகளின் மீதும் வீசும் அர்த்தரே! கீழே சென்று அடித்தளத்தில் உள்ள பாண்டவரையும் எழுப்பும். அங்குள்ள பந்த எண்ணெயையும் துணிச் சுருள் களையும் எடுத்து வாரும். காமரே! நீர் என்னுடன் பாய்மர வேலைக்கு வாரும்", என்று கூறிவிட்டு, "இந்த நாலாம் ஜாமத்துக்குள் நாம் துறைமுகத்திலிருந்து எட்டிப் போகாவிட்டால் திரும்பவும் துறைமுகத்தில் இறங்கும்படியாயிருக்கும்", என்றும் குறிப்பிட்டு மத்தியிலிருந்த பெரும்பாய்மரச் சீலையை அவிழ்க்கலானார். அவர் உத்தரவுப் படி பாய்த்தண்டில்' சுற்றப்பட்டிருந்த கயிற்றை அவிழ்க்கப் பாய்மரத்தைச் சுற்றிச் சுற்றி ஓடினார் காமர். கயிறு அவிழ்க்கப் பட்டதும் உயரமான அந்தப் பாய்மரத்தை ஏறெடுத்துப் பார்த்த பிக்கு தமது வழுக்கைத் தலையை உற்சாகத்துடன் தடவிக் கொண்டார் ஒருமுறை. அடுத்து, தமது அங்கியைக் கழற்றிவிட்டு இடுப்பிலிருந்த துணியைத் தார்ப்பாச்சாகக் கட்டிக் கொண்டு பாய்மரத்தண்டின் மீது தாவினார். அடுத்து, பாய்மரச் சீலையில் ஒரு துணியை வாயால் கௌவிக் கொண்டு பாய் மரத்தின் மீது தொற்றித் தொற்றிப்

zeevaa

பரமவேகமாக ஏறமுற்பட்டு, மனிதனுடைய மூதாதைகள் யார் என்பதற்கு அத்தாட்சி காட்டினார். சில விநாடிகளில் பாய்மர உச்சிக்கு ஏறி, அங்கிருந்து வேவு பார்க்கும் சக்கரவட்டப் பலகையில் நின்று பாயின் நுனியை உதறி வேகமாக அசைக்க, பாய்மரச் சீலை நன்றாக அவிழ்ந்து காற்றில் புடைக்கவே மரக்கலம் அதிக வேகத்தைக் காட்டியது. மற்றுமிரண்டு பாய் மரச்சீலைகளையும் அப்படியே அவிழ்த்துவிட்ட பிக்கு மிகுந்த நிம்மதியுடன் தளத்தில் நின்று மரக்கலத்தை நாடிவரும் படகுகள் மீது தமது கண்களை நாடவிட்டார்.

பாய்ச் சீலைகளை அவிழ்த்து விடுவதற்கு ஏற்பட்ட சிறு தாம தத்தைச் சுங்கப் படகுகள் பெரிதும் பயன்படுத்திக் கொண்டதால் மரக்கலத்தை அணுகிக் கொண்டிருந்தன. அந்தப் படகுகள் ஒன்றி லிருந்து ஊதப்பட்டஎச்சரிக்கைத்தாரையின் ஒலியை லட்சியம் செய்யாத பிக்கு வேலொன்றை எடுத்து முன்னால் வந்து கொண்டிருந்த படகை நோக்கி வீசினார். அந்த வேலும் கடற்காற்றில் சீறிச் சென்று முதல் படகிலிருந்த யார் மீதும் படாவிட்டாலும் பக்கப் பலகையில் அடிப்பகுதியைப்பிளந்துவிடவே கடல் நீர் படகுக்குள் ஏற முற்பட்டது. இதனால் திகிலடைந்த காவலர் நீரில் குதித்து நீந்தி அடுத்த படகில் ஏறலாயினர். முதல் படகு தீபத்துடன் கடலில் இறங்கிக் கொண்டிருந்ததைக் கவனித்த பிக்கு குதூகலித்தார்.

இதனால் அடுத்த படகுகளின் துரிதம் குறைந்தும் மரக்கலத்தின் வேகம் அதிகப்பட்டும் விட்டதால் சுங்கப் படகுகள் மரக் கலத்தைத் துரத்துவதை நிறுத்திக் கரைக்குத் திரும்பின. இதைக்கண்ட பிக்கு ஆசுவாசப் பெருமூச்சு விட்டு, "நல்லவேளை படகுகள் திரும்பி விட்டன. இனி இந்தக் கப்பலைக் கவனிக்க வேண்டும்" என்றார்.

காமர் அதை ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்து, "உத்தரவிடுங்கள் தலைவரே", என்று பயபக்தியுடன் கேட்டார்.

பிக்குவின் முகத்தில் குழப்பம் தெரிந்தது. "நான் தலைவர் என்று யார் சொன்னது?" என்று வினவினார்.

zeevaa

"இரண்டு மூன்று கப்பல்களுக்குத் தலைவராக ஏற்கனவே இருந்திருப்பதாகத் தாங்களே கூறினீர்கள் சற்று முன்பு" என்றார் காமர்.

"அது அந்தக் காலம். அப்பொழுது நான் பிக்குவல்ல" என்றார் சத்வானந்தர்.

"அதனால் பாதகமில்லை பிக்கு. உமக்கு இன்னும் அந்தப் பழைய திறமை இருக்கிறது. இந்தக் கப்பலை இதன் சிக்கலைத் தீர்த்து, செலுத்தக்கூடியவர் நீர்தான்", என்றார் காமர்.

"முற்றிலும் சரி" என்று கூறிக்கொண்டே வேலொன்றைக் கையிலேந்தி வந்த அர்த்தர் அதைப் பக்கப்பலகை ஓரமாக எறிந்து விட்டு, "இனி நான் வேலை கையால் தொடமாட்டேன்" என்றார்.

"ஏன் அர்த்தரே?" என்று காமர் விசாரித்தார்.

"பிக்கு சற்று முன்பு வேலெறிந்ததைப் பார்த்தேன். அத்தனை குறி வைத்து எய்ய என்னால் முடியாது", என்றார் அர்த்தர்.

அந்த சமயத்தில் அங்கு வந்த மோக்ஷர், "உண்மை! உண்மை! பிக்கு. நீங்கள் இஷ்டப்பட்டிருந்தால் நான்கே வேல்களில் அந்தப் படகிலிருந்த நால்வரையும் மோக்ஷத்துக்கு அனுப்பியிருக்கலாம்", என்று பாராட்டினார்.

பிக்கு சட்டென்று நிமிர்ந்து நின்றார். "மோக்ஷத்தை நாங்கள் நம்பவில்லை", என்றார்.

"தொலைகிறது. கொலையை நம்புகிறீர். அதுமட்டில் நல்லது. பிக்கு! இனி நாங்கள் உங்கள் உத்தரவு எதுவாயிருந்தாலும் நிறைவேற்றுகிறோம்!" என்றார் மோக்ஷர்.

தூரத்தில் சுக்கானில் உட்கார்ந்திருந்த தர்மர் ஏதோ உரையாடல் நடப்பதை அங்கிருந்தே பார்த்து, "அங்கே என்ன நடக்கிறது?" என்று இருந்த இடத்திலிருந்தே கூவினார்.

zeevaa

"தலைவரைத் தேர்ந்தெடுக்கிறோம்", என்று கூச்சலிட்டார் காமர்.

"நானிருக்கும்போது வேறு தலைவர் ஏது?" என்று வினவினார் தர்மர்.

"இந்தக் கப்பல் சம்பந்தப்பட்டவரை உங்கள் பதவி போய்விட்டது", என்று காமர் அறிவித்தார்.

இதைக்கேட்ட தர்மர் சுக்கானைவிட்டு எழுந்து வேகமாக அவர்கள் இருக்குமிடம் வந்தார். பிக்குவை நோக்கி, "பிக்கு, என் சீடர்களை எப்படி மாற்றினீர்?" என்று சீறினார்.

இதற்குப் பிக்கு பதில் சொல்லுமுன்பு அர்த்தர் முந்திக் கொண்டு, "அவர் மாற்றவில்லை. நாங்களே மாறிவிட்டோம்" என்றார்.

"ஏன்?" தர்மர் சற்று நிதானத்துக்கு வந்தார்.

"பிக்கு திறம்பட வேலெறிகிறார். ஏற்கனவே கப்பல் தலைவராயிருந்திருக்கிறார்.........." என்று நீட்டினார் காமர்.

"நானும் படைத் தலைவனாயிருந்திருக்கிறேன்", என்றார் தர்மர்.

"அது நிலத்தில், நிலப்படை வேறு. ஜலப்படை வேறு", மோக்ஷர் விவரித்தார்.

தர்மர் சிந்தித்தார். "சரி பிக்கு! இவர்கள் உம்மைத் தலைவராக ஒப்புக் கொண்டால் நானும் ஒப்புக் கொள்வதைத்தவிர வேறு வழியில்லை", என்று கூறிவிட்டு மீண்டும் சுக்கானை நோக்கிச் சென்றார்.

அடுத்து, கப்பல் தலைவர் தமது உத்தரவுகளை வேகமாகப் பிறப்பிக்கலானார். "அர்த்தரே! நீர் பாய்மரத்தில் ஏறித் துறைமுக நிலையைக் கவனியும். மோக்ஷரே! நீர் அடித்தளத்தில் சென்று துடுப்புகளை யார் துழாவுகிறார்கள். யார் வசத்தில் இந்தக் கப்பல் இருக்கிறது என்பதைப் பார்த்து வாருங்கள். காமரே! நீர்போய் அர்ஜுனனை எழுப்பி வாரும்", என்று விடுவிடென்று உத்தரவிட மற்றவர்கள் பறந்தாலும் காமர் மட்டும் இருந்த இடத்திலிருந்து

zeevaa

நகரவில்லை. "என்ன காமரே?" என்று வினவினார் மரக்கலத் தலைவர்.

"அர்ஜுனனை எழுப்புவதில் கஷ்டமிருக்கிறது" என்றார் காமர்.

"ஏன்?"

"சுபத்திரை உடனிருக்கிறாள்".

"அதனால்?"

"சமயம் சரியாயிருக்குமோ என்னவோ"

"எப்படியிருந்தாலும் அழைத்து வாரும். இங்குள்ள நிலைமையைச் சீர்திருத்த அர்ஜுனன் வந்துதான் ஆகவேண்டும்." என்ற பிக்கு பிறகு முகத்தில் சினத்தின் சாயை பரவ, "இங்கு பஞ்ச பாண்டவர் வேஷம் எதற்கு? அஞ்ஞாத வாசம் முடிந்துவிட்டது. அவரவர் பெயரைச் சொல்லி அழைப்போம். போய் விஜயனை அழைத்து வாரும்", என்று இரைந்தார்.

அவர் இரைச்சல் முடியுமுன்பே விஜயன் திரிலோக சுந்தரியுடன் தளத்தின் வாயிலில் தோன்றினான். தளத்தை ஒருமுறை சுற்றி நோக்கிவிட்டுத் தளத்திற்குக் குறுக்கே நடந்துவந்தான். பின்னால் திரிலோகசுந்தரியும் வந்தாள். அவளைப் பார்த்த பிக்குவின் முகத்தில் வெறுப்பு நிலவியது. "மகாபாரதம் போய் ராமாயணம் வந்தது" என்று முனகினார்.

அடுத்து அந்த வாயிலில் இன்னொருவன் தோன்றினான். முற்றும் எதிர்பாராத அவனைக் கண்டதும் பிக்கு சினத்தின் எல்லையை எய்தினார். அவனை தீர்த்துவிட வேலொன்றையும் கையில் எடுத்துக் கொண்டார்.

zeevaa

# 4. அவன் சிருஷ்டித்த எரிமலை

மரக்கலத்தின் மேல்தளத்து வாயிலில் தோன்றிக்குறுக்கே நடந்து வந்த விஜயனை நோக்கிய பிக்கு ஓரளவு திருப்தியடைந்தாலும், திரிலோகசுந்தரியைக் கண்டதும் மகாபாரதம் போய் ராமாயணம் வந்தது என்று நினைத்து வெறுப்பைக் காட்டினாரென்றால் அதற்குக் காரணம் இருக்கவே செய்தது.

தங்களுக்குள் அடையாளம் கண்டுபிடித்துக் கொள்வதற்காகப் பஞ்சுபாண்டவர்கள் பெயரை மாறு பெயராக வைத்துக்கொண்ட ஐவரில் விஜயனின் வாலிபத்தையும், அவனது இணையிலா அழகையும், வீரத்தையும் முன்னிட்டு அவனை எல்லோரும் அர்ஜுனனாக மாற்றியதையும். திரிலோகசுந்தரிக்கு விஜயனே சுபத்திரை என்று பெயரிட்டதையும் எண்ணிப் பார்த்த பிக்கு. திரிலோக சுந்தரியின் நிலையைக் கண்டதும் மகாபாரதம் மறைந்து ராமாயணம் உருவெடுத்ததைப் புரிந்து கொண்டார். திரிலோக சுந்தரியின் நிலை, ராமாயணத்தில் சுக்ரீவனுடன் இரவெல்லாம் கிரீடித்துவிட்டு வந்த தாரையின் நிலையிலிருந்ததை எண்ணியதால் பிக்கு எல்லை மீறிய கோபமும் அடைந்தார். "இருக்கிற ஆபத்தில் இந்த இழவு எதற்கு" என்று அவளைச் சபிக்கவும் செய்தார்.

தளத்தில் நுழைவாயிலில் தோன்றி விஜயனுக்குப் பின்னால் நடந்து வந்த திரிலோகசுந்தரியின் நிலையை ராமாயண தாரைக்கு

zeevaa



zeevaa

ஒப்பிடலாம். *'தளர்ந்த நடை, துவண்ட இடை, சரிந்த உடை' என்ற மூன்று சொற்களால் சுட்டிக் காட்டலாம். அவள் சிறிது தள்ளாடி நடந்தாள். அவள் சேலை நழுவி இடையில் கட்டியிருந்த தங்கச் சரட்டையும் அதில் கோக்கப்பட்டிருந்த சலங்கைகளையும் சேர்த்து இழுத்துக் கொண்டு கீழே விரச எல்லைக்கு இறங்கியிருந்ததால் அவளுடைய அழகின் பார்க்கக் கூடாத விளிம்புகளை நன்றாகவே எடுத்துக் காட்டியது. கொடியிடை பெரிதும் துவண்டிருந்ததால் அவள் அழகிய மேனி லேசாக வளைந்தும் இருந்தது. அவள் தலைக் குழல் அசாத்தியமாகக் கலைந்திருந்தது. இரவு கண் விழித்து கிரீடித்ததாலும் மதுவை லேசாக அருந்தியிருந்ததாலும் கண்கள் சிவந்து சோர்ந்து நிலையற்று அப்படியும் இப்படியுமாகப் பார்த்தன. அவள் காற் சிலம்புகளின் சப்தம் உபரிசுரத்தைச் சுட்டிக் காட்டின. இப்படி அரை குறையாகத் தள்ளாடியும் வெட்கமான புன்சிரிப்பை தனது செவ்விய இதழ்களில் படரவிட்டுக் கொண்டும் வந்த திரிலோகசுந்தரியைக் கண்ட பிக்கு வெறுப்புக் கொண்டதை, தர்ம, அர்த்த, காம, மோக்ஷர் கள் கூட உள்ளூர ஒப்புக் கொண்டாலும், அவர்கள் திரிலோக சுந்தரியைச் சபித்தார்கள் இல்லை. அவர்களில் காமர் சிறிது சப்பை கட்டவும் முற்பட்டு, "பிக்கு! தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. இது கிருகஸ்தா சிரமதர்மம்", என்று சுட்டிக் காட்டினார்.

பிக்குவின் கோபம் எல்லை மீறியது. "எனக்குத் தெரியாதது எதுவுமில்லை என்று எதைக் குறிப்பிடுகிறீர் காமரே?" என்று வினவினார் கோபம் சொற்களில் சொட்ட.

"தர்மத்தை", என்று சமாளித்தார் காமர்.

"அதைச் சொன்னீரா?" என்றார் பிக்கு.

---

* 'தாரை லக்ஷ்மணனைச் சந்தித்த நிலையை வால்மீகி விவரிக்கிறார்- "ஸா ப்ரஸ்கலந்தீ மதவிஹ்வலாக்ஷீ ப்ரலம்ப காஞ்சீகுண ஹேமஸூத்ரா, ஸலக்ஷணாலக்ஷ்மண ஸந்நிதானம் ஜகாம தாரா நமிதாங்கயஷ்டி:" வால்மீகி ராமாயணம்–கிஷ்கிந்தா காண்டம். ஸர்க்கம் 33. சுலோகம்-57. ஆபரணங்களின் ஒலி உபரி சுரத்தைக் குறிப்பது கோவிந்தராஜயர் வியாக்கியானத்தில் இருக்கிறது.

zeevaa

"வேறு எதைச் சொல்லுவேன்? தங்களைப் பற்றி வேறுவித அனுபவத்தைச் சொல்லுவேனா?" என்றார் காமர்.

"சொன்னால்தான் என்ன? தீயென்றால் வாய்வெந்துவிடுமா?" என்ற மோக்ஷர் தமது 'புராண வல்லமையைக் காட்ட முற்பட்டு, "எல்லாத் துறவிகளும் இந்தக் காமப் பரீட்சைக்கு உட்பட்டுத் தேறியிருக்கிறார்கள். விசுவாமித்திரன் மேனகையிடம் மையலில் சிக்கி மீளவில்லையா?" என்று விளக்கினார்.

இதனால் கோபம் அதிகப்பட்ட பிக்கு தமது சகோதரத் துறவிகளைப் பார்த்துச் சீற முயன்றபோது விஜயனுக்கும் திரிலோக சுந்தரிக்கும் அடுத்தபடி நுழைவாயிலில் தோன்றிய மூன்றாவது மனிதனைக் கண்டதும் தனது சீற்றத்தை அவன் மீது மாற்றி அவனைக் கொன்று தீர்த்துவிட வேலொன்றையும் எடுத்துக் கொண்டதைக் கண்ட மற்ற துறவிகள், அவர் பார்த்த திசையில் தங்கள் பார்வை களையும் திருப்பிச் சற்று அதிர்ச்சியுற்றனர். அங்கு தளத்தின் வாயிலில் தோன்றிய மூன்றாவது மனிதன் ஆதிமால்யன். நுழை வாயில் தலையில் இடிக்கும்படி உயரமாக நின்ற ஆதிமால்யனைக் கண்டதும் பிக்கு வேலை எறியத் தூக்கிவிட்டாரென்றாலும் அதை விஜயனே தடுத்தான். தளத்தின் குறுக்கே மெதுவாக நடந்த விஜயன். சரேலெனத் தனக்கும் பிக்குவுக்கும் இடையேயிருந்த தூரத்தை இரண்டே அடிகளில் தாண்டி அவர் கையைப் பிடித்து, "சத்வானந்த பிக்கு! வேலை அப்புறம் வைத்துவிடுங்கள். அவனைக் கொல்ல வேண்டாம்", என்று கேட்டுக் கொண்டான். இந்தச் சமயத்தில் விஜயனுக்குப் பின்னால் வந்த கலிங்க ராஜகுமாரியும் துறவிகளை நோக்கித் தலை வணங்கிக் கையையும் குவித்தாள். வணங்குவது யாராயிருந்தாலும் ஆசீர்வதிக்க வேண்டிய அவசியத்தால் பிக்கு உட்பட எல்லாத் துறவிகளும் அவள் தலைக்கு மேல் தங்கள் கைகளை உயர்த்தி, "தீர்க்க சுமங்கலீ பவ," என்று வாழ்த்துக் கூறினார்கள்.

பிறகு அந்தக் கப்பலின் நிலையைப் பிக்குவுக்கும் மற்றவர் களுக்கும் எடுத்துக் கூற முற்பட்ட விஜயன், "பிக்கு சுவாமிகளே!

zeevaa

ஆதிமால்யன் நமது கட்சிக்கு மாறிவிட்டான். அவன் உதவியில்லை யேல் இந்த மரக்கலம் நமக்குக் கிடைத்திருக்காது. அவன் உதவி யில்லையேல் இதை நாம் செலுத்தவும் முடியாது. பதினெட்டு மாலுமிகளுடன் ஆதிமால்யன் நம்முடன் சேர்ந்திருக்கிறான்", என்று அறிவித்தான்.

விஜயன் இப்படி அறிமுகம் செய்து கொண்டிருக்கையிலேயே அவர்கள் இருந்த பாய் மரத்துண்டை அணுகிவிட்ட ஆதிமல்லன் துறவிகளுக்குத் தலை வணங்கி, "மகாராஜா விஜயபாகுவின் அடிமை", என்று மிகுந்த வணக்கத்தைச் சொற்களிலும் காட்டினான்.

பிக்கு மிகுந்த சந்தேகத்துடன் அவனை நோக்கி, "இந்தத் திடீர் மாற்றத்துக்கு என்ன காரணம்?" என்று வினவினார்.

"மாற்றத்துக்குக் காரணம் அவசியம். தமிழர் தூதன் சிங்கள மன்னருக்கு எதிராக எது செய்தாலும் ஆபத்து என்பதை உணர்ந்து கொண்டேன்", என்றான் ஆதிமல்லன்.

"எப்படி உணர்ந்து கொண்டாய்?" பிக்கு கேட்டார்.

"இதுவரை நடந்த நிகழ்ச்சிகளிலிருந்து", என்றான் ஆதிமல்லன்.

இந்த அனாவசியத் தர்க்கத்தை தர்மர் நிறுத்தி, "விஜயபாகு! இந்த மரக்கலத்தைப் பற்றிய மர்மங்கள் பல இருக்கின்றன. அதை நீங்கள்தான் விளக்க வேண்டும். முதலில் நீங்கள் சிம்மபுரத்தில் சொன்ன ஏற்பாட்டின்படி நாங்கள் இங்கு வந்தபோது இந்த மரக்கலத்தில் எங்களையும் பஞ்ச பாண்டவரையும் சேர்த்து ஒன்பது பெயரைத்தவிர வேறு யாரையும் காணோம். பிக்கு வரப்போவது நமது திட்டத்தைச் சேர்ந்ததாகையால் அவர் வந்தது நமக்குத் தெரிந்ததுதான்...." என்று பேசிக்கொண்டு போக முயன்றவரை இடைமறித்த விஜயபாகு. "ஆனால் நீங்கள் இங்கு இருப்பது பிக்குவுக்குத் தெரியாது", என்றான்.

"அவர் நடத்தையிலிருந்து அதைப் புரிந்துகொண்டேன். ஆனால் ஆதிமல்லன் இங்கு எப்படி வந்தான். எப்பொழுது வந்தான்

zeevaa

என்பதெல்லாம் எனக்கும் எனது சக துறவிகளுக்கும் தெரியாது" என்றார் தர்மர். அவர் குரலில் விஜயனைக் குற்றம் சாட்டும் தொனி இருந்தது.

அவர் மனக்கஷ்டத்தை விஜயன் புரிந்து கொண்டான். அதனால் சொன்னான். "தர்மரே! சில சமயங்களில் நமக்கு மிகவும் வேண்டியவர்களிடமும் உண்மையை மறைக்க வேண்டியிருக் கிறது. ஆகையால் இந்த மரக்கலத்தில் ஆதிமல்லன் ஏற்கனவே இருந்ததை உங்களுக்கு நான் சொல்லவில்லை. சிம்மபுரத்திலிருந்து நாம் எத்தனை துரிதத்தில் தப்பி வந்தோம்; எத்தனை இக்கட்டில் தப்பினோம் என்பது உங்களுக்குத் தெரியும். சிம்மபுரம் தாண்டியும் எத்தனை இடைஞ்சல்கள் இருந்தன. வம்சதாராவில் நான் படகில் ஏறிய பின்பு எவ்வளவு இடையூறுகள் ஏற்பட்டனவென்பதெல்லாம் உங்களுக்குத் தெரியாது. ஒன்று சொல்லுவேன். இந்த ஆதிமல்லன் உதவி இல்லாவிட்டால் நான் கலிங்கத்திலிருந்து வெளியேறி இருக்க முடியாது", என்று உணர்ச்சியுடன் பேசினான்.

அதுவரை உரையாடலில் புகாத திரிபுரசுந்தரியும் பேச்சில் கலந்து கொண்டு, "ஆம் தர்மரே! இவர் சொன்னது முற்றிலும் உண்மை. ஆதிமல்லர் சமயத்தில் தோன்றினார். சமயத்தில் உதவினார்" என்று சொன்னாள்.

ஆதிமல்லன், 'மல்லர்' ஆகிவிட்டதை பிக்குவும் மற்ற துறவிகளும் கவனிக்கவே செய்தாலும், தர்மரே அவர்கள் நினைப்புக்கு உருக் கொடுத்து, "ஓகோ! மல்லரா! ஆம் ஆம். நீங்கள் சொல்வது சரிதான் அரசகுமாரி. சமயத்தில் தோன்றுவது மல்லருக்கு சகஜம் என்பதை முன்பே பல சமயங்களில் பார்த்திருக்கிறோம். ஆனால் சமயத்தில் உங்களுக்கு உதவவும் செய்வார் என்பதை இப்பொழுது தான் கேள்விப்படுகிறோம்", என்று குரலில் விஷமத்தைக் காட்டினார்.

அந்த விஷமத்துக்கு அவசியமல்ல என்பதை விஜயன் சுட்டிக் காட்டினான். "தர்மரே! பிக்கு நாம் இப்பொழுது நிலத்தில் இல்லை. நீரில் இருக்கிறோம். இரண்டுக்கும் சட்டங்கள் வெவ்வேறு. கடலில்

zeevaa

நாம் திடம் தப்பினாலும் ஆதிமால்யன் திசை தவறினாலும் நாம் யாருமே உயிருடன் போய்ச் சேரமுடியாது. ஆதிமால்யன் நமக்கு எவ்வளவு தீமை செய்ய முடியுமோ அத்தனை தீமையை நாமும் அவனுக்குச் செய்ய முடியும். விரோத நிலை யாருக்கும் பயனளிக்காது. பழைய விஷயங்களை மறந்து மரக்கலத்தில் சிங்களம் போய்ச் சேருவோம். தரையில் இறங்கியதும் இந்த அவசிய நட்பு நீடிக்கலாம். அல்லது உடைந்து விடலாம். அதைப்பற்றி முடிவு செய்யச் சமயம் நிரம்ப இருக்கிறது", என்ற விஜயன், "பிக்கு! உங்கள் தலைமையில் இந்த மரக்கலம் இயங்கும். சைவத் துறவிகள் கிரஹஸ்தர்களாயிருந்த காலத்தில் படைப்பயிற்சி அடைந்தவர்கள். அவர்கள் உதவியாலும், துடுப்பு மாலுமிகளின் தலைவன் ஆதிமால்யன் உதவியாலும் தாங்கள் இந்தக் கப்பலை முறைப்படி செலுத்தலாம். நானும் தங்கள் ஆணைக்குக் கீழ்ப்படிவேன். திரிலோகசுந்தரியும் நானும் கூடியவரையில் எங்கள் அறையிலேயே இருப்போம். சில சமயங்களில் தளத்துக்கு வந்தாலும் தங்கள் உத்தரவுப்படி நடந்து கொள்வேன்", என்றும் சொல்லி, பிக்குவுக்கும் மற்றத் துறவிகளுக்கும் தலைவணங்கி, "ஆதிமல்லா! இனி நம் அனைவருக்கும் பிக்கு தான் தலைவர். அவருக்கு ஏதாவது தேவை யானால் சொல்லிக்கொடு", என்று அவனுக்கு உத்தரவிட்டான்.

"தங்கள் உத்தரவு. ஆனால் பிக்குவுக்குக் கடல் நுட்பங்கள் நன்றாகத் தெரியும். கடலில் அவர் ஒரு திமிங்கலம்", என்று பாராட்டி விட்டு விஜயனுக்குத் தலைவணங்க, விஜயன் எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டு திரும்பி, தளப்படி வாயிலை நோக்கி நடந்தான். திரிலோகசுந்தரி சிறிது தள்ளாடி நடந்ததைக் கவனித்து அவள் இடையைப் பிடித்து அழைத்துச் சென்றான்.

அதைக்கண்ட துறவிகள் கண்களை மூடிக்கொண்டார்கள். "பாபம்! பாபம்!" என்றார் தர்மர்.

"காமம் ஒருவித பைத்தியம் மனத்தையும் கெடுக்கிறது. உடலை யும் கெடுக்கிறது", என்று விஜயனையும் கலிங்கனின் மகளையும் பார்த்துச் சொல்லிவிட்டு, "ஆதிமால்யா! காற்று அனுகூலமாய்

zeevaa

இருக்கிறது! பாய்கள் நன்றாக விரிந்து புடைத்திருக்கின்றன. நீயும் அடித்தளத்துக்குப் போய்ச் சிறிது நேரம் உறங்கு. உன் மாலுமிகளை யும் உறங்கச் சொல். நாளைக் காலையில் பேசிக் கொள்வோம்" என்று உத்தரவிட, "சித்தம் பிக்கு", என்று சொல்லிவிட்டுக்கீழே செல்ல வேகமாக நடையைக் கட்டினான் ஆதிமால்யன்.

அவன் சென்ற பின்பு பிக்கு சிந்தனை வசப்பட்டார். "தர்மரே! சுக்கானைப் பிடியும். அங்கேயே பேசுவோம்", என்று அவரையும் மற்றத் துறவிகளையும் அழைத்துக் கொண்டு கப்பலின் கோடிக்குச் சென்றார்.

அங்கு துறவிகள் மந்திராலோசனை நடக்க ஆரம்பித்தது.

கீழேயிருந்த தனது அறையை அடைந்த விஜயன் பஞ்சணையில் படுத்துக் கிடந்த பைங்கிளியைப் பார்த்தான். "நீ மிகவும் அலுத்திருக் கிறாய்", என்று சுந்தரியை நோக்கிச் சொன்னான்.

"ஒன்றும் அலுப்பில்லை இப்படி வாருங்கள்" என்று பஞ்சணை யில் அவனுக்கு இடம் கொடுத்தாள் சுந்தரி.

அவள் காட்டிய இடத்தில் உடகார்ந்து கொண்டானே தவிர, விஜயன் அவள் அழைப்பை ஏற்கவில்லை. "பெரிய எரிமலையைச் சிருஷ்டித்துவிட்டேன் சுந்தரி! அது எப்பொழுது வெடிக்கும்! எப்படி வெடிக்கும்! சொல்ல முடியாது", என்று கூறினான்.

பிறகு எழுந்து சென்று சற்று எட்ட இருந்த ஒரு கூடையைத் திறந்தான். சிவந்த ஒளி அந்த அறை முழுவதும் படர்ந்தது. அதை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டே இருந்த விஜயன், "யுத்தகாண்டம் வரும்போது இது ஒரு வேளை எரிமலையைச் சமாளிக்கலாம்", என்று முணுமுணுத்தான்.

zeevaa

# 5. கடலில் முளைத்த கமலம்

திரிலோகசுந்தரியாயிருந்து, விஜயனுடன் சிம்மபுர அரண்மனைப் பள்ளியறையில் குலதனம் வீசிய சிவந்த ஜோதியின் முன்பு நடந்த திருமணத்தால் விஜயமகா தேவியாகிவிட்ட கலிங்கத்துப் பைங்கிளியாள், அன்று அந்த மரக்கல அறைக் கட்டிலில் படுத்து, 'வாருங்கள் இப்படி', என்று அழைத்தும் 'ஒன்றும் அலுப்பில்லை' என்று கூறியும் அவளை மீண்டும் அடைய இஷ்டப்படாத சிங்களத்துச் சிங்கம் கட்டிலிலிருந்து எழுந்து சென்று எட்ட ஒரு பெரிய மரப்பெட்டியின் மீதிருந்த கூடையைத் திறந்து அதிலிருந்து வந்த சிவந்த ஒளியில் குளித்துக் கொண்டு நின்றதைக் கண்ட சுந்தரி பெருமூச்சு விட்டுத் தன் தளர்ந்த உடலை சிறிதே அசக்கினாள். அப்படி அசக்கியதால் தனது உடலுக்கு ஏற்பட்ட லேசான வலியையும் பலமான வேட்கையையும் எண்ணி, 'பெண்கள் ஆண்களின் கையில் இஷ்டப்படி வளையும் களிமண் என்று சொல்கிறார்களே அது சரிதான் போலிருக்கிறது' என்று நினைத்துப் பார்த்து வெட்கம் கலந்த புன்முறுவலையும் தனது செவ்விய இதழ்களில் படரவிட்டுக் கொண்டாள். அத்துடன் கூடையை ஆராய்ந்த வண்ணம் எட்ட நின்ற விஜயமகா புருஷனையும் ஆராயத் தொடங்கினாள்.

நெட்டையாகக் குச்சிபோல் நின்ற நிலையிலும் விஜயன் இடையும் முதுகும் மிகவும் வாளிப்பாகவும் உறுதியாகவும் காட்சியளித்ததை யும், அவன் கால்கள் இரும்புக் கால்கள் போல பலகையில் ஊன்றியிருந்ததையும், தலைக்குழல்கள் முரட்டுத் தனமாகக் கழுத்தின் அடிப்பாகத்தில் புரண்டதையும் பார்த்த சுந்தரி, அவன் ஆண்மையின் செம்மையை உணர்ந்து உள்ளூர மகிழ்ச்சி

zeevaa



zeevaa

கொண்டாள். குலதனத்தை ஊன்றிக் கவனித்த அவன் முகம் குங்குமச் சிவப்பாக மாறியிருந்ததால், அவன் சினம் மிகுந்தால் இப்படித்தான் மாறுவான் என்பதை ஊகித்து, அந்தச் சினமும் தனக்குச் சில சமயங்களில் தேவை என்றும் எண்ணினாள். அப்படி அவள் அவனை ஆராய்ந்து கொண்டிருக்கையிலேயே அவன் லேசாகத் திரும்பியதால் மகாரத்தினத்தின் ஒளி கட்டில் மீதிருந்த அவள்மீதும் விழவே அவளை அது ஏதோ வானிலிருந்து இறங்கிய தேவதையாக அடித்து விட்டதைப் பார்த்தான் விஜயன்.

அவள் ஆடை லேசாக கலைந்திருக்க, குழல்கள் சிதறிக்கிடக்க, உடல் துவண்டு அசையப் படுத்திருந்த அவளது வெளிப்பட்ட பாகங்களுக்குக் குலதனம் சிவப்பு ஆடையைத் தனது கிரணங்களால் அளிப்பதையும், அந்தப் பகுதிகளை மறைக்க முயலுவதையும் பார்த்த விஜயன், 'இவள் இப்பொழுது விஜய மகாதேவியாகி விட்டதால் குலதனம் இவள் அழகுகளை மூடுகிறது. எந்தத் தாயும் தனது மகளுடைய மானத்தைக் காப்பாற்ற முயலுவது இயற்கை யல்லவா?' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அவள் படுத்துக்கிடந்த நிலை அவனை வா வா என்று அழைத்தாலும் அந்த வேட்கையை எதிர்த்து நின்ற விஜயன், "எதற்கும் காலம் நேரம் உண்டு" என்று சற்று இரைந்தே சொன்னான்.

கட்டிலில் கிடந்த கட்டழகிக்கு இது காதில் விழவே, "அந்தக் காலத்திற்கென்ன? நேரத்திற்கென்ன?" என்று கேட்டாள் மெதுவாக.

"அகாலம், விபரீத நேரம்", என்றான் விஜயன் இருந்த இடத்திலிருந்தே அவளை நோக்கி,

'விடிய இன்னும் நேரமிருக்கிறது", என்று சுட்டிக் காட்டினாள் விஜயமகாதேவி.

"அதனால்?" விஜயன் விசாரித்தான். லேசாகப் புன்முறுவலும் செய்தான்.

zeevaa

'பள்ளியறைக்கு அகாலமில்லை", என்றாள் விஜயமகாதேவி.

"அப்படியா!" என்ற விஜயன், "நேரத்தைப்பற்றி ஏதும் சொல்ல வில்லையே சிங்கள மகாராணி?" என்று விசாரித்தான்.

"பள்ளியறைக்கு நேரமும் கிடையாது", என்று சொல்லி அவனை அதற்குமேல் பார்க்க முடியாமல், அவன் கழுகுக் கண்களைச் சந்திக்க முடியாமல் திரும்பிக் குப்புறப்படுத்தாள். சிறிது நகைக்கவும் செய்தாள். குப்புறப்படுத்த நிலையில் அவள் நகைத்ததால் அவள் முதுகும் அதற்குக் கீழும் லேசாகக் குலுங்கவே. சிறிது மனம் தளர்ந்த விஜயன் கூடையிலிருந்த ஒளிவிடும் குலதனத்தை எடுத்து மரப்பெட்டியின் மீது வைத்துவிட்டுப் பஞ்சணையை நோக்கி வந்து அவள் பக்கத்தில் உட்கார்ந்தான். குலதனம் கூடையிலிருந்து விடுதலை பெற்றதால் கதிர்களை அதிகமாகவே வீசி அந்த அறை முழுவதையுமே குங்குமச் சிவப்பாக அடித்துவிட்டது. அந்த ஜோதியில் கட்டிலில் இருந்த இருவருமே தேவதைகளைப்போல் காட்சி யளித்தார்கள். அந்த ஜோதியின் கிரணங்களின் லேசான உஷ்ணத் தால் உணர்ச்சிகள் தூண்டப்படவே. விஜயன் உறுதி குலைந்து அவள் முதுகிலும் பின்னெழில்களிலும் கையை வைத்தான். அவன் ஸ்பரிசத்தால் வளைந்து கொடுத்த அவள் அழகிய உடலைத் தனது இருகைகளையும் உட்புறமாகக் கொடுத்து வளைத்தான். வளைத்த தால் கைகளில் பட்ட எழிலம்சங்களைத் தொடவும் முற்பட்டதால் அவள் புரண்டு படுத்தாள். அவன் கைகளிலிருந்து தப்ப, இப்படி வராதபோது அழைப்பதும், வந்தபின் விலக முற்படுவதும் பெண் களின் சரச சாகசம் என்பதைப் புரிந்துகொண்ட விஜயன் தனது இருகைகளையும் தாராளமாகவே உட்புறம் கொடுத்து, குழந்தையைத் தூக்குவதுபோல அவளைத் தூக்கி முன்புறமாகப் புரட்டித் தனது மடியில் போட்டுக் கொண்டான். பிறகு அவள் உடலை லேசாகத் தூக்கித் தனது மார்புடன் சேர்த்து இறுக்கினான்.

அந்த இறுக்கல் அவள் மூச்சை நிறுத்திவிடும் போலிருந்தது. அந்த நொறுக்கலில் தனது எலும்புகள் உடையுமே என்றுகூட அஞ்சினாள்

zeevaa

அந்த அழகி. இத்தனை இம்சையும் தனக்கு வேண்டியிருந்ததை நினைத்து மந்தஹாசமும் செய்தாள். பிறகு களுக்கென்று நகைத்தாள்.

அதனால் தனது இறுக்கலை லேசாகத் தளர்த்திய விஜயன், 'சுந்தரி மிகவும் வலிக்கிறதா?" என்று வினவினான்.

"இப்படி ராட்சஸத்தனமாகக் கட்டினால் வலிக்காதாக்கும்?" என்ற சுந்தரி தனது அழகிய இதழ்களை மடித்தாள். துன்பத்தை தோற்று விக்கும் பாவனையில்.

அந்த துஷ்ட இதழ்கள் துன்பத்தைக் காட்டுவதற்குப் பதில் இன்பத்தையே சுட்டிக்காட்டின. இதழ்கள் மடிக்கப்பட்டதால் வழவழத்த கன்னங்களில் குழிகளும் விழுந்து மயக்கத்தைக் கொடுத்தன. பிரமை தரும் அவள் முகலாவண்யத்தைக் கண்ட விஜயன் அந்தக் கன்னக் குழிகளிலொன்றில் தனது இதழ்களைப் புதைத்தான். "அடி சுந்தரி! உன்னைப் போன்ற ஒரு விஷமக்காரியை நான் இதுவரை கண்டதில்லை'' என்று முணுமுணுத்தான் தனது முரட்டு உதடுகளைப் புதைத்த நிலையிலேயே.

'விஷமமில்லாத அழகிகளைக் கண்டிருக்கிறீர்கள்போலிருக் கிறது! அங்கும் இப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறீர்களா?" என்று வினவினாள் சுந்தரி.

அவன் உதடுகள் கன்னத்திலிருக்கும்போதே அவள் பேசியதால் அசைந்த உதடுகளுடன் கன்னமும் அசையவே, தன் இதழ்களுக்கு எதிர் அசைவை அவள் கன்னக் கதுப்புக் கொடுப்பதாக விஜயன் எண்ணினான். அந்த நிலையில் சொன்னான். "சுந்தரி! என்னைவிட நீ வலிமை வாய்ந்தவள்", என்று.

"இல்லை, பெண்கள் பலவீனமானவர்கள்", என்றாள் அவள்.

'சாத்திரங்களை இயற்றியவர்களும் கவிகளும் பெண்களைச் சக்தி சொரூபமாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுவும் உன் சக்தி

zeevaa

இருக்கிறதே. அது அபரிமிதம். நீ மகாசக்தி", என்ற விஜயன், "இல்லையேல் கடின சித்தமுள்ளவனும் கடமை உணர்ச்சி உள்ளவனுமான என்னையே இங்கு இழுப்பாயா?" என்றும் வினவினான்.

"நான் உங்களை இழுத்தேனா?" என்ற அவள் தனது கன்னத்தை இழுத்துத் தலையைத் தூக்கி அவன் கண்களுடன் தனது கண்களைக் கலந்தாள்.

மார்புடன் மார்பு இறுகிய நிலை. அவள் உடல் துவண்டு கிடந்த சந்தர்ப்பம். அவனைப் பிணைக்க இத்தனை பட்டுக் கயிறுகள் போதாதென்று அவள் கண்களின் காந்த இழுப்பு. எந்த ஆண் மகன் எதிர்த்து நிற்க முடியும்? ஆகவே உடலில் தணல் பாய, உணர்ச்சி கொந்தளிக்க, வேட்கை வேகத்துடன் சுழல, பெரும் சபலத்துக்கும் மனக் குலைவுக்கும் ஆட்பட்ட விஜயன் திடீரென்று பெருமூச்சுவிட்டு அவள் கழுத்தில் தனது முகத்தைப் புதைத்தான். "அடி சுந்தரி! நான் சற்று முன்பு ஒரு எரிமலையைப் பற்றிக் குறிப்பிட்டேன். நீ என்னையே எரிமலையாக்கி விட்டாய். அதன் பயனை நீ அனுபவித்துத் தான் தீரவேண்டும்" என்று கழுத்துக்குச் செய்தி சொன்னான். அப்படியே கிடக்கவும் செய்தான்.

அவள் கண்கள் மூடிக்கிடந்தன. சிவந்த வெளிச்சத்தில் காலைக் கதிர்களால் தீண்டப்பட்ட ஆம்பலைப் போல கூம்பிக் கிடந்தது அவள் திருமுகம். உதய காலத்தில் 'செங்கழுநீர்ப் புஷ்பம் வாய் திறந்து ஆம்பல்வாய் கூம்பின காண்' என்ற பாசுர நிலையில் அவள் சந்திர வதனம் இருந்ததைக் கண்ட விஜயன் அதன் தெய்வீக அழகை நீண்ட நேரம் பருகிக்கொண்டே இருந்தான். அவன் கருவிழிகள் பங்கய வாவியில் மலரிலிருந்து மலரிடம் தாவும் கருவண்டுகள் போல் மல்லாந்து கிடந்த அவள் அழகிடங்களில் தாவித் தாவிச் சென்றன.

அவள் விகசித்துக் கிடந்தாள். குவிந்த கால்கள் மட்டும் நிதானமிழாக்காமல் அதிகமாகக் குவிந்தன. செவ்விதழ் அதரங்கள் லேசாகத் திறந்திருந்தன. செந்தாமரையின் இரு இதழ்களை மட்டும்

zeevaa

பிரமன் மேலும் கீழுமாக இணைத்து லேசாக விலக்கிவிட்ட பிரமையை அவள் இதழ்கள் கொடுத்தன. அவன் கையொன்று அந்த இதழ்களின் மீது பதிந்து அவற்றை விலக்க முயன்றன. அந்த விலக்கலில் உதடுகள் அசைந்து விரல்களைத் தடவிக்கொடுத்தன. துவண்ட இடையை அவன் கையொன்று வளைத்தது. அத்துடன் அவன் முகமும் தாழ்ந்து நீரோட்டமுள்ள மாணிக்கத்தைப் போல பளபளத்த அவள் இதழ்களுடன் அவன் இதழ்கள் பொருந்தின. அழுந்தின, மெல்லிய அழகான கரிய மீசையுடன் அசைந்த அவன் முரட்டு உதடுகள் வண்டுகளின் அசைவை அவமதித்தன. இதழ்க்கமலத்தில் அவை அழுந்தி, கமலத்தின் மேல் அமரும் வண்டுகளைப் போல காட்சியளித்தன. வண்டு தேனைப் பருக ஆரம்பித்த நிலை தொடர்ந்தது.

அவன் வெறி, லேசாகத் தெரிந்த எரிமலையின் ஆரம்பக் குமுறலைப் போல் இருந்தது. எரிமலை வெடிக்கவும் தொடங்கியது. சிவந்த மகாரத்தின ஜோதியில் அவன் உடல் சீறும் எரிமலையைப் போலவே காட்சியளித்தது. அவன் உணர்ச்சியால் நெளிந்தான். எரிமலை எங்கும் வெடித்துக் கொண்டிருந்தது. அதே சமயத்தில் கீழ்வானம் வெளுத்து அந்த மரக்கல அறையின் பக்கச் சாளரத்தின் மூலம் தனது வெளிச்சத்தை உள்ளே புகவிட்டது. கடலிலும் ஏதோ பறவைகள் கூச்சலிடுவதைப் போன்ற பிரமை ஏற்பட்டது. இத்தனையும் அவர்கள் அறிந்தார்களில்லை.

இயற்கையின் வெளிப்புற ஆட்சி உட்புற ஆட்சியைத்தவிர்க்க முடியாததால் இருவரும் பரஸ்பரப் பிணைப்பில் கிடந்தார்கள். அப்படிக் கிடந்த சமயத்தில் சாளரத்தின் மூலம் விஜயன் வெளிப்புறக் காட்சியை ரசிக்கலானான்.

நீலக் கடல் அமைதியாயிருந்தது. அவன் பக்கத்தில் களைத்துக் கிடந்த பாவையைப் போல, அவளையும் பார்த்து நீலக்கடலையும் பார்த்தான். 'இவளும் ஒரு மரக்கலம். என்னைத் தாங்கி என்

zeevaa

வாழ்க்கையை நடத்திச் செல்லும் கப்பல் இவள். எங்கள் யாத்திரை யும் கடல் யாத்திரைதான். ஆனால் இடையில் எத்தனை தடைகள்! என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். தங்கள் அபாய நிலையை எண்ணிப் பார்த்தான்.

அப்பொழுது அவள் கண் விழித்தாள். "என்ன பார்க்கிறீர்கள் வெளியே?" என்று முணுமுணுத்தாள்.

அவள் குரல் பலவீனமாயிருந்தது. பலவீனத்தின் காரணத்தை அவன் உணர்ந்திருந்தான். "கடலைப் பார்க்கிறேன்", என்றான் மெதுவாக.

"அதில் என்ன புதுமை! கடலில் தானே பயணம் செய்கிறோம்?" என்று அவள் கேட்டாள்.

"வெளியே கடலைக் காண்கிறோம். உள்ளே கமலத்தைக் காண்கிறோம். கடலில் எப்படித் தாமரை முளைக்கும்? இது புதுமையல்லவா?" என்று அவன் கேட்டான்.

அந்தச் சமயத்தில் கடற்பகுதியில் ஒரு புதுமை நிகழ்த் தான் செய்தது. அதைப் பார்த்ததும் துள்ளி எழுந்த விஜயன் துரிதமாகச் செயல்படலானான். முதலில் குலதனத்தைக் கூடையில் வைத்து மூடினான். அடுத்து, கட்டிலண்டை வந்து சுந்தரியின் உடலைப் பெரிய போர்வையால் மூடிவிட்டு வெளியே செல்லத் திரும்பினான். அந்தச் சமயத்தில் அந்த அறைக் கதவு லேசாகத் தட்டப்பட்டது. "தங்களைத் தளத்திற்கு அழைக்கிறார் தர்மர்", என்ற காமரின் குரலும் சற்றுப் பலமாக ஒலித்தது.

zeevaa

# 6. மர்ம மரக்கலம்

கட்டிலில் தனது பக்கத்தில் படுத்துக் கடலழகைச் சாளரத்தின் மூலம் கண்டு களித்துக் கொண்டிருந்த தனது கணவன் திடீரெனத் துள்ளியெழுந்து துரிதமாகச் செயல்பட முற்பட்டதையும், அதே சமயத்தில் தளத்துக்கு வருமாறு காமர் அழைத்துக் கதவைத் தட்டியதையும் கண்ட கலிங்கத்துக் கட்டழகி, இதற்கெல்லாம் காரணம் எதுவாயிருக்குமென்று கடல்புறத்தை நோக்கி, அங்கு கண்ட காட்சியால் அவளும் திகிலுற்று எழுந்து பஞ்சணையில் உட்கார்ந்து விஜயன் தன்மீது போர்த்திய போர்வையைச் சரேலென அகற்றினான்.

கடற்பகுதியில் அவள் கண்முன்பு தெரிந்தது ஒரு சிறிய மரக்கலம். அது மிக வேகமாகத் தங்கள் கப்பலை நெருங்கிக் கொண்டிருந்ததையும், சாளரத்தின் குறுகல் காரணமாக அதன் அடிப்படை பெரிதாகி மேற்பகுதிகள் கண்களுக்கு மறையத் துவங்கி விட்டதையும் கண்டதால் அவளும் எழுந்திருக்க முற்பட்டதைப் பார்த்த விஜயன், "சுந்தரி! எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்த அறையைவிட்டு நகராதே", என்று எச்சரித்துவிட்டுத் துரிதமாக வெளியே சென்றுவிட்டான். சென்றபோது வேகமாக அறைக்கதவையும் மூடிவிட்டுச் சென்றான்.

அறைக்கு வெளியே அவனுக்காகக்காத்திருந்த காமர் அவன் ஏதும் கேட்காமலிருக்கையிலேயே சொன்னார். "ஒரு மரக்கலம் நமது மரக்கலத்தை நோக்கி வேகமாக வருகிறது. அதன் மீது கொடி எதையும் காணாததால் எந்த நாட்டைச் சேர்ந்தது என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை", என்று.

zeevaa

விஜயன் அவருக்குப் பதிலேதும் சொல்லாமல் தலையை மட்டும் அசைத்துத் தன்னைத் தொடரும்படி சைகை காட்டித் தளத்துக்குச் செல்லும் படிகளை ஒரு படிவிட்டு ஒரு படிமேல் நோக்கி வேகமாகத் தாவிச் சென்று தனக்கு முன்பாகவே மற்றத் துறவிகளும் ஆதிமல்லனும், மூர்சமத், கிழவன், நீலன், சிம்மபுரச்சிற்பி நாகாநந்தன் முதலானவர்களும் கூட்டமாக நிற்பதைக் கண்டு, "இங்கு எதற்காகக் கூட்டம் போடுகிறீர்கள்?' என்று வினவினான். குரலில் சிறிது எரிச்சலையும் காட்டினான்.

அவன் கேள்விக்கு மற்றவர்கள் ஏதும் பதில் சொல்லாவிட்டாலும் கப்பல் தலைவரான சத்வானந்த பிக்குவே பதில் சொல்லும் பாவத்தில் சற்று தூரத்தே மிகத் துரிதமாக வந்து கொண்டிருந்த மரக்கலத்தை காட்டினார். வருவது எந்த நாடு என்பது விளங்கவில்லை. கொடி எதுவும் கிடையாது. சிறு மரக்கலமாயிருந்தாலும் அதை அலட்சியம் செய்வதற்கில்லை. பாய்கள் நமது பாய்களை விட அதிகமாகப் புடைத்திருக்கின்றன. தவிர தளத்தில் யாரும் இல்லை. பக்கவாட்டுத் துவாரங்களிலும் மனிதர் முகங்களோ ஆயுதங்களோ எதையுமே காணோம். இதற்கான காரணம் என்ன என்று விளங்கவில்லை. இத்தகைய ஒரு மரக்கலத்தை நான் ஆயுளில் கண்டதில்லை", என்று பிக்கு விளக்கமும் சொன்னார். விளக்கம் சொன்னாரே தவிரக் குரலில் எந்தவிதக் கவலையும் காட்டவில்லை.

அவர் தந்த விளக்கத்துக்கு மேல் ஏதும் பேசாத விஜயன் எட்ட வந்துகொண்டிருந்த மரக்கலத்தைக் கூர்ந்து நோக்கிவிட்டு வானத்தையும் நோக்கினான். விடியும்நேரம் நெருங்கி விட்டாலும், கீழ்வானம் ஓரளவு வெளுத்துவிட்டாலும், முற்றிலும் விடியாததால் வானத்தில் ஏதோ சில விண்மீன்கள் ஒளியிழந்து பெரிய இடைவெளி விட்டு எங்கெங்கோ தெரிந்து கொண்டிருந்தன. விடிந்ததும் அமாவாசையாதலால் அடியோடு மறைய வேண்டிய சந்திரன், அந்தச் சமயத்திலேயே வெள்ளலத்திப் புஷ்பம் போன்ற தனது வெளிர் முகத்தைக் கூடக் காட்ட இஷ்டப்படாமல் முற்றும் அந்தர்த்தியானமாகி

zeevaa

விட்டதால் தினம் அணியும் வெள்ளிப் பதக்கத்தை அணியாத முனிபோல் வான்மகன் காட்சியளித்தான். *அந்த 'ப்ரபாத கல்பத்'தில் ஆகாயம் மெள்ள மெள்ள நன்றாகவே வெளிறிடத் துவங்கியதால் கடற்பறவைகள் சில ஆங்காங்கு எழுந்து வட்டமிட்டுக் கொண் டிருந்தன.

இவற்றையெல்லாம் பார்த்த விஜயன், 'பிக்கு! பூர்ணமாக விடிய இன்னும் சில விநாடிகளே இருக்கின்றன", என்று கூறினான் சத்வானந்தரை நோக்கித் திரும்பி.

ஆமென்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார் பிக்கு.

"அதை யாரும் செலுத்துவதாகத் தெரியவில்லை", என்றான் விஜயன்.

"ஆம் ...... ஆனால் யாரும் செலுத்தாமல் இப்படிக் குறிவைத்து நம்மை நோக்கி எந்தக்கப்பலும் வர முடியாது", என்றார் பிக்கு.

"இது எப்படிச் சாத்தியம் என்று யாராவது சொல்ல முடியுமா?" என்று வினவிய விஜயன் அங்கு நின்றிருந்த அனைவர் மீதும் கண்களை ஓட்டினான்.

யாராலும் அதற்கு விளக்கம் சொல்ல முடியாமல் குழம்பிய சமயத்தில் சிம்மபுரச்சிற்பி சொன்னான். "இதில் விசித்திரம் ஏது மில்லை", என்று.

மற்றவர்களோடு கலந்து ஆரம்பத்தில் நின்ற சிற்பி, வரும் மரக்கலத்தை ஆராயச் சிறிது தள்ளியே நின்றிருந்தான். அவன் சொன்னதைக் கேட்ட பிக்கு, "விசித்திரமில்லையா!' என்று

---

* 'ப்ரதா கல்பா' என்பது உதயமானது போலிருக்கிற வான்நிலை. நக்ஷத்திரங்கள் தேடக்கூடியதாயிருக்கும். இந்த நிலையை 'விசேயதாரகா", ப்ரபாத கல்பா" என்ற வாக்கியங்களால் காளிதாஸ் மகாகவி வர்ணிக்கிறார். ரகுவம்சம் 3-ஆவது சர்க்கம் - 2 - ஆவது சுலோகம்.

zeevaa

வியப்புடன் வினவினார். 'எனக்கும் சிறிது மரக்கல அனுபவமுண்டு", என்றும் இளக்காரமாகச் சொன்னார்.

சிற்பி அவரைத் திருப்பிப் பார்க்காமல், துரிதமாக நெருங்கிக் கொண்டிருந்த மரக்கலத்தைப் பார்த்த வண்ணமே சொன்னான். "சிறிது என்பது சரி" என்ற சிற்பி "பிக்கு! சிங்கள மன்னனே! இப்படி வாருங்கள்" என்று அவர்களைத் தான் நின்றிருந்த இடத்துக்கு அழைத்தான்.

அவன் நின்றிருந்த இடம் மரக்கலத்தின் நட்ட நடுவில் இருபாய்மரங்களுக்கு இடையில் இருந்தது. அந்த இடத்திலிருந்து கையால் எதிரி மரக்கலத்தின் ஒரு கோடியைச்சுட்டிக் காட்டினான் சிற்பி விஜயனுக்கும் பிக்குவுக்கும், "பார்ப்பதற்கு அந்த மரக்கலத்தில் யாருமில்லை. ஆனால் கோடியில் இருக்கும் சுக்கானின் பிடி அடிக்கடி திரும்புகிறது", என்றும் சொன்னான்.

யாராலும் திருப்பப்படாத சுக்கானின் பிடி அவ்வப்போது தானாகவே திரும்பிக் கொண்டிருந்ததை பிக்கு, விஜயன் இருவருமே பார்த்தாலும், அதன் சூட்சுமத்தைப் பிக்குவே முதலில் புரிந்து கொண்டார். "அந்தச் சுக்கான் தளத்தின் அடிப்புறத்திலிருக்கும் ஒரு தொடர் கட்டையால் திருப்பப்படுகிறது. அதைத் திருப்ப ஒருவன் அடி அறையில் இருக்கிறான். பக்கப் பலகை துவாரத்தின் மூலம் வெளிநிலை அறிந்து திருப்புகிறான் சுக்கானை", என்றும் கூவினார் வியப்பின் மிகுதியால். "அப்படியானால் இது ராமனா நாட்டின் மரக்கலமாயிருக்க வேண்டும்", என்றும் சொன்னார் திடீரெனக் குரலை அடக்கிக் கொண்டு.

"மிகவும் சரி, மிகவும்சரி" என்று கூறித் தலையையும் ஆட்டிய சிற்பி நாகாநந்தன், "இது எந்த வகைக் கப்பல் என்று சொல்ல முடியுமா?" என்று வினவினான்.

அவன் கேள்விக்குப் பிக்கு பதில் சொல்லு முன்பு விஜயனே பதில் சொன்னான். "இது அக்ரமந்திரம் என்ற வகையைச் சேர்ந்தது.

zeevaa

இம்மாதிரி மரக்கலத்தைச் சிங்களத்தில் *கொலம்போவுக்கு அருகி லுள்ள கடலில் ஒரு முறை பார்த்திருக்கிறேன்", என்று.

"கொலம்போவா!" என்று வியப்புடன் கேட்டார் பிக்கு.

"ஆம் அதன் பெயர் கொலம்போதான். அதுவும் காரணப்பெயர், அந்தநகரம் ஒருவகைக் காய்க்காத மாமரங்களை உடையது. அதை ஆம்போ என்று அழைக்கின்றோம். அதன் இலைகள் நீளமாதலால் அவற்றை 'கோலா' என்று அழைக்கின்றோம் இரண்டும் சேர்ந்து கொலாம்போ என்று ஆயிற்று", என்று விளக்கிய விஜயன், "நான் நாடில்லாமல் எந்தக் கட்டுப்பாடுமில்லாமல் திரிந்து கொண்டிருந்த காலத்தில் கொலாம்போ கடலில் பல மரக்கலங்களைப் பார்த்திருக் கிறேன். அவற்றில் இதுவும் ஒன்று" என்று விளக்கினான். மேலும் சொன்னான் :

"கொலம்போ கடற்கரையிலும் தெற்கேயுள்ள காலிமுனையின் கடலிலும் இம்மாதிரி புதுமையான மரக்கலங்கள் சிலவற்றை நான் பார்த்திருக்கிறேன். இம்மரக் கலங்களின் வேகமும் போரிடும் திறமையும் மிக அதிகம். இந்த மாதிரி ஒரு மரக்கலத்தில் தான் முதன் முதலாக பௌத்தர்கள் இலங்கைக்கு வந்ததாகச் சரித்திரம் சொல்லுகிறது. வருவது மிகவேகமும் போர் யந்திரங்களும் உடைய மரக்கலம். நம் மரக்கலத்தைவிடப் பார்ப்பதற்குச் சிறிதே தவிரப் போர் வலு அதிகமுடையது. எந்த நிமிடத்திலும் அதன் தளத்தில் வீரர்கள் தோன்றலாம். எந்த நிமிடத்திலும் நாம் தாக்கப்படலாம்".

இதை வேகமாகச் சொன்ன விஜயன் சத்வானந்தரை நோக்கி, 'சத்வானந்தரே! இனி தற்காப்புக்கான ஏற்பாடுகளை நீங்கள் செய்யலாம். எனக்கென்ன கட்டளை?" என்று வினவினான்.

---

*' The City of Columbo, so called from a tree the natives call ambo which bears the mango fruit growing in that place; but this never bears fruit but only leaves which in their language is cola and hence they call the tree colaambo" - From the book "Historical Relation of the Island of Ceylon in the East Indies" - By Robert knox, a captive there in Portuguese prison for twenty years.

zeevaa

அடுத்த வினாடி சத்வானந்தர் தமது சாத்வீகத்தைப் பறக்கவிட்டு ருத்திரனாக மாறினார். "இங்கு யாரும் கூட்டம் போட வேண்டாம். கலைந்து செல்லுங்கள். ஆதிமல்லா! நீ கீழே சென்று துடுப்புகளை யாரும் துழாவ வேண்டாமென்று சொல்லி அங்கிருப்பவர்களில் நாலைந்து பேரைத் தளத்துக்கு அழைத்து வந்து வேல்களை ஏந்திப் பக்கப்பலகைகளில் காவல் செய்யச் சொல், தர்மரே! சுக்கானைப் பிடியும். அவசியமானால் திருப்பும். காற்று நமக்கு அனுகூலமாக இருக்கிறது. இந்தக் கப்பல் இயங்கப் பாய் மரச்சீலைகளின் புடைப்பே போதும். ஆகவே எதிரியிடமிருந்து விலகி ஓடுவதாக எதிரி நினைக்கும் வழியில் மரக்கலத்தைச் சிறிது மட்டும் திருப்பும். நந்தரே! உம்மைக் கப்பல் கட்டும் நிபுணராகச் சொல்கிறார்கள். நீர் பாய்களைக் கவனியும். நீலா! உனக்குக் கப்பல் அனுபவமில்லை. ஆகையால் விற்களை இயக்கி நில், மூர்சமத்! ஒருவேளை இந்த மரக்கலத்தில் எதிரிகள் ஏறும் பட்சத்தில் அவர்களைச் சமாளிக்க உன் பெருவாளை எடுத்துக் கொள். அர்த்தரே! காமரே! நீங்களிருவரும் கீழே சென்று சிறிய எண்ணெய்க் கொப்பறை ஒன்றையும், தீ முட்டும் விளக்கையும் எடுத்து வாருங்கள். நாம் போரில் இறங்கு முன்பு அம்புகளின் முகப்பில் எண்ணெய் தேய்த்துத் தீயேற்றி எதிரியின் பாய்களுக்கு நெருப்பு வைத்து விடலாம். மோக்ஷரே! நீர் எனக்கு உதவியாக என் பக்கத்திலிரும், பாய்களைக் கவனித்துக் கொள்ளும்", என்று கூவி எல்லோருக்கும் ஆணையும் பணியும் இட்டார்.

அவர் கண்களில் போர் வெறி ஜொலித்தது. தமது காஷாய அங்கியைக் களைந்து சுருட்டிப் பாய் மரத்தருகில் வைத்துவிட்டு உள்ளிருந்த காஷாய வேஷ்டியை மூலக்கச்சமாக வரிந்து இழுத்துக் கட்டிக் கொண்டார். அடுத்துக் கப்பலைச் சுற்றிப் பார்வையிடச் சென்றார்.

அவர் செல்லக் காலெடுத்து வைத்ததும், "பிக்கு!" என்று அழைத்தான் விஜயன்.

zeevaa

பிக்கு வேகமாகத் திரும்பினார். "என்ன மன்னவா?" என்று வினவினார்.

'எனக்கொன்றும் பணியிடவில்லையே?" என்று வினவினான் விஜயன்.

"தனிப்பணி அவசியமில்லை. உனக்கும் மரக்கல நுட்பங்கள் தெரிந்திருப்பதைச் சற்று முன்பு நீ விவரித்த விஷயங்களிலிருந்தே தெரிந்துகொண்டேன். போரை எப்படிச் சமாளிக்க வேண்டுமோ அப்படிச் செய் நீ அர்ஜுனனல்லவா?" என்று கேட்ட பிறகு தமது சினத்தைச் சிறிது தணித்துக்கொண்டார்.

"ஆம், தர்மர் முதலிய நால்வரும் என்னை அர்ஜுனனென்றும், கப்பலோட்டிக் கிழவனை வயது காரணமாக யுதிஷ்டிரென்றும், மூர்சமதை பீமனென்றும் அழைக்கிறார்கள். சிற்பியையும் நீலனையும் நகுல சகாதேவர்களென்றும் கூப்பிடுகிறார்கள். நாங்கள் பஞ்ச பாண்டவராம், என்ற விஜயன். "இப்பொழுது போர் வந்துவிட்டதால் பஞ்ச பாண்டவர் நிஜமாகவே இயங்க வேண்டிய சமயம் வந்துவிட்டது", என்றும் கூறி லேசாக நகைத்தான்.

அடுத்து அந்தத் தளம் அவரவர் பணி செய்ததால் சுறுசுறுப்பாகி பஞ்ச பாண்டவர் நடமாட்டம் மாத்திரமின்றி மற்றவர் நடமாட்டமும் அதிகமாகியதால் அதிகமாகச் சப்திக்கலாயிற்று.

சில விநாடிகளில் எரிவிளக்கும் எண்ணெய்ப் பாத்திரமும் வந்துவிட்டதால் நீலன் ஒரு வில்லை எடுத்து நாணைப் பிடித்து வாளி ஒன்றை எண்ணெயில் நனைத்து எரிவிளக்கில் அதன் துணி சுற்றிய முனைக்கும் தீ மூட்டினான். வில்லின் உறுதியைப் பார்க்க அந்த எரிவாளியை ஆகாயத்தை நோக்கி எய்யவும் செய்தான்.

அவ்வளவுதான் தாமதம், அக்ரமந்திரம் வேகத்தை அதிகப் படுத்தியது. விஜயன் மரக்கலத்தை மிகவும் அணுகி வந்து விட்டது. விஜயன் மரக்கலத்தளம் போருக்குச் சித்தமாய் நின்றது. அப்பொழுது

zeevaa

தான் சிற்பி வெறிபிடித்தது போல் பெரிதாக நகைத்தான். அவன் நகைப்புக்கு காரணத்தை அறியாத பிக்கு அவனை நோக்கி ஓடினார். அவன் சுட்டிக் காட்டிய இடத்தை நோக்கினார். அபாயத்தின் எல்லையைத் தாம் அடைந்துவிட்டதைப் புரிந்து கொண்டதால் திகைத்து நின்றார். விஜயன் திகைக்கவில்லை. தளத்தின் நுழைவு வாயிலை நோக்கி ஓடினான்.



zeevaa

# 7. மோதல்

விண்மீன்கள் கண்களை மூடி வானிலிருந்து மறைய முற்பட்ட சமயத்தில், கிழக்கு ஓரளவு மட்டுமே வெளுத்துப் பொழுது புலரத் தொடங்கிய உதய காலத்தில், இயக்குவார் யாருமின்றி, விஜயனின் மரக்கலத்தைத் துரிதமாக அணுகிக் கொண்டிருந்த மரக்கலத்தின் ஓட்ட மர்மத்தை– சிற்பி நாகாநாதன் தனது வெறிச் சிரிப்பினால் உணர்த்திக் கையாலும் சுட்டிக்காட்டியதும், அக்ரமந்திரத்தின் மர்மம் உடைந்துவிட்டதால் பிக்கு மட்டுமின்றி விஜயனும் துரிதமாகச் செயல் படத் தொடங்கினார். அந்த மரக் கலத்தின் அடித்தளத் துளைகளில் உருவங்கள் பல தெரிந்ததையும், ஒவ்வோர் உருவத்தின் கையிலும் கூர்மையான சின்னஞ்சிறு கோடாரிகளும் தென்படத் தொடங்கி யதையும் கண்ட விஜயன், வெகு சீக்கிரம் அந்த மரக்கலம் தனது கப்பலுடன் இணைந்துவிடுமென்பதையும் புரிந்துகொண்டதால், கீழே தனது அறைக்கு ஓடி அறைச் சாளரத்தை மூட முற்பட்டான்.

முதல் இரவின் நிகழ்ச்சி அலுப்பினால் அத்தனை தடபுடலிலும் விழிக்காமல் பஞ்சணையில் படுத்துக்கிடந்த கலிங்க ராஜகுமாரியை ஒரு முறை நோக்கிவிட்டுப் புன்முறுவல் கொண்ட விஜயன் வேகமாக அறையின் கோடிக்குச் சென்று சாளரக் கதவை இழுத்து மூடிவிட்டுத் திரும்பி வந்து கட்டிலில் கிடந்த கட்டழகியை நோக்கி னான். சற்று முன்பு தன்னுடன் துள்ளியெழுந்த அரசகுமாரி மீண்டும் படுத்து விட்டதையும் கண்களை மூடி உறங்கிக் கொண்டிருந்ததையும் பார்த்த விஜயன், அது நிஜ உறக்கமா அல்லது பொய்த் தூக்கமா என்று தன்னைத் தானே வினவிக் கொண்டான்.

zeevaa



zeevaa

ஆனால், மல்லாந்து சற்றுத் தாறுமாறாகவே அவள் உறங்கிக் கிடந்ததையும், அவள் துகிலும் சற்று விலகி வெளேரென்று வழவழத்த அவள் கதலித் தொடையின் ஒரு பகுதியின் அழகை வெளிப்படுத்திக் கொண்டிருந்ததையும் விஜயன் கண்டான். அது தவிர மார்புச் சேலையும் சிறிது கலைந்திருந்ததால் வெளிப்பட்ட மொட்டு ஒன்றும் இமயத்தின் சிகரம்போல் அழகின் சிகரமாக எழுந்து நின்றதையும் பார்த்தான் விஜயன். குவிந்து கிடந்த அவளது களைத்த முகத்தில் விரிந்த கொவ்வை அதரங்கள் புன்சிரிப்பை உறக்கத்திலும் உதிரவிட்டுக் கொண்டிருந்ததையும் கவனித்தான் சிங்கள இளவல். இத்தனையும் பார்த்ததால் காமவெறிக்குப் பதில் அனுதாபத்தையே அவளிடம் கொண்டு, 'இந்த அலுப்புக்கும் அலங்கோல நிலைக்கும் நான்தானே காரணம்?' என்று தன்னைத்தானே நொந்து கொள்ளவும் செய்தான்.

கப்பல் நிலை அபாயத்திலிருப்பதையோ, எப்படியும் போர் நிச்சயமென்பதையோ அந்தச் சில வினாடிகளில் அவன் உணர்ந்திருந்தாலும் கவலைப்படாமல் அவள் பேரழகில் ஈடுபட்டு நின்றான். தூரத்தே கூடையில் அடைத்து மரப்பெட்டியில் மறைக்கப் பட்டிருந்த குலதனமான மகாரத்தினத்தையும், மறைக்கப்படாமல் கட்டிலில் கிடந்த குலதனத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து, 'இந்தக் குலதனத்திற்கு எந்த மகாரத்தினமும் ஈடு செய்ய முடியாது', என்று நினைத்துக் கொண்டான்.

அவன் வெளியேறிய சமயத்தில் சற்றே விழித்துக் கொண்ட திரிலோக சுந்தரியின் காதில் தளத்தில் ஏற்பட்டுக் கொண்டிருந்த தடபுடலும் நடமாட்டமும் விழவே, தான் ஏற்கனவே சாளரத்தின் மூலம் கண்ட மரக்கலம் தங்கள் மரக்கலத்தை நெருங்கி இருக்க வேண்டுமென்பதையும் புரிந்து கொண்டாள். அதனால் எழுந்திருக்க முயன்ற சமயத்தில் தனது அலங்கோல நிலையைப் பார்த்து, "ஐயோ, இந்த நிலையில் அவர் என்னைப் பார்த்திருப்பாரோ?' என்று மகிழ்ச்சி

zeevaa

கலந்த அச்சத்தையும் தன்னுள் படரவிட்டுக் கொண்டாள். "இப்படி என்னைப் பார்த்தும் அவருக்கு ஓட எப்படி மனம் வந்தது?' என்று தன்னைக் கேட்டுக்கொண்டதன்றி மெல்ல நகைக்கவும் செய்து, 'அடி சுந்தரி, என்ன இவ்வளவு வெட்கங்கெட்டுப் போய்விட்டாய் நீ? இச்சை சகஜம் தான். இருந்தாலும் எதற்கும் வேளை நேரம் கிடையாதா?' என்று கடிந்து கொள்ளவும் செய்தாள். ஆனால், அந்த ஆத்மவிசாரம் முழுப்பொய்யென்பதை உணரவே செய்ததால் சிறிது வாய்விட்டு நகைக்கவும் செய்தாள்.

அந்த நகைப்பொலியுடன் பேரொலிகள் பல தளத்தில் ஏற்பட்டுவிட்டதை உணர்ந்து எழுந்து தனது ஆடையைச் சீர் செய்துகொண்டு தலையைக் கோதி விட்டுக்கொண்டு வெளியே செல்லவும் முயன்றாள். தன்னை எக்காரணத்தைக் கொண்டும் அறையைவிட்டு நகரக் கூடாதென்ற கணவனின் எச்சரிக்கையைக் கூட அந்தச் சில நிமிடங்களில் மறந்தாள். திடீரென மரக்கலம் ஒருமுறை ஆட்டம் கொடுத்ததாலும், ஏதோ திசை திருப்புவதுபோல் சுழல முற்பட்டதாலும் போர் துவங்கிவிட்டதைப் புரிந்துகொண்ட சுந்தரி அதைப்பார்க்கத் தீர்மானித்து தனது சேலையை இறுகக் கட்டிக்கொண்டு, ஒரு குறுவாளையும் இடையில் சொருகிக் கொண்டு தளத்தை நோக்கிக் கிளம்பத் தனது அறைக்கதவைத் திறக்க முயன்றாள். ஆனால் கதவு வெளியில் பலமாகத் தாளிடப் பட்டிருந்ததை அறிந்ததால் சினத்தின் வசப்பட்டு, "யாரங்கே? கதவைத் திற", என்று கூவினாள்.

பதில் ஏதுமில்லாததிலிருந்து வெளியே யாரும் காவலில்லை என்பதையும் , கத்திப் பயனில்லை என்பதையும் அறிந்து கோபத்தின் சிகரத்தை எய்தினாள். தளத்தில் சத்தங்கள் அதிகமாகி மாலுமிகள் அங்கும் இங்கும் ஓடும் தடதடவென்ற ஒலிகள் அவள் தலைக்குமேல் அதிர முற்பட்டதால் பஞ்சணையில் சென்று உட்கார்ந்து கொண் டாள்.மேலே அரவம் அதிகப்பட்டது. கப்பலின் ஆட்டமும் ஓட்டமும்

zeevaa

அதிகப்பட்டுவிட்டதாகத் தோன்றியது அவளுக்கு. அதனால் தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்தாள். மரக்கலத்தின் மற்றொரு அசைவு அவளைத் திடீரென பஞ்சணையில் வீழ்த்தி விட்டது.

எதையும் அறிந்து கொண்டுவிட வேண்டும் என்ற சபல புத்தி அரசகுமாரியையும் ஆட்கொண்டுவிடவே. அவள் மெல்ல எழுந்து கப்பலின் ஆட்டத்தையும் சமாளித்துக் கொண்டு தள்ளாடி நடந்து சாளரத்தைத் திறந்து பார்க்கத் தீர்மானித்தாள். சாளரத்தை அணுகி அதன் குறுக்கு இரும்புப் பட்டயத்தைக் கஷ்டப்பட்டு நீக்கி வெளியே நோக்கினாள்.

வெளியே பயங்கர நிலை உருவாகியிருந்ததை நன்றாகவே விடிந்துவிட்ட காலை நேரம் தெளிவுபடுத்தியது. எதிரி மரக்கலத்தின் அடித்தளத் துளைகளில் முகங்கள் பல தெரிந்தன. முகத்துடன் கைகளும் சில தெரிந்ததையும் பார்த்த அரசகுமாரி. அடுத்து அந்த கைகளிலிருந்த இரும்புக் கோடாரிகளையும் கண்டாள். அவள் பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில் அந்த மரக்கலம் தங்கள் மரக்கலத்தடன் வெகு சீக்கிரம் மோதிவிடக் கூடிய நிலையை அறிந்த அரசகுமாரி உற்சாகத்துடன் அடுத்து ஏற்பட இருந்த போரைக் கவனிப்பதில் முனைந்தாள். அமாவாசை பிறந்ததன் காரணமாக அலைகள் மிகுந்த கடலில் சிறிதும் சளைக்காது வேகமாக நெருங்கிக் கொண்டிருந்தது அந்த மரக்கலம். அதன் தளத்துத் துளைகளை நோக்கி அம்புகளும் வேல்களும் பாய்ந்து கொண்டிருந்ததையும், அலைகள் விளைவித்த ஆட்டத்தின் காரணமாக அந்த வேல்களும் அம்புகளும் எதிரி மரக்கலத் துளைகளைச் சுற்றியே தைத்துக் கொண்டிருந்ததையும் பார்த்த ராஜகுமாரி, 'ஏன் நமது மாலுமி களுக்குக் கடற்போர் பழக்கமில்லையா?' என்று தன்னை வினவிக் கொண்டாள். அதே சமயத்தில் கப்பலின் பேயாட்டத்தின் விளைவாகத் தனது அறையின் கதவு சரேலெனத் திறந்து விட்டதைக் கவனித்த

zeevaa

கலிங்க ராஜகுமாரி போரை வேடிக்கை பார்க்க அந்தக் கதவுக்கு வெளியே ஓடினாள். அங்கு கண்ட காட்சி அவளைப் பிரமிக்க வைத்தது.

நுழைவாயிற்படியிலேயே நின்று மரக்கலத் தளத்தை நோக்கிய அரசகுமாரி புத்தபிக்ஷு கடற்போரை மிகத் திறமையுடன் நடத்துவதைக் கண்டாள். பிக்கு தமது மேலங்கியைத் துறந்துவிட்டதையும் காஷாய வேஷ்டியை மூலைக்கச்சமாகக் கட்டிக்கொண்டு தளத்தில் ஆங்காங்கு சென்று மாலுமிகளுக்கும் மற்றோருக்கும் உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்ததையும் கண்டாள். அருணோதயம் ஏற்பட்டுவிட்டதால் அவர் செவ்விய திருமேனி தங்கம்போல் பிரகாசித்ததையும், அதில் பல வடுக்களும் இருந்ததையும் பார்த்த விஜயமகாதேவி அவர் கடற்போருக்குப் புதிதல்லவென்பதைப் புரிந்துகொண்டதால் போரை வியப்பு நிரம்பிய கண்களுடன் கவனிக்கலானாள்.

பிக்கு மாலுமிகளைச் சரியாகப் பிரித்துப் பலதரப்பட்ட அலுவல்களுக்கு நியமித்திருந்தார். ஆதிமல்லனின் மாலுமிகள் சிலர் பக்கமாய்ப் பலகைகளில் வேல்களை எடுத்து எதிரி மரக்கலத்தின்மீது வீசிக் கொண்டிருந்தனர். அவர்கள் நிலத்தில் நல்ல வீரர்களானாலும் கடலில் பயிற்சி பயனற்றவையானதை பிக்குவின் சாபமும் எரிச்சலும் நிரூபித்தன. வேல்களின் வீச்சு ஓரளவு சரியாயிருந்தாலும், திரும்பி ஓடியும் மறுபடி திரும்பி நெருங்கியும் வித்தை காட்டிக் கொண்டிருந்ததாலும், பிக்கு அதன் துளைகளைத் தண்டிக்க எடுத்த முயற்சி பலிக்கவில்லை. அதனால் ஆத்திரமடைந்த மூர்சமத், மோக்ஷரும் காமரும் காய்ச்சிக் கொண்டிருந்த எண்ணெயில் ஓர் எரிவாளியைத் தோய்த்துத் தீயில் பற்ற வைத்து வில்லில் நாணேற்றி அதை எதிரி மரக்கலத்தின் பாயொன்றுக்குக் குறி வைத்தான்.

"நில்!" என்ற பிக்குவின் குரல் அவன் கையைத் தேக்கியது.

"ஏன்" என்று கேட்டுக்கொண்டே மூர்சமத் திரும்பினான் பிக்குவை நோக்கி.

zeevaa

பிக்குவின் கண்கள் பளபளத்தன. சினத்தின் மிகுதியால், "என் உத்தரவின்றி இந்தக் கப்பலில் யாரும் எந்த நடவடிக்கையிலும் ஈடுபட முடியாது" என்றார் பிக்கு சினத்தைக் குரலிலும் காட்டி.

மூர்சமத்தின் பெரிய கண்கள் அக்கினியைக் கக்கின. "உமது உத்தரவால் வேல்கள் பயனற்று விட்டன. இன்னும் சிறிது நேரத்தில் இந்தக்கப்பலில் வேல் மருந்துக்குக் கூட இருக்காது" என்று குற்றம் சாட்டினான் மூர்சமத்.

பிக்கு அவனை இகழ்ச்சிக் கண்களால் நோக்கினார். "உனக்கு இந்தப் போரை நடத்தத் தெரிந்தால் நீயே நடத்தலாம். கப்பலின் சொந்தக்காரரிடம் அனுமதி வாங்கிக்கொள்" என்றார் பிக்கு இகழ்ச்சியுடன்.

அவர்கள் இருவர் சச்சரவையும் கண்டு அவர்கள் இருப்பிடம் வந்த விஜயன், "இங்கு என்ன சச்சரவு?" என்று வினவினான்.

"பீமன் கப்பற் போரைத் தலைமை தாங்கி நடத்த இஷ்டப் படுகிறான்," என்றார் பிக்கு மூர்சமதைச் சுட்டிக் காட்டி.

விஜயன் மூர்சமதை அன்புடன் நோக்கி, "சமத் இந்தப் போர் நமக்கு அதிகமாகத் தெரியாது. நீ இதில் தலையிடாதிருப்பது நல்லது," என்று கூறிவிட்டு, "பிக்கு தங்கள் உத்தரவுப்படி எல்லாம் நடக்கும். சமதை மன்னித்துவிடுங்கள்", என்று கூறினான்.

விஜயன் சொற்களைக் கேட்ட பிக்கு தலை தாழ்த்தினார் லேசாக, 'சமதின் ஆசையையும் கெடுக்க வேண்டாம்" என்று கூறிவிட்டு, "சமத்! உன் வில்லிலிருக்கும் எரிவாளியை இஷ்டப்படி எய்து பார்" என்றார்.

மூர்சமத் கொழுந்துவிட்டு அக்னி நாக்கை நீட்டிக் கொண்டிருந்த வாளியை எதிரி மரக்கலத்தின் பாய்க்காகக் குறி வைத்து எய்தான். வாளி வேகமாகவே சென்றது எதிரி மரக்கலப் பாயை நோக்கி, அந்தச் சமயத்தில் ஒரு விசித்திரம் நிகழ்ந்தது. எதிரி மரக்கலத்தில்

zeevaa

புடைத்திருந்த பாய்களிரண்டும் அவன் வாளி அவற்றிற்லொன்றில் படுவதற்கு ஒரு வினாடி முன்பாகச் சர்ரென்று கீழே இறங்கிக் தளத்தில் விழுந்து விட்டதால் சமதின் வாளி எதிலும் படாமல் எதிரி மரக் கலப்பாய் மரங்களைத் தாண்டிச் சென்றது. அது பாய்மரங்களைத் தாண்டியதும் தளத்தில் எங்கிருந்தோ எழுந்த இன்னொரு வாளி அதை இடைமறித்துத் தாக்கி நீரில் வீழ்த்தித் தானும் நீரில் மறைந்தது. அதை அடுத்து பெருநகைப்பு எதிரி மரக்கலத்தில் ஒலித்தது.

பிரமிக்கத் தக்க அந்த நிகழ்ச்சியைக் கண்ட மூர்சமத் ஏதும் பேச இயலாமல் நின்றான். விஜயன் முகம் ஏகப்பிரமை தட்டிக் கிடந்தது. பிக்குவின் முகத்தில் பிரமிப்பு ஏதுமில்லை. இகழ்ச்சி மட்டும் பரவிக் கிடந்தது. "சமத்! நம்மைவிடச் சிறந்தவர்களுடன் போராடும்போது அவர்கள் பலத்தையும் புரிந்து கொள்வது நல்லது", என்றார் இகழ்ச்சி குரலிலும் ஒலிக்க.

"சிங்கள மன்னனே! வில்லை நீ எடுத்துக்கொள். நான் சொல்கிற இடங்களுக்கு மட்டும் அம்புகளை அனுப்பு, நான் தளத்தில் திரியும்போது என்னுடனேயே வா?" என்று உத்தரவிட்டார். காமரையும் மோக்ஷரையும் நோக்கி, "தீயை அணைத்து விடுங்கள். இனி நமக்கு எரிவாளிகள் பயனில்லை" என்று கூறிவிட்டு நடந்தார் தளத்தில்.

ஆதிமல்லன் ஆட்கள் இருவரை அழைத்து, கிழவனான நந்தனையும் கூப்பிட்டு, "இந்த மரக்கலத்தை எதிரி மரக்கலத்துடன் மோதப் போகிறேன். மோதியதும் இருகப்பல்களும் இணையும் சமயத்தில் நமது வீரர்கள் மூர்சமத் தலைமையில் எதிரிக்கப்பல் தளத்தின் மீது பாயட்டும்" என்று உத்தரவிட்டார்.

அடுத்து, சிற்பியை அழைத்து, "நாகாநந்தா! வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்காதே. பிணைக்கயிற்றை எடுத்து வீசி அந்த மரக்கலத்தை அருகில் இழு", என்றார். சுக்கானைத் திருப்பி எதிரியை அனுகுமாறு தூரத்தில் உட்கார்ந்து சுக்கானைப் பிடித்திருந்த

zeevaa

தர்மருக்கும் சைகை காட்டினார். பிக்கு உத்தரவிட்டதும் சிற்பி சுழன்றான் வேகமாக. பாய்மரத்தின் அடியிற் கிடந்த அதன் முனையி லிருந்த பெரிய இரும்புக் கொக்கியைச் சரிபார்த்தான். பிறகு நீலன் முதலிய நால்வரின் உதவிகொண்டு அந்த நீண்ட பெருங்கயிற்றை எடுத்து அதன் முனையை ஒரு சுழற்றுச் சுழற்றி எறிந்தான் எதிரிக் கப்பலை நோக்கி.

எதிரிக்கப்பல் இதை எதிர்பார்த்ததோ என்னவோ, கலிங்க மரக்கலத்தின் வெகு அருகில் வந்துவிடவே கலிங்க மரக்கலக் கொக்கியும் அதன் பக்கப் பலகையில் பதிந்து மரக்கலத்தை இழுக்க லாயிற்று. அந்த மரக்கலம் வேகமாக இணைவதைக் கண்ட பிக்கு தமது கையில் ஒரு நீண்டவாளை எடுத்துக்கொண்டு, "சிங்கள மன்னா! ஜுர்சமத்! இனி ஏற்படவிருக்கும் போருக்குத் தயாராகுங்கள்", என்று இரைந்து கூவினார்.

இருமரக்கலங்களும் இணையும் தறுவாய் நெருங்கிக் கொண் டிருந்தது. அந்தச் சமயத்தில் விஜயன் காதில் ஒரு பயங்கரச் சேதி சொன்னார் பிக்கு. "விஜயா! வருவது சீன நாட்டு மரக்கலம். ஆகவே எச்சரிக்கையாகப் போரிடு", என்றார்.

அவர் சொல்லி முடிப்பதற்கும் சீன மரக்கலம் கலிங்க மரக் கலத்துடன் மோதுவதற்கும் நேரம் சரியாயிருந்தது. அடுத்து விளைந்தது பிரளயம். கடற் போரின் இலக்கணத்தை, பயங்கரத்தை, வெறியை, வீரத்தை—எல்லாவற்றையுமே விஜயன் அன்று கண்டான்.

zeevaa

## 8. அடித்தள விசித்திரம்

பெரிய இரும்புக் கொக்கியால் பலமாக இழுக்கப்பட்ட சீன மரக்கலம் வேகமாகக் கலிங்க மரக்கலத்தில் மோதவே, கலிங்க மரக்கலம் எதிரி மரக்கலத்து எடையின் காரணமாகப் பெரிதும் ஆட்டம் கண்டதால், நுழைவாயிற் படியில் நின்றிருந்த அரசகுமாரி பின்னால் சரேலென விழ இருந்தாலும் நுழைவாயிற் படியின் பக்கத்து வாயிற்காலை பிடித்துக் கொண்டு தன்னைச் சமாளித்துக் கொண்டாள். ஆனால் தளத்திலிருந்தவர்களுக்கு அந்த வசதி இல்லாததால் சிலர் தளத்தில் விழவே செய்தனர். இன்னும் சிலர் பக்கப்பலகைகளைப் பிடித்துக் கொண்டு திணறி நின்றனர். இத்தனை ஆட்டத்துக்கும் அசங்காதிருந்தவர்கள் விஜயன், கப்பல் தலைவரான பிக்கு. ஆதிமால்யன், மூர்சமத் ஆகிய நால்வரே தான். அந்த நால்வரும் அடுத்து வரும் போரைச் சமாளிக்கச் சித்தமாகி எதிரி மரக்கலத்திலிருந்து சீன வீரர்கள் வருவதை எதிர்பார்த்து நின்றார்கள்.

பிக்கு தமது மூலக்கச்சத்துடனும் திறந்த மேனியுடனும் கையில் பிடித்த நீண்ட வாளுடன், "விஜயா! அடுத்து எதிரி தளத்தில் யார் தோன்றினாலும் அம்பெய்து கொன்றுவிடு. கொஞ்சமும் தயைதாட்சண்யம் பார்க்காதே. ஆதிமால்யா எதிரி தளத்திலிருந்து இந்தத் தளத்தில் குதிப்பது யாராயிருந்தாலும் வெட்டிவிடு. உன் ஆட்களுக்கும் அதே மாதிரி உத்தரவிடு. காமரே, மோஷரே, நீங்கள் இருவரும் உங்கள் போர் முறையைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு என்ன தெரியும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் நீங்கள் கொலைத் தொழிலில் யாருக்கும் சளைக்காதவர்களாதலால்

zeevaa

நான்கு பேரையாவது நீங்கள் தீர்த்துக் கட்டுவீர்களென்று எதிர் பார்க்கிறேன்", என்று பெரிதாகக்கூவி, "சீன ரத்தத்தால் இன்று எமது மரக்கலம் கழுவப்படும்", என்று எக்காளமாக நகைக்கவும் செய்தார்.

சத்வானந்தரின் போர் வெறி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தினாலும், யாரும் அவரைக் கண்டிக்கும் நிலையில் இல்லாத தால் அவர் கட்டளைகளுக்குத் தலைதாழ்த்திச் செயல்படவே முற் பட்டனர். விஜயன் வில்லை நாணேற்றி அம்பைப் பொருத்தினான். ஆதிமல்லன் வாளை ஏந்த, அவன் மாலுமிகள் வேல்களை எடுத்துக் கொண்டார்கள். தர்மரும் அர்த்தரும் சுக்கானை எப்படியும் திரும்பாமல் பிடித்து நின்றனர். இத்தனை ஏற்பாடுகளுடன் கலிங்க மரக்கலம் போருக்குத் தயாராக நின்ற பின்பும் சில நிமிடங்கள் வரை எதிரி மரக்கலத்தில் எந்தவித சஞ்சாரத்தையோ ஏற்பாடுகளையோ காணோம்.

இதனால் சற்று எரிச்சலுக்கு உட்பட்ட கப்பல் தலைவர் பிக்கு, "அவர்கள் வராவிட்டால் நாம் போரிடுவோம்", என்று கூவிக் கொண்டு பக்கப்பலகையில் ஏறி எதிரியின் தளத்தில் குதித்துவிட்டார். அவரைத் தொடர்ந்து ஆதிமல்லனும் அவன் ஆட்களும் குதித்ததால் ஏற்பட்ட தடதட வென்ற சத்தம் கூட எதிரிகளை இயங்க வைக்க வில்லை. அந்தச் சமயத்தில் சரேலெனத் திரும்பி நுழைவாயிலைப் பார்த்த விஜயன் அங்கு திரிலோகசுந்தரி நிற்பதைக் கண்டு வெகுண்டு, "உன்னை யார் இங்கு வரச்சொன்னது? போ உன் அறைக்கு," என்று சீறினான். அதற்கும் அவள் மசியாது போகவே அவளைத் தரதரவென்று இழுத்துச் சென்று அறையில் தள்ளிக் கதவைத் தாளிட்டுக் கொண்டு திரும்பினான் தளத்துக்கு.

அப்பொழுதும் எதிரி போரைத் துவங்க மறுத்தான். எதிரி தளத்தில் யாரும் கண்ணில் படவில்லை. பக்கத்துவாரங்களும் மூடப்பட்டு விட்டதால், அங்கிருந்த முகங்களோ கோடரிகளோ கண்ணுக்குத் தென்படாததையும் விஜயன் கவனித்தான். எதிரி தளத்துக்குச் சென்ற

zeevaa

பிக்குவும் மற்ற மாலுமிகளும் வாட்களை ஏந்தி எதிரிகளைத் தேடுவதைப்பார்த்து, 'இது என்ன மர்மம்? நானும் பிக்குவும் பார்த்த எதிரி முகங்கள் என்ன ஆயின?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். எதற்கும் நாமும் போய் எதிரி தளத்தைப் பார்வையிடுவோமென்று தனது கையிலிருந்த வில்லையும் தோளி லிருந்த அம்பறாத்தூணியையும் எறிந்துவிட்டு, தனது நீண்ட வாளை உருவிப் பிடித்துக்கொண்டு பக்கப்பலகை மீது ஏறி எதிரி தளத்தில் குதித்தான்.

அவனை எதிர்கொண்ட பிக்கு, "இதன் மர்மம் எனக்கு விளங்க வில்லை", என்றார்.

"அடித்தளத்தில் நாம் கண்ட முகங்கள் என்னவாயின? கோடரிகள் எங்கே போயின?" என்று கேட்டான் விஜயன்.

"நீ கேட்டவற்றுக்கு விடை கிடைத்தால் இத்தனை நேரம் நான் போரை முடித்திருப்பேன்", என்று புத்தத்துறவி குழப்பம் நிரம்பிய கண்களை விஜயன் மீது நிலைக்க விட்டார்.

"கீழே சென்று அடித்தளத்தைக் கவனித்தாலென்ன?" என்று விஜயன் வினவினான்.

"அது தற்கொலைக்கு ஒப்பாகும். கீழே சீனர் இருந்தால் நம்மை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அக்ர மந்திரம் என்ற கப்பல் வகையில் அடித்தளம் விசாலமாய் இருந்தாலும் நுழையும் வாயில் மிகக் குறுகலாயிருக்கும்.

இரண்டு இரண்டு பேராக நுழையலாம். தலை நீட்டியதும் வெட்டப்படுவோம்", என்று விளக்கினார் பிக்கு.

விஜயன் முகத்தில் மெல்லக் கோபம் உதயமாயிற்று. "பிக்கு, போரில் உயிருக்குப் பயந்தால் முடியுமா?" என்று வினவினான்.

zeevaa

"முடியாது," என்று ஒப்புக்கொண்ட பிக்கு, 'அதற்காக அனாவசிய மாக ஆட்களைப் பலி கொடுப்பதும் தவறு", என்று சுட்டிக் காட்டினார்.

விஜயன் பிக்குவை வெறுப்புடன் நோக்கி, "துணிவில்லாமல் வெற்றியில்லை பிக்கு. நான் அடித்தளம் செல்கிறேன்", என்று கூறிவிட்டு, ' "மூர்சமத் வா என்னுடன்", என்று அழைத்துக்கொண்டு எதிரிக் கப்பலின் முன் பகுதியில் தெரிந்த அக்ர மந்திரத்துக்கு (முனை அறைப் பகுதிக்கு) ஓடினான் வேகமாக. மூர்சமத் தனது பெரிய மீசையைத் தடவிக் கொண்டு தொடர்ந்தான் ராட்சஸனைப் போல.

அந்த இருவரைத் தவிர தளத்திலிருந்து வேறு யாரும் அசையவில்லை. "நீங்களும் வாருங்கள், காமரே மோக்ஷரே! தீயில் இரண்டு பந்தங்களை எடுத்து வாருங்கள். இந்த மரக்கலத்துக்குத் தீ வைத்துவிடுகிறேன்", என்று கூவி அழைத்தார் பிக்கு.

அவருடைய ஆணையைத் தொடர்ந்து காமரும் மோக்ஷரும் தீப்பந்தங்களுடன் எதிரித் தளத்தில் குதித்தார்கள். அவர்கள் இருவரும் குதித்ததும் கீழே தளத்தில் கிடந்த பாய்ச் சீலைகளுக்கு நெருப்பு வைக்கத் தீர்மானித்தார் பிக்கு. அதனால் எதிரிக் கப்பலை ஒரு வழியாக ஒழித்துவிடலாம் என்று திட்டமிட்டார்.

ஆனால் கீழே சென்ற விஜயனும் மூர்சமதும் என்ன ஆனார் களென்று தெரியாததால் தமது எரிபணியைச் சிறிது தாமதித்தார். பந்தமேந்திய மோக்ஷருக்கும் காமருக்கும் விஷயத்தைத் தெரி விக்கவும் செய்தார்.

விஜயனும் மூர்சமதும் கீழே சென்றுவிட்டதைக் கேட்ட காமர் கோபாவேசப்பட்டு, "நீர் எதற்காக இங்கு நிற்கிறீர்?" என்று வினவினார்.

"உமக்கு நிச்சயமாகவே கப்பல் போர் தெரியுமா அல்லது வாளை வைத்துக்கொண்டு சதிராடித்தான் பழக்கமா?" என்று மோக்ஷர் கேட்டார்.

zeevaa

பிறகு இருவரும் ஒருவரையொருவர் பார்த்துப் பேசிக் கொண்டனர். "காமரே! நமது நாட்டு மாப்பிள்ளையைக் காப்பாற்றத் தானே சிவகோகர்ண ஸ்வாமிகள் நம்மை அனுப்பினார்?" என்று கேட்டார் மோக்ஷர்.

"ஆம்," என்று கூறினார் காமர்.

"அப்படியானால் நாம் பந்தத்தை வைத்துக்கொண்டு பிக்குவுக்குப் பகல் விளக்குப் பிடிக்க முடியாது", என்றார் மோக்ஷர்.

"பிடித்தும் பயன் இல்லை", என்றார் காமர்.

"தீவட்டி பிடிக்கும் உத்தியோகத்தை நாம் இதுவரை செய்த தில்லை", என்றார் மோக்ஷர்.

"ஆம்," என்றார் காமர்.

"சரி, வாரும்", என்று கூறி முன்னால் நடந்தார் மோக்ஷர்.

இரு துறவிகளும் அந்தக் கப்பலின் நுழைவாயிலுக்குள் புகுந்து படிகளில் இறங்கிச் சென்றார்கள். கடைசிப் படியில் நின்று கீழ்த் தளத்தைக் கவனித்தார்கள். அங்கு விரிந்த காட்சி அவர்களை அசர வைத்தது. அடித் தளத்தில் அறைகள் ஏதுமில்லாததால் அது பெரும் கூடம் போல் காட்சியளித்தது. அதில் பத்துப் பன்னிரண்டு சீனர்கள் தாறுமாறாகக் கிடந்தார்கள். ஒரு சீனரிடமும் அசைவு இல்லை. ஏதோ பிணங்கள் போல் கிடந்த அந்தச் சீனர்களின் பக்கங்களில் கோடரிகள் விழுந்து கிடந்தன. விஜயன், மூர்சமத் இருவரின் அடிச்சுவடுகளை அடியோடு காணோம்.

தலைப்பின்னல்களுடனும் நீளச் சட்டைகளுடனும் மயக்கமாகக் கிடந்த சீனர்களை அணுகிய காமரும் மோக்ஷரும் அவர்களில் ஒருவனைச் சற்று காலால் தள்ளிப் பார்த்தார்கள். அவர்கள் அசைய வில்லை. மூர்ச்சையாகக் கிடந்ததால் கண்கள் மூடிக்கிடப்பதாக மோக்ஷர் தீர்மானித்து, "காமரே! மயக்கமாகி விட்டார்கள் இந்த சீனர்கள். மூச்சு மட்டும் சீராக வருகிறது" என்றார்.

zeevaa

"ஆம், எதனால் மயக்கமானார்கள்?" என்று காமர் விசாரித்தார்.

'சீனருக்கு அபின் பைத்தியம் அதிகம். லேசாகப் போட்டிருக்க வேண்டும்". என்று விளக்கிய மோக்ஷர் கையின் மூன்று விரல்களை உருட்டி உருண்டையாகக் காட்டினார்.

"இப்பொழுது என்ன செய்யலாம்?" என்று காமர் விசாரித்தார்.

"ஒன்று செய்யலாம். ஆனால் மனமில்லை. அதர்மம்", என்றார் மோக்ஷர்.

"எது?"

"இவர்கள் கழுத்துக்களை முறித்து விட்டால், கத்தியின் உதவி யில்லாமல் போரை முடித்து விடலாம்".

"அது?"

"தர்மமல்ல என்று பார்க்கிறேன். மூர்ச்சையாக இருக்கும் யாரையும் இதுவரையில் கொன்று பழக்கமில்லை".

இதைச் சொன்ன மோக்ஷர் பெருமூச்செறிந்து, "இத்தனை கழுத்துக்களை விடவேண்டியிருக்கிறது", என்று ஆயாசமும் பட்டார்.

அப்பொழுதுதான் விழித்துக் கொண்ட காமர், "நாம் தேடி வந்தது விஜயனை, அவர் என்ன ஆனார்?" என்று கேட்டார்.

அப்பொழுதுதான் அந்த வித்தை நிகழ்ந்தது. அந்தத் தளத்திற்கு இன்னொரு வாயிலிருப்பதைக் கவனித்த காமர், "அதோ ஒரு வழி இருக்கிறது", என்று சுட்டிக் காட்டினார்.

மோக்ஷர் பதில் சொல்லவில்லை. அதிர்ச்சியுற்று நின்றார். "காமரே! உமக்கு விளங்கவில்லையா?" என்று கேட்ட அவர் குரலிலும் அதிர்ச்சி தெரிந்தது.

"என்ன விளங்க வேண்டும்?" என்று காமர் கேட்டார்.

zeevaa

"இந்த மரக்கலம் நிற்கவில்லை. போய்க் கொண்டிருக்கிறது", என்று கூறிய மோக்ஷர் திகைத்துச் சுற்று முற்றும் நோக்கினார். பிறகு பக்கத் துளைகளுக்கு ஓடி மூடு பலகையொன்றைத் திறந்து பார்த்தார். கீழே கடலில் மரக்கலம் விரைவது தெரிந்தது மோக்ஷருக்கு.

அப்பொழுது அந்த அடித்தளத்தின் கோடியிலிருந்து எழுந்த ஒரு குரல், மோக்ஷரே! வாரும், உம்மை சந்தித்து நாளாகி விட்டது", என்று வரவேற்கவும் செய்தது. தங்களுக்கு முடிவு காலம் கிட்டிவிட்டதை மோக்ஷர் புரிந்து கொண்டார்.



# 9. சூ-சின்

யாருக்கும் எதற்கும் அஞ்சாத மோக்ஷரே தம்மை வரவேற்ற குரலைக் கேட்டுத் திகிலடைந்துவிட்டதைப் பக்கத்தில் நின்ற காமர் நோக்கி வியப்படைந்து, "மோக்ஷரே! உம்மை அச்சுறுத்தக் கூடியவனும் உலகில் இருக்கிறானென்பதை இன்றுதான் உணர்ந்து கொண்டேன்", என்றார்.

ஆனால் மோக்ஷர் அதற்குப் பதில் சொல்லாமல் அந்த இரண்டாவது வாயிலை நோக்கிக் கொண்டே நின்றார் சில வினாடிகள். மிக இனிமையான அந்தக் குரல் மீண்டும் ஒலித்தது. "மோக்ஷரே! நமது சந்திப்பு மீண்டும் இப்படி ஏற்படக்கூடும் என்று நான் சொப்பனம் கூடக் காணவில்லை", என்று.

இத்தனைக்கும் அந்தக் குரலுக்கு உடையவன் தனது உருவத்தைக் காட்டாமல் மறைவிலிருந்தே பேசியதன் காரணத்தை உணராத மோக்ஷர், "ஏன் மறைவிலிருந்து பேசுகிறாய்? வெளியே வருவது தானே?" என்று வினவினார்.

மோக்ஷர் இந்த உரையாடலால் பழைய துணிவினை மீண்டும் வரவழைத்துக் கொண்டு, "உன்னைப் போன்ற கொலைகாரனை எப்படி மறக்கமுடியும்?" என்று வினவினார் எரிச்சல் ஊடுருவிய குரலில்.

"மோக்ஷரே! குருவைக் கொலைகாரனென்று அழைப்பது முறையா" என்று மீண்டும் கேட்டான் அந்த மனிதன்.

"குருவா! ஆம் ஆம். குருதான். கழுத்தை முறித்துக் கொல்லும் முறைகளை நீதானே கற்பித்தாய்?" என்று வெறுப்புடன் சொன்னார் மோக்ஷர்.

zeevaa

"அந்தக் கலையை நான் போதிக்காவிட்டால் நீர் பலரை மோக்ஷத்துக்கு அனுப்பியிருக்க முடியாதல்லவா?" என்று வினவி மீண்டும் நகைத்தான் மறைவில் நின்றவன்.

அதுவரை அவர்கள் உரையாடலில் தலையிடாதிருந்த காமர் தலையிட்டு, "மோக்ஷரே! இவன் யார்? உமது குரு என்கிறானே?" என்று விசாரித்தார்.

மோக்ஷர் காமரை நோக்காமலே புதுவழியில் கண்களை நிலை நிறுத்திய வண்ணம், "இவன்தான் சூ-சின், கீழ்த் திசையிலேயே பெரிய கொள்ளைக்காரன். ஒரு சமயம் இவன் எனக்கு நரம்பு அடிகளைப் போதித்தான். கழுத்தை முறிக்கும் கலையையும் சொல்லிக் கொடுத்தான்", என்று கூறினார்.

காமர் அத்தனை பயத்திலும் லேசாகப் புன்முறுவல் செய்து, "நீரும் கொள்கைக்காரனாயிருந்திருக்கிறீரா?" என்று வினவினார்.

மோக்ஷர் அவரைத் திரும்பிப் பார்த்து, "அப்படியே இருந்தால்தான் என்ன? கொள்ளைக்காரர் சாமியாராவது புதுமையா?" என்று வினவினார்.

"இல்லையா?" காமரின் கேள்வியில் வியப்பு இருந்தது.

"இல்லை. நன்றாகத் துறவறத்திற்கு வந்தவர்களெல்லாம் அநேகமாக முதலில் சற்றுத் தாறுமாறாகத்தான் இருந்திருக்கிறார்கள். வால்மீகி கொள்கைக்காரனாயிருந்து தானே துறவியாக மாறினார்?" மோக்ஷர் தமது விவாத சாமர்த்தியத்துக்குப் புராண முனிவரை உவமை காட்டினார்.

"அப்படியானால் கொள்ளைக்காரரெல்லாம் முனிவர்களாகிறார்களா? உமது நண்பர் இருக்கிறாரே அவரும் முனிவராகி விடுவாரா?" என்று காமர் கேட்டார்.

அடுத்து அவர் ஏதும் கேட்கவோ பேசவோ இடம் விடவில்லை சூ-சின். மெள்ளப் படிகளில் இறங்கி அடிப்படியில் நின்று இரண்டு

zeevaa

துறவிகளுக்கும் தரிசனம் கொடுத்தான். அவன் அதிக உயரமில்லா விட்டாலும் அவன் குள்ளத்தனத்திலேயே ஒரு கொடுமை இருந்தது. அவன் தனது இரு கால்களையும் குவித்தே மரியாதையாக நின்றிருந்தான். அவன் நீண்ட சட்டை முழங்காலுக்கும் கீழே தொங்கிக் கொண்டிருந்ததன்றி இடுப்பில் ஒரு சிவப்பு நிறப்பட்டுப் பட்டையையும் கட்டிக் கொண்டிருந்தான். அந்தப் பட்டுக் கச்சையின் ஒரு புறத்தில் மிகவும் அகலமான ஆனால் அதிக நீளமில்லாத வாள் ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. வயிற்றுக்கு மேலே இரண்டு குறுவாள் பிடிகளும் காட்சியளித்தன. அவை உயர்ந்த வேலைப்பாடு டையதாக அழகாக இருந்ததைக் கண்ட காமர் அவற்றின் அழகு உயிரைக் குடிக்கும் அழகு என்று எண்ணினார். அவன் கழுத்து நன்றாகத் தடித்து தேகமும் உறுதியாக இருந்ததையும், கன்னக் கதுப்புகளும் கெட்டியாயிருந்ததையும், அவன் உதடுகளின் இருபுறத்திலும் நீண்டு தொங்கிய மீசை அவன் முகத்துக்குக் கம்பீரத்தைக் கொடுத்ததையும் கண்ட காமர் அவன் உதடுகளில் மட்டும் கடுமை தெரிவதைப் பார்த்தார். அவன் கண்கள் மிகச் சிறிய வைதான். ஆனால் அவற்றில் துளிர்த்த கொடுமை விவரணத்துக்கு அப்பாற்பட்டதாய் இருந்தது. அவன் புன்முறுவலுடன் சர்வசாதாரண மாகத்தான் நின்றிருந்தான், அவன் சின்னஞ்சிறு கண்களில் மட்டும் ஏதோ ஒருவித சலனமும் விபரீதமும் துளிர்த்திருந்தன.

தன்னை இப்படி உற்று நோக்கிய காமரைக் கவனித்த சூ-சின் திரும்ப நோக்கி இதழ்களில் புன்முறுவலைத் தவழ விட்டுக் கொண்டான். இரு துறவிகளின் கைகளிலுமிருந்து பந்தங்களைக் கண்டு, "மோக்ஷரே! சூ-சின் கப்பலுக்குத் தீ வைக்க வந்திருக்கிறீர்?" என்று கேட்டு உதடுகளின் புன்முறுவலை அதிகமாக்கினான்.

மோக்ஷர் பதில் சொல்லவில்லை. "காமரே நீர் இங்கேயே இரும்", என்று கூறிவிட்டு சூ-சின்னை நோக்கி நடந்து அவனெதிரே நின்றார் அலட்சியமாக, "சூ-சின்!" என்றும் அழைத்தார்.

zeevaa

"என்ன மோக்ஷரே?" சூ-சின் குரல் அப்பொழுதும் மிக இனிமையாயிருந்தது.

"விஜயனும் மூர்சமதும் எங்கே?" என்று வினவினார் மோக்ஷர்.

"மேல் அறையில் இருக்கிறார்கள்", சூ-சின் அலட்சியமாகப் பதில் சொன்னான்.

"என்ன நிலையில் இருக்கிறார்கள்?" என்ற மோக்ஷரின் குரலில் கவலை இருந்தது.

"சற்று மயக்கமாக இருக்கிறார்கள்?. உயிருடன் தான் இருக்கிறார்கள். மோக்ஷரின் நண்பர்களுக்கு நான் ஆபத்து விளைவிப்பேனா?" என்று கேட்டான் சூ-சின்.

அடுத்து மோக்ஷர் நேரிடையாகவே கேட்டார். "என்ன நடந்தது.?" என்று.

"விஜயனும் மூர்சமதும் படிகளில் தடதடவென இறங்கி வந்தார்கள். இந்த மாதிரி அபாய சமயங்களில், நிலையில் சத்தம் கூடாது. தங்கள் வரவைத் தாங்களே அறிவித்துக் கொண்டார்கள். அடித் தளத்துக்கு வந்து இந்தக் காட்சியைப் பார்த்ததும் அவர்களுக்குத் துணிவு வந்திருக்க வேண்டும். நாலா பக்கமும் ஓடிப் பார்த்தார்கள். கீழே கிடந்த எனது இரு மாலுமிகளைக் காலாலும் உதைத்துப் பார்த்தார்கள். உடனே இந்தப் படியருகில் நின்று மரக்கலத் துளை ஒன்று திறந்திருப்பதைக் கண்டார்கள். அதில் ஊக்கமாக இருந்தபடியால் இந்தப் படியிலிருந்து அவர்கள் தலைமேல் மின்னல்போல் இறங்கிய கோடாரியின் அடிகளைத் தவிர்க்க முடியாமல் போய்விட்டது", என்று விளக்கிய சூ-சின், "இருவரும் மேல் அறையில் தான் இருக்கிறார்கள். வேண்டுமானால் வந்து பார்க்கலாம்", என்று கூறி, தனது கைகளை நீட்டி அழைக்கவும் செய்தான்.

zeevaa

"மேலே எங்கள் ஆட்கள் இருப்பது தெரியுமா?" என்று வினவினார் காமர்.

"தெரியும், வீரர்கள் என்று சொல்லாமல் ஆட்கள் என்று சொன்னதைப்பற்றி உம்மைப் பாராட்டுகிறேன்", என்றான் சூ-சின்.

"பிக்கு? அவர்கூட வீரமில்லாதவரா?" என்று காமர் வினவினார்.

"பிக்கு ஏற்கனவே என்னுடன் இருந்திருக்கிறார், நல்ல வீரர். முன்கோபக்காரர், அவர் முன்னேறாததற்கு அவர் கோபம் தான் காரணம்" என்ற சூ-சின், "அவர்களைப் பற்றிக் கவலை வேண்டாம்", என்று தைரியம் சொன்னான்.

"அவர்கள் நாங்கள் வராததால் ஏதோ மோசம் நடந்திருக்கிற தென்று ஓடி வந்தால்?...." காமர் சிறிது அபாயத்தைச் சுட்டிக் காட்டினார்.

சூ-சின் நகைத்தான். "காமரே! யாரும் வர மாட்டார்கள். இப்பொழுது இந்த மரக்கலத்தைப் பற்றிய உண்மையை பிக்கு புரிந்து கொண்டிருப்பார் யாரையும் கீழே வர அனுமதிக்க மாட்டார்", என்ற சூ-சின் மேலே படிகளில் ஏற முற்பட்டான்.

மோக்ஷரும் காமரும் சூ-சின்னைத் தொடர்ந்து சென்றார்கள். படிகளுக்குச் சிறிது மேலே மேல்தளப் பலகைக்கும் அடித் தளத்துக்கும் இடையில் சிறு அறை ஒன்று இருந்ததையும் அதில் விஜயனும் மூர்சமதும் நினைவிழந்து படுத்திருப்பதையும் துறவிகள் பார்த்தார்கள். இருவர் தலையிலும் ரத்தக் காயம் ஏதுமில்லா விட்டாலும் ஏதோ ஓர் இடத்தில் மண்டை சிறிது எழும்பியிருந் ததைத் துறவிகள் கவனித்தார்கள்.

காமருக்கு அவ்விருவர் நிலையைப் பற்றி ஏதும் தெரியா விட்டாலும் மோக்ஷருக்குத் தெரிந்ததால், 'முதலில் தலையில் அடித்துவிட்டு, பிறகு நரம்பில் வேலை நடந்திருக்கிறது', என்று

zeevaa

உள்ளூர சொல்லிக்கொண்டு தமது கையிலிருந்த பந்தத்தைக் காமரிடம் கொடுத்து விட்டு, "சூ-சின், இவர்களை நான் பரிசோதிப்பதற்கு ஏதாவது ஆட்சேபணை உண்டா?" என்று கேட்டார்.

"இல்லை, பார்க்கலாம்", என்றான் சூ-சின்.

மோக்ஷர் விஜயன் அருகில் உட்கார்ந்து அவன் தலையில் சிறிதாக எழும்பியிருந்த இடத்தைச் சோதித்தார். பிறகு கைகளையும் கால்களையும் ஆராய்ந்தார். ஓர் இடத்தைத் தொட்டபோது விஜயன் முனகினான். புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த மோக்ஷர், "இவர்களை என்ன செய்ய உத்தேசம்?" என்று வினவினார்.

"இவர்களை ஏதும் செய்ய அவசியமில்லை. இவர்கள் சரியாக நடந்து கொண்டால், எனது நிபந்தனைக்கு ஒப்புக் கொண்டால் இவர்கள் தங்கள் கப்பலுடன் சிங்களம் செல்லத் தடையில்லை", என்ற சூ-சின், "மோக்ஷரே! நீர் தளத்துக்குச் சென்று பிக்குவிடம், சண்டை முடிந்து விட்டதென்று சொல்லி வீரர்களை ஆயுதங்களைக் கீழே போட்டு, சமாதானத்துக்குச் சித்தமாக இருக்கச் சொல்லும். பிக்குவை மட்டும் இங்கு அழைத்து வாரும்", என்றான்.

அவன் சொற்படி மேலே சென்ற மோக்ஷர் சில நிமிடங்களில் பிக்குவை அழைத்துக் கொண்டு திரும்பினார். பிக்குவை மிகக் குதூகலத்துடன் வரவேற்ற சூ-சின், "பிக்கு! நாம் சந்தித்து நீண்ட நாளாகிறது", என்றான்.

பிக்கு பதில் சொல்லவில்லை, "என்னை எதற்காக அழைத்தாய்?" என்று மட்டும் வினவினார்.

"இரண்டு கப்பல்களையும் மீண்டும் இணையும்", என்றான் சூ-சின்.

"எதற்கு?" பிக்கு உஷ்ணமாக வினவினார்.

zeevaa

"பிறகு சொல்கிறேன், சொன்னபடி செய்யும்".

"கப்பல்களை இணைக்க முடியாது".

"ஏன்?"

"என் கப்பலின் கயிற்றை நீ அறுத்துவிட்டாய் நடுவில்,"

"எனது கயிற்றையும் கொக்கியையும் உபயோகித்து கப்பல்களை மீண்டும் இணைத்துவிடு. உள்ளத்தில் ஏதாவது தந்திரமிருந்தால் மறந்துவிடு. என் கட்டளையை நிறைவேற்றச் சிறிது தயங்கினாலோ, கட்டளையை மீறினாலோ உன்னையும் உன் மாலுமிகளையும் அடியோடு அழித்துவிடுவேன்", இதைச் சொன்ன சூ-சின், பிக்கு செல்லலாமென்பதற்கு அறிகுறியாகக் கையை அசைத்தான்.

பிக்கு சிறிது சிந்தித்தார். பிறகு படிகளில் ஏறி, தளத்தை நோக்கி விரைந்தார்.



zeevaa

# 10. மகாரத்தினத்துக்கு வணக்கம்

சிதைந்து குழம்பிய சிந்தையுடனும் எரிந்த இதயத்துடனும் கப்பலின் தளத்தை அடைந்த பிக்கு. கூ-சின் மீதிருந்த ஆத்திரத்தையெல்லாம் தளத்திலிருந்த ஆதிமல்லன் மீதும் மற்றவர் மீதும் காட்டி, "ஏன் நிற்கிறீர்கள் தீவட்டிகள் மாதிரி?" என்று எரிந்து கூச்சல் போட்டார்.

கப்பலின் கீழ்த்தளத்தில் ஏதோ விபரீதம் நடந்திருக்க வேண்டுமென்பதையும் அதனால் தான் பிக்கு வெறிக் கூச்சல் போடுகிறாரென்பதையும் உணர்ந்து கொண்ட ஆதிமல்லன்- "நிற்காமல் என்ன செய்யச் சொல்கிறீர்கள் தலைவரே? என்ன செயலுக்கு, என்ன உத்தரவைக் கப்பல் தலைவரான நீங்கள் இட்டு விட்டீர்கள்?" என்று பதில் கேள்விகளை வீசினான்.

அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல இயலாத புத்தத்துறவி புருவத்தை நெறித்தார். உதடுகளைக் கடித்தார். பிறகு வேகமாகக் கப்பலின் பக்கப் பலகைக்குச் சென்று கீழே உற்று நோக்கினார். "ஆதிமல்லா! கப்பல் நிலைத்து நிற்கவில்லை, ஓடுகிறது", என்று திரும்பிப் பார்த்து இரைந்து எதிரே சீனக் கப்பலிலிருந்து சற்று நகர்ந்து விட்ட தங்கள் மரக்கலப் பாய் மரங்கள் மீதும் கண்களை ஓட்டினார்.

ஆதிமல்லனும் அப்பொழுதுதான் நிலைமையைக் கவனித்தானா கையால் பிரமையும் திகிலும் இணைந்த பார்வையை பிக்கு மீது செலுத்தி, "ஆம் பிக்கு! நமது மரக்கலத்தைவிட்டு நகர்ந்துவிட்டது", என்று கூறி, பக்கப் பலகையில் தொங்கிக் கிடந்த தங்கள் மரக்கல

zeevaa




zeevaa

வளையக் கயிற்றைப் பார்த்தான். அடுத்து நீர் மட்டத்தையும் நோக்கி, "பிக்கு, பிக்கு" என்று கூவினான்.

"என்ன?" என்று பிக்கு விசாரித்தார்.

"நமது மரக்கலத்திலிருந்து கொக்கியுடன் வீசப்பட்ட கயிற்றை யாரோ துண்டித்து விட்டார்கள். அதனால் அறுந்து அந்தக் கப்பல் ஓடுகிறது",. என்று விளக்கினான்.

"அதைச் சரிப்படுத்த என்ன செய்ய உத்தேசம்?" என்று பிக்கு கேட்டார்.

"கயிறு பாதியில் துண்டிக்கப் பட்டிருக்கிறது. பக்கப் பலகையில் இறங்கினாலும் அதை அடைவதோ பிணைப்பதோ நடவாத காரியம்", என்றான் ஆதிமல்லன்.

"நடக்கிற காரியத்தைச் சொல்", பிக்கு கட்டளையிட்டார்.

"ஏதும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை", என்றான் ஆதிமல்லன்.

"எனக்குத் தெரியும்",

"சொல்லுங்கள்",

"நமது கப்பல் கொக்கி போய் விட்டாலென்ன? இந்த மரக்கலத்தில் கொக்கியோ கயிறோ கிடையாதா?"

"ஆம் ஆம், இருக்கும்", என்ற ஆதிமல்லன் எட்டக்கிடந்த பெரும் கயிற்றையும் பலமான இரும்புக் கொக்கியையும் பார்த்தான். "பிக்கு!" என்று மிகுந்த மரியாதையுடன் அழைத்தான்.

"என்ன ஆதிமல்லா?" பிக்குவின் கேள்வியில் உயிர் சிறிதுமில்லை.

"நீங்கள் ஒரு மேதை", என்றான் ஆதிமல்லன்.

zeevaa

"ஏன்?"

"இந்தக் கொக்கியும் கயிறும் இருப்பதை எடுத்துக் காட்டீனீர்கள் பாருங்கள்........"

"நான் மேதையல்ல", பிக்கு வறண்ட குரலில் சொன்னார்.

"இல்லையா?"

"இல்லை மேதை கீழே இருக்கிறார்",

"கீழேயா?"

"ஆம் அடித்தளத்தில் இந்தக் கப்பலின் கொக்கியால் நமது மரக்கலத்தை இழுக்க வழி சொல்லிக் கொடுத்தார்",

"ஏன் நமக்கு அந்த வழி தெரியாதா?"

"தெரியும், தோன்றவில்லை. தெரிவது வேறு, தோன்றுவது வேறு".

"யாரந்த மேதை?"

"சூ-சின்........" இதை நிதானமாகச் சொன்னார் பிக்கு.

ஆனால் கேட்டவர்கள் நிதானமாக கேட்கவில்லை. ஆதிமல்லன் கை கால்கள் நடுங்கின. அவன் ஆட்கள் சமுத்திரத்தில் குதித்துவிட்டா லென்ன என்று எண்ணி நீர்ப்பரப்பைக் கவனித்தார்கள். ஆதிமல்லன் நடுங்கிய குரலில் கேட்டான். "பிக்கு! யார்? சூ-சின்னா அந்தக் கொள்ளைக்காரனா! அவனுடைய மரக்கலமா இது?" என்று உதடு அடித்துக்கொள்ளச் சொற்களைக் குழறினான்.

"ஆதிமல்லா! சூ-சின்னை மரியாதையுடன் பேசு, கீழே இருந்து அவர் கேட்டுக்கொண்டு வந்தால் நம்மைக் கொல்லமாட்டார்....." என்ற பிக்கு சொற்களை முடிக்க வில்லை.

"மாட்டார் மாட்டார்......." ஆதிமல்லன் நடுக்கம் அதிகமான குரலில் பேசினான்.

zeevaa

"தெரியுமல்லவா?" பிக்கு கேட்டார்.

"தெரியும் சித்திரவதை செய்வார். உயிரை வைத்து அணு அணுவாகப் பிராணனை வாங்குவார்", என்ற ஆதிமல்லன் "பிக்கு! சீன கொள்ளைக்கார மகாபிரபுவைத் தங்களுக்கு ஏற்கனவே தெரியுமா?" என்று வினவினான்.

"தெரியும்", பிக்கு குரூரமாகப் புன்முறுவல் செய்தார்.

"எப்படி?" என்று வியப்புடன் வினவினான் ஆதிமல்லன்.

"அவரிடம் நான் பணிபுரிந்திருக்கிறேன்" இதை நிதானமாகவே சொன்னார் பிக்கு.

அதிர்ச்சி என்ற சொல்லுக்குப் பொருளிருந்தால் அதை ஆதி மல்லன் முகத்தில் கண்டார் பிக்கு.

"நீங்களா! சூ-சின்னிடம் பணிபுரிந்தீர்களா?" ஆதிமல்லன் கேள்வி அதிர்ச்சியின் உணர்ச்சியைத் தொட்டது.

"ஆம்",

"ஸ்வாமி!"

"ஸ்வாமியாவது மண்ணாங்கட்டியாவது, ஆதிமல்லா சூ-சின் னின் கட்டளையை நிறைவேற்றப் பார். இன்னும் சிறிது நேரம் நாம் பேசிக்கொண்டிருந்தால் நமது மரக்கலத்தை இந்தக் கப்பலின் கொக்கி எட்டாது. முதலில் வேலையைப் பார்", என்றார் கடுப்புடன்.

அதற்கு மேல் பேசவில்லை ஆதிமல்லன், "டேய்! வாருங்கள்", என்று தனது ஆட்களில் இருவரைக் கூவி அழைத்துக் கொண்டு கொக்கியை எடுத்துக் கயிற்றைத் தூக்கிவிடச் சொன்னான். கயிறு தூக்கப்பட்டதும் தனது முழுப் பலத்துடன் கொக்கியை வீசினான் ஆதிமல்லன். இத்தனை பேச்சிலும் இரு கப்பல்களும் அடியோடு பிரிந்து ஓடாததாலும், தங்கள் மரக்கலத்தின் துடுப்புத் துழாவு வோர்

zeevaa

சீனக் கப்பலைத் தப்பவிடாதிருக்கத் துடுப்புகளைத் துரிதமாகத் துழாவியதாலும் ஆதிமல்லன் வீசிய கொக்கி வேகமாக விஜயனின் மரக்கலப் பலகையில் தொற்றிக் கொண்டது. அதனால் இழுபட்ட மரக்கலம் சீனமரக்கலத்தை மெதுவாக நெருங்கவே ஆதிமல்லனின் ஆட்கள் கயிற்றை இழுத்து மரக்கலங்களை ஒன்று சேர்த்தனர்.

மரக்கலங்கள் சேர்ந்ததால் மனவேதனை தீர்ந்த பிக்கு ஆதி மல்லனை நோக்கி, "நான் கீழே சென்று வருகிறேன். இங்கு எந்தக் களேபரமும் வேண்டாம். எல்லோரையும் அமைதியாக இருக்கச் செரல். சூ–சின் வந்தால் தலை வணங்கச் சொல். வணங்காத தலைகளை வெட்டும் பழக்கமும் நமது புதுத் தலைவருக்கு உண்டு", என்று கூறிவிட்டு அடித்தள வழியை நோக்கி நடந்தார்,

அவர் போவதைப் பார்த்துக் கொண்டு சில வினாடிகள் நின்றுவிட்ட ஆதிமல்லன் தளத்திலிருந்தவர்களை ஒழுங்காக அணிவகுத்து நிற்க வைத்தான். "அன்பர்களே!" என்று அன்பு சிறிதுமில்லாத குரலில் அவர்களை அழைத்தான்.

"சொல்லுங்கள்", என்றான் சற்று எட்ட நின்றிருந்த நிலன்.

சிற்பி நாகாநந்தன் ஏதும் பேசாவிட்டாலும் அவன் கண்களில் கேள்வி தொக்கி நின்றது.

ஆதிமல்லன் நீலனையும் நோக்கி சிற்பியையும் நோக்கி, "பிக்கு கீழே போயிருக்கிறார். சற்று நேரத்திற்கெல்லாம் அனேகமாக அவரது தலைவருடன் வருவார்", என்று மெதுவாகச் சொன்னான்.

புரிந்து கொண்டதற்கு அறிகுறியாக மற்றவர்கள் தலையை அசைத்தார்கள். ஆதிமல்லன் அவர்கள் தலையசைப்பில் இருந்த வெறுப்பைக் கவனித்தாலும் கவனிக்காதது போல், "அவர் வந்ததும் தலைவணங்க வேண்டும்" என்றான்.

"பிக்கு உங்களிடம் சொன்னதைக் கேட்டோம்", என்றான் நீலன்.

zeevaa

"வணங்காவிட்டால் தலை என்ன ஆகும் என்று சொன்னாரே, அதையும் கேட்டீர்களா?"

"கேட்டோம்",

"அப்படியானால் எனக்குக் கவலை விட்டது", என்ற ஆதிமல்லன் கண்களை அடித்தள நுழைவாயிலை நோக்கி நிலைக்க விட்டான்.

அவன் பார்த்ததற்கும் சூ-சின் அந்த நுழைவாயிலில் தோன்று வதற்கும் சரியாயிருக்கவே, ஆதிமல்லன் தலை தளப் பலகையில் படும்படி தாழ்த்தினான். மற்றவர்களும் வணங்கினார்கள்.

நுழைவாயிலிலிருந்தே ஆதிமல்லன் ஆட்கள் அணிவகுப்பையும் அவர்கள் செலுத்திய மரியாதையையும் கவனித்தான் சூ-சின். அவன் இதழ்களில் ஒரு புன்முறுவல் தவழ்ந்திருந்தது. நீண்ட பின்னலுடன் கூடிய தலையை ஒரு புறமாக ஒருக்களித்து அவர்கள் வணக்கத்தை ஏற்றுக்கொண்டு, அவர்களை நோக்கி நடந்து வந்து அந்த அணிவகுப்பைப் பார்வையிடவும் செய்தான். ஒவ்வொருவரையும் உற்று நோக்கினான். சிற்பியிடம் வந்தபோது நின்றான் சில வினாடிகள். ஏதோ நினைவுபடுத்த முயல்வது போல் அவன் புருவங்கள் மேலே எழுந்தன. பிறகு அவன் மெல்லிய குரல் ஒலித்தது. "நீ தான் அந்தச் சிற்பியாக இருக்க வேண்டும்", என்று.

சிற்பி பதில் சொல்லவில்லை. வெறித்து நோக்கினான் சீனனை, சீனன் கண்களிலிருந்த சந்தேகம் விலகியதும், "ஆம், நீயேதான். சிற்சில சமயங்களில் உனக்கு வெறி வருமென்று கேள்விப்பட்டிருக் கிறேன்" என்று சொல்லிவிட்டு, "வா பிக்கு! நாம் ராஜகுமாரியைத் தரிசிப்போம்", என்று பிக்குவை அழைத்துக் கொண்டு அந்த மரக்கலப் பக்கப் பலகையை நோக்கி நடந்தான். பக்கப் பலகையை அடைந்ததும் தளத்தில் நின்றவர்களைத் திரும்பி நோக்கி, " யாரும் இங்கிருந்து அசைய வேண்டாம்", என்று எச்சரித்துவிட்டுப் பலகைமீது மிக லாவகமாகத் தொற்றி ஏறி அடுத்த மரக்கலத்தில் குதித்தான். பிக்குவும் அவனைத் தொடர்ந்தார்.

zeevaa

அந்த மரக்கலத்தில் ஏற்கெனவே பயணம் செய்தவன் போல் மிகச் சொந்தமாக கீழ்த்தள நுழைவாயிலை அடைந்து படிகளில் இறங்கிச் சென்ற சீனன், அங்கிருந்த ஓர் அறையிடம் வந்ததும் திரும்பிப் பிக்குவை நோக்கினான். "பிக்கு! இதுதான் அரசகுமாரியின் அறையாயிருக்க வேண்டும். கதவைத் திறக்கச் சொல்லுங்கள்".

பிக்கு இருமுறை கதவைத் தட்ட ராஜகுமாரி கதவைத் திறந்தாள். ராஜகுமாரிக்கும் தனக்கும் இடையே இருந்த பிக்குவைத் தனது கையொன்றால் அகற்றிவிட்டு அறைக்குள் நுழைந்த சூ-சின், "அரசகுமாரி, அமருங்கள்", என்று கூறி அவள் உட்கார்ந்ததும் தலையை நன்றாகக் குனிந்து வணங்கினான்.

"யாரிவர்?" என்று பின்னால் நின்ற பிக்குவை நோக்கிக் கேட்டாள் ராஜகுமாரி. பிக்கு பதில் சொல்லு முன்பு சூ-சின்னே பதில் சொன்னான். "சூ-சின், தங்கள் அடிமை, கலிங்க மகாரத்தினத்தை வணங்குகிறேன்" என்று,

அத்துடன் நிற்கவில்லை. இன்னொரு முறை வணங்கித் தனது திட்டத்தையும் சொன்னான். அதைக் கேட்ட ராஜகுமாரியின் இதயம் மிதமிஞ்சிய திகிலால் படக் படக்கென்று பெரிதாக அடித்துக் கொண்டது. அது அகன்றது இரண்டு வினாடிகளில் அடுத்துத் துளிர்த்தது அவள் கண்களில் எல்லையில்லாத சினம். அவள் கை தலையணையை நோக்கி நகர்ந்து அதன் மறைவிலிருந்த குறுவாளை எடுத்துக் கொண்டது. அடுத்து என்ன நடக்கும் என்று பிக்கு சிந்திப்பதற்குள் அவள் கையிலிருந்த குறுவாள் மின்னல் வேகத்தில் சூ-சின்னை நோக்கிப் பறந்துவிட்டது.

zeevaa

# 11. அழகே சத்துரு

எவரும் எதிர்பாராதவிதமாகக் கலிங்கன் மகள் விளைவித்து விட்ட அதிசாகசச் செயலால் நினைப்பதற்கும் நேரமின்றி ஈடிலாத் திகைப்பிலிருந்த பிக்குவும் மற்றோரும் அதிர்ச்சி சாயலை முகங்களில் படரவிட்டுக்கொண்ட அதே நேரத்தில் மற்றொரு விசித்திரமும் நிகழ்ந்தது. சூ–சின்னின் காலம் அதே நேரத்திலேயே முடிந்துவிட்டதென்று நினைத்த பிக்கு, அரசகுமாரி எறிந்த குறுவாளைத் தனது உடலைச் சற்றே திருப்பி அதன் பிடியை மட்டும் தனது வலது கையால் சூ–சின் பிடித்து விட்டதையும், அதன் கற்கள் பதித்த பிடியை அவன் ஆராய்வதையும் கண்டு முன்னைவிட அதிகப் பீதிக்கும் அதிர்ச்சிக்கும் உள்ளானார். 'இந்த அரக்கன் இனி என்ன செய்வானோ?' என்று உள்ளூரச் சொல்லியும் கொண்டு அரசகுமாரியையும் சூ–சின்னையும் மாறி மாறி நோக்கினார்.

குறுவாள் பயனற்றுவிட்டதைக் கண்ட அரசகுமாரியின் வதனத்தில் ஏமாற்றமும் தெரியவில்லை. அச்சமும் புலனாகவில்லை. மிக அலட்சியமாகத் தனது பஞ்சணையின் முகப்பில் ஒரு காலைத் தொங்கவிட்டு இன்னொரு காலை மடித்து உட்கார்ந்திருந்தாள். சிறிது நேரம் அந்த அறையில் யாரும் பேசாததால் பயங்கர மௌனமே அங்கு குடியிருந்தது. அந்த மௌனத்தை சூ–சின்னே கிழித்து அரசகுமாரியை ஏறெடுத்து நோக்கி, "கலிங்க மகளே! உன்னைப் போலவே இந்தக் குறுவாளும் அழகாயிருக்கிறது. ஒருபுறம் அழகும் இன்னொரு புறம் அபாயமும் கலந்திருக்கிறது இதில். இதன் பிடியிலுள்ள கற்களைக் கொண்டு உலகில் எதையும் வாங்கலாம். ஆனால் இரும்புப் பகுதியோ உயிரைக் குடிக்கும் கூர்மை வாய்ந்தது.

zeevaa




zeevaa

அதுவும் ஓர் அழகுக் கையில் இது........" என்ற சூ-சின் சிறிது பேச்சை நிறுத்தி உதடுகளில் புன்முறுவலைப் படரவிட்டுக் கொண்டான். மேலும் தொடர்ந்து, "இது பெரும் ஆயுதமாகத் திகழும். சூ-சின் ஒருவன் தான் பொது வழிக்கு விலக்கு", என்றும் கூறினான். மறுபடியும் அரசகுமாரியை வணங்கினான்.

அவன் அடிக்கடி தலைவணங்குவது தனக்கு மரியாதை செய்ய அல்லவென்பதையும் பின்னால் வரக்கூடிய பேராபத்திற்கு முன்னோடியென்றும் புரிந்து கொண்ட அரசகுமாரி சட்டென்று விஷயத்துக்கு வந்து, "என்னை என்ன செய்ய உத்தேசம்?" என்று வினவினாள்.

சூ-சின்னின் சின்னஞ்சிறு கண்கள் கன்னப்புடைப்புகளுக்கு மேலிருந்து தூரத்திலுள்ள இரண்டு நட்சத்திரங்களைப் போல மின்னின. அவன் உதடுகளில் துலங்கிய புன்முறுவல் அந்தக் கண்களிலும் விரிய சூ-சின் பேசினான். "மகாரத்தினத்தை வைக்க வேண்டிய இடத்தில் வைக்க உத்தேசம்", என்று. இதைச் சொன்னபோது அவன் சொற்களில் மரியாதை பெரிதும் ஒலித்தது.

அவன் சொற்களைக் கேட்ட பிக்கு, "சூ-சின்! நீ சொல்வது எனக்குப் புரியவில்லை", என்றார் சங்கடம் ஒலித்த குரலில்.

சூ-சின் லேசாக நகைத்தான். அந்த நகைப்பிலும் ஒரு பயங்கரம் இருந்தது. ஆனால் குரல் இன்பமாகவே ஒலித்தது. "பிக்கு! உனக்குப் புரியும். புரியாததைப் போலப் பேசுகிறாய்", என்று கூறினான்.

இந்தச் சமயத்தில் அரசகுமாரி அழைத்தாள் "சூ-சின்!" என்று.

சூ-சின் தனது பார்வையைப் பிக்குவிடமிருந்து அரசகுமாரியை நோக்கித் திருப்பி, "மகாரத்தினம்' உத்தரவிடுங்கள்", என்றான்.

"உத்தரவிட வேண்டியது நானல்ல. உன் பிடியில் நாங்கள் இருக்கிறோம். ஆகையால் உன் எண்ணம்தான் என்ன? சிறை வைப்ப தென்றால் நான் சித்தமாயிக்கிறேன். கொல்வதானால் உயிருக்கு

zeevaa

நான் அஞ்சுபவள் அல்ல. சொல், உன் உத்தேசத்தை," என்று வினவினாள் அரசகுமாரி அலட்சியமான குரலில்.

சூ-சின் மெதுவாகவும் அமைதியுடனும் பதில் சொன்னான். "தங்களை என் மரக்கலத்துக்கு அழைத்துப் போக உத்தேசம். பிறகு உலகத்தின் மிகப் பெரிய அரசுக்குச் சக்கரவர்த்தினியாக்க உத்தேசம்", என்று.

"பதவி ஆசை எனக்கு இல்லை. எந்த சாம்ராஜ்யமும் எனக்குத் தேவையில்லை", என்றாள் அரசகுமாரி கடுமை ஒலித்த குரலில்.

சூ-சின் தனது மீசையின் ஒரு பகுதியைச் சாட்டையின் வாரை இழுப்பது போல் இழுத்துச் சிந்தித்தான் சில விநாடிகள். பிறகு சொன்னான். "அரசகுமாரி! பதவி நாம் தேடிக் கிடைப்பதில்லை. அது தனக்கு வேண்டியவரைத் தானாகச் சென்று அடைகிறது. இப்பொழுது இந்த சூ-சின்னின் மூலமாக, என்ன பதவியென்பதைப் பிறகு சொல்கிறேன். அதற்கு முன்பு இந்த அறையில் இருக்கும் இன்னொரு மகாரத்தினம் வேண்டும். அது மறைந்திருக்கும் இடத்தைச் சொல்லுங்கள்", என்று வினவினான்.

"நீ கேட்பது என்னவென்று புரியவில்லை" என்றாள் கலிங்க மகள்.

இதைக் கேட்ட சூ-சின் முகத்தை வருத்தத்துடன் நீளமாக வைத்துக் கொண்டு முகவாய்க் கட்டையைத் தடவிக் கொண்டான். பிறகு "பிக்கு" என்றழைத்தான் மெதுவாக.

"சூ-சின்!" என்றார் பிக்கு அதிர்ச்சி விலகாத குரலில்.

"சிங்கள மகாராஜா திருடிய மகாரத்தினம் எங்கிருக்கிறது?" என்று கேட்டான் முன்னைவிட மெதுவாக.

"எனக்குத் தெரியாது".

சூ-சின் இரண்டு விரல்களைத் தனது கன்னத்தில் தட்டிக் கொண்டான். "உம்.......! அரசகுமாரிக்குப் புரியவில்லை. உனக்குத்

zeevaa

தெரியவில்லை..... உம்?'' என்று இருமுறை உம் கொட்டினான் சூ-சின், அந்த ஒவ்வொரு 'உம்'மிலும் ஒரு கடுமை இருந்தது.

"சூ-சின்! சத்தியமாக......."

அவரை இடைமறித்த சூ-சின் "பிக்கு! உனக்கும் சத்தியத்துக்கும் எந்தவிதச் சம்பந்தமும் கிடையாது. உனக்கும் அஹிம்சைக்கும் எந்தவித உறவும் கிடையாது. உன்னைப் பௌத்தனென்றும் துறவியென்றும் சொல்லிக் கொள்கிறோம். பிக்கு! பொய்ச் சத்தியத்தைப் போதிசத்வர் அனுமதிக்கவில்லை'', என்று கூறிப் புன்முறுவல் செய்தான்.

பிக்கு சுயநிலை இழந்தார். "நீ மட்டும் என்னவாம்? உலகத்திலேயே பெரிய கொலைகாரன்...." என்று வாசகங்களை அவர் முடிக்கு முன்பாக, 'ஆனால் நான் துறவி வேஷம் போட வில்லை'' என்று சூ-சின் இடைமறித்துப் பேசினான். மேலும் சொன்னான். "பிக்கு! பொழுது இன்னும் சில நாழிகைகளில் விடியும். ஆகையால் சிங்களத்தின் குலதனம் இருக்குமிடத்தைச் சொல்லிவிடு. அல்லது இந்த மகாரத்தினத்தை எனது மரக்கலத்துக்கு அழைத்து வா'', என்று.

''நானே வருகிறேன், என்னைச் சிறைபடுத்திவிடு'', என்றாள் அரசகுமாரி.

''நீங்கள் எனது மரக்கலத்திற்கு வருவது எனக்குப் பெரும் பாக்கியம். ஆனால் உங்களைச் சிறைவைக்கப் போவதில்லை'', உங்களை சககரவர்த்தினியைப் போல் நடத்தப் போகிறேன்" என்று அரசகுமாரியிடம் கூறிவிட்டு, "புரிகிறதா பிக்கு?" என்று வினவினான்.

பிக்குவுக்குப் பேச நா எழாததால் தலையை மட்டும் ஆட்டினார். "ஒன்று அந்த மகாரத்தினம் அல்லது இந்த மகாரத்தினம் இரண்டில் ஒன்றைக் கொண்டுவா!" என்ற சூ-சின், "வருகிறேன் மகாரத்தினம்", என்று கூறி அரசகுமாரிக்கு தலைவணங்கிவிட்டு அந்த அறையை

zeevaa

விட்டு வேகமாக வெளியேறினான். போகும்போது அறைக் கதவை மெதுவாகச் சாத்திச் சென்றான்.

தனிமையில் விடப்பட்ட பிக்குவும் அரசகுமாரியும் ஒருவரை யொருவர் நோக்கினார்கள். "பிக்கு! இவன் என்ன சொல்கிறான்?" என்று வினவினாள் அரசகுமாரி கவலைதொனித்த குரலில்.

"மிகவும் பயங்கரமான திட்டத்தைச் சொல்லிவிட்டுப் போயிருக் கிறான்", என்றார் பிக்கு அச்சக் குரலில்.

"என்ன திட்டம்?"

"புரியவில்லையா உங்களுக்கு?"

"இல்லை," என்றாள் அரசகுமாரி.

"சீன நாட்டுச் சக்கரவர்த்தி பெரும் காமுகன். உலகிலுள்ள அழகிகளையெல்லாம் அடைய ஆசைப்படுகிறார். ஒரு அழகியை கொண்டு வருபவனுக்கு நாட்டில் பதவி உயர்வையும், மிகுந்த செல்வத்தையும் அளிக்கிறார். அந்த சக்கரவர்த்தியிடம் உங்களைச் சேர்க்க விரும்புகிறான் சூ-சின். உங்கள் அழகு ஏற்கனவே பிரசித்தமானது அரசகுமாரி! உங்கள் அழகே உங்களுக்குச் சத்துரு!" என்றார் பிக்கு வேதனையுடன்.

அதுவரை துணிவுடனிருந்த அரசகுமாரியின் துணிவும் அவளை விட்டு அகன்றது. சீன சக்கரவர்த்தியின் அந்தப்புரத்திற்குள் நுழைந்துவிட்டால் பிறகு வெளி உலகத்தைப் பார்ப்பது குதிரைக் கொம்பு என்பதை உணர்ந்ததால் திகிலின் உச்சத்தை அடைந்த அரசகுமாரி. "பிக்கு! நீங்கள் எல்லோரும் என்னைக் கைவிட்டுவிடப் போகிறீர்களா?" என்று கேட்டாள்.

'உயிருள்ளவரை விடமாட்டோம். ஆனால் எங்கள் உயிர் அதிக நாழி உடலில் நிலைக்காது. சூ-சின் மனம் வைத்தால், இப்பொழுது நான் செத்த மாதிரிதான்", என்றார் பிக்கு.

zeevaa

"ஒன்று செய்யலாமே பிக்கு......"

"என்ன அரசகுமாரி?"

"அவனிடம் மகாரத்தினத்தைக் கொடுத்துவிட்டால்?"

"எந்தப் பயனும் ஏற்படாது. மகாரத்தினமும் அவனிடம் இருக்கும். இந்த மரக்கலமும் அவனிடம் இருப்பது போலத்தான். ஆகவே அவன் அதையும் விடமாட்டான். உங்களையும் விடமாட்டான்", என்றார் பிக்கு.

"அப்படியானால் நான் சீனத்தின் அந்தப்புரம் போக வேண்டியது தானா?" சீறினாள் அரசகுமாரி.

"எதையும் இப்பொழுது சொல்ல முடியாது. ஆனால் உங்களைச் சீனத்துக்கு அவன் அனுப்பு முன்பு உங்களை நானே கொன்று விடுவேன்", என்று வேதனை நிரம்பிய குரலில் கூறிய பிக்கு முகத்திலும் வேதனையைப் பகிரங்கமாகப் படரவிட்டுக் கொண்டார்.

அந்தச் சமயத்தில் அறைக் கதவு மெதவாகத் தட்டப் பட்டது. பிக்கு சென்று கதவைத் திறந்தார். நான்கு சீனர்கள் உள்ளே வந்து அரசகுமாரிக்கு ஒரே சமயத்தில் ஒரே விதமாகத் தலை வணங்கி னார்கள். பிறகு இரண்டு பேர் இரண்டு பேராகப் பிரிந்து நின்றார்கள்.

"என்ன இது?" என்று பிக்குவைக் கேட்டாள் அரசகுமாரி.

"தங்களைச் சீன மரக்கலத்துக்கு அழைத்துச் செல்ல வந்திருக் கிறார்கள்" என்றார் பிக்கு.

"நான் போகாவிட்டால்?"

நான்கு சீர்களும் ஒரு மாதிரி தலையை அசைத்தார்கள். "இதற்கு என்ன பொருள்?" என்று கேட்டாள் அரசகுமாரி.

"நீங்களில்லாமல் போக மாட்டார்களாம்", என்று பிக்கு வியாக்கியானம் செய்தார்.

zeevaa

"வரமுடியாதென்று சொல்லிவிடுங்கள்", என்றாள் அரசகுமாரி.

பிக்கு அதைச் *சீன* மொழியில் மொழி பெயர்த்துச் சொன்னார். அவர்களில் ஒரு *சீனன்* ஏதோ சொன்னான். அதற்கப்புறம் பிக்கு தாமதிக்கவில்லை. "அரசகுமாரி! பயனில்லை. புறப்பட்டு விடுங்கள்", என்றார் பிக்கு.

"இல்லாவிட்டால்?" அரசகுமாரி கேட்டான் பிக்குவை.

"உங்களைத் தூக்கிக்கொண்டு போய் விடுவார்கள்", என்றார் பிக்கு.

அரசகுமாரி சிறிது சிந்தித்தாள். பிறகு கட்டிலை விட்டு இறங்கி நான்கு *சீனர்*களையும் பின் தொடர்ந்தாள். "அரசகுமாரி அழிவை நோக்கிச் செல்கிறாள்", என்ற பிக்கு. 'அழகு என்ன ஆபத்தை விளைவிக்கிறது, என்று தமக்குள் சொல்லிக் கொண்டு பின்தொடர்ந்தார்.

சூ–சின் அரசகுமாரியைத் தளத்திலேயே சந்தித்து தலைவணங்கி, "வரவேண்டும் அரசகுமாரி. உங்கள் வரவால் இந்த மரக்கலம் புனிதமாகிறது. தவிர ஒருவர் உயிரும் பிழைத்தது", என்றான்.

"யார் உயிர்?"

"விஜயன் உயிர் கீழே சென்று பாருங்கள்", என்று அடித்தள நுழைவாயிலின் வழியைக் காட்டினான்.

அரசகுமாரி வேகமாக ஓடினாள் அடித்தளத்தை நோக்கி, அங்கு அவள் கண்ட காட்சி அவள் உயிரையே குடித்துவிடும் போலிருந்தது. *சீன* நாற்காலியில் உட்கார வைத்துக் கட்டப்பட்டிருந்த விஜயனின் பிராணன் அவன் உடலில் ஊசலாடிக் கொண்டிருந்தது. தலை தொங்கியிருந்தது. மூர்ச்சமத் மூச்சு பேச்சில்லாமல் குப்புற விழுந்து கிடந்தான். அரசகுமாரி வீறிட்டாள் கப்பலே அதிரும்படியாக.

zeevaa

# 12. விஜயன் உயிர்

உதய காலம் உட்புக முற்பட்டுவிட்ட அந்த நேரத்தில். கடலின் நீர்ப்பரப்பில், ஆழத்தின் காரணமாகவும் காற்று அதிகமாக இல்லாத காரணத்தாலும் அலைகள் மந்தமாக எழும்பி, சீன மரக்கலத்தின் பக்கப் பலகைகளைத் தட்டித் தாளம் போட்டுக் கொண்டிருந்த இன்பச் சூழ்நிலையில், விஜயமகாதேவி வீறிட்ட பேரொலி இன்பச் சூழ்நிலையைப் பெரும் துன்பச் சூழ்நிலையாக மாற்றிவிட்டது. தளத்திலிருந்த ஆதிமல்லனும் அவன் வீரர்களும் அந்தப் பேரொலியால் திகைப்படைந்த போதிலும் பிக்கு மட்டும் எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல் கல்லாய்ச் சமைந்த முகத்துடன் காட்சியளித்தார். அவர் பக்கத்தில் நின்ற கூ-சின்னின் முகத்தில் அரசகுமாரியின் அலறல் சிறிது புன்னகையையே வர வழைத்ததால் அவன் தனது வலது கன்னத்தை இரு விரல்களால் தட்டிக்கொண்டு, "இது சகஜம்" என்று கூறிய வண்ணம் பிக்குவையும் நோக்கினான். "பிக்கு நீ எதற்காக முகத்தைக் கட்டையாக வைத்துக் கொண்டிருக் கிறாய்? இது சகஜம் தானே?" என்று கேட்கவும் செய்தான்.

பிக்குவின் கண்களில் கொடிய பார்வையொன்று தோன்றி மறைந்தது. "எது சகஜம்?" என்று கேட்ட அவர் குரலில் நாராசம் கலந்திருந்தது.

கூ-சின்னின் புன்முறுவல் முன்னைவிட அதிகமாகி முகத்தில் படர்ந்து கன்னங்களை உப்ப வைத்து, கண்களை முன்னைவிட அதிக சின்னவையாக்கியதால், கண்கள் ஏதோ பாதாளத்திலிருந்து பளிச்சிடுவனபோல் தெரிந்தன. அந்தப் பார்வையுடன் கூ-சின், "பிக்கு! உன் உலக அனுபவமெல்லாம் எங்கே போய்விட்டது? சாவை

zeevaa



zeevaa

நீ பார்த்ததில்லையா? பெண்கள் கூக்குரலைக் கேட்டதில்லையா? கொலைகளையும் பற்பல விபரீதங்களையும் பார்த்திருக்கும் நீயா இந்தக் கூக்குரலுக்கு அஞ்சுகிறாய்? பிக்கு, காதலர்களோ கணவர்களோ உயிர்விடும் தருணத்திலும் அடுத்த சிறிது நேரமும் பெண்கள் அழுவதும் அடுத்த சில நாட்களில் சமாதானமாவதும், பிறகு நன்றாகப் பருத்து ஆரோக்கியமாக இருப்பதையும் நீ கவனித்ததில்லையா? சே சே நீ வரவரக் கோழையாகி விட்டாய்" என்று விளக்கம் கொடுத்தான்.

பிக்குவின் முகத்தில் கோபம் கொழுந்துவிட முற்பட்டது. 'சூ-சின்! நீ அத்துமீறிப் போகிறாய். ஒரு பெரிய மன்னனை சிங்களவரால் போற்றப்படும் பெரும் வீரனை, சாக அடித்தால் உண்டாகும் விபரீத பலன்களை நீ உணரவில்லை" என்றார் பிக்கு.

சூ-சின் அவரைச் சர்வ சாதாரணமாகப் பார்த்து, "என்ன விபரீத பலன் பிக்கு?" என்று வினவினான்.

"சீனத்துக்கும் சிங்களத்துக்கும் பகை ஏற்படும்", என்றார் பிக்கு.

சூ-சின் நகைத்தான். "சிங்கத்துக்கும் சுண்டெலிக்கும் பகையுண்டாகும், பிறகு?' என்றான் நகைப்பின் ஊடே.

பிக்கு அவனைக் கூர்ந்து நோக்கிவிட்டுச் சொன்னார். "சூ-சின்! நீ இன்னும் கலிங்கத்தின் கரையிலிருந்து அதிக தூரம் போய்விட வில்லை. அடுத்து வருவது சோழ நாட்டுக்கரை" என்று.

சூ-சின் அப்பொழுதுதான் எழத் துவங்கிய செக்கச் செவேலென்ற அக்னிப் பந்தான பகலவனைக் கவனித்தான். பிறகு கரைப் பக்கம் நோக்கிக் கண்களால் ஆராய்ந்தான். அடுத்து ஆகாயத்தை ஒரு முறைபார்த்து விரல் விட்டு எண்ணினான். அரையோஜனை *தூரம் வந்திருக்கிறோம்", என்று முடிவில் சொன்னான்.

---

* அரையோஜனை : இன்றைய கணக்குகள் எட்டுமைல்.
Yo jana is equal to 16 miles as per 'Rajavalia' of Ceylon

zeevaa

பிக்கு சிறிதும் பிரமித்தாரில்லை அவன் சொற்களால். அவன் கணக்கில் எப்பொழுதும் பிசகு இருக்காது என்பதைப் பல சமயங்களில் அவர் அறிந்தே இருந்ததால் கேட்டார். "அது சரி சூ-சின் இந்த அரை யோஜனை தாண்டிக் கலிங்க மரக் கலங்களோ சோழ மரக்கலங்களோ வர முடியாதென்று நினைக்கிறாயா?" என்று.

சூ-சின்னின் விரல்கள் மீண்டும் அவன் கன்னத்தில் தாளம் போட்டன. அவன் தீவிர சிந்தனைகளில் திளைத்து விட்டதை நிரூபிக்க. சிறிது சிந்தித்துவிட்டுச் சூ-சின் பேசத்தொடங்கி, "ஆம் பிக்கு! கலிங்க மரக்கலங்கள் நம்மைச் சீக்கிரமாக அணுக முடியும். ஆனால் நாம் அவற்றுக்கு அஞ்ச வேண்டியதில்லை. கலிங்கம் இன்னும் கடலில் வலிமையடையவில்லை. வணிக மரக்கலங்களே பெரும்பாலும் அவர்களிடம் இருக்கின்றன. இருக்கும் நாலைந்து போர்க்கலங்களும் கவைக்கு உதவாதவை. அவற்றில் நான்கு மரக்கலங்களை ஒரே சமயத்தில் இந்த அக்ரமந்திரம் அழித்துவிடும். ஆனால் சோழர் கதைவேறு. வலுவான கடற்படை இருக்கிறது. அப்படியே சோழரிடம் இந்தக் கலிங்கன் மகள் அகப்பட்டுக் கொண்டால் என்ன வித்தியாசம்? சீனச் சக்கரவர்த்தியின் பிரம் மாண்டமான அரண்மனைக்குப் பதில் சோழநாட்டுத் தொற்றல் அரண்மனை கிடைக்கும். சீனச்சக்கரவர்த்தியிடம் இருப்பதற்குப் பதில் சோழனுக்கு மனையாட்டியாவாள். மனையாட்டியோ ஆசை நாயகியோ திட்டமாகச் சொல்ல முடியாது", என்றான்.

அவன் சொன்னதில் நியாயம் நிரம்ப இருந்ததைப் புரிந்து கொண்டார் பிக்கு? ஆனால் விஜயன் உடலில் சிறிது உயிர் இருக்கும் வரையில் இந்தச் சூ. சின்னின் உயிரும் அரைக்காசு பெறாதென்பதை உணர்ந்த பிக்கு.

"விஜயன் உயிரோடிருக்கும் வரை இந்தப் பிரச்சினை எங்கிருந்து வருகிறது?" என்று வினவினார்.

zeevaa

சூ-சின்னின் முகத்தில் மந்தகாசம் விரிந்தது. "உண்மையான பேச்சு-பிக்கு. விஜயன் உயிரை நீடிக்க விடுவது பிசகு. ஆகையால் நீயே அதை முடித்துவிடு. பாவம், பெரியவீரன்! அவனைக் கொல்ல எனக்கு மனம் வரவில்லை. அந்தப் பணியை நீயே முடித்து விடு", என்றான் சூ-சின்.

அதிர்ச்சியுற்று நின்றார் பிக்கு. அந்தச் சமயத்தில் மேலும் இருமுறை வீறிட்டாள் அரசகுமாரி "சூ-சின்! இனி நம் இருவருக்கும் அந்தத் தொல்லையில்லை. நீ முதலில் கொடுத்த அடியிலேயே விஜயன் தீர்ந்து விட்டான்", என்று கூறிக் கண் கலங்கினார்.

அதைக் கேட்ட தளத்திலுள்ள மற்ற மாலுமிகள் கலங்கினர். கீழ் தளத்திலிருந்து நான்கைந்து சீனர்கள் மேல் தளத்திற்கு ஓடி வந்தனர். அவர்கள் கண்களில் பெரும் பீதி இருந்தது. "என்ன விஷயம்?" என்று சூ-சின் வினவினான்.

சீனமொழியில் அவர்கள் மளமளவென்று ஏதோ சொன்னார்கள். இம்முறை பேரதிர்ச்சி அடைந்தான் சூ-சின் நிலைமை தனது கைகளை விட்டு மீறிவிடும் என்ற உணர்ச்சி ஏற்பட்டதால் சிந்தனையில் இறங்கினான். சீன மாலுமிகளைக் கீழே போகும்படி சைகை செய்ய அவர்கள் வந்த வேகத்தில் குடுகுடுவென்று கீழே ஓடிவிட்டார்கள். அவர்கள் போனதும், "பிக்கு! இந்த அரசகுமாரி சூ-சின்னை குறைத்து மதிப்பிடுகிறார்களாம். விஜயனும் அந்த மூர்சமதும் இருந்த அறைக் கதவைத் தாளிட்டு விட்டாளாம். உள்ளே இருந்த விளக்கிலிருந்து சிறுபந்தம் ஒன்றைக் கொளுத்தி விட்டதாகவும் நாம் உடனடியாகப் பணிய மறுத்தால் கப்பலைக் கொளுத்தி விடுவதாகவும் உள்ளே இருந்தே சத்தம் போடுகிறாளாம்", என்றான்.

அப்பொழுதும் அவன் எந்தவிதப் பதட்டத்தையும் காட்டவில்லை. "பிக்கு! நீ போய் அவளுக்கு விஷயத்தை எடுத்துச் சொல். இந்த மரக்கலத்தைப் பற்ற வைத்தால் அவளும் விஜயனும் எல்லோரும்

zeevaa

எரிந்து சாம்பலாகி விடுவார்கள். நானும் எனது வீரர்களும் உன் மரக்கலத்துக்குத் தாவி இந்த மரக்கலத்தை எரியும்படி விட்டு விடுவோம். அப்பொழுதும் எனக்குச் சிங்கள விஜயன் திருடிய மகாரத்தினம் கிடைக்கும். இந்தப் பெண் ரத்தினம் போவதால் எனக்கு அதிக நஷ்டமில்லை" என்றான் சூ–சின்.

"அரசகுமாரி கதவைத் திறந்து இந்தக் கப்பலுக்குத் தீ வைக்காவிட்டால் நீ என்ன கொடுப்பாய் அவளுக்கு?" என்று பிக்கு வினவினார்.

விஜயன் சடலத்தை அவள் எடுத்துப் போய் அவர்கள் மதப்படி அவள் நாட்டிலேயே அடக்கம் செய்யலாம்", என்று சூ–சின் சொன்னான்.

"சரி, கேட்டுப் பார்க்கிறேன்", என்று சொல்லி பிக்கு கீழ்தளத்தின் அறை வாயிலுக்குச் சென்று படிகளில் இறங்கினார்.

ஆனால் விஜயன் சடலம் அவர் நினைத்தபடி தூக்கிப்போகும் நிலையில் இல்லை. அது நன்றாகச் சீனத்து மஞ்சத்தில் எழுந்து உட்கார்ந்திருந்தது. அதன் தலைக்கு அரசகுமாரியின் பணைத்த மார்பு தலையணையாயிருந்தது. அந்தத் தலையணையை அழுத்திய வண்ணம் குனிந்த திரிலோகசுந்தரி "நீங்கள் உயிருடன் இருப்பீர்களென்று நான் ஓதிர்பார்க்கவில்லை", என்றாள்.

"ஏன், சீன சக்கரவர்த்தினியின் பதவிபோய்விட்டதென்ற ஏமாற்றமா?" என்று விஜயன் கேட்டான்.

அரசகுமாரி சிந்தித்தாள். தனது மார்பை அவன் தலையில் நன்றாக அழுத்திய வண்ணம். அவள் அறைக்கு வந்தபோது அவன் தலை தொங்கிக் கொண்டிருந்தது : அதைக்கண்டு அவள் வீறிட்டது : பிறகு தலை தானாக நிமிர்ந்து அவளை மீண்டும் பார்த்தது; பிறகு தன்னை அறை மூலையிலிருந்து நீர்கொண்டு வரச் சைகை செய்தது; நீரைத்

zeevaa

தெளித்த பின் அவன் கண்கள் சிறிது சுரணை அடைந்தது : மேலும் அவன் கைகளைத்தான் அவிழ்த்து விட்டதும் அவன் தன்னை மேலும் அலறும்படிக் கூறியது- இத்தனையும் அவள் சிந்தையில் வலம் வந்தன. அந்தச் சமயத்தில் மூர்சமதும் சிறிது சுரணை காட்டவே அவன் முகத்தில் நீர் அடித்து எழுப்பினாள் அரசகுமாரி.

சுரணை வந்த மூர்சமத் அந்த அறையைச் சுற்று முற்றும் நோக்கினான். தனது ராட்சஸக் கண்களால், கதவை உடைத்துவிடக் கதவை நோக்கி இரண்டு அடி எடுத்து வைத்தான். அவனை தனது கையால் அசையாதிருக்கும் படி சைகை செய்த விஜயன், "சுந்தரி! அடி மூர்சமதுக்குத்தான் அதிகம். என்னை அடித்ததும் நான் வேண்டுமென்றே விழுந்துவிட்டேன். கூ-சின் என்னைக் கட்டியதும் தலையைத் தொங்கவிட்டேன். நான் குற்றுயிருடன் இருப்பதாக நினைத்து கூ-சின் உன்னை அழைத்துவரச் சென்று விட்டான். எல்லாவற்றையும் அவன் காலம் பார்த்துச் செய்திருக்கிறான். அவன் மயக்கத்திலிருந்த தனது மாலுமிகள் எழும் காலத்தைக் கணக் கிட்டிருக்கிறான். அதையொட்டித் தனது திட்டத்தைத் தீட்டி யிருக்கிறான். இப்பொழுது மாலுமிகள் வந்தால் இந்தக் கப்பலைக் கொளுத்தி விடுவதாகக் கூறிவிடு" என்றும் சொன்னான்.

அவன் திட்டப்படி மற்ற விஷயங்கள் நடந்தன. அவள் மிரட்டலைக் கேட்ட சீன மாலுமிகள் தளத்துக்கு ஓடினர்.

கூ. சின். அனுப்ப, பிக்குவும் வந்தார். அறைக்கு வெளியே நின்றபடி, அரசகுமாரி!" என்று அழைத்தார்.

அரசகுமாரியின் விம்மல் சத்தம் அவர் காதில் விழுந்தது. அவர் உள்ளம் வெடிக்கும் நிலைக்கு வந்தது. "அரசகுமாரி நிதானித்துக் கொள்ளுங்கள். கூ-சின் ஒரு செய்தியை அனுப்பியிருக்கிறான் கேளுங்கள்", என்று தொடங்கினார்.

"என்ன செய்தி?" விம்மலுக்கு இடையே கேட்டாள் அரசகுமாரி.

zeevaa

"நாம் விஜயன் உடலை எடுத்து நமது நாட்டுக்குப் போக சூ-சின் அனுமதித்திருக்கிறான்" என்றார் பிக்கு.

"சத்தியமாக அனுமதிப்பானா?" என்று அரசகுமாரி கேட்டாள்.

"அனுமதிப்பான்" என்ற பிக்கு சட்டென்று யோசனை செய்து, "அரசகுமாரி! சற்றுக் கதவைத் திறங்கள், நான் சிங்கள் மன்னனைப் பார்க்கிறேன்", என்றார்.

அரசகுமாரி மெதுவாகக் கதவைத் திறந்தாள். பிக்கு பிரமை பிடித்து நின்றார். உள்ளே சென்று கதவை மூடினார். "இத்தனையும் நடிப்பா அரசகுமாரி?" என்றார் பிக்கு.

பதில் விஜயனிடமிருந்து வந்தது. "ஆம் பிக்கு, விஜயன் உயிர் அத்தனை லேசில் போகாது", என்றான் விஜயன்.

பிக்கு அரசகுமாரியை நோக்கி "அரசகுமாரி! இத்தனையும் உங்கள் நடிப்பு என்பதை நான் அறியவில்லையே?" என்றார்.

"நான் அறிவேன்", என்ற குரல் அந்த அறையிலிருந்த நால்வரையும் திரும்பச் செய்தது. அந்த அறைக்கு வேறொரு வழி இருந்ததையும் அந்த உட்கதவைத் திறந்து கொண்டு சூ-சின் கொடிய புன்முறுவலுடன் நிற்பதையும் நால்வரும் கண்டனர். அவனுக்குப் பின்னால் நான்கு சீனர்கள் கட்டாரி ஏந்தி நின்றிருந்தார்கள். அதே சமயத்தில் அறையின் முன்கதவும் திறக்கப்பட்டது. அங்கும் ஆயுத பாணிகளான நான்கு சீனர்கள் நின்றிருந்தார்கள். அந்த நிலையில் சூ-சின் சொன்னான்: "இந்தச் சூ-சின்னை அத்தனை சுலபமாக யாரும் ஏமாற்றிவிட முடியாது", என்று அவன் குரலில் ஏளனம், குரோதம் இரண்டுமே மேலோங்கி நின்றன. அரசகுமாரியை இழுத்துச் செல்லுங்கள்!" என்ற கட்டளையும் பிறந்தது அந்தக் கொடிய உதடுகளிலிருந்து.

zeevaa

## 13. நிபந்தனைச் சுதந்திரம்

அரசகுமாரியை இழுத்துச் செல்லும்படி சூ-சின் உத்தரவிட்டானே யொழிய, அந்த உத்தரவு உடனடியாக நிறைவேறவில்லை. விஜயன் வீசிய சொற்களின் விளைவாக, "இந்த அறைக்குள் அடியெடுத்து வைக்கும் யாரும் உடனடியாகக் கொல்லப்படுவார்கள்", என்று விஜயன் சொற்களை உதிர்த்ததன்றி, தனது சராயில் உட்புறமாகத் தைக்கப்பட்டுள்ள நீள அறையிலிருந்து மெல்லிய வாளொன்றையும் வலது கையில் எடுத்துக் கொண்டான். சூ-சின்னின் கட்டளையால் திடுக்கிட்ட திரிலோகசுந்தரியின் தோளையும் இடது கையால் ஆறுதலாக அழுத்திப்பிடித்தவண்ணம் சொன்னான்: "சூ-சின், உன்னை மகாவீரனென்று நினைத்தேன். ஆனால் போர் செய்து காரியத்தைச் சாதிக்க முடியாது, வஞ்சகத்தால் வெற்றி கொள்ள முயலும் கயவனென்று இப்பொழுதுதான் உணர்ந்தேன். இப்பொழுது எச்சரிக்கிறேன். எங்களை எங்கள் மரக்கலத்துக்குப் போகவிடு. உனக்கு எந்தவிதத் தீங்கும் வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று.

அவன் பேச்சு சூ-சின்னுக்கு மட்டுமின்றிப் பிக்குவுக்கும் வியப்பை அளிக்கவே, "விஜயமகாப் பிரபு! சூ-சின் இப்பொழுது கூட நமது பிடியில் இல்லை. இந்த வினாடியில் கூட அவன் நம்மை அழித்து விடலாம். ஆகையால் நீங்கள் சற்று நிதானப்படுவது நல்லது" என்று அவர் சொன்னதன்றி "சூ-சின், சிங்கள மன்னர் சொல்வதை நீ அதிகமாகப் பொருட்படுத்த வேண்டாம். நீ விளைவித்து விட்ட நிலையில், அரசகுமாரியை இழுத்துச் செல்லும்படி நீ பிறப்பித்த

zeevaa

உத்தரவைக் கேட்டதில் யாரும் நிதானத்தை இழக்க முடியும்", என்று கூ–சின்னுக்கும் கூறினார்.

கூ–சின்னின் முகத்தில் எந்தவித மாறுதலும் இல்லை. அவன் பழையபடி புன்சிரிப்பை இதழ்களில் தவழவிட்ட வண்ணம், "பிக்கு! நீ சொல்வதிலும் உண்மை இருக்கிறது. ஆகையால் இப்பொழுதும் விட்டுக் கொடுக்கச் சித்தமாயிக்கிறேன். சிங்களத்தின் குலதனம் என்னிடம் வரட்டும். விஜயனும் அவன் மகாதேவியும் சுதந்திரமாகச் செல்ல அனுமதிக்கிறேன்", என்று கூறினான் பிக்குவை நோக்கி.

அவர்கள் உரையாடலைச் சிறிது நிதானத்துடன் விஜயன் கேட்டுக் கொண்டிருந்தாலும், மூர்சமத் அடியோடு நிதானத்தை இழந்து தனது பெரும் கைகளை ஆவேசத்துடன் பிசைந்து கொண்டான். உக்கிரப் பெருவிழிகளைத் தானிருந்த வாயிற்படிக்கு அப்பால் கட்டாரிகளை ஏந்தி நின்ற சீனர்கள் மீது நாட்டினான். அவன் சினம் கட்டுக் கடங்காமல் போவதைக் கண்ட பிக்கு. அடுத்து என்ன நிகழ்ந்து விடுமோ என்று நடுங்கினார். விஜயனும் மூர்சமதின் கோபா வேசத்தைக் கண்டு, "சமத்! பதறாதே. முதலில் கூ–சின்னுடன் பேசிப் பார்ப்போம்", என்று அவனை அடக்கிவிட்டு, "கூ–சின்! உன் விருப்பத்துக்கு நான் இணங்காவிட்டால் என்ன செய்வதாக உத்தேசம்?" என்று வினவினான்.

"உங்கள் நால்வரையும் இங்கேயே வெட்டிப் போடுவேன். எனக்குப் பின்பும் அந்த வாயிற்படிக்கு அப்பாலும் நிற்கும் சீன வீரர்களின் கோடரிகள் உங்கள் கழுத்துக்களை நோக்கி வீசப்படும். நான்கு தலைகளும் இந்த அறையிலேயே உருளும்", என்ற கூ–சின், தனது முகத்தில் போலி வருத்தத்தைப் படரவிட்டுக் கொண்டான். "உங்கள் தலைகள் உருளுவதைப் பற்றி நான் கவலைப் படவில்லை. ஆனால் அரசகுமாரியின் அழகிய கழுத்தில் கோடரி பாய்ந்து, அது பாதி தொங்கி, அதிலிருந்து செங்குருதி பாய்வதை நினைக்க எனக்கு என் உள்ளம் கூட நடுங்குகிறது", என்று விளைவை நன்றாக விவரிக்கவும் செய்தான்.

zeevaa

விஜயன் அத்துடன் உரையாடலை முடிக்கவிடவில்லை. "அப்படிச் செய்தால் அரசகுமாரியை எப்படிச் சீனச் சக்கரவர்த்தியிடம் அழைத்துச் செல்வாய்?" என்று வினவினான்.

இப்படி அவன் அனாவசியமாகப் பேச்சை வளர்த்துவதைத் திரிலோகசுந்தரி விரும்பாததால், "இதென்ன பைத்தியக்காரப் பேச்சு? எந்தச் சீன சக்கரவர்த்தியாயிருந்தாலும் சரி, என்னை அணுகினால் அவன் கழுத்தை முறித்துப் போடுவேனென்பது உங்களுக்குத் தெரியாது? தவிர, நீங்கள் பேசும் பேச்சும் எனக்குப் பிடிக்கவில்லை. சீன சக்கரவர்த்தியிடம் என்னை அழைத்துப் போவதாக இந்தச் சீன முட்டாள் உளறினால் நீங்களும் அதைப் பற்றிப் பேச வேண்டுமா? உங்களுக்குப் புத்தியில்லை?" என்று சீற்றம் மிகுந்த சொற்களைக் கொட்டினாள்.

கூ-சின்னின் முகத்தில் மகிழ்ச்சிச் சாயை அதிகமாகப் படர்ந்து, "இப்பொழுது புரிந்து கொண்டீர்களா அரசகுமாரி, இந்த விஜயன் எத்தனை மானங்கெட்டவன் என்று?" என வினவினான் சொற்களிலும் மகிழ்ச்சியின் சாயை உதிர, அத்துடன் விஜயனையும் நோக்கி, "விஜயா! அரசகுமாரியைப் பற்றி இனி பேசாதே. மகாரத்தினத்தைக் கொடுத்து விடுதலை அடையும் வழியைப் பார்", என்றான்.

விஜயன் மிக மெதுவாக வினவினான், "விடுதலை அடைய வழியைப் பார்க்க வேண்டியது யார்?" என்று.

"இதிலென்ன சந்தேகம்? நீ தான்", என்றான் கூ-சின்.

"தவறு, நீ தான் அதற்கு முயல வேண்டும்", என்ற விஜயன் மூர்சமதிடம் கண்ணால் ஏதோ சைகை காட்டி விட்டு, "கூ-சின்! பேசாமல் சரணடைந்து விடு. உன்னை நான் கொல்வதில்லை. உன்னைப் போல் நான் கருணையற்றவனல்ல", என்றான்.

zeevaa

சூ-சின் முகத்தில் வியப்பும் சந்தேகமும் இணைந்த சாயை படர்ந்தது. "வீசுங்கள் கோடரிகளை", என்று சீறிய அவன், எதிர் வாசற்படிக்கு அப்பாலிருந்த வீரர்களை நோக்கிக் கூறிவிட்டு, "நீங்கள் இந்த நால்வரையும் சூழ்ந்து கொள்ளுங்கள்", என்று பின்னாலிருந்த சீனருக்கு உத்தரவிட்டு, தனது இடையிலிருந்து வாளையும் உருவிக் கொண்டான்.

அவன் உத்தரவிட்ட அதே சமயத்தில் அவன் முற்றும் எதிர்பாராத துரித நிகழ்ச்சிகள் துவங்கின. மூர்சமத் சட்டென்று ஒருமுறை தன்னிடமிருந்த கதவை மூடித் திறந்து முன்னால் வந்த சீனனைத் தனது இரு கைகளாலும் தூக்கி அவனுக்கு அப்பால் நின்ற சீனர்கள் மீது வீசினான். அப்படி வீசப்பட்ட அந்தச் சீனன் அந்தரத்தில் கிளம்புவதற்கு முன்பும் அப்புறமும் வீசப்பட்ட கோடரிகள் அவன் மீது பாய்ந்ததால், சீனன் அலறி விழுந்தான் கீழே. அடுத்து, மூர்சமத் தன்னை நெருங்கிய ஒரு சீனன் தலைப் பின்னலைப் பிடித்து சுற்றுச் சுற்றி அவனது கையிலிருந்த கோடரியை எடுத்துக் கொண்டு அறைப் படிக்குக் கீழே இறங்கி விட்டான். அவனது அசுர உருவத்தையும், அவன் கோடரியை வீசிய வேகத்தையும் கண்ட சீனர்கள் பின்னடைந்து எட்டச் சுற்றி வந்து அவனைச் சூழ முற்பட்டனர்.

மூர்சமத் இரண்டு சீனர்களைக் கையிலிருந்த கோடரியால் வெட்டிச் சட்டென்று குனிந்து அவர்கள் கோடரிகளையும் எடுத்துக் கொண்டான். இரண்டு கோடரிகளை இருகைகளிலும் பிடித்துக் கொண்டும் ஒரு கோடரியைப் பல்லில் கடித்துக் கொண்டும் வேகமாகச் சுழன்றான் அடித்தளத்தில், கையிலிருந்த இரு கோடாரிகளையும் வீசிய பின்பு பல்லில் கடித்திருந்த கோடரியைக் கையில் எடுத்துக் கொண்டு ஏதோ மிருகம் கூச்சலிடுவதைப் போன்று பயங்கர ஒலியைக் கிளப்பினான். அந்தச் சமயத்தில், "நிறுத்துங்கள் சண்டையை", என்று பிக்கு கூச்சலிட அடித்தளக் கூடத்துச் சண்டை சட்டென்று நின்றது. மூர்சமத் பின்னாலேயே நகர்ந்து அறைக்குள்

zeevaa

வந்து நிலைமையை நோக்கியவன் தனது கண்களை நம்பாமல் நின்றான்.

அறையின் அந்தரங்க வழியின் வாயிற்படியில் சூ-சின் நின்றிருந்தான். அவனுக்குப் பின்னால் மோக்ஷரும் காமரும் நின்றிருந்தார்கள். சூ-சின் விஜயனை நோக்கி, "விஜயா! நீ அதிர்ஷ்டசாலி", என்று கூறினான்.

விஜயன் பதிலுக்குத் தலையை அசைத்தான் ஆமோதிக்கும் வகையில், "இந்த ரகசிய வழியில் வந்தவன் பின் கதவைத் தாளிட்டிருக்க வேண்டும்", என்றான்.

"உண்மை", என்றான் சூ-சின்.

ஏதும் புரியாத மூர்சமத் வினவினான். "நீங்கள் சொல்வது ஏதும் விளங்கவில்லை எனக்கு", என்று. "பிக்கு! ஏன் சண்டையை நிறுத்தினீர்கள்?" என்றும் வினவினான்.

பிக்கு விஜயனையும் நோக்கி மூர்சமதையும் நோக்கிவிட்டுச் சொன்னார். "மூர்சமத்! எந்தக் கயவனுக்கும் ஏதோ ஒரு விதத்தில் தோல்வி ஏற்படுகிறது. சூ-சின் இந்த வழியாக நான்கு சீனர்களுடன் வந்தானே தவிர, துரிதமாக வேலையை முடிக்கவில்லை. வீணாக மிரட்டிக் கொண்டும் பேசிக் கொண்டும் நின்றான். ஆகவே அவகாசம் பெற விஜயனும் பேச்சுக் கொடுத்தான். அந்தச் சமயத்தில் சூ-சின்னின் பின்னாலிருந்த வீரர்களுக்குப் பின்னால் காமரும் மோக்ஷரும் தோன்றினார்கள். அவர்கள் வரவை மறைக்க விஜயன் மேலும் தர்க்கத்தில் இறங்கினான். முதலில் பின்னாலிருந்த இரு சீனர்களின் கழுத்தை மோக்ஷர் நெறிக்க, காமர் ஓசைப்படாமல் அவர்களைப் பின்னால் இழுத்துக் கொண்டார். அடுத்து, மற்றும் இரு சீனரும் இப்படியே மறைந்தார்கள். எந்தச் சத்தமும் இன்றி இந்தப் பணி நடந்தது", என்று பிக்கு விளக்கிக் கொண்டிருக்கையில் மோக்ஷர் சொன்னார்: "இம்மாதிரி ஓசைப்படாமல் கழுத்தை முறிக்கும் வித்தையைச் சொல்லிக் கொடுத்தவர் என் குருநாதர் தான்", என்று.

zeevaa

"யாரது குருநாதர்?" என்று சமத் கேட்டான்.

"இவர்தான்," என்று மிகுந்த மரியாதையுடன் சூ-சின்னைச் சுட்டிக் காட்டிய மோக்ஷர் பின்னால் நின்றபடியே தலையும் வணங்கினார்.

சூ-சின் முகத்தில் இகழ்ச்சியைக் காட்டினான். "நீட்டிய மரத்திலேயே கூர் பார்த்துவிட்டாய்", என்று இகழ்ச்சியுடன் சொல்லவும் செய்தான்.

"இல்லை", என்றார் மோக்ஷர்.

"என்ன இல்லை?" என்று வினவினான் சூ-சின்.

"மரத்தின் கிளைகளில் தான் கூர் பார்த்தேன். மரத்தில் கூர் பார்க்கவில்லை. அது பாக்கியிருக்கிறது. பிரதான மரம் தாங்களல்லவா? உத்தரவிடுங்கள் குருநாதரே! தங்கள் கழுத்தையும் சற்றுப் பார்க்கிறேன்", என்று மோக்ஷர், சூ-சின்னின் கழுத்திலும் தமது இருகைகளையும் வைத்தார்.

"வேண்டாம் மோக்ஷரே! அவனை விட்டுவிடுங்கள்", என்று கூறிய விஜயன், "பிக்கு, நமது வீரர்களை அழைத்து மூர்சமதால் காயம்பட்ட சீனர்களைத் திரட்டுங்கள். தர்மருக்கு மருத்துவம் தெரியும். அவரை விட்டு அவர்களைக் கவனிக்கச் சொல்லுங்கள்", என்ற விஜயன், "சூ-சின்! வா எனது மரக்கலத்துக்குப் போவோம்", என்று கூறி, "மூர்சமத்! சூ-சின்னை அழைத்து வா", என்று கூறிவிட்டு அந்த அறையிலிருந்து தளத்துக்குச் செல்லும் படிகளில் அரசகுமாரி பின் தொடர ஏறிச் சென்றான்.

பிக்கு இருந்த இடத்தை விட்டு அசையவில்லை. "சூ-சின்! நீ சொல்லிக் கொடுத்த கொலை முறைகள் உன் தலையிலேயே வந்து விடிந்தன. இனி மேலாவது சீன சக்கரவர்த்திக்குப் பெண் பிடிக்கும் அலுவலை விட்டு நல்ல வழியில் பிழைக்கப் பார்", என்று அறிவுரை கூறினார்.

zeevaa

மூர்சமதும் ஏதும் பேசவில்லை. சூ-சின்னைச் சரேலென்று தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு படிகளில் ஏறிச் சென்றான். தளத்திலிருந்த சீனர்களும் ஆதிமல்லன் வீரர்களும் மூர்சமதின் தோளில் சூ-சின் சவாரி செய்வதைக் கண்டு வியந்தாலும் ஏதும் சொல்லவோ செய்யவோ அஞ்சினர். மூர்சமதின் பெருவிழிகளில் உதிர்ந்த கொலைப் பார்வை அவர்களை இருந்த இடத்திலேயே தேக்கிவிட்டது.

மூர்சமத் ஏதோ குழந்தையைத் தூக்குவதுபோல் சூ-சின்னைத் தூக்கிக் கொண்டு பக்கத்துக் கப்பலில் தாவிக் குதித்து விஜயன் அறைக்கு அவனை எடுத்துச் சென்றான். அங்கு மஞ்சத்தில் அமர்ந்திருந்த விஜயன் முன்பு அவனை நிறுத்தினான். அப்படி எதிரே நின்ற சூ-சின்னை நோக்கி விஜயன் சொன்னான். "சூ-சின்! இந்த மரக்கலத்திலிருக்கும் வரை எனக்கு எதிராக எந்த அலுவலிலும் ஈடுபடுவதில்லை என்று உன் சக்கரவர்த்தி மீது சத்தியம் செய்தால் இங்கு நீ சுதந்திரமாக உலாவலாம். எந்தக் கட்டுப்பாடும் உனக்கு இருக்காது. இன்றிலிருந்து எட்டாவது நாள் நீ உன் கப்பலிலேயே உனது நாடு செல்லவும் அனுமதி தருவேன். என்ன சொல்கிறாய்?" என்று வினவினான்.

"மாலையில் பதில் சொல்லுகிறேன்," என்றான் சூ-சின் சிறிது சிந்தனைக்குப் பிறகு.

ஆனால் மாலையில் அவன் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தான். தளத்தில் நின்ற அவன், விஜயனின் மரக்கலம் தென்கிழக்குத் திசையில் ஓடுவதையும் தனது மரக்கலமும் அதைத் தொடருவதையும் கண்டான். அதனால் திகைத்து நின்றான். மரக்கலங்கள் இரண்டுமே ஆபத்தை நோக்கி ஓடுவதைக் கண்டான். விஜயனுக்கு ஒரு வேளை பைத்தியம் பிடித்திருக்குமோ என்று கூட நினைத்தான். அடுத்த கப்பலில் நின்றிருந்த பிக்கு. சூ-சின்னை நோக்கி நகைத்தான்.

zeevaa

"சரி, இது பிக்குவின் வேலையாகத்தானிருக்க வேண்டும். பிக்கு துரோகியா," என்று தன்னை வினவிக் கொண்ட சூ-சின், தன் வாழ்க்கையில் முதன் முதலாகக் கல்வரமும் இணையிலாப் பீதியும் கொண்டான். விஜயன் நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொள்வதைத் தவிரப் பிழைக்க வேறு வழியில்லையென்பதையும் புரிந்து கொண்டான்.




zeevaa

# 14. ஹரண்டு மான்

பாரதத்தின் பூர்வ சமுத்திரம்* மாலை வேளையில் பார்ப்பதற்கு மிக ரமணீயமாக இருந்தாலும் கூ-சின்னின் சிந்தனையில் எந்த வித ரமணீயமும் இல்லை. காலை முதல் திடீரென மாறுபட்டுவிட்ட தனது நிலையை அணு அணுவாகச் சிந்தித்துப் பார்த்து மனிதனுக்கும் அதிர்ஷ்டத்துக்கும் ஏதோ சம்பந்தமிருக்கின்றதென்று நினைத்தான் கூ-சின். விஜயனுடைய கப்பல் தளத்தில் நடமாடிக் கொண்டே, மாலை நேர அஸ்தமனச் சிவப்பு சிறிதளவு கடலில் பெரிய நீர்ப்பரப்பின் மீது தவழ்ந்து அதைப் பொன்னிறமாக அடித்த வித்தையையோ, அந்தச் சமயத்தில் வீசிய மென்மைக் காற்றின் குளிர்ந்த சுகத்தையோ கூ-சின்னால் ரசிக்க முடியவில்லை. மனமும் இணைந்தாலொழிய ரசனைக்கு இடமில்லை என்பதைச் சந்தேகமறப் புரிந்து கொண்ட கூ-சின்னின் சிந்தனை மீண்டும் பகல் நிகழ்ச்சிகளை நோக்கிச் சுற்றிச் சுற்றி வட்டமிடலாயிற்று.

விஜயனும் மூர்சமதும் கூடத் தனது வலையில் விழுந்து தத்தளிக்கும் புழுக்களாகி விட்டார்களென்று தான் நினைத்த சமயத்தில் நடந்த விபரீதங்கள் அவன் கண் முன் தோன்றவே அவன் முகத்தில் வியப்பும் அச்சமும் கலந்த சாயை பரவலாயிற்று. மயக்கமாயிருந்த மூர்சமத் மயக்கம் தெளிந்து ராட்சசனாகி விட்டதையும் அவன் தனது வீரனொருவனை குழந்தைபோல் தூக்கி மற்ற வீரர்களின் மீது வீசியதையும், சமத் மீது வீசப்பட்ட கோடரிகள் அந்தச் சீன வீரன் மீது பாய்ந்து அவன் மரண ஒலி இட்டதையும், அந்த

---

* வங்கக் கடலின் புராதனப் பெயர்

zeevaa



zeevaa

ஒலியைவிடப் பயங்கரமாக மிருகம் போல் கூக்குரலிட்ட மூர்சமத் தனது வீரரில் இன்னும் சிலரை வெட்டி விட்டதையும் எண்ணிய கூ–சின், அந்த ராட்சசனைத்தான் சாதாரணமாக எடை போட்டது தவறு என்ற முடிவுக்கு வந்தான்.

போதாக்குறைக்குக் காமரும் மோக்ஷரும் ஓசைப் படாமல் தனக்குப் பின்னாலிருந்த ரகசிய வழியாக வந்து தனது மெய்க் காவலர் நால்வரையும் கழுத்தைப் பிடித்து நெறித்து இழுத்துச் சென்று விட்டதையும் நினைத்த கூ–சின், 'அவர்களுக்கு எப்படி எனது மரக்கலத்தின் ரகசிய வழி தெரிந்தது?' என்று ஒரு வினாவையும் தனக்குள் எழுப்பிக் கொண்டான். ஆனாலும் விடை கண்டானில்லை.

அப்படி அவன் சிந்தனையிலிருந்த சமயத்தில் தான் அவனது கப்பலில் இருந்த பிக்கு அவனைப் பார்த்து நகைத்தார். அந்த நகைப்பை ரசிக்காத கூ–சின் திரும்பிய போது அவன் பக்கத்தில் விரிந்த குழலுடனும் வெறி பிடித்த கண்களுடனும் நின்ற சிற்பி நாகா நந்தனைக் கண்டு. "நீ எதற்காக இங்கு வந்தாய்?" என்று வினவினான்.

அவன் முதலில் பதில் சொல்லவில்லை. "ஹி ஹி!" என்று நகைக்க மட்டும் செய்தான்.

"இங்கென்ன வேலை உனக்கு?" என்று இரண்டாவது முறை கேள்வியை வீசினான் கூ–சின்.

அவன் வெறிக் கண்கள் சிரிப்பை உதிர்த்தன. உதடுகள், "இந்தக் கப்பலின் தற்காலத் தலைவன்," என்ற சொற்களை உதிர்த்தன.

'கூ–சின்னால் அந்தப் பைத்தியக்காரச் சிற்பி கப்பல் தலைவனா யிருக்க முடியுமென்பதை நம்ப முடியாததால், "நீயா! தலைவனா!" என்று வியப்பு நிறைந்த சொற்களால் வினவினான்.

"ஆம், ஹு ஹு!" என்று நகைத்தான் நாகா நந்தன்.

"உனக்குக் கப்பல் கட்டத் தெரியும். செலுத்துவதைப் பற்றி ஏதாவது தெரியுமா?" என்று வினவினான் கூ–சின். பதிலுக்கு 'ஹி ஹி' என்று

zeevaa

நகைத்தான் அந்த வெறியன். "எனக்கா! கப்பலைச் செலுத்தவா? தெரியுமா என்கிறாயா?" என்று கேட்ட அவன் சூ-சின்னின் கழுத்தை தனது இரு கைகளாலும் பிடித்து அழுத்த முற்பட்டான்.

அந்த மனிதனின் கையழுத்தல் பிசாசின் கையழுத்தல் போலிருந்ததால் சூசின்னின் விழிகள் பிதுங்கலாயின. "என்னையா கேட்டாய் கப்பல் விடத் தெரியுமா என்று? நான் வேறு, கப்பல் வேறா? நான் இல்லாவிட்டால் கப்பல் ஏது?" என்று வெறியுடன் சீறிய அந்த மனிதன் சூ-சின்னின் கழுத்தை விடவில்லை.

அதுவரைப் பொறுத்திருந்த சூ-சின் அந்த வெறியன் கைகளின் அழுத்தலால் மூச்சுத் திணறியதால் தனது நீண்ட உறையிலிருந்த மெல்லிய கத்தியை எடுத்து வெறியன் வயிற்றில் குத்தப் போனான். ஆனால் அந்தப் பைத்தியத்துக்கு அதுவும் தெரிந்திருக்க வேண்டும். சூ-சின் கழுத்திலிருந்த கைகளில் ஒன்று விலகிக் கீழே தனது வயிற்றுக்கருகில் வந்து விட்ட கையைப் பிடித்து நெறிக்கவே சூ-சின்னின் கூரிய கத்தி தளத்தில் விழுந்து 'கிளிங்' என்று ஒலி எழுப்பியது. அதே சமயத்தில் சூ-சின் பலமாகக் கீழே தள்ளப்பட்டு அவன் மார்பில் அந்த வெறியன் உட்கார்ந்து சூ-சின்னின் கத்தியை எடுத்து அவனைத் தீர்த்துவிடக் கையை ஓங்கினான்.

அந்தக் கையை மட்டும் பின்னால் வந்த விஜயன் பார்த்திரா விட்டால் ஒரு பெரிய சீனக் கடல் வீரன் வாழ்க்கை அன்றே முடிந்திருக்கும். அவன் கையை இறுகப்பிடித்த விஜயன், "சிற்பி! எழுந்திரு" என்று கடுமையுடன் கூறவே சிற்பி எழுந்திருந்தான்.

மெதுவாக முக்கி முனகிக்கொண்டு சூ-சின்னும் எழுந்து தனது தலைப்பின்னலையும் நீளத் தொங்குமீசையையும் சரி செய்து கொண்டான். அப்பொழுதுதான் விஜயன் சொன்னான். சூ-சின்! இவர் தான் சிம்மபுரத்துச் சிற்பி. இவர் இல்லாவிட்டால் கப்பல் கட்டும் வித்தை பாரதத்திலிருந்து மறைந்துவிடும். கப்பலின் சகல நுணுக்கங்களும் இவருக்குத் தெரியும்" என்று.

zeevaa

சூ-சின்னுக்கு அதுவரை புரியாத பல விஷயங்கள் புரிந்தன. சிம்மபுரச் சிற்பியை அவன் ஏற்கனவே அறிந்திருந்தான். இருப்பினும் இத்தனை வெறி சிற்பிக்கு உண்டு என்பதை அவன் அன்றுவரை அறியாத காரணத்தால் சிறிது கலங்கவே செய்தான். சிற்பி மரக்கல சூக்ஷமங்களை அறிந்திருந்ததால் தனது மரக்கலத்தின் ரகசிய வழியை அறிந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். அப்படி அந்த ஒரு வழி தெரிந்ததால் தான் விஜயனை அழிக்க இட்டதிட்டம் சிதறிப் போய்விட்தென்ற விஷயமும் அவன் புத்தியில் தெள்ளெனத் தெரிந்தது.

மற்றவற்றை அவன் மிகச் சாதாரணமாக ஊகித்து விட்டான். தனது சீனர்கள் பலரைக் கொன்ற பிறகு தனது மரக்கலத்தை ஆதிமல்லன் ஆட்களால் விஜயன் நிரப்பி இருப்பானென்றும், விஜயன் மரக் கலத்தில் சாதாரணப் பணிகளுக்குச் சீனரும் ஆதிமல்லன் ஆட்களும் நியமிக்கப்பட்டிருப்பார்களென்றும் ஊகிப்பது ஒரு பிரமாதமாக இல்லை சூசினனுக்கு. அப்படி வீரர்கள் இரு கப்பலிலும் சரிபாதியாக இருந்து தலைமையும் விஜயனிடமும் பிக்குவிடமும் இருந்ததால் அவர்களைத்தான் எதுவும் செய்ய முடியாதென்றும் முடிவுக்கு வந்து இனி அடங்கிப் போவது தான் உத்தமம் என்று தீர்மானமும் செய்து கொண்டான்.

இந்த நினைப்புகளால் முகத்தில் புன்முறுவலைப் படரவிட்டுக் கொண்டு, "தாங்கள் தான் உலகப் பிரசித்தி பெற்ற கப்பல் சிற்பி என்பது தெரியாது. மன்னிக்க வேண்டும்." என்று பெரும் பொய்யைச் சொல்லித் தலைதாழ்த்தினான்.

சிற்பியின் முகத்தில் சாந்தம் நிலவியது. விஜயனையும் நோக்கி சூ-சின்னையும் நோக்கிச் சாந்தமாக மந்தகாசம் செய்தான். "சீனனே உன் பெயரென்ன? என்று வினவவும் செய்தான்.

"சூ-சின்", என்றான் விஜயன்.

zeevaa

சிற்பியின் முகம் சற்றே சுளித்தது தீவிர சிந்தனைக்கு அடையாளமாக, "சூ–சின்! எங்கோ கேட்டிருக்கிறேன். இந்தப் பெயரை," என்று அவன் உதடுகள் முணுமுணுத்தன. "முதல் நாள் நீ இங்கு வந்து என்னை முறைத்துப் பார்த்தாயே!" என்றும் சொன்னான். ஆனால் அவன் நினைவுக்கு மேற்கொண்டு எதுவும் வராததால் தலையை இருபுறமும் ஆட்டினான்.

அதற்குமேல் அவனைச் சிந்திக்க விடவில்லை விஜயன், "சிற்பி மரக்கலம் தென் கிழக்கு நோக்கி ஓடுகிறது"!

"ஆமாம்," என்றான் சிற்பி ஆகாயத்தை நோக்கிவிட்டு.

மெல்ல மாலை மறைந்து இருள் சூழத் துவங்கிவிட்ட நேரம் அது. ஏதேதோ ஓரிரண்டு நட்சத்திரங்கள் தோன்றிவிட்ட சமயம், 'அதோ ஒருவன், பாலபக்தன்! உசத்தியாக உட்கார்ந்திருக்கிறான் உலகுக்கெல்லாம் வழிகாட்ட" என்று கூறிய சிற்பி அந்தத் திக்கில் தலை வணங்கினான். "துருவன் அங்கிருந்தால் இந்த மரக்கலம் ஓடுவது தென்கிழக்குதான்!" என்றான்.

அதே சமயத்தில் அடுத்த கப்பலில் இருந்து பிக்கு தமது கையிலிருந்த தந்தப் பேழையைத் திறந்து நோக்கி விட்டுத் தலையை அசைத்துக் கொண்டார். அதைக் கண்ட சூ–சின் கூவினான். "ஐயோ! அது என் பேழை, திசை காட்டும் கருவி அதற்குள் இருக்கிறது" என்று.

சிற்பி அவனைத் திரும்பி நோக்கி, "துருவன் உள்ள போது அந்தக் கருவி எதற்கு?" என்று கேட்டார்.

"பகலில் துருவன் தெரிய மாட்டான்", என்றான் சூ–சின்.

"சூரியன் தெரிவான். அவன் நமது நிழலைத் தளத்தில் வீசுவான். அதன் சாயலைக் கண்டு திசை சொல்லலாம்", என்று விளக்கிய சிற்பி, "மதியீனர்களுக்குத்தான் யந்திரம் வேண்டும்", என்று ஏளனமும் செய்தான்.

zeevaa

அதற்கு விடையேதும் சொல்லவில்லை சூ-சின் விஜயனை நோக்கி, "தென் கிழக்கில் மரக்கலங்களைச் செலுத்த உத்தரவிட்டது யார்?" என்று வினவினான்.

"சிற்பி", என்றான் விஜயன்.

"இந்தப் பைத்தியமா?"

"என்ன சொன்னாய்?" என்று கூவிக்கொண்டு சூ-சின் மீது பாய்ந்தான் சிற்பி.

சூ-சின் அவனிடமிருந்து தப்பத் தளத்தில் ஓடினான். சிற்பியும் துரத்தினான்.

அந்தச் சமயத்தில், "சிற்பி!" என்ற விஜயனின் அதிகாரக் குரல் சிற்பியின் ஓட்டத்தைத் தேக்கியது. சிற்பி திரும்பி நோக்கவே, அவனைக் கீழே செல்லும்படி விஜயன் சைகை காட்ட சிற்பி கீழே செல்லும் படிகளில் தடதடவென்று இறங்கி ஓடினான்.

"அவனைப் பைத்தியமென்று சொன்னால் அவன் கொதித்து எழுகிறான். நீங்கள் அவனிடம் பேச்சுக் கொடுத்திருக்கக் கூடாது", என்று சூ-சின்னையும் கடிந்து கொண்ட விஜயன், "நிபந்தனைக்கு ஒப்புக் கொள்கிறீர்களா?" என்றான்.

"ஒப்புக் கொள்கிறேன். வேறு வழியில்லை. தவிர உங்கள் நிபந்தனை அதிக நாள் நீடிக்காது", என்று கூறிய சூ-சின் "இந்த மரக்கலத்திலிருக்கும் வரையில் உங்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையிலும் இறங்கமாட்டேன், என் சக்கரவர்த்தியின் மீது ஆணை," என்று ஆணையும் இட்டான்.

அந்த ஆணையை அவன் செய்த பின்பு ஆதிமல்லனை அழைத்து, "ஆதிமல்லா! இந்தக் கப்பலில் இருக்கும் வரை இவர் நமது விருந்தினர். என்னை நடத்துவதைப் போல் இவரையும் நடத்த வேண்டும்," என்று உத்தரவிட்டான்.

உத்தரவு ஆதிமல்லனுக்குத் திருப்தியில்லை என்பதை அவன் முகம் காட்டியது. ஆனால் விஜயன் கட்டளையை மீற முடியாததால் தலை தாழ்த்தி, "கட்டளை", என்றான் ஆதிமல்லன்.

zeevaa

அப்பொழுது சூ-சின் கேட்டான். "சிங்கள மன்னரே! இந்தக் கப்பலைத் தென்கிழக்கில் செலுத்துகிறீரே! விளைவு தெரியுமா?" என்று.

"என்ன விளைவு சூ-சின்?" விஜயன் வினவினான்.

"தென்கிழக்கில் ஹண்டுமான் *தீவுகள் இருக்கின்றன", என்று சுட்டிக் காட்டினான் சூ-சின்.

"ஆம், அங்குதான் ஹநுமான் இருந்ததாகக் கூறப்படுகிறது. மலாய் நாட்டு மொழியில் ஹநுமானை ஹண்டுமான் என்கிறார்கள்", என்று விஜயன் ஆமோதித்தான்.

"தமிழில் அதன் பழையபெயர் தீமைத் தீவு. *என்ற சூ-சின், "சிங்கள பூபதி! அதற்குத் தீமைத் தீவு என்று தமிழர்கள் பெயர் சூட்டியதற்கு காரணம் அதில் மனிதர்களைத் தின்னும் அரக்கர்களிருக் கிறார்கள் என்பது தான். அங்கு போனால் நம்மைத் தின்ன ஒரு கூட்டமே இருக்கிறது. ஹண்டுமான் கிஷ்கிந்தையல்ல. ராட்சஸ பூமி. முதலில் மரக்கலங்களின் திசையைத் திருப்புங்கள். அழிவை நாடிச் செல்ல வேண்டாம்", என்று கவலை நிறைந்த குரலில் பேசினான் சூ-சின்.

ஆனால் விஜயன் அதற்கு ஒப்பவில்லை. ஆபத்தை நாடியே சென்றான். தென்கிழக்கை நோக்கி ஓடின இரு மரக்கலங்களும். கொடிய ஆபத்தைத் தானாகவே வலிய விஜயன் நாடுவதை எண்ணித் திகைத்தான் சூ-சின். அதைப்பற்றி அன்றிரவு விஜயமகாதேவியிடமும் பிரஸ்தாபித்தான்.

---

* Andaman, represents Handuman in Malay form of Hanuman treating the Islands as the abode of Hindu Mythological Monkey People "Imperia; Gazetter of India" - Andaman & Nicobar Islands-1909 Edition.

Also known as " Timaittivu" abode of cannibals- Tanjore Inscription 1050 A.D - The Andaman & Nicobar Islands-Local Gazetter 1908. Issued at Calcutta page 13.

zeevaa

# 15. கடலும் சூ-சினும்

கலிங்கத்து மரக்கலத்தில் இருக்கும் வரையில் விஜயனுக்கு எதிராக எந்த நடவடிக்கையிலும் இறங்குவதில்லையென விஜயனுக்கு வாக்களித்த பிறகு மிகுந்த அடக்கத்தையும் கட்டுப் பாட்டையும் சூ–சின் காட்டினாலும், ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் சிங்களத்து மன்னனின் முடிவை ஏற்க அவனால் முடியவில்லை. ஹண்டுமான் தீவுகளில் இருக்கும் தீமையைக் குறிப்பிட்டும்கூட, சிங்கள பூபதி அந்தப் பக்கமே கப்பலைச் செலுத்துவதைக் கண்ட சூ–சின் சிறிது அச்சமே அடைந்ததும் தவிர அதைப் பற்றி அன்றிரவு விஜயமகாதேவியிடமும் பிரஸ்தாபித்தான்.

சீனச் சக்கரவர்த்தி மீது ஆணையிட்ட பிறகு ஆழ்ந்த சிந்தனையுடன் கப்பல் தளத்திலேயே அவன் நடமாடிக் கொண்டிருந்த சமயம் அது. வானம் பற்பல நக்ஷத்திர வைரங்களுடன் பெரிய கறுப்புக் கம்பளியைப் போல் அற்புதமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது. அதையும் எதிரே தெரிந்த கறுத்த சமுத்திரத்தையும் கண்டு பிரமிப்புடன் நின்று கொண்டிருந்த சூ–சின் தூரத்தே சில சுறாக்கள் நீர் மட்டத்தில் எழுந்து அலைகளில் புரண்டு மூழ்கு வதையும், நக்ஷத்திரங்களின் சிறு ஒளியிலும் அலைகள் அங்கங்கு மெல்ல மெல்லப் பளிச்சிடும் விந்தையையும் கண்டு" இந்த உலகத்தைக் காண்பவன் தரை உலகத்தைக் கண்டு எப்படி நேசிக்க முடியும்?" என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான் சற்று உரக்கவே. அப்பொழுது அவன் பின்னால் களுக்கென்று சிரிப்பொலி யொன்று கேட்கவே திரும்பியவன் திகைத்து, "விஜயமகாதேவி!

zeevaa



zeevaa

தாங்களா!" என்று மரியாதையும் வியப்பும் நிறைந்த குரலில் வினவினான்.

"ஆம்," என்ற அரசகுமாரி, "என்ன, நீங்களே தனிமையில் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று விசாரிக்கவும் செய்தாள்.

கூ–சின் சற்றே திரும்பி அரசகுமாரியின் கண்களை நன்றாகவே சந்தித்தான். "தேவி! சில சமயங்களில் பிறருடன் பேசுவதைவிட நமக்கு நாமே பேசிக் கொள்வதில் அர்த்தமிருக்கிறது", என்று சொல்லவும் செய்தான். அவள் கண்களிலிருந்து தன் கண்களைத் திருப்பாமலேயே.

அவள் கண்களும் மிகுந்த துணிவுடனும் ஓரளவு அசட்டை யுடனும் அந்தக் கடலோடியின் கண்களைச் சந்திக்கவே செய்தன. சந்தித்த பின்பும் அகலாமல் நின்றன. அந்த நிலையில் அவளும் கேட்டாள் : "சுயமாகப் பேசிக் கொள்கிறவர்கள் இருவகை. ஒன்று தத்துவ சாஸ்திரிகள். இரண்டு பித்தர்கள். இவை இரண்டில் நீங்கள் எந்த வகை?" என்று.

கூ–சின் தனது சின்னஞ்சிறு கண்களை விஷமமாகச் சிமிட்டி, "இரண்டிலும் சிறிது இந்த அடியவனிடம் உண்டு", என்றான்.

சுந்தரி கலகலவென வாய்விட்டு நகைத்தாள். "இரண்டும் எப்படி சாத்தியம்? தத்துவ சாஸ்திரி திடமனத்தவன். பித்தன் சலன மனத்தவன்", என்று சுட்டிக் காட்டினாள் நகைப்பின் ஊடே.

கூ–சின் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. கடலை நோக்கி னான் நீண்ட நேரம். பிறகு அமைதியும் ஆழமும் நிறைந்த குரலில் பேச முற்பட்டு, "தேவி! இந்தக் கடலை நான் நேசிக்கிறேன். குழந்தை முதல் இந்தக் கடலிலேயே பெரும்பாலும் வளர்ந்தேன். சிறு வயதில் எனது தாய் இறந்து விட்டதால் எனது தந்தையே எனக்குத் தாயும் ஆனார். ஆகவே சீன நாட்டின் பெரிய கடலோடியான அவர் செல்லுமிடங்களிற்கெல்லாம் கப்பலில் என்னையும் அழைத்துச்

zeevaa

சென்றார். எனக்காக மரக்கலத்தில் ஒரு செவிலித்தாயையும் அழைத்துப் போனார். நான் கடலின் நீர்ப்பரப்பில் தந்தையின் அரவணைப்பில் வளர்ந்தேன். கப்பல் தரையில் தங்கிய இடங்களிலெல்லாம் எனக்கு நீச்சல் போதித்தார் என் தந்தை, நான் வெகு சீக்கிரம் நீந்தப் பழகிக் கொண்டேன். நல்ல வலுவாகவும் வளர்ந்தேன். எனக்கு மேற்கொண்டு கடலின் சூட்சுமங்களை அறிந்து கடலில் நீந்தவும் அதன் ஆபத்துக்களைச் சமாளிக்கவும் கற்றுக் கொடுத்தார். கப்பல் போய்க் கொண்டிருக்கும் போது என்னைத் திடீரென இரு மாலுமிகளை விட்டுக் கடலில் வீசச் செய்வார். நான் வெகு துரிதமாக நீந்திக் கப்பலுக்கு வருவதைக் கண்டு என்னை அணைத்துக் கொள்வார். இப்படி நான் பதினெட்டு வயதை அடைந்ததும் என் தந்தையிடம் கப்பல் போர் பயின்றேன். கப்பல் வகைகளையும் அவற்றின் நுட்பங்களையும் தந்தை கற்றுக் கொடுத்தார். வெகு சீக்கிரம் நான் கப்பல் போரில் திறமை பெற்று பல போர்களில் வெற்றியும் அடைந்தேன். என் திறமையைப் பற்றிக் கேள்விப்பட்ட சீனத்துச் சக்கரவர்த்தி அவரது கடற்படையில் ஒரு மரக்கலத்தின் உபதலைவனாக நியமித்தார். அந்த மரக்கலத்துக்கு என் தந்தையைத் தலைவனாக்கினார். எனது இருபதாவது வயதில் என் தந்தை மரணமடைந்தார். பிறகு அதே கப்பலுக்கு நானே தலைவனானேன். இருபத்தைந்து வயதுக்குள் பல மரக்கலங்களை வெற்றி கொண்டேன். கைப்பற்றிய பொருள்களையெல்லாம் பொன்னும் மணியுமாகக் கொண்டு சக்கரவர்த்தியின் காலடியில் கொட்டினேன். சக்கரவர்த்தி எனக்குப் பல விருதுகள் கொடுத்தார். அவற்றில் ஒன்று சீனத் திமிங்கிலம் என்பது. இந்தப் பெயரைக் கேட்டவர்கள் எல்லோரும் நடுங்கினார்கள். என்னிடம் கடற்பயிற்சி பெறப் பலர் என்னை அடைந்தார்கள். பல நாட்டு வீரர்களும் என்னைக் குருவாக மேற்கொண்டார்கள். அவர்களில் மூவர் பாரதத்தைச் சேர்ந்தவர்கள் பிக்கு, மோக்ஷர், காமர் இந்த மூவரும் அப்படி என்னிடம் வந்தவர்கள், தாமாக வந்தவர்களல்ல. என்னால்

zeevaa

கடற் போர்களில் சிறையான மாலுமிகள். அவர்கள் போர்த் திறமையைக் கண்டு நானே அவர்களைக் கொல்லாமல் விட்டேன்", என்று தனது வாழ்க்கைச் சரிதத்தை விளக்கிக் கொண்டு போன சூ-சின் சற்றுப் பேச்சை நிறுத்தினான்.

அவன் விசித்திரக் கதை அரசகுமாரியை பிரமிக்க வைத்தது. உலகத்தின் ஒரு மகா வீரன் முன்பு தான் நிற்பதை உணர்ந்து கொண்டதால் பிரமை தட்டும் கண்களுடன் அவனை நோக்கி, "மேற்கொண்டு சொல்லுங்கள்", என்று தூண்டினாள் அவனை.

சூ-சின் தனது கதையைத் தொடர்ந்தான் : "பிக்கு முதலில் பிக்ஷுவாயில்லை. மாமிசங்களையும் மதுவையும் பெருமிதமாக உண்ணும் ராட்சஸனாயிருந்தார். அவர் உடலின் கட்டுக் கோப்பைப் பார்த்து நானே பிரமித்து அவரை எனது கப்பலின் உதவித் தலைவனாக நியமித்துக் கொண்டேன். மரக்கலப் போரின் சூட்சுமங்களையெல்லாம் சொல்லி வைத்தேன். இப்பொழுது அந்தக் கலையில் என்னைவிட ஓரளவு உயர்ந்தவர் பிக்கு. ஆனால் காமரும், மோக்ஷரும் என்னிடம் பிடிபட்டபோது சாதாரண மாலுமிகளா யிருந்தனர். அவ்விருவரும் நல்ல மல்லர்களாக இருந்ததைப் பார்த்து, சீனத்தின் புது அடிகளை அவர்களுக்குச் சொல்லி வைத்தேன். இந்த மூவரின் சேர்க்கையால் என் மரக்கலம் மிகவும் பயன் பெற்றது. பல போர்களில் வெற்றி அடைந்தேன். மோக்ஷரும் காமரும் நெறித்த கழுத்துக்கள் பல. பிக்கு சூறையாடிய கப்பல்கள் பல. இப்படி எனக்கு உறுதுணையாக இருந்த மூவரையும் சீனத்துக்கு அழைத்துச் செல்ல முயன்றேன். அவர்கள் இஷ்டப்படவில்லை. மூவரும் பாரத நாட்டுக்குச் செல்லவே பிடிவாதம் பிடித்தார்கள். அவர்களை அதிகமாகக் கட்டாயப்படுத்த இஷ்டமில்லாததால் மூவரையும் ஒரு படகில் ஏற்றிப் பாரதத்துக்குச் செல்ல அனுமதியளித்தேன்.

"இது நடந்து இருபது ஆண்டுகள் ஆகின்றன. மீண்டும் இப்பொழுது தான் சந்திக்கிறேன். ஆனால் பற்பல துறைமுகங்களில் இவர்கள்

zeevaa

பெயர் மட்டும் பிரசித்தியாயிருந்தது. கலிங்கத்தில் இரு கொலை களைச் சாமியார்கள் செய்திருப்பதாகச் செய்தி வந்தது. சிங்களத்தில் ஒரு கடலாடும் பிக்கு இருக்கிறார் என்றும் கேள்விப் பட்டேன். அவர்களைப் பார்க்க ஆசையும் கொண்டேன். அந்த ஆசை இப்பொழுதுதான் பூர்த்தியாயிற்று. ஆனால் என்ன மாறுபடான சந்திப்பு! மூவரையும் எனது விரோதிகளாகச் சந்தித்தேன். அதுவும் திறமை மிக்க, எனது போர் முறைகளை முற்றும் அறிந்த விரோதி களாகச் சந்தித்தேன். என் மனம் நெகிழ்ந்தது. ஆகையால் அவர்கள் என்னிடம் சிக்கியதும் அவர்களை நான் கொல்லவில்லை. கொல்லாததன் பயனை இப்பொழுது அனுபவிக்கிறேன்........."

இதைச் சொன்ன சூ-சின் சிறிது பேச்சை நிறுத்திப் பெருமூச் செறிந்தான். பிறகு கடலை நோக்கினான். "தேவி! நிலத்தில் தான் இந்தக் கபட மாறுதல்கள். கடலில் இல்லை. நிலம் அவ்வப்பொழுது அந்தந்த அரசர்களால் கைப்பற்றப்பட்டுக் கூறு போடப்படுகிறது. கடலில் அப்படி எதுவும் கிடையாது. யாரும் இதைக் கூறு போட முடியாது. இதன் பரப்புக்கு வரம்பு போட முடியாது. இது எழும்பும் அசுர அலைகள் வீரமற்ற எல்லோரையும் விழுங்கும். அழிவிலும் ஆக்கத்திலும் இது பேதம் காட்டுவது கிடையாது. இதன் அடியில் இருக்கும் மாணிக்கம். முத்து, வைர வைடூரியங்கள் முழுகத் தெரிந்த, ஆழத்தை அணுகத் துணிவுள்ள அனைவருக்கும் சொந்தம். இங்கு தேவை துணிவு, வீரம், கோழைத்தனத்துக்கு இடம் கிடையாது. அதனால் இதை நான் என் உயிரைப் போல் நேசிக்கிறேன்", என்று சொன்ன சூ-சின்னும் முகத்தில் உணர்ச்சிப் பெருக்கைக் காட்டினான்.

அந்த மகா வீரனை உற்று நோக்கிய திரிலோக சுந்தரியின் அழகுக் கண்களில் அனுதாபம் நிரம்பி நின்றது. இவனிடம் கொலை உணர்ச்சி மட்டும் இல்லாதிருந்தால் இவன் எத்தனை பெரிய வீரனாகச் சரித்திரத்தில் இடம் பெறுவான் என்று உள்ளூர நினைத்தாள். அந்த அனுதாபத்துடன் கேட்டாள். "கடல் வீரரே! இவ்வளவு சிறந்த வீரரான

zeevaa

நீர் எதற்காக என்னையும் மகாரத்தினத்தையும் சீன சக்கரவர்த்தி யிடம் கொண்டு செல்லல் தீர்மானித்தீர்"? என்று.

"தேவி! சீனச் சக்கரவர்த்தியை நாங்கள் தெய்வமாக மதிக்கி றோம். உங்களைப் போன்ற ஒரு அழகியை அவர் தேவதைக்கு மேலான ஸ்தானத்தில் வைப்பார். மகாரத்தினத்தைப் பெறப் பல தலைமுறைகளாக சீனச்சக்கரவர்த்தி குடும்பம் ஆசைப்பட்டு வருகிறது. அதற்குப் பணிபுரிவது எங்கள் கடமையாகிறது" என்றான் சூ-சின்.

"அதற்காகத் திருடுவீர்களா?" என்று கேட்டாள் சுந்தரி.

"திருடமாட்டோம். கைப்பற்றுவோம்" என்றான் சூ-சின்.

"அதாவது கொள்ளையடிப்பீர்கள்? கப்பல்களைசூறையாடு வீர்கள்?" என்று சிறிது ஆத்திரத்துடன் கேட்டாள் சுந்தரி.

"அதுகடலின் தர்மம். அரசகடமையை நிறைவேற்ற உங்கள் நாட்டிலேயே நான்கு முறைகளைச் சொல்லியிருக்கிறார்கள்".

"சாம தான பேத தண்டமா?"

"ஆம், ஆனால் அத்துடன் இரண்டைச் சேர்த்துக் கொள்ளுங்கள். கொலை கொள்ளை இவையும் தவறல்ல. ஒரு நல்லதைச் செய்யச் சில்லறைத் தீமைகளைச் செய்வது தவறல்ல. இதுவும் உங்கள் தருமத்தில் இருக்கிறது".

சூ-சின்னின் வேதாந்தத்தைக் கேட்ட சுந்தரி நகைத்தாள். "இது அசுர வேதாந்தம்" என்றும் கூறினாள் நகைப்பின் ஊடே.

இதைக் கேட்டதும் சூ-சின்னின் முகத்தில் திகில் உணர்ச்சி மலர்ந்தது. 'அசுரன் என்றால் அரக்கன் தானே?" என்று வினவினான் சூ-சின் திகிலின் ஊடே.

"ஆம்" என்றாள் அரசகுமாரி.

zeevaa

"அப்படியானால் அதை நோக்கித் தான் இந்த மரக்கலம் ஓடுகிறது. ஹண்டுமான் தீவுகளில் இப்பொழுது அனுமார் இனம் இல்லை. மனிதர்களைத் தின்னும் அரக்க ஜாதி இருக்கிறது. அங்குதான் போகிறது இந்தக் கப்பல். அங்கு உன்னையும் என்னையும் நெருப்பில் கூட வாட்டமாட்டார்கள். பச்சையாகவே கடித்துத் தின்பார்கள். உன் அழகிய கன்னங்கள் அவர்களுக்கு மாம்பழம். மார்பு பனம்பழம், மற்றச் சதைகள் இனிப்புப் பண்டங்கள், எலும்பு முறுக்கு, அத்தனையும் உண்பார்கள் நினைக்கவும் எனக்கு அச்சமாயிருக்கிறது! அரசகுமாரி, தயவு செய்து இந்த விஷப்பரிட்சை வேண்டாமென்று சிங்கள மகாராஜாவிடம் சொல்லுங்கள்'' என்று பரிதாபமாகக் கேட்டான்.

அரசகுமாரி சிந்தனைக் கடலில் ஆழ்ந்தாள். "சொல்லிப் பார்க்கிறேன்" என்றாள் முடிவில்.

ஆனால் அவன் என்ன சொல்லியும் விஜயன் கேட்கவில்லை. 'ஹண்டுமானுக்குப் போவதைத் தவிர வேறு வழியில்லை", என்று திட்டமாகச் சொல்லி விட்டான்.

இப்படி அவன் பிடிவாதம் செய்ததால் கப்பல்களிரண்டும் ஆபத்தை நோக்கியே ஓடின. ஆனால் அந்த ஆபத்தை நிவர்த்திக்க சூ-சின் ஒரு முடிவுக்கு வந்தான். மிகுந்த தந்திரத்துடன் வேலையும் செய்யத் தொடங்கினான். அதன் வீபரித பலனுக்கு ஒரே வாரத்தில் விஜயனும் ஆளானான். அப்படியொரு நிலை ஏற்படுமென்பதை விஜயன் கனவிலும் நினைத்தானில்லை.

zeevaa

# 16. இடமும் மடமும்

கருணையும் கபடமும் மோதும்போது கபடம் தான் முதலில் வெற்றியடைகிறது. தர்மமும் அதர்மமும் மோதும் போதும் இதே கதைதான். இறுதி வெற்றி கருணைக்கும் தர்மத்துக்கும் தான் என்று அற நூல்கள் போதிக்கின்றன. ஆனால் அந்த இறுதி வெற்றி எத்தனை தூரத்திலிருக்கிறது? அதை அடைவதற்குள் மனிதனுக்கு எத்தனை சோதனைகள்! எத்தனை அபாயங்கள்! இடையில் ஏற்படும் இம்சைகளால் தர்மமும் கருணையும் அவசியம் தானா என்று மனிதன் சிந்திக்கும் நேரம் பல முறை வருகிறது. இது மனித வாழ்க்கை கண்ட உண்மை, ஆனால் அந்த இடைக்கால இம்சை களுக்காக ஸ்திரப்ரக்ஞனாக இருப்பவன். அதாவது உறுதி மனத்தவன் சளைப்பதில்லை. ஒரே நெறியில் தான் நிற்கிறான். அத்தகைய மனப்பக்குவமிருந்ததால் தான் விஜயனும் திரிலோக சுந்தரியின் யோசனையைக் காதில் வாங்க மறுத்தான்.

விஜயன் தனது கப்பலின் அறையில் தனிமையில் உட்கார்ந்து சிந்தனையில் ஆழ்ந்திருந்த சமயத்தில் தான் திரிலோக சுந்தரி சூ—சின் சொன்ன செய்தியை அவனிடம் கொண்டு சென்றாள். கட்டிலில் அமர்ந்து அனாயாசமாகக் காலை ஆட்டிக் கொண்டிருந்த விஜயன் சிந்தனை வசப்பட்டிருந்தானாதலால், அறைக்குள் சுந்தரி வந்ததையோ, மெதுவாகக் கதவைச் சாத்தியதையோ அவன் கவனிக்காததன் விளைவாக சுந்தரி சிறிது சினமும் கொண்டாள். அவன் எதிரில் போய் நின்று அவனைக் கூர்ந்து நோக்கி மெள்ளத்தரையில் காலை உதைத்தும் கூட அவன் அவளை ஏறெடுத்துப் பார்க்காததால் சினம்

zeevaa

தலைக்கேறிய சுந்தரி. "பழகப்பழகப் பாலும் புளிக்குமென்ற பழமொழி சரியாகத் தானிருக்கிறது", என்று சுடுசொற்களை உதிர்த்தாள்.

அந்தச் சுடு சொற்களைக் காதில் வாங்கிய விஜயன் தனது சிந்தனை அறுபடவே, சற்றே தனது விழிகளை உயர்த்தி எதிரே நின்ற கட்டழகியை ஏறெடுத்து நோக்கி, "என்ன சுந்தரி! என்ன சொன்னாய் நீ?" என்று வினவினான், இதழ்களில் புன்முறுவலையும் சிறிது படர விட்டுக் கொண்டான்.

"பழகப் பழகப் பாலும் புளிக்குமென்று சொன்னேன்" என்றாள் அவள் மறுபடியும் சொற்களில் அக்னி திராவகத்தைக் கலந்து.

"ஓ! அந்தத் தமிழ்ப் பழமொழியா?" என்று விஜயன் வினவினான் சர்வ சாதாரணமாக.

"ஆம், தமிழில்தான் பழமொழிகள் அதிகம்" என்று மீண்டும் சொன்னாள் சுந்தரி.

விஜயன் இதழ்களிலிருந்த புன்முறுவலைச் சற்று அதிகப் படுத்திக் கொண்டு, "தமிழில் புதுமொழிகள் அதிகம் இல்லை, போலிருக் கிறது?" என்று வினவினான் புன்முறுவலின் ஊடே.

விஜயன் தனது பழமொழியைப் பற்றி நகையாடுவதைத் திரிலோக சுந்தரி கவனிக்கவே செய்தாளாதலால் முன்னை விடச் சிறிது கோபத்தை அதிகமாகவே மேற்கொண்டு, "பழமொழிகளில் உண்மைகள் புதைந்து கிடக்கின்றன" என்று சொன்னாள். அவள் பார்வையிலும் உஷ்ணம் அதிகமாயிருந்தது.

"என்ன உண்மையைக் குறிப்பிடுகிறாய்?" என்ற விஜயன் கட்டிலில் உட்கார்ந்தபடியே எதிரில் நின்ற அவள் கையொன்றைப் பிடித்து அவளைத் தனக்கு அருகில் நிறுத்திக் கொண்டு அவளை ஏற இறங்கப் பார்த்தான். "பழமொழி உண்மைதான். ஆனால் அதற்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?" என்று வினவினான்.

zeevaa

திரிலோகசுந்தரி மெள்ளத் தன்னை வளைக்கத்தொடங்கிய அவனுடைய கைகளிலிருந்து திமிற முயன்ற வண்ணம் சொன்னாள். "பழகப் பழக என்னிடம் உங்களுக்கு அக்கறை குறைந்து விட்டது. என்னைக் கசந்து விட்டது", என்று.

விஜயன் அவள் இடையை இரு கைகளாலும் இழுத்துத் தனக்கு வெகு அருகில் நிறுத்திக் கொண்டு, "சுந்தரி! நீ செய்தது ஒரே தவறு தான்", என்று சொன்னான். அவள் அருகில் நின்றதால் கண்ணைக் குத்திவிடுவது போல் தெரிந்த மார்பின் இரு எழுச்சிகளிலும் கண்களை ஓட்டினான்.

அவன் பார்வை சென்ற இடத்தைக் கவனித்ததால் ஏற்பட்ட அவள் நாணம் அவள் கோபத்தைச் சிறிது தணித்தாலும் அந்தக் குறையை அவள் வெளிக்குக் காட்டாமல், "என்ன தவறு?", என்று வினவினாள்.

"உவமைதான் தவறு", என்றான் விஜயன் அவள் இடையை வருடிய வண்ணம்.

திரிலோக சுந்தரி மிதமிஞ்சிய சங்கடத்தால் சிறிது நெகிழ்ந்தாள். உடலைச் சிறிது அசைக்கவும் செய்தாள். "உவமை தவறா?" என்று வினவவும் செய்தாள்.

"ஆம், உன்னைப் பாலுக்கு ஒப்பிட்டுக் கொண்டாய்", என்ற விஜயன் முகத்தில் துயரத்தைக் காட்டினான்.

"அது தவறா?"

"ஆம்"

"வேறு எப்படிச் சொன்னால் சரி? உவமைப்புலி நீங்கள் தான் சொல்லுங்களேன்".

விஜயன் அவள் முகத்தை ஆராய்ந்தான் சில விநாடிகள். அவன் பார்வை அவள் ஒவ்வொரு அங்கத்திற்குள்ளும் பாய்வது

zeevaa

போலிருந்ததால் பெரும் சங்கடத்திற்குள்ளான திரிலோகசுந்தரி, "சரி சரி, உவமையைச் சொல்லுங்கள்", என்றாள்.

விஜயன் கண்களில் ஆவல் அதிகரிக்கவே செய்தது. அவள் அதரங்களில் அறை வெளியே இருந்த சாளரத்தின் மூலம் வந்த இரண்டு சூரிய ரச்மிகள் தவழ்ந்ததால் அவை நீரோட்டமுள்ள ஜீவரத்தினங்களைப் போல் ஜொலித்ததைக் கண்ட விஜயன் பெருமூச்செறிந்தான். "உன்னைப்பாலென்று வர்ணித்ததால் ஏற்பட்ட தொல்லை இது. சரியான உவமை அமுதம்", என்ற விஜயன் மேலும் சொன்னான். "உன் உதடுகளை இப்போது பார்க்கும் யாரும் அந்த உவமையைத்தான் சொல்லுவார்கள்", என்று.

ஆயிரம் இருந்தாலும், மகாராஜன் மகளாயிருந்தாலும் பெண் பெண்தானென்பதைக் காட்டிய சுந்தரி. "புரிகிறது! புரிகிறது!" என்றாள் இதழ்களிலிருந்த கடுமையை நீக்கி இள நகையைப் படரவிட்டு.

"என்ன புரிகிறது சுந்தரி?" ஏதும் புரியாதது போல் கேட்டான் விஜயன்.

"நீங்கள் உவமையை மாற்றியதற்குக் காரணம்", என்றாள் சுந்தரி.

அவள் பட்டு உடலைத் தனது இரு கைகளாலும் இழுத்து மடியில் குறுக்கே கிடத்திக் கொண்ட விஜயன், "சுந்தரி! இதுதான் சரியான உவமை, அமுதம் பாலல்ல, புளிக்காது காலத்தால் மாறாதது", என்று கூறிய வண்ணம் அவள் இதழ்களுடன் தனது இதழ்களைக் கலந்தான்.

அப்படி கலந்ததால் ஏதோ பதில் சொல்ல முயன்ற பவள இதழ்கள் அந்த முரடனின் வலிய உதடுகளால் அடைக்கப்பட்டதால் பேச்சை இழந்தன. அவன் நீண்ட நேரம் தனது உதடுகளை அவள் இதழ்களை விட்டு மீட்காமலே மெய் மறந்து கிடந்தான். பிறகு நீக்கிய போதும் பேசவில்லை அவள். அந்த உதடுகளை அவள் கழுத்தில் புதைத்தான். பிறகு கன்னத்துக்கு மாற்றிக் கொண்டான்.

zeevaa

உணர்ச்சி மிகுதியால் அவள் அசைந்தாள். கையொன்றும் எழுந்து அவன் தலைக் குழலில் அலைந்தது. "இந்த கன்னத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று மெதுவாகப் பேசசுக் கொடுத்தாள் அவள்.

அவன் உதடுகளை ஒரு முறை நீக்கி அவள் காதுக்கருகில் கொண்டு போய், "அமுதத்தின் எழுச்சி," என்றான். பிறகு சட்டென்று கையொன்றை கழுத்துக்குக் கீழே அலையவிட்டு, "இவையும் அமுத எழுச்சிதான்", என்ற விஜயன் "தேவி உன் கழுத்தென்ன, கன்ன மென்ன, மார்புதானென்ன? பூவுடல் பூராவும் அமுதத்தின் தொகுப்புத் தான்", என்றான்.

அவன் கைகள் புரண்ட விதம், நின்றும் இறங்கியும் ஏறியும் அவை செய்த ஆராய்ச்சியின் தன்மை அவளை அடியோடு நிலைகுலையச் செய்தன. "சரிதான் சரிதான்", என்று அவள் முனகினாள்.

அந்த முனகலில் தெரிந்த வேட்கை, சொல்லின் ஒலியில் தொனித்த காமம் அவன் உணர்ச்சியைப் புரட்டியதால் "எதுதான் சரி?" என்று கேட்டு "சுந்தரி! நீ ஒரு அற்புதம். நாமிருவரும் ஆயிரம் ஆண்டுகள் இருந்தாலும் நீ எனக்கு அமுதம் தான். உன்னைப் பருகுவதில் சளைக்க மாட்டேன்", என்று கூறியவண்ணம் அவளை அப்படியே அள்ளி எடுத்து முகத்தில் கண்களை அலையவிட்டு, "சுந்தரி உன் கன்னம் மாம்பழம் போலிருக்கிறது. அதைக் கடிக்கட்டுமா?" என்று வினவினான்.

அந்தச் சொற்கள் சொர்க்கத்திலிருந்து அவளை இந்த உலகத்துக்கு இழுத்தன. "மாம்பழமா! கடிப்பீர்களா!" என்று கேட்டாள். அப்பொழுது அவள் இச்சை உணர்ச்சிகள் அடங்கி அச்சத்துக்கு இடம் கொடுத்தன.

விஜயனுக்கிருந்த வேகத்தில், வேட்கையில், காமத்திளைப்பில் என்ன பேசுகிறோமென்பதை அறியாமலே பேசினான். "ஆம் சுந்தரி!

zeevaa

கன்னங்கள் மாம்பழம், அவற்றைக் கடிப்பேன். உன்னைக் கடித்து தின்றுவிடுவேன்" என்று வேகத்துடன் கூறி அவள் கன்னங்களிரண் டையும் மாறி மாறி லேசாகப் பற்களால் கவ்வினான்.

சாதாரணச் சமயத்தில் விரகத்துக்குத் தீமூட்டும் அவன் சொல்லும் செயலும் அவள் அச்சத்தையே வளர்த்தன. "விடுங்கள் என்னை நீங்களும் தீமைத் தீவைச் சேர்ந்தவர்தான். அரக்கர்தான்", என்று கூறிக்கொண்டே அவன் மடியிலிருந்து எழுந்திருக்க முயன்றாள்.

திரிலோகசுந்தரியின் இதயத்தில் கூ–சின் விவரித்த நிலைகள் நினைவுக்கு வந்தன. 'உன் மாம்பழக் கன்னங்களை ஹண்டுமான் ராட்சஸர்கள் கடித்து தின்றுவிடுவார்கள். உன் எலும்பு அவர்களுக்கு முறுக்கு,' என்று அவன் சொன்னதெல்லாம் சித்தத்தில் சுழலவே, "விடுங்கள் என்னை" என்று திமிறினாள்.

ஆனால் அவன் விடவில்லை. அவளை அப்படியே தூக்கிப் பஞ்சணையில் கிடத்தினான். கட்டிலின் முகப்பில் உட்கார்ந்து அவளை இரு கைகளாலும் அழுத்திய வண்ணம் அவள் முகத்தைக் கவனித்தான். அதில் தெரிந்த அச்சம் அவனுக்கு விசித்திரமா யிருந்தது. "அடி சுந்தரி! உனது பழமொழி சரியாக இருக்கும் போலிருக்கிறது. பழகப்பழக நான் புளித்து விட்டேன். இல்லையேல் இத்தனை கடுப்பு ஏன் உன் முகத்தில்?" என்று வினவினான்.

"உங்கள் கன்னத்தை யாராவது கடித்தால், கடித்துத் தின்ன முயன்றால் தெரியும்", என்றாள் அவள்.

"கடிப்பதும் தின்பதும் நீயானால் எனக்கு ஆட்சேபனை இல்லை", என்ற விஜயன் எழுந்து சென்று அறைக்கதவைத் தாளிட்டு வந்தான். அவன் வந்த வேகம், அவன் முகத்தில் தெரிந்த ஆவேசம் எல்லாம் அவளுக்குத் திருப்தியாயிருந்தாலும் கூ–சின்னின் முகமும் அவன் அச்சுறுத்திய நிலைகளும், ஏற்படக் கூடியவை என்று அவன் காட்டிய பயமும் அவன் வேகத்தையோ, காதலையோ ஏற்கும் நிலையில்

zeevaa

இல்லாததால் அவள் பெருமூச்செறிந்தாள். கட்டிலின் மீது விழுந்த இரண்டு சூர்ய ரச்மிகள் அவள் உடல் மீது கோடுகளைத் தீட்டியிருந்தன. அதனால் அழகு பன்மடங்காக, ஏற்கனவே விஜயன் சேஷ்டைகளால் கலைந்து தாறுமாறாகக் கிடந்த சேலை மயக்கம் தரக் கிடந்த சுந்தரியின் கண்கள் சிறிதுகலங்கியே இருந்தன. அப்படிக் கிடந்த அவளை அணுகிய விஜயன், "என்ன தேவி?" என்று விசாரித்தான் அவள் முகத்தில் விரவிய அச்சத்தைக் கண்டு.

"இது–"என்று ஏதோ அவள் ஆரம்பித்தாள்.

"இது?"

"பகல்",

"அதனாலென்ன?"

"யாராவது பார்த்தால்?"

"பார்க்கமாட்டார்கள், கதவை தாளிட்டுவிட்டேன்".

"எப்படியும் ஊகிப்பார்கள்", இதைச் சொன்ன அவள் அவன் கழுத்தை இருகைகளாலும் வளைத்தாள். 'விஜயா! அரக்கனாகி விடாதே, என்னால் அந்த விபத்தை நினைக்கவும் பயமாயிருக்கிறது", என்று கூறி அவன் முகத்தை மார்புடன் அணைத்துக் கொண்டாள்.

"என்ன விபத்து சுந்தரி?" என்று ஏதும் புரியாமல் கேட்ட விஜயன் தனது தலையை அவள் மார்பில் இழைத்தான். அப்பொழுது மெதுவாகச் சொன்னாள் அவள்: "எதற்கும் சூ–சின்னைக் கேளுங்கள், அவன் சொல்வதில் உண்மை இருக்கிறது" என்று.

இதைக்கேட்டதும் திடீரென விளக்கால் கிழிக்கப்பட்ட இருளைப் போல் உண்மை பளிச்சிடவே அவள் மார்பில் கிடந்த வண்ணம் சொன்னான் விஜயன், "அதைப்பற்றிக் கவலைப் படாதே", என்று கூறி அவள் இடைக்குள் ஒரு கையைச் செலுத்தினான். "சூ–சின்னின் தந்திரம் பலிக்காது பகலை இரவாக்குகிறேன். இரவைப் பகலாக்கு

zeevaa

கிறேன். அஞ்சாதே" என்ற விஜயன், "பகலை இரவாக்குவோம்" என்று முதலில் அவளைத் தனது கைகளில் சிறைபடுத்திக் கொண்டான்.

பகலை இரவாக்க முயன்றது புரிந்தது அவளுக்கு. ஆனால் இரவைப் பகலாக்குவது எப்படி என்று புரியாததால் கேட்டாள், "இரவை எப்படி பகலாக்குவீர்கள்?" என்று வினவினாள்.

"அந்தப் புதிரைப் பின்னால் அவிழ்க்கிறேன்" என்ற விஜயன் அப்பொழுது விளக்கம் சொல்லாமல் இடையில் சேலை முடிச்சிடம் கைவிரல்களைக் கொண்டு போனான். அவன் விரல்களைத் தனது விரல்களுள் பிடித்து நெறித்து அடக்கிய சுந்தரி, "இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவீர்கள்", என்று முணு முணுத்தாள் மெதுவாக.



zeevaa

# 17. தேக தானம்

கதிரவன் கதிர்கள் கட்டிலில் காணப்பட்ட காலை நேரத்திலேயே காமதூரனாக மாறிக் கலவியில் ஈடுபடமுயன்ற சிங்களத்துச் செல்வன் திடீரென எதையோ நினைத்துக் கொண்டு கலிங்கத்துக் கட்டழகியின் அழகை ஆராய முற்பட்ட தனது கைகளைச் செயலற்றதாக்கிக் கொண்டான்.

அவன் கைகள் செயலிலிருந்து மீண்டு விட்டதையும் மார்பில் அழுத்திக் கிடந்த முகமும் மேலெழுந்துவிட்டதையும் கண்ட விஜயமகாதேவி அதற்குக் காரணம் ஏதாயிருக்குமென்று எண்ண முற்பட்டாலும் எண்ணம் பயனளிக்காததால் தனது கண்களால் விஜயனை ஏறெடுத்து நோக்கினாள்.

அவள் மீதிருந்த தலையை நிமிர்த்திய விஜயன் மெல்ல எழுந்து உட்கார்ந்து தனது கைகளால் முகத்தை விநாடிகள் பொத்திக் கொண்டு தீர்க்காலோசனையில் இறங்கினான். அதைக் கண்ட சுந்தரியும் தனது நிலையைச் சரிபடுத்திக் கொண்டு எழுந்து அவன் பக்கத்தில் உட்கார்ந்து அவன் தோள்மீது தலை சாய்த்து, "என்ன யோசிக்கிறீர்கள்?" என்று வினவினாள்.

விஜயன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. எதையோ சிந்தித்து இருமுறை தலையையும் ஆட்டிக் கொண்டு, "தீமைத் தீவிலிருக்கும் அபாயத்தைப் பற்றி சூ-சின் என்னிடம் சொல்லாமல் உன்னிடம் ஏன் சொன்னான் என்று சிந்திக்கிறேன்" என்று சொன்னான் முடிவில்.

zeevaa



zeevaa

சூ–சின்னின் செயலை ஒரு பொருட்டாக எண்ணாத திரிலோக சுந்தரி சொன்னாள். "உங்கள் பிடிவாதமும் குணமும் சூ–சின்னுக்குத் தெரிந்திருக்க வேண்டும்" என்று "என் பிடிவாதமா? குணமா?" என்று விஜயன் வினவினான்.

"நீங்கள் ஒரு முடிவு எடுத்தால் அதை மாற்ற மாட்டீர்களென்பது அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அபாயமென்று தெரிந்தால் அதை நோக்கிச் செல்லும் ஆசையும் உங்களுக்கு உண்டு என்பதையும் அவன் அறிந்திருக்க வேண்டும்" என்று சொன்னாள் சுந்தரி.

விஜயன் அவள் கூறிய விளக்கத்தை ஏற்க மறுத்து, "சுந்தரி! சூ–சின்னை அத்தனை அல்பமாக எடை போடக்கூடாது. என் குணங்களை உத்தேசித்து இந்த விவரங்களை உன்னிடம் சொல்லியிருக்கமாட்டான். ஏதோ ஆழ்ந்த திட்டம் இருக்கிறது. அவனுக்கு, அது என்னவென்று எனக்குப் புரியவில்லை. என்ன காரணத்தாலோ அவன் ஹண்டுமானுக்குச் செல்ல விரும்பவில்லை. அதை இன்னும் ஒரு நாளில் நான் தெரிந்து கொள்கிறேன்" என்று திட்டமாகச் சொல்லி எழுந்திருக்க முயன்றான்.

அவன் தோள்மீது சாய்த்த தலையை அவள் அகற்ற மறுத்ததன்றி ஒரு கையைக் கொண்டும் அவனது இன்னொரு தோளை அழுத்தி, "உங்களை ஒன்று கேட்கிறேன், பதில் சொல்லுங்கள்" என்றாள்.

"கேள் சுந்தரி",

"தீமைத் தீவில் அரக்கர் இருக்கிறார்களா இல்லையா?"

"இருப்பதாகக்* கேள்வி. தமிழர்கள் அதை நம்புகிறார்கள்",

"மற்றவர்கள்?"

---

* In the Tanjore Inscription of 103 Andaman is described as the abode the cannibals.

zeevaa

"ஹண்டுமான் அரக்கர்கள் சில விழாக்களின் போது தான் மனிதர்களைப் பலியிட்டுத் தின்பதாகக் கேள்விப் பட்டிருக்கிறேன். இந்த வதந்திகளை வைத்துக் கொண்டு ஒரு நாட்டு மக்களை நாம் எடை போடக் கூடாது. தவிர ஹண்டுமான் அரக்கர்கள் மற்ற நாட்டினரை *பிசாசுகள் என்று அழைக்கிறார்களாம்".

"வதந்தியாயிருந்தாலும் அத்தகைய ஆபத்தை நோக்கிச் செல்ல வேண்டிய அவசியமென்ன?" என்று கேட்டாள் சுந்தரி.

அவளுடைய கைப்பிடியிலிருந்து தோளை விடுவித்துக் கொண்டு எழுந்து கட்டிலுக்கெதிரே அவள் எதிரில் நின்று கொண்ட விஜயன், "வேறு எந்த இடத்துக்குச் செல்லலாம் சுந்தரி?" என்று வினவினாள்.

சுந்தரி சிந்தித்தாள் சில வினாடிகள். தோளிலிருந்து வழுக்கி விழுந்துவிட்ட சேலையை மறுபடியும் தோளுக்கு ஏற்றி இழுத்து விட்டுக் கொண்டு, "ஏன் வேறு இடமே இல்லையா?" என்று கேட்டாள் விஜயனை நோக்கி.

விஜயன் மெல்ல இருமுறை அப்படியும் இப்படியும் உலாவி சட்டென்று நின்று, "சுந்தரி கலிங்கத்திலிருந்து அடுத்து இந்தக் கப்பல் நங்கூரம் பாய்ச்சி நிற்க வசதியாக துறைமுகங்கள் தமிழ் நாட்டில் தானிருக்கின்றன. தமிழர்களுக்கும் எனக்கும் தற்சமயம் தீரா விரோதமிருக்கிறது. இந்த மரக்கலம் தமிழ்நாட்டுத் துறைமுகம் எதற்குச் சென்றாலும் அங்கு மடக்கப்படும். நாமெல்லோரும் சிறைப்படுவோம். நீ சோழர் சிறைக்கு அழைத்துச் செல்லப்படுவாய். அங்கு உனக்குத் துணையிருக்கிறது", என்று விடுவிடுவென்று பேசினான்.

சுந்தரியின் கண்களில் வியப்பின் சாயல் லேசாகத்தெரிந்தது. "துணையா? யார் துணை?" கேட்டாள்.

---

* The Andamanese consider all orientals ghosts and demons.
For both the above see page 13 of Andaman & Nicobar Islands 'Local Gazetter'.

zeevaa

"சிங்களத்தின் ஒரு பகுதியை ஆண்ட ஜகதிபாலன் மனைவியும் மகளும்", என்ற விஜயன், "நான் சோழ நாட்டுக்குப் போகாத காரணம் தெரிகிறதா? உன்னை இழக்க விரும்பவில்லை", என்றான். மேலும் அவனே பேசினான். "அதை விட்டால் நாம் தங்கக் கூடிய இடம் சுமத்ரா, ஜாவா தீவுகள், அவை நீண்ட தூரமிருக்கின்றன. அங்கிருக்கும் நிலைமையும் எனக்குத் தெரியாது. அதை விட்டால் சீனாவுக்கே போய் விடலாம் சூ-சின்னுடன் , அப்புறம் நீ சீன சக்கரவர்த்தியின் ராணியாகலாம்.........."

இங்கு சிறிது பேச்சை நிறுத்திய விஜயன், "சுந்தரி! ஆபத்து இருக்கலாம் ஹண்டுமானில், ஆனால் அதற்கு மாற்று இடங்களை யோசித்தால் அங்கு ஆபத்துகள்கள் அதிகம். ஆகவே சிறிய ஆபத்தை நோக்கிச் செல்கிறேன். வேறு வழியிருந்தால் சூ-சின்னையே கேள்", என்று கூறிவிட்டு வெளியே சென்றான்.

கட்டிலில் நீண்ட நேரம் சிலையென உட்கார்ந்திருந்தாள் கலிங்கத்துக் கட்டழகி, விஜயன் சொன்னதில் உண்மைகள் பல இருந்த போதிலும் அவள் மனம் முக்கியமாக ஜகதிபாலன் மகளிடமே சென்றது. ஜகதிபாலன் மகளான லீலாவதியை விஜயன் மணக்க ஏற்கனவே ஏற்பாடு இருந்ததால் அங்கு செல்வது தகாது என்று நினைத்தது அவள் பெண் மனம். புருஷன் எனக்குத்தான் சொந்தம் என்று நினைக்கும் மனப்பக்குவமுள்ள எந்தப் பாரதப் பெண்ணும் சக்களத்தியை விரும்ப மாட்டாளாதலால் சோழ நாட்டிலிறங்குவதை அடியோடு விரும்பாத சுந்தரி, 'அவர் சொல்வதிலும் நியாயமிருக் கிறது', என்று விஜயன் பக்கம் சாயவும் முற்பட்டாள்.

பிறகு விஜயன் எவ்வழி போகிறானோ அதுதான் தன் வழி என்று தீர்மானித்துக் கொண்ட சுந்தரி அதைப்பற்றி மேற்கொண்டு சிந்திக் காமல் அறையிலேயே நடுப்பகல் வரையில் கழித்தாள். நடுப்பகலில் அறைக்குள் நுழைந்த விஜயனுடன் உணவும் அருந்தினாள். விஜயன் முகத்தில் கவலை படர்ந்திருப்பதைக் கவனித்த சுந்தரி, "ஏன் கவலையாயிருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

zeevaa

"இந்தக் கப்பலில் இருப்பவர்கள் எனக்கு எதிராகத் திரும்பு வார்கள் போலிருக்கிறது. சூ-சின் அதற்கு அடிகோலி விட்டான்", என்ற விஜயன் குரலில் கவலை பூர்ணமாகவே தெரிந்தது.

"உங்களுக்கு எதிராகவா? அவன் என்ன செய்ய முடியும் அப்படி?" என்று சுந்தரி கேட்டாள்.

"உன்னிடம் சொன்ன கதையை மாலுமிகளிடமும் சொல்லி யிருக்கிறான். அவர்கள் மனத்திலும் அச்சத்தைப் புகுத்தியிருக் கிறான்".

"அதனால்?"

"மாலுமிகள் எனக்கு எதிராகத் திரும்பலாம்".

"ஒருக்காலும் மாட்டார்கள். உங்களை மாலுமிகள் தெய்வம் போல நேசிக்கிறார்கள்".

"அவர்கள் உயிர்களுக்கு ஆபத்து வராமல் நான் காப்பாற்றும் வரை தெய்வமாக நினைப்பார்கள். ஆபத்து என்று தெரிந்தால் மாறிவிடுவார்கள்".

இதைக்கேட்ட சுந்தரியின் மனத்திலும் கவலை சுடர் விட்டாலும், ஹண்டுமானை விட்டால் ஜகதிபாலன் மகளிருக்கும் இடத்துக்குப் போக அவசியமிருக்குமாதலால் அதை விரும்பவில்லை அவள். என்னதான் தன்னிடம் மோகமிருந்தாலும் ஆண்பிள்ளை ஆண் பிள்ளை தான். புதுமலரைக் கண்டால் நாடும் வண்டுதான் என்று நினைத்து சூ-சின்னின் திட்டத்தை எதிர்க்கவே தீர்மானித்தாள். அதற்கு அன்றிரவே வாய்ப்பும் கிடைத்தது. அந்த வாய்ப்புக் கிடைக்கும்வரை திரும்ப அவள் விஜயனைப் பார்க்கவே இல்லை.

உணவை அருந்திவிட்டு அறையைவிட்டு வெளியே சென்ற விஜயன் நேராகக் கப்பலில் பல பகுதிகளைப் பார்வையிட்டான். அவன் அப்படி ஒவ்வொரு பகுதியாகப் பார்வையிடுவதை சூ-சின்

zeevaa

னும் கவனித்தான். ஆனாலும் அவன் அதைப்பற்றி ஏதும் கேட்க வில்லை. அதைக் கண்டு கொண்டதாகவும் காட்டிக் கொள்ளவில்லை. விஜயன் தளத்துக்கு வந்ததும், "எனக்கு ஏதாவது கட்டளை உண்டா?" என்று அடக்கத்துடன் விசாரித்துத் தலையையும் வணங்கினான்.

"ஏதுமில்லை" என்று சுருக்கமாகப் பதில் சொன்ன விஜயன் தளத்திலிருந்த மாலுமிகளைக் காற்றின் வசதி பற்றியும் மரக்கலத்தின் வேகத்தைப் பற்றியும் சில கேள்விகளைக் கேட்டான். அவர்கள் சொன்ன பதிலால் திருப்தியடைந்து விட்டு மரக்கலத்தின் கோடியில் சுக்கானைப் பிடித்துக்கொண்டிருந்த தர்மரையும் அவருக்கருகில் உட்கார்ந்து கொண்டிருந்த அர்த்தரையும் சந்தித்தான். "தர்மரே! மரக்கலம் எந்தத் திசையில் ஓடுகிறது?" என்று வினவினான்.

"அர்த்தமற்ற கேள்வி", என்றார் தர்மர்.

"ஆம்," என்று அர்த்தர் இணைந்து பாடினார்.

"அர்த்தமற்ற கேள்வியா?" விஜயன் சிறிது உஷ்ணத்தை காட்டினான் குரலில்.

அவன் குரலின் உஷ்ணத்தை லட்சியம் செய்யாத தர்மர், "அர்த்தமற்ற கேள்வியில்லாமல் வேறென்ன? நீங்கள் எந்தத் திசையில் செலுத்தச் சொன்னீர்களோ அந்தத் திசையில் தான் செலுத்துகிறேன்", என்றார் தர்மர்.

"கட்டளையை மீறும் பழக்கம் எங்களுக்குக் கிடையாது", என்றார் அர்த்தர்.

"எங்களுக்கு என்றால்?" விஜயன் வியப்புடன் கேட்டான்.

"தர்மருக்குச் சிறிது ஓய்வு தேவையாகும் போது நான் சுக்கானைப் பிடிக்கிறேன். அதைத் தர்மர் போதித்து விட்டார். அதனால் நாங்கள் என்ற பன்மையை உபயோகித்தேன். இப்பொழுது சுக்கான் பிடிக்க இருவர் இருக்கிறோம்", இதைப் பெருமையுடன் சொன்னார் அர்த்தர்.

zeevaa

அத்துடன் உரையாடல், நின்றிருந்தால் விஜயன் சென்றிருப்பான். தர்மர் வாயை மூடிக் கொண்டிருக்காமல் "அவன் அத்தனை சொல்லியும் நாம் காதில் வாங்கினோமா?" என்று அர்த்தரை வினவினார்.

"இல்லை, நமக்கு நமது தலைவர் கட்டளை தான் முக்கியம் என்றார்", அர்த்தர்.

"உயிர் போவதாயிருந்தாலும் அப்படித்தான்".

"ஆம் ஆம் அப்படித்தான்".

அவர்கள் உரையாடலைக் கேட்டுக்கொண்டு நின்ற விஜயன், "யார் என்ன சொன்னார்கள்?" என்று வினவினான் கடுமையான குரலில்.

'சூ-சின்தான், ஹண்டுமான் விவகாரத்தைச் சொன்னான்....." என்று தர்மர் துவங்கினார்.

"எங்களை அரக்கர் கடித்துத் தின்றாலும் பரவாயில்லை", என்று அர்த்தர் சேர்ந்து பாடினார்.....

"ஒரு ஜீவனுக்கு நாம் உணவாவதில் தர்மம் இருக்கிறது", என்றார் மோக்ஷர்.

"அது ஒருவித தானம்".

"தேக தானம்".

"அழியும் இந்தத் தேகத்தை அரக்கன் தான் தின்னட்டுமே".

"நன்று நன்று" என்று மோக்ஷர் முடித்ததும் அங்கு நிற்கவில்லை விஜயன். நேராகக் கீழே துடுப்புகள் துழாவப்படும் அடித்தள அறைக்குச் சென்றான். இப்படிப் பல இடங்களையும் பார்த்துவிட்டு அன்று பகலைத் தளத்தில் கழித்தான். ஆனால் காலையில் இருந்த கவலை அவன் முகத்தில் இல்லை.

zeevaa

தளத்தில் நீண்ட நேரம் உட்கார்ந்து சதுரங்கம் ஆடிக் கொண்டிருந்தான். சிற்பி நாகானந்தனுடன், இரவு முற்றியதும் அவனைத் தேடிக்கொண்டு தளத்துக்குச் சுந்தரி வந்ததும் ஆட்டத்தைவிட்டு எழுந்து பக்கத்திலிருந்த மரப்பலகையில் சாய்ந்து கொண்ட விஜயன் சுந்தரியையும் அவளுக்குப் பக்கத்தில் நின்றிருந்த சூ–சின்னையும் கவனித்துப் புருவங்களைச் சற்றே உயர்த்தி, 'என்ன சுந்தரி! என்ன விசேஷம்?" என்று வினவினான்.

"தயவு செய்து பிடிவாதம் பிடிக்காதீர்கள். இவர் சொற்படி கேளுங்கள்", என்று கவலை தோய்ந்த குரலில் கெஞ்சினாள் சுந்தரி.

விஜயன் பக்கப் பலகையில் சாய்ந்து கொண்டு அசட்டையாயிருக்கவே, "அசட்டையாயிருக்காதீர்கள். சூறாவளி கிளம்பிவிட்டது", என்றாள். அவள் குரல் நடுங்கியது. அந்த நடுக்கத்துக்குக் காரணம் இருப்பதை மரக்கல நுழைவாயிலில் இருந்த நிலை நிரூபித்தது.

சூறாவளி துவங்கிவிட்டதை விஜயனும் புரிந்து கொண்டான்.

zeevaa

# 18. பத்துக் கட்டம்

கலிங்கத்து மரக்கலத்தில் பல பகுதிகளையும் பகலில் பார்த்த வந்த விஜயன், சூ-சின் தனது வேலையைச் சந்தேகமேற்படா வண்ணம் திறமையுடன் செய்திருப்பதைப் புரிந்து கொண்டான். முதலில் அடித்தளத்தில் ஆதிமல்லன் ஆட்களும் சீனத்து மாலுமிகளுமாகச் சேர்ந்து துடுப்புகளைத் துழாவிக் கொண்டிருந்த இடத்தைச் சென்று பார்த்தபோது, அதுவரை அங்கிருந்த மாலுமிகள் பாடிக்கொண்டிருந்த ஏலேலோ பாட்டும் அதற்கு தக்கபடி சீன மாலுமிகள் போட்ட தாளமும் சட்டென்று நின்று விட்டதையும், அவர்கள் தன்னைப் பார்த்த பார்வையிலும் உஷ்ணமும் சந்தேகமும் சுடர் விட்டதையும் கவனிக்கவே செய்தான். அங்கிருந்து கிளம்பி உக்கிராண அறைக்குச் சென்றபோது அங்கிருந்த மாலுமியொருவன் உணவு தானியங்களைக் கவனிக்காமல் கூரிய கத்தியொன்றைத் தடவிக் கூர்மை பார்த்ததைக் கவனித்து அவனை எந்தக் கேள்வியும் கேட்காமல் திரும்பி விட்டாலும், மாலுமி பார்த்த பார்வை அத்தனை திருப்திகரமாயில்லை சிங்களத்து மன்னனுக்கு. அடுத்து அவன் அடித்தளத்துக்கும் மேலேயிருந்த சிறு தளத்தில் கட்டப்பட்டிருந்த தனது புரவியையும் மூர்சமதின் புரவியையும் பார்த்து அவற்றின் முதுகைத் தடவிக் கொடுத்தான். அதுவரை புரவிகளுக்குத் தீனி வைத்துக்கொண்டிருந்த சீனனொருவன் சீற்ற விழிகளை விஜயன் மீது திருப்பி, சீன மொழியில் ஏதோ சொல்ல. அது விஜயனுக்குப் புரியாவிட்டாலும் சீனன் பார்த்த பார்வையில் வெறுப்பு நன்றாகத் துலங்கியது மட்டும் புரிந்தது.

zeevaa



zeevaa

இப்படிக் கப்பலில் பல இடங்களையும் இரண்டு முறை பார்வை யிட்ட விஜயன் உணவு அருந்தக்கூடச் சுந்தரியின் அறைக்குச் செல்லாமல் சுக்கான் இருந்த இடத்திலேயே உணவைக் கொண்டு வரச் சொல்லி இரண்டு துறவிகளுடன் உணவருந்திய சமயத்தில் தான் இரு துறவிகளும் ஹண்டுமானில் தாங்கள் செய்யப் போகும் தேகதானத்தைப் பற்றிச் சொன்னார்கள். அது மட்டுமின்றி உயிர் தான அவசியத்தை எடுத்துரைத்த மகான் சூ-சின் என்பதையும் சுட்டிக் காட்டவே விஜயன் சந்தேகத்துக்கு இடமின்றி நிலைமையைப் புரிந்துகொண்டு மாலை முற்றி விட்டதால் ஏணிப்படியேறி மேல் தளத்துக்கு வந்து சேர்ந்தவன் மேற்குப் பக்கப் பலகையைப் பிடித்துக்கொண்டு சிற்பி நிற்பதைக் கவனித்து அவனருகில் சென்று அவன் பக்கத்தில் பலகையில் சாய்ந்து நின்றான்.

அப்பொழுது மாலை முற்றி பகலவன் மறைந்து இருள் சூழத் தொடங்கி விட்டதால் தளத்தின் இரண்டு மூன்று இடங்களில் பந்தத்துடன் அலைந்த சீன மாலுமிகள் இருவரும் பக்கப் பலகை பொருத்தப்பட்டிருந்த வளையங்களில் பந்தங்களை நடவே தளத்தில் ஓரளவு வெளிச்சமும் நிலவலாயிற்று. அதுவரை பக்கப்பலகையில் சாய்ந்து நீரோட்டத்தைக் கவனித்துக் கொண்டிருந்த நாகானந்தன் தனது பக்கத்தில் மௌனமாக நின்றிருந்த விஜயனை நோக்கி, "காற்று எதிர்ப்பக்கம் அடிக்கிற மாதிரித் தெரிகிறது", என்றான்.

அவன் சொன்னதைக் கேட்ட விஜயன் திடுக்கிட்டுப் பாய்மரங் களை நோக்க, இரண்டு பாய்களும் புடைத்து மரக்கலமும் தென் கிழக்கிலேயே ஓடிக் கொண்டிருந்ததைக் கவனித்ததால், "நீ சொல்கிறபடி இல்லை சிற்பி, பாய்கள் திரும்பி உள்ள இடம் தென்கிழக்குத் தானே?" என்றான்.

நாகானந்தன் புடைத்த பாய்களைத் திரும்பிப் பார்க்காமலே சொன்னான். "நான் குறிப்பிட்டது அந்தக் காற்றை அல்ல", என்று.

zeevaa

அவன் சொன்னதன் பொருள் விஜயனுக்கு ஓரளவு புரிந்தாலும் திட்டமாக விஷயத்தை அறிய முற்பட்டு "இங்கு எத்தனை வகைக் காற்றுகள் உண்டு?" என்று வினவினான் நாகானந்தன் மனத்தி லுள்ளதை வெளியே இழுக்க.

நாகானந்தன் லேசாகப் பைத்தியம் தெரிந்த கண்களை விஜயன் மீது திருப்பாமல் கீழே பக்கப் பலகையில் தாக்கிக் கொண்டிருந்த கடல் நீரைப் பார்த்த வண்ணம் சொன்னான். "இயற்கையில் காற்று பல வகை உண்டு. மந்தமாருதம், சூறாவளி, உஷ்ணக் காற்று, சலிப்புத் தட்டும் காற்று, இப்படிப் பல வகைகள் உண்டு. இவை தவிர மனிதன் சூழ்நிலையில் தன்னலத்தை உத்தேசித்துச் சிருஷ்டிக்கும் காற்று களும் சில உண்டு". என்று அத்துடன் ஹி....ஹி.... என்று பைத்திய நகைப்பை இருமுறை உதிர விட்டான்.

நாகானந்தனின் காற்றைப் பற்றிய விளக்கத்தையும் காரியப் பைத்தியச் சிரிப்பையும் கேட்ட விஜயன் அவன் தன்னிடம் ஏதோ சொல்ல முயலுகிறான் என்பதைப் புரிந்து கொண்டு, "சிற்பி. சொல்வதைத் தெளிவாகச் சொல். எனக்குப் புரியவில்லை", என்றான்.

நாகானந்தன் நேரடியாகப் பதில் சொல்லாமல், "சிங்களத்துச் சிங்கமே! உங்களுக்குப் பகடையாடிப் பழக்கமுண்டா?" என்று கேட்டதுடன் நில்லாமல், சட்டென்று தான் அதுவரை சாய்ந்திருந்த பக்கப் பலகையின் அடியிலேயே உட்கார்ந்து தனது பையிலிருந்த பகடைக் காய்களையும் சுண்ணாம்புக் கட்டியையும் எடுத்துச் சுண்ணாம்புக் கட்டியால் கீழே கோடுகளையும் வரைந்தான்.

சிற்பி காரியமாகவே உட்கார்ந்து விட்டானென்பதை உணர்ந்து கொண்ட விஜயன் தானும் உட்கார்ந்துகொண்டான் பந்தத்தை நோக்கி, பந்தம் செருகப்பட்டிருந்த இடத்தின் காரணமாக வெளிச்சம் பகடையாடும் சுண்ணாம்புக் கோடுகளில் முழுவதும் விழுந்தாலும் பகடையாடும் இருவரின் மீது பாதிப் பாதியே விழுந்திருந்ததால் பாதி

zeevaa

இருட்டும் பாதி ஒளியும் அடைந்த முகங்களை இருமுறை கவனித்து விட்டதால் சற்றுத் தெளிவாகவே பேசத் துவங்கி, "சிங்களமகாராஜா! கோடுகளைச் சரியாகக் கவனியுங்கள்" என்றான்.

விஜயன் அந்தக் கோடுகளைக் கவனித்து, "தமிழ் நாட்டில் இதைப் பத்துக் கட்டம் என்று சொல்வார்கள். இதை நகர்த்திக் காய்கள் வேண்டுமே", என்று கேட்டான்.

சிற்பி தனது அங்கிப் பையில் கையை விட்டு நான்கு காய்களை எடுத்து, இரண்டை விஜயனிடம் கொடுத்து இரண்டைத் தான் வைத்துக் கொண்டான். அவற்றைப் பத்துக்கட்டத்தின் தந்திரமான இடங்களிலும் வைத்தான். "நீங்களும் உங்கள் காய்களை வைக்கலாம்", என்று விஜயனுக்குக் கூற அவனும் காய்களை கட்டத்தில் வைக்கச் சென்றவன் சட்டென்று கையை இழுத்துக் கொண்டு, "சிற்பி கட்டம் ஒழுங்காயில்லை. தாறு மாறாகப் போட்டிருக்கிறாய்", என்று கூறினான்.

சிற்பி நகைத்தான். "இந்தக் கப்பலில் எது ஒழுங்காயிருக்கிறது? எல்லாமே தாறுமாறாகத்தான் இருக்கிறது", என்று பதில் சொன்னான்.

"அதைத் திருத்துவதற்கு என்ன வழி?" சற்று ஆர்வத்துடன் கேட்டான் விஜயன்.

அவன் கேட்ட கேள்விக்கு உடனடியாகப் பதில் சொல்லாமல் சற்றுத் தலையைத் தூக்கிப் பார்த்த நாகானந்தன் மறுபடியும் கோடுகள் மீது கற்களைக் காட்டி, "பகடையாடுவது ஒன்றுதான் வழி" என்று கூறி, பகடைகளை ஒரு குவளையில் போட்டுக் குலுக்கிக் கீழே போட்டான்.

விஜயனுக்கு எதுவும் புரியாததால் சற்றுக் குழம்பவே செய்தான். "கட்டம் சரியாயில்லை சிற்பி", என்று ஆட்சேபணையும் கிளப்பி னான்.

zeevaa

"கப்பலில் கூட இந்தக் கட்டம் சற்றுக் கஷ்டம் தான்", என்ற சிற்பி, பகடையின் எண்ணிக்கையைச் சுட்டிக்காட்டி, "ஆறு விழுந்திருக் கிறது", என்றான்.

"மறுபடியும் ஆடலாம்", என்று தெரிவித்த விஜயனை நோக்கிய சிற்பி, "வெற்றியை நான் விட்டுக் கொடுக்கிறேன். நீங்கள் ஆடுங்கள்", என்றான்.

விஜயபாகு பகடையை நன்றாகக் குலுக்கிப் பகடை உருட்டி அதில் வந்த எண்ணிக்கையைப் பார்த்து, "சிற்பி! எனக்கும் ஆறு விழுந்திருக்கிறதே!" என்று வியப்புடன் சொன்னான்.

பதிலுக்குச் சிற்பி பைத்தியப் புன்முறுவல் செய்து "பகடைகளைப் பாரும்", என்றான்.

கீழே கிடந்த பகடைக் காய்களை இருமுறை திருப்பித் திருப்பிப் பார்த்து அவற்றின் எல்லாப் பக்கங்களிலும் மூன்று மூன்று புள்ளிகள் இருப்பதைக் கவனித்தான். அவற்றை எப்படி யார் போட்டாலும் ஆறுதான் வருமென்பதையும் உணர்ந்ததால், "சிற்பி! இது மோசம். சூதிலும் நாணயம் உண்டு", என்று தெரிவிக்கவே, நாகானந்தன் பத்துக் கட்டக் கோடுகள் சிலவற்றை அழித்து, சிலவற்றில் வேறு கோடுகளை இழுத்தான். அவற்றைக் கண்டதும் பிரமித்த விஜயன், "புரிகிறது சிற்பி! புரிகிறது!" என்றான் குரலிலும் பிரமிப்பு ஒலிக்க.

"மெதுவாகப் பேசுங்கள். ஆட்டத்தைத தீவிரமாக ஆடுவதுபோல் பாசாங்கு செய்யுங்கள். பகடையில் எது விழுந்தாலும் நமக்கு அக்கறையில்லை," என்றான்.

அவன் கோடுகளைத் திருத்தியதும் கப்பல் செல்லும் திசையைக் குறிப்பிடுவது தெரிந்தது விஜயனுக்கு. திசையின் முடிவில் ஹரண்டு மானைக் குறிப்பிட அனுமார் மாதிரி வரைந்திருந்த சிற்பி தங்கள் மரக்கலங்கள் இரண்டையும் கொடி மரங்களால் குறிப்பிட்டிருந்தான். அதைக் கவனித்த விஜயன் சிற்பியின் சுண்ணாம்புக் கட்டியை வாங்கி

zeevaa

ஹண்டுமானின் மேற்குப் பகுதியில் ஒரு இடத்தைச் சுட்டிக் காட்டிக் குறியொன்றைப் போட்டான்.

அது கூடாது என்பதற்கு அறிகுறியாகத் தலையை இருபுறமும் ஆட்டிய நாகானந்தன் அந்தக் குறியை அழித்து வேறு இடத்தில் போட்டு, "இது பாதுகாப்பான இடம்", என்றான்.

அடுத்து இருவரும் பேசாமல் பக்டைகளை மும்முரமாக உருட்டிக் கொண்டிருந்த சமயத்தில் தான் சூ-சின்னும் சுந்தரியும் தளத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் வந்ததும் எழுந்து மரக்கலத்தின் பக்கப் பலகையில் சாய்ந்து கொண்ட விஜயனை நோக்கிய சுந்தரி சூ-சின் சொற்படி கேட்கும்படி வலியுறுத்தினாள்.

விஜயன் அதற்குச் செவி சாய்க்காமல் அசட்டையாயிருந்ததால் "சூறாவளி துவங்கி விட்டது", என்று அவள் கூறிய போதே அதே சமயத்தில் தளத்தின் நுழை வாயிலில் இரண்டு சீனர்களும் ஆதிமல்லன் மாலுமிகள் இருவரும் தோன்றிய்தையும் அவர்கள் பார்வையில் அச்சமும் சீற்றமும் கலந்திருந்ததையும் கவனித்த விஜயன் தனது முகத்தை உணர்ச்சிலவலேசமும் இல்லாத கல்லாக்கிக் கொண்டான்.

நுழைவாயிலில் தோன்றிய நால்வரும் இடைக் கச்சைகளில் குறுவாளைச் செருகியிருந்தார்கள். அவர்கள் கைகளும் அந்த ஆயுதங்களின் பிடிகளிலேயே பதிந்திருந்தன. ஒரே நிமிஷத்தில் விவரத்தைப் புரிந்து கொண்ட விஜயன் உள்ளே சினம் எழுந்து கொண்டிருந்தாலும் அதை வெளிக்குக் காட்டாமல், "எங்கு வந்தீர்கள்? ஏன் துடுப்புத் துழாவவில்லை?" என்று சர்வ சகஜமாகக் கேட்டான்.

அவன் வீசிய கேள்வியாலும் அசட்டையுடன் தளத்தில் நின்றிருந்த தோரணையாலும் சற்றேக் குழம்பிய அந்த நால்வரும் சட்டெனக் குழப்பத்தை உதறி, "உங்களிடம் பேச வந்தோம்", என்று ஒரே

zeevaa

சமயத்தில் சொல்ல, விஜயன் முகத்தில் சற்று அருவருப்பைக் காட்டி, "நல்லது, சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டு, போய் உங்கள் பணிகளைக் கவனியுங்கள்" என்றான்.

அந்த நால்வரில் ஆதிமல்லனைச் சேர்ந்த ஒரு மாலுமி சொன்னான். "இந்தக் கப்பல் போகும் திசை எங்களுக்குப் பிடிக்க வில்லை"என்று.

"எந்தத் திசையில் போகிறது?" விஜயன் சாதாரணமாக வினவினான்.

"ஹண்டுமானை நோக்கிப் போகிறது" என்று பதில் சொன்னான் ஒரு சீனன்.

"அங்குபோக உங்களுக்கு இஷ்டமில்லை?" விஜயன் கேள்வியில் உணர்ச்சி ஏதுமில்லை. குரல் வறண்டிருந்தது.

"இஷ்டமில்லை" சீனன் பதில் சட்டென்று வந்தது.

விஜயன் சிறிது சிந்தித்தான். "உங்களுக்கு இஷ்டமில்லை யென்றால் உங்களை அழைத்துப் போவதில் பயனில்லை" என்றான் சிறிது சிந்தனைக்குப் பிறகு.

"பயனில்லை" என்று கூறியஒரு மாலுமி பாய்மரத்தை நோக்கி நடக்க முற்பட்டான்.

"நில்!" என்ற விஜயனின் அதிகாரச் சொல் அவனை இருந்த இடத்தில் தேக்கி வைத்தது. "யாராவது பாய்மரத்தைத் தொட்டாலோ திசையை மாற்றினாலோ உடனடியாக அவர்களை நானே கடலில் தூக்கி எறிந்து சுறாக்களுக்கு இரையாக்குவேன்" என்று கத்தியுடன் கத்தி உராயும் குரலில் கூறினான்.

அவன் வாசகத்தை முடிக்குமுன் தளத்தின் நுழைவாயில் மூலம் மேலும் பத்து மாலுமிகள் தோன்றினார்கள். கையில் வேல்களுடனும் கட்டாரிகளுடனும் வந்தவர்கள் வேகமாக தளத்தில் பரவி

zeevaa

விஜயனுக்கு எதிரில் சந்திரவட்டமாக நின்றதும் ஒருவன், "நீங்கள் அரக்கர்களுக்கு இரையாகலாம். நாங்கள் இரையாக இஷ்டப் படவில்லை", என்று கூறிக் கொண்டு விஜயனை நெருங்கினார்கள்.

அவர்களை அலட்சியமாக நோக்கிய விஜயன், "ஏன் நிற்கிறீர்கள்? வந்த காரியத்தை முடியுங்கள்", என்றான்.

"தலைவரே உங்களுக்குத் தீங்கு நினைக்கவில்லை நாங்கள். உங்களுக்காக நாங்கள் ஹண்டுமானில் சாகவும் இஷ்டப்பட வில்லை. ஆகையால் கப்பலை நாங்கள் நடத்துகிறோம். இரண்டு நாட்களுக்கு மட்டும் உங்களை உங்கள் அறையில் அடைத்து வைக்கிறோம்" என்று உருவிய ஆயுதங்களுடன் விஜயனை நெருங்க முற்பட்டான். மற்றவர்களும் நெருங்கினார்கள்.

"அவரை ஒன்றும் செய்யாதீர்கள். கப்பலை உங்களிஷ்டப் படி எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்லுங்கள்" என்று திகிலுடன் அலறினாள் திரிலோகசுந்தரி.

அந்த அலறலுக்கும் விஜயன் மசியவில்லை. தன்னை நெருங்கிய வீரர்களிடம் தனது குறுவாளை எடுத்துக் கொடுத்து, "உங்களிஷ்டப் படி கப்பலை நடத்துங்கள்" என்று கூறியவன், திடீரென முகத்தில் சந்தேகச்சாயை படரவிட்டு, "ஆமாம்! உங்களைத் தூண்டிய தலைவன் எங்கே?" என்று கேட்டு நாற்புறமும் கண்களை ஓடவிட்டான்.

"அடித்தளம் போயிருக்கிறார். துடுப்புகளைத் திருத்த" என்ற ஒரு சீனன், "வாருங்கள் உங்கள் அறைக்கு" என்று அழைத்தான்.

சுந்தரி பின் தொடர விஜயன் தனது அறைக்குச் சென்றான். இருவரும் உள்ளே சென்றதும் மாலுமிகள் வெளியில் கதவைப் பூட்டினார்கள். பூட்டின் அரவம் கேட்டாலும் அதைச் சட்டை செய்ய வில்லை விஜயன், "சுந்தரி! நாம் வைத்த இடத்தில் மகாரத்தினம் இருக்கிறதாபார்", என்றான் கவலை தோய்ந்த குரலில்.

zeevaa

சுந்தரி ஒருமரப்பெட்டியைத் திறந்து உள்ளே நோக்கியதும் வெலவெலத்துப் போய், "மகாரத்தினத்தைக் காணோம்!" என்று கூறினாள். உணர்ச்சி மிகுதியால் அவள் தலை சுழன்றது. நிலத்தில் சாய இருந்த சுந்தரியை தனது கைகளில் தாங்கிய விஜயன் அவளைத் தூக்கி வந்து படுக்கையில் கிடத்தினான். சிறு விசிறியொன்றால் அவள் முகத்தை விசிற அவள் மெதுவாகக் கண்களைத் திறந்தாள். "மகாரத்தினம்?" என்று வினா எழுப்பினாள் நடுங்கும் உதடுகளுடன்.

"சூ-சின்னிடம் இருக்கிறது" என்று சர்வ அமைதியாக பதில் சொன்னான் வீரனான விஜயபாகு. "நான் பத்துக்கட்டம் ஆடினேன். அதில் இது ஒரு கட்டம்" என்று கூறினான். சுந்தரிக்கு ஏதும் விளங்கவில்லை. விளங்கிய போது பிரமையின் எல்லைக்கே சென்றாள்.

zeevaa

## 19. ஆண்டவன் பதில்

சிங்கள மன்னர்கள் குலதனமான மகாரத்தினம் காணோம் என்றதும் மயக்கமடைந்து நிலத்தில் சாயப்போன பைங்கொடியை எடுத்து வந்து கட்டிலில் கிடத்திய விஜயன், அவள் பக்கத்தில் உட்கார்ந்து சிறு விசிறியொன்றால் முகத்தை விசிற, விழித்துக் கொண்ட கலிங்கன் மகள் மகாரத்தினத்தைப் பற்றிக் கேட்டதும், 'அது சூ-சின்னிடமிருக்கிறது,' என்று மாத்திரம் சொல்லியிருந்தால் அவள் மீண்டும் மயக்கத்தில் ஆழ்ந்திருப்பாள்.

ஆனால் இன்னொருமுறை அவள் நிலைகுலையாதிருக்க அவள் தலைகுழலைக் கோதிவிட்டு, குனிந்து அவள் இதழ்களுடன் தன் இதழ்களை உறவாடவிட்ட விஜயபாகு மார்புவரை தடவிக் கொடுத்து அவள் உணர்ச்சிவேகத்தைக் குறைக்க முயன்றது மட்டுமின்றி, அவள் புத்தியை வேறு திசையில் திருப்ப தான் பத்துக்கட்டம் ஆடியதைப் பற்றியும் தெரிவிக்கவே, விஜயமகாதேவி ஏதும் புரியாத சந்தேக விழிகளை அவன் மீது நிலைநாட்டி, "நீங்கள் பத்துக் கட்டம் ஆடியதற்கும் மகாரத்தினம் களவு போனதற்கும் என்ன சம்பந்தம்" என்று மெதுவாக வினவினாள்.

இந்தக் கேள்வியால் அவளுக்கு முதல் அதிர்ச்சி நீங்கி, சிறிது சுரணை வந்துவிட்டதைப் புரிந்து கொண்டு விஜயன் கவலை நீங்கிய முகத்துடன் ஓர் ஆசுவாசப் பெருமூச்சுவிட்டு, கட்டிலிலிருந்து எழுந்து சென்று அறைக்கோடியிலிருந்த ஒரு சிறு மதுக் குப்பியைக் கொண்டுவந்து அவள் வாயைத் தனது இரு விரல்களால் திறந்து சிறிது மதுவைப் புகட்டினான். அதனால் அவள் விழிகள் மயக்கம்

zeevaa

சிறிதுமின்றி நன்றாகத் திறந்து விட்டதையும் அவள் மெதுவாக எழுந்து உட்கார முயன்றதையும் கவனித்த விஜயன், "வேண்டாம் சுந்தரி, இன்னும் சிறிது நேரம் படுத்திரு", என்று கூறிவிட்டு அறை மூலைக்குச் சென்று குப்பியை வைத்துவிட்டுத் திரும்பி வந்து அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, "மகாரத்தினம் போனதற்குக் காரணம் என்ன தெரியுமா?" என்று வினவினான் அவள் இடையை இழுத்து அணைத்த வண்ணம்.

அவன் கை தனது உடலுக்குக் குறுக்கே விழுந்து இடையை அடைந்து, தன்னை இழுத்ததும் உணர்ச்சிகள் பூர்ணமாகத் திரும்பத் தொடங்கிவிட்டதால் அவளே அவனை நோக்கிப் புரண்டு, "என்ன காரணம்?" என்று வினவினாள்.

"உனக்கும் இந்தக் கப்பலிலுள்ள மற்றோருக்கும் என்னிடம் நம்பிக்கை குறைந்ததுதான் காரணம். சூ-சின் என்னை அத்தனை சுலபத்தில் அழிக்க முடியாதென்று நீயும் மற்றவர்களும் நம்பியிருந்தாலும், அல்லது ஹண்டுமானில் உங்களையெல்லாம் பலியிட நான் அழைத்துச் செல்ல மாட்டேன் என்ற உறுதியிருந்தாலும் எல்லோரும் சூ-சின்னின் சூழ்ச்சி வலையில் சிக்கியிருக்க மாட்டீர்கள். என்னிடம் நம்பிக்கை அகன்றது. சூ-சின்னின் கை ஓங்கியது", என்று கூறிய விஜயன், "இதையெல்லாம் பத்துக் கட்டம் ஆடியபோது சிற்பியே சொன்னான்", என்றும் சொன்னான்.

"யார், நாகானந்தனா?" என்று வியப்புடன் கேட்டாள் சுந்தரி.

"ஆம், எனக்குச் சேதி சொல்வதற்காகவே அவன் போலிப் பத்துக் கட்டத்தை வரைந்தான். பிறகு கீழே உட்கார்ந்து நாங்கள் ஆட முற்பட்டபோது நடக்கப்போகிற விஷயங்களையும் குறிகளால் உணர்த்தினான். இந்த மரக்கலத்தில் கொடி மரங்களின் திசையை சிறிது மாற்றினான். பிறகு இந்த மரக்கலத்தை ஹண்டுமானில் நிறுத்த வேண்டிய இடத்தைப்பற்றியும் குறிபோட்டுக் காட்டினான். சூ-சின்னின் சதித்திட்டத்தை முன்னமே சிற்பி உணர்ந்திருந்தாலும்

zeevaa

அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை அவன். நானும் கவலைப்படவில்லை", என்று கூறினான்.

பிரமை தட்டிய விழிகளை விஜயன் மீது திருப்பிய சுந்தரி கேட்டாள். "நீங்கள் கவலைப்படவில்லையா?" என்று.

"இல்லை," என்று விஜயன் பதில் சொன்னான்.

"இந்த அறை பூட்டப்பட்டு விட்டது", என்று சுட்டிக் காட்டினாள் சுந்தரி.

"ஆம்"

"நாம் எப்படி வெளியே செல்வது?"

"எதற்காக வெளியே செல்ல வேண்டும்?"

"சூ-சின்னை, பூட்டின அறைக்குள்ளிருந்தே வெற்றி கொள்ள உத்தேசமா?"

"அவனை எதற்காக வெற்றி கொள்ள வேண்டும்?" இந்தக் கேள்வியைக் கேட்டு அதிர்ச்சியடைந்த சுந்தரி, கட்டிலில் எழுந்து உட்கார்ந்து கொண்டு, "இந்த அறைக்குள் படுத்துக் கிடந்தே சூ-சின்னை வெற்றிக் கொள்ள உத்தேசமா? அதற்கு ஏதாவது மந்திரம் வைத்திருக்கிறீர்களா?" என்று வினவினாள்.

அத்தனை நெருக்கடியிலும் மெள்ள நகைத்தான் விஜயன், "மந்திரம் ஏதுமில்லை சுந்தரி. ஆனால் சூ-சின்னைப் பின்பற்றும் மந்திரம் எனக்குத் தெரியும். சூ-சின் காட்டிய வழி இருக்கிற தல்லவா?" என்று கேட்டான் நகைப்பின் ஊடே.

அத்தனை ஆபத்தான நிலையில், மகாரத்தினம் களவு போன சமயத்தில், சூ-சின்னின் கைமேலோங்கி அவன் தயவில் தாங்களிரு வரும் இருக்கும் தருவாயில் விஜயன் நகைத்ததை ரசிக்க முடியாத சுந்தரி கேட்டாள். "இப்பொழுது என்ன நகைப்பு வேண்டியிருக்கிறது?" என்று.

zeevaa

அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை அவன். நானும் கவலைப்படவில்லை", என்று கூறினான்.

பிரமை தட்டிய விழிகளை விஜயன் மீது திருப்பிய சுந்தரி கேட்டாள். "நீங்கள் கவலைப்படவில்லையா?" என்று.

"இல்லை," என்று விஜயன் பதில் சொன்னான்.

"இந்த அறை பூட்டப்பட்டு விட்டது", என்று சுட்டிக் காட்டினாள் சுந்தரி.

"ஆம்"

"நாம் எப்படி வெளியே செல்வது?"

"எதற்காக வெளியே செல்ல வேண்டும்?"

"சூ-சின்னை, பூட்டின அறைக்குள்ளிருந்தே வெற்றி கொள்ள உத்தேசமா?"

"அவனை எதற்காக வெற்றி கொள்ள வேண்டும்?" இந்தக் கேள்வியைக் கேட்டு அதிர்ச்சியடைந்த சுந்தரி, கட்டிலில் எழுந்து உட்கார்ந்து கொண்டு, "இந்த அறைக்குள் படுத்துக் கிடந்தே சூ-சின்னை வெற்றிக் கொள்ள உத்தேசமா? அதற்கு ஏதாவது மந்திரம் வைத்திருக்கிறீர்களா?" என்று வினவினாள்.

அத்தனை நெருக்கடியிலும் மெள்ள நகைத்தான் விஜயன், "மந்திரம் ஏதுமில்லை சுந்தரி. ஆனால் சூ-சின்னைப் பின்பற்றும் மந்திரம் எனக்குத் தெரியும். சூ-சின் காட்டிய வழி இருக்கிற தல்லவா?" என்று கேட்டான் நகைப்பின் ஊடே.

அத்தனை ஆபத்தான நிலையில், மகாரத்தினம் களவு போன சமயத்தில், சூ-சின்னின் கைமேலோங்கி அவன் தயவில் தாங்களிரு வரும் இருக்கும் தருவாயில் விஜயன் நகைத்ததை ரசிக்க முடியாத சுந்தரி கேட்டாள். "இப்பொழுது என்ன நகைப்பு வேண்டியிருக்கிறது?" என்று.

zeevaa

"அழுவதற்கு என்ன வந்துவிட்டது?"

"மகத்தான நஷ்டம் வந்திருக்கிறது",

"நஷ்டம் வந்தால் அழவேண்டுமா?"

"இல்லை, சிரிக்க வேண்டுமாக்கும்?"

"ஆம் சுந்தரி, எவன் சுகதுக்கங்களை, லாப நஷ்டங்களைச் சமமாகப் பார்க்கிறானோ அவன் தான் வீரன் எனப்படுகிறான். கோபத்துக்கு இடங்கொடுப்பவனை விட எவன் குதிரையை அடக்குவது போல் கோபத்தை அடக்குகிறானோ அவன் தான் சாரதி எனப்படுகிறான் என்று மகாபாரதத்தில் வியாஸ பகவான் கூறுகிறார். உதாரணமாக சூ-சின்னைப் பார். அவன் நம்மிடம் சிக்கியதும் எத்தனை அடங்கிவிட்டான்! எத்தனை பணிவு காட்டிச் சமயத்தை எதிர்பார்த்திருந்தான்! ஒரு சீனனுக்கு இருக்கும் திடசித்தம் இந்த சிங்களனுக்கு இல்லையென்று நினைக்கிறாயா?" என்று விளக்கிக் கேள்வியொன்றையும் கடைசியில் எழுப்பிய விஜயன் மேலும் சொன்னான்: "சுந்தரி! மகாரத்தினம் இந்த அறையில் இல்லையே தவிர, இந்தக் கப்பலில் தானிருக்கிறது. சூ-சின்னும் எங்கும் ஓடிவிடவில்லை. மகாரத்தினத்துடன் கடலில் குதிக்கவில்லை. இந்தக் கப்பலைச் செலுத்துபவர்கள் மனத்தைக் கலைத்துத் தன் வசமாக்கிக் கொண்டிருக்கிறான். அவன் காட்டிய பயத்தால் மாலுமிகள் மட்டுமல்ல, நமது துறவிகள் நால்வருங்கூட நிலை குலைந்திருக் கிறார்கள். ஆனால் அவர்கள் மனம் நிதானத்துக்கு வந்ததும் இந்தக் கப்பலில் கலவரம் ஏற்படும். சந்தேகம் வேண்டாம் உனக்கு. ஆனால் ஒரு பயம் மட்டும் என் மனத்தில் இருக்கிறது", இங்கு பேச்சை நிறுத்திய விஜயன் முகத்தில் சிறிது கவலையைக் காட்டினான்.

சுந்தரியின் விழிகள் அவனைச் சந்தேகத்துடன் நோக்கின. "என்ன அது? என்னிடம் சொல்லக் கூடாதா?" என்று வினவவும் செய்தாள் குரலில் கவலையைக் காட்டி.

zeevaa

"அழுவதற்கு என்ன வந்துவிட்டது?"

"மகத்தான நஷ்டம் வந்திருக்கிறது".

"நஷ்டம் வந்தால் அழவேண்டுமா?"

"இல்லை, சிரிக்க வேண்டுமாக்கும்?"

"ஆம் சுந்தரி, எவன் சுகதுக்கங்களை, லாப நஷ்டங்களைச் சமமாகப் பார்க்கிறானோ அவன் தான் வீரன் எனப்படுகிறான். கோபத்துக்கு இடங்கொடுப்பவனை விட எவன் குதிரையை அடக்குவது போல் கோபத்தை அடக்குகிறானோ அவன் தான் சாரதி எனப்படுகிறான் என்று மகாபாரதத்தில் வியாஸ பகவான் கூறுகிறார். உதாரணமாக சூ-சின்னைப் பார். அவன் நம்மிடம் சிக்கியதும் எத்தனை அடங்கிவிட்டான்! எத்தனை பணிவு காட்டிச் சமயத்தை எதிர்பார்த்திருந்தான்! ஒரு சீனனுக்கு இருக்கும் திடசித்தம் இந்த சிங்களனுக்கு இல்லையென்று நினைக்கிறாயா?" என்று விளக்கிக் கேள்வியொன்றையும் கடைசியில் எழுப்பிய விஜயன் மேலும் சொன்னான்: "சுந்தரி! மகாரத்தினம் இந்த அறையில் இல்லையே தவிர, இந்தக் கப்பலில் தானிருக்கிறது. சூ-சின்னும் எங்கும் ஓடிவிடவில்லை. மகாரத்தினத்துடன் கடலில் குதிக்கவில்லை. இந்தக் கப்பலைச் செலுத்துபவர்கள் மனத்தைக் கலைத்துத் தன் வசமாக்கிக் கொண்டிருக்கிறான். அவன் காட்டிய பயத்தால் மாலுமிகள் மட்டுமல்ல, நமது துறவிகள் நால்வருங்கூட நிலை குலைந்திருக் கிறார்கள். ஆனால் அவர்கள் மனம் நிதானத்துக்கு வந்ததும் இந்தக் கப்பலில் கலவரம் ஏற்படும். சந்தேகம் வேண்டாம் உனக்கு. ஆனால் ஒரு பயம் மட்டும் என் மனத்தில் இருக்கிறது", இங்கு பேச்சை நிறுத்திய விஜயன் முகத்தில் சிறிது கவலையைக் காட்டினான்.

சுந்தரியின் விழிகள் அவனைச் சந்தேகத்துடன் நோக்கின. "என்ன அது? என்னிடம் சொல்லக் கூடாதா?" என்று வினவவும் செய்தாள் குரலில் கவலையைக் காட்டி.

zeevaa

உடனடியாகப் பதில் சொல்லவில்லை விஜயன். சிறிது சிந்தனைக்குப்பிறகு கேள்வியொன்றை வீசினான். "மூர்சமத் என்ன ஆனான்?" என்று வினவினான்.

"அதுதான் எனக்கும் புரியவில்லை சுந்தரி, சூ-சின் என்னைவிட மூர்சமதை அதிகமாக வெறுக்கக் காரணம் இருக்கிறது. அடுத்து, கப்பலில் சீனர்கள் சிலரைக் கொன்று சூ-சின்னையும் ஆட்டுக்குட்டி போல் தோளில் போட்டுக்கொண்டு வந்தான் மூர்சமத். எந்த வீரனும் தோல்வியைச் சகிப்பான். சாகக்கூடத் துணிவான். ஆனால் அவமானத்தைச் சகிக்க மாட்டான். சூ-சின் மகாவீரன். அவன் மூர்சமதிடம் அடைந்த அவமானத்தை தாங்க மாட்டான். சமதை ஒழிக்கச் சமயம் பார்த்திருப்பான். இதைவிட நல்லசமயம் ஏது அவனுக்கு?" என்று சொன்ன விஜயன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

மனிதன் சங்கடம் வந்த நேரத்திலும் மனம் துன்பச் சுமையில் அழுந்தும் நேரத்திலும் அதற்கு ஆதரவாகச் சுகத்தை நாடுகிறான். உள்ளத்துக்குச் சாந்தி கிடைக்க உறுதுணையாய் உடலை நாடுகிறான். ஆகவே சுந்தரியை இழுத்துத் தன் மடியில் கிடத்திக்கொண்டு அவள் பூ வயிறு மீது தனது தலையை அழுத்திப் புரட்டினான். பிறகு மார்பை நோக்கித் தலையைப் புரட்டி அவள் இதயத்திடம் யோசனை கேட்டான். அது என்ன யோசனை சொன்னதோ என்னவோ காதால் அவள் இதயத் துடிப்பை உற்றுக் கேட்டான். சிறிது நேரத்திற்குப் பிறகு எழுந்து உட்கார்ந்து, "சுந்தரி! சூ-சின் முட்டாளல்ல. மூர்சமதைக் கொன்றிருக்கமாட்டான். கொன்றால் இத்தனை நேரம் இந்த மரக் கலம் அல்லோலகல்லோலப்பட்டிருக்கும். துறவிகள் வாளாவிருக்க மாட்டார்கள். ஆதிமல்லன் ஆட்கள் கூட மூர்சமதின் மிது கையை வைக்க அனுமதிக்க மாட்டார்கள். சீனர்களிடமிருந்து அவர்களுக்குப் பாதுகாப்பை அளிக்க எனக்கு அடுத்தபடி மூர்சமத் ஒருவன் தானிருக்கிறான். தவிர மகாரத்தினம் களவு போனதையும் விளம்பரப்

படுத்தமாட்டான் சூ–சின். விளம்பரமானால் ஆதிமல்லன் ஆட்களும் அதைக் கைப்பற்றப் பார்ப்பார்கள். உனக்கு நினைவில்லையா சுந்தரி, அதை என்னிடம் கொடுக்க உன் தந்தையே இஷ்டப்படவில்லை. முதலில் அதை எங்கள் குலதனமென்றார். பிறகு உனக்குச் சீதனமென்றார் கடைசியில் அதைத்தானே வைத்துக்கொள்ள முயன்றார். பிக்கு இல்லாவிட்டால் அது நம்முடன் இந்தக் கப்பலுக்கு வந்திராது".

பிறகு அவளைத் தூக்கிக் கட்டிலில் கிடத்திவிட்டு எழுந்து அறையில் இங்குமங்கும் உலாவினான் நீண்ட நேரம். "ஆம், மூர்சமதைக் கொல்ல மாட்டான் சூ–சின், ஆனால் அவனை வேறு ஏதாவது செய்திருந்தால்?" என்று தனக்குத்தானே பேசிக்கொண்டான்.

அவன் சொற்களைப் பூலமாகவே உச்சரித்ததால் அவற்றைக் காதில் வாங்கிய சுந்தரி, "வேறு என்ன செய்திருக்க முடியும்?" என்று வினவினான்.

விஜயன் அவள் கேள்விக்கு பதில் சொல்லவில்லை. அவளுக்கெதிரில் வந்து நின்று வெறித்துப் பார்த்தான். பிறகு தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். "அதைத்தான் நானும் அறியப் பார்க்கிறேன்", என்று. "இதற்குக் கிடைக்கும் விடையிலிருக்கிறது நமது விடிமோட்சம்" என்றும் இரைந்தே பேசினான். அவன் ஆத்துமாவை நோக்கிக்கேட்ட கேள்வி ஆண்டவனுக்கே எட்டியிருக்க வேண்டும். அடுத்த வினாடி பதில் கிடைத்தது. ஆனால் என்ன பயங்கரமான பதில்!

அந்த அறைக்கு வெளியே பூட்டைத் திறக்கும் ஒலியும் தாழ்ப்பாள் திறக்கும் ஒலியும் கேட்டன. அடுத்து கதவுகள் திறந்தன. சீனத்து வீரர்கள் இருவர்களால் தள்ளப்பட்ட மூர்சமத் தள்ளாடித் தள்ளாடி அறைக்குள் வந்து அறை நடுவே நின்றிருந்த விஜயன் காலுக்கருகில் வெட்டிச் சாய்த்த மரம்போல் விழுந்தான். அவன் கதியைப் பார்த்த

zeevaa

விஜயன் சீற்றத்தின் எல்லையை அடைந்தான். "அந்த சூசின்னை எனது இரு கைகளாலும் கொன்று விடுகிறேன்" என்று இரைந்து கொண்டு திறக்கப்பட்டிருந்த கதவை நோக்கிச் சொன்னான்.

அவன் இரண்டடி எடுத்து வைக்குமுன்பு கதவுகள் திரும்பவும் மூடிப்பூட்டப்பட்டன.







zeevaa

## 20. தெரிந்த குரல்! தெரியாத புதிர்!!

மூர்சமத் என்ன ஆனான் என்று ஆத்மாவை நோக்கி தான் கேட்ட கேள்விக்கு அத்தனை பயங்கரமான பதில் கிடைக்குமென்று சொப்பனத்திலும் நினைக்காததால் விஜயன் அளவுக்கு மீறிய அதிர்ச்சியை அடைந்தது மட்டுமின்றி திரிலோகசுந்தரியும் திக்பிரமை பிடித்து நின்றாள். கதவுகள் திடீரெனத் திறந்ததும் சீனத்து வீரர்கள் இருவர் மூர்சமதை இழுத்து அறைக்குள் தள்ளியதையும் மூர்சமத் தள்ளாடி தள்ளாடி தன்னை நோக்கி நடந்து வந்ததையும் கண்ட விஜயன் இரண்டடி எடுத்து வைத்து, அவனைப் பிடிக்கப் போக, அதற்கு முன்னே மூர்சமத் வெட்டிச்சாய்க்கப்பட்ட மரம்போல் தடாலென காலடியில் விழுந்துவிடவே, சுயநிலையை அறவே இழந்த சிங்களத்துச் செல்வன், சூசின்னைக் கொன்று விடுகிறேன் என்று கூச்சலிட்டுக் கொண்டு அறை வாயிற்படியை நோக்கிச் செல்ல முயன்றதும், அறைக் கதவுகளும் மூடப்பட்டதை உணர்ந்ததால் செய்வதேதும் அறியாமல் பிரமை பிடித்து நின்று விட்டான் சில விநாடிகள்.

மூர்சமதின் தலைமட்டும் இருமுறை அவனது புறங்காலில் புரண்டிருக்காவிட்டால் அந்தப் பிரமை நீண்ட நேரம் நீடித்திருக்கும் சிங்களத்து மன்னனுக்கு.

ஆனால் மூர்சமதின் தலை புரண்டதும் சகலத்தையும் மறந்து சட்டென்று கீழே முழந்தாளிட்டு உட்கார்ந்து தனது மடிமேல் மூர்சமதின் தலையைச் சிரமப்பட்டு எடுத்துவிட்டுக் கொண்டு, "சுந்தரி! சிறிது மது கொண்டுவா!" என்று கலிங்க ராஜகுமாரியை ஏறெடுத்துப்

zeevaa



zeevaa

பாராமலே சொன்னான் விஜயன். அவள் மதுவைக் கொண்டு வருமுன்பே சிரமப்பட்டு மூர்சமதின் ராட்சச உடலை லேசாகப் புரட்டி அவன் தலையையும் தன்னைப் பார்க்கும்படி திருப்பிய விஜயன் மூர்சமதின் முகமும் தலையும் இருந்த நிலை கண்டு சீற்றத்தின் எல்லையை எய்தினான்.

மூர்சமதின் பொட்டுகளிரண்டிலும் குறுவாள் பிடிகளால் தாக்கப்பட்ட ரணங்கள் இருந்தன. அந்தக் காயங்கள் மிக லாவகமாகச் செய்யப்பட்டிருந்ததால் வெளியே ரத்தம் கசியா விட்டாலும் கறுப்பு ரத்தம் கட்டி உள்காயம் பலமாயிருந்தது.

மூர்சமதின் நெற்றிக்குக் குறுக்கே மணிக்கயிற்றின் இடைமுடிகள் ஆங்காங்கு பதிந்திருந்தது நன்றாகவே தெரிந்தது. அவன் முகத்துக்கு முறுக்கு மணிக்கயிறு போடப்பட்டு பின்னால் பிடரி வரை இழுக்கப்பட்டு புட்கள் கொண்டு இறுக்கப்பட்டிருக்க வேண்டுமென்பதையும், அதனால் நெற்றியில் நரம்புகள் புடைக்கும் நிலை ஏற்பட்டிருக்க வேண்டுமென்றும் விஜயன் தீர்மானித்தான். பிறகு மூர்சமதின் முதுகு மணிக்கட்டுகள் இவற்றையும் நோக்கிய விஜயன். அந்த இணைப்பு எலும்புகளின் சதைகள் லேசாகப் பிரிந்தும் கரு ரத்தம் கட்டியும் இருப்பதைப் பார்த்தான். இத்தனைக்கும் மேலாக மூர்சமதின் கழுத்தில் ஊட்டிக்குக் குறுக்கே ஒரு கத்திக் காயம் லேசாக இருந்ததையும் கவனித்ததும் நடந்தது என்னவென்பதைச் சந்தேகமற உணர்ந்து கொண்டதால் அவன் கண்கள் கொலைப் பார்வையைச் சிந்தின.

ஆனால் அந்தக் கொடிய ஒளி சிறிது நேரத்தில் மறைந்து சிந்தனை ஒளியைப் படரச் செய்யவே, சில வினாடிகள் அடுத்துச் செய்ய வேண்டியதைத் தீர்மானித்துக் கொண்டு பக்கத்தில் மதுக்குப்பியுடன் நின்ற கலிங்க ராஜகுமாரியின் கையிலிருந்த குப்பியை வாங்கிக் கொண்டு மூடியைத் திறந்து மூர்சமதின் வலிய உதடுகளை நீக்கி மதுவைச் சிறிது சிறிதாகச் செலுத்தினான். பிறகு சமதைத் தரையில்

zeevaa

பழையபடி படுக்க வைத்து எழுந்து நின்று குப்பியை அரசகுமாரியிடம் கொடுத்து, "சுந்தரி! அதை வைத்து விட்டு வா. இவனைத் தூக்க ஒரு கை கொடு", என்று கூறினான்.

மூர்சமதின் ராட்சஸ உருவத்தைக் கண்டு பயந்த சுந்தரி, "நானா! இவரைத் தூக்கவா! கை கொடுப்பதா!" என்று வினவினாள்.

விஜயன் அவளை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அவள் கேள்வி களைக் காதிலும் வாங்கிக் கொள்ளவில்லை. "கால் பக்கம் போ, இவனை நான் தூக்கியதும் கால்களை மாத்திரம் சிறிது தூக்கு. அதிக கனம் இருக்காது உனக்கு; கனம் முழுவதையும் நான் தாங்கிக் கொள்கிறேன்", என்று அதட்டலான குரலில் பேசிவிட்டுத் தனது இரு கைகளையும் மூர்சமதின் கைகளுக்குக் குறுக்கே கொடுத்து மெதுவாகத் தூக்கினான். கலிங்கத்து ராஜகுமாரியும் சமதின் கால்களைப் பிடித்துத் தனது சக்தி முழுவதையும் உபயோகப்படுத்தி மூச்சைஇழுத்துப் பிடித்துக்கொண்டு தூக்கினாள். பாரம் முழுவதை யும் விஜயன் தாங்கிக் கொண்டதையும், அவன் மூர்சமதைக் குழந்தைபோல் தூக்கி நிற்க வைத்துத் தனது தோளில் சாத்திக் கொண்டதையும் கவனித்த கலிங்க ராஜகுமாரி விஜயனும் பெரிய ராட்சஸனாயிருக்க வேண்டுமென்று நினைத்தாள். பேருக்கு மட்டும் காலைப்பிடித்திருந்தாள்.

மூர்சமதின் முழுச் சுமையை ஏந்திய விஜயன் அவனை நகர்த்திச் சென்று கட்டிலில் கிடத்தி மெள்ளப் புரட்டி மல்லாந்த நிலையில் படுக்க வைத்தான். "கால் பக்கம் உட்கார்ந்து அவன் கால்களை மெள்ள வருடு. அவன் நரம்புகளில் ரத்த ஓட்டம் நன்றாகச் சுழலட்டும்", என்று சுந்தரிக்கு உத்தரவிட்டு, தான் சமதின் நெற்றி, மார்பு, மணிக்கட்டுகள் இவற்றை மெள்ளத் தடவலானான். அவ்வப்பொழுது மூர்சமதின் விழிகளைத் திறந்து பார்த்து திருப்திக்கு அறிகுறியாகத் தலையை ஆட்டிக் கொண்டான்.

zeevaa

கலிங்க ராஜகுமாரி மூர்சமதின் கால்களைச் சற்று அழுத்த மாகவே வருடினாள். "ஒரு அரசகுமாரி செய்யும் வேலையா இது?" என்று உள்ளூரத் தன்னைக் கேட்டுக் கொள்ளவும் செய்தாள்.

அவள் மனத்திலோடிய எண்ணங்கள் விஜயனுக்கும் புரிந்திருக்க வேண்டும். துன்பப் புன்முறுவல் செய்து, "சுந்தரி! பணிமகனான மூர்சமதின் காலைப் பிடிப்பதற்கு உனது நெஞ்சம் கூசுகிறதல்லவா?" என்று வினவினான்.

சுந்தரி வியப்பு மிகுந்த விழிகளை அவன் மீது திருப்பி, "அப்படி ஒன்றும் இல்லையே", என்று பொய் சொன்னாள்.

விஜயன் அவளைக் குற்றம் சாட்டும் முறையில் நோக்கி, "உன் உதடுகள் பொய் சொல்கின்றன. உன் கண்கள் உண்மையைப் பேசுகின்றன," என்றான் குற்றம் சாட்டும் குரலில்.

"ஒரே உடலில் கண் வேறு, உதடு வேறா?" என்று அரசகுமாரி கேட்டாள்.

"ஆம் சுந்தரி! உதடு உடலைச் சார்ந்தது. ஆனால் கண் நமது மூளையின் சாளரம். ஆகையால் மூளையில் உதயமாவதைக் கண் சொல்லும்," என்று விளக்கினான்.

ராஜகுமாரி பதில் சொல்லாமல் மௌனமே சாதித்தாள். ஆனால் அந்த மௌனம் பேசிய பேச்சுக்களை உணரவே செய்த விஜயன், "சுந்தரி! நீ ஓர் அரசகுமாரி. உன் கால்களைத் தோழிகள் வருடியிருப்பார்கள். யார் காலையும் வருட உனக்கு வாய்ப்பிருந்த தில்லை. அந்த வாய்ப்பை நான் அளித்திருக்கிறேன் உனக்கு. மூர்சமதின் காலை வருட நீ கொடுத்து வைத்திருக்க வேண்டும்", என்றான்.

சுந்தரி அவனை எரிச்சலுடன் ஏறெடுத்து நோக்கினாள் "மூர்சமத் அரசனா, சக்கரவர்த்தியா? என்னைவிட உயர்ந்தவனா?" என்று

zeevaa

வினவவும் செய்தாள். அவள் குரலில் துன்ப அலைகள் பாய்ந்து வந்தன.

விஜயன் மூர்சமதின் தலைப்பகுதியிலிருந்து எழுந்து கட்டிலுக்கு அருகில் நின்றுகொண்டு, "சுந்தரி! அந்தக் கால்களை நான் வருடுகிறேன். விடு இடத்தை," என்று அவளைப் பிடித்து அப்புறம் தள்ளிவிட்டு மூர்சமதின் கால்களை நின்ற வண்ணமே பிடிக்க லானான். பிடித்துக் கொண்டே சொன்னான். "சுந்தரி! மூர்சமத் உன்னைப் போல் ஆயிரம் அரசகுமாரிகளுக்குச் சமமானவன். உன்னைவிடப் பல மடங்கு உயர்ந்தவன். அவனுக்கு இணை உலகத்தில் கிடையாது. உன்னை விட்டுவிடுவேன். சிங்களத்தின் அரியணையை விட்டு விடுவேன். ஆனால் மூர்சமதை விடமாட்டேன். அவன் எனது மெய்க்காவலன் மட்டுமல்ல, எனது தாய், குரு, சகோதரன் எல்லாம் அவன்தான்", என்று உணர்ச்சி பொங்கப் பேசினான்.

அதற்குப்பிறகு அவன் அரசகுமாரியிடம் பேச்சுக் கொடுக்கவு மில்லை; அவளைப் பார்க்கவுமில்லை. அவன் பார்வையெல்லாம் மூர்சமதின் மேல் தானிருந்தது.அவன் சீரான சுவாசத்தை கவனித் தான் விஜயன். மெள்ள நாடிகளையும் பிடித்துப் பார்த்தான். காதை மூர்சமதின் மார்பில் வைத்து இதயத் துடிப்பை உற்றுக் கேட்டான். பிறகு எழுந்து, "சுந்தரி! நான் மெதுவாக மூர்சமதைப் புரட்டிக் கொள்கிறேன். இந்தப் பஞ்சணை மீதிருக்கும் விரிப்பை எடுத்துக் கொள்", என்று கூறி மூர்சமதின் உடலை மெதுவாக ஒருபுறம் புரட்டினான், சுந்தரியும் விரிப்பை மெள்ள எடுத்து மடித்து. "இதை எங்கு வைக்கட்டும்?" என்று வினவினாள்.

"எங்கும் வைக்க வேண்டாம்: தரையில் விரித்துப் போட்டுவிடு. படுத்துக் கொள்ளலாம்", என்றான் விஜயன்.

சுந்தரி விஜயனைச் சிறிது சினத்துடன் நோக்கினாள். "மூர்சமத் படுத்த விரிப்பில் நான் படுத்துக் கொள்வதா?" என்றும் வினவினாள்.

zeevaa

"வேண்டாம். கட்டிலில் ஓர் ஓரத்தில் படுத்துக் கொள். எனக்கு ஆட்சேபணையில்லை", என்றான் விஜயன்.

அடுத்துப் பேசவில்லை ராஜகுமாரி. விரிப்பை எடுத்து அறையின் இன்னொரு மூலையில் விரித்துப் படுத்துக் கொண்டாள். கூனிக் குறுகிப் படுத்துத் தனது வெறுப்பைக் காட்டவும் செய்தாள்.

அவள் போக்கைக் கவனித்த விஜயன் உள்ளூர நகைத்துக் கொண்டான். 'அரச குலத்தாருக்குத் தெரிந்ததெல்லாம் தங்கள் உயர்வும் பிறர் தாழ்வுந்தான். புரட்சி ஏற்படும் வரை புத்தி வருவது கிடையாது', என்று தனக்குள் சொல்லியும் கொண்டான். பிறகு அவன் அரசகுமாரியை அறவே கவனிக்காமல் மூர்சமதையே கவனித்துக் கொண்டிருந்தான்.

அறைக் கோடியிலிருந்த மண் குடத்தில், தனது ஒரு சிறு துணியை விட்டு நீரில் நனைத்துப் பிழிந்து எடுத்து மூர்சமதின் நெற்றியிலும் காயமடைந்த இடங்களிலும் ஒற்றினான். பிறகு அவன் கழுத்தைத் தொட்டுப் பார்த்து, "நல்லது சுரம் வந்திருக்கிறது", என்று சொல்லிக் கொண்டான்.

அடுத்த அரை ஜாமத்திற்குப் பிறகு, "உம் உம்", என்று இருமுறை முனகினான் மூர்சமத்.

அடுத்து உளற முற்பட்டான் பலவிதமாக. "சூ-சின்! எல்லாம் என் எசமானனால் வந்தது. உன்னைக் கொல்ல அவருக்கு இஷ்டமில்லை. கொன்று போட்டிருந்தால் நீ என் முன்னால் இப்பொழுது நிற்கமாட்டாய் அல்லவா?" என்று சொல்லி மௌனம் சாதித்தான் சில விநாடிகள். "சூ-சின்! மடையா! முறுக்குக் கயிற்றுக்கு மூர்சமத் அஞ்சமாட்டான். இந்த நாலு சீனர்களா? அருகில் வந்தால் பிணமாகப் பிடித்துப் போட்டுவிடுவேன். அப்பா" கடைசியாக ஒரு அலறல், மௌனம், பிறகு முனகல்.

zeevaa

நடந்ததைச் சந்தேகமறப் புரிந்துகொண்டான் விஜயன். "மூர் சமதைச் சுற்றித் தனது திட்டத்தைக் கக்க வைக்கப் பார்த்திருக்கிறான் சூ-சின். அவன் எதற்கும் மசியாமல் போகவே பின்னால் நின்ற சீனனைச் சமதின் பொட்டிலடிக்கச் செய்திருக்கிறான். மயக்க நிலையில் மூர்சமதை சித்திரவதை செய்திருக்கிறான். எதற்கும் மசியாததால் குற்றுயிரும் குலை உயிருமாக எனது அறையில் கொண்டு வந்து தள்ளியிருக்கிறான். இது என்னைப் பயமுறுத்த" என்று சொல்லிக் கொண்டான்.

சுமார் அரை ஜாமம் சென்ற பிறகு மூர்சமத் கண்களை மூடினான். அவன் மூச்சு ஒரே சீராக வந்து கொண்டிருந்தது.

அதனால் சிறிது நேரம் தரையில் படுத்துக் கொண்ட விஜயன் மறுபடியும் ஒருமுறை மூர்சமதைப் பார்த்தான். பிறகு திகில் நிறைந்த குரலில் அரசகுமாரியை எழுப்பி, "விரிப்பை எடு", என்று கூறினான் உணர்ச்சிகள் சிதைந்த குரலில்.

"என்ன" என்று அதிர்ச்சியுடன் கேட்டாள் அரசகுமாரி.

"மூர்சமத்!" என்று கட்டிலைக் காட்டினான் விஜயன்.

மூர்சமதின் உடலில் அசைவு ஏதுமில்லை. விரிப்பை எடுத்த விஜயன் அவன் மீது போர்த்தி முகத்தையும் மூடினான். "மூர்சமதின் கதை முடிந்து விட்டது, "என்று இதயம் விரியும் குரலில் பேசினான். பிறகு விரிப்பைச் சற்று நீக்கி அவன் கன்னத்தோடு தன் கன்னத்தை வைத்து இழைத்தான். மீண்டும் முகத்தை மூடிவிட்டுக் கதவை நோக்கிச் சென்று கதவை தடதடவென்று தட்டினான். காவலன் ஒருவன் வெளியிலிருந்தவாறே கேட்டான், "என்ன?" என்று?

"கதவைத் திற".

"உத்தரவில்லை".

சூ-சின்னை அழைத்து வா".

zeevaa

இதற்கும் பதிலில்லாமல் போனாலும் காவலன் நடந்து செல்லும் அரவம் கேட்டது விஜயன் காதுகளுக்கு. சிறிது நேரத்தில் சூ-சின்னும் வந்து சேர்ந்தான். கதவு திறந்து கட்டாரிகள் ஏந்திய இரு சீனர் முதலில் நுழைந்தனர். அவர்களுக்குப் பின்னால் வந்த சூ-சின், "எதற்கு என்னை அழைத்தாய்?" என்று வினவினான்.

கட்டிலில் கிடந்த மூர்சமதைச் சுட்டிக்காட்டினான் விஜயன். மூர்சமதின் சலனமற்ற உடலைப்பார்த்த சூ-சின், 'இவனைக் கொல்லும் நோக்கம் எனக்கில்லை' என்றான்.

"நோக்கம் வேறு விளைவு வேறு இவனைக் கொன்றது நீ. நீயும் சாகத் தயாராயிரு," என்ற விஜயன் குரலில் கடுமை அதிகமா யிருந்தது.

சூ-சின் அதைப்பற்றி கவலைப்படவில்லை. "கடல் பகுதியில் இந்த மாதிரி விபத்துக்கள் சகஜம்" என்று சொன்னான். "ஆனால் விஜயா! என்னைக் கொன்றுவிட நீ கனவு காண்பது நடவாது," என்று விஜயனை நோக்கி கூறிவிட்டு, "டேய்! இந்த உடலைக் கடலில் தூக்கி எறியுங்கள்," என்று உத்தரவிட இன்னும் பத்து சீனர்கள் உள்ளே நுழைந்தனர். நால்வர் அரச குமாரியையும் காத்து நிற்க சூ-சின் மட்டும் கட்டிலண்டை சென்று மூர்சமதின் முகத்திலிருந்த துணியை நீக்கினான். குனிந்து அவன் முகத்தை கவனிக்கவும் செய்தான். பிறகு நிமிர்ந்து விஜயனை நோக்கி, "இதைதான் எதிர்பார்க்கவில்லை" என்றான்.

விஜயன் பதில் சொல்லாமல் மீண்டும் போர்வையைக் கொண்டு மூர்சமதின் முகத்தை மூடினான். சூ-சின் அந்த அறையை ஒருமுறை சுற்றும் முற்றும் நோக்கினான். "உன்னைச் சிறை செய்ததைப் பற்றி வருந்துகிறேன். சுமத்ராவை அணுகியதும் உன்னைக் கரையில் இறக்குகிறேன். பிறகு நீ எங்கு வேண்டுமானாலும் போகலாம்" என்று சொல்லிவிட்டு, "இவனை அடக்கம் செய்ய என்ன வேண்டும்?" என்று கேட்டான்.

zeevaa

"அதை தர்மரும் அர்த்தரும் கவனிப்பார்கள். அவர்களை அனுப்பிவை" என்றான் விஜயன்.

அத்துடன் வெளியேறிய கூ-சின் மிகுந்த உற்சாகத்துடன் தளத்துக்குச் சென்றான். காற்றையும் நோட்டம் பார்த்தான். பிறகு இரண்டு சீனர்களை அழைத்து, "பாயை இறக்குங்கள், சுக்கானை நேர் தெற்கில் திருப்ப தர்மரிடம் சொல்லுங்கள்", என்று உத்தரவு பிறப்பித்தான். சீனர்கள் அவன் உத்தரவை நிறைவேற்றச் சென்றதும் கூ-சின் மிகுந்த மகிழ்ச்சியுடன் தளத்தில் நீண்டநேரம் உலாவினான். மூன்றாம் ஜாமம் நகர்ந்து நான்காம் ஜாமம் வருவதற்குள் மரக்கலப் பாய்கள் இறக்கப்பட்டு மரக்கலம் மெதுவாகத் திசை திரும்பியது.

கூ-சின் மிகுந்த மகிழ்ச்சியுடன், "இன்று நான் தளத்திலேயே படுக்கிறேன்," என்று கூறிக்கொண்டு தளத்தின் பக்கப்பலகை ஒன்றில் சாய்ந்து கண்களை மூடினான். அவன் நன்றாக உறங்க முற்பட்டு நாழிகைகள் பல இருக்கும். மெள்ள விழித்து அண்ணாந்து நோக்கினான். விடிவதற்குச் சில நாழிகைகளே இருப்பதை உணர்ந்ததால், "இனி உறங்குவது தவறு" என்று சற்று இரைந்தே சொல்லி எழுந்திருக்க முயன்றான்.

எழுந்திருக்க முடியவில்லை. பலமான இரு கைகள் அவன் தோள்களை அழுத்திக் கொண்டிருந்தன. "எழுந்திருக்காதே," என்ற உபதேசமும் திட்டமாகச் செய்யப்பட்டது. உபதேசம் செய்த குரல் அவனுக்குத் தெரிந்த குரல். இனித் தன் உயிர் அரைக்காசு பெறாதென்பதை கூ-சின் சந்தேகமற உணர்ந்து கொண்டான்.

zeevaa

# 21. மோகூஷரின் கைகள்

அரை ஜாம நேரம், அயர்ந்து உறங்கிவிட்டு அகலக் கண்களை விரித்து ஆகாயத்தை நோக்கி விடிய அதிக நேரமில்லை என்று அறிந்ததால் எழுந்திருக்க முயன்ற சூ-சின், எழுந்திருக்கமுடியாமல் தனது தோள்களை இருகைகள் இரும்புப்பிடியாகப் பிடித்து அழுத்திக் கொண்டிருந்ததை உணர்ந்து வியப்படைந்தானென்றால், "எழுந்திருக் காதே!" என்று அவன் காதில் ஒலித்த குரல் அந்த வியப்பை அச்சமாகவும் மாற்றியது. அது தெரிந்த குரல் தானென்றாலும் தெரியாத புதிரும் அதில் கலந்திருந்ததால் பிரமிப்பின் வசப்பட்டான் சீனக் கடலோடியான சூ-சின். இறந்த மூர்சமதின் குரல்தான் அது என்பதை அறிந்ததும் தன் உயிர் அரைக் காசு பெறாதென்பதை உணர்ந்து கொண்ட சூ-சின், "மூர்சமத்! நீயா!" என்றும் வினவினான். குரலில் அச்சமும் வியப்பும் கலந்து ஒலிக்க.

மூர்சமத் பயங்கரமான தனது விழிகளை மெதுவாகச் சூ-சின் மீது திருப்பி, சூ-சின்னை இடது கையால் பிசாசு அழுத்தலாக அழுத்தி, சூ-சின்! நான்தான். சந்தேகமிருந்தால் திரும்பிப்பார்", என்று உட்கார்ந்த நிலையிலேயே சூ-சின்னைத் தன்னை நோக்கித் திருப்பினான்.

லேசான ஆகாய ஒளியில் மூர்சமதின் முகத்தை நோக்கிய சூ-சின் அச்சத்துக்குப் பதில் வியப்பே அடைந்தான். மூர்சமதின் அகன்ற பருத்த பெருமுகத்தில் அப்பொழுதும் மணிக் கயிறுகளின் முடிச்சுகள் படிந்த இடங்கள் தெளிவாகத் தெரிந்தன. பொறிகளில் மணிக்கயிறுகள் விளைவித்த குரூரத்தால் இரண்டு முண்டுகள்

zeevaa

எழும்பி கருரத்தமும் தோய்ந்து கிடந்தன. முகத்திலும் மணிக் கயிற்றின் முடிச்சுகள் கரு ரத்தத்தை மட்டுமின்றிச் சில இடங்களில் ரத்தத்தைக் கசியவும் வைத்திருந்ததால் சிவப்பும் கருப்புமான திட்டுக்கள் ஏற்கனவே பயங்கரமான ஷூர்சமதின் முகத்துக்கு அதிக பயங்கரத்தையும் மாற்றத்தையும் அளித்திருந்தன. மாறாத இடங்கள் அவன் மீசை அடர்த்தியாக வளர்ந்திருந்த மேலுதடும், குறுந்தாடி காட்சியளித்த முகவாய்க்கட்டையுந்தான். அவற்றிற்கும் ஒரு மாற் றத்தை அளிக்க ஷூர்சமதின் பெருவிழிகள் சூ-சின்னை நோக்கிக் கனலைக் கக்கின. பெரிய மீசை அசைந்து உதடுகள் லேசாகத் திறந்து பற்கள் கடிக்கப்பட்டிருந்ததையும் காட்டியதால் சூ-சின் தனக்கு அந்திமக் காலம் நெருங்கிவிட்டதை உணர்ந்தான். இருப்பினும் அச்சத்தை உள்ளடக்கி, சர்வ சாதாரணமாகப் பேச்சுக் கொடுக்கத் தொடங்கி "ஷூர்சமத், நீ இறந்துவிட்டதாக நினைத்தேன்", என்று சொன்னான்.

ஷூர்சமதின் பற்கள் நன்றாகத் தெரிய உதடுகள் லேசாகத் திறந்தன. "நாம் நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் உலகத்தில் தெய்வத்துக்கு வேலையில்லை", என்று ஷூர்சமத் ரகசியமாகப் பேசினான்.

சூ-சின் மேலும் பேச்சுக் கொடுத்தான். "நான் பார்த்த போது......." என்று.

"நான் இறந்தது போல் கிடந்தேன்", என்று ஷூர்சமத் வார்த்தையை முடித்தான்.

"அப்படியானால் நீ இறக்கவில்லையா?" சூ-சின் கேட்டான்.

"இங்கு நான் உட்கார்ந்திருப்பதிலிருந்து உனக்கு எப்படித் தெரிகிறது?" என்று வினவினான் ஷூர்சமத்.

"நீ மூச்சுப் பேச்சில்லாமல் கிடந்ததை நான் எனது இரண்டு கண்களாலும் பார்த்தேனே?" என்றான் சூ-சின்.

zeevaa

"ஒரு பழமொழி உண்டு கூ-சின்",

"என்ன பழமொழி?"

"கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய்!"

"சமத்!"

"சொல், கூ-சின்".

"என்னால் ஒருவன் இறந்து விட்டானா, அல்லது உயிருடன் இருக்கிறானா என்பதை அறிந்து கொள்ளக்கூட முடியாதா?"

"முடியாதென்று இப்பொழுது தெரிகிறதல்லவா?" இப்படிக் கேட்ட மூர்சமத் உள்ளூர நகைப்பதற்கு அறிகுறியாக உறுமினான்.

கூ-சின் மேலும் சந்தேகம் கேட்டான். "மூர்சமத்! நீ சாகா விட்டாலும் நான் பார்த்தபோது நினைவு தெரியாமல் மூர்ச்சையாகிக் கிடந்தாயல்லவா?" என்று.

அப்படித்தான் கிடந்திருக்க வேண்டும். ஆனால், முழு மூர்ச்சையாகவில்லை நான். என் மீது போர்வையைப் போர்த்திய எசமான் என் கன்னத்தோடு தமது கன்னத்தை இழைத்து, "சமத்! மூச்சை நன்றாக இழுத்துப் பிடித்துக் கொள், என்றார். எசமான் சொல்லை நான் மீறியது கிடையாது", என்று மெள்ள உண்மையை விளக்கினான் மூர்சமத்.

"அப்படியானால் நீ உயிருடனிருப்பது விஜயனுக்குத் தெரியுமா?" கூ-சின் சற்றுச் சினத்துடன் கேட்டான்.

"தெரியாமலா நீ வந்து சென்றதும் என் முகத்தில் நீர் அடித்து, என் கை கால்களைப் பிடித்து ரத்தம் சுழலச் செய்து, மதுவையும் புகட்டினார்?" என்று நடந்ததைக் கேள்வியாகக் கேட்டு விளக்கினான் மூர்சமத்.

zeevaa

கூ-சின்னின் முகத்தில் எரிச்சலும் சினமும் கலந்து படர்ந்தது. "உன்னை நான் அப்பொழுதே தூக்கிக் கடலில் எறியச் செய்திருக்கவேண்டும்", என்றான் குரலிலும் எரிச்சல் துலங்க.

மூர்சமத் மெல்ல நகைத்தான். "உன் புத்தி காலங்கடந்து வேலை செய்கிறது", என்று நகைப்பின் ஊடே சொன்னான்.

"இப்பொழுது என்னை என்ன செய்வதாக உத்தேசம்?" என்று கூ-சின் வினவினான்.

"நீ செய்யாததை நான் செய்வதாக உத்தேசம்".

"நான் செய்யாததா?"

"ஆம், ஆனால் செய்ய நினைத்தது".

"விளங்கவில்லை நீ சொல்லு......." என்று கூ-சின் சொன்னதும் சொல்லாததுமாக அவன் கழுத்தைச் சுற்றியிருந்த மூர்சமதின் இடது கை நன்றாக அவன் கழுத்தில் இறுக்கியது. கூ-சின் மூச்சுத் திணற ஆரம்பித்தான். அப்படி இறுக்கிய கை சரேலென்று கீழே இறங்கி முதுகுப் பக்கத்தில் அழுத்த, சமதின் வலது கை இன்னொரு புறம் எதிர்ப் பக்கத்தில் வர, இரு கைகளாலும் கூ-சின்னை இறுக்கி அணைத்த வண்ணம் எழுந்திருந்த மூர்சமத் சீனனைச் சரேலென்று அனாயாசமாகத் தூக்கித் தனது தோளில் போட்டுக் கொண்டான். எதிரே தூங்கிக் கொண்டிருந்த இன்னொரு மாலுமியைக் காலால் உதைத்து எழுப்பினான்.

எழுந்திருந்த அந்தச் சீனன் எதிரே விரிந்த காட்சியை அவநம்பிக்கை உதிர்ந்த கண்களுடன் பார்த்தான். பிறகு ஏதோ சொல்ல முற்பட்டான். "வாயைத் திறந்தால் உன் எசமான் நீராடச் செல்வார்", என்று முரட்டுக் குரலில் எச்சரித்தான் மூர்சமத். பிறகு தோளிலிருந்த கூ-சின்னை இன்னொரு கையால் செல்லமாகத் தட்டி, "கூ-சின்! சீனனை எச்சரித்து வை. யாரும் உன்னைத் தேட வேண்டாமென்றும் சொல்லிவை", என்றும் சொன்னான்.

zeevaa

பிராணன் போய்விடும் போல் முதுகில் செல்லமாக விழுந்த இரண்டு தட்டுக்கள் எனும் அறையால் வலி தாங்காது முகம் சுளித்த சூ–சின், "யாரும் எங்கள் விஷயத்தில் தலையிட வேண்டாம்", என்று கூறினான் வேதனை நிறைந்த குரலில்.

சீனன் மூர்சமதைப் பிரதட்சிணம் செய்து பின்புறமாக வந்து சூ–சின்னின் தொங்கிக் கொண்டிருந்த தலையை நோக்கிக் குனிந்து, "தங்கள் உத்தரவு இதுதானா?" என்று வினவினான்.

"வேறு எப்படி இருக்கும் உத்தரவு? நீங்கள் தாறுமாறாக நடந்தால், இவன் என்னைக் கொன்று விடுவான். சொன்னபடி செய். மற்றவர்களுக்குச் சொல்லி வை", என்றான். தொங்கிய தலையைச் சிறிது நிமிர்த்தி.

தோளில் சீனனைப் போட்டுக் கொண்ட மூர்சமத் சுற்றுமுற்றும் தளத்தை நோக்கினான். விடியும் சமயமாயிருந்தாலும் அங்கிருந்த நாலைந்து சீன மாலுமிகள் இரவு முழுவதும் கண் விழித்திருந்ததால் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். தளம் முழுவதிலும் அந்த நாலைந்து சீன மாலுமிகளைத் தவிர வேறு யாரும் இராததிலிருந்து ஆதிமல்லன் ஆட்களில் துடுப்புத் துழாவுபவர்களைத் தவிர மீதிப்பேர் கீழ் அறைகளில் எங்காவது இருக்க வேண்டும் என்று தீர்மானித்தான் மூர்சமத். எதற்கும் விஜயனைக் கலந்துகொள்ளத் தளத்தில் சீனன் சுமையுடன் நடந்து நுழைவாயில் படிகளின் வழியாகக் கீழே இறங்கிச் சென்றான். கீழே இருந்த நடுத்தளத்திலும் ஓசைப்படாமல் நடந்து விஜயனின் அறைக்கு முன்பாக வந்ததும் அதை மெதுவாகத் தட்டினான்.

அறைக்கதவு மெதுவாக எச்சரிக்கையுடன் திறக்கப்படவே உள்ளே திரிலோகசுந்தரி தூங்காமல் நட்டநடு அறையில் நின்றிருப்பதையும், "விஜயன் முகத்திலும் கவலை நிரம்பியிருந்ததையும் கவனித்த மூர்சமத், "எசமான்! என்னிடம் உங்களுக்கு நம்பிக்கை

zeevaa

யில்லை போலிருக்கிறது? ஏன் இருவரும் உறங்கவில்லை!" என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான். அறை நடுவுக்கு வந்ததும், "உங்கள் நண்பனைக் கொண்டு வந்து விட்டேன்" என்று சொல்லி, சூ-சின்னைக் கீழே கிடத்தப் போனான்.

"வேண்டாம் சமத்! இவனைக் கட்டிலில் கிடத்து," என்றான் விஜயன்.

"இவன் அதற்குத் தகாதவன். தளத்தில் கூட, தரையில் உட்கார்ந்து பக்கப்பலகையில் சாய்ந்துதான் தூங்கிக் கொண்டிருந்தான்," என்று கூறிய மூர்சமத் அவனைத் தடாலென்று தரையில் தள்ளி அவ்வனை மல்லாக்கச் செய்து ஒரு காலை எடுத்து அவன் மார்பு மீது வைத்துக் கொண்டு நின்றான். "எசமான்! இவனை என்ன செய்யவேண்டும்?" என்று வினவவும் செய்தான் கடும் குரலில்.

விஜயன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. அறைக் கதவைத் தாளிட முயன்றான். முடியவில்லை. "மூர்சமத் இந்தத் தாழ்ப்பாளை நீ முறித்துவிட்டாய். கதவும் இரண்டுங்கெட்டானாகத் தொங்கி நிற்கிறது. இதைப் பயனற்றதாகச் செய்துவிட்டாய்" என்றான்.

"இனி உங்களை உள்ளே வைத்து வெளியே இவன் ஆட்கள் பூட்ட முடியாது எசமான்!" என்ற மூர்சமத். "எசமான் ஒன்று செய்யட்டுமா?" என்று கேட்டான்.

"என்ன சமத்?" என்று விஜயன் வினவினான்.

"பெயர்த்த அந்தக் கதவை இவன் மீது போட்டு அதோ இருக்கும் மரப்பெட்டியை அதன் மீது பாரத்துக்கு வைக்கிறேன். யார் வந்தாலும் இவன் படுத்தபடியே பதில் சொல்லட்டும்" என்றான்.

மூர்சமதின் குரூர யோசனையை ஏற்க முடியவில்லை விஜயனால். திரிலோகசுந்தரியின் விழிகள் கூடச் சமதை அதிருப்தி யுடன் நோக்கின.

zeevaa

"அப்படிச் செய்வது சித்திரவதையாகும் சமத்" என்றான் விஜயன்.

"எசமான்! இவன் என்ன செய்தானென்று நினைக்கிறீர்கள்? எப்படி நான்கொண்டு வரப்பட்டேன் இந்த அறைக்கு?" என்று வினவினான் மூர்சமத்.

விஜயன் மூர்சமதை அன்பு ததும்பும் விழிகளால் நோக்கினான். "சமத்! உன்னை இவன் செய்த சித்திரவதைக்கு இவனை நானே கொன்று போடுவேன். தவிர இவன் கொடுத்த வாக்கையும் மீறியிருக் கிறான். நிபந்தனையுடன் இவனுக்குச் சுதந்திரம் அளித்தேன். அதை மீறினான், சூழ்ச்சி செய்தான். என்னையும், சுந்தரியையும் இந்த அறையில் அடைத்தான். இந்தக் குற்றங்களில் ஏதாவது ஒன்றுக்கே இவனைத் தளத்தில் எல்லா மாலுமிகளும் பார்க்கத் தூக்குப் போடலாம். ஆனால் நாம் இவன் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களில்லை. இவனை என்ன செய்வதென்பதைப் பற்றிப் பிறகு யோசிப்போம். முதலில் காலை எடு, இவன் எழுந்திருக்கட்டும்", என்று சொன்னான்.

மூர்சமத் உடனடியாக எசமானனின் சொல்லுக்குப் பணிய வில்லை "எசமான்!" என்று ஆட்சேபணைக் குரல் கிளப்பினான்.

"என்ன சமத்?"

"இவன் இப்படித்தான் என்னைத் தள்ளி என் மார்பு மீது காலை வைத்துக் கொண்டு நின்றான். இவனுடைய சீடர்கள் நான்கு பேர் என் கைகளையும் கால்களையும் அழுத்திக் கொண்டிருந்தார்கள். அப்படி ஏதுமில்லை இங்கு என் கால் மட்டும் தான் இவன் மீதிருக்கிறது" அதைச் சொன்ன மூர்சமத் விஜயனை நோக்கினான்.

விஜயன் பதில் ஏதும் சொல்லவில்லை. "சமத்! காலை எடு!" என்று அதிகாரக் குரலில் உத்தரவிட்டான்.

மூர்சமத் காலை எடுத்துக் கொண்ட பிறகும் சூ-சின் தரையி லேயே படுத்துக் கிடந்தான். "சூ-சின் எழுந்திரு", என்று இன்னொரு

zeevaa

அதட்டலை விஜயன் போட, சூ-சின் மெள்ள முக்கி முனகிக் கொண்டு எழுந்து நின்று தனது தொங்குமீசையை ஒரு முறை உருவிச் சரி செய்து கொண்டான்.

அடுத்து உத்தரவிட்டான் விஜயன், "சூ-சின்! ஒருமுறை உன்னை நம்பினேன். நம்பிக்கைத் துரோகம் செய்தாய். இனி உன்னை நம்புவதற்கில்லை. நீ எந்த விஷயத்திலும் ஈடுபடாதிருக்க ஒரு காவலைப்போடுகிறேன்" என்று.

"யார் மூர்சமதா! வேண்டாம் என்று கூவினான் சூ-சின்.

விஜயன் சில விநாடிகள் சிந்தனையில் இறங்கினான். "மூர்சமத் வேண்டாம். உன் சீடர்களில் ஒருவரை நியமிக்கிறேன்" என்றான் சிந்தனைக்குப் பிறகு.

"யார் என் சீடர்?" சூ-சின் மெதுவாக வினவினான்.

"மோக்ஷர்! என்ற விஜயன், "சமத்! மோக்ஷரை அழைத்து வா" என்று உத்தரவிட மூர்சமத் வெளியே சென்றான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் மோக்ஷர் உள்ளே நுழைந்தார். அங்கிருந்த சூழ்நிலையை வியப்புடன் நோக்கினார். பிறகு, "நமது சீனக்கப்பல் தலைவரைப் பாதுகாக்க வேண்டுமென்று சமத் சொன்னான்" என்றார் மோக்ஷர் விஜயனை நோக்கி.

"ஆம் மோக்ஷரே! இவனை நீர்தான் காக்க வேண்டும்", என்றான்.

"ஆகா!" என்ற மோக்ஷர் தமது பார்வையைச் சூ-சின் கழுத்தின் மீது நிலைக்கவிட்டு, "எத்தனை பெரிய கழுத்து?" என்று சொல்லித் தமது உள்ளங்கைகளையும் மூடிப்பிரித்தார்.

அவர் பார்த்த பார்வையையும் தனது கழுத்தைப் பற்றிய வர்ணனையையும் கைகளைப் பிரித்த முறையையும் பார்த்த சூ-சின்னின் முகத்தில் உண்மையாகவே அச்சம் விரிந்தது. அந்த

zeevaa

அச்சத்தை விஜயனின் சொற்கள் நீக்கின. "மோகூஷிரே இவன் தப்ப முயலாத வரையில் இவனை ஏதும் செய்ய வேண்டாம்" என்றான் விஜயன்.

மோகூஷிரின் முகத்தில் விசனம் விரிந்தது. "ஒன்றுமே செய்யக் கூடாதா" என்று வருத்தத்துடன் கேட்டார்.

"எதுவும் செய்யக்கூடாது, இவனை ஒரு கப்பல் தலைவனை நடத்துவது போல் நடத்த வேண்டும்", என்று சொன்ன விஜயன், "இவன் அத்துமீறி நடந்தால் உமது இஷ்டம்" என்று முடித்து வெளியே சென்றான்.

அதுவரையில் சிலைபோல நின்றிருந்த திரிலோகசுந்தரி, "கூ-சின்! கட்டிலில் அமருங்கள்" என்றாள்.

அவள் மரியாதையைக் கண்டு அவன் வியந்தான். "மிகவும் மரியாதை காட்டுகிறாய் விஜயமகாதேவி" என்றான் கூ-சின்.

பாரதத்தின் பண்பாடு அது. உனக்குப் புரியாது" என்றாள் திரிலோகசுந்தரி.

கட்டிலில் அமர்ந்தான் கூ-சின், நாழிகைகள் ஓடின. சுந்தரி அவனுக்குக் காலை உணவை அளித்தாள். அந்தச் சமயத்தில் கப்பல் வெகுவேகமாகத் திரும்பியது. ஆனால் அதைச் கூ-சின் எதிர்பார்த்திருந்ததால் அவன் வியப்பை அடையவில்லை.

பகல் சிறிது ஏறியதும் உள்ளே வந்த விஜயன், "கப்பலின் திசையை மாற்றிவிட்டேன்" என்றான்.

"புரிந்தது" என்றான் கூ-சின்"

"என் திட்டப்படி ஹண்டுமானுக்குப் போகிறது" விஜயன் சொன்னான். உற்று கூ-சின்னை நோக்கவும் செய்தான்.

"அதுவும் புரிந்தது" என்றான் கூ-சின். "அழிவை நோக்கிப் போகிறது" என்றும் சொற்களைக் கொட்டினான்.

zeevaa

"உன் கையால் இங்கு சாவதைவிட ஹண்டுமானில் அந்த நாட்டுவாசிகளால் சாவது தவறில்லை", என்ற விஜயன் சில விநாடிகள் மௌனம் சாதித்தான். பிறகு சூ-சின்னை நோக்கி, "சூ-சின்! உனக்கு உயிருடனிருக்க இஷ்டமா?" என்று வினவினான்.

"சாவது யாருக்கு இஷ்டம்?" என்று பதில் வேறு போட்டான் சூ-சின்.

"அப்படியானால் சொல், என் குலதனம், மகாரத்தினம், எங்கே?" என்று விஜயன் கேட்டான், சூ-சின்னை மிகவும் நெருங்கி, சூ-சின்னை உற்று நோக்கிய கண்களில் விபரீத ஒளி ஒன்று இருந்தது. அவன் பதில் சொல்லத் தயங்கினான். மோக்ஷர் இரண்டு உள்ளங்கைகளையும் விரித்துக் கொண்டு அவனை நோக்கி வந்தார்.



zeevaa

## 22. கருணையின் பலன்

விஜயன் அறையில் கட்டிலில் உட்கார்ந்திருந்த சூ-சின், தனக்குக் கலிங்க ராஜகுமாரி காட்டிய மரியாதையைக் கண்டோ, அவள் தனக்கு உணவளித்த அன்பைக் கண்டோ ஏமாந்தானில்லை. அத்தனை மரியாதையும் வரக்கூடிய பெரிய ஆபத்துக்கு முன்னோடியென்பதைப் புரிந்து கொண்டாலும், அடுத்துத் தனக்கு ஏற்படக்கூடிய தண்டனையின் தன்மையையும் ஓரளவு உணர்ந்து கொண்டானென்றாலும், எதற்கும் அசையாத திட உள்ளத்துடன் கட்டிலில் உட்கார்ந்தே இருந்தான். கப்பல் ஒரு முறை ஆடி திசை திரும்பியபோது தனது திட்டங்கள் தவிடு பொடியாகி விட்டதைப் புரிந்து கொண்ட பின்பும்சிறிதும் உணர்ச்சிகளைப் பறிகொடுக்க வில்லை. ஆனால் நேரிடும் ஆபத்து எதுவாயிருந்தாலும், அது மோக்ஷர் மூலம் தனக்குக் கிடைக்கும் என்பதை அடியோடு எதிர்பாராததால் அவர் தனது கழுத்தை உற்றுப்பார்த்ததும், பிறகு கைகளைப் பிரித்துக்கொண்டு தனது கழுத்தை நோக்கி வந்ததும் அவனை ஓரளவு திகிலடையத்தான் செய்தது.

அவன் அதிர்ச்சியடைந்ததை அவன் முகத்திலிருந்து புரிந்து கொண்ட திரிலோகசுந்தரி, தனது கண்களைக் கட்டிலிலிருந்து வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். அடுத்து நேரக் கூடியதைப் பார்க்கத் திராணியில்லாததால், ஆனால் விஜயன் கட்டிலுக்கு எதிரே உறுதியுடன் நின்று, "சூ-சின்! நீ இப்பொழுதுகூட என் குலதனமிருக்கும் இடத்தைச் சொல்லலாம். மோக்ஷர் உன்னை மன்னித்து விடுவார்," என்று கூறினான்.

zeevaa

சூ-சின்னின் சின்னஞ்சிறு கண்கள் அவனை நெருங்கி நின்று கொண்ட மோக்ஷரையும், சற்று எட்ட நின்று பேசிய விஜயனையும் ஏறெடுத்து நோக்கின. அவன் தொங்கு மீசை இருபுறமும் அசைந்து உதடுகள் மெல்லத் திறந்து, "நீ செய்ய முற்படுவது காட்டுமிராண்டிகள் செய்யும் வேலை. மன்னனான உனக்கு அடுக்காது," என சொற்களை உதிர்த்தன.

விஜயன் நின்ற இடத்தில் சிறிதும் அசையாமல் நின்றான். "நான் செய்ய முற்படுவது என்ன?" என்று வறண்ட குரலில் வினவினான்.

"சித்திரவதை, மோக்ஷரைக் கொண்டு என் கழுத்தை மெதுவாக நெறிக்க முயலுகிறாய்" என்றான் சூ-சின் குற்றம் சாட்டும் பாவனையில்.

விஜயன் இதழ்கள் சற்றே கடுமையுடன் மடிந்தன. கண்களில் அனுதாபம் சிறிதுமற்ற கடுமை ஒளி விட்டது. "நீ மூர்சமத்துக்குச் செய்ததென்ன?" என்று கேட்டான் விஜயன்.

சூ-சின் அதற்கு உடனடியாகப் பதில் சொல்லவில்லை. அறையின் ஒரு கதவு பிளந்திருந்ததால் அரை குறையாக திறந்திருந்த வாயிலை நோக்கினான். அங்கே மூர்சமத் வாயிலின் மற்றொரு கதவின் மீது சாய்ந்து நின்று கொண்டிருந்தான். அவன் கையில் நன்றாக முறுக்கேற்றப்பட்ட மணிக்கயிறு இருந்தது. அதனால் பேரச்சத்துக் குள்ளான சூ-சின் அந்த அச்சத்தை வெளிக்குக் காட்டாமல், "விஜயபாகு! நான் செய்ததை நீ செய்ய முடியாது," என்றான் மெதுவாக.

"ஏன், நீ மூர்சமத்துக்கு அளித்த சித்திரவதையை உனக்களிப் பதைத் தடை செய்ய யாரால் முடியும்?" என்று வினவினான் விஜயன்.

"யாரும் தடை செய்ய முடியாது. ஆனால் உன் பக்குவம் அதற்கு இடம் கொடாது," என்றான் சூ-சின்.

zeevaa

"என் பக்குவமா!" விஜயன் கேள்வியில் சிறிது வியப்பு ஒலித்தது.

"ஆம், நீ பௌத்தன் தவிர, ஒரு நாட்டு மன்னன், உன்னால் தண்டனை கொடுக்க முடியும். தேவையானால் போரில் எதிரிகளை வெட்டிச் சாய்க்கவும் முடியும். சித்திரவதை உன் ரத்தத்தில் இல்லை," என்றான்.

"உன் ரத்தத்தில்?" விஜயன் குரலில் சிறிது சந்தேகம் ஒலித்தது.

"இருக்கிறது. நான் கொள்ளைக்காரன், மங்கோல் இனத்தைச் சேர்ந்தவன். சித்திரவதை எங்களுக்குச் சகஜம். சீனத்தலைநகருக்கு வா. அங்குள்ள சிறைச்சாலைகளைப் பார். சித்திரவதை செய்ய யந்திரங்கள் இருக்கின்றன. எங்களுக்கு இது சகஜம். உன்னால் முடியாது", என்று திட்டமாகச் சொன்னான் சூ-சின்.

அப்பொழுதுதான் மூர்சமத் மெள்ள உள்ளே நுழைந்தான். "இருக்கலாம் சூ-சின், ஆனால் நான் மன்னனல்ல. நான் மூர் இனத்தவன். உன் இனத்துக்குச் சிறிதும் சளைத்ததல்ல என் இனம். மன்னனால் முடியாதது என்னால் முடியும். நீ எனக்களித்த பணிவிடையை உனக்கு நான் செய்கிறேன்," என்று கையிலிருந்த மணிக்கயிற்றை ஒரு முறை தனது கைகளில் பிரித்துக் காட்டினான். அவன் கண்களில் கொலைப் பார்வை இருந்தது.

அதுவரை வாளாவிருந்த மோக்ஷர் கட்டிலில் சூ-சின்னின் பக்கத்தில் உட்கார்ந்து தனது கைகளால் அவன் கழுத்தை லேசாகத் தடவிப் பார்த்தார். அஃவனது ஊட்டியையும், தொண்டைப் பக்கத்து ரத்தக்குழாய்களையும் லேசாக நெருடி, தான் பணிவிடை செய்ய வேண்டிய இடங்களை உறுதி செய்து கொண்டார். பிறகு விஜயனை நோக்கி, "சிங்களத்து மன்னவா! இவனிடம் பேச்சுக் கொடுத்தால் இப்படியே பகல் பூராவையும் கழித்து விடுவான். ஆகையால் அனுமதி கொடுங்கள்," என்றார்.

zeevaa

"என் பக்குவமா!" விஜயன் கேள்வியில் சிறிது வியப்பு ஒலித்தது.

"ஆம், நீ பௌத்தன் தவிர, ஒரு நாட்டு மன்னன், உன்னால் தண்டனை கொடுக்க முடியும். தேவையானால் போரில் எதிரிகளை வெட்டிச் சாய்க்கவும் முடியும். சித்திரவதை உன் ரத்தத்தில் இல்லை," என்றான்.

"உன் ரத்தத்தில்?" விஜயன் குரலில் சிறிது சந்தேகம் ஒலித்தது.

"இருக்கிறது. நான் கொள்ளைக்காரன், மங்கோல் இனத்தைச் சேர்ந்தவன். சித்திரவதை எங்களுக்குச் சகஜம். சீனத்தலைநகருக்கு வா. அங்குள்ள சிறைச்சாலைகளைப் பார். சித்திரவதை செய்ய யந்திரங்கள் இருக்கின்றன. எங்களுக்கு இது சகஜம். உன்னால் முடியாது", என்று திட்டமாகச் சொன்னான் கூ-சின்.

அப்பொழுதுதான் மூர்சமத் மெள்ள உள்ளே நுழைந்தான். "இருக்கலாம் கூ-சின், ஆனால் நான் மன்னனல்ல. நான் மூர் இனத்தவன். உன் இனத்துக்குச் சிறிதும் சளைத்ததல்ல என் இனம். மன்னனால் முடியாதது என்னால் முடியும். நீ எனக்களித்த பணிவிடையை உனக்கு நான் செய்கிறேன்," என்று கையிலிருந்த மணிக்கயிற்றை ஒரு முறை தனது கைகளில் பிரித்துக் காட்டினான். அவன் கண்களில் கொலைப் பார்வை இருந்தது.

அதுவரை வாளாவிருந்த மோக்ஷர் கட்டிலில் கூ-சின்னின் பக்கத்தில் உட்கார்ந்து தனது கைகளால் அவன் கழுத்தை லேசாகத் தடவிப் பார்த்தார். அவனது ஊட்டியையும், தொண்டைப் பக்கத்து ரத்தக்குழாய்களையும் லேசாக நெருடி, தான் பணிவிடை செய்ய வேண்டிய இடங்களை உறுதி செய்து கொண்டார். பிறகு விஜயனை நோக்கி, "சிங்களத்து மன்னவா! இவனிடம் பேச்சுக் கொடுத்தால் இப்படியே பகல் பூராவையும் கழித்து விடுவான். ஆகையால் அனுமதி கொடுங்கள்," என்றார்.

zeevaa

"எசமான்! இந்தப் பணி என்னுடையது. இவன் சித்திரவதை செய்தது என்னை," என்று மூர்சமத் மோக்ஷருடன் போட்டிக்கு வந்தான்.

அதுவைர தைரியத்துனிடருந்த கூ-சின்னின் முகத்தில் அச்சம் உலாவத் தொடங்கியது. பக்கத்தில் உட்கார்ந்திருந்த மோக்ஷரும், எதிரே மணிக்கயிற்றுடன் நின்ற மூர்சமதும் தன்னை அணுஅணுவாகக் கொல்லுவார்கள் என்பதை உணர்ந்திருந்ததால் தன் கண்களால் விஜயலன ஏறெடுத்து நோக்கி, "சிங்களத்து மன்னா! என்லனக் கொல்வதால் உனக்கு உன் குலதனம் கிடைத்து விடாது. அது யார் கைக்கும் கிடைக்காத இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. நான் இறந்த அதே நேரத்தில் அதுவும் அழிந்து போகும்", என்று கூறினான்.

அவன் கூறியது முற்றிலும் உண்மை என்பதைப் புரிந்து கொண்ட விஜயன் சிறிது சிந்தித்தான். சிந்தனையை நிமிட நேரத்தில் உதறி, "அப்படியானால் மகாரத்தினம் இருக்கும் இடததைக் கூறிவிடு," என்றான்.

பதில் பேசவில்லை கூ-சின். அவன் சண்டினத்தனத்தைக் கவனித்த மோக்ஷர், "விஜயபாகு! இவனிடம் கேட்டுப் பயனில்லை. இவன் மயிலல்ல," என்றார்.

"மயிலே மயிலே என்றால் இறகு போடாது," என்று மூர்சமதும் ஒத்துப் பாடினான்.

விஜயன் சீனனை நோக்கி, "கூ-சின்! உன்னைக் கடைசி முறையாகக் கேட்கிறேன். குலதனம் இருக்குமிடத்தைச் சொல்லிவிடு. இல்லையேல் நீ முன்பு விளக்கிய என் குணத்துக்கு மாறாக நான் நடக்க நேரிடும்," என்றான் உறுதி நிரம்பிய குரலில்.

அதற்கும் கூ-சின் மசியாது போகவே திரிலோகசுந்தரியை நோக்கி, "சுந்தரி! நீ வெளியே போய்விடு. இனி நடக்கப்போவது

zeevaa

"எசமான்! இந்தப் பணி என்னுடையது. இவன் சித்திரவதை செய்தது என்னை," என்று மூர்சமத் மோக்ஷருடன் போட்டிக்கு வந்தான்.

அதுவரை தைரியத்துனிடருந்த சூ-சின்னின் முகத்தில் அச்சம் உலாவத் தொடங்கியது. பக்கத்தில் உட்கார்ந்திருந்த மோக்ஷரும், எதிரே மணிக்கயிற்றுடன் நின்ற மூர்சமதும் தன்னை அணுஅணுவாகக் கொல்லுவார்கள் என்பதை உணர்ந்திருந்ததால் தன் கண்களால் விஜயனை ஏறெடுத்து நோக்கி, "சிங்களத்து மன்னா! என்னைக் கொல்வதால் உனக்கு உன் குலதனம் கிடைத்து விடாது. அது யார் கைக்கும் கிடைக்காத இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. நான் இறந்த அதே நேரத்தில் அதுவும் அழிந்து போகும்", என்று கூறினான்.

அவன் கூறியது முற்றிலும் உண்மை என்பதைப் புரிந்து கொண்ட விஜயன் சிறிது சிந்தித்தான். சிந்தனையை நிமிட நேரத்தில் உதறி, "அப்படியானால் மகாரத்தினம் இருக்கும் இடததைக் கூறிவிடு," என்றான்.

பதில் பேசவில்லை சூ-சின். அவன் சண்டினத்தனத்தைக் கவனித்த மோக்ஷர், "விஜயபாகு! இவனிடம் கேட்டுப் பயனில்லை. இவன் மயிலல்ல," என்றார்.

"மயிலே மயிலே என்றால் இறகு போடாது," என்று மூர்சமதும் ஒத்துப் பாடினான்.

விஜயன் சீனனை நோக்கி, "சூ-சின்! உன்னைக் கடைசி முறையாகக் கேட்கிறேன். குலதனம் இருக்குமிடத்தைச் சொல்லிவிடு. இல்லையேல் நீ முன்பு விளக்கிய என் குணத்துக்கு மாறாக நான் நடக்க நேரிடும்," என்றான் உறுதி நிரம்பிய குரலில்.

அதற்கும் சூ-சின் மசியாது போகவே திரிலோகசுந்தரியை நோக்கி, "சுந்தரி! நீ வெளியே போய்விடு. இனி நடக்கப்போவது

zeevaa

பெண்கள் பார்க்கத் தகாதது," என்று கூறினான். கூறியதோடு நில்லாமல் அவளை மெல்லத் தோளைப் பிடித்து அழைத்துக் கொண்டு வெளியே கொண்டு விட்டும் வந்தான். "மோக்ஷரே! நீர் உமது பணியைத் துவங்கும் முதலில்", என்றான்.

மோஷரின் முகம் விகசித்தது நன்றாக. அவர் உதடுகள் விரிந்து பற்களைக் காட்டின விபரீத மகிழ்ச்சிக்கு அறிகுறியாக. கைகளை அவன் கழுத்தில் அழுத்துவதற்கு முன்பாகக் கண்களை மூடி ஏதோ உதடுகளுள் முணு முணுத்தார். பிறகு, "சூ-சின்! உனக்குச் சிவலோ கர்ணேசுவரர் அருள் புரியட்டும்," என்று கூறிவிட்டு, அவனைக் கட்டிலில் தள்ளி மேலே ஏறி உட்கார்ந்தார்.

சூ-சின்னின் அச்சத்தாலே அகன்ற விழிகள் அவர் கண்களை நோக்கின. சுவாமிகளின் கண்களில் அவன் அதுவரை யாரிடமும் கண்டிராத விபரீதமும் கொலை வேட்கையும் காணப்பட்டதால் அதுவரை அசையாத அவன் மனமும் அசைந்தது.

அடுத்து மோக்ஷர் தாம் கற்ற கலையைத் துவக்கினார். அவர் முழந்தாள்கள் சூ-சின்னின் தொடையிலும் வயிற்றிலும் அழுந்திக் கிடந்தன. அவர் கைகள் பிரிந்து அவன் கழுத்தில் அழுந்தின மெதுவாக, இரண்டு கட்டை விரல்களும் ரத்தக் குழாய்களைத் தேடி அலைந்தன. பிறகு கழுத்து முகப்பிலிருந்த சுவாசக் குழாயை மெதுவாக நெறிக்கத் தொடங்கின.

சூ-சின்னின் முகத்தில் உள்ளிருந்த குருதி பாய்ந்து முகத்தை மிகச் சிவப்பாக அடித்தது. அவன் கழுத்தின் ரத்தக் குழாய்கள் புடைத்தன. மூச்சும் சிறிது சிரமப்பட்டு வந்தது. மோக்ஷரின் கண்கள் வெறியுடன் ஆனந்த தாண்டவம் புரிந்தன.

சூ-சின் முனகினான். "உம் உம்....." என்ற மூச்சுத் திணறலுடன் விபரீத ஒலியும் சிறிது வந்தது.

zeevaa

அந்தச் சமயத்தில் இடை புகுந்தது விஜயன் குரல், "விடுங்கள் அவனை ஒரு நிமிடம்," என்று.

மோக்ஷர் தமது கைகளைச் சிறிது அகற்றினார். ஏமாற்றச் சாயை பரவிய முகத்தை விஜயன் மீது திருப்பினார்.

"மோக்ஷரே! அவனுக்கு இன்னொரு வாய்ப்பு அளிப்போம் இடத்தைச் சொல்ல," என்ற விஜயன், கட்டிலை நெருங்கி, "சூ—சின்!சூ—சின்" என்று அழைத்தான்.

மிரண்ட கண்களை விஜயனை நோக்கித் திருப்பிய சூ—சின் மீண்டும் கண்களை மூடிக் கொண்டான். அவன் நினைவு அரைவாசி தப்பியிருந்தது. மெல்ல மெல்லச் சுரணை சிறிது திரும்பியதும் கண்களை அலை விழித்தான். நீர் வேண்டும் என்பதற்கு அறிகுறியாக ஜாடை காட்டினான்.

"சமத்! சிறிது நீர் கொடு," என்று விஜயன் உத்தரவிட்டான்.

வேண்டா வெறுப்பாக அறை மூலைக்குச் சென்று ஒரு குவளையில் நீர் எடுத்து வந்த சமத், சூ—சின்னின் வாயில் அதைப் புகட்டினான். சூ—சின் மரண தாகம் உடையவன் போல் நீரைக் குடித்தான். பிறகு விஜயனை நோக்கி, "விஜயா!" என்று மெதுவாக அழைத்து அருகில் வரும்படி சைகை செய்தான். அருகில் வந்த விஜயனை நோக்கி, "குரூரத்தில் சீனனுக்குச் சிங்களத்தவன் சளைத்தவனல்ல என்பதை நிரூபித்து விட்டாய்," என்றான்.

விஜயன் பதிலேதும் சொல்லாமல் சூ—சின்னைப் பார்த்த வண்ணம் நின்றான். சூ—சின்னே பேசினான். "இன்னும் மூன்று நாள் அவகாசம் கொடு. நான் சொல்கிறேன் உன் குலதனம் இருக்கும் இடம்" என்றான்.

"உன்னை ஒரு வினாடி கூட நம்ப முடியாது. உன் வார்த்தை அர்த்தமற்றது. நிபந்தனை சுதந்திரத்தையே உதறி விட்டாய், உனக்கு

zeevaa

மாலைவரை அவகாசம் கொடுக்கிறேன். மாலைக்குள் நீ வாயைத் திறக்காவிட்டால் அப்புறம் நீ வாயைத் திறக்க அவசியமிருக்காது. உன் பறகள் கிட்டி விடும். இன்று மாலை சரியாக சூரியன் அஸ்த மிக்கும தருவாயில் உன்மீது மூர்சமத் நடவடிக்கை துவங்குவான். அதுவரை மோஷரும் மூர்சமதும் உனக்குத் துணை இருப்பார்கள்," என்று கூறினான். "சமத்! மோக்ஷரே! இவனுக்குக் காவலிருங்கள். மாலைக்குப் பிறகு இவனை எதுவேண்டுமானாலும் செய்யுங்கள். அழித்து விடுங்கள். என் உத்தரவு தேவையில்லை," என்று உத்தரவிட்டு வெளியேறினான்.

மூதல் கண்டத்திலிருந்து தப்பிய சூ–சின் மெதுவாக எழுந்தான். கட்டிலிலிருந்து சிறிய அறையில் நடமாடிக் கால்களையும் சுவாதீனப் படுத்திக்கொண்டான். மூர்சமதும் மோக்ஷரும் காலகண்டர்களைப் போல அவனைப் பார்த்துக் கொண்டே இருந்தனர். மோக்ஷர் கட்டிலின் ஒரு பக்கத்தில் உட்கார்ந்திருந்தார். மூர்சமத் வாயிற்படிக்கு அருகிலிருந்த ஓர் ஆசனத்தில் அமர்ந்து மணிக்கயிற்றை அடிக்கடி நோட்டம் பார்த்துக் கொண்டிருந்தான். இருவரையும் பார்க்கப் பார்க்கக் குலை நடுக்கம் எடுத்தாலும், அதைப்பற்றி வெளிப் படையாகக் கவலையே காட்டாமல் சிந்தனையில் இறங்கினாள் சூ–சின்.

மாலையும் வந்து கதிரவன் மலைவாயிலில் விழத் தொடங்கி னான். சூ–சின் தலையை அசைத்தான். சிந்தனை முடிந்துவிட்டதற்கு அறிகுறியாக மூர்சமதை நோக்கி, "சமத்! உன் எசமானரை அழைத்து வா. மகாரத்தினம் இருக்குமிடம் சொல்கிறேன்" என்றான்.

மூர்சமத் தனது ஆசனத்திலிருந்து எழுந்து வெளியே சென்றான். அவன் விஜயனுடன் திரும்பியபோது அறையின் நிலை விபரீதமா யிருந்தது. மோஷர் ஒரு சீலையில் தலை மாத்திரம் வெளியே

zeevaa

தெரியக் கட்டப்பட்டுக் கிடந்தார். சூ–சின்னைக் காணவில்லை. இருந்த சுவடு தெரியாமல் மறைந்து விட்டான்.

சீலையில் கட்டுண்டு கிடத்த மோக்ஷர் விஜயனை நோக்கி, “உன் கருணையின் பலன் இது,” என்று வருத்தத்துடன் சொற்களை உதிர்த்தார்.



zeevaa

# 23. ஹண்டுமான் துறைமுகம்

சீலையால் இறுகப் பிணைக்கப்பட்டிருந்ததால் தலையை மாத்திரம் வெளியே நீட்டிக் கொண்டு மூட்டைக்குள்ளிருந்து எட்டிப் பார்ப்பதைப் போலிருந்த மோக்ஷர் தன்மீது சாட்டிய கருணைக் குற்றத்தைப் பற்றி விஜயன் எள்ளளவும் சிந்தித்தானில்லை. மூர்சமதைத் தந்திரமாக அறையைவிட்டு அனுப்பிவிட்டு மோக்ஷரை சூ–சின் கட்டிப் போட்ட தந்திரத்தைப் பற்றி வியந்து கொண்ட நின்றான் சில விநாடிகள்.

பிறகு மோக்ஷரை மூட்டை நிலையிலிருந்து விடுவிக்க மூர்சமத்துக்கு உத்தரவிட மோக்ஷர் விடுதலை பெற்று எழுந்து நின்று, "விஜயபாகு! கருணைக்கும் ஓர் எல்லையுண்டு," என்று அறிவித்தார்.

விஜயபாகு மோஷரின் உபதேசத்தைக் கேட்டு, "உண்மை மோக்ஷரே! ஆனால் உம்மிடமிருந்தும் மூர்சமதிடமிருந்தும் சூ–சின் தப்ப முடியுமென்று நான் நினைக்கவில்லை," என்றான்.

"சிங்களத்து வீரனே! சூ–சின்னை நீ இன்னும் புரிந்து கொள்ளவில்லை. அவனைப் பிசாசிடம் ஒப்படைத்தால் கூடத்தப்பி விடுவான். இப்பொழுது பார். மூர்சமதை உன்னை அழைத்துவரும் சாக்கில் வெளியே அனுப்பினான். கட்டிலில் அவனருகில் உட்கார்ந் திருந்த என்னைச் சற்று ஏமாந்த சமயம் பார்த்துத் தலையின் பின்பக்கத்திலுள்ள ஒரு நரம்பில் தாக்கினான். நான் மூர்ச்சை யானேன். விழித்தபோது மூட்டையாயிருந்தேன்," என்று நடந்ததைச் சொன்னார் மோக்ஷர்.

zeevaa

மேலும் விவரித்தார். "நரம்பின் மர்மங்களெல்லாம் சீனர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெரியும். தேகத்தின் சில நரம்புகளில் லேசாகத் தட்டினால் கூடப் பிராணன் போய்விடும். அவன் என் தலைக்குப் பின்னால் எந்த இடத்தில் தாக்கினானென்று தெரியவில்லை. ஆனால் மின்னல் போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. உடனடியாக நான் நினைவிழந்தேன்," என்று.

விஜயன் அதற்கு மேல் அந்தக் கதையைக் கேட்டுக் காலம் கடத்த இஷ்டப்படாமல், "மூர்சமத்! சூ-சின்னின் திறமைகூட ஓடும் கப்பலிலிருந்து தப்ப இடமளிக்காது. அவன் இந்தக் கப்பலில் தானிருக்கிறான். ஆகவே கப்பலை அணுஅணுவாகச் சோதனை போடு. எங்கிருந்தாலும் அவனை இழுத்துவா," என்று சமதுக்கு உத்தரவிட்டு, "மோக்ஷரே! நீரும் அவனைத் தேடும். ராஜகுமாரிக்கு நான் சரியான பாதுகாப்பை அளித்துவிட்டு வருகிறேன்", என்று மோக்ஷருக்கும் கட்டளையிட்டு அந்த அறையிலிருந்து வெளி யேறினான்.

அங்கிருந்து சிம்மபுரத்துக் கப்பல் சிற்பியிருக்குமிடம் வந்து அவனிடம் விஷயத்தைச் சொல்லி, "சிற்பி! இவன் இந்தக் கப்பலிலிருந்து தப்ப வழி ஏதாவதிருக்கிறதா?" என்று வினவியதோடு, "அரசகுமாரியை நீ தான் பாதுகாக்க வேண்டும். சூ-சின் வெளியில் சுதந்திரமாக உலாவும் வரையில் அவளுக்கு ஆபத்து இருந்து கொண்டிருக்கும்," என்றான்.

சிற்பி தனது வெறிபிடித்த கண்களை விஜயன் மீது திருப்பி, "அரசகுமாரிக்கு ஆபத்தா—" என்று வினவினான் வியப்புடன்.

"ஆம் சிற்பி! சூ-சின் தனது மன்னனுக்கு மகாரத்தினத்தையும் இந்த மாதர் ரத்தினத்தையும் கொண்டு செல்ல விரும்புகிறான். இரண்டையும் நிறைவேற்ற எதையும் செய்வான்," என்று விஜயன் விளக்கினான்.

zeevaa

புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த சிற்பியின் கண்களில் வெறி அதிகமாயிற்று.

"என் கையிலிருந்து அவன் தப்ப முடியாது. ஏமாறுவதற்கு நான் மோக்ஷருமல்ல, மூர்சமதுமல்ல," என்று கூறி லேசாக வெறிச் சிரிப்பை உதிர்த்த சிற்பி, "வாருங்கள் அவனைத் தேடுவோம். இத்தனைக்குப் பிறகும் அவன் இந்தக் கப்பலில் இருப்பானென்று தோன்றவில்லை. என்ன நடந்ததென்று பார்ப்போம்," என்று கூறிக் கீழ்த்தளத்தின் படிகளில் இறங்கிச் சென்றான். விஜயனும் அவனைத் தொடர்ந்தான்.

கீழ்த்தளத்தில் பல பகுதிகளையும், நடுத்தளத்தில் புரவிகள் கட்டப்பட்டிருந்த இடங்களையும் அலசிப் பார்த்த சிற்பி கடைசியாக மேல் தளத்துக்கு வந்தான். அங்கிருந்த அரசகுமாரியைச் சில விநாடிகள் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு விரிந்த பாய்களையும் ஆராய்ந்தான். "இரண்டும் சரியாக இருக்கிறது" என்று முடிவில் தனக்குத் தானே வாய்விட்டு அறிவித்துக் கொண்டான்.

அவன் பார்த்த இடங்களில் பார்வையை ஓடவிட்ட விஜயனும் சிற்பியின் மனத்திலோடிய எண்ணங்களைப் புரிந்து கொண்டான். "ஆம் சிற்பி! காற்று சிறிது மாறித்தான் இருக்கிறது," என்றான்.

சிற்பி விஜயனைத் திரும்பி நோக்கி, 'உங்கள் கண்களிலிருந்து எதுவும் தப்புவதில்லை சூ-சின்னைத் தவிர என்று கூறிவிட்டு, "அரசகுமாரியின் குழலிலிருந்து பிரிந்த கேசங்கள் சற்றுக் கிழக்கில் திரும்பித் துடிக்கின்றன. பாயின் புடைப்பும் காற்றுத் திசை மாறியதால் குறைந்திருக்கிறது," என்று கூறிவிட்டு, "அரசகுமாரி சிங்களத்து மன்னரே! இருவருமே என்னுடன் வாருங்கள்," என் று சொல்லி இருவரையும் கப்பலின் பக்கப் பலகைக்கு அழைத்துச் சென்று தான் மட்டும் அதில் சாய்ந்து வெளிப்பக்கமாகக் குனிந்து கடல் நீரை நோக்கினான்.

zeevaa

இருட்டு நன்றாக ஏறிவிட்டதால் கடல் நீரின் விவரத்தை அதிகமாக விஜயனாலோ அரசகுமாரியாலோ பார்க்க முடியவில்லையென்றாலும் சிற்பியின் கண்கள் அதை நீண்ட நேரம் ஆராய்ந்தன. அவன் ஆராய்ச்சி முடிவதற்குள் கப்பலைச் சோதிக்கச் சென்ற மூர்சமதும் மோக்ஷரும் திரும்பி வந்துவிடவே விஜயன் அவர்கள் மீது கண்களைத் திருப்பினான் கேட்கும் பாவனையில்.

மோக்ஷர் உடனடியாகப் பதில் சொன்னார். "நானும் மூர்சமதும் கப்பலை அலசிவிட்டோம், சூ-சின் எங்கும் காணோம்" என்று.

"ஆமாம்! இனித் தேட இடமில்லை," என்றான் மூர்சமத்.

சிற்பி கடல் நீரிலிருந்து கண்களை எடுத்துக் குனிந்த நிலையிலிருந்து எழுந்து திரும்பி, "தேட அவசியமில்லை," என்றான்.

"ஏன்?" அரசகுமாரி வினவினாள் வியப்புடன்.

"சூ-சின் இந்தக் கப்பலில் இல்லை, இருப்பதானால் அவன் தப்ப அவசியமில்லை," என்றான் சிற்பி.

"இந்தக் கப்பலில் இல்லையா!" அரசகுமாரியின் முகத்தில் பிரமிப்பு விரிந்தது.

சிற்பி அவளை ஏறிவிட்டு நோக்கி, "அரசகுமாரி! சிந்தியுங்கள். மோக்ஷரைக் கட்டிப்போட்டு அவன் தப்பி இந்தக் கப்பலில் இருப்பதால் என்ன பயன் அவனுக்கு? மீண்டும் பிடித்துச் சித்திரவதை செய்வீர்கள். இந்தக் கப்பலில் இருப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றால் அவன் தப்பியிருக்கமாட்டான். குலதனம் இருக்குமிடத்தைச் சொல்லி, தற்சமயத்துக்கு உங்கள் அன்பையும் மன்னிப்பையும் சம்பாதித்துக் கொள்வான். ஆனால் கப்பலின் ஓட்டம் தடைபடுவதை உணர்ந்திருக்கிறான் சூ-சின். ஆகையால் சட்டென்று மோக்ஷரைத் தாக்கித் தப்பிவிட்டான்," என்று சொன்னான்.

zeevaa

மேலும் விளக்கினான். "சூ–சின் கிழக்குக் கடல் மாலுமிகளில் மிகச் சிறந்தவன், கப்பலின் அசைவு ஒவ்வொன்றும் அவனுக்குத் தெரியும். அறைக் கட்டிலில் உட்கார்ந்திருந்த போதே கப்பலின் ஓட்டத்தின் தன்மையை ஊகித்து விட்டான். அவன் தப்ப அந்த ஒருசமயம் தான் இருந்தது. அதைப் பயன்படுத்திக் கொண்டான்," என்று.

சிற்பியின் பேச்சைப் பிரமையுடன் கேட்ட ஷூர்சமத், "அவன் தப்பி எங்கு போய்விட முடியும்? ஓடும் கப்பலிலிருந்து கடலில் குதிப்பது சாத்தியமா? குதித்தால் எங்குபோவது?" என்று வினவினான்.

சிற்பி பதில் சொல்லுமுன்பு விஜயன் முகத்தில் உண்மை துளிர்விட்டது. "நீ சொல்வது சரிதான் சிற்பி", என்று கூறிவிட்டு, "ஷூர்சமத்! இந்தக் கப்பலில் எத்தனை நூலேணிகள் உண்டு?" என்று வினவினான்.

"இதற்குச் சிற்பியே பதில் சொன்னான். "சாதாரணமாக நான்கு. ஆனால் இப்பொழுதோ மூன்றுதானிருக்கும். ஒன்றை சூ–சின் உபயோகப்படுத்தி விட்டான்," என்று பதில் சொன்ன சிற்பி, "சிங்களத்து மன்னனே வாருங்கள் என்னுடன்," என்று அழைத்து விட்டு, "ஷூர்சமத்! நமது மாலுமிகளை வைத்துக்கொண்டு சீன மாலுமிகளைச் சிறை செய்து ஓர் அறையில் பூட்டி வை. அவர்களைப் பிறகு விசாரிப்போம்," என்று கூறிவிட்டு, தளப்படிகளில் மீண்டும் இறங்கிச் சென்றான்.

அவனைத் தொடர்ந்த விஜயனும், அரசகுமாரியும் அவன் நுழைந்த கடைசி அறையில் நூலேணி மூன்று மட்டும் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். இன்னோர் ஏணி காணவில்லை யென்றாலும் அந்த அறையில் வெளிச் சாளரம் திறந்து கிடந்தது. இங்குதான் நூலேணியைக் கட்டி இறங்கியிருக்கிறான் சூ–சின், இறங்கியதும் நூலேணியை அறுத்து விட்டான். மற்றவர்கள்

zeevaa

உடனடியாகத் தொடராதிருக்க," என்று சொன்ன சிற்பி, "சிங்களத்து மன்னவா! இப்படி வாருங்கள், பாதி நூலேணி தொங்கிக் கொண்டிருக்கிறது. கீழே அறுக்கப்பட்டு," என்று காட்டினான்.

பாதி அறுத்து கிடந்த அந்த நூலேணியையும் கடலில் தனது கப்பல் கிழித்துச் செல்லும் நீரின் வேகத்தையும் பார்த்த விஜயன் எதிரிக் கப்பல் சிறிது பின்னடைந்திருப்பதையும் கவனித்தான். அதைச் சிற்பியிடமும் சொன்னான்.

'சூ—சின் தனது கப்பலிலுள்ள சீன மாலுமிகளுக்கு உத்தரவிட்டிருப் பான் கப்பல் ஓட்டத்தைத் தடை செய்ய," என்றான் சிற்பி.

"அது எப்படிச் சாத்தியம்?" என்று விஜயன் கேட்டான்.

"சூ—சின் சம்பந்தப்பட்டவரை எதுவும் சாத்தியம்," என்று கூறிய சிற்பி, "விஜயபாகு! பக்கத்துக் கப்பலின் பாய் மரங்களைக் கவனியுங்கள்," என்றான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் பிரமிப்புடன் வந்தது விஜயன் பதில் "பாய் மரக் கயிறுகள் தளர்த்தப்பட்டிருக்கின்றன. ஒரு பாய் புடைக்காமல் சுருண்டு மரத்தைத் தழுவிக் கிடக்கிறது," என்று.

அத்துடன் சாளரத்திலிருந்து திரும்பிய விஜயனை நோக்கிய சிற்பி, "திட்டமிட்டு இந்த வேலை நடந்திருக்கிறது. சூ—சின்னை நீங்கள் இங்கு கொண்டு வந்தது. முதலே அவனுக்கும் அவனது சீன மாலுமிகளுக்கும் சமிக்ஞைகள் இருந்திருக்கும். சமயம் பார்த்து சூ—சின் நழுவிவிட்டான்," என்று கூறியதன்றி, "விஜயபாகு! இனி அந்த மரக்கலம் சூ—சின்னிடம் திரும்பிப் போய்விட்டது. அது எதிரிக் கப்பல்," என்றும் சொன்னான்.

எதற்கும் அசையாத விஜயன் மனமும் அசைந்தாலும் அதை வெளிக்குக் காட்டாத சிங்களத்துச் செல்வன், "ஆனால் அங்கு பிக்கு இருக்கிறாரே, அவரை அடக்குவது சுலபமல்லவே," என்றான்.

zeevaa

"பிக்கு இத்தனை நேரம் சுதந்திரத்தை இழந்திருப்பார்," என்றான் சிற்பி.

"ஆதிமல்லன்? அவனது ஆட்கள்?" என்று வினா எழுப்பினான் விஜயன்.

"ஏற்கனவே உன் விரோதிகள்," என்று சுட்டிக் காட்டிய சிற்பி, "மன்னவா! நாம் இனி இன்றிரவு நிம்மதியாக உறங்கலாம். எது நடந்தாலும் காலையில் தான் நடக்கும். வாருங்கள் தேவி! நீங்களும் வாருங்கள்" என்று அவர்களை அழைத்துச் சென்றான்.

அன்றிரவும் மறுநாளும் கூட எந்தவித மாற்றமும் இல்லை சூ–சின் கப்பலில், பழையபடி கப்பல் விஜயன் கப்பலைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. அந்தக் கப்பலிலிருந்த மாலுமிகளும் விஜயன் கப்பலிலிருந்து கொடுக்கப்பட்ட உத்தரவுகளைச் சிரமேற்கொண்டு செய்தார்கள். அதைப் பற்றி விஜயன் கேட்டபோது சிற்பி சொன்னான், "சூ–சின்னுக்குத் தேவையான இரண்டும், மகாரத்தினமும் மாதர் குல ரத்தினமும் இந்தக் கப்பலிலேயே இருக்கின்றன. ஆகையால் தாமதிக்கிறான் சூ–சின், நாம் ஹண்டுமானை அடையும் வரையில் அவன் செயலில் இறங்க மாட்டான்," என்று.

சிற்பி சொன்னது சரியாகவே இருந்தது. அடுத்த நான்கு நாட்கள் குறிப்பிடும்படியான நிகழ்ச்சி ஏதுமில்லாமலே கழிந்தன. பக்கத்துக் கப்பலில் சகலமும் முறைப்படி நடந்தன.

ஐந்தாவது நாள் விஜயன் கப்பல், துறைமுகங்கள் நிரம்ப உள்ள பெரிய ஹண்டுமானுக்குக் கிழக்குப் புறத்தில் திரும்பியபோது கூட சூ–சின்னின் கப்பல் அதை ஆட்டுக்குட்டி போல் தொடர்ந்து வந்தது. *கடல், நிலத்துக்குள் நுழைந்து சிருஷ்டித்திருந்த பல அழகிய

---

* The coasts of Andamans are deeply indented forming a number of safe harbours and tidal creeks. The chief harbours are on the East coast" - Imperial Gazetteer of India-Provincial series-By Lt. Col. Sir Richard C. Temple, Bart ci E. Page 6.

zeevaa

இடங்களில் ஒன்றில் நங்கூரம் பாய்ச்சினான் விஜயன், அந்தச் சமயத்தில் பின் வந்த கப்பலின் தளத்தில் சூ-சின் தோன்றினான். விஜயனுக்கும் அவன் பக்கத்தில் நின்றிருந்த அரசகுமாரிக்கும் நன்றாகக் குனிந்து தலை வணங்கவும் செய்தான்.

விஜயனுக்கும் அரசகுமாரிக்கும் பின்னால் நின்றிருந்த சிற்பி, "இனிமேல் தான் உங்களுக்கு ஆபத்து துவங்குகிறது," என்று சொன்னான்.



zeevaa

## 24. அன்று இரவில்

அன்று வரை இரண்டு கப்பல்களிலும், ஏற்பட்ட பல ஆபத்துக் களுக்கும் கொடூர நிகழ்ச்சிகளுக்கும், ஏன், மகாரத்தினத்தின் திருட்டுக்குக் கூடக் காரணமான சூ–சின், தன்னையும் திரிலோக சுந்தரியையும் நோக்கி ஏதும் நடக்காதது போல் தலை வணங்கியதைக் கண்ட விஜயபாகு அவன் நெஞ்சுரத்தை எண்ணி வியக்கவே செய்தான். கலிங்கத்துக் கப்பலிலிருந்து அவன் தப்பிய பிறகும், சீனக் கப்பலைத் தனக்குப் பின்னாலேயே ஓட்டி வந்ததையும், ஹண்டுமானில்தான் நங்கூரம் பாய்ச்சியதும் அவனும் நங்கூரம் பாய்ச்சி, சீனக் கப்பலைத் தனது கப்பலுக்கு வெகு அருகில் நிற்க வைத்ததும் பெரும் வியப்பாயிருந்தாலும், அதற்குக் காரண மிருப்பதை உணர்ந்ததால் அந்த வியப்பை வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை சிங்கள இளவல். எப்படியும் மகாரத்தினத்தையும் விஜயமகாதேவியையும் கைப்பற்றாமல் சூ–சின் தன்னை விட்டு விலக மாட்டானென்பதையும் விஜயன் உணர்ந்திருந்ததால் சூ–சின்னின் கப்பலை நங்கூரம் பாய்ச்சிய நிலையில் அழித்து விட்டாலென்ன என்று ஒருவிநாடி எண்ணினாலும் அடுத்த விநாடி அந்த எண்ணத்தைக் கைவிட்டான். பிக்குவும், ஆதிமால்யனும் சீனக் கப்பலில் இருக்கும் வரை, தான் எந்த அழிவு நடவடிக்கையிலும் இறங்குவது வீண் உயிர்ச் சேதத்தை விளைவிக்குமென்ற நினைப்பால் சூ–சின்னிடம் அதிக வம்பு வைத்துக் கொள்ள விரும்பாததன் விளைவாக அவன் தீர்க்க சிந்தனையில் மட்டுமே ஆழ்ந்தான்.

zeevaa

ஆனால் சுந்தரி அத்தகைய பொறுமையைக் கடைப்பிடிக்க மறுத்து, "உங்களைத் தான்" என்று சற்றுச்சினத்துடன் அழைத்தாள்.

விஜயன் அவளை நோக்கி லேசாகத்திரும்பி, "என்ன சுந்தரி?" என்று விசாரித்தான். அவள் உள்ளத்தில் ஓடிய எண்ணங்களைப் புரிந்து கொண்டாலும் புரியாதவனைப் போல.

திரிலோகசுந்தரியின் கண்களில் சீற்றம் அதிகமாகத் தெரிந்து சொற்களிலும் அது பிரதிபலித்தது. "தங்கள் நண்பர் தங்களை நோக்கித் தலைவணங்குகிறார்," என்றாள் சுடும் குரலில்.

"கவனித்தேன், "என்றான் விஜயன் சர்வ சாதாரணமாக.

"கவனித்து என்ன செய்தீர்கள்?" இந்தக் கேள்வியும் உஷ்ண மாகவே வெளிவந்தது.

"செய்வதற்கு என்ன இருக்கிறது?" என்று விசாரித்தான் விஜயன்.

"மரியாதைக்குப் பதில் மரியாதை செய்ய வேண்டாமா?" என்று இகழ்ச்சியுடன் வினவினாள் விஜயமகாதேவி.

"செய்ய வேண்டியதுதான்".

"செய்வது தானே?"

"எப்படிச் செய்வது என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்,"

"அதற்கு என்ன யோசனை? வணங்கினால் பதிலுக்கு வணங்குவது,"

"அதல்ல அரசகுல வழக்கம். சமதையானவர்கள் வணங்கினால் திரும்ப வணங்கலாம். கீழ்ப்பட்டவர்கள் வணங்கினால் அதை ஆமோதிக்கலாம். வணங்கக் கூடாது" என்று அரசகுல வழக்கத்தைச் சொன்னான் விஜயன்.

"வேறு என்ன செய்வதாம்? இடித்த புளி மாதிரி நிற்பதா?" என்று கேட்டாள் சுந்தரி.

zeevaa

செய்ய வேண்டியதை உணர்த்துவதுபோல் தனது தலையை லேசாக ஒரு புறம்சாய்த்தான் விஜயன். அதைக் கண்ட சூ–சின் மறுபடியும் தலை வணங்கினான்.

"பார்த்தாயா? இதுதான் முறை," என்று சொன்ன விஜயன் அந்தப் பேச்சை விட்டு, "சுந்தரி! எதிரேயுள்ள காட்சியைப்பார். இத்தகைய அற்புதக்காட்சி உலகத்தில் சில இடங்களில் தானுண்டு. இதோ நமக்கு எதிரில் தெரியும் மலைப்பகுதி உயர்ந்த உச்சிகளுடனும் நெருங்கிய பள்ளத்தாக்குகளுடனும் வில்லைப் போல் தெரிகிறது பார். இதனால் தான் வடபாரதத்திலிருப்பவர்கள் ஹண்டுமான் தீவுகளுக்கு *இந்திரத்து வீபம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள்," என்று விளக்கிவிட்டு, தனது கண்களை எதிரே விரிந்த காட்சியில் உலாவ விட்டான்.

அவன் கண்ணெதிரே சற்று தூரத்தில் பெரிய மலையொன்று எழுந்து நின்றது. அதன் உச்சி ஆகாயத்தைத் தொடுவது போல் இருந்ததால் அந்த உச்சி மீது இரண்டொரு வெள்ளை மேகங்களும் பனிக்கூட்டமும் காணப்பட்டன. காலை வெய்யில் கூட அந்தப் பனிமூட்டத்தைக் கலைக்க முடியாததால் கதிரவன் கதிர்கள் பனித் திவலைகளுக்குள் புகுந்து ஏழுவர்ண ஜாலங்களைச் சிருஷ்டித் திருந்தன. கரைக்கு அருகேயிருந்த நீரில் பட்சிகள் எதுவும் காணப் படாவிட்டாலும் பெரிய மீன்கள் மட்டும் நீர்மட்டத்துக்கு மேல் அடிக்கடி எழுந்து ஆகாயத்தை நோக்கித்தலையை ஆட்டி விட்டு நீரில் அமிழ்ந்தன. கப்பல்கள் இரண்டும் தங்கியிருந்த ஓடைக்கருகே இருபுறத்திலும் நெருங்கிய மாஞ்சோலைகளும், தென்னஞ்சோலை களும் இருந்ததாலும், கரைக்கு அருகே இருந்த சிறு மணற் பகுதியும் அவ்வப்பொழுது அலைகளால் தீண்டப்பட்டதால் வெள்ளை வெளேரென்று இருந்தாலும், பொதுக் காட்சி மொத்தத்தில் மிக ரம்மியமாகவே இருந்தது. இரு புறத்திலுமிருந்த மா, தென்னை

* Refer "Deeds of Hasha" - By Prof. Vasudeva S. Agarwala Banaras Hindu University-Chapter VI-Page 147.

zeevaa

சோலைகளுக்கப்பால் இருந்த பெரிய அடர்த்தியான காட்டில் தேக்கு மரங்கள் ஆகாயமளாவி வளர்ந்திருந்ததால் அவற்றின் உச்சியில் கழுகுகள் பெருவாரியாக உட்கார்ந்திருந்தது. அழகுடன் பயங்கரத்தையும் கலந்தே சிருஷ்டித்தது. தனது மரக்கலம் இருந்த இடத்தின் வலது கரையில் யாரோ விட்டுப்போனதால் அனாதை யாகக் காட்சியளித்த ஒரு குடிசை விஜயன் கவனத்தைக் கவர்ந்தது. அந்தக் குடிசையின் எதிரிலிருந்த ஒரு பெரிய கம்பத்தில் பல ஆணிகள் அறையப் பட்டுக் கறுப்புக்கயிறுகள் சுற்றப்பட்டிருந்ததைக் கவனித்த விஜயன் சற்று எட்ட நின்றிருந்த சிற்பியை அழைத்து, "அது என்ன?" என்று கேட்டான்.

'யாரோ ஒரு மந்திரவாதியின் குடிசை. ஓட்டிய பிசாசுகளைக் கறுப்புக் கயிறுகளால் அந்தக் கம்பத்தில் பிணைத்திருக்கிறான்," என்று கூறினான் சிற்பி.

"அவனைப் பார்க்க முடியுமா" என்று விஜயன் வினவினான்.

"நாமாகப் பார்க்க முடியாது. தேவையானால் அவனே நம்மைநாடி வருவான்" என்றான் சிற்பி.

அதற்குமேல் அவனை ஏதும் கேட்காத விஜயன், "இன்று பகல் உணவுக்கு மேல் நான் கரைக்குப் போகிறேன்" என்று அறிவித்தான்.

சிற்பி அச்சம் நிரம்பிய கண்களை விஜயன் மீது நிலைக்கவிட்டான் "எதற்கு?" என்று விசாரித்தான்.

"இங்கு ஒரு கூட்டமிருக்கிறது, அது நமக்கு உதவலாம்," என்றான் விஜயன்.

திரிலோகசுந்தரி விஜயன் சொற்களைக் கேட்டு வியப்படைந்தாள். "இங்கு ஏற்கனவே வந்திருக்கிறீர்களா?" என்று வினவவும் செய்தாள் வியப்பு ஒலித்த குரலில்.

zeevaa

"நான் வந்ததில்லை. இங்கிருப்பவர்கள் என்னை நாடிச் சிங்களம் வந்திருக்கிறார்கள். இங்கு வந்தால் அவர்களைச் சந்திக்க எனக்கு அழைப்பும் இருக்கிறது சில ஆண்டுகளாக," என்ற விஜயன், சுந்தரியும் சிற்பியும் மேற்கொண்டு கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்ல வில்லை. சிந்தனை மிகுந்தவனாகக் கப்பலின் நடுத்தளத்துக்குச் சென்றுவிட்டான்.

உணவுவேளை வரை அவன் தனது அறையிலேயே காலங் கழித்தான். அங்கேயே உணவும் அருந்தினான். பிறகு படகு ஒன்றை இறக்கச் சொல்லி மூர்சமதை அழைத்துக்கொண்டு கரையை நோக்கிச் சென்றான். அவர்கள் போவதைத் தளத்திலிருந்து திரிலோக சுந்தரி பார்த்துக்கொண்டே இருந்தாள். அவளருகே நின்றிருந்த சிற்பியும் தர்மருங்கூட அவ்விருவரும் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பிறகு எதையோ நினைத்துக் கொண்டு அங்கு மற்ற மூன்று துறவிகளுடன் விஜயன் கரைக்குப் போன விஷயத்தைப் பற்றிப் பேசலானார் தர்மர். "கரையில் ஆபத்திருக்கிறது. விஜயன் என்ன காரணத்துக்காகப் போயிருக்கிறான் என்பது தெரியவில்லை," என்று சொன்னார். "எதுவாயிருந்தாலும் பக்கத்துக் கப்பல் மீது ஒரு கண்ணை வைத்திருங்கள். சூ–சின் சிங்கள மன்னனைத் தொடர்ந் தால் நாம் சூ–சின்னைத் தொடர வேண்டும்," என்றார்.

ஆனால் என்ன கண்காணித்தாலும் சூ–சின் அவன் கப்பலைவிட்டு நகர்ந்ததாகத் தெரியவில்லை. கரைக்குப் போன விஜயனும், மூர்சமதும் மாலைவரை தலைகாட்டவில்லை. 'அவன் எங்கு போயிருப்பான்? ஏதாவது ஆபத்தில் சிக்கியிருப்பானோ? என்று தன்ன ாத்தானே கேட்டுக் கொண்டாள் சுந்தரி. இருப்பினும் விடை கிடைக்கவில்லை அவளுக்கு. இரவு நன்றாக ஏறிய பின்பும் விஜயனோ, மூர்சமதோ திரும்பவில்லை கப்பலுக்கு. சுந்தரியின் வேதனை அதிகரித்தது. தர்மரையும் மற்றத் துறவிகளையும் "நீங்கள்

zeevaa

யாராவது கரைக்குச் சென்று அவரைத் தேடுங்கள்," என்று கேட்டுப் பார்த்தாள். தலைவர் உத்தரவின்றி நாங்கள் கப்பலைவிட்டு நகர முடியாதென்று கூறிவிட்டார்கள்.

இரவு உணவு செல்லவில்லை சுந்தரிக்கு. யாரும் கரைக்குப் போகாவிட்டால் தான் போய்ப் பார்ப்பது என்று தீர்மானித்துக் கொண்டாள். எல்லோரும் உறங்கிய பிறகு நூலேணியை ஓசைப்படாமல் தொங்கவிட்டு மெதுவாக அதில் இறங்கினாள். தண்ணீரிலும் சத்தமில்லாமல் இறங்கி மெதுவாக நீந்தினாள் கரையை நோக்கி.

ஓடை நீர் மிகக் குளிர்ச்சியாக இருந்ததால் அவள் உடல் விறைத்துப் போய்விடும் போலிருந்தது. அது தவிர ஓடையின் பெரிய கடல்மீன்கள் ஓரிரண்டு அவள் தேகத்தின் மீது ஊர்ந்து வழுக்கி அப்புறம் சென்றன. விஜயன் கதி என்ன ஆயிற்றோ என்ற கிலியில் அவள் எதையும் லட்சியம் செய்யாமல் நீந்திக் கரை சேர்ந்து எதிரேயிருந்த குடிசையை நாடிச் சென்றாள். அதற்குள் சென்று தனது சேலையை நன்றாகப் பிழிந்து ஒரு பகுதியைச் சுற்றிக் கொண்டு இன்னொரு பகுதியைக் காற்றில் உலர்த்தினாள். இரவு ஏறியதும் துறைமுகத்தில் காற்று வலுத்துவிட்டதால் சேலையின் உலர்த்தப்பட்ட பகுதி படபடவென்று அடித்துக் கொண்டது. அது அரைகுறையாக உலர்ந்ததும் நேரத்தை வீணாக்காமல் தென்னைமரச் சோலைக்குள் புகுந்து சென்றாள் கலிங்கன் மகள்.

சிறிது தூரம் சென்றதும் திடீரெனப் பந்தங்கள் எரிந்தன. காட்டின் இன்னொரு கோடியில் அந்தப் பந்தங்களுக்கிடையில் பத்து ஹண்டுமான் காட்டுவாசிகள் உட்கார்ந்து கொண்டிருந்தனர். அவர்களுக்கிடையில் விஜயனும் மூர்சமதும் உட்கார்ந்து ஏதோ மும்முரமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். தென்னஞ்சோலையை அடுத்திருந்த ஒரு மாமரத்து மறைவில் நின்றிருந்த சுந்தரிக்கு

zeevaa

அவர்கள் பேசுவது என்னவென்று தெரியாவிட்டாலும் ஏதோ உஷ்ணமாக விவாதம் நடப்பது மட்டும் தெரிந்தது.

அந்த விவாதம் நடந்துகொண்டிருந்த சமயத்தில் அரசகுமாரியைப் பின்னாலிருந்து யாரோ இறுகப் பிடித்தார்கள். அவள் தலைமீது ஒரு கை பலமாக இறங்கியது. அடுத்த விநாடி அவள் நினைவிழந்தாள். அவளைத் தாக்கியவன் சிறிதும் அரவம் செய்யாமல் அவள் உடலை மெதுவாகத் தாங்கி, கீழே இருந்த மணலில் கிடத்தினான். அவள் கைகால்களைப் பிணைத்து, வாயிலும் துணியொன்றை அடைத் தான். பிறகு திருப்திக்கு அறிகுறியாகத் தலையை அசைத்துவிட்டு மீண்டும் காட்டுக்குள் மறைந்தான்.



zeevaa

# 25. தலைவர் சாரியார்

திரிலோகசுந்தரி அந்த இரவில் மரக்கலத்தை விட்டுத் தண்ணீரில் துணிவுடன் இறங்கிக் கரைக்கு வருவாளென்பதையோ, அவளை ஒருவன் பின்பற்றி வந்து தலையில் அடித்து, கைகால்களைப் பிணைத்து மணலில் கிடத்திச் செல்வானென்பதையோ சிறிதளவும் நினைக்காத காரணத்தால் எதிரேயிருந்த பத்து காட்டுவாசிகளுடன் தனது உரையாடலைத் தங்கு தடையில்லாமல் நடத்திக் கொண் டிருந்தான் சிங்கள இளவல். மலையைக் குடைந்து உட்புகுந்துவிட்ட துறைமுகத்தின் அலை அரவம் கூட அவர்கள் உட்கார்ந்திருந்த அந்தக் காட்டு மறைவில் கேட்கவில்லை. எங்கும் காட்டுப் பன்றிகளின் உறுமலே அதிகமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. எதிரே மிக உயரமாக எழுந்திருந்த மலையின் பேருச்சி இருளில் மிகப் பயங்கரமாகத் தெரிந்தாலும், அதைச் சுற்றி வானத்தில் வளைய வந்த நட்சத்திர மாலை அதன் சிகரத்துக்குத் தனியான ஆபரணத்தை அளிப்பதுபோல் தெரிந்தது. இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த விஜயபாகு, பத்துக் காட்டுவாசிகள் சிறிது நேரத்திற்கு முன்பு பந்தங்களுடன் அங்கு வந்தவுடன் தனது ஆராய்ச்சியை அவர்கள் மீது திருப்பினான்.

பத்துக் காட்டுவாசிகளும் நல்ல திடகாத்திரர்களாயிருந்தார்கள். இடையில் சிலர் நன்றாகப் பதனம் செய்யப்பட்ட மரப்பட்டைகளை அணிந்து அவற்றைத் தென்னங்கயிற்றால் செய்த ஓர் அழகு ஆபரணத்தால் கட்டியிருந்தார்கள். அங்கு வந்த அந்தக் காட்டுவாசி களுக்குத் தலைவனாகக் காணப்பட்டவன் மட்டும் இடையில் ஒரு

zeevaa

மிருகத்தின் தோலை அணிந்திருந்தான். அதைச் சுற்றி கட்டப்பட்ட மற்றொரு சருமத்தில் ஏதேதோ வர்ணங்களை தீட்டியிருந்தான். அவன் உரத்த விசால மார்பில் மணி மாலை போன்ற ஏதோ தொங்கிக் கொண்டிருந்தது. அவன் மார்பிலும் நெற்றியிலும் குறுக்காக இரண்டு சிவந்த சாந்துக் கோடுகள் தோன்றின. அவை சாயம் கலக்கப்பட்ட களிமண் கோடுகள் என்பதைப் புரிந்து கொண்ட விஜயன், அவன் தலையில் செருகப்பட்டிருந்த இரண்டு நீண்ட இறகுகளை கண்டு திருப்தியுடன் தலையை அசைத்து, தனது கையைத் தூக்கிக் காட்டி வணக்கம் தெரிவித்தான்.

காட்டுவாசிகள் தலைவன் விஜயனுக்கு உடனடியாகப் பதில் வணக்கம் செய்யவில்லை, விஜயனையும், மூர்சமதையும் உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றான் பல விநாடிகள். பிறகு ஏதோ சில வார்த்தைகளைச் சட சடவென்று உதிர்த்தான். அதே மொழியில் விஜயனும் பதில் சொல்லவே காட்டுவாசிகள் தலைவன் சற்றுத் திரும்பிப் பார்க்க, அவனுடன் வந்தவர்கள் பந்தங்களைத் தரையில் செருகி நிற்கவைத்துவிட்டுக் கால்களை மடித்துச் சப்பணம் போட்டுக்கொண்டு விருந்து சாப்பிடச் சித்தமாயிருப்பவர்கள் போல் உட்கார்ந்தனர். அவர்கள் இருவர் கைகளில் ஈட்டி இருந்தது. மற்றவர்கள் வில்லும் அம்பும் ஏந்தியிருந்தார்கள். இன்னும் சில அம்புகள் ஒரு கயிற்றுக்கூடையில் அவர்கள் முதுகில் தொங்கிக் கொண்டிருந்தனவாதலால் அந்த அம்புகள் அவர்கள் தலைக்குப் பின்புறத்தில் எழுந்து விசிறிபோல் நின்றன. அந்த அம்புகளைக் கண்ணிமைக்கும் நேரத்தில் எடுத்து அவர்களால் பிரயோகிக்க முடியுமென்பதைப் புரிந்து கொண்ட மூர்சமத் இந்த காட்டுவாசிகளை விஜயனுக்கு எப்பொழுது தெரியும் என்று சிந்தித்து, "எசமான்! இவர்களிடம் ஏதோ பேசினீர்களே, அது என்ன?" என்று வினவினான்.

விஜயன் மூர்சமதைப் பார்த்துப் புன்முறுவல் செய்து, "எனக்கு ஏன் சொல்லியனுப்பினாய் என்று கேட்டான் தலைவன். உதவி தேவை என்று நான் பதில் சொன்னேன்" என்றான் விஜயன்.

zeevaa

அந்த இருவர் சம்பாஷணையைக் கேட்ட காட்டுவாசிகள் தலைவன் கடகடவெனப் பயங்கரமாக நகைத்தான். அந்த நகைப்பு முடிந்ததும், "எனக்குத்தமிள் தெரியும்," என்று கூறிவிட்டுக் கையிலிருந்த பெரிய வில்லையும் அம்பையும் தரையில் வைத்துவிட்டு அவனும் உட்கார்ந்தான்.

அவன் இடையில் சரும உடையில் பெரிய குறுவாளும் செருகப் பட்டிருந்தது. அந்த வாளின் பிடியில் நவரத்தினங்கள் இழைத்திருந் ததைக் கண்ட மூர்சமத், "இந்தக் காட்டு மிராண்டிக்கு இது ஏது?' என்று எண்ணமிட்டு, 'இங்கு வந்த யாரையாவது பட்சணம் செய்து விட்டு அவனிடமிருந்து இதை எடுத்திருப்பான்,' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அவன் மனதிலோடிய எண்ணத்தைக் காட்டுவாசிகள் தலைவனும் புரிந்து கொண்டிருக்க வேண்டும். "இதைத் திருட வில்லை" எல்றுு கடினமாகச் சொல்லி, கையை விஜயனை நோக்கி நீட்டினான்.

"அவன் சொல்வது உண்மைதான் சமத். இவனுக்கு நான் தான் இதைப் பரிசாகக் கொடுத்தேன்," என்றான் விஜயன்.

பதிலுக்குக் காட்டுவாசிகளின் தலைவன் பெரிதாக நகைத்தான். அவன் தலைக்குழல் தோள்களைத் தொட்டுக் கொண்டிருந்ததால் சிரிப்பால் அவன் உடல் குலுங்கிய போது அவை அவன் தோளில் நர்த்தனம் செய்வது போல் காணப்பட்டன. அவன் மூர்க்கத்தனமான சிரிப்பைக் கண்டதும் மூர்சமத் முகத்தில் வெறுப்பைக் காட்டினான். அத்துடன் கேட்டான், "உங்களுக்கு இவனை ஏற்கனவே தெரியுமா?" என்று.

"யாரையும் தெரியாமலா இந்த பயங்கரத் தீவுக்கு மரக்கலத்தைச் செலுத்தி வந்தேன்?" என்று கேட்ட விஜயன், "புலுகா? இவனுக்கு உன் கதையைச் சொல்" என்றான்.

zeevaa

காட்டுவாசிகளின் தலைவன் விஜயனை உற்று நோக்கி, "நான் புலூகா, ஊஹும் இல்லை, புலூகா கடவுள்" என்றான்.

"உன்பெயர் புலூகா இல்லை? நீ தானே சொன்னாய்?" என்று கேட்டான் விஜயன்.

"எனக்குப் பெயர் இல்லை. புலூகா பெயர்தான் நினைவுக்கு வந்தது," என்று தலையைத் தட்டிக் காட்டினான்.

"புலூகா கடவுளாயிருந்தாலும் அவர் பெயரை வைத்துக் கொள்ளலாம். தமிழ்நாட்டில் கடவுளின் பெயரைத்தான் வைத்துக் கொள்கிறார்கள்,"

"தப்பு! மனிதன் கடவுள் அல்ல,"

"ஆனால் புலூகா........"

"புலூகா ஆகாயத்தில் இருக்கிறார். சில வேளைகளில் அதோ அந்த மலை உச்சியிலும் இருப்பார்" என்று ஆகாயத்தையும், மலை உச்சியையும் காட்டிய தலைவன், "நாம் பேசுவதை அவர் கேட்டால் நம்மை........" என்று, கையால் கழுத்தைத் தடவியும், 'கொன்று விடுவார்' என்பதற்கு ஜாடை காட்டினான்.

விஜயன் ஆகாயத்தையும் பார்த்து அந்த மலை உச்சியையும் கவனித்தான். "புலூகா இப்பொழுது அங்கேயா இருக்கிறார்?" என்று கேட்டான்.

"ஆம்," என்றான் தலைவன்.

"இதற்குச் சேணமலை என்று பெயரில்லை?" என்று விஜயன் கேட்டான்.

"ஆம்" என்ற தலைவன், அந்த மலை உச்சியை நோக்கித் தலை வணங்கினான்.

"ஏன் வணங்குகிறாய்?" என்று சூர்சமத் இடைமறித்து கேட்டான்.

zeevaa

"அங்கு புலூகா இருக்கிறார். ஆனால் அவர் பக்கத்தில் இன்று அப்பா வரவில்லை, குழந்தைகள் மட்டும் இருக்கிறார்கள்," என்று ஆகாயத்தைக் காட்டினான் காட்டுவாசிகளின் தலைவன்.

மூர்சமத் ஏதும் புரியாமல் விழித்தான். விஜயன் புன்முறுவல் கொண்டு, "மூர்சமத்! ஹண்டுமான் வாசிகள் சந்திரனைத் தந்தையாகவும், சூரியனை அவர் மனைவியாகவும் பாவிக்கிறார்கள். அந்த இருவருக்கும் பிறந்த குழந்தைகள் நட்சத்திரங்கள்," என்று விளக்கினான். *

"சரி புலூகா......." என்று மீண்டும் துவங்கிய விஜயனை "என் பெயர் அதல்ல" என்றான் தலைவன் மீண்டும்.

"சரி உன் பெயரென்ன?" என்று கேட்டான் விஜயன்.

"சாரியார்," என்று தலைவன் சொன்னதும் திடுக்கிட்டுப்போனான் மூர்சமத். "எசமான்! இது நம்மூர் பெயராக இருக்கிறதே?" என்று வினவினான் குழப்பத்துடன்.

விஜயன் லேசாக நகைத்துவிட்டு, "இது இவர் சாதிப்பெயர்" என்று கூறினான்.

"இவர் வைணவரோ?" என்று சிரித்தான் மூர்சமத்.

"இல்லை சமத், அந்தமானில் பல சாதிகள் உண்டு. எராவா சாதி அவற்றில் ஒன்று. அதன் உட்பிரிவுகள் சாரி அல்லது சாரியார், கோரா, டாபோ என்று சில இருக்கின்றன. அவற்றில் சாரியார் உட்பிரிவை இவன் சேர்ந்தவன்," என்ற விஜயன் மேற்கொண்டு பேச்சை வளர்த்தாமல், "சாரி! எனது மரக்கலங்கள் இங்கு இருக்கும் வரை உன் இனத்தாரின் பாதுகாப்பு வேண்டும்," என்று கேட்டான்.

---

* "Puluga used to live on the top of saddle peak. The sun is the wife of the moon and stars are their children and they live near Puluga in the sky" - Imperial Gazetteer of India-Andamans and Nicobar-Page 12&13.

zeevaa

சாரியார் உடனே பதில் சொல்லவில்லை. நீண்ட நேரம் ஆகாயத்தில் கண்களை ஓட்டினார். பிறகு சொன்னார்: "உன் கப்பல் ஒன்றிம உனக்கு எதிரிகள் இருக்கிறார்கள்," என்று.

"ஆம்," என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் விஜயன்.

மறுபடியும் சாரியார் காற்று வந்த திசையில் காதைத் திருப்பி எதையோ உற்றுக் கேட்டார். அடுத்து விஜயனை நோக்கி, "உங்களுக்கு ஆபத்து விளைவிக்க இப்பொழுது கூட யாரோ வருகிறார்கள் என்று வுலூகா சொல்கிறார்," என்றார்.

*"வுலூகா! யார் அது?" என்று வினவினான் விஜயன்.

"வுலூகா புயலின் தேவதை. அவர் காற்று மூலம் செய்தி சொல்வார். இப்பொழுது சொல்கிறார்," என்று சாரியார் விளக்கிவிட்டுச் சட்டென்று காரணமில்லாமல் எழுந்து நின்றார். "இங்கு யாரோ பெண் வந்திருக்கிறாள்," என்று காற்றை முகர்ந்தார்.

பெண்ணாவது வருவதாவது? வருவதற்கு யாருமில்லை," என்றான் விஜயன்.

"இல்லை, அருகிலேயே வந்திருக்கிறாள்," என்று அவர் கூறிக் கொண்டிருக்கையில் பக்கத்து மரக் கூட்டத்திலிருந்து ஒரு காட்டுவாசி அவசரமாக ஓடிவந்து சாரியார் காதில் ஏதோ சொன்னான். அதைக் கேட்ட தலைவன் ஏதோ சைகை செய்ய, மற்றக் காட்டுவாசிகள் சரேலென பந்தங்களுடன் எழுந்தார்கள். வந்த காட்டுவாசி வழிகாட்ட, சாரியார் அவனைப் பின் தொடர்ந்தார் வேகமாக, மற்றக் காட்டுவாசிகளும் தொடர்ந்தார்கள். காரணம் தெரியாமல் விஜயனும் மூர்சமதும் அவர்களைப் பின் தொடர்ந்தார்கள்.

---

* Wuluga (Storm) mixed up with ancestrai Chiefs-Andaman & Nicobar-Imperial Gazetteer - Page 15.

zeevaa

சற்றுத் தூரம் சென்றதும் சாரியார் சட்டென்று நின்று எதிரே ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டினார். விஜயன் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டான். பந்தங்களின் வெளிச்சத்தில் திரிலோகசுந்தரி மண்ணில் மாணிக்கம் போல் கிடந்தாள். அவளை நோக்கி எட்ட இருந்த புதரிலிருந்து ஒரு நாகம் ஊர்ந்து வந்து அவள் காலருகே படமெடுத்தது. விஜயன் தனது கச்சையிலிருந்து குறுவாளை எடுத்தான். அவன் கையைச் சாரியார் பிடித்தார். "சற்றுப் பொறு", என்றும் கூறினார்.

நாகம் படமெடுத்து இருமுறை ஆடி, சுந்தரியின் பாதத்தில் அடிக்க நிமிர்ந்தது.



# 26. சூ-சின்னும் சாரியாரும்

மண்ணில் கிடந்த மகாதேவியின் காலடிக்கு மகா சர்ப்பமொன்று வந்து படமெடுத்த பின்பும் தான் குறுவாளெறிவதைத் தடுத்துப் பொறுக்கச் சொன்ன சாரியார் மீது தீ கக்கும் விழிகளைத் திருப்பிய விஜயன், சாரியார் தன்னை அடியோடு திரும்பிப் பார்க்காததையும், பாம்பின் படத்தின்மீதே கண்களை நாட்டியிருந்ததையும் கண்டு, 'இந்த முட்டாள் எதற்காகத் தாமதிக்கிறான்?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டிருக்கையிலேயே நாகம் படத்தை எடுத்து நிமிர்ந்துவிட்டதையும் சுந்தரியின் காலை எந்த விநாடியிலும் அடித்துவிட முடியுமென்பதையும் பார்த்ததும் பொறுமையைக் கைவிட்டு இரண்டாம் முறையாகத் தனது குறுவாளை ஏந்தி நாகத்தை நோக்கிக் குறிவைத்தான். அவன் குறிவைத்துக் குறுவாளை எறிவதற்குள் நாகத்தின் கதை முடிந்துவிட்டதைக் கண்டான் சிங்கள இளவல், நாகம் படத்தைத் தூக்கி நிமிர்ந்ததும் அதனுடன் கூடவே சாரியாரும் நன்றாக விறைத்து நாகத்தின் படத்தைப் போலவே தனது தலையையும் தூக்கி 'ஹூம்' என்று ஒலி கிளப்பினார். அந்த ஒலி முடிவதற்குள் மின்னல் வேகத்தில் ஒரு சிறிய அம்பு சர்ப்பத்தின் பெரிய படத்தில் பாய்ந்து விடவே நாகம் தன் உடலை உதறிக்கொண்டு விர்ரென்று மேலே கிளம்பி ஐந்தடி தூரத்தில் போய் விழுந்தது.

அம்பு எப்பொழுது எடுக்கப்பட்டது. எப்பொழுது எய்யப்பட்டது என்பதை நினைக்கக்கூட முடியாத விதத்தில் சகலமும் நிகழ்ந்து விட்டதைக் கண்ட விஜயன் திரும்பிச் சாரியாரை நோக்கினான். சாரியார் புன்முறுவலுடன் நின்றிருந்தார். அவருக்குப் பக்கத்தில் நின்றிருந்த வில்லாளி கையிலிருந்த வில்லைத் தோளில் மாட்டிக்

zeevaa

# விஜய மகா தேவி

சாண்டில்யன்



zeevaa

கொண்டு சர்ப்பத்தை நோக்கி நடந்து அதை வாலைப்பிடித்து எடுத்துச் சிறிது நேரம் ஆட்டிப் பார்த்தான். பிறகு தலையைப் பிடித்து படத்திலிருந்த சிறு அம்பை எடுத்து மண்ணில் துடைத்துவிட்டு தனது முதுகிலிருந்த அம்புக்கூடியில் செருகிக்கொண்டு பாம்பைக் கீழே போட்டான். பிறகு சாரியாரை நோக்கி வந்து ஏதோ மொழியில் விவரம் சொன்னான்.

சாரியார் அவன் சொன்னதை ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையை ஆட்டிவிட்டு மண்ணில் கிடந்த மகாதேவியை நோக்கிச் சென்றார். விஜயனும் மூர்சமதும் மட்டும் பின் தொடர்ந்தார்கள். மற்ற காட்டுவாசிகள் நின்ற இடத்திலேயே நின்று விட்டார்கள். சாரியார் திரிலோக சுந்தரி கிடந்த இடத்துக்கு வந்ததும் அவள் வாயில் துணி அடைக்கப்பட்டிருப்பதையும் பார்த்து விஜயனை நோக்கித் திரும்பி, "நான் சொன்னது என்ன?" என்று சிரமப்பட்டு அரைகுறைத் தமிழில் கேட்டார்.

விஜயன் பதிலேதும் சொல்லாமல் சுந்தரியின் அருகில் உட்கார்ந்து அவள் வாயிலிருந்த துணியை எடுத்தான். பிறகு கைகால் கட்டு களையும் அவிழ்த்து அவளை மெதுவாகத் தூக்கித் தன் மார்பு மீது சாத்திக் கொண்டு, "சுந்தரி! சுந்தரி!" என்று இருமுறை அழைத்தான். அப்பொழுதும் அவள் சுயநிலைக்கு வராததால், "சமத்! இவள் மூர்ச்சையாயிருக்கிறாள். சிறிது நீர் கொண்டு வா," என்று உத்தரவிட்டான்.

மூர்சமத் விழித்து, "எசமான்! இங்கு நீர் இருக்கும் இடம் எனக்குத் தெரியாதே," என்றான்.

அவர்கள் சம்பாஷணையைப் புரிந்து கொண்ட சாரியார் எட்ட மேட்டில் நின்றிருந்த தனது அடியார்களை நோக்கிக் கையால் ஏதோ சைகை செய்ய இரு காட்டுவாசிகள் வெகு வேகமாக ஓடி வந்தார்கள். தலைவன் இருந்த இடத்திற்கு, ஒருவன் பந்தத்தை ஏந்தி நிற்க இன்னொருவன் தனது தோளிலிருந்த தோற்பையில் கையை விட்டு

ஒரு சிறிய மண்குடுவையை எடுத்தான். அதிலிருந்து ஏதோ ஒரு திராவகத்தை எடுத்துச் சுந்தரியின் கண்களில் தேய்க்க அவள் கண்களை மெல்ல மெல்ல விழித்தாள். அந்தச் சமயத்தில் சுந்தரியின் மண்டையில் சிறிது எழும்பியிருந்த இடத்தைச் சாரியாருக்கு அவன் காட்டவே, சாரியார் தலையசைத்தார், புரிந்து கொண்டதற்கு அறிகுறியாக, அடுத்து அந்தக் காட்டுவாசி குடுவையிலிருந்த திராவகத்தைச் சுந்தரியின் மண்டையின் எழுச்சியிலும் சிறிது தடவி அழுத்தினான். இந்தச் சிகிச்சைகளால் முழுச்சுரணை அடைந்த சுந்தரி சுற்று முற்றிலும் நோக்கினாள்.

விஜயன் மார்பில் தான் சாய்ந்திருப்பதைக் கண்டதும் நிம்மதி மூச்சுவிட்ட சுந்தரி. மூர்சமதை நோக்கிப் புன்முறுவல் செய்தாள். பிறகு எதிரே நின்ற காட்டுவாசிகளை நோக்கி, "இவர்கள் யார்?" என்று வினவினாள்.

விஜயன் அவள் தலையைக் கோதிவிட்டு ஆடைகளையும் சரிசெய்து விட்டான். பிறகு சொன்னான், "இவர்கள் எனது நண்பர்கள் இவர் இவர்களின் தலைவர், சாரியார் என்று பெயர். இவரில்லா விட்டால் நீ பிழைத்திருப்பது கடினம்," என்று அத்துடன் எட்டிக் கிடந்த மகாசர்ப்பத்தையும் காட்டினான்.

சுமார் நாலடி நீளமுள்ளதாய் வழ வழவென்று உடலிற் மினு மினுப்பு உடையதாய்த் தலையைத் தரையில் வைத்து உயிரற்றுக் கிடந்த பெரிய நாகத்தைக் கண்ட சுந்தரி வெலவெலத்துப் போனாள். "அது உன்னைக் கடிக்க இருந்தது. உன் காலருகே வந்து படமெடுத்து நிமிர்ந்தும் விட்டது..." என்ற விஜயன் வார்த்தைகளை முடிக்க வில்லை. சுந்தரி, "ஐயோ!" என்ற பீதியில் கூவினாள்.

விஜயன் அவளை முதுகில் தடவி மேலும் சொன்னான். "அந்தச் சமயத்தில் சாரியாரின் சைகையைத் தொடர்ந்து அதன் படத்தின் மீது காட்டுவாசியொருவன் நுண்ணிய அம்பு ஒன்றை வில்லில் பூட்டி எய்தான். பாம்பின் படத்தில் அந்த வாளி நுழையத் துள்ளி எட்டப்

zeevaa

போய் விழுந்தது நாகம்," என்று விளக்கிய விஜயன், "தேவி! நானும் வில் திறனைப் பார்த்திருக்கிறேன். நானும் வில்வித்தை பயின்றிருக் கிறேன். ஆனால் இன்றுவரை இப்படித் துரிதமாக வாளி எய்யப்படும் விந்தையை நான் கண்டதில்லை," என்று.

இதற்குள் சுந்தரிக்குச் சுரணை பூராவும் திரும்பி விடவே அவள் விஜயன் மார்பை விட்டு நகர்ந்து எழுந்து நின்றாள். விஜயனும் உடன் எழுந்து அவளைத் திடப்படுத்த அவள் இடையைப் பற்றி நின்றான். அதைக் கண்ட சாரியார், "பூ! பூ! பெண்ணை உடு உடு!" என்று கொச்சைத் தமிழில் பேசினார்.

"விடாமல் என்ன செய்கிறேன்?" என்று கேட்டான் விஜயன்.

"நான் ஆம்பிளை," என்றார் சாரியார்.

"மூர்சமதும் ஆண்பிள்ளை தான்," என்று சமதைக் காட்டினான் விஜயன்.

"கூடாது கூடாது. ஆம்பிளை முன் ஆம்பிளை பெண்ணை...." என்று கூறிய சாரியார் 'கட்டிப் பிடிக்கக் கூடாது', என்ற வார்த்தை வராததால் கையால் கட்டிப் பிடிப்பது போல் காட்டினார்.

விஜயன் நகைத்து, "சுந்தரி! உன்னால் நிற்க முடியுமா?" என்று வினவினான்.

"முடியும்", என்று அவள் சொல்லித் தானாகவே அவனை விட்டு விலகி நின்றாள்.

அதனால் சமாதானமடைந்த சாரியார், "இது சரி" என்றார். பிறகு சாரியார் தமிழில் விளையாடாமல் தனது சொந்த மொழியிலேயே பேசத் தொடங்கி "இவள் உன் மனைவியா?" என்று வினவினார்.

"ஆம்," என்றான் விஜயன்.

"சிங்களத்தில் யார் குடும்பம்?" என்று சாரியார் வினவினார்.

zeevaa

"இவள் சிங்களமல்ல, கலிங்கம்," என்று விஜயன் சொன்னான்.

சாரியார் சிறிது சிந்தனை வசப்பட்டார். "கலிங்கத்தில் ராஜகுமாரி உண்டு. மிக அழகாம்", என்றார்.

"உனக்கெப்படித் தெரியும்?" என்று விஜயன் வியப்புடன் கேட்டான்.

"இங்கு வரும் வணிகர்கள் சொல்லுவார்கள்," என்று சொன்னார் சாரியார்.

"இங்கு வணிகர்கள் அடிக்கடி வருவதுண்டா?" விஜயன் கேட்டான் சந்தேகத்துடன்.

"அடிக்கடி கிடையாது. எப்பொழுதாவது வருவார்கள். எனக்குக் கப்பம் கட்டினால் விட்டுவிடுவோம். இல்லாவிட்டால் திரும்ப மாட்டார்கள்." இதைச் சர்வ சாதாரணமாகச் சொன்னார் சாரியார். மேலும் சொன்னார். "நாங்கள் அமைதியுடன் இந்த எங்கள் நாட்டில் வாழ விரும்புகிறோம். எங்கள் அமைதியைக் குலைக்க, இங்குள்ள செல்வங்களைக் கொள்ளையடிக்க, நாகரிகத்தின் பெயரால் சில கொள்ளைக்காரர்கள் வருகிறார்கள். அவர்களை நாங்கள் அழிக்கிறோம். நாங்கள் அவர்களை அழிக்காவிட்டால் அவர்கள் எங்களை அழித்துவிடுவார்கள்," என்ற சாரியார் குரலில் உணர்ச்சி மண்டிக் கிடந்தது.

இதைக் கவனிக்கவே செய்தான் விஜயன். 'நாகரீகமில்லாத இந்த காட்டுமிராண்டிகளைவிட நாகரீகக் காட்டுமிராண்டிகளே உலகத் துக்கு அபாயமானவர்கள்,' என்றும் உள்ளூர எண்ணி, "சாரி!" என்று சாரியாரை அழைத்தான்.

சாரியார் விஜயனை நோக்கி, "என்ன சிங்கள ராஜா?" என்று கேட்டான்.

"நீ சொன்னாயே கலிங்க ராஜகுமாரி?" என்று துவங்கினான் விஜயன்.

zeevaa

"உம்," இந்த ஒலிதான் பதில்.

"அவள் தான் இவள்," என்று திரிலோகசுந்தரியைச் சுட்டிக் காட்டினான் விஜயன். "இவள் என் மனைவி," என்று மீண்டும் வலியுறுத்திச் சொன்னான்.

சாரியார் தலையை அசைத்தார். பிறகு தனது கச்சையிலிருந்த குறுவாளை எடுத்து அதன் பிடியால் சுந்தரியின் தோளைத் தொட்டு "சகோதரி," என்றார்.

அந்த ஒரு சொல், ஓர் உறவு, திரிலோகசுந்தரிக்கு ஹண்டுமானில் பூரணப் பாதுகாப்பை அளித்து விட்டது என்பதைப் புரிந்துக் கொண்ட விஜயன் சாரியாருக்கு நன்றி தெரிவிக்கும் பாவனையில் கைகளைக் கூப்பினான்.

அதற்கு மேல் சாரியார் காலம் கடத்தவில்லை. "சிங்கள ராஜா! வாருங்கள், சகோதரிக்குத் தீங்கிழைத்த வனைக் கண்டு பிடிப்போம்," என்று கூறி, திரிலோக சுந்தரி விழுந்து கிடந்த இடத்தைக் காட்டுவாசி ஒருவன் காட்டிய தீப்பந்த ஒளியில் பரிசோதித்தார். அந்த இடத்திலிருந்து ஓடிய அடிகளைப் பற்றிச் சென்றார். விஜயனும் சுந்தரியும் மூர்சமதும் அவரைத் தொடர்ந்தார்கள். வேட்டை மிருகத்தைக் கண்டுபிடிப்பவனைப் போல் அடிச்சுவடுகளைக் கவனித்த வண்ணம் குனிந்தே நடந்த சாரியார் நீர்க்கரையில் சுவடு மறைந்து விட்டதைப் பார்த்துக் குனிந்த நிலையிலிருந்து நிமிர்ந்து, "வந்தவன் இந்தக் கப்பல் ஒன்றிலிருந்து வந்திருக்கிறான்," என்றார்.

இருக்கலாம் என்று தலையாட்டிய விஜயன் சாரியாரை நோக்கி, "நேரமாகி விட்டது. நான் கப்பலுக்குப் போகிறேன்," என்று விடை பெற்றுத் திரும்ப முயன்றான். சட்டென்று தனது அருகில் நின்ற காட்டுவாசியிடமிருந்து பந்தத்தை வாங்கிய சாரியார் அதை மணலில் தீய்த்து அணைத்தார். "அதோ!" என்று இன்னொரு கப்பலின் தளத்தை சுட்டிக் காட்டினார்.

zeevaa

கப்பலின் தளத்துக்கு அப்பொழுதுதான் வந்த சூ-சின் காட்டுப் பகுதியை ஊன்றிக் கவனித்தான். அவனைக் கண்ட சாரியார், "சிங்கள ராஜா!" என்று வெறி துலங்கிய குரலில் அழைத்தார்.

"என்ன சாரி?" விஜயன் கேட்டான் சாரியின் வெறிக்குக் காரணம் புரியாமல்.

"அதோ அவன்?" என்று சூ-சின்னைச் சுட்டிக் காட்டினான்.

"என்ன அவனுக்கு?" விஜயன் வினவினான்.

"அவன் சூ-சின் தானே?" சாரியார் குரலில் கொலை ஒலி இருந்தது.

"ஆம். உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான் விஜயன்.

"தெரியும். இவனை இரண்டு வருஷங்களாக எதிர் பார்த்திருக் கிறேன்" என்று சொன்னதோடு நிற்கவில்லை சாரியார். பக்கத்தி லிருந்த காட்டுவாசியிடமிருந்து வில்லையும் சிறு வாளியையும் வாங்கி வாளியை வில்லில் பொருத்திவிட்டு ஒருமுறை உறுமினார். "இவனும் விஷப் பாம்புதான். இவன் தலையும் பாம்பின் படம் போல் தானிருக்கிறது. இவன் ஆயுள் இன்றோடு முடிந்தது", என்று நாணை இழுத்தார். விஜயன் குறுக்கிட்டிராவிட்டால் சூ-சின்னின் வாழ்க்கை அன்றோடு முடிந்திருக்கும். விஜயன் சாரியாரின் கையைப்பிடித்து, "இவனை இப்பொழுது கொல்ல வேண்டாம். சற்றுப் பொறு," என்றான்.

"ஏன் பொறுக்க வேண்டும்?" சாரியார் சீறினார்.

"உன் சகோதரியின் மகாரத்தினம் இவனிடம் இருக்கிறது. எங்கோ மறைத்திருக்கிறான். அது கிடைத்ததும் கொன்றுவிடுவோம்," என்றான் விஜயன்.

திரிலோகசுந்தரியை நோக்கினார் சாரியார். அவள் கண்களிலும் அதே வேண்டுகோள் இருப்பதைக் கவனித்த சாரியார், "சரி சகோதரி!

zeevaa

சற்றுப் பொறுக்கிறேன். உன் மகாரத்தினத்தைக் கொடுக்காமல் இவன் உயிருடன் ஹண்டுமானிலிருந்து கிளம்ப மாட்டான்," என்று கூறி விட்டு நாணைத் தளர்த்தினார்.

அப்பொழுது விஜயன் கேட்டான். "சூ–சின் தான் உனது சகோதரியை மண்டையில் அடித்தவனா?" என்று.

"இருக்க முடியாது. சூ–சின்னின் காலடி மிகச் சிறியது. கரைக்கு வந்தவன் காலடி நீண்டும் அகன்றுமிருக்கிறது," என்றார் சாரியார்.

அதைக் கேட்டு வியந்த விஜயன், 'வேறு யார் கரைக்கு வந்திருக்க முடியும்?' என்று தனக்குத்தானே வினா எழுப்பியும் விடை காணமுடியவில்லை. இந்தப் புதிரை எப்படியாவது அவிழ்க்க வேண்டும்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டே சுந்தரியுடனும் சமதுடனும் தான் வந்த படகில் மரக்கலத்துக்குத் திரும்பினான் விஜயன். மரக்கலத்தில் ஏறி நேராகத் தனது அறைக்குச் சென்றான். தீர்க்க சிந்தனையுடன் படுத்த பின்பும் சிந்தனை விடவில்லை. கூரையைப் பார்த்துக் கொண்டே படுத்திருந்தான்.

அவன் மனமெல்லாம் சூ–சின்னின் மீதே நிலைத்திருந்தது. 'அவனில்லாவிட்டால் வேறு யார் சுந்தரிக்குத் தீங்கிழைக்கத் துணிய முடியும்?' என்று கேட்டுக் கொண்டான். அப்பொழுது அந்தச் சுந்தரியின் முகமே அவன் முகத்தைக் கூரையிலிருந்து மறைத்தது. அவள் செவ்விய இதழ்கள் அவன் இதழ்களை நாடின. அவள் மலர் உடல் அவன் உடல் மீது சாய்ந்து கிடந்தது. 'எந்த சோகத்துக்கும் பெண் உடல் எத்தனை சாந்தியளிக்கிறது!' என்று வியந்தான் விஜயன். அந்தச் சாந்தியை மேலும் நாடி தனது கைகளிரண்டையும் தூக்கி, சுந்தரியின் பூவுடலை அணைத்தான். ஆராயவும் முற்பட்டான்.

zeevaa

—

## 27. சொல்ல முயன்ற கதை

ஹூண்டுமான் வாசிகள் அங்கு வரும் அகதிகளை ஆகாரம் செய்து விடுவார்களென்ற பீதியைச் சூ-சின் முன்பே கிளப்பி விட்டிருந்தபடியால், அவனே கரைக்கு வராததாலும், வேறு யார் அத்தனை துணிச்சலாகக் கரைக்கு வந்து சுந்தரியின் மண்டையில் அடித்திருக்க முடியும் என்ற சிந்தனையில் ஆழ்ந்திருந்ததால் சோகத்துக்கு இலக்கான இலங்கை இளவல், சுந்தரியின் பூவுடல் தன் மீது தாழ்ந்ததும், அதன் மீது தனது கைகளைத் தவழவே விட்டான். அவளுக்கு ஆதரவு அளிப்பதை உறுதி செய்யும் முறையில் அவள் உடலை இறுக்கிக் கட்டினான் ஒருமுறை. பிறகு கைகளைத் தளர்த்தி அவள் மீது அலையவிட்டான். அவள் மேலே புரண்டு கிடந்ததால் கீழே கிடந்த தனது உடலைச் சிறிது கீழே இறக்கி அவள் மார்புக்கு மத்தியில் தனது முகத்தை புதைத்துக் கொள்ளவும் செய்தான். அவளை அணைத்து ஆராய முற்பட்ட கைகள் முதலில் முதுகை ஆறுதலாகத் தடவி பிறகு மெதுவாக, படிப்படியாகக் கீழே இறங்கவும் முற்பட்டதால் சிறிது நெளியவும் செய்தாள் சுந்தரி. அப்படி நெளிந்ததே அவன் கைகளுக்குத் தூண்டுகோலாகி விடவே இரு கைகளையும் அவள் சிற்றிடையில் இருபுறங்களிலும் கொடுத்து லேசாகப் பிடித்துவிட்ட விஜயன், அவற்றை இடையை அடுத்துப் பெருத்திருந்த எழில்கள் மீது அலையவிட்டான். கைகளின் விஷமத்தால் உணர்ச்சியின் எல்லைக்குச் சென்ற சுந்தரி சட்டென்று தனது உடலை அவன் மீதிருந்து சரித்துப் பஞ்சணையில் கிடந்தாள். அப்படிப் பக்கத்தில் விழுந்து விட்டதால் அவன் கைகளிலிருந்து விடுபட முடியவில்லை அவள். அந்தத் துஷ்டக் கைகள் அவளைத் திருப்பின விஜயன் உடலை

zeevaa

நோக்கி. கால்களும் அவள் கால்களுக்கு மேல் தவழ்ந்து அவற்றை நெருக்கவும் முற்பட்டன. அதனால் ஏற்பட்டது இம்சையா இச்சையா? அவளுக்குப் புரியவில்லை. அது மட்டுமல்ல. தோளை எதற்காக இப்படி அழுத்திப் பிடிக்கிறார் பிராணன் போகும்படியாக? என்றும் தன்னைக் கேட்டுக் கொண்டாலும் அந்தப் பிடிப்பின் வலி தனக்குத் தேவையாயிருந்ததைக் கவனித்த விஜயமகாதேவி, "என்ன விசித்திரம்? என்ன பேசி என்ன? பெண்கள் ஆண்களின் இம்சையைத் தாங்கவேண்டிய போகப் பொருள்தானா?" என்று வினாவையும் எழுப்பிக் கொண்டாள். அந்த வினாவுக்கு விடை காண அவள் முயலவில்லை. வேறு வினாக்களை விஜயன் எழுப்பிவிட்ட காரணத்தால்.

பக்கவாட்டில் அவள் உடலை இழுத்தணைத்த கைகளில் ஒன்று எக்கச்சக்கமாக அவள் உடலடியில் சிக்கியதால், இடது மார்புக் கடியில் அகப்பட்டுக் கொண்டதையும் கவனித்த சுந்தரி, "இந்த கை எதிர்பாராத விதமாக அங்கு அகப்பட்டுக் கொண்டதா அல்லது வேண்டுமென்றே அவர் சிக்க வைத்துக் கொண்டிருக்கிறாரா?" என்று கேட்டுக் கொண்டதன்றி, "ஆமாம், இடது கை தான் சிக்கியிருக்கிறது. வலது கை அங்கே ஏன் போகிறது? அதற்குத் துணை செய்யவா? அல்லது ஒரு கை போதாதென்று......" என்று மேலும் கேள்விகளை எழுப்பிக் கொண்டவள் திடீரெனப் பெருமூச்சு விட்டாள். இன்னொரு கை இடது கையை நாடவில்லை என்று தெரிந்ததால், அது போகுமிடத்தையும் தேடும் இடத்தையும் உணர்ந்ததால்.

ஆனால் வலது கை சற்று எட்டவே நின்றது. பதிலுக்கு மார்பில் புதைந்து கிடந்த தலை புரண்டது. "ஏன், தலை வலிக்கிறதா?" என்று மெதுவாகக் கேட்டாள் சுந்தரி.

"இல்லை சுந்தரி. தலையைச் சம்மட்டி கொண்டு அடிக்கின்றன," என்ற விஜயன் முகத்தை அவள் மார்பில் முழுதும் புதைத்துக் கொண்டான்.

zeevaa

"சம்மட்டி கொண்டு அடிக்கின்றனவா? எவை?" என்று கேட்ட சுந்தரி அவன் தலையைப் பிடித்து மார்பில் நன்றாகவே அழுத்திக் கொண்டாள்.

"சிந்தனைகள்," என்ற விஜயன் அவள் மார்பிலிருந்தே பேசியதால் உதடுகள் திறந்து மூடியபோது மார்பின் திண்மையிலும் மென்மையிலும் விரிந்து மீண்டதால் சொர்க்கபோக உணர்ச்சிகளை அடைந்த சுந்தரி அவற்றிலிருந்து மீளப் பேச்சுக் கொடுத்தாள். "சிந்தனைகளா? எதைப்பற்றி?" என்று கேட்டாள்.

"இதைப் பற்றித்தான்," என்று அவள் முதுகைத் தட்டிக் காட்டினான் விஜயபாகு.

"என்னைப் பற்றியா!" என்று கேட்ட சுந்தரி அவன் கால்களுடன் தனது கால்களைப் பின்னினாள்.

"ஆம் சுந்தரி! இன்று உன்னை யாரோ கொலை செய்ய முயன்றிருக்கிறான்...." இதைச் சொன்ன விஜயபாகு அவள் மார்பில் பெருமூச்சு விட்டான்.

"இல்லை, கொலை செய்ய முயலவில்லை. முயன்றிருந்தால் அவனைத் தடை செய்ய அங்கு யாரும் இல்லை," என்று சுட்டிக் காட்டினாள் சுந்தரி.

விஜயன் முகத்தை அவளது மார்பிலிருந்து நீக்கி சற்றே எழுந்து அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். வலது கையை மட்டும் அவளுக்குக் குறுக்கே போட்டு, அப்படித்தானிருக்கும். ஆனால் துணிந்து கரைக்கு வந்தவன் யார்? யாராயிருந்தாலும் ஹண்டு மானை அறிந்தவன், வந்தவனோ சூ–சின் அல்ல. வேறு யாராயிருக்க முடியும்?" என்று கேட்டான். யாராயிருந்தாலும் நம்மைத் தீர்த்துக்கட்ட ஓர் எதிரி கப்பலில் இருக்கிறான்,' என்றும் சொல்லி, தனது வலது கையால் அவள் இடையை நொறுக்கிப் பிடித்தான்.

zeevaa

சுந்தரி புன்முறுவல் கொண்டாள். "உங்களுக்கிருக்கும் ஆத்திரத்தில் அவனுக்குப் பதில் என்னைக் கொன்று விடுவீர்கள் போலிருக்கிறது!" என்றாள் புன்முறுவலின் ஊடே.

அதைக் கவனிக்கவே செய்த விஜயன் அதற்குப் பதில் சொல்லவில்லை. "நீ எதற்காகக் கரைக்கு வந்தாய்?" என்று வினவினான்.

"காலையில் கரைக்குப்போன நீங்கள் கப்பலுக்குத் திரும்பவில்லை. ஆகையால் தேடவந்தேன்," என்றாள் சுந்தரி.

"சுந்தரி! இப்படி எதற்கும் என்னைப் பற்றிக் கவலைப் படுவது தவறு" என்று கூறிய விஜயபாகு, "சரி படுத்துக் கொள்" என்று அவளை நன்றாக மல்லாந்து படுக்க வைத்தான். எழுந்து கட்டிலிலிருந்து இறங்கி, கீழே நின்று அவளை நோக்கவும் செய்தான்.

கட்டழகி கலிங்கன் மகள் கட்டிலில் கிரேக்க நாட்டுச் சிலையெனப் பல வளைவுகளுடன் மல்லாந்து கிடந்தாள். அவள் சுந்தர உடலின் பல பகுதிகளும் மேடும் பள்ளமும் இணைந்த வளைவுகளாக இருந்ததால், "இதைவிடச் சிறந்த சிற்பத்தை இயற்கைச் சிற்பி வடிக்க முடியாது," என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் விஜயன்.

கட்டிலில் மல்லாந்து கிடந்த அவள் உடல் மீது அறைக் கோடியிலிருந்த வெளிச்சம் அரைகுறையாக விழுந்திருந்தாலும், அந்த அரை குறையே ரதி விலாசத்தை விளைத்திருந்தது அவள் சித்திர உடலில் அரைகுறையாக விழுந்த வெளிச்சத்தால் அவள் உடலின் சில பகுதிகள் இருட்டடித்தும் சில வெளிச்சத்தால் மெருகு ஏற்றப்பட்டும் கிடந்ததால், 'இருட்டும் வெளிச்சமும் இணைந்ததே வாழ்க்கை' என்று தீர்மானித்தான் விஜயன்.

விளக்கின் ஒளி அவள் முகத்திலும் மார்பகத்திலும் மட்டும் சிறிது அதிகமாக விழுந்து இடைக்குக் கீழே இருட்டடித்து விட்டதால், "இருட்டே சிந்தையின் ஆராய்ச்சிக்குத் தூண்டுகோல்," என்று சொல்லிக் கொண்டு, "பெண்ணழகின் மர்மம் விளக்க இயலாதது.

zeevaa

மறைவில் மர்மம், விளக்கம் இரண்டுமே இருப்பது இந்த ஒரு சிருஷ்டியில் தானோ?" என்றும் வினவிக் கொண்டான் விஜயன்.

அத்தனை நேரம் அவள் உடலைப் புரட்டியதால் கீழே சேலை விலகி, விளக்கொளி தொடைப்பகுதி உருண்ட பெரும் வெண்கலத் தூணைப் போலப் பளபளக்கச் செய்திருந்ததால் அதைப் பார்த்துக் கொண்டே இருந்தான் விஜயன். பிறகு கட்டிலண்டை சென்று கலைந்த சேலையை இழுத்து அவள் மலர்த்தொடையைப் போர்த்தி மறைத்தான்.

அப்படி மறைப்பதைக் கண்டு அவள் மந்தகாசத்தை உதடுகளில் நன்றாக விரிவடையச் செய்தாள். "அப்பா! என்ன அக்கறை ஆண்களுக்கு? ஏன்? இங்கு யார் பார்த்துவிடப் போகிறார்கள்,?" என்ற எண்ணத்தால் லேசாக நகைக்கவும் செய்தாள்.

அவள் சிரிப்புக்குக் காரணத்தை அறியாத விஜயன், கட்டிலின் முகப்பில் உட்கார்ந்து கலைந்த சேலையை அவள் காலில் ஒரு கையால் அழுத்திய வண்ணம், "ஏன் சிரிக்கிறாய் சுந்தரி?" என்று கேட்கவும் செய்தான்.

"நீங்கள் சேலையை...."

"உம்?"

"இழுத்து விட்டதைப் பார்த்தேன்,"

"அதனால் என்ன?"

"இங்கு யார் இருக்கிறார்கள்?"

"நான்?"

"ஓகோ, நீங்களா!" என்று வினவிய சுந்தரி மீண்டும் நகைத்தாள்.

அப்பொழுதுதான் அவள் நகைத்த காரணத்தை அவன் புரிந்து கொண்டான். "அடி பைத்தியமே! அதற்காக நான் மூடவில்லை"

zeevaa

"வேறு எதற்காக?" என்று அவள் கொஞ்சும் மொழியில் கேட்டாள்.

அவன் சிறிது சிந்தித்துவிட்டு, "உன் அழகு வெளிப்பட்டால்...." என்று இழுத்தான்.

"வெளிப்பட்டால்?" அவள் இதழ்களைக் குவித்துக் கேட்டாள்.

"என்னைப் பைத்தியமாக அடிக்கிறது" என்றான் அவன்.

"அப்படியா?"

"அதுமட்டுமல்ல"

"வேறென்ன?"

"என் கண்படும் போல் எனக்கே தோன்றுகிறது".,

"அதனால் என்னைப் பார்க்கவே மாட்டீர்களா?" என்று வினவிய அவள் சற்று நெகிழ்ந்து உடலைத் தூக்கி மேல் சேலையை இழுத்து, திறந்து கிடந்த மார்பையும் மறைத்து மூடினாள்.

அதைக் கண்ட விஜயன் நகைத்தான். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டு, 'உறங்கு சுந்தரி" என்று கூறி விட்டு அவள் சேலையை நன்றாக மூட மார்பின் மீது கையை வைத்துத் திடுக்கிட்டான். "சுந்தரி! உன் மார்பு ஏன் இத்தனை துரிதமாக ஓடுகிறது?" என்று கேட்டு, சேலையை அகற்றி மார்புக்குள் கையை வைத்து அதன் துடிப்பைக் கவனித்தான்

சுந்தரி "சரி சரி! எடுங்கள் கையை, எனக்கு ஒரு துடிப்புமில்லை," என்றவள் சட்டென்று எழுந்து சென்று விளக்கை ஊதிவிட்டு வந்தாள். வந்தவளைத் தனது இரு கைகளிலும் வாரிக்கொண்ட விஜயன் சாளரத்தின் மூலம் விளக்கு அணைந்ததால் உள்ளே ஏற்படத் துவங்கிய வான விளக்கான வெண்மதியின் ஆட்சியைக் கவனிக்க லானான்.

zeevaa

அறைக் கட்டிலில் அரையும்குறையுமாக விழுந்திருந்தது வெண் நிலவு. அதன் ஒளி விழுந்த இடத்தில் சுந்தரியின் உடலைத் திருப்பி மடிக்குக் குறுக்கே படுக்க வைத்துக் கொண்ட விஜயன், "சுந்தரி! இதுவரை நான் யாருக்கும் சொல்லாத இந்த ஹண்டுமானைப் பற்றிய ஓர் உண்மைக் கதையைச் சொல்லப் போகிறேன்," என்றான்.

"எனக்கு அந்தக் கதை வேண்டாம்," என்றாள் சுந்தரி சற்று சினம் துளிர்த்த குரலில்.

"வேறு எந்தக் கதை வேண்டும்?" என்று வினவினான் அவள் சுந்தர உடலை நோக்கிக் குனிந்து.

"எந்தக் கதையும் வேண்டாம்," என்று ரகசியமாகச் சொன்னாள் சுந்தரி.

"கதை பிடிக்காதா உனக்கு?"

"பேச்சே பிடிக்காது,"

"பேச்சுப் பிடிக்காதா?"

"பிடிக்காது, தேவையில்லாத போது,"

விஜயன் பெருமூச்செறிந்தான். உண்மையில் அவன் அவளிடம் பங்கிட்டுக் கொள்ள இருந்தது பெரு ரகசியம். அதை அவள் விரும்பாது போகவே அவளை நோக்கினான் உற்று. அவள் கண்கள் மூடிக்கிடந்தன. கால்கள் சிறிது மூடி இறுகித் திறந்தன. குவிந்த அவள் ஒவ்வொரு அவயமும் சந்திரனைக்கண்ட ஆம்பல் மலரைப் போல இதழ் இதழாகப் பிரிந்தன.

விஜயன் ஏதும் பேசவில்லை. மடியில் கிடந்த அந்த விசித்திர மலரைக் கட்டிலின் இருண்ட பகுதியில் கிடத்தினான். "ஒரே ஒளிமயமானாலும் வாழ்க்கை அல்ல : வாழ்க்கைக்கு இருட்டும் தேவை," என்று முணுமுணுத்துக் கொண்டான்.

zeevaa

கட்டிலின் இருண்ட பகுதியில் கிடந்த சுந்தரி மெதுவாக நெளிந்தாள். அவள் அழைப்புத் திட்டமாயிருந்தது. எந்த மனிதனும் மீளமுடியாத நிலையில் சிந்தனை வசப்பட்டு நின்றான் விஜயன் பல விநாடிகள். பிறகு எதையோ நினைத்துக் கொண்டு சுந்தரியிடம் ஏதும் சொல்லாமலேயே வெளியே செல்லக் காலடி எடுத்து வைத்தான், "உங்களைத்தான்," என்று கட்டிலிலிருந்து வந்தது ஒலி.

கட்டிலை நாடி வந்தான் விஜயன். "ஏன் சுந்தரி?" என்று வினவினான்.

"எங்கு போகிறீர்கள்?" என்று அவள் கேட்டாள்.

"தர்மரிடம்"

"எதற்கு?"

"முக்கிய அலுவல் இருக்கிறது,"

"என்னை விடவா?"

"உன்னைப் பற்றித்தான்," என்ற விஜயன். "காமமும் கடமையும் இணையும்போது இரண்டு அக்னிகளின் இடையில் மனிதன் நிற்கிறான். நான் இப்பொழுது கடமையை நாடிச் செல்கிறேன்," என்றான்.

"என்ன கடமை?" என்று அவள் கேட்டாள்.

"கதை சொல்லும் கடமை. நீ கேட்காத கதையை அந்தத் துறவிகளிடம் சொல்லப் போகிறேன்," என்று கூறிய விஜயன் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றான்.

கொதிக்கும் உள்ளத்துடன ஒரு முறை எழுந்து கட்டிலில் விழுந்தாள் சுந்தரி, "நான் அவருக்குக் கசந்து விட்டேனா?" என்றும் வினா எழுப்பிக் கொண்டாள்.

zeevaa

சிறிது நேரம் கழித்து அவளும் சேலையைச் சரிசெய்து கொண்டு அறைக்கு வெளியே சென்று தளத்தை அடைந்தாள். அங்கு தளத்தின் ஒரு மூலையில் தர்மர், காமர், அர்த்தர், மோக்ஷர் முதலியவர்களுக்குக் கதையைச் சொல்லிக் கொண்டிருந்தான் விஜயன். தூரத்திலிருந்து அதை ஒட்டுக்கேட்ட சுந்தரி, "என்ன விசித்திரக் கதை!" என்று வியப்பின் எல்லையை எய்தினாள்.




zeevaa

## 28. சூ-சின்னாசுரன்

அன்று கிருஷ்ணபட்சத்துப் பின்பாதி துவங்கிவிட்டதால் முதல் ஒன்றரை ஜாமங்கள் இருட்டிக் கிடந்த இரவை அரைமதி ஒளிமயமாக்கிவிட்ட காரணத்தால், மரக்கலத்தளத்தின் பெரும் பகுதியில் வெளிச்சமும் பாய் நீண்டு எழும்பியிருந்த இடத்தை அடுத்து நீண்ட நிழலும் இருந்ததன் விளைவாக சுந்தரியின் அறையைப் போலவே இருளும் ஒளியும் கலந்த நிலையே தளத்திலும் இருந்தது. அதுவும் பக்கப்பலகை ஓரமாக விழுந்திருந்த நிழலில் அவர்களுக்குக் கதை சொல்லிக் கொண்டிருப்பதைத் தளத்தின் வாயிற்படிக்கு வந்துவிட்ட சுந்தரி கவனித்ததும் அவர்கள் கண்களில் படாதிருக்க வாயிற்படியளித்த இருட்டிலேயே மறைந்து நின்று விஜயன் சொன்ன கதையைக் கேட்கலானாள். அப்பொழுது விஜயன் கதை சொல்லுவதில் முன்னேறி விட்டதால் முதல் பாதியை அவள் கேட்க முடியாவிட்டாலும் கேட்ட பின்பகுதியே பெரும் விசித்திரமாயிருந்தது.

விஜயன், தனக்கு எதிரே உட்கார்ந்திருந்த ஐவரையும் நோக்கி, "இதுவரை நான் சொன்னது புரிந்ததா?" என்று வினவினான்.

"புரிந்தது, மேலே சொல்லுங்கள்," என்றார் தர்மர்.

"சீனக் கடற் கொள்ளைக்காரர்களால் சிறை செய்யப்பட்ட சாரிக்கு அப்பொழுது வயது இருபதுக்கு மேல் இருக்காது. நான் சிங்களக் காடுகளில் தமிழ்ப் படைகளுக்கு அஞ்சித் திரிந்து கொண்டிருந்த போது, எனது வீரர்கள் சாரியை என் முன்பு கொணர்ந்து நிறுத்தி,

zeevaa



zeevaa

'இவன் நம்மை வேவு பார்க்க வந்தவன்,' என்று சொன்னார்கள். இவன் அதை அரைகுறை சிங்களத்தில் மறுத்தான். மீன் பிடிக்க ஹண்டுமானிலிருந்து வந்த தன்னை, புயல் சிங்கள சமுத்திரத்துக்கு அருகில் கொண்டு வந்து விட்டதென்றும், அங்கு வந்த சீனக் கொள்ளைக் கப்பலொன்றிலிருந்தவர்கள் தன்னைப் பிடித்துக் காப்பாற்றியதாகவும், பிறகு தன்னைக் கொன்று தீர்த்துவிட முயன்றதாக்வும், தான் தப்பி வந்ததாகவும் சொன்னான். அவன் சொன்ன கதை நம்பக் கூடியதாயிருந்ததால் அவனுக்கு அடைக்கலம் கொடுத்து என்னுடன் வைத்துக் கொண்டேன். அவன் என்னுடனிருந்த ஆறு மாதங்களில் அந்தமான் மொழியை எனக்குப் பேசப் பழகிக் கொடுத்தான். என்றாவது அந்தமான் வந்தால் தனக்குச் செய்தி அனுப்பும்படியும், தான் எல்லா உதவியையும் செய்வதாகவும் கூறினான். செய்தி அனுப்பும் முறையையும் சொல்லிக் கொடுத்தான். பிறகு அவனைச்சிங்களத்துக்கு வந்த வர்த்தகக் கப்பல்களில் ஒன்றில் நானே அனுப்பி வைத்தேன். என்னிடம் விடை பெறும் தருவாயில் சாரி சொன்னான்: "சிங்கள மன்னனே! என்றாவது நீங்கள் எனது நாடு வந்து எனது உதவியை நாடும் பட்சத்தில் நான் உங்கள் பக்கமிருப்பேன். அங்குள்ள சாரியார் இனத்தின் தலைவன் நான்," என்று, அந்தமானைப் பற்றிப் பல வதந்திகளிருப்பதைப் பற்றியும், அங்குள்ளவர்கள் மனிதர்களைத் தின்று விடுவதாகச் சொல்லுவதைப் பற்றியும் விசாரித்தேன். ஒரு காலத்தில் அது உண்மைதானென்றும் இப்பொழுது அந்த அநாகரிகச் செயல் அநேகமாக மறைந்து விட்டதென்றும் சாரி உறுதி கூறினான். ஆனால் சூ-சின் அந்த அச்சத்தை மீண்டும் கிளப்பிய போது அதை நான் நம்பவில்லை. ஏதோ காரணத்தை முன்னிட்டுத்தான் அந்த அச்சத்தைச் சூ-சின் உலாவ விடுகிறானென்று நான் தீர்மானித்துக் கலங்களைக் கொண்டு வந்தேன். இங்கு வந்த பின்பு நடந்தது உங்களுக்குத் தெரியும். இந்த மரக்கலத்திலிருந்தோ, அடுத்த மரக்கலத்திலிருந்தோ சுந்தரியைத்

zeevaa

தொடர்ந்து வந்த ஒருவன் அவளை மண்டையிலடித்து மூர்ச்சையாக விட்டிருக்கிறான்," என்று சொன்ன விஜயன் சிறிது கதையை நிறுத்தினான்.

அப்பொழுது தர்மர் இடைமறித்து, "விஜயபாகு! நான் கூட சூ-சின்னை நம்பினேன். அப்படி நம்பும் படியாகப் பேசினான். இங்கு நாங்கள் வந்தால் இங்குள்ள காட்டுவாசிகளுக்கு நாங்கள் பட்சண மாகி விடுவோம் என்று கூறினான். இங்கு வருவதைத் தடுக்க அவன் ஏன் முயன்றான்?" என்று கேட்டார்.

விஜயன் தர்மரை உற்று நோக்கி, "இங்கு அவனுக்கு அபாயம் காத்திருக்கிறது. இங்குள்ள காட்டுவாசிகளுக்கு இவன் ஏதோ தீங்கு விளைவித்திருக்கிறான். அவனைக் கொல்ல நேற்றுக் கூடச் சாரி முயன்றான். நான் தான் தடுத்தேன்," என்று கூறினான்.

"சூ-சின்னை இங்கிருப்பவர்களுக்கு முன்னமே தெரியுமா?" என்று அர்த்தர் விசாரித்தார்.

"தெரியுமென்றுதான் தோன்றுகிறது. சூ-சின்னைத் தளத்தில் பார்த்ததும் அவனை அம்பெய்து கொன்றுவிடச் சாரி முயன்றான். நான் தான் தடுத்தேன்," என்றான் விஜயன்.

"தவறு, தவறு," என்றார் காமர்.

"எது தவறு?" என்று விஜயன் வினவினான்.

"சூ-சின்னை ஒழிப்பதைத் தடுத்தது," என்றார் காமர்.

"கொலை எனக்கு இஷ்டமில்லை," விஜயன் இதைத் திட்டவட்டமாகச் சொன்னான்.

"சூ-சின்னுக்குப் பரம இஷ்டம்," என்றார் அர்த்தர்.

zeevaa

அதுவரை மௌனமாயிருந்த மோக்ஷர், "சூ-சின் மீது அம்பெய்வதைத் தடுத்தது நியாயம்," என்றார்.

அவர் சொன்னதைக் கேட்டதும் தர்மர், அர்த்தர், காமர் மூவருமே வியப்புடன் அவரைப் பார்த்தனர். அங்கிருந்த சிற்பியும் கேட்டான், "கொலை உமக்குக் கூடப் பிடிக்காதா?" என்று.

"கொலை பிடிக்காதென்று யார் சொன்னது?" மோக்ஷர் சாதாரணமாகக் கேட்டார்.

'அம்பெறிவதைத் தடுத்தது நியாயமென்று நீர் தானே சற்று முன்பு சொன்னீர்?" இது அர்த்தரின் கேள்வி.

"சொன்னேன், அம்பெறிந்து சூ-சின் மாண்டிருந்தால் அது எத்தனை அநாயாச மரணம்? எத்தனை சுகமான மரணம்? அது எனக்கு இஷ்டமில்லை. சூ-சின்னின் கழுத்து எனக்குச் சொந்தம். அதை மெல்ல மெல்லப் பிடித்துக் கண்களை மெல்ல மெல்லப் பிதுங்கச் செய்து, மூச்சைத் திணற அடித்து நான் கொல்ல உத்தேசிக்கிறேன். இதற்கு எதிராக யார் எது செய்தாலும் அனுமதிக்க மாட்டேன்," என்று கரகரவென்ற குரலில் பேசிய மோக்ஷரைப் பார்த்து அனைவரும் வியப்பும் திகைப்பும் கலந்த பார்வையைச் செலுத்தினார்கள்.

"மோக்ஷரே! நீர் சைவத் துறவி," என்று சுட்டிக்காட்டினார் தர்மர் சற்றுக் கடுமையாக.

'ஆம் யார் இல்லையென்று சொன்னது?" என்று மோக்ஷர் கேட்டார்.

"அன்பே சிவம் என்று தமிழ்ப் பழமொழி இருக்கிறது," என்றார் தர்மர்.

"இல்லையென்று யார் சொன்னது?"

zeevaa

"நீர் கொடுமையான கொலை புரியச் சித்தமாயிருக்கிறீர்......."

"அதனால் என்ன?"

"அன்பே சிவம் என்பதற்கு முற்றிலும் முரண்பாடு நீ."

"நான் தமிழனல்லவே,"

"வேறு யார்?"

"சமஸ்கிருதம்,"

"சமஸ்கிருதத்தில் கொலை செய்யச் சொல்லியிருக்கிறதா?"

"பரித்ராணாய ஸாதூனாம் விநாசாய துஷ்கிருதாம் என்று பகவத் கீதை சொல்கிறது. சாதுக்களைக் காப்பதும் துஷ்டர்களை நாசம் செய்வதும் கடமை என்பது கீதா வாக்கியம்," என்ற மோக்ஷர், "நான் பகவான் உபதேசப்படிதான் நடப்பேன். சந்தேகமிருந்தால் அடுத்த தடவை இந்தச் சூ-சின்னாசுரன் என் கைகளில் சிக்கும்போது பாரும்," என்றார் மோக்ஷர்.

தர்மர், அர்த்தர், காமர் மூவரும் வியப்படைந்தார்கள். 'யாரோ அசுரன் என்றீரே...." என்று சிற்பி இழுத்தான்.

"அசுரன் என்பவன் கொலை செய்பவன். நம்மையெல்லாம் தீர்த்துக்கட்ட சூ-சின் முயன்றான். ஆகையால் அவனைச் சூ-சின்னா சுரன் என்று அழைத்தேன். அவனை எப்படியும் கொல்லப் போகிறேன். தன்னைக் கொல்ல வரும் பசுவையும் கொல்லலாம் என்று தமிழ்ப் பழமொழி இருக்கிறது,' என்றார் மோக்ஷர்.

"மோக்ஷரே....." மெதுவாக அழைத்தார் தர்மர்.

"என்ன தர்மரே?" பணிவுடன் கேட்டார் மோக்ஷர்.

zeevaa

"நான் அன்பே சிவம் என்றதும் நீர் தமிழனல்ல என்று சொல்லி சமஸ்கிருதத்திலிருந்து கொலை செய்யலாம் என்பதற்கு அத்தாட்சி காட்டினீர்......"

"நீர் தமிழை நம்புகிறீரா? சமஸ்கிருதத்தை நம்புகிறீரா?"

"எது எந்தச் சந்தர்ப்பத்தில் அனுகூலமோ அதை நம்புகிறேன்".

"இது சரியா?"

"இதுதான் சரி", என்ற மோஷர், 'தர்மரே! சூ–சின்னாசுரனைப் போன்ற ஒரு கொலைகாரனைக் கொல்ல எந்த முறையையும் கையாளலாம். அவன் சிங்கள மகாராஜாவையும் மூர்சமதையும் கொல்ல முயன்ற அன்றே நான் அவனைத் தீர்த்திருக்க வேண்டும். இந்தக் கைகள் அதிர்ஷ்டம் செய்யவில்லை" என்று கூறித் தனது கைகளைப் பார்த்தார்.

மோக்ஷருடைய கொலை வெறியைக் கண்ட விஜயனுக்கு என்ன சொல்வதென்று தெரியாததால், "மோக்ஷரே! சூ–சின்னைப் பற்றிப் பிறகு சிந்திப்போம். இந்தத் தீவில் உங்கள் யாருக்கும் பயமில்லை. நீங்கள் நிர்ப்பயமாய்க் கரைக்குப் போகலாம். தீமை ஏற்படுவதா யிருந்தால் உங்களுக்கு அடுத்த கப்பலிலிருந்து தான் ஏற்படும். அடுத்த இரண்டு நாட்கள் யாரும் இந்த மரக்கலத்தை விட்டுப் போக வேண்டாம். நானும் மூர்சமதும் மாத்திரம் போய் சாரியிடம் பேசிவிட்டு வருகிறோம்" என்று கூறினான்.

தர்மர் அப்பொழுது ஒரு சந்தேகம் கேட்டார். "விஜயபாகு! நாம் எத்தனை நாள் இந்தத் துறைமுகத்தில் காலம் கழிக்க வேண்டும்?" என்று.

"ஒரு பட்சம். அதாவது பதினைந்து நாட்கள்" என்றான் விஜயன்.

"நாம் ஏன் இங்கு வந்தோம்?" என்று அர்த்தர் கேட்டார்.

zeevaa

"தமிழகத்தை அடுத்த கடற்பகுதியில் சோழர் மரக்கலங்கள் நம்மைத் தேடும். அந்த வழியில் நாம் சென்றால் இத்தனை நாள் சோழர் சிறையில் இருப்போம்", என்றான். "இங்கிருந்து நாம் சிங்களம் செல்வது சுலபம். சிங்களத்தின் மேற்குக் கரையை அடைவதும் எளிது. விவரமாக எதையும் கேட்க வேண்டாம் தர்மரே. மகாரத்தினமில்லாமல் நாம் சிங்களம் போக முடியாது. அதைத் திரும்பிப் பெற இந்த ஹண்டுமானை விடச் சிறந்த இடம் கிடையாது. அது மட்டுமல்ல இங்கு நான் அதிக நாள் தாமதிக்க முடியாது. சிங்களத்தை விட்டுக் கிளம்பி இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. இன்னும் ஒரே மாதத்தில் நான் சிங்களத்துக்குப் போகா விட்டால்......." என்றும் சொல்லி நிதானித்தான் சிறிது.

அந்தச் சமயத்தில் தனது மறைவிடத்திலிருந்து வெளியே வந்த திரிலோகசுந்தரி, "ஒரு மாதத்தில் போகாவிட்டால் என்ன ஆகும்" என்று வினவினாள்.

மெதுவாகவும், நிதானமாகவும் வந்தது விஜயபாகுவின் பதில், "அரசை இழப்பேன்", என்றுதான் விஜயபாகு மிக நிதானமாக.

அவன் இப்படிச் சொன்னதும் தர்மர் புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார். பிறகு எழுந்து சுக்கானை நோக்கிச் சென்றார். மற்ற மூன்று துறவிகளும் அவரைப் பின் தொடர, சிற்பி மட்டும் சிறிது நேரம் சிந்தித்துக் கொண்டு நின்றான். பிறகு அவன் தளப்படிகளில் இறங்கிச் சென்றான்.

அவர்கள் சென்றதும் மரக்கலப் பக்கப் பலகையில் விஜயன் பக்கத்தில் சுந்தரியும் சாய்ந்து கொண்டாள். "உங்கள் கதையை நான் முழுதும் கேட்கவில்லை" என்றாள்.

"நீ கதையைக் கேட்க விரும்பவில்லை அறையில்" என்று சுட்டிக்காட்டினான் விஜயன், "நீ சொல்ல வேண்டிய கதையும் பாக்கியிருக்கிறது" என்றும் கூறினான்.

zeevaa

"நான் சொல்ல வேண்டிய கதையா?" வியப்பைக் காட்டினாள் சுந்தரி குரலில்.

"ஆம், குலோத்துங்கனைப் பற்றிய கதை. கலிங்கத்திலேயே சொல்வதாகக் கூறினாய்" என்று நினைவுப்படுத்தினான் விஜயன்.

"ஓ அதுவா மறந்தே போய்விட்டேன்," என்று தனது கதையைச் சொல்ல முற்பட்டாள் :

அந்தச் சமயத்தில் அடுத்த கப்பலின் தளத்தில் தோன்றிய கூ-சின்னாசுரன் அவ்விருவரையும் கூர்ந்து கவனிக்கலானான்.

zeevaa

## 29. ஆதிமல்லன் லட்சியம்

கலிங்கக் கப்பலின் பக்கப்பலகை அளித்த சிறு மறைவில், மரக்கலப்பாய்கள் அடித்த நிழலில், கலிங்கத்துக் கட்டழகியும் சிங்களத்துச் செல்வனும் அக்கம்பக்கத்தில் நெருங்கி உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்ததைச் சீன மரக்கலத்திலிருந்து பார்த்த சூ-சின் அவர்கள் பேச்சு காமப்பித்தர்களின் அர்த்தமற்ற பேச்சாகத் தானிருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்ததன் விளைவாகத் தனது தொங்கு மீசையின் இருபுறச் சாட்டைகளையும் தடவி விட்டுக் கொண்டதன்றிப் புன்முறுவலும் செய்தான். அந்தப் புன்முறுவல் சரேலென மறைய, சிறிது சிந்தனையிலும் இறங்கியதன்றி, "அந்த மடையன் காரியத்தைக் கெடுத்துவிட்டான்," என்று யாரையோ சிறிது இரைந்தே வசைபாடவும் செய்தான். 'இனிமேல் திரிலோகசுந்தரியும் சிங்கள மன்னனும் எச்சரிக்கையடைந்து விடுவார்கள், என்றும் தனக்குள் சொல்லிக் கொண்டான். இப்படி அவன் அரைகுறையாகச் சுந்தரியைத் தலையிலடித்து ஓடிவந்து விட்டதால் அந்தச் சம்பவம் கூடத் தன் மீதுதான் சந்தேகத்தை ஏற்படுத்தும் என்ற முடிவுக்கு வந்ததால், "எப்படியும் அவனை நாளை காலையில் விசாரிக்கிறேன்", என்றும் உள்ளூரத் திட்டம் செய்து கொண்டான். ஆனால், அடுத்த கப்பலில் தொடங்கிய சிருங்கார லீலைகள் அவனுக்கு அருவருப்பை அளித்ததால் அதைப் பார்க்க இஷ்டப்படாவிட்டாலும் உற்றுப் பார்க்கவே செய்தான்.

சுந்தரி தான் சொல்ல வேண்டிய கதையைத் துவங்கு முன்பு விஜயனுடன் மிக நெருங்கி உட்கார்ந்து அவன் கையொன்றையும்

zeevaa

எடுத்துத் தனது கழுத்தைச் சுற்றிப் போட்டுக் கொண்டாள். அதன் பிணைப்பிலும் அது கழுத்தைச் சுற்றியதோடு நில்லாமல் முன்புறமாக இறங்கி மார்பு மீதும் லேசாகப் பதிந்ததால் ஏற்பட்ட இன்பத்திலும் திளைத்துவிட்ட கலிங்கன் மகள் மெதுவாகத் துவங்கி, "உங்களுக்குப் பல நிகழ்ச்சிகள் வியப்பாயிருக்கும். ஆனால் அவை ஒவ்வொன் றுக்கும் காரணமிருக்கிறது" என்றாள் மெதுவாக. தனது தலையை யும் விஜயன் தோள் மீது சாய்த்துக் கொண்டாள்.

விஜயன் பதிலேதும் சொல்லவில்லை. அவளே பேசட்டுமென்று வாளாவிருந்தான். "சிவகோகர்ண ஸ்வாமிகள் ஆசிரமத்தில் அபய குலோத்துங்கரை நீங்கள் வாட் போரில் காயப்படுத்தியது நினைவிருக்கலாம்....." என்ற சுந்தரி, "அந்தக் காயம் உங்கள் வாள் திறனால் ஏற்பட்டதென்று நீங்கள் நினைக்கலாம். அதுவும் ஒரு காரணந்தான். ஆனால் அது மட்டுமல்ல காரணம். குலோத்துங்கரின் கண் உங்கள் வாள் மீது நிலைத்திருந்ததைவிட என் மீது அதிகமாக நிலைத்திருந்தது" என்று சொன்னாள்.

"அப்படியானால்.......?" என்று லேசாக ஒரு கேள்வியை எழுப்பினான் விஜயன்.

"அபயகுலோத்துங்கர் என்னைக் காதலித்தார்," என்று சொன்ன திரிலோகசுந்தரி, "சிங்களப் பிரபு! இது ஊகமல்ல. என்னிடம் அவரே நேரில் சொன்னார். அதாவது உங்களை நான் சந்திப்பதற்கு இரண்டு வருஷங்களுக்கு முன்பே இதைப் பற்றிப் பேசினார். எனக்கு அப்பொழுது திடமான மனதில்லை, எது சரி, எது சரியல்ல என்று பாகுபாடு செய்யும் திறனும இல்லை. ஆகையால் நான் பிடி கொடுக்கவும் இல்லை. மறுக்கவும் இல்லை. எதற்கும் தந்தையைத் தான் கேட்கவேண்டும் என்று சொல்லி விட்டேன். தந்தையையும் அவர் கேட்டார். தந்தை "அவளுக்கு வயதாகவில்லை. விளை யாட்டுப் பெண்ணாயிருக்கிறாள். இரண்டு வருஷங்கள் போகட்டும்.

zeevaa

என்று சொல்லி விட்டார். ஆனால் அத்துடன் குலோத்துங்கர் தனது தந்தையை விட்டுப் பெண் கேட்கச் சொன்னார். அது அரசியல் முறையில் கேட்கப்பட்டது. வேங்கி நாட்டு மன்னர் ராஜராஜநரேந்திரர் என் தந்தைக்கு மஞ்சள் தேங்காய்களுடன் ஓலையும் அனுப்பினார். ஓலையில் இப்படி எழுதியிருந்தார். "கலிங்க மன்னரே! வேங்கியும் கலிங்கமும் அடுத்தடுத்த நாடுகள். இரண்டும் இணைந்தால் கிருஷ்ணா நதியிலிருந்து வடக்கே மகாநதி வரையிலுள்ள பெரும் பகுதி ஒரே ராஜ்யமாகும். அப்பொழுது தெற்கே வலுத்திருக்கும் சோழசாம்ராஜ்யத்துக்கும் வடக்கே வங்க ராஜ்யத்துக்கும் இடையில் இது ஒரு பேரரசாக நிற்கும். இரண்டு பகுதிகளையும் ஏக காலத்தில் எதிர்க்கக்கூடிய பெரும் சக்தியாக வேங்கி–கலிங்க இணைப்பு நாடு திகழும். இந்த இரண்டையும் இணைக்க இதுதான் தருணம். வழியும் இருக்கிறது. உங்கள் மகள் கழுத்தில் எனது மகன் அணிவிக்கும் மங்கல சூத்திரம் இருநாடுகளின் பிற்காலத்தைப் பொற்காலமாக ஆக்கும். ஆகவே திரிலோகசுந்தரியை எனது மகன் அபயனுக்கு மணமுடிக்கத் தாங்கள் ஒப்புதல் தரவேண்டும். இந்த ஓலையுடன் அனுப்பியுள்ள மஞ்சள் தேங்காய்களை அங்கீகரிக்க வேண்டும்', என்று. இதைப் படித்த என் தந்தை உடனடியாக முடிவு எடுக்கவில்லை. மறுநாள் பதில் சொல்வதாகக் கூறி மஞ்சள் தேங்காய்களை கொண்டார்.

"அன்றிரவு என்னிடம் அதைப்பற்றி எதுவுமே பேசவில்லை. எந்த வினாடியிலும் தந்தை வருவார் என்று சேடிகள் சொல்லியிருந்ததால் எனது அறைக் கதவைத் திறந்தே வைத்திருந்தேன். தந்தை அன்றிரவு வந்தார். ஆனால் திருமணத்தைப் பற்றி ஒருவார்த்தைகூடப் பேசாமல் வேறு ஏதோ விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்து விட்டுச் சென்று விட்டார். மறுநாள் அவரே பதில் அனுப்பி விட்டதாகச் சேடிகள் சொன்னார்கள். "வேங்கி நாட்டுடன் சம்பந்தம் செய்வது பெரும்

பாக்கியம். ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குக் கல்யாண யோசனை கிடையாது.

எனக்கு ஆசிரமப் பயிற்சி அளித்த பின்பு சிவகோகர்ண ஸ்வாமியைக் கலந்து கொண்டு அவரது அருளும் தெய்வ சம்மதமும் இருந்தால் சுந்தரியை அபயனுக்குக் கொடுப்பதில் ஆட்சேபணை எதுவும் இருக்காது. ஆகையால் சற்றுப் பொறுக்க வேண்டும்" என்று தந்தை பதில் அனுப்பிவிட்டதாகச் சொன்னார்கள்.

"அதுமுதல் இரண்டு நாடுகளுக்குமிடையே கசப்பு ஏற்பட்டது. அதன் சூசகங்களும் எல்லைகளில் தெரிந்தன. ஆனால் தந்தை எதற்கும் மசியவில்லை. சிவகோகர்ண ஸ்வாமிகள் எனது திருமணத்தைத் தீர்மானிப்பார் என்று திட்டமாகச் சொல்லிவிட்டார். எங்கள் நாடுகளுக்கிடையில் தான் கசப்பு ஏற்பட்டதே தவிர எங்களுக்குள் கசப்பு ஏதுமில்லை. என்ன காரணத்தினாலோ அபயனிடம் எனக்கும் காதல் பிறக்கவில்லை. ஆனால் சகோதர பாசம் ஏற்பட்டது. ஆனால் அபயன் தன் முயற்சியை விடவில்லை. காடுகளில் வேட்டையாடுவதைச் சாக்காக வைத்துக் கொண்டு சிவகோகர்ண ஸ்வாமியின் ஆசிரமத்துக்குப் பல முறை வந்து என்னை பார்ப்பார். ஆசிரம விதிகள் எங்களை நெருங்கவிட வில்லை. ஆனால் அபயன் தனது பிடிவாதத்தை விடவில்லை. கடைசியாக அதே இரண்டு ஆண்டுகள் கழித்து நீங்கள் வந்த பிறகு தான் அவர் மன நிலை மெல்ல மெல்ல மாறலாயிற்று. ஆனால் என்மீது அவர் வைத்த அன்பு மாறவில்லை. பரம உத்தம புருஷனாதலால் காதலைச் சகோதர பாசமாக மாற்றிக் கொண்டார். நான் இக்கட்டில் அகப்பட்டுக்கொண்ட ஒவ்வொரு முறையும் அவர் எங்கிருந்தோ தோன்றி எனக்கு மட்டுமல்லாமல் உங்களுக்கும் உறுதுணையாக நின்றது நினைப்பிருக்கலாம்," இதைச் சொல்லி மௌனம் சாதித்தாள் சுந்தரி.

zeevaa

விஜயன் அவள் தலைக்குழலை அன்புடன் கோதிவிட்டு, "இதையெல்லாம் என்னிடம் எதற்காகச் சொல்கிறாய்?" என்று வினவினான்.

திரிலோகசுந்தரி அவன் தோளில் சாய்ந்து கிடந்த தனது தலையைச் சற்று நெருக்கித் தனது கன்னமொன்றை அவன் கன்னத்தோடு இழைத்தாள். "நீங்கள் உங்கள் கதையைச் சொன்னீர்கள். நான் என் கதையைச் சொன்னேன். என் கதையைச் சிம்மபுரத்திலேயே சொல்வதாக வாக்குக் கொடுத்திருக்கிறேன். சிம்மபுர சந்தர்ப்பங்கள், நிகழ்ச்சிகள், அவற்றுக்கு இடம் கொடுக்கவில்லை," என்று சொன்னாள் இழைந்த அந்த நிலையில்.

விஜயன் அவள் கழுத்தைச் சுற்றி மார்பு மீது கிடந்த கையால் அவளைச் சிறிது அழுத்திக் கொடுத்து, "உன் வாக்குறுதி இருக்கட்டும். இப்பொழுதுகூட அதை ஏன் சொல்ல வேண்டும்?" என்று வின வினான்.

திரிலோகசுந்தரி அவன் தோள்மீது சாய்ந்த தனது தலையை இறக்கி அவன் கால்களை மடித்து மடியில் தலையை வைத்துக் கொண்டு மெதுவாகப் பேசமுற்பட்டு, "சிங்கள மகாப் பிரபு, ஆண்கள் மனம் சந்தேகம் நிறைந்தது. எதையும் தவறாகப் பொருள் கொள்ளும் பித்தம் அவர்களுக்கு உண்டு. இப்பொழுது நீங்கள் சிந்திக்காதிருக்க லாம். சந்தேகப்படாதிருக்கலாம். ஆனால் அபயன் காட்டி வரும் தொடர்ச்சியான பாசத்தை உங்களால் நல்ல முறையில் புரிந்து கொள்ள முடியாது. இந்தப் புது மோகத்தில் சகலமும் சொர்க்க மாயிருக்கும். பிற்காலத்தில் பிணக்குகளோ கருத்து மாறுதலோ ஏற்பட்டால் உங்கள் மனம் எனக்கும் குலோத்துங்கனுக்கும் இல்லாத உறவைக் கற்பனை செய்யும். அந்தக் கற்பனை வெளிப்படையாக வெடிக்காவிட்டாலும் உள்ளூர வாழ்க்கையை அரிக்கும். அதை முளையிலேயே கிள்ளி விடத்தான் எனது பழைய கதையைச்

சொன்னேன்" என்று சொன்னாள். அத்துடன் கண்களையும் மூடிக் கொண்டாள்.

மூடிய கண்களை முத்தமிட்டான் விஜயன். "சுந்தரி! பைத்தியமே! உன்மீது சந்தேகம் எனக்கு இந்த ஜன்மத்தில் ஏற்படாது. வீரஸனை என்னால் புரிந்துகொள்ள முடியும். குலோத்துங்கனைப் போன்ற மகாவீரர்கள் சுயநலத்தை முன்னிட்டு எந்த ஈனச் செயலிலும் இறங்கமாட்டார்கள்" என்று கூறி, "உறங்கு சுந்தரி! காற்று சுகமாயிருக்கிறது. இரவு ஏறிவிட்டது" என்று மடியில் கிடந்த அவள் தலையை லேசாகத் தடவிக் கொடுக்கவும் முற்பட்டான். சுந்தரி ஆசுவாசப் பெருமூச்செறிந்தாள்.

அதுவரை அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்த சூ–சின் தனது தளப்படிகளில் இறங்கி கீழே சென்றான். தனது அறையில் நுழைந்து கதவைத் தாளிடாமலேயே அங்கிருந்த சாய்வு ஆசனமொன்றில் சாய்ந்துகொண்டு சிந்தனையில் இறங்கினான். ஹண்டுமானில் இருக்கும் வரையில் தனது உயிர் அரைக்காசு பெறாதென்பதை சூ–சின் உணர்ந்தே இருந்தாலும் அதைப்பற்றிச் சிறிதும் அச்சப்படவில்லை அவன். இருப்பினும் தனது உயிருக்கு ஆபத்து ஒருபுறமிருக்க, தான் எடுத்து மறைத்திருக்கும் சிங்கள மன்னர் குலதனமும் தன்னிடமிருந்து பறிபோய் விட வழியுண்டு என்பதை எண்ணிப் பார்த்தான். மகாரத்தினத்தையும் மாதர்களில் மாணிக்கத்தையும் எப்படியாவது கொண்டு சென்றால் சீனத்தில் தனக்குக் காத்திருக்கும் பெரும் பதவியை எண்ணி, "எந்தக் காரணத்தை முன்னிட்டும் நான் அந்த இரண்டுமின்றி சொந்தநாடு போவதில் அர்த்தமில்லை," என்று சொல்லிக் கொண்டான் உள்ளூர. அத்துடன் ஏதோ யோசிக்க முற்பட்டவன் திடீரென வேறெதையோ நினைத்துக்கொண்டு அறைக்கு வெளியே சென்று நெடுகப் படுத்துக் கிடந்த சீனர்களைப் பார்த்தான்.

zeevaa

கீழ்த்தளத்தில் படுத்தவர்கள் போக காவல் நின்றிருந்த இரு சீனர்களில் ஒருவனை அழைத்து ஆதிமல்லனை அழைத்து வருமாறு பணித்தான். ஆதிமல்லன், வந்ததும் அவனை, "வரவேண்டும் வரவேண்டும். இப்படி உட்காருங்கள்" என்று தனக்கெதிரே இருந்த ஓர் ஆசனத்தைக் காட்டினான்.

ஆதிமல்லன் அமர்ந்ததும், "என்ன மல்லரே! தங்களை மாலை முதல் காணவில்லை?" என்று விசாரித்தான் சூ-சின்.

ஆதிமல்லன் சூ-சின்னைக் கூர்ந்து நோக்கி "ஏன்? எதற்காவது தேடினீர்களா?' என்று வினவினான்.

"இல்லை, கண்ணில் படவில்லையே என்று தான் கேட்டேன்,' என்றான் சூ-சின்.

ஆதிமல்லன் தனது நகைச் சுவையைக் காட்ட முற்பட்டு, "தங்கள் கண் சிறு கண்ணல்லவா?" என்று கூறி நகைத்தான்.

"கண்களின் பரிமாணம் முக்கியமல்ல. பார்வைதான் முக்கியம்," என்று சொன்னதன்றி, "உதாரணமாக மற்றவர்கள் கண்களில் படாதது என் கண்களில் படும்,' என்றும் கூறினான் சூ-சின்.

"அப்படி ஏதாவது பட்டிருக்கிறதாக்கும்?" என்று அனாயாசமாகப் பேசினான் ஆதிமால்யன்.

"ஆம்," என்றான் சூ-சின்.

"மிக முக்கியமான விஷயமாயிருக்கும்?" என்று ஆதிமால்யன் நகைத்தான் மெதுவாக.

"முக்கிய விஷயமில்லாதிருந்தால் கண்ணில் பட்டும் பயனென்ன?" சூசகமாகப் பேசினான் சூ-சின்.

zeevaa

அதுவரை பொறுமையாயிருந்த ஆதிமால்யன், "ஏன்? பகிரங்கமாகவே பேசுவோமே," என்றான்.

"அதுவும் நல்லதுதான்," என்ற கூ–சின் சாய்ந்த ஆசனத்திலிருந்து எழுந்து ஆதிமல்லனை நோக்கி நடந்து அவனெதிரில் நின்று கொண்டான். "இன்றிரவு சுந்தரியை மண்டையிலடித்தது யாரென்பது எனக்குத் தெரியும். காரணமும் எனக்குத் தெரியும்," என்று மெதுவாகப் பேசினான். கூ–சின் "ஆதிமல்லா! உன்னைப் போன்ற பரம ஆயோக்கியனை, வஞ்சகனை, நான் ஆயுளில் கண்டதில்லை," என்று அழுத்திப் பேசிவிட்டு,"ஆதிமல்லா! நீ சிங்களத்து விஜயபாகுவைக் கொல்ல வந்திருப்பது எனக்குத் தெரியும். காரணமும் எனக்குத் தெரியும்,' என்றான். மினுக்குமினுக்கென்று பளிச்சிட்ட கண்களால் ஆதிமல்லனை நோக்கவும் செய்தான்.

கூ–சின்னின் கண்கள் தனது ஆத்மாவையே ஊடுருவுவது போல் தோன்றியது ஆதிமல்லனுக்கு, "நான் ஏன் விஜயபாகுவைக் கொல்ல வேண்டும்?" என்று வினவினான். பயங்கரமான அவனது ராட்சத உடல் ஒருமுறை லேசாக நடுங்கியது.

"சிங்களத்துக்கு நீ மன்னனாகத் திட்டமிட்டிருக்கிறாய். உனக்குச் சோழ நாட்டில் ரகசியமாகச் சிங்கள மன்னனாக முடி சூட்டப்பட்டிருப்பது எனக்குத் தெரியும்," என்றான் கூ–சின். அவன் ஒவ்வொரு சொல்லிலும் விஷம் தோய்ந்திருந்தது.

நடுங்கினான் ஆதிமல்லன். ஆனால் கூ–சின் தனது சுரத்தைச் சிறிது இறக்கி "லக்ஷியம் தவறல்ல. அதை அடைய ஒன்று சுயதிறன் வேண்டும். அல்லது பிறர் உதவி வேண்டும்" என்றான்.

"அந்த உதவி..." ஆதிமல்லன் இழுத்தான்.

"நான் தரமுடியும்," என்றான் கூ–சின்.

zeevaa

"நீயா?"

"ஆம்,"

"அதற்கு....."

"நிபந்தனை உண்டு," என்று கூறி நிபந்தனையையும் சொன்னான். அடையக் கூடிய பலனைவிட நிபந்தனை பயங்கரமாயிருந்ததால் மீண்டும் நடுங்கி ஆதிமல்லன், "முடியாது, என்னால் முடியவே, முடியாது," என்று கூவினான்.



zeevaa

# 30. தகர்ந்த கோட்டை

சூ-சின்னின் நிபந்தனையைக் கேட்டதும் அடியோடு கதி கலங்கிப் போன ஆதிமல்லன், "முடியாது, முடியாது! என்னால் முடியவே முடியாது," என்று கூவினானென்றால் அதற்குக் காரணம் இருக்கவே செய்தது. "ஆதிமல்லா! விஜயனை நாம் நேர்முகமாக அழிக்க முடியாது. ஆகையால் உறவாடித்தான் கெடுக்க வேண்டும். ஆகவே நீ மீண்டும் விஜயன் கப்பலுக்கே சென்று விஜயனிடம் பணிக்கு அமர்ந்து விடு," என்று சொன்னான்.

அந்தப் பணி சாதாரணப் பணியாயிருக்க முடியாதென்றும் அதில் ஏதோ மர்மம் கலந்திருக்கிறதென்றும் ஊகித்துக் கொண்ட ஆதிமல்லன், "அமர்ந்து ............?" என்று வினவினான்.

"அங்கு நான் சொல்லும் பணியைச் செய்யவேண்டும்......" என்றான் சூ-சின்.

"என்ன பணியோ?" ஆதிமல்லன் சந்தேகம் பூர்ணமாக ஒலித்த குரலில் கேட்டான்.

அந்தச் சந்தேக ஒலியைச் சூ-சின் கவனிக்கவே செய்ததால் லேசாகப் புன்முறுவல் செய்து மீசையையும் இழுத்து விட்டுக் கொண்டான். ஆனால் சுற்றி வளைக்காமல் விஷயத்துக்கு நேரடியாக வந்து," 'அங்கு நான் மறைத்து வைத்திருக்கும் மகாரத்தினத்தை எடுத்து என்னிடம் அனுப்பிவிட வேண்டும்," என்று கூறினான்.

ஆதிமல்லனும் சிந்தனையில் இறங்கினான். "சரி அதை எங்கு மறைத்து வைத்திருக்கிறாய்?" என்று வினவினான் சிந்தனைக்குப் பிறகு.

zeevaa




zeevaa

இதற்குப் பதில் சொல்லாத சூ?–சின் 'ஹஹ்ஹஹ்ஹா' என்று நகைத்தான் வாய்விட்டு.

"எதற்கு நகைக்கிறாய்?" ஆதிமல்லன் கேள்வி உஷ்ணத்துடன் வந்தது.

"மகாரத்தினத்தை மறைத்துவைத்திருக்கும் இடத்தை உன்னிடம் சொல்லும்படி கேட்டாயே, அதற்கு என்னை அடி முட்டாளென்று நீ நினைத்திருக்க வேண்டும்" என்ற சூ–சின் மறுபடியும் நகைத்தான். இம்முறை மெதுவாக.

ஆதிமல்லன் சித்தத்தில் சினம் அதிகமாக ஏறியது. "அது இருக்குமிடம் தெரியாமல் மகாரத்தினத்தை நான் எப்படி எடுப்பது?" என்று வினவினான்.

"சூ–சின்னின் சிறிய கண்கள் சிரிப்பை உதிர்த்தன. "ஆதிமல்லா! மகாரத்தினத்தின் இருப்பிடத்தைச் சொன்னால் நீ அதை எடுத்து விஜயனிடம் கொடுப்பாய். மகாரத்தினம் கிடைத்ததும் விஜயன் சிங்களம் செல்லப் பாய் விரிப்பான். அடுத்து அவன் உன்னைச் சிறை செய்வான்", என்ற சூ–சின், "சிந்தித்துப்பார் ஆதிமல்லா! இத்தனை நாள் விஜயனும் துறவிகளுங்கூடச் சல்லடை போட்டுச் சலித்தும் கிடைக்காத மகாரத்தினம் உனக்கு மட்டும் திடீரெனக் கிடைத்தால் அது நான் சொல்லித்தான் உனக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்று விஜயன் முடிவு செய்வான். அடுத்து உன் கதி என்னவென்பதை நீயே ஊகித்துக் கொள்ளலாம்", என்றும் விளக்கினான்.

இதைக் கேட்டதால் சினமடைந்த ஆதிமல்லன், "விளைவு தெரிந்துமா கலிங்கத்துக் கப்பலுக்கு அனுப்பி என்னைப் பலியிடப் பார்க்கிறாய்?" என்று வினவினான்.

சூ–சின் ஆதிமல்லனைப் பரிதாபமாகப் பார்த்தான்.

"ஆதிமல்லா! மகாரத்தினத்தின் மறைவிடத்தை நீ அறிந்தால் உள்ள விளைவை நீயே கூறிவிட்டாய். என் திட்டம் அப்படிப்

zeevaa

பட்டதல்ல. உனக்கு எந்தவிதத் தீங்கையும் விளைவிக்காது. என்னிடம் மகாரத்தினமும் கிடைக்கும்,' என்று கூறினான்.

"உனது திட்டந்தான் என்ன?" என்று கேட்டான் ஆதிமல்லன் குழம்பிய சிந்தையுடன்.

சூ-சின் தனது பயங்கரத் திட்டத்தை மெதுவாக விளக்கினான். "ஆதிமல்லா! என்னிடம் பணி செய்வது உனக்குப் பிடிக்கவில்லை யென்று சொல்லிக் கொண்டு விஜயன் கப்பலுக்குச் சென்றுவிடு. அங்குள்ள நடுத்தளத்தில் விஜயன் மூர்சமத் இவர்களின் இருபுரவி களும் இருக்கின்றன. அவற்றை அடுத்து ஒரு தனி அறை இருக்கிறது. அதில் நீ தங்கு. அறையில் ஒரு சாளரமும் உண்டு. பெரிய அலைகள் கடலில் எழுந்தால் நீர் உட்புகும் என்ற காரணத்தால் அவை எப்பொழுதுமே திறக்கப்படுவதில்லை. அதை நீ திறந்து வைத்துக் கொண்டு ஏதாவது ஓர் இரவில் விள்க்கினால் சைகை செய், சீனர்களில் சிலரை நான் அனுப்புகிறேன். அவர்கள் அந்தச் சாளரத் தின் மூலம் உன் அறைக்கு வருவார்கள். அவர்கள் மகாரத்தினத் தையும் எடுத்துக் கொண்டு என் மரக்கலத்துக்குத் திரும்புவார்கள். பிறகு நீ சாளரத்தை மூடிவிடலாம்," என்றான்.

அந்தத் துணிகர திட்டத்தைக் கேட்ட ஆதிமல்லன் அதிர்ச்சியுற்ற தன்றி, அந்த அதிர்ச்சியின் விளைவாக நகைக்கவும் செய்தான். 'சூ-சின்! உனக்கு மூளை லவலேசமாவது இருக்குமென்று இன்று வரை நம்பி இருந்தேன். நீ இவ்வளவு முட்டாளென்று எனக்கு இன்றுவரை தெரியாது. நீ சீனர்களை அனுப்புவதையும் அவர்கள் கப்பலுக்கு வருவதையும் யாரும் கண்காணிக்க மாட்டார்களென்றும் நம்புகிறாயா? ஒரு சீனன் துறவிகள் கண்களில் பட்டாலும் அவன் கதி மட்டுமல்ல என் கதியும் என்ன ஆகுமென்று உனக்குத் தெரியாதா? நீ சொல்லும் திட்டத்திற்கு நான் உட்பட்டால் நான் சிங்கள மன்னனாக முடி கூட முடியாது," என்றும் சொன்னான் நகைப்பின் ஊடே.

zeevaa

"ஏன் முடியாது?" சூ-சின் கேட்டான் சினத்துடன்.

"தலையிருந்தால் தான் முடிசூட முடியும்," ஆதிமல்லன் இதைத் திட்டமாகச் சொன்னான்.

"தலை எங்கு போய்விடும்?'

"அது நிச்சயமாகத் தெரியாது. காட்டில் எறியப்படலாம் கழுகுகள் கொத்த, கடலில் எறியப்படலாம் மீன்கள் கடித்துத் தின்ன,"

"ஆதிமல்லா!"

"ஏன் அறிவாளி?"

"ஆபத்தில்லாமல் வெற்றி கிடையாது. தியாகமில்லாமல் யார் லட்சியமும் நிறைவேறியதில்லை. துணிவில்லாமல் பெரிய காரியங் களைச் சாதிக்க முடியாது".

"துணிவுக்கும் அளவு வேண்டும். அசட்டுத் துணிச்சல் உயிரை உறிஞ்சி விடும்".

சூ-சின் தனது ஆசனத்திலிருந்து எழுந்து அறையில் அங்கு மிங்கும் நடமாடினான். பிறகு ஆதிமல்லன் எதிரே நின்று, "எனது திட்டத்துக்காக நான் யாரையும் பலி கொடுப்பதில்லை. நீ சாளரத்தை திறந்துவிட்டு எனது சீன வீரர்கள் மகாரத்தினத்தை எடுத்துக் கொண்டு திரும்பும் போது உன்னைக் கட்டிப்போட்டு விட்டு வருவார்கள். ஆகையால் உன் மீது சந்தேகம் ஏற்படக் காரணமில்லை. அப்படி மகாரத்தினம் கிடைத்ததும் இரவோடு இரவாக நான் நங்கூர மெடுத்துப் பாய்விரித்து ஓடுவேன். விஜயனுக்கு அது காலங் கடந்துதான் தெரியும். தெரிந்ததும் அவனும் நங்கூரமெடுத்து என்னைத் தொடருவான். ஆனால் என்னை அவனால் பிடிக்க முடியாது. அப்படியே பிடிக்க நெருங்கினாலும் மலாய் கடலில் சீன மரக்கலங்கள் உலாவுகின்றன. அவற்றின் துணைகொண்டு அவன் மரக்கலத்தைக் கைப்பற்றி விடுவேன். பிறகு அந்த மரக்கலம்

zeevaa

உன்னிடம் ஒப்படைக்கப்படும். அதில் நீ சிங்களம் சென்று உன் வாழ்க்கை லட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம்," என்று கூறினான் விளக்கமாக, அத்துடன் மேலும், "ஆதிமல்லா! இந்தச் சமயத்தை விட்டால் வேறு சந்தர்ப்பம் நம்முடைய பொது விரோதியை அகற்ற, அழிக்கக் கிடைக்காது. இதனால் எனக்கு மகாரத்தினம் கிடைக்கிறது. உனக்குச் சோழர் உதவியால் சிங்கள மகுடம் கிடைக்கிறது. சிந்தித்துப் பார் இன்றிரவு. பதில் சொல் நாளை இரவு. திட்டத்தின் விவரங்களை நான் பார்த்துக் கொள்கிறேன்," என்று கூறிவிட்டு வெளியே சென்று தளத்தின் படிகளில் ஏறிச் சென்று விட்டான். ஆதிமல்லன் அங்கிருந்து நேராகத் தனது மாலுமிகள் துடுப்புத் தள்ளும் அடித்தளத்தை அடைந்தான். கீழ்த்தளக் கதவண்டை உட்கார்ந்து தீவிர சிந்தனையில் இறங்கினான்.

அவன் சிந்தனையில் சிங்களம் வலம் வந்தது. சோழர்களின் பலமான கரம் தோன்றியது. சிங்கள மணிமுடியும் பளிச்சிட்டது. மணிமுடிக்காக எத்தனைபேர் மாண்டிருக்கிறார்கள் என்ற எண்ணமும் உண்டாயிற்று. இந்தச் சந்தர்ப்பத்தை தான் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் வேறு சந்தர்ப்பம் கிடைப்பது அரிது என்பதும் அவன் எண்ணத்திலே சுழன்றதால் எப்படியும் சூ–சின் திட்டத்துக்கு உதவுவதென்று தீர்மானித்தான். அந்தத் தீர்மானத்தை மறுநாள் காலையில் சூ–சின்னிடமும் கூறினான்.

"நீ அறிவாளி! நீ இந்த முடிவுக்குத்தான் வருவாயென்று எனக்குத் தெரியும்," என்று ஆதிமல்லன் முதுகைத் தட்டிக் கொடுத்த சூ–சின் 'உள்ளூர, எந்தப் பேராசைக்காரனுக்கும் முடிவு ஒன்றுதான்,' என்று சொல்லிக் கொண்டான். "இருப்பினும் அவரசப்பட்டு நாம் காரியத்தைக் கெடுக்கக் கூடாது. எப்பொழுது நாம் நடவடிக்கை துவங்க வேண்டும் என்று நான் சொல்லுகிறேன். அதுவரை நாமிருவரும் ஒருவரையொருவர் ரகசியமாகச் சந்திக்கவோ பேசவோ வேண்டாம். யோசனை இத்துடன் முடிந்தது. இனி

zeevaa

செயல்பட வேண்டியதுதான்" என்று கூறிவிட்டு அறையை விட்டு வெளியேறினான் சூ-சின்.

இரண்டு நாட்கள் எந்தவித நிகழ்ச்சியுமில்லாமல் சென்றன. மூன்றாவது நாள் பகலில் விஜயன் மரக்கலத்தளத்தில் விஜயன் புரவியும் மூர்சமதின் புரவியும் கொண்டு வரப்பட்டதையும் பிறகு அவை இரண்டும் படகுகளில் இறக்கப்பட்டதையும் அவற்றுடன் விஜயனும் மூர்சமதும் சென்றதையும் சூ-சின் கவனித்தான். அந்த மரக்கலத்தில் நடவடிக்கை துவங்க விஜயனில்லாத சமயமே நல்ல சமயமென்று தீர்மானித்தான் சூ-சின். விஜயனும் மூர்சமதும் புரவிகளுடன் கரையில் இறங்கியதும் சூ.சின் ஆதிமல்லனை நோக்கி, "இன்று மாலை நீ கிளம்பலாம். அடுத்த கப்பலுக்கு" என்றான்.

அன்று மாலையில் ஆதிமல்லன் சூ-சின் திட்டப்படி கலிங்கத்துக் கப்பலை அடைந்து படகை மரக்கல இரும்பு வளையத்தில் பிணைத்துவிட்டு நூலேணியில் ஏறித்தளத்தை அடைந்தான். அங்கு அவனை வரவேற்கத் தளத்தில் அர்த்தரும் மோக்ஷரும் சித்தமாகக் காத்திருந்தார்கள். ஆதிமல்லன் கால்வைத்த இடத்தில் கப்பல் இரும்பு வளையங்களின் பிணைப்புகளுக்குப் போடும் களிம்பு ஓடியிருந்த தால் அதில் தெரியாமல் காலை வைத்துவிட்ட ஆதிமல்லனுக்கு ஒரு சிறுதுண்டை விரித்த அர்த்தர். "இதில்காலை வையுங்கள். களிம்பு அகன்றுவிடும்," என்றார். அவர் சொன்னபடி காலைத் துண்டில் வைத்து அப்புறம் சென்று விட்ட ஆதிமல்லன் தர்மரைப் பார்க்கச் சென்றான். களிம்பில் ஆதிமல்லன் கால் அடையாளம் பட்ட துண்டை எடுத்து மடித்த அர்த்தர் அதை மோக்ஷரிடம் நீட்டினார். மோக்ஷர் அதைப் பத்திரப்படுத்திக் கொண்டார்.

ஆதிமல்லனுக்கு அன்று பல விஷயங்கள் வியப்பாயிருந்தன. அளவுக்கு அதிகமாகத் தர்மரும் மற்றோரும் செய்த உபசாரம் நம்பத் தகாததாயிருந்தது. தான் நடுத்தள அறையைக் கேட்டதும் உடனடியாகத் தர்மர் ஒப்புக் கொண்டதும் சந்தேகமாகவே இருந்தது.

zeevaa

இருப்பினும் அதைப்பற்றி அதிகமாகச் சட்டை செய்யாமல் தனது அறைக்குச் சென்று ஆதிமல்லன் சாளரத்தின் அருகே உட்கார்ந்து வெளியே கவனித்துக் கொண்டே இருந்தான். இரவு ஏறியதும் ஒரு விசித்திரம் நடந்தது.

தர்மர் ஒரு சிறு படகை எடுத்துக் கொண்டு கரையை நோக்கிச் சென்றார். அதை அர்த்தர் செலுத்தினார். நிலவு புறப்படாத நேரத்தில் இருட்டில் அவர்கள் இருவரும் மினுக்கு மினுக்கென்று எரிந்த ஒரு சிறு விளக்கை மட்டும் துணை கொண்டு படகில் சென்றதைக் கவனித்த ஆதிமல்லன், "இவர்களுக்கு இந்த இரவு நேரத்தில் காட்டில் என்ன வேலை?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். தான் கூட ஊகிக்க முடியாத ஏதோ ஒன்று அந்தக் கப்பலில் நடப்பதைப் புரிந்து கொண்டாலும் ஏதும் செய்யும் நிலையில் இல்லாததால், அவன் சாளரத்தை மட்டும் கவனித்துக் கொண்டிருந்தான். அன்றிரவும் அடுத்த இரவும் அவன் சிறு விளக்கினால் சைகை செய்தும் பதில் சைகையும் காணோம். சீனர்களையும் காணோம்.

ஆனால் மூன்றாவது நாள் இரவு சைகைக்கு விடை கிடைத்தது. பதில் விளக்கு ஆடியது. நான்கு சீனர்கள் படகில் இறங்குவதும் தெரிந்தது. அந்தப் படகை மிக மெதுவாகக் கலிங்கக் கப்பலை நோக்கிச் செலுத்த முற்பட்ட மூன்று சீனர்கள் விளக்கை அணைத்து விட்டு இருளில் வந்தார்கள். கிருஷ்ண பட்சம் முற்றிவிட்டதால் முதல் இரண்டு ஜாமங்களுக்குப் பிறகும் சந்திரன் தோன்றவில்லை.

அந்த அனுகூல சமயத்தில் படகு கலிங்கக் கப்பலை அடைய ஒரு நூலேணி வீசப்பட்டது. ஆதிமல்லன் இருந்த சாளரத்தை நோக்கி, அதைப் பிடித்து இழுத்துச் சாளரத்தில் பிணைத்தான் ஆதிமல்லன். முதல் சீனன் மெதுவாக ஏறிச் சாளரத்தின் மூலம் அறைக்குள் குதித்தான். அவனைத் தொடர்ந்து மற்ற இருவரும் வந்தனர். "வாருங்கள், மகாரத்தினத்தை எடுப்போம்," என்று ஒரு சீனன் கூற, ஆதிமல்லன் பின்தொடர சீனர்கள் அடிமேலடி வைத்து நடுத்

zeevaa

தளத்திற்குள் நுழைந்தார்கள். நுழைந்து எந்த அரவமும் செய்யாமல் பிசாசுகளைப் போல் நடந்தார்கள்.

விஜயன் புரவி கட்டியிருந்த இடத்துக்கு வந்ததும் ஒரு சீனன் உட்கார்ந்து தனது கையிலிருந்த பையிலிருந்து சில கருவிகளை எடுத்துத் தளத்தரையின் பலகையிலொன்றை எடுக்க முயன்றான். பலகை நன்றாக கெட்டிப் பட்டிருந்ததால் கையிலிருந்த நெம்பு கருவியால் பலகையை நிமிர்த்த முயன்றான்.

"வீண் சிரமம் வேண்டாம். மகாரத்தினம் அங்கில்லை" என்று எழுந்தது ஒரு குரல் சற்று எட்ட இருந்து.

ஆதிமல்லன் தனது தலையைத் திருப்பினான், ஒலி வந்த இடத்தை நோக்கி, நோக்கியவன் மிதமிஞ்சிய கிலியால் பேச நா எழாமல், கை கால்களை அசைக்கவும் இயலாமல் நின்றான். சிங்கள முடியைத் தரிக்கத்தான் கட்டிய கோட்டையெல்லாம் தவிடு பொடியாகி விட்டதைச் சந்தேகமறப் புரிந்து கொண்டான். ஒலிகொடுத்த உருவமும் இருந்த இடத்தைவிட்டு நகராமல் பிசாசுபோல் நின்றது.

zeevaa

# 31. மரண அலங்காரம்

கடவுளின் கோடிக்கணக்கான சிருஷ்டிகளில் கண்ணுக்கு இணை யானது எதுவுமே இல்லையென்று நிச்சயமாகச் சொல்லலாம். மனித உடலிலும் சரி, இதர ஜீவராசிகளின் உடல்களிலும் சரி, ஏராளமான நரம்புகளும் தாதுக்களும், அடியோடு எண்ண முடியாத மயிர்க்கால்களும் இருந்தாலும், கண்ணுக்கு இணையாக எதையுமே அது புத்தியில் ஓடும் அத்தனை உணர்ச்சிகளையும் வெளிப்படை யாகக் காட்டி விடுகிறது. காதல், சாதல், சோகம், விருப்பு, வெறுப்பு அனைத்து உணர்ச்சிகளையும் கண்ணிலிருந்தே தெரிந்து கொள்ள லாம். இருட்டில் நுழையும் போது ஆரம்பத்தில் அடியோடு செயல்படாத கண் சில விநாடிகளில் இருட்டுக்குத் தன்னைச் சரிசெய்து கொண்டு பார்வையையும் பெறுகிறது. அத்தகைய ஒரு சக்தி கண்ணுக்கு இல்லையென்றால் நடுத்தள மூலையிலிருந்து வந்த ஒலிக்கு உடையவர் யாரென்பதைப் புரிந்து கொள்வதும் ஆதிமல்ல னுக்கோ மற்றச் சீனர்களுக்கோ சாத்தியமாக இருந்திராது.

அப்படி நடுத்தள மூலையிலிருந்து குரல் கொடுத்தவரின் கண்கள் இருட்டுக்கு ஏற்கனவே பதனப்பட்டுவிட்டதால் அவர் ஆதிமல்லனை யும் சீனர்களையும் பார்த்தது மட்டுமின்றி அவர்கள் மகாரத்தினத்தைக் கைப்பற்ற எடுத்த முயற்சி பயனற்றது என்பதையும் தெரியப் படுத்தினார். அதைத் தெரியப்படுத்தியும் அவர் தளத்தின் இருண்ட மூலையிலிருந்து வெளிவராமல், ஆடாமல் அசையாமல் பிசாசைப் போல் நின்று கொண்டிருந்ததைக் கவனித்த ஆதிமல்லன், "பிக்கு! நீங்கள் இனி வெளியே வரலாம். எங்களை என்ன செய்ய

zeevaa

# விஜய மகா தேவி



zeevaa

வேண்டுமோ செய்யலாம்," என்று சொன்னதன்றி, தனது பெருமூச்சின் மூலம் தனது தோல்வியையும் வெளிப்படுத்தினான்.

அதைக் கேட்டதும் பிக்குவின் ஒல்லியானநெடிய உருவம் இருண்ட மூலையிலிருந்து மெல்ல வெளியே வந்து ஆதிமல்லனையும் சீனர்களையும் ஒரு முறை ஊன்றிக் கவனித்தது. பிறகு சொன்னார் பிக்கு, "மகாரத்தினம் நீங்கள் தேடும் இடத்திலிருந்திருந்தால் சீனன் நெம்பிய முதல் பலகை சிறிது இடம் கொடுத்ததும் மகாரத்தினத்தின் ஜோதி செக்கச் செவேலென்று சிறிதளவாவது வெளியே வீசி இந்தத் தளத்திற்கே செஞ்சாந்து பூசியிருக்கும். மேற்கொண்டு நீங்கள் பலகையை அகற்ற வேண்டியதில்லை. அங்கு மகாரத்தினம் இல்லை" என்று, "ஆதிமல்லா! இந்த மரக்கலத்தினுள்ளே மாலுமிகளின் கண்ணில் படுமுன்பு சீனர்களை வந்த வழியாக அவர்கள் கப்பலுக்கு அனுப்பிவிடு," என்றும் யோசனை சொன்னார்.

"நான்?" என்று வினவினான் ஆதிமல்லன்.

"நீ போகவேண்டிய அவசியமில்லை. நீ இருப்பதால் உனக்கு ஆபத்து ஏதுமில்லை. பகிரங்கமாகவே திரும்பலாம்," என்றார் பிக்கு.

"நீங்கள்?" என்று மீண்டும் வினா ஒன்றைத் தொடுத்தான் ஆதிமல்லன்.

"நானும் உன்னுடன் இருக்கிறேன். நாம் இருவரும் இந்த மரக்கலத்தைச் சேர்ந்தவர்களாதலால் நம்மீது சந்தேகத்துக்கு இடமில்லை. சூ—சின்னின் அனுமதி பெற்று இங்கு வந்ததாகச் சொல்லிவிடலாம். சூ—சின் இடும் பணி திருப்தியாயில்லை என்றும் சொல்லலாம்," என்றார் பிக்கு சர்வ சாதாரணமாக.

அந்தச் சமாதானத்தை தர்மர் முதலானோர் ஒப்புக் கொள்ள மாட்டாரென்பதும், கலிங்கத்து மரக்கலத்துக்குத் திரும்பியதற்குக் காரணம் கேட்பது நிச்சயமென்றும் நம்பிய ஆதிமல்லன், "நாம்

zeevaa

சொல்வதை தர்மர் நம்பாவிட்டால் என்ன செய்வது?" என்று வினவினான்.

பிக்கு ஆதிமல்லனை நோக்கிப் புன்முறுவல் செய்தார். "இப்படி எடுத்ததற்கெல்லாம் பயந்து கொண்டிருந்தால் எதையும் வாழ்க்கையில் செயல்படுத்த முடியாது. துணிவில்லாமல் வெற்றியில்லை. தியாகமில்லாமல் பயன் இல்லை," என்று சூ–சின்னின் வார்த்தைகளையே திருப்பினார் பிக்கு.

அவர் சொற்களைக் கேட்டு அதிர்ச்சியடைந்த ஆதிமல்லன், "சூ–சின்னும் இதே வார்த்தைகளைச் சொன்னான்," என்று கூறினான்.

"அறிவாளிகள் சொல்லும் சொற்கள் தான் இவை. சூ–சின் இவற்றைச் சொல்லியிருந்தால் அவன் அறிவாளிதான்," என்றார் பிக்கு.

"நாம் திரும்பிச் செல்லும்போது மகாரத்தினம் நம்மிடம் இல்லாவிட்டால் அந்த அறிவாளி இந்தக் கப்பலில் நாம் என்ன செய்து கொண்டிருந்தோமென்று கேட்கமாட்டானா?" என்று கேள்வியை வீசிய ஆதிமல்லன் தனது குரலில் வெறுப்பையும் காட்டினான். அந்த வெறுப்பின் சாயை அவன் ராட்சஸ விழிகளிலும் விரிந்தது.

பிக்குவின் முகத்தில் சிந்தனை படர்ந்தது. அந்தச் சிந்தனையில் சிறிது கவலையும் காணப்பட்டது. இரண்டு நிமிடங்கள் சிந்தித்த பின்பு சொன்னார் பிக்கு, "கேட்கமாட்டான்," என்று.

இந்த பதில் பெருவிசித்திரமாயிருக்கவே ஆதிமல்லன் பிக்குவை வியப்பு நிரம்பிய விழிகளுடன் நோக்கினான். "ஏன் கேட்கமாட்டான்?" என்று வினவவும் செய்தான் குரலில் வியப்புத் துலங்க.

பிக்கு ஆதிமல்லனை நோக்கி மெதுவாக வந்தார். "காரணம் இப்பொழுதே கேட்காதே, சீனர்களை அனுப்பிவிடு. சொல்கிறேன்" என்றார்.

zeevaa

இவர்கள் உரையாடலின் போது முதல் பலகையைப் பெயர்த்துவிட்ட சீனன் உட்புறத்தை நோக்கிவிட்டு அதிர்ச்சியுற்ற கண்களை ஆதிமல்லனை நோக்கித்திருப்பி, சீன மொழியில் ஏதோ சொன்னான். அதற்குப் பிக்குவே பதில் சொன்னார் சீன மொழியில், அதனால் திருப்தியடைந்த சீனர்கள் "எசமானிடம் என்ன சொல்லட்டும்?" என்று சீன மொழியில் வினவினார்கள்.

"சூ-சின் உங்களை எதுவும் கேட்கமாட்டார். நான் வந்து பதில் சொல்வதாக அறிவித்து விடுங்கள்" என்று சீன மொழியில் பிக்கு கூற அவர்கள் வந்த வழியே நூலேணியில் இறங்கிக் கீழே இருந்த படகில் சென்று விட்டார்கள் தங்கள் மரக்கலத்தை நோக்கி.

அவர்கள் சென்றதும் ஆதிமல்லன் கேட்டான். "அவர்கள் என்ன கேட்டார்கள்? நீங்கள் என்ன பதில் சொன்னீர்கள்?" என்று.

அவர்களிடம் பேசியதைப் பிக்கு சொன்னதும் "பிக்கு! இங்கிருக்கும் எல்லோரையும் விட நீர்தான் துணிவுள்ளனர். சூ-சின் எதையும் கேட்க மாட்டானென்றும் அப்படி ஏதாவது கேட்டால் நீர் வந்து பதில் சொல்வதாகவும் கூறியிருக்கீறிரே. உமது துணிச்சலுக்கு எல்லை கிடையாதா?" என்று கேட்டான் ஆதிமல்லன்.

"இதில் துணிவு ஏதுமில்லை" என்றார் பிக்கு.

"ஏனில்லை?"

"சூ-சின் எதையும் கேட்கமாட்டான்".

"ஏன்?"

பிக்கு சிறிது சிந்தித்துக் கொண்டே நடுத்தளத்தில் நடந்தார். "காரணம் சொல்லட்டுமா?" என்று இறுதியாக வினவினார்.

"சொல்லுங்கள்," ஆவலுடன் எழுந்தது ஆதிமல்லன் கேள்வி.

ஆதிமல்லன் திகைப்பை உச்சிக்குக் கொண்டு செல்லும் முறையில் மெதுவாகவும் கலக்கத்துடனும் பதில் சொல்ல முற்பட்ட பிக்கு.

zeevaa

"ஆதிமல்லா! சூ-சின் இப்பொழுது அந்த மரக்கலத்தில் இல்லை," என்றார்.

ஆதிமல்லன் தனது செவிகளையே நம்ப முடியாததால் விழித்தான் ஒரு விநாடி, "இன்னொருமுறை சொல்லுங்கள்" என்றான் நம்பிக்கை அடியோடு அற்ற குரலில்.

"சூ-சின் அந்தக் கப்பலில் இல்லை" என்றார் பிக்கு மீண்டும்.

ஆதிமல்லன் திகைத்து நின்று விட்டான் பல விநாடிகள். "இல்லையா?" என்றான் இன்னொரு முறை.

"இல்லை",

"எங்கு போயிருப்பான்?"

"தெரியாது. ஆனால் கப்பலில் இல்லை. நீ இங்கு வந்த பிறகு சூ-சின் தனத அறைக்குச் சென்று கதவை மூடிக்கொண்டான். பிறகு வெளியே வரவில்லை. மகாரத்தினத்தை எடுத்துப் போக வந்த சீனர்கள் அந்த மரக்கலத்திலிருந்து கிளம்பியதும் சூ-சின்னைப் பார்க்க அவன் அறைக்குப் போனேன். இருமுறை கூப்பிட்டேன். பதில் இல்லை. கதவைத் தட்டினேன் இருமுறை. கதவு திறக்கப்படவில்லை. பிறகு அந்த அறையின் ரகசிய வழியாகச் சென்றேன். அறைக்குள் அறையில் யாருமில்லை. எந்தப் பொருளும் தொடப்படவில்லை. சூ-சின் எப்படி போனானென்று தெரியவில்லை. சுவடு தெரியாமல் மறைந்து விட்டான். அந்த அறையில் ஒரு புதிய பொருள் மட்டும் தரையில் கிடந்தது..........." என்று கூறிவிட்டு, "சூ-சின்னை யாரோ பலவந்தமாகக் கடத்திக் கொண்டு போயிருக்கிறார்கள். இந்தப் புதியபொருளே அதற்கு அத்தாட்சி" என்று பிக்கு தமது மடியிலிருந்து ஒரு பக்ஷி இறகை எடுத்துக்காட்டினான்.

அதைக் கண்ட ஆதிமல்லன் வெலவெலத்துப் போனான். "ஐயோ! இவனா வந்தான்!" என்று அச்சத்துடன் கேட்கவும் செய்தான்.

zeevaa

"யார் அவன்?" பிக்குவின் கேள்வியில் அதிகாரம் இருந்தது.

"சாரி........" என்று நடுங்கும் குரலில் சொன்னான் ஆதிமல்லன், "நீங்கள் காட்டிய இறகு அவன் தலையில் சூடும் இறகுகளில் ஒன்று," என்று விளக்கினான். பிறகு அந்த இறகைப் பிக்குவிடமிருந்து கையில் வாங்கி இருமுறை திருப்பி நோக்கி, "ஆம், ஆம் சந்தேகமில்லை. அவன் முடியில் சூடும் இறகுதான் இது. அவனிடம் சிக்கியிருந்தால் சூ–சின்னை இனி நாம் பார்க்க முடியாது" என்றும் அச்சம் நிரம்பிய குரலில் கூறினான். அத்துடன் நிற்கவில்லை. ஆதிமல்லன், "இத்தனை நேரம் சூ–சின்னை சாரி சித்ரவதை செய்து கொண்டிருப்பான்" என்று கூறினான்.

இந்த உரையாடல் இங்கு நடந்து கொண்டிருக்கையில் தங்கள் புரவிகளில் காட்டுக்குள் புகுந்து பயணம் செய்த விஜயனும் மூர்சமதும் அந்தமான் பெரியமலைச் சிகரத்தின் அடிவாரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். விஜயன் சட்டென்று புரவியை நிறுத்தி, "மூர்சமத்! உன் காதில் ஏதாவது சத்தம் கேட்கிறதா?" என்று வினவினான்.

மூர்சமத் காதைத் தீட்டிக்கொண்டு உற்றுக் கேட்டான். தூரத்திலிருந்து ஒரே சீருடன் அடிக்கப்பட்ட ஒரு டமாரத்தின் ஒலி "டம்! டம்" என்று கேட்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் இன்னொரு டமாரமும் ஒலித்தது. டம் டம் என்று தொலைவிலிருந்து காட்டை ஊடுருவி வந்த அந்த ஒலி கேட்பதற்கு பயங்கரமாயிருந்தது.

விஜயன் சில விநாடிகள் தான் அதை உற்றுக் கேட்டான். 'சமத்! இந்த ஒலி எதைக் குறிக்கிறது தெரியுமா?" என்று வினவினான்.

தெரியாதென்பதற்கு அறிகுறியாகச் சமத் தலையை அசைக்கவே. "யாரையோ கொளுத்த ஏற்பாடு நடக்கிறது. வா பார்ப்போம்," என்று விஜயன் தனது புரவியை வேகமாக மலைச்சரிவில் செலுத்தி ஒரு பெரிய பாறைக்கருகில் நிறுத்திப் பார்த்தான். அவன் கண்ணெதிரே

zeevaa

விரிந்தது ஒரு விசித்திரக்காட்சி. நான்கு காட்டுவாசிகளாகச் சேர்ந்து சூ-சின்னுக்கு அலங்காரம் செய்து கொண்டிருந்தார்கள். அவன் கழுத்தில் காட்டு மலர்களால் செய்யப்பட்ட பெரிய மாலை போடப்பட்டிருந்தது.

"சூ-சின்னுக்கு அலங்காரம் செய்கிறார்கள்," என்றான் சமத்.

"ஆம். மரண அலங்காரம்," என்று விஜயன் பரிதாபத்துடன் சொன்னான்.

"மரண அலங்காரமா?" என்று வியப்புடன் வினவினான் மூர்சமத்.

"ஆம், இன்னும் நான்கு நாழிகைக்குள் சூ-சின்னின் வாழ்க்கை முடிந்து விடும்," என்று விஜயன் சொன்னான். அவன் குரலில் துன்பம் பெரிதும் தோய்ந்திருந்தது அவன் சொல்லி முடிப்பதற்குள் சூ-சின்னை நான்கு காட்டுவாசிகள் அணுகினார்கள்.

"ஊர்வலம் துவங்கப் போகிறது," என்று விஜயன் சொன்னான். அவன் குரல் உணர்ச்சியற்று வறண்டு கிடந்தது.

zeevaa

## 32. வேண்டுகோளும் விளைவும்

அடுத்த இரண்டு நாட்களில் அமாவாசை வர இருந்ததன் விளைவாக இரவு மூன்றாம் ஜாமத்தைக் கடக்கும் தருவாயிலிருந் தாலும் சந்திரன் உதயமாகாததால் அந்த மலைக் காட்டில் பூர்ண இருளே குடிகொண்டிருந்ததன் காரணமாக, காட்டுவாசிகள் இருவர் பிடித்திருந்த பந்தத்தின் மூலமே விஜயனும் மூர்சமதும் சூ-சின்னின் நிலையை அறிய முடிந்தது. சூ-சின் ஒரு பெரிய பாறைமீது உட்கார வைக்கப்பட்டிருந்ததையும், அவன் மார்பிலிருந்த காட்டு மலர் மாலை மிகப்பெரிதாக அவன் பாதங்களையும் தாண்டித் தொங்கித் தரையில் புரண்டு கொண்டிருந்ததையும் கண்ட மூர்சமத். "மாலை மிகப் பெரிதாகத்தான் இருக்கிறது," என்றான்.

விஜயன் தூரத்திலிருந்த சூ-சின்னையே நோக்கிக் கொண்டிருந்த தால் மூர்சமத் சொன்னதை ஆமோதிக்கும் முறையில் தலையை மட்டுமே அசைத்தான். அடுத்து சூ-சின்னை நான்கு காட்டுவாசிகள் நெருங்கியதையும் அவர்களில் ஒருவன் சூ-சின்னின் தலையைச் சுற்றி ஏதோ ஒரு பட்டையைக் கட்டி அதில் ஓர் இறகைச் செருகியதையும் கண்டதும், "மூர்சமத்! இப்பொழுது நீ இன்றுவரை காணாத ஒரு அரிய காட்சியை காணப்போகிறாய்," என்று சொன்னான். இருந்த இடத்தின்மீது வைத்த கண்ணை வாங்காமலே.

பிறகு, சூ-சின்னுக்குத் தலைப்பட்டையைக் கட்டி இறகையும் ஒரு காட்டுவாசி செருகிய பின் ஒரு பெரிய மரத்தின் மறைவிலிருந்து வெளியே வந்த சாரி, தனது கையை அசைக்க, காட்டின் அடர்த்தியான இடத்திலிருந்து பந்தங்களைத் தாங்கிய இருபது காட்டுவாசிகள்

zeevaa



zeevaa

வெளியே வந்து சூ–சின்னுக்கு அக்கம் பக்கத்தில் வரிசையாக நின்று கொண்டதால் அந்தப் பகுதியில் வெளிச்சம் வீசத் தொடங்கியது. அவர்கள் நின்றதும் சாரி கையை இன்னொரு முறை அசைக்கவே, பழையபடி ஒரு டமாரம் 'டம் டம்' எனச் சப்திக்கலாயிற்று. அந்த அவல ஒலி மும்முறை ஒலித்ததும் விதவிதமான வர்ணங்களை உடலெங்கும் தீட்டிய முக்கால் நிர்வாணமான காட்டுவாசிகள் பத்துப் பேர் பந்தங்கள் அளித்த வெளிச்சத்துக்குள் நாட்டியமாடிக்கொண்டே வந்தார்கள். அந்த நாட்டியம் அதிக நாகரிகத்தைக் குறிக்கா விட்டாலும் ஒரே சீராகவும் டமார தாளத்துக்கு இம்மியும் பிசகாமலும் நடந்தது. பத்து நாட்டியக்காரர்களும் முதலில் மெள்ள நாட்டியத்தைத் துவக்கினாலும் போகப்போக அதிக வேகத்துடன் வெறி பிடித்தவர்கள்போல் ஆடிக்கொண்டே சூ–சின்னைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள். அவர்கள் அப்படி நாட்டியமாடிக் கொண்டிருக்கை யில் சாரி அடிக்கடி ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டும் கடல் பக்கம் திரும்பி முகர்ந்து கொண்டுமிருந்தான். நாட்டியக்காரர்கள் வேகமும் டமார சத்தத்தின் வேகமும் அதிகமாகவே, பத்துப் பிசாசுகள் நாட்டியமாடுவது போன்ற பிரமை ஏற்பட்டது மூர்சமத்துக்கு. டமார சப்தம் 'டம் டம்' என்ற ரீதியை விட்டு, பலவிதமாகத் தாறுமாறாகச் சப்திக்க ஆரம்பித்தது. கையினாலேயே டமாரத்தை அடித்துக் கொண்டிருந்த டமாரக்காரன் சட்டென்று தனது மடியிலிருந்த இரண்டு கழிகளை எடுத்துக் கொண்டு டமாரத்தின்மீது அவைகளைப் பாய்ச்சி, பரபரப்பான ஒலிகளைக் கிளப்பினான். அதனால் நாட்டிய முறை சிறிது மாறியதும் அதிக வேகத்தைக் காட்டிய நாட்டியக் காரர்கள் சுழன்று சுழன்று ஆவேசம் வந்தவர்கள் போல் ஆட முற்பட்டதும், சாரி தனது இரு கைகளின் விரல்களை வாயில் வைத்து ஏதோ ஓர் ஒலியைக் கிளப்பியதால் ஆட்டம் சட்டென்று நின்றது. அது நின்ற அதே சமயத்தில் சாரி தரையில் உட்கார்ந்து ஆகாயத்தை நோக்கித் தனது இரு கைகளையும் உயர்த்தி ஏதேதோ சொற்களை மந்திரம்போல் ஓதவே. அங்கிருந்த மற்றக் காட்டுவாசிகள்

zeevaa

எல்லாருமே தரையில் மண்டியிட்டு வானை நோக்கிக் கைகளை எழுப்பி, சாரியின் சொற்களைப் போலவே சொற்களைச் சொல்லிக் கூறினார்கள்.

மூர்சமதின் பக்கத்திலிருந்த விஜயன், "சந்திரன் உதயமாகும் சமயம் வந்துவிட்டது," என்று சொன்னான் மூர்சமதிடம்.

வானத்தை நோக்கிய மூர்சமத், "சந்திரனைக் காணோமே?" என்றான்.

விஜயன் பக்கத்தில் பெரிதாக எழுந்திருந்த மலையின் உச்சியைக் காட்டி, "சேணமலையின் உச்சியைப் பார்," என்று கூற, அந்த உச்சியின் பின்னால் சந்திரன் வெளிச்சம் பரவியதையும், மலை உச்சிக்கு அது ஓர் அற்புதப் பின்னணியை சிருஷ்டித்திருந்ததையும் கவனித்த மூர்சமத், "என்ன அருமையான காட்சி!" என்று சொன்னான்.

"இன்னும் நிதானித்துப் பார்," என்ற விஜயன், மலை உச்சிமீதிருந்த கண்ணை எடுக்கவே இல்லை.

அங்கு மெள்ள மெள்ளச் சந்திரன் உதயமாகி உச்சியின் பின்னாலிருந்து எழுந்த காட்சி ஏதோ சொர்க்கம் அங்கு சிருஷ்டிக்கப் படுவது போன்ற பிரமையை ஏற்படுத்தியது. அப்படிச் சந்திரன் சிறிது தலையைக்காட்டியதும் சாரி தலை பூமியில் படும் வண்ணம் வணங்கி உயர்த்தவே, மீண்டும் ஏதோ மந்திரங்கள் ஓதப்பட்டன. "புலூகா! புலூகா!" என்ற சப்தமும் அங்கிருந்த காட்டுவாசிகள் அனைவரிட மிருந்தும் எழுந்தது.

"வானத்துக்குத் தந்தை சந்திரன். அவன் இவர்கள் தெய்வமான புலூகாவைத் தனது கிரணங்களால் பூஜை செய்கிறான் என்பது இவர்கள் நம்பிக்கை. இந்த மாதிரி ஓர் அத்தாட்சி கிடைப்பது புலூகா இவர்களுக்குப் பலிக்கு அனுமதி கொடுத்துவிட்டதாக அர்த்தம்," என்று விஜயன் விளக்கினான்.

zeevaa

மூர்சமத் அந்தக் காட்டுவாசிகள் நம்பிக்கையாலும் அவர்கள் திட்டப்புடி சந்திரன் மலைமீது உதயமாகிவிட்டதாலும் ஏற்பட்ட விசித்திரத்தை நினைத்து வியப்படைந்து, "எசமான், இவர்களும் ஏதோ நம்பிக்கையைக் கொண்டுதான் செயல்படுகிறார்கள்," என்றான் வியப்புக் குரலிலும் துலங்க.

விஜயன் எட்ட ஏற்பட்டுக் கொண்டிருந்த நிகழ்ச்சிகளைக் கவனித்துக் கொண்டே, "ஆம் சமத்! நம்பிக்கையில்லாமல் உலகம் இல்லை. மனிதன் மட்டுமென்ன, மற்ற ஜீவராசிகளும் நம்பிக்கையாலேயே உயிர் வாழ்கின்றன," என்று சொன்னவன் சட்டென்று பேச்சை நிறுத்தினான்.

சாரி சட்டென்று தனது வான வணக்கத்தை நிறுத்தி எழுந்திருந்தான். மற்றவர்களும் எழுந்திருக்கவே சூ-சின்னிடம் சென்று, 'சூ-சின்! நீ இங்கு வந்து ஐந்து ஆண்டுகள் ஆகின்றன. நூற்றுக்கணக்கான சீனர்களுடன் வந்து எங்களில் பலரை அழித்தாய். நாங்கள் சேமித்து வைத்திருந்த பவளங்களையெல்லாம் அள்ளிச் சென்றுவிட்டாய். உன் சீனர்களில் சிலர் எங்கள் பெண்களில் சிலரையும் தூக்கிச் சென்று கெடுத்தார்கள். இந்த அட்டுழியங்களுக் கெல்லாம் என்ன தண்டனையை விரும்புகிறாய்?" என்று கேட்டான்.

தீம்பு தலைக்கு வந்து விட்ட அந்த நிலையிலும் சூ-சின்னின் முகத்தில் அச்சம் லவலேசமும் இல்லாததையும் அவன் மிகுந்த அலட்சியத்துடன் சாரியை நோக்கியதையும் கண்ட மூர்சமத், "எசமான்! சூ-சின் மிகுந்த துணிவுள்ளவன்," என்றான்.

"சூ-சின் மகாவீரன், வீரனுக்குள்ள துணிவு அவனுக்கு இருக்கிறது," என்று விஜயன், "மேலும் நடப்பதைக் கவனி சமத்" என்று கூறிவிட்டு, சூ-சின் மீது கண்களை நாட்டினான்.

சாரி கேட்ட கேள்விகளுக்கு சூ-சின் அந்தக் காட்டுவாசிகளின் மொழியிலேயே பதில் சொன்னான், "நான் கேட்டபடி பவளத்தைக்

zeevaa

கொடுத்திருந்தால் உன் ஆட்களைக் கொன்றிருக்க மாட்டேன். எனது வீரர்கள் பெண்களைத் தூக்கிச் சென்றதைப் பற்றி வருந்துகிறேன். சாரி! சண்டைக் காலங்களில் வீரர்களை நாம் செயலுக்குத் தூண்டும்போது சில விபரீதங்கள் நடப்பது உண்டு. உலகத்தில் எல்லா சண்டைகளிலும் இதைப் பார்க்கிறோம். ஒருமுறை சீன வீரர்கள் உங்கள் குடிசைகளுக்குள் நுழைந்த பின்பு அதை நிறுத்த என்னால் முடியவில்லை. அப்படியும் நிறுத்தினேன். அதற்குள் வருந்தத்தக்க நிகழ்ச்சிகள் நடந்துவிட்டன," என்று தெளிவாகப் பேசினான் சூ–சின்.

சூ–சின்னின் பதிலால் சாரி சிறிது சஞ்சலமடைந்தான். "சூ–சின்! நீ அயோக்கியன், எத்தனையோ கெடுதல்களைப் புரிந்திருக்கிறாய். நீ இங்கு நடத்திய திடீர்த் தாக்குதல் யுத்த வகையில் சேராது. ஆகையால் யுத்த தர்மங்கள் அதற்கு விலக்களிக்காது. ஆகவே, மரணத்துக்குச் சித்தமாயிரு. உன்னை எங்கள் தெய்வமான புலூகாவுக்குப் பலியிட போகிறேன். எந்தவிதமான மரணம் உனக்குத் தேவை? அதைச் சொல்" என்று கேட்டான் சாரி.

"சாவு முறைகளில் பல இருக்கலாம். முடிவு ஒன்று தான். அதாவது உயிரிழப்பது. அதற்கு நான் சித்தமாயிருக்கிறேன்", என்று சூ–சின் மிக அலட்சியமாகப் பதில் சொன்னான்.

"சரி, இறுதி ஊர்வலம் கிளம்பட்டும்,' என்றான் சாரி.

மீண்டும் டமாரம் சப்தித்தது. அது மட்டுமல்லாமல் காட்டில் அடர்த்தியான பகுதியிலிருந்து பெருங்கூட்டம் ஒன்று வெளியே வந்து நின்றது. சூ–சின்னை சாரி அணுகி தனது கையொன்றால் அவன் கையைப்பிடித்துத் தூக்கி நிறுத்தினான். பிறகு ஏதோ சைகை செய்ய டமாரம் மிகப் பெரிதாக ஒலித்தது. இரு காட்டுவாசிகள் சங்குகளை மிக மெதுவாக ஏதோ அழுகுரல் போல் ஊதினார்கள்.

சாரி, "உம், கிளம்பட்டும் ஊர்வலம்", என்று கூறிவிட்டு சூ–சின்னை நடக்கவிட்டு அவன் அருகிலேயே நடந்து சென்றான். அவ்விருவருக்

zeevaa

கும் முன்னால் இருவர் பந்தங்களைக் காட்டிச் செல்ல, நால்வர் நாட்டியமாட, மற்றவர்கள் பின்னால் கூட்டமாக நடந்து வந்தார்கள். இந்தக் கூட்டம் மெதுவாக மலை உச்சியை நோக்கி நகரலாயிற்று. நிதானமாக, ஆனால் ஒரே சீராகக் காட்டுவாசிகள் நடந்து மலைச் சரிவில் ஏறினார்கள். கூ–சின்னும் திடமாக ஏறினான். இப்படி நடந்த ஊர்வலம் சுமார் நூறு அடிகளைத் தாண்டியதும் சச்சதுரமான ஓர் இடைவெளி வந்ததையும் அதன் நடுவே பெரும்பாறை ஒன்று இருந்ததையும் கவனித்த மூர்சமத், "இது தான் வெட்டுப்பாறையாக இருக்க வேண்டும்," என்றான்.

"ஆம்" என்ற விஜயன், அடுத்து நடப்பதைக் கவனிக்கலானான். கூ–சின்னைச் சாரியே கையைப் பிடித்துப் பாறைக்கு அழைத்துச் சென்றான். அவனைப் பாறையருகே நிற்கவைத்து, கூ–சின்! நீ செய்த அக்கிரமங்களுக்கு நான் அளிக்கும் தண்டனை தண்டனையே அல்ல. உன்னைக் கொல்வது கூட உனக்கு நன்மை தான். சித்திரவதை செய்வதுதான் நியாயமாயிருக்கும். ஆனால் நீ வீரன். உன்னைச் சித்திரவதை செய்ய என் மனம் ஒப்பவில்லை. உன் உயிர் வெகு சீக்கிரம் உன் உடலை விட்டுப் பறந்துவிடும். உனக்கு கடைசியாக ஏதாவது சொல்ல வேண்டியிருந்தால் சொல்லலாம். உன் கடைசி வேண்டுகோள் நியாயமாக இருந்தால் நானே நிறைவேற்றுகிறேன். சொல் உனக்கு விருப்பமானதை," என்று கூறினான்.

பாறைக்கு தனது முதுகைக் காட்டிக் கொண்டு அதில் சாய்ந்த வண்ணம் நின்ற கூ–சின், சாரியையும் மற்றவர்களையும் நிதானமாக நோக்கினான். அவன் முகத்தில் அச்சம் அணுவளவும் இல்லாததைக் கண்ட விஜயன் கூட அவன் துணிவை நினைத்து வியந்தான். "மூர்சமத்! அவன் மகாவீரன் தான். சந்தேகமில்லை," என்று மெதுவாகச் சொன்னான்.

பாறையில் சாய்ந்து நின்ற கூ–சின், "சாரி! மரணத்தைக் கண்டு பயப்படுபவன் வீரனாயிருக்க முடியாது. ஆகையால் நான்

zeevaa

பயப்படவில்லை. என் கடைசி விருப்பம் என்னவென்று கேட்டதால் சொல்கிறேன். அதை நீ நிறைவேற்றுவாயென்று எனக்கு எப்படித் தெரியும்?" என்று வினவினான்.

"சாரி, சொன்ன வார்த்தையை மீறினான் என்ற பெயர் அவன் சரித்திரத்தில் கிடையாது," என்றான் சாரி.

"அப்படியானால் நான் கேட்பதை நிறைவேற்றுவதாக அதோ தந்தை மீது சத்தியம் செய்," என்று வானத்துச் சந்திரனைக் காட்டினான் சூ–சின்.

சாரி சந்திரனை நோக்கித் தனது கைகளைக் கூப்பிச் சத்தியம் செய்த பிறகு சூ–சின் பேசினான். "சாரி நான் வாழ்வதே எங்கள் சக்கரவர்த்திக்காக. அவரிடம் சிங்கள மன்னனின் மகாரத்தினத்தை யும் திரிலோகசுந்தரியையும் சேர்த்து விடுவதாகச் சபதம் செய்திருக்கிறேன். இரண்டையும் நீ செய்து விடு. இது என் கடைசி கோரிக்கை," என்று சொன்னான்.

இதைக் கேட்ட விஜயன் பேரதிர்ச்சியடைந்தான். சூ–சின் கேட்ட கடைசி கோரிக்கையைச் சாரி செய்யாதிருக்க முடியாதென்பதையும், செய்தால் தனது நிலைமை பேராபத்தாகுமென்பதையும் உணர்ந்து கொண்டதால் மூர்சமதை நோக்கித் திரும்பினான்.

மூர்சமத் தனது இடையிலிருந்த பெரிய குறுவாளை எடுத்துக் கொண்டான். "சாரி பதில் சொல்லுமுன்பு குறுவாளை சூ–சின் மீது எறிந்துவிடு" என்று உத்தரவும் இட்டான் விஜயன். மூர்சமத் தனது குறுவாளை இடக்கையிலிருந்து எடுத்து சூ–சின்னை நோக்கிய.......

அந்தச் சமயத்தில் சாரியின் குரல் பயங்கரமாக ஒலித்தது. "அந்த இரண்டையும் செய்ய முடியாது. விஜய மகாதேவியையும் மகாரத்தினத்தையும் உன்னிடமிருந்து பாதுகாப்பதாக ஏற்கனவே உறுதியளித்து விட்டேன். அதை மாற்ற முடியாது. வேறு எதையாவது கேள்," என்றான்.

zeevaa

"வேறு எதுவுமில்லை," என்ற சூ-சின், "உன் வார்த்தை பயனற்றது என்று முன்னமே எனக்குத் தெரியும். போயும் போயும் நீ காட்டுமிராண்டிதானே!" என்று வெறுப்புடன் சொல்லவும் செய்தான்.

"சூ-சின்! பெண்களைக் கற்பழிப்பதும் பிறர் சொத்தைத் திருடுவதும் நாகரிக நாடுகளின் மக்களான உங்கள் வழக்கமாயிருக்கலாம். எங்கள் பழக்கம் அதல்ல. தர்மமான எதையும் நான் மறுத்திருக்க மாட்டேன். உன் திருட்டுக்கும் ஈனச் செயலுக்கும் நான் இடங்கொடுப்பதைப் புலூகா ஒப்பமாட்டார். வேறு ஏதாவது கேள்," என்றான் சாரி.

"வேறெதுவும் வேண்டாம்," என்ற சூ-சின் இகழ்ச்சியாக நகைத்தான்.

அடுத்த கணம் அந்த நகைப்பு உறைந்தது. அந்த இடைவெளிக்குள் ஒரு பெண் நுழைந்தாள் சர்வ அலங்காரங்களுடன், அவளும் பெரிய மாலையை அணிந்திருந்தாள். சாரியை நோக்கி வந்த அவள், அவன் முன் மண்டியிட்டு, கைகளை உயர்த்தி ஏதோ வேண்டினாள்.

சாரியின் முகத்தில் ருத்திராகாரமான சினம் துளிர்த்தது. ஒருமுறை அந்த மலைப்பகுதியே அதிரும்படியாக வெறிக் கூச்சல் போட்டான் சாரி. அடுத்து சூ-சின்னை நோக்கி ஓடி அவனைப் பாறை மீது தள்ளி, தனது கையிலிருந்த வேலை அவன் மார்பை நோக்கி பாய்ச்ச உயர்த்தினான்.

zeevaa

# 33. சூ-சின்னும் சாரியின் சகோதரியும்

மனித உயிர் கணநேரத்தில் போவதும் உண்டு. கணநேரத்தில் தப்புவதும் உண்டு. இதற்கு ஒரே காரணந்தான் சொல்லலாம். அதுவும் தொன்றுதொட்டுச் சொல்லப்பட்டு வரும் காரணம். இந்தக் காரணத்தை உலகத்திலுள்ள எல்லா மதங்களும் ஒப்புக் கொள் கின்றன. இந்த ஒரு விஷயத்தில் எந்த இனத்துக்கும், தனிமனித னுக்கும், சமுதாயத்துக்கும் கருத்து வேற்றுமை கிடையாது. இந்த ஒன்றுபட்ட கருத்து அன்று சூ-சின் விஷயத்திலும் உண்மையாயிற்று.

சூ-சின்னைத் தீர்த்துவிட வேலைத் தூக்கி அதை மார்பை நோக்கி இறக்கவும் முற்பட்ட அந்த ஒரு கணத்தில் திடீரென எதிர்பாராத பல நிகழ்ச்சிகள் தொடங்கின. சூ-சின் மாண்டுவிட்டால் மகாரத்தினம் இருக்குமிடத்தைக் கண்டுபிடிப்பது கடினம் என்ற காரணத்தால், "சாரி! நில்," என்று கூவிக்கொண்டு வேகமாகத் தனது புவியைத் தூண்டினான் விஜயபாகு. அவன் கூவிய அதே சமயத்தில், சர்வ அலங்காரங்களுடன் வந்த பெண்ணும் "கிறீச்" சென்று ஓலமிட்டுப் பாறையை நோக்கி ஓடினாள். சாரியின் வீரர்கள் சிலரும் பாறையை நெருங்க முற்பட்டனர். ஆனால் அதற்கெல்லாம் முன்பே வேலை ஓங்கிய சாரியின் கை அந்தரத்தில் நின்றுவிட்டது.

வெறியில் பாறைமீது சூ-சின்னைத் தள்ளி வேலை ஓங்கிய சாரி சூ-சின்னின் முகத்தை ஒரு விநாடிதான் கவனித்தான். சூ-சின்னின் முகத்தில் அச்சம் சிறிதுமில்லாததையும் அவன் கண்கள் தனது வேலின் முனையை அலட்சியமாக நோக்கியதையும் கண்ட சாரி

zeevaa

சட்டென்று அந்த வேலைத் தூர எறிந்துவிட்டு, கிட்டே ஓடிவந்த அலங்காரப் பெண்ணை தனது இடது கையால் அணைத்துக் கொண்டான். அதற்குள் விஜயனும் பாறையருகில் வந்துவிடவே, "சிங்கள மன்னரே! ஏதோ உணர்ச்சி வேகத்தில் ஓர் அநியாயம் செய்ய இருந்தேன். தப்பினேன்," என்று மன்னிப்பும் கேட்கும் பாவனையில் பேசினான்.

விஜயனுக்கோ அவனுக்குப் பின்னால் தனது புரவியில் அமர்ந்து வந்து நின்ற மூர்சமதுக்கோ ஏதும் புரியாததால் இருவரும் சாரியை நோக்கிச் கேள்வி கேட்கும் பாவனையில் கண்களை உயர்த்தி னார்கள். அவர்கள் கண்களில் தொக்கி நின்ற கேள்வியைப் புரிந்து கொண்ட சாரி, "சிங்கள மகாராஜா! இவன் புலூகாவின் சொத்து, இவனை என் சொந்த சொத்தாக நினைத்து, சொந்த விவகாரங் களுக்காகக் கொல்ல எண்ணினேன். இது நடந்திருந்தால் நான் எங்கள் கடவுளுக்குப் பெரும் துரோகம் செய்தவனாவேன்," என்று விளக்கினான்.

விஜயன் முகத்தில் சிறிது சந்தேகச் சாயை படர்ந்தது. "இதில் துரோகமென்ன இருக்கிறது? இவனைப் புலூகாவுக்குப் பலியிடத் தானே கொண்டுவந்தாய்?" என்று வினவினான் குரலிலும் சிறிது சந்தேகத்தைக் காட்டி.

"ஆம், ஆனால் நான் இவனை முறைப்படி பலியிடவில்லை. என் சகோதரிக்கு இவன் தீங்கிழைத்ததால் முறை தவறி நானே கொன்றுவிட இருந்தேன்," என்று குரலில் வருத்தத்தைக் காட்டினான்.

"முறை எதுவோ?" என்று வினவினான் விஜயன்.

"இவன் கடைசிக் கோரிக்கையைக் கேட்ட பின்பு இவனை இந்தப் பாறைமீது குருமார்கள் கிடத்துவார்கள். பிறகு பலி கொடுக்கும் பூசாரி இவனைப் பலி கோடாரியால் வெட்டுவான். தலையிலிருந்தும் கழுத்திலிருந்தும் கசியும் இரத்தம் இந்தப் பாறையை நனைத்த பின்பு

zeevaa

குருமார்கள் புலூகாவுக்கு இவனை நிவேதனம் செய்வார்கள். பிறகு இந்தப் பாறையில் இவனை விட்டுப் போவோம். அடுத்து இவன் உடலையும் தலையையும் தூதர்கள் எடுத்துக்கொள்வார்கள்," என்று பலி கொடுக்கும் முறையை விளக்கினான் சாரி.

"தூதர்கள் யார்?" என்று விஜயன் கேட்டான்.

"கழுகுகள், அவர்கள் புசித்தால் புலூகா திருப்தியடைவார்," என்ற சாரி, "சிங்கள மன்னரே! அது மட்டுமல்ல காரணம்," என்றான்.

"வேறென்ன சாரி?' விஜயன் குரல் வியப்புடன் ஒலித்தது.

"நான் ஏற்றி இறக்க முயன்ற வேலின் நுணியை இவன் கண்கள் அலட்சியத்துடன் நோக்கின. இமையைக் கூடக் கொட்டவில்லை இவன். வேலின் நுனியை இகழ்ச்சியுடன் பார்த்தான். இத்தகைய ஒரு வீரன் நிர்க்கதியாயிருக்கும்போது கொல்ல என் மனம் வரவில்லை. அதுவும் சொந்தக் காரணங்களுக்காக இவனைக் கொல்வதையும் நான் விரும்பவில்லை," என்றான் சாரி.

"சாரி! விஜயன் மெதுவாகக் கேட்டான்.

"என்ன எசமான்?"

"சொந்தக் காரணம் என்றாயே அது என்ன?"

"இதோ இருக்கிறாளே, இவள் என் தங்கை,"

"அப்படியா?"

"ஆம் சென்ற தடவை இவன் இங்கு கொலை, கற்பழித்தல் இவற்றில் ஈடுபட்டபோது என் தங்கையையும் இவன் கெடுத்தான்".

சாரியின் இந்த வார்த்தையைக் கேட்டதும் பாறையிலிருந்து துள்ளி எழுந்த கூ-சின்"பொய்! சுத்தப் பொய்!" என்று கூவியதன்றி, "இந்தப் பூதத்தை நான் கெடுத்திருக்க முடியுமா!" என்று வினவினான் விஜயனை நோக்கி.

zeevaa

விஜயன் சாரியின் தங்கையை உற்று நோக்கினான். அவளும் சாரியைப்போலவே நல்ல திடகாத்திரமாயிருந்தாள். அவள் கைகள் திரணை திரணையாக உலக்கைகள் போலிருந்தன. அவள் தொடைகளின் பருமன் பயங்கரமாயிருந்தது. அவள் மார்புக்கு ஒரே உவமை சேணமலையைத்தான் சொல்லலாமென்பதையும் தலையும் நன்றாகப் பருத்து, கன்னங்கள் பெரும் பிண்டங்களாகப் புடைத்திருப்பதையும் கண்டான் விஜயன். கண்கள் மட்டும் சூ–சின்னின் கண்களைப் போல் கன்னக் கதுப்பில் பதுங்கி, சின்னஞ்சிறுசுகளாக மினுக்மினுக்கென்று காணப்பட்டன.

இந்த அழகியைப் பார்த்த விஜயன், சூ–சின் அவளை ஒருக்காலும் நெருங்கியிருக்க மாட்டான் என்பதைப் புரிந்து கொண்டதால், "சாரி, இருவருக்கும் ஈடு போதாதே?" என்றான்.

"ஈடா! அதென்ன?" என்று சாரி கேட்டான்.

"இவள் பெரியவள்"

"பார்ப்பதற்குத்தான்,"

"சூ–சின் சிறியவன்,"

பார்ப்பதற்குத்தான்,"

"அப்படியானால் உன் சகோதரி சொல்வதை நம்புகிறாயா?"

"சகோதரி பொய்யே சொல்லமாட்டாள்," என்ற சாரி. "மன்னரே! இந்தச் சூ–சின்னுக்கு அதிர்ஷ்டம் அடிக்கிறது," என்றான்.

"என்ன அதிர்ஷ்டம் சாரி?" என்று விஜயன் வினவினான்.

"இவனைப் பலி கொடுக்கப் போவதில்லை" என்று சாரி பதில் சொன்னான்.

"ஏன் சாரி?"

zeevaa

"சூ-சின் இப்பொழுது எங்கள் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவன்,"

"திடீரென்று எப்படி இந்த மாற்றம் ஏற்பட்டது?"

"என் தங்கை அவனைத் தனக்கு வேண்டும் என்று சொல்கிறாள். அவளை சூ-சின் மணக்கப் போவதால் எங்கள் வீட்டு மருமகப் பிள்ளை ஆகிறான்," என்று சாரி கூறியதும் சூ-சின் சட்டென்று பாறை மீது ஏறிக்கொண்டான். "சாரி குலத்தாரே! உங்களை நான் சூறையாடியிருக்கிறேன். உங்கள் பெண்கள் பலரை எனது மாலுமிகள் கற்பழித்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் நான் தான் காரணம். ஆகவே என்னைப் பலி கொடுத்துவிடுங்கள்" என்று உரக்கக் கூறவும் செய்தான்.

அந்தச் சமயத்தில் சாரியின் தங்கை செயல்படத்துவங்கினாள். "ஓகோ! என்னிடமிருந்து தப்ப முயலுகிறாயா?" என்று கூவியபடி அவளும் பாறைமீது ஏறி, சூ-சின்னைத் தனது கழுத்திலிருந்த மாலையால் பிணைத்து இழுக்க முயன்றாள்.

சூ-சின் தனது பலம் முழுவதையும் உபயோகித்து அவளை விலக்க முயன்றும் முடியாது போகவே, "சாரியின் சகோதரி! விட்டுவிடு என்னை, இல்லையேல் உன்னைக் கொன்று விடுவேன்" என்று கத்தியபடி அவள் போட்ட மாலையை அறுத்துத் தன்னை விடுவித்துக்கொண்டு பாறையின் கோடிக்கு ஓடினான். அவளும் விடாது துரத்தினாள். அதைச் சிறிது நேரம் பார்த்து கொண்டிருந்த சாரி தனதுவேலால் ஏதோ சைகை செய்யவே, அவன் வீரர்கள் பாறையைச் சூழ்ந்து சூ-சின் மீது பிணைக் கயிறுகளை வீசிக்கட்டி இழுத்துத் தரையில் தள்ளினார்கள். அவன் மீது அவளும் குதித்தாள். சூ-சின் அவளிடமிருந்து தப்ப ஒரு முறை மலைச்சரிவில் உருண்டு எழுந்து ஓட முயன்றான். அப்பொழுதும் சாரியின் சகோதரி அவனைப் பிடித்துக் கொள்ளவே சூ-சின் அவள் கையை ஒருமுறை

zeevaa

திருகியதும் அவள் திடீரென உடல் முழுவதும் ஒரு முறை குலுங்க, கைகால் வெலவெலக்க, தரையில் சாய்ந்தாய்.

அவளைச்சாரி ஓடித்தாங்கிப் பிடித்தான். தனது வீரர்களிடம் அவளை ஒப்படைத்து, "சிங்கள மன்னரே! நாளை விட்டு மறுநாள் கூ-சின்னுக்கும் என் சகோதரிக்கும் திருமணம், அவசியம் கப்பலில் உள்ளவர்கள் சிலரையாவது அழைத்துக்கொண்டு வந்து சேருங்கள்" என்று கூறிவிட்டு, "மாப்பிள்ளை, வாருங்கள்" என்று கூ-சின்னை அழைத்தான். அத்துடன் தனது வீரர்களை நோக்கி, "மாப்பிள்ளை என்மீது நரம்படி அடித்து நான் செயலற்றுவிட்டால், அவரை என் சகோதரியின் தோழிகளிடம் ஒப்படைத்து விடுங்கள்," என்று உத்தரவிட்டான்.

அந்த உத்தரவின் விளைவைச் கூ-சின் புரிந்து கொண்டிருந்ததால் அவன் மேற்கொண்டு எந்த எதிர்ப்பையும் காட்டவில்லை. தலை குனிந்து நடக்க ஆரம்பித்தான். அப்படி நடந்து வந்தவன் விஜயனை அணுகியதும், "என்னை இந்த ஆபத்திலிருந்து விடுவித்துவிடு. உன் குலதனமிருக்கும் இடத்தைக் காட்டுகிறேன்" என்று மெதுவாகச் சொல்லிவிட்டு நகர்ந்தான்.

அடுத்து டமாரம் பெரிதாகச் சப்தித்தது. முன்பு ஒலித்த ஒற்றையடிச் சத்தமில்லை. கோலா கலமாக டமடமவென்று துரிதமாகச் சப்தித்தது. கூ-சின் முகத்தில் வெறுப்பைப் படரவிட்டுக் கொண்டு நடந்தான். சாரியின் சகோதரியை வீரர்கள் சிலர் கூ-சின்னுக்கு அருகிலேயே தூக்கி வந்தார்கள். அவள் அடிக்கடி ஒரு கையால் அவன் தலையையும், மீசையையும் தடவிக் கொண்டும் உருவி விட்டுக் கொண்டும் வந்தாள். சிறிது தூரம் சென்றதும் பயணம் வேறு வழியில் திரும்பவே விஜயனை நோக்கிய சாரி, "மன்னரே! இங்கிருந்து பிரியும் இந்தக் கிளைப்பாதையின் முடிவிலிருக்கிறது எங்கள் ஊர். நாளை இதே சமயத்துக்கு இங்கு வந்து சேருங்கள். உங்களுக்கு வழிகாட்ட நான் ஆட்களை அனுப்புகிறேன்" என்று கூறினான்.

zeevaa

விஜயன் ஒப்புக் கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் அசைத்தான். ஆனால் நின்ற இடத்தை விட்டு நகரவில்லை. "மூர்சமத்!" என்று அழைத்தான் சாரியின் கூட்டம் சிறிது தூரம் சென்ற பின்பு.

"என்ன எசமான்?" கேட்டான் பணிவு நிரம்பிய குரலில்.

"நான் இவர்களைத் தொடர்ந்து செல்கிறேன். நீ கப்பலுக்குச் சென்று நான் நாளை வருவதாகச் சொல்லிவிடு என்றான்.

"தனியாகவா போகப் போகிறீர்கள்?" கவலையுடன் கேட்டான் மூர்சமத்.

"சில சமயங்களில் தனியாகச் செல்வதில் பயனுண்டு" என்றான் விஜயன்.

, "இருக்கலாம். ஆனால் அத்தகைய சமயம் இதுவல்ல" என்றான் மூர்சமத் திட்டமாக.

"அப்படியானால் நீ போய் வேறு யாரையாவது அனுப்பு. நாம் இருவரும் வந்த கப்பலை நிராதரவாக விடுவது தவறு" என்று சுட்டிக் காட்டினான்.

"யாரை அனுப்பட்டும்?" என்று மூர்சமத் மேலும் கேட்டான்.

பதில் விஜயனிடமிருந்து வர்வில்லை. பக்கத்து மரக் கூட்டத்திலிருந்து வந்தது. "யாரையும் அனுப்ப வேண்டியதில்லை. இருவர் வந்திருக்கிறோம்," என்ற குரலைக் கேட்டதும், "நீங்களா!" என்று வியப்புடன் வினவினான் விஜயன்..

"நாங்களேதான்," என்று கூறிக் கொண்டே வெளியே வந்த தர்மரும், அர்த்தரும் "சூர்ப்பனகை சூ-சின் கல்யாண வைபோகத்தை நாங்களும் காண விரும்புகிறோம்," என்று கூறினார்கள்.

"நீங்கள் எதற்கு இங்கு வந்தீர்கள்?" என்று விஜயன் வினவினான்.

zeevaa

"சுந்தரியை மண்டையிலடித்தது யாரென்பதை அறிய,' என்றார் தர்மர்.

"அறிந்து விட்டீர்களா?" என்று கேட்டான் விஜயன்.

"அறியாமலிருப்போமா?" என்ற அர்த்தர் தனது கையிலிருந்த துணியைப் பிரித்து, "இதைப் பாருங்கள்," என்றார்.

அதிலிருந்த களிம்புக் காலடிகளைக் கவனித்த விஜயன் "இது எதற்காக?' என்று வினவினான்.

"இந்தக் காலுக்குடையவன்தான் சுந்தரியைத் தலை மீது காயப்படுத்தயிருக்கிறான்," என்றார் தர்மர்.

"இந்த அடையாளம் எதற்கு?" ஏதும் புரியாமல் வினவினான் விஜயன்.

"சுந்தரியை அடித்தது சூ-சின் அல்லவென்று காலடிச் சுவடிகளை ஆராய்ந்த சாரி கூறியதாகச் சுந்தரி சொன்னாள். ஒருவன் மீது சந்தேகம் இருந்தது. அவன் காலடியை இப்படிப் பதிவு செய்து கொண்டோம். கரைக்குச் சென்றதும் பழைய காலடியைப் பார்த்து எங்கள் ஊகம் சரியென்பதை உணர்ந்து கொண்டோம். நம்மைத் தவிர துறைமுகப் பகுதியில் மனித நடமாட்டம் கிடையாததால் பழைய அடிச்சுவடு அப்படியே இருந்தது. ஆகவே சரிபார்ப்பது அவ்வளவு சிரமமாயில்லை," என்று தர்மர் விளக்கினார்.

"யாரவன்?" என்று உஷ்ணத்துடன் கேட்டான் விஜயன்.

"கப்பலுக்கு வாருங்கள், சொல்கிறோம்," என்றார் அர்த்தர்.

என்ன துருவித் துருவிக் கேட்டும் துறவிகள் பதில் சொல்லாததால் அவர்களுடன் கப்பலுக்குச் சென்றான் விஜயன்.

அதே சமயத்தில் சாரியின் ஊருக்குள் சூ-சின் மண ஊர்வலம் நடந்து கொண்டிருந்தது. சூ-சின்னும் சாரியாரின் சகோதரியும் ஒரு வீட்டுக்குள் தனித்து விடப்பட்டார்கள்.

zeevaa

அந்த வீட்டுக்குள் சூ-சின் அச்சத்துடன் சயனித்திருந்த பஞ்சணை அறைக்குள் நொண்டி நொண்டி நுழைந்தாள் சாரியின் சகோதரி. மெள்ள சூ-சின்னின் பஞ்சணையை அடைந்து, என் கையைச் சரிசெய் என் ராஜா!" என்று கொஞ்சினாள். கெஞ்சினாள். "என் பெயரைக் கேட்கவில்லையே நீ!" என்றும் கூறி வெட்க நகை காட்டினாள்.

அவள் வாயிலிருந்த கோரைப் பற்களைப் பார்த்த சூ-சின் "இவள் சூர்ப்பனகைதான். ராமாயணம் பொய்யல்ல," என்று கூறிக் கொண்டான் தன்னுள்.

அவள் மெள்ளத் தனது ஆடைகளைக் களைய முற்பட்டாள்.

"அடப்பாவமே! நிறுத்து! நிறுத்து!" என்று கூவினான் சூ-சின்.



zeevaa

## 34. சூர்ப்பனகையின் மணவறை

திரிலோகசுந்தரியை மண்டையிலடித்தவனைக் காணும் துடிப்பினால் தர்மரையும் அர்த்தரையும் பின்பற்றிக் கப்பலுக்கு வந்துவிட்ட விஜயன். அதே நேரத்தில் சூ-சின் திருமண அறைக்குள் சிக்கியிருப்பானென்பதை அறவே அறியாததால், மறுநாள் சூ-சின்னின் திருமண வைபத்தைக் கண்டு களிக்கலாம் என்ற எண்ணத்துடன் கப்பலின் நூலேணியில் அனாயாசமாக ஏறினான். தளத்தில் குதித்த பின்பும் அதே துரிதத்தைக்காட்டி, "தர்மரே! அர்த்தரே! யாரந்தக் கயவன்?" என்று சீற்றத்துடன் வினவவும் செய்தான்.

தர்மர் உடனடியாகப் பதில் சொல்லாதது மட்டுமின்றி அர்த்தருக்கும் கண்ணால் ஜாடை காட்டி அவரையும் மௌன விரதத்தில் ஆழ்த்திவிட்டு, "பொறுங்கள் சிங்கள மன்னரே! ஆற்றப் பொறுத்தவன் ஆறப் பொறுக்க வேண்டாமா?" என்றார்.

அவர் தாமதித்ததில் ஏதோ சூட்சுமமிருப்பதைப் புரிந்து கொண்ட விஜயனும் மேற்கொண்டு கேள்வி ஏதும் கேட்காமல் தளத்தின் படிகளில் இறங்கி தனது அறையை நோக்கி நடந்தான். அங்கு கவலை மிகுந்த முகத்துடன் கட்டிலில் படுத்திருந்த கட்டழகி கலிங்கன் மகளைக் கண்டு உள்ளம் பூரித்து அவள் சயன நிலையைக் கலைக்காமல் மெதுவாக நடந்தான், கட்டிலை நோக்கி அந்த கட்டிளங்காளை மேதுவாக நடந்து கட்டிலின் முகப்பில் அவன் அமர்ந்த பிறகே கண்களை விழித்த கலிங்க சுந்தரி. "நீங்களா!" என்று குரலில் சிறிது கலகலப்பை காட்டி அவன் மடிமீது தனது கையொன்றைப் போட்டாள்.

zeevaa

அந்தச் சமயத்தில் விஜயன் எண்ணமெல்லாம் காட்டில் அவளை மண்டையிலடித்தவனைப் பழிவாங்கும் நோக்கத்திலிருந்ததால் சரசத்தில் அவன் ஈடுபடவில்லை. தனது இடதுகையால் அவள் இடையைச் சுற்றி வளைத்து ஆறுதலாக அதை அழுத்திப் பிடித்துவிட்டு அவளை நோக்கிக் குனிந்து நெற்றியில் மட்டும் தனது இதழ்களைப் பொருத்தி மீண்டான். தன்னைப் பார்த்தும் அவன் நெருங்க முற்படாததற்குச் சீரிய காரணம் இருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்ட சுந்தரி உரையாடலைத் தொடங்கி "இத்தனை நேரம் எங்கு போயிருந்தீர்கள்?" என்று வினவினாள்.

"சாரியைப் பார்ப்பதற்குப் போனேன்," என்று சற்று அசட்டையாகப் பதில் சொன்னான் விஜயன்.

"சாரியைப் பார்ப்பதற்கு அப்படியென்ன அவசரம்?" என்று வினவிய சுந்தரி அவன் இடுப்பைத் தனது கைகளால் இறுகக் கட்டித் தலையைச் சிறிது உயர்த்தி அவன் மடியில் சாய்த்துக் கொண்டாள்.

விஜயன் அப்பொழுதிருந்த நிலையிலும் லேசாகப் புன்முறுவல் செய்து, "ஒரு திருமணத்தை முடிக்கப்போயிருந்தேன்," என்று சொன்னான்.

சுந்தரியின் இதழ்கள் பெரு வியப்பைக் காட்டின. "என்ன என்ன! இன்னொருமுறை சொல்லுங்கள்," என்றாள் படுத்த நிலையிலிருந்து எழுந்து உட்கார்ந்து.

"ஒரு திருமணத்தை முடிக்கப் போயிருந்தேன்," இந்த இரண்டாம் முறையும் அதே சொற்களைத் திருப்பினான் விஜயன்.

கலிங்க சுந்தரியின் கனியிதழ்கள் குவிந்தன பரிகாசத்துக்கு அறிகுறியாக, "இப்பொழுது இந்த வேலையில் இறங்கி விட்டீர்களா?" என்று வினவினாள் குரலில் கேலி ஒலிக்க.

"அது நல்ல வேலை தானே?" விஜயன் கேட்டான் விஷமத்துடன்.

zeevaa

"ஆகா! மிக நல்ல வேலை," என்ற சுந்தரி, "மாப்பிள்ளை யாரோ?" என்று கேட்டாள்.

"நமக்கு மிகவும் வேண்டியவர்," விஜயனும் குரலில் கேலியின் சாயையைக் காட்டினான்.

"நமக்கு என்றால்?" இந்த வினாவை வீசிய சுந்தரி சந்தேகக் கண்களுடன் விஜயனை நோக்கினாள்.

"நம் இருவருக்கும் என்று பொருள்,"

"அப்படித் திருமணத்தை நாம் நடத்தக் கூடிய யாரையும் எனக்குத் தெரியாது".

தெரியும், ஆனால் சிந்தனை இடங்கொடுக்கவில்லை புரிந்துகொள்ள",

"அப்படியானால் என்னை மக்கு என்கிறீர்களா?"

"அப்படிச் சொல்லி நான் பிழைக்க முடியுமா?"

"இந்தக் கேலிப் பேச்சுப் போதும், விஷயத்துக்கு வாருங்கள். யார் மாப்பிள்ளை? யார் பெண்? இரண்டும் நல்ல ஜோடியா?" என்று பெண்களுக்கே உரித்தான சிரத்தையைக் காட்டினாள் சுந்தரி.

"நாளைக்குத் திருமணத்தைப் பார்த்த பிறகு நீயே தீர்மானம் செய்துகொள்," என்றான் விஜயன்.

"திருமணம் எங்கே?" சுந்தரி வினவினாள் ஆவலுடன்.

"தரையில் தான்,"

"நடத்தப்போவது யார்?"

"சாரி".

"சாரியா"!

zeevaa

"ஆம். அவன் தங்கைக்குத்தான் திருமணம்,"

"சாரி செய்திருக்கும் உதவிக்கு நாம் போக வேண்டியது தான். அன்று சாரி உதவாவிட்டால் நான் பாம்பு கடித்து இறந்திருப்பேனே," என்று சுந்தரி கூறியதும் பழைய நினைவுகள் திரும்பி விட்டதால் கட்டிலிலிருந்து எழுந்து நின்ற விஜயன், "சுந்தரி! நீ உறங்கு நான் இன்னும் ஒரு நாழிகையில் வந்து விடுகிறேன்," என்று கூறிவிட்டு அந்த அறையை விட்டு வெளியேறினான். அங்கிருந்து நேராகத் தளத்துக் கோடியில் சுக்கானுக்கு அருகில் உட்கார்ந்திருந்த தர்மரையும் அர்த்தரையும் அணுகி, "தர்மரே! சுந்தரியைக் கொல்ல முயன்றவன் யாரென்பதைச் சொல்லவில்லையே," என்று வினவினான்.

தர்மர் பதில் சொல்லு முன்பு சத்வானந்த பிக்கும் அங்கு வந்து சேர்ந்தார். "அவனால் தற்சமயம் ஆபத்து ஏதுமில்லை. ஆகையால் அவனைப் பற்றி விவாதம் வேண்டாம்," என்றார்.

"யாராது?" உஷ்ணத்துடன் வந்தது விஜயன் கேள்வி. அப்பொழுது தளத்தின் இன்னொரு கோடிக்கு வந்து உலாவ முற்பட்ட ஆதிமல்லனை மூன்று துறவிகளும் நோக்கவே சுந்தரியைத் தீர்க்க முயன்றவன் யார் என்பதை உணர்ந்து கொண்ட விஜயன், "பிக்கு! அந்த மரக்கலத்திலிருந்தவர் இங்கு எதற்காக எப்பொழுது வந்தார்? குற்றவாளி ஆதிமல்லன் என்று தெரிந்த பின்பும் அவனை ஏன் சுதந்திரமாக உலாவ விட்டிருக்கிறீர்கள்?" என்று வினவியதோடு நில்லாமல் ஆதிமல்லனைச் சந்திக்க எழுந்திருக்கவும் செய்தான்.

"பிரபு! அவனை இப்படியே விட்டுவிடுங்கள். அவனைப் பற்றி நமக்கு ஏதும் தெரியாதென்ற எண்ணத்தில் அவன் உலாவட்டும். அதனால் பயனிருக்கிறது," என்றார் பிக்கு.

"என்ன பயன்?" என்று விஜயன் கேட்டான்.

zeevaa

"இந்த மரக்கலம் சிங்களத்துக்குப் போகவேண்டுமானால் அவன் உதவி தேவை. இரண்டு மரக்கலங்களிலும் துடுப்புத்தள்ள அவன் ஆட்கள் தான் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். தவிர அவன் சுதந்திரம் போலிச் சுதந்திரம். அவன்மீது மோக்ஷரும் காமரும் சதா கண் வைத்திருக்கிறார்கள்" என்ற பிக்கு, "சிங்களப் பிரபு! இதுவரையில்லாத இக்கட்டில் நாம் இப்பொழுது இருக்கிறோம். கப்பலைச் செலுத்த ஆதிமல்லன் ஆட்களோ அல்லது சீன மாலுமிகளோ இல்லையேல் கப்பல் இந்தத் துறைமுகத்தை விட்டு நகராது. ஆகையால் ஆதிமல்லன் செய்த அபராதம் எதுவாயிருந் தாலும் தற்சமயம் அதைக் கண்டும் காணாதது போலிருப்பதே நலம்," என்றார். அத்துடன் கேட்டார், "ஆமாம். சூ–சின் என்ன ஆனான்?" என்று.

விஜயன் தீவிரமான சிந்தனையிலிருந்ததால் ஏதும் சொல்லாமல் அப்படியும் இப்படியும் உலாவினான். பிக்கு சொன்னதில் உண்மைகள் பல இருப்பதை உணர்ந்தான். ஆகையால் ஒரு முடிவுக்கு வந்து, "சூ–சின் நன்றாகவே இருக்கிறான்," என்று கூறினான்.

"எங்கு இருக்கிறான்?" என்று பிக்கு கேட்டார்.

இங்கு தர்மர் இடைபுகுந்து, "மைத்துனன் வீட்டில்," என்றார்.

பிக்கு அளவிலா ஆச்சரியத்துடன் தர்மரை நோக்கி, "மைத்துனன் வீட்டிலா?" என்று வினவினார்.

"ஆம்," அர்த்தர் குதூகலித்தார்.

"எங்கிருக்கிறது மைத்துனன் வீடு?" பிக்கு வினவினார் மறுபடியும்.

"சேணமலைக்கு அப்புறம்," என்ற தர்மர், "நாளை நீரே பார்க்கப் போகிறீர்," என்றார்.

"எதை?" பிக்குவின் குரலில் குழப்பம் இருந்தது.

"சூ–சின்னின் திருமணத்தை", என்றார் அர்த்தர்.

zeevaa

"என்ன உளறுகிறீர்?" என்று கேட்டார் பிக்கு.

"சந்தேகமிருந்தால் சிங்கள மன்னரைக் கேட்டுப்பாரும்", என்றார் அர்த்தர்.

'பிக்கு விஜயனை நோக்கினார். "அர்த்தர் சொல்வது உண்மை. நாளைக்கு சூ-சின்னுக்கு விவாகம். நம்மையெல்லாம் பெண் வீட்டார் அழைத்திருக்கிறார்கள்", என்று விஜயன் சொன்னான். பெண் சாரியின் தங்கை என்று சொன்னதும் பிக்குவின் முகத்தில் கவலை படர்ந்தது. "இது உண்மையானால் நமது ஆபத்து இரட்டிக்கிறது," என்றார்.

"எப்படி?" என்று விஜயன் வினவினான்.

ஹண்டுமானின் சுதேசிகளும் சூ-சின்னுக்கு உதவ வந்தால் நமக்குச் சமாதி இங்கு அல்லது சீனத்தில் இருக்கும்," என்ற பிக்கு, "இந்தத் திருமணத்தைத் தடுக்க வழியில்லையா?" என்று வினவினார்.

திருமணத்தைப் பற்றிப் பிக்கு வேறு கோணங்களில் ஆராயத் தொடங்கி விட்டதாலும், அது அப்படிச் சுமூகமான திருமணம் அல்லாததாலும் லேசாக நகைத்த விஜயன், "பிக்கு! இந்த உலகமே திரண்டு எதிர்த்தாலும் விஜயன் லட்சியம் செய்யமாட்டான். ஆபத்தை நான் பார்ப்பது இது முதல் தடவையல்ல. ஆகவே கவலைப்பட வேண்டாம். தவிர, திருமணத்தைத் தடை செய்வது பெரும் பாவம்," என்றும் கூறினான்.

விஜயனின் இந்தப் போக்கு பிக்குவுக்குப் பிடிக்காவிட்டாலும் விஜயன் ஒருமுறை ஒரு முடிவை எடுத்துவிட்டால் அதை மாற்றுவது முடியாதென்பதை உணர்ந்திருந்ததால் மேற்கொண்டு பேசுவதை விட்டாலும் கலிங்கக் கப்பலுக்கு ஆபத்து ஏற்படாதிருப்பதற்கு வேண்டிய பாதுகாப்பு வேலைகளில் ஈடுபட்டார். அதற்காகச் சிற்பியின் அறையை நோக்கி விரைந்தார். அங்கு சிற்பியிடம் விஷயங்களையெல்லாம் சொன்னார். சிற்பி வெறி பிடித்த

zeevaa

பார்வையைப் பிக்குவை நோக்கித்திருப்பி, "கவலைப்பட வேண்டாம், இந்தக் கப்பலை என் உதவியின்றி யாரும் திருப்ப முடியாதபடி செய்து விடுகிறேன்," என்று உறுதி கொடுத்தான். அதனால் திருப்தியடைந்த பிக்கு மீண்டும் தளத்துக்குச் சென்றார்.

அங்கு அவரைச் சந்திக்கச் சித்தமாக நின்றிருந்த ஆதிமல்லன். "பிக்கு மந்திராலோசனையின் முடிவு என்ன? என்று வினவினான்.

"மந்திராலோசனையா!" என்று ஏதும் தெரியாதது போல் கேட்டார் பிக்கு.

"நீங்களும் தர்மர், அர்த்தர், சிங்களமன்னர் ஆகிய நால்வரும் தீவிரமாகப் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன்," என்றான் ஆதிமல்லன்.

"ஆம் பேசிக் கொண்டிருந்தோம். திருணமத்தைப் பற்றி" என்ற பிக்கு ஆதிமல்லன் மீது கண்களை நன்றாக நாடவிட்டார்.

"திருமணமா! யாருக்கு?" என்று கேட்ட ஆதிமல்லன் சூ-சின்னுக்கு மறுநாள் திருமணம் என்று கேட்டதும் "அப்படியானால் சூ-சின் இன்றும் நாளையும் வரமாட்டானா கப்பலுக்கு?" என்றான்.

"வரமாட்டான்," என்று பிக்கு திட்டமாகச் சொன்னதும் ஆதிமல்லன் உள்ளத்தில் உவகையும் பயங்கரத் திட்டமொன்றும் படர்ந்தது. அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமலேயே அன்றிரவு நடந்து கொண்டான். இருளில் பாய்மரத்துக்கு அருகில் உட்கார்ந்து சிந்தனையிலிறங்கியதும் அவன் மூளை மிகத்துரிதமாக வேலை செய்தது.

'விஜயா! ஆதிமல்லனை யாரென்று இனி நீ புரிந்துகொள்வாய்' என்று தனக்குள் சொல்லியும் கொண்டான்.

ஆனால் அதே சமயத்தில் தனது அறைக்குள் நுழைந்த விஜயன் படுக்கையில் தொப்பென்று விழுந்தான். சுந்தரியின் சரசங்களுக்குக்

zeevaa

கூட அவன் இடங்கொடுக்கவில்லை. "நாழி என்ன இருக்கும்!" என்று வினவினான் ஏதோ பேச வேண்டுமென்பதற்காக.

"சரியான நாழிதான்" என்ற சுந்தரி அவனைக் கட்டி இழுத்தாள் தன்னை நோக்கி.

சாரியின் இருப்பிடத்தில் தனி வீட்டிலிருந்த சூ-சின்னின் கதியும் இப்படித்தானிருந்தது. ஆனால் இந்த இன்பத்துக்கு நிகரான வேதனையை சூசின் அனுபவித்துக் கொண்டிருந்தான். அறைக்குள் தன்னெதிரே ஆடையை களைய முற்பட்ட சூர்ப்பனகையை "வேண்டாம் நிறுத்து" என்று வேண்டிக் கொண்டான் சூ-சின்.

சூர்ப்பணகை திரும்பித் தனது ராட்சஸ விழிகளால் காதலை வீசினாள் சூ-சின் மீது.

சூ-சின்னின் முகம் விளக்கெண்ணெய் சாப்பிட்டவன் முகத்தைப் போலிருந்தது. 'உன் பெயரென்ன?" என்று வினவினான்.

அவள் நாணத்தைக் காட்டினாள். "வுலூகா" என்றாள்.

"புலூகாவா!" என்று சூ-சின் கேட்டான்.

"புலூகா கடவுள். வுலூகா புயல்" என்று கூறிய சாரியின் தங்கை புயலைவிட வேகமாகச் சூ-சின்னை நோக்கி வந்தாள்.

அரை குறையாகக் களைந்த ஆடை நிலத்தில் புரண்டுவர அவனிடம் புயல் போல் வந்த அந்த ராட்சஸி அவன் உட்கார்ந்திருந்த காட்டு மரக்கட்டிலில் சட்டென்று உட்கார்ந்தாள். அவள் உட்கார்ந்த வேகத்தில் கட்டிலில் மளுக்கென்ற ஒலி வந்தாலும் அது உடையாததால் அவளை "வுலூகா!" என்று அன்புடன் அழைத்தான்.

"என் ராஜா!" என்று கடைக் கண்ணால் அவனைப் பார்த்த வுலூகா. "என் கால்கள் நொண்டுகிறது" என்று காலின் தோலாடையை மேலே ஏற்றினாள்.

zeevaa

பீமன் கதாயுதம் போன்ற அந்தத் தொடையைக் கண்ட கூ–சின்னின் இதயத்தில் வெறுப்பு மூண்டெழுந்தாலும் அதை வெளிக்குக் காட்டாமல் அவள் தொடைப் பகுதியிலிருந்த ஒரு நரம்பை அழுத்தினான். அதனால் காலிலிருந்த ஊனம் நீங்கவே பெருமகிழ்ச்சியைக் காட்டினாள் வுலூகா. "ராஜா! நான் உன் அடிமை. எதை வேண்டுமானாலும் உனக்காகச் செய்வேன்", என்று தனது பெரிய காலை அவன் மடியில் கிடத்தினாள். அது அவன் கால் எலும்பை முறித்து விடுவது போலிருந்தாலும் கூ–சின் அதைச் சகித்துக் கொண்டான். அவன் சித்தத்தில் ஒரு திட்டம் எழுந்தது. 'ஆம் அது தான் வழி' என்று அவள் காலை பார்த்தான். 'பெருதுரும்பும் நான் தப்பவும் விஜயன் இங்கு சிக்கவும் உதவும்' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டு விஜயனைத் தீர்த்துக்கட்ட ஒரு திட்டத்தையும் உருவாக்கிக் கொண்டான். அதை முன்னிட்டு அவள் துவங்கிய சரசத்தைச் சகிக்கவும் செய்தான்.



zeevaa

## 35. சரசமும் சாய்வும்

சாரியின் சகோதரியின் சரசத்தைச் சகித்துக் கொண்டாலொழிய, தான் சாரியின் கூட்டத்திலிருந்து தப்புவது அடியோடு நடவாத காரியமென்பதையும், அப்படிச் சகித்து கொண்டால் விஜயனுக்கு அனுகூலமாயிருக்கும் நிலைமையைப் பிரதிகூலமாக மாற்றிவிட முடியுமென்றும் கணக்குப் போட்ட சூ-சின் தன் மடிமீது கிடந்த சூர்ப்பணகையின் உலக்கைத் தொடையை லேசாகத் தனது வலது கையால் தடவலானான். காலின் பரிமாணம் மிகப்பெரியதாக இருந்ததன்றி அதன் சருமமும் சில இடங்களில் எழும்பி முதலைத் தோலைப் போல மிகக் கடினமாக இருந்ததைக் கவனித்த சூ-சின், அதிலிருந்து இரண்டொரு எழுச்சிகளைக் காட்டி, "இதென்ன வுலூகா?" என்று சகஜமாக விசாரிக்கவும் தொடங்கினான்.

புதுமணப் பெண் அவனைக் காதல் ததும்பும் கண்களால் நோக்கினாள். வெட்கத்துக்கு அடையாளமாகத் தலையை ஒரு புறமாகச் சாய்க்கவும் செய்தாள். அந்த வெட்கத்தையும் வெட்கத்தில் அவள் கோரம் அதிகமாவதையும் கண்ட சூ-சின். "நீ இருக்கும் அழகுக்கு வெட்கம் வேறா?" என்று உள்ளூர வினவிக் கொண்டாலும் வெறுப்பை வெளியே காட்டாமல் அந்த எழுச்சிகளை மீண்டும் தடவி, வுலூகா : உன் காலில் ஏன் இத்தனை வடுக்கள்? எப்படி ஏற்பட்டன?" என்று விசாரித்தான், அனுதாபத்தைக் குரலிலும் காட்டி.

வுலூகா அவன் மீது லேசாகச் சாய்ந்தாலும் அவன் விழாதிருப்ப தற்காகக் கட்டிலின் ஒருபுறக் கட்டையைப் பிடித்துக் கொண்டாள். அப்படிச் சாய்ந்த நிலையில் சொன்னாள். "இங்குள்ள காட்டுமரங்க ளில் நான் ஏறும் பழக்கமுண்டு," என்று.

zeevaa

# விஜய மகாதேவி

சாண்டில்யன்

## 35. சரசமும் சாய்வும்



zeevaa

சூ-சின் அதைப்பற்றி வியப்படையவில்லை. 'இந்த ராட்சஸி எதிலும் ஏறுவாள், 'என்று மனத்தில் நினைத்துக் கொண்டு "அதனால் தான் இந்த வடுக்கள் ஏற்பட்டிருக்க வேண்டும்," என்று மனமுருகும் ஒலியில் பேசினான்.

அவன் பேச்சிலிருந்த துன்ப ஒலியைக் கண்ட வுலூகா "இவற்றுக்காகக் கவலைப்படாதே ராஜா. இவை இரண்டொன்று தான் என் மார்பிலும் சில வடுக்கள் இருக்கின்றன. வேண்டுமானால் பார்", என்று கூறி மார்பைக் கால் பாகமே மறைத்திருந்த சிறு தோலாடையைச் சரியவிட்டாள்.

ஆடை சரிந்ததும் மலையின் குத்துக் கற்களைப்போல் பெரிய தாகவும் திடமாகவும் இருந்த அவள் மார்புகளை நோக்கிய சூ-சின், பிரமிப்பு மட்டுமின்றி பயத்தையும் அடைந்தான். "சீன சக்கரவர்த்தி யின் பெண்ணாசையை அடக்க இவளைப் போன்ற ஒருத்தியைக் கொண்டு போனால் போதும்", என்று எண்ணமிட்டான் சூ-சின்.

அவன் தனது மார்பின் பரிமாணத்தைப் பார்த்து வேட்கை கொண்டு விட்டானென்ற நினைப்பில் வுலூகா மார்பிலிருந்த இரண்டு தழும்புகளைத் தடவிக் காட்டினாள். "இதில் சில பலாமரம் ஏறும்போது ஏற்பட்டவை" என்றும் கூறினாள். கூறியதோடு நிற்கவில்லை அவள். "இதெல்லாம் இனிமேல் உனக்குத்தான் சொந்தம்," என்றும் கூறி அவன் மடியில் படுத்தாள். அப்படிப் படுத்ததால் தொடைகளிரண்டும் மரண வலியாக வலித்ததால் முகத்தைச் சுளிக்க முயன்ற சூ-சின், "வுலூகா! உன் மார்புகளில் தழும்புகளிருந்தாலும் அவற்றைப் போக்கடிக்கச் சீனாவில் மருந்து இருக்கிறது," என்று கூறினான்.

இதைக் கேட்ட வுலூகா தனது கோரைப் பற்களைக் காட்டி லேசாக நகைத்தாள். அந்த நகைப்போ எருமைக் கடாவின் குரலை ஒத்திருந்ததால் தனது முகம் விளக்கெண்ணயாக மாறியதை மறைத்துக் கொள்ள முகத்தைப் புதைத்துக் கொண்டான் சூ-சின்.

zeevaa

அதனால் இன்பலாகிரி ஏறிய வுலூகா அவன் தலைமீது தன் தலையையும் வைத்துக் கொண்டாள்.

அவள் வேட்கையில் விளைந்த அவள் சரசத்தால் மூச்சுத் திணறிய கூ-சின் மெல்லத் தலையை இருபுறமும் அசைத்து மூச்சுவிட்டான். அதை அவன் வேட்கைக்கு அறிகுறியாக நினைத்த வுலூகா அவன் தலையை ஒருமுறை அழுந்தத் தழுவித் தூக்கினாள். பிறகு அவனிடமிருந்து சற்று விலகி, கட்டிலில் நீளப் படுத்துக் கொண்டு அவனைத் தன் பக்கத்தில் இழுத்தும் கிடத்தினாள். அவளது ஒவ்வொரு அணைப்பும் சரசச் செயலும் தனது உடல் எலும்புகளை முறித்துவிடும் போலிருந்ததால் அவற்றிலிருந்து மீளப் பேச்சு கொடுத்தான் கூ-சின் "வுலூகா!" என்று மெதுவாக அழைத்தான். அவள் தன்னைத்திருப்பி அணைத்ததால் மார்புகளுக்கிடையே சிக்கிவிட்ட முகத்திலிருந்து.

"என்ன ராஜா!" என்று அவள் மெதுவாகக் கேட்டதும், பெருமூச்சு விட்டதும், நீர் யானை மூச்சு விடுவதைப் போலிருந்ததாலும், வாயிலிருந்து கிளம்பிய நறுமணம் மூச்சை அழுகச் செய்யும்படி இருந்ததாலும் திணறிய கூ-சின் மெள்ளத் தன்னை விடுவித்துக் கொண்டு, "இந்த உனது வடுக்களுக்கு நான் வைத்தியம் செய்தாக வேண்டும். ஆனால் மருந்து சீனாவிலிருக்கிறதே என்ன செய்யலாம்?" என்று வினவினான்.

வுலூகா அந்த வடுக்களைத்தானே தடவிப் பார்த்துக் கொண்டு, "ராஜா! கவலைப்படாதே. நாளை திருமணத்தின் போது இவற்றைப் போக்கி விடுகிறேன்," என்றாள்.

"எப்படி மறையும்?" என்று கேட்டான் கூ-சின்.

"எங்கள் குல வைத்தியர் இருக்கிறார். அவர் இவற்றைக் கத்தியால் கீறி எடுத்துவிடுவார்." என்றாள் வுலூகா.

"அவரிடம் இதையெல்லாம் காட்டுவாயா?' என்று கூ-சின் விசாரித்தான்.

zeevaa

அவன் எண்ணத்தைப் புரிந்து கொண்ட வுலூகா திருப்தியை முகத்தில் காட்டினாள். "பொறாமையா ராஜா?" என்று வெட்கத்துடன் கேட்டாள். "வைத்தியத்திற்கு மட்டும் தான் இவற்றை மருத்துவரிடம் காட்டுவோம். அதற்கு எங்கள் கூட்டம் அனுமதியளிக்கிறது," என்ற வுலூகா அவனை மீண்டும் தழுவினாள்.

கூ–சின்னின் நாசியால் அவள் உடலின் வாசனையைச் சகிக்க முடியாததால் மறுபடியும் திமிறி முகத்தை வெளியே எடுத்துக் கொண்டான் கூ–சின். "ஆமாம் வுலூகா! இவற்றுக்கு நான் தான் வைத்தியம் செய்வேன். வேறு யாரும் தொடக்கூடாது. தொடுபவனைக் கொன்றுவிடுவேன்", என்று இச்சகமும் பேசினான்.

அதனால் மயங்கிவிட்ட வுலூகா, "உன்னிஷ்டம் ராஜா!" என்று கூறி பெருமூச்செறிந்தாள்.

வுலூகாவைத் தன் வசப்படுத்த அது தான் சரியான சமயமென்று தீர்மானித்த கூ–சின், "வுலூகா! நீ என் மனைவி என்பதை நினைவில் வைத்துக்கொள்," என்றான்.

"அதை எப்படி மறப்பேன் ராஜா?" என்றாள் வுலூகா.

"ஒரு சந்தேகம் எனக்கு," என்றான் கூ–சின்.

"என்ன ராஜா?" அவள் தனது ராட்சஸ விழிகளை அவன் மீது நிலைக்க விட்டாள்.

"நமக்கு நாளைக்குத்தானே திருமணம் என்று உன் அண்ணா சொன்னார்?" மெள்ள விசாரித்தான் கூ–சின்.

"ஆம். நாளைக்குத்தான்," என்றாள் வுலூகா.

"ஆனால் இன்றே இங்கு......." என்று தடுமாறுவது போல் பாசாங்கு செய்தான் கூ–சின்.

zeevaa

"திருமணம் நிச்சயமான நாழிமுதல் நாம் இணைந்து வாழ எங்கள் கூட்டம் இடம் கொடுக்கிறது,' என்ற வுலூகா மீண்டும் அவனைக் கட்ட முயன்றாள்.

மெள்ள சூ-சின் அவளிடமிருந்து தப்பி எழுந்து உட்கார்ந்து அவள் புஷ்டியான கன்னங்களைத் தடவினான். "எங்கள் நாட்டுச் சட்டம் வேறு. திருமணம் முடிந்த பிறகுதான் இது நடக்கலாம்," என்று கூறினான்.

"ராஜா!" என்றாள் வுலூகா.

"என்ன ராஜாத்தி?" அன்பொழுகக் கேட்டான் சூ-சின்.

"எங்கள் ஊரில் எங்கள் சட்டந்தான் செல்லும், என்றாள் அவள்.

"நாளை என்ன நடக்கும்?"

"எங்கள் கூட்டத்தார் கூடுவார்கள். நம்மைக் கணவன் மனைவியாக ஒப்புக் கொள்வார்கள். நம் இருவருக்கும் எலும்பு மாலை போடுவார்கள்......"

"எலும்பு மாலையா?"

"ஆம் ராஜா! எங்கள் பெரியவர்கள் செத்தால் அவர்கள் உடலை மரங்களில் கட்டி வைப்போம். கழுகுகள் மாமிசத்தைச் சாப்பிட்ட பிறகு அவர்கள் எலும்புகளைக் கழுவி மணிமணியாகக் கடைந்து மாலை தயாரிப்போம். அந்த மாலை தான் அதிர்ஷ்டம். அதைத்தான் திருமணத்துக்கு உபயோகப்படுத்துவோம். அப்படி நாம் மாலை மாற்றிக் கொண்ட பிறகு விருந்தும் நடனமும் நடைபெறும். பிறகு நாம் மணவறைக்குள் அனுப்பப்படுவோம்," என்று விளக்கினாள் வுலூகா.

"அப்படியானால் இந்த மணவறை?" என்று வினவினாள் சூ-சின்.

"நாம் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள," என்ற வுலூகா அவனை வெட்கப் பார்வையாகப் பார்த்தாள்.

zeevaa

"இப்படி முன்கூட்டியே புரிந்து கொள்ளலாமா?" சூ—சின் கேட்டான் வியப்புடன்.

"ஆகா!"

"நல்ல ஏற்பாடு".

"உனக்குப் பிடிக்கிறதா" – என்று கேட்டாள் வுலூகா.

"பிடிக்காமலிருக்குமா?" என்ற சூ—சின், "திருணத்துக்குப் பிறகு என்னுடன் வருவாயா?" என்று வினவினான்.

"கண்டிப்பாய் வருவேன்," என்றாள் சாரியின் சகோதரி.

"அப்படியானால் நான் என் கப்பலுக்குப் போய் ஏற்பாடு செய்துவிட்டு வருகிறேன்," என்றான் சூ—சின்.

"திருமணமான பிறகு தான் போகலாம். இப்பொழுது முடியாது. என் சகோதரன் ஒப்புக்கொள்ள மாட்டான்", என்றாள் வுலூகா.

அதற்குப்பிறகு சூ—சின் பேசவில்லை. மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு அவளை ஒருமுறை இறுக அணைத்துவிட்டு அறையை விட்டு வெளியே நடந்தான். அவனை அவள் தடைசெய்யவில்லை. ஆனால் அறைக்கதவு திறந்ததும் இரண்டு காட்டு மிராண்டிகள் அவனைத் தடுத்தார்கள். மீண்டும் உள்ளே வந்த சூ—சின்னைப் பார்த்த வுலூகா பெரிதாக இடி இடிப்பது போல் நகைத்தாள். "நீ தப்ப முடியாது ராஜா!" என்றாள்.

"அப்படியானால் நான் சிறையிலிருக்கிறேனா?" என்று சினத் துடன் கேட்டான்.

வுலூகா சிந்தித்தாள். "சிறையில்லை. இரண்டு காவலர்கள் இருக்கிறார்கள் நீ தப்பி ஓடாதிருக்க. வேண்டுமானால் இந்தச் சாளரத்தின் வழியாக நீ போகலாம். ஆனால் அதிக தூரம் போக முடியாது," என்று கூறினாள்.

zeevaa

"நீயும் வா, இருவரும் போவோம்,' என்று பேசி அவளை லேசாக அணைத்த சூ–சின் அவளுடன் சாளரம் மூலம் வெளியே இறங்கினான்.

வெளியே எங்கும் காடுகள் சூழ்ந்து கிடந்தது. சிறிது தூரம் நடந்த சூ–சின் சட்டென்று நின்று எதையோ உற்றுக் கேட்டான். இருமுறை ஏதோ பறவைகள் அலறும் சத்தம் கேட்டது. அதை அடுத்துச்சற்றுத் தூரத்தில் யாரோ இருவர் உலாவும் சத்தம் கேட்டது. சூ–சின் சற்று நிமிர்ந்து நின்றான். "வுலூகா!" யாரோ உலாவுகிறார்கள்," என்றான்.

"இங்கு யாரும் வரமாட்டார்கள். நமது ஆட்களாகத்தான் இருக்கும்," என்ற வுலூகா, "பார்த்து விடுவோம். வா," என்று முன்னால் நடந்தாள்.

சூ–சின்னும் அவளைத் தொடர்ந்தான். சிறிது தூரம் சென்றதும் தான் மட்டும் பின்னடைந்தான். சற்று எட்ட இருந்த மரத்தின் மீதிருந்து இருவர் வுலூகா மீது குதித்தனர். வுலூகா திமிற முயன்றாள். அவள் கழுத்தைத் திடீரென யாரோ ஒருவன் நெருடினான். வெட்டுண்ட மரம் போல் வுலூகா தரையில் சாய்ந்தாள்.

zeevaa

# 36. கடலில் மோதல்

விஜயபாகுவை ஏமாற்றி அவன் குலதனத்தையும் அவன் தேவியையும் எப்படிச் சோழ நாடு கொண்டு செல்லலாம் என்று தளத்தின் பாய் மரத்தடியில் உட்கார்ந்து ஆதிமல்லன் திட்டம் போட்டான். சூ-சின் அவன் கப்பலில் இல்லாததாலும், கப்பலைச் செலுத்தும் மாலுமிகள் முக்கால்வாசிப் பேர் தன்னுடைய ஆட்களானதாலும், சூ-சின்னின் கப்பலில் குலதனம் இருப்பதாலும், அந்தக் கப்பலைச் செலுத்திக் கொண்டு போய்விடுவது சிரமமல்ல வென்று கணக்குப் போட்ட ஆதிமல்லன், அப்படி அந்தக் கப்பல் சோழ நாட்டுக் கடல் எல்லைக்குச் சென்றுவிடுமானால் விஜயன் அதைத் துரத்தி வருவானென்பதும் அப்பொழுது சோழர்கள் பலத்தைக் கொண்டு விஜயனை முறியடித்து அவனையும் திரிலோக சுந்தரியையும் சோழர் சிறையில் தள்ளிவிடலாமென்றும் தீர்மானித் தான். இத்தனையிலும் அந்தக் குலதனம் சூ-சின்னின் கப்பலில் இல்லையென்பதை அவன் புரிந்து கொள்ளவில்லை.

வுலூகாவிடம் சிக்கிக் கொண்ட சூ-சின்னும் இத்தகைய ஒரு திட்டத்தை வகுத்துக் கொண்டான். எப்படியாவது வுலூகாவைத் தன் வசப்படுத்திவிட்டால், சாரியும் அவனது காட்டு மிராண்டிப் படையும் தனக்கு உதவாவிட்டாலும் எதிர்க்காது என்ற காரணத்தால், தான் கப்பலுக்குப் போய்விடலாமென்றும், தான் போவதற்குள் தனது சீன மாலுமிகள் விஜயன் கப்பலிலிருந்து அவன் குலதனத்தைக் கொண்டு வந்திருப்பார்களென்றும், அத்துடன் தான் வெளியேறி விட்டால் விஜயன் தன்னைத் தொடர்ந்து வருவானென்றும், அவனை



zeevaa

மலைநாட்டுச் சமுத்திரத்தில் இழுத்து அங்கு உலவும் சீன மரக்கலங்களின் துணையால் முறியடித்து, திரிலோகசுந்தரியையும் சீன மன்னரிடம் கொண்டுபோய் விடலாமென்றும் சூ-சின் மனத்தில் திட்டம் தீட்டிக் கொண்டான்.

ஆனால் எந்தத் திட்டத்துக்கும் ஒரு பலவீனம் ஏற்படுவது போல் அன்றிரவு ஏற்படுமென்பதைச் சூ-சின் உணரவில்லை. அதன் விளைவாக, சூ-சின் திரும்ப மரக்கலத்துக்கு வந்து தனது திட்டத்தைத் தவிடுபொடியாக்கிவிடுவானென்பதை ஆதிமல்லனும் உணர்ந்தா னில்லை. இரு திட்டங்களும் உடைந்து போக அஸ்திவாரமாக அமைந்தது அன்றிரவு வுலூகாவுக்கு ஏற்பட்ட விபத்து.

வுலூகாவுடன் காட்டுப் பகுதிக்குச் சென்ற சூ-சின் யாரோ இருவர் உலாவும் சத்தம் கேட்டுச் சற்றுப் பின்னடைந்ததும், அருகிலிருந்த மரத்தின் மீதிருந்த இரு சீனர்கள் வுலூகா மீது குதித்து அவள் கழுத்தை நெருடி அவளைத் தரையில் சாய்த்து விட்டதைக் கவனித்த சூ-சின், வெகுண்டு இரு சீனர்களையும் நோக்கி, 'உங்களை யார் இங்கு வரச் சொன்னது?" என்று சீற்றத்துடன் வினவினான்.

"தங்களை இந்தக் காட்டுமிராண்டிகள் நமது கப்பலிலிருந்து ரகசியமாகக் கடத்திச் சென்றதை முந்தா நாளிரவே கவனித்தோம்," என்றான் ஒரு சீனன்.

"சற்று நேரத்திற்கெல்லாம் உங்களைத் தூக்கிச் சென்றவர்களைத் தொடர்ந்தோம்," என்றான் இன்னொரு சீனன்.

"அப்புறம் நாங்கள் மரக்கலத்திற்குப் போகவில்லை," என்றான் முதலில் பேசிய சீனன். "இந்தக் காட்டில் மறைந்திருந்து நடந்தது அத்தனையும் கவனித்தோம்."

பிறகு நடந்ததை ஊகிப்பது சூ-சின்னுக்கு ஒரு பிரமாதமா யில்லை. "சரி சரி, நீங்கள் மறைந்திருங்கள். நான் சிறிது நேரத்தில் வருகிறேன்," என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டு வுலூகாவின்

zeevaa

பக்கத்தில் உட்கார்ந்து அவள் கழுத்து நரம்பைச்சிறிது திருகித் தடவ அவள் முக்கி முனகி எழுந்து உட்கார்ந்தாள். "யார் என்னை அடித்தது?" என்று வினவினாள் பெரிய குரலில்.

"எனக்குத தெரியாது. உன் ஆட்களாகத்தான் இருக்க வேண்டும். அவர்களை விரட்டிவிட்டேன்," என்ற சூ–சின், "வுலூகா, நீ போ நமது அறைக்கு, நான் அவர்களை அழித்து விட்டு வருகிறேன்," என்றான்.

"வேண்டாம் ராஜா! யாராயிருந்தாலும் இந்தக் காட்டிலிருந்து தப்ப முடியாது. எனது சகோதரனின் ஆட்கள் இங்கு காவல் புரிகிறார்கள். வந்தது வேறு இனத்தவராயிருக்க வேண்டும். அவர்கள் ஆயுள் இன்றுடன் முடிந்துவிடும். வா, நாம் போவோம் நமது அறைக்கு," என்றாள்.

"என் மனைவியைத் தொட்டவர்களைத் தண்டிக்காமல் நான் வரமாட்டேன்," என்று பிடிவாதம் பிடித்த சூ–சின்," நீ போ வுலூகா! உன்னைச் சாய்த்தவர்களைக் கையுடன் பிடித்து வருகிறேன்," என்று போலிச் சீற்றத்தைக் காட்டினான்.

அதற்கும் அவள் மசியாததால் அவளுடன் அறைக்குச் சென்றான். இருவரும் பழையபடி படுத்துக் கொண்ட பிறகு அவள் நாசியில் தனது பையிலிருந்த ஏதோ ஒரு குப்பியைக் காட்ட அந்த நறுமணத்தை அவள் முகர்ந்து, "அப்பா! என்ன வாசனை!" என்று சொன்னாள். "என்ன வாசனை..... வா...... சனை......வா........." என்று கூறிக்கொண்டே கண்களை மூடிவிட்டாள்.

அவளை இருமுறை புரட்டி அவள் மயக்கத்தைச் சோதித்த சூ–சின் பழையபடி சாளரத்தின் வழியே வெளியே சென்று காட்டிலிருந்த தனது சகாக்களுடன் சேர்ந்து கொண்டு துரிதமாகத் துறைமுகத்தை நோக்கி ஓட முற்பட்டான். அவன் துறைமுகத்தை அடைந்து தனது கப்பலை அடைந்ததும் காட்டுப் பகுதியில் பெரும் கூச்சல் ஏற்பட்டது. அடுத்த சில நிமிடங்களில் துறைமுகத்திலிருந்து சூ–சின்னின் கப்பல் துரிதமாக வெளியேற முற்பட்டது.

zeevaa

அப்பொழுது விடியவில்லையாதலாலும், எங்கும் நிசப்தமாயிருந்ததாலும் சீனக் கப்பல் நங்கூரமெடுத்துப் புறப்பட்டதை யாரும் கவனிக்கவில்லை. காட்டுப் பகுதியில் கூச்சல் ஏற்பட்ட பின்பே விழித்துக் கொண்ட விஜயன் தளத்துக்கு வந்ததும் காட்டுப் பகுதியில் ஏற்பட்ட பெரும் கூச்சலைத் தொடர்ந்து ஏராளமான பந்தங்கள் துறைமுகத்தை நோக்கி விரைந்து வருவதையும் கவனித்தான். துறைமுகத்தை அந்தக் கூட்டம் அணுகியதுமே பல காட்டுவாசிகள் விற்களிலிருந்து எரியம்புகளைச் சீனக் கப்பலை நோக்கி எய்தார்கள். அவற்றில் சில சீனக் கப்பலின் தளத்தில் விழுந்தாலும், சூ–சின் மிகச் சாமர்த்தியமாகப் பின் வாங்கும் கடலலையில் மரக்கலத்தைச் செலுத்தி விட்டதாலும், காற்று அனுகூலமாயிருந்ததாலும் பாய்களை விரிக்காததாலும், கப்பலுக்குச் சேதம் ஏதும் ஏற்படவில்லை. காட்டுவாசிகளில் சிலர் மரக்கலத்தில் எப்படியும் ஏறிவிட உறுதி கொண்டு அலையில் இறங்கி வேகமாக நீந்தலானார்கள்.

எங்கும் ஒரே இரைச்சல்! துறைமுகத் தரையில் ஏராளமான காட்டுவாசிகள் பந்தங்களுடன் நின்றிருந்தார்கள். சிலர் காரணமின்றிக் கொளுத்திய பந்தங்களை அலைகள் மீது வீசவும் செய்தார்கள். அந்தச் சமயத்தில் சாரியும் அவன் தங்கையும் பந்தங்களுக்கு முன்பு தோன்றினார்கள். சாரியின் சகோதரி தனது பிரம்மாண்டமான மார்பில் தனது பெரிய கைகளால் அடித்துக் கொண்டு அலறினாள். சாரி ஏதோ சைகை செய்ய இரண்டு கட்டு மரங்களில் பல சாரி இனத்தினர் தொற்றி வந்து விஜயனின் கப்பலில் ஏறினார்கள். அவர்களுடன் சாரியும் ஏறினான்.

கப்பலில் பக்கப் பலகையில் கால்களை ஊன்றி, குரங்குபோல் மிக லாவகமாக ஏறிய சாரி, தளத்தில் மற்றும் சிலருடன் நின்றிருந்த விஜயனை நோக்கி, "அந்தக் கப்பலைத் துரத்துங்கள், பாய்களை விரியுங்கள்," என்று உத்தரவிடும் தோரணையில் கூறினான்.

zeevaa

அங்கிருந்த பிக்கு, "சாரி! நாம் பாயை ஏற்றுவதற்குள் அந்தக் கப்பல் துறைமுக எல்லையைக் கடந்துவிடும். ஆகையால் தொடர்ந்து பயனில்லை" என்றார்.

"சரி, துடுப்புகளைத் துழாவுங்கள்," என்ற சாரி மேற்கொண்டு காத்திராமல் தளத்தின் மீதிருந்த தனது ஆட்களுக்குக் கண்ணைக் காட்டவே அவர்கள் கீழ்தளத்தில் துடுப்புகளிருந்த இடத்துக்கு விரைந்தார்கள்.

"சரி, நங்கூரத்தை எடு," என்றான் சாரி பிக்குவை நோக்கி.

பிக்கு அவனிஷ்டப்படி மாலுமிகளுக்கு உத்தரவிட்டார். ஆனால் நங்கூரம் அசையவில்லை. 'ஏதோ சிக்கியிருக்கிறது,"என்றார்.

அதுவரைவாளாயிருந்த விஜயன் சிற்பியை அழைத்து "சிற்பி! நங்கூரத்தை எடுத்துவிடு," என்றதும் சிற்பி நங்கூரமிருந்த பிணைப் பறைக்குச் சென்று ஏதோ பிணைப்பை இழுக்க நங்கூரம் அசைந்தது. அதை எடுத்ததும் துடுப்புகள் வேகமாகத் துழாவப்பட்டு, கலிங்கக் கப்பல் விரைந்தது கிழக்கு நோக்கி, அதேசமயத்தில் பிக்கு பாய் களையும் விரிக்க உத்தரவிட்டார். காற்று அனுகூலமாயிருந்த தால் கலிங்க மரக்கலம் கடல்நீரைக் கிழித்துக் கொண்டு அம்புபோல் பாய்ந்து சென்றது. மெள்ள மெள்ளப் பொழுதும் விடியவே துறைமுகத்திலிருந்து வெளியே கடலில் பாய் விரித்து நின்ற கப்பலின் தளத்திலிருந்த விஜயன், பிக்கு முதலானோர் சீனக் கப்பலும் பாய்களை விரித்துவிட்டதையும், வெகு வேகமாகக் கிழக்கு சமுத்திரத்தில் ஓடிக் கொண்டிருந்ததையும் கவனித்தார்கள்.

"பிக்கு! நாம் சூ–சின்னை எப்படியும் பிடித்தாக வேண்டும்," என்று விஜயன் சொன்னான்.

"கண்டிப்பாய் பிடிக்க வேண்டும்' என்று சாரியும் கூறி எட்ட இருந்த சமுத்திரக் கரையைக் காட்டினான். சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட கட்டுமரங்களில் காட்டுவாசிகள் மிக விரைவாக வந்து கொண்டிருந்

zeevaa

தார்கள். ஒவ்வொரு கட்டுமரத்திலும் வில்லேந்திய இரு வீரர்கள் நின்றபடி வில்லில் நாணை ஏற்றி அம்பையும் பொருத்தி நின்றிருந் தனர்.

சூ-சின் தனது கப்பலின் தளத்திலிருந்து தன்னைத் துரத்தி வரும் காட்டுவாசிகளின் கட்டுமரங்களையும் விஜயனின் மரக்கலத்தையும் கவனித்தான். அந்த இருநூறு காட்டுவாசிகளை அவன் பொருட்படுத்த வில்லை. தனது மரக்கலத்தை வேகமாக அணுகிக் கொண்டிருந்த விஜயனின் மரக்கலத்தைக் கண்டு மட்டும் சிறிது கவலைக் குறியை முகத்தில் படரவிட்டுக் கொண்டான்.

தனது கப்பலில் இருப்பது போலவே வேல் வீசும் யந்திரங்கள் கலிங்கக் கப்பலில் இருப்பதாலும் கடற்போரில் பிக்கு யாருக்கும் சளைத்தவரல்ல என்பதையும் உணர்ந்திருந்ததாலும், கூடிய விரைவில் தனது மரக்கலத்துக்கும் கலிங்கக் கப்பலுக்கும் உள்ள இடைவெளி அதிகப்பட்டால்தான் தான் பிழைக்க முடியுமென்ப தையும் உணர்ந்ததாலும், கலிங்கக் கப்பலைச் சமாளிக்க என்ன வழி என்று சிந்திக்கலானான். மெள்ள மெள்ள ஒருவழியும் புலனாயிற்று சூ-சின்னின் சிந்தனைக்கு. அதனால் திடமடைந்த சூ-சின், மெள்ள, சூரியனிருந்த திசையைப் பார்தது நேரத்தை ஓரளவு ஆராய்ந்தான். அதனால் கப்பலின் வேகத்தை மெதுவாகக் குறைத்தான். அவன் நோக்கத்தைப் புரிந்துகொண்ட விஜயன் சாரியை நோக்கி, "சாரி! உனது கட்டுமர வீரர்களைக் கரைக்குத் திரும்பச் சொல்," என்று கூறினான்.

சாரி முடியாதென்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான். "சூ-சின் இல்லாமல் நாங்கள் கரைக்குத் திரும்ப மாட்டோம்" என்று சாரி பிடிவாதமாகச் சொல்லவும் செய்தான்.

அவன் பிடிவாதத்தை உடைக்கும் கோர சம்பவம் அடுத்த சில நிமிடங்களில் நிகழ்ந்தது. சூ-சின் கப்பலிலிருந்து யந்திரங்களால் வீசப்பட்ட பெரு வேல்கள் கட்டு மரங்களில் வந்திருந்தவர்களில்

zeevaa

பலரை அழித்தது. இரண்டொரு கட்டுமரங்கள் அலைகளுக்குள் மூழ்கவும் செய்தன. வேல் தாக்கி மாண்ட காட்டுவாசிகளின் சடலங்கள் பல அலைகளில் மூழ்கி மூழ்கி உயிருள்ளவை போல் பயங்கரமாக எழுந்தன. அடுத்தடுத்து வீசப்பட்ட வேல்களால் காட்டுவாசிகள் பெருவாரியாக அழியவே, "சாரி! சூ-சின்னை நான் அழிக்கிறேன். உனது கடலோடிகளைக் கரைக்குத் திரும்பச் சொல்," என்றான் விஜயன்.

சாரி கேட்கவில்லை. கடலோடிகள் நாசம் தொடர்ந்தது. அதைக்கண்டு பொறுக்காத விஜயன் "பிக்கு! நமது கப்பல் விரையட்டும் சீனக்கப்பலை நோக்கி" என்று உத்தரவிட்டான்.

கலிங்கக் கப்பலும் விரைந்தது. துடுப்பு அறையில் ஆதிமல்லன் மிக வேகமாகத் தனது ஆட்களை முடுக்கினான். இத்தனைக்கும் சீனக்கப்பலின் எடை குறைவானதால் அதை மாலையில் தான் கலிங்கக் கப்பல் நெருங்க முடிந்தது. மற்றொரு வினோதமும் நிகழ்ந்தது மாலையில்,அதுவரை கலிங்கக் கப்பலுக்கு அகப்படாமல் விரைந்த சீனக்கப்பல் வேகத்தைத் தளர்த்தி, திரும்பக் கலிங்கக் கப்பலை நோக்கி வரவும் செய்தது. வந்தது மட்டுமல்லாமல் கலிங்கக் கப்பலைத் தாக்கவும் முற்பட்டது. அதன் யந்திர வேல்கள் கலிங்கக் கப்பலை நோக்கிச் சீறிவந்தன.

சூ-சின்னின் அந்தத் திடீர் மாற்றத்துக்குக் காரணம் புரியாததால் விஜயன் வியப்பின் வசப்பட்டான். "சூ-சின் திரும்பி நம்மீது தாக்க வருவதற்குக் காரணம் புரியவில்லை," என்றான்.

"எனக்குத் தெரியும்" என்றார் பிக்கு.

zeevaa

## 37. வல்லூறை நோக்கி வந்த புறா

மாலை நெருங்கிக் கொண்டிருந்தாலும் அடியோடு முற்ற வில்லையாகையால் அஸ்தமன் சூரியனால் வானம் அடியோடு சிவந்து சீனக்கப்பலிலிருந்து வீசப்பட்ட வேல்களால் மாண்டு விட்ட மனிதர்களின் குருதி கடலின் நீல அலையில் கலந்து சிற்சில இடங்களில் சிவப்பாக மாறிவிட்ட சமுத்திர மட்டத்துடன் போட்டி போட்டதால், ஒருவேளை அந்திவானமே சமுத்திர மட்டத்தின் மீது இறங்கி விட்டதோ என்ற பிரமையை ஏற்படுத்தியது. கடலில் பெரிதாக எழுந்த அலைகளும், அங்கங்கு மடிந்து புரண்ட திரைகளும் சமுத்திர மட்டச் சிவப்பைக் குறைத்ததைக் கண்ட அந்திவேளை வானத்தை மட்டும் அப்படியே இருக்கவிடக் கூடாதென்ற எண்ணத்தால் திட்டுத்திட்டான கருமேகங்களை வானச் சிவப்பின் மீதும் ஊர்ந்து செல்லச் செய்து அதன் சிவப்பை மாற்றத் துவங்கியது. இன்பமும் துன்பமும் கலந்த இயற்கையின் அந்தச் சூழ்நிலையில் அந்தமானின் குணக்கடல் (கிழக்கு சமுத்திரம்) அனாவசியமான உயிர் சேதத்தைத் தவிர்க்க விரும்பியது போல் தனது அலைகளைப் பெரிதாக எழுப்பிக் கொண்டிருந்தது. கடலின் அந்தப் பணிக்கு உதவ வாயு பகவானும் தனது சக்தியைக் காட்டிச் சிறிது பேய்க் காற்றையும் சிருஷ்டித்து விடவே கடலின் கொந்தளிப்பு அதிகமாகி, ஒன்றையொன்று நெருங்கிக் கொண்டிருந்த இரு மரக்கலங்களும் கடலின் கொந்தளிப்பில் பெரிதாக ஆடத் தொடங்கின.

அத்தனை ஆட்டத்தையும் லட்சியம் செய்யாமல் சூ-சின் தனது கப்பலைக் கலிங்கக் கப்பலை நோக்கிச் செலுத்தினான். தளத்தில் நின்றவன் கீழே ஓடியும் மறுபடியும் தளத்துக்கு வேகமாகத் திரும்பி

zeevaa



zeevaa

வந்தும் உத்தரவுகளைப் பிறப்பித்ததின் விளைவாகச் சீனக் கப்பலின் சுக்கான் திடமாகப் பிடிக்கப்பட்டுக் கலிங்க் கப்பலை நோக்கி வேகமாக அம்பு போல் வந்தது.

அதைப்பற்றி விஜயன் வியப்படைந்தபோது தான் அந்த ரகசியத்தைப் பிக்கு விஜயனிடம் தெரிவித்தார். "அவன் வரும் காரணம் எனக்குத் தெரியும்" என்று.

விஜயன் தனது விழிகளைப் பிக்குவை நோக்கித் திருப்பி, "என்ன காரணம் பிக்கு?" என்று வினவினான்.

"சூ–சின் பெரிய கடல் வீரன். தவிர தான் எடுத்த காரியத்தைச் சாதிக்காமல் திரும்பமாட்டான் சீனத்துக்கு," என்று சொன்னார் பிக்கு.

"எடுத்த காரியமா?" என்று வினவினான் விஜயன்.

"ஆம் மன்னவா! மகாரத்தினத்தையும் திரிலோக சுந்தரியையும் சீனத்துக்கு கொண்டு போக அவன் தீர்மானித்தது உங்களுக்குத் தெரியும்," என்றார் பிக்கு.

"ஆம், தெரியும்," என்ற விஜயன் அந்தப் பழைய கதையை பிக்கு ஏன் திரும்பச் சொல்கிறார் என்பதை உணராததால் சந்தேகத்துடன் அவரை நோக்கினான்.

"அவை இரண்டும் அவன் வசமில்லை இப்பொழுது," என்று சர்வ சாதாரணமாகச் சொன்னார் பிக்கு.

விஜயன் அதிர்ச்சியுடன் நோக்கினான் பிக்குவை. "என்ன சொல்கிறீர்கள் பிக்கு?" என்று வினவவும் செய்தான், அதிர்ச்சி ஒலித்த சொற்களால்.

"தெளிவாகத்தானே சொன்னேன் சிங்கள மன்னவா, திரிலோக சுந்தரி அவனிடமில்லையென்பது எல்லோருக்கும் தெரியும். மகா ரத்தினமும் அவனிடமில்லையென்பது எனக்கு மட்டும் தெரியும்," என்ற பிக்கு, "விஜயபாகு! உங்களுக்குத் திரிலோகசுந்தரி எப்படி

zeevaa

முக்கியமோ அவ்வளவு முக்கியம் மகாரத்தினம் எனக்கு. அது இருக்க வேண்டிய இடம் சிங்களத்தில் போதிசத்துவரின் பெரிய மடத்தில், அது புத்திபிரானுக்குத்தான் சொந்தம். பௌத்த மதத்தின் உயர்ந்த சின்னம் அது, அதனால் அதைக் காப்பாற்றிச் சிங்களம் கொண்டு செல்வது என் கடமையாயிற்று. கலிங்கத்திலிருந்து அதை நான் தான் எடுத்து வந்தேன். அதை இங்கும் நான் தான் பாதுகாத்தேன். சூ-சின் அதைத் திருடி மறைத்த இடம் மற்றவர்களுக்குத் தெரியாது. எனக்குத் தெரியும். ஆகவே நீங்கள் கரையில் காட்டுக்குப் போயிருந்தபோது அதை மறைத்த இடத்திலிருந்த திரும்ப எடுத்துப்போக முதலில் ஆதிமல்லனை அனுப்பினான். இரவில் ஆதிமல்லன் நான்கு சீனர்களைச் சாளரத்தின் மூலமாக இந்தக் கப்பலுக்குள் விட்டான். அது இருந்த இடத்தைப் பிரித்துச் சீனர்கள் பார்த்தார்கள். அது அங்கு இல்லாததால் அவர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள். மகாரத்தினம் அங்கில்லை என்பதை நானே அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன். சூ-சின் அதை மறைத்ததுமே நான் அதை எடுத்துக் கொண்டேன்...." என்று விளக்கினார் பிக்கு.

"அப்படியானால் ......." என்று கேட்டான் விஜயபாகு.

"இந்த மரக்கலத்திலேயே இருக்கிறது மகாரத்தினம்," என்ற பிக்கு, "இல்லாவிட்டால் நம்மை நோக்கி ஏன் வருகிறான் சூ-சின்!" என்றும் கேட்டு நகைத்தார்.

அத்துடன் அப்பேச்சை நிறுத்திக் கொண்ட பிக்கு, "விஜயபாகு! எதிரி அணுகிக் கொண்டிருக்கிறான். இனிப் போரைக் கவனிப்போம். நீங்கள் எதற்கும் கீழே சென்று சுந்தரியைத் தளத்துக்கு வரவேண்டா மென்று சொல்லுங்கள்," என்று கூறிவிட்டு, தளத்திலிருந்த மாலுமி களை நோக்கி, "வில்லவர்கள் விற்களை ஏந்தி அம்பைப் பொருத் துங்கள். வேல் வீசும் இரு பொறிகளும் இதோ நானிருக்கு திசைக்கும் நகர்த்தப்படட்டும், பாய்கள் ஏற்றப்படட்டும். கீழிருந்த வேல்களை இன்னும் அதிகமாகக் கொண்டு வந்து தளத்தில் அடுக்குங்கள்," என்று உத்தரவிட்டார்.

zeevaa

இந்த ஏற்பாடுகளில் மாலுமிகள் முனைந்தபோது பிக்கு வேகமாகத் தளத்தின் கோடிக்குச் சென்று சுக்கானை பிடித்திருந்த தர்மரிடம், "தர்மரே! நமது கப்பல் எதிரிக் கப்பலுடன் இணையும்படி விட வேண்டும். கூடிய விரைவில் இடத்தை மாற்றி எதிரியைச் சுற்றும் வகையில் சுக்கானைத் திருப்பும்", என்று உத்தரவிட்டு வந்தார்.

சீனத்தின் சூரியக் கொடி காற்றில் மடமடவென்று பறக்க விர்ரென்ற காற்றால் பாய்கள் புடைக்க, போருக்கு வல்லூறை நாடிவரும் புறாவைப் போல் வேகமாக வந்தது சூ-சின்னின் கப்பல்.

கீழே சென்று சுந்தரியைத் தளத்துக்கு வரவேண்டாமென்று எச்சரித்துத் திரும்பிய விஜயன், கலிங்கக் கப்பலின் பாய்களையும் ஏற்ற பிக்கு இட்ட உத்தரவைச் சிறிது மாற்றினான். "பிக்கு பாய்களை ஏற்றவேண்டாம். அவன் வரட்டும் அருகே," என்று விஜயன் கட்டளையும் இட்டான். பிக்குவின் சிவந்த முகம் இன்னும் அதிகச் சிவப்படைந்தது. மிதமிஞ்சிய சினத்தால், "சிங்கள மன்னனே! இந்த மரக்கலத்துக்குத் தலைவன் யார்? நீங்களா நானா? ஒரு மரக்கலத்துக்கு இரு தலைவர்கள் இருக்க முடியாது" என்று சீறிச் சொற்களை உதிர்த்தார்.

"தாங்கள் தான் பிக்கு. ஆனால் சில சமயங்களில் யோசனை சொல்ல எனக்கு அனுமதியுங்கள்," என்றான் விஜயன் பணிவு நிரம்பிய குரலில்.

"உமக்குக் கடல் போரில் பழக்கமுண்டா?" என்று கேட்டார் பிக்கு அதிகாரத்துடன்.

"இல்லை ஆனால் பிக்கு, தரைக்கும் நீருக்கும் போர் சம்பந்தப்பட்ட வரையில் ஓர் அடிப்படை உண்டு. இரண்டிலும் வெற்றி பெறுவது அறிவுதான்", என்றான் விஜயன்.

"எனக்கு அது இல்லையா. உங்களைவிடக் குறைச்சலா?" என்று பிக்கு வினவினார்.

zeevaa

"இரண்டுமில்லை பிக்கு. ஆனால் உங்கள் போர் முறையில் எதிரியுடன் நேரில் இணையாவிட்டாலும் மோதும் நிலை ஏற்படும். அப்படி மோதும்போது இரு கப்பல்களிலுள்ள வேல்களும் விற்களும் குறுவாள்களும் தான் பலம். ஆனால் மனித பலம் ஒன்று இருக்கிறது. இப்பொழுது இரு கப்பலிலும் சீனர்களுமிருக்கிறார்கள். நம்மவர் களுமிருக்கிறார்கள். இந்தப் பலம் சமம்........" என்று சுட்டிக் காட்டினான் விஜயன்.

"அதை எப்படி அதிகப்படுத்துவதாக உத்தேசம்?" என்று வினவினார் பிக்கு.

"இதோ இருக்கும் சாரியின் மூலம். இவன் ஆட்கள் எத்தனையோ பேரை சூ–சின் அழித்துவிட்டான். இருப்பினும் அதோ சாரியார் இனக் கும்பல் மேலும் மேலும் கப்பலில் தொற்ற வருவதை பாருங்கள்," என்று துறைமுகத்தை நோக்கிக் கையைக் காட்டினான் விஜயன்.

மேலும் கட்டுமரங்களில் ஹண்டுமான் வாசிகள் சாரி சாரியாக வந்து கொண்டிருந்தார்கள். "இவர்கள் மேலும் வந்தால் சூ–சின் அழித்துக்கொண்டே இருப்பான். ஆகவே அவர்கள் அழிவைச் சிறிது நிறுத்துவோம்," என்று கூறிய விஜயன் சாரியை நோக்கி, "சாரி! உன் வீரர்களைத் திரும்புவது போல் பாசாங்கு செய்யச் சொல், எங்கள் இரு கப்பல்களும் போரில் இறங்கிய பின்பு அவர்கள் கட்டுமரங்களை விட்டு நிரில் அமிழ்ந்தி நீந்திவரட்டும். எங்களுடன் சூ–சின் மும்முரமாகச் சண்டையில் ஈடுபட்டிருக்கும் போது நீங்கள் அவன் மரக்கலத்தில் ஏறிப் பாய்களுக்குத் தீ வைத்து விடுங்கள்" என்று கூறினான்.

புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகச் சாரி தலையை அசைத்தான். பிறகு புறப்பட முயன்றவனைத் தடுத்த விஜயன் நான் சொன்னபடி உன் இனத்தார் செயல்படட்டும். ஆனால் நான் ஒரு எரிவாளியை ஆகாயத்தை நோக்கி எய்தால் அதைப் பார்த்ததும் எதிரி கப்பலி லிருந்து அகன்று கரைக்குப் போய் விடுங்கள்," என்றும்

zeevaa

உத்தரவிட்டான். அதற்குப் பிறகு சாரி கடலில் பாய்ந்து மறைந்த மறு நிமிடம் தள த்துக்கு வந்த மூர்சமதை நோக்கிய விஜயன், "சமத்! போர் மும்முரமாகப் போகிறது. நானும் எச்சரித்து இருக்கிறேன். எதற்கும் நீயும் சென்று சுந்தரியை தளத்துக்கு வரவேண்டாமென்று திட்டமாகச் சொல்லிவிட்டு வா," என்று உத்தரவிட்டான்.

மூர்சமத் புன்முறுவல் செய்தான். "நான் சொல்லிவிடுகிறேன் பிரபு! ஆனால் தேவியார் கேட்பார்களாவென்பது சந்தேகம்," என்று கூறினான் மூர்சமத்.

அதே சமயத்தில் பிக்கு உரக்கக் கூவினார். "வில்லாளிகள் சித்தமாயிருங்கள். வேல்கள் பொறிகளில் பொருத்தப்படட்டும். மற்றவர்கள் கைகளால் வேல்களை வீசுங்கள்," என்று.

சீனத்துக் கப்பலும் துரிதமாக நெருங்கி வந்தது. அதன் தளத்தில் பெரிய பந்தம் ஒன்று மட்டும் எரிந்து கொண்டிருந்ததால் தளத்தில் சூ-சின் ஏற்பாடு எதுவும் புலப்படவில்லை, கலிங்கத்துக் கப்பலின் தளத்தில் இருந்தவர்களுக்கு.

வில்லாளிகளும் வேல் வீசுவோரும் சித்தமானார்கள். இரண்டு பந்தங்கள் தளத்தில் எரியலாயின. அவற்றின் நடுவில் ராட்சஸன் போல் மூர்சமத் நின்றிருந்தான். "முதல் வேல் என்னுடையதாயிருக் கட்டும், என்று கூறி எதிரியின் கப்பலை நோக்கி வேலை வெகு வேகமாக எறிந்தான்.

வேல் பாயும் தூரம் இரண்டுக்கும் இடையே இல்லாவிட்டாலும் மூர்சமதின் வேல் எதிரி கப்பல் மீது விழவே செய்ததால் அவன் புஜபலத்தை பிக்கு மிகவும் மெச்சினார்.

வெகு துரிதமாகச் சூ-சின் கப்பல் வந்து கொண்டிருந்தது. இருளும் மெல்ல மெல்லக்கடல் பகுதியில் சூழலாயிற்று. இருள் கவிந்து கொள்வதற்கும் கப்பல்கள் போரிடும் தூரத்துக்கு வந்து இடைவெளி

zeevaa

குறுகுவதற்கும் நேரம் சரியாக இருந்ததால் போர் மும்முரமாகத் தொடங்கியது.

சூ-சின் தனது தளத்தின் நட்ட நடுவில் நின்று கொண்டு சைகைகளாலேயே போரைத் துவக்கினான். அவன் கை அசைந்ததும் சீனத்து வேல்பொறிகள் பயங்கரமாக இயங்க, சுமார் ஐம்பது வேல்கள் ஏககாலத்தில் கலிங்கக் கப்பலை நோக்கிச் சீறிவந்தன. கலிங்கக் கப்பல் இருக்கிற இடத்தில் இருந்திருந்தால் தளத்தில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கும். ஆனால் பிக்குவின் உத்தரவை யொட்டி, சுக்கானைத் தர்மர் திருப்பியதால் கலிங்கக் கப்பல் அரைவாசி சுழலவே தளத்தில் விழவேண்டிய வேல்கள் நீரில் விழுந்தன. அப்படிச் சுழன்ற நேரத்தில் பிக்குவின் சைகைப்படி பொறிகள் இயங்கவே சீன மரக்கலத்தின் மீது வேல்கள் பாய இரண்டொருவர் அலறினார்கள்.

இருள் நன்றாகச் சூழ்ந்துவிட்டதால் இரு கப்பல்களின் போர் பார்க்க பிரமிப்பாயிருந்ததன் விளைவாக விண்மீன்கள் கண்களைக் கீழ் நோக்கிச் சிமிட்டின. அடுத்து இரு கப்பல்களிலிருந்தும் எரிவாளிகள் பறந்தன. மேலும் கீழுமாகச் சில எரிவாளிகள் பறந்தன. ரகுவுக்கும் இந்திரனுக்கும் நடந்த யுத்தத்தில் வாளிகள் மேலும் கீழும் பறந்ததாக *காளிதாஸன் தீட்டிய வர்ணனைக்கு அத்தாட்சியாக அமைந்தது. இரண்டு தளங்களிலும் வீரர்கள் போர் செய்தனர். கப்பல்களின் அடிப்பலகைகளைத் துளைக்க பெரிய வேல்கள் அடியிலிருந்து எறியப்பட்டது. சிறு கோடாரிகளும் எறியப்படவே இருகப்பல்களிலும் சின்னஞ்சிறு காயங்கள் ஏற்பட்டன.

போர் துவங்கிய கால் ஜாமத்திற்குள் சீனக் கப்பல் கலிங்கக் கப்பலை முழுவதும் நெருங்கிவிடவே சட்டென்று விஜயன் தனது

---

* "அதோமுகை : ஊர்த்வமுகைச்ச பத்ரிபி :" ரகுவம்சம் மூன்றாவது சர்க்கம்.

அம்பு ஒன்றை எட்டக் காய்ந்து கொண்டிருந்த எண்ணெய்க் கொப்பரையில் தோய்த்துப் பந்தத்தில் காட்டி எரியூட்டி ஆகாயத்தை நோக்கி எய்தான். அடுத்து இன்னொரு வாளியை அவன் எடுக்கு முன்பு பக்கத்தில் ஒருவன் எரிகிற வாளியையே அவன் கையில் திணித்தான். திரும்பி நோக்கினான் விஜயன், பக்கத்தில் திரிபுர சுந்தரி நின்று கொண்டிருந்தாள். "உன்னை யார் வரச் சொன்னது இங்கே? போ கீழே," என்று சினந்து பிடித்துத் தள்ளினான் அவளை விஜயன்.

அவள் போக மறுத்தாள். "ஆபத்து ஏற்படும்போது உங்கள் பக்கத்தில் தான் என் இடம்," என்று கூறினாள். தன் கையிலிருந்த வில்லிலும் எரிவாளியொன்றைப் பூட்டினாள்.

விஜயனுக்குக் கோபம் அதிகமானாலும் கப்பல்கள் இரண்டும் இணையும் தருவாயிலிருந்ததால் அவன் ஏதும் செய்ய இயலாமல், "மூர்சமத்! இவளைக் கொண்டு போய் அறையில் தள்ளிப் பூட்டிவிட்டு வா," என்று இரைந்துவிட்டுப் போரில் கருத்தைச் செலுத்தலானான்.

இரு கப்பல்களிலும் மாறி மாறி எரியம்புகளும் வேல்களும் பறந்து கொண்டிருந்தன. அந்தச் சமயத்தில் எதிரி கப்பலில் எதிர்பாராத விசித்திரம் ஒன்று நிகழ்ந்தது. தளத்தில் பந்தத்தின் வெளிச்சத்தில் நின்றிருந்த சூ–சின்னுக்குப் பின்னால் சாரி வந்து கொண்டிருந்தான். அவன் கையில் குறுவாளொன்று பளபளத்தது.. அதை ஓங்கிய வண்ணம் சூ–சின்னின் மீது பாய்ந்து விட்டான் சாரி.

zeevaa

## 38. சீனத்து வெடிக் குழாய்கள்

அந்தமான் கிழக்குக் கடலில், இருள் சூழ்ந்துவிட்ட நேரத்தில், கடும் போரில் ஈடுபட்ட இரு கப்பல்களும் சுழன்ற தன்மையும், சிற்சில சமயங்களில் இணைய முற்பட்டும் முடியாததால் பிரிந்து போரிட்ட வகையும் பிரமிக்கத்தக்கதாயும் பயங்கரமாகவும் இருந்தாலும் கடற்போரில் இணையற்ற இரு தலைவர்களின் திறமைக்கும் அது சான்றாக இருந்தது. சூ-சின்னின் கப்பல் கலிங்கக் கப்பலைவிடச் சிறியதாகவும் எடை குறைவாகவுமிருந்ததால் அதன் வேகம் அதிகமாயிருந்ததன் விளைவாகக் கப்பலை அது அடிக்கடி நெருங்கி இணைய முற்பட்டது. சூ-சின் அதற்காகவே பாய்களை நன்றாக விரித்து, துடுப்புகளையும் மும்முரமாகத் துழாவச் செய்திருந்தான். ஆனால் கலிங்கக் கப்ப்லின் தலைவரான பிக்கு ஒவ்வொரு முறையும் அவன் நோக்கத்தைப் புரிந்துகொண்டு தனது வாளைச்சுழற்றிச் சைகை செய்ய, அதைப் புரிந்துகொண்டு சுக்கானைத் தர்மர் திருப்ப, கலிங்கக் கப்பல் ஒவ்வொரு முறையும் சீனக்கப்பலை லேசாக இடித்து இடித்து மீண்டதே தவிர இணைய இடம் கொடுக்கவில்லை. ஒருமுறை மிக வேகமாகக் கலிங்கத்தின் அக்ரமந்திரம் சீனக் கப்பலுடன் மோதவே, சீனத்துக் கப்பல் ஓர் ஆட்டம் ஆடித் திசை திரும்பலாயிற்று. இன்னொரு முறை கலிங்கத்துக் கப்பல் மோதினால் அதன் வீரர்கள் இழுப்புக் கொக்கிகளை எறிந்து தனது கப்பலை அருகில் இழுத்துத் தளத்தில் குதித்து விடலாமென்றும், அப்படிக் குதித்தால் தன்னுடைய ஆள் பலத்தைக் கொண்டு போரைச் சமாளிக்க முடியாதென்றும் புரிந்து கொண்ட சூ-சின், அந்த நிலை ஏற்படாதிருக்க அடிக்க"

zeevaa




zeevaa

அக்ரமந்திரத்துடன் மோதியும் பிரிந்தும் நெருங்கிய சமயங்களில் வேல்களையும் எரிபந்தங்களையும் நேராக வீசியும், அடித்தளத்தைக் குறி பார்த்துக் கோடரிகளை வீசச் செய்தும் போரிட்டான்.

கலிங்கத்தின் பெரிய கப்பலை எப்படியாவது தீயினாலும், ஆயுதங்களாலும் அழித்துவிட முயன்ற சூ-சின் கலிங்கக் கப்பலைத் தவிர, ஈனக்குச் சாரியார் கும்பலின் தொல்லையும் கலந்து கொண்டதால் இரண்டையும் சமாளிக்கும் அவஸ்தையில் சிக்கிக் கொண்டான். இருப்பினும் கடற்போரில் இணையற்றவனென்று பெயர் பெற்றவனும் மகாதந்திரசாலியென்று சீனத்துக் கடற்பகுதியில் பிரசித்தி உள்ளவனுமான சூ-சின் இரண்டு எதிரிகளுடனும் ஏக காலத்தில் போரிட்டான். சீன மாலுமிகளின் வேலெறியும் திறமையால் கரையிலிருந்து படகில் வந்த சாரியார் இனக் கும்பலின் ஒரு பகுதியை அவனால் அழிக்க முடிந்தாலும் அந்தக் கூட்டத்தைத் தடுப்பது அத்தனை சுலபமல்லவென்பதையும் மேலும் மேலும் அந்தக் காட்டுக் கும்பல் சாரி சாரியாக வந்ததால் அவர்களை சமாளிப்பது கஷ்டமென்பதையும் புரிந்து கொண்டதால், சீக்கிரமாகத் தான் கலிங்கக் கப்பலை அழித்தாலொழியத் தனக்கு விமோசன மில்லையென்பதையும் புரிந்து கொண்டான். ஆகவே தனது சீன மாலுமிகளை இரு பிரிவாகப் பிரித்து, ஒரு பிரிவைச் சாரியார் கும்பலை அழிக்கவும் மற்றொரு பிரிவைக் கலிங்கத்துக் கப்பலைக் கவனிக்கவும் ஏவினான். கீழே துடுப்புகளைத் துழாவியவர்கள் பெரும்பாலும் ஆதிமல்லனின் மாலுமிகளாகையால் அவர்களை ஒழுங்காகப் பணியாற்றத் தனது சீனமாலுமிகளில் ஒருவனைக் கையில் சாட்டையுடன் நிறுத்தியிருந்தான். இந்த ஏற்பாடுகளின் விளைவாக, சீனக் கப்பல் சூ-சின் இஷ்டப்படி முன்னேறியும் பின்னுக்கு வாங்கியும் போரிடலாயிற்று.

கப்பல் தலைவர் பிக்கு, தான் சூ-சின்னுக்குச் சிறிதும் சளைத்தவ ரல்லவென்பதையும் நிரூபித்தார். துடுப்புத் துழாவுபவர்கள் கலிங்கக் கப்பலிலும் பெருவாரியாக ஆதிமல்லன் ஆட்களும் சீனர்களாகவுமே

zeevaa

இருந்தபடியால் அவர்களைக் கவனிக்க ஆதிமல்லனையே ஏவி யிருந்தார். விஜயன் முதலில் இருக்கப்பல்களிலும் மாலுமிகளைப் பிரித்த போது தனது கப்பலிலும் சில சீனர்களை இருத்திக் கொண்டதால் துடுப்புத் துழாவாத சீனர்களைக் கவனிக்க மோக்ஷரை ஏவியிருந்தார். அர்த்தரும் காமரும் தளத்திலேயே மற்ற மாலுமிகளுடன் சேர்ந்து பொறிகளை இயக்கியும், தளத்தில் அவ்வப்பொழுது விழுந்த எதிரி ஆயுதங்களைச் சேர்த்து மீண்டும் எதிரி மீதே எறிந்தும் போர் செய்தார்கள். வேல்களை வீசிய அர்த்தர், "அப்பாடா! எத்தனை நாளாயிற்று இந்த மாதிரிப் போரைக் கண்டு!" என்று குதூகலிக்க, காமரும் அதற்கிசைந்து தலையசைத்தார்.

சூ-சின்னின் கப்பல் திடீரெனச் சிறிது பின்வாங்கியது. படகுகளில் வந்து கொண்டிருந்த சாரியார் கும்பல் பெரிதும் அழிந்து கொண்டிருந்தது சீன அம்புகளாலும் வேல்களாலும், அந்தச் சமயத்தில் தான் விஜயன் தனது எரியம்பை வானத்தை நோக்கி வீசினான். அதைப்பற்றிச் சாரி தனது வீரர்களுக்கு ஏற்கனவே சைகை செய்திருந்ததால், படகில் வந்தவர்கள் சட்டென்று நீரில் குதித்து மூழ்கி உள்ளூர நீந்தினார்கள்.

சூ-சின் விண்ணை நோக்கிச் சென்ற எறியம்பைக் கவனிக்கத் தவறவில்லை. அந்தமான் வீரர்கள் படகிலிருந்து கடலில் குதித்து மறைந்து விட்டதையும் அவன் கண்டான். அதற்கு காரணத்தையும் மகாபுத்திசாலியான சூ-சின் ஊகித்தான். ஆகவே, தனது கப்பலைச் சிறிது பின்னுக்கு இழுத்து, பின்வாங்குவது போல் பாசாங்கு செய்தான். அந்தச் சமயத்தில் தான் சீனத்துக் கப்பலில் தொற்றி ஏறித் தளத்தை அடைந்து விட்ட சாரி குறுவாளோடு பாய்ந்தான் சூ-சின் மீது.

அதைக்கண்ட விஜயன் சிறிது கலங்கினான். படகில் வந்தவர் களைக் கூட்டமாகச் சூ-சின்னின் கப்பலில் தொற்றி ஏறி, பாய்களுக்குத் தீ வைக்க அவன் கட்டளையிட்டிருந்தானேயொழிய,

zeevaa

சாரியை அவன் தன்னந்தனியே போகச் சொல்லவுமில்லை, சூ-சின்னைக் கொல்ல உத்தரவிடவுமில்லை. சாரியின் ஒவ்வோர் அசைவையும் சீன மாலுமிகள் கவனித்திருப்பார்களென்றும் அவன் உயிர் இனி அரைக்காசு பெறாதென்றும் திட்டமாக எண்ணினான் விஜயன். அதன் விளைவாக மூர்சமதுக்குக் கண்ணைக் காட்ட மூர்சமத் கையில் குறுவாளை எடுத்துக் கொண்டான். அடுத்து மூன்று நிகழ்ச்சிகள் ஏக காலத்தில் நடந்தன. சூ-சின் மீது குறுவாளுடன் பாய்ந்த சாரி கையை ஓங்கிய சமயத்தில் அவன் கையாளான சீனன் வீசிய ஒரு கயிற்றால் இழுக்கப்பட, சாரி தளத்தின் மீது விழுந்தான் வேகமாக, அவன் மீண்டும் எழுந்ததும் இன்னொரு சீனன் அவன் மார்பை நோக்கி ஒரு கட்டாரியை எறிய முனைந்தான். கட்டாரி அவன் கையை விட்டுப் பறக்க முயன்ற அதே விநாடியில் மூர்சமதின் குறுவாள் சீனன் மார்பில் பாய்ந்துவிட, சீனன் கப்பலில் தளத்தில் பெரும்குழப்பம் ஏற்பட்டது. அதே சமயத்தில் சாரி எழுந்தான் தனது பணியை முடிக்க, நீரில் மூழ்கி வந்த சாரியின் கும்பலும் சீனக் கப்பலின் பக்கப் பலகைகளில் தொற்றி ஏறலாயிற்று. ஈசல்களைப் போல் ஏறிவந்த அந்தமான் காட்டுக் கும்பலைச் சமாளிக்கச் சூ-சின் தனது கப்பலைத் திருப்பி உள்ளே தனித்து வைக்கப்பட்டிருந்த சீனத்து வாணமருந்தைப் பக்கப் பலகையில் ஏறி வந்தவர்கள் மீது தூவி, தீப்பந்தங்களை எறிந்து சுடவே, வாணமருந்து தலைகளில் பற்றி எரிய, அலறிக் கடலில் வீழ்ந்த சாரியின் மாலுமிகளின் சோக கீதம் விஜயனின் இதயத்தைப் பிளந்தது. அத்தனை விபரீதத்திலும் அழிவிலும் சாரியார் கும்பலின் வீரர்கள் ஓரிருவர் தப்பி எரிந்த தலைகளுடன் தளத்தில் விழுந்து பாய்களிடம் போகவே, அவர்கள் தலைத் தீ பாய்களைக் கொளுத்தலாயிற்று. அவர்கள் வேகமாக வெறிக் கூச்சலிட்டு, எரிந்த பாய்களுடன் சுற்றிக் கொள்ளவே சீனத்து மரக்கலப் பாய்கள் பெரும் சோதியைச் சிருஷ்டித்தது கடற்புறத்து இருளில்.

சாரி இனத்தின் இந்தத் தியாகத்தை, கடமைக்காக அவர்கள் செய்துகொண்ட சுய அழிவை, தனது மரக்கலத்திலிருந்து பார்த்த

zeevaa

விஜயன் அவர்கள் மீது பெருவியப்பும் மதிப்பும் கொண்டான். அவர்கள் மேலும் அழியாதிருக்க இன்னொரு முறை எரிவாளியை வானத்தை நோக்கி எய்தான். அதன் விளைவாகச் சாரி திடீரெனத் தளத்தில் தோன்றிக்கடலில் குதிக்கும் தருவாயில் செய்த சைகையால், சாரி இனத்தார் மீண்டும் கடலில் மூழ்கிச் சென்றார்கள். அவர்கள் மறுபடியும் தலை நிமிர்ந்தபோது சேணமலை உச்சியில் நெருப்பு ஒன்று பலமாக எரிந்தது. அதைக்கண்டதும் சாரி கும்பல் வேகமாகத் தரையை நோக்கி நீந்திச் செல்லலாயிற்று. அந்தத் தீயைக் கண்ட மூர்சமத் கேட்டான், "அதென்ன தீ?" என்று.

"சாரி இனத்தின் குருமார்கள் தங்கள் மக்களைத் திரும்ப அழைக்கும் அடையாளம். பேரழிவு ஏற்படும் சமயங்களில் சமூகத்தைக் காக்கக் குருமார்கள் இப்படி நடவடிக்கை எடுப்பார்கள்," என்றான் விஜயபாகு.

அப்பொழுது அவனுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த திரிலோகசுந்தரியும் ஏதோ கேள்வி கேட்டாள். அதற்கு விஜயன் பதில் சொல்லவில்லை. வேறு பக்கம் திரும்பிப் போரைக் கவனிக்க லானான்.

சூ—சின் தனது கப்பலைச்சிறிது தூரம்பின்னுக்கு அடையச் செய்த பின்பு எரிந்த பாய்களை இறக்கி நீரை விட்டு அணைத்தான். பிறகு பாய்களின் உதவியில்லாமலே கலிங்கக் கப்பலை நோக்கி வந்தான். அவன் வந்த வேகத்தையும் தளத்தில் கடுத்த முகத்துடன் நின் றிருந்ததையும் கண்ட விஜயன், "பிக்கு! இப்பொழுது மிகுந்த துணிவுடன் வருகிறான் எதிரி. அவன் முகத்தில் நம்பிக்கையும் இருக்கிறது. ஏதாவது புதிய போர் முறையைக் கையாளுவானோ?" என்று வினவினான்.

"புரியவில்லை எனக்கு," என்று ஒப்புக் கொண்ட பிக்குவின் முகத்தில் முதல் முதலாகக் கவலை தெரிந்தது.

zeevaa

விஜயன் மடமடவென்று கீழே ஓடி, சிற்பியின் அறையில் நுழைந்து விஷயத்தைக் கூறினான். சிற்பி சொன்னான், 'சூ–சின்னின் கடைசி ஆயுதம் அவனிடமிருக்கும் சீனத்து வெடி மருந்து. அதைக் குழாய்களில் திணித்துக் கெட்டி செய்து தீ வைத்து நமது கப்பலின் மீது வீசினால் நமது கப்பல் பல இடங்களில் தீப்பிடிக்கும். வெடிக்கும், உயிர்ச்சேதம் ஏற்பட்டாலும் ஏற்படலாம்," என்றான்.

அடுத்து, அங்கு நிற்கவில்லை விஜயன். வேகமாகத் தளத்துக்கு ஓடி வந்து, "பிக்கு! நமது கப்பல் உடனடியாக எதிரிக் கப்பலுடன் இணையட்டும். கொக்கிகளை எடுத்து சீனக் கப்பலை இழுத்து நம்முடன் இணைத்துக் கொள்ளுங்கள். நமது வீரர்கள் எதிரிக் கப்பலின் தளத்தில் பாயச் சித்தமாகட்டும்," என்றான்.

விஜயன் தம்மை மீறிப் பிறப்பித்த உத்தரவுகளால் சிறிது மனவருத்தமடைந்தாலும் அவன் சொற்படியே நடந்தார் பிக்கு. விஜயன் அடுத்துக் கூறினான், "மாலுமிகள் சித்தமாகட்டும்", என்று அடுத்து "ஹூர்சமத்! எதிரிக் கப்பல் கிட்ட வந்தால் மும்முரமான போர் என்ன செய்ய வேண்டும் என்பதை நான் உனக்குச் சொல்லத் தேவையில்லை," என்று கூறி விட்டுத் திரிலோக சுந்தரியைக் கையைப் பிடித்து தரதரவென்று இழுத்துக் கொண்டு கீழே ஓடி அவளது அறையில் அவளை முரட்டுத்தனமாகத் தள்ளிப் பூட்டிவிட்டுத் தளத்துக்கு ஓடி வந்தான்.

கலிங்கத்துக் கப்பல் வெகு வேகமாகச் சீனத்துக் கப்பலை நெருங்கலாயிற்று. நான்கு பெரும் கொக்கிகள் கயிற்றுடன் வீசப் பட்டு எதிரி கப்பல் பக்கப் பலகையில் சிக்கி அதை அருகில் வலுக்கட்டாயமாக இழுத்தது. அடுத்த சில வினாடிகளில் கலிங்கத்தின் பலமான கப்பல் சீனக் கப்பலுடன் வேகமாக மோதியது. அந்த மோதலின் பலத்தால் இரண்டு கப்பல்களிலுமிருந்த ஆயுதங்கள் பல உருண்டன. ஒலிகளும் கப்பலுக்குக் கப்பல் தாவிய மாலுமிகளின் போர் வெறிக் கூச்சலும் அந்தக் கடல் புறத்தை ஆக்கிரமித்துக்

zeevaa

கொண்டன. மூர்சமத் தனது பெரிய வாளை ஓங்கிக் கொண்டு சீனத்துக் கப்பலில் குதித்து எதிரிகளை வெட்டலானான். பெரிய அசுரனைப் போல் போரிட்ட மூர்சமத், தன்னைக் குத்திப் போட ஓடிவந்த சில சீனர்களைக் காலால் உதைத்துக் கடலில் எறிந்தான். இன்னும் சிலரை வெட்டவும் முற்பட்டான். பொறிகளை இயக்கிய அர்த்தரும் காமரும் தங்கள் துறவி நெறி துறந்து வெறிக் கூச்சல் போட்டுப் போரிட்டார்கள். இத்தனைக்கும் கூ-சின் தளத்திலிருந்து மறைந்து விட்டான். அவன் மறைந்ததற்குக் காரணம் கோழைத் தனமாக இருக்க முடியாதென்பதை விஜயன் புரிந்து கொண்டதால், அவன் மறைவு ஏதோ விபரீதத்துக்குத்தான் அடிப்படை என்பதை உணர்ந்து கொண்டான். சீனத்துக் கப்பல் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது அந்த ஆபத்து துளிர்த்தது. கூ-சின் திடீரெனத் தளத்தில் தோன்றினான் பத்து சீனர்களுடன். அவர்கள் ஒவ்வொருவர் கையிலும் அகலமாக மூங்கில் குழாய்கள் இருந்தன. அவற்றின் முகப்புகள் மெதுவாக எரியத் துவங்கித் தீ நாக்குகளைக் காட்டலாயின. சிற்பி சொன்னபடி கூ-சின்னின் கடைசி அ'ஸ்திரம் அது என்பதைப் புரிந்து கொண்ட விஜயன் கூ-சின்னை அழிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற காரணத்தால் தனது வில்லில் ஒரு வாளியைப் பொருத்தி, தளத்தில் கூ-சின் தலை காட்டியதும் அவன் மார்பை நோக்கி வாளியைக் குறி வைத்தான். அதே சமயத்தில் மூங்கில் குழாய்கள் வானத்தில் எழுந்து கலிங்கக் கப்பலை நோக்கி வந்தன. எந்தச் சமயத்திலும் அவை தனது கப்பலில் வெடிக்கலாம். வெடித்துப் பேரழிவை விளைவிக்கலாம் என்பதைப் புரிந்து கொண்ட விஜயன் அந்த ஆபத்தைச் சமாளிக்க ஒரு திட்டத்தையும் வகுத்தான்.

zeevaa

# 39. மாவியா தோமலா

சூ-சின்னை அழிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று தீர்மானித்து அதற்காகத் தனது வில்லில் கணையொன்றையும் பூட்டி. சூ-சின்னின் மார்புக்குக் குறி வைத்துவிட்ட விஜயன். அந்தக் கணையை ஏவினானில்லை. தன்னையும் அந்தமான் கும்பலையும் ஏககாலத்தில் சமாளித்து, பாய்கள் தீப்பிடித்துக் கப்பல் அழியும் நிலைக்கு வந்துகூடப் போரை நிறுத்தவோ சரணடையவோ இஷ்டமில்லாமல் போரைத் தொடர்ந்து நடத்திய சூ-சின் போன்ற மகா வீரனை அழிக்க மனமில்லாமல் வில்லிருந்த வாளியைக் கீழே உதிர்த்துவிட்டு, தனது கப்பலை நோக்கி வீசப்பட்ட சீனத்து வாணவெடிக் குழாய்களிலிருந்து கப்பலைக் காப்பாற்றக் கண்ணிமைக்கும் நேரத்தில் ஒரு திட்டத்தையும் வகுத்துக் கொண்ட விஜயன், சுக்கானைப் பிடித்திருந்த தர்மரை நோக்கி ஏதோ கையால் சைகை காட்டினான்.

சூ-சின்னின் மாலுமிகள் பத்துப்பேர் வாணக் குழாய்களுடன் தளத்தில் தோன்றியபோதே சிற்பி சொன்ன கடைசி அஸ்திரம் அவையாகத்தானிருக்குமென்பதை உடனடியாக ஊகித்துவிட்ட விஜயன் அவற்றிலிருந்து தப்ப வேண்டுமானால் சூ-சின் கப்பலை அரைவாசி திருப்புவதைத் தவிர வேறு வழியில்லையென்பதைப் புரிந்து கொண்டான். அதன் விளைவாக முதலில் சூ-சின்னை அழித்துவிடச் செய்த முயற்சியைக் கைவிட்டு, தர்மரை நோக்கிச் சைகை செய்யவே, ஆகாயத்தை நோக்கி வீசப்பட்ட வாணக் குழாய்கள் பல தீ நாக்குகளுடன் தனது கப்பலை நோக்கி இறங்க முற்பட்ட சமயத்தில் தர்மர் சுக்கானைச் சரேல் சரேலென்று இருமுறை

zeevaa



zeevaa

திருப்பியதாலும் அடித்தள மாலுமிகள் துடுப்புகளை வேகமாகத் தொடர்ந்து துழாவியதாலும் கலிங்கக் கப்பல் இருமுறை சீனத்துக் கப்பலை இடித்துத் திருப்பிவிட்டதால், வாணக் குழாய்களைச் சீனத்துக் கப்பல் சரிபாதியும் கலிங்கக் கப்பல் சரிபாதியும் ஏற்றுக்கொள்ளும் நிலைமை ஏற்பட்டது. இப்படி ஒன்றுக்கொன்று இருமுறை இடித்து திரும்பிவிட்ட கப்பல்களின் தளங்களை நோக்கிச் சீறிவந்த குழாய்கள் இரு கப்பல்களிலுமே விழுந்ததால் போரிடும் வேலையைத் தவிர வெடிக் குழாய்கள் விளைவிக்கக் கூடிய நாசத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் வேலையும் ஏற்படவே இரு கப்பலின் மாலுமிகளும் திடீரெனத் தற்காப்பு அலுவல்களில் இறங்கினார்கள்.

கப்பல்களின் இருப்பு நிலையை விஜயன் திடீரென மாற்றிவிட்டதால் சில வெடிகள் குறி தப்பிக் கடலில் விழுந்தன. மற்றவை இருகப்பல்களிலும் விழுந்தன. அப்படி விழுந்த வாணக் குழாய்கள், திடீரெனப் பெரும் ஜுவாலையைக் கிளப்பு முன்பாகவே மூர்சமதும் பிக்குவும் மற்றத் துறவிகளையும் மாலுமிகளையும் ஏவியதால், பாய்களுக்கு அருகில் விழுந்த குழாய்கள் அந்த இடங்களிலிருந்து அகற்றப்பட்டன. தீக்கோ மற்ற ஆபத்துகளுக்கோ அஞ்சாத அர்த்தரும் காமரும் இரண்டு வெடிகள் அக்னி ஜுவாலையைக் கக்கிக் கொண்டிருந்த சமயத்தில் அவை வெடிக்கு முன்பே தூக்கிச் சீனக் கப்பலை நோக்கி எறிந்தார்கள். மற்ற மாலுமிகள் அவை வெடித்தாலும் நாசமேற்படாதபடி இரும்புச் சங்கிலிகளிருந்த மூலைக்கு நகர்த்தினார்கள். இத்தனையிலும் தப்பிய இரண்டு வெடிகள் பலமாக வெடித்து இரு மாலுமிகளைத் தூக்கிக் கடலில் எறிந்ததோடு பக்கப் பலகைகளையும் இரண்டு இடங்களில் மூளியாக்கின. ஆகவே கலிங்கக் கப்பலில் ஓரளவு சேதம் ஏற்படவே செய்தது.

சீனத்துக் கப்பலின் சேதம் அதிகமாயிருந்தது. திடீரெனத் தனது கப்பலில் இடிக்கப்பட்டுத் திருப்பப்பட்டதால் தன் கப்பலின் மீது விழுந்த

zeevaa

குழாய்களைச் சமாளிக்கச் சீனத்து வீரர்களை ஏவிய சூ-சின் சீனத்து மொழியில் ஏதேதோ சொன்னான். அந்தச் சொற்கள் பெருமந்திர மாயிருந்ததாலோ என்னவோ சீன வீரர்கள் கப்பல் தளத்தில் மூலைக்கு மூலை பறந்தார்கள். நேராகக் கீழே வந்து கொண்டிருந்த சீனக் குழாய்களைத் தங்கள் தலைகளாலேயே முட்டிக் கடலில் தள்ளினார்கள். இன்னும் சிலவற்றைக் கப்பலைத் தொடும் சமயம் பார்த்து தமது கட்டாரிகளால் தடுத்துக் கடலை நோக்கிச் செலுத்தினார்கள். இன்னும் ஓரிரண்டைக் கலிங்கக் கப்பலில் விழும்படியும் சாடினார்கள்.

இத்தனைக்கும் சீனத்துக் கப்பலில் சேதம் அதிகமாகவே இருந்தது. வாணக் குழாய்களின் நெருப்பும் ஏற்கெனவே பாய்களில் சாரியார் கும்பல் வைத்த தீயுமாகத் தொடர்ந்து பல இடங்களில் சீனத்துக் கப்பல் தீப்பிடித்துக் கொண்டது. சில வெடிகள் சீனத்துக் கப்பலைத் தங்கள் கப்பலென்று அதன் தளத்திலும் பக்கவாட்டிலும் தாக்கிப் பெரிதாக வெடித்ததால் கப்பல் பல இடங்களில் தீப்பிடித்துக் கொண்டது. அந்தத் தீச்சுடர்களுக்கு நடுவே முகத்தைக் கூடச் சுளிக்காமல் சூ-சின் நின்றுகொண்டு தனது மாலுமிகளைப் பலவிதப் பணிகளுக்கு ஏவிக் கொண்டிருந்தான். மாலுமிகள் கப்பலின் தீயை அணைப்பதில் முனைந்த சமயத்தில் சூ-சின் பெரிதாகக் கூச்சல் போட்டான். அந்த இருளில் கடலே நடுங்கும்படியாக, அடுத்த கணம் அவன் மாலுமிகள் பலர் அடித்தளத்திலிருந்து தளத்துக்கு ஓடி வந்தார்கள். அவர்களுக்குச் சூ-சின் சைகை ஏதோ காட்டிக் கொண்டிருந்ததையொட்டி, சீன மாலுமிகள் உருவிய வாட்களுடனும் கட்டாரிகளுடனும் கலிங்கக் கப்பலின் மீது தாவினார்கள். அந்தத் தாக்குதலுக்குச் சித்தமாயிருந்த விஜயனின் மாலுமிகளும் வாட்களை உருவிக்கொண்டும் வேல் களைத் தூக்கிப் பிடித்தும் சீனர்களை வரவேற்றார்கள்.

சீனர்கள் மிகுந்த திறமையுடன் போரிட்டார்கள். ஏற்கெனவே விஜயன் இட்ட உத்தரவுப்படி சீனத்துக் கப்பலில் தாவி இருந்த

zeevaa

கலிங்கக் கப்பல் மாலுமிகள் அங்கு போரிட்டதாலும் இரண்டு கப்பல்களும் இணைந்து நின்றதாலும் இரண்டு கப்பல் தளங்களும் ஒரே தளமாகத் தெரிந்ததால், கடற்போரும் நிலப்போரைப் போலவே காட்சியளித்தது. ஃமூர்சமத் தனக்குக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை முழுதும் பயன்படுத்திக் கொண்டான். முதலில் உதையினால் கடலுக்கு அனுப்பிய சீனர்களைத் தவிர மற்ற சீனர்களைத் தனது பெரிய வாளால் தாக்கினான். இரண்டொரு சீனத்தலைகள் உருண்டன. தளத்தில் இன்னும் சில சீனர் கழுத்திலும் மாரிலும் வாள் பாய்ந்ததால் அலறி விழுந்தார்கள். பிக்கு மற்றவர்களுக்கு உத்தரவிட்டதைத் தவிர தாமும் வாளேந்தி வெகு லாவகமாகப் போரிட்டார். அர்த்தர், காமர் இருவரும் கையிலேந்திய வேல்களால் நாசம் விளைவித்தார்கள். மோக்ஷர் மட்டும் ஆயுதமேதும் ஏந்தவில்லை. கடைசியாகத் தளத்தில் குதித்த சீன மாலுமியின் கழுத்தைப் பிடித்து நெரித்து அவனை வாணக் குழாய் வெடித்ததால் ஃமூளியாயிருந்த வழியின் ஃமூலம் கடல் நீரோட்டத்துக்கு அனுப்பி வைத்தார்.

இரண்டு கப்பல்களிலும் போர் வெறிக் கூச்சலும், காய மடைந்தவர் ஒலிகளும் அந்த இரவைப் பயங்கரமாக அடித்தன. கடலில் விழுந்தவர்களில் உயிரிழந்தவர்கள் முதலில் ஃமூழ்கினார்கள். பிறகு மிதந்தார்கள் மாளாதவர் பக்கவாட்டில் ஏறி மீண்டும் போருக்கு வந்தார்கள். இரண்டு கப்பல்களில் ஒன்று நாசமாக வேண்டும் என்ற ரீதியில் நடந்த போரில் சூ-சின் திடீரென ஏதோ ஒலி எழுப்பினான். அதே சமயத்தில் வேறொரு ஒலியும் எழுந்தது கரைப் பக்கத்தி லிருந்து.

மறுபடியும் கரையில் தோன்றிய சாரியார் கும்பல் "மாவியா தோமலா! மாவியா தோமலா!" என்று மீண்டும் மீண்டும் பெருத்த கூச்சலிட்டு, கைகளில் பந்தங்களுடன் படகுகளில் இரு கப்பல் களையும் நோக்கி வரத் தொடங்கியது. முதல் படகில் சாரியின்

zeevaa

சகோதரி பெரிய பந்தத்தை ஏந்தி, தலையை விரித்து நின்றிருந்தாள். இம்முறை அவளே சாரியார் கும்பலை ஏவினாள் சூ-சின்னை நோக்கி. சுமார் இருநூறு படகுகளுக்கு மேல் இரு கப்பல்களையும் நோக்கி வந்து கொண்டிருந்தன. அதைக் கண்டதும் சூ-சின் ஏதோ சைகை செய்ய போர் நின்றது. தனது கப்பலிலிருந்து கலிங்கக் கப்பலுக்கு வந்த சூ-சின் "விஜயபாகு! எனது கப்பல் உங்களிடம் சரணடைகிறது. எங்களை அந்தக் கும்பலிலிருந்து காப்பாற்ற வேண்டும்," என்று கூறி தலைவணங்கினான்.

தனக்கு முன்னால் தலைவணங்கி நின்ற சூ-சின்னைக் கவனித்த விஜயபாகு உள்ளூர் வியப்படைந்தான். சூ-சின்னின் உடல்மீது அம்பு தைத்த காயங்களும் இருந்தன. வாணக் குழாய் விளைவித்த தீப்புண்களும் இருந்தன. அவன் வலது கன்னத்தில் இருந்த பெரிய தீப்புண் சதையைப் பெரிதும் தின்றிருந்தது. இத்தனை காயங்களுடன் தனது முன்பு தலைவணங்கி நின்ற சூ-சின்னை நோக்கிய விஜயன் கேட்டான். "உன்னைப் போன்ற மகாவீரன் சரணடைவது சரியல்லவே", என்று.

"சாதாரண காரியங்களில், வீரத்தை மட்டும் பணயம் வைக்கும் போர்களில் சரியல்லதான். ஆனால் மனித பலத்துக்குச் சம்பந்தமில்லாத விபரீத நிலை ஏற்படும்போது சரணடைவது தவறல்ல," என்ற சூ-சின், "விஜயபாகு! அதோ பாருங்கள். அந்தச் சாரியார் கும்பல் எங்களைப் பயங்கரமான முறையில் சித்திரவதை செய்யும். அவர்களுக்குத் தலைமை தாங்கி வுலூகா வருகிறாள். என்னை மணக்க அல்ல. என் மீது பழி தீர்த்துக் கொள்ள வருகிறாள். அடுத்த படகில் சாரி வருகிறான். இம்முறை அவனுக்கு இணங்காத யாரும் தப்ப முடியாது. சீக்கிரம் இந்தக் கப்பலைத் தற்காப்புக்குச் சித்தம் செய்யுங்கள்," என்றான். அவன் சொல்வதற்கும் அந்தமான் கும்பல் "மாவியாதோமலா!" என்று கூச்சலிடுவதற்கும் நேரம் சரியாயிருந்தது.

zeevaa

விஜயன் சூ-சின்னைப் பார்த்துக் கேட்டான். "யாரது மாவியா தோமலா?" என்று*

"அந்தமானின் ஆதிதலைவன். அவனிடமிருந்து மற்ற அந்தமான் ஆதிவாசிகள் தோன்றினார்கள் . அந்தமானை இத்தனை பிரிவுகளாகப் பிரித்தவன் அவன்தான். முதல் ஆதிவாசிகளின் பாவச் செயல்களைச் சகிக்காமல் அவர்களில் பலரை கடலில் மூழ்கச் செய்து, அந்தமான் நிலப்பரப்பையும், இப்பொழுதிருப்பதுபோல் பல தீவுகளாகப் பிரித்தான். அவன் பெயரை அநீதியை அழிக்கும் போர்களில் உபயோகப்படுத்துகிறார்கள். அந்தக் கூச்சல் ஏற்பட்டு விட்டால் அவர்கள் வெறி உச்சத்துக்குப் போகும். அதிலிருந்து யாரும் தப்ப முடியாது," என்ற சூ-சின் உடல் லேசாக நடுங்கியது.

இந்த விசித்திரக் கதையைக் கேட்ட விஜயன் அந்தமான் வாசிகள் தனக்கு எந்தத் தீங்கையும் விளைவிக்க மாட்டார்கள் என்று எண்ணினாலும் எதற்கும் கப்பல்களின் தளங்களைச் சீர்செய்ய உத்தரவிட்டான். துறவிகளையே பாதுகாப்புக்கும் நியமித்தான். மாலுமிகள் சுத்திகரிப்பு வேலையில் மும்முரமாக ஈடுபட்டார்கள்.

தூரத்தில் பந்தங்களை ஏந்திய வீரர்களை தாங்கிய படகுகள் வந்த காட்சி அத்தனை பயங்கரத்திற்கும் ஓர் அழகைக் கொடுத்தது. இருளில் எரிந்த பந்தங்கள் மட்டுமே பெருவாரியாகத் தெரிந்ததால் ஏதோ அக்னி மாயை கடலில் விளைவதுபோல் தெரிந்தது. படகுகள் அணுகிக் கொண்டிருந்தன. சற்றுத் தூரத்தில் அவை வந்தபோது கலிங்கக் கப்பலின் தளத்தில் நின்ற சூ-சின்னைக் கண்டுவிட்ட

---

* The aborigines, especially those who live in the south belive that Mavla Tomala, their great chief, who lived long ago and from whom all of them sprang being disgusted with the sinful life of his people, drowned and dispersed most of the inhabitants together with all the wild animals, and divided the land into present divisions and sub - divisions.

—The Andaman Islands - by F.A.M Dass, B.A.-Page 1.

zeevaa

வுலூகா, "மாவியா தோமலா" என்று சூ-சின்னை நோக்கிப் பந்தத்தையும் நீட்டினாள். அடுத்து "மாவியா தோமலா" கூச்சல் பெரிதாக ஒலித்தது கடற்பகுதியில். சூ-சின் நடுங்கினான். தன்னை இனிமேல் காப்பாற்ற விஜயனால் கூட முடியாதென்ற எண்ணத்தால் இடிந்து நின்று விட்டான் தளத்தில். அவன் நிலையைக் கண்டு பரிதாபப்பட்டான் விஜயபாகு. ஆனால் பிக்கு பரிதாபப் படவில்லை. 'சூ-சின்! இந்தத் தீ நீயே உன் தலையில் வைத்துக் கொண்டது. தன் வினை தன்னைச் சுடும் என்ற மூதுரைப் படி இப்பொழுது மாவியா தோமலா மூலம் அந்த அக்னி உன்னை நோக்கி வருகிறது," என்றார் வெறுப்புடன்.

படகுகள் விரைந்து வந்து கொண்டிருந்தன. "சூ-சின்! நீங்கள் கீழே செல்லுங்கள்," என்றான் விஜயன். அந்தமான் கும்பலைச் சந்திக்கவும் சித்தமானான்.

zeevaa

# 40. கரையை நெருங்கிய கப்பல்

அந்தமான் தீவுகளில் ஆதி புருஷனான மாவியா தோமலாவின் பெயரை வெறிக் கூச்சலாகப் போட்டுக் கொண்டு பந்தங்களுடன் விரைந்து வந்த சாரியார் கும்பலையும், அவர்களுக்குத் தலைமை வகித்து வந்த சாரியின் சகோதரியையும், தனது கப்பலுக்குப் பக்கத்தில் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்த சீனத்துக் கப்பலையும் நோக்கிய விஜயன், சூ-சின்னுக்கு அபயமளித்துத் தனது கப்பலின் அடித்தளத்துக்குப் போகச் சொல்லிவிட்டு சீனக் கப்பல் தளத்திலிருந்த மாலுமிகளையெல்லாம் தனது கப்பலுக்கு வரும்படி சைகை செய்தான்.

அடுத்து இரண்டு கப்பல்களையும் இணைத்திருந்த கொக்கிகளை யும் நீக்கித் தனது கப்பலைச் சீனத்துக் கப்பலின் தீ பிடிக்காதபடி சற்று நகர்த்திப் பிரித்து விட்டான், பிறகு தனது வீரர்களைத் தளத்தைச் சுற்றிலும் வேல்களுடன் விற்களில் பூட்டிய அம்புகளுடனும் நிற்க வைத்துவிட்டுத் தனது கையில் ஊது தாரையை எடுத்துக் கொண்டு "வுலூகா! சாரி! என் கப்பலில் யாரும் ஏற முயல வேண்டாம். தொத்தி ஏற முயலுபவர் யாராயிருந்தாலும் உடனடியாக அழிக்கப்படு வீர்கள்," என்று தாரை மூலம் இரைந்து அறிவித்தான்.

அவன் இதை அறிவிப்பதற்கு முன்னாலேயே கால்வாசி எரிந்து கொண்டிருந்த சீனத்துக் கப்பலில் சாரியார் வீரர்கள் பலர் ஏறிவிட்டனர். மற்றும் சிலர் கலிங்கத்துக் கப்பலையும் சூழ்ந்து கொண்டனர். அந்தச் சமயத்தில் விஜயன் வெளியிட்ட அறிக்கையால் அவன் கப்பலில் தொத்தி ஏற முயலாத வீரர்கள் பலர் தங்கள்

# ராஜ முத்திரை

சாண்டில்யன்



## 40. கரையை நெருங்கிய கப்பல்

zeevaa

படகுகளிலேயே பந்தங்களுடன் நின்று சாரியையும் வுலூகாவையும் அடுத்துச் செய்வது பற்றிக் கலந்து கொண்டனர்.

சிறிது நேரம் கலந்து பேசிய பிறகு வுலூகா தனது படகை முன்னுக்குச் செலுத்தச் சொல்லிக் கையிலிருந்த பந்தத்தை உயர்த்திப் பிடித்து, "சிங்கள மன்னரே! நீர் பாதுகாக்கும் ஓர் அயோக்கியனை எங்களிடம் அனுப்பி விட்டால் நாங்கள் போய் விடுகிறோம்," என்றாள்.

கரகரத்த அவள் பயங்கரக் குரலிலிருந்து வெளியான அந்தச் சொற்களைக் கேட்ட விஜயன், "வுலூகா! சூ–சின் என்னிடம் சரணடைந்திருக்கிறான். அவனை நான் உன்னிடம் அனுப்ப முடியாது. வேறு எதையாவது கேள்", என்று கூறினான்.

"எனக்கு வேறு எதுவும் வேண்டாம். அவன் தான் வேண்டும். எங்கள் ஊரை முன்பு சூறையாடினான். அவன் மாலுமிகள் பலர் எங்கள் பெண்களின் கற்பைக் கெடுத்தார்கள். தவிர என்னை மணம் புரிய வந்து தப்பி ஓடிவிட்டான். இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் பழி வாங்க வேண்டும். அவனைக் கொடுத்து விடுங்கள்," என்று கூவிய வுலூகா, "சிங்கள மகாராஜா! அவன் ஒருவனுக்காக உங்களை நாசம் செய்து கொள்ளாதீர்கள்," என்றும் மிரட்டினாள்.

விஜயபாகு தளத்திலிருந்தபடியே சற்றுக் குனிந்து வுலூகாவை உற்று நோக்கினான். உருண்ட வெறி பிடித்த கண்களுடனும் காற்றில் கலைந்து பறந்த சுருட்டை மயிர்களுடனும் அவள் பிசாசு போலவே காணப்பட்டாள்.

அவளிடம் சூ–சின்னைக் கொடுத்தால் அவள் அவனைத் தாறுமாறாகக் கிழித்துத் தின்று விடுவாள் என்பதற்கு அவளது பெரிய கோரைப் பற்களும், தடித்த உதடுகளுமே சான்றாயிருந்தன. வெறிபிடித்து நின்ற அவளை இரண்டு விநாடிகளே நோக்கிய விஜயன், "வுலூகா! விஜயனை மிரட்டி இதுவரை காரியத்தைச்

zeevaa

சாதித்தவர்கள் கிடையாது. வேண்டுமானால் உன் சகோதரனைக் கேட்டுப் பார். இந்தக் கப்பலையோ என்னையோ அழிக்க முடியுமானால் முயன்று பார். இந்தத் தளத்து மரச்சுவரைச் சுற்றி ஆயுத பாணிகளான எனது மாலுமிகள் நிற்கிறார்கள். எனது பக்கத்திலிருக்கும் மூர்சமத் ஒருவனே உங்களில் பத்துப் பேரை அழிப்பான். தவிர இங்கிருக்கிற துறவிகளுக்கு யார் உயிரிடமும் பற்றுச் சிறிதும் கிடையாது. வீணாக உன்னையும் உன்னுடன் வந்திருக்கும் வீரர்களையும் அழித்துக் கொள்ளாதே," என்று கூறினான்.

அடுத்து அவன் பேசுவதற்குள் அவனைத் தள்ளிக் கொண்டு சாரி தோன்றினான். "சிங்கள மன்னரே! உமது கப்பலில் உமது விரோதிகளும், உங்களையும் என் சகோதரி சுந்தரியையும் அழிக்க முயன்றவர்களும் இருக்கிறார்கள். கீழே பந்தமேந்தி நிற்பவர்கள் உமது நண்பர்கள். நண்பர்களைக் கைவிட்டுச் சுந்தரியை மண்டையி லடித்தவனையும், சுந்தரியையும் உங்கள் குலதனத்தையும் கடத்திக் கொண்டு போக முயன்றவனையும் நீங்கள் ஏன் காப்பாற்ற வேண்டும்?" என்று கோபத்துடன் கேட்டான்.

விஜயபாகு சிறிது நிதானித்துவிட்டு பதில் சொன்னான். "சாரி! நான் காரணம் சொன்னால் உனக்குப் புரியாது. பௌத்தரான நாங்கள் வீண் உயிர் அழிவை விரும்புவதில்லை. சரணடைந்தவர்கள் விரோதிகளாயிருந்தாலும் அவர்களைக் காட்டிக் கொடுப்பதில்லை," என்று விளக்கினான்.

"அப்படியானானல் எந்த அக்கிரமக்காரனையும் மன்னிப்பீர் களா?" என்று சீற்றத்துடன் கேட்டான் சாரி.

"மன்னிப்பேன் சாரி" என்றான் விஜயன் திட்டமான குரலில்.

"அப்படியானால் பாம்பிடமிருந்து உன் மனைவியைக் காப் பாற்றிய எங்களை அழித்துவிடு மன்னனே. உன்னையும் அழித்து உன்

zeevaa

மனைவியைக் கெடுக்கவும் உன் குலதனத்தைப் பறிக்கவும் முயன்ற விஷப்பாம்புகளைக் காப்பாற்ற முயன்று பார். உன் வீரர்கள் ஏந்தியிருக்கும் வேல்களையும் விற்களில் பூட்டியிருக்கும் அம்புகளையும் பார்த்து நான் அஞ்சவில்லை. தவிர மன்னனா யிருக்கும் உனக்குக் கடமையொன்று இருக்கிறது. தீமை செய்தவர் களை விசாரித்துத் தண்டிப்பது உனது தர்மம். அதிலிருந்து நீ நழுவினால் மன்னனாகும் தகுதியற்றவன்" என்று பேசிய சாரி, "மன்னனே! சிந்தித்துப் பதில் சொல். நீதி வழங்க இஷ்டமா? அல்லது போர்தான் இஷ்டமா?" என்று வினவினான்.

விஜயன் முகத்தில் சிந்தனை படரலாயிற்று. சாரி சொல்வதில் அர்த்தமிருப்பதைப் புரிந்து கொண்டான். அந்தமானில் புகுந்து அட்டூழியம் செய்திருப்பவர்களைச் சாரி விட்டுவிடுவானென்று நம்பவில்லை அவன். சண்டையென்றாலும் எதிரிலிருக்கும் படகுகள் சற்று பின்னடைந்து பந்தங்களை நூற்றுக்கணக்கில் வீசி விட்டால் தனது கப்பலும் எரிந்து சாம்பலாகிவிடும் என்பதையும் உணர்ந்து கொண்டான்.

விஜயன் போருக்கு அஞ்சாவிட்டாலும் நியாயத்துக்கு அஞ்சியதால், "சாரி! நீயும் உன் சகோதரியும் மட்டும் மேலே ஏறி வாருங்கள். இதற்கு ஒரு முடிவு காண்போம்" என்று கூறி அவர்கள் ஏறிவர ஒரு நூலேணி ஒன்றையும் தொங்கவிட உத்தரவிட்டான்.

நூலேணியில் ஏறி வந்த சாரியும் வுலூகாவும் அந்தக் கப்பலில் ஏற்பட்டுள்ள சேதத்தைக் கவனிக்கவே செய்தார்கள். அந்தச் சேதம் ஏற்பட்டது யாரால் என்பதும் அவர்களுக்குப் புரிந்தது. ஆகவே சாரி கேட்டான்: "மன்னனே! இந்த நிலையில் இந்தக் கப்பலைப் பழுது பார்க்காமல் ஓட்டிச் செல்லப் போகிறீர்களா!" என்று.

"சொல்ல முடியாத அளவுக்குச் சேதமில்லை சாரி!" என்ற விஜயன், "இந்தக் கப்பலில் இருப்பவர்களை உனக்கு ஏற்கனவே தெரியுமல்லவா?" என்று கேட்டான்.

zeevaa

சாரி உடனடியாக பதில் சொல்லவில்லை. சற்று எட்டிக் கீழே செல்லும் வாயிற்படியில் நின்றிருந்த ஆதிமல்லனை உற்று நோக்கினான். பிறகு அவன் கால்களை உற்று நோக்கினான். அடுத்துப் பெரிதாக நகைத்தான்.

சாரியின் கண் சென்ற இடங்களையெல்லாம் கவனிக்கவே செய்த விஜயன் அவன் நகைப்புக்குக் காரணம் தெரிந்தாலும் தெரியாத வனைப் போலவே கேட்டான்: "ஏன் நகைக்கிறாய் சாரி?' என்று.

சாரி பதில் சொல்லவில்லை, "அதோ நிற்கிறானே அவன் பெயரென்ன?" என்று வினவினான்.

"ஆதிமல்லன் ஆதிமால்யன் என்றும் அழைப்பது உண்டு" என்று விஜயன் தனது உள்ளத்திலெழுந்த உணர்ச்சிகளைக் காட்டாமல் பதில் சொன்னான்.

"ஆதிமல்லனா! அவன் தான் சுந்தரியைத் தலையிலடித்துப் போட்டுவிட்டுப் போனவன். எத்தனை விஷப்பாம்புகளை வளர்க்கிறாய் சிங்கள மன்னனே. இத்தனையும் அருகில் வைத்துப் பிழைத்தும் இருக்கிறாயே" என்று கூறி மீண்டும் நகைத்தான்.

சாரியின் சொற்களைக் கேட்ட ஆதிமல்லன் முகத்தில் பெரும் பீதி கிளம்பியது. "நான் சுந்தரியை அடித்துக் காயப்படுத்தியதாக யார் சொன்னது உனக்கு?" என்று பீதியை மறைத்துப் போலித் துணிவைக் காட்டிக் கேட்டான் ஆதிமல்லன்.

"முதலில் உன் முகம் சொல்லிற்று. நான் உண்மையைச் சொன்னதும் பேயறைந்ததுபோல் ஆகிவிட்டாய். அடுத்து உன் கால்கள் சாட்சியம் சொல்லி என் எண்ணத்தை உறுதிப்படுத்தி விட்டன. எதிரியான சூ–சின்னை என்னால் புரிந்து கொள்ள முடியும். மன்னனிடம் பணி செய்து கழுத்தறுக்க முயல்பவனை என்னால் சகிக்க முடிவதில்லை. சிங்கள மன்னனுக்குப் பதில் நானாயிருந்தால்

zeevaa

உன் தோலை உரித்துத் தலைகீழாகத் தொங்கவிட்டு, கீழே நெருப்பு மூட்டி உன் உடலை வாட்டுவேன்" என்றான் சாரி.

சாரியின் சித்திரவதை அப்பொழுதே நடந்துவிட்டது போன்ற பிரமை ஏற்பட்டதால் சிறிது நடுங்கினான் ஆதிமல்லன். அவனுக்குப் பதில் விஜயனே பேசினான்: "சாரி! அவன் கிடக்கட்டும். இப்பொழுது நீ விரும்புவது என்ன? சூ-சின்னையோ வேறு யாரையோ உன்னிடம் ஒப்படைக்க முடியாது. வேறென்ன வேண்டும்?" என்று சற்றுக் கடுமையாகவே கேட்டான் விஜயன்.

"நியாயம் கேட்டேன். அதற்கு என்ன பதில்?" என்று வினவினான் சாரி.

"சூ-சின்னின் அக்கிரமங்களை எங்கள் நீதிபதிகள் விசாரிக்கட்டும். அவன்மீது பிழையிருந்தால் தண்டனையை உங்களிடம் விட்டுவிடுகிறோம்" என்றான் சாரி.

சாரி இப்படிப் பேசிக் கொண்டிருக்கையிலேயே கடற்கரை ஓரமாக ஏராளமான பந்தங்கள் தோன்றின. அவற்றைப் பிடித்திருந்தவர்கள், அவற்றால் ஏதோ சைகையும் செய்தார்கள். அவர்களைப் பார்த்த சாரி, "சிங்கள மன்னனே! அவர்கள் கரையோரம் வசிக்கும் கடலோடிகள்" என்றான் சாரி.

அவன் சொன்னதன் பொருளை உணர்ந்து கொண்டான் விஜயன். அந்தக் கும்பலைப் பற்றி அவன் ஏற்கெனவே கேட்டிருந்தான். அவர்கள் மிகத் திறமையான கடலோடிகளென்றும், நீரில் மூழ்கிப் பெரும் மரக்கலங்களின் அடிகளைப் பிளக்க வல்லவர்களென்றும் சிங்களத்திலேயே கேள்விப்பட்டிருந்ததால் அத்தனை பேரையும் எந்தப் படையினாலும் சமாளிக்க முடியாதென்பதைப் புரிந்து கொண்டான். தந்திரத்தாலன்றி வேறு வழியில் அங்கிருந்து தப்ப முடியாதென்பதை உணர்ந்ததால், "சாரி! நீ கேட்கும் நியாயத்திற்கு ஒப்புகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை" என்றான்.

zeevaa

"என்ன மன்னவா?" என்று சாரி கேட்டான்.

"இந்தக் கப்பல் துறைமுகத்துக்கு வரும். அங்கு மூன்று நாட்கள் இதைப் பழுது பார்ப்போம். அதற்குப் பின்பு உன் நீதிபதிகளைக் கொண்டு சூ-சின்னை விசாரணை செய். ஆனால் நீ கூறியபடி தண்டனையை நான் விதிப்பேன்" என்றான்.

சாரி அதற்கு ஒப்புக் கொண்டான். ஆனால் வுலூகா ஒப்பவில்லை "என் புருஷனை என்னுடன் அனுப்பு" என்று பிடிவாதம் பிடித்தாள்.

"அவன் இன்னும் உன் புருஷனல்ல. தரையில் இறங்கி அவனைப் பற்றிய விசாரணை முடிந்த பிறகு நீ அவனை மணக்கலாம். மணந்த பிறகு அவன் உன் புருஷன்" என்று விஜயன் கூறினான்.

பேச்சு வார்த்தை அத்துடன் முடியவே சாரியும் வுலூகாவும் தங்கள் படகுகளுக்குத் திரும்பினார்கள். அடுத்த சில நிமிடங்களில் சாரியார் கும்பலின் படகுகள் கரையை நோக்கி விரைந்தன. அவை விரைய முற்பட்டதுமே கரையில் தோன்றிய பந்தங்களும் மறைந்தன.

அந்த விந்தையைக் கப்பல் தளத்திலிருந்து கவனித்துக் கொண்டு நின்ற விஜயன், 'என்ன ஏற்பாடு! என்ன திட்டம்! நாகரீகமான படைகளைவிட என்ன நிர்ணயத்துடன் இந்தக் காட்டுவாசிகள் தங்கள் போர்களை நடத்துகிறார்கள்' என்று தனக்குள் கூறிக்கொண்டான்.

அவன் பக்கத்தில் நின்றிருந்த மூர்சமத், "எஜமான்! அவர்கள் மட்டும் இஷ்டப்பட்டிருந்தால் நமது கப்பல் இத்தனை நேரம் தீக்கு இரையாகியிருக்கும்" என்று குரலில் வியப்பு துலங்கப் பேசினான்.

தலையை அசைத்து அதை ஆமோதித்த விஜயன், "மூர்சமத்! சூ-சின்னைத் தளத்துக்கு அழைத்து வா" என்றான்.

சூ-சின் வந்ததும் நடந்ததை அவனுக்குக் கூறினான். சூ-சின் முகத்தில் சற்றே அச்சம் தெரிந்தது. "என்னை அவர்கள்

விசாரணைக்கு அனுப்புவதைவிட நீங்களே இங்கு வெட்டிப் போட்டிருக்கலாமே" என்றான் சூ–சின்.

"அபயம் கொடுத்துவிட்டு வெட்டும் பழக்கம் என்னிடம் கிடையாது" என்று உறுதியுடன் சொன்னான் விஜயன்.

"பிறரிடம் ஒப்படைத்து வெட்டச் சொல்லுவது உங்கள் வழக்கம் போலிருக்கிறது" என்றான் சூ–சின்.

"அதுவும் இல்லை. உன் உயிருக்கு நான் பொறுப்பாளி".

"எப்படி?"

"இப்பொழுது எதையும் கேட்காதே சூ–சின், உன்னைக் காப்பாற்றும் வழி எனக்குத் தெரியும்",

"உனக்குத் தீமை புரிந்திருக்கிற என்னை ஏன் நீ காப்பாற்ற வேண்டும்?"

"அவரவர் குணம் அவரவர்களுடையது. உன் குணம் தீமை செய்வது. என் குணம் காப்பாற்றுவது" என்ற விஜயன் சூ–சின்னைத் துறவிகளிடம் ஒப்படைத்துவிட்டுக் கப்பலைக் கரைக்குச் செலுத்தவும் உத்தரவிட்டு தளப்படிகளில் இறங்கிக் கீழே சென்று திரிலோகசுந்தரி இருந்த அறையை அடைந்தான். வெளியே பூட்டியிருந்த பூட்டைத் திறந்து உள்ளே சென்றான். கட்டிலில் உட்கார்ந்திருந்த திரிலோக சுந்தரி உக்கிரம் நிரம்பிய விழிகளை விஜயன் மீது செலுத்தினாள். "என்ன நடந்தது?" என்று கேள்வியொன்றையும் வீசினாள்.

"என்ன நடக்கப் போகிறது என்று கேள்" என்று கூறிக்கொண்டு கதவைத் தாளிட்டுக் கட்டிலை நோக்கி வந்தான் விஜயன்.

வந்த அவன் முகத்தில் காதலுமில்லை , காமமுமில்லை. சோர்வு அதிகமிருந்ததைக் கவனித்தாள். அவன் சோர்வைக் கண்டதால் அணைந்துவிட்ட சீற்றத்தால் அவன் கட்டிலை அடைந்ததும் அவன்

zeevaa

சோர்வை நீக்க அவன் தலையைத் தனது மார்புடன் சேர்த்து அணைத்துக் கொண்டாள். பல புயல்களில் சிக்கிக் கரையை அடைந்துவிட்ட கப்பலைப்போல் விஜயன் அவள் மார்பின் இரு கரைகளிலும் முகத்தை மோதி, சாந்தியைத் தேடினான்.

அவனைப் போலவே அமைதியைத் தேடிக் கலிங்கக் கப்பலும் கரையை நோக்கி விரைந்து கொண்டிருந்தது.

zeevaa

# 41. பொழுது விடியவில்லை

கதவைத் தாளிட்டுக் கட்டிலை நோக்கி வந்த அவன் கால்களில் சற்றே தளர்ச்சி காணப்பட்டதையும் சாதாரணமாக நிமிர்ந்து எழுந்திருக்கும் தோள்கள் சிறிது தணிந்து கீழே இறங்கி, கைகளும், அவன் இருபுறத் தொடைகளிலும் பதிந்து அசைந்ததையும், நேர் நோக்குத் தவிர வேறு நோக்கு இல்லாத கம்பீர முகமும் தொங்கி, முகவாய்க் கட்டை அவன் மார்பில் புதைந்து தரையை நோக்கியதை யும் கண்ட திரிலோகசுந்தரி, அவன் மிகவும் சோர்ந்திருக்கிறானென் பதைப் புரிந்து கொண்டதால், அவன் கட்டிலை நெருங்கியதும் அவன் சோர்வுக்குத் தீர்வுகாண அவன் தலையை இழுத்துத் தனது மார்புடன் அணைத்துக் கொண்டாள். அப்படி அவள் அணைத்துக் கொண்டது போதிய சாந்தியை அளிக்கவில்லையென்ற காரணத்தினாலோ என்னவோ, விஜயன் அவள் மார்பின் இடைவெளியில் முகத்தைப் புகுத்தி விளிம்புகளில் முகத்தை வைத்துப் புரட்ட முயன்றான். அந்தப் புரட்டலின் விளைவாக ஏற்கெனவே கடினமாயிருந்த எழுச்சி எழில்கள் இரண்டும் இன்னும் அதிகமாகச் கெட்டிப்பட்டு விம்மியதால் கிடைத்த சாந்தியின் காரணமாகப் பெருமூச்சு விட்டான் விஜயன். அப்படிப் பெருமூச்சுவிட்ட வண்ணம் தனது கைகளிரண்டையும் அவள் இடையைச் சுற்றி பஞ்சணையில் அவளைச் சாய்க்கவும் முற்பட்டான்.

தனது பூவுடல் அளித்த உபசாரங்களால், கொடுத்த ஒத்தடங் களால், அவன் சோர்வு மெல்ல மெல்ல விலகிவிட்டதையும் கைகள் பழைய இரும்புக் கைகளாகிவிட்டதையும் கால்களும் வலுவடைந்து தன் கால்களை அடக்கவும் ஆட்கொள்ளவும் முயன்றதையும்

zeevaa



zeevaa

உணர்ந்த கலிங்கத்துக் கட்டழகி, காமத்தின் சக்தி உலகத்தில் வேறெதற்கும் இல்லையென உள்ளூர எண்ணிக் கொண்டாள். அந்த எண்ணமே அவளுக்கொரு வேகத்தைக் கொடுத்ததாலும் பெண்ணாதலால் அவள் உணர்ச்சிகளை வெளிக் காட்டாமல் அடக்கியே கிடந்தாள் மரக்கட்டை போல அந்த மலரணையில்.

ஆனால் அந்த ஆண்மகன் முகமும் கைகளும் வாளாவிருக் காமல் அவள் உணர்ச்சிகளை அதிகமாக எழுப்பவே முற்பட்டன. மார்பில் புதைத்திருந்த முகத்தைச் சற்றே மறைத்து இடைஞ்சல் செய்த அவள் மேலாடையை அவன் கையொன்று எழுந்து அவள் தோளிலிருந்து கீழே இறக்கவே, அவள் அதை மீண்டும் இழுத்துத் தோளிலேற்றச் செய்த முயற்சி பயனற்றதாயிற்று. 'உம்' மென்ற அவன் முரட்டு முனகலொன்று அவள் முயற்சியை அகற்றியதன்றி, அதே கை சற்றுப் பின்புறம் சென்று கஞ்சுகத்தின் பிணைப்பிலும் விஷமம் செய்தது. பிறகு தேங்கவும் அலையவும் தொடங்கியதால் சுந்தரி உணர்ச்சி வெள்ளத்தில் மிதந்தாள். அதுவரை அவளது பூவுடலுக்குக் கீழே அகப்பட்டிருந்த இடது கை தன்னை விடுவித்துக் கொண்டு மேலே சென்று அவள் அழகிய கழுத்தையும் வழவழத்த கன்னத்தையும் வருடலாயிற்று.

உணர்ச்சிகளால் பெரிதும் உந்தப்பட்ட சுந்தரி சிறிது புரண்டாள். 'உம்' என்ற ஒலியையும் எழுப்பினாள். அந்தச் சமயத்தில் அவன் உடலும் சற்றே எழுந்து முகம் கழுத்திலும் கன்னங்களிலும் மாறிமாறிப் புதைந்ததையும் உணர்ந்த சுந்தரி செயலற்றுக் கிடந்தாள் மஞ்சத்தில். செயலற்ற அவள் நிலை அவனைச் செயலுக்குத் தூண்டவே அவன் இதழ்கள் அவள் இதழ்களில் புதைந்தன வேகமாக. அதே நிலையில் அவன் கண்களைச் சிறிது உயர்த்திப் பார்த்தான். அவள் கண்கள் அவன் கண்களுடன் கலந்து நின்றன சில வினாடிகள். விழிகளுடன் விழிகள் பேசிய, பேச்சில் இருந்த மர்மங்கள் எண்ண முடியாதவை.

zeevaa

'விழிகள் பார்க்கும், பேசவும் பேசுமா?' என்று விஜயன் நினைத்தான். அந்தச் சில வினாடிகளில் 'பூவுடல் இணையும், இழையும், ஆனால் பார்க்குமா? அதற்கும் கண்களுண்டா?" என்றும் கேட்டுக்கொண்டான். அவனுடைய இணைப்பால் அவள் உடலின் பகுதிகள் எல்லாமே அவனைப் பார்ப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது அவனுக்கு, 'உடலெங்கும் ஆயிரம் கண்கள் இந்திரனுக்குத்தான் உண்டு என்று புராணம் சொல்கிறது. இவளுக்கும் அத்தனை கண்கள் உண்டா?" என்று கேட்டுக் கொண்ட அவன், 'இருக்காது, இருக்காது. அவன் பாவச்செயலால் அடைந்தான் அந்தக் கண்களை புனிதமான இவள் பூவுடலில் அத்தனை கண்கள் எப்படி ஏற்படும்? இருக்காது, இருக்காது. என் பிரமை இது,' என்று பலவிதமாகப் பேசிக் கொண்டான். தனது நினைப்பெல்லாம் பைத்தியக்காரத்தனம் என்பதை அவன் உணர்ந்தே இருந்தான். 'ஆனால் காமத்தையே காமப்பித்து என்று தானே சொல்லுகிறார்கள்! அப்படியானால் நான் பைத்தியமில்லாமல் வேறு எப்படி இருக்க முடியும்?" என்று தன்னைக் கேட்டுக் கொண்டவன், தனது கை விரல்களால் மெதுவாக அவள் இடைக் கச்சையைத் தளர்த்த விரல்களின் கஷ்ட நிவர்த்திக்கு அவள் விரல்கள் உதவின. அடுத்து அவன் கை அவள் வயிற்றில் பதிந்தது. அசைந்தது, அலைந்தது பலபடி.

அந்தக் கைவிரல்கள் விளைவித்த உன்மத்தம் சுந்தரியை அடியோடு நிலை குலையச் செய்ததால் மலரணையில் அவன் உடலைத் திருப்பிக் குப்புறப்படுத்தாள். அதனால் அவன் கைகள் ஆராய்ச்சியிலிருந்து விலகி விடலாமென்றுதான் நினைத்தாள். ஆனால் பலன் நேர்மாறாயிருந்தது. அவள் வயிற்றுக்குக் கீழே அகப்பட்டுக் கொண்ட வலது கை தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றதால் அது பட்ட இடங்கள் அவள் பூடலில் காமாக்னிப் பிழம்பை வாரித் தெளிக்கவே, எந்த நிலையில் படுத்தாலும் தன் நிலை ஒன்றுதான் என்பதைச் சுந்தரி புரிந்து கொண்டாள். அடுத்து விஜயன் படுத்த நிலையிலிருந்து எழுந்து உட்கார்ந்தான். அந்த வாலிபனின்

zeevaa

அலைந்த தலைக்குழல்களைக் கோதிவிட்டாள். "அப்பா! எத்தனை முரட்டுக் குழல்கள்! என்ன இரும்புத் தலை?" என்று குழல்களைக் கோதி அவன் தலையையும் சிறித ஆட்டினாள் தனது கையொன்றால்.

அந்தச் சமயத்தில் அவன் அனாதரவாய்த் தன்னிடம் சரணடைவது போன்ற பிரமை ஏற்பட்டதால் அவள் இதயத்தின் வேட்கையுடன் அனுதாபமும் எழுந்தது. அப்படியே குனிந்து அவன் தலையுடன் தனது தலையையும் இணைத்தாள். தனது கையொன்றால் அவன் தலையைத் தூக்கவும் முயன்றான்.

ஆனால் அது பலிக்கவில்லை. வழவழப்பும் கெட்டியும், மிருதுத் தன்மையும் கடினமும் இணைந்த அவள் பக்குவமலர்த் தொடைகளி லிருந்து அவன் முகம் மீள மறுத்தது. பத்தினி ஜாதிப் பெண்களுக்கு இயற்கையாகவுள்ள தாமரை மலர் வாசனையை வெளியிட்ட அந்தத் தொடைகளை முகர்ந்து கொண்டே இருந்த அவன் முகம் அவள் கைகளின் பிடிப்புக்குள் அடங்க மறுத்தது.

மண் வாசனை வீசிய முகத்தை முகர்வதிலிருந்து ராஜா திலீபன் எப்படி மீள மறுத்தானோ, எப்படி காளிதாச மகாகவி சொன்னது போல் *சிறுதூறலில் கிளம்பும் காட்டுக் குட்டை மண்வாசனையை முகர்வதிலிருந்து யானைகள் எப்படி மீள்வதில்லையோ, திருப்தியடைவதில்லையோ, அப்படி விஜயனும் அவள் அழகிய மடியின் வாசனையிலிருந்து மீள விரும்பினானில்லை. அப்படித் தனது அழகில் சிறைப்பட்டுக் கிடந்த அந்த ஆடவனைப் பார்த்துப் பார்த்துப் பெருமிதமடைந்தாள் சுந்தரி, அப்பேர்ப்பட்ட ஒரு மகாவீரன் தன்னிடம் அடிமைப்பட்டுக் கிடக்கிறானென்ற ஆணவத்தால்.

கையாலாகாததை வாயால் சாதிக்கப் பார்த்த சுந்தரி மெல்லப் பேச்சுக் கொடுத்தாள். "இதென்ன அநியாயம், எழுந்திருங்கள்," என்று அவன் காதுக்கருகில் சொன்னாள்.

---

* கரீவஸிக்தம் பிருஷதை : பயோமுசசம் கசிவ்ய பாயே வனராஜி பல்வளம்- ரகுவம்சம்-3வது சர்க்கம்.

zeevaa

அவன் அவள் முகத்தை அகற்றாமலே பேசினான். "இதில் அநியாயமென்ன இருக்கிறது?" என்று?

அவள் தனது இதழ்களை அவனது கன்னத்தில் புதைத்தாள். அவன் தலையை லேசாகத் திருப்பி, "அநியாயம் மாத்திரமில்லை. பாசாங்கு கலந்திருக்கிறது," என்றும் சொன்னாள்.

"பாசாங்கா!" அவன் முகத்தை எடுக்காமலேயே பேசியபடியால் அவன் இதழ்கள் விரிந்து குவிந்தன.

"ஆம் பாசாங்குதான், ஏதோ சோர்ந்து வந்தீர்களே என்று நினைத்தேன்," என்றாள் அவள்.

"அது உண்மைதான்," என்றான் விஜயன்.

"சோர்விருந்தால் தூங்க வேண்டியதுதானே?" என்ற அவள் குரல் குழைந்திருந்தது.

அவன் லேசாகப் புரண்டு அவள் மடியில் மல்லாந்து படுத்தான். "தூங்கத்தான் முயன்றேன். நீ தான் விடவில்லை....." என்ற விஜயன் முறுவல் கொண்டான்.

அவள் அவனை நோக்கிய விழிகளில் சிறிது சினம் இருந்தது. "நானா! நல்ல அழகு!" என்று சொற்களில் சினத்தைக் காட்டினாள்.

"அழகினால் வந்த சங்கடந்தான்," விஜயன் தனது கண்களை அவள் இரட்டைக் கவர்ச்சிகளை நோக்கி ஓட்டினான். "சுந்தரி! புராணங்கள் புரிந்து கொள்வில்லை உன்னை," என்று மெதுவாகச் சொன்னான்.

"என்ன புரிந்து கொள்ளவில்லை?"

"பஞ்ச பாணங்கள் தான் உண்டு மனிதன் மனத்தை அலைக்கழிக்க என்று புராணம் கூறுகிறது".

"அதனால்?"

zeevaa

"அது தவறு சுந்தரி, மாரனிடம் ஐங்கணைகள் இருக்கலாம். ஆனால் உன்னிடம் ஆயிரம் கணைகள் இருக்கின்றன. உன் எழில்கள் வீசிய கணைகள் என் உடலை எவ்வளவு வாட்டியிருக்கின்றன தெரியுமா?" என்று கேட்டான் விஜயன். அத்துடன் சொன்னான். "ஏன் உட்கார்ந்திருக்கிறாய் சுந்தரி!" என்று.

"வேறு என்ன செய்யவேண்டும்?" என்று அவள் கேட்டாள்.

"படுத்துக்கொள்", என்றான் அவன்.

அவள் நகைத்தாள். அவன் எண்ணத்தைப் புரிந்து கொண்டு, அவனும் நகைத்தான். இருவர் நகைப்பொலிகளையும் புரிந்து கொண்ட கடலலைகளும் வெளியே நகைத்தன. கடலலைகளுடன் உணர்ச்சி அலைகள் உருண்டன. ஓய்ந்தன. பிறகு அரவம் நின்று அமைதி நிலவியது. ஜாமம் ஏறிக் கொண்டிருந்தது. மெள்ள ஆதவன் எழுந்தான் குணக்கடலில் கப்பல் அறையிலிருந்த ஆடவன் எழுந்திருக்கவில்லை. கலிங்கத்துக் கட்டழகியின் கனத்த மலைகளின் தாழ்வரையில் படுத்துக் கிடந்தான்.

"பொழுது விடிந்து விட்டது," என்றாள் சுந்தரி.

"எனக்கு விடியவில்லை," என்றான் விஜயன்.

zeevaa

# 42. மரண தண்டனை

அந்தமான் கீழ்க்கடலில் ஆதவன் உதயமாகி, தனது கிரணங்களால் அந்த மரகதத் தீவின் மரங்களுக்கும் செடிகளுக்கும் மெருகைப் பூசிவிட்டதால், அழகால் அனைவர் மனத்தையும் கவரும் எழிலைப் பெற்றுவிட்ட அந்தப் பழைய துறைமுகத்தில் புகுந்துவிட்ட கலிங்கத்துக் கப்பல், வேகமாக நங்கூரம் பாய்ச்சப்பட்டதன் விளைவாக ஒருமுறை ஆடி நின்றது. அப்படி ஆடியதால் உலுக்கப் பட்ட கப்பலின் அறையில் கலிங்க மகளின் எழிலுடல் மேல் அரை குறையாகப் படுத்து உறக்கம் கொண்டிருந்த சிங்களத்துச் செல்வனும் கண்விழித்து எழுந்து சுற்றும் முற்றும் நோக்கினான். பஞ்சணை நெகிழ்ந்து கிடந்ததால் அதில் ஓர் ஓரமாகப் போய்விட்ட சுந்தரியின் அலங்கோல நிலையைக் கண்டு இன்பத்துடன் கலந்த அனுதாபத்தை யும் கொண்டு அவள் சிங்காரச் சிற்றிடையைச் சிறிது தடவிக் கொடுத்தான். கால்களையும் பிடித்துவிட்டான். "பாவம்! அலுத்திருக் கிறாள்" என்று நினைத்த வண்ணம் கட்டிலைவிட்டு இறங்கித் தரைப் பலகையில் காலூன்றி இரண்டு வினாடிகள் நின்றுவிட்டு, சாளரத்தின் மூலம் வெளியே நோக்கிய பொழுது நன்றாகப் புலர்ந்து விட்டதையும், சேணமலை உச்சி மிகக் கம்பீரமாக எழுந்து நிற்பதை யும் கண்டு, "சுந்தரி!" என்று குரல் கொடுத்தான்.

அவனுக்கு முன்பாகவே எழுந்து பொய்த் துயில் கொண்டிருந்த கலிங்க மகள் ஒரு முறை கட்டிலில் புரண்டு திரும்பி "ஏன்?" என்று வினவினாள்.

அப்படி அவள் புரண்டபோது நெளிந்த அவள் கவர்ச்சி இடங்களைக் கண்ட விஜயன் மனம் மீண்டும் இன்பப் பாதையில்

zeevaa



zeevaa

இறங்க முற்பட்டாலும் அதற்கு இடம் கொடுக்கவில்லை அவன், "சே! மனித மனத்தின் சபலத்துக்கு எல்லையில்லை, காலமுமில்லை, நேரமுமில்லை," என்று தன்னைத்தானே கடிந்து கொண்டதன்றி, தன்னைக் கட்டுப்படுத்தியும் கொண்டு "சுந்தரி! நான் நீராடிக் காலைக் கடன்களை முடிக்கப் போகிறேன். பிறகு சாரியையும் அவன் கும்பலையும் சந்திக்கப் போகிறேன். நீயும் எழுந்து நீராட்டத்தை முடித்துக் கொள்," என்று கூறினான்.

"சாரியையும் அவன் கும்பலையும் சந்திப்பதில் ஆபத்தில்லையா?' என்று அவள் கேட்டாள் கட்டிலில் குப்புறப்படுத்து, தலையை மட்டும் அவனை நோக்கித் திருப்பி.

விஜயன் இதழ்களில் புன்முறுவல் அரும்பியது, "சுந்தரி ஆபத்து எதில் இல்லை! யாரிடமில்லை! சூ–சின்னிடமில்லையா? கலிங்கத் தில் ஆதிமல்லனிடமில்லையா? சிங்களத்தில் இல்லையா ஆபத்து? எங்கில்லை சுந்தரி? நான் ஆபத்துடன் பிறந்தேன். ஆபத்திலேயே வளர்ந்திருக்கிறேன். ஆகவே ஆபத்தைப் பற்றி நான் கவலைப் படுவதே இல்லை" என்றான்.

அவன் இப்படிப் பேசிக் கொண்டிருந்தபோதே பக்கத்து அறையில் பெரிதாக முனகல் கேட்டது. "யாரது பக்கத்து அறையில்?" என்று சுந்தரி கேட்டாள்.

"சூ–சின் பலத்த நெருப்புக் காயங்களை அடைந்திருக்கிறான்," என்ற விஜயனை வியப்புத் ததும்பும் கண்களால் நோக்கினாள் சுந்தரி. "அவன் இங்கு என்ன செய்கிறான்" என்று வினவினாள்.

"என் அறையில் இருக்கிறான்," சிங்கள மன்னன் அது சர்வ சாதாரண விஷயம் போல் பேசினான்.

"உங்கள் ஆதரவிலா? சூ–சின்னா?" வியப்பு எல்லை மீறிய குரலில் கேட்டாள் சுந்தரி.

zeevaa

முதல் நாள் அவளை அறையில் தள்ளிப்பூட்டிச் சென்ற பிறகு நடந்த விவரங்களைச் சொன்னான் விஜயன். அறையில் தள்ளப்பட்ட பிறகு நடந்த போரின் மும்முரங்களை ஓரளவு சாளரத்தின் மூலம் சுந்தரி பார்த்திருந்தாலும், விவரங்கள் பூராவும் தெரியாததால், "இப்படியும் ஒரு மனிதரா!" என்று தன்னுள் கேட்டுக் கொண்டாள்.

அவள் உள்ளத்தில் ஓடிய உணர்ச்சிகளை உணர்ந்த விஜயன், "வேறு வழியில்லை சுந்தரி. தர்மத்தின் வழி அது ஒன்றுதான். இதனால் ஆபத்து இரட்டிக்கும், நாம் இருப்பது அந்தமான். ஆதிவாசிகளான சாரியின் கும்பலின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டிருக் கிறோம். தவிர நமது விரோதிகளான சூ–சின், ஆதிமல்லன் போன்ற நச்சுப் பாம்புகளை மடியில் கட்டிக்கொண்டிருக்கிறோம்......" என்ற விஜயன் சொற்களை முடிக்கவில்லை.

இடைமறித்துக் கேட்டாள் சுந்தரி, "ஆதிமல்லனா! கலிங்கத்தி லிருந்து கிளம்பிய பிறகு அவனால் ஏதும் ஆபத்தில்லையே" என்று.

"காட்டில் உன்னைத் தலையில் அடித்துவிட்டுப் போனவனே அவன்தான்" என்ற விஜயன், "சந்தர்ப்பத்தால் பாம்பு அடங்கிக் கிடந்தாலும் அதன் விஷம் போகாது. ஆதிமல்லனாகட்டும். சூ–சின்னா கட்டும் வாய்ப்புக் கிடைத்தால் நம்மைக் கொன்று போட்டு இந்தக் கப்பலில் ஓடிவிடத் தயங்க மாட்டார்கள். ஆனால் இப்பொழுது அவர்கள் என் பிடியில் இருக்கிறார்கள். எந்தச் சமயத்திலும் நான் அவர்களை அழித்துவிட முடியும்" என்ற விஜயன், "நமது வழி அழிவின் வழியல்ல. புத்தர் பிரான் அதை போதிக்கவில்லை" என்று கூறிவிட்டு, "நீ நீராடி சித்தமாயிரு, முடிந்தால் உன்னைக் கரைக்கு அழைத்துப் போகிறேன்" என்று சொல்லி வெளியே சென்றான்.

அவன் தளத்துக்கு வந்தபோது கப்பல் சிற்பியான நாகா நந்தனும் துறவிகளும் கலந்து பேசிக்கொண்டிருந்தார்கள். ஆதிமல்லனும் மற்றும் பல மாலுமிகளும் ஒரு புறத்தில் நின்று, சற்று எட்ட முக்கால்வாசி தீப்பிடித்து மொட்டையாக நின்ற சீனத்துக்கப்பலைப்

zeevaa

பார்த்துக் கொண்டிருந்தார்கள். விஜயன் வந்ததும் மற்றவர்கள் பேச்சு நின்றாலும் பிக்கு மட்டும் சொன்னார்: "சிங்கள மன்னவா! இந்த மரக்கலம் நங்கூரம் பாய்ச்சி அரை ஜாமத்திற்குமேல் ஆகிவிட்டது" என்று.

"ஆம், அதிக நேரம் தூங்கிவிட்டேன்" என்று மன்னிப்புக் கேட்கும் பாவனையில் பேசிய விஜயன், "மூர்சமத் எங்கே?" என்று வினவினான்.

"தாங்கள் கரைக்குச் செல்வீர்களென்று சொல்லி புரவிகளை சித்தம் செய்ய நடுத்தளம் சென்றான்" என்று தர்மர் அறிவித்தார்.

தனது மனத்தை மூர்சமத் நன்றாக அறிந்திருப்பதை உணர்ந்த விஜயன் எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தான். "மூர்சமதைப்போல ஒரு நண்பன் கிடைப்பது அபூர்வம்" என்றும் சொன்னான்.

"மூர்சமத் உங்கள் மெய்க்காவலனில்லை? பணியாளர்தானே" என்று கேட்டார் பிக்கு.

"அவனைக் கேட்டால் அப்படித்தான் சொல்லுவான். நான் சம்பந்தப்பட்டவரை அவன் எனது நண்பன்" என்ற விஜயன் "நான் கரைக்குச் செல்கிறேன். சமதும் புரவிகளும் படகில் வரட்டும். எனக்குப் புது ஆடைகளையும் எனது வாளையும் எடுத்து வரச் சொல்லுங்கள்" என்று கூறிவிட்டு நூலேணியில் இறங்கிப் படகொன்றை அவிழ்த்துக் கொண்டு கரையை நோக்கிச் சென்றான்.

அங்கு சென்றதும் படகை மரமொன்றில் பிணைத்து விட்டுக் கடலலைகளில் தாவி மூழ்கி நீந்தினான் முதல்நாள் அலுப்புத் தீர, அதற்குள் புரவிகளுடனும் புத்தாடைகளுடனும் வந்த மூர்சமதி டமிருந்து ஆடைகளை வாங்கி அணிந்துகொண்டு வாளையும் இடையில் கட்டிக்கொண்டான்.

"மூர்சமத்! நீயும் முழுகுவதுதானே?" என்றான்.

zeevaa

"இப்பொழுது வேண்டாம்".

"எப்பொழுது நீராடுவாய்? நாம் சாரியைப் பார்த்த பிறகு அவகாசமிருக்காது", என்று போகுமிடத்தையும் சுட்டிக் காட்டினான்.

"பாதகமில்லை கடைசியாக சூ–சின்னுக்குமாகச் சேர்த்து ஒரு வழியாக முழுக்குப் போட்டு விடுகிறேன்" என்று ஆத்திரத்துடன் பேசிய மூர்சமதின் மீனத்திலிருந்த சீற்றத்தைப் புரிந்துகொண்ட விஜயன் மேற்கொண்டு ஏதும் பேசாமல் புரவிமீது ஏறி அதைச் செலுத்தினான். மூர்சமத் தனது புரவியில் பெரிய ராட்சதனைப்போல் அவனைப் பின்தொடர்ந்தான்.

ஏற்கெனவே ஒருமுறை அந்த மலைக்காட்டுப் பகுதிக்குள் சென்று வந்திருந்த விஜயன் சுமாராக வழியை ஊகித்துக் கொண்டு புரவியில் பயணம் செய்தான். இப்படிப் பயணம் செய்து கிட்டத்தட்ட உச்சி வேளைக்கு மலையின் ஒரு பகுதியில் நின்று எதிரே தெரிந்த சாரியின் குடியிருப்பைக் கவனித்தான்.

முதல் நாள் இரவு வரை எத்தனையோ பதட்டமும் கெடுபிடியும் இருந்தும் அன்று அந்தச் சிற்றூர் குடிசைகளில் வாழ்க்கை சாதாரணமாகவே நடந்து கொண்டிருந்தது. சாரியின் இன மாதர்கள் அருகிலிருந்த ஓர் ஊற்றிலிருந்து நீரை மொண்டு தலையில் குடங்களை ஏந்திச் சென்று கொண்டிருந்தார்கள். குடிசைகள் பலவற்றில் மேலே புகை கிளம்பி அவற்றுடன் புலால் நாற்றமும் கலந்து வந்து கொண்டிருந்தது. ஒரு மரத்தடியில் விற்களைத் தரித்த நான்கு வீரர்கள் உட்கார்ந்த வண்ணம் ஏதோ இறைச்சியைக் கடித்துக் கொண்டிருந்தார்கள்.

காட்டுமிராண்டிகளான அவர்களின் வாழ்க்கையிலும் ஏதோ ஒரு கட்டுப்பாடு இருப்பதை விஜயன், சமத் இருவருமே புரிந்து கொண்டிருந்தார்கள். எங்கும் சுறுசுறுப்பாக ஏதோ வேலை நடந்து கொண்டிருந்தது. சூரியன் சரியாக உச்சியைத் தொட்டதும் அந்தச்

zeevaa

குடிசைகளின் மத்தியில் வுலூகா தோன்றினான் தலைவிரி கோலமாக, குடிசைகளின் நடுமத்தியில் நின்றவண்ணம் தனது பருத்த மார்புகளில் அடித்துக்கொண்டு பெரிதாக ஓலமிட்டாள். அதைக் கேட்டும் அதைப்பற்றிக் குடிசை மக்கள் யாரும் வெளியில் வரவில்லை. ஆனால் கோடியிலிருந்த ஐந்து குடிசைகளிலிருந்து ஐந்து முதியவர்கள் வெளியே வந்து ஒன்றுகூடி நின்று வுலூகாவைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பிறகு அவர்கள் ஒன்றுகூடிக் கைகளைக் கோர்த்த வண்ணம் வுலூகாவிருந்த இடத்துக்கு வந்து நின்றார்கள். வுலூகா அவர்கள் கால்களில் விழுந்து தலையை அவர்கள் கால்களில் மோதிக் கொண்டாள்.

அதே சமயத்தில் சாரியும் அவன் வீரர்கள் இருவரும் அந்த இடத்துக்கு வந்து நிற்கவே அந்த ஐவரும் சாரியை ஏதோ கேட்க, அவன் வேகமாக ஏதோ சொன்னான். அது சாரியார் இனமொழியில் இல்லாததால் விஜயனுக்கோ மூர்சமதுக்கோ அவர்கள் பேசுவது என்னவென்று சரியாகப் புரியவில்லை. சாரி சொன்னதைக் கேட்டதும் அவர்கள் ஆமோதித்ததற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார்கள். அதுவரை அவர்கள் காலில் விழுந்து கிடந்த வுலூகா எழுந்து தனது விடுதியை நோக்கிச் சென்றாள். அவள் சென்றதும் திரும்ப இருந்த சாரியையும் அந்த ஐவரையும் நோக்கி விஜயன் தனது புரவியில் விரைந்தான் சமத் தொடர.

விஜயனை அங்கு சற்றும் எதிர்பாராத சாரி முதலில் கண்களில் வியப்பைக் காட்டினான். பிறகு சினம் விரிந்தது அவன் கண்களில், "சிங்கள மன்னா! இங்கு எந்தத் துணிவில் வந்தீர்கள்? எதற்காக வந்தீர்கள்?" என்று வினவினான்.

புரவியில் அமர்ந்த வண்ணமே பேசிய விஜயன், "சாரி, சூ-சின்னைப் பற்றிய நீதி விசாரணைக்கு நான் ஒப்புக் கொண்டேன். அதைப்பற்றிப் பேச வந்தேன்" என்றான்.

zeevaa

விஜயனையும் மூர்சமதையும் ஏதோ விலங்குகளைப் பார்ப்பது போல் பார்த்துக் கொண்டு நின்ற ஐவரையும் சுட்டிக் காட்டிய சாரி, "இவர்கள் தான் நீதிபதிகள். பேச வேண்டியதை அவர்களுடன் பேசலாம்," என்று கூறினான்.

விஜயன் அவர்களை நோக்கித் தலைவணங்கிச் சொன்னான். "உங்கள் தீர்ப்பு எதுவாயிருந்தாலும் நான் கட்டுப்படுகிறேன்," என்று.

சாரி அதை மொழிபெயர்த்துக் சொன்னான். அந்த ஐவரும் தலையசைத்தார்கள் ஒப்புக் கொண்டதற்கு அடையாளமாக.

"இன்னும் மூன்று நாட்கள் கழித்து விசாரணையை வைத்துக் கொள்ளுங்கள்," என்றான் விஜயன்.

அந்த ஐவரும் சற்று வெறுப்புடன் நோக்கினார்கள் விஜயனை. அவர்கள் மனத்திலோடிய எண்ணங்களைப் புரிந்துகொண்ட விஜயன், "எங்கள் கப்பலைப் பழுது பார்க்க வேண்டும். அதற்குப் பிறகு விசாரணை நடக்கட்டும். சூ-சின்னை விசாரணையில் நிறுத்த நான் பொறுப்பாளி," என்று விளக்கினான்.

அதை மொழிபெயர்த்துச் சொல்லிய சாரியைக் கேள்வி கேட்கும் பாவனையில் பார்த்தார்கள் நீதிபதிகள். சாரி ஏதோ சொல்லத் திருப்தியடைந்த அந்த ஐவரும் சரேலென்று திரும்பி வந்தது போலவே குடிசைகளை நோக்கிச் சென்றார்கள்.

அவர்கள் சென்றதும் சாரியை நோக்கிய விஜயன், "சாரி! கப்பலைப் பழுது பார்க்க உன் ஆட்களில் நூறு பேர் வேண்டும், பழுது பார்த்ததும் சூ-சின் விசாரணை," என்று கூறிவிட்டுத் திரும்பினான்.

அவன் திரும்பிக் கப்பலுக்கு வந்தபோது பிற்பகல் சற்று முற்றிவிட்டது. உணவுக்கு நேரமாகிவிட்டதால் சிறிதளவே உண்ட விஜயன் பிக்குவை நோக்கி, "பிக்கு! சாரியின் ஆட்கள் வந்ததும் கப்பலைத் தரையில் இழுத்து விட்டுப் பழுது பார்க்கும் வேலை

துவங்கட்டும். கப்பல் செல்லச் சித்தமாகும் வரை நாம் கரையில் தங்குவோம்," என்று உத்தரவிட்டான். இது யாருக்கும் சம்மதமில்லாவிட்டாலும் விஜயன் தனது இஷ்டப்படியே சகலத்தையும் செய்தான். அன்று பொழுதுபோகுமுன்பே வந்துவிட்ட சாரியின் ஆட்கள் பெரும் கயிறுகளைக் கட்டிக் கலிங்கக் கப்பலைக் கரையில் இழுத்து விட்டார்கள். கரையிலிருந்த மரத்தின் அடியில் சுந்தரிக்கு மட்டும் மரக்கிளைகளை உடைத்து ஒரு சிறு பர்ணசாலையை அமைத்துக் கொடுத்தார் பிக்கு.

அன்று முதல் பழுது பார்க்கும் வேலை மும்முரமாக நடந்தது. கப்பலின் அடிப்பலகைகளில் நீண்ட காலக் கடல் பயணத்தின் விளைவாகப் பாசியும் கிளிஞ்சல்களும் பிடித்திருந்ததால் கப்பலின் அடிப்பாகம் தடித்திருந்தது. அவற்றையெல்லாம் சீன மாலுமிகளும் சாரியின் ஆட்களும் வேகமாகச் சுத்தம் செய்தார்கள். இதற்கிடையே சிற்பி கரையில் ஒரு பட்டறை அமைத்து, கப்பலின் தளத்தில் ஊளியாயிருந்த இடங்களைச் சரிசெய்ய சீனத்துக் கப்பலின் தளத்திலிருந்த சில பலகைகளை உடைத்துப் பொருத்த முற்பட்டான்.

விஜயன் நினைத்தபடி மூன்று நாட்களில் பழுது பார்க்கும் வேலை முடிந்தது. கப்பல் திரும்பவும் நீரில் தள்ளப்பட்டு மிதந்தது. நான்காவது நாள்விசாரணையை நடத்தச் சாரி வந்து சேர்ந்தான் ஐந்து நீதிபதிகளுடன், கலிங்கக் கப்பலுக்கு மற்றர்வளை அனுப்பிவிட்டு விஜயன் மூர்சமதுடனும், சூ-சின்னுடனும் நீதிபதிகளை நோக்கித் தலை வணங்கினான். சூ-சின்னின் விசாரணையை மிகத் துரிதமாக முடித்தார்கள். பலவிதமாகக் கூச்சலிட்டுத் தங்கள் தெய்வங்களை வரவழைத்தார்கள். ஒரு நீதிபதி பேயாட்டம் ஆடினார். கடைசியாக சூ-சின் தலையில் கை வைத்துப் பெரிதாகக் கூச்சலிட்டார் விசாரணை முடிந்தது. சாரி மெதுவாக எழுந்திருந்தான் உட்கார்ந்த நிலையிலிருந்து, "மரண தண்டனை," என்று கூறிக் கொண்டு சூ-சின்னை நோக்கி வந்தான்.

# 43. ராம நீதி

குற்றவாளிக்கு நீதிபதிகள் மரணதண்டனை அளித்துவிட்டதாகக் கூறியதும் உட்கார்ந்த நிலையிலிருந்து எழுந்திருந்த சாரி சூ-சின்னை நோக்கி இரண்டடி வைத்ததுமே, தரையில் உட்கார்ந்து விசாரணையை கவனித்துக் கொண்டிருந்த விஜயனும் சட்டென்று எழுந்திருந்து சூ-சின்னுக்கு முன்னால் நின்றுகொண்டு, "சாரி! அவசரப்படாதே, சற்றுப் பொறு," என்று கூறினான்.

விஜயன் எழுந்ததுமே மூர்சமதும் எழுந்து எசமானுக்கு அருகில் நின்று கொண்டதன்றி விஜயன் புரவியும் சமதின் புரவியுங்கூட அவர்களுக்குப் பின்னால் நின்று பெரும் அரண் ஒன்றை சூ-சின்னுக்கு சிருஷ்டித்தன. அப்பொழுது சூ-சின்னைக் காப்பாற்ற விஜயனையும் மூர்சமதையும் தவிர வேறு யாரும் தரையில் இல்லாதிருந்தாலும், சாரிக்குப் பின்னால் அவன் இன வீரர்கள் பத்துப் பேருக்கு மேல் நின்றிருந்ததாலும், சாரி உடனடியாக நடவடிக்கையில் இறங்காமல் எதிரே சூ-சின்னை மறைத்து நின்ற விஜயன் மீது மட்டும் சினம் மிகுந்த தனது விழிகளை நாட்டி, "இன்னும் பொறுப்பதற்கு என்ன இருக்கிறது சிங்கள ராஜா? விசாரணை முடிந்து தீர்ப்பும் கிடைத்துவிட்டதல்லவா? நீதிபதிகள் தீர்ப்பை ஒப்புகொள்வதாக நீங்களும் ஏற்கெனவே உறுதிமொழி கொடுத்திருக்கிறீர்களல்லவா?" என்று வினவினான். மேலுக்கு அவன் பதட்டத்தைக் காட்டா விட்டாலும் உள்ளூர அவன் நெஞ்சம் புகைந்து கொண்டிருந்தது.

அப்பொழுதும் சூ-சின்னை மறைத்த நிலையிலிருந்து விலகாத விஜயன், "சாரி! நீ சொன்னது முற்றிலும் உண்மை. ஆனால் இங்கு

zeevaa



zeevaa

விசாரணை எதுவும் நடக்கவில்லை. அதோ அந்த நீதிபதிகளின் பேய் நடனமும் கூச்சலுந்தான் எனக்குக் கேட்டது. ஆகவே விசாரணையை ஒழுங்காக நடத்து, முடிவை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் ஒன்று, தண்டனையை நான் தான் நிறைவேற்றுவேன். இதை முன்பே சொல்லியிருக்கிறேன்" என்று கூறினான்.

சாரி நின்ற இடத்திலிருந்து அசையாமலேயே பதில் சொன்னான். "சிங்கள மன்னா! இது எங்கள் நாட்டு விசாரணை முறை, எங்கள் நாட்டில் குற்றவாளியின் கதியைத் தெய்வங்கள் தான் நிர்ணயிக் கின்றன. இந்த நீதிபதிகள் எங்கள் குருமார்கள், தெய்வங்கள் சொல்வதைக் கேட்டுச் சொல்லும் சக்தி வாய்ந்தவர்கள், இவர்கள் முடிவை மாற்றுவது நடவாத காரியம், அது தெய்வத்துக்குச் செய்யும் அபசாரமாகும்," என்று.

அவன் பதிலைக்கேட்ட விஜயன் நீதிபதிகளை உற்று நோக்கினான். பந்தங்களின் வெளிச்சத்தில் அவர்கள் மிகப் பயங்கரமாகக் காட்சி யளித்தார்கள். அவர்கள் உடல் முழுவதும் பற்பல வர்ணங்கள் கலந்து களிமண் பூசப்பட்டிருந்தது. நெற்றியில் பூசப்பட்ட களிமண்ணில் சிவப்பு வர்ணம் அதிகமாயிருந்ததால் பந்தங்களின் ஜுவாலை அவர்கள் முகத்தில் பிரதிபலித்து அந்தப் பகுதியை அக்னி ஜுவாலை யாக அடித்திருந்தது. அந்தச் சிவப்புக் களிமண் பூச்சுக்கிடையில் பளபளத்த சிறு கண்கள் மிதமிஞ்சிய அச்சத்தை விளைவித்தன. தலையில் அவர்கள் கழுகு இறக்கைகளையும் இடையில் இலைக்கொத்துக்களையும் அணிந்திருந்ததால் அவர்களின் மொத்தத் தோற்றம் குலை நடுக்கத்தைக் கொடுக்கக் கூடியதாயிருந்தது.

அவர்களிடமிருந்து எத்தகைய கருணையையும் எதிர்பார்க்க முடியாதென்பதைப் புரிந்து கொண்ட விஜயன் சாரியை விட்டு நீதிபதிகளை நோக்கி, "குருமார்களே! உங்கள் விசாரணை முறையை நான் ஒப்புக்கொள்ள முடியாது. முதலில் நீங்கள் குற்றவாளியை விசாரித்து அவன் சமாதானத்தைக் கேட்க வேண்டும். பிறகு

zeevaa

சாட்சிகளை விசாரிக்க வேண்டும். அது தான் முறை. அந்த முறையில் விசாரித்தால், நான் அதற்கு உடன்படுகிறேன்," என்றான்.

அவன் சொன்னது என்னவென்று அவர்களுக்குப் புரியாததால் சாரி அதை மொழிபெயர்த்துச் சொன்னான். அதைக் கேட்ட நீதிபதிகளில் பேயாட்டாம் ஆடியவன் நகைத்தான் பெரிதாக. "இது தான் உங்கள் நாட்டு விசாரணை முறையா?" என்று கேட்டான் நகைப்பின் ஊடே.

அதை சாரி மொழி பெயர்த்ததும், "ஆம்," என்று பதில் சொன்ன விஜயனை நோக்கிய அந்த நீதிபதி, "உங்கள் விசாரணை முறை சரியல்ல. முதலில் உங்களுக்கு மனித இயல்பைப் பற்றிய அறிவு சரியில்லை. எந்தக் குற்றவாளியும் தான் செய்த குற்றத்தை ஒப்புக் கொள்ள மாட்டான். சாட்சியம் சொல்பவர்கள் அவனைப் பற்றிய தங்கள் அபிப்ப்ராயப்படி சர்ட்சியம் சொல்வார்களே தவிர உண்மையைச் சொல்ல மாட்டார்கள். ஆகவே உங்கள் நாட்டு விசாரணை முறையில் எந்தக் குற்றவாளியும் தப்பலாம். எந்த நிரபராதியும் தண்டனை அடையலாம். இங்கு நாங்கள் மனித சாட்சியத்தை நம்பி விசாரணை நடத்துவதில்லை," என்றான்.

"வேறு எதை நம்பி நடத்துகிறீர்கள்?" என்று விஜயன் வினவினான்.

"தெய்வத்தை நம்பி, எங்கள் புலுகா தவறான முடிவைச் சொல்ல மாட்டார்," என்றான் நீதிபதி.

இந்தச் சமயத்தில் மூர்சமத் இடைமறித்து, "எசமான்! இவர்கள் சொல்வதில் நியாயமிருக்கிறது போலிருக்கிறதே," என்று கூறினான்.

அதை விஜயனும் உணர்ந்தான். பொய்ச் சாட்சியத்தால் எத்தனை நிரபாதிகள் தண்டனை அடைகிறார்கள். எத்தனை குற்றவாளிகள் தப்புகிறார்கள்? குரு சொல்வது உண்மைதானே? என்று உள்ளூர எண்ணினாலும் வெளிக்கு, "இருக்கலாம் நீதிபதி, ஆனால் உங்கள்

zeevaa

தெய்வம் எப்படி தண்டனை கொடுத்தது என்பது எங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான்.

"உங்களுக்குத் தெரியாது. நம்பிக்கை இருப்பவர்களிடம் தான் தெய்வம் பேசும்," என்றான் நீதிபதி.

விஜயன் நீதிபதிக்குத் தலை வணங்கி, "இருக்கலாம் நீதிபதி! ஆனால் உங்கள் தெய்வத்தை நான் எப்படி நம்ப முடியும்? அதைப்பற்றி எங்களுக்குத் தெரியாது. ஆனால் மனித விசாரணை, மனித நீதி எங்களுக்குத் தெரியும்," என்ற விஜயன் திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டு "நம் இருவருக்கும் பொதுவான நீதி இருக்கிறதே அதன்படி முடிவு செய்யலாமே," என்றான்.

"அது என்ன நீதி சிங்களனே!", என்று நீதிபதி கேட்டார்.

"ராம நீதி" என்றான் விஜயன்.

இதைக் கேட்டதும் அதுவரை உரையாடல் நடத்திய நீதிபதியின் முகத்தில் மட்டுமின்றி மற்ற நீதிபதிகளின் முகத்திலும் பெரும் அதிர்ச்சி தெரிந்தது. சாரிக்கு எதுவும் புரியாததால், "ராம நீதியா! அதென்ன?" என்று கேட்டான் நீதிபதிகளை நோக்கி.

"அது பழைய கதை, நீண்ட காலத்துக்கு முன்பு ஏற்பட்டது. அதை மாவியா தோமாலாவும் ஒப்புக் கொண்டிருக்கிறார். அது எங்கள் ரகசியம், இந்தச் சிங்களன் எப்படி அதை அறிந்தான் என்பது புரியவில்லை," என்றார் நீதிபதிகளில் தலைமையானவர்.

சாரிக்கு ஏதும் புரியாததால் விழித்தான் விஜயனை நோக்கி, "குருமார்களை உங்கள் பக்கம் இழுக்க ஏதேனும் பொய்க் கதை சொல்கிறீர்கள்," என்றும் கூறினான் சந்தேகக் குரலில்.

விஜயன் சாரியை நோக்கி, "சாரி! கூ–சின்னுக்காக நான் பொய் சொல்ல அவசியமில்லை. இது பல தலைமுறைகளாக உன் மக்களால் நம்பப்படுகிறது".

"அது என்ன கதை?" என்று சாரி உஷ்ணத்துடன் கேட்டான்.

*"கதையல்ல உங்கள் நாட்டினர் நம்பிக்கை. இந்த ஹண்டுமான் ஒரு காலத்தில் இதன் தலைக்கு நேரேயுள்ள மலையின் தொடர்ச்சி யாக பெரும் நிலப்பரப்பு உள்ளதாக சுவர்ணதுவீபம் வரையில் படர்ந்திருந்தது. பின்னால் கடற்கோள் ஏற்பட்டு ஹண்டுமான் பல தீவுகளாகப் பிரிந்து விட்டதும், தாய் நிலத்திலிருந்து பிரிந்ததால் இங்குள்ள மக்கள் பெரிதும் துன்பத்திற்கு உள்ளானார்கள். அதனால் அயோத்தியின் மன்னனாயிருந்த ராமன் பாரதத்திற்கும் இதற்கும் ஒரு பாலம் கட்ட எண்ணினான். ஆனால் அவன் அதைச் செய்து முடிக்காது போகவே அவன் தூதனான ஹனுமான் அணை கட்டினார். அப்பொழுதெல்லாம் இங்கு ராம நீதிதான் வழங்கப்பட்டது," என்றான் விஜயன்.

இந்தக் கதையின் விளக்கத்தை சாரி மொழி பெயர்த்ததும் நீதிபதிகள் தலையசைத்து அது உண்மைதானென்பதை ஒப்புக் கொண்டதும், "அந்த முறையில் விசாரணை வேண்டும்," என்றான் விஜயன்.

அதற்கு நீதிபதிகளும் ஒப்புக் கொள்ளவே அந்த விசாரணை மறுநாள் இரவு முதல் தொடர்ந்தது. சாரியின் நிபந்தனையின்படி விஜயன் சூ–சின்னுடன் கரையிலேயே தங்கினான். மூர்சமத்திடம் ஏதோ செய்தி சொல்லி கப்பலுக்கு அவனைப் புரவிகளை அழைத்துச் செல்லும்படி உத்தரவிட அந்த உத்தரவை மூர்சமத் நிறைவேற்றி னான். அன்றிரவு மீண்டும் கரைக்குத் திரும்பிய மூர்சமதுடனும்

* "Rama, the Ruler of Ayodhya,the hero of the Epic Ramayana, first planned to connect India with the unfortunate islands by constructing a huge bridge. Though the Emperor could not carry out his desire, Hanuman completed the work at a later time at a more practical points. The Andamam Islands-By F.A.M. DASS, B.A.- Page 2.

zeevaa

விஜயனுடனும் தரையில் படுத்துக் கிடந்த சூ–சின் கேட்டான். "சிங்கள மகாராஜா! என்னை எதற்காக காப்பாற்றினீர்கள்?" என்று.

"உன்னைச் சாகவிட இஷ்டமில்லாததால்?" என்றான் விஜயன்.

'ஏன் இஷ்டமில்லை?" –சூ–சின் கேட்டான்.

"நீ கடலில் போரிட்டதைப் பார்த்தேன். உன்னைப் போன்ற வீரனை அழிக்க இஷ்டமில்லை. இஷ்டமிருந்தால் போர் நடந்த அன்றே உன்னை அம்பெய்து கொன்றிருப்பேன்," என்ற விஜயன் சிறிது தாமதித்து , "சூ–சின்! என்ன காரணத்தாலோ உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது. நீ செய்த துரோகச் செயல்களுக்கு உன்னைக் கொல்வது எந்த விதத்திலும் தவறல்ல. முடிந்தால் உன்னைக் காப்பாற்றப் பார்க்கிறேன். முடியாவிட்டால் உன் தலையெழுத்து," என்றான் விஜயன்.

அப்பொழுது இருவரும் அக்கம் பக்கத்தில் படுத்துக் கிடந்தார்கள். விஜயன் ஆகாயத்தைப் பார்த்த வண்ணம் கிடந்தான். "மூர்சமத்! நாளைக்கு மறுநாள் அமாவாசை, வெளிச்சம் மருந்துக்குக் கூட இருக்காது," என்றான்.

ஏதோ காரணத்தை முன்னிட்டுத்தான் விஜயன் அதைப்பற்றிப் பிரஸ்தாபிக்கிறானென்பதை உணர்ந்த மூர்சமத், "ஆம் எசமான்," என்று சொன்னான்.

"இந்த ஹண்டுமானிலிருந்து தப்பிச் செல்ல அந்த நாளைவிட்டால் வேறு நாள் கிடைப்பது கஷ்டம்," என்றான் விஜயன்.

"ஏன் எசமான்?"

"அன்று இந்தப் பகுதியில் மற்ற எல்லா இடங்களையும் விட இருட்டு மிக அதிகமாக இருக்கும் என்று கேள்வி,"

"அன்று புறப்படுகிறோம்?"

zeevaa

"ஆம்."

"சூ-சின்?"

"நமக்கு முன்பே போய் விடுவான். ஆனால் எதுவும் நீதிபதிகளின் தீர்ப்பைப் பொறுத்தது!"

அதுவரை மௌனமாயிருந்த சூ-சின், விஜய மகாபிரபு! என் உயிர் அந்தத் தீர்ப்பைப் பொறுத்ததானால் என்னை இப்பொழுது நீங்களே கொன்றுவிடுவது நல்லது." என்று சொல்லிச் சற்றுத் திரும்பினான். அந்தத் திரும்பல் கூட அவனால் முடியவில்லை உடலிலிருந்த தீப்புண்கள் காரணமாக, லேசாக வேதனை கலந்த முனகல் ஒன்றை வெளியிட்டான்.

"நீ இறக்கப் போவதில்லை. எதற்கும் இரண்டு நாட்களுக்குள் உன் தீப்புண்களுக்குச் சிகிச்சை செய்து கொள்." என்று கூறினான். அதற்கு மேல் அவன் சூ-சின்னுடன் பேசாமல் சமதுடனேயே பேச முற்பட்டு, "சமத்! அமாவாசை இரவுக்குள் சூ-சின்னின் புண்களுக்குச் சிகிச்சை செய். நாளைக்கு சிற்பியை வரச் சொல்," என்றும் கூறினான்.

அடுத்த இரண்டு நாட்கள் புதிய முறையில் நீதி விசாரணை நடந்தது. அதைக் காண அந்தமான் வாசிகள் ஏராளமாக வந்தார்கள். முதலில் நீதிபதிகள் சூ-சின்னைக் கேள்வி கேட்டு அவன் பதிலும் சொல்லியதே விசித்திரமாயிருந்தது அந்த மக்களுக்கு. சூ-சின்னும் மற்றவர்களைக் குறுக்குக் கேள்வி கேட்டபோது இன்னும் அதிக அதிசயமாயிருந்தது அந்த மக்களுக்கு, ஆகவே கரைப் பகுதியில் எப்பொழுதும் அந்தக் காட்டு வாசிகள் கூட்டமிருந்து வூந்தது. விசாரணை நடந்த இரண்டு நாட்களிலும் விஜயன் அதிகச் சுறுசுறுப்பைக் காட்டினான். மூர்சமதை சூ-சின்னுக்குக் காவல் வைத்துவிட்டுப்பலமுறை கப்பலுக்குப் போய் வந்தான். அடிக்கடி சிற்பியிடம் அந்தரங்கததில் ஏதோ பேசினான். பிக்குவிடமும் மற்ற துறவிகளுடனும் கலந்து ஆலோசித்தான்.

zeevaa

அமாவாசையும் வந்தது. அன்று மாலை மீண்டும் நீதிபதிகள் சூ-சின்னுக்கு மரண தண்டனை அளித்தார்கள். அடுத்த நாள் சூரியோதயத்தில் தண்டனையை நிறைவேற்றுவதாக விஜயன் ஒப்புக் கொண்டான். அவனைத் தூக்கிலிடுவதா வெட்டுவதாவென்ற தர்க்கம் நீதிபதிகளுக்குள் ஏற்பட்டுத் தூக்கிலிடுவது என்றும் தீர்மானிக்கப் பட்டது. அந்த வைபவத்துக்கு சாரியே கரையிலிருந்த ஒரு மரத்தைத் தேர்ந்தெடுத்தான்.

சூ-சின் மறுநாள் காலை அங்கு தொங்குவான் என்ற திருப்தியுடன் சாரியும் நீதிபதிகளும் தங்கள் இருப்பிடம் சென்றார்கள். போகும்போது சாரி சொன்னான்: "சிங்கள மன்னவா! நாளைக் காலை நீதி நிறைவேறுவதைப் பார்க்க நாங்கள் வருவோம்," என்று.

அவன் அதைச் சொன்ன தோரணையில் எச்சரிக்கை இருந்தது. அன்றிரவில் விஜயன் தனது திட்டத்தை நிறைவேற்ற முயன்றபோது அதைத் தடுக்க சாரி சித்தமாயிருந்தான். உறங்கிய கானகம் திடீரென்று உயிர் பெற்றது. எங்கும் சாரி வீரர்களின் போர்க் கூச்சல் எழுந்தது. நிலைமை தலைக்குமேல் போய்விட்டதை விஜயனே உணர்ந்தான். தான் கேட்ட ராம நீதி எப்படியும் நிறைவேறும் என்பதைப் புரிந்து கொண்டான். அப்பொழுது திடீரென சாரி விஜயனின் பக்கத்தில் வந்து நின்று, "ராம நீதி கேட்டீர்கள், கிடைத்தது. அதிலிருந்து சூ-சின் எப்படித் தப்ப முடியும்? அல்லது நீங்கள் தான் எப்படி தப்ப முடியும்?" என்று கேட்டு ராட்சஸத் தனமாகச் சிரித்தான். அவன் சிரிப்பைக் காடு பயங்கரமாக எதிரொலி செய்தது.

zeevaa

# 44. மறைந்த கரை, விரைந்த மரக்கலம்

மறுநாள் காலை சூ–சின்னை மரக்கிளையில் தூக்கிலிடுவதைப் பார்க்க வருவதாக மாலையில் சொல்லிப்போன சாரி, நள்ளிரவிலேயே அங்கு தோன்றுவானென்பதை அடியோடு எதிர் பார்க்காத விஜயன் ஒரு வினாடி தனது சுயநிலைக்கு வந்தான். சாரியைக் கூர்ந்து சில வினாடிகள் நோக்கிவிட்டு, "சாரி நீ சொல்வது விளங்கவில்லை எனக்கு. சூ–சின் எப்படித் தப்புவான் என்று கேட்டது சரி. ஆனால் நான் எப்படித் தப்ப முடியும் என்று கேட்டாயே, அதற்கு என்ன பொருள்? எந்தக் காரணத்தை முன்னிட்டு நான் செல்வதை நீ தடுக்க முடியும்?" என்று வினவினான்.

சாரியின் முகத்தில் குரூரம் கலந்த மகிழ்ச்சியின் சாயை லேசாகப் படர்ந்தது. "சூ–சின்னைத் தப்பவைக்க முயன்றதாக உங்களையும் தடை செய்ய வேண்டியிருக்கிறது" என்று சொன்ன அவன் சொற்களிலும் குரூரம் ஒலித்தது.

விஜயன் முகத்தில் வியப்பைச் சிறிதே காட்டி, "சூ–சின்னை தப்பவைக்க முயன்றதாக யார் சொன்னது?" என்று வினவினான்.

சாரி, மீண்டும் அசுரத்தனமாக நகைத்தான், "யாரும் சொல்ல வேண்டியதில்லை சிங்கள மன்னனே! நான் போகும்போது உங்களைக் கண்காணிக்க எனது வீரர்கள் சிலரை விட்டுப் போனேன்" என்றான் சாரி அந்த ராட்சஸ நகைப்பின் ஊடே.

விஜயன் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் இல்லை. "உன் வீரர்கள் கண்டது என்ன? கேட்டது என்ன?" என்று வினவினான் சர்வசாதாரணமான குரலில்.

zeevaa


zeevaa

"சூ-சின்னும் நீங்களும் அக்கம் பக்கத்தில் படுத்துக் கிடந்தீர்களாம்....." சாரி வாசகத்தை முடிக்காமல் விஜயனின் பதிலை எதிர்பார்த்து நின்றான்.

"ஆம், படுத்துக் கிடந்தோம், அதனாலென்ன?"

"சூ-சின்னை நீங்கள் தப்ப வைக்க முயன்றதற்காச் சூ-சின் உங்களுக்கு நன்றி கூறினானாம்".

"நன்றி சொல்லியிருந்தால் தான் என்ன? சூ-சின் இன்னும் தப்பவில்லையே?" என்றான் விஜயன்.

அப்பொழுதுதான் சுற்றுமுற்றும் பார்த்த சாரி, சூ-சின் அங்கில்லாததைக் கவனித்து, "எங்கே சூ-சின்?" என்று சீற்றத்துடன் கேட்டான்.

"என்னைக் கண்காணித்த வீரர்கள் அதைச் சொல்லவில்லையா உனக்கு?" என்று வினவினான் விஜயன்.

சாரி அதிர்ச்சியுற்று இருமுறை தனது கைகளைத் தட்டவே இரு வீரர்கள் கானகத்தின் முகப்பு மரங்களின் மறைவிலிருந்து வந்தார்கள். அவர்களை எரித்து விடுவது போல் நோக்கிய சாரி கேட்டான் : "சூ-சின் எங்கே? என்ன ஆனான்?" என்று.

வீரர்களில் ஒருவன் சற்றும் தயங்காமல் சொன்னான்: "இவர் உறங்குகையில் சூ-சின் மெதுவாக எழுந்து தப்பியோடப் பார்த்தான். இவர் சட்டென்று எழுந்து அவனைத் தாவிப் பிடித்து தரையில் கிடத்தினார். பிறகு சற்று எட்டப்படுத்திருந்த பெரிய ராட்சஸனை விட்டு சூ-சின்னின் கை கால்களைக் கயிற்றால் பிணைக்கச் செய்தார். 'இவனைக் கப்பலில் பத்திரமாகக் காவலில் வை. நாளைக் காலையில் இவன் தூக்கிலாடட்டும்' என்று உத்தரவிட, அந்த ராட்சஸன் சூ-சின்னை தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு படகில் கப்பலுக்கு எடுத்துச் சென்றான். சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் மட்டும் திரும்பி வந்தான்" என்று நடந்ததை விளக்கமாகச் சொன்னான் அந்த வீரன்.

zeevaa

இதைக் கேட்ட சாரியின் முகத்தில் குழப்பம் அதிகமாகத் தெரிந்ததால் சில வினாடிகள் அவன் ஏதும் பேசாமல் தரையைக் காலால் கிறிக் கொண்டு சிந்தனைவசப்பட்டு நின்றான். "ஏன் சாரி, என்ன குழப்பம் உனக்கு? சூ-சின் தப்பவில்லை. கை கால்கள் கட்டப்பட்டுக் கப்பலில் சிறையிலிருக்கிறான். உனக்குச் சந்தேக மிருந்தால் நீயே போய்ப் பார்த்து வா, நாங்கள் இங்கேயே இருக்கிறோம்" என்று விஜயன் சொன்னான்.

"நீங்கள் அவனைக் கட்டி, சிறை செய்ததை இந்த மடையர்கள் சொல்லவில்லை. அதனால் உங்களைச் சந்தேகித்தேன். சூ-சின்னை நீங்கள் தப்பவைக்க முயன்றால் அதனைத் தடுக்கப் போதுமான வீரர்களுடன் வந்திருக்கிறேன். இப்பொழுதுகூட நான் இஷ்டப்பட்டால் உங்கள் மரக்கலம் இங்கிருந்து நகர முடியாது. ஆனால் ஒன்று விளங்கவில்லை எனக்கு. சூ-சின் உங்களுக்கு எதற்காக நன்றி செலுத்தினான்? நீங்கள் அவனைத் தப்ப வைக்க முயன்றதாக ஏன் சொன்னான்?' என்று வினவினான்.

"அதைப்பற்றிச் சூ-சின்னைத்தான் கேட்க வேண்டும். வேண்டுமானால் கப்பலுக்குச் சென்று விசாரித்து வா சாரி" என்று அலட்சியமாக பேசிய விஜயன், "இரவு முழுவதும் என்னால் பேசிக்கொண்டிருக்க முடியாது. காலையில் தண்டனை நிறை வேற்றும் வேலையிருக்கிறது"என்று சொன்ன பிறகு, "சாரி, நீயும் இங்கேயே எங்களுடன் தங்கிவிடு. உனக்குச் சந்தேகம் ஏற்பட்டு விட்டது என்மீது. ஆகையால் நீயும் உன் வீரர்களும் என்னுடனேயே இருங்கள்" என்று கூறிவிட்டுத் தரையில் உட்கார முற்பட்டவனைத் தடுத்த சாரி, "நீங்கள் என்னுடன் வாருங்கள். நாளைக் காலையில் இங்கு திரும்பலாம்" என்று கூறி, அவன் வீரர்களுக்கு ஏதோ சைகை செய்ய, நான்கு வீரர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். சாதாரணமாக இத்தகைய சந்தர்ப்பங்களில் நிதானத்தை இழக்கக் கூடிய மூர்சமத் கூட அன்று மிகவும் நிதானத்தைக் காட்டினான்.

zeevaa

தன்னைச் சாரி சிறைப்படுத்தி விட்டதை உணர்ந்த விஜயன், பக்கத்திலிருந்த சாரியை நோக்கி, "சாரி! என்னைச் சிறை செய்யக் காரணமென்ன?" என்று வினவினான்.

"காரணம் முன்பே சொல்லியாகிவிட்டது" என்ற சாரி தனது வீரர்களை நோக்கி, "உம் நடவுங்கள்" என்று உத்தரவிட்டான்.

அந்த உத்தரவை முன்னிட்டு, சாரியின் வீரர்கள் நகர முற்பட்டும் விஜயன் இருந்த இடத்தைவிட்டு அசையவில்லை. "சாரி! என்னிடம் நடந்து கொள்ளும் முறை இதுவல்ல" என்று சிறிது கண்டிப்புடன் பேசினான்.

சாரி, விஜயனை நன்றாக அணுகி, "சிங்கள மகாராஜா! இந்த நிலையை வரவழைத்துக் கொண்டது. நீங்கள், சூ–சின்னைப் போன்ற ஒரு விஷப்பாம்புக்காக என்னைப் போன்ற நண்பர்களுக்குத் துரோகம் செய்தீர்கள். அதன் பலனை நீங்கள் அனுபவிக்க வேண்டும்"என்றான்.

விஜயன் ஆகாயத்தை நோக்கினான் ஒருமுறை அன்று ஏனோ நட்சத்திரங்கள் கூட மங்கிக் கிடந்தன.

எங்கும் காரிருள் கவிந்து கிடந்ததால் கடலில் எழுந்த அலைகள் கருத்த பிசாசுகள் நர்த்தனமாடுவதைப் போல இருந்தன. துறை முகத்திலிருந்த கலிங்க மரக்கலமும் பேயாட்டம் ஆடிக்கொண் டிருந்தது. அந்த மரக்கலத்தில் விளக்குகள் ஏதுமே ஏற்றப்படாத தாலும், தளத்தில் சாதாரணமாக இருக்கும் ஒற்றைப் பந்தம்கூட அன்று கொளுத்தப்படாததாலும் மரக்கலமே ஒரு மாயப்பிசாசைப் போல் காட்சியளித்தது. அதிலிருந்து சற்றுத் தள்ளி, பழுது பார்க்கப்படாமல் மொட்டையாகக் காட்சியளித்த சீன மரக்கலம் கூடப் பயங்கர துர்நிலையைச் சற்றுப் பெரிதுபடுத்திக் காட்டியது. காட்டில் துஷ்டமிருகங்கள் எங்கோ உறுமிக் கொண்டிருந்தன. திடீரென எழுந்த பேய்க்காற்றில் மரங்கள் பேயாட்டம் ஆடின.

zeevaa

தூரத்திலிருந்த சேணமலை உச்சி அடுத்து நடக்கப் போகும் விந்தையைக் கவனிக்கச் சித்தமாயிருப்பதுபோல் உயர்ந்து செங்குத்தாக நின்றது. எங்கும் பயங்கர நிலை உருவாகிக் கொண்டிருந்தது.

இந்த நிலையில் ஆகாயத்தைக் கவனித்து தன்னை நெருங்கி நின்ற சாரியையும் கவனித்த விஜயன் திடீரெனச் செயல்படலானான். ஒரு வினாடியில் அவன் இடது கை சாரியின் கழுத்தை வளைத்து இரும்புப் பிடியாகத் தன்னை நோக்கி இழுத்தது. அவனது வலது கை இடையிலிருந்த குறுவாளை மின்னல் வேகத்தில் உருவி அவன் கழுத்தில் ஊன்றியது. "சாரி! அசையாதே, சிறிது அசைந்தாலும் என் குறுவாள் உன் கழுத்தில் புகுந்து உன் உதிரத்தைக் குடித்துவிடும். உன் வீரர்களை விலகி நிற்கச் சொல்" என்று கூறிக்கொண்டே சாரியை இழுத்துச் சென்றான். அலைகள் தரையில் மோதிய இடத்தை நோக்கி.

சாரியின் நிலையைப் பார்த்த அவன் வீரர்கள் பயங்கரமாகக் கூச்சலிட்டாலும் எந்தச் செயலிலும் இறங்கவில்லை. அவர்கள் கூச்சலால் பெரும் கூட்டம் கானக முகப்பில் தோன்றியதே தவிர, யாரும் செயல்பட முன்வரவில்லை. விஜயன் சாரியின் கழுத்தில் கத்தியை ஊன்றி இழுத்து வருமுன்பே அலைகளை அடைந்துவிட்ட மூர்சமத், அங்கு சித்தமாயிருந்த படகின் தளையை அவிழ்த்துத் துடுப்புகளையும் கைகளில் எடுத்துக் கொண்டான். அடுத்த வினாடி சாரியுடன் படகில் விஜயன் ஏறியதும் படகு விரைந்தது மரக்கலத்தை நோக்கி.

அமாவாசையின் காரணமாகப் பெரிதாக எழுந்த அலைகளால் படகு மேலும் கீழும் பயங்கரமாக ஆடினாலும், சமத் மிகுந்த திறமையுடன் படகைச் செலுத்தினான். படகு மரக்கலத்தை அடைந்ததும் நூலேணி தொங்கவிடப்பட, சாரியை முன்னால் ஏறவிட்டுப் பின்னால் ஏறிய விஜயன் தளத்துக்கு வந்ததும் சாரியின் கழுத்திலிருந்து தனது குறுவாளை எடுத்து, "சாரி! உன்னை இப்படி

zeevaa

அழைத்துவர எனக்கிஷ்டமில்லை. இப்படி விடைபெறவும் இஷ்ட மில்லை. ஆனால் நீ வேறு வழியை எனக்கு விடவில்லை'' என்று அன்பு ததும்பும் குரலில் பேசினான்.

சாரி ஏதும் பேசவில்லை. பூர்ண மௌனமே சாதித்தான். ஒருமுறை எட்ட இருந்த சேணமலையைக் கவனித்தான். "புலூ காவின் சித்தம் இப்படித்தானென்றால் நான் என்ன செய்யட்டும்?" என்று கூறி, சேணமலை உச்சியை நோக்கித் தலைவணங்கினான்.

அந்தச் சமயத்தில் திரிலோகசுந்தரி தளத்துக்கு வந்தாள். சாரியை நோக்கி, "அண்ணா! நாங்கள் போய் வருகிறோம். நீங்கள் என்னைப் பாம்பிடமிருந்து காப்பாற்றியதை மறக்க மாட்டோம்'' என்றாள். நன்றிப் புன்முறுவலும் செய்தாள்.

சாரி அவளை அன்புடன் நோக்கினான். "சகோதரி! உன்னை நாகப் பாம்பிடமிருந்து காப்பாற்றி, வேறு நச்சுப் பாம்புகளிடம் ஒப்படைக் கிறேன். எச்சரிக்கையுடனிரு என்று மனம் நெகிழச் சொன்னான்.

இப்படி அவர்கள் பேசிக்கொண்டிருக்கையிலேயே மரக்கலம் நகர்ந்து கொண்டிருப்பதைச் சாரி முதலில் கவனிக்கவில்லை. கவனித்தபோது மரக்கலப் பலகைகளிடம் ஓடி, "ஹோ! ஹோ!" என்று பெரிதாகக் கூவினான்.

அந்தக் கூச்சலைத் தொடர்ந்து நீரிலும் குதித்து விட்டான். அவன் குதிப்பதற்கு முன்பே கரையில் தோன்றிய நூற்றுக்கணக்கான சாரியின் வீரர்கள் பெருங் கோஷமிட்டார்கள். அடுத்து, படகுகள் பல சீறி வந்தன கப்பலை நோக்கி.

"பாய்களை விரித்துவிடு" என்று விஜயன் கூவ, சிற்பி பாய்களை விரித்தான்.

பிக்கு அங்கு வந்த ஆதிமல்லனை நோக்கி, "துடுப்புக்கள் வேக மாகத் துழாவட்டும்'' என்று சொல்ல, அவன் கீழ்த்தளத்துக்கு

zeevaa

ஓடினான். தர்மர் சுக்கானை நேர்ப்புறமாகப் பிடிக்க, கலிங்க மரக்கலம் அலைகளைக் கிழித்துக் கொண்டு ஓடலாயிற்று.

அந்த அலைகளில் துரத்தி வந்தன நூற்றுக்கணக்கான ஹண்டு மான் படகுகள், நூற்றுக்கணக்கான வேல்கள் சீறி வந்தன மரக்கலத்தை நோக்கி. ஆனால் இதையெல்லாம் முன்னோக்கிப் பார்த்த விஜயன், எதிர் நடவடிக்கை எதையுமே எடுக்கவில்லை. காற்றின் உதவி அனுகூலமாயிருந்ததால் கலிங்க மரக்கலத்தைச் சாரியின் வீரர்கள் அணுக முடியவில்லை. அவர்கள் வீசிய வேல்களும் பயனளிக்கவில்லை. இருப்பினும் வேல்கள் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. காற்று வேகம் அதிகப்பட்டதால் அலைகள் தென்னை மர உயரத்திலும் கிளம்பி, சில சமயங்களில் கப்பலின் தளத்திலும் திரைகளைப் பாய்ச்சிக் கொண்டிருந்தன.

கலிங்கக் கப்பலுக்கு முன்பாகத் தொலை தூரத்தில் ஒற்றைப் பாயுடன் சிற்பி சிருஷ்டித்த படகொன்றில் நான்கு சீனர்களுடன் போய்க் கொண்டிருந்த கூ-சின் திரும்பிக் கலிங்கக் கப்பலை ஒருமுறை கவனித்துப் பெருமூச்செறிந்தான். கலிங்கக் கப்பல் பிரும்மாண்டமான கட்டிடம்போல வேகமாக வந்து கொண்டிருந்தது. 'அதோ அந்த மரக்கலத்தில் மகாரத்தினத்தையும் மாதர்குல ரத்தினத்தையும் கொண்டு செல்கிறான் ஒரு மாவீரன். அது சீனச் சக்கரவர்த்திக்குக் கிட்டவில்லை. அவர் ஓர் அதிர்ஷ்டக் கட்டை. ஆனால் விஜயன் சிங்களத்துக்குச் சக்கரவர்த்தியாவான் சந்தேகமில்லை' என்று மனத்துள் சொல்லிக் கொண்டான்.

அப்பொழுதும் பல படகுகள் கலிங்க மரக்கலத்தைத் துரத்தி வந்ததைக் கவனித்த கூ-சின், "பயனற்ற முயற்சி" என்று அலுத்துக்கொண்டான். "உம், துடுப்புகளைத் துழாவுங்கள்" என்று தன்னிடமிருந்த நான்கு சீனர்களுக்கும் உத்தரவிட்டான், அவன் படகு விரைந்தது.

zeevaa

கலிங்கக் கப்பல் பாய்களை நன்றாக விரித்து ஓடிக் கொண் டிருந்தது. அந்தப் பாய்களின் முன்னணியில் விஜயன் திரிலோக சுந்தரியுடன் நின்றிருந்தான். நன்றாகப் புடைத்த நடுமரக்கலப் பாய்மரம் சிறிது திசை திரும்பியதும் சட்டெனக் காற்றில் மடிந்து அந்த இருவரையும் மறைத்தது. காரிருள் கடலை மறைத்தது. அலைகளை யும் காற்றையும் கிழித்துக் கொண்டு அம்புபோல விரைந்த கலிங்க மரக்கலத்தின் பார்வையிலிருந்து ஹண்டுமான் கரையும் மெல்ல மெல்ல மறைந்தது.

**(இரண்டாம் பாகம் முற்றும்)**

zeevaa




zeevaa



zeevaa

# விஜய மகாதேவி

( பாகம் 3)


சாண்டில்யன்


51வது சரித்திர நாவல்


SCAN & EDIT
ZEEVAA
zeevaa99@gmail.com



பாரதி பதிப்பகம்
126 / 108, உஸ்மான் சாலை,
தியாகராய நகர், சென்னை-600 017.
த.பெ.எண் : 4984 போன் : 24340205



zeevaa

# பதிப்புரை

சாண்டில்யன் அவர்களின் 51ஆவது சரித்திர நாவல் இந்த விஜய மகாதேவி. இந்நூல் குமுதத்தில் தொடர்ச்சியாக வெளிவந்த சமயம் இதை வெளியிட வேண்டும் என்று கேட்டேன். மிகவும் மகிழ்ச்சியுடன் தந்தார்கள். ஆனால் எந்த ஒரு பதிப்பாளரும் ஒரு ஆசிரியருக்கு இதுவரை உரிமைக்காக ரூ. 50 ஆயிரம் ஒரே சமயத்தில் கொடுத்ததாக சரித்திரம் இல்லை. பலருக்கு பணம் இருந்தும் கொடுக்க மனம் வருவதில்லை. ஆனால் என்னிடம் இவ்வளவு பெரிய தொகை கொடுக்கும்படியான நிலை இல்லை.

சாண்டில்யன் அவர்கள் 40 ஆண்டுகள் என்னுடன் பழகி வந்தவர்கள். அவர்கள் என்னிடம் கொண்டுள்ள அளவுக்கு மீறிய அன்பின் காரணமாக இந்தப் பணம் எதற்குத் தேவை என்பதைச் சொன்னார்கள். அவர்கள் சொன்னதைக் கேட்டதும் மனநிறைவுடன் நான் எப்படியும் அளிக்கிறேன் என்றேன். அதன்படி செய்தேன். அளவில்லா ஆனந்தத்துடன் இந்நூலை வெளியிட எனக்கு உரிமை தந்தார்கள். அவர்கட்கு என் உளம் நிறைந்த நன்றி. இந்நூல் வெளி வர எங்களுக்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்த தி. நகர் ஸ்டேட் பாங்க் ஆப் திருவாங்கூர் மானேஜர் அவர்கட்கும் எங்கள் நன்றி.

சென்னை - 17
டிசம்பர் - 1985

**பழ. சிதம்பரம்**
**பாரதி பதிப்பக நிறுவனர்**

---

**இரண்டு புத்தகங்களும் (மூன்று பாகங்களும் சேர்ந்து) விலை ரூ. 500.00**

---

VIJAYA MAHADEVI PART III ❑ Historical Novel by : CHANDILYAN ❑ First Edition: Dec.1985❑ Second Edition: April 1995 ❑ Third Edition: March 1998 ❑ Fourth Edition: July 2004 ❑ Fifth Edition: Sep.2010 ❑ Sixth Edition: April 2012 ❑ Price (Three parts of Two books) Rs. 500.00 ❑ © with the Author ❑ Published by : BHARATHI PATHIPPAGAM, 126/108, Usman Road,T. Nagar, Chennai - 600 017, P.Box No.4984. Phone : 24340205 ❑ Printed at: Sivakami Printo Graphics, 160, Big street, Triplicane, Chennai-600 005. ❑ Phone : 28445051 ❑ Email : bharathipathippagam@gmail.com ❑

zeevaa

# முன்னுரை

விஜய மகாதேவி சரித்திரக் கதை மட்டும் அல்ல; சரித்திரம் படைத்த கதை. பதிப்பக வரலாற்றில் பெரும் புரட்சியை உண்டு பண்ணிய கதை. இதை ஒட்டுமொத்தமாக கொஞ்சமும் தயங்காமல் பெரும் நம்பிக்கையோடு ரூபாய் ஐம்பதாயிரம் கொடுத்து பாரதி பதிப்பகத்தார் வாங்கியதை கேட்டு மலைத்து நின்றவர் பலர்.

விஜய மகாதேவியை முதலில் எழுத யோசித்து பின்பு வேண்டாமென்று நிறுத்திவிட்டேன். சிங்களர், தமிழர் பண்டைக்கால உறவைப்பற்றி நீண்ட நாளாக நல்லதொரு நவீனம் படைகக எண்ணி சிங்களம் செல்ல தீர்மானித்தேன். குமுதம் நிர்வாகிகளும் உடனே ஒப்புக்கொண்டார்கள். ஆனால் சிங்கள அரசு ஒத்துக்கொள்ள வில்லை. நேர்முகமாக எதிர்க்காமல் அங்கே இருக்கும் அப்பாவி தமிழ் மக்களை பைசல் செய்யத் தொடங்கினர். வேண்டாம் இந்த முயற்சி என்ற மனப்போக்கில் இருந்த என்னை, என் ரசிக நண்பர்கள் வற்புறுத்தி இக்கதையை எழுதச் சொன்னார்கள். வேறு வழி யில்லாமல் எழுத முற்பட்டேன். சிங்களத்துக்கு போயிருந்தால், விஜய மகாதேவி போன்ற ஒரு நல்ல சரித்திர நாவல் தமிழ் உலகிற்கு கிடைத்திருக்காது. என்னுடைய சரித்திரக் கதை வரும் வாய்ப்பு சிங்களத்திற்கு கிடைத்திருக்காது.

இந்நூல் பலமான அசைக்க முடியாத சரித்திர ஆதாரங்களுடன் எழுதப்பட்டது. ஆங்காங்கே குறியிட்டு ஆராய்ச்சித் தொகுப்புகளை கொடுத்திருக்கிறேன். ஈழ-தமிழ் உறவு முறைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் வரலாற்று மாணவர்களுக்கு இவை மிகவும் உபயோகமாக இருக்கும். பண்டைய ஈழ-தமிழர் சரித்திரத்தைப் பின்னணியாகக் கொண்டு பின்னப்பட்ட இந்நூல் குமுதத்தில் சுமார் 3 வருட காலம் தொடர்கதையாக பரிமளித்தது. பல்லாயிரக் கணக்கான ரசிகர்களின் பாராட்டைப் பெற்ற இந்நூல் புத்தக வடிவிலும் அதே ஆதரவைப் பெறும் என்பதில் எனக்கு துளியும் சந்தேகம் இல்லை.

zeevaa

பாரதி பதிப்பகத்தின் உரிமையாளர் பழ. சிதம்பரம் அவர்கள் செலவைப் பொருட்படுத்தாமல் மிகவும் அழகான முறையில் இந்நூலை வெளியிட்டதற்கு என் நன்றி. இதைத் தொடராக குமுதத்தில் பிரசுரித்த ஆசிரியருக்கும் நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை - சாண்டில்யன்
26.5.86

zeevaa

# விஜய மகாதேவி

## [மூன்றாம் பாகம்]

## 1. மாயா சீதை

சிங்களத்தை விட்டுப் புறப்பட்டு, கலிங்கத்திலும் ஹண்டு மானிலும் பற்பல அனுபவங்களையும் அனுகூலங்களையும் பெற்று எத்தனையோ இன்பங்களையும் அனுபவித்துவிட்டு நான்கு மாதங்கள் கழித்துத் தாய்நாடு திரும்பிய விஜயபாகுவின் மனம் தாய் மண்ணில் காலை வைத்ததுமே ஏதோ இந்திர போகத்தைப் பெற்றுவிட்ட நிலையில் திளைத்ததால், அவன் தனது கரிய புரவிமீது சாய்ந்த வண்ணம் முத்துக்குளிக்கும் துறையான *சிலாபம் என்ற இடத்திலிருந்து எதிரே விரிந்த கடலைப் பார்த்துக் கொண்டே நேரம் போவது தெரியாமல் நின்று கொண்டிருந்தான். மீண்டும் தாய்நாட்டின் மண்ணை ஸ்பரிசிக்கும் பாவனையில் தனது கால்களை அடிக்கடி அந்தக் கடற்கரை மணலிலும் திருப்பித் திருப்பிக் கட்டை விரல்களால் சக்கர வட்டக் கோடுகளைத் தீட்டிக் கொண்டிருந்தான். கடலின் அலைகளும் அலைகளில் தவழ்ந்து வந்த சில்லென்ற காற்றும் அவன் உடலுக்கு மிகுந்த இதத்தைக் கொடுத்ததால், "தாய் அளிக்கும் இதத்தை வேறு யார் அளிக்க முடியும்? ஆயிரம் கலிங்கத்துறைகளும், ஹண்டுமான் கடலும் அளிக்க முடியாத

---

* *தற்காலத்தில் இது சிலா (Chilaw) என்று அழைக்கப்படுகிறது.*

zeevaa



zeevaa

இன்பத்தை என் தாய்நாட்டுக்கடல் அளிக்கிறதல்லவா?'' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டும் அந்தக் கேள்விகளால் திருப்தியடைந்தும் அந்தக் கடலின் முன்னால் நின்ற விஜயனைச் சற்று எட்ட நின்ற மூர்சமத் சற்றுச் சலிப்புடன் நோக்கினான். அவன் பழுப்புநிறப் புரவியும் அவன் சலிப்பில் பங்கு கொண்டதைப் போல தலையை ஆட்டியதன்றி மெல்ல கனைக்கவும் செய்தது.

மூர்சமதின் சலிப்பையோ பழுப்புநிறப் புரவியின் கனைப்பையோ கவனிக்காத விஜயன் நீண்ட நேரம் கழித்து, ''சமத்! நமது முத்துக்கடலின் அழகைப் பார்த்தால் நாம் இங்கேயே தங்கிவிடலாம் போலிருக்கிறதல்லவா?'' என்று விசாரிக்கவும் செய்து மீண்டும் ஒருமுறை கடற்காற்றை நன்றாக உள்ளே இழுத்து உவகையின் சாயையை முகத்தில் படரவிட்டுக் கொண்டான்.

மூர்சமத்தால் விஜயனுடைய உவகையைப் பங்கிட்டுக் கொள்ள முடியாத காரணத்தால், ''ஆம் எசமான்! கடல் அழகாகத்தான் இருக்கிறது. அதற்காக நாம் இங்கேயே தங்கிவிட முடியுமா?'' என்று வினவினான் தனது சலிப்பைக் குரலிலும் காட்டி.

சலிப்பு நிறைந்த அவன் பதிலைக் கேட்டதால் தனது கடற் கனவிலிருந்து சற்றே மீண்ட விஜயபாகு, ''சமத்! சொந்த நாடு வந்தது உனக்கு மகிழ்ச்சியை அளிக்க வில்லையா?'' என்று வினவினான். மூர்சமத்மீது தனது வியப்பு நிறைந்த விழிகளை நாட்டவும் செய்தான்.

மூர்சமத் தனது ராட்சஸவிழிகளால் சிங்கள மன்னனை ஏறெடுத்து நோக்கி, ''எசமான்! தாய் மண் நமக்குச் சொந்தமாயிருந்தால் மகிழ்ச்சி அபரிமிதமாக இருக்கும். சோழர் ஆதிக்கத்தில் ராஜராட்டா (ராஜராஷ்டிரம்) இருக்கும்வரை மகிழ்ச்சி ஏது நமக்கு?'' எனறு தனது துன்பத்தில் விஜயனையும் சேர்த்துப் பொதுப் படையாகப் பேசினான்.

zeevaa

சிங்களத்துக்கு வந்துவிட்டதால் சித்தம் மயங்கிய நிலையில் நாடு அடிமைப்பட்டுக் கிடப்பதையும், அதன் தளைகளை உடைக்க வழிதேடவே தான் கலிங்கம் சென்றதையும் மறந்துவிட்ட விஜயன், "உண்மைதான் மூர்சமத்! தாயின் ஆதரவில் அவள் நிலையை மறந்துவிட்டேன். ஆனால் அவள் தளைகள் சீக்கிரம் உடைக்கப்படும். நான் பிறந்த இந்த மண்ணின் மீது ஆணையாகச் சொல்கிறேன்" என்று உறுதியுடன் கூறினான்.

விஜயனுடைய உறுதியிலோ எடுத்ததைச் சாதிக்கும் திறனிலோ மூர்சமதுக்கு என்றும் எந்தச் சந்தேகமும் இல்லாவிட்டாலும், தாங்கள் பயணம் செய்ய வேண்டிய தூரம் நிரம்ப இருந்ததாலும், சில இடங்களில் சோழர்கள் ஆக்கிரமித்திருக்கும் பகுதிகளில் போக வேண்டியிருந்ததாலும் விஜயனைத் துரிதப்படுத்தச் சொன்னான்: "நாம் இப்பொழுது மாயாராட்டாவில் (மாயாராஷ்டிரத்தில்) இருக்கிறோம். இங்கும் சில பகுதிகளில் சோழர் படைகளின் நடமாட்டம் இருக்கும். ஆகவே ருஹணாவுக்கு நாம் சீக்கிரம் செல்வதே நலம்" என்று.

அதைப்பற்றி தெத்ரு ஓயாவின் (தெத்ரு நதி) முகத் துவாரத்தில் இறங்கியவுடனேயே கேள்விப்பட்டிருந்த விஜயன் மூர்சமதின் கவலைக்குக் காரணமிருக்கிறதென்பதைப் புரிந்து கொண்டாலும் அதைப்பற்றி அவன் சட்டை செய்யவில்லை. "மாயாராட்டா சிங்களத்தின் இளவரசன் ஆட்சி புரியும் பகுதி. நானே இளவரசனாக இங்கு ஆட்சி புரிந்திருக்கிறேன். இங்கு சோழர்கள் பெருவாரியாகப் புகுவது கஷ்டம். அப்படியே புகுந்தாலும் நாம் அவர்கள் கையில் அகப்படாமல் செல்வதும் ஒன்றும் பிரமாதமல்ல. அதை உத்தேசித்துத்தானே நாம் இருவரும் தனித்து வந்திருக்கிறோம்" என்று கூறினான்.

மூர்சமதுக்கு விஜயனுடைய விளக்கம் சரியாகப் புரியாததால், "எசமான்! நீங்கள் கலிங்கத்து மரக்கலத்தில் இருந்தவர்களை ஏன்

zeevaa

பிரித்துப் பிரித்து அனுப்பிவிட்டீர்கள் என்பது புரியவில்லை. கலிங்கத்து மரக்கலத்தை ஆதிமல்லனிடமும் *சீனர்களிடமும்* ஒப்படைத்து விட்டீர்கள். இங்கு தங்கள் மகிஷியாக இருக்க வேண்டிய கலிங்கத்து இளவரசியையும் தர்மர் முதலியவர்களையும் சிற்பியையும் பிக்குவுடன் புத்த விஹாரத்துக்கு அனுப்பி விட்டீர்கள். நான்கு மாதங்களுக்கு முன்பு புறப்பட்ட நிலையில் நாமிருவரும் மட்டும் இங்கு தனித்து நிற்கிறோம். இருக்கிற வீரர்களை உதறிவிட்டு, தனித்து இருப்பது அனுகூலமா?'' என்று வினவினான்.

விஜயன், சமதைப் பார்த்துப் புன்முறுவல் செய்தான். ''சமத் கலிங்கத்து மரக்கலத்தில் நாம் பகிரங்கமாக வந்திறங்கினால் நாம் வந்திருப்பது எதிரிகளுக்குத் தெரியும். நாம் மறைவாயிருந்த வாதகிரியிலிருந்து வெளிநாடு சென்றது யாருக்கும் தெரியாது. அப்படியே தெரிந்திருந்தாலும் அது ஊகமாகத்தான் இருக்க முடியும். ஆகவே நான் எல்லோரையும் கூட்டமாக இங்கு அழைத்துவர விரும்பவில்லை. நாம் முதலில் ருஹுணா சென்று நாட்டு நிலைமையைக் கவனிப்போம். மற்றவர்களை நம்மிடம் மீட்டுக் கொள்வதைப் பிறகு யோசிப்போம்'' -என்ற விஜயன் பக்கத்திலிருந்த தனது புரவிமீது தாவி ஏறினான். மூர்சமதும் பழுப்புப் புரவிமீது ஏறிக்கொண்டதும் தெற்குப் பக்கமாகப் புரவியைச் செலுத்தினான் விஜயன்.

சுமார் இரண்டு நாட்கள் இடைவிடாமல் பயணம் செய்த பிறகு கல்யாணி நதி தீரத்துக்கு வந்த விஜயன் அந்த நதியையும் அதற்கு அப்பாலிருந்த அடர்த்தியான காட்டின்மீதும் கண்களைச் செலுத்தினான். பிறகு மூர் சமதைத் திரும்ப நோக்கி, ''சமத்! நாம் இப்பொழுதுதான் உண்மையான மாயாரராட்டாவுக்கு வந்திருக்கிறோம்'' என்றான்.

மூர்சமத் கேட்டான்: ''இதுவரை வந்தது?'' என்று.

zeevaa

''இதுவரை வந்ததும் மாயாராட்டாதான். ஆனால் அதற்கு அந்தப்பெயரை வாங்கித் தந்தது இந்த இடந்தான். இந்தக் கல்யாணி நதியைத் தாண்டினால் *சீதாவகே இருக்கிறது.'' என்று கூறிய விஜயன் சித்தத்தில் பழைய ராமாயண காவியம் விரிந்தது. அந்தக் கனவிலேயே அவன் பேசினான். ''சமத்! இந்த நதிக்கு அப்புறம் அசோகவனம் இருக்கிறது. அதுதான் சீதை சிறையிருந்த இடம். அது மட்டுமல்ல, மாயாசீதையும் இந்திரஜித்தினால் அங்குதான் சிருஷ்டிக்கப்பட்டாள். இந்திரஜித் மாயா சீதையைச் சிருஷ்டித்து ராமன் முன்பாக வெட்டிய கதையும் இங்கு தான் நடந்தது என்று புராணம் இருக்கிறது'' என்று கனவு காண்பவன் போல் பழைய கதையைப் புதிய சம்பவமாகக் கற்பனை செய்து பேசிய விஜயன் அந்த நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்த்தான், அந்த நினைவுகளை வாய் மூலமாகவும் கொட்டினான்.

விஜயன் கனவு நிலையையும், அவன் புராணச் சொற்களையும் கவனித்த மூர்சமத் அடுத்து ஏதும் பேசவில்லை. எப்படியும் கல்யாணி நதியைத் தாண்டிச் செல்ல வேண்டிய அவசியத்தை முன்னிட்டுத் தனது புரவியைக் கல்யாணியின் நீரில் இறக்கினான். அப்பொழுது நதியில் ஆழம் ஏதுமில்லாததால் இருவர் புரவிகளும் சுலபமாகவே அதன் சிறு புனலைத்தாண்டி அக்கரை சேர்ந்ததும் அடவி அவர்களை எதிர்நோக்கியது. நன்றாக மாலை முதிர்ந்து விட்டாலும் அடவிக்குள் புகுந்துவிட்ட விஜயன் அதன் அசோக மரங்களிருந்த இடத்தை அணுகி, ''சமத், நாம் இன்றிரவை

---

* Seetawaka formerly called Seetawade, is said to have obtained that name, from its being the spot, according to Hindoo tradition, where Indrajit caused a figure resembling the captive Seeta to have been be headed, in order that Rama, abandoning allhopes of recovering his consort, might abandon the war he was then waging against Rawana for her recovery - An Historical Political and Statistical account of Ceylon-by C.Pridham-Vol. I

zeevaa

இங்கேயே கழிப்போம்,'' என்று கூறிவிட்டுப் புரவியிலிருந்து இறங்கினான்.

''இந்தக் காட்டிலா?'' என்று மூர்சமத் வினவினான்.

''ஆம் சமத்! இங்கு நம்மை யாரும் தேட மாட்டார்கள். இங்கு மாயா சீதை யாரும் இல்லை,'' என்று கூறிவிட்டு மரம் ஒன்றில் புரவியைப் பிணைத்துவிட்டு மரத்தின் அடியிலேயே உட்கார்ந்தான்.

மூர்சமதும் சற்று எட்ட இருந்த மரத்தில் தனது புரவியைக் கட்டிவிட்டு புரவியின் இருபுறத்திலும் தொங்கிய பையிலிருந்து ஆகாரத்தை எடுத்து உண்ணத் தொடங்கினான். எங்கும் இருள் சூழந்து விட்டாலும் முழுமதி வானில் உலாவியதால் இடையிடையே திட்டாக விழுந்த சந்திர கிரணங்கள் வேண்டிய வெளிச்சத்தை அளித்திருந்ததால் மூர்சமத் உணவை நிதானமாகச் சுவைத்தே அருந்தினான்.

விஜயன் ஆகாரமேதும் அருந்தவில்லை. அந்த வனத்தின் அழகை ரசித்துக் கொண்டும் அடுத்துத் தனக்கு உள்ள கடமைகளைச் சீர்தூக்கிப் பார்த்துக் கொண்டும் மரத்தில் சாய்ந்து கொண்டு கண்களைச் சிறிதே மூடினான். உறக்கம் மெள்ள மெள்ள அவனை ஆட்கொள்ளத் துவங்கியது. ஆனால் நீண்ட நேரம் உறங்க முடியவில்லை அவன். அரை ஜாமத்துக்கெல்லாம். அந்த வனத்தில் மனித நடமாட்டம் கேட்டது. எங்கிருந்தோ ஒரு பந்தமும் பளிச்சிட்டது. பளிச்சிட்ட பந்தமும் மெதுவாக மரங்களின் ஊடே அவனை நோக்கி வந்தது. விஜயன் சரேலெனக் கண்விழித்தான். பந்தத்தை ஏந்திவந்த உருவம் சற்று எட்டவே நின்றுவிட்டாலும் அவன் முகத்தில் பந்தத்தின் வெளிச்சம் நன்றாக விழுந்தது. அழகெல்லாம் திரண்ட ஒரு பெண் அந்த வெளிச்சத்தில் காட்சியளிக்கவே விஜயன் திக்பிரமை அடைந்தான். மீண்டும் மாயாசீதை சிருஷ்டிக்கப் பட்டாளோ என்று கூட எண்ணினான். இணையிலா வனப்பு மிகுந்த அந்தப் புது மாயாசீதையும் மெள்ள மெள்ள அடி எடுத்துவைத்து அவனை நோக்கி வந்தாள்.

zeevaa

## 2. வனத்தில் ஒரு வண்ண மலர்

கானகத்தில் கேட்ட காலடி ஒலியால் கனவு தந்த உறக்கத்திலிருந்து கண்விழித்த விஜயபாகு. கனவுக்குப் பதில் கனவுக் கன்னிகையொருத்தி தனது கண்ணெதிரே தோன்றியதும், கையிலேந்திய பந்தத்தின் வெளிச்சத்தில் தங்கப் பதுமையென அவள் பளிச்சிட்டதும் பெரும் பிரமிப்பாயிருந்ததால் அவளையும் சுற்றுப்புறத்தையும் மீண்டும் தனது கண்களால் அளவெடுத்தான். அந்த அசோகவனத்தின் அழகுக்கு அவள் அழகு நூற்றுக்குநூறு பொருத்தமாகவே இருந்ததை விஜயபாகு கவனித்தான்.

*கற்பகக் கொடிகளோடு கூடியதும், குயில்களாலே நிறைந்த சப்தமுடையதும், பொன் மயமான தாமரைப்பூ கருநெய்தல் இவற்றையுடைய சின்னஞ் சிறு வாவிகளையுடையதும், சமஸ்த ருதுக்களிலும் புஷ்பங்களாலும், பழங்களுடைய விருட்சங்களாலும் மனோகரமானதும், பூத்திருக்கிற அசோக விருக்ஷங்களுடைய சோபையினால் சூர்யோதயத்தின் காந்தியைப் போன்ற காந்தியை உடையதும், எரிகிறது போன்ற பிரமையை அளிப்பதும், அடிமுதல் நுனி வரையில் பூத்திருக்கிற புஷ்பங்களால் நிறைந்ததும் துக்கத்தைப் போக்கடிக்கிறதும் புஷ்பக சமூகங்களுடைய பளுவால் பூமியைத் தொடுவது போலிருக்கிற அசோக மரங்களோடும் பூக்காத பலா மரங்களோடும் கூடிய அந்த அசோகவனத்தின் எழிலையே சாதாரணமாக அடிக்கிற எழிலுடைய அந்தமங்கையைப் பார்த்த விஜயன், முதலில் இவள் ஏன் மாயா சீதையாக இருக்கக் கூடாது

---

★ *அசோகவன வர்ணனையும், சீதையின் நிலையும் வால்மீகியை அப்படியே தழுவி எழுதப்பட்டிருக்கின்றன.*

zeevaa

என்று நினைத்தான். ஆனால் அப்படி இருக்க முடியாதென்ற முடிவுக்கு வந்தான்.

கணவனைப் பிரிந்ததால் சோகத்தை அளிக்கும் அசோக வனத்திலும் சோகத்தின் பிம்பமாய் இருந்தவளும், அழுக்கடைந்த வஸ்திரத்தில் உடல் மூடப்பட்டவளும், அழகான தேக காந்தி யுடையவளும், புகையின் மூட்டத்தால் கம்மப்பட்ட அக்னியின் ஜ்வாலை போலிருந்தவளும், கறுத்த சர்ப்பத்தைப் போல் முதுகில் புரளுகிற ஒற்றைப் பின்னலுடையவளுமான சீதைக்கும் இந்தப் பவழக் கொடிக்கும் எந்த ஈடும் கிடையாதென்ற தீர்மானத்துக்கு வந்த விஜயபாகு, 'இவள் யார்?' என்று தனக்குள்ளேயே வினவிக் கொண்டான். அவளை எங்கோ எப்பொழுதோ பார்த்திருக்கிற நினைப்பு மட்டும் அவனுக்கு இருந்தாலும் அதைப் பற்றி நிர்ணயமான புத்தி அவனுக்கு ஏற்படாததால் அவள் அருகில் வரட்டும் விசாரிப்போம் என்ற நினைப்பில் உட்கார்ந்த இடத்திலேயே உட்கார்ந்திருந்தான்.

பந்தத்தை ஏந்தி வந்த அந்தப் பைங்கொடியும் சட்டென்று நடையை நிறுத்தி எட்ட இருந்த ஓர் அசோகமரத்தின் மீது சாய்ந்து நின்றாள். அந்தச் சாய்ந்த நிலையில் அவள் மாயா சீதையா யில்லாவிட்டாலும் ஒரு மாயா தேவிபோலவே விளங்கினாள்.

அவள் கையிலிருந்த பந்தத்தின் ஒளி, ஏற்கெனவே சிவந்திருந்த அவள் பருவமேனியை இன்னும் அதிக சிவப்பாக அடித்திருந்தது. மேலேயிருந்து சற்றே சாய்ந்திருந்த ஓர் அசோகக் கிளையிலிருந்து இரண்டு மூன்று செவ்விய அசோக புஷ்பங்கள் தங்கள் அழகை ஒப்பிட்டுப் பார்க்க அவள் கன்னத்தைக் காற்றில் அலைந்து தடவிப் பார்த்தாலும், அவற்றின் அழகு அவள் கன்னங்களின் புஷ்டிக்கோ வழவழப்புக்கோ ஈடு கொடுக்க முடியாமல் திண்டாடின. அசோக மரத்தடியில் நின்றாலும் அடியோடு சோகமற்றவளென்று சொல்ல முடியாத அந்தப் பேரழகியின் கமல நயனங்களில் சொல்ல முடியாத சோகச் சாயை விரவிக் கிடந்தது.

zeevaa

அவள் ஓரளவு உயரமாகவே இருந்தாலும் அவள் புஷ்டியான பருவ சரீரம் அந்த உயரத்தைக் குறைத்துக் காட்டவே செய்தது. அவள் விசால வதனத்தின் மெருகில் அவள் கையிலிருந்த பந்தத்தின் ஜ்வாலை சிறிது பிரதிபலித்ததால் பளபளக்கும் தங்கத் தகட்டை ஒத்திருந்த அவள் வதனம், ஏதோ விளக்கேற்றி வைத்திருந்த பிரமையை அளித்தது. அவள் நுதலுக்குக் கீழேயிருந்த விசால விழிகள் இரண்டும் அவ்வப்பொழுது சலனப்பட்டதால் நீரில் அசையும் மீன்களைப் போல் காட்சியளித்தன.

கருத்த விற்புருவங்கள் இரண்டையும் பிரித்து நடுவே இறங்கிய நாசி முகத்தின் அழகை அதிகப்படுத்திக்காட்டியதன்றி, நாசியின் அழகிய முனை கீழே விரித்த செம்பவள உதடுகளை, 'இதோ அமுதம் இருக்கும் இடம்,' என்று சுட்டிக்காட்டுவது போலிருந்தது. அவள் உதடுகளின் சிவப்பும், அதிகமாகப் பருக்காமல் புஷ்பத் தளிர்போல் அமைந்திருந்த நேர்த்தியும், அதில் ஊறிய நீரால் நீரோடிய மாணிக்கத்தை அர்த்தமின்றி அடித்திருந்த நிலையும், எந்த மனிதனையும் அறிவிழக்கச் செய்யும் சக்தியைப் பெற்றிருந்தன. சங்கைப் பழிக்கும் கழுத்தும், கீழேயிருந்த பருவ உடலில் தான் எத்தனை மோகனாஸ்திரங்கள்!

நன்றாகப் பருத்து, பருவத்தால் கெட்டிப்பட்டு அவள் அணிந்திருந்த மரவுரியையும் மீறிப் பக்கவாட்டில் தெரிந்த மார்பின் விளிம்புகளும், மரவுரி ஆடைக்குள்ளேயே விம்மி மரவுரியைக் கிழிக்க முயன்ற இரட்டை அழகுகளின் கூர்மையும், சுருங்கிய இடையின் காரணமாக அந்தப் பகுதியில் லேசாகத் தெரிந்த மரவுரி, அடுத்துக் கீழே எழுந்த பின்னெழில்கள் மீதும், முன்னாலிருந்த கால் தண்டுகள் மீதும் பிகுவுடன் அமர்ந்திருந்த தோரணையும் பிரமிப்பையே அளித்தன. முழங்காலுக்குக் கீழே மரவுரி இல்லாததால் தரையில் ஊன்றிய பாதங்களின் அழகும் ஆடுசதை அறிவுறுத்திய திண்மையும் அவளைச் சக்தியுள்ள வன தேவதையாக அடித்திருந்தது.

zeevaa

அவள் ஆபரணங்களை அதிகமாக அணியவில்லை. காலில் இரண்டு சிலம்புகளை மட்டும் அணிந்திருந்தாள். அவள் தலைக்குழல் மலர்ச் சரமொன்றால் அழகு பெற்றிருந்தது. அவள் குழலை வளைத்துப் போட்டிருந்த கொண்டையும் அவள் நின்ற நிலையைப் போலவே சற்றுச் சாய்ந்திருந்தது. நீண்டு உருண்ட அழகிய கைகளிலொன்று அவள் இடையில் பதிந்திருந்தது. மற்றொன்று பந்தத்தை ஏந்தி நின்றாலும் பந்தத்தைப் பிடித்த முறையிலேயே ஓர் அழகு இருக்கத்தான் செய்தது. பந்தத்தின் மரக் கட்டைனய கேட்கும் நிலையில் அவள் விரல்கள் பந்தத்தில் அழுந்திக் கிடந்தன.

அவள் அழகையெல்லாம் எடைபோட்டு மரத்தில் சாய்ந்து உட்கார்ந்திருந்த விஜயபாகு அவள் அழகில் லயித்திருந்தானே தவிர அவளை யாரென்று கேட்கவுமில்லை. அருகில் அழைக்கவுமில்லை. பேசாமல் உட்கார்ந்தே இருந்தான். மரத்தில் கட்டியிருந்தஅவன் கரியபுரவி மட்டும் அந்த அழகியை நோக்கி ஒரு முறை கனைத்தது. அதன் வாயைத் தனது இடது கையால் சட்டென்று பிடித்து அதன் கனைப்பை நிறுத்திய விஜயன், மறுபடியும் அந்தப் பெண் மீது தனது ஆராய்ச்சி விழிகளை நாட்டினான்.

ஆனால், அவன் மேற்கொண்டு ஆராய்ச்சியைத் தொடர அந்த அழகி இடம் கொடுக்கவில்லை. தான் சாய்ந்திருந்த அசோக மரத்திலிருந்து விலகி இடது கையால் ஓர் அசோக மலரையும் கிள்ளி எடுத்துக் கொண்டு விஜயனிருந்த மரத்தடியை நோக்கி நடக்கலானாள். வலது கையிலிருந்த தீபத்தை இடது கைக்கு மாற்றிக் கொண்டு அசோகமலரை வலது கைக்கு மாற்றிக் கொண்டாள். அதுவரை சோகமாக இருந்த பவள அதரங்களில் புன்முறுவ லொன்றையும் படரவிட்டுக் கொண்டாள்.

அவள் தன்னை நோக்கி வருவதைக் கண்ட விஜயபாகு ஏதோ புஷ்பக் கொடியொன்று நடந்து வருகிறது என்றே எண்ணினான். அவள் எடுத்து வைத்த ஒவ்வோர் அடியிலும் சப்தித்த

zeevaa

காற்சிலம்புகள் இன்பச் சுருதியொன்றை மட்டுமின்றி இன்ப லயத்தையும் கூட்டின. ஒரே சீராக, தாளம் பிசகாமல் நடந்து வந்த அந்த அழகி விஜயபாகுவின் அருகில் வந்ததும் தலை வணங்கியபோது சற்று முன்பு அசோகக்கிளை ஒன்று தாழ்ந்து புஷ்பங்களையும் தாழ்த்திய நினைவு வந்தது விஜயபாகுவுக்கு. அவள் சரீர சமீபத்தாலும், சரீரத்திலிருந்து எழுந்த சுகந்தத்தாலும், கண்ணெதிரே தெரிந்த அவள் முழங்காலுக்கு மேலே சற்றே தெரிந்த தொடையின் பருவச் செழிப்பாலும் உணர்ச்சிகளை உதற விட்டாலும் வெளிக்குக் காட்டிக் கொள்ளாத விஜயபாகு முகத்தையும் குரலையும் கடினமாக்கிக்கொண்டு, ''நீ யார்? இந்த நள்ளிரவில் இங்கு ஏன் வந்தாய்?'' என்று வினவினான்.

அவன் போலிக் கடுமையை நொடிப் பொழுதில் புரிந்து கொண்டாள் அந்தக் கட்டழகி. தனது கையிலிருந்த அசோகமலரை அவனிடம் நீட்டி, ''பெற்றுக் கொள்ளுங்கள் மகாராஜா!'' என்று கூறி மடியில் பிணைந்து கிடந்த அவன் கைகளில் திணித்தாள். திணிக்க அவள் குனிந்த போது திண்ணிய மார்பை மூடியிருந்த மரவுரியின் பாகம் தனது முகத்தைத் தடவியது போன்ற பிரமை ஏற்பட்டது விஜயனுக்கு. அதைவிட அவள் மகாராஜாவென்று தன்னை அழைத்ததால் ஏற்பட்ட பிரமையால் விஜயன் வினவினான், ''மகாராஜாவா!'' என்று, சொற்களிலும் பிரமை ஒலிக்க.

''ஆம், சிங்கள மகாராஜாவை வேறு எப்படி அழைப்பது?'' என்று வினவினாள் அவள்.

''என்னை உனக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டான் விஜயன்.

''உங்களைத் தெரியாதவர்கள் சிங்களத்தில் கிடையாது,'' என்று பதில் சொன்ன அவள், ''நேரமாகிறது எழுந்திருங்கள்,'' என்றும் அழைத்தாள்.

விஜயன் முகத்தில் வியப்பு விரிந்தது. ''எதற்கு நேரமாகிறது?'' என்று வினவினான்.

zeevaa

''என் இல்லம் செல்ல. அருகில் தானிருக்கிறது.'' என்றாள் அவள்.

விஜயன் சற்றே சிந்தித்தான். அதை அவள் கவனிக்கவே செய்தாள். ''சிந்திக்க வேண்டியதில்லை உங்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் எல்லாம் கிடைக்கும்,'' என்று சொன்னாள்.

''நீ யார் என்று சொல்லவில்லையே?'' என்று மறுபடியும் விஜயபாகு கேட்டான்.

''இல்லத்துக்கு வாருங்கள், சொல்லுகிறேன். இங்கு அவகாசமில்லை உம், கிளம்புகள்,'' என்று துரிதப்படுத்தினாள் அந்த வனமலர்.



# 3. பர்ணசாலைக் கதவு

அசோக ஆசிரமமென்றும், அசோக வனமென்றும் ஆதி காலத்தில் அழைக்கப்பட்டு வந்த அந்த உத்தியான வனப்பகுதியில் திடீரென அப்சரஸ் மங்கைகளின் எழிலையும் பழிக்கும் அழகுடன் பெண்ணொருத்தி தோன்றியதையும் அவள் தன்னருகில் வந்து தன்னை விரைவில் கிளம்பி அவளது இல்லத்துக்கு வருமாறு அழைத்ததையும் எண்ணி வியந்த விஜயபாகுவுக்கு என்ன செய்வதென்று விளங்காததால், எட்ட உட்கார்ந்து கழுகுக் கண்களால் தன்னை நோக்கிக் கொண்டிருந்த மூர்சமத்தை நோக்கினான். அவன் கண்களை மூர்சமதின் கண்கள் சந்தித்தாலும் அந்தக் கண்களிலிருந்து விடையேதும் கிடைக்காததால் விஜயன், ''சமத்'' என்று குரல் கொடுக்கவே செய்தான்.

அதன் விளைவாக, சமத் உட்கார்ந்த நிலையைவிட்டு எழுந்திருந்த அதே சயமத்தில் அந்த அழகி மெதுவாக நகைத்து, ''ஏன் மன்னவா! என்னுடன் வர அச்சமாயிருக்கிறதா? அதற்குத் துணை தேடுகிறீர்களா?'' என்று வினவினாள்.

அவள் சிரித்தபோது முத்துக் கட்டியது போன்ற பல்வரிசையின் அழகைக் கவனித்த விஜயபாகு, 'இத்தனை அழகி இந்தக் காட்டில் எப்படி நிர்ப்பயமாக உலாவுகிறாள்? எப்படித் தன்னந்தனியே வருகிறாள்?' என்ற வினாக்களை எழுப்பிக் கொண்டதன்றி, 'வனங்களில் தேவதைகள் உண்டு என்று சொல்கிறார்களே, அது உண்மையாயிருக்குமோ?'' என்றும் தனக்குள் கேட்டுக் கொண்டான்.

அவன் மனத்தில் ஓடும் எண்ணங்களை அவள் புரிந்து கொண்டிருக்க வேண்டும். ஆகவே புன்முறுவல் கொண்டு

zeevaa

சொன்னாள்: ''நான் மோகினிப் பிசாசல்ல, உங்களை அடித்துக் கொன்றுவிட மாட்டேன்,'' என்று.

அவள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கையில் மூர்சமதும் எழுந்து விஜயனுக்கு அருகில் வந்து, ''எசமான்! ஏன் அழைத்தீர்கள்?'' என்று வினவினான் தனது சுபாவமான கரகரத்த குரலில்.

விஜயன் உட்கார்ந்த வண்ணமே பதில் சொன்னான்: ''இந்தப் பெண் என்னை அழைக்கிறாள்,'' என்று.

''எங்கு?'' மூர்சமதும் புன்னகை செய்தான். வினாவைத் தொடுத்தபோது, கரிய தாடி மீசைகளுக்கிடையே அவனது பல் வரிசை பளீரெனப் பளபளத்தது.

''அவள் இல்லத்துக்கு,'' என்றான் விஜயன் எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல்.

''சரி,போங்களேன்'' என்றான் சமத்.

''நீ?''

''என்னை யாரும் அழைக்கவில்லையே!''

இதைக் கேட்ட அந்தப் பெண், ''உங்களை அழைக்க வேண்டிய அவசியமில்லை,'' என்றாள்.

''ஏன்?'' மூர்சமதின் கேள்வியில் நகைப்பு ஒலித்தது.

''மகாராஜாவை அழைக்கும்போது அவர் நிழலை அழைக்க வேண்டிய அவசியமில்லை. அது யார் அழைப்பும் இல்லாமலே தொடரும். மூர்சமத் சிங்கள மகாராஜாவின் நிழல் என்பதை எல்லோரும் அறிவார்கள்,'' என்ற அவள், ''நீங்களிருவரும் என்னுடன் வரப் போகிறீர்களா? நான் போகட்டுமா?'' என்று சிறிது சலிப்பு நிறைந்த குரலில் வினவினாள்.

விஜயன் மேற்கொண்டு பேசாமல் வேகமாக எழுந்தான். ''சரி, வழிகாட்டிச் செல்,'' என்று சொல்ல அவள் திரும்பி அவனுக்கு முன் நடந்தாள் பந்த வெளிச்சம் காட்டி.

zeevaa

மெதுவாகப் பின் தொடர்ந்த விஜயன் அவள் பின்னெழிலையும் கவனித்துப் பிரமித்தான். முதுகு அதிக அகலமில்லாவிட்டாலும் வர்ளிப்பாகவும் உறுதியாகவும் சாட்டை போல் கீழே இறங்கி யிருந்தது. அவள் பருத்த பின்னெழில்கள் இரண்டும் மிகக் கெட்டியாக இருந்ததால் இலங்கு நுண்ணிடையின் அசைவிலேயே அழகுடன் சென்றது. உறுதியான கால்களின் மேல்பகுதியை மரவுரி மறைத்திருந்தாலும் அவள் நடையில் ஆடுசதையும் ஆடாமலே சென்றதால் அவள் அழகுடன் பலமும் கலந்திருந்ததை விஜயன் புரிந்து கொண்டான். இப்படி அவள் கொடுத்த அசோக மலரைக் கையிலேந்திய வண்ணம் அவள் பின்னாலேயே நடந்த விஜயன், அந்த அசோகவனத்தின் எந்தப் பகுதிக்கு எந்தத் திசையில் செல்கிறோம் என்பதை அறியாமலே நடந்து சென்றான்.

அசோகவனத்தை அணு அணுவாக அறிந்திருந்த அந்த அழகி மரங்களுக்கிடையில் நடந்து மேலைப் பகுதியில் நுழைந்தாள். சிற்சில இடங்களில் தடைப்பட்ட கிளைகளை ஒதுக்கி நின்று விஜயபாகுவும் சமதும் தொடர வழிவிட்டு மீண்டும் நடந்தாள். அந்த இடம் விஜபாகுவுக்குப் புதிதல்ல. சிங்களத்தில் எந்த இடமும் அவனுக்குப் புதிதல்ல. எதிரிகளை ஏமாற்ற இந்த அசோக ஆசிரமத்திலும் சரி, ஹாகலா மலைத் தொடரின் மற்றப் பகுதி களிலும் சரி, பல முறை அந்தக் கரிய புரவியில் வாயு வேகத்தில் பயணம் செய்திருக்கிறான். இருப்பினும் பெண்ணொருத்தி, அதுவும் நள்ளிரவில் அங்கு வந்ததும் தங்களை அழைத்துச் சென்றதும், அழைத்துச் சென்றதில் நல்ல அனுபவத்தைக் காட்டியதும் பெரு விந்தையாயிருந்தது அவனுக்கு. எப்படியும் இவள் யார் என்பதை அவள் இல்லத்துக்குச் சென்றதும் புரிந்து கொள்ளலாமென்ற எண்ணத்தில் அவளை மௌனமாகவே தொடர்ந்து சென்றான்.

சுமார் இரண்டு நாழிகை நேரத்திற்குப் பிறகு அந்த வனத்தைத் தாண்டி அதை அடுத்திருந்த மலைப் பகுதிக்கு வந்த அந்தப்பெண் சற்றுத் தூரத்தே மலைச்சரிவிலிருந்த ஒரு பர்ணசாலையைக் காட்டி, "அதோ, அதுதான் எனது இருப்பிடம்," என்றாள்.

zeevaa

விஜயன் அந்த இடத்தை அறிந்தேயிருந்தாலும் அங்கு அதற்கு முன்னால் எந்த குடிசையும் இல்லாததால், ''ஒரே ஒரு பர்ணசாலை தான் இருக்கிறது,'' என்றான் ஏதோ பேச வேண்டுமென்பதற்காக.

''ஆம், மகாராஜா,'' என்றாள் அந்தப் பெண். ''தனிமைக்கும் சாந்திக்கும் இதைவிடச் சிறந்த இடம் கிடையாது. இங்கு வர எல்லோரும் பயப்படுவார்கள்,'' என்றும் சொன்னாள் அவள்.

புரிந்ததற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் அவன். எதிரே தெரிந்த மலையில் இரண்டு சம நிலங்கள் தெரிந்ததால் ஏதோ அடுக்கு அடுக்காக மலை இருப்பது போன்ற பிரமையை ஏற்படுத்தியது இயற்கை. மலையிலிருந்து இறங்கிய வெள்ளி போன்ற அருவியொன்று அந்த மலைத்தட்டுகளில் ஒன்றில் மறைந்து விட்டதைக் கண்ட விஜயன் அது இராவணன் அருவி யென்றும் அது இறங்குமிடத்தில் அது வாவியாகத் தேக்கப் பட்டிருப்பதையும் ஏற்கெனவே அறிந்திருந்ததால் மனத்தில் இன்ப அலைகள் பல பாய்ந்து சென்றதன் விளைவாகச் சட்டென்று சில நிமிடங்கள் நின்றுவிட்டான். பிறகு அந்தப் பெண்ணை நோக்கி, ''பெண்ணே, அதோ அந்த இராவண அருவியிலும் சரி, எந்த உஷ்ண காலத்திலும் பனிபோல் குளிர்ச்சியுடனிருக்கும் வாவியிலும் சரி, நான் எத்தனையோ முறை நீராடியிருக்கிறேன். அதோ பக்கத்து மலைகளில் தெரியும் இராவண அருவியிலும் சரி, இங்கு நீராட வரும் குகைவழியிலும் சரி, நான் பலமுறை எதிரிகளை ஏமாற்றி மறைந்திருக்கிறேன். இந்த இடங்கள் எனக்குப்புதிதல்ல. ஆனால் இங்கு நீ தனியாகஉறைவது புதிது. அதுவும் பர்ணாசாலை கட்டிக் கொண்டு வாழ்வது மிகவும் புதிது. நான் இங்கு அலைந்த காலங்களில் இந்தப் பர்ணசாலை கிடையாது. இங்கு யாரும் வரவே அஞ்சுவார்கள்,'' என்று சொன்னான். ''அப்படியிருக்க, நீ மட்டும் எப்படி பயமின்றி தங்குகிறாய்? ஏன் தங்குகிறாய்?'' என்று கேட்கவும் செய்தான்.

zeevaa

அதுவரை அவனுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு வழிகாட்டிச் சென்ற அந்த அழகி சிறிது நின்று திரும்பி அவனைப் பார்த்தாள். ''மன்னவா! நான் இங்கு தங்க எண்ணிப் பர்ணசாலையும் அமைத்துக் கொண்டது உலகத்தின் கண்களில் படாதிருக்க. ஆனால் அந்தச் சாந்திக்கும் இப்பொழுது தடை ஏற்பட்டுவிட்டது. அரசியல் மீண்டும் என்னை அழைத்துக் கொண்டது. உங்களிருவரையும் பாதுகாத்து அழைத்துச் செல்ல எனக்கு உத்தரவும் இடப்பட்டது. அந்த உத்தரவை இப்பொழுது நிறைவேற்றுகிறேன்'' என்று சொன்ன அவள் துக்கப் பெருமூச்சு விட்டாள்.

விஜயன் அவளை விந்தைக் கண்களுடன் பார்த்தான். ''பெண்ணே! உன் தனிமையையும் சாந்தியையும் நான் கெடுக்க விரும்பவில்லை. நீ உன் குடிசையில் சொல்ல வேண்டியதை இங்கேயே சொன்னால் நாங்கள் இப்படியே திரும்பிச் சென்று விடுகிறோம்,'' என்றான் விஜயன் அவள் மனத்தைத் துன்புறுத்த இஷ்டப்படாததால், கனிவு நிறைந்த குரலில்.

அவள் நீள் விழிகள் அவன்மீது நன்றாகவே நிலைத்தன. ஏதோ சொல்ல உதடுகளை அசைத்தாள். ஆனால் சொல்ல முற்பட்டதைச் சொல்லாமல், ''வாருங்கள், பர்ண சாலையில் பேசிக் கொள்வோம்,'' என்று கூறிவிட்டு மலைச்சரிவை நோக்கி வேகமாக நடந்தாள்.

அவள் ஏதோ சொல்ல முற்பட்டதையும் விஜயன் கவனித்தான், சொல்ல முற்பட்டதைச் சட்டென்று அடக்கிப் பேச்சை வேறு திசையில் திருப்பிவிட்டதையும் கவனித்தான். ஆகவே, அவளை வற்புறுத்த இஷ்டப்படாமல் அவளைத் தொடர்ந்து சென்றான். மூர்சமத் இவை அனைத்தையும் கவனித்தாலும் கவனிக்காதவன் போலவே எசமானனைப் பின்பற்றினான். அவர்களுக்குப் பின்னால் புரவிகளிரண்டும் ஒன்றையொன்று உராய்ந்து கொண்டு சென்றன.

முன்னே சென்ற அந்த வண்ண மலர், அடுத்து அவர்களைத் திரும்பிப் பார்க்கவே இல்லை. வேகமாய் நடந்து மலைச் சரிவில்

zeevaa

அனாயாசமாக ஏறினாள்! சிறிது தூரம் ஏறியதும் பர்ணசாலையை அடைந்து அதன் வாயிலில் நின்றாள். பர்ணசாலை அவள் அழகுக்குச் சரியான பின்னணியை அமைத்திருந்தது.

அதன் மீது படர்ந்திருந்த குருக்கத்திக் கொடியொன்று முனையில் தனது மலர்களை ஆட்டிக் கொண்டிருந்தது. அவள் விஜயனைத் தலைவணங்கி வரவேற்று மேலே ஆடிக்கொண்டிருந்த குருக்கத்தி மலர்களைக் காட்டி, ''உங்களைக் குருக்கத்தி வரவேற்கிறது,'' என்றாள்.

அவளை நெருங்கிவிட்ட விஜயன், ''உன் இல்லத்துக்கு வந்துவிட்டோம்,'' என்று கூறிவிட்டு, ''வா சமத்,'' என்று மூர் சமதையும் அழைத்தான்.

''அவர் அந்த மரத்தடியில் தங்கட்டும்,'' என்று எட்ட இருந்த ஒரு பெரிய ஆலமரத்தைக் காட்டிய அந்தப் பெண், ''நீங்கள் மட்டும் உள்ளே வாருங்கள்,'' என்று அழைத்தாள்.

''ஏன், சமதும் வந்தாலென்ன?'' என்று வினவினான்.

''இது இப்பொழுது பயமற்ற பிரதேசமல்ல. வெளியே ஒருவர் காவலிருப்பது நல்லது; அதுவும் மலை அடிவாரத்தில் ஒரு கண்ணை வைத்திருப்பது நல்லது,'' என்று கூறினாள்.

அவள் குரலில் இருந்த திடத்தைக் கவனித்த விஜயன் அவள் சொல்வதில் பொருளிருக்க வேண்டுமென்று புரிந்து கொண்டதால், ''சரி, சமத்! நீ வெளியே காவலிரு,'' என்று உத்தரவிட, சமத் ஆலமரத்தடிக்குச் சென்று இரு புரவிகளையும் தன் எதிரில் தரையில் மே ,விட்டு, தான் மரத்தடியில் அமர்ந்துகொண்டு மலையடி வாரத்தைக் கவனிப்பதற்குப் பதில் பர்ணசாலையையே கவனித்தான்.

அவன் உட்கார்ந்ததும் அந்தப் பெண், விஜயனைப் பர்ணசாலைக்குள் போகவிட்டு, அவள் மட்டும் வெளியே நின்று

சுற்றுமுற்றும் நோக்கினாள். பிறகு அவளும் நுழைந்தாள் பர்ணசாலைக்குள். அடுத்துப் பர்ணசாலைக் கதவும் மூடப்பட்டது. அதைக் கண்ட மூர்சமத் வெறுப்புக் கலந்த உறுமல் ஒன்றை வெளியிட்டான். ஆனால் மூடிய நீண்ட நேரத்துக்குப் பிறகும் பர்ணசாலைக் கதவு திறக்கப் படவே இல்லை



# 4. துரோகியின் மகள்

மலைச் சரிவிலிருந்த சிறு ஆலமரத்தின் அடிவாரத்தில் அமர்ந்து இரு புரவிகளையும் எதிரில் மேயவிட்டுப் பர்ணசாலைக் கதவையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த மூர்சமத், நேரம் ஏற ஏற ''உள்ளே என்னதான்இத்தனை நேரம் நடக்கும்?'' என்று எண்ணி வெறுப்புக் கலந்த முனகலொன்றை 'ஹூம்' என்ற ஒலியின் மூலம் வெளிப்படுத்தினான். சிங்களத்தின் சுதந்திரம் சோழர்களிடம் பறிபோயிருக்கும் நிலையில் சிங்கள இளவல் மறுபடியும் இன்னொருத்தியுடன் சிங்கார லீலைகளில் இறங்கிவிட்டானென்ற நினைப்பு அவன் சித்தத்தில் பேரெரிச்சலைக் கிளப்பியிருந்தது. திரிலோக சுந்தரியிடமிருந்து பிரிந்து சில தினங்கள் கூட ஆகாத நிலையில் இன்னொருத்தியிடம் சரசம் செய்ய இளவலுக்கு எப்படித் துணிவு வந்தது என்று எண்ணியதால், ''இந்தக் காமுகனா சிங்களத்துக்குச் சுதந்திரம் வாங்கித் தரப்போகிறான்?'' என்று தனக்குள் வினா ஒன்றையும் எழுப்பிக் கொண்டான் சமத். கலிங்கத்தில் எத்தனையோ ஆபத்துக்கிடையிலும் அவன் திரிலோக சுந்தரியுடன் நடத்திய லீலா விநோதங்களை நினைத்து, பிறவிக் குணம் யாரையும் விடாது என்ற தீர்மானத்தில் மரத்தின் அடியில் நன்றாகச் சாய்ந்து கொண்டு கண்களையும் மூடினான்.

ஆனால் மூர்சமத் நினைத்தபடி பர்ணசாலைக்குள் லீலைகள் எதுவும் நடக்காதது மட்டுமின்றி நேர் விரோதமான சர்ச்சை நடந்து கொண்டிருந்தது. பர்ண சாலையை அணுகியதும் கதவைத் திறந்து விஜயனை உள்ளே அனுப்பித் தானும் நுழைந்து கதவை மூடிவிட்டு

zeevaa

அந்த பிறைநுழையா குடிசைக்குள்ளிருந்த ஒரு விளக்கைப் பந்தத்தின் ஜ்வாலையினால் ஏற்றி விட்டு, பந்தத்தைத் தரையில் தீய்த்து அணைத்தாள். அந்த விளக்கொளியில் பர்ணசாலையின் உட்புறத்தைக் கவனித்த விஜயன் பெரும் பிரமிப்புக்கு உள்ளானான். ஓர் அழகிய பருவ மங்கை இருக்கக்கூடிய பர்ணசாலையாக அது தெரியவில்லை. பந்தத்தின் ஜ்வாலை கொண்டு அவள் ஏற்றிய விளக்கு சிங்கத்தின் முகம் போல் அமைக்கப்பட்டிருந்ததால், அதன் நீட்டிய நாக்கில் இருந்த பெரிய திரியின் ஜ்வாலை மேலிருந்த இரு கண்களை நெருப்புப் போல் அடித்திருந்தது. அதன் அமைப்பிலிருந்து அந்தச் சிங்கத்தின் வாய்க்குள் எண்ணெய் விட்டால் அது ஒருநாள் முழுவதும் எரிய முடியுமென்றும், சிங்கவிளக்கின் கண்களில் மாணிக்கங்கள் இரண்டு பதிக்கப் பெற்றிருந்ததால் அவற்றிலிருந்து நெருப்புக் கதிர்கள் வருவது போன்ற பிரமை ஏற்பட்டதால், அந்த விளக்கு ரத்தின புரத்தில் செய்யப்பட்ட விளக்கென்பதை விஜயபாகு புரிந்து கொண்டான். அதன் விளைவாக அந்தப் பெண் ரத்தினபுரியைச் சேர்ந்தவளாக இருக்க வேண்டுமென்ற முடிவுக்கும் வந்தான். ரத்தினத்தை வெட்டி எடுக்கக்கூடிய அந்தப் பகுதியிலிருந்து இந்தக் கரடு முரடான மலை நாட்டுக்கு அவள் ஏன் வந்தாள் என்றும் சிந்தித்தான்.

தவிர அந்தக் குடிசைக்குள் போகப் பொருள்கள் எதுவுமே இல்லாததையும் ஓரங்களில் வாட்கள், ஈட்டிகள், குறு வாட்கள், கேடயங்கள் இவையே இருந்ததையும் கவனித்த சிங்கள இளவல் ''இது குடிசையா அல்லது படை வீடா?'' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். மலைச் சரிவிலிருந்தாலும் அந்தக் குடிசைத் தரை பதனப்பட்டிருந்ததையும், படுக்க வசதியாகச் செய்யப் பட்டிருந்ததையும் பார்த்து, ''என்ன இருந்தாலும் பெண்ணின் கை தரையில் பட்டிருக்கிறது,'' என்று சிலாகித்துக் கொண்டான்.

zeevaa

இத்தனையுடன் பாய் மட்டும் ஒன்றுக்கு இரண்டாக மூலையில் சாத்தப்பட்டிருந்ததைக் கண்டு ''இங்கு வேறு யாராவது வருகிறார்களோ?'' என்று சிறிது சந்தேகத்தில் இறங்கினாலும் அடுத்த விநாடி அந்தச் சிந்தனையை உதறி, ''சே! இவள் அப்பேர்ப்பட்டவளாக இருக்க முடியாது. களங்கமற்ற முகம். யாரும் தொடாத பருவ உடல்,'' என்று சொல்லிக் கொண்டு அந்தப் பெண்ணைப் பற்றித் தான் தவறாக நினைத்ததற்கு வருந்தவும் செய்தான்.

அவன் கண்கள் குடிசையின் உட்புறத்தை ஆராய்ந்தவரை அந்த அழகி ஏதும் பேசாமலும், அவன் ஆராய்ச்சிக்குக் குறுக்கே வராமலும் சிலையென நின்றிருந்தாள். குடிசையை ஆராய்ந்த பின்னர் கண்களை உயர்த்திய விஜயன் தனது எதிரே சிங்க விளக்குக்கு அருகில் அந்த அழகி ஆடாமல் அசையாமல் சிலையென நின்றிருப்பதைக் கவனித்து, ''மன்னிக்க வேண்டும்.'' என்று உரையாடலை மெதுவாகத் துவங்கினான்.

அவள் அவனை உற்று நோக்கிய வண்ணம் நீண்ட நேரம் மௌனமாகவே நின்றாள். பிறகு பவள இதழ்களைத் திறந்து, ''எதற்கு மன்னிப்பு?'' என்று வினவினாள்.

''இந்தப் பர்ணசாலையை ஆராய்ந்ததற்கு,'' என்றான் விஜயன்.

அவள் சொன்னாள்: ''அதில் தவறில்லை. அதற்கு மன்னிப்புத் தேவையில்லை,'' என்று.

''வேறு எதற்கு மன்னிப்புத் தேவை?'' என்று விஜயன் வினவினான்.

''அசோக வனத்தில் என் உடலை ஆராய்ந்ததற்கு மன்னிப்பு கேட்கலாம்,'' என்றாள் அந்தப் பெண்.

zeevaa

விஜயன் பதில் சொல்ல முடியாததால் சங்கடத்தால் அசைந்தான். பிறகு சமாளித்துக் கொண்டு, ''நள்ளிரவில் கானகத்தில் பருவ நங்கையொருத்தி தோன்றுகிறாள். அவளை ஆராயாமல் என்ன செய்வது?'' என்று வினவினான்.

''ஆராய அவசியமில்லை. யாரென்று கேட்கலாம்,'' என்றாள் அவள். புன்முறுவலொன்றையும் இதழ்களில் படர விட்டாள்.

''யாரென்று கேட்டேன். பதிலில்லை. இங்கு பதில் சொல்வதாக அழைத்து வந்தாய்...'' விஜயன் சொற்களை முடிக்கவில்லை...

''உம், சொல்லுங்கள் மேலே, துணிவுடன் சொல்லுங்கள்,'' என்றாள் அவள்.

''மூர்சமதை மரத்தடிக்கு விரட்டினாய். என்னை மட்டும் உள்ளே அழைத்து வந்தாய். கதவையும் சாத்திவிட்டாய்...'' என்றான் விஜயன்.

''அதனாலென்ன?'' என்று அவள் கேட்டாள்.

''புராணத்தை மாற்றுகிறேனா?''

''ஆம், இது இராவணன் மலை. அடுத்த மலைக்குகையில் இராவணன் சீதையைச் சிறை வைத்ததாகப் புராணம் இருக்கிறது.''

''ஆம்.''

''ஆனால் நீ இங்கு என்னைச் சிறைப்படுத்தி இருக்கிறாய். புராணம் தலைகீழாக இருக்கிறது.''

இதைக் கேட்ட அந்தப் பருவ மங்கை தனது உடலை ஒரு முறை அசைத்தாள். ''தவறு வீரரே, முதலில் ராமாயணம் புராணமல்ல, சரித்திரம். இந்த இலங்கை முழுவதும் ராமாயணப் பெயர்களும் சான்றுகளும் இருக்கின்றன. தவிர நீங்களும் ராவணனல்ல, நானும்

zeevaa

சீதையல்ல. உங்களைச் சிறை வைக்க நான் தூக்கி வரவு மில்லை. ராவணன் காலத்தில் இந்த இலங்கை சுதந்திர மாயிருந்தது. அன்று இதன் அரசனைக் கண்டு உலகம் நடுங்கியது. இப்பொழுதுள்ள இலங்கை அரசர் உலகைக் கண்டு நடுங்குகிறார், ஓடுகிறார், மறைகிறார். இது இன்றைய சரித்திரம். அன்றும் பாரதத்திலிருந்து படையெடுப்பு வந்தது. இன்றும் அங்கிருந்து தான் வந்திருககிறது. அன்று பாரதத்தின் பெண்ணைத் தூக்கி வந்து இந்த நாட்டு அரசன் சிறை வைத்தான். இந்த நாட்டு மன்னனொருவனுடைய மனைவியையும், புத்திரியையும் இன்று சோழர்கள் சிறையெடுத்துப் போயிருக்கிறார்கள். இந்த நாடு சோழர்களால் அழிக்கப்பட்டு வருகிறது. இந்த அழிவை நிறுத்த வேண்டும். இன்றைய சரித்திரம் மாற்றி எழுதப்படவேண்டும்,'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் பேசிய அவள் கண்கள் கோபத்தால் ஜொலித்தன; முகமும் சிவந்தது; அவள் உடலே உணர்ச்சி மிகுதியால் நடுங்கியது.

விஜயன் விந்தைக் கண்களுடன் அவளை நோக்கினான். அவள் புராணத்தைச் சரித்திரமாகக் கூறியதைப் பற்றி நினைத்து வியப்பின் எல்லையை அடைந்தான். தான் நாட்டை விட்டு ஓடிவிட்டதாக அவள் குறிப்பிட்டது தன்னைப் பற்றிய குற்றச்சாட்டு என்பதை உணர்ந்தான். இருப்பினும் அவள் சுதந்திர உள்ளத்தைப் பெரிதும் உள்ளூர மெச்சினாலும் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், ''நீ சிறந்த அறிவாளி பெண்ணே. புராணத்தைச் சரித்திர மாக்கி விட்டாய். உன் அரசனைத் துரோகியாக்கி விட்டாய். உன் கற்பனை மெச்சத் தகுந்தது,'' என்றான். போலிச் சலிப்பைக் குரலில் காட்டி.

அவள் அவன் உட்கார்ந்திருந்த இடத்தை நெருங்கக் காலடி எடுத்து வைத்தவாறு நின்றாள். நீங்கள் இருக்குமிடத்திலிருந்து சுற்றிலும் பாருங்கள்.

zeevaa

*நீங்கள் முதலில் போர்ப் பாசறை அமைத்த கடாரக் கிராமத்திலிருந்து இதுவரையுள்ள பகுதிகளெல்லாமே மலைகளுக் கிடையில் இருக்கிறது. இதை ராவணன் நந்தவனத்தின் மதில்க ளென்றும் ஆதி மக்கள் அழைத்து வந்திருக்கிறார்கள். சமானாலாவி லிருந்து ஹாக்கலா மலை வரை, பித்ரோத்தல்ல - காலா மலையி லிருந்து காலிக்காமகண்டி வரையுள்ள இந்தப் பெரும் மலை சூழ்ந்த நிலப்பரப்பு ராவண நந்தவனமாக நினைக்கப் படுகிறது. ஹாக்கலா மலைப்பாறைகளுக்கு அப்புறம் இருக்கும் சமபூமி சீதாதலாவா (சீதா சமவெளி) என்றும், அங்குதான். சீதையைத் திரிஜடையுடன் ராவணன் மறைத்து வைத்திருந்தானென்றும் மக்கள் நம்புகிறார்கள். தவிர, சீதாவாக பட்டணம் இருக்கிறது, சீதாவாக நதி இருக்கிறது. எல்லாம் பொய்யா? அப்படியானால் உண்மை எது?'' என்று வினவினாள் அந்தப் பெண்.

நாட்டினிடம் அவளுக்கிருந்த பற்றைப் பற்றியும், அவள் அதை அணுஅணுவாக அறிந்திருந்த விதத்தையும் எண்ணிப் பிரமித்தான் விஜயபாகு. ''இந்தப் பற்று அனைவருக்குமிருந்தால் சோழர்கள் இங்கு தங்க முடியுமா?'' என்று நினைத்தான். அந்த நினைப்பின் விளைவாக ''பெண்ணே! உன் நாட்டுப் பற்று என்னை வியக்க வைக்கிறது. நீ யார்? உன் பெயர் என்ன? இங்கு எதற்காகத்

---

* This District is included within the steep ranges of mountains in ancient legends, called the walls of Rawana's garden, which extended from Samanala to Hakgalla, and from Pedrotalla-galla to Gallegamma Kande. At the northern end of Hakgalla Mountain, is the Seetha Talawa (Plain of Seeta), Where the Goddess is said to have been conceled with Trisida, the niece of Rawana, who was her sole companion.

-An Historical' Political & Statistical Account of, ceylon" -By C. Pridham, Esq., B. A, F. R. G. S Vol. 1, page 23.

zeevaa

தனிமையில் வாழ்கிறாய்? இந்த இடத்தில் இவ்வளவு போர்க் கலங்கள் எதற்கு?'' என்று வினவினான்.

''அதற்கு முன்பு ஒரு கேள்விக்கு விடை சொல்லுங்கள்,'' என்ற அந்தப்பெண் ''வாதகிரிப் போர் நடந்த போது அங்கிருந்து ஏன் மறைந்து விட்டீர்கள்? இந்த மூன்று மாத காலம் எங்கு போயிருந்தீர்கள்?'' என்றும் கேட்டாள் ஆத்திரத்துடன்.

''நான் விடை சொல்லு முன்பு நீ யார் என்பதைச் சொல்,'' என்று சற்றுக் கடுமையுடன் கேட்டான் விஜயன்.

அவள் முகத்தில் சிந்தனைச் சாயை சிறிது விரிந்தது: ''என் பெயர் சுடர்விழி'' என்றாள் அவள் மெதுவாக.

''தமிழ்ப்பெயராக இருக்கிறதே?'' என்றான் விஜயன்.

''தந்தை வைத்த பெயர்,'' என்றாள் அவள்.

''உன் தந்தை யார்? பெயர் என்ன?'' என்று விஜயன் வினவினான்.

அவள் முகம் திடீரெனச் சோபை இழந்தது. ''உங்கள் விரோதி. நாட்டின் துரோகி,'' என்றாள் அவள் துடிக்கும் உதடுகளுடன்.

''பெயர்?'' என்று கேட்டுக் கொண்டே எழுந்தான் விஜயன்.

அவள் தந்தையின் பெயரைச் சொல்ல அவசியமில்லாது போயிற்று. வெளியே மூர்சமதின் உக்கிரமான குரல் ஒலித்தது. ''இன்னும் ஒர் அடி எடுத்து வைத்தால் உன்னைத் தூக்கி மலைச் சரிவில் எறிந்து விடுவேன்,'' என்று.

''இது என் மகளின் இல்லம். என்னைத் தடுத்தால் இங்கேயே பிணமாகி விடுவாய்,'' என்று ஒலித்தது மற்றொரு கடுமையான குரல்.

zeevaa

அந்த இரண்டாவது குரலைக் கேட்ட விஜயன் ஸ்தம்பித்து நின்றுவிட்டான். ஒரு முறை சுடர்விழியை நோக்கினான். அவள் முகத்தில் ஈயாடவில்லை. உதடுகள் லேசாக அச்சத்தால் துடித்தன.



zeevaa

# 5. ரவிதேவன்

இராவண மலைச் சரிவின் பர்ணசாலையில் இரவு நேரத்தில் வனத்தில் தோன்றிய வண்ண மலரின் பெயர் சுடர்விழி யென்பதையும், அவள் தந்தை தனது விரோதியென்பதையும் நாட்டுத் துரோகியென்பதையும் அவள் வாயாலேயே சொல்லக் கேட்ட சிங்கள இளவலான விஜயபாகு முதலில் பெருவியப்பே அடைந்தானென்றாலும் பர்ணசாலைக்கு வெளியே கேட்ட இரண்டாவது குரலைக் கேட்டதும் கொடிய கோபத்துக்கே உள்ளானான்.

அந்தக் குரலைக் கேட்ட மாத்திரத்தில் சுடர்விழியின் கண்கள் சோபை இழந்துவிட்டதையும், அச்சம் அந்த விழிகளை ஆட் கொண்டதையும் கவனித்ததும் அவளிடம் ஏற்பட்ட கருணை, முதலில் ஏற்பட்ட கோபத்தைச் சிறிது குறைக்கவே மெதுவாகப் பர்ணசாலைக்கு உள்ளிருந்த அந்தப் பெண்ணை நோக்கி, "சுடர் விழி அஞ்சாதே, கதவைத்திற," என்று கூறினான்.

உள்ளத்தில் எழுந்த அச்சத்தினால், கதவைத் திறந்ததும் மன்ன னுக்கும் தனது தந்தைக்கும் சண்டை மூளுமென்ற நிச்சயத்தினால், சுடர்விழி கதவை உடனடியாகத் திறக்கவில்லை. அவள் மனத்திலோடிய எண்ணங்களைப் புரிந்து கொண்டே விஜயன் அவளை அனுதாபத்துடன் நோக்கி, "பெண்ணே! நீ நினைக்கிறபடி எதுவும் நேரிடாது. கதவைத் திற." என்று வலியுறுத்திச் சொல்லியும், அவள் அசையாததால் அவனே பர்ணசாலைக் கதவைத் திறந்து கொண்டு வாயிலில் நின்றான்.

zeevaa

வெளியேயிருந்த நிலவரம் விஜயபாகுவுக்கும் விந்தையாயிருந்தது. மூர்சமத் தனது உலக்கைக் கைகளால் ராட்சஸன் போன்ற சுடர்விழியின் தந்தையைக் குழந்தையைப்போலத் தலைக்குமேல் தூக்கி மலைச்சரிவில் எறிந்துவிடச் சித்தமாயிருந்ததைக் கவனித்ததும், ''சமத்! ரவி தேவனைக் கீழே விடு'' என்று கட்டளையிடும் தோரணையில் சொற்களை உதிர்த்தான் விஜயன்.

அந்தக் கட்டளைக்குப் பிறகும் மூர்சமத் தனது பெருவிழிகளை மன்னனை நோக்கித் திருப்பினான் கெஞ்சும் பாவனையில். 'இவனை எறிந்து கொன்றுவிட அனுமதி கொடுங்கள்' என்று சமதின் ராட்சஸ விழிகள் கேட்டன.

அந்த விழிகளையும் பார்த்து, மேலே சமதின் கைகளில் தத்தளித்துக் கொண்டிருந்த ரவிதேவனையும் பார்த்து, ''சமத்! இவனைக் கீழே விடு, விசாரிப்போம்'' என்று சற்றுக் கடுமையாகவே உத்தரவிடவே இஷ்டமின்றிக் கையிலிருந்த ரவிதேவனைச் சட்டென்று நிலத்தில் போட்ட சமத், நிலத்தில் விழுந்த அவனை வெறுப்புடன் ஆராயவும் முற்பட்டான்.

ரவிதேவன் மூர்சமதைப் போலவே உயரமும் பருமனுமாய் ராட்சஸன் போலிருந்ததன்றி அவன் கைகளும் நீண்டு வளைந்து இயங்கக்கூடிய பாகுபாட்டைப் பெற்றிருந்தன. அவன் விசாலமான நெற்றியும், தலையில் கத்தரித்து விடப்பட்டிருந்த முரட்டுக் குழலும், தீட்சண்யமான கண்களும் அவன் சிறிதும் அச்சமற்றவனென்பதை நிரூபித்தன. அவன் உடலிலிருந்த பல தழும்புகள் அவன் பல போர்களைக் கண்டவனென்பதற்கு அத்தாட்சியாக விளங்கின நிலத்திலிருந்து எழுந்து நின்றபோது அவன் கால்களின் நீளமும் உரமும் அவன் பலத்துக்குச் சான்று கூறின. அத்தனை பலமும் மூர்சமதுக்கு முன்பு பயனற்று விட்ட காரணத்தினால் மகாவீரனான ரவிதேவன் மன்னன் முன்பு தலைகுனிந்து நின்றான்.

zeevaa

அவன் அப்படித் தலைதாழ்த்தி நின்றதைக் கவனித்த விஜயபாகு அவனை நோக்கி, ''சிங்களப் படைத் தலைவனே! உன் நண்பன் காலன் எங்கே?'' என்று வினவினான்.

ரவிதேவன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. சித்தித்துப் பதில் சொன்னபோது அவன் குரலில் அடக்கம் பெரிதும் ஒலித்தது. ''மலை நாட்டில் இருக்கிறான்; தங்களின் அடிபணியக் காத்திருக்கிறான்'' என்றான் ரவிதேவன்.

அதற்குச் சிங்கள இளவல் பதில் சொல்லாமல் சிறிது நேரம் சிந்தித்துவிட்டு மூர்சமதையும் ரவிதேவனையும் அறிமுகப்படுத்த முற்பட்டு, ''ரவிதேவா! இவன்தான் மூர்சமத். எனது மெய்க் காவலன். மெய்க்காவலன் என்பதைவிட எனது உடன்பிறவா சகோதரன் என்று கூறுவதுதான் பொருத்தமாகும்'' என்று சொல்லிவிட்டு, ''மூர்சமத்! ரவிதேவன், காலன் என்ற இருவரும் எனது படைத்தலைவர்கள். சிங்களத்தின் இணையற்ற வீரர்கள்'' என்று மூர்சமதை நோக்கிக் கூறினான்.

இவ்வண்ணம் விஜயபாகுவால் அறிமுகப்புடுத்தப்பட்ட பின்பு ரவிதேவன் மூர்சமதை நோக்கித் தலைதாழ்த்தினான் லேசாக. அத்துடன் சொன்னான்: ''மன்னரின் சகோதரர் எனக்கு எசமானர்'' என்று.

மூர்சமத் சற்று நிதானித்துப் பதிலுக்கு ரவிதேவனுக்கு தலைவணங்கிவிட்டு ஏதும் பேசாமல் தான் உட்கார்ந்திருந்த ஆலமரத்தடிக்குப் பழையபடி சென்று உட்கார்ந்து கொண்டாலும் ரவிதேவன்மீது வைத்து கண்ணை வாங்கவில்லை. மூர்சமதின் போக்கினால் ரவிதேவன் சற்றும் சலிக்காமல், ''மகாராஜா! இந்த் அரக்கனை எப்பொழுது பிடித்தீர்கள்?'' என்று வினவினான்.

''வாதகிரியிலிருந்து சென்றபின்பு இவன் நட்பு எனக்கு கிடைத்தது. எத்தனையோ துர்ப்பாக்கியத்தில் இவன் கிடைத்தது பெரும் பாக்கியம்'' என்று மூர்சமதின் பெருமையை எடுத்துச் சொன்னான் விஜயன்.

zeevaa

துர்ப்பாக்கியமென்று எதைக்குறிப்பிடுகிறான் மன்னன் என்பதை ரவிதேவன் உணர்ந்தேயிருந்ததால் வருத்தம் கலந்த பார்வை யொன்றை மன்னன்மீது திருப்பி, "மகாராஜா! ருஹூனாவில் *கஜாரகாமாமீது சோழர்கள் படையெடுத்து வந்தபோது நானும் காலனும் அவர்களுடன் சேர்ந்ததற்குக் காரணமிருக்கிறது. அப்பொழுது நாங்கள் சோழர்களுடன் சேர்ந்திராவிட்டால் இப்பொழுது ருஹூனா தங்கள் வசமிருக்காது. வாதகிரியின் கதையும் வேறாயிருந்திருக்கும். வாதகிரி மலைக்கோட்டை அத்தனை பலமானதல்ல. நானும் காலனும் சோழரிடம் நட்புக் காட்டாதிருந்தால் வாதகிரியென்ன, சுற்றுப்புறம் முழுவதும் சோழர்வசமாயிருக்கும். மூன்று மாத காலத்துக்குமேல் ஒரு கோட்டையை எதிரிகளிடமிருந்து காப்பதும், மன்னன் நாட்டி லில்லாததை மறைப்பதும் சுலபமென்று நினைக்கிறீர்களா?" என்று வினவினான்.

*கஜாரகாமா எனும் கடாரகாமாவின் பெயர் பழைய சிந்தனை களை எழுப்பியதால் விஜயபாகு தனது வீழ்ந்த தலைநகரை, அதன் மலைப்பகுதியை, புராணத்தை எண்ணினான். கடார கிராமப் பகுதிகள் வேடர்களின் ஆதிக்கத்திலிருந்ததையும், அங்குதான் *வள்ளியம்மை குழந்தையாக பிறந்து வளர்ந்து போர்த் தெய்வ மான முருகனை மணந்ததையும் நினைத்து அந்த போர்த்தெய்வம் நமக்கு ஏன் உதவவில்லை என்றும் நினைத்துப் பார்த்தான். மேலும்

---

* The great warriors of the great King, the mighty ones with great pride Ravideve and Cala..." - Culavamsa - by Wilhelm Geigar, Part-I Page 207.
* Kajaragama is another name for Kataragama, Gama is derived form the Sanskrit grama, The metropolis is anohter example. Magama from Sanskrit Mahagrama-A Short History of Ceylon - by H.W. Codrington - Page 3.
* Dambana section of the Vedder sect, found goddess Valliamma as child in the forest near Kataragama and reared her till war God Skanda married her-Ancient Ceylon - by H. PARKER - Page 114.

zeevaa

நினைத்தான். 'பௌத்தனான எனக்கு சநாதனக் கடவுளான கந்தன் எப்படி உதவுவான்?' என்று இப்படிப் பல நினைவுகளில் ஆழ்ந்துவிட்ட விஜயபாகு கேட்டான்: ''நான் சென்ற பிறகு என்ன நடந்தது?'' என்று.

ரவிதேவன் மன்னனை ஏறெடுத்து நோக்கினான். ''வாதகிரிக் கோட்டையை மூன்று மாத காலம் காத்து நின்றோம். தாங்கள் கோட்டையிலிருந்து வெளிவருவீர்களென்று பொய் சொல்லி வதந்திகளைக் கிளப்பிவிட்டுச் சோழர்கள் தாக்காதபடி செய்து வந்தோம். சிங்களத்துக்குத் துரோகிகளாகத் திரும்பிவிட்டதாகப் பாசாங்கு செய்தோம். அடிக்கடி இரவில் முற்றுகைப் படைத்தலைவர்களிடம் இரகசியமாகச் சென்று பேசியும் வந்தோம். ஆனால் பொய் எத்தனை நாள் நிலைக்கும்? எதிரிகள் தாக்க ஆரம்பித்தார்கள். நமது படைகளைப் பின்வாங்கச் செய்துவிட்டு நானும் காலனும் எதிரிகள் படைப் பாசறைக்குச் சென்றோம். வாதகிரியிலுள்ள நமது படைகள் அதிக நாசமில்லாமல் தப்பியதும் நானும் காலனும் சோழர்களிடமிருந்து தப்பி வந்துவிட்டோம். தாங்கள் திரும்பி வந்தால் தங்களைச் சந்திக்க திட்டமிட்டு இந்த மலையில் என் மகளையும் நிறுத்தினேன்'' என்று விளக்கினான்.

தந்தை சொன்ன வரலாற்றைக் கேட்டு பிரமித்தாள் சுடர்விழி. தந்தை உண்மையாகச் சிங்களத் துரோகியல்ல என்பதையும், துரோகி வேஷமே போட்டாரென்பதையும் உணர்ந்ததால் அவள் மனத்தில் சாந்தி பெரிதும் நிலவியது. பெருமை ததும்பிய விழிகளால் தந்தையை நோக்கினாள். ''அப்பா!'' என்று அன்புடன் அழைக்கவும் செய்தாள்.

ரவிதேவன் மகளை உதடுகளில் புன்னகை தவழ நோக்கி, ''மகளே! மன்னரை எப்படிக் கண்டுபிடித்தாய்?'' என்று வினவினான்.

''தாங்கள் நியமித்த வேடர்கள் மன்னரைப் பற்றி அடிக்கடி செய்தி கொண்டு வந்தார்கள். தவிர சிங்களப்படை ஒற்றர்

zeevaa

களிடமிருந்தும் செய்தி வந்தது. இங்கு வந்தால் மன்னர் மறைவிலிருக்கக்கூடிய இடம் அசோகவனமாதலால் அதை அடிக்கடி இரவில் சென்று பார்த்து வந்தேன். இன்று பலன் கிடைத்தது'' என்றாள் சுடர்விழி.

''வேறு ஏதாவது செய்தி உண்டா?'' என்று ரவிதேவன் வினவினான்.

''உண்டு'' என்று கூறிக்கொண்டே அவர்களை நோக்கி வந்தான் காலன்.

அவனைக் கண்டதுமே விஜயனும் ரவிதேவனும் திரும்பி நின்று கொண்டார்கள். மூர்சமதும் எழுந்து அவர்களை நோக்கி வந்தான். தனது பெரும் புரவி பின்தொடர மலைச்சரிவில் ஏறிவந்த காலன் சொன்னான்: ''மன்னர் திரும்பிவிட்டது சோழர்களுக்குத் தெரிந்துவிட்டது. மன்னர் எந்தெந்தத் திசையில் சென்றார் என்பதும் தெரிந்து விட்டது. ஆகவே இந்தப் பகுதியைச் சல்லடைபோட்டு சலிக்கிறார்கள். சீக்கிரம் இங்கிருந்து கிளம்பாவிட்டால் மன்னருக்கு ஆபத்து'' என்றான்.

பருமனான தேகத்தின் விளைவாக காலன் மலைச்சரிவில் ஏறி வந்ததன் காரணமாக அவன் மூச்சு பெருமூச்சாக வந்து கொண்டிருந்தது. அதைக் கவனித்த விஜயன் ''காலா! சிறிது உட்கார். சில நாழிகைகளாவது உறங்கு'' என்று கூறினான்.

''அதற்கெல்லாம் அவகாசமில்லை. எதிரிகள் வெகு அருகில்இருக்கிறார்கள்'' என்றான் காலன்.

''நிச்சயமாகவா?'' என்று ரவிதேவன் வினவினான்.

''சந்தேகமிருந்தால் இதைப் பார்'' என்று தனது அங்கியின் வலதுபுறத்தைக் காட்டினான். அவன் வலது கையில் குறுவாள் பாய்ந்த காயத்திலிருந்து குருதி பிரவாகித்துக் கொண்டிருந்தது.

''சுடர்விழி! விளக்கை எடுத்துவா. இந்தக் காயத்தைப் பார்ப்போம்'' என்றான் விஜயன்.

zeevaa

''அதற்கு அவகாசமில்லை, கிளம்புங்கள்'' என்று துரிதப் படுத்தினான் காலன்.

அதே சமயத்தில் மலையடிவாரத்தில் பலர் வரும் சத்தம் கேட்டது. அத்துடன் பந்தங்களும் பல பளிச்சிட்டன. சுமார் இருபது வீரர்கள் தங்கள் புரவிகளை மலைச் சரிவில் ஏறவிட்டு வந்துகொண்டிருந்தார்கள். அவர்களுக்கு முன்னோடியாக இரண்டு மூன்று குறுவாள்கள் விஜயன் காலுக்கு அருகில் வந்து விழுந்தன. அவற்றைத் தொடர்ந்து வாளிகள் பலவும் பறந்து வந்தன.



zeevaa

# 6. மறைவிடத்தில் மாயக் கண்கள்

மூன்றாம் ஜாமம் துவங்கி விட்டதன் விளைவாக, சுக்லபட்ச சந்திரன் மறைந்து மலைப்பகுதியெங்கும் இருள் நன்றாகச் சூழ்ந்து, விண்மீன்களின் ஆட்சி மட்டும் நடந்து கொண்டிருந்த அந்தச் சமயத்தில் அவை வீசிய சொல்ப வெளிச்சம் அற்பர்களின் உதவியைப்போல பயனற்று இருந்ததால், பயங்கர சூழ்நிலையே எங்கும் பரந்து நின்றது. அந்தச் சூழ்நிலைக்கு ஏற்ப எட்ட இருந்த காடுகளிலிருந்து துஷ்ட மிருகங்களும் நாலாவித அபசப்த ஒலிகளைக் கிளப்பின. அவற்றுடன் கலந்த எதிரிப் புரவிகளின் குளம்படிகள் ஏதோ விபரீதத்தை விளைவிப்பன போன்ற பிரமையை ஏற்படுத்தினாலும், அதைப்பற்றிச் சிறிதும் லட்சியம் செய்யாமலும் காலடியில் வீழ்ந்த குறுவாள்களையும், வாளிகளையும் அலட்சியம் செய்தும் நிமிர்ந்து நின்ற விஜயபாகு, தனது புரவிக்குச் சைகை காட்ட அது அருகில் வந்ததும் அதன் சேணத்தின் முதுகுப் பகுதியில் செருகியிருந்த தனது நீண்ட வாளைக் கையில் ஏந்திக்கொண்டான். "காலா! நீ காயமடைந் திருக்கிறாய். உள்ளே சென்று உன் கையில் தைத்திருக்கும் குறுவாளைப் பிடுங்கி விட்டுக் காயத்துக்குக் கட்டுப் போட்டுக் கொள். ரவிதேவா! நீ எனக்கு இடதுபுறத்தில் நான்கு அடி தள்ளி நில். மூர்சமத்! நீ வலது பக்கத்தில் நில்" என்று உத்தரவிட்டு, குடிசைக் குள்ளிருந்த சுடர்விழியை நோக்கி, "சுடர்விழி! உள்ளே நிரம்பக் குறுவாள்களும் வேல்களும் இருந்ததைக் கவனித்தேன். நாலைந்து குறுவாள்களை மூர்சமதிடம் கொடு. வேல்களை வெளியே போடு. இந்தச் சிறு சண்டை முடியும் வரையில் நீ வெளியே வராதே. விளக்கை அணைத்துவிடு" என்றும் கட்டளையிட்டான்.

zeevaa



zeevaa

அவன் உத்தரவிட்டது சீக்கிரமா அல்லது சுடர்விழி அவற்றை நிறைவேற்றியது சீக்கிரமா என்று தெளிவாகத் தெரியாத துரிதத்தில் வேலை நடந்தது. கண்ணிமைக்கும் நேரத்தில் சுடர்விழியின் அழகிய கை குடிசைக்குள்ளிருந்து நீண்டு நாலு குறுவாள்களைச் சமதிடம் நீட்டியது. வேல்கள் வெகு சீக்கிரம் தரையில் போடப்படாமல் பர்ணசாலையின் பக்கவாட்டில் சாத்தப்பட்டன. அவ்வளவு துரிதமாக அவள் இயங்கியதைக் கண்டு பிரமித்த சிங்கள இளவல் அதற்குமேல் பேச்சை வளர்த்தாமல் எதிரிகளைத் தாக்கச் சித்தமாக நின்றான்.

அப்பொழுது ரவிதேவன் கேட்டான்: ''மன்னவா! இங்கு நாம் நிற்பதைவிடப் புரவியில் கீழ்நோக்கிச் சென்று எதிரிகளை எதிர்கொண்டால் என்ன?'' என்று.

''அது எதிரிகளுக்கு நம்மீது குறுவாள்களை எறிய வசதியாயிருக்கும். தரையிலுள்ள இலக்கைவிடப் புரவியில் சுழலும் இலக்கு தரைப் போரில் எதிரிகளுக்கு இடைஞ்சல். ஆனால் மலைச்சரிவில் நாம் உயரத்திலிருப்பதால் அவர்களுக்குச் சரியான இலக்காவோம். தவிர அவர்களில் தமிழ் நாட்டு வில்லவர்களும் இருக்கிறார்கள். குறி சிறிதும் தவறாதவர்கள். நாம்இங்கு நின்றே போரிடுவோம். முன்னேறும் சமயத்தை நான் சொல்கிறேன்'' என்று விஜயன் கூறிக்கொண்டேயிருந்த சமயத்தில் எதிரி- வீரர்கள் மலைச்சரிவில் பாதி தூரம் ஏறிவிட்டார்கள். அவர்கள் ஏறிய போதும் அணிவகுத்து ஏறியதால் புரவிகளின் குளம் பொலிகள் ஒரே சீராகக் கேட்டன. அப்படிப் பாதிதூரம் வந்ததும் அவர்கள் புரவிகள் நின்றன. அந்தச் சிறு படையின் தலைவன் சைகை செய்ததும் புரவி வீரர் இருவர் புரவியிலிருந்தபடியே விற்களை புரவிகளின் முதுகுகளில் ஊன்றி வளைத்து வாளிகளை எய்தனர். அந்த வாளிகள் சாதாரண சமயமாயிருந்தால் மலைச் சரிவின் மேல் பாகத்தில் நின்ற மூவர் மீதும் பாய்ந்திருக்கும். ஆனால் அந்த வில்லவர் மூவர் மீதும் மூர்சமத் விநாடிக்குள் எறிந்துவிட்ட குறு வாள்கள் பாய்ந்து விட்டதால் மூவருமே சரிந்தனர் புரவி

zeevaa

களிலிருந்து. பந்தங்களின் வெளிச்சத்தில் தாங்கள் எதிரிக்குச் சரியான இலக்காகியிருந்ததை உணர்ந்த எதிரி தலைவன் பந்தங்களைத் தரையில் தீய்த்து அணைத்துவிட உத்தரவிட, பந்தங்கள் மறைந்தன.

அதைப் பார்த்த சிங்கள் இளவல் தமிழ்வீரனின் திறமையை மெச்சினான். "பந்தங்கள் அணைந்து விட்டதால் இருபுறமும் சமத் தவிர, எதிரிகள் இருபது பேரில் இப்பொழுது உதவும்படியானவர் கள் பதினேழு பேர்தான்," என்ற விஜயபாகு, "இனி நாம் சற்று முன்னேறிப் போராடுவோம்," என்றான்.

மன்னன் உத்தரவுக்காகவே காத்திருந்தவன் போல் ரவிதேவன் உக்கிரமாகக் கர்ஜித்துக் கொண்டு பர்ணசாலைப் பக்கத்தில் சாத்தப்பட்டிருந்த வேலொன்றை எடுத்து எதிரிகளின் மீது வீசிக் கொண்டும் சரிவில் இறங்கினான். அதற்குள் முன்வரிசையில் வந்த நான்கு எதிரி வீரர்களின் வாட்களைத் தனது பெரிய வாளால் தடுத்தும் நிறுத்தினான். பிறகு ரவிதேவன் வாள் பலமாகச் சுழன்றது. அப்படிச் சுற்றிய வண்ணம் சரிவிலிருந்த ரவிதேவன் சற்றே எழும்பி எதிரிகளின் வரிசைக்குள் வேகமாகக் குதித்து விட்டான். அவன் வாள் எங்கும் சுழன்றது. இரண்டு மூன்று எதிரிகள் அந்த வாளுக்கு இலக்காகித் தரையில் வீழ்ந்தனர் புரவியொன்றும் வயிற்றில் ஏறிவிட்ட வாளின் நுனி விளைவித்த காயத்தால் பெரிதாக ஒல கர்ஜனை செய்து விழுந்தது.

ரவிதேவன் அப்படிப் பாய்ந்த மறுகணம் மூர்சமத், பட்டையும் அகலமும் கனமுமான தனது வாளைக் கூர்பார்த்துக் கொண்டான். பிறகு உள்ளே சென்று இன்னும் சில குறுவாள்களைக் கொண்டு வந்து எதிரி வீரர்களின் புரவிகள் மீது வீசினான். அதனால் மலைத் தரையில் புரண்ட புரவிகளால் பெரியதாக ஏற்பட்ட ஒலி மிகப் பயங்கரமாயிருந்தது.

ஆனால் எதிரிவீரர்கள் தலைவன் ஏதோ சைகை செய்ய, அதுவரை நேராக ஏறிவந்த வீரர்கள் மூன்றாகப் பிரிந்து மூன்று

zeevaa

வழிகளில் ஏறி வந்தார்கள். அவர்கள் பிரிவதைத் தடுக்க ரவிதேவன் சுழன்று போரிட்டும் அவர்கள் பிரிந்த வேகத்தைத் தடுக்க முடியாததால் இரு பிரிவுகளின் மத்தியில் நின்றே சமாளித்தான். பெரிய அரக்கன் போலிருந்த ரவிதேவன் தாக்குதலைச் சமாளிக்க முயன்ற எதிரிவீரர்கள். அவனை வாட்களை வீசிச் சூழ்ந்தும் அவர்கள் முயற்சி பயனற்றுப் போயிற்று. பல போர்களைக் கண்ட அந்த மகாவீரன் சுழல் காற்றைப் போல் சுழன்று போரிட்டான். அப்படியும் எதிரி வீரர்கள் எறிந்த ஒரு குறுவாள் அவன் காலில் தைக்கவே அவன் சற்று நின்று காலைத் தூக்கிக் குறுவாளைப் பிடுங்க முயன்ற சமயத்தில் அவன் பின்னாலிருந்து புரவியில் வந்த எதிரித் தலைவன் தனது ஈட்டியால் அவன் காலைத் தட்ட ரவிதேவன் சற்றே சாய்ந்தான் ஒருபுறமாக. அப்பொழுது அவனை வெட்ட வாளை ஓங்கிய எதிரி வீரனொருவன் அவன் புரவியிலிருந்து பலமாகத் தாக்கப்பட்டான்.

மலைச் சரிவின் மேற்பகுதியிலிருந்து கீழே நடந்த சண்டையைப் பார்த்து மூர்சமத், ரவிதேவன் தன்னந்தனியாக அத்தனைப் பேரைச் சமாளித்ததைப் பார்த்துப் பிரமித்தான். ரவிதேவன் காலில் குறுவாள் பாய்ந்ததும் அதற்குமேல் தாமதிக்காமல் மலைச் சரிவில் தனது வாளால் எதிரிகளை வெட்டியும் அவர்கள் வாட்களை அகற்றியும் ஓடி வந்தான். வீரனொருவன் ரவிதேவன் வாழ்க்கையை முடித்து விட எண்ணிய சமயத்தில் மூர்சமத், அவனைப் புரவியிலிருந்து தூக்கி, பின்னால் வந்த வீரர்கள் மீது எறிந்துவிட்டு, கண்மூடித் தனமாக அக்கம் பக்கத்தில் வந்தவர்களை வாளால் கண்டபடி வெட்டலானான்.

அதற்கு மேல் காத்திராத விஜயனும் தனது புரவி மீது தாவி அதை மலைச் சரிவில் பறக்க விட்டான். மன்னன் முதலில் எதை வேண்டாமென்று சொன்னானோ அதில் அவனே ஈடுபடுவதைக் கண்ட சுடர்விழி பெரிதும் திகில் கொண்டாள். எதிரிகளின் குறுவாள்களுக்கு மன்னன் இலக்காகி விட்டால் என்ன செய்வது என்று கதிகலங்கவும் செய்தாள். ஆனால் நடந்தபோர் அவள்

zeevaa

கலக்கத்தைப் போக்கி விட்டது. விஜயபாகுவின் புரவி அம்பு போல் சென்று எதிரிகளின் முகப்புப் படையை ஊடுருவிச் சென்று விட்டதையும் அதுபோன பேரக்கிலேயே விஜயனின் நீண்ட வாள் பல வாட்களை அகற்றி விட்டதையும், சிலரைப் புரவிகளிலிருந்து சாய்த்து நிலத்தில் உருளச் செய்து விட்டதையும் கண்ட சுடர்விழி, "இவர் தேவனா மனிதனா" என்று உள்ளூர வினவிக்கொண்டாள்.

எதிரிகள் மூன்று பகுதிகளாகப் பிரிந்து விட்டதால் நடுப்பகுதியில் பாய்ந்த விஜயன் சட்டென்று பக்கவாட்டில் புகுந்து அடுத்த பிரிவுக்குள் நுழைந்து அங்கும் பலத்த சேதத்தை விளைவித்ததையும், மன்னனைப் பார்த்து மற்றொரு பிரிவுக்குள் நுழைந்த மூர்சமத் கத்தியால் மட்டுமின்றிக் கைகளாலும் போராடி, பலரை மலைப்பாறைகளில் எறிந்ததையும் கண்டு வியந்து நின்றாள் சுடர்விழி.

அதே சமயத்தில் ரவிதேவன் நடுப் பிரிவில் பயங்கரமாகப் போரிட்டு நாலைந்து பேரைத் தனது வாளுக்குப் பலியாக்கினான். நடுவில் ரவிதேவனும், பக்கப் பிரிவுகளில் மூர்சமத், விஜயனும் பேராடியதால் எதிரிகள் தொகை வெகுவிரையில் குறைவதைக் கண்டாள் சுடர்விழி. இருபது பேரில் சுமார் பன்னிரண்டு பேர் மாய்ந்து விட்டதால் எதிரிகள் தலைவன், இறந்துவிட்ட வீரர்களின் புரவியொன்றில் ஏறித் தன்னை நோக்கி வருவதைக் கண்டாள். அவனைப் போலவே போரிலிருந்து விலகி இரண்டு பக்கங்களிலும் இரு எதிரிகள் அணுகுவதைக் கண்டாள். அப்படியும் அவள் இருந்த இடத்தை விட்டு நகர்ந்தாளில்லை.

நின்ற இடத்திலிருந்தே உட்புறம் கைநீட்ட இரண்டு குறுவாள் களைக் காலன் அவள் கைகளில் திணித்தான். அவற்றிலொன்றுக்கு அவளது இடது பக்கத்தில் வந்த எதிரிவீரன் பலியானான். இன்னொரு வாளை அவள் மறு பக்கத்தில் வந்தவன் மீது எறிய முற்படுமுன்பே எதிரி வீரர் தலைவன் அவள் கைகளைப் பிடித்து அந்தக் குறுவாளைப் பிடுங்கி எறிந்து அவளைத் தனக்கு முன்பு

zeevaa

நிறுத்தி, ''நட முன்னே,'' என்றான், அத்துடன் கூவினான். ''போர் நிற்கட்டும் உடனடியாக. இல்லையேல் இந்தச் சதிகாரியை இங்கேயே குத்திப் போடுவேன்,'' என்று. அத்துடன் தனது வாளையும் உயர்த்தினான்.

அந்தப் பயங்கர நிலையில் கீழே நடந்த போர் சட்டென்று நின்றது. அதனால் மகிழ்ச்சியடைந்த எதிரிவீரர் தலைவன் வாளை உயரத்தூக்கியபடியே தலையைப் பெருமிதத்துடன் ஆட்டினான். ஆனால் அந்த ஆட்டம் அதிக நேரம் நிலைக்காமல் சட்டென்று நின்றது. இரண்டடி முன்னால் வைத்து, சுடர்விழிக்கு முன்பாக வந்து நின்று அவன் ஆடினான் ஒரு முறை. பிறகு அவள் காலடியில் விழுந்தான். அவன் முதுகில் ஒரு குறுவாள் செங்குத்தாக நின்றிருந்தது.

விஜயபாகு சுடர்விழி நின்றிருந்த இடத்தை நோக்கினான். அவளுக்குப் பின்னால் குடிசையிலிருந்து வெளிவந்த காலன் எதிரியின் முதுகிலிருந்த குறுவாளைப் பிடுங்கி அவன் உடலைக் காலால் திருப்பினான். அந்தக் குறுவாள் எதிரி வீரர் தலைவன் உயிரைப் போக்காவிட்டாலும் காயம் ஆழமாயிருந்ததால் அவன் முகத்தில் பெரும் வேதனையும் இருந்தது., அத்துடன் புன்முறுவலும் இருந்தது. அவன் சொன்னான், ''முதுகில் குத்துவது சிங்களர் வழக்கம் போலிருக்கிறது,'' என்று.

காலனைப் போலவே நின்ற காலனும், ''இரண்டு மூன்று பேரைப் பிடிக்க ஒரு படைப்பிரிவே வரும் சோழர் வழக்கத்தை விட இது கேவலமல்ல,'' என்றான்.

இந்த உரையாடலுக்கு முன்னே மலைச்சரிவுப் போர் முடிந்துவிட்டது. எதிரி வீரர்கள் நாலைந்து பேரைத் தவிர மற்றவர்கள் காயமடைந்தோ, மாண்டோ விட்டதாலும், மாய்ந்த புரவிகளைத் தவிர மற்றப் புரவிகள் நாலா பக்கங்களிலும் தறிகெட்டு ஓடியதாலும் போர் முடிந்ததால், விஜயன் தனது புரவியைப் பர்ணசாலையை நோக்கி ஏறவிட்டு எதிரி வீரர்

தலைவன் விழுந்த இடத்துக்கு வந்து புரவியிலிருந்து இறங்கி அவன் முதுகுக் காயத்தைப் பரிசோதித்தான். காயம் அதிக ஆழமில்லையென்பதை அறிந்து எதிரி வீரர்களில் இருவரை அழைத்து, ''உங்கள் தலைவனை ஒரு புரவியில் ஏற்றிச் சென்று சிகிச்சை செய்யுங்கள்,'' என்று கூறினான். ''தற்கால சாந்தியாக இவன் முதுகுக் காயத்துக்கு துணிவைத்து அடைத்துக் குருதியை நிறுத்திவிடு,'' என்று சுடர்விழிக்கும் உத்தரவிட்டான்.

''மன்னவா! இவளைக் குத்தி விடுவதாகச் சொன்னானே இவன்?'' என்று அந்த இடத்துக்கு வந்த மூர்சமத் ஆட்சேபணை கிளப்பினான்.

''வீணாக மிரட்டினான். இருப்பினும் காயமடைந்த எதிரியைக் கொல்வது முறையல்ல,'' என்று மூர்சமதை அடக்கிவிட்ட விஜயபாகு தனது வாளை உறையில் பேட்டான்.

ரவிதேவனும் அங்கு வந்ததும் அவன் காயங்களுக்கும் சிகிச்சை செய்யச் சுடர்விழிக்கு உத்தரவிட்ட விஜயன் சற்று திரும்பி மலைச் சரிவைக் கவனித்தான். விண்மீன்கள் வீசிய அல்ப வெளிச்சத்திலும் மாண்ட வீரர்களின் கவசங்களும், புரவிகளின் சேணங்களில் உலோகப் பகுதிகளும் பளபளத்தன. ''சற்று முன்பு அழகாயிருந்த மலைச்சரிவு சிறு போரின் விளைவாக எத்தனை கோரமாகி விட்டது!'' என்று எண்ணிய விஜயபாகு, ''போரே கோரம், அதனால் தான் போதிசத்வர் அதை வேண்டாமென்றார். நல்லுரைகளை உலகம் எங்கு கேட்கிறது.'' என்று உள்ளூரச் சொல்லிக்கொண்டான்.

அவன் சிந்தனைகளை அவன் முகபாவத்திலிருந்தே உணர்ந்த சுடர்விழி, ''சிங்கள பூபதி! உங்கள் உடலிலும் காயங்கள் இருக்கின்றன,'' என்று சுட்டிக் காட்டினாள்.

''அவை இருக்கட்டும், நமது விருந்தினர்களை முதலில் கவனிப்போம்,'' என்று அவன் உத்தரவிட, சுடர்விழி உள்ளே சென்று ஒரு துணியை எடுத்து வந்து எதிரித் தலைவன் முதுகுக்

zeevaa

காயத்தில் அடைத்துக் குருதியை நிறுத்தவே, எதிரி வீரர்கள் தலைவனை ஒரு புரவியின் முதுகில் ஏற்றிப் படுக்க வைத்து அழைத்துச் சென்றார்கள்.

அவர்கள் சென்றபின் விஜயபாகுவின் நெற்றியிலும் பட்ட சிறு காயத்திலிருந்து குருதி லேசாக நீண்ட கோடிட்டதைப் பார்த்தாள் சுடர்விழி. அதிலும் அவன் முகம் எத்தனை அழகாய் இருந்ததென்று நினைத்தாள். "இது மன்னனுக்கு ஜெயஸ்ரீ இட்ட திலகம்," என்று உள்ளூர உவந்தாள்.

அவளை அதற்கு மேல் சிந்திக்க விடவில்லை ரவிதேவன். "மகளே! நீயும் புறப்படு. நாம் உடனடியாகக் கிளம்ப வேண்டும். இப்பொழுது நாம் விடுதலை செய்த வீரர்கள், இன்னொரு பிரிவை அழைத்து வருமுன்பு நாம் ருஹுனாவின் எல்லைக்குள் நுழைந்துவிட வேண்டும்," என்றான்.

எதிரி புரவிகளில் இரண்டைப் பிடித்த ரவிதேவன் தனக்கொரு புரவியும் சுடர்விழிக்கு ஒருபுரவியும் சித்தம் செய்த பின்பு மன்னனும் மூர்சமதும் புரவிகளில் ஏறிக்கொள்ள அதுவே ஒரு படைப் பிரிவு போல் மலைச்சரிவில் சென்றது. மலைச் சரிவைக் கடந்து சுமார் ஒரு நாழிகைப் பயணத்துக்குப் பிறகு ரவிதேவன் தென் கிழக்கில் திரும்ப முற்பட்டதும் விஜயன், "ரவிதேவா!" என்று அழைத்தான்.

"நாம் தென்கிழக்கில் செல்லப் போவதில்லை. தென் மேற்கில் பயணம் செய்வோம்," என்றான்.

"ஏன் மன்னவா?" என்று வினவினான் ரவிதேவன்.

"பிறகு சொல்கிறேன். இனி என்னைத் தொடர்ந்து வா", என்று கூறிய விஜயன் சற்று எட்ட இருந்த மலைப் பாதைக்குப் புரவியைத் திருப்பினான். வழி குறுகலாகவும் கரடு முரடாகவும் இருந்ததால் பயணம் நிதானமாகவே நடந்தது. இடையிடையே இருந்த மலைப் பாறைகளைத் தாண்டி ஒரு மூலையிலிருந்த மலைக் குகைக்கு வந்த

zeevaa

விஜயன் புரவியிலிருந்து இறங்கி, "மீதி இரவை இங்கு கழிப்போம்," என்றான். "இதைவிட பர்துகாப்பான இடம் இந்த மலையகத்தில் கிடையாது," என்றும் சொன்னான். "சுடர்விழி! குகைக்குள் நீ சென்று படுத்துக்கொள். குகையின் மேற்புறத்தில் இரண்டு பெரிய துவாரங்கள் இருக்கின்றன. காற்று நன்றாக வரும்." என்றும் கூறினான்.

இதைச் சொன்ன விஜயன் புரவியிலிருந்து இறங்கினான். மற்றவர்களும் இறங்கியதும் சுடர்விழி மலைக்குகைக்குள் சென்றாள். குகை மன்னவன் சொன்னது போலவே இருந்ததன்றி அதன் தரையும் வழவழப்பாயிருந்ததால் அதில் படுத்துக் கொண்ட சுடர்விழி மேலிருந்த துவாரங்களை நோக்கினாள். அந்தத் துவாரங்கள் மூலம் ஆகாயம் தெரிந்தது. விண்மீன்கள் அவளை நோக்கிக் கண்களைச் சிமிட்டின. அந்த ரம்மியமான சூழ்நிலையில் உறங்கவில்லை அவள். சட்டென்று ஏதோ சத்தம் கேட்டுக் கண் விழித்தாள். குகையின் மேல் துவாரமொன்றில் ஒரு முகம் தெரிந்தது. அந்த முகத்திலிருந்த கண்கள் அவளைக் கூர்ந்து நோக்கின.

zeevaa

# 7. வாள் முனையில் வரவேற்பு

இராவண மலைச்சரிவுப் போருக்குப் பிறகு சுடர்விழியுடனும் மற்றவர்களுடனும் ஒரு நாழிகைப் பயணம் செய்து ஹாக்கலா மலைப் பாறைகளுக்கிடையிலிருந்த மறைவான மலைக்குகைக்கு வந்த சிங்கள இளவல் விஜயன், அதைவிடப் பாதுகாப்பான மறைவிடம் வேறெங்கும் கிடையாது என்று சுடர்விழியைக் குகைக்குள்ளும் மற்றவர்களைக் குகைக்கு வெளியிலும் தங்க வைத்தபோது அங்கு யாருடைய தலையீடும் இருக்காது என்ற நம்பிக்கையில் குகைவாயிலில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு அடுத்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைப் பற்றிய சிந்தனையில் இறங்கினான். சிந்தனை மிகுந்ததால் மற்றப் புலன்கள் வேலை செய்யாது போகவே, நீான்காம் ஜாம ஆரம்பத்தில் குகைக்குச் சற்று அப்பாலிருந்த அடர்த்தியான காட்டில் ஏற்பட்ட சிற்றரவங்களை அவன் கவனிக்கவில்லை. குகைக்குள்ளிருந்த சுடர்விழியும் உறக்கம் பிடிக்காததால் இரண்டொரு முறை குகை வாயிலை நோக்கி, அங்கு கண்களை மூடி உட்கார்ந்திருந்த விஜயனைப் பார்த்து அவன் உறங்குகிறானென்ற எண்ணத்தில் தானும் கண்களை மூடினாள்.

அப்படி மூடிய அவள் கண்கள் முன்பு விஜயனின் அழகிய வீர வதனம் எழவே, அந்த முகத்தை அணு அணுவாக அனுபவித்தாள் அவள். நீண்ட நாசியும் முகத்தில் விழுந்த இருதலைக் குழல் பிரிவுகளும், வலிய அழகிய உதடுகளும் அவளை மிகவும் கவர்ந்தன. அசோகவனத்திலும் பிறகு மலைபர்ணசாலையிலும் அவளுக்கிருந்த கடமையின் காரணமாக அவனை அதிகமாக ஆராய புறக்கண்களுக்கு வாய்ப்பில்லாததை அந்தக் குகையில்

zeevaa

அகக்கண்கள் பூர்த்தி செய்ததால் அவள் உதடுகளில் புன்னகை யொன்று மலர்ந்தது. அவன் கண்கள் அவளது அகக்கண்களுடன் கலந்ததில் மிகவும் இன்பமிருந்ததால் அவள் அதே நிலையில் நீண்ட நேரமிருந்தாள். பிறகு தனது கண்களை விழித்து மேலே நோக்க, அங்கிருந்த இருக் கண்கள் உற்று நோக்குவதைக் கண்டு எச்சரிக்கையடைந்தவளாய் அந்தக் கண்களை நேராகச் சந்திக்காமல் பக்கவாட்டில் பார்வையைச் செலுத்தினாள்.

அப்படி ஒரு புதுமுகமும் தெரிந்ததாலும் கண்கள் உற்று நோக்கியதாலும் விஜயன் கூறியதுபோல் அந்தக் குகை அத்தனை பாதுகாப்பான இடமல்ல என்பதைப் புரிந்து கொண்டு விஜயனை எப்படி எச்சரிப்பது என்று நினைத்தாள். தான் சிறிது அசைந்தாலும் குகை துவாரத்தின் மேல் இருப்பவன் எச்சரிக்கையடைந்து விடுவானென்ற எண்ணத்தில் தனது இடையிலிருந்த குறுவாளை மெதுவாக எடுத்துக் கையை நீட்டி, குகை வாயிலில் உட்கார்ந்திருந்த விஜயனை லேசாகத் தொட்டாள்.

எப்பொழுதும் எச்சரிக்கையுடனிருக்கும் சுபாவத்தை உடைய விஜயன் தன்மீது குறுவாள் உராய்ந்ததும் சட்டென்று சிந்தனைகளை அறுத்துக்கொண்டு தனது நீண்ட கரத்தை உட்புறம் செலுத்திச் சுடர்விழியின் கையிலிருந்த குறுவாளை அகற்றிவிட்டு அவள் கையைப் பற்றினான். அத்தனை நெருக்கடியான நிலையிலும் அவன் கை தனது கையைத் தடவியதையும் விரல்கள் பின்னிக்கொண்டதையும் பார்த்த சுடர்விழி தானும் அவனது விரல்களைப் பதிலுக்கு நெறித்தாள். அந்தச் சமயத்தில் மேலே இருந்த முகம் மறைந்து விட்டதால் ஒருமுறை புரண்ட சுடர்விழி குகைவாயிலில் உட்கார்ந்திருந்த விஜயனுக்கு வெகு அருகில் வந்துவிடவே அவள் அழகியதிண் தொடை அவன் காலின் மேற்பகுதியில் உராய்ந்தது. அதனால் உணர்ச்சியின் மிகுதியை அடைந்துவிட்ட சுடர்விழி அவன் கைவிரல்களோடு சிக்கியிருந்த தனது விரல்களை விடுவித்துக் கொண்டு அவன் கழுத்தில் தனது கையைக் கொடுத்து தலையைக் குனிய வைத்தாள்.

zeevaa

முற்றும் எதிர்பாராத அவள் செய்கையால் பிரமித்துப் போன விஜயன் தான் சற்று முரண்டாலும் சற்று எட்டப் படுத்திருந்த அவள் தந்தை விழித்துக் கொள்வாரென்ற பீதியில் அவள் இஷ்டப்படி குனிந்தான். ஆனாலும் அவன் ஏதும் பேச முற்படவில்லை. கீழே இழுக்கப்பட்ட தனது தலை அவள் மார்பின் மீது பதியக்கூடிய நிலை வந்ததும் சற்று விலக முற்பட்டவன்,. சுடர்விழியின் பிடி வலுத்து விட்டதையும் அவள் கை தனது முகத்தை அவள் மார்பு மீது பதிய வைத்துவிட்டதையும் கண்டான். தந்தை வாயிலிலிருக்க, எந்தத் துணிவுடன் இத்தகைய சரசத்தைச் சுடர்விழி துவங்குகிறாள் என்று எண்ணிய சமயத்தில் அவள் இரு கைகளும் எழுந்து அவன் முகத்தை மெல்ல மேல் புறமாகத் திருப்பவே பிரமித்தான் விஜயன். மேலே இருந்த கண்கள் அப்பொழுதும் குகைக்குள் உற்று நோக்கிக் கொண்டிருந்தன.

அதைப் பார்த்ததும் சுடர்விழி தன்னிடம் புரிய முயன்ற சரசத்தின் காரணத்தைப் புரிந்துகொண்டான் சிங்கள இளவல். அந்தச் சமயத்தில் சுடர்விழி ஈடுபட முற்பட்டது கேவலம் காம இச்சையில்லையென்பதையும், தன்னை எச்சரிக்க எ்டுத்த அனுதாப நடவடிக்கை என்பதையும் புரிந்து கொண்டதால் மேலே செலுத்திய கண்ணை வாங்காமல் அடுத்து நடப்பதை கவனிக்கலானான். மேலே தெரிந்த முகம் சட்டென்று மறைந்ததும் அடுத்து இரு முகங்கள் தோன்றியதையும் கண்ட விஜயன் அதற்கு மேலும் தாமதிப்பது உசிதமில்லையென்று சுடர்விழிமீது சற்றுப் புரண்டு, ''அப்படியே படுத்திரு. சிறிதும் அசங்காதே'' என்று கூறிவிட்டு அவள் உடலைத் தாண்டி அப்புறம் புரண்டான். பிறகு அவளை நன்றாக அணைத்து காதில் சொன்னான்: ''இது நாடகந்தான், கவலைப்படாதே'' என்று.

குகைக்கு மேலே இருந்த இரு முகங்களும் லேசாக நகைத்தன. ''சே! சே! வெட்கம்! வெட்கம்!'' என்று சொன்னான் ஒருவன்.

''இவளை எப்படித் தூக்கிப் போவது?'' என்று வினவினான் இன்னொருவன்.

zeevaa

''இப்பொழுது முடியாது. மற்றவர்களையும்அழைத்து வருவோம். வெளியே உறங்குபவர்களை மடக்கிவிட்டால் இவளைத் தூக்குவது கஷ்டமல்ல'' என்றான் முதலில் பேசியவன்.

அடுத்து, மேலே அரவம் ஏதுமில்லாததால் அவர்கள் போய்விட்டதை உணர்ந்த விஜயன் சுடர்விழியை அணைத்திருந்த கையை நீக்கிவிட்டு, ''சுடர்விழி! இவர்கள் யாரென்பதைக் கவனித்துவிட்டு வருகிறேன். குகை வாயிலில் நீ உட்கார்ந்திரு'' என்று சொல்லி குகைக்கு வெளியே நகர்ந்து பழையபடி குகை வாயிலில் சாய்ந்து உட்கார்ந்தான்.

''சுடர்விழி, நீ பக்கத்தில் உட்கார்ந்து கொள்'' என்று அவளையும் உட்காரச் சொல்லிவிட்டுச் சற்று எட்டப்படுத்திருந்த மூர்சமதைத் தனது பக்கத்திலிருந்த வாளால் மெதுவாகத் தொட்டான். விஜயனின் சைகைகளை நன்றாக உணர்ந்திருந்த மூர்சமத் அந்த வாள் தன்மீது பட்டதும் படுத்தபடியே தலையைத்திருப்பி தனது பெரிய விழிகளால் எசமானனைப் பார்த்தான். எசமானும் தனது கண்களைக் காட்டவும் அதற்கு முன்பிருந்த இரண்டு பாறைகளையும் நோக்கித் திருப்பினான். அவ்வளவுதான் மூர்சமத் மீண்டும் பழையபடி படுத்துக் கொண்டான்.

நான்காம் ஜாமம் தொடங்கிவிட்டதால் எங்கும் பரம அமைதி சூழ்ந்திருந்தது. அதன் விளைவாக எட்ட இருந்த காட்டுப் பகுதிகளும் அதற்கு முன்பிருந்த பெரிய மலைப் பாறைகளும் பயங்கரமாகக் காட்சியளித்தன. காட்டுக்குள் அலறிய ஓர் ஆந்தையைத் தவிர எந்த அரவமும் எங்கும் கிடையாது. குகையில் சாய்ந்திருந்த விஜயன் மெள்ள எழுந்து குகை வாயிலில் நின்று சுற்றுமுற்றும் நோக்கினான். அவன் நின்ற இடத்திலிருந்து சற்றுத்தள்ளி ரவி தேவனும் காலனும் நல்ல நித்திரையிலிருந் தார்கள். மூர்சமத் அசைவற்றுக் கிடந்ததைக் கவனித்து விஜயன் புன்முறுவல் கொண்டான். பிறகு தனது காலடியில் குகை முகப்பில் சாய்ந்து கொண்டிருந்த சுடர்விழியின் தலைமீது கையை வைத்து

அவள் குழல்களை லேசாகக் கோதிவிட்டு மெதுவாகப் பாறைகளை நோக்கி நடக்க முற்பட்டான். அவனது எண்ணத்தை அறிந்த சுடர்விழி, ''தனியாகவா போகிறீர்கள்?'' என்றாள் கவலையுடன்.

''கூட்டமாகப் போனால் நமது விருந்தினர்கள் எச்சரிக்கை அடைந்து விடுவார்கள்'' என்று கூறியவிஜயன், ''வந்திருப்பது படைப்பிரிவல்ல. நம்மை வேவுபார்க்க வந்திருக்கும் சில ஒற்றர்கள்தான். படைப்பிரிவாக இருந்தால் இத்தனை நேரம் நம்மைத் தாக்கியிருக்கும். இப்படி ஒளிவு மறைவாக ஓரிருவர் வந்து நோட்டம் பார்ப்பதுபற்றி கவலைப்படாதே'' என்று அவளுக்குத் தைரியமும் சொல்லிவிட்டு மெதுவாகப் பாறைகளை நோக்கி நடக்கலானான்.

சேணம் தரையில் புரண்டு கிடக்க நின்றிருந்த அவன் புரவி மட்டும் அவனை நோக்கித் தலையை ஒருமுறை திருப்பியது. அவனை நோக்கி நகரவும் முற்பட்டபோது அவன் கையால் சைகை செய்ய, நின்ற இடத்திலேயே நின்றுவிட்டது.

அதற்குப் பிறகு பின்புறம் பார்க்காமலே நடந்த விஜயன் பாறைகளை அடைந்ததும் சற்று எச்சரிக்கையுடனேயே முன்னேறி னாலும் தான் எச்சரிக்கையடைந்ததைக் காட்டாமலேயே ஏதோ பாட்டை முணுமுணுத்துக் கொண்டே நடந்தவன் பாறைகளைத் தாண்டியும் யாரும் காணாததால் வியப்புற்று காட்டை அணுகினான். ஆனால் காட்டுக்குள் புகுந்ததும் ஏற்பட்ட அரவங்களைக் கேட்டு திருப்தியும் அடைந்தான். அதைப் பற்றியும்அக்கறை காட்டாமல் காட்டுக்குள் பத்தடி நடந்ததும் பின்னாலிருந்து இரண்டு வாட்கள் அவன் முதுகில் பதிந்தன. அந்த இரண்டிலொன்று எழுந்து அவன் கழுத்தின் பின்புறத்தில் ஊன்றியது. ''விஜயபாகு! பேசாமல் முன்னால் நட. சத்தம் ஏதும் செய்யாதே. நீ சிறிது பேச முயன்றாலும் நிற்கும் இடத்திலேயே பிணமாகி விடுவாய்'' என்றது ஒரு குரல்.

அடுத்த வினாடி இன்னும் நாலைந்து வாட்கள் விஜயன் பக்கவாட்டில் தோன்றின. தோன்றிய வாட்கள் அவன் விலாவையும்

zeevaa

மார்பையும் தடவின, வாட்கள் பதிந்த இடங்களெல்லாம் நல்ல ரத்தினமான இடங்ளென்பதையும், வாளை ஏந்தியிருப்பவர்கள் வாட்போர் நுட்பத்தை அறிந்தவர்களென்பதையும், அந்த வாட்கள் தனது உடலில் பதிந்த இடங்களில் நுழைந்தால் தனது உயிர் அரைக் காசு பெறாதென்பதையும் உணர்ந்தான் விஜயபாகு.

அந்த உணர்வின் காரணமாக அசைவற்று நின்று விட்ட விஜயனைக் கழுத்தில் கத்தியை அழுத்தியிருந்தவன் இன்னும் சற்று அதிகமாகக் கத்தியின் முனையை அழுத்தி, ''மேலே நடக்கலாம்'' என்றான்.

பேசியவன் குரலிலிருந்து அவன் குரலை மாற்றிப் பேசுகிறானென்பதைப் புரிந்துகொண்ட விஜயன், ''நீ யார் என்பதையும், எதற்காகத் திருட்டுத்தனமாக என்னை அழைத்துப் போகிறாய் என்பதையும் சொல். நான் யார் என்பது உனக்குத் தெரியுமா என்பதையும் சொல்'' என்று கேட்டான்.

விஜயன் கேள்விகள் எந்தவித அச்சத்தையோ அதிர்ச்சியையோ காட்டாமல் சர்வசாதாரணமாக எழுந்ததைக் கண்ட அவன் பின்புறத்திலிருந்த வீரன் சிறிது சங்கடத்துக்குள்ளானதால் நின்ற இடத்தில் சற்று அசையவே செய்தான். ''உங்களைத் தெரிந்துதான் சிறை செய்திருக்கிறோம். நீங்கள் விஜயபாகு என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் நாங்கள் யார் என்பதைச் சொல்லிப் பயனில்லை. எதற்காக உங்களை அழைத்துப் போகிறோம் என்பதை எங்கள் தலைவர் சொல்லுவார். தாமதம் செய்யாமல் நடவுங்கள்'' என்று சற்று மரியாதையாகவே பேசினான்.

''உங்கள் தலைவர் யார்? அதையாவது சொல்லலாமா?'' என்று வினவிய விஜயன் நின்ற இடத்தைவிட்டு ஓர் அடிகூடி முன் எடுத்து வைக்க மறுத்தான்.

பின்னால் நின்றவன், ''எங்கள் தலைவர் யார் என்பதைப்பற்றிச் சொல்ல உத்தரவில்லை. தங்களுக்கு மிகவும் வேண்டியவர். நேரில்

zeevaa

பார்த்த பின்பு நீங்களே புரிந்து கொள்வீர்கள்'' என்று சொல்லி, ''நீங்கள் தாமதிப்பதால் எந்தப் பயனுமில்லை. நீங்கள் எங்களுடன் வரச் சிறிது தாமதித்தாலும், இடைஞ்சல் செய்தாலும் உங்களைக் கட்டித் தூக்கிவர உத்தரவாகியிருக்கிறது'' என்று தங்கள் அடுத்த நடவடிக்கை என்னவென்பதையும் சுட்டிக்காட்டினான்.

இதைக் கேட்டதும் விஜயன் தனது உடலை நன்றாக விறைத்து நிமிர்ந்தான். ''சரி, என்னைப் பிடித்துக் கட்டி எடுத்துச் செல்லுங்கள்'' என்று கூறிக்கொண்டே வெகு வேகமாகத் தரையில் சட்டென்று உட்கார்ந்தான்.

பிறகு உட்கார்ந்த வேகத்தில் நிமிர்ந்து முன்னால் இரண்டடி எடுத்து வைத்துப் பக்கத்திலிருந்து ஒரு வீரனை நோக்கித் திருப்பி அவனைப் பின்புறத்தில் பிடித்து அவன் கையைத் திருகி வாளையும் பிடுங்கிக்கொண்டான். எதிர்பாராத இந்த நடவடிக்கையின் விளைவாக அதிர்ச்சியடைந்து செயலிழந்த எதிரி வீரர்கள் தங்கள் வாட்களால் அவனைத் தாக்க முயன்றனர்.

அப்பொழுது விடியும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்ததாலும் அதுவரை இருந்த நட்சத்திர வெளிச்சமும் குறைந்து பூர்ணமாக இருட்டி விட்டதாலும் அவர்கள் கண்மண் தெரியாமல் வாளைச் சுழற்றவே விஜயன் அகப்படாதது மட்டுமல்லாமல் அவர்களே ஒருவருக்கொருவர் போரிடும் அவசியம் நேர்ந்தது. இந்தக் குழப்பத்திலும் விஜயன் மட்டும் கையில் கிடைத்த வாளைச் சுற்றிலும் வீசினான். இருட்டிலும் அவன் கண்களில் தீட்சண்யம் இருந்திருக்க வேண்டும். தன்னைப் பிடித்ததிலிருந்து பக்க வாட்டிலும் பின்னாலும் வந்த வீரர்களின் நிலையை உணர்ந்ததால் அந்தத் திசைகளை நோக்கி அவன் வாள் கனவேகமாகச் சுழன்று குறி தவறாமல் எதிரிகளைப் பல முறை தொட்டதும் அந்த வீரர்கள் காட்டுக்குள் ஓடலானார்கள். அதற்குள் ரவிதேவன் முதலானவர்கள் காட்டை நோக்கி ஓடிவரவே வீரர்கள் வெகுசீக்கிரம் மறைந்து விட்டார்கள்.

zeevaa

அதற்குப் பிறகு காட்டைவிட்டு வெளியே வந்த விஜயன் காட்டு முகப்பில் நின்று ரவிதேவன் முதலியவர்களை நோக்கி, "உங்களை யார் இங்கு வரச்சொன்னது?" என்று சீறிவிட்டுக் குகையை நோக்கி ஓடினான்.

குகையை அணுகியதும் அதிர்ச்சியுற்று நின்றான், விஜயன். குகையில் சுடர்விழியைக் காணவில்லை. அவள் இழுத்துச் செல்லப்பட்டதற்கான அறிகுறிகள் குகைக்குள் இருந்தன.



## 8. கோட்டையில் குழலோசை

கையில் உருவிப் பிடித்த ரத்தம் தோய்ந்த முனையுடன் கூடிய வாளுடன் காட்டுக்குள்ளிருந்து வெளியே வந்த விஜயன், ரவிதேவன் முதலியவர்கள் காட்டை நோக்கி ஓடி வருவதைக் கண்டு சினந்து, ''உங்களை யார் இங்கு வரச்சொன்னது?'' என்று சீறினானென்றால் அதற்குக் காரணம் இருக்கவே செய்தது. குகைப்பகுதியில் தான் இருப்பதை அறிந்தவர்களில் இருவர் மட்டும் சுடர் விழியை நோட்டம் பார்த்ததிலிருந்து பெருமளவில் யாரும் தன்னை தாக்க வரவில்லையென்பதையும், தன்னைத் தனியாக இழுப்பதே அவர்கள் நோக்கமென்பதையும் ஊகித்திருந்ததால் மூர்சமதைக் கூடத் தன்னைத் தொடர வேண்டாமேன்று சைகை செய்துவிட்டு எதிரிகளைப் புலன் அறியக் காட்டுக்குள் சென்றான். சென்றதும் தன்னைச் சூழ்ந்தவர்கள் ஐந்தாறு பேர்களுக்குமேல் இல்லையென்பதை உணர்ந்ததால் அவர்களைச் சமாளிப்பதற்கும் ரவிதேவன் முதலானவர்களுக்குக் குரல் கொடுக்காமல் தானே எதிரிகளைச் சமாளித்தான்.

அவர்கள் சண்டையைத் தொடர்ந்து நடத்தாமல் திடீரென ஓடிவிட்டதிலிருந்து தனது ஊகம் சரியென்பதைப் புரிந்து கொண்ட விஜயன் காட்டைவிட்டு வெளியே வந்ததும், ரவிதேவனும் மற்றோரும் தனக்கு உதவ ஓடிவந்ததைக் கவனித்து சுடர்விழிக்கு ஏதோ ஆபத்து வந்திருக்க வேண்டும் என நினைத்துக் குகையை நோக்கி ஓடினான்.

விஜயன் தங்களைக்கடிந்து கொண்டதற்கும் குகையை நோக்கி ஓடியதற்கும் காரணத்தை அறியாத ரவிதேவனும் மற்றவர்களும்

zeevaa

அவனைத்தொடர்ந்து சென்றனர். குகையை அடைந்த விஜயன் குகைக்குள் சுடர்விழி இல்லாததைப் பார்த்ததும் சீற்றம் மிகுந்தவனாய் நின்றுவிட்டான் சில விநாடிகள். பிறகு குகைப் பகுதியை ஆராய முற்பட்டான். குகைக்குள் அவள் தலையில் வைத்திருந்த அசோக புஷ்பத்தின் செவ்விய இதழ்கள் உதிர்ந் திருப்பதையும், குகை வாயிலில் கூழாங்கற்கள் சில சிதறியிருப் பதையும் கவனித்த விஜயன் குகையின் மேற்பகுதிக்கு ஓடினான். மேலே இருந்த பாறையில் ஈரக் காலடிகள் படிந்திருந்ததைக் கண்டதும் ஒரு முடிவுக்கு வந்தவனாய் மீண்டும் குகைவாயிலுக்கு வந்து, ''ரவிதேவா! சுடர்விழி காணாமற் போனதைக் குறித்து உனக்கு யார் மீதாவது சந்தேகம் இருக்கிறதா?'' என்று வினவினான்.

ரவிதேவன் முகத்தில் உக்கிராகாரமான கோபம் ஜொலித்துக் கொண்டிருந்தது. ''இல்லை, யார் மீதும் சந்தேகம் இல்லை. இராவண மலையில் பல நாட்கள் தனித்திருந்திருக்கிறாள், அவளை யாரும் நெருங்கவும் முற்பட்டதில்லை. அவள் சீட்டியடித்தால் வேடர்கள் வாயு வேகத்தில் உதவிக்கு வருவார்கள். அதைத் தெரிந்து அவளை யாரும் அணுகத் துணிந்ததில்லை,'' என்று விளக்கினான் ரவிதேவன். அவன் குரலில் அச்சம் தெரியவில்லை. உக்கிரம் அளவுக்கு மீறித் தெரிந்தது.

''இங்கும் அவள் சீட்டியடித்திருந்தால் வேடர்கள் வருவார் களா?'' என்று விஜயன் கேட்டான்.

''வருவார்கள்,'' என்றான் ரவிதேவன்.

''ஆனால் அவள் சீட்டியடிக்கவில்லை. அல்லது வந்தவர்கள் அதற்கு அனுமதிக்கவில்லை'' என்ற விஜயன் ''ரவிதேவா! நீயும் காலனும் சென்று ருஹுணா எல்லையிலுள்ள நமது படைகளைத் திரட்டுங்கள், நான் உங்களைச் சமந்த கூடத்தில் சந்திக்கிறேன்,'' என்று உத்தரவிட்டுத் தனது புரவிமீது ஏறிக்கொண்டான்.

'ரவிதேவன் கேட்டான், ''சுடர்விழி'' என்று.

zeevaa

''என்னுடன் வருவாள்'' என்றான் விஜயன்.

''அவள் இருக்குமிடம்?'' என்று ரவிதேவன் மீண்டும் வினவினான்.

''என்னால் ஓரளவு ஊகிக்க முடியும்,'' என்று பதிலளித்த விஜயன் மெள்ளப் புரவியை நடத்தினான். மூர்சமதும் தனது புரவி மீது ஏறி எசமானனைத் தொடர்ந்தான்.

அவர்கள் இருவர் போவதையும் பார்த்துக் கொண்டு நின்ற ரவிதேவன் ''காலா! நாமும் புறப்படுவோம்,'' என்று கூறவே, ''எங்கு போக?'' என்றொரு கேள்வியைத் தொடுத்தான் காலன்.

''மன்னர் ஆணையை நிறைவேற்ற,'' என்று கூறிய ரவிதேவன் தனது புரவிமீது தாவினான். அடுத்த வினாடி அந்த இரு மகாவீரர் புரவிகளும் ருஹூணாவை நோக்கிப் பறந்தன. அப்படிப் பறந்து கொண்டிருக்கையிலேயே காலன் கேட்டான், ''ரவிதேவா! நீ சுடர்விழியின் தந்தை தானே?'' என்று.

''ஆம்? அதனாலென்ன?''

''சுடர்விழியைத் தேடாமல் படை திரட்டப் புறப்பட்டு விட்டாயே?''

''சுடர்விழியைத் தேடித்தான் மன்னர் போயிருக்கிறாரே.''

''அவரால் முடியாவிட்டால்?''

''மன்னரால் முடியாதது எதுவும் இல்லை,'' என்ற ரவிதேவன், ''காலா! சுடர்விழி காணவில்லையென்பதை அறிந்ததும் அவர் முகத்தில் படர்ந்த கொலைச் சாயையை நீ கவனிக்கவில்லை. சுடர்விழியை மீட்காமல் திரும்ப மாட்டார் மன்னர்,'' என்று உறுதியுடன் கூறினான். அதற்குப் பிறகு இருவரும் பேசவில்லை. புரவிகள் மட்டும் பாறைகளில் பாய்ந்து சென்று கொண்டிருந்தன, தென்கிழக்கில் இருந்த ருஹூணாவை நோக்கி.

zeevaa

ரவிதேவன் மன்னனிடம் வைத்த நம்பிக்கையில் உண்மை இருக்கிறது என்பதை விஜயனைத் தொடர்ந்த மூர்சமத் புரிந்து கொண்டான். குகைப்பகுதியிலிருந்து புரவிமீது ஏறிப் புறப்பட்ட விஜயன் புரவியைச் சிறிதும் துரிதப்படுத்தாமல் மெதுவாகவே நடக்கவிட்டான். புரவியின் மீதிருந்தவன் எதிரே நோக்காமல் குனிந்து நிலத்தையே நோக்கிய வண்ணம் சென்றான். சுமார் இருபது அடி சென்றதும் சட்டென்று தரையில் குதித்து அங்கிருந்த ஒரு சிறு பட்டையை எடுத்துப் பார்த்துத் திருப்திக்கு அறிகுறியாகத் தலையை ஆட்டிக்கொண்டு அதை மடியில் வைத்துக் கொண்டு மீண்டும் புரவிமீது ஏறித் தரையைக் கவனித்த வண்ணம் புரவியை நடத்தினான். இன்னும் பத்தடி சென்றதும் மற்றொரு பட்டையை எடுத்து மூர்சமதிடம் நீட்டி, "சமத்! இதைப் பார்," என்றான்.

சமத் பட்டையை நோக்கினான். "பட்டை மிக மிருதுவாக இருக்கிறது, வளைகிறது," என்று சொன்னான் சிறிது நேரம் கழித்து.

"சுடர்விழியின் மரவுரியின் ஒரு பகுதி அது. இதையும் பார்," என்று கூறித் தனது மடியிலிருந்த பட்டையையும் கொடுத்தான். "பதனம் செய்யப்பட்டுப் பட்டுபோல் இருக்கும் மரவுரியின் பகுதிகள் இவை. தான் செல்லுமிடத்தைச் சுட்டிக் காட்டச் சுடர்விழியின் ஏற்பாடு இது," என்று கூறிய விஜயன், "சமத்! நீ முன்னால் சென்று புரவிகளின் குளம்படிகள் தெரிகின்றனவா பார்," என்று கூற சமத் தனது புரவியை முன்னால் நடத்தினான். சுமார் மூன்று நிமிடங்கள் பயணம் செய்த பிறகு சட்டென்று புரவியை நடத்தித் திரும்பிப்பார்த்த மூர்சமத், "எசமான்! இங்கு சில குளம்படிகள் தெரிகின்றன," என்றான்.

அதைக் கேட்ட விஜயன் தனது புரவியைச் சிறிதே ஓடவிட்டு மூர்சமத் காட்டிய குளம்படிகளைப் பார்த்தான். பிறகு ஆகாயத்தையும் நோக்கி எதிரே தெரிந்த பெரியமலைப் பாறையையும் அடர்ந்த காட்டையும் நோக்கினான். "சமத்! உனக்குப் புரிகிறதா இப்பொழுது?" என்று வினவினான்.

zeevaa

மூர்சமதுக்கு ஏதும் புரியாததால் தலையை இருபுறம் ஆட்டினான், புரியவில்லையென்பதற்கு அடையாளமாக.

விஜயன் விளக்கினான்: ''மூர்சமத்! இந்தக் காட்டைச் சிறிது தாண்டினால் ஹாகலாமலைப் பாறைகளின் வடக்கு மூலை வருகிறது. அடுத்து சீதாதலவா (சீதா சமவெளி) அதாவது சீதை திரிசடையுடன் சிறை வைக்கப்பட்ட இடம் வருகிறது. அங்கு கல்யாணி நதியின் உபநதியான சீதா கங்காவும் அடர்ந்த காடுகளும் இருக்கின்றன. அந்தக் காட்டின் நடுவில் பலமான பாழடைந்த கோட்டை ஒன்று இருக்கிறது. அங்குதான் சுடர்விழி இருக்கிறாள்,'' என்று கூறிய விஜயன் தனது புரவியைச் சற்று வேகமாகவே நடத்தினான்.

அப்பொழுது வெய்யில் நன்றாக ஏறிவிட்டதாலும். கதிரவன் கிரணங்களை ஹாகலா பறைகளும் வாங்கி எதிர்வீச்சு வீசியதாலும், உஷ்ணம் மிக அதிகமாயிருந்ததாலும், பயணம் சற்றுக் கடுமையாகவே இருந்தாலும் அதைப்பற்றி சட்டை செய்யாமல் அதிக துரிதமாகவே பயணம் செய்த விஜயன் மெள்ளமெள்ள சீதா சமவெளிக்கு மாலையில் வந்து சேர்ந்தான். ஒருபுறம் ஹாகலாவின் பெரும் பாறைகள், இன்னொரு புறம் அடர்ந்த காடுகள், மனித ச்ஞ்சாரமற்ற நூகாதலா (ஆலமரக்காடு) இவையனைத்திலும் பிரவேசித்துப் பயணம் செய்தான் விஜயன். இப்படிக் கடுமையான பயணத்துக்குப் பிறகு சீதாவாகா நதிக்கரைக்கு வந்தான்.

நதியில் நல்ல பிரவாகமிருந்தது. இருபுறத்திலுள்ள காடுகள் மாலை முதிர்ந்து இருள் புகுந்துவிட்ட காரணத்தால் மிகப் பயங்கரமாயிருந்தன. ஆங்காங்கு துஷ்ட மிருகங்களின் ஒலிகளும் கேட்கலாயின. அந்த இடத்தை அடைந்ததும் விஜயன் சமதை நோக்கி, ''சமத்! இனி என்னைத் தொடர்ந்து வா. எப்படியும் இன்னும் இரண்டு நாழிகை பயணத்துக்குப் பின்புதான் நாம் பாழடைந்த கோட்டையை அடைய முடியும். அதற்கு முன்பும்

zeevaa

செங்குத்தான பாறைகள் சிலவுண்டு. ஆனால் முக்கால்வாசி காடுதான். அந்தக் கோட்டைக்கு முன்பு யார் உன்னைத் தடுத்தாலும் வெட்டி விடு. எதிரிகள் நம்மை உயிருடன் பிடிக்கத் திட்டமிட்டிருப்பதால் அநேகமாக எதிர்ப்போ தடையோ இருக்காது. அப்படி இருந்தால் அதைச் சமாளித்துக் கொள்'' என்று உத்திரவிட்டு மெள்ளப் புரவியை அருவிக்குள் நடத்தினான்.

சுமார் ஒரு நாழிகை நதிக்கரையோரக் காட்டிலேயே புரவியை நடத்திய விஜயன் சட்டென்று ஓர் இடத்தில் நின்று எதையோ உ ற்றுக் கேட்டான். சற்றுத் தூரத்திலிருந்து யாரோ குழலூதும் இன்னிசை கேட்கவே இரண்டு விநாடிகள் நிதானித்த விஜயன் குழலோசை கேட்ட இடத்தை நோக்கிச் சென்றான்.

அந்த இடத்தை அணுக அணுக அந்தப் பாழடைந்த கோட்டையின் முகப்புகள் தெரிந்தன. பெரும் பாறைகள் இரண்டு தனித்தனியாக நின்றன. எதிரேயிருந்த கோட்டையின் மீது அரசு செடியொன்று பெரிதாக வளர்ந்திருந்தது. அந்தக் கோட்டை வாயில் அத்தனை பெரிதாக இல்லாவிட்டாலும் புரவி நுழைவதற்கு வேண்டிய அகலமிருந்தது. இருப்பினும் புரவியை விட்டு இறங்கிய விஜயன் மூர்சமதை அங்கேயே இருக்க உத்தரவிட்டு தான் மட்டும் கோட்டையின் பக்கப் பகுதியில் சென்று அதன் மேலே ஏறிப்படுத்து மெதுவாக நகர்ந்தான்.

கோட்டை மிகவும் பழுதடைந்திருந்ததால் பல இடங்களில் பிளவு கண்டிருந்தது. அந்தப் பிளவுகளின் மூலம் உள்ளிருந்து வெளிச்சம் தெரியவே கண்ணைத் தீட்டிக் கொண்டு பார்வையைச் செலுத்திய விஜயன் அங்கு கண்ட காட்சியால் அதிர்ச்சியடைந்தான்.

கோட்டையின் உட்புற மண்டபத்தில் கல்தூண் ஒன்றில் சுடர்விழி பிணைக்கப்பட்டிருந்தாள். அத்தனை துன்பத்திலும் அவள் வாய் குவிந்து குழலைப்போல் ஊதிக்கொண்டிருந்தது. அவளுக்கு எதிரே

zeevaa

நின்றவன், "ஊது சுடர்விழி! நிறுத்தாதே. விஜயன் வரும் நேரமாகி விட்டது. அவனுக்கு நீ இருக்குமிடம் தெரிய வேண்டாமா?" என்று கூறிப் புன்முறுவல் செய்தான்.

அவள் ஊதலைச் சிறிது நிறுத்தி, "அவருக்கு இந்த இடம் எப்படித் தெரியும்?" என்று கேட்டாள்.

"அவனுக்குத் தெரியாத இடம் சிங்களத்தில் கிடையாது. கவலைப்படாதே, விஜயன் நிச்சயம் வருவான் இங்கே. அவன் வந்ததும் உனக்கு விடுதலையளித்து விடுகிறேன்," என்றான் எதிரேயிருந்த மனிதன்.

இந்த உரையாடலைக் கேட்டதும் விஜயன் அதற்கு மேல் தாமதிக்காமல் கோட்டையின் பின்புறம் சென்று அங்கிருந்த பாறையொன்றை நகர்த்த, பாறை அகன்று வழிவிட்டது. அந்த வழியின் மூலம் உள்ளே நுழைந்து சுடர்விழி இருந்தமண்டபத்துக்கு வந்து தூணின் மறைவொன்றில் நின்றான்.

அந்த மண்டபத்தில் மீண்டும் உரையாடல் நடந்து கொண்டிருந்தது. "சீதையைத் தேடி ராமன் எப்படியும் வருவான்," என்றான் அந்த மனிதன்.

"முதலில் வந்தது அனுமார் இல்லையா" என்று கேட்டாள் சுடர்விழி.

"ஆமாம். அவனும் வருவான். இப்பொழுது அவன் பெயர் மூர்சமத்," என்று கூறிய அந்த மனிதன் பயங்கரமாக நகைத்தான்.

"காவிய அறிவு வரவர உனக்கு அதிகமாகிறது," என்று கூறிக்கொண்டே மறைவிடத்திலிருந்து வெளியே வந்தான் விஜயன்.

"வரவேண்டும், மன்னவா வரவேண்டும். உங்கள் வருகையால் இந்த கோட்டை பயனடைகிறது," என்று கூறி தலைவணங்கி விஜயனை வரவேற்றான் அந்த மனிதன்.

அடுத்த வினாடி தனது வாளை உருவினான் விஜயன். ''விஜயா! வாளை உருவாதே. அது உனக்குப் பயனளிக்காது'' என்று எச்சரித்தான் அந்த மனிதன். அவன் எச்சரித்த அதே விநாடியில் சுருக்கிட்ட கயிறொன்று மேலிருந்து விஜயன் தலைமூலம் கழுத்தில் இறங்கிச் சுற்றிக்கொண்டது. லேசாக இறுக்கவும் முற்பட்டது.




zeevaa

# 9. இளைய கேசதாது

பாழடைந்த அந்தப் பழைய கோட்டையின் உட்புற மண்டபத்தில் இரண்டு பந்தங்கள் மட்டும் வீசியவெளிச்சத்தில், கல்தூண் ஒன்றில் கயிறு கொண்டு கட்டப்பட்டிருந்த கட்டழகி சுடர்விழியின் நிலையைக் கண்டதாலும், அவளைச் சிறைப்பிடித்த வன் காவிய உவமை காட்டி நகைத்ததாலும் சினத்தின் வசப்பட்ட விஜயபாகு வாளை உருவியதும், மேலிருந்துஇறங்கிய ஒருகயிறு கழுத்தில் இறங்கிச் சுருக்கிட முயன்றதும் சினத்துக்கு அது சமயமல்ல வென்பதை உணர்ந்ததால் சினத்தை உதறி நிதானத்துக்கு வந்தான் கண்ணிமைக்கும் நேரத்தில். கழுத்தில் இறங்கி இறுகிய கயிற்றைப் பற்றிச் சிறிதும் லட்சியம் செய்யாமல் சுடர்விழியை சிறை செய்தவனை நோக்கி, ''கேசதாதுவின் வம்சத்தார் பெண்ணைப் பிடிக்கும் இந்த நிலைக்கு என்று வந்தார்கள்?'' என்று வினவினான். தான் பேச முற்பட்டதுமே கழுத்திலிருந்த கயிறு மேற்கொண்டு இறுகாமல் நின்று விட்டதைக் கவனித்த விஜயபாகு, தன்னைக் கொல்லும் உத்தேசம் எதிரிக்கு இல்லையென உணர்ந்து கொண்டதால் துரிதமான நடவடிக்கை எதுவும் எடுக்காமலும், மூர்சமதுக்குக் குரல் கொடுக்காமலும் நின்ற இடத்திலேயே நின்று வெறுப்புக் கலந்த பார்வையொன்றை மட்டும் எதிரி மீது வீசினான்.

அந்தப் பார்வையைக் கண்ட எதிரி எந்தவித சலனத்துக்கும் உட்படாமல், ''பெண்ணைப் பிடிக்கும் வழக்கம் கேசதாதுவின் வம்சத்துக்கு மட்டுமல்ல, இலங்கையின் மரபே அதுதான். ராவணன் சீதையை எடுத்து வரவில்லை? அதனால்தானே ராமன் வந்தான் இலங்கைக்கு? இப்பொழுது நீங்கள் வந்ததும் பெண்ணைத் தேடித்தானே?'' என்று சொன்னான்.

zeevaa

"அப்படியானால் நீ ராவணனா?" என்று வினவினான் விஜயன்.

"இல்லை. ராவணன் தோற்றான். நான் தோற்கப் போவதில்லை. ராமனை ராவணன் சிறை பிடிக்கவில்லை. நான் உன்னைச் சிறை பிடித்திருக்கிறேன்." விளக்கினான், இளைய கேசதாது.

"வஞ்சகத்தால்," விஜயன் குரலில்வெறுப்பு இருந்தது.

"போரில் வஞ்சகத்துக்குத் தந்திரம் என்று பெயர்," என்றான் இளைய கேசதாது.

இதைக் கேட்ட விஜயன் மெல்ல நகைத்தான், "உன்னுடைய இழி செயல்களுக்குச் சப்பைக்கட்டுப் போடுகிறாய். வீரனான கேசதாதுவுக்கு நீ எப்படித் தம்பியாகப் பிறந்தாய்?" என்று வினவினான் நகைப்பின் ஊடே.

இளைய கேசதாது விஜயனின் இகழ்ச்சிச் சிரிப்பால் அதுவரை காட்டிவந்த நிதானத்தையும் அசட்டையையும் அறவே உதறி முகத்தில் கோபத்தைக் காட்டினான். அதிக உயரமில்லாவிட்டாலும் பருமனாய், திடகாத்திரனாயிருந்த இளைய கேசதாது தனது வஞ்ச விழிகளால் விஜயனை உற்று நோக்கினான். "விஜயபாகு! என் தமையன் வீரன்தான். அதனால்தான் உன் தந்திரத்துக்கு ஆட்பட்டுப் போர்க்களத்தில் உயிரிழந்தார். அவரது வீரர்களை உனது வீரர்களால் போர் அரங்கத்தின் வேறு புறத்துக்கு இழுத்து அவரைத் தனிப்படச் சந்தித்துக் கொன்றுவிட்டாய். அதற்குப் பழி வாங்கவே உன்னைப் பிடித்திருக்கிறேன்," என்று சற்று ஆவேசத்துடன் பேசினான் இளைய கேசதாது.

எதிரியின் சொற்களைக் கேட்ட விஜயன், "இளையவனே! நீ சொல்வது உண்மைக்குப் புறம்பானது. கேசதாதுவை நான் போர்க்களத்தில் அணுகிய போது அவர் தனித்து இல்லை. போர்க்களத்தில் யாராவது தனித்திருக்க முடியுமா? வீர்கள்

zeevaa

இருக்கவே செய்தார்கள். கேசதாது அவர்களை விலக்கிக் கொண்டு போருக்கு வந்தார். தர்மமான போரில் மாண்டார். உனக்கும் தர்மத்துக்கும் அதிக தூரம். உனக்கு என்னுடன் தனியாகப் போரிட ஆசையிருந்தால் என் கழுத்திலுள்ள கயிற்றை நீக்கு. இங்கேயே உனது பகையை முடித்துக் கொள்ளலாம்," என்றான்.

இளைய கேசதாது தனது அழகிய கேசத்தை ஒரு முறை தடவிக்கொண்டான். இடையிலிருந்த வாளையும் ஒரு முறை தொட்டுப் பார்த்து, சற்று எட்டத் தூணில் சாத்தப்பட்டிருந்த இரு வேல்களையும் கவனித்தான். இரண்டடி நடந்து ஒரு வேலைக் கையிலும் எடுத்துக் கொண்டு விஜயபாகுவை நோக்கி, "விஜயபாகு! உன்னிடம் போரிட அவசியமில்லை. நீ என் தமையனைக் கொன்ற குற்றவாளி. உனக்குத் தண்டனை விதிப்பது தான் முறையாகும்," என்று கூறி, கையிலிருந்த வேலை ஓங்கி விஜயன் மார்பை நோக்கிக் குறி வைத்தான்.

அவன் வேலை எடுத்ததையும் தனது மார்பை நோக்கிக் குறி வைத்ததையும் பார்த்த விஜயன் சிறிதும் அசைந்தானில்லை. பெரிதாக நகைக்கவே செய்தான். "உன்னைப் போன்ற ஆண்மையற்றவனுக்கு வேலெதற்கு? மேலே கயிற்றை வீசிய வீரனை விட்டு என் கழுத்துக் கயிற்றை இறுக்கச் சொல். அது போதும் என்னைக் கொல்ல," என்று கூறினான் நகைப்பின் ஊடே.

அதுவரை இளையகேசதாது காட்டியிருந்த நிதானத்தை விஜயனின்அந்த நகைப்பு அறுத்துவிடவே அவன் கூவினான், "யாரங்கே? கயிற்றை மேலே தூக்கி இவனை ஒழித்துவிடு," என்று.

அதுவரை பேசாமல் அந்த நாடகத்தை நோக்கிக் கொண்டிருந்த சுடர்விழி, "அடப்பாவி! நிறுத்து உன் கொலைத் தொழிலை! இவர் அழிந்தால் சிங்களம் அழியும், நீயும் அழிந்துவிடுவாய்," என்று கூவினாள். அத்துடன் தூணில் கட்டியிருந்த தனது உடலையும் விடுவித்துக் கொள்ள முயன்றாள். ஆனால் அந்த முயற்சி

zeevaa

பயனளிக்கவில்லை. கயிற்றை முடிச்சுப் போட்டவன் உறுதியாகப் போட்டிருந்ததால் உடற்கட்டும் தளரவில்லை. பின்னால் பிணைக்கப்பட்டிருந்த கைகளும் விடுதலையடையவில்லை.

விஜயன் கழுத்திலிருந்து கயிறு லேசாக மேல் நோக்கித் தூக்கப்பட்டதும் வீறிட்டு அலறினாள் சுடர்விழி. அந்த அலறலைத் தொடர்ந்து அவள் இதழ்கள் குவிந்து பெரிதாகக் குழலோசையும் வீறிட்டுக் கிளம்பியதால் அந்த மண்டபம் அந்த ஒலிகளை வாங்கிப் பயங்கரமாக எதிரொலிகளைக் கிளப்பியது. அடுத்து வெகு துரிதமாக நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. அதுவரை வாளேந்தியிருந்த விஜயன் கையும் அவனது இன்னொரு கையும் உயர எழுந்து மேலிருந்து தொங்கிய கயிற்றைச் சற்று மேல் புறத்தில் பிடித்தன. அப்படிப் பிடித்த வண்ணம் கால்களை மேலே தூக்கிக் கயிற்றை ஊஞ்சல்போல் ஆடி எட்ட இருந்த எதிரிமீது பாய்ந்து இரு கால்களாலும் உதைக்க, இளைய கேசதாது பின்னால் சென்று மல்லாந்து விழுந்தான். அதே சமயத்தில் மேலே இருந்த பாறையொன்று கடகடவென்று உருளும் சத்தம் கேட்டதைத் தொடர்ந்து விஜயன் கழுத்துக் கயிறு அறுந்து கீழே விழுந்தது. அந்தக் கயிற்றைக் கழுத்திலிருந்து நீக்கித் தூர எறிந்த விஜயன் தனது வாளைக் கீழே விழுந்து கிடந்த இளைய கேசதாதுவின் மார்பில் ஊன்றி, ''இளையவனே! மெதுவாக எழுந்திரு அனுமான் எந்த நிமிடத்திலும் வருவான். அவனைக் கட்டுப்படுத்துவது கஷ்டம்.'' என்று சொல்லிக் கொண்டிருக்கையிலேயே மூர்சமத் மண்டப வாசலில் தோன்றினான்.

மூர்சமத்தைக் கண்ட இளைய கேசதாது பெரும் அச்சத்துக்கு உள்ளானான். பெரிய ராட்சஸன் போலிருந்த மூர்சமதின் வழுக்கைத் தலையிலிருந்த காயத்திலிருந்து ரத்தம் கசிந்து கன்னங்களை நனைத்திருந்தது. அந்தக் கோலத்தில் மூர்சமத் தனது இரு கைகளிலும் இரு வீரர்களின் கழுத்துக்களை இறுக்கிப் பிடித்துக்

zeevaa

கொண்டிருந்தான். அவன் பிடிப்பின் வலுவால் இரு வீரர்களின் கண்களும் பிதுங்கி, பந்தங்களின் வெளிச்சத்தில் பயங்கரமாக பளபளத்தன. மண்டபத்தின் வாயிற்படியிலேயே தனது கைகளை உதறி அந்த இருவரையும் உதிர்த்துவிட்ட மூர்சமத் அவ்விருவரையும் மாறி மாறிப் பார்த்தான். இருவரும் விழி பிதுங்கி, சாட்சாத் பிணங்களைப்போல் கைகால் அசையாமல் கிடக்கவே மூர்சமத் எரிச்சலுடன் அவர்களைத் தனது காலால் உதைத்து விட்டு மண்டபத்துக்கு வந்து மண்டபத்தின் கதவுகளை மூடினான். ''எசமான்! உங்கள் மீது கயிறு வீசியவனைக் கொன்று விட்டேன். இருப்பினும் கயிறு பாறை இடுக்கில் சிக்கியிருந்தது. வெளியே இன்னும் இவன் வீரர்கள் இருக்கிறார்கள். உத்தரவு கொடுத்தால் இவன் கழுத்தை முறித்து வெளியே அவர்களிடம் எறிந்து விடுகிறேன்,'' எசமான்! நீங்கள் அந்தப் பெண்ணை அவிழ்த்து விடுங்கள்,'' என்றும் கூறினான்.

விஜயபாகு அதற்குமேல் தாமதிக்காமல் தூணை நெருங்கி, சுடர்விழியைக் கட்டியிருந்த கயிறுகளை அவிழ்த்து அவளுக்கு விடுதலை அளித்து, ''சுடர்விழி! நீ இந்த மண்டபத்தின் அதோ அந்தப் படியில் உட்கார்ந்து இளைப்பாறு. அதற்குள் இவன் விஷயத்தை முடித்து விட்டு வருகிறேன்,'' என்று கூற சுடர்விழி தள்ளாடி நடந்தாள் சற்று தட்டுத் தடுமாறி, அவன் சொன்ன படியில் உட்கார்ந்து மரத்துப்போன கால்களை வருடிக் கொண்டாள்.

அப்பொழுது விஜயபாகுவை நோக்கிய இளைய கேசதாது, ''விஜயபாகு! கதை இத்துடன் முடியவில்லை. வெளியே காட்டில் இன்னும் நூறு வீரர்கள் இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து நீ தப்ப முடியாது,'' என்று பெரிதாக இரைந்தான்.

அந்தச் சமயத்தில் உட்புற வாயிற்படியில் உட்கார்ந்த சுடர்விழியும் பெரிதாக நகைத்தாள். ''ஆம், கதை இன்னும் முடியவில்லை,'' என்று சொல்லி மீண்டும் நகைத்தாள்.

zeevaa

அந்த அபாயமான சந்தர்ப்பத்தில் அவள் நகைத்ததற்குக் காரணம் விஜயனுக்கு புரியவில்லை, கேசதாதுவின் தம்பிக்கும் புரியவில்லை. புரிந்தபோது விஜயன் பெருவியப்புக்கு இலக்கானான். இளையகேசதாதுவுக்கு இணையிலா அதிர்ச்சி ஏற்பட்டது.

சுடர்விழி திடீரென நகைத்ததற்குக் காரணம் புரியாமல் வியந்த விஜயன் காதிலும், அதிர்ச்சியுற்ற கேசதாதுவின் காதிலும் மண்டபத்துக்கு வெளியே பலர் போரிடும் சப்தங்கள் கேட்டன. தடதடவென்று பலர் ஓடிவரும் சத்தமும் வாட்களோடு வாட்கள் உராயும் ஒலிகளும் மண்டபத்துக்குள்ளும் புகுந்தன. மண்டபத்துக்கு வெளியே இருந்த காட்டில் ஏற்பட்ட பலத்த அரவம் மெள்ள மெள்ளக் கோட்டையின் சதுக்கத்திலும் புகுந்து விடவே ஏதோ பெருத்த சண்டையே ஏற்பட்டுவிட்டதை இளைய கேசதாது புரிந்து கொண்டு மூர்சமதைத் தாண்டி வெளியே ஓட முற்பட்டான். மூர்சமத் அவனெதிரே பெரிய சுவரென நின்று மறித்து அவன் வாள் கையை இரும்பு போல் பிடித்து வாளைப் பறிக்க முற்படவே இளைய கேசதாது மணிக்கட்டு முறியும் போல் ஆகிவிட்டதால் வாளைக் கீழே உதறி விட்டான். மூர்சமதின் ராட்சஸப் பிடியிலிருந்து கையை விடுவித்துக் கொண்டு வாயிலை நோக்கி ஓடினான்.

விஜயபாகு அவனைத் தடுக்க முயலவில்லை. தடுக்க முயன்ற மூர்சமதையும் தடுத்து, ''சிறிது நிதானி சமத்! வந்திருப்பவர்கள் யாரென்று கவனிப்போம்,'' என்று சமதை அடக்கினான்.'' சுடர்விழி! மேலும் பலர் வந்திருப்பதால் போரின் உஷ்ணம் அதிகமாகும் போல் தோன்றுகிறது. ஆகவே நீ என் பக்கத்தைவிட்டு நகராதே,'' என்று கூறி அவளைத் தனது பக்கத்தில் இழுத்துக் கொண்டான். அவனது இடது கை தனது இடையில் பதிந்தது பேரின்பமாயிருந்தது சுடர்விழிக்கு. ஆகவே அவன் சொல்லைச் சாக்காக வைத்துக் கொண்டு விஜயனுடன் மிகவும் இணைந்து நெருங்கி நின்று

zeevaa

கொண்டாள். விஜயனும் தனது வாளை உருவிப் பிடித்தவண்ணம் எதிரிகள் யார் வந்தாலும் சமாளிக்கும் வழியை எண்ணிக் கதவை அரைவாசி திறந்து வைக்கும்படி மூர்சமதுக்கு உத்தரவிட்டான். ஏற்கெனவே தான் சாத்திய கதவை இளைய கேசதாது திறந்து ஓடிவிட்டதால் மீண்டும் அந்தக் கதவை மூர்சமத் சாத்த முயன்ற சமயத்தில் கதவு பலவந்தமாகத் திறக்கப்பட்டது. உருவிய வாட்களைத் தாங்கிய பதினைந்து வீரர்கள் தடதடவென மண்டபத்துக்குள் நுழைந்து விட்டனர். மூர்சமதும் விஜயனும் போருக்குச் சித்தமான விநாடியில் தான் அவர்கள் முற்றும் எதிர்பாராத விந்தை நிகழ்ந்தது.



# 10. இசையும் நெருப்பாகும்

மூர்சமத் அந்தப் பாழடைந்த கோட்டை மண்டபப் பெருங் கதவுகளைச் சாத்துமுன்பாக அக்கதவுகளைப் பல வந்தமாகத் திறந்து கொண்டு உருவிய வாட்களுடன் பத்துப் பதினைந்து வீரர்கள் நுழைந்து விடவே விஜயன், மூர்சமத் இருவருமே போருக்குச் சித்தமானார்கள்.

விஜயபாகு சுடர்விழியின் இடையிலிருந்த தனது இடது கையை எடுத்து விட்டுத் தனது வாளை வலது கையில் உருவிக் கொண்டதன்றி எட்டத் தூணில் சாத்தியிருந்த இரு வேல்களில் ஒன்றையும் இடது கையில் ஏந்திக் கொண்டு இரு எதிரிகளையும் நோக்கி நடந்தான். மூர்சமத் தனது பெரிய வாளை மட்டும் தலைக்கு மேல் தூக்கிக்கொண்டு முன்னால் வருபவர்களின் தலைகளின் மீது இறக்க முயன்றான். அந்த இருவர் போர் முயற்சியைக் கண்டதும் வேகமாக முன்னேறிய இருவீரர்கள் விஜயன் வாளுக்கும் வேலுக்கும் பலியாகித் தரையில் சாய்ந்தார்கள். மூர்சமதின் வாள் இன்னொரு வீரன் தலையில் வேகமாக இறங்கவே, அவன் மண்டை இரண்டாகப் பிளந்து அதிலிருந்து கொட்டிய ரத்தப் பிரவாகம் அவன் உடலை மட்டுமன்றித் தரையையும் நனைக்கவே, தரையில் தடாலெனச் சாய்ந்த அந்த வீரன் உடல் ரத்தத்தின் மீது உருண்டு பயங்கரமான நிலையைச் சிருஷ்டித்தது.

முன்னேறிய பதினைந்து வீரர்களில் நான்கு பேர்கள் சில விநாடிகளின் வீழ்ந்துவிட்டதால், மற்ற வீரர்கள் மூர்சதையும் விஜயபாகுவையும் சூழ்ந்து கொள்ளப் பக்க வாட்டில் விசிறிபோல விரிந்து அணுக முற்பட்டார்கள். அவர்கள் தன்னைச் சூழ்ந்து

zeevaa

கொள்ள முயன்ற சமயத்தில் விஜயன் சற்றுப் பின்னடையவே மண்டபத்தின் கோடித் தூணுக்கு அருகில் நின்றிருந்த சுடர்விழி யின் உதடுகளிலிருந்து கிரீச்சென்ற ஊதலொன்று வெளிப்பட்டது. அதைத் தொடர்ந்து கோட்டைக்கு வெளியே போர் அரவம் முன்னைவிட அதிகமாகக் கேட்டது. அப்பொழுது மேலும் சிலவீரர்கள் உள்ளே ஓடிவர முற்பட்டதைக் கண்ட விஜயன் மூர்சமதை நோக்கி, ''சமத், இவர்களில் எவ்வளவு பேரைக் கொல்ல முடியுமோ கொன்றுவிடு. இங்கேயே இவர்களுக்குச் சமாதி கட்டிவிடுவோம். கேசதாது ஓடாதிருந்தால் அவனையும் ஒழித்து விடுகிறேன்,'' என்று கூறிக்கொண்டு தூணில் சாத்தியிருந்த இன்னும் இருவேல்களை எடுத்துப் புதிதாக வந்தவர்கள் மீது வீசிவிட்டு மற்றவர்கள் மத்தியில் புகுந்து வாளைக் கரகரவென்று சுழற்றலானான்.

அவன் வாளின் நுனி தங்கள் ஒவ்வொருவர் முகத்தின் முன்பும் தோன்றுவதைக் கண்ட எதிரி வீரர்கள், ''இப்படியும் ஒருவர் போரிட முடியுமா?'' என்று வியந்த சமயத்தில் மூர்சமத் தன் வாளால் சிலரை வெட்டியதன்றி, வாளை உறையில் போட்டு, இரு கைகளாலும் ஒருவனைத் தூக்கிப் பின்னால் வருபவர்கள் மீது விட்டெறியவே அவர்கள் வேகம் சற்றுக் குறையவே செய்தது.

அதே சமயத்தில் வீரர்களுக்குப் பின்னாலிருந்து இளைய கேசதாதுவின் குரல்பெரியதாகக் கேட்டது. ''இருவரைச் சமாளிக்க இத்தனை பேரால் முடியவில்லை? உங்களுக்கு வெட்கமா யில்லை?'' என்று இளைய கேசதாது கூச்சலிட்டான்.

அப்பொழுதுதான் முற்றிலும் எதிர்பாராத அந்த விந்தை நிகழ்ந்தது.

வீரர்களை முன்னால்விட்டு, பின்னால் நின்றிருந்த இளைய கேசதாதுவை யாரோ ஒரு ராட்சஸன் இரு கைகளாலும் தனது தலைக்கு மேல் தூக்கிக் கொண்டான். அந்த ராட்சஸன் பிடியிலிருந்து திமிறக் கைகால்களை உதைத்துக் கொண்ட இளைய கேசதாதுவைப்

zeevaa

பார்த்து, திடீரெனப் பலர் ஏக காலத்தில் நகைத்தார்கள். அந்த நகைப்புக்குக் காரணமென்ன என்பதை அறியத் திரும்பிப் பார்த்த மண்டபவீரர்கள் திடீரெனப் பின்புறமாகச் சாய்ந்து மண்டபத்தின் கதவுக்கருகில் வீழ்ந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவர் மார்பிலும் ஒவ்வோர் அம்பு தைத்திருந்ததையும் அம்புகள் கழுத்துக்களையும் மார்புகளையும் நோக்கி எறியப்பட்டிருந்ததையும் பார்த்த விஜயனும் மூர்சமதும் தங்கள் உதவிக்கு வந்தது யார் என்பதை அறியாமல் திகைத்த சமயத்தில், வெளியே இளைய கேசதாதுவைத் தனது கைகளால் தலைக்குமேல் தூக்கிப் பிடித்திருந்தவன் மண்டபத்துக்குள் நுழைந்தான்.

நுழைந்தவன் திடகாத்திரனாயிருந்தான். தலையின் முன் கொண்டையில் மயிற்பீலியொன்றையும், கழுத்தில் பற்பல நிறங்களாலான மணித்தாவடத்தையும் அணிந்திருந்தான். அவன் இடையில் மான் தோலொன்று காட்சியளித்தது. அந்த மான்தோலை இறுகக் கட்டிய இன்னொரு பட்டைத் தோலில் பெரிய வாளொன்றும் காட்சியளித்தது. அவன் கையில் பெரிய வில்லொன்றும் தோளில் அம்பறாத் தூணியும் இருந்தன.

அந்த மனிதனைப் பார்த்ததுமே அவன் சிங்களத்தின் ஆதிகுடிகளான வேடர்வம்சத்தைச் சேர்ந்தவன் என்பதைப் புரிந்து கொண்ட விஜயன் அவனை ஏதோ கேள்விகேட்கத் தொடங்கு முன்பு அவனே கேட்டான், "எங்கள் தலைவி எங்கே?" என்று. பதிலுக்குக் காத்திராமல் மண்டபத்தைச் சுற்றிக் கண்களைச் சுழலவிட்ட வேடர் தலைவன், மண்டபக் கோடியில் தூணொன்றில் சாய்ந்து கொண்டிருந்த சுடர்விழியைக் கண்டதும், "தேவி" என்று பரிவுடன் கூவினான். அடுத்து அவள் காலடியில் இளைய கேசதாதுவை ஏதோ கட்டையை எறிவது போல் எறிந்துவிட்டு, தனது கால்களை முழந்தாளிட்டு வணங்கினான்.

வணங்கிய அவன் தலைமீது தனது கையை வைத்து ஆசி கூறிய சுடர்விழி, "முருகா! எழுந்திரு. சமயத்தில் வந்தாய்," என்று நன்றி ஒலித்த குரலில் கூறினாள்.

zeevaa

முருகன் மெதுவாக எழுந்து சுடர்விழியின் கைகளிலும் கால்களிலும் கயிறு விளைவித்த அடையாளத்தைப் பார்த்ததும் மீண்டும் அரக்க சொரூபத்தை அடைந்து, "தேவி, தங்களைக் கட்டியவன் யார்? இவனா, சொல்லுங்கள்? இவனை இங்கேயே வெட்டிப்போடுகிறேன்," என்று கூறிவிட்டு இளைய கேசதாதுவின் மார்பில் தனது ஒரு காலை வைத்துக் கொண்டான். அந்த நிலையில் கேட்டான். "தேவி! நீங்கள் ஏன் பழையபடி சீட்டியடிக்கவில்லை? குழல் போல் இனிமையாகத்தான் தங்கள் ஊதல் கேட்டது. ஆகையால் தான் வரச் சிறிது தாமதம் ஏற்பட்டது," என்று விளக்கமும் கொடுத்தான்.

சுடர்விழி முருகனை நோக்கி, "முருகா! இவர் மார்பிலிருந்து காலை எடுத்துவிடு, இவர் எனக்கு உதவியிருக்கிறார்," என்று கூற, அதைக்கேட்ட முருகன் மட்டுமின்றி விஜயனும் மூர்சமதும் கூட வியப்படைந்தனர்.

இந்த உரையாடலுக்குள் மண்டபம் முழுவதிலும் வேடர்கள் நிரம்பிவிடவே இளைய கேசதாது தனது உயிர் இனி அரைக் காசு பெறாது என்பதை உணர்ந்தான். அப்படி உணர்ந்த சமயத்தில் இளைய கேசதாது தனக்கு உதவியிருப்பதாகச் சுடர்விழி கூறியது அங்கிருந்த எல்லோருக்குமே வியப்பாயிருந்ததால் சுடர்விழியே அதற்கு விளக்கம் தந்தாள், "இந்த வீரர் என்னை இருவீரர்களை விட்டு இங்கு தூக்கி வரச் செய்தார். வந்ததும் என்னைத் தூணில் பிணைத்தார். நான் தூண்டில் மீன் என்றும் சிங்கள மன்னரை வரவழைக்கவே என்னைத் தூக்கி வந்ததாகவும் அறிவித்தார். அவருக்கு நான் இருக்கும் இடம் தெரிவிப்பதற்காக வாயால் ஊதச் சொன்னார். நான் ஊதினேன். ஊதல் புல்லாங்குழல் இசை போலிருக்கிறதென்று பாராட்டி மேலும் தொடர்ந்து ஊதும்படி மிரட்டினார். நான் தொடர்ந்து ஊதினேன். இடையிடையே என்னைப் பார்த்து நகைத்தார். ஆனால் அந்த ஊதல் எங்கு எட்டும் என்பது அவருக்குத் தெரியாது. பாவம், இசையும் நெருப்பாகும் என்பது அவருக்குப் புரியவில்லை. நிலைமை மிஞ்சிவிட்ட

zeevaa

பிறகுதான் சீட்டியடித்தேன் பழையபடி'' என்று நடந்த கதையை முடித்தாள்.

இதைக் கேட்டதும் மண்டபத்தில் கூடியிருந்த வேடர்களின் சினம் அதிகமாகவே எல்லோரும் ''கொல் அவனை, கொண்டு வாருங்கள் அவனை - புலி, கரடிக்கு இரையாகப் போடுவோம்'' என்று கூக்குரலிடவே இளைய கேசதாது நடுங்கினான் தனது ஆயுட்காலம் முடிந்து விட்ட தென்று.

சுடர்விழியின் நோக்கம் அறிந்த முருகன் இளைய கேசதாதுவின் மார்பிலிருந்து தனது காலை எடுத்து, ''டேய், எழுந்திரு'' என்று உத்தரவிட, இளைய கேசதாது எழுந்தான் மெதுவாக.

''இவனை என்ன செய்யலாம்? உத்தரவிடுங்கள்'' என்று முருகன் வினவினான்.

''இங்கு உத்தரவிடக்கூடியவர் சிங்கள மன்னர் ஒருவர்தான். அவரைக் கேளுங்கள்'' என்று சுடர்விழி விஜயனைச் சுட்டிக் காட்டினாள்.

அப்பொழுதுதான் முதன்முதலாக விஜயபாகுவைப் பார்த்த முருகன், இளைய கேசதாதுவை இழுத்துச் சென்று விஜயனின் காலில் கிடத்தி, தானும் மண்டியிட்டு வணங்கினான். விஜயபாகு மன்னன் என்பதை அறிந்ததும் மண்டபத்திலிருந்த வேடர்கள் அனைவரும் வணங்கினார்கள்.

சுடர்விழியின் அந்தப் படையைப் பார்த்ததும் அவளைத் தீண்ட யாராலும் முடியாதென்பதைப் புரிந்து கொண்டான் விஜயன். அவள் இராவணன் மலை பர்ணசாலையில் தனித்திருந்த காரணமும் அவனுக்குச் சந்தேகமறப் புரிந்தது. அவளை அன்பு ததும்பும் கண்களுடன் நோக்கிய விஜயபாகு, முடிவாக முருகனைத் தனது இருகைகளாலும் தூக்கி நிறுத்தி, ''வேடர் தலைவனே! உன்னால் நாங்கள் மூவரும் இன்று பிழைத்தோம்'' என்று நன்றி கூறினான்.

zeevaa

"மன்னவா! தங்களுக்கு உதவ வாய்ப்புக் கிடைத்ததால் எங்கள் இனத்துக்கே பெருமை கிட்டியிருக்கிறது. வேடர்கள் சிங்களத்தின் எல்லாக் காடுகளிலும் இருக்கிறார்கள். எங்கள் தலைவியின் குழலோசை கேட்டால் எந்தச் சமயத்திலும் எங்கும் வேடர் உதவி தங்களுக்குக் கிடைக்கும். ஆனால் ஒரு வேண்டுகோள்" என்றான் முருகன்.

"எதை வேண்டுமானாலும் கேள் முருகா" என்றான் விஜயன்.

"எங்கள் தலைவியை நீங்கள் எப்பொழுதும் சந்தோஷமாக வைத்திருக்க வேண்டும். அவள் மனம் நோக நடக்காதீர்கள்" என்று கேட்டுக்கொண்டான் முருகன்.

இதைக் கேட்ட விஜயன் பிரமித்தான். தனக்கும் சுடர் விழிக்கும் ஏதோ சம்பந்தமிருப்பதாக முருகன் நினைத்திருப்பது எவ்வளவு தவறு என்று நினைத்து அதை மறுக்க வாயெடுத்தான். ஆனாலும் வாயிலிருந்து சொற்கள் வரவில்லை. எட்ட இருந்த சுடர்விழியை நோக்கினான். அவள் வதனத்தில் வெட்கத்தின் சாயை பூர்ணமாயிருந்தது. செவ்விய இதழ்கள் வெட்கப் புன்முறுவலால் லேசாக மடிந்திருந்தன. அப்படி மடிந்ததால் கன்னங்களில் அழகிய குழிகள் விழுந்து வதனத்தின் அழகை ஆயிரம் மடங்கு அதிகப்படுத்தின. விஜயன் தன்னை உற்றுப் பார்ப்பதைக் கண்டதும் அவள் தனது மரவுரி ஆடையைச் சிறிது கீழே இழுத்துத் தொடையை மறைத்துக்கொண்டாள்.

இந்தச் சின்னங்களை கவனிக்கவே செய்த விஜயன் சற்றே சலனமடைந்தாலும் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், "சுடர்விழி! இளைய கேசதாதுவை என்ன செய்யலாம்?" என்று வினவினான்.

"அதைத் தீர்மானிக்க வேண்டியது நீங்கள்" என்றாள் சுடர்விழி.

"முருகா! இவனைத் தூக்கி நிறுத்து" என்று உத்தரவிட, இளைய கேசதாது தூக்கி நிறுத்தப்பட்டான். அவனை நோக்கிக் கேட்டான்

zeevaa

விஜயன்: ''இளையவனே! சுடர்விழியைக் கடத்தி வந்திருக்கிறாய். என் கழுத்தில் சுருக்கிட்டுக் கொல்ல முயன்றாய். இந்தக் குற்றங்களுக்கு என்ன தண்டனை விதிக்கலாம்? நீயே சொல்'' என்று வினவினான்.

அந்தக் குற்றங்களில் ஏதாவது ஒன்றுக்கே மரண தண்டனை விதிக்கலாம் என்பதை அறிந்த இளைய கேசதாது ஏதும் பேசாமல் மௌனம் சாதித்தான். உண்மையான தைரியம் இல்லாதவனாதலால் அவன் கால்களும் லேசாக நடுங்கின. இதையெல்லாம் கவனித்த விஜயன், ''முருகா, இவனை விடுதலை செய்து அனுப்பிவிடு. இவன் புரவியை கொடுத்துவிடு. திரும்ப இந்தப் பக்கம் வந்தால் நீயே இவனை வெட்டிப்போடு'' என்று தீர்ப் பளித்தான்.

இந்தத் தீர்ப்பு யாருக்கும் திருப்தியில்லாதிருக்கவே மூர்சமத் ஏதோ முரட்டுக்குரலில் முனகினான். ''இவன் விஷப்பாம்பு எசமான். இப்பொழுது விட்டால் மறுபடியும் வந்து கடிக்காதிருக்காது'' என்று முனகலின் ஊடே, கரகரத்த குரலில் தனது கருத்தைத் தெரிவித்தான்.

''அடியவன் கருத்தும் அதுதான்'' என்றான் முருகன்.

மற்ற வேடர்கள் இளைய கேசதாதுவைக் கொலைப் பார்வை யாகப் பார்த்தார்கள். அவர்கள் நோக்கத்தைப் புரிந்துகொண்ட விஜயபாகு, ''புத்த மதம் இம்சையை அனுமதிப்பதில்லை. உயிர் வதை அதன் நோக்கமில்லை. பகைவனுக்கும் அருள்வதே அதன் தத்துவம். இவன் போகட்டும். இவனுக்குத் திராணியிருந்தால் எங்காவது போர்க்களத்தில் சந்திக்கட்டும்,'' என்று அவர்களைச் சமாதானப்படுத்திவிட்டு ''கேசதாதுவின் இளையவனே, போய் வா'' என்று உத்தரவு கொடுக்க, இளைய கேசதாது தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு மெதுவாக மண்டபத்தை விட்டு வெளியேறினான்.

வேடர்கள் அவனுக்கு வேண்டா வெறுப்பாக வழி விட்டார்கள்.

zeevaa

விஜயன் பிறகு மூர்சமதை நோக்கி, ''சமத்! நீயும் முருகனும்இந்த வீரர்களுடன் சென்று கோட்டையின் வெளிப்புறத்திலிருக்கும் பிணங்களை ஒதுக்குங்கள். சிலவற்றைக் காட்டுக்குள் இழுத்து விட்டால் துஷ்டமிருகங்கள் பிழைத்துக் கொள்ளும். இன்றிரவு இந்த பாழடைந்த கோட்டையில் தங்கி நாளைக் காலையில் நாங்கள் புறப்படுகிறோம்'' என்றுகூற, முருகனும் வீரர்களும் வெளியே சென்றார்கள். மூர்சமதும் அவர்களைத் தொடர்ந்தான்.

அவர்கள் சென்றதும் மண்டபப் பெருங் கதவுகளை மூடிய விஜயன் சுடர்விழியை அணுகி, ''சுடர்விழி! உன்னைத் தூக்கி வந்தவர்கள் உன்னை உபத்திரவம் செய்தார்களா?'' என்று வினவினான்.

''இல்லை. இருவர் வாள்களைக் காட்டி என்னை வரும்படி அழைத்தார்கள். ஒரு புரவியும் கொடுத்தார்கள். நான் சென்றேன் அவர்களுடன். நான் செல்லுமிடத்தை உங்களுக்கு 'அறிவிக்க...'' வாசகத்தை முடிக்கவில்லை சுடர்விழி.

விஜயனே முடித்தான். ''அசோகமலர்களைத் தூவிச் சென்றாய். உனது மரவுரி ஆடையின் பகுதிகளையும் கிழித்துக் கிழித்து ஆங்காங்கு போட்டிருந்தாய்,'' என்ற விஜயன், ''உன்னை இறுகக் கட்டியிருந்தானே இளைய கேசதாது, உன் உடம்பில் கயிற்றுக் காயம் இருக்கிறதா?'' என்று கூறி அவள் அழகிய உடலைப் பரிசோதிக்கலானான்.

மார்பில் போடப்பட்டிருந்த கட்டு, கைகளைச் சுற்றிப் போடப் பட்டிருந்ததால் கைகளில் கயிறு அழுந்தியிருந்த இடங்களை வருடினான். பிறகு கீழே உட்கார்ந்து கால்கட்டுகளின் வடுவைக் கவனித்தான். அவள் தொடைகளிரண்டையும் கயிறு நன்றாக அழுத்தியிருந்ததால் அவள் மரவுரியை அளவு மீறாமல் தூக்கி, தொடைச் சதையைச் சற்று அழுத்தி வருடினான்.

அவன் செய்த பணிவிடை ஒவ்வொன்றும் அவளுக்குப் பரம வேதனையாயிருந்தது. கைகட்டுகளைப் பார்த்த போது மார்பையும்

zeevaa

ஒருவேளை பார்த்துவிடுவானோ என்று துடித்த அவள், அவன் மார்பைப் பார்க்கா விட்டாலும் கைகளின் மேற்புறத்தை வருடிய போது மார்புக்குக் குறுக்கே விழுந்திருந்த கை நன்றாக அழுந்தவே இன்ப வேதனை அவளுக்குச் சொல்லத் தரமில்லாதிருந்ததது. தொடையில் காயத்தைப் பார்க்கச் சிறிது மரவுரியை அவன் லேசாகத் தூக்கியதும் அவளுக்குப் பிராணனே போய்விடும் போலிருந்தது. ஆனால் அவன் பண்பாடு சிறிதும் மீறாமல் அளவோடு தொடைத் தழும்பைப் பார்த்ததும் சிறிது சாந்தியடைந்தாலும் அது உண்மையான சாந்தியல்லவென்பதை அவள் புரிந்து கொண்டாள். அந்த ஆடவன் கைகள் பட்டதால் வேட்கையின் எல்லையை அடைந்துவிட்ட சுடர்விழி அவன் பண்பாட்டை அறவே வெறுத்தாள்.

அடுத்து அவன், தொடைகளை வருடி வழவழத்த அந்தத் தொடைகளிரண்டிலும் கயிறு கன்னிச் சிவக்க வைத்துவிட்ட இடங்களைப் பார்த்தான். குங்குமம் போல் சிவந்திருந்த அந்த இடங்களையும் பார்த்துத் தலையை உயரத் தூக்கி அவள் சிவந்த இதழ்களையும் பார்த்தான். இதழ்கள் மந்த வெளிச்சத்தில் மிகவும் சிவந்து நீரோட்டமுள்ள மாணிக்கக்கற்களால் சிருஷ்டிக்கப்பட்ட நகையைப் போல் பளபளத்தது? அவள் கண்களில் காம இச்சை நிரம்பி நின்றது. அடுத்த வினாடியே சுயநிலையை அறவே இழந்துவிட்ட விஜயன், அவள் வழவழத் தொடைகளில் தனது முகத்தைப் புதைத்துக் கொண்டான். புரட்டினான், இதழ்கள் அவள் தொடைக் காயங்களுக்கு மருத்துவம் பார்த்தன.

அவள் உடலெல்லாம் உணர்ச்சிகளால் துடித்தது. சட்டென்று அவள் குனிந்து அவன் தலையை தனது இரு கைகளாலும் தூக்கினாள். அடுத்து அவன் எழுந்திருந்தான் வேகமாக. அவளை அப்படியே தூக்கிக் கொண்டான் தனது கைகளில், அவள் இதழ்களில் அவன் இதழ்கள் பதிந்தன. அதே நிலையில் அவளைப் பந்தத்தின் வெளிச்சமில்லாத இருட்டித்த பகுதிக்கு எடுத்துச் சென்றான். அவள் அவன் இதழ்களிலிருந்து தனது இதழ்களை

zeevaa

விடுவித்துக் கொண்டு அவற்றால் ஊதி இன்னிசை கிளப்பினாள். இருவர் உடலிலும் காமாக்கினி வாரிக் கொட்டியது. இசையும் நெருப்பாகும் என்பதை உணர்ந்து கொண்ட விஜயன் தூண்களின் மறைவுக்கு அவளைத் தூக்கிச் சென்றான்.



# 11. காதல் பொய்

இரு கைகளாலும் வாரியெடுத்து, இதழ்களோடு இதழ்கள் பதித்து மண்டபத்தின் இருட்டடித்த பகுதிக்கு அந்த மடமானைத் தூக்கிச் சென்ற அந்த இளங்காளை, தன்னை மிதமிஞ்சிய உணர்ச்சிகள் கவ்விக் கொண்டதையும், தனது உறுதியெல்லாம் காற்றில் பறந்து விட்டதையும் உணர்ந்தான். அந்த உணர்வின் காரணமாக அவன் சித்தம் சிதறியிருந்த சமயத்தில், சுடர்விழி தனது இதழ்களை அவனது இதழ்களிலிருந்து விடுவித்துக் கொண்டு மெல்லிய குழலிசை கிளப்பியதாலும், அந்த இசையில் அமுத சுகம் இருந்ததாலும், அவன் கைகள் அவளைப் பெரிதும் இறுக்கியதன்றி அவள் மார்பைத் தனது மார்புடன் அழுத்தி இணைக்கவும் செய்தன. அதன் விளைவாக அவள் சுந்தர உடலின் மென்மையையும் திண்மையையும் அவன் உணரவே செய்தான். அந்த உணர்ச்சியுடன் அந்த மண்டபத்தின் இருளடைந்த பகுதிக்கு அவளை எடுத்துச்சென்று மண்டபதத்தின் பின்புற வாயிலை நோக்கி ஓடிய படிகளிலொன்றில் அவளை உட்கார வைத்து அவளுக்கு அருகில் தானும் உட்கார்ந்து கொண்டான்.

அவர்கள் உட்கார்ந்த இடத்துக்கு எதிரே இரண்டு பெரிய கற்றூண்கள் இருந்ததால் சற்று எட்ட இருந்த தூணில் செருகப்பட்டிருந்த பந்தத்தின் வெளிச்சத்தை அவை அடியோடு மறைக்கவே, இருள் அளித்த துணிவில் விஜயன் அவள் தோள்களை மெதுவாகப் பிடித்தான். அவன் ஸ்பரிசத்தில் அவள் மெதுவாக நெளிந்து சற்றே திரும்பி அவனுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு உட்கார்ந்தாள். முதுகை அவள் திருப்பி உட்கார்ந்ததால் அவள் தலையில் சூடியிருந்த ஒற்றை அசோக

zeevaa

மலரின் இதழ்கள் உதிர்ந்ததால் அவற்றை அவள் கழுத்திலிருந்தும் முதுகிலிருந்தும் அகற்ற இரு இடங்களையும் ஒரு கையால் தடவினான். அவள் கழுத்து, மிக வழவழப்பாக இருந்ததாலும் அதன் மீது குழலிழைகள் விழுந்திருந்ததால் அவற்றை விலக்கிக் கழுத்தில் தனது இதழ்களைப் புதைத்தான் விஜயன். பிறகு தனது உதடுகளை விலக்கி அவளது முதுகை ஆதரவுடன் மேலிருந்து கீழ்வரை தடவிக் கொடுத்தவன் மெள்ள அழைத்தான் அவளை, ''சுடர்விழி''! என்று.

உணர்ச்சிகளில் அடியோடு அழுந்திக் கிடந்த சுடர்விழி மெதுவாக, ''என்ன?'' என்று குரல் கொடுத்தாள்.

அவள் குரலின் மென்மையிலிருந்தும் கனிவிலிருந்தும் லேசான நடுக்கத்திலிருந்தும் அவள் உணர்ச்சிப் பிழம்பில் அமிழ்ந்து கிடக்கிறாளென்பதைச் சந்தேகமறப் புரிந்து கொண்ட விஜயன் அந்த உணர்ச்சிகளிலிருந்து தானும் தப்ப முடியவில்லை என்பதை உணர்ந்தான். அதனால் ஏதோ கேட்க வேண்டுமென்பதற்காகக் கேட்டான், ''உன் முதுகில் கயிற்றுக் காயம் ஏதாவது இருக்கிறதா? சுடர்விழி?'' என்று. அத்துடன் நிற்கவில்லை. அவன் வலது கையை முன்னுக்குக் கொண்டு சென்று அவள் அழகிய தொடையிலும் கையை வைத்துப் பழைய வடுவில் வருடினான்.

அவன் நிலைமையைப் புரிந்து கொண்ட சுடர்விழி, 'முதுகில் எப்படிக் காயம் இருக்கும்? முதுகுதான் தூணில் சாய்ந்திருந்ததே? அதிருக்கட்டும். முதுகில் காயத்தைப் பார்க்கத் தொடையில் எதற்குக் கை?' என்று உள்ளூர நினைத்தாள். ஆனால் அந்தக் கேள்விகளை வெளிப்படையாகக் கேட்காமல், ''உஹூம்,'' என்று மட்டும் ஒலி எழுப்பினாள்.

''எதற்கும் பார்த்து விடுகிறேன்,'' என்று சொன்ன விஜயன் அவள் முதுகுப்புறமிருந்த மரவுரியை அகற்ற முயன்றாலும் முன்புறம் அது இறுகப் பிணைக்கப்பட்டிருந்ததால் முடியாத காரணத்தால் அதை அப்படியும் இப்படியும் அசக்கினான்.

zeevaa

அவன் திண்டாடுவதைப் பார்த்த சுடர்விழி தனது கையொன்றால் முன்புற முடிச்சைச் சற்றே தளர்த்த முதுகுப்புற மரவுரி லேசாக அகன்றது. அதைச் சற்று அதிகமாகவே அகற்றிவிட்டு அவள் முதுகைக் கையால் தடவினான். முதுகின் நடுவில் ஓடிய பள்ளம்கூடத் தெரியாமல் மாசுமறு,அல்லாத திடமான சருமம் அவள் முதுகு பூராவிலும் மிக வழவழப்புடனிருந்ததைக் கவனித்த விஜயன், அவளுக்கு அழகுடன் வலுவும் இருந்ததைப் புரிந்து கொண்டான். அப்படியே அந்த முதுகை முழுவதும் தடவிக் கொடுத்து, "இல்லை, இங்கு தழும்பு ஏதுமில்லை," என்று சற்றுஅவள் காதில்படும்படியாகச் சொன்னான்.

அவள் லேசாக நகைத்தாள்.

"என்ன நகைக்கிறாய் சுடர்விழி?" என்று வினவினான் விஜயன்.

"முதுகில் கயிற்றுத்தழும்பு எப்படி இருக்கும்?" என்று மெதுவாக வினவிய அவள் கேள்வியிலும் கேலி ஒலித்தது.

"ஏன் இருக்கக்கூடாது?" -அவன் முரட்டுத்தனமாகக் கேட்டான்.

'காமத்தில் திளைக்கும்புருஷர்களுக்கு ஏன் புத்தி மங்கி விடுகிறது?' என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள். ஆனால் வெளிப்படையாக, "தூணில் தான் முதுகு படிந்திருந்ததே, அங்கு கயிறு எப்படிப் புகும்?" என்று வினவினாள்.

தனது முட்டாள்தனத்தைப் புரிந்து கொண்ட விஜயன், "ஆம், ஆம். புகாது," என்று ஒப்புக் கொண்டவன் அத்துடன் நிற்காமல், "மார்பைச் சுற்றித் தானே கயிறு கட்டப்பட்டிருந்தது?" என்றொரு வினாவையும் கிளப்பினான்.

"ஆமாம், இருந்தது. ஆனால் அங்கு காயம் எதுவும் இல்லை." என்று கூறிய சுடர்விழி சட்டென்று தனது கால்களைக் குறுக்கிக் கொண்டு முழந்தாளாலும் கைகளாலும் மார்பை மறைத்துக் கொண்டாள்.

zeevaa

''எதற்கும் பார்த்துவிடுகிறேன்?'' என்று விஜயன் மார்பிலிருந்து அவள் கைகளைப் பிரிக்க முயன்றான். அவனது வலது கை, மரவுரியைப் பிளந்து விடத் துடித்து அவள் மார்பில் படவே சுடர்விழி தவித்தாள். ''உம்'' என்றும் ஓர் ஆட்சேபணை ஒலியைக் கிளப்பினாள்.

விஜயன் அந்த 'உம்' காரத்தைக் கவனிக்கவே செய்தான். தன்னைப் போலவே சுடர்விழியும் நிதானத்தை இழந்து விட்டதைப் புரிந்து கொண்டதால் அவள் காதுக்கருகில் குனிந்து, ''சுடர்விழி! இரண்டாம் ஜாமம் தாண்டி விட்டது,'' என்று முணுமுணுத்தான்.

அவள் பதிலேதும் சொல்லவில்லை. இருட்டில் தலையை மட்டும் ஆட்டினாள். தலை ஆடியதால் அவள் பருவ மாம்பழக்கன்னம் அவன் இதழ்களைத் தடவியது. அந்தக் கன்னத்தில் பலமுறை தனது இதழ்களைப் புதைத்த விஜயன், ''படுத்துக்கொள் சுடர்விழி,'' என்று கூறி அவள் முதுகுப் புறத்திலிருந்து அகன்றான்.

''எதற்கு?''- சுடர்விழியின் குரலில் லேசான பீதி இருந்தது.

''எதற்கா?''

''ஆம். எதற்கு?''

''தூங்குவதற்குத்தான். இன்னும் ஒன்றரை நாழிகையில் பொழுது விடிந்து விடும்?''

''அதற்குத்தான் சொன்னீர்களா?''

''ஆம், நீ என்ன நினைத்தாய்?''

அவள் சில விநாடிகள் ஏதும் சொல்லவில்லை. பிறகு சொன்னபோது குரலில் நடுக்கம் இருந்தது. ''எனக்கு உறக்கம் வரவில்லை,'' என்றாள் மெதுவாக.

''ஏன் வரவில்லை? அச்சமாக இருக்கிறதா?'' என்று அர்த்த புஷ்டியுடன் விஜயன் வினவினான்.

zeevaa

''எதற்கு அச்சம்?'' என்று சொல்லிக் கொண்டே பின்னால் சாய்ந்தாள் அவள்.

''எதிரிகள் மீண்டும் வந்து விடுவார்களென்று அஞ்சுகிறாயா?'' என்று விஜயன் வினவினான். அந்தக் கேள்வியோடு அவளை மெதுவாக அந்தக் கருங்கல்படியில் படுக்கவும் வைத்தான்.

அப்படிப் படுத்து விட்டபடியாலும். அவள் எதிரே அவன் குனிந்திருந்தபடியாலும் அவள் சொன்னாள்: ''எதிரிகளிடமிருந்து அச்சம் சிறிதுமில்லை,'' என்று.

''வேறு யாரிடம் அச்சம்?'' -விஜயன் வினவினான் சிறிது குழப்பத்துடன்.

''அன்பர்களிடம்,'' என்றாள் சுடர்விழி.

''என்னைச் சொல்கிறாயா?'' என்று கூறி அவள் முகத்தை நோக்கிக் குனிந்தான் விஜயன்.

''வேறு யாரைச் சொல்வேன்?'' என்று கேட்டாள் சுடர்விழி.

''நான் அப்படி உன்னை என்ன செய்து விடுவேன்?'' என்று விஜயன் கேட்டான். அவள் இதழ்களைத் தன் இதழ்களால் தொட்டான்.

''என்ன செய்து விடுவீர்களா?''

''ஆம்.''

''ஏன்? நீங்கள் செய்யக்கூடியது உங்களுக்கே தெரியாதா''

''தெரியாது. நீ சொல்லிக் கொடுத்தால் தெரிந்து கொள்கிறேன்.''

''அதற்கு யாராவது ஆசிரியரைப் பார்க்கிறேன்.''

''ஆசிரியை இருக்கும்போது ஆசிரியர் எதற்கு?''

''யாரது ஆசிரியை?''

zeevaa

''நீ தான்.''

''நானா?''

''ஆம்.''

''நான் உங்களுக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டும்?''

''ஆம்''

''பாவம், பால் குடிக்கத்தெரியாத பச்சைக் குழந்தை'' இதைச் சொல்லி அவள் அவனை நன்றாகத் தனது விழிகளால் விழுங்கி விடுவதுபோல் பார்த்தாள்.

அடுத்த விநாடி அவளை வாரியெடுத்தான் விஜயன். அவன் வேகம் மிதமிஞ்சியிருப்பதையும் அவன் உடல் தன்மீது வேகமாக இணைவதையும் உணர்ந்தாள். அந்த இணைப்புத் தனக்கு வேண்டியிருந்தது அவளுக்குப் புரிந்தது. அவள் கைகள் எழுந்து அவன் கழுத்தை வளைத்தன. அவன் முகம் அவள் கன்னங்களிலும் கழுத்திலும் மாறி மாறிப் புரண்டன. அப்பொழுதுதான் அவள் அந்த வினாவை வீசினாள், ''வீரரே! உங்களுக்கு மூன்றாவது ஒருத்தியும் தேவையா?'' என்று.

அந்தக் கேள்வி அவனை அதிர்ச்சியுறச் செய்தது. ''என்ன கேட்டாய் சுடர்விழி?'' என்றான் அவளை அணைத்த நிலையில்.

''மூன்றாவது ஒருத்தி தேவையா என்று கேட்டேன்,'' என்றாள் சுடர்விழி.

''மூன்றாவதா?'' என்று வினவினான் விஜயன்.

''ஆம் வீரரே! லீலாவதி, திரிலோகசுந்தரி, இப்பொழுது நான்,'' என்றாள் சுடர்விழி. மேலும் சொன்னாள்: ''அவர்களைவிட நான் அழகியல்ல. இருந்தாலும் மூன்றாம் பட்சமாகவும் நான் இருப்பேன்'' என்று, அத்துடன் அவனை இறுக அணைத்தாள்.

zeevaa

''இல்லை சுடர்விழி, இல்லை. அவர்கள் இருவரையும் விட உன் அழகு மிக உயர்ந்தது,'' என்றான் விஜயன்.

அது பொய் என்பது அவளுக்குத் தெரியும். அதற்காக அவள் தனது கைகளின் இறுகலை நிறுத்தவில்லை. விஜயன் மட்டும் சிறிது திகைத்தான். அவன் கழுத்தில் அவள் தனது இதழ்களைப் புதைத்ததால் அவன் வஜ்ரதேகம் அவள் உடலில் அனலை வாரிக் கொட்டியது. அவன் காதுக்கருகில் தனது உதடுகளைக் கொண்டு சென்ற சுடர்விழி, ''எதற்காகக் காத்திருக்கிறீர்கள்?'' என்று மிக மெதுவாக வினவினாள்.



## 12. வேண்டாத கனி

அவள் கைகளின் இறுக்கல், கழுத்தில் வலியப்புதைந்த இதழ்கள், இரண்டுக்கும் மேலாகக் காதில் ஒலித்த சொற்கள், இந்த மூன்றில் ஏதாவது ஒன்றுக்கே எந்த மனிதனும் வசப்படுவா னென்பதை விஜயன் உணர்ச்சிகள் சந்தேகத்துக்கு இடமின்றி விளக்கின. சுடர்விழி தன்னை முழுவதும் அர்ப்பணித்துக் கொள்கிறாளென்ற நிச்சயமும், நிச்சயத்தால் ஏற்பட்ட மோகமும் வெறியும் அவனை ஆட்கொண்டனவென்றாலும் அந்தச் சில விநாடிகள் சிறிது சிந்தனை வசப்படவே செய்த விஜயன், தான் மூன்றாமவள் என்று அவள் சொன்னதை எண்ணி மூன்றாம் தாரமாக இவள் என்ன பாவம் செய்தாள் என்று எண்ணினான். திரிலோக சுந்தரிக்கோ, லீலாவதிக்கோ எந்த விதத்திலும் குறைவிலாத அந்த மலைமகளைக் கேவலம் தனது தற்காலிகக் காமவெறிக்குப் பலிகொடுக்கலாமா என்றும் கேள்வி எழுப்பிக் கொண்டான். அத்தகைய எண்ணங்களினாலும் கேள்விகளாலும் சிறிது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்ட அவன் லேசாகப் புரண்டு அவள் பக்கத்தில் படுத்தான்.

அப்பொழுதும் சுடர்விழி அவன் கழுத்திலிருந்து தனது கைகளை எடுக்கவில்லை. அவள் திரும்பிய திசையிலேயே அவனை அணைத்த வண்ணமே அவளும் திரும்பி "வீரரே! என்ன சிந்திக்கிறீர்கள்?" என்று மெதுவாக அவன் காதுக்கருகில் ரகசியம் பேசினாள்.

zeevaa

ஒருக்களித்த நிலையில் தன்னைத் தழுவிப்படுத்திருந்த பைங்கிளியைநோக்காமலே கூரையைப் பார்த்தபடி பேசினான் விஜயன். ''சுடர்விழி! நான் முக்கிய விஷயமொன்றை மறந்து விட்டேன்,'' என்றான்.

''என்ன முக்கிய விஷயம் அது?'' என்று அவள் கேட்டாள், அவன் கன்னத்தைத் தன்னை நோக்கித்திருப்பி.

விஜயன் அவளை நோக்கி நன்றாகவே திரும்பியதால் அவன் சரீரம் அவளது பூவுடலுடன் இழையவே செய்தது. ''உன் தந்தையைப் பற்றிய விஷயம்,'' என்று மெதுவாகத் துவங்கினான்.

தந்தையின் பெயரைக் கேட்டதும் சற்று அதிர்ச்சியடைந்தாள் சுடர்விழி. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு ''என் தந்தையைப் பற்றி என்ன விஷயம்?'' என்று வினவினாள்.

''என்னை நம்பி உன்னை என்னிடம் ஒப்படைத்துப் போயிருக்கிறார்,'' என்று விஜயன் நிலைமைக்கு வேறு உருவம் கொடுக்கத் துவங்கினான்.

''அவர் ஒப்படைக்கவில்லையே? இந்த இளைய கேசதாது வல்லவா ஒப்படைத்தான்?'' என்று வினவினாள் சுடர்விழி.

இதற்குப் பதில்சொல்லத் தெரியாது தவித்த விஜயன், ''அப்படியல்ல சுடர்விழி உன்னை நான் எப்படியும் காப்பாற்றி அழைத்து வருவதாகச் சொல்லி வந்தேன். அதை நம்பி எனது படைகளைக் கவனிக்க அவர் சென்றிருக்கிறார். கடமைக்குத் தந்தையை அனுப்பிவிட்டு மகளின் பலவீனத்தை பயன்படுத்திக் கொள்ளும் கயவனாக இருக்க நான் விரும்பவில்லை. உன் தந்தை வந்ததும் அவர் அனுமதி பெற்று...'' என்று மென்று விழுங்கினான்.

சுடர்விழி நகைத்தாள் மெதுவாக. ''யார் அனுமதி பெற்று என்னைத் தொட்டீர்கள். தழுவினீர்கள்? கயிற்று வடுக்களைப்

zeevaa

பார்க்கும் பாவனையில் எந்தெந்த இடங்களைத் தொட்டீர்கள்? வைத்தியம் செய்தீர்களே, நீங்கள் செய்த வைத்திய முறை உலகத்துக்கு ஒத்ததா?'' என்று நகைப்பின் ஊடே வினவிய சுடர்விழி, ''உங்களுக்கு என்னைப் பிடிக்கவில்லையென்றால் தெளிவாகச் சொல்லிவிடுங்கள் சிங்கள மன்னரே,'' என்றும் கேட்டாள்.

சில நிலைகளில் எப்பேர்ப்பட்ட மாவீரனும் கோழையாகி விடுகிறான் என்ற நியதிக்குத் தகுந்த சான்றாக விளங்கிய விஜயன் சற்று மௌனம் சாதித்தான். பிறகு மெதுவாகச் சொன்னான், ''சுடர்விழி! நான் போகும் இடம் உனக்குத் தெரியுமா?'' என்று.

''தெரியும். ஸமந்தகூடம். என் தந்தையிடமே சொன்னீர்களே?''

''அங்கு உன் தந்தையைச் சந்திப்பதாகச் சொன்னேன்.''

''ஆம்.''

''அதற்கு மட்டும் அங்கு போகவில்லை. ஸமந்த கூடத்தின் உச்சியிலிருக்கும் ஸ்ரீபாதத்தை வணங்கப் போகிறேன். அதுவரையில் நான் பிரும்மசரிய விரதம் அனுஷ்டிக்க வேண்டும்.''

''பெண்ணை அணைப்பதும் இதழ்களைச் சுவைப்பதும் அந்தப் பிரும்மசரிய விரதத்தின் அம்சங்களோ?'' -இதைக் கேட்ட அவள் சரேலென அவனைவிட்டு விலகி எழுந்து பந்த வெளிச்சம் இருக்குமிடத்திற்குச் சென்று படுத்துக் கொண்டாள்.

அவள் தன்னைத் தள்ளிவிட்டுச் சென்றதில் கோபமிருந்ததை விஜயன் கவனித்தான். மெள்ள அவனும் எழுந்திருந்து அவள் படுத்திருந்த இடத்துக்குச் சென்று அவள் அருகில் நின்று அவளை நோக்கினான். பந்த வெளிச்சத்தில் அவள் மோகனாகரமாக விளங்கினாள். மலைப் புஷ்பங்களின் செழிப்பு அவள் ஒவ்வோர் அங்கத்திலும் இருந்தது. புஷ்டியான கன்னங்கள், இணைந்த

zeevaa

தொடைகளின் திண்மை, தன்னை நோக்கிக் குற்றம் சாட்டி, 'அட பேடியே' என்று முறைக்கும் மார்பின் எழுச்சிகள். இவற்றைக் கவனிக்கவே செய்த விஜயன் தனது மனம் மீண்டும் உணர்ச்சிச் சுழற்சியில் சிக்குவதை உணர்ந்தான். அதற்குமேல் அவள் அழகை அலசாமல் அவள் பக்கத்தில் உட்கார்ந்து, ''சுடர்விழி! தவறாக நினைக்காதே! சிங்களம் சோழர் கையில் சிக்கித் தவிக்கிறது. அதை மீட்கவேண்டும் புத்த மகான் கருணையால். அதுவரை எனது ஆசைகளை அறுத்துக்கொள்ள வேண்டியது அவசியம். எனக்குப் பணி செய்யும் உன் தந்தையின் மனம் புண்படும் எதையும் நான் செய்வது தர்மமல்ல. தவிர...'' என்றான்.

சுடர்விழி தைரியமாக அவன் விழிகளைச் சந்தித்தாள் தனது விழிகளால். ''இன்னும் என்னென்ன பொய்களைச் சொல்ல வேண்டுமோ அத்தனையும் சொல்லி விடுங்கள்'' என்றாள் அவன் பேச்சை இடைமறித்து.

''பொய்யல்ல சுடர்விழி. இந்த நாட்டு நிலை சீர்திருந்தியதும் உன்னை மணக்கிறேன். ஆனால் உன்னை என் மகேசியாக்க முடியாது. அந்தப் பதவிக்கு ஏற்கெனவே இருவர் இருக்கிறார் களென்பது உனக்கே தெரியும்'' - இதைச் சொன்ன விஜயன் பெருமூச்செறிந்தான்.

சுடர்விழி சட்டென்று எழுந்து தனது முழந்தாள்களை இரு கைகளாலும் கட்டிக் கொண்டு உட்கார்ந்தாள். ''சிங்கள மன்னனே! பதவிக்காக நான் உங்களிடம் மையல் கொள்ளவில்லை. பதவிக்காக உங்களிடம் என்னை ஒப்படைக்கவில்லை. பதவி, பட்டம், பணம் இத்தனைக்கும் அப்பாற்பட்ட பிரேமை ஒன்று உண்டு என்பது உங்களுக்குப் புரியுமானால், அத்தகைய தூய்மையான அன்பை உங்களுக்கு அளித்து விட்டேன். அதை உங்களால் புரிந்துகொள்ள முடியாவிட்டால் அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை.

zeevaa

விடிந்ததும் நாமிருவரும் நமது வழிகளில் செல்வோம்'' என்றாள் சுடர்விழி. அவள் குரலில் உறுதியிருந்தது. விஜயனைப்பற்றிய வெறுப்பும் அதில் ஒலித்தது.

விஜயன் தனது கண்களால் அவளை மீண்டும் நோக்கினான். அவள் வீர உதடுகள் மெதுவாக அசைந்தன. ''சுடர்விழி! விடிந்த பின்பு நமது வழிகள் மாற முடியாது'' என்றான் திட்டமாக.

''யார் என்னைத் தடுக்க முடியும்?''

''நான்.''

''எதற்காகத் தடுக்க வேண்டும்?''

''ஸ்ரீபாதத்தில் நான் செய்யும் சத்தியத்தை நீ பார்க்க வேண்டும். நான் கேட்கும் வரங்களை நீ காதில் வாங்க வேண்டும்.''

''எதற்காக?''

''சத்தியங்களில் ஒன்று உன்னைப்பற்றியது. உன்னை மணக்கச் சத்தியம் செய்கிறேன். மற்ற இரண்டும் நாட்டைப் பற்றியவை. அதன் விடுதலையைப் பற்றியவை.''

இதற்குப் பதில் சொல்லவில்லை சுடர்விழி. அவன் பேச்சுக்கும் சத்தியத்துக்கும் சம்பந்தமில்லையென்று நினைத்தாள். அதற்குப் பிறகு அவள் அவனிடம் பேச்சுக் கொடுக்கவில்லை. படுக்கவும் இல்லை. பின்னாலிருந்த தூணில் சாய்ந்தபடியே கண்களை மூடினாள். குவிந்த தாமரை போலிருந்த அவள் முகத்தைப் பார்த்தபடியே விஜயன் உட்கார்ந்திருந்தான். அவன் மனம் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. பொழுதும் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. அவன் மன ஓட்டத்தில் தனது படைத்தலைவன் மகளைத் தான் கெடுக்கவில்லை என்று சாந்தி யிருந்ததால் அது அவன் முகத்திலும் பிரதிபலிக்கவே செய்தது.

zeevaa

பொழுது விடிவதற்கு இரண்டு நாழிகைக்கு முன்பே அவன் மண்டபத்துக்கு வெளியே சென்று சீதாவாகா நதியின் குளிர்ந்த நீரில் நீராடினான். மூர்சமதை அழைத்து, ''சமத்! நாம் விடிந்ததும் புறப்படுகிறோம். முருகன் எங்கே?'' என்று வினவினான்.

காட்டுக்குள்ளிருந்து தலையை நீட்டிய முருகன், ''எசமான்! என்ன கட்டளை?'' என்று கேட்டான்.

''ஏதுமில்லை. நீ உன் வீரர்களுடன் உன் இருப்பிடம் செல்லலாம்'' என்று விஜயன் கூறவே, ''எசமான்! உங்களையும் எங்கள் தலைவியையும் பாதுகாப்பான ஓர் இடத்தில் விட்டுப் போகிறோமே'' என்றான்.

''தேவையில்லை முருகா. நீ போய் வா. நான் ரத்னபுரக் கோட்டைக்குச் சென்று அங்கிருந்து ஸமந்தகூடத்துக்குப் போகிறேன்'' என்று கூறவே முருகன் உள் மண்டபத்துக்குச் சென்று சுடர்விழியிடமும் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினான்.

சீதாவாகா நதியில் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு புறப்படச் சித்தமாகிவிட்ட விஜயன் பழைய கோட்டையைத் திரும்பி நோக்கினான். அதன் பெரிய வாயிலில் சுடர்விழி நீராடி, தலைக்குழலை எடுத்து உயரத்தூக்கி முடிந்துகொண்டு காதின் பக்கத்தில் மஞ்சள் நிறமுள்ள காட்டு மலரொன்றையும் அணிந்து நின்றிருந்தாள். அவள் மரவுரியைச் சீர்செய்து அணிந்து கொண்டிருந்ததால் தூய்மையும் அழகும் நிறைந்த தெய்வவிக்ரகம் போல் அவள் காட்சியளித்தாள். அவள் முகத்தில் உணர்ச்சிகள் ஏதும் தாண்டவமாடவில்லை. கல் போன்றிருந்த முகம் அவளைக் கற்சிலையாக வடித்திருந்தது.

அந்தச் சமயத்தில் மூர்சமத், விஜயன் புரவியோடு இன்னொரு புரவியையும் கொண்டுவந்து நிறுத்தி, ''எசமான்! மாண்ட எதிரி

zeevaa

வீரர்களின் புரவியொன்றைப் பிடித்து வந்தேன், நமக்குத் தேவை இருக்குமென்று'' என்று கூறினான்.

சுடர்விழி ஏதும் பேசாமல் அந்தப் புரவியிடம் சென்று அதன் சேணத்தைக் கையில் வாங்கிக்கொண்டு புரவிமீது தாவினாள். விஜயன்அவள் முகத்திலிருந்த கடுமை, நடையிலும் புரவிமீது தாவி ஏறிய முறையிலுங்கூட இருந்ததைக் கவனித்து, அவள் மனம் புண்பட்டுக் கிடப்பதை உணர்ந்து கொண்டான். பிறகு புரவிமீது ஏறி அதைச் சீதாவாகா நதிக்கரையோரமாகவே நடத்தினான்.

கேளினி கங்கை என்று தற்காலத்தில் அழைக்கப்படும் கல்யாணி நதியுடன் சீதாவாகா நதி இணையுமிடத்தையும் தாண்டி, கல்யாணி நதியின் வலது கரையோரமே பயணம் செய்த விஜயன் சற்று தெற்கே திரும்பி, கலுகங்கா நதி ரத்னபுரிக் கோட்டையிலிருந்து மலையடிவாரத்தை அணைத்து ஓடும் இடத்திற்கு வந்தான். அந்த இடத்திற்கு அருகாமையிலுள்ள காட்டில் மூர்சமதையும் சுடர் விழியையும் தங்கச் சொல்லிவிட்டு ரத்னங்கள் கொழிக்கும் ரத்னபுரிக் கடைவீதிக்குச் சென்றான். அங்கு நல்ல சேலைகள் இரண்டையும் ஒரு ரத்ன மாலையையும் சுடர்விழிக்கு வாங்கிக் கொண்டு அவளை விட்டுப்போயிருந்த இடத்துக்குத் திரும்பினான். அங்கிருந்த அடர்ந்த காட்டுப்பகுதிக்குள் அவர்களை விட்டுப் போயிருந்த இடத்துக்கு வந்தான். அங்கிருந்த பாறையில் மூர்சமத் மட்டும் உட்கார்ந்திருந்தான்.

''சுடர்விழி எங்கே?'' என்று சீறினான்.

''நீங்கள் சென்றதும் அவர்களும் சென்றுவிட்டார்கள்'' என்றான் மூர்சமத். அத்துடன் கையிலிருந்த சேலைகளையும் ரத்னமாலை யையும் கவனிக்கவும் செய்தான். அவன் மீசை தாடிகள் விலகிப் பற்கள் லேசாகத் தெரிந்ததால் அவன் தன்னைப் பார்த்து நகைப்பதைப் புரிந்துகொண்டான் விஜயன்.

zeevaa

''என் உத்தரவின்றி அவளை ஏன் வெளியே விட்டாய்?'' -விஜயன் வினவினான் உஷ்ணமாக.

''அந்தப் பெண்ணைத் தடை செய்ய உத்தரவிடவில்லையே தாங்கள்?'' என்றான் சமத்.

''எங்கு போயிருக்கிறாள்? அதாவது தெரியுமா?''

''தெரியாது எசமான்.''

இதற்குப் பிறகு சிறிது சிந்தித்த விஜயன் தனது கையிலிருந்த சேலைகளைக் காட்டி, ''இவற்றை யார் கட்டிக்கொள்வது?'' என்று வினவினான்.

பக்கத்திலிருந்த மரத்தடியிலிருந்து 'களுக்' கென்று சிரிப்பொலி உதிர்ந்தது. அதைத் தொடர்ந்து வெளியே வந்த சுடர்விழி, ''நீங்களே கட்டிக்கொள்ளலாம்'' என்று கூறினாள். அவள் கைகளில் இரண்டு மரவுரிகள் இருந்ததைக் கவனித்த விஜயன், ''ஏது இவை?'' என்று வினவினான்.

''நான் வாங்கினேன்'' -சுடர்விழி உறுதியாகக் கூறினாள்.

''நானும் உனக்கு இரண்டு சேலைகள் வாங்கி வந்திருக்கிறேன்.''

''அதற்கு உங்களுக்கு இன்னும் தகுதியில்லை.''

''இதில் தகுதி என்ன வேண்டியிருக்கிறது?''

''பெண்களுக்குச் சேலையைத் தகப்பன் வாங்கிக் கொடுக்கலாம் அல்லது கணவன் வாங்கிக் கொடுக்கலாம். மூன்றாவது யாரும் வாங்கிக் கொடுக்க முயல்வது முறையற்ற செய்கை, அதுவும்...''

''என்ன?''

''வேண்டாத கனியான நான் உங்களிடம் எந்தப் பரிசையும் பெற விரும்பவில்லை'' என்று கூறிய சுடர்விழி வேகமாக எட்ட இருந்த புதர்களின் மறைவுக்குச் சென்றாள்.

zeevaa

சிறிது நேரத்தில் அவள் புது மரவுரியை அணிந்து வேகமாக வந்த, புரவிமீது ஏறினாள். மற்ற இரு மரவுரிகளை ஒரு கயிற்றால் கட்டித் தோளில் மாட்டியிருந்தாள். ''ஸமந்தகூடத்துக்குப் போக இப்பொழுதே கிளம்புவது நல்லது'' என்று கூறித் தனது புரவியை அடவிக்குள் செலுத்தினாள்.




zeevaa

# 13. அலெக்ஸாண்டரின் சங்கிலி

உடலில் அடியுண்ட வேங்கையும் உள்ளத்தில் அடியுண்ட மங்கையும் ஒன்று என்பதையும், இருவரையும் அணுகுவது ஆபத்து என்பதையும் அன்று காலை விஜயன் சந்தேகமறப் புரிந்து கொண்டான்.

புதுமரவுரி ஒன்றைப் புனைந்து கொண்டும், மரவுரிகள் இரண்டைக் கயிற்றால் கட்டித் தோளில் மாட்டிக்கொண்டும் புரவிமீது தாவிப் புறப்பட்டு விட்ட சுடர்விழி, புரவிமீது செங்குத்தாக உட்கார்ந்த வகையிலிருந்தும், தன்னைத் திரும்பிப் பார்க்காமலே புரவியை அவள் நடத்திச் சென்ற முறையிலிருந்தும் அவள் தூய்மை உள்ளம் துடித்துக் கொண்டிருப்பதை விஜயன் புரிந்து கொண்டான். சற்று முன்பாக அவள் மறைவிலிருந்து களுக்கென்று சிரித்தபோது அந்தச் சிரிப்பிலும் கடுமை இருந்ததையும், மறைவிடத்திலிருந்து வெளியே வந்த போது அந்தச் சிரிப்பும் அவள் முகத்தில் உறைந்து முகம் கடுமையாகி விட்டதையும் கண்ட விஜயன், அவளை அணுகவும் அச்சப்பட்டுத் தானும் புரவி மீது ஏறிச் சற்று எட்டவே புரவியை அவள் பின்னால் செலுத்தினான். ஏற்கனவே நடந்த நாடகத்தைக் கண்ட மூர்சமத் எசமானனுக்கும் பின்னால் தனது புரவியை நடத்தினான்.

ரத்தினபுரியிலிருந்து புறப்பட்ட பின்பு சுடர்விழி பின்னால் வந்த இருவரையும் திரும்பிக்கூடப் பார்க்காமல் நேராகப் பயணம் செய்தாள். ரத்தினபுரிக்குச் சிறிது தூரத்திலிருந்தே அடர்த்தியாகி விட்ட காட்டிலும் வழியில் இடையிடையே தென்பட்ட சிற்றருவிகளை அநாயாசமாகத் தாண்டிச் சுடர்விழி வேகமாகவே

zeevaa



zeevaa

சென்றாள். ரத்தினபுரியிலிருந்து ஸமந்த கூடத்தின் பகுதியில் இருந்த கில்லிமலை அரையோஜனை *தூரமே இருந்தாலும் பயணம் கடுமையாகவே இருந்தது. இடையிடையே தென்பட்ட சிறு குடில்களும் அவற்றில் வளர்ந்திருந்த பலா மரங்களும் தென்னைகளும், பாக்குமரங்களும் அமைத்த இயற்கை அழகினால் பயண மார்க்கம் கஷ்டத்திலும் பார்ப்பதற்கு அருமையாகவே இருந்தது. அந்த அருமையையோ காட்டு யானைகளாலும் மற்றத் துஷ்ட மிருகங்களாலும் ஏற்படக் கூடிய ஆபத்துக்களையோ லட்சியம் செய்யாமல் சுடர்விழி தனது புரவியை நடத்திச் சென்றாள்.

கில்லிமலையை அடையும்வரை சுடர்விழிக்கு இருந்த கோபத்தைப் பற்றித் துயரத்துடனிருந்த விஜயன் அதற்குப் பிறகு இவ்வுலகையே மறந்தான். அந்தக் காடுகளிலும் மலைகளிலும் அவன் எவ்வளவோ முறை வேட்டையாடியிருந்தான். எவ்வளவோ முறை எதிரிகளுக்குப் பயந்து அந்த இடங்களில் மறைந்து உறைந்து மிருந்திருக்கிறான். கில்லிமலைக்குப் பிறகு பயணம் அதிக கடுமையாகிவிட்டது. அங்கிருந்து ஸமந்தகூட மலையின் அடிவாரத்திலிருந்த பலாபதூலா என்ற இடத்துக்கு வந்து சேர்ந்ததும் முதல் முறையாகச் சுடர்விழி புரவியிலிருந்து இறங்கி அங்கிருந்த பழைய விஹாரத்துக்குச் சென்று அங்கிருந்த புத்தர் சிலையை வணங்கினாள். பிறகு, மீண்டும் புரவியிலேறி மலை அடிவாரத்திலிருந்த காடுகளில் நுழைந்து மாலை வேளையில் தயாபத்மே என்ற இடத்துக்கு வந்து சேர்ந்தாள். சுடர்விழியின் ஆத்திரத்தை முன்னிட்டு வாயைத் திறக்காமல் விஜயன் பயணம் செய்தான். பலாபதூலாவிலிருந்தே ஏற்றம் கொடுத்த ஸமந்த கூட மலை அந்தத் தயாபத்மேயில் பிரமிக்கத் தக்க காட்சியைத் தந்தது.

சுற்றிலும் மலைகள், சுற்றிலும் காடுகள்! எங்கும் யாத்ரீகர்கள்! பார்த்த இடமெல்லாம் அருவிகள்! கீழே அதலபாதாளமான

---

★ இந்தக் காலத்துக் கணக்குக்கு எட்டு மைல்.

zeevaa

பள்ளத்தாக்கு! கண்ணுக்கு அழகையும் ஆபத்தையும் அள்ளிக் கொடுக்கும் இயற்கையின் விசித்திரம்! இந்த அற்புதங்களைப் பலமுறை பார்த்திருந்தாலும் அன்றுதான் புதிதாகப் பார்ப்பவன் போல் விஜயன் பார்த்து மகிழ்ந்தான். தவிர, நாட்டுப் பற்றுடைய அவனுக்கு இயற்கையளித்த அந்தக் காட்சி உலகில் இல்லாத காட்சியாகத் தெரிந்தது. சுடர்விழியும் தனது புரவியிலிருந்து இறங்கி அந்தக் காட்சியை அனுபவித்துவிட்டு, பக்கத்திலிருந்த ஒரு மரத்தில் தனது புரவியைக் கட்டினாள். ''இனி இந்த இரவில் மலை ஏற முடியாது. அதோ, அந்த யாத்ரீகர்களுடன் நாமும் தங்குவோம்,'' என்று அக்கம் பக்கத்துப் பாறைகளிலும், காட்டு மறைவுகளிலும் தங்கியிருந்த மக்களைச் சுட்டிக் காட்டினாள்.

விஜயன் பதிலேதும் சொல்லாமல் தனது புரவியிலிருந்து இறங்கி அதையும் கட்டிவிடவே மூர்சமத் அவனைப் பின்பற்றி னான். சற்று எட்ட, குகை போல மலைப் பாறையில் வெடித்திருந்த ஓர் இடத்துக்குள் நுழைந்து அதை ஆராய்ந்து பார்த்த சுடர்விழி, ''மன்னரே, நீங்கள் இங்கேயே தங்கலாம். நீங்கள் உணவருந்த ஏதாவது கொண்டு வருகிறேன்,'' என்று கூறி,காட்டுக்குள் மறைந்தாள். இருள் மூண்ட பின்பு ஏதோ சில பழங்களுடன் வந்த சுடர்விழி அவற்றை விஜயனுக்கும் மூர்சமதுக்கும் பங்கிட்டுக் கொடுத்தாள்.

''உனக்கு?'' என்று விஜயன் விசாரித்ததற்கு, ''என்னைப் பற்றிக் கவலை வேண்டாம்,'' என்றாள் சுருக்கென்று. பிறகு மலைப் பாறையிலேயே படுத்துக்கொண்டாள்.

''குகைக்குள் படுக்கலாமே?'' என்றான் விஜயன்.

''நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள். என்னால் குளிரைத் தாங்க முடியும்,'' என்று கடுப்புடன் சொன்ன சுடர்விழி, அலட்சியமாக மலைப் பாறையில் கிடந்தாள்.

zeevaa

அவள் தலைக்கு மேலே ஸமந்தகூடத்தின் உச்சி ஏதோ, கவிழ்த்து வைக்கப்பட்ட பெரிய ஆலய மணிபோல் தெரிந்தது. அதன் மீது காய்ந்த பிறைச் சந்திரனின் ஒளி அதற்குத் தனியான சோபையை அளித்திருந்தது. அதன் சுற்றுப்புற அழகு அதற்குத் தெய்வீகத் தன்மையைக் கொடுத்திருந்தது. இரவு ஏறியும்கூட அங்கு யாத்ரீகர்கள் வருவது நிற்கவில்லை. கூட்டம் கூட்டமாகச் சீனர்கள் அராபியர்கள், மூர் ஜாதியார், சிவனடியார்கள், சிங்கள புத்தர்கள் எல்லோரும் வந்து கொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் யாருமே அன்று மலை உச்சிக்கு ஏறாததால் அந்த மலைச் சரிவில் ஏதோ ஒரு புது உலகம் சிருஷ்டிக்கப்பட்ட பிரமை ஏற்பட்டது.

பலதரப்பட்ட அந்த மனித சமுதாயத்தைக் கண்ட விஜயன், மெள்ளக் குகையிலிருந்து வந்து சுடர்விழியின் பக்கத்தில் உட்கார்ந்தான். உட்கார்ந்தது மட்டுமில்லாமல் பேச்சுக் கொடுக்கவும் துவங்கி, ''சுடர்விழி, உன் தலைக்கு மேலே ஸ்ரீபாதம் இருக்கிறது தெரியுமா?'' என்று வினவினான்.

சுடர்விழி அசையாமல் படுத்தபடியே கிடந்தாள். ஆகாயத்தை நோக்கிக் கொண்டு, ''தெரியும். பலமுறை நான் தரிசித்திருக் கிறேன்,'' என்றாள்.

''அப்படியா!'' வியந்து பேசினான் விஜயன்.

''ஆம். நான் மலைகளிலும் காட்டிலும் வளர்ந்தவள். அவற்றின் அருமை பட்டணவாசிகளைவிட எனக்கு நன்றாகத் தெரியும்,'' என்றாள் சுடர்விழி.

விஜயன் சிறிது மௌனமாக இருந்தான். பிறகு கேட்டான்: ''பெண்ணே, ஸ்ரீ பாதம் எதைக் குறிக்கிறது தெரியுமாம?'' என்று.

''புத்தர் பிரான் திருவடியை. அங்குள்ள பாதத்தைப் புத்தர் திருவடிச்சுவடு என்று சொல்கிறார்கள்,'' என்றாள் சுடர்விழி.

zeevaa

''இல்லை சுடர்விழி. அது உலக ஒற்றுமையைக் குறிக்கிறது. எந்த மதமும் இன்னொரு மதத்துடன் சண்டை போடவேண்டிய அவசியமில்லை என்பதைக் குறிக்கிறது. சொல்கிறேன் கேள்'' என்று துவங்கிய விஜயன், ஸ்ரீ பாதத்தின் வரலாற்றைச் சொல்ல லானான்:

''சுடர்விழி! இந்த மலைக்கும் இதன் உச்சிக்கும் ஸமந்தகூடம் அல்லது ஸமனலா என்று பெயர். ஸமன் என்பது ஸ்ரீ ராமன் தம்பி லஷ்மணன் பெயர் அவன் பெயரால் இந்த மலை விளங்குகிறது. ஆகையால் இது ஸமந்த கூடம் அல்லது லக்ஷ்மண மலை. *இந்த மலையின் உச்சியை, அங்குள்ள ஸ்ரீபாதத்தைப் புத்தர்கள், இஸ்லாமியர் **சிவனடியார்கள் ***எல்லோருமே புனிதமாக நினைக்கிறார்கள். ஸ்ரீ பாதம் மனிதகுல மூதாதையான ஆதாமின் பாதமென்று இஸ்லாமியர் நினைக்கிறார்கள். பாரதத்தின் சிவனடியார்கள் அதைச் சிவனுடைய பாதமென நினைக்கிறார்கள். பௌத்தர்கள் அதைப் புத்தருடைய பாதமாக நினைக்கிறார்கள். இந்தப் புனித பாதத்தைப் பற்றி ஒவ்வொரு மதத்தினரும் ஒவ்வொரு கதையைச் சொல்கிறார்கள். ****ஆதாம் ஏவாளுடன் கலந்த பாவத்திற்காக இருவரும் சொர்க்கத்திலிருந்து கீழே தள்ளப்பட்ட பொழுது ஆதாம் இந்த மலையிலும், ஏவாள் அரேபியாவில் மெக்காவுக்குப் பக்கத்திலுள்ள ஜோடா என்ற துறைமுகத்திலும் விழுந்ததாகவும். இங்கு ஆதாம் ஒற்றைக் காலில் நின்று தவம் செய்ததால் மன்னிக்கப்பட்டு கேப்ரியால் என்ற தெய்வத்தால் தூக்கிச் செல்லப்பட்டு அரேபியாவிலிருந்த

---

* Hence called Samanthakuta or Samanala SREEPADA or sacred FOOD STEP (of BUDDHA).

** By Mahomedans called Baba Adamalai (Adam's peak).

*** By Malabaris Sivanoli Padam - Eleven Years in Ceylon - By Major Forbes - Vol. I pp. 123 to 178.

**** For details refer to Forbes "Eleve Years in Ceylon" - Vol. I - Foot note to Pages 174 - 175.

zeevaa

ஏவாளுடன் சேர்க்கப் பட்டதாகவும், பிறகு ஆதாம் அவளை அழைத்துக் கொண்டு இலங்கை வந்து மனிதகுல உற்பத்தியைத் தொடங்கியதாகவும் முஸ்லிம்கள் சொல்கிறார்கள். முதல் புத்தர் இங்கு வந்து தனது பாதத்தால் மலையைப் புனிதப்படுத்தியதாகப் பௌத்தர்கள் சொல்கிறார்கள். ஹிந்துக்கள் அங்கு சிவன் தனது பாதத்தைப் பொருத்தியதாகச் சொல்கிறார்கள். எதுவாயிருந்தாலும் அது புனித பாதம். அதனால் இலங்கை புனிதமாகிறது.'' -இப்படிக் கதையை முடித்த விஜயன், அந்த நினைப்புக்களாலும் சூழ்நிலையின் சிறப்பாலும் அமைதிப் பெருமூச்சு விட்டான்.

அதுவரை ஏதும் சொல்லாமல் கிடந்த சுடர்விழி, ''சில சீனர்கள் இதை* பான் கூ, அதாவது முதல் மனிதன் என்று அழைக்கிறார்கள்,'' என்றாள்.

விஜயன் அவளை வியப்புடன் நோக்கினான். ''சுடர் விழி! உனக்குச் சரித்திரம், வேதாந்தம் இரண்டுமே தெரியும் போலிருக்கிறதே?'' என்று கூறி அவள் உச்சி மீது தனது கையை வைக்கப் போனவனை அவள் சுடுசொல் தடுத்தது. ''இந்தப் புனித மலையில் இந்தப் பாவம் வேண்டாம்,'' என்று சீறினாள் அவள். அதற்குப் பிறகு அவள் பேசவில்லை.

இரவு மிக மெதுவாக ஓடிக்கொண்டிருந்தது. யாத்ரீகர்கள் இரவிலும்வந்து கொண்டு ஆங்காங்கு தங்கிக் கொண்டிருந்தார்கள். இப்படியான ஆள் பெருக்கம் அந்த மலையின் அமைதியைக் கிழித்துக் கொண்டிருந்தது. வந்த பயணிகள் ஆங்காங்கு உட்கார்ந்து இரவைக் கழிக்கப் புனிதமான கதைகளைப் பேசிக் கொண் டிருந்தார்கள்.

இரவு மெல்ல மெல்ல நகர்ந்து விடியும் சமயம் வந்ததும் சுடர்விழி எழுந்து, ''சீதள கங்கையில் நீராடி, மலை ஏறினால்

---

* Later Chinese writers borrowing the idea from Mahomedans called it "PWAN-KO-the first man"- CEYLON-An Account of the ISLAND-by Sir James E. TENNENT-vol, 11, Page 134.

zeevaa

உச்சியைச் சீக்கிரம் அடையலாம்," என்று கூறி, சற்று எட்ட படிகள் மாதிரிப் பாறையில் தெரிந்த இடத்துக்குச் சென்று அங்கு ஏதோ வெள்ளிக் கம்பி போல் ஓடி கொண்டிருந்த சீதள கங்கையையும், அதன் நீர் இடையிலுள்ள தொட்டி போன்ற மலைக் கிண்ணத்தை வாவியாக அடித்திருந்த அழகையும் பார்த்து, சிறிது நேரம் இதன் கரையிலேயே நின்றாள். பிறகு அந்தப் பனிநீரில் இறங்கினாள், அந்தப் பாவை. உடலே உறைந்து விடும் குளிர் நீரில் அனாயாசமாகக் குளித்து அவள் கரையேறிய பின் விஜயனும் நீராடினான். என்றுமில்லாத திருநாளாக மூர்சமதும் நீராடி எழுந்து, தலைமயிரையும் தாடி மீசைகளையும் துடைத்துக் கொண்டான். பிறகு மூவரும் ஸ்ரீபாதத்தைத் தரிசிக்க மலையில் ஏறினார்கள். வழி நெடுக, பயங்கரச் சரிவுகளும் வழவழத்த பாறைகளும் சில இடங்களில் யானை, புலி இவை நடந்த சுவடுகளும் இருந்தன. இவையெல்லாவற்றையுமே பார்த்துக் கொண்டு மூவரும் காடு, மலை ஏறினார்கள். அதுவரை காடுகளால் மறைக்கப்பட்ட ஸமந்தகூடம் நன்றாகவே கண்ணுக்குத் தெரிந்தது.

அந்தக் காட்சி மிக அற்புதமாயிருந்தது. அதன் உச்சியைக் காலையின் வெண்ணிற மேகமொன்று தழுவி நின்றது. சுற்றிலும் காணப்பட்ட பனித் திரைக்குள் அந்த முக்கோண உச்சியின் அழகு தெய்வீகமாயிருந்தது. அந்த முக்கோண உச்சி வரையில் வந்ததும் அதற்கு மேல் ஏற முடியாத நிலையில் இருந்தது. பாறை அதிகமாக வழுக்கியது. ஆனால் அங்கு பாறைகளில் இரும்பினாலும் வெண்கலத்தினாலும் செய்யப்பட்டிருந்த பெரிய சங்கிலி யொன்று உச்சிக்கு ஏற உதவியாயிருந்தது. அந்தச் சங்கிலியை** அலெக்ஸாண்டர் அமைத்ததாகச் சரித்திரம் இருக்கிறது. அலெக்ஸாண்டர் அமைத்த சங்கிலியைப் பிடித்துக் கொண்டு முதலில் சுடர்விழியை ஏறவிட்டு அவளுக்குப் பின்னால்

* IBN BATUTA, the famous traveller called the place Alexander's Ridge - Sir James E. Tennent's Ceylon - Page 139.

zeevaa

விஜயனும், கடைசியில் மூர்சமதும் ஏறினார்கள். அவர்களுக்கு முன்னால் பல சீனர்கள் ஏறிக் கொண்டிருந்தார்கள். பின்னாலும் பெரும் கூட்டம் வந்து கொண்டிருந்தது. ஸ்ரீபாதம் கிட்டே வந்துவிட்டதென்பதால் ஹிந்துக்களும் பௌத்தர்களும் ''ஸாது! ஸாது!'' என்று கூச்சலிட்டார்கள்.

உடனடியாக அமைதி நிலவ மௌனமாக யாத்ரீகர்கள் ஏறிச் சென்று கொண்டிருந்தார்கள். உச்சிக்குச் சென்று கொண்டிருக்கும் போது கீழேபார்த்தால் கிடுகிடு பாதாளம், எங்கும் பெரிய அருவிகள் துள்ளியோடின. அவற்றுக்கெல்லாம் தாயாக மகாவலிகங்கா உற்பத்தியாகிப் பாறைகளில் தாவித் தாவி ஓடியது. இந்த இடத்திலிருந்து கீழே பார்த்தால் மயக்கம் வரக்கூடிய நிலை. ஆகவே எல்லோரும் மேலே பார்த்துக் கொண்டே ஏறினார்கள்.

அப்படிப் போய்க் கொண்டிருந்தவர்களில் முதலில் போன ஒரு சீனன் திரும்பிக் பார்த்தான். உச்சியை நோக்கிக்கொண்டிருந்த விஜயனும் அவனைப்பார்த்தான். அலெக்ஸாண்டர் சங்கிலியின் உச்சியிலிருந்தவனின் சிறு கண்கள் பளபளத்தன. விஜயன் வியப்பின் எல்லையை அடைந்தான். உச்சியிலிருந்து அப்படிப் பார்த்தவன் சூ-சின்!

zeevaa

# 14. சூ-சின் சொன்ன செய்தி

ஸமந்தகூட உச்சிக்குச் சற்றுக் கீழே, அலெக்ஸாண்டர் அமைத்த இரும்புச்சங்கிலியின் மேலுச்சியிலே, முதல் கணுவைப் பிடித்து நின்று கொண்டிருந்த சூ-சின்னின் கண்களைச் சந்தித்ததும் வியப்பின் வசப்பட்ட விஜயன் அந்தச் சந்திப்பைப்பற்றி சிந்திக்கவோ விவாதிக்கவோ உணர்ச்சிவசப்படவோ அது சமயமல்ல என்ற நினைப்பினால் தனது உணர்ச்சிகளை உதறி ஸ்ரீபாத சேவையில் மனம் செலுத்தி மேலும் சங்கிலியைப் பிடித்துக் கொண்டு ஏறலானான். சங்கிலி பிணைக்கப்பட்டிருந்த பாறை வழுக்குப் பாறையாயிருந்தபடியால் மிகுந்த எச்சரிக்கை யுடன் சுடர்விழியை ஏறச் சொல்லி, தானும் ஏறினான். அந்தச் சங்கிலிக்கு அப்புறம் தெரிந்த உச்சியின் மட்டத்தில் ஸ்ரீபாதத்தைப் பாதுகாக்க எழுப்பப்பட்டிருந்த சிறு மண்டபத் தூண்களை அடைய இரும்பு ஏணியொன்றும் வைக்கப் பட்டிருந்தது. அந்த ஏணியின் மூலம் ஏறியதும் உச்சியிலிருக்கும் சிறு சமதரையில் காலை வைத்த விஜயன், அந்தக் கற்றூண் மண்டபத்துக்கு நடுவில் ஸ்ரீபாதம் பரமபாவனமாக காட்சி யளித்ததைப் பார்த்தான்.

அந்த சமதரைக்கு வந்து அந்தப் பெரிய திருவடியின் முன்பு மண்டியிட்டு வணங்கினான். சிங்கள இளவல். ஸ்ரீ பாதம் மனித அடியைவிடப் பல மடங்கு அதிக பரிமாணத்தைப் பெற்றிருந்தது? இக்காலக் கணக்குக்குச் சுமார் ஐந்தரை அடி நீளமும் இரண்டரை அடி அகலமுமிருந்த ஸ்ரீ பாதம் உண்மையில் தெய்வத்தின்

zeevaa

பாதமேயென்பது திட்டமாகப் புலனாயிற்று. அந்தப் பாதம் இருந்த உச்சி, கற்றூண்களுக்கு இடையே விர்விர்ரென்று வீசிய காற்று, சுற்றுப் புற மலைகள், பள்ளத்தாக்குகள், காடுகள், ஸமந்த சந்தியிலிருந்து உற்பத்தியாகி வெள்ளிக் கம்பிபோல் ஓடிக் கொண்டிருந்த அருவிகள் எல்லாமே ஒரு பயங்கரத்தையும் அமைதியையும் சிருஷ்டித்தன.

ஸமந்தகூட உச்சியில் ஸ்ரீ பாதம் நன்றாக ஆழமாகவே பதிந்திருந்தது. அதை எத்தனை துறவிகள், சக்கரவர்த்திகள் வந்து தரிசித்துவிட்டுப் போயிருக்கிறார்களென்பதை அதன் முன்பு மண்டியிட்டுத் தலையைப் பாதத்துக்கு அருகில் புதைத்த விஜயன் எண்ணினான். 'பல மதஸ்தர்கள் போராடும் இந்தக் காலத்தில் மதங்களை ஒன்றுபடுத்தும், விரோதங்களை விலக்கும், சாந்தியை அளிக்கும் ஒரு திருவடி சிங்களத்தில்தான் இருக்கிறது!' என்று தனக்குள் கேட்டுப் பெரு மகிழ்ச்சியும் பெரு மதிப்பும் கொண்டான் சிங்கள இளவல். அத்தகைய எண்ணங்களால் மனத்தில் பெரும் சாந்தி நிலவ, சிறிது மெதுவாகப் பேசினான். "ஸ்ரீபாதமே! உலகுக்கு நன்மையே செய்யும் திருவடியே, நான் செய்யும் சத்தியங்களைக் கேள். உன் சாட்சியாக நான் இந்த நாடு விடுதலையடையும்வரை என் மகேசி திரிலோக சுந்தரியைத் தவிர வேறு யாரையும் மணப்பதில்லை. விடுதலையடைந்ததும் சோழ நாட்டிலிருந்து லீலாவதியை மீட்டு அவளை மணப்பேன். அவளையும் மகேசியாக்குவேன். கடைசியாக என் பக்கத்திலிருக்கும் சுடர் விழியை மணப்பேன். இவள் என் மனைவியாக இருப்பாள். இது சத்தியம். இரண்டு பேருக்குமேல் யாரையும் மகேசியாக்க முடியாததால் இவள் என் மனைவியாக மட்டும் இருப்பாள். மகேசிகளுக்கு இருக்கும் சகல வசதிகளும், பட்டம் ஒன்றைத் தவிர மற்ற எல்லா உயர்வுகளும் இவளுக்கு இருக்கும். இது சத்தியம். சீக்கிரம் நாட்டு விடுதலையை ஸ்ரீ பாதமே நீதான் அருளவேண்டும்.

zeevaa

*மூன்று புத்தர்கள் இதுவரை உன்னை தரிசித்துப்போய் உலகத்தையே சுபிட்சமாகச் செய்திருக்கிறார்கள். ஆகையால் உன் தரிசனப் பலன் உலகத்தின் ஒரு பகுதியான சிங்களத்துக்கும் கிடைக்கட்டும்'' - இப்படிப் பிரார்த்தனையும் சத்தியங்களும் செய்தான் விஜயன். பிறகு உணர்ச்சிப் பெருக்கால் பெருமூச்சும் விட்டான்.

சுடர்விழி சிங்கள மன்னன் பக்கத்தில் மண்டியிட்டுத் தலையைத் தரையில் புதைத்துப் பிரார்த்தனை செய்தாள். ''ஸ்ரீபாதமே! எல்லோருக்கும் நல்வாழ்வு நல்கும் நீ இப்பொழுது நாடோடியாக இருக்கும் இந்தச் சிங்கள மன்னனுக்கு வெற்றியும் வாழ்வும் கொடு. இந்த வீரனுக்கு அரசைக் கொடு. புனிதமான புத்தமதத்தை விரிவடையச் செய்யும் புத்தியையும் கொடு. உன்னைப் போலவே இவர் நிர்மலமானவர். இவரைக் கைவிடாதே'' என்று வேண்டிக் கொண்டாள் சுடர்விழி.

சற்று எட்ட மூர்சமதும் சூ-சின்னும் தொழுகை நடத்தினார்கள். தொழுகையில் சூ-சின்னின் கை மூர்சமதின் மீது படவே அதைத் தனது முழங்கையால் இடித்து விலக்கினான் மூர்சமத். மூர்சமதிற்கோ சூ-சின்னுக்கோ பக்குவம் அதிகமில்லாததால் தொழவேண்டும் என்ற நியதிக்காகவே தொழுதார்கள். ஸ்ரீபாத உச்சியில் மேலும் மக்கள் வந்து கொண்டிருந்தார்கள். மலை உச்சியின் சிறு தரை வெகு சீக்கிரம் யாத்ரீகர்கள் நிரம்பித் ததும்பிக் கொண்டிருந்தது. இத்தனைக்கும் எந்தவித சத்தமோ சச்சரவுகளோ அங்கு இல்லை. அனைவர் வணக்கமும் அமைதியாக நடந்தது. பிரிவினை பிரார்த்தனைகள் கூட மிக மெதுவாகவே இருந்தது. ஆதாம் ஆதாம்,

* "THE FIRST BUDDHA KAKUSANDA appeared in 3001 B.C. and found the peak. He called it Deiwakuta (Peak of God)" The Second Buddha, Konagamma appeared about 2099 B.C. He named the peak Samanthkuta. The Third Budda, Kasyapa visited the peak about 1014 B.C. -Eleven Years in CEYLON - M Forbes - Vol. I-PP. 181-182.

zeevaa

புத்தம் சரணம் கச்சாமி, ஓம் நமசிவாய என்ற அவரவர் கோணங்களில் கூட ஓர் அமைதியும் தெய்வீகமும் இருந்தது. பூமியின் அந்த உயரத்தில், புனித ஸமந்தகூடத்தின் உச்சியில் உலக விரோதங்கள் மறைந்தன. மூன்றுவித தெய்வீகப் பெயர்களையும் மண்டபத் தூண்களில் புகுந்து வந்த இன்பக் காற்று ஒன்றாகவே அள்ளிச் சென்று, பெயர்கள் பல இருந்தாலும் தெய்வம் ஒன்றே என்பதைக் காட்டியது.

அந்தச் சூழ்நிலையில் எல்லோரும் இருக்க இஷ்டப்பட்டாலும் தொடர்ந்து வந்து கொண்டிருந்த கூட்டம் அவர்களை இறங்கும் நிலைக்குக் கொண்டுவிட்டதால் விஜயன் முதலில் மண்டியிட்ட நிலையிலிருந்து எழுந்தான். ''சுடர்விழி! ஸ்ரீ பாதத்தின் சாட்சி, இதோ உன்னை மணக்கிறேன்'' என்று கூறினான்.

ஸமந்தகூட உச்சியிலிருந்தே சுடர்விழியின் கையைப் பற்றிய வண்ணம் சுற்றுமுற்றும் நோக்கினான். சுற்றிலும் பெரிய மலைகள் பல தெரிந்தன. ஆதாம் உச்சியின் சாட்சியைவிடச் சிறந்த சாட்சி உலகத்தில் இல்லை என்று கருதிய விஜயன், அங்கிருந்தே தெரிந்த பள்ளத்தாக்குகளையும் அடர்ந்த காடுகளையும் சுடர்விழிக்குக் காட்டினான். அங்கிருந்த மலைகள் சூழ்ந்த பீடபூமியில் *மகாகாமா என்ற மகாகிராமம் தெரிந்தது. மலைகள் சூழயிருந்த அந்த மகாகிராமம், சிங்களத்தின் ஆதி தலைநகர், அவன் எண்ணங்களைப் பின்னுக்கு ஓட்டி, சிங்களத்தின் சிறப்பையும் வளத்தையும் நினைவு படுத்தியதால், அந்தப் பழைய நாகரிகம், பெருமை மீண்டும் எப்பொழுது வரும் என்று சிந்தித்தான். அந்தச் சிந்தனையுடன் சுடர்விழியை நோக்கி, ''சுடர்விழி! இது சொர்க்கம், கீழே இருப்பது பூமி. இங்கு மத வித்தியாசமில்லை, பூசலில்லை. அமைதி இருக்கிறது. கீழே நாம் இறங்கிச் சென்றதும் மீண்டும் கீழ்க்

---

* Kandy was called Mahagamma. It means Mahagrama or the Capital City.

zeevaa

குணங்கள் நம்மை ஆட்கொள்கின்றன. இதனால்தான் தவ முனிவர்கள் மலைகளை நாடிச் சென்றார்கள்,'' என்று சொன் னான்.

மகாகிராமத்தைப் பார்த்ததும் அவனுக்கு வேறு நினைவுகள் தோன்றத்தொடங்கின. அங்குதான் திரிலோக சுந்தரியும், பிக்குவும் சிற்பியும் துறவிகள் நால்வரும் இருக்கிறார்கள் என்ற சிந்தனை எழுந்தது. மலையிலிருந்து கீழே இறங்க இறங்க இந்த உலகாயுத நினைவுகள் அவனைப் பிடித்துக் கொண்டன. உச்சியிலிருந்து சிறிது தூரம் இறங்கியதுமே அவன் மனம் மாறத் துவங்கியது. ஸமந்தகூடத்தின் கீழே, மலை அடிவாரக் காடுகளில் எங்காவது ரவிதேவனும் காலனும் இருப்பார்கள் என்ற எண்ணங்கள் எழுந்தன. பாதி தூரம் வருவதற்கு முன்பே உலக சக்திகள் அவனைப் பிடித்துக் கொண்டன. ரவிதேவனும் காலனும் ருஹுணாவில் எந்த நிலையைக் கண்டிருப்பார்கள் என்று சிந்திக்கத் தொடங்கினான். சரியான வரவேற்புத் தனக்கு இருக்காவிட்டால் அடுத்துத் தான் கடைப்பிடிக்க வேண்டிய ராணுவ முறைகள் என்ன என்பதையும் நினைத்தான்.

இவ்வளவு சிந்தனையுடன் ஸமந்தகூட சொர்க்கத்திலிருந்து அடிவாரத்துக்கு இறங்கிக் கொண்டிருந்த விஜயன் யாருடனும் பேசவே இல்லை. ஆரம்பத்தில் பிடித்த சுடர்வழியின் கையை விடவுமில்லை. பின்னால் வந்து கொண்டிருந்த மூர்சமதையும், சூ-சின்னையும் திரும்பிப் பார்க்கவுமில்லை. காலை மறைந்து கதிரவன் தோன்றியும் மலை வழியின் கடுமை காரணமாக அவர்கள்அதிக தூரம் இறங்கவில்லை. சற்றே திரும்பி உச்சியைப் பார்த்த விஜயன் மலைத்து நின்றான்.

ஸமந்த கூடத்தின் மீதிருந்த பனித்திரையைக் கதிரவனின் கிரணங்கள் ஊடுருவி, சப்த வர்ண வில்லை வளைத்திருந்தது. இயற்கை ஏழுவர்ண மாலையைத் தொடுத்து அந்த மாலையைப் புத்தர் ஸ்ரீபாதத்தின் மீது சூட்டியிருப்பது போன்ற காட்சியைக் கண்டு

zeevaa

பிரமித்த விஜயன் அதைச் சுடர்விழிக்கு காட்டினான். "நாம் புனையும் மலர் மலை வாடும். இது மறையும், ஆனால் வாடாது." என்று அதன் அமரத்துவத்தைச் சுட்டிக் காட்டினாள் சுடர்விழி. அதை ஆமோதித்த விஜயன் மீண்டும் கிழே இறங்க முற்பட்டபோது, "சற்று அந்த குகையில் இளைப்பாறிப் பிறகு இறங்குவோம். உணவையும் இங்கேயே முடித்துக் கொள்வது நல்லது," என்று கூறி ஒரு •குகையைக் காட்டினாள்.

விஜயன் அந்தக் குகைக்குள் நுழைந்ததும் மூர்சமதும் சூ-சின்னும் குகை வாயிலிலேயே காவல்காரர்களைப் போல் உட்கார்ந்து கொண்டார்கள். சூ-சின்னே முதலில் பேச்சைத் துவங்கி, "எசமான்! உங்களால் நான் பிழைத்தேன்" என்றான்.

அந்த நன்றிச் சொற்களைக் காதில் வாங்கவில்லை விஜயன். "அது கிடக்கட்டும். இங்கு எதற்காக வந்தாய்?" என்று வினவினான்.

"நான் பிழைத்ததற்கு நன்றி செலுத்த, ஸ்ரீபாதத்தை வணங்க. நானும் பௌத்தனல்லவா?" என்று பணிவு மிகுந்த குரலில் பதில் சொன்னான் சூ-சின்.

அவன் பணிவை விஜயன் நம்பவில்லை. "உன் ஊருக்குப் போய் விடுவது தானே?" என்று வினவினான் சிங்கள இளவல்.

சூ-சின் தன் தொங்கு மீசையை இழுத்துவிட்டுக் கொண்டு முகத்தில் வருத்தத்தைக் காட்டி "எசமான்! நான் இங்கு வந்தது உங்களுக்குப் பிடிக்கவில்லையா?" என்று வினவினான்.

விஜயன் புன்முறுவல் காட்டினான். "ஏன் பிடிக்கவில்லை? என்னைக் கொல்ல முயன்றவனைப் பிடிக்கவில்லையென்று எப்படிச் சொல்ல முடியும்? என் குலதனத்தையும் குல விளக்கையும் திருடி சீன சக்கரவர்த்திக்கு கொண்டு போக முயன்றவனைப் பிடிக்காதிருக்குமா?" என்றான் ஏளனம் ஒலிக்கும் குரலில்.

---

• IBN BATUTA in his account of the ascent of the peak in the 14th Century speaks of "Seven Caves"!

zeevaa

ஆனால் சூ-சின் சிறிதும் மசியவில்லை. ''எசமான்! அந்தப் பாவங்களுக்கெல்லாம் பிராயச்சித்தம் செய்து கொள்ளத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன்,'' என்றான்.

விஜயன் மேற்கொண்டு பேசவில்லை. அதற்குள் சுடர் விழி பழங்களைக் கொண்டுவர அதைத் தானும் புசித்து, சூ-சின்னுக்கும் மூர்சமதுக்கும் கொடுத்தான். சுடர்விழி குகை மூலைக்குச் சென்று தன் மடியிலிருந்த சில பழங்களைச் சாப்பிட்டாள். அவள் உணவை முடித்துக் கொண்டதும் மீண்டும் பயணத்தைத் துவங்கினாள். இம்முறை அவளைத் தொடர்ந்தே மற்ற மூவரும் சென்றனர்.

என்ன துரிதமாகப் பயணம் செய்தும் இரவு ஓரளவு முற்றிய பிறகே அவர்கள் மலையடிவாரத்துக்கு வரமுடிந்தது. அங்கிருந்த காட்டுப் பகுதியில் அவர்களை அழைத்துச் சென்ற சுடர்விழி ஓர் இடிந்த மண்டபத்தைக் காட்டி, ''இரவு இங்கு தங்கலாம்,'' என்றாள்.

மண்டபம் மிகக் கேவலமாக இருந்தது. மேல் பகுதிகள் எந்தச் சமயத்திலும் தலையில் விழும்போலிருந்ததால் விஜயன் சற்றுச் சந்தேகத்துடன் அந்த மண்டபத்தை நோக்கினான். ''மன்னவா! சந்தேகப்பட வேண்டாம். இது நீண்ட நாளாக இப்படித் தானிருக்கிறது. இதன் கோடியில் பழைய* தூபாராமாவின் அறையொன்று இருக்கிறது. அங்கு உணவை நான் சித்தம் செய்கிறேன்'' என்றாள்.

இரவு உணவருந்திய பிறகு சூ-சின் சொன்னான்: ''சிங்கள மன்னவா! நான் எப்படி வந்தேனென்று கேட்க வில்லையே!'' என்று. விஜயன் பதிலேதும் சொல்வதற்கு முன்பாகவே அந்த விருத்தாந்தத்தைத் துவக்கிய சூ-சின் சொன்னான்: ''எசமான்! உங்களைப் பேராபத்து சூழ்ந்திருக்கிறது,'' என்றான். அவன் குரலில் எச்சரிக்கை, அச்சம் இரண்டும் இருந்தன.

---

★ தூபாராமா என்பது புத்தத் துறவிகளின் ஆசிரமத்துக்குப் பெயர்.

zeevaa

''ஆபத்து எனக்குப் புதிதல்ல,'' என்றான் விஜயன்.

ஆனால் சூ-சின் அடுத்துச் சொன்ன செய்தி விஜயனையே திகைக்க வைத்தது. ''நான் இங்கே வந்தது நீங்கள் அந்தமானில் கொடுத்த சிறு படகில் அல்ல. சோழர்கள் மரக்கலத்தில் வந்தேன். பெரும் சோழர் படையொன்று மகாதித்தா துறைமுகத்தில் இறங்கியிருக்கிறது,'' என்ற சூ-சின், ''எசமான்! இன்னும் இரண்டு நாளைக்குள் அது உள்ளூருக்குள் நுழையும்,'' என்றும் நிலைமையைச் சொன்னான்.



# 15. உள்ளறை மர்மங்கள்

இலங்கையின் வடமேற்குக் கடற்கரையிலுள்ள மகாதிஷ்டா எனும் மகாதித்தா துறைமுகத்தில் சோழர்களின் பெரும்படையொன்று இறங்கியிருக்கும் செய்தியைக் கேட்டதும் விஜயபாகு திகைத்தானென்றால் அந்தத் திகைப்பை ஒரு வினாடியில் உதறிக்கொண்டு, ''இலங்கையின் வடபகுதி முழுமையும் சோழர்கள் வசமிருக்க இந்தப் புதுப்படை வருவதன் அவசியமென்ன?'' என்று வினவினான் சூ-சின்னை நோக்கி.

சூ-சின்னின் முகத்திலும் சிறிது கவலைக் குறி விரிந்தது. ''சிங்கள மன்னர் கலிங்கம் சென்று திரும்பி விட்டதாகவும், இங்கு மும்முரமான போர் நிகழலாமென்றும் மரக்கலத்திலிருந்த வீரர்கள் பேசிக் கொண்டார்கள்.'' என்று சூ-சின் கூறினான் கவலை குரலிலும் ஒலிக்க.

விஜயன் முகத்தில் சிந்தனை மட்டுமின்றி லேசாக வியப்பின் சாயையும் படர்ந்தது. ''நான் சிங்களத்திலிருந்து கலிங்கத்திற்கு மிக ரகசியமாகத்தானே சென்றேன்? அவர்களுக்கு எப்படி அது தெரிந்தது?'' என்று விஜயன் வினவினான். குரலிலும் வியப்பு இருந்தது.

''சிங்கள மகாராஜா! இந்த உலகத்தில் எதையும் மறைத்து வைக்க முடியாது. அதுவும் உங்களைப் போல ஒருவரை, மறைத்து வைக்க முடியுமா? தீயைச் சருகுகளால் மறைக்க முடியுமா? அப்படிச் செய்தால் சருகுகள் தீப்பிடித்து எரியுமே தவிர தீ அணையாது. உங்களுடைய ஒவ்வொரு அசைவையும் சோழர்கள் கவனித்திருக்கிறார்கள்,'' என்றான் சூ-சின். ''அவர்கள் சொன்ன

zeevaa

# விஜய நகர தேவி



zeevaa

விபரங்களில் பாதி எனக்கே தெரியாது,'' என்று இன்னொரு செய்தியையும் கூட்டினான்.

''அப்படியா!'' என்று ஆச்சரியத்துடன் கேட்ட விஜயன், ''உனக்குத் தெரியாதது எதுவுமில்லையே. நீ தான் சகலத்தையும் கூட இருந்து பார்த்திருக்கிறாயே,'' என்று விஜயன் சொன்னான்.

''நீங்கள் என் மரக்கலத்துக்கு வந்த பிறகுதான் நான் நேரில் விஷயங்களை அறிந்தேன். அதற்கு முன்பாகவே நீங்கள் கலிங்கத்தில் நடத்திய சாதனைகளைப் பற்றிக் கேள்விப்பட்டேன். அபயகுலோத்துங்கனிடம் நீங்கள் போரிட்டதைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் அதைக் கூட சோழ மாலுமிகள் பேசிக் கொண்டார்கள். நீங்கள் கலிங்கத்துக்குச் சென்றதே கலிங்கத்தின் உதவியை நாடத்தான் என்று சோழர்கள் நினைக்கிறார்கள். அப்படிக் கலிங்கம் உதவிக்கு வருவதானால் இங்குள்ள படைகளைப் பலப்படுத்தப் புதிய படைகளை அனுப்பியிருக்கிறார்கள்,'' என்று சோழர் படை வந்த காரணத்தை விளக்கினான் சூ-சின்.

இதைக்கேட்டதும் தனது கலிங்க விஜயத்தின் விவரங்களைப் பற்றி அபயன் சோழ நாட்டுக்குச் செய்தி அனுப்பியிருப்பானோ என்று உள்ளூர எண்ணமிட்டாலும் அந்த எண்ணத்தை உதறினான். 'இருக்காது, ஒருக்காலும் இருக்காது. அபயன் பெரு மனத்தவன், இந்தச் சில்லறை விஷயங்களில், அற்ப வேலைகளில் ஈடுபட மாட்டான்' என்று சொல்லிக் கொண்டான். இத்தகைய எண்ணத்தால் சூ-சின்னை வினவினான், ''சூ-சின்! உன்னை அந்தமான் மேற்குக் கடலில் தானே விட்டேன். அங்கிருந்து சீனாவுக்குச் செல்ல வேண்டியவன் எதற்காகக் கிழக்குக் கடற்பகுதிக்கு வந்தாய்?'' என்று.

சூ-சின் தனது சிறிய கண்களால் விஜயனை நோக்கி, ''நான் சீனாவுக்குப் போக முடியாது,'' என்றான். அவன் குரலில் வருத்தம் தோய்ந்திருந்தது.

zeevaa

அவன் சொன்னது விஜயனுக்கு வியப்பாயிருந்ததால், "சொந்த நாட்டுக்குப் போவதிலும் கஷ்டங்கள் இருக்கின்றனவா?" என்று வினவினான்.

"பெரிய கடற்போர் வீரனென்று பெயர் பெற்ற நான் சிறு படகில் வேறு சீனக் கப்பலில் ஏறியதுமே கேள்விகள் பிறக்கும். நான் தோல்வியடைந்த விவரங்களைச் சொன்னாலும் சொல்லா விட்டாலும் சீன நாட்டுச் சிறையில் தள்ளப்படுவேன்," என்று விளக்கினான் சூ-சின்.

"போரில் வெற்றி தோல்வி சகஜம் தானே?" என்று வினவினான் விஜயன்.

"அது உங்கள் நாட்டு வேதாந்தம். சீனாவில் அப்படியல்ல. தோல்வியைச் சீன மன்னர் அனுமதிப்பதில்லை. தோல்வியடை பவன் கையாலாகாதவன், நாட்டுக்குப் பயனற்றவன் என்றும் சக்கரவர்த்தி நினைக்கிறார். அப்பேர்ப்பட்டவனைச் சிறையில் தள்ளுவது சர்வ சகஜம்," என்ற சூ-சின் பெருமூச்சு விட்டான்.

இந்த விளக்கம் விஜயனுக்கு பேராச்சரியத்தை விளைவித்தது. சீன நாடு உலகத்தில் சிறந்த வல்லரசுகளில் ஒன்றாக விளங்கும் காரணத்தை அவன் தெள்ளெனப் புரிந்து கொண்டான். திறமைக்குப் பதவியளிக்கும் நாடு திறமையற்றவர்களை அழித்து விடுவதால் தான் எல்லோரும் அங்கு அக்கறையுடனும் பயத்துடனும் செயல்படுகிறார்கள் என்பதை அறிந்து கொண்டான். இந்தச் சூ-சின் செய்த அக்கிரமங்களுக்குப் பிறகு இவனைத் தன்னுடன் இருக்க விடுவது சரியா என்றும் சிந்தித்தான்.

அந்தச் சிந்தனையை சூ-சின்னும் ஊகித்துக்கொண்டதால் "சிங்கள மகாராஜா! கலிங்கத்துக் கடலிலும் அந்தமானிலும் ஏற்பட்ட நிகழ்ச்சிகளுக்குப் பிறகு நீங்கள் என்னை நம்புவது கஷ்டம். ஆனால் சீனர்கள் நன்றி மறப்பவர்களல்ல. நீங்கள் என்னைக் காப்பாற்றி இருக்காவிட்டால் இத்தனை நேரம் சாரி

zeevaa

என்னைக் கொன்று கழுகுகளுக்கு இரையாக்கியிருப்பான். அதனால்தான் நன்றிக்கடன் செலுத்த நான் இங்கு வந்தேன். எனக்குச் சௌகரியத்தைத் தேட உத்தேசமிருந்தால் நான் சோழர்களிடம் உங்கள் எதிரியென்று சொல்லி அவர்களுடன் சென்றிருப்பேன். சந்தேகப்படவேண்டாம் மகாராஜா! சூ-சின் நல்ல எதிரி. ஆனால் நல்ல நண்பனாகவும் இருக்கக்கூடும்,'' என்று கூறினான். அவன் சொற்களில் உறுதி இருந்தது.

விஜயன் அதற்குமேல் எதுவும் பேசவில்லை. சுடர்விழி மண்டபத் தூணில் ஏற்றியிருந்த சிறு விளக்கைக் கவனித்து, ''சுடர்விழி, இது ஏது விளக்கு?'' என்று வினவினான்.

''இந்தப் பாழடைந்த மண்டபத்துத் தூண்களிலும் உட்புறச் சுவர்களிலும் அகல்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. அவற்றில் எண்ணெயும் திரியும் இருக்கின்றன. அவற்றை ஏற்றி வைக்க தீப்பொறி கிளப்பும் சுக்கான் கற்களும் உள்ளே இருக்கின்றன. உள்ளேயும் ஒரு விளக்கை ஏற்றியிருக்கிறேன்,'' என்றாள்.

விஜயன் முகத்தில் திடீரென ஏதோ சந்தேகம் எழுந்தது. ''அப்படியானால் இந்தப் பாழடைந்த மண்டபத்துக்கும் யாரோ அடிக்கடி வருகிறார்கள்,'' என்றான்.

''அப்படித்தானிருக்க வேண்டும்,'' என்றாள் சுடர்விழி.

''எண்ணெய் வருஷக் கணக்கில் அப்படியே இருக்குமா?'' விஜயன் வினவினான்.

''இருக்காது,'' என்றாள் சுடர்விழி.

''இங்கு உள்ளே தெய்வத்தின் சிலை இருக்க வேண்டும்,'' என்றான் விஜயன்.

''எதையும் காணோம்.'' என்றாள் சுடர்விழி.

''எதற்கும் பார்ப்போம் வா,'' என்று கூறி, சுடர்விழியுடன் மண்டபத்தின் உட்பகுதிக்குள் சென்றான். உள்ளே நீண்டு கிடந்த

zeevaa

மண்டபத்தின் கோடியில் ஓர் அறை காணப்பட்டது. அதைக் கவனித்த விஜயன், 'அது?' என்று கேட்கும் பாவனையில் சுடர்விழியை நோக்கித் தனது புருவங்களை உயர்த்தினான்.

''அதுதான் உணவு தயாரிக்கும் அறை,'' என்றாள் சுடர்விழி.

''வேறு அறை ஏதாவது இருக்கிறதா?''

''இல்லை.''

''எதற்கும் பார்ப்போமே,'' என்று சொல்லிக்கொண்டு அந்த மடப்பள்ளியில் நுழைந்து சென்ற விஜயன் அதன் கோடியிலிருந்த சுவரில் கற்கள் வாயிற்படிபோல் அமைந்திருந்ததைக் கண்டான். அதை அணுகி நீண்ட நேரம் பரிசோதித்த விஜயன் அங்கு தூண் போலிருந்த ஓர் இடத்தைக் கையால் பிடித்துக் கொண்டு நின்று, ''இங்கு எதுவமில்லை,'' என்று சொல்லிக் கொண்டு திரும்பிய சமயத்தில் சுடர்விழி சரேலெனக்கையைப் பிடித்து அவனை வேறுபுறம் தள்ளினாள். விஜயபாகுவின் மீது விழுந்து விடுவது போல் சாய்ந்த அந்தக் கருங்கல் தூண் இடது புறமாகச் சாய்ந்தே நின்றது. அதனால் பிரமித்த சுடர்விழி, ''வாருங்கள் மீதிக்கற்களும் விழப் போகின்றன,'' என்று அவனை இழுத்தாள்.

ஆனால் விஜயபாகு அசையவில்லை. சாய்ந்து நின்ற தூணுக்கு அப்புறமிருந்த குகையைக் காட்டி, ''சுடர்விழி ! அதோ பார்,'' என்றான். அவன் குரலில் பெரும் அதிர்ச்சி இருந்தது. அந்தக் குகையின் கோடியில் புத்தர் சிலையொன்று நின்று கொண்டிருந்தது. அதன் காலடியில் இருந்தது ஒரு வெண்கல அகல் விளக்கு. விஜயன் பல விநாடிகள் அதை உற்றுப் பார்த்துக்கொண்டே நின்றான். பிறகு சுடர்விழியின் கையைப் பற்றி அழைத்துக் கொண்டு அந்தப் புத்தர் சிலையை மெதுவாக அணுகி அதன் முன்பு சுடர்விழியுடன் மண்டியிட்டு வணங்கினான்.

கண்களை மூடி அவன் துதித்துக் கண்களை விழித்த போது புத்தர் சிலை திருவடிகளை அணைத்த நீண்ட கல்லில் சில வரிகள்

zeevaa

சிங்களத்தில் செதுக்கப்பட்டிருந்தன. அதைப் படித்த விஜயன் வியப்பின் எல்லையை அடைந்தான். "இதோ பார் சுடர்விழி! இதைப்படி." என்றான்.

அதைப்படித்த சுடர்விழியும் பிரமிப்பின் உச்ச கட்டத்தை அடைந்தாள். "இந்த தகாபாவிற்கு வருபவர் இலங்கையை ஏகசக்கராதிபதியாக ஆட்சி புரிவார். அவர் இந்தத் தகாபாவைத் திரும்பவும் சிறப்பாகக் கட்ட வேண்டும். அல்லது இந்தத் தாதுவை எடுத்து வேறிடத்தில் பெரிய தகாபாவைக் கட்டவேண்டும்," என்ற வரிகளைப் படித்த சுடர்விழி, "தாது எங்கிருக்கும்?" என்று வினவினாள்.

"எங்கிருந்தாலும் அதைத் தொடுவதற்கில்லை. நான் சோழர்களை வெற்றி கொண்டு இலங்கையை ஒரு குடைக் கீழ்கொண்டு வந்தால் இந்தக் கட்டளையை நிறைவேற்றுவேன்," என்று அவளுக்குப் பதில் சொல்லும் பாவனையில் பிரதிக்ஞை செய்தான்.

அத்துடன் ஏதோ சந்தேகம் வரவே சுடர்விழியை நோக்கி, "சுடர்விழி! இந்தப் பாழடைந்த மண்டபத்தை நீ எத்தனை நாளாக அறிவாய்?" என்று வினவினான்.

"இரண்டு வருஷங்களாக அறிவேன், என் தந்தை இங்கு அழைத்து வந்தார் என்னை," என்று சொன்னாள்.

"இந்த உள்ளறைக்கு வந்திருக்கிறாயா?"

"இல்லை. இது இருப்பதே எனக்குத் தெரியாது. ஆம், நீங்கள் எப்படி இதைக் கண்டு பிடித்தீர்கள்?"

"இந்தப் பெரிய சுவரில் இந்த ஓர் இடத்தில் மட்டும் இரண்டு தூண்கள் வாயிற்படிபோல் அமைந்திருக்கவே கையை வைத்துப் பார்த்தேன். அதுவே வழிவிட்டது. இதிலிருந்து என்ன தெரிகிறது உனக்கு?" என்று வினவினான் விஜயன்.

zeevaa

''என்ன தெரிய வேண்டும்?'' என்று சுடர்விழி கேட்டாள்.

''இங்கு ஒரு வாயிற்படி இருக்கிறது. இதற்குள் புத்தர் பிரான் சன்னிதி இருக்கிறது. இங்கும் வெளி மண்டபத் தூண்களிலும் இரும்புப் பட்டயங்களால் பொருத்தப்பட்ட சிறிய அகல் விளக்குகள் இருக்கின்றன. அவற்றில் எண்ணெயும் திரியும் இருக்கின்றன. இதிலிருந்து இந்த இடத்துக்கு யாரோ அடிக்கடி வருகிறார்கள் என்பது புரிகிறது'' என்று விளக்கினான் விஜயன்.

''யாராயிருக்கும்?'' என்று வினவினாள் சுடர்விழி.

''யாராவது மகானாயிருக்கும். வேறு யார் புத்தருக்குச் சேவை செய்யவும் விளக்கேற்றவும் வருவார்கள்?'' என்று விஜயன் சொன்னான்.

''சரி வா! செல்வோம்,'' என்று கூறிக் கிளம்ப முற்பட்ட விஜயன் சட்டென்று சிலையென நின்றான். அப்பொழுது புத்தர் தலைமீது புஷ்பங்கள் சலசலவென உதிர்ந்தன. ''புத்தம் சரணம் கச்சாமி!'' என்று குரலும் தீனமாக எழுந்தது. புத்தர் சிலையை அடுத்திருந்த சிறு பிரகாரத்தில் யாரோ மெதுவாக நடந்துவரும் அரவமும் இருவர் காதிலும் விழுந்தது.

zeevaa

# 16. பாவ உறவுகள்

புத்தர்பிரான் திருவுருவச் சிலைமீது திடீரென மேலிருந்து சலசலவென புஷ்பங்கள் உதிர்ந்ததன்றி, அந்தச் சிலையிருந்த இடத்தைச் சுற்றியிருந்த சிறு பிரகாரத்தில் யாரோ நடந்து வரும் காலடி ஒலியும் கேட்கவே, அந்த அர்த்த ராத்திரியில் வருவது யாராயிருக்கும் என்ற வினாவை எழுப்பிக் கொண்டு பிரமைபிடித்து நின்ற விஜயனுக்கும் சுடர்விழிக்கும், வந்தவர் யாரென்பதை உணர்ந்ததும் பிரமிப்பு உச்சக்கட்டத்தை அடைந்தது. ஒரு சமயத்தில் ஒருவருக்கு மேல் நுழைய முடியாமல் சிறு பிரகாரத்தில் கண்களை மூடிய வண்ணம் ''புத்தம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி,'' என்ற இரட்டை மந்திரங்களை உச்சரித்துக் கொண்டு மிக மெதுவாக நடந்து வந்த துறவியின் உருவம் தெரிந்ததுமே, மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்ட விஜயன், ''இதென்ன விந்தை! பிக்கு! இங்கு எப்பொழுது வந்தீர்கள்?'' எப்படி வந்தீர்கள்?'' என்று வினவினான்.

அப்பொழுதும் பிக்கு கண்களைத் திறக்காமலும், உதடுகளை அசைக்காமலும் நின்றிருந்ததைப் பார்த்த விஜயன், ''பிக்கு! இந்தப் பாசாங்கு எதற்கு? கண்களைத் திறவுங்கள். நீர் ஒன்றும் அத்தனை பெரிய பக்தரல்ல,'' என்று கூறி அவரை அணுகி அவர் தோள்களைப் பிடித்து ஆட்டினான்.

அதனால் சற்றே கண்விழித்த பிக்கு, ''அடடே! யார்? சிங்கள மன்னரா! இங்கு எப்பொழுது வந்தீர்கள்? எப்படி வந்தீர்கள்?'' என்று விஜயன் முதலில் கேட்ட கேள்விகளையே திருப்பிக் கேட்டார்.

zeevaa



zeevaa

பிக்கு தன்னைப் பார்த்து நகைக்கிறாரென்பதைக் கண்டு கொண்ட விஜயன், "பிக்கு, விளையாட வேண்டாம். நான் கேட்டதற்குப் பதில் சொல்லுங்கள்," என்று சற்று அழுத்தியே பேசினான்.

பிக்கு முகத்தில் சிறிது கிலேசத்தைக் காட்டி, "இதில் விளையாட என்ன இருக்கிறது? விளையாட்டெல்லாம் மன்னரைப் போன்றவர் களுக்கல்லவா ஏற்பட்டது?" என்றார் போலித் துயரம் துலங்கிய குரலில். அத்துடன் விஜயன் பக்கத்திலிருந்த சுடர்விழியையும் தமது விஷமக் கண்களால் நோக்கினார்.

அவர் பேச்சிலிருந்த உட்பொருளையும் விஜயன் கவனித்தான். சுடர்விழியை அவர் நோக்கியபோது அவர் கண்களில் ஒளிவிட்ட விஷமத்தையும் கவனித்தான். அவர் பார்வையால் சுடர்விழி அடைந்த சங்கடத்தையும் கவனித்தான். ஆகவே, "பிக்கு தவறாக நினைக்க வேண்டாம்: நானும் சுடர்விழியும் இங்கு வந்தது" என்று பேச்சை இழுத்தான்.

பேச்சை அவன் முடிக்காவிட்டாலும் பிக்குவே முடித்தார். "புத்த பிரானை தரிசிக்க, புத்தர் பிரானிடம் பக்தி செலுத்த," என்று. அத்துடன் நிற்கவில்லை பிக்கு. "புத்தர் பிரானைத் தனிப்படத் தரிசிப்பதைவிடச் சதிபதிகளாகத் தரிசிப்பது மிகவும் விசேஷம்," என்றும் சொன்னார்.

விஜயன் ம்கத்தில் சிறிதே சங்கடத்தின் சாயை படர்ந்தது. "பிக்கு! தவறாக நினைக்கிறீர்கள். நாங்கள் சதிபதிகளல்ல," என்று சொன்னான் குரலிலும் சங்கடம் ஒலிக்க.

"அப்படியா!" என்று வாயைப் பிளந்தார் பிக்கு.

"நீங்கள் நினைக்கிறபடி எதுவும் இல்லை," என்றான் விஜயன்.

பிக்கு அப்பொழுதும் மசியவில்லை. "இருக்காது இருக்காது," என்று அரைகுறையாக ஒப்புக்கொண்ட பிக்கு "இந்தப் பெண் யார்?" என்று வினவினார்.

zeevaa

''சுடர்விழி. ரவிதேவன் மகள்.''

''யார், உன் படைத் தலைவன் ரவிதேவன் மகளா?''

''ஆம் பிக்கு.''

''ரவிதேவனுக்குத் தெரிந்தால் உபத்திரவமாயிற்றே!''

''என்னைச் சந்திக்க ரவிதேவனே இவளை நியமித்தான். நான் இந்த நாட்டுக்கு வந்ததும் முதலில் என்னை இவள் தான் சந்தித்தாள்.''

''நல்லது நல்லது,'' என்று சந்துஷ்டியைக் காட்டினார் பிக்கு.

''பிக்கு, இந்தப் பெண்ணைச் சாமானியமாக நினைக்க வேண்டாம்,'' என்றான் விஜயன்.

''எப்படி நினைக்க முடியும்? மன்னன் மனதைக் கவர்ந் திருக்கிறாள், அவளைச் சாமான்யமாக நினைக்க முடியுமா?'' என்றார் பிக்கு.

''பிக்கு!'' -விஜயன் குரலில் உஷ்ணம் தெரிந்தது.

''மகாராஜா!'' என்று வினயத்துடன் கேட்டார் பிக்கு.

''அவளைப் பற்றி இன்னொரு முறை பேசினால்...'' எச்சரித்தான், விஜயன். அத்துடன் தொடர்ந்து சொன்னான்: ''இப்பொழுது நாம் விவாதிக்க வேண்டியது என் சொந்த விவகாரங்களைப் பற்றியோ, இந்தப் பெண்ணைப் பற்றியோ அல்ல; நாட்டு நிலவரத்தைப் பற்றிப் பேசுவதுதான் முக்கியம்'' என்று.

''ஆம்,'' என்று ஒப்புக்கொண்ட பிக்குவை நோக்கிய விஜயன், ''பிக்கு! சோழர் பெரும் படையொன்று மகாதித்தாவில் வந்து இறங்கியிருப்பது உமக்குத் தெரியுமா?'' என்று விசாரித் தான்.

zeevaa

இந்தச் செய்தி புதிதாகையால் பிக்கு திகைத்து நின்றார். "மன்னவா! நீங்களும் என்னுடன்தானே வந்தீர்கள்? உங்களுக்கு மட்டும் இது எப்படித் தெரிய வந்தது?" என்று வினவினார்.

"சூ-சின் சொன்னான்," என்று பதில் சொன்னான் விஜயன்.

இந்தச் செய்தியைக் கேட்டதும் சோழர்படை குலுங்கியதைக் கேட்டபோது ஏற்பட்ட திகைப்பைவிடப் பலமடங்கு அதிகமான அதிர்ச்சியை அடைந்தார் பிக்கு.

"சூ-சின்னா! இங்கு எப்படி வந்தான்?" என்றும் வினவினார்.

விஜயன் சிறிதும் சிந்தனை வசப்படாமல், "சோழர் மரக்கலத்தில் வ்நதான். எனக்கு உதவுவதற்காக வந்ததாகச் சொல்கிறான்," என்று விளக்கம் கொடுத்தான்.

பிக்குவின் முகத்தில் கவலை விரிந்தது "மன்னவா! அவன் சொல்வதை நீங்கள் நம்புகிறீர்களா?" என்று கேட்டான்.

"நம்புகிறோமோ இல்லையோ, அவன் நம்மிடம் வந்து விட்டான்," என்று விஜயன் கூறினான்.

"ஒரு வேளை சோழர்களுக்காக வேவு பார்க்க வந்திருந்தால்?"

"அதன் பயனை அனுபவிப்பான். ரவிதேவனும் காலனும் அவனை இரண்டாகக் கிழித்துப் போடுவார்கள்," என்று திட்டமாகச் சொன்னான் விஜயன்:- "ஆமாம் பிக்கு! நீங்கள் எப்படி இந்தப் புத்த விஹாரத்துக்குள் வந்தீர்கள்? இங்கு வேறு வழியே இல்லை என்றல்லவா நான் நினைத்தேன்," என்று கூறினான்.

"மன்னவா! இந்த நாட்டின் எல்லா மூலைகளிலும் புத்த விஹாரங்கள் இருக்கின்றன. எல்லாவற்றிலும் சூட்சம வழிகள் உண்டு. இந்த விஹாரத்தில் பின் வாயில் ஒன்றும் இருக்கிறது. வாருங்கள் காட்டுகிறேன்," என்று கூறி இரண்டாவது முறை சிறு பிரகாரத்தில் நுழைந்தார்.

zeevaa

விஜயனும் சுடர்விழியும் அவரைத் தொடர்ந்தார்கள். பிரகாரத்தின் பாதிக்கும் மேல் வந்ததும் கற்பாறை மீது தொற்றி விரிந்த ஒரு மரத்தைக் காட்டி, ''இதை அசைத்தால் இதிலுள்ள மலர்கள் புத்தர்பிரான் தலைமீது உதிரும். இங்கு வருபவர்கள் எல்லோரும் இந்த மரத்தை அசைத்துப் புத்தர் பிரானுக்கு மலர் தூவுகிறார்கள். புத்தர் பிரான் சிலையின் மண்டபத்துக்கு மேல் மூடி கிடையாது,'' என்று கூறிவிட்டு மேலே நடந்தார் பிக்கு. பிரகாரம் திரும்பும் இடம் வந்ததும் கல்சுவரில் இருந்த இரு தூண்களைக் காட்டி, ''இதோ பார்,'' என்று ஒரு தூணை நகர்த்த, வழியொன்று தெரிந்தது. அதற்குப் பின்னால் ஓர் அடர்ந்த காடும், காட்டுக்கு நடுவில் ஓர் ஒற்றையடிப் பாதையும் தெரிந்தன. ''இந்த விஹாரத்துக்கு வரும் ரகசிய வழி இது. புத்தத் துறவிகளுக்கு மட்டும் இது தெரியும்,'' என்றார்.

''ஆமாம், மகாகிராமத்திலிருந்து நீங்கள் எதற்காக இங்கு வந்தீர்கள்?'' என்று விஜயன் வினவினான்.

''உங்களைச் சந்திக்கத்தான்,'' என்றார் பிக்கு.

''நான் இங்கு வருவேனென்று உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று விஜயன் கேட்டான்.

''சிங்கள ராஜ பரம்பரை எதைச் செய்வதாயிருந்தாலும் ஸ்ரீ பாதத்தின் அனுக்கிரகத்தைப் பெறாமல் செய்ய மாட்டார் களென்பது உலகுக்குத் தெரியும். எனக்கு மட்டும் தெரியாதா? ஆகவே, இங்கு கட்டாயம் வருவீர்களென்று தெரியும். ஸமந்த கூடத்திலிருந்து திரும்பி வருகிறவர்கள் தங்கி இருக்கும் ஒரே இடம் இந்த விஹாரந்தான்'' என்று விளக்கிச் சொன்னார்.

''இந்தப் பாழடைந்த விஹாரத்திலா எல்லோரும் தங்குகிறார்கள்?'' என்று கேட்டான் விஜயன்.

''எல்லோரும் தங்கமாட்டார்கள். விஷயம் தெரிந்தவர்கள் இங்குதான் வருவார்கள். இது உண்மையில் பாழடைந்த

zeevaa

மண்டபமல்ல. காலவெள்ளத்தில் சில கற்கள் விழுந்திருக்கின்றன. அவ்வளவுதான். இதன் அஸ்திவாரம் மிகப் பலமுள்ளது'' என்ற பிக்கு ''நீங்கள் நிச்சயம் இங்கு வருவீர்களென்று தெரிந்துதான் நான் மூன்று நாட்களாக இங்கு காத்திருக்கிறேன்'' என்றார்.

''அப்படியானால் மண்டபத் தூண் விளக்குகள்...'' என்றான் விஜயன்.

''என்னால் எண்ணெய் போடப்பட்டவை''

''உள்ளே உள்ள வெண்கல அகல்விளக்குகள்...''

''இருக்கின்றன. அவற்றிலும் எண்ணெய் நிரப்பி வைத்தேன். நீங்கள் வந்தால் ஏற்றி உங்களுக்குத் தரிசனம் செய்து வைக்க. ஆனால் அந்தப் பணியைத் தங்கள் சகோதரி...'' என்று துவங்கினார் பிக்கு.

''சே! சே! அவள் சகோதரியல்ல எனக்கு'' என்று துரிதமாக பிக்குவைத் திருத்தினான் விஜயன்.

''மனைவியுமல்ல, சகோதரியுமல்ல. ஏதாவதொரு தொடர்பு வேண்டுமல்லவா?'' என்று கேட்டார் பிக்கு.

''மனைவியாகப் போகிறவள்'' என்றான் விஜயன்.

''எப்பொழுது?'' -பிக்கு கேட்டார்.

''அதுதான் தெரியவில்லை'' என்றான் விஜயன்.

''எனக்குத் தெரிந்துவிட்டது'' என்றார் பிக்கு.

''என் திருமணத்தைப்பற்றி எனக்குத் தெரியாதது உமக்குத் தெரிந்துவிட்டதா?''

''ஆம் மன்னவா! இந்தத் தகாபாவுக்கு வந்து புத்த பிரானைத் தரிசிப்பவர்கள் தக்க வயதுள்ளவர்களாயிருந்தால் அவர்கள் திருமணம் இங்கேயே நடைபெற வேண்டும் என்பது விதி. இந்த

zeevaa

விஹாரத்தின் விசேஷங்களில் அது ஒன்று'' என்ற பிக்குவை வியப்புடன் நோக்கினான் விஜயன். அவன் முகத்தில் விரிந்த வியப்பைக் காணவே செய்த பிக்கு ''இந்தப் பெண்ணை இன்று இங்கு மணந்தால் சிங்களத்தின் சக்கரவர்த்தியாக அதிக நாள் பிடிக்காது. பீடத்தில் எழுதப்பட்டிருந்த வரிகளை நீங்கள் படித்திருப்பீர்களே?'' என்றார் பிக்கு.

''பார்த்தேன். அதில் சதிபதிகளாக வேண்டிய அவசியத்தைப் பற்றி ஏதும் எழுதவில்லையே?'' என்றான் விஜயன்.

''அதுதான் தாதுவின் ரகசியம்'' என்ற பிக்கு, ''அந்த வரிகளிலுள்ள எழுத்துக்களுக்குப் பின்னால் உள்ள அறையில் பெரிய தங்கக் கிண்ணம் இருக்கிறது. அதில் இருக்கிறது தாது'' என்று விளக்கினார்.

''அது என்ன தாது? புத்தரின் கடைவாய்ப் பல்லா? அல்லது கழுத்தின் பக்கவாட்டு எலும்பா'' என்று வினவினான் விஜயன்.

''என்னை இப்பொழுது கேட்காதீர்கள் மகாராஜா. சமயம் வரும் போது சொல்கிறேன். இந்தத் தாது அனுராதபுரத்தில் பிரதிஷ்டை செய்யப்படவேண்டும். அதை நீங்கள் தான் செய்யப் போகிறீர்கள். அதனால் பெரிய பலன்கள் உங்களுக்கு உண்டாகும்'' என்ற பிக்கு. ''மன்னவா! அவளைக் கையைப் பிடித்து அழைத்து வாருங்கள்'' என்றார்.

''எதற்கு?'' -விஜயன் வினவினான் சந்தேகத்துடன்.

''உமக்கும் அந்தப் பெண்ணுக்கும் இப்பொழுதே திருமணம்'' என்றார் பிக்கு.

''அதற்கு அவசரமில்லை'' என்றான் விஜயன்.

''அதை நீங்கள் தீர்மானிக்க முடியாது.''

''வேறு யார் தீர்மானிக்க முடியும்?''

zeevaa

"இந்தச் சந்திதானம். இங்கு சரியான உறவு முறையற்றவர்கள் வந்து வணங்க முடியாது. அப்படி வணங்கியவர்கள் பேராபத்துக் குள்ளாவார்கள். ஆகையால் நீங்கள் உடனடியாக இவளை மணந்து உறவுமுறையைச் சீர்செய்து கொள்வது உங்களுக்கும் நல்லது, நாட்டுக்கும் அவசியம்" என்று அறிவித்தார் பிக்கு.

விஜயன் சிந்தித்துப் பார்த்தான், அவன் மனத்தைப் பெரும் குழப்பம் சூழ்ந்துகொண்டது. அதைக் கவனித்த பிக்கு, "குழம்பாதே மன்னவா. ஆண்டவன் சந்நிதியில் பாவ உறவுகள் கூடாது" என்றார்.

"நமது மதத்தில் ஆண்டவன் ஏது?" என்று கேட்டான் விஜயன்.

"புத்தபிரான்தான் நமக்கு ஆண்டவன்" என்று அமைதியான குரலில் அறிவித்தார் பிக்கு. "அவள் கையைப் பிடித்துக் கொள்ளுங்கள். இப்படி வாருங்கள்" என்று உத்தரவும் இட்டார்.



zeevaa

# 17. பெண்களின் வெட்கமும் விளக்கமும்

புத்தர்பிரான் சந்நிதியில் பாவ உறவுகள் கூடாதென்று அறிவித்துச் சுடர்விழியின் கையைப்பிடித்துக் கொள்ளவும் விஜயனுக்கு உத்தரவிட்ட பிக்கு 'தாது' இருந்த இடத்துக்கு முன்பாக முதலில் தாம் மண்டியிட்டு உட்கார்ந்தார். தலை தரையில் படும்படியாக மும்முறை வணங்கவும் செய்து, தமது பக்கத்திலேயே மண்டியிட்டு உட்காரும்படி விஜயனுக்கும் சுடர்விழிக்கும் சைகை காட்டினார். அவர் கட்டளைப்படி அவர்கள் உட்கார்ந்ததும், "புத்தம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி" என்ற பௌத்த மதத்தின் த்வயத்தை (இரட்டை மந்திரத்தை) அவர்களிருவரையும் சேர்ந்து சொல்லச் சொன்னார். அப்படி அவர்கள் சொல்லி முடித்ததும் "புத்த பகவானே! இங்கு வசதியில்லாததால் பூர்த்தியான சடங்குகளை நான் செய்து முடிக்கவில்லை இவர்களுக்கு. இருப்பினும் உன் அனுக்கிரகத்தால் இவர்கள் இப்பொழுது சதிபதிகளாகிறார்கள். இதற்கு உன் சாட்சியே சர்வசாட்சி" என்று மிகுந்த நிதானமும் உணர்ச்சியும் கலந்த குரலில் கூறினார். அதே சமயத்தில் சிறு காற்று ஒன்றடிக்க மேலே இருந்த செடி அசைந்து புத்தர்பிரான் தலைமீது மலர்களைத் தூவியது.

அதைக் கண்டு பிக்கு, "விஜயா! உனக்கு அதிர்ஷ்டம் இன்று முதல் துவங்கிவிட்டது. சகுனம் முதல் தரமாயிருக்கிறது" என்று உணர்ச்சி பொங்கக் கூறினார் பிக்கு.

"நமக்குச் சகுனம் உண்டா பிக்கு? அது இந்துக்களின் நம்பிக்கையல்லவா?" என்று வினவினான் விஜயன்.

zeevaa



zeevaa

''சகுனம் என்பது இயற்கை காட்டும் அறிகுறி. அதை எல்லோரும் ஏற்கலாம். அது தனிப்பட்ட மதத்துக்கு ஏற்பட்டதல்ல'' என்றார் பிக்கு.

சமயத்துக்குத் தகுந்தபடி சாஸ்திரத்தையும் நடைமுறைகளையும் வகுக்கும்சக்தி பிக்குவுக்கு உண்டென்பதை உணர்ந்திருந்த விஜயன், ''இந்த எங்கள் திருமணமும் சாஸ்திர சம்மதந்தானா? இதை தூபாராமாவில் உள்ள மற்ற புத்தத் துறவிகள் ஒப்புக்கொள்வார்களா?'' என்று வினவினான்.

பிக்கு சில விநாடிகள் கூடச் சிந்திக்கவில்லை. 'சாஸ்திரம் மனிதனால் இயற்றப்பட்டது, சமுதாய ஒழுங்குக்காக. புத்தபிரான் அவற்றுக்கெல்லாம் புறம்பானவர். அவர் சந்நிதானத்தில் நடக்கும் எதுவும் சத்தியம். அதை யாரும் தட்டிக் கேட்க முடியாது'' என்று திட்டமாக அறிவித்தார். அத்துடன் அந்த விஷயத்தை முடித்துவிட்டு லௌகீக விஷயங்களுக்கு வந்த பிக்கு, ''மகாராஜா! நீங்கள் அடுத்து எப்பொழுது உங்கள் சுதந்திரப் போரைத் துவங்கப் போகிறீர்கள்?'' என்று வினவினார்.

''புத்தர்பிரான் கருணை காட்டும்பொழுது துவக்குவேன்'' என்றான் விஜயன்.

பிக்கு விஜயனைக் கூர்ந்து சினம் ததும்பிய விழிகளால் நோக்கி, ''போதி சத்வர் பெயரைப் போர் விஷயங்களில் இழுக்காதீர்கள் மகாராஜா. போரை ஒழிக்க, உயிர்வாதையைத் தடுக்க, அஹிம்சையை நிலைநிறுத்த, புத்தர்பிரான் தோன்றினார்'' என்று உஷ்ணமான சொற்களில் எச்சரித்தார்.

விஜயன் மெல்ல இதழ்களில் முறுவலை படரவிட்டு, ''பிக்கு! நீர் சொல்வது நடைமுறைக்கு விரோதமாக இருக்கிறதே?'' என்று கேட்டான்.

''நடைமுறையா மகாராஜா?'' -பிக்கு குரலில் வியப்பைக் காட்டினார்.

zeevaa

''ஆம், பிக்கு! பெரும் போர்களும் கொலைகளும் அழிவும் பௌத்தர்கள் நாடுகளில்தானே அதிகமாக நடைபெறுகின்றன?'' என்று கேட்டான் விஜயன்.

''காரணம் பௌத்தர்களல்ல. சண்டைகள் சுமத்தப் படும்போது தற்காப்புக்கு நாம் போராடுகிறோம். அது தவறல்ல.''

''அதற்காகக் கொல்லலாமா?''

''தாராளமாகக் கொல்லலாம். தன்னைக் கொல்லவரும் பசுவையும் கொல்லலாம் என்பது சாஸ்திரம்.''

''அது இந்து சாஸ்திரமல்லவா?''

''நல்லதை எதிலிருந்தும் எடுத்துக் கொள்ளலாம்.''

''பசுவைக் கொல்வது நல்லதா?''

''தற்காப்புக்கு நல்லது.''

இந்த விவாதத்தை மேற்கொண்டு தொடர இஷ்டப்படாத பிக்கு, ''நமக்குள் தர்க்கம் எதற்கு மகாராஜா? உங்கள் நாட்டைத் தமிழர்கள் பிடித்துக்கொண்டிக்கிறார்கள். உங்கள் விஹாரங்களை அழித்துத் தங்கள் கோவில்களைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அநீதிக்குப் பரிகாரம் காண வேண்டியது உங்கள் கடமை'' என்று உணர்ச்சிவசப்பட்டுப் பேசினார்.

விஜயன் சில விநாடிகள் சிந்தனையில் இறங்கினான். பிறகு கேட்டான்: ''பிக்கு! இந்த நாடு நமக்கு மட்டுந்தான் சொந்தமா?'' என்று.

பிக்குவின் புருவங்கள் வியப்பாலும் சினத்தாலும் மேல் நோக்கி உயர்ந்தன. ''அதிலென்ன சந்தேகம்?'' என்று வினவினார்.

''எங்கள் முதாதை, என் பெயர் கொண்டவர், வங்காளத்தி லிருந்து பல பேர்களுடன் இங்கு வந்து குடியேறினார் என்று நமது சரித்திரம் சொல்கிறது. தமிழர் நமக்கு முன்பாக இங்கு வந்ததாக

zeevaa

உரிமை கொண்டாடுகிறார்கள். இந்த இரு இனங்களுமே பாரத நாட்டிலிருந்து வந்திருக்கின்றன. அப்படியிருக்க நாம் மட்டும் எப்படி இலங்கைக்குச் சொந்தம் கொண்டாட முடியும்?'' என்று வினவினான்.

''வலியவனுக்குத்தான் எந்த நாடும் சொந்தம்'' என்றார் பிக்கு சினத்தைக் காட்டி.

''எளியாரை வலியார் அடித்தால் வலியாரைத் தெய்வம் அடிக்காதா?''

''அடிக்காது. முக்கியமாக நம்மை அடிக்காது. நாம் பௌத்தர்கள். நமக்குப் புத்தர்பிரானைத் தவிர தெய்வம் கிடையாது. அவர் அஹிம்சாவாதி'' என்று புதுத் தத்துவத்தை விளக்கிய பிக்கு, ''மகாராஜா! உங்களுக்குப் பைத்தியம் ஏதுமில்லையே?'' என்று வினவவும் செய்தார்.

''இன்னும் பிடிக்கவில்லை பிக்கு. இந்தப் போரும் அழிவும் எனக்குப்பிடிக்கவில்லை. ஆனால் மன்னன் என்ற முறையில் கடமை இருக்கிறது. அதுமட்டுமல்ல, சோழரின் கொடுமையும் அதிகமாயிருக்கிறது. அவற்றிலிருந்து நான் எனது குடிமக்களைக் காப்பாற்ற வேண்டும். அதற்காகப் போரிட வேண்டும். மேலும் இங்கு சோழர் படையெடுப்பு நேரிடாத முறையில் இந்த நாட்டை வலுப்படுத்த வேண்டும். அதற்கு நாட்டை இணைக்க வேண்டும். வெகு சீக்கிரம் இந்த நாடு ஒன்றாக இணைந்து அதன் சக்கரவர்த்தியாக நான் மகுடம் சூட முடிவு செய்திருக்கிறேன். இங்குள்ள தாதுவின் ஆணையாக இதை நிறைவேற்றாமல் விடமாட்டேன்'' என்றான் விஜயன். அவன் குரலில் உணர்ச்சி ஒங்கியிருப்பதையும் கண்களில் வெற்றி ஒளிசுடர்விட்டதையும் கவனித்த பிக்கு, மகிழ்ச்சியின் எல்லையை எய்தினார்.

''நல்லது மகாராஜா! நீங்கள் இன்றிரவு இங்கேயே தங்குங்கள். நான் வெளியே போய் மூர்சமதையும் சூ-சின்னையும் சந்திக்கிறேன்'' என்றார்.

zeevaa

விஜயன் முகத்தில் குழப்பத்தின் சாயை தெரிந்தது. ''நாங்கள், சன்னிதி முன்பு தங்குவது உசிதமா?'' என்று வினவினான்.

''இப்பொழுது நீங்கள் சதிபதிகள். உங்களுக்கு இனி பாவ உறவு கிடையாது'' என்று கூறிவிட்டுச் சற்று எட்டத் தெரிந்த சிறு மண்டபத்துக்கு அழைத்துச் சென்று பழைய கல்தூணை அசைக்க, சன்னிதி மூடிக்கொள்ள, தூண்களிரண்டு மட்டும் கண்ணுக்குத் தெரிந்தன. ''நான் வருகிறேன்'' என்று சொல்லி வெளியே நடந்தார் பிக்கு.

இப்படித் தனிமையில் விடப்பட்ட இருவரும் ஒருவரை யொருவர் நோக்கிக் கொண்டு மௌனமாகவே நின்றனர். மௌனத்தைச் சுடர்விழியே கலைத்து, ''இந்தப் பிக்கு யார்?'' என்று வினவினாள்.

''இந்த நாட்டின் பெரிய படைத்தலைவர்களில் ஒருவரா யிருந்தவர், மரக்கலப் போரில் வல்லவர்'' என்று விஜயன் சொன்னான்.

''இதெல்லாம் துறவியின் குணங்களா?'' என்று வினவினாள்.

''இல்லை. இருந்தாலும் பழைய குணம் போகாது. இப்பொழுதும் போரை நினைத்தால் அவருக்கு வரும் உற்சாகம் சொல்லி முடியாது'' என்ற விஜயன் மண்டபத்துக்குள் நடந்தான், சுடர்விழி பின்தொடர.

அங்கிருந்த ஒரு தூணில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான். சுடர்விழி மட்டும் உட்காராமல் அவனெதிரில் நின்றுகொண்டே யிருந்தாள். சிந்தனையில் நீண்ட நேரம் ஆழ்ந்திருந்த விஜயன், ''அதோ தூணில் இருக்கும் அகல் விளக்கை ஏற்றிவிட்டு வா'' என்று கூறினான்.

சுடர்விழியின் விழிகளில் வெட்கச் சாயை படர்ந்தது. ''எதற்கு விளக்கு?'' என்று கேட்டாள் சுடர்விழி, வெட்கம் குரலிலும் ஒலிக்க.

zeevaa

விஜயன் எண்ணமெல்லாம் எங்கோ இருந்ததால் அவன் சுடர்விழியை ஏறிட்டுப் பார்க்காமல் தலையைக் குனிந்த வண்ணம், "இங்கு இருட்டு அதிகமாயிருக்கிறது" என்றான்.

அவள் அவன் முன்பு மண்டியிட்டு மரவுரி அகலா வண்ணம் கால்களை இறுக்கிக்கொண்டு உட்கார்ந்து, "இப்பொழுது வெளிச்சம் எதற்கு?" என்று வினவினாள்.

என்ன சொல்கிறோமென்பதை அறியாமலே விஜயன் சொன்னான்: "முக்கிய காரியம், எதைச் செய்தாலும் வெளிச்சத்தில தான் செய்வேன்" என்று.

"சீ உங்களுக்கு அடியோடு வெட்கமில்லை" என்று கடிந்து கொண்டாள் சுடர்விழி.

ஏதும் புரியாமல் கேட்டான் விஜயன்: "எதற்கு வெட்கம்?" என்று.

அவள் பதில் சொல்லாததால் தானே எழுந்து சென்று சுக்கான் கற்களை எடுத்து அகல் விளக்கைக் கொளுத்தினான். பிறகு அங்கு கீழே கிடந்த காரை ஒன்றை எடுத்துத் தரையில் கோடுகளைக் கிழிக்கலானான். பிறகு திருப்திக்கு அறிகுறியாகத் தலையை அசைத்து, "சுடர்விழி! இதைப் பார்" என்று கூறித் தலையை நிமிர்த்தினான்.

எதிரே சுடர்விழி இல்லை. சுற்றுமுற்றும் நோக்கினான். அவளை மண்டபத்தில் காணாததால் கவலையுடன் தூண்களில் தேடிக் கொண்டே சென்றான்.

தூர இருந்த ஒரு தூணின் மறைவில் நின்ற சுடர்விழி தனது மரவுரி ஆடையை நீக்கித் திரும்பி அணிந்து கொண்டிருந்தாள். ஆனால் அவள் முக்கால் உடம்பு மண்டப விளக்கில் பளிச்சிட்டது. மெருகு ஏறிய அவள் உடலையும், முக்கியமாக செழித்து நின்ற பகுதிகளையும் கவனித்த விஜயன் மனம் மெள்ள மெள்ளச்

zeevaa

சுயநிலை தளரலாயிற்று. அகல் விளக்கில் துலங்கிய அந்த அற்புத அழகைக் கண்களால் மட்டுமல்ல, உணர்ச்சியாலும் பருகியதால் அவன் தாதுக்கள் துடித்து வேகமாக அவளிருந்த இடத்தை அடைந்த விஜயன், அவளை அணைத்து இழுத்துக்கொண்டு அகலிருந்த இடத்தை அணுகினான். அவள் வாயால் விளக்கை ஊதிவிட்டாள்.

''ஏன் விளக்கை ஊதிவிட்டாய் சுடர்விழி'' என்று அவளை இறுக அணைத்துக் கேட்டான்.

''விளக்கு எனக்கு உதவாது'' என்று அவன் காதுக்கருகில் மிக மெதுவாகச் சொன்னாள்.

''ஏன்?''

''இன்னும் நான் வெட்கத்தைத் துறக்கவில்லை.''

'எந்தப் பெண்ணும் யாராவது ஒருவனிடம் வெட்கத்தைத் துறக்கத்தானே வேண்டும்?' என்று உள்ளூரச் சொல்லிக்கொண்ட விஜயன், ''சுடர்விழி! நான் விளக்கேற்றச் சொன்னதற்குக் காரணம் எனது போர் முறையை நிர்ணயம் செய்துகொள்ள. அதற்காகக் கோடுகளை இழுத்துத் திட்டம் தீட்டியிருக்கிறேன். அதை நீ பார்க்க வேண்டாமா?'' என்று வினவினான்.

அவள் நகைத்தாள். 'விளக்கை ஏற்ற உங்களுக்கு ஒரு சாக்கு வேண்டும்' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டாள். நகைப்பின் ஊடே. ''அப்படியானால் விளக்கை ஏற்றுங்கள், திட்டத்தைப் பார்க்கிறேன்'' என்றாள்.

விஜயன் உணர்ச்சிகள் எல்லையை மீறியதால் ''பிறகு பார்க்கலாம்'' என்றான். ''எதற்குப் பிறகு?'' என்று அவள் உள்ளூர நகைத்தாள். விஜயன் அவள் இடை மரவுரியில் கையை வைத்தான்.

zeevaa

# 18. கருங்கல் மண்டபம்! காவிய நுகர்ச்சி!

பிக்கு, தனக்கும் சுடர்விழிக்கும் திருமணத்தைப் புத்தர்பிரான் முன்பு நடத்திவிட்டு ரகசியக் கல்மண்டபமொன்றில் தங்களைத் தனியாக விட்டு விட்டு வெளியே சென்றதும், சுடர்விழியுடன் இன்பம் துய்ப்பதற்குப் பதிலாகக் காரைக் கட்டியொன்றை எடுத்துத் தரையில் கோடுகளை இழுத்துத் தனது பிற்காலப் போர் முறைகளை விஜயன் வகுத்ததைக் கண்ட சுடர்விழி, 'இவர் உண்மையில் புருஷன்தானா?' என்று எரிச்சல் கொண்டு அந்த மண்டபத்தின் மற்றொரு தூணின் மறைவுக்குச் சென்று தனது மரவுரியை அவிழ்த்துத் திரும்பவும் சரியாக அணிய முற்பட்டாள். தனது போர் முறையை வகுக்கும் கோடுகளைச் சுடர்விழி பின்னாலிருந்து பார்க்கிறாளென்று நினைத்த விஜயன் அவளைக் காணாது போகவே அவள் எங்கிருக்கிறாளென்பதை அறிய உட்கார்ந்த நிலையி லிருந்து எழுந்து சுற்றுமுற்றும் நோக்கினான். சற்றுத் தூரத்திலிருந்த தூண் மறைவில் அவள் மரவுரியை அவிழ்த்துத் திரும்ப அணிய முற்பட்டதையும், அந்தச் சமயத்தில் மறைக்கப்படாத அவள் பூவுடல் அகல் விளக்கில் பொன்னைப் போல் பளபளத்ததையும் கண்டு உணர்ச்சியின் எல்லையை எய்தினான்.

மரவுரியை முழுதும் புனையாததால் அவள் உடலின் மேற்பகுதி திறந்தே கிடந்ததால் கெட்டிப்பட்டு நிமிர்ந்த மார்பகமும் செவ்விய முகடுகளும் தன்னைப் பார்த்துக் கோபத்தால் முறைப்பதைக் கண்டான் விஜயன். இடுப்பில் அப்பொழுதே புனைந்த மரவுரிப் பகுதியும் சரியாக முடி போடாததால் அரைகுறையாகத் தெரிந்த

zeevaa



zeevaa

உருண்ட பருத்த வழவழத்த தொடைகளும் அகல் விளக்கில் பொன்னால் செய்யப்பட்ட வாழைத் தண்டுகள் போல் பிரகாசிக்கவே, விஜயன் உன்மத்தம் தலைக்கு ஏறிக் கொண்டிருந்தது. தெரிந்த சிற்றிடையும் தெரியாத உள்ளழகும் பற்பல ஊக்ங்களுக்கு இடங்கொடுக்கவே அவன் கண்கள் அவள் மர்ம இடங்களை ஊடுருவ முற்பட்டன.

அவன் பார்வை சென்ற இடங்களையும், அவன் முகத்தில் ஏறிக் கொண்டிருந்த வெறியையும் கவனிக்கவே செய்த சுடர்விழியின் முகம் வெட்கத்தாலும் வேட்கையாலும் குங்குமமெனச் சிவந்தது. அந்தச் சிவப்பு அவள் மார்பகத்திலும் பரவி விடவே அவள் இரட்டை மொட்டுகள் உணர்ச்சி மிகுதியால் இலேசாகத் துடித்தன. ஏற்கனவே கெட்டிப்பட்டிருந்த முகடுகள் அதிகமாக கெட்டிப் படவே அவள் பெரு வேதனைக்குள்ளாகித் தவிக்கத் தொடங்கிய சமயத்தில் விஜயன் அவளை நோக்கி வேகமாக வந்து அவளை இறுக அணைத்ததன்றி, ஏற்கனவே உட்கார்ந்து காரைக் கோடுகளை இழுத்த இடத்திற்கு இழுத்தும் வந்தான். அப்பொழுதுதான் சுடர்விழி அவன் ஏற்றியிருந்த விளக்கை ஊதி அணைத்தாள்.

அதனால் ஏற்பட்ட இருட்டு அவன் துணிவை அதிகப்படுத்தவே முன்னைவிட அதிகமாக அவள் பூவுடலைத் தனது கைகளால் இறுகவே அணைத்ததால் அவள் மார்பு அவன் மார்பில் சற்றே அழுந்தியது. "என்ன இது?" என்று சுடர்விழி அவன் காதுக்கருகில் வினவினாள்.

அவனும் மெதுவாகச் சொன்னான், "எல்லாம் உன்னால் வந்த வினை," என்று.

"என்னால் வந்த வினையா?" என்று அவள் அவனை அதிகமாக நெருங்கவே அவள் அழகிய இடையும், இடைக்குக் கீழிருந்த பகுதிகளும் அவனுடன் அதிகமாக இழைந்தன.

அவன் கைகள் அவள் உடல் வலிக்கும்படியாக இறுக்கின. "ஆம். உன்னால் வந்த வினைதான். உன்னை யார் விளக்கை

zeevaa

அணைக்கச் சொன்னது?'' என்று வினவி அவள் இடையிலிருந்த அவள் மரவுரியின் முடிப்பில் விரல்களை வைத்து அதை அவிழ்க்க முற்பட்டான்.

''உம். சும்மா இருங்கள். விளக்கை நான் அணைத்ததற்குக் காரணம் உண்டு.'' என்றாள் சுடர்விழி.

''என்ன காரணமோ?''

''வெட்கம்.''

''வெட்கத்தைத் துறக்கும் சமயம் இது.''

''நல்ல சமயம்.''

''என் போர்த் திட்டத்தைக் காட்ட விளக்கை ஏற்றினேன். அதை நீ அணைத்துவிட்டாய்.''

''சரி, ஏற்றுங்கள் விளக்கை. திட்டத்தைப் பார்க்கிறேன்.''

''இப்பொழுது வேறு திட்டம் துவங்கிவிட்டது. அந்தத் திட்டத்தைப் பிறகு பார்க்கலாம்.''

''எதற்குப் பிறகாம்?'' வெட்கத்துடன் நகைத்தாள் சுடர்விழி.

''இதற்குப் பிறகு.'' என்று இடை முடிச்சை அவிழ்க்கத் தொடங்கினான் விஜயன்.

''உம். இது இருக்கட்டும்.'' என்றாள் சுடர்விழி.

''இருக்கக் கூடாது சுடர்விழி. காவியம் இந்த முடிச்சை அவிழ்க்கச் சொல்கிறது.'' என்ற விஜயன் அந்த முடிச்சை அவிழ்க்கப் பிரயத்தனப்பட்டும் முடியவில்லை, முடிச்சு பலமாக இருந்த காரணத்தால்.

அவனுடைய முயற்சியாலும் இறுக, அவன் அவள் மார்பை இழுத்து அணைத்துக் கொண்டிருந்ததாலும் அவள் சொர்க்க போகத்திலிருந்தாள், ''ஏதோ காவியம் என்று சொன்னீர்களே, அது

zeevaa

என்ன?'' என்று தனது உணர்ச்சிகளைத் தணித்துக் கொள்ளக் கேட்டாள்

''பெண்ணே கேள்! ரகுவம்சத்தில் அக்னிவர்ணன் என்றொரு அரசன் இருந்தான். அவன் எந்தப் பெண்ணையும் கெடுக்காமல் விடுவதில்லை. எல்லோர் சேலைகளின் முடிச்சை அவிழ்ப்பான் என்று காளிதாஸ மகா கவியே எழுதியிருக்கிறான்,'' என்று விளக்கிய விஜயன், ''அடி சுடர்விழி! நீ எதற்காக இத்தனை இறுக்க முடிச்சைப் போட்டிருக்கிறாய்?'' என்றும் கேட்டான்.

பதிலுக்கு அவள் தனது கழுத்தை அவன் தோள்மீது வைத்துக் கொண்டு நகைத்தாள். ''காவியம் நன்றாகப் படித்திருக்கிறீர்கள். அதுவும் உங்களுக்குத் தேவையான இடங்களைப் படித்திருக்கிறீர் கள்,'' என்று நகைப்பின் ஊடே கூறினாள். கூறியதன்றித் தனது பூங்கன்னத்தை அவன் கன்னத்தோடு வைத்து இழைத்தாள்.

அவன், அவள் உடலை மேலும் தனது கைகளால் இறுக்கினான். அந்த இறுக்கலால் அவள் உடல் வலித்தாலும் அந்த வேதனையும் தேவையாயிருந்தது அவளுக்கு. இருப்பினும் வேண்டுமென்றே சொன்னாள், ''அதிகமாக இறுக்காதீர்கள் வலிக்கிறது,'' என்று.

விஜயன் கழுத்திலிருந்த அவளது தலையைத் தன்னை நோக்கி இழுத்து, ''அடி பைத்தியமே! இதுதான் முறை,'' என்றான்.

''நல்ல முறை!'' என்று போலியாகக் கடிந்து கொண்டாள் சுடர்விழி.

''காவிய முறை,'' என்றான் விஜயன்.

''இதற்கும் காவியமா?''

''ஆம், கிராதார்ஜுனீயத்தில் மகாகவி பாரதி சொல்கிறான்.''

''என்ன சொல்கிறான்?''

zeevaa

''பாசுபதம் பெறத் தவம் செய்யச் செல்லும்முன்பு அர்ஜுனன் திரௌபதியை மார்புற இறுகத் தழுவினானாம். அப்பொழுது அவள் மார்பகம் அவன் அழுத்தலால் முறைத்த நிலையிலிருந்து பட்டையாகப் படர்ந்து விட்டதாம். அவளுக்கு அது பேரின்பமாக இருந்ததாம்'' என்று கூறிய விஜயன், ''இப்படித்தான் அவளை அர்ஜுனன் அணைத்திருக்க வேண்டும்'' என்று அவளை இரும்புத் தழுவலாகத் தழுவினான்.

அந்தத் தழுவலால் அவள் மார்பு வலிக்கவே செய்தது. அந்த வெறியில் இன்பம் இருந்ததைப் புரிந்துகொண்ட சுடர்விழி, 'காவியங்கள் பொய் சொல்வதில்லை' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டாள்.

அதற்குமேல் விஜயன் பேசவில்லை. அவளை அணைப்பதை விட்டுச் சற்று எட்ட நிறுத்தி அவள் அங்கலாவண்யங்களைக் கவனிக்கலானான். இடைவரையில் திறந்திருந்த அவள் மார்பு விம்மிக் கொண்டிருந்தது. கண்கள் அவன் கண்களோடு ஒருமுறை கலந்து கவ்வித் தாழ்ந்தன. பிறகு அவள் கைகள் அவன் அங்கியைத் தாமாகவே சுழற்றி எட்ட எறிந்தன. அவன் உறுதியான மார்பைக் கவனித்த சுடர்விழி அந்த மார்பு இத்தனை நேரம் தன் மார்புடன் இணைந்து கிடந்ததை எண்ணி அதற்கு அங்கி தடையாயிருந்ததை நினைத்துப் பார்த்தாள். 'இப்பொழுது இருவரும் சரியாகி விட்டோம். இயற்கை உடல்கள் இனிப் பொருந்தும்' என்று நினைத்தாள். அவன் மீண்டும் தூணிலிருந்த அகல் விளக்கை ஏற்றினான். ''சுடர்விழி! இப்பொழுது பார் எனது திட்டத்தை'' என்று அரை நிர்வாணமாயிருந்த அவளைத் தரையில் உட்கார வைத்துக் காரைக் கோடுகளின் பக்கத்தில் தானும் அமர்ந்து போர் முறைகளை விளக்கலானான். ''இதோ பார், சுடர்விழி! இது தக்ஷிணபாதம். இது ருஹுணா, எனது மூதாதைகளின் அரச பீடம். இது வடபுலம். இது தமிழர் ஆக்ரமிப்பில் இருக்கிறது. நான் ருஹுணாவிலிருந்து தாக்குதலைத் தொடங்க மாட்டேன். தக்ஷிண பாதத்திலிருந்து தொடங்குவேன். இம்முறை தமிழர்கள் ஆதிக்கம் உடைக்கப்படும்.

zeevaa

இதோ இருக்கும் இரண்டு கோடுகளும் நமது படைகளின் இரு பிரிவுகள் செல்லும் வழிகள். மூன்றாவது கோடு நான் செல்லும் வழி. இந்த முப்புறத் தாக்குதலில் சோழர் வெற்றியடைய முடியாது'' என்று திட்டத்தை விளக்கினாலும் அவன் புத்தி அந்தத் திட்டத்திலோ போர் முறையிலோ முழுமையாக இல்லை யென்பதைச் சுடர்விழிபுரிந்து கொண்டாள்.

காரையால் வரைந்திருந்த ஒவ்வொரு கோட்டையும் அவன் காட்டும்போதும் முதுகை முழுதும் தடவிக் கொடுத்துக் கையை முதுகின் அடியிலிருந்து எழுச்சிவரை கொண்டு போனான், சிலசமயம் அந்த இடது கை அங்கேயே தேங்கி நின்றது. இன்னொரு கோட்டுக்கு அவன் வந்தபோதுவிலாப்பக்கமாகக் கையைச் செலுத்தி மார்பகத்தின் விளிம்பையும் இலேசாகப் பிடித்ததையும் அவள் கவனித்தாள். மற்றொரு முறை அவன் மீண்டும் இடை முடிச்சைத் தளர்த்த முயன்றதைக் கண்ட சுடர்விழி அதற்குத் தானே உதவினாள். அதைக்கவனித்த விஜயன், ''ஏன் சுடர்விழி, எனனால் அதை நீக்க முடியாதென்று நினைத்தாயா?'' என்று வினவினான். ''முடியவில்லை. நீங்கள் அக்னிவர்ணன் இல்லை. இதில் உங்களுக்கு அதிக பரிச்சயமிருப்பதாகத் தெரியவில்லை'' என்றாள் சுடர்விழி.

விஜயன் பேருக்கு போர்த் திட்டத்தை விளக்கினானே தவிர, அவன் புத்தி அணுவளவும் அதில் இல்லை. சுடர்விழியும் பேருக்கு அவன் திட்டத்தை காதில் வாங்கினாள். கோடுகளைக் கண்ணாலும் பார்த்தாள். ஆனால் அவள் காதோ, கண்ணோ வேலை செய்ய மறுத்தன. கடைசியில் அவள் துணிந்தே சொன்னாள்: ''எதற்கு இந்தப் பாசாங்கு?'' என்று.

''என்ன அப்படி பாசாங்கு செய்துவிட்டேன்?'' என்ற விஜயன், வினவிய வண்ணம் அவள் தொடையில் கையை வைத்தான்.

வழவழத்த திண்மையான அந்தப் பருவத் தண்டு அவன் எண்ணங்களைப் பெரிதும் உலுக்கவே, அவன் உடல் வேட்கையால்

zeevaa

துடித்தது. போதாக்குறைக்கு அவன் உணர்ச்சிகளைத் தூண்டச் சுடர்விழி சொன்னாள்: ''இங்கு கோடுகள் ஏதுமில்லை. போர்த் திட்டமும் கிடையாது'' என்று.

விஜயன் அவள் பருவ எழிலை, உருண்டு திரண்ட தொடையை உற்று நோக்கினான். விளக்கொளியில் அது மிகவும் பளபளத்தது. விளக்கின் சுடர்கூட அதில் பிரதிபலிப்பதாக அவனுக்குத் தோன்றியது. அவன் மெதுவாக, ''சுடர்விழி!'' என்று அழைத்தான்.

''என்ன?'' என்று அவள் குனிந்து கேட்டாள்.

அவள் மடியை நோக்கிக் குனிந்திருந்த அவன் கன்னத்தை அவள் மார்பு ஒன்று தடவியது.

''இந்த உன் பருத்த எழில் கண்ணாடிபோல் இருக்கிறது'' என்றான் அவள் தொடையைச் சுட்டிக்காட்டி.

''வீண் புகழ்ச்சி'' என்றாள் சுடர்விழி. அந்தப் புகழ்ச்சி அவளுக்குத் தேவையாயிருந்தும் அசட்டை காட்டுவது போல் பாசாங்கு செய்தாள்.

''இல்லை சுடர்விழி! இந்த மாதிரி எழிலை நான் இதுவரை பார்த்ததில்லை,''

''இப்பொழுது பார்த்து விட்டீர்கள்?''

''ஆம். என்முகம் கூட இதில் தெரிகிறது.''

''வேறு என்ன தெரிகிறதாம்?'' மிகுந்த வெட்கத்துடன் கேட்டாள் அவள்.

''தெரிய வேண்டியது தெரியவில்லை'' என்றான் அவன்.

''எதுவோ?'' என்று கேட்டாள் அவள், எதுவென்று தெரிந்திருந்தும்.

அவன் பதிலேதும் சொல்லவில்லை. சட்டென்று நிமிர்ந்து அவள் உடலைப் பற்றினான். இரு கைகளாலும் அவளைத் தூக்கித்

zeevaa

தனது மடியில் கிடத்திக்கொண்டான். ''இனி என்னைத் தடுக்கமுடியாது'' என்றும் மூச்சுவாங்கக் கூறினான். மடியிற் கிடந்த அந்த மலர் உடல் முழுவதையும் தடவினான். சில இடங்களை அழுந்தப் பிடித்தான். அவள் உணர்ச்சிப் பெருக்கால், ''உம்! என்று முனகினாள். பிறகு மடியில் இருந்து புரண்டு தரையில் கிடந்தாள். கல்மண்டபத்தரை கடினமாக இருந்தாலும் அதைச் சொர்க்கமாக நினைத்தாள். விஜயன் தரையில் கிடந்த அந்த மோகினியை ஒரு வினாடியே பார்த்தான். அவன், பார்த்தாலும் அதைப் பெருட்படுத்தவில்லை. கல்தரையில் கிடந்த அந்த காரிகையின் உடல் கணைகளின் தாக்குதலுக்கு இரையான சிங்கள இளவல் அவளை நோக்கிப் புரண்டு அணுகிக் கையால் அவளைத் தன்னை நோக்கி இழுத்தான். இரு உடல்கள் நெருங்கி இழைந்தன. மரவுரியின் இடை முடிச்சை அவளே அவிழ்த்தாள். இருந்த அந்த சிறு இடைஞ்சலும் நீங்கவே இன்பம் தொடர்ந்தது. சுடர்விழியின் அந்தச் சொர்க்கானுபவத்தில் திரிலோக சுந்தரியைக் கூட மறந்தான் சிங்கள இளவல்.

zeevaa

## 19. கங்கை சொன்ன செய்தி

சுகத்துக்கும் துக்கத்துக்கும் இயற்கை வெவ்வேறான நியதிகளை, காலப் பிரமாணங்களைச் சிருஷ்டித்திருக்கிறது. சுகானுபவத்தில் காலம் வேகமாக ஓடுகிறது. துக்கானுபவத்தில் அதே காலம் இரட்டைப் பங்குக்கு மேல் நீண்டு மனத்தை அழுத்துகிறது. இரண்டு அனுபவங்களிலும் மனம் சீர்குலைகிறது. தேகம் சோர்வடைகிறது. சுகத்தின் விளைவாக ஏற்படும் மனத்தின் சீர்குலைவில் மகிழ்ச்சி நிலவுகிறது. தேகத்தின் சோர்வுகூட இன்பத்தைக் கூட்டுகிறது. துக்கத்தினால் விளையும் மனச்சீர்குலைவு பெரும் மன அழுத்தத்தையும், தேகத்தின் சோர்வு மனிதனைக் கொல்லும் அளவுக்குச் சலிப்பையும் களைப்பையும் உண்டாக்குகிறது. உற்சாகம், சோர்வு என்ற இரண்டு உணர்ச்சிகள் சுகத்துக்கும் துக்கத்துக்கும் இரண்டு வித பலனை அளிப்பதை வாழ்க்கையில் பார்க்கிறோம்.

சுகானுபத்தின் சிகரத்தை அன்றிரவில் எட்டிய விஜயன், உடலுக்கு ஏற்பட்ட சோர்வை விலக்க நன்றாகக் கை கால்களைச் சோம்பல் முறித்துப் பல நாழிகைகள் கழித்து, சற்றே கண்களை விழித்து நோக்கினான். மண்டபத்தின் கூரையின் இணைப்புக் காரைப் பூச்சு விலகிக் கருங்கற்கள் லேசாகக் கொடுத்த விரிசல் மூலம் விண்ணிலிருந்த ஏதோ ஒரு நட்சத்திரம் சற்று மங்கலாகத் தெரியவே, விடியற்காலம் நெருங்கிவிட்டதை உணர்ந்த விஜயன் எழுந்து உட்கார்ந்து கொண்டான். அப்பொழுது பக்கத்தில் அவனைவிட அலுத்துக் களைத்துக் கிடந்த சுடர்விழியின் அலங்கோலத்தைக் கண்டு அலங்கோலத்திலும் கூட ஓர் அழகு இருப்பதைக் கவனித்தான் விஜயன்.

zeevaa

இரவு படுக்கையில் அவள் விஜயன் வரைந்திருந்த போர்த்திட்டத்தின் மீதேபடுத்து விட்டதாலும் முதுகை மரவுரி மறைக்காததாலும் அந்த முதுகில் காரைக் கோடுகள் நன்றாகப் பதிந்து கிடப்பதைப் பார்த்த விஜயன் அவள் முதுகை அன்புடனும் அனுதாபத்துடனும் பெருமையுடனும் நோக்கி, 'எனது போர்த் திட்டத்தையே இவள் முதுகு சுமந்து கொண்டிருக்கிறது. சுமைகளைத் தாங்கவே பெண்கள் ஏற்பட்டிருக்கிறார்கள் போலிருக்கிறது!'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். தூணில் இருந்த அகல் விளக்கு அப்பொழுதும் எரிந்து கொண்டிருந்ததாலும் விடியற் காலத்தை உணர்த்தும் சிறு வெளிச்சம் கூரையின் விரிசலிலிருந்து இறங்கி அகல் விளக்கின் வெளிச்சத்துடன் இணைந்ததாலும் அவள் முதுகின் செந்நிறத்தில் தெரிந்த காரைக் கோடுகள் ஏதோ மந்திரவாதி தீட்டிய மந்திரத் தகடு போலிருந்ததைக் கண்டான். ''இந்த மந்திரத்தகடே, இந்தப் போர்த்திட்டமே, எனது போர்திட்டமாக அமையட்டும். சுடர்விழியின் அதிர்ஷ்டம் எனது இத்தனை நாளைய துரதிர்ஷ்டத்தை 'நீக்கட்டும்'' என்றும் பிரார்த்தனை செய்தான் விஜயன், போதிசத்வரை நினைத்து.

போதிசத்வரையோ, தத்துவங்களையோ நினைக்கும் காலம் இது அல்லதான். ரசானுபவத்துடன் தத்துவம் இணையும் காலகட்டம் வேறுதான். இருந்தாலும் எந்த வேறுபாட்டையும் அகற்றித் தனக்கு அனுகூலமாகக் கால நிலையைச் சரிசெய்து கொள்ளும் மனத்தின் சுயநலம் அப்பொழுது, அவனைத் தனது போரையும் வெற்றியையுமே நினைக்கத் தூண்டியது. அந்தத் தூண்டுதலுக்கு உதவவோ, அவன் இச்சைக்குச் சுருதி கூட்டவோ தெரியாமல் உதயகால பட்சிகள் எங்கிருந்தோ இன்பமாகக் கூவுவது அவன் காதுகளில் விழுந்தது. அந்தப்பட்சிகளின் இன்பக் கூவலை, கூவலில் விளைந்த இசையை அவன் செவியாரப் பருகினான். வெளியே எங்கிருந்தோ இசை வகுத்த பறவைகள் மாறி மாறியும் சேர்ந்தும் பலபடி கூட்டிய ஸ்வர ஜாலங்களிலும் ஏதோ ஒரு தனிப்பட்ட, மனிதன் வகுக்காத, காலப்பிரமாணம் இருப்பதை விஜயன் கவனித்தான்.

zeevaa

அந்தப் பட்சி ஜால சங்கீதத்தால் மனம் நிரம்பினவனாய் ஒருக்களித்துப் படுத்திருந்த சுடர்விழியின் முதுகை மீண்டும் கவனித்துத் தனது போர்த் திட்டத்தை ஊன்றிக் கவனிக்கலானான். அப்படி அவன் உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தபோது அவள், 'உம்...ம்!' என்று பெருமூச்சொன்றை விட்டு முனகினாள். அந்த முனகலும் இசை போலிருந்ததைக் கவனித்த விஜயன் தனது உதடுகளில் புன்முறுவல் கொண்ட சமயத்தில் அவள் சற்றுத் திரும்ப முற்படவே, திரும்பவிடாமல் அவள் அப்புறமே இருக்கும்படி தோளைப் பிடித்து அழுத்தி, ''அப்படியே படுத்திரு சுடர்விழி,'' என்று கூறவும் செய்தான்.

அவன் கையின் அழுத்தலாலும் சொல்லாலும் சுடர்விழியின் தூக்கமும் சிறிது கலையவே, ''ஏன்?'' என்று அரைத் தூக்கத்தில் கேட்டாள்.

''போர்த்திட்டம் அழிந்துவிடும்,'' என்று அவள் காதுக்கருகில் குனிந்து சொன்னான் விஜயன்.

அவள் தலையை மட்டும் லேசாகத் திருப்பி அவனைப் பார்த்தாள். ''போர்த்திட்டம் அழிந்துவிடுமா?'' என்றும் கேட்டாள்.

''ஆம், சுடர்விழி,'' என்றான் விஜயன்.

''எப்படி அழியும்?''

''திட்டம் உன் முதுகில் இருக்கிறது.''

''என் முதுகிலா! திட்டமா!''

''ஆம்! முன்பு திட்டத்தை பூமிதேவி தாங்கி இருந்தாள். இப்பொழுது உன்னிடம் அதை மாற்றிவிட்டாள்.''

இதைக் கேட்ட சுடர்விழி எழுந்திருக்க முயன்றும் முடியவில்லை அவளால். ''வேண்டாம் எழுந்திருக்காதே. இன்னும் சிறிது நேரம் இப்படியே படுத்திரு,'' என்று அவனும் அவளுக்கு அனுகூலமாகச் சொன்னான்.

zeevaa

அவள் குழப்பமடைந்த பார்வையொன்றைத் தலையை மட்டும் திருப்பிய நிலையில் அவன் மீது செலுத்தினாள். ''நான் படுத்துக் கிடந்தால் போர்த் திட்டமும் படுத்து விட்டால் என்ன செய்வது?'' என்று அவள் விளையாட்டாகக் கேட்டாள்.

விஜயன் அதைக் கேட்டு மெதுவாக நகைத்து, ''அப்படியல்ல விஷயம் சுடர்விழி! நீ படுத்தால் போர்த்திட்டம் கலையாது, நிலைக்கும். நீ புரண்டால் போர்த்திட்டம் கலைந்துவிடும்,'' என்றான் சொற்களிலும் நகைப்பு ஊடுருவ.

ஒருக்களித்த நிலையிலேயே சுடர்விழி மெதுவாக எழுந்திருந்து உட்கார்ந்தாள். ''உங்கள் போர்த்திட்டம்...?'' என்று கேட்டாள் கேலியாக.

''அப்படியே இருக்கிறது,'' என்று கூறினான், அவள் முதுகைப் பார்த்துக் கொண்டே. ''தகளி இரண்டிருந்தால் உனக்கே காட்டுவேன் போர்த் திட்டத்தை,'' என்றான் விஜயன்.

அப்பொழுதுதான் விஷயத்தை ஊகித்துக் கொண்ட சுடர்விழி சற்றுத் தலையைத் திருப்பி, கோடுகள் வரையப்பட்ட இடத்தைக் கவனித்தாள். கோடுகள் அழியா விட்டாலும் சிறிது கலைந்திருந்தன. சிலவற்றில் காரைத் தூள்கள் மட்டும் பட்டிருந்தன. ''ஓகோ!'' என்றாள் சுடர்விழி புரிந்ததற்கு அறிகுறியாக.

''ஆம்,'' என்றான் விஜயன்.

''கோடுகள் முதுகில் பதிந்து விட்டன...'' மேலும் சொன்னாள் சுடர்விழி.

''ஆம்.''

''ஐயோ!''

''என்ன சுடர்விழி?''

zeevaa

''நான் நீராட முடியாதே!''

''ஏன்?''

''உங்கள் திட்டம் அழிந்து போகுமே!''

''மறுபடியும் தீட்டுகிறேன்.''

''நினைப்பிலிருக்கிறதல்லவா திட்டம்?''

''அத்தனை மறதி இன்னும் ஏற்படவில்லை சுடர்விழி,'' என்ற விஜயன் மெள்ள அவளை இழுத்துத் தன் மீது சாய்த்துக் கொள்ள முயன்றான்.

''எந்த நேரத்திலும் பொழுது நன்றாகப் புலர்ந்து விடும். பிக்கு வந்தாலும் வருவார். விடுங்கள் என்னை,'' என்று அவனிடமிருந்து உதறிக்கொண்டு எழுந்தாள் சுடர்விழி.

மண்டபத்துக்கும் சற்றுத் தள்ளியிருந்த தாகபாவின் இடத்திற்கும் இடையிலிருந்த வெளியில் இயற்கை மெதுவாகக் கண்ணை விழித்ததால் லேசான வெளிச்சம் தெரிந்து கொண்டிருந்தது. அதைக் கண்ட சுடர்விழி அவசர அவசரமாகத் தனது மரவுரியைப் புனைந்து கொண்டாள். அதுவும் சரியாக அவள் பூவுடலையும் மறைக்க முடியாமல் போகவே, விஜயன் மண்டபத்தில் சற்று எட்டக் கிடந்த தனது மேலங்கியை எடுத்து அவள் முதுகில் போர்த்தினான். ''சரி, நீ போய் நீராடி வா,'' என்று சொன்னான்.

''என்னுடைய இன்னொரு மரவுரி உங்கள் புரவியில் தொங்கும் தோற்பையில் இருக்கிறது,'' என்றாள் சுடர்விழி.

''புரவியை நீ நீராடும் இடத்திற்கு அனுப்புகிறேன், போ,'' என்றான் விஜயன்.

''எப்படிப் போவது? வாயிற்புறம் நான் வரமுடியாதே!'' என்றாள் சுடர்விழி.

zeevaa

''பிக்கு வந்த பக்கமாகப் போ. பின் வழியைத்தான் பிக்கு காட்டினாரே?'' என்ற விஜயன் ''பின்னால் ஏதாவது அருவி இருக்கும். அல்லது *வேவா ஏதாவது இருக்கும். அவற்றில் நீராடிவா, புரவி உனக்கு ஆடை கொண்டு வரும்'' என்று கூறி அவளை அனுப்பினான்.

அவள் பிரகார வழியாகப் பின்புறத்தில் மறையும் வரையில் அவளைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு வாயிலை நோக்கித் திரும்பினான் விஜயன்.

அவன் வாயிலின் முகப்பு மண்டபத்துக்கு வந்தபோது பிக்கு மாத்திரம் நீராடி, தமது காவி வஸ்திரத்தை அணிந்து இன்னொரு ஈரக் காவியை எதிரிலிருந்த மரத்தில் உலர்த்திக் கொண்டிருந்தார். மூர்சமத், விஜயனின் புரவியைத் தேய்த்து விட்டுக் கொண் டிருந்தான். சூ-சின் மட்டும் குளிக்காமல் முழுகாமல் தனது நீள அங்கி உடல் முழுவதையும் மறைக்க ஒரு தூணில் சாய்ந்து கொண்டு பிக்குவையும் மூர்சதையும் கவனித்துக் கொண்டிருந்தான்.

அந்த மூவரையும் மாறிப் மாறிப் பார்த்த விஜயன் மூவர் செயல்களும் அவர் குணங்களையும் விளக்குவதாக நினைத் தாலும், எதிலும் ஒரு சுறுசுறுப்பும் சுத்தமும் உள்ள பிக்கு, கடமையில் கருத்துள்ள மூர்சமத் இருவரும்தனது இரு கைகள் என்பதைத் தீர்மானித்துக் கொண்டான். சூ-சின்னின் உட்கார்ந்த நிலையில் மற்றவர்களைப் பார்த்து ஓர்அசட்டையும் ஒரு குள்ளநரித் தந்திரமும் தென்பட்டதைக் கவனித்து, 'இவனுக்குச் சூட்சும புத்தி அதிகமானாலும் முழுதும் நம்பத்தகாதவன்,' என்று தனக்குள்

---

★ *வேவா என்பது பெரிய நீர்த் தேக்கம். வாவி என்ற தமிழ்ச்சொல் மருவி வேவா என்று வந்திருக்கிறது. தமிழும் சமஸ்கிருதமும் கலந்ததே சிங்கள மொழி என்பதற்கு இது ஓர் உதாரணம். சிங்களத்தில் தமிழ் வேரூன்றி ஆயிரக்கணக்கான வருஷங்கள் ஓடிவிட்டன.*

zeevaa

சொல்லிக் கொண்டான். ஆனால் மனத்தில் மற்றொரு விஷயமும் தீர்மானித்துக் கொண்டு, 'நான் தீட்டியிருக்கும் திட்டத்துக்கு இந்தக் குள்ளநரி மிகவும் அவசியம்,' என்று முடிவு கட்டினான்.

அவன் அந்தமுடிவுக்கு வந்தசமயத்தில் தூணிலிருந்து எழுந்து விஜயனை நோக்கி வந்த, சூ-சின், ''சிங்கள மன்னர் சீக்கிரம் எழுந்துவிட்டதாகத் தெரிகிறது,'' என்றான்.

''இல்லை. நேரமாகி எழுந்திருக்கிறேன்,'' என்றான் விஜயன்.

''முகம் களைப்பாகத் தெரிகிறது,'' என்றான்.

''ஆம்,'' புன்முறுவல் செய்தான் விஜயன்.

''ஏனோ?''

''இரவு முழுவதும்...''

''அலுவலாயிருந்தீர்கள்.''

''ஆம். போர்த்திட்டம் தீட்டிக் கொண்டிருந்தேன்.''

''திட்டத்தை நான் அறியலாமா?''

''அவர்களைப் போல நீயும் நீராடி விட்டு வா. விவாதிப்போம்,'' என்று கூறிய விஜயன், தனது புரவியைத் தேய்த்துக் கொண்டிருந்த மூர்சமதை அணுகி, ''சமத்! புரவியைத் தேய்த்து முடித்து விட்டாயா?'' என்று வினவினான்.

''முடித்துவிட்டேன் எஜமான்,'' என்ற சமத், ''ஏன்? எங்கே யாவது போகப் போகிறீர்களா?'' என்று வினவினான்.

''இல்லை. புரவியின் முதுகில் எனது பைகளைத் தொங்கவிடு,'' என்று கூறியதும் சமத் பைகளை முதுகில் போட, விஜயன் புரவியைத் திருப்பி மண்டபத்துக்குப் பின்னால் செல்லும்படி விரட்டினான். தானும் மண்டபத் தூணுக்கருகில் வைக்கப்பட்டிருந்த

zeevaa

மான்தோல் பையொன்றை எடுத்துக் கொண்டு சற்றுத் தூரத்தில் ஓடிக் கொண்டிருந்த அருவியொன்றை நோக்கிச் சென்றான். பையிலிருந்த துண்டு ஒன்றை இடையில் சுற்றிக்கொண்டு சராயை அவிழ்த்து நீரில் நனைத்து, பாறையில் தப்பிப் பிழிந்து கரையில் வைத்துவிட்டு நீரில் மல்லாந்து படுத்தான். போகப் போகப் பெரிய ஆழத்துடன் பிரும் மாண்டமாகப் பெருகி இலங்கையின் குறுக்கே வடகிழக்குக் கோடிக்கு ஓடும் *மஹாவலி மங்கை அங்கு அருவியாக ஓடிக்கொண்டிருந்த அழகை ரசித்துக் கொண்டு மல்லாந்து ஒரு பாறையில் தலையை வைத்துப் படுக்கவே அருவி அவன் உடலின் ஆயாசம் நீங்கச் சலசலவென்று மார்பின் மீது ஓடியது.

பாறையில் சமந்த கூடத்திலிருந்து இறங்கிச் சிறிது தூரம் வந்ததற்குள் அந்த ஆற்றுப் படுகையில் மணல் அதிகரித்திருப் பதை கண்ட விஜயன், அதைப்பெரிய மணல் ஆறு என்று பலரும் அழைத்ததை எண்ணி அவர்கள் சொல்லில் எத்தனை உண்மை இருந்தது என்பதை உணர்ந்து பெருமை கொண்டான். சமந்த கூடத்திலிருந்து சிங்களத்தை இரண்டாகப் பிரித்து ஓடும் இந்த மஹாவலி கங்கை தனது தெற்குப் பகுதியான ருஹுணாவுக்குப் பெரும் பாதுகாப்பு அரணாக அமைந்தும் கூட ருஹுணாவைத் தமிழர்கள் வெற்றி கொண்டதை நினைத்துப் பெரிதும் வியந்தான். 'இந்த மாதிரி வீரர்களான தமிழர்கள் கொண்ட படைகளை வெற்றி கொள்வதில்தான் பெருமை இருக்கிறது' என்றும் சொல்லிக் கொண்டான். முதல் நாள் தான் தீட்டிய திட்டத்தையும் நினைத்து, 'அன்னை கங்கையே, நீ சொல்! தமிழர் ஆதிக்கத்திலிருந்து நாட்டை

---

★ *வலி என்றால் மணல். மணல் அதிகரித்திருப்பதால் மஹாவலி கங்கை என்று அழைக்கப்படுகிறது. சிங்களத்தைப்பற்றி எழுதிய பழைய ஆசிரியர்கள் அனைவரும் இதை* "THE GREAT SANDY RIVER" *என்று அழைத் திருக்கிறார்கள்.* -Refer 'Ceylon and Portugnese' -By P.E. Piers D. Lik Centah) Page-5.

zeevaa

விடுவிக்க இம்முறை கிழக்கிலிருந்து போரை துவங்கட்டுமா, மேற்கிலிருந்து துவங்கட்டுமா?' என்று வினவவும் செய்தான்.

சலசலவென அவன் மார்பின் மேல் ஓடிய கங்கை அருவியும்அவன் இதயத்துக்கு ஏதோ செய்தி சொல்லியிருக்க வேண்டும். அதைப் பிரதிபலிப்பதுபோல் பிக்கு எங்கிருந்தோ பெரிதாகக் கூவினார், "அங்கில்லை. மேற்கே... மேற்கே" என்று.

பிக்குவின் சொற்களை மஹாவலி கங்கையே அசரீரியாகச் சொல்வது போலிருந்தது விஜயனுக்கு. அதனால் உவகை மிஞ்சிய உள்ளத்துடன் நீராடி எழுந்து தலையையும் உடலையும் துவட்டி இடையில் துண்டைக்கட்டி, பிழிந்து சராயைக் கையிலேந்தி பாழடைந்த மண்டபத்தை நோக்கி நடந்தான். அங்கு வந்ததும் மாற்றுடை புனைந்து, "பிக்கு ஏதோ மேற்கே என்று கூவினீர்களே, எதற்கு?" என்றான்.

"வேறொன்றுமில்லை. மூர்சமதையும் இந்த மண்டபத்துக்குப் பின்னாலுள்ள வேவாவில் குளித்துவிட்டு வரச் சொன்னேன்" என்றார்.

"அங்கு சுடர்விழி போயிருக்கிறாளே" என்றான் விஜயன் குழப்பத்துடன்.

"அவள் நீராடி வந்துவிட்டாள்" என்றார் பிக்கு.

"மூர்சமத் குளிக்க ஒப்புக்கொண்டானா?" என்று விஜயன் வினவினான்.

"ஒப்புக்கொண்டான்" என்பதைப் புன்முறுவலுடன் சொன்ன பிக்கு, "மன்னவா, இனித்தாமதிப்பதற்கில்லை. நமது போர்த் திட்டத்தை விரைவில் நிர்ணயித்து அலுவல் துவங்க வேண்டும்" என்றார்.

zeevaa

மற்றவர்கள் நீராடி வந்த பிறகு விஜயன் மீண்டும் காரைகளைக் கொண்டு தனது திட்டத்தை விளக்கினான். ''இம்முறை போரை மேற்கிலிருந்து அதுவும் தக்ஷிண தேசத்திலிருந்து துவங்குகிறோம்'' என்றும் சொன்னான். ''திட்டத்தைக் கங்கையும் ஒப்புக் கொண்டாள். தாங்களும் ஒப்புக் கொண்டீர்கள்'' என்றும் கூறினான் பிக்குவை நோக்கி.

''பூர்வாங்கமாக ஒரு காரியம் இருக்கிறது'' என்று சொன்னார் பிக்கு. அந்த ஆபத்தான பணியை விளக்கவும் முற்பட்டார்.



zeevaa

# 20. மகா கிராமம்

பிக்கு, மூர்சமத், சூ-சின் ஆகிய மூவரையும் எதிரே அரைச்சக்கர வட்டமாக உட்காரச் சொல்லி மண்டபத் தரையில் காரைக் கோடுகளை இழுத்த விஜயன் "இதிலிருந்து உங்களுக்கு என்ன புரிகிறது?" என்று வினவினான்.

எதிரே உட்கார்ந்த மூவரில் பிக்கு, "இது புலி ஆடு விளையாட்டுக் கட்டம்போல் தெரிகிறது. யார் புலி? யார் ஆட்டுக்கூட்டம்?" என்று வினவினார்.

விஜயன் அவரைத் தனது கூர்மையான கண்களால் நோக்கினான். "தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று பதில் கேள்வி கேட்கவும் செய்தான்.

"இதுவரை சோழர்கள்தான் புலிகளாயிருந்தார்கள். நம்மை ஆடுகளைப்போல் வேட்டையாடினார்கள். இதுவரை நிகழ்ந்த அத்தனை போர்களிலும் அவர்கள்தான் வெற்றி கொண்டிருக் கிறார்கள். ருஹுணாவிலும் சரி, ராஜரட்டாவிலும் சரி, அவர்களே நம்மை விரட்டி அடித்திருக்கிறார்கள். சமீபத்தில் தாங்கள் கட்டிய மலைக் கோட்டையான வாதகிரியிலும் அவர்கள் நம்மை முறியடித்திருக்கிறார்கள். தவிர, சோழர் கொடியும் புலிக் கொடி" என்று கடந்த கால நிகழ்ச்சிகளை விளக்கிச் சொன்னார் பிக்கு.

விஜயன் அந்தக் கட்டத்தை உற்று நோக்கிக் கொண்டே, "பிக்கு! இந்தக் கட்டத்தில் மேலே சுழித்துள்ள வட்டத்தில் ஒரு புலி உட்கார்ந்திருக்கும். அதன் நேர் கீழே நீட்டுக் கோட்டில் இரண்டு

zeevaa

புலிகள் உண்டு. இந்த மூன்று புலிகளையும் பன்னிரண்டு ஆடுகள் சூழ்ந்திருக்கின்றன. இவற்றால் அவற்றைக் கட்டவும் முடியும். காய்களை நகர்த்துபவன் சாமர்த்தியத்திலிருக்கிறது புலிகள் வெற்றி பெறுவதும் தோற்பதும். எங்கிருந்து நாம் ஆடுகளை நகர்த்தப் போகிறோம் என்பதிலிருக்கிறது வெற்றி தோல்வி. மேலிருக்கும் ஆடுகளை முதலில் நகர்த்தி புலிகளுக்குப் பலி கொடுத்துவிட்டால் புலிகள் உள்ளே நுழைந்துவிடும். நான்கு பக்கமும் ஆடுகளை வெட்டும். அப்படியின்று, கீழே இருக்கும் காய்களை நகர்த்தி மெதுவாக மேலே சென்றால் ஆட்டுக் கூட்டம் புலிகளை நகர முடியாமல் செய்துவிடும்'' என்று கட்டங்களை மேலும் கீழும் தொட்டு இடங்களைக் குறிப்பிட்டு விளக்கினான். முதலில் கட்டங்களின் கடைப்பகுதியைச் சுட்டிக்காட்டினான். மேலும் சொன்னான்: ''கட்டங்களை நீக்கி மொத்தமாகப் பார்த்தால் இந்தக் கட்டமே இலங்கை போல் தோன்றும். இதன் வடக்கு தேசம் ராஜராஷ்டிரம் (ராஜரட்டா) வளப்பம் வாய்ந்தது. தெற்கு தேசம் கரடு முரடான மலைப்பிரதேசம். ஆகையால் தெற்கிலிருந்தே நாம் போரைத் துவக்குவோம்'' என்று.

அதுவரை ஏதும் பேசாமலிருந்த மூர்சமத், ''எசமான்! நமது நாட்டு மக்களைத் தாங்கள் ஆடுகள் என்று சொல்வதை நான் ஒப்புக் கொள்ளவில்லை. இதுவரை நாம் தோற்ற போர்களில் கூட அவர்கள் தமிழரைவிடத் திறமையுடன் போராடியிருக்கிறார்கள்'' என்று சொன்னான். ''தமிழருக்கு இருக்கும் படைபலம், அதாவது வீரர்களின் எண்ணிக்கை நம்மிடம் குறைவு'' என்றும் சுட்டிக் காட்டினான்.

மூர்சமதின் சொற்களைக் கேட்ட விஜயன் புன்முறுவல் கொண்டு, ''சமத்! நாம் நமது வீரர்கள் மீது குறை சொல்லவில்லை. இதுவரை நடந்த போர்களில் ஏதோ ஒரு குறை நம்மிடம் இருந்திருக்கிறது. இல்லாவிட்டால் ஏன் தோற்றோம் தொடர்ச்சி 'பாக?'' என்று வினவினான்.

zeevaa

''நமக்குள்ளிருக்கும் சண்டை, பிளவுகள் இவைதான் காரணம். சில நாட்கள் முன்பு இளைய கேசதாது தங்களைக் கொல்ல முயலவில்லையா? இந்த உள்நாட்டுப் பூசலும், பரஸ்பரப் பொறாமையும், ஒருவரையொருவர் கழுத்தை அறுக்கச் சித்தமான மனப்பக்குவமும் இருப்பதால் எதிரிகளை நாம் வெற்றிகொள்ள முடியவில்லை'' என்று மூர்சமத் தனது கருத்தை தெளிவாகச் சொன்னான்.

எதற்கும் வாயைத் திறக்காத சுபாவமுள்ளவனும் கடமையில் மட்டும் கருத்துள்ளவனுமான மூர்சமதே கருத்தைச் சொல்லும் அளவுக்கு வந்துவிட்டதைப் பார்த்து விஜயன் மனம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. ஆகவே தனது கருத்தையும் தெரிவிக்க எண்ணி, ''சமத்! உனக்குள்ள நாட்டுப்பற்றும், கடமை உணர்வும் எல்லோருக்கும் இருந்துவிட்டால் இந்த நாட்டில் யாரும் கால்வைக்க முடியாது. ஆனால் நீ சொல்லும் விளைவுகள் உலகத்தில் எங்குமிருக்கின்றன. தமிழர்களிடம் இருக்கும் பிளவு நமது நாட்டுப் பிளவுகளைவிடப் பன்மடங்கு அதிகம். சேர, சோழ, பாண்டியர்கள் மூவரும் சதா ஒருவருடன் ஒருவர் மோதுகிறார்கள்; ஒருவர் நாட்டை இன்னொருவர் சூறையாடுகிறார்கள். இது மனிதர்களின் பொதுக் குறை. இதிலிருந்து மனிதர்களைச் சீர்திருத்தி வலுவுள்ள ஒரே சமுதாயமாக்கிப் போரிட முயல்வதுதான் சிறந்த வழி. இவ்வளவு தோல்விகளுக்கு அப்புறம் சிங்கள மக்கள் கண்டிப்பாக ஒன்று படுவார்கள். ஒரே குடையின்கீழ் சிங்களம் வெகு சீக்கிரம் ஆளப்படும். ஆடுகளும் புலிகளாகத் திரும்பும் புதிய சகாப்தம் இங்கு சிருஷ்டிக்கப்படும். நீயே அதைப் பார்க்கப் போகிறாய்'' என்று கூறினான்.

வேகமாகவும் விவேகமாகவும் விஜயன் தனது இலக்கையும், நம்பிக்கையையும் தெரிவித்தாலுங்கூட அதை மூர்சமத் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் பதில் சொல்லவில்லை. 'சிங்களவனாவது

ஒன்றுபடுவதாவது? யார் அதிகாரத்திலிருப்பது என்ற குறிக்கோள் இருக்கும்வரை இங்கு ஒற்றுமையேது?' என்று உள்ளூர எண்ணினாலும் எசமானைத் திரும்பத் திரும்பக் கேள்விகளைக் கேட்பதும் அவர் திட்டங்களுக்குக் குறுக்கே பேசுவதும் முறையல்ல வென்று பேசாமலிருந்துவிட்டான்.

ஆனால் பிக்கு விஜயன் சொன்னதை ஒப்புக்கொண்டார். "சிங்கள மன்னவனே! நம்பிக்கையில்லாமல் துவங்கப்படும் எந்த அலுவலும் உருப்படுவது கஷ்டம். தவிர சரியான தலைவன் கையில் குயவன் கை களிமண் போல் மக்கள் வளைவார்கள்" என்று உவமையுடன் பேசினார்.

அதுவரை வாளாவிருந்த சூ-சின்னின் சிறு கண்கள் பளபளத்தன. "மக்கள் களிமண் என்பதை ஒப்புக்கொள்கிறேன். எங்கள் நாட்டில் அதிகாரக் குயவர்கள் மண்ணை அடித்துப் பிசைந்து சக்கரத்தில் சுழற்றுவார்கள். இங்கும் அந்த முறைக்குப் பயன் உண்டு" என்றான்.

பிக்கு, சூ-சின் இருவரையும் உஷ்ணம் கக்கிய விழிகளால் விஜயன் நோக்கினான். "சூ-சின்! உன் நாட்டின் தத்துவமோ முறைகளோ எங்கள் நாட்டுக்குப் பொருந்தாது. தவிர மக்களை அடித்து இம்சை செய்து பயனைப் பெறும் மன்னன் அரக்கன். அதுமட்டுமல்ல, மக்களைப் பற்றி நீயும் பிக்குவும் போடும் எடையும் தவறு. மக்கள் விழித்துக் கொள்ள நாளாகலாம். ஒருமுறை விழித்துக் கொண்டால் அப்புறம் அவர்களை அடக்குவதும் கஷ்டம். மக்கள் உண்மைகளை உணர்ந்தவர்கள். அவர்களைத் திரட்டுவதும் ஊக்குவிப்பதும்தான் நமது கடமை. நமது பக்கத்தில் சத்தியமும் நீதியும் இருக்கும்வரை மக்கள் நம்மைக் கைவிடமாட்டார்கள். நற்பண்புகளை நாம் கைவிட்டால் மக்களும் நம்மைக் கைவிட்டுவிடுவார்கள். இதைப் புரிந்து கொண்டு செயல்படுவதே நல்லது. அநீதி செய்த அரசர்களை அகற்றிட

zeevaa

புரட்சிகள் பல நடந்திருக்கின்றன உலகத்தில். ஆகவே நாம் மக்களைச் சத்திய மார்க்கத்தில் திரட்டுவோம். சத்தியப் போர் புரிவோம். வெற்றி நம்மிடந்தான் இருக்கும்,'' என்று உணர்ச்சி வேகத்தைக் குரலிலும் காட்டினான் சிங்கள இளவல்.

அடுத்து பிக்கு, சூ-சின் இருவரையும் விளித்து, ''இங்கே பாருங்கள். இது நாட்டின் தென்மேற்குப் பகுதி. இங்கு தம்பலகாமாவில் (தம்பல கிராமத்தில்) ஒரு கோட்டை கட்டுகிறேன். அதற்கு அருகிலுள்ள மகான கலாவில் படைகளைத் திரட்டுவோம். அப்படைகள் சிறிது சிறிதாகத் தம்பலகாமா கோட்டைக்கு அனுப்பப்படும். பெரும்படை திரட்டுவதை எதிரிகள் அறியுமுன்பு நாம் படைகளை அனுராதபுரத்தை நோக்கி நகர்த்திவிடுவோம்,'' என்று கூற, தம்பல கிராமம், மகானகுலா ஆகிய இடங்களைத் தனது ஆள்காட்டி விரலால் காரைக் கோடுகளில் சுட்டிக்காட்டினான்.

போர் வல்லுனரான பிக்குவும், கடற்படை வீரனான சூ-சின்னும் அவன் திட்டத்தைக் கேட்டுப் பெரிதும் வியந்தனர். சூ-சின் ஒரு சந்தேகம் கேட்டான்; ''இப்படித் திரட்டப்படும் படைகள் எந்த வழியில் செல்லும், சோழர் தலைநகரத்தைத் தாக்க?'' என்று.

''அது என் ரகசியம். பிறகு சொல்கிறேன்.'' என்ற விஜயன், ''முதலில் தற்போது நம்மிடமுள்ள படைகளின் பலத்தை அறியவேண்டும். நான் நாட்டை விட்டுச் சென்ற மூன்று மாதங்களில் படையின் நிலை எப்படியிருக்கிறது என்பதை அறிய வேண்டும். அந்தச் செய்தியை அறிந்து வர ரவிதேவன், காலன் இருவரையும் அனுப்பியிருக்கிறேன். எந்தச் சமயத்திலும் அவர்களை இங்கு எதிர் பார்க்கிறேன்,'' என்றும் சொன்னான்.

அப்பொழுது தான் பிக்கு இடைபுகுந்து, ''மன்னவா! இந்த நாட்டிற்கு வந்ததும் எங்களை மகாகாமாவுக்கு (மகா கிராமத்துக்கு) அனுப்பி விட்டீர்கள். மகாகிராமம் எந்த விநாடியிலும் சோழர்

zeevaa

வசப்படலாம். சோழர் படை நாமிருக்குமிடத்தை ஆராய நமது தலைநகரான மகா கிராமத்தை அணுகாமலிருக்க மாட்டார்கள். அணுகினால் திரிலோக சுந்தரி, சிற்பி இவர்களின் கதி என்ன? என்னுடைய கதிதான் என்ன? என் கதி கிடக்கட்டும், என்னிடம் நீங்கள் கொடுத்திருக்கும் உங்கள் குலதனத்தின் கதி என்ன?'' என்று வினவினார். ''ஆகவே உனது போர்களுக்குப் பூர்வாங்கம் மகாகிராமம். அது உங்கள் வசமாக வேண்டும். இல்லையேல் நாங்கள் இங்கு வரவேண்டும். எதைச் செய்வதாக உத்தேசம்?'' என்றும் கேட்டார்.

விஜயன் சிறிது சிந்தித்தான். ''ஆம், முதலில் மகாகிராமத்தைக் கவனிக்க வேண்டும்,'' என்று ஒப்புக் கொண்டான். ''பிக்கு! நீங்களும் மூர்சமதும் மகாகிராமம் போய் அங்குள்ளவர்களை இங்கு அழைத்து வந்துவிடுங்கள். எல்லாத் திட்டங்களையும் இங்கேயே வகுத்துக் கொள்வோம். நீங்கள் வருவதற்குள் ரவிதேவனும் காலனும் வந்து விடுவார்கள்,'' என்று தனது முடிவைத் தெரிவித்தான்.

அத்துடன் போர்த்திட்ட விவாதம் முடிந்துவிட்டதைக் குறிக்க உட்கார்ந்த நிலையிலிருந்து எழுந்தான். அவன் உத்தரவுப்படி அன்று பகலிலேயே பிக்குவும் மூர்சமதும் மகா கிராமத்துக்குப் புறப்பட்டார்கள். ஆனால் விஜயனோ பிக்குவோ முற்றும் எதிர்பாராத விபரீத சூழ்நிலையொன்று மகாகிராமத்தில் உருவாகிக் கொண்டிருந்தது. சிங்களத்தின் ஆதி தலைநகரும் சரித்திரப் பிரசித்தி பெற்றதுமான மகா கிராமத்தை முக்கால்வாசி சூழ்ந்து ஓடிய மஹாவலி கங்கையின் கரையில் நின்றவண்ணம் அதன் பிரவாகத்தைக் கண்டு மெய் மறந்திருந்தான் ஒரு வாலிபன். அவன் கண்களில் அந்த நதியின் தூரத்தேயிருந்த துறையில் நீராடி எழுந்த ஒரு பெண்ணின் அழகிய உருவம் திடீரெனத் தெரிந்தது. அதுமட்டுமல்ல அவன் கண்களில் தெரிந்தது; நதிக்கரையில்

zeevaa

பக்கத்துப் புதர் ஒன்றிலிருந்து இரு முரடர்கள் தோன்றியதையும், அந்தப் பெண்ணை அவர்கள் நெருங்க முற்பட்டதையும் அந்த வாலிபன் கவனித்ததும் அவள் நீராடி எழுந்த துறையை நோக்கி விரைந்தான். அவன் துறையை நெருங்கு முன்பாகவே அந்த இரு முரடர்களின் கைகளில் அந்தப் பெண் சிக்கி விட்டதல்லாமல் திமிறவும் முயன்றாள். அவள் முயற்சி பலிக்கவில்லை. அவளை இருமுரடர்களும் கைகளைப் பற்றி தரதரவென்று சற்று எட்ட இருந்த ரதத்தை நோக்கி இழுத்துச் சென்றார்கள்.



zeevaa

## 21. உதவிக்கு வந்தவன்

பெண்ணும் நதியும் ஒன்றுதான். குழந்தைப் பருவத்தில் துள்ளி ஓடி வெகுளியாக மனம்விட்டு நகைக்கும் பெண் வயது சற்று ஏறியதும் அடக்கத்தையும் மன ஆழத்தையும் பெற்று, புன்முறுவலில் தனது சந்துஷ்டியைத் தெரிவிக்கிறாள். ஸமந்தகூட மலையில் பிறந்து பாறைகளில் துள்ளி ஓடி ஆர்ப்பரித்த மகாவலி கங்கையும் மெள்ள மெள்ள அகன்று மகாகிராமம் வந்ததும் ஆழத்தையும் அமைதியையும் பெற்று ஓடிக்கொண்டிருந்தது. எப்படி ஒரு பெண்ணின் மனம் பருவத்தில் வெளிப்படையாகத் துள்ளாவிட்டாலும் உள்ளூர வேகமாக உணர்ச்சிகளை அடைகின்றதோ, அம்மாதிரியே ஆழத்தின் காரணமாக மேலும் அமைதி காட்டிய மகாவலி கங்கை அதன் பிரவாகத்தில் யாராவது அதன் நிலையறியாது இறங்கிவிட்டால் அப்படியே இழுத்துச் செல்லும் வேகத்தைப் பெற்றிருந்தது.

அன்றைய காலையில் மகாகிராமத்தின் மனோகரமான இயற்கையின் சூழ்நிலையில் மனத்தைப் பறிகொடுத்து, கங்கைக் கரையில் நின்ற வாலிபன் நல்ல உயரமாகவும் அழகாகவும் இருந்தான். அவன் இடையிலிருந்த நீண்ட வாளும், அங்கியின் அமைப்பும், அவன் நின்ற தோரணையும் கூட அவன் சிறந்த வீரனென்பதைப் புலப்படுத்தின.

கங்கையின் பிரவாக அழகில் லயித்திருந்த கண்களில் பளிச்சிட்ட மந்தமான ஒளி அந்தக் கங்கையின் ஆழத்தைப் போலிருந்ததால் அந்த மந்தத்திலும் அபாயமிருப்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டியது. கங்கையில் அவன் லயித்திருந்ததைச் சற்று எட்ட எழுந்த

zeevaa




zeevaa

காட்சி கலைத்துவிடவே, நீராடி எழுந்த பெண்ணை அணுக முயன்ற முரடர்களை நோக்கிச் சென்று சற்று வேகமாகவே நடந்தான்.

இத்தனைக்கும் தான் வருவதை அந்த முரடர்களுக்கு உணர்த்தக் குரலேதும் கொடுக்காமலும் அதட்டாமலும் நடந்து சென்ற அந்த வாலிபன், பெண் நீராடி எழுந்த கரையை அணுகு முன்பே முரடர்கள் அவளைப் பற்றி இழுத்துச் செல்ல முயன்றதைக் கவனித்து, சற்றே ஓடி ரதமிருந்த இடத்தை நெருங்கினான்.

அதற்குள் அந்தப் பெண்ணை இழுத்துக் கொண்டு ரதத்தருகில் அவர்கள் வந்ததும் அந்தப் பெண்ணே அவர்களிடமிருந்து திமிற முயன்றாள்.

ஆனால் இரு முரடர்களும் பலசாலிகளாயிருந்தபடியால் அந்தப் பெண்ணின் முயற்சி பலிக்காததை நோக்கிய அந்த வாலிபன் ஓர் அடி முன்னேறினான். பெண்ணை இழுத்து வரும் வேகத்திலிருந்த முரடர்கள் அந்த வாலிபனை ஆதிமுதலே கவனிக்காததால் தன்னைக் கவனிக்கும்படியாக அவன் செய்து கொண்டு ஒரு முரடன் தோளில் கையை வைத்து, "ஐயா!" என்று மிகுந்த மரியாதையுடன் அழைத்ததும் அவன் சற்றே திரும்பி ஏதோ கேட்க வாயெடுத்தான்.

ஆனால் அத்தனை மரியாதையாக முரடனை முதலில் அழைத்த வாலிபன் மரியாதையைக் கைவிட்டு அவன் தோளைப் பிடித்தவண்ணம் திறந்த வாயில் தனது முஷ்டியை வேகமாகச் செலுத்தவே 'கரக்'கென்று பற்கள் இரண்டு உடையும் சத்தம் கேட்டது. அடுத்து அவன் ஏதோ வித்தை காட்டுபவன்போல் ஒரு சுற்று சுற்றித் தரையில் குப்புற விழுந்து, மண்ணை வாயிலிருந்து குமிழியிட்ட ரத்தத்தால் நனைத்தான்.

தனது நண்பன் இலங்கை அன்னையை தண்டனிட்டுக் கிடந்ததைக் கண்ட மற்றொரு முரடன் தனது இடையிலிருந்து குறுவாளை எடுத்துக் கொண்டு வாலிபன்மீது தாவினான். அவன் தாவிய முறையும் சரி, குறுவாளை இறக்க முயன்ற இடமும் சரிதான்,

zeevaa

அவவன் எண்ணத்துடன் கை ஒத்துழைத்திருந்தால் வாலிபன் கதி அதோ கதியாயிருக்குமென்றாலும் அது நடைபெறாததற்குக் காரணமிருந்தது. அந்த முரடனின் கை, வாலிபனின் இடது கையால் அனாயாசமாகப் பிடிக்கப்பட்டு வேகமாக இருமுறை உதறப்பட்ட தாலும், கையின் நரம்புகள் ஆடமுற்பட்டதாலும், கையின் கணுக்கையிலிருந்து ஏதோ வலியொன்று விரல்களில் ஊடுருவிய தாலும், அவன் விரல்களை நீக்கவே குறுவாள் நிலத்தில் 'தட்' என்று விழுந்தது.

அந்த வாலிபன் அடுத்து அதே கையைத் திருகவே முரடன் நிலத்தில் கிடந்த குறுவாளைத் தனியாகவிட இஷ்டமில்லாமல் ஒரு சுருள் சுருண்டு அதன் பக்கத்தில் விழுந்தான். ஆனால் கல்நெஞ்சு படைத்த அந்த வாலிபன் குறுவாளை அதன் எசமான் பக்கத்தில் படுக்கவிடாமல் அதை எடுத்துக் கங்கையில் விசிறி எறிந்துவிடவே தனிக்கட்டையாக இரண்டாவது முரடன் படுத்துக் கிடந்தான்.

அதற்குப் பிறகுதான் ஆடையில் நீர் சொட்டச் சொட்ட நின்றிருந்த அந்தப் பெண்ணைப் பார்த்தான் வாலிப வீரன். அவள் மிக அழகாக இருந்தாள். அவள் முகத்தில் ராஜ களை சொட்டியது. ஆடை நனைந்துவிட்டதால் கைகளால் மார்பை அணைத்து மறைத்துக் கால்களை இடுக்கிக்கொண்டு நின்றாள். அந்தக் கோலத்தில் அவள் நகருக்குள் நடந்து செல்வது முடியாதென்பதைப் புரிந்து கொண்ட வாலிபன், "அம்மா! நீங்கள் ரதத்தில் ஏறிக் கொள்ளுங்கள். உங்கள் இல்லம் செல்வோம்" என்றான்.

அவள் அவனை ஏறெடுத்து நோக்கினாள். "இல்லம் அதிக தூரத்திலில்லை. நானே போய்விடுவேன்" என்றாள்.

அவனுக்கு என்ன சொல்வதென்று விளங்கவில்லை. "இந்த நிலையில் நீங்கள் எப்படிப் போகமுடியும்?" என்று நிலத்தை நோக்கிய வண்ணம் வினவினான்.

"வேறு உலர்ந்த ஆடை கங்கைக் கரையில் இருக்கிறது" என்று அவள் இழுத்தாள்.

zeevaa

''அப்படியானால் சரி. போய் அணிந்து வாருங்கள்'' என்று அலட்சியமாகச் சொன்ன அந்த வாலிபன் அதற்குப் பிறகு அவளைக் கவனிக்கவில்லை. கீழே கிடந்த இரு முரடர்களையும் கவனித்ததில் பல்லில் ரத்தம் வந்தவன் வாயில் அவன் முண்டாசுத் துணியில் ஒரு பகுதியை எடுத்து அடைத்தான். இன்னொருவன் கையைச் சிறிது திருகி அவன் கையையும் சரிப்படுத்திவிட்டு, ''எழுந்திருங்கள்'' என்று ஆணையிட்டான்.

அவர்கள் எழுந்ததும் இருவரையும் ரதத்தில் ஏறச் சொல்லிப் புரவியை அங்கிருந்த சவுக்கால் அடிக்கவே புரவி பறந்தது. ரதத்தை வேகமாக இழுத்த வண்ணம். எதிரேயிருந்த மரக்கூட்டத்தையும் லட்சியம் செய்யாமல் அந்தத் தோப்புக்குள்ளும் ரதத்தை இழுத்துக்கொண்டு ஓடியது. ரதத்தில் உட்கார்ந்திருந்த இருவரும் மெள்ளப் புரவியின் சேணத்தை எடுக்க முயன்று கொண்டிருந்தார்கள். இது தான் அந்த வாலிப வீரனுக்குக் கடைசியாகத் தெரிந்த காட்சி.

ரதம் கண்ணுக்கு மறையும் வரையில் அதைப் பார்த்துக் கொண்டிருந்த அந்த வாலிபன் பிறகு கங்கைக் கரையை நோக்கலானான். அந்தப் பெண் புத்தாடை புனைந்து அவனை நோக்கி நடந்து வந்துகொண்டிருந்தாள். அவள் அருகில் வந்ததும், ''பெண்ணே! இந்த ஊர் ஒரு காலத்தில் பெரிய நகரமாக இருந்திருக்க வேண்டும். பராமரிப்பற்றுப் பெரிய மாளிகைகள் தெரிகின்றன பல இடங்களில். ஓரிரண்டு புரவிக் கொட்டடிகள் இருக்கின்றன. நாலைந்து விஹாரங்கள் கண்ணுக்குப் புலப்படுகின்றன. இந்த ஊரின் பெயர் என்ன?'' என்று வினவினான்.

அவன் ஊருக்குப் புதிது என்பதை அவள் தெரிந்து கொண்டாள். ''நீங்கள் ஊருக்குப்புதிது போலிருக்கிறது?'' என்று வெளிப் படையாகவும் கேட்டாள்.

''ஆம்'' என்றான்.

''இங்கு எதற்கு வந்தீர்கள்?'' என்று அவள் கேட்டாள்.

zeevaa

"இது வரலாற்றுப் பிரசித்தி பெற்றதென்று கேள்விப்பட்டேன். பார்க்கலாமென்று வந்தேன்" என்றான் அவன் சர்வசாதாரணமான குரலில்.

"யாத்திரிகரா?" என்று அவள் வினவினாள்.

"அப்படியும் வைத்துக் கொள்ளலாம்" என்றான் அந்த வாலிபன். மேலும் சொன்னான் : "ஒரு பெண்ணுடன் நடுத்தெருவில் நின்று நான் பேசுவது முறையல்ல. உங்கள் இல்லத்தைக் காட்டுங்கள் அங்கு பேசிக்கொள்ளலாம்" என்று கூற அவள் முன்னே நடந்தாள். வாலிபனும் அவளைத் தொடர்ந்தான்.

கங்கைக் கரையோரமாக நடந்த அவள் அந்த வாலிபனின் கண்ணியத்தை நினைத்து வியந்தாள். இம்மாதிரி வீர இனம் வரவரக் குறைந்து வருவதை நினைத்து "இவர் வெளியூர்க்காரர்தான், எந்த ஊராயிருக்கும்? என்று உள்ளூரக் கேட்டுக் கொண்டாள், இதை அவனையே கேட்டு விடலாமென்று, "வீரரே! தாங்கள் இந்த நாடுதானா?" என்று வினவினாள்.

"தற்சமயம் இந்த நாடுதான்" என்றான் அவன்.

"இதற்கு முன்பு?" என்று அவள் வினவினாள்.

"பல இடங்களில் இருந்திருக்கிறேன்" என்ற அவன் பேச்சு விநோதமாயிருந்தது.

"நாடோடியா?"

"ஆம்."

"நமக்கென்று ஒரு நாடு வேண்டாமா?"

"எதற்கு?"

"நமக்கென்று சொல்லிக்கொள்ள."

"இதையும் எனது நாடாக்கிக் கொள்ளலாம். எதையும் நமதாக்கிக் கொள்ளலாம்"

zeevaa

''அப்படியானால் நாடாசை பிடித்தவரா?''

''அது தவறா?''

''தவறுதான். இன்னொரு நாட்டின்மீது ஆசை விழுந்தால் அதைக் கைப்பற்றத் தோன்றுமல்லவவா?''

''தோன்றினால் என்ன?''

இந்த விதண்டாவாதம் அவளுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே அதைப்பற்றி மேலே எதுவும் பேசாமல் நடந்தாள். கங்கைக் கரையில் சிறிது தூரம் வந்ததும் இன்னொரு பெரிய வீதிக்குள் அந்தப் பெண் நுழைந்து தூரத்திலிருந்த பெரிய மாளிகையைக் காட்டி, ''அதோ அங்குதான் நான் இருக்கிறேன்'' என்றாள்.

வாலிபன் அதை நோக்கினான் சிறிது நேரம். ''அதைப் பார்த்தால் வீடாகத் தெரியவில்லையே'' என்றான்.

''வீடல்ல, விஹாரம்'' என்றாள் அவள்.

''விஹாரத்தில் துறவிகளல்லவா வசிப்பார்கள்?'' என்று அவன் கேட்டான்.

''ஆம், ஆனால் அங்குள்ள துறவிகளின் பாதுகாப்பில் நானிருக்கிறேன்'' என்றாள் அவள்.

அந்த வாலிபன் அவள் பக்கத்தில் நடந்தபடியே கேட்டான், ''நீங்களும் துறவியா?'' என்று.

பதிலுக்கு அவள் நகைத்தாள். ''நான் அணிந்திருப்பது துறவியின் ஆடையல்ல. துறவியானால் காவி அணிய வேண்டாமா?'' என்று வினவினாள் நகைப்பின் ஊடே.

''ஆம், ஆம். அணிய வேண்டும்'' என்று எங்கோ ஞாபகத்துடன் பேசிய அந்த வாலிபன் அதற்குப்பின் மௌனமே சாதித்தான். விஹாரத்தின் வாயிலுக்கு வந்ததும் வாசலிலேயே நின்ற அவன்

zeevaa

உள்ளே செல்லவில்லை. ''பெண்ணே! நான் வருகிறேன்'' என்று கூறித் திரும்ப முற்பட்டான்.

அவனை அந்தப் பெண் தடுத்தாள். ''உங்கள் பெயரைக்கூடச் சொல்லவில்லையே. இன்றைய ஆபத்திலிருந்து என்னைத் தப்ப வைத்தவர் பெயரை நான் அறிய வேண்டாமா?'' என்று கேட்டாள்.

''உன் பெயரை மட்டும் நீ சொன்னாயா?'' என்று அவன் கேட்டான்.

''என் பெயர் சுந்தரி'' என்றாள் அவள்.

''அழகுக்கு ஏற்ற பெயர்'' என்ற அவன் மீண்டும் திரும்ப முயன்றான். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டு ''பெண்ணே! இதை எதற்கும் வைத்துக்கொள். ஆபத்தில் இது உதவும்'' என்று அதுவரை காட்டிய மரியாதையைக் கைவிட்டு, சகஜபாவத்தில் பேசிவிட்டுத் தனது கச்சையிலிருந்த குறுவாளை எடுத்து அவளிடம் நீட்டிவிட்டு அந்த இடத்தைவிட்டு வேகமாக அகன்று பக்கத்து வீதியில் நுழைந்துவிட்டான். அவன் தனது பெயரை மட்டும் சொல்ல வில்லை.

அந்தக் குறுவாளைக் கையில் பிடித்தவண்ணம், அவன் போவதைப் பார்த்துக்கொண்டே நின்ற அந்தப் பெண் அவன் கண்ணுக்கு மறைந்ததும் உள்ளே சென்றாள்.

உள்ளே கூடத்தில் உட்கார்ந்திருந்த சிற்பி நாகநந்தன் அவள் கையிலிருந்த குறுவாளைப் பார்த்து, ''அது ஏது குறுவாள்?'' என்று கேட்டு அதைக் கையில் வாங்கிக் கொண்டவன் பிரமை பிடித்து நின்றான். ''இது எங்கிருந்து கிடைத்தது?'' என்று வினவினான்.

''ஒருவர் கொடுத்தார்.''

''எப்பொழுது?''

''சற்று முன்பு''

zeevaa

''எங்கே அவர்?''

''போய்விட்டார். சற்று முன்புதான் பக்கத்து வீதியில் நுழைந்தார்.

இதைக் கேட்டதும் சிற்பி வெறி பிடித்தவன்போல் ஓடினான் வெளியே. நீண்ட நேரம் கழித்துத் திரும்பிச் சோகத்துடன் திரும்பினான்.

''அந்தக் குறுவாளில் என்ன விசேஷம்?'' என்று கேட்டாள் திரிலோகசுந்தரி.

''நான் செய்து கொடுத்தது'' என்றான் சிற்பி.

''யாருக்கு?''

''சோழராஜ குலத்துக்கு.''

''அப்படியானால் இது?''

''சோழ இளவரசன் குறுவாள்'' என்ற சிற்பி, ''அவனை விட்டுவிட்டாயே? இதைவிட முட்டாள்தனம் வேறென்ன இருக்க முடியும்?'' என்று சீறினான்.

''யாரவன்?'' என்று கேட்டாள் திரிலோகசுந்தரி.

''சோழ இளவரசன் அதிராஜேந்திரன்'' என்று நிதானமாகச் சொன்னான் சிற்பி. ஆனால் அந்த நிதானம் போலி என்பதை நடுங்கிய அவன் உதடுகள் சுட்டிக் காட்டின.

zeevaa

# 22. பாயும் புலி

கங்கைக் கரையில் முரடர்களிடமிருந்து தன்னைக் காத்தவன் கொடுத்த குறுவாளைக் கண்டதும் சிற்பியின் குரலில் நடுக்கம் கண்டதையும், அது சோழ இளவரசன் குறுவாள் என்று சிற்பி கூறியதையும் கவனித்த திரிலோகசுந்தரி வியப்பின் வசப்பட்டு நின்றாள். சோழ இளவரசன் மகாகிராமத்துக்கு ஏன் வந்தான் என்று நினைத்துப் பார்த்த திரிலோகசுந்தரி, ''இங்கு சோழ இளவரசன் வரக்காரணமென்ன? அவர்கள் ஆட்சி எல்லைக்குள் மகாகிராமம் இல்லையே?'' என்று வினவினாள்.

சிறிது நேரம் யோசித்துவிட்டு, ''அதைப் பற்றிக் கவலைப் படுபவரல்ல சோழ இளவல். அவர் துணிவுக்கு ஒரு எல்லை யில்லை. எங்கும் செல்வார், எந்த ஆபத்திலும் தலையிடுவார். உயிரை அற்பமாக நினைப்பவர்'' என்ற சிற்பி, ''நீங்கள் அவரை எப்படிச் சந்தித்தீர்கள்? எங்கு சந்தித்தீர்கள்?'' என்றும் திரிலோக சுந்தரியை விசாரித்தான்.

கங்கைக்கரை நிகழ்ச்சிகளை திரிலோகசுந்தரி விவரித்ததும் அவற்றைப்பற்றிச் சிறிதும் ஆச்சரியப்படாத சிற்பி, ''இரண்டு பேரை என்ன? பத்துப் பேராயிருந்தாலும் சமாளிப்பார் சோழ இளவல்'' என்று கூறியதன்றி, அவளைப் பிறர் தூக்க முயன்றதைச் சாதாரண நிகழ்ச்சியாக நினைத்து, ''ஆமாம். நீங்கள் யாரென்று அவருக்குத் தெரியுமா?'' என்று வினவினான்.

திரிலோகசுந்தரி சிறிது சிந்தித்துவிட்டு, ''தெரியாது'' என்று பதில் சொன்னாள்.

zeevaa



zeevaa

''உங்கள் பெயரை அவர் கேட்கவில்லையா?'' என்று கேட்டான் சிற்பி.

''கேட்டார்....'' தயக்கத்துடன் வந்தது திரிலோக சுந்தரியின் பதில்.

''பெயரைச் சொன்னீர்களா?''

''முழுப்பெயரையும் சொல்லவில்லை. பாதிப்பெயரைச் சொன்னேன்.''

''அதாவது சுந்தரி என்று சொன்னீர்கள்?''

''ஆம்.''

''அவர் பெயரை நீங்கள் ஏன் கேட்கவில்லை?''

''கேட்டேன், அவர் சொல்லவில்லை. இந்தக் குறுவாளை மட்டும் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டார்.''

''எதுவும் பேசவில்லை?''

''பேசினார்.''

''என்ன பேசினார்?''

''இதை வைத்துக்கொள். இது உனக்கு ஆபத்தில் உதவும் என்று சொல்லிக் குறுவாளைக் கொடுத்தார்.'' என்ற திரிலோக சுந்தரியின் பதிலைக் கேட்டதும் பழைய வெறி பிடித்த சிரிப்பை உதிரவிட்ட சிற்பி, ''சரி சரி! இனி உனக்கு ஆபத்தில்லை. ஆனால் எங்கள் கதி என்ன?'' என்று விசாரித்தான்.

அவன் வெறிச் சிரிப்பு அவளுக்கு வழக்கமாயிருந்தாலும் அவன் கேள்வி அவளுக்கு எரிச்சலைக் கொடுத்ததால் கேட்டாள் திரிலோகசுந்தரி, ''உங்களுக்கு என்ன ஆபத்து வந்துவிட்டது இப்பொழுது?'' -சுடுசொற்களை வீசினாள் சிற்பியை நோக்கி.

zeevaa

சிற்பி மீண்டும் நகைத்தான் பெரிதாக. "இன்னும் என்ன ஆபத்து வரவேண்டும்? சோழ இளவரசர் எப்பொழுது மகாகிராமத்துக்கு வந்துவிட்டாரோ நமக்கு ஆபத்தும் வந்திருக்கிறதென்று அர்த்தம். சில நாட்களுக்கு முன்புதான் மகாதித்தா துறைமுகத்தில் சோழர்படை இறங்கியிருப்பதாகச் செய்தி கிடைத்தது. அந்தச் செய்தியைத் தொடர்ந்து மகாவீரரான சோழ இளவரசர் சிங்கள நாட்டின் புராதனத் தலைநகருக்கு வருகிறார். ஆபத்து வந்தால் உதவ உங்களுக்கு ஒரு குறுவாளைக் கொடுத்துப் போகிறார். இதெல்லாம் எதைக் குறிக்கிறது?" என்று கேட்டான் சிரிப்பின் ஊடே.

திரிலோகசுந்தரி உள்ள நிலையை ஊகித்துக் கொண்டாலும் ஏதும் அறியாதவள்போல் கேட்டாள், "எதைக் குறிக்கிறது?" என்று.

சிறிதும் தாமதிக்காமல் பதில் சொன்னான் சிற்பி. "சோழர் படைப் பிரிவு ஒன்று மகாகிராமத்துக்கு அருகில் இருக்கிறது என்பதைக் குறிக்கிறது. இளவரசர் ஆபத்தைப் பற்றிக் குறிப்பிட்டுக் குறுவாளைக் கொடுத்தபோது, ஏற்படக்கூடிய ஆபத்தை உணர்ந்தே கொடுத்திருக்கிறார் என்பதையும் குறிக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக நீங்கள் யாரென்பதை அவர் ஊகித்துவிட்டார் என்பதையும் குறிக்கிறது," என்ற சிற்பி, "இந்தச் சமயத்தில் சனியன் பிடித்த பிக்கு எங்கே போனார்?" என்றும் அலுத்துக் கொண்டான். "சரி, நான் எதற்கும் சைவத் துறவிகளைப் பார்த்துவிட்டு வருகிறேன். நீங்கள் விஹாரத்தை விட்டு எங்கும் போக வேண்டாம்," என்று கூறிவிட்டு விஹாரத்திலிருந்து வெளியே கிளம்பினான்.

கிளம்பிய வேகத்துடன் விஹாரத்தைவிட்டு வெளியே வந்ததும் அடுத்திருந்த பல பெரிய மாளிகைகளையும் இதர கட்டிடங்களையும் கவனித்தான். மலைகள் சூழ்ந்தும் மகாகிராமத்தின் சூழ்நிலை மிக ரம்மியமாக இருந்தும் அவனால் அந்த ரம்மியத்தை ரசிக்க முடியவில்லை. தூரத்தே மகாகிராமத்தைச் சற்றே சூழ்ந்து தோள் கொடுத்ததுபோல் வளைந்து ஓடிக் கொண்டிருக்கும் கங்கையும் அவன் கவனத்தைக் கவரவில்லை. மலை யொன்றின்

zeevaa

மீதிருந்த கோவிலையும் தூர விரிந்து கிடந்த பெரிய ஏரியையும் அவன் அலட்சியமாகப் பார்த்து விட்டு வீதியிலிருந்த மாளிகைகளைத் தாண்டி, நடந்தான். நாலைந்து மாளிகைகளைத் தாண்டி கடைசியிலிருந்த ஒரு பெரிய விடுதிக்குள் நுழைந்து முதல் இரண்டு கட்டுகளைத் தாண்டியதும்; மூன்றாவது கட்டில் தர்மர் பூஜையில் ஈடுபட்டிருந்ததையும் மற்ற மூவரும் கை கட்டி அடக்கத்துடன் தலைவணங்கி நின்று கொண்டிருந்ததையும் பார்த்து அவனும் மௌனமாக நின்றான்.

சிற்பி வந்ததைக் கவனியாத தர்மர் எதிரே வைத்திருந்த ஸ்படிகலிங்கம் ஒன்றுக்கு மலர் தூவிப் பூஜை செய்து மந்திரங்களை முணுமுணுத்துக் கொண்டிருந்தார். பிறகு எதிரிலிருந்த கைவிளக்கை எடுத்து, தீபாராதனை செய்து முடிந்து பின்பு அதை மற்றவர்களிடம் நீட்டியபோது தான் சிற்பி வந்ததைக் கவனித்தார். "நீயா! இங்கு எப்பொழுது வந்தாய்?" என்று வினவவும் செய்தார்.

நேரடியாகப் பதில் சொல்லவில்லை சிற்பி. "பூஜைக்கு இது நேரமில்லை," என்றான் கடுமை நிறைந்த குரலில்.

தர்மர் தமது கண்களை உயரத் தூக்கி, சிற்பியின் கண்களைச் சந்தித்தார். "எது சமயமோ?" என்றும் விசாரித்தார் இடக்காக.

"பூஜைக்கு அமைதி வேண்டும்," என்றான் சிற்பி.

"இப்பொழுது அமைதிக்கு என்ன குறைச்சல்?" என்று அர்த்தர் வினவினார்,

"சோழர் படைகள் மகாகிராமத்துக்கு வெகு அருகில் இருக்கின்றன," என்றான் சிற்பி.

இதைப்பற்றி அந்த நாலு சுவாமிகளும் கவலைப்பட்ட தாகத் தெரியவில்லை. "உனக்கு எப்படித் தெரியும்?" என்று காமர் கேட்டார்.

"பிக்கு வந்து விட்டாரா?" என்று மோக்ஷர் கேட்டார்.

zeevaa

''பிக்கு வரவில்லை, ஆனால் இது வந்திருக்கிறது.'' என்று சொன்ன சிற்பி, தனது கச்சையில் செருகியிருந்த குறுவாளை எடுத்து நீட்டினான் மோஷரிடம். அதை மோக்ஷர் ஆராய முற்பட்டதும் தர்மர் தமது கையிலிருந்த விளக்கை லிங்கத்துக்கு முன்பாக வைத்துவிட்டு வேகமாக வந்து குறுவாளின் மீது தமது கண்களை நாட்டினார். மற்ற இரு சுவாமிகளும் நெருங்கி அதைக் கவனிக்கவே குறுவாள் சிற்பியின் பார்வையிலிருந்து மறைந்து சுவாமிகளின் வழுக்கைத் தலைகள் மட்டும் பனம்பழக்குலை போல் அவன் கண்களுக்குத் தெரிந்தன.

சிறிது நேர ஆராய்ச்சிக்குப் பிறகு நால்வரும் கலைந்து ஒன்றாகச் சேர்ந்து சிற்பியை நோக்கினார்கள். ''இது எங்கிருந்து கிடைத்தது?'' என்ற வினவினார் தர்மர்.

அந்தச் சமயத்தில் கத்தியின் கூர்மையைத் தமது விரலால் சோதித்துக் கொண்டிருந்த மோக்ஷர், ''இதைக் கொண்டு கழுத்துக்களை வெள்ளரிக்காயைப்போல் அரிந்து விட முடியும்.'' என்று அதன் உபயோகத்தை விவரித்தார். ''சிற்பி! இதை நான் வைத்துக் கொள்ளட்டுமா?'' என்று ஆவலுடன் சிற்பியைக் கேட்கவும் செய்தார்.

''மோக்ஷரே! உமக்குக் கைகள் இருக்க, கத்தி எதற்கு?'' என்று கேட்டார் காமர்.

அந்தக் கேள்வியால் உற்சாகமடைந்த மோக்ஷர், ''உண்மை உண்மை, கையின் வலு கத்திக்குக் கிடையாது.'' என்றார்.

கத்தியை குறித்து இவர்கள் பேசியதைப் பற்றி லட்சியம் செய்யாத சிற்பி, தர்மரைப் பார்த்து, ''தர்மரே! இந்தக் கத்தி என்னுடையதல்ல, யாருடையதென்று வாங்கிப் பாரும்,'' என்று கூற, மோக்ஷர் கையிலிருந்த கத்தியை வாங்கித் தர்மர் பார்த்தார். ஒருமுறை கத்தியைத் திருப்பிப் பார்த்து, பிடியைச் சோதித்ததுமே, ''இது யாருடையது?'' என்று கேட்டார் சிந்தனை வசப்பட்டு.

zeevaa

''தற்சமயம் விஜய மகாதேவியாருடயது,'' என்றான் சிற்பி.

''அவர்களுக்கு ஏது?'' என்று விசாரித்தார் தர்மர்.

குறுவாள் கிடைத்த விவரத்தை விரிவாகச் சொல்லிய சிற்பி, ''அதன் பிடியைப் பாருங்கள்,'' என்றான்.

பிடியைப் பார்த்த தர்மர் பிரமித்தார். ''முத்திரை சிறியதாகத்தான் இருக்கிறது. ஆனால் தெளிவாக இருக்கிறது,'' என்றார் பிரமிப்பின் ஊடே.

மற்ற மூவரும் பிடியைக் கவனித்தார்கள். ''புலி மிக அழகாகச் செதுக்கப்பட்டிருக்கிறது'' என்று பாராட்டினார் அர்த்தர்.

''பாய்ச்சலைச் செதுக்கியிருப்பவன் மிக சாமர்த்திய சாலியாயிருக்க வேண்டும். கைதேர்ந்த சிற்பியாயிருந்தாலொழிய இத்தனை சிறிய புலியைப் பாயும்படியும் கண்களில் உக்கிரத்தைக் காட்டியும் செதுக்கமுடியாது,'' என்ற மோக்ஷர், ''இந்தப் பாயும் புலியிடம் சிக்குபவன் சின்னாபின்னப்படுத்தப்படுவான். தாறுமாறாக அவன் உடல் தசைகள் கிழிக்கப்படும்,'' என்று தமது கையால் கிழிப்பது போல் அபிநயம் காட்டினார். அவர் முகத்தில் கொலை வெறி மிதமிஞ்சிக் காணப்பட்டது.

சுவாமிகளின் பாராட்டுதல்களைப் பெற்றுக் கொண்ட சிற்பி, ''இதைச் செய்தது நான்தான்.'' என்றான்.

தர்மர் அந்தக் குறுவாளின் கதையைச் சில வார்த்தைகளில் முடித்தார். ''சோழர்படை மகாகிராமத்துக்கு வெகு அருகில் இருக்கிறது,'' என்றார்.

''புலி சித்தமாயிருக்கிறது,'' என்றார் அர்த்தர்.

''பாயும் புலி,'' என்று திருத்தினார் காமர்.

தர்மர் துரிதமாக முடிவெடுத்தார். ''சிற்பி! நீர் கலிங்க ராஜகுமாரியுடன் சிங்கள மன்னர் இருக்குமிடம் செல்லும். நாங்கள் சோழ இளவரசனைக் கவனித்துக் கொள்கிறோம்'' என்றார்.

zeevaa

''எப்படி?'' என்று வினவினான் சிற்பி.

''சோழர் படைகள் இங்கு நுழைவதை இரண்டு நாள் தடைசெய்கிறோம்,'' என்ற தர்மர், உடனடியாகச் செயலில் இறங்கினார். ஸ்படிக லிங்கத்தையும் பூஜை விளக்கையும் எடுத்து ஒரு பையில் போட்டுக் கொண்டார். மற்ற மூன்று துறவிகளையும் நோக்கி, ''நீங்களும் புறப்படச் சித்தமாகுங்கள்,'' என்று உத்தரவிட்டார்.

அந்தச் சமயத்தில் சொல்லி வைத்தது போல் சோழ இளவலும் அந்த இடத்தில் தோன்றினான். அவனை எதிர் கொண்ட தர்மர் ஏதுமறியாதவர் போல், ''தாங்கள்...'' என்று துவங்கினார்.

சோழ இளவரசன் இதழ்களில் இளநகை அரும்பியது. ''பாயும் புலி'' என்று இளநகை சற்று அதிகமாகவே தெரியப் பதிலுரைத்தான். ''நீங்கள் நால்வரும் என்னுடன் வாருங்கள்,'' என்று துறவிகளை நோக்கிக் கூறி, திரும்பி மாளிகையிலிருந்து வெளியே நடக்கவும் முற்பட்டான்.

zeevaa

# 23. பெண்ணின் பிடிவாதம்

முற்றும் எதிர்பாராத விதமாகச் சோழ இளவரசன் தாங்கள் இருந்த இடத்துக்கு வந்ததன்றித் தன்னைப் பாயும் புலி என்று அறிவித்துக் கொண்டதால், அவன் தங்கள் உரையாடலைச் சற்று நேரமாகவே கேட்டுக் கொண்டிருந்திருக்கிறான் என்பதை உணர்ந்த துறவிகள் நால்வரும் அவன் அழைத்தும் கூட அவனைத் தொடராமல் நின்ற இடத்திலேயே நின்றுவிடவே, தன் பின்னால் காலடி ஏதும் கேட்காதிருந்ததன் விளைவாகச் சோழ இளவரசன் சற்றே திரும்பி, ''உங்கள் நால்வரையும் என்னுடன் தொடர்ந்து வரும்படி அழைத்தேன்'' என்று துறவிகளை நோக்கிக் கூறினான். அவன் சொற்களில் அதிகாரம் ஒலித்ததையும், அவை கிட்டத்தட்ட கட்டளையைப் போலிருந்ததையும் கவனித்த தர்மர், ''இளவரசே! தாங்கள் விடுத்தது அழைப்பா, கட்டளையா?'' என்று வினவினார்.

சோழ இளவரசன் தர்மரை நோக்கி கூர்மையான பார்வையைச் செலுத்தினான். ''தங்கள் இஷ்டப்படி வைத்துக் கொள்ளலாம். ஆனால் என்றுடன் வருவது உங்களுக்கும் நல்லது. கலிங்கராஜ குமாரிக்கும் நல்லது'' என்றான் நிதானமான குரலில்.

தர்மர் முகத்தில் சிறிது சிந்தனையைத் தோற்றுவித்துக் கொண்டார். ''வராவிட்டால் என்ன செய்ய உத்தேசம்?'' என்று கேட்டார் சில நொடிகள் சிந்தித்த பிறகு.

சோழ இளவல் புன்முறுவல் கொண்டான். ''தங்கள் எண்ணம் நிறைவேறாது'' என்றான்.

''என்ன என் எண்ணம்?'' என்று தர்மர் விசாரித்தார் வியப்புடன்.

zeevaa

"சோழர் படை மகாகிராமத்திற்கு வராமல் இரண்டு நாட்களுக்குத் தடை செய்வது" என்ற சோழ இளவல், பொருள் பொதிந்த பார்வை யொன்றைத் தர்மர்மீது நிலைக்கவிட்டான்.

"அப்படியானால் இரண்டு நாட்களுக்குப் படைகளை தேக்கி வைப்பீர்களா?" என்று தர்மர் விசாரித்தார்.

"அதுதான் எனது உத்தேசம். திரிலோக சுந்தரி அவளது கணவரை அடையுமுன் நான் படைகளை இங்கு அனுப்ப உத்தேசமில்லை. ஒருவேளை எனக்கு தெரியாமல் வீரர்கள் யாராவது இங்கு வந்தாலும் விஜய மகாதேவிக்குப் பாதுகாப்பாக இருக்கட்டும் என்றுதான் எனது குறுவாளையும் கொடுத்தேன்" என்ற சோழ இளவரசன், "இனி என்னுடன் வருவதில் ஆட்சேபணை யில்லையே?" என்றும் கேட்டான்.

அவன் தங்களைப்பற்றிச் சகலத்தையும் தெரிந்து வைத்திருக்கிறானென்பதைப் புரிந்து கொண்ட தர்மர், "எந்த ஆட்சேபணையுமில்லை. ஆனால் சிற்பியும், அரச குமாரியும் இன்று புறப்பட்டு விடலாமா?" என்றுகேட்டார்.

"இன்று வேண்டாம். நாளை புறப்படட்டும்" என்று கூறினான் சோழ இளவரசன்.

"இன்று புறப்பட்டால் என்ன?" என்று தர்மர் வினவினார்.

"எனது முன்னணி வேவுப் படைகள் ஆங்காங்கு உலாவுகின்றன. அவற்றால் தடை ஏற்படலாம். அரசகுமாரிக்கு எந்தத் தீங்கும் விளைவிக்காதிருக்க இன்று உத்தரவு அனுப்புகிறேன். அவை முன்னணிப் படைகளுக்குப் போய்ச்சேர ஒரு நாளாகும்" என்ற சோழ இளவரசன் மீண்டும் வெளியே செல்ல முற்பட்டான்.

"இத்தனை உதவியை நீங்கள் கலிங்க ராஜகுமாரிக்கு எதற்காகச் செய்ய வேண்டும்? எதிரியின் மனைவியல்லவா அவள்?" என்று அர்த்தர் கேட்டார்.

zeevaa

சோழ இளவரசன் தலையை மட்டும் திருப்பி, ''அர்த்தரே! அதிராஜேந்திரன் அபலைகளுடன் போராடுவது கிடையாது. நான் நடந்தும் போர் எதுவும் அறவழியிலிருந்து அகலாது'' என்று கூறினான்.

தர்மர் முகத்தில் பெருமிதம் உலாவியது. *''அதிராஜேந்திரா! சிங்கள சரித்திரத்தின் சிக்கலான கட்டத்தில் நீ இங்கு ராஜப்பிரதி நிதியாக வந்திருப்பது தமிழர்கள் அதிர்ஷ்டம்'' என்றார் பெருமிதம் குரலிலும் ஒலிக்க.

இந்தப் பாராட்டுதலுக்கு அதிராஜேந்திரன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. துயரம் கலந்த பெருமூச்சொன்றை வெளி யிட்டான். ''தர்மரே! அதிர்ஷ்டம் துரதிர்ஷ்டம் என்பது மாறுபடுகின்ற சொற்கள், நித்தியமானவையல்ல. ஒருவரின் அதிர்ஷ்டம் இன்னொருவரின் துரதிர்ஷ்டம் ஒரு நாட்டின் அதிர்ஷ்டம் இன்னொரு நாட்டின் துரதிர்ஷ்டம். இதில் பெருமைப்படுவதற்கோ மகிழ்ச்சியடைவதற்கோ ஏதுமில்லை'' என்றும் பதில் சொன்னான் துயரம் தோய்ந்த சொற்களால்.

படைகளை நடத்திச் செல்வதில் நிகரற்றவனென்று பெயர் பெற்றவனான அதிராஜேந்திரன் இப்படி தத்துவம் பேசுவது விந்தையாயிருந்தது துறவிகள் நால்வருக்கும். ''நாங்கள் பேசவேண்டியதை நீ பேசுகிறாய் அதிராஜேந்திரா!'' என்று மனமுருகச் சொன்னார் காமர்.

அதிராஜேந்திரன் மெல்ல நகைத்து, ''துறவிகளே! இந்தக் காலத்தில் யார் எதைப் பேசலாம், எதைச் செய்யலாம் என்ற நியதி கிடையாது. சந்நியாசிகள் நன்றாகப் போரிடுகிறார்கள். க்ஷத்திரியர் கள் பயந்து பதுங்குகிறார்கள். அஹிம்சையை அஸ்திவாரமாகக்

* Adhi Rejendra was the Chola victory during the time Vira Rajendra was the Chola Emperor- "Ancient Jaffna" -By Mudaliar C. Rasanayagam - Page 264.

zeevaa

கொண்ட பௌத்த மதம் திகழும் நாடுகளில் நடக்கும் கொலைகள் வேறு எந்த நாட்டிலும் கிடையாது. உங்களைப்போல் போரிடக்கூடிய திறன் வாய்ந்தவர் எத்தனை பேர் இருக்கின்றார்கள்? துறவிகளென்றால் ஜபசமாதியில் இருக்க வேண்டுமென்ற நியதி வழக்கத்திலிருக்கிறதா?'' என்று கேட்ட அதிராஜேந்திரன் மேற் கொண்டு பேச இஷ்டப்படாமல், ''வாருங்கள் போகலாம்'' என்று கூறிவிட்டு நடந்தான் வெளியே.

துறவிகள் அவனைப் பின்தொடர்ந்தார்கள். நாகாநந்த சிற்பி மட்டும் அவர்கள் போவதைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு அவனும் திரிலோகசுந்தரியிருந்த விஹாரத்துக்கு வந்து சேர்ந்தான். அவனை எதிர்பார்த்துத் திரிலோகசுந்தரி தனது அறையில் காத்திருந்தாள். அவள் முகத்தில் கவலை எழுதி ஒட்டியிருந்தது. சிற்பி வந்ததும் வராததுமாகக் கலிங்க ராஜகுமாரி எழுந்து, ''என்ன, துறவிகளைப் பார்த்து விட்டீர்களா?'' என்று வினவினாள்.

சிற்பி சொன்னான்: ''துறவிகளையும் பார்த்தேன்'' என்று. வார்த்தையில் 'உம்'மைச் சிறிது அழுத்தியும் சொன்னான்.

அதைக் கவனிக்கத் தவறாத அரசகுமாரி, ''உம் சிறிது அழுத்தமாகவே இருக்கிறது'' என்று சுட்டிக்காட்டினாள்.

''சில சமயங்களில் சொல் அழுத்தம் தேவைப்படுகிறது'' என்றான் சிற்பி.

''அப்படி ஒரு சமயம் இது?''

''ஆம்.''

''என்ன அப்படி விசேஷம் இப்பொழுது ஏற்பட்டு விட்டது?''

''அழுத்தமான மனிதனைப் பார்த்தேன்.''

''யாரை?''

zeevaa

''உங்களுக்குக் குறுவாள் கொடுத்த சோழ இளவரசன் அதிராஜேந்திரனை'' என்ற சிற்பி, ''இந்தாருங்கள் உங்களைக் காக்கும் ஆயுதம்'' என்று குறுவாளை அரசகுமாரியிடம் நீட்டினான்.

அவன் பேச்சும் போக்கும் பரம விசித்திரமாயிருந்தது சுந்தரிக்கு. அவன் நீட்டிய குறுவாளைக் கையில் வாங்கிக் கொண்ட கலிங்க ராஜகுமாரி, ''சோழ இளவரசரை எங்கு சந்தித்தீர்கள்?'' என்று வினவினாள்.

சிற்பி சிறிதும் சிந்திக்காமலும் காலம் தாழ்த்தாமலும், ''துறவிகளின் இல்லத்தில் சந்தித்தேன். இரண்டு நாட்களுக்கு அவரது படைகள் மகாகிராமத்துக்குள் நுழையாது என்று வாக்குக் கொடுத்திருக்கிறார். நாளை நீங்கள் உங்கள் கணவர் இருக்கு மிடத்திற்குப் புறப்படலாமென்றும் சொன்னார்'' என்று சொன்னான்.

சுந்தரி கேட்டாள்: ''இன்றே கிளம்பினால் என்ன?'' என்று.

''தங்களைத் தொடராதபடி சுற்றுக்காடுகளில் உலாவும் அவரது முன்னணிப் படைகளுக்குக் கட்டளை அனுப்ப அவகாசம் வேண்டுமாம்'' என்று அதிராஜேந்திரன் சொன்னதைத் திருப்பிச் சொன்னான் சிற்பி.

சுந்தரியின் குழம்பாத மனமும் குழம்பியது. அச்சமற்ற அவள் சிந்தையிலும் அச்சம் தோன்றியது. தன்னைச் சிறை செய்ய இது ஒரு கபட நாடகமாக இருக்குமோ வென்று சந்தேகித்த சுந்தரி, ''என்னிடம் இத்தனை அக்கறை எதற்குச் சோழ இளவரசருக்கு?'' என்று வினவினாள், அவள் குரலில் சந்தேகம் மண்டிக்கிடந்தது.

அவள் சந்தேகத்தைக் கண்ட சிற்பி சிரித்தான். ''இதற்குச் சோழ இளவரசரே பதில் சொல்லிவிட்டார். அபலைகளிடம் போராடுவது அவருக்கு வழக்கமில்லையாம். அறவழிப் போரல்லாது வேறுபோர்

zeevaa

அவருக்குத் தெரியாதாம்'' என்று கூறினான் சிற்பி, சாதாரணமாக வெறியை உதிர்க்கும் அவன் பேச்சிலும் அன்று நிதானம் காணப்பட்டது.

இளவரசன் கருத்தைத் தான் வெளியிட்டதால் கலிங்க ராஜகுமாரி மகிழ்ந்து விடுவாளென்று சிற்பி எதிர்பார்த்ததால் அவன் ஏமாந்தே போனான். அரசகுமாரி சிறிது ஆத்திரத்துடனேயே கேட்டாள், ''அப்படியானால் எனது கணவருக்கு நிச்சயமாயிருக்கும் லீலாவதியைச் சோழர்கள் ஏன் சிறைப்பிடித்துக் கொண்டு போனார்கள்? அவள் ஏன் இன்னும் சோழர் சிறையில் வாடுகிறாள்?'' என்று.

பெண்களின் வக்ரபுத்தியை நினைத்து வியந்தான் சிற்பி. ''அரசகுமாரி! லீலாவதியையும் அவள் தாயாரையும் சிறைப் பிடித்தது இவரல்ல,'' என்று சொல்லவும் செய்தான்.

''இவரில்லாவிட்டால் இவர் பாட்டன். அவளை ஏன் சோழர்கள் விடுதலை செய்யவில்லை? அப்படி விடுதலை செய்யாதிருக்கச் சோழ இளவல் எந்தத் தத்துவத்தில் இங்கு படைகளை நடத்த வந்திருக்கிறார்? இதைத் துறவிகள் கேட்கவில்லையா?'' என்று வினவினாள் திரிலோகசுந்தரி.

''இல்லை. கேட்கவில்லை.'' சிற்பியின் குரல் வறண்டு கிடந்தது.

''ஏன்?''

''இந்தக் கேள்வி நன்றி கெட்ட செய்கையை வலியுறுத்தும். உங்களைக் காத்ததற்கு நாம் திருப்பிக் காட்டும் பண்பாடு அல்ல அது?''

அதற்குமேல் அரசகுமாரி பேசவில்லை. அன்று முழுவதும் பேசா மடைந்தையானாள். சிற்பியும் பேசவில்லை. 'அந்த

zeevaa

முரடர்களிட மிருந்து அதிராஜேந்திரன் காப்பாற்றியிருக்காவிட்டால் இந்த அரசகுமாரியின் கதி என்னவாகியிருக்குமோ?' என்று சிந்தித்தான்.

ஆனால் அரசகுமாரிக்கு அதிராஜேந்திரனிடமிருந்த வெறுப்பு அதிகப் பட்டதேயொழியக் குறையவில்லை. ஆகவே பெண் பிடிவாதத்தை எல்லை மீறிக்கொண்டு போனாள் திரிலோகசுந்தரி. அவளைப் பாதுகாப்பாக விஜயனிடம் சேர்ப்பிக்க அதிராஜேந்திரன் மறுநாள்காலையில் ரதத்தை அனுப்பியபோது அவள் அதில் ஏறவும் மறுத்தாள்.

அத்த ரதத்துடன் இன்னொரு ரதத்தில் வந்த தர்மர் முதலிய துறவிகள் அழைத்தும் அவள் அந்த விஹாரத்தை விட்டு நகர மறுத்தாள். "பெண்ணின் பிடிவாதம் எல்லையற்றது," என்று தர்மர் அலுத்துக் கொண்டார்.

"அனர்த்தத்தைத் தருவது," என்றார் அர்த்தர்.

"விஜயபாகுவிடம் செல்ல வேண்டிய துரிதத்தைக்கூட இவள் காட்டவில்லையே?" என்றார் காமர்.

"கழுத்தை அறுக்கிறாள்," என்று தமது கழுத்தை வழக்கம்போல் தடவிக் கொண்டார் மோக்ஷர்.

அப்பொழுது விஹாரத்திலிருந்து வேகமாக வெளி வந்த திரிலோகசுந்தரி அதிராஜேந்திரன் குறுவாளைச் சிற்பியிடம் கொடுத்து, "இதைச் சோழ இளவரசரிடம் கொடுத்து விடுங்கள். எனது நன்றியைத் தெரிவியுங்கள். விஜயபாகு வெற்றி வீரனாக இங்கு வந்து அழைத்துச் செல்லும்வரை நான் இங்கேயே இருக்கிறேன் என்று சொல்லுங்கள்," என்றாள்.

சிற்பி விழித்தான் ஏதும் புரியாமல்.

zeevaa

''சிற்பி விழிக்காதீர். கற்புள்ள மங்கையரின் வழி இது. சீதை இதைத்தான் அனுமாரிடம் சொன்னாள் அசோகவனத்தில்,'' என்றாள்.

''இங்கு அனுமார் யார்?'' என்று சிற்பி கேட்டான்.

''நீதான்,'' என்று கூறிவிட்டு வேகமாக விஹாரத்துக்குள் நடந்துவிட்டாள் விஜயமகாதேவி - (திரிலோகசுந்தரி).



## 24. பழைய காவியம் ! புதிய நிலை !

இராமகாதை கட்டுக் கதையல்ல. உண்மையாகவே நடந்த சரித்திரம் என்பதற்கு அத்தாட்சிகள் நாடு முழுவதும் விரவிக்கிடந்த இலங்கையில், பழைய இராமாயணத்தை மறுபடியும் படித்த கலிங்க ராஜகுமாரியின் முரட்டுத்தனத்தைக் கண்ட சிற்பியின் வெறிபிடித்த முகம், வெறி அதிகமாகி மிகவும் நீண்டுவிட்டதால் அனுமார் போலவே அவன் காட்சியளித்ததன்றி, தர்மரை நோக்கி, "தர்மரே ராஜகுமாரியை நான் வலுக்கட்டாயமாகத் தூக்கி வந்து விடட்டுமா?" என்று வினவவும் செய்தான்.

தர்மர் முகத்தில் கவலையும் சிரிப்பும் கலந்த சாயை தோன்றியது. "அப்படிச் செய்தால் நீ பழைய அனுமார் அல்ல," என்றார், சொல்லிலும் இடக்கு தோன்ற.

"அப்படியானால் இரண்டு அனுமார்கள் உண்டா?" என்று சிற்பி கேட்டான்.

"உன்னையும் சேர்த்தால் இரண்டு அனுமார்கள் ஏற்படுவார்கள். புத்தி, பலம், சாமர்த்தியம் மூன்றும் இணைந்த காவிய அனுமார் சீதை சொல்படி கேட்டார். விஜயஸ்ரீயுடன் வீரராமன் வந்து என்னை அழைத்துப் போகட்டும் என்றாள் சீதை. பழைய அனுமார் அவள் சொல்லைக் கேட்டார். விஜயபாகு வீரனாக என்னை அழைத்துப் போகட்டும் என்று விஜய மகாதேவி சொல்கிறாள். நீர் கேட்க மறுக்கிறீர். நவீன அனுமாரான உன்னையும் சேர்த்தால் இரண்டு அனுமார்கள் ஏற்படுவார்கள்," என்று தர்மர் சொன்னதை மற்ற

zeevaa

மூன்று துறவிகளும் ஒப்புக் கொள்ளும் பாவனையில் தலைகளை ஆட்டினார்கள்.

சிற்பியின் முகத்தில் வெறி அதிகமாகவே ஏறத் தொடங்கியது. ''எதற்குத் தலையாட்டுகிறீர்கள்?'' என்று இரைந்தான்.

''தர்மர் சொல்வதில் அர்த்தமிருக்கிறது'' என்றார் அர்த்தர்.

சிற்பி மேலும் சீறி, ''கலிங்க ராஜகுமாரியின் முடிவு தான் உங்கள் முடிவா?'' என்று கூவினான்.

''வீணாகக் கத்தாதே,'' என்றார் காமர்.

''இன்னொரு முறை கத்தினால் கழுத்தை முறித்துப் போடுவேன்,'' என்றார் மோஷர்.

சிற்பியின் வெறி உச்சக்கட்டத்தை அடையவே அவன் தனது கையிலிருந்த குறுவாளுடன் மோக்ஷர் மீது பாய்ந்தான். எதிர்பாராத அந்தப் பாய்ச்சலால் மோக்ஷர் கீழே விழுந்து விட்டாலும் சிற்பியின் கையை வெகு லாவகமாகப் பிடித்தார். சிற்பியின் இன்னொரு கையைப் பிடித்துத் திருகி அவனைத் தன்மீதிருந்து தரையில் தள்ளி அவன்மீது ஏறி உட்கார்ந்து கொண்டார். சிற்பியின் குறுவாள் கையையும் திருகி அதைக் கீழே உதிர்த்தார். தமது கைகளால் சிற்பியின் கழுத்தையும் பிடிக்கத் துவங்கினார்.

அதுவரை வாளாவிருந்த தர்மர், ''மோக்ஷர்! போதும். அவனை விடுவித்துவிடும்,'' என்று சமாதானப்படுத்த முயன்றார்.

''என்னைக் கொல்ல முயன்ற யாரையும் இதுவரை நான் கொல்லாமல் விட்டது கிடையாது,'' என்று மோக்ஷர் பிடிவாதம் பிடித்தார்.

அதற்குமேல் பேசாத தர்மர் கண்ணால் சைகை செய்யவே அர்த்தரும் காமரும் மோக்ஷரைப் பிடித்துப் பலவந்தமாகச் சிற்பியின் மீதிருந்து அப்புறப்படுத்தினார்கள். அப்பொழுதும்

zeevaa

அடங்காதிருந்த மோக்ஷரைத் தர்மரின் ஒரு பார்வை அடக்கிவிட்டது. ''மோக்ஷரே! சிவகோகர்ண ஸ்வாமியின் மீது ஆணை. நீர் இனிமேல் சிற்பியைத் தொடக்கூடாது,'' என்று கண்டிக்கும் குரலில் பேசினார். ''மோக்ஷரே! கலிங்க ராஜ குமாரியையும் விஜயபாகுவையும் காப்பாற்ற நாம் நம் குருநாதரால் நியமிக்கப்பட்டோம். நமது நண்பர்களுடன் சண்டைபோட அல்ல,'' என்றும் உஷ்ணத்துடன் சொற்களை உதிர்த்தார். ''சிற்பி! நீ அவரைக் கொல்ல முயன்றது தவறு. அவர் துறவி,'' என்று சிற்பியையும் எச்சரித்தார்.

சிற்பி பயங்கரமாக நகைத்தான். ''கழுத்தைப் பிடித்துக் கொல்வதுதான் துறவிகள் வேலையா?'' என்று விசாரித்தான் நகைப்பின் ஊடே.

''துறவியாயிருந்தாலும் தற்காத்துக் கொள்வது தர்மம்,'' என்றார் அர்த்தர்.

''பழைய துறவிகள் இப்படித்தான் செய்தார்களா?'' என்று கேட்டான் சிற்பி.

''இல்லை'' என்றார் காமர்.

''பழைய காலத்தில் சாபம் கொடுத்தார்கள்,'' என்றார் மோக்ஷர்.

''இப்பொழுது நீங்கள் சாபம் கொடுப்பதுதானே?'' என்று வினவினான் சிற்பி இகழ்ச்சியுடன்.

''அப்பனே!'' என்று ஆதரவுடன் அழைத்த தர்மர், ''காலத்துக்குக் காலம் முறைகள் மாறுகின்றன. பழைய காலத்தில் சாபம் பலித்தது. இப்பொழுது சண்டைதான் பலிக்கிறது. ஆகவே நாங்கள் முறையை மாற்றிக் கொண்டோம்,'' என்றும் சொன்னார், அன்பு சொட்டும் குரலில்: ''தமிழ் படித்திருந்தால் இது உனக்கும் தெரிந்திருக்கும்'' என்றும் கூறினார்.

சிற்பி திகைத்தான், ''தமிழா!'' என்று வினவினான்.

zeevaa

"ஆம், தமிழ் வழக்கு ஒன்று உண்டு. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல, கால வகையினானே' என்பது வழக்கு. பழைய வழக்கங்கள் மாறுவதும் புதிய வழக்கங்கள் வருவதும் தவறல்ல, காலமாறுதலின் விளைவு என்பது பொருள்," என்று தர்மர் உபதேசித்தார்.

சிற்பியின் கண்களில் திடீரென ஒளிவிட்டது. "தர்மரே! தாங்கள் கூறியது சரிதானே?" என்று கேட்டான்.

"முற்றும் சரி," என்றார் தர்மர், அவன் எதற்காகக் கேட்கிறான் என்பதை உணராமல்.

"அப்படியானால் நான் போய்க் கலிங்க ராஜகுமாரியைப் பலவந்தமாக இழுத்து வருகிறேன். சீதை அன்று சொன்ன பழைய வழக்கு இன்று செல்லாது," என்று கூறி உள்ளே செல்ல முயன்றான்.

அவனைத் தடுக்க முயன்ற தர்மர், "அப்பனே! சற்றுப் பொறு. நானே அரசகுமாரியை அழைத்து வருகிறேன்," என்று கூறிவிட்டு உள்ளே நுழைந்தார்.

அரசகுமாரி தனக்கு ஒழித்து விடப்பட்டிருந்த அறையில் கம்பீரமாக அமர்ந்திருந்தாள். தர்மரைக் கண்டதும் எழுந்திருக்க முயன்ற அரசகுமாரியை எழுந்திருக்க வேண்டாமென்று கையின் சைகையால் தடுத்த தர்மர், "அரசகுமாரி! இந்த வீண் மரியாதை எனக்குத் தேவையில்லை. நீங்கள் புறப்பட்டு வரப்போகிறீர்களா இல்லையா?" என்று வினவினார்.

"இல்லை," திட்டமாக வந்தது பதில்.

"ஏன்?"

"எதிரியின் கருணையால் கலிங்கராஜகுமாரி தப்பினாள் என்ற பெயரை நான் விரும்பவில்லை."

"இந்தப் புத்தி உங்களுக்கு நேற்று ஏன் இல்லை?"

zeevaa

''நேற்றா?''

''ஆம். கங்கைக் கரையில் உங்களை இழுத்துச் சென்ற முரடர்களிடமிருந்து உங்களைக் காப்பாற்றிய போது சோழ இளவரசரை ஏன் தடை செய்யவில்லை? முரடர்களுடன் சென்று விடுவதுதானே?''- இதைத் தர்மர் சிறிது வெறுப்புடனேயே கேட்டார்.

தர்மரின் கேள்வியால் கலங்கவில்லை கலிங்க ராஜகுமாரி. ''நேற்று அவர் யாரென்று எனக்குத் தெரியாது,'' என்றாள்.

''தெரிந்திருந்தால் முரடர்களுடன் போயிருப்பீர்கள்?'' என்று கேட்ட தர்மர், ''அரசகுமாரி! பெண்களின் வக்ர புத்திக்குக்கூட அளவிருக்க வேண்டும். வட சிங்களம் முழுவதும் சோழர் கையில் இருக்கிறது. சோழ இளவல் பண்பற்றவனாயிருந்தால் உங்களை சிறையில் வைத்து விஜயபாகுவிடம் சமாதானத்தைப் பற்றியோ சமரைப் பற்றியோ பேச முடியும். நீங்கள் இங்கேயே இந்த ராமாயணம் பேசிக் கொண்டிருப்பதால் சோழர்களுக்கு எந்தவித இடைஞ்சலும் இல்லை. விஜயபாகுவுக்கு ஏற்கனவே இருக்கிற தலைவலியோடு நீங்களும் சிக்கலை ஏற்படுத்தாதீர்கள். தவிர சோழர்கள் பெருந்தன்மைக்குக் கலிங்கர் பெருந்தன்மை தாழ்ந்தது என்ற அவப்பெயரைச் சம்பாதித்துக் கொடுக்காதீர்கள்,'' என்று கண்டிப்பு பெரிதும் ஒலித்த குரலில் பேசினார்.

திரிலோகசுந்தரி பதிலேதும் சொல்லவில்லை. ''நீங்கள் போகலாம். நான் இங்கேயே இருக்கிறேன்,'' என்றாள்.

அவளைப் புரிந்து கொள்வது மிகக் கஷ்டமாயிருந்தது தர்மருக்கு. ''அப்படியானால் விஜயபாகு உங்களை எங்களுடன் இங்கு அனுப்பியதற்கு ஏன் உடன்பட்டீர்கள்?'' என்று வினவினார் சினத்துடன்.

''அவர் உத்தரவை நான் மறுப்பதற்கில்லை,'' என்றாள் திரிலோகசுந்தரி. ''அவரிடமிருந்து உத்தரவு வரும் வரையில்

zeevaa

அல்லது அவர் வரும்வரையில் நான் இங்கிருந்து அசைய மாட்டேன்,'' என்று திட்டமாகச் சொன்னாள்.

அவளைத் திருத்த முடியாதென்பதைப் புரிந்து கொண்ட தர்மர் வெளியே சென்று, ''சிற்பி! சோழ இளவரசன் அனுப்பிய ரதங்களைத் திருப்பி அனுப்பி விடுங்கள். நாம் இன்று கிளம்பவில்லை என்பதையும் சொல்லி விடுங்கள்,'' என்றார். அடுத்த சில வினாடிகளுக்கெல்லாம் சோழ இளவல் அனுப்பிய ரதங்கள் திரும்பப் பறந்தன. வந்த இடத்தை நோக்கி.

அன்று முழுவதும் அந்தப் புத்த விஹாரத்தில் நான்கு துறவிகளுக்கும் சிற்பிக்கும் நிம்மதி ஏதுமில்லை. பகலில் ஓதப்பட்ட புத்த கோஷங்களை ரசிக்கும் மனப்பான்மை யாருக்கும் இல்லை. அரசகுமாரியும் அன்று முழுவதும் அறையை விட்டுக்கிளம்பாமல் தீர்க்க சிந்தனையுடன் இருந்தாள். சோழ இளவரசன் தன்னை முரடர்களிடமிருந்து விடுவித்தது எந்த வீரனும் செய்யக் கூடிய பணியானாலும் தான் எதிரியின் மனைவி என்று அறிந்த பின்பும் அவன் தனக்கு உதவ முன்வந்ததில் ஏதோ சூதிருக்குமென்று சந்தேகப்பட்டாள். அப்படி முளைத்த சந்தேகம் சோழ இளவரசனின் நல்ல குணங்களை புத்தியில் ஏறவிடாததால். தான் செய்ததுதான் சரியென்ற எண்ணத்தில் அன்று பொழுதைக் கழித்தாள்.

இரவு மூண்டு வெகுநேரத்துக்குப் பின்பு அவள் அறையிலேயே இருந்தாள். இரவு ஒரு ஜாமம்கூட ஓடிவிட்டது. துறவிகள் நால்வரும் தங்கள் மடத்துக்குச் செல்லாமல் விஹாரத்துக்கு உள்ளேயே காலம் கழித்தார்கள். சிற்பி மட்டும் விஹாரத்தின் வாயிலிலேயே உட்கார்ந்திருந்தான். இரண்டாவது ஜாம ஆரம்பத்தில் அந்த வீதியில் தடதடவெனப் புரவிகள் வரும் ஓசை கேட்கவே உட்கார்ந்திருந்த சிற்பி வாயிற்படியில் எழுந்து நின்றான். தடதடவென மிகுந்த வேகத்துடன் வந்த புரவிகள் திடீரென விஹாரத்தின் வாயிலில் நின்றன. அந்தப் புரவிகளை செலுத்தி வந்த பதினைந்து சோழ வீரர்களின் நடுவில் இரு பெரும்புரவிகள்

zeevaa

காட்சியளித்தன. அவற்றில் உட்கார்ந்திருந்த பிக்குவும் மூர்சமதும் கீழே இறங்கி, சோழ வீரர்களின் பாதுகாப்புடன் உள்ளே நுழையவும் செய்தனர். விஹாரத்தின் கூட்டத்தில் ஏற்பட்ட ஒலியைக் கேட்ட திரிலோகசுந்தரி வெளியே ஓடிவந்தாள். பிக்குவும் மூர்சமதும் சிறைப்பட்டு நிற்பதைக் கண்டு பிரமை பிடித்து நின்றாள். பிக்கு அவளைச் சுட்டுவிடுவதுபோல் பார்த்தார். "அரசகுமாரி! இந்த மகாகிராமம் எப்பொழுது சோழர் வசப்பட்டது! எதிரிகளிடம் இது அகப்பட்டுவிட்டதை நீங்கள் ஏன் எங்களுக்குத் தெரிவிக்க வில்லை?" என்று வினவவினார் குரலில் தணல் பறக்க, அவளைக் கேட்டதோடு விடவில்லை பிக்கு; "சிற்பி! துறவிகளே! உங்களை எதற்காக இங்கு விட்டுப் போனேன்?" என்று அவர்களையும் சுற்றி நோக்கி வினவினார்.

சிற்பி மெதுவாகச் சொன்னான், "இன்று காலை அரசகுமாரி கிளம்பியிருந்தால் நாங்களே அங்கு வந்திருப்போம்; செய்திக்கு அவசியமிருக்காது," என்று.

"ஏன் கிளம்பவில்லை?" என்று பிக்கு கேட்டார், சினம் அதிகமாகச் சித்தத்தில் ஏற.

"அரசகுமாரி வரமறுத்து விட்டார்கள்," என்றார் தர்மர்.

"ஏன்?" ஏதும் புரியாமல் கேட்டார் பிக்கு.

அதற்குமேல் தாமதிக்காத சோழவீரர்களின் தலைவன், "சரி வாருங்கள்! இரவு முழுவதும இங்கு நிற்க எங்களுக்கு உத்தரவில்லை" என்று கூறி, பிக்குவையும் மூர்சமதையும் திருப்பி அழைத்துக் கொண்டு வாயிலை நோக்கி நடந்தான்.

அப்பொழுது அரசகுமாரி சற்றே அசைந்தாள், மஞ்சத்திலிருந்து: "காவலர் தலைவரே! ஒரு நிமிடம்," என்றாள்.

காவலர் தலைவன் திருப்பினான். "என்ன அம்மணி?" என்றும் கேட்டான்.

zeevaa

"சிற்பி! அந்தக் குறுவாளைத் தலைவனிடம் காட்டு," என்றாள்.

குறுவாளைச் சிற்பி நீட்டியதும் தலைவன் நிமிர்ந்து நின்றான். "என்ன கட்டளை அம்மணி?" என்றும் வினவினான் மிகுந்த அடக்கத்துடன்.

"இவர்களுக்கு நான் பொறுப்பாளி. இங்கேயே விட்டுச் செல். சோழ இளவரசர் கேட்டால் இவர்கள் என்னுடனிருப்பதாகச் சொல்லிவிடு," என்று கூறினாள்.

தலைவன் சிறிது சிந்தித்தான். பிறகு தலைவணங்கி விட்டுக் காவலருடன் சென்று விட்டான். நடந்ததை அன்றிரவு கேட்ட அதிராஜேந்திரன் மெல்ல நகைத்தான்.

"அவர்கள் எல்லோரையும் சிறை செய்து இங்கு கொண்டு வரட்டுமா?" என்று காவலர் தலைவன் கேட்டான்.

"வேண்டாம்," என்ற அதிராஜேந்திரன் சிந்தனையில் ஆழ்ந்தான்.



zeevaa

# 25. அதிராஜேந்திரன் ஆணை

கலிங்க ராஜகுமாரியின் மனமாற்றத்துக்குக் காரணத்தை மற்றவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளாவிட்டாலும் அதிராஜேந் திரனுக்குப் புரிந்திருந்ததால், காவலர் தலைவன் சொன்ன செய்தியை அடுத்து யாரையும் சிறை செய்ய வேண்டாமென்று அறிவித்துவிட்டு, பிக்குவையும், மூர்சமதையும் சிறை பிடித்து வந்த காவலரையும் அனுப்பி விட்டு, தீவிர சிந்தனையில் ஆழ்ந்து அறைக்குள்ளேயே நடமாடிக் கொண்டிருந்தான் பல வினாடிகள். பிறகு அறைச் சாளரத்தை அணுகி வெளியே நோக்கினான். அந்த மாநகர் அந்த இரவில் மகோன்னதமாகக் காட்சியளித்தது. சுற்றிலும் எழுந்திருந்த பெரிய மலைகளும், நடுமலை மேலிருந்த கோயிலும், நகரெங்கிலும் செழிப்பாக வளர்ந்திருந்த பசுமையான மரங்களும், தூரத்தே சந்திர வெளிச்சத்தில் வெள்ளிப் பாளம்போல் நகர்ந்து கொண்டிருந்த மகாவலி கங்கையும் அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன.

இத்தனை அழகான நகரங்கள் பலவற்றையும் இயற்கையின் அபரிமிதமான வளப்பத்தையும் உத்தேசித்துத்தான் இந்த நாட்டைச் சொந்தமாக்கிக் கொள்ளச் சோழரும் பாண்டியரும் மற்றோரும் ஆதி முதல் முயன்று வந்திருக்கிறார்களென்று தீர்மானித்த சோழ இளவல், 'இன்னொருநாடு வளப்பமாயிருப்பதற்காக அதை வெற்றி கொண்டு சுரண்ட முயல்வது எப்படி நியாயமாகும்?' என்று தன்னைத்தானே வினவிக்கொண்டான். அன்று காலை நிகழ்ச்சி யையும் எண்ணிப் பார்த்து, 'அரசகுமாரியைத் தூக்கிச் செல்ல முயன்றவர்கள் சிங்களவர்தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால்

zeevaa



zeevaa

அவர்களை ஏவியது யாராயிருக்கும்' என்று வினவியும் விடை கண்டானில்லை.

அப்படி விடை காணாவிட்டாலும் ஓர் உண்மை தெரிந்தது அதிராஜேந்திரனுக்கு. விஜயபாகுவுக்குச் சோழர்களைவிட உள் நாட்டு எதிரிகள் அதிகமிருக்கிறார்கள் என்ற உண்மை அது. அரசகுலப் பெண்களை தூக்கிச் செல்லும் குற்றத்தைச் சோழர் மட்டும் செய்யவில்லை; சிங்களமும் அந்த அதர்மத்தைச் செய்வதில் சளைக்கவில்லை என்ற எண்ணமும் அவன் உள்ளத்தில் உதயமானதால் சிறிது புன்முறுவலே கொண்டான்.

கலிங்க ராஜகுமாரி மகாகிராமத்தை விட்டுப் போக மறுத்ததற்குக் காரணம் தான் இன்னதென்பதை அவன் அறிந்து கொண்டதே என்பதும், வீரமகளான கலிங்க மகள் விஜயபாகுவையே தனது விடுதலைக்கு எதிர்பார்க்கிறாளென்பதும் அவனுக்கு வெட்ட வெளிச்சமாகப் புரிந்திருந்ததால், அடுத்து தான் செய்ய வேண்டியது என்னவென்பதைப்பற்றிச் சிந்தித்து ஒரு முடிவுக்கும் வந்தான். சிங்களத்தின் நிலை விஜயபாகுவுக்குத் தெரிந்திருந்தால், சோழர் படைகள் மீண்டும் மகாதித்தாவில் வந்து இறங்கும் என்பதை எதிர்பார்த்திருந்தால், விஜயபாகு ஒருக்காலும் திரிலோக சுந்தரியையும் மற்றவர்களையும் இங்கு அனுப்பியிருக்க மாட்டான் என்பதைத் திட்டமாக நம்பினான் சோழ இளவரசன். தவிர, படைகள் இறங்கிய பத்து நாட்களுக்குள்அந்தப் படைகளைக் கொண்டு தான் மகாகிராமம் வரை ஆக்கிரமித்துவிட முடியுமென்பதைச் சிங்கள இளவல் சொப்பனத்தில்கூட எதிர்பார்த்திருக்க மாட்டனென் பதையும் எண்ணியபடியால் விஜயபாகுவின் கணக்குச் சிறிது தப்பிவிட்டதைப் புரிந்து கொண்ட அதிராஜேந்திரன் எதிரிக்கு விட்டுக் கொடுத்து அவனை முறியடிப்பதுதான் சிலாக்கியம் என்ற முடிவுக்கும் வந்து, அந்த முடிவின் விளைவாக நித்திரை கொள்ளப் பஞ்சணையிலும் படுத்தான்.

zeevaa

ஆனால் அதிக நேரம் உறங்க முடியவில்லை அதிராஜேந்திர னால், சிறிது நேரத்திற்கெல்லாம் அவனது பள்ளியறைக் கதவு லேசாகத் தட்டப்பட்டது. அடுத்து அந்தக் கதவு திறக்கப்பட்டு, காவலனொருவன் உள்ளே வந்து தலைவணங்கி நின்றான்.

பள்ளியறைப் பஞ்சணையில் படுத்திருந்தாலும், இரவோ பகலோ எந்நேரத்திலும் தன்னை எழுப்பலாம் என்று பொது விதி ஏற்படுத்தியிருந்த மகாவீரனான அதிராஜேந்திரன் பஞ்சணையில் எழுந்து உட்கார்ந்து கொண்டு, ''என்ன விசேஷம்?'' என்று வினவினான் வணங்கி நின்ற காவலனை நோக்கி.

''தங்களை அவசரமாகக் காண ஒருவர் வந்திருக்கிறார்,'' என்று கை நீட்டி வாய் புதைத்து மெதுவாகத் தெரிவித்தான் காவலன்.

''காலை வரை அவரால் காத்திருக்க முடியாதா?'' என்று அதிராஜேந்திரன் வினவினான் அமைதி நிரம்பிய குரலில்.

''முடியாதாம். காலையில் இங்கிருந்தால் ஆபத்தாம்,'' என்றான் காவலன்.

''நமது படைகள் வசமிருக்கும் இந்த நகரத்திலா!'' என்று வினவிய அதிராஜேந்திரனின் குரலில் லேசாக வியப்பு ஒலித்தது.

''அப்படித்தான் சொல்கிறார் அவர்,'' - காவலன் அதிகப் பணிவைக் காட்டினான்.

''அவர் பெயர்?'' அதிராஜேந்திரன் வினவினாள்.

''சொல்ல மறுக்கிறார்'' என்றான் காவலன்.

''அப்படியானால் போகச் சொல்,'' என்று மீண்டும் பஞ்சணையில் படுக்கப்போன சமயத்தில், ''எசமான்?'' என்று தடைக் குரல் கொடுத்தான் காவலன்.

''நான் சொன்னது உன் காதில் விழுந்ததா இல்லையா?''

zeevaa

''விழுந்தது எசமான். ஆனால் நீங்கள் பார்க்க மறுத்தால் ஒரு விஷயம் சொல்லச் சொன்னார்.''

''என்ன அப்பேர்ப்பட்ட விஷயம்?''

விஷயத்தை மெதுவாகத்தான் சொன்னான் காவலன். அது அதிர்ச்சி தரும் செய்தியாயிருந்தாலும் எந்த உணர்ச்சியையும் வெளியில் காட்டிக்கொள்ளாத அதிராஜேந்திரன் முகம் மட்டும் சிறிது சுளித்தது; புருவங்கள் சற்று மேலே உயர்ந்தன. ''இவர்தான் காலையில் அரசகுமாரியைத் தூக்கிச் செல்ல ஆட்களை அனுப்பிய மகாவீரரா?'' என்று மெதுவாக விசாரித்தான் அதிராஜேந்திரன்.

''அப்படித்தான் சொல்கிறார்,'' என்று காவலன் கூற, பஞ்சணையை விட்டு இறங்கி அருகிலிருந்த ஆசனத்தில் உட்கார்ந்து கொண்ட அதிராஜேந்திரன், ''சரி, அவரை வரச்சொல்,'' என்றான்.

காவலன் வெளியே சென்ற சில விநாடிகளில் தலை முழுவதையும் போர்த்திக் கொண்டு உள்ளே ஒரு மனிதன் நுழைந்தான். உள்ளே வந்ததும் தலை முக்காட்டைத் தள்ளி, தனது முகத்தைக் காட்டினான். பிறகு அந்த அறையைச் சுற்றும் முற்றும் நோக்கினான்.

அவன் அப்படி நோக்கிய காரணத்தைப் புரிந்து கொண்டதால், ''இது பள்ளியறை. இங்கு நான் யாரையும் பார்ப்பது கிடையாது. ஆகையால் உட்கார ஆசனமில்லை,'' என்ற அதிராஜேந்திரன், ''தாங்கள் யாரெனப் புரியவில்லை'' என்றும் சொல்லிப் புன்முறுவல் செய்தான்.

அந்த மனிதனின் முகத்தில் கடுமை தாண்டவமாடியது. ''இன்று காலை தங்களுக்கு ஒரு பெரிய தொண்டு செய்ய முயன்றேன்...'' என்றான் அவன்.

''ஆம். ஆம். சொன்னான் காவலன்,'' என்று அதிராஜேந்திரன் குரலில் நன்றியைக் காட்டினான்.

zeevaa

''தாங்கள் தலையிடாதிருந்தால் கலிங்க ராஜகுமாரி என் சிறையில் இருப்பாள்.'' - அவன் குரலில் சோழ இளவரசனைப் பற்றிக் குற்றச்சாட்டு இருந்தது.

''இந்த மாதிரி காரியத்திற்கு முயன்றது தாங்கள் என்பது தெரியாது. தாங்கள் யாரென்பதைச் சொல்லவில்லையே?'' என்று கேட்டான் அதிராஜேந்திரன் பணிவு நிரம்பிய குரலில்.

அந்த மனிதன் சிந்தித்தான். பிறகு அறிவித்தான், ''தங்களைப் போல் நானும் ஒரு இளவரசன்,'' என்று.

''அப்படியா! மிக்க மிகழ்ச்சி,'' என்றான் அதிராஜேந்திரன்.

''நான் கேசதாதுவின் தம்பி. இளைய கேசதாது என்று என்னை அழைக்கிறார்கள்.''

''தாங்கள்தானா அது!'' என்று கேட்ட அதிராஜேந்திரன் குரலில் வியப்பு ஒலித்தது.

''என்னைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்!''

''தங்களைப்பற்றி எப்படிக் கேள்விப்படாமலிருக்க முடியும்? சிங்களம் வந்தவுடன் உங்களைக் காணச் சோழ நாட்டிலேயே உத்தரவவாகியிருந்தது எனக்கு.''

''அப்படியானால் என் வேலை சுலபமாகிவிட்டது''

''என்ன வேலை? அரசகுமாரியைத் தூக்கிச் செல்லும் வேலைதானே?''

''அது ஒரு வேலை? இன்று காலை அதைச் செய்து முடித்திருந்தால் சோழர்களும் நானும் சமமாயிருப்போம்.''

''எப்படி?''

''சோழர்கள் சிங்கள மகாராணியையும் அவள் புதல்வியையும் சிறையில் வைத்திருக்கிறார்கள். திரிலோக சுந்தரியை நான் சிறையெடுத்திருந்தால் இருவரும் சமமாயிருப்போம்.''

zeevaa

அதிராஜேந்திரன் முகத்தில் சிறிது சினம் துளிர்த்தது. ''சோழர்கள் சிறை பிடித்தது போர் செய்து,'' என்று குறிப்பிட்டான் சோழ இளவரசன்.

'போரில் ஆள் சேதம் அதிகம். அதில்லாமலே இந்த அலுவலை நிறைவேற்றுவதுதான் புத்திசாலித்தனம்,'' என்ற இளையகேசதாது லேசாக நகைத்தான்.

அதிராஜேந்திரன் இதழ்களில் இடக்கான இளநகை விரிந்தது. ''அந்தப் புத்திசாலித்தனம் தங்களுக்கு இருக்கிறது?'' என்று வினவினான் இகழ்ச்சி ஒலித்த குரலில்.

''ஆம். இப்பொழுது விஜய மகாதேவியை நான் சிறை யெடுப்பதைத் தாங்கள் தடுக்காவிட்டால் அவனைச் சிறை வைத்து விஜயபாகுவையும் சிறை பிடிப்பேன். தவிர, விஜயபாகுவுக்கு எதிராக ருஹுணாவில் புரட்சியும் கிளப்புவேன். சிந்தித்துப் பாருங்கள். சோழர் படைத் தலைவரே! உங்களை எதிர்க்க விஜயபாகு படை திரட்டி வடக்கே வரும் சமயத்தில் நான் அவனைப் பின்புறத்தில் என் படைகளைக் கொண்டு தாக்குவேன். நீங்கள் வடக்கிலும் நான் தெற்கிலும் தாக்கினால் விஜயன் புரட்சியை நசுக்குவது மிகவும் எளிது,'' என்று திட்டத்தை விளக்கினான் இளைய கேசதாது.

அதிராஜேந்திரன் புன்னகை பூத்து, ''சரி, இளவரசரே! தங்கள் முதல் திட்டம் பூர்த்தியாகட்டும். அடுத்ததைப் பிறகு கவனிப்போம். அரசகுமாரியைக் கடத்திச் செல்லப் போதிய வீரர்களைக் கொண்டு வந்திருக்கிறீர்களா?'' என்று விசாரித்தான்.

''ஆகா... கொண்டு வந்திருக்கிறேன். இன்று காலை வந்த இருவரைத் தவிர, திடகாத்திரர்களான பத்துப்பேர் வந்திருக் கிறார்கள்,'' என்று உற்சாகத்துடன் சொன்னான் இளையகேசதாது.

''எங்கே அவர்கள்?''

''தென்புறக் காட்டிலிருக்கிறார்கள்.''

zeevaa

''சரி! உங்கள் வேலையைக் கவனியுங்கள்.''

''உங்கள் வீரர்கள்?''

''தலையிட மாட்டார்கள்.''

''நன்றி, சோழ இளவரசே! மீண்டும் சந்திக்கிறேன்,'' என்று சொல்லி வெளியே சென்றான் இளையகேசதாது.

இளையகேசதாது சென்ற பிறகும் பஞ்சணையில் படுக்கவில்லை அதிராஜேந்திரன். ''இன்றைக்கு ஏகாதசி தான்'' எனறு சொல்லி உள்ளூர நகைத்துக் கொண்டான். பிறகு அறைக் கதவைத்திறந்து காவலனை விளித்து, ''நீ விஹாரத்துக்குச் சென்று அங்குள்ள பிக்குவைக் கையுடன் அழைத்து வா,'' என்றான்.

அடுத்த ஒரு நாழிகைக்குள் வந்த பிக்குவிடம் சில பணிகளைச் சொன்னான். பணிகளைக் கேட்ட பிக்கு பிரமித்து நின்றார். சற்றுச் சிந்தித்ததும் உண்மை உதயமாக, அவர் முகம் பெரிதாக மலர்ந்தது. ''அதிராஜேந்திரா! உன்னைப் போன்றவர்களைப் பெற்றதால் சோழர் குலம் பெருமை அடைகிறது. நீ நீடூழி வாழவேண்டும்,'' என்று வாழ்த்தினார்.

''சென்று வாரும். நேரம் அதிகமில்லை,'' என்று அதிராஜேந்திரன் சொல்ல அறையிலிருந்து வேகமாக அகன்றார் பிக்கு.

zeevaa

# 26. விடுதலைப் பாதையில்...

அதிராஜேந்திரனையும் சோழர்களையும் வாழ்த்தி விட்டு மகாகிராமத்தின் பெரிய மாளிகையிலிருந்து வேகமாக கலிங்க ராஜகுமாரி இருந்த விஹாரத்துக்குத் திரும்பிய பிக்கு மற்ற நான்கு துறவிகளையும் சிற்பியையும் அழைத்து மந்திராலோசனை நடத்தத் துவங்கி, ''இனி நாம் இங்கு அரைக் கணம் இருந்தாலும் சோழர் சிறையில் தள்ளப்படுவோம்'' என்று கூறினார்.

இதைக் கேட்ட தர்மர் தமது முகத்தில் பெருவியப்பையும் இகழ்ச்சியையும் காட்டி, ''இதைத் தெரிந்து கொள்ளத்தானா அதிராஜேந்திரனிடம் போய் வந்தீர்?'' என்று வினவினார்.

''இதைச் சொல்லத்தானா சோழ இளவரசன் உம்மை அவசர அவசரமாக இந்த நள்ளிரவில் கூப்பிட்டு அனுப்பினான்?'' என்று அர்த்தர் வினவினார்.

பிக்கு அவ்விருவரையும் தமது கூரிய சுடு விழிகளால் நோக்கினார். ''அவனிருக்கும் நிலையில் அவன் வேறு என்ன செய்வானென்று எதிர்பார்க்கிறீர்கள்?'' என்று வினவவும் செய்தார்.

காமர் ஏதும் புரியாமல் விழித்தார். ''நீங்கள் சொல்வதைப் பார்த்தால் அவன் சிறை செய்வது நியாயம் என்கிறீர்கள்?'' என்று வினாவொன்றை வீசினார். அவர் கேள்வியில் பிக்குவைப் பற்றிய குற்றச்சாட்டு நன்றாகவே ஒலித்தது.

ஆனால் பிக்கு இதற்கெல்லாம் மசியாமல், அதிராஜேந்திரனை விட்டுக்கொடுக்காமல், ''உங்களால் சிறிது சிந்திக்க முடியுமானால்

zeevaa

சோழ இளவரசன் முடிவு எத்தனை நியாயமானதென்று தெரியவரும்,'' என்று பிடிவாதமாக அவன் பக்கமே பேசினார்.

''நீர் சிந்தித்து விட்டீர்?'' என்று மிக இளக்காரமாகக் கேட்டார் மோக்ஷர்.

''சிந்திக்கும் திறனை இந்தப் பிக்குவுக்குப் போதி சத்வர் அளித்துவிட்டார்,'' என்று சற்றுச் சலிப்புடன் சொல்பவர் போல் தற்பெருமையைக் காட்டிக்கொண்ட பிக்கு, ''சிவனடியார்களே! சிற்பி! எல்லோரும் சிந்தித்துப் பாருங்கள். இந்தச் சோழ இளவரசன் அரசகுமாரியை யாரென்று அறியா முன்னமே காப்பாற்றுகிறான். தெரிந்த பின்னும் சிறை செய்தானில்லை. தனது குறுவாளைக் கொடுத்து அரசகுமாரி தப்பிச் செல்லத் துணைபுரிகிறான். அவன் அளித்த வழியை, தப்பிச் செல்லக் காட்டும் மார்க்கத்தை, நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. விஜயபாகு வந்து தான் அழைத்துச் செல்லவேண்டுமென்று அரசகுமாரி பிடித்த பிடிவாதத்துக்கு நாமும் உடந்தையாயிருந்தோம். அரசகுமாரி ராமாயணம் படித்தாள்... அதையும் ஒப்புக் கொண்டு எதிரியின் பாசறைக்குள் உட்கார்ந்திருக்கிறோம். சிங்கள மன்னன் எந்த நிலையில் இருக்கிறார் என்பதை நாம் அறிவோம். அவர் படை திரட்டிச் சோழர்களை வெற்றிக் கொண்டு அரசகுமாரியை அழைத்துப் போவது எப்பொழுது? அவர் நாட்டு விடுதலைக்கும் போருக்கும் பாடுபடுவாரா, அரசகுமாரியை மீட்டுப் போக இங்கு வருவாரா? இங்குள்ள சோழர்களின் இரும்புப்படைக்குள் அவர் சிக்கிக் கொண்டால் சிங்களத்தின் பிற்காலம் என்னவாகும்?'' என்று வேகத்துடன் கேள்விகள் பலவற்றை வீசினார். ''அது மட்டுமல்ல, அதிராஜேந்திரனுக்கும் சில கட்டுப்பாடுகள் உண்டு. எதிரிகளை இந்த மகாகிராமத்தில் சுதந்திரமாக விட்டு வைத்திருப்பதை அவனது படைத்தலைவர்கள் விரும்ப மாட்டார்கள். அப்படி படைத் தலைவர் களின் நோக்கம் வலுத்தால் நம்மைச் சிறை செய்யாமலிருக்கச்

zeevaa

சோழ இளவசரனால் முடியாது,'' என்றும் அறிவித்தார் பிக்கு.

பிக்குவின் சொல்லாற்றலையும் வினாக்களின் வன்மையையும் கவனித்த தர்மர், ''பிக்கு!'' என்று நிதானமாக அழைத்தார் அமைதி நிரம்பிய குரலில்.

''என்ன தர்மரே?'' - பிக்கு கேட்டார் சலிப்புடன்.

''நீர் சொல்வதில் நியாயமிருக்கிறது,'' என்று துவங்கினார் தர்மர்.

''மகிழ்ச்சி,'' என்றார் பிக்கு.

''இதில் உமது மகிழ்ச்சி மட்டும் போதாது,'' என்று தொடர்ந்தார் தர்மர்.

''வேறு என்ன வேண்டும்?'' என்று பிக்கு கேட்டார்.

''யோசனை,'' என்ற தர்மர், ''அடுத்து என்ன செய்ய வேண்டும்? அதைச் சொல்லும்,'' என்று கேட்டார்.

பிக்கு, இதற்கு உடனடியாகவோ நேரிடையாகவோ பதில் சொல்லவில்லை. சிறிது சங்கடத்துடன் பேசத் துவங்கிய பிக்கு, ''தர்மரே ! கலிங்கத்திலிருந்து சிங்கள மன்னன் குலதனத்தை, அந்த மாணிக்கத்தை எப்படிச் சிம்மபுரி அரண்மனையின் பாதாள அறையிலிருந்து எடுத்து வந்தேன் தெரியுமா?'' என்று கேட்டார்.

''கலிங்க மன்னனையும் மீறித்தான் நீர் அதைக் கொண்டு வந்திருக்க வேண்டும்,'' என்றார் தர்மர்.

''திருடி வந்தேன் என்று தைரியமாகவே சொல்லலாம்,'' என்ற பிக்கு, ''திருடுவது நல்லதல்ல, தர்மமுமல்ல, என்றாலும் சில நன்மைகளையும் நியாயங்களையும் முன்னிட்டு அதையும் செய்ய வேண்டியதாயிருக்கிறது'' என்று விளக்கமும் கொடுத்தார்.

zeevaa

பிக்கு சொன்னதை ஓரளவு புரிந்து கொண்ட அர்த்தர். "இங்கும் திருடவேண்டும் என்கிறீர்?" என்று கேட்டார்.

பிக்கு, அர்த்தரை மட்டுமின்றி மற்றவர்களையும் நோக்கி, "அரசகுமாரியையும் விஜயபாகுவையும் காப்பாற்ற, சிவகோகர்ண ஸ்வாமியால் நியமிக்கப்பட்டு நீங்கள் சிங்களம் வந்தீர்கள். மகாரத்தினத்தையும் காத்து இங்கு கொண்டு வருவது எனது பணியாயிற்று. அந்தப் பணிகள் வெற்றியுடன் முடிய நாம் எந்த முறையிலும் இறங்குவது தவறாகாது," என்றார்.

"எந்த முறை? தெளிவாகச் சொல்லும்" என்றார் மோக்ஷர்.

"வன்முறை. அரசகுமாரியைப் பாதுகாத்து விஜயபாகுவிடம் சேர்ப்பது நமது கடமை. அரசகுமாரி தானாக வராவிட்டால் வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்வது நமது பொறுப்பு." என்ற பிக்கு மற்றவர்களைப் பார்த்தார். "அரசகுமாரியை நாம் கொண்டு செல்லாவிட்டால் பொழுது விடிவதற்குள் அவள் எதிரி வசமிருப்பாள்," என்றும் சொன்னார்.

இதைக் கேட்ட மற்றவர்கள் முகத்தில் கவலை விரிந்தது. "இந்த விபரீதத்தைத் தடுக்க நாம் என்ன செய்யவேண்டும்?" என்று தர்மர் கேட்டார்.

"எதிரிகள் அரசகுமாரியைத் தூக்கிச் செல்வதைவிட நாமே தூக்கிச் செல்லலாம்." என்ற பிக்கு மற்றவர்கள் சுடுபார்வையிலிருந்து தப்ப வேறு மார்க்கத்தில் தமது பார்வையைத் திருப்பினார்.

மற்ற நான்கு துறவிகள் முகங்களிலும் எள்ளும் கொள்ளும் வெடித்ததென்றால் சிற்பி திடீரெனப் பயங்கரச் சிரிப்பை உதிர விட்டான். "துறவிகளுக்கு வரவரத் தர்மப்பணிகள் அதிகமாகின்றன. துணிவும் அதிகமாகின்றது. அரசகுமாரியைத் தூக்கிச் செல்வது வரை துணிவு அதிகரித்துவிட்டது. ஹி...ஹி..." என்று மீண்டும் நகைத்தான்.

zeevaa

அவன் நகைப்பைத் தொடர்ந்து புரவிகள் பல வரும் குளம்படிச் சத்தம் வீதியில் கேட்கவே துறவிகள் எழுந்து வாயிற் பக்கம் விரைய முற்பட்டார்கள். அப்பொழுது பிக்கு சொன்னார், "நிலைமை தலைக்கு மேல் போய்விட்டது. ஆகையால் நாம் எந்த எதிர்ப்பையும் காட்ட வேண்டாம்," என்று.

துறவிகள் பிக்குவின் பேச்சைக் கேட்பதற்கு முன்பே வாயிலில் இறங்கிய புரவிவீரர் பத்துப்பேர் தடதடவென்று விஹாரத்துக்குள் நுழைந்தனர். அந்த அரவத்தைக் கேட்டு உள்ளறைகளிலிருந்து வெளிவந்த புத்தத் துறவிகளை அங்கு வந்த காவலர் தலைவன், "யாரும் எந்த எதிர்ப்பையும் காட்டவேண்டாம். பேசாமலிருப் பவர்களுக்குத் தீங்கு ஏதுமில்லை. எதிர்ப்பைக் காட்டு பவர்கள் துறவிகளாயிருந்தாலும் வெட்டப்படுவார்கள்," என்று எச்சரித்தான்.

பிறகு திபுதிபுவென்று விஹாரத்துக்குள் நுழைந்த வீரர்கள் சிறிது நேரத்திற்கெல்லாம் அரசகுமாரியை வாள்முனையில் அழைத்து வந்தார்கள் வெளியே. "அரசகுமாரி! நீங்கள் பேசாமல் வரும் வரையில் உங்களுக்கு எந்த ஆபத்தும் நேரிடாது" என்று எச்சரித்த காவலர் தலைவன் "இங்கு பிக்கு என்பது யார்?" என்று வினவினான்.

"நான்தான். உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார் முன்னால் வந்த பிக்கு.

"சிற்பி?" அடுத்து எழுந்தது காவலர் தலைவன் கேள்வி.

சிற்பி, பதிலுக்கு வெறிபிடித்த சிரிப்பு ஒன்றை வெளியிட்டான். சிற்பியைச் சுட்டு விடுவது போல் பார்த்த தலைவன் சினத்தைக் காட்டினாலும் ஏதும் பேசாமல் பிக்குவை நோக்கி, "நீங்களும் துறவிகளும் வர அதோ அந்தப் பெரிய மூடுவண்டி இருக்கிறது. ஏறுங்கள் அதில்," என்று கட்டளையிட்டான்.

zeevaa

''எங்கு போக?'' என்று வினவினார் பிக்கு.

''விருந்துக்கு,'' என்ற தலைவன் நகைத்தான். பிறகு காவலரை நோக்கி, ''இந்தச் சாமியார்களையும் அந்தப் பைத்தியத்தையும் வண்டியில் ஏற்று,'' என்று உத்தரவிட, காவலர்கள் வாட்களின் முனையில் எல்லோரையும் வண்டியில் ஏற்றத் துவங்கினார்கள்.

பிக்கு மட்டும் காவலர் தலைவனை நோக்கி, ''எனது பூஜைப் பையை எடுத்து வர ஒரு நிமிஷம் அவகாசம் வேண்டும்'' என்று மன்றாடினார்.

அதற்குக் காவலர் தலைவன் அனுமதி கொடுக்கவே உள்ளே சென்று ஒரு பெரிய பையை எடுத்துவந்த பிக்கு, யாருடைய உதவியும் இல்லாமல் தாமே வண்டியில் பையுடன் ஏறினார்.

அரசகுமாரிக்கு மட்டும் தனிப் புரவியொன்றைக் காவலன் கொண்டு வந்திருந்தான். அந்தப் புரவி மிகவும் கறுத்ததாய், போர்ப் புரவி போலிருந்ததால் அரசகுமாரி அதில் அனாயாசமாக ஏறினாள். புரவியில் ஏறியபிறகுதான் அரசகுமாரி வினவினாள், ''நீங்கள் யார்?'' என்று.

''போகுமிடத்தில் புரிந்து கொள்வீர்கள்,'' எனறான் காவலர் தலைவன்.

''போகுமிடம் எது?'' என்று சீற்றத்துடன் கேட்டாள் அரசகுமாரி.

''போனவுடன் தெரியும்,'' என்றான் காவலர் தலைவன்.

அரசகுமாரி அதற்குப் பிறகு கேள்வி எதுவும் கேட்கவில்லை. புரவியைத் தட்டிவிட்டு நடத்தினாள்.

வண்டிக்குள் திணிக்கப்பட்ட சைவத் துறவிகளும் சிற்பியும் சற்றுப் பிரமிப்பிலிருந்தாலும் பிக்கு மட்டும் இடித்த புளிபோல் எந்த உணர்ச்சியையும் காட்டாமல் பையை மடியில் வைத்துக் கொண்டு

zeevaa

இறுகப் பிடித்த வண்ணம் உட்கார்ந்திருந்தார். வண்டி நகர்ந்த சிறிது நேரம் கழித்து, ''பிக்கு!'' என்று மெதுவாக அழைத்தார் தர்மர்.

''என்ன?'' ரகசியமாகக் கேட்டார் பிக்கு.

''நம்மைச் சிறை செய்த வீரர்கள் சோழ வீரர்களாகத் தெரியவில்லை,'' என்று சுட்டிக் காட்டினார்.

''ஆம்,'' பிக்கு எதிலும் பட்டுக்கொள்ளாமல் 'ஆம்' கொட்டினார்.

''உடையையும் தோற்றத்தையும் பார்த்தால் சிங்கள வீரர்களாகத் தெரிகிறது'' என்றார் தர்மர்.

''அப்படித்தான் தெரிகிறது,'' என்று பிக்கு ஒப்புக் கொண்டார்.

''சோழர் ஆதிக்கத்திலிருக்கும் மகாகிராமத்துக்குள் சிங்கள வீரர் எப்படித் தைரியமாக வரமுடியும்?'' என்று தர்மர் மேலும் கிண்டினார்.

''எனக்கும் வியப்பாகத் தானிருக்கிறது,'' என்றார் பிக்கு.

''ஒருவேளை இந்த வீரர்களைச் சிங்கள மன்னர் அனுப்பி யிருப்பாரோ?''

''இருக்கலாம்.''

''அப்படியானால் அவர்கள் ரகசியமாகவல்லவா வர வேண்டும்?''

''அதுதான் முறை.''

பிக்கு எதற்கும் பிடி கொடுக்காமல் பேசவே, ''பிக்கு! உமது மனத்தில் ஏதோ இருக்கிறது,'' என்றார் தர்மர்.

''ஆம்.''

''என்ன பிக்கு?''

zeevaa

''இவர்களிடமிருந்து தப்பும் யோசனை.''

''அதற்கு என்ன செய்ய உத்தேசம்?''

''காட்டுப்பகுதி வந்ததும் கேளும்'' என்ற பிக்கு வண்டியில் நன்றாகச் சாய்ந்து கொண்டார். வண்டியில் கட்டப்பட்ட புரவிகள் வேகத்தைக் காட்டின.

அடுத்த இரண்டு நாழிகைகளில் காட்டுப் பகுதியின் முகப்புத் தென்படவே பிக்கு மெதுவாகத் தர்மரை அழைத்துப் பின்னால் வரும்படி சைகை செய்து தான் முன்னால் நகர்ந்தார். கையிலிருந்த பெரிய பையைச் சிற்பியிடம் திணித்தார். அடுத்த சில விநாடிகளில் அடர்ந்த காட்டுக்குள் வண்டி புகுந்ததும் வண்டியை ஓட்டியவன் தனது கழுத்தில் பலமான ஒரு கை விழுவதைக் கண்டு திரும்பினான், கையில் குறுவாளை ஏந்தி. அடுத்து அவன் கழுத்து வலுவாக உள்ளே இழுக்கப்பட்டு, குறுவாளும் பறிக்கப்பட்டது. ''மோக்ஷரே! இவனைக் கவனியும்,'' என்ற பிக்கு புரவியின் கயிறுகளை உள்ளிருந்தபடியே பற்றி வண்டியைச் செலுத்தினார். முன்னே அரசகுமாரியைச் சுற்றிச் சென்ற வீரரில் ஒருவன் வண்டியைத் திரும்பி நோக்கிக் காவலர் தலைவனை விளித்து, ''வண்டியில் சாரதியைக் காணோம்,'' என்றான்.

''ஆனால் வண்டி சரியாகவே ஓடுகிறது,'' என்றான் இன்னொரு வீரன்.

''தூங்கி உள்ளே சாய்ந்திருப்பான்,'' என்று அதற்கு அலட்சிய மாக அவன் விளக்கம் தந்து கொண்டிருக்கையில் வண்டி காட்டுக்குள் புகுந்து விட்டதன்றி முன்னே சென்ற புரவிகளுக் கிடையிலும் பாய்ந்தது. வண்டி தங்களுக்கிடையில் புகுந்து விட்டதாலும் புரவிகள் இடித்ததாலும் நிலை குலைந்த பத்து வீரர்களும் பக்கவாட்டில் சிதறினார்கள்.

zeevaa

அந்த விநாடியில் பிக்குவும் மற்றத் துறவிகளும் துரிதமாகச் செயலில் இறங்கினார்கள். உள்ளே இழுக்கப்பட்டு மோக்ஷராால் மோட்சமளிக்கப்பட்ட சாரதியின் வாளை உருவிக்கொண்டு வண்டியின் முகப்பில் தோன்றி, காவலர் தலைவன் மீது பாய்ந்துவிட்ட பிக்கு அவனைப் புரவியிலிருந்து தள்ளி, தான் அந்தப் புரவியில் ஆரோகணித்து வாளை நாலா பக்கங்களிலும் சுழற்றலானார். சில விநாடிகளுக்கெல்லாம் எதிரி வீரர்கள் இருவர் அவர் வாளுக்குப் பலியானதும் அரசகுமாரியின் புரவிக் கயிறுகளைத் தமது பக்கமாக இழுத்துக் கொண்டார்.

அதே சமயத்தில் வண்டியிலிருந்து குதித்த துறவிகள் நால்வரும் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட சண்டையில் கலைந்துவிட்ட எதிரி வீரர்கள் இருவரைப் புரவியிலிருந்து இழுத்துக் கீழே தள்ளி வாட்களைப் பிடுங்கிக் கொண்டார்கள். அர்த்தரும் காமரும் கீழே கிடந்த மலைக் கூழாங்கற்களை எடுத்து மற்ற வீரர்களின் மண்டைகளுக்குக் குறி பார்த்து வீசவே மண்டை பிளந்த இரு வீரர்கள் அலறிக் கீழே விழுந்தார்கள். பத்து வீரர்களில் அறுவர்களுக்கு மேல் சமாளிக்கப்பட்டவுடன் தறிகெட்டு ஓடமுயன்ற புரவிகளைப் பிடித்து அவற்றின் மேல் ஏறிக்கொண்ட துறவிகள், அரசகுமாரியின் புரவி நடுவில் வர, துரிதமாக பயணத்தைத் துவங்கினார்கள். வெறிபிடித்த சிற்பிமட்டும் வண்டிப் புரவிகளைத் தூண்டி, பயங்கரவேகத்தில் செலுத்தினான்.

காட்டின் அடர்த்தியான பாகத்தில் கால் பாகத்தைத் தாண்டியதும் மற்றொரு புரவிப்படை அவர்களை எதிர்த்து வந்தது. 'இனி தப்ப முடியாது, இதுதான் முடிவு,' என்று தர்மர் எண்ணினார். அந்தச் சிறு புரவிப்படை நேராக அவர்களை நோக்கி வந்ததால் அபாயம் மிஞ்சி விட்டதைத் தர்மர் புரிந்து கொண்டார். "அரசகுமாரி அடைந்த விடுதலை அர்த்தமற்றதாகி விட்டது," என்று தமக்குள் சொல்லிக்

zeevaa

கொண்டார். அந்தப் புரவிப் படையின் காவலன் நேராக அரசகுமாரியை நோக்கி வந்து அவள் புரவிக்கு எதிரில் தனது புரவியை நிறுத்தினான்.



# 27. உள் மண்டபக் காட்சி

பிக்குவின் சமயோசித நடவடிக்கையாலும் சாமர்த்தியத்தினாலும் சிங்கள வீரர்களிடமிருந்து தப்பிய திரிலோக சுந்தரி, சோழர்களின் சிறுபடைப் பிரிவு ஒன்று தன்னை நோக்கி வந்ததையும், அதன் தலைவன் நேராக அவன் புரவியைத் தனது புரவி முன்பு கொண்டுவந்து நிறுத்தியதையும் கண்ட பிறகும்கூடச் சிறிதளவும் அச்சத்தைக் காட்டாமல் தனது புரவிமீது சற்று நிமிர்ந்து திடமாக உட்கார்ந்தாள்.

அப்படி அவள் தனது துணிவைக் காட்டிய பிறகும் அந்தச் சிறு படையின் தலைவன் தங்களைத் தாக்காததையும், தனது வீரர்களைத் தூண்டி, பிக்குவையும் மற்றோரையும் மடக்கக்கூட முற்படாததையும் கண்டு வியப்பே எய்தினாள். அந்தப் படைத்தலைவன் தன்னை நோக்கித் தலைவணங்கியதும் அவள் வியப்பு உச்சநிலையை அடைந்ததால் பின்னால் புரவியில் வந்த பிக்குவைத் திரும்பி நோக்கினாள்.

பிக்கு தமது முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல் தமது புரவியைத் தூண்டி அரசகுமாரியின் பக்கத்தில் நிற்க வைத்துச் சோழர் சிறு படையின் தலைவனை நோக்கி, "வீரரே! தாங்கள் யார்? தங்களுக்கு என்ன வேண்டும்?" என்று வினவினார்.

படைத் தலைவன் பிக்குவை ஒரு விநாடி உற்று நோக்கிவிட்டு மற்ற துறவிகள்மீதும் கண்களை ஓடவிட்டான். பிறகு தனது பார்வையைப் பிக்கு மீது நாட்டி, "பிக்கு என்பது நீங்களாகத் தானிருக்க வேண்டும்," என்றான்.

zeevaa



zeevaa

''ஆம். நான்தான்,'' என்றார் பிக்கு மிகவும் அமைதியான குரலில்.

''நான் அரசகுமாரியிடம் தனியாகப் பேசவேண்டும். நீங்கள் மட்டும் உடன் இருப்பதுபற்றி ஆட்சேபனையில்லை,'' என்று கூறினான்.

''எங்கள் எல்லோர் முன்னிலையிலும் அரசகுமாரியிடம் சொல்ல வேண்டிய எதையும் சொல்லலாம். அது கிடக்கட்டும்; நீங்கள் யார் என்று கேட்டேனே, அதற்கு பதில் இல்லையே,'' என்றார் பிக்கு.

''சோழர்கள் வசமிருக்கும் மகாமா (மகாகிராமம்) வின் படைப் பிரிவின் தலைவன் நான். உங்கள் எல்லோர் முன்னிலையிலும் பேச உத்தரவில்லை,'' என்ற அந்த வீரன், ''மற்றவர்களைச் சற்றுத் தள்ளியிருக்கச் சொல்வது நல்லது'' என்றுகூறித் தர்மர் முதலியவர்களைத் தனது கையால் சுட்டிக் காட்டினான்.

தர்மர் முகத்தில் இகழ்ச்சியைக் காட்டினார். ''தலைவனே! உன்னுடன் வந்திருப்பவர் பதினைந்து பேர்களுக்கு மேல் இல்லை,'' என்று சுட்டிக்காட்டினார்.

அதை ஒப்புக்கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த படைத்தலைவன், ''அதனால் என்ன.'' என்று வினவினான்.

''இப்பொழுதுதான் பத்துப்பேர் கொண்ட சிங்களப் படையை முறியடித்தோம்,'' என்றார் தர்மர்.

''ஆம்... பார்த்தேன்,'' என்றான் படைத் தலைவன்.

''பார்த்தாயா!'' அர்த்தர் வாயைப் பிளந்தார்.

''ஆம்.'' வீரன் ஆமோதித்தான்.

''பார்த்துமா உதவிக்கு வரவில்லை?'' - அர்த்தர் வியப்புடன் வினவினார்.

zeevaa

''இல்லை.''

''ஏன்?''

''உங்களைச் சிறைபிடித்தவர்களுக்கு வாக்கு கொடுத்து விட்டோம்.''

''என்ன வாக்கு?''

''அந்தச் சண்டையில் தலையிடுவதில்லை என்று.''

''யார் கொடுத்தது வாக்கு? யாருக்கு?'' தர்மர் கேட்டார்.

''உங்களைச் சிறை பிடித்தவர்களுக்கு,'' என்ற படைத் தலைவன் முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல், ''பிக்குவுக்குத் தெரியும், பிறகு கேளுங்கள். நான் திரும்ப வேண்டும். நேரமாகிறது,'' என்றான். பிறகு பிக்குவையும் தனியாக வரச்சொல்லிப் பத்தடி தூரம் தனது புரவியைச் செலுத்திவிட்டு அரசகுமாரி, பிக்கு இவர்களின் வருகையை எதிர்பார்த்து நின்றான்.

அவன் சொன்ன பல விவரங்களால் குழப்பமடைந்த அரசகுமாரி அதற்குமேல் தாமதிக்காமல் அந்த வீரன் புரவியுடனிருந்த இடத்துக்குத் தனது புரவியைச் செலுத்தினாள். பிக்குவும் தர்மர் முதலியோரை வரவேண்டாமென்று கண்ணசைவினாலேயே எச்சரித்துத் தடுத்துவிட்டு அரசகுமாரியுடன் தமது புரவியை நகர்த்தினார். அவர்களிருவரும் தனியாக வந்ததும் படைப்பிரிவின் தலைவன் தனது அங்கியின் பக்கப் பையிலிருந்து நீண்ட மெல்லிய குழல் ஒன்றை எடுத்து அரசகுமாரியிடம் நீட்டினான். ''இதைச் சிங்கள இளவலிடம் கொடுத்து விடுங்கள். இதைப் பகிரங்கப்படுத்த வேண்டாமென்றும் சொல்லுங்கள்'' என்று கூறினான்.

அரசகுமாரி அந்தச் சிறு குழலைத் திருப்பிப் பார்த்தாள். குழலின் மீது ஒரு பட்டுச்சீலை சுற்றப்பட்டுக் குழலின் வாய்களில் முத்திரை வைக்கப்பட்டிருந்தது. குழலின் மீது விஜயபாகுவின் பெயரும் பொறிக்கப்பட்டிருந்தது. ''இதைக் கொடுக்க இத்தனை ரகசிய மென்ன?'' என்று வினவினாள் அரசகுமாரி.

zeevaa

படைத் தலைவன் சிறிதும் சிந்தனை செய்யாமல், "அரசகுமாரி! இந்தக் குழலைக்கொடுக்க ரகசியம் தேவையில்லை. ஆனால் எங்கள் தலைவர் சொன்ன செய்தி ஒன்றிருக்கிறது. அதைக் கேளுங்கள். உங்கள் பிடிவாதத்தைச் சிறிது குறைத்துக் கொள்ளும்படி எங்கள் தலைவர் சொல்லச் சொன்னார். அவர் கொடுத்த குறுவாளை உபயோகப்படுத்தி நீங்கள் உடனடியாகக் கிளம்பியிருந்தால் சிங்களவர் கைகளிலிருந்து நீங்கள் தப்பி யிருக்கலாமென்றும் கூறச்சொன்னார். உங்கள் பிடிவாதத்தால் ஏற்பட்ட இந்தக் காட்டு நிகழ்ச்சிகளுக்கு வருத்தம் தெரிவிக்கவும் சொன்னார். உங்களுக்கு ஆட்சேபணையில்லாவிட்டால் இந்தக் காட்டு எல்லைவரை உங்களை ஜாக்கிரதையாகக் காப்பாற்றிக் கொண்டுவிடும்படியும் உத்தரவிட்டார்," என்று செய்திகளை ஒப்புவித்தான்.

அரசகுமாரிக்கு அவன் சொன்னது எல்லாமே பிரமிப்பா யிருந்ததால் அவள் பதிலேதும் சொல்லாமல் பிக்குவை நோக்கினாள். பிக்கு படைத்தலைவனை நோக்கி, "வீரனே! சோழ இளவரசருக்கு விஜயமகாதேவி நன்றி தெரிவிப்பதாகச் சொல்லுங்கள். விஜய மகாதேவியின் பிடிவாதம் சாதாரணப் பிடிவாதமல்லாததாலும் அதற்குப் புராண உதாரணம் இருப்பதாலும் அதைப்பற்றி மறந்து விடும்படி சொல்லச் சொன்னார்கள் என்றும் கூறுங்கள்," என்று சோழ இளவலுக்குப் பதில் சொல்லிவிட்டு, "இந்தக் காட்டைக் கடக்க உங்கள் படை வரவேண்டாம். நாங்களே போய் விடுவோம்," என்று படைத் தலைவனிடம் கூறினார்.

அதற்குப்பிறகு படைத் தலைவன் ஏதும்பேசவில்லை. புரவிமீது விறைத்து ராணுவபாணியில் உட்கார்ந்து தலையால் மட்டும் வணங்கிவிட்டுத் தனது புரவியைத் திருப்பிக்கொண்டு வேகமாக மகாகிராமம் பாதையில் சென்றான். அவன் வீரர்களும் அவனைத் தொடர்ந்து சென்றனர்.

அவர்கள் சென்றதும் தர்மர் முதலிய மற்றவர்கள் தங்கள் புரவிகளை அரசகுமாரியிருந்த இடத்துக்கு நடத்தி வரவே, "இனி

zeevaa

நாம் புறப்படலாம்,'' என்று பிக்கு கூறிவிட்டுத் தமது புரவியைக் காலால் உதைத்துத் தூண்டினார். ஆனால் அரசகுமாரி அசைய மறுத்தாள். ''பிக்கு, முதலில் நாம் தப்பிய விவரம் எனக்குத் தெரியவேண்டும். அந்தப் படைத்தலைவன் என்ன திமிராகப் பேசினான்?'' என்று கேட்டாள்.

பிக்குவின் முகத்தில் சிறிது சஞ்சலம் தெரிந்தது. ''பேசியது அவனல்ல,'' என்றார் மெதுவாக.

''வேறு யார்?'' - அரசகுமாரி சீறினாள்.

''சோழ இளவல். அவர் சொன்னதை இவன் திருப்பிச் சொன்னான்,'' என்ற பிக்கு சமாளிக்கப் பார்த்தார்.

''அப்படியானால் நாம் தப்பியது சோழ இளவரசன் தயவினாலா?'' என்று அரசகுமாரி மீண்டும் கேட்டாள்.

பிக்கு இதற்கு நேரிடையாகப் பதில் சொல்லவில்லை. ''முற்றும் அவர் தயவென்று சொல்ல முடியாது. நமது திறமையும் கலந்திருக்கின்றது,'' என்று மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தமது பேச்சுக்குச் சப்பைக்கட்டு கட்டினார். ''காட்டில் எதிரிகளை நாம் முறியடித்தோமா? சோழர் வீரர்கள் முறியடித்தார்களா?'' என்று ஒரு கேள்வியையும் அத்தாட்சியாக வீசினார்.

பிக்குவின் சாமர்த்தியத்தில் சுந்தரி ஏமாறாததால் ''பிக்கு! எதையோ மறைக்கிறீர்,'' என்றாள்.

''அதில் சந்தேகமில்லை,'' என்றார் அருகிலிருந்த தர்மரும்.

''மறைக்க இதில் என்ன இருக்கிறது?'' என்று வினவினார் பிக்கு, சிறிது எரிச்சலுடன்.

''அதைத்தான் நாங்கள் தெரிந்து கொள்ளப் பார்க்கிறோம்'' என்று அர்த்தர் இடைபுகுந்தார்.

zeevaa

சற்றுத் தூரத்திலிருந்த மூடுவண்டியை அருகில் கொண்டு வந்து நிறுத்திய சிற்பி லேசாக வெறிநகையை உதறவிட்டான். தர்மர் முதலியவர் மேலிருந்த கோபத்தை சிற்பிமீது திருப்பிய பிக்கு, ''சிரிக்க இது நேரமில்லை'' என்றார்.

சிற்பி மறுபடியும் நகைத்து, ''இங்கேயே பேசிக் கொண்டிருந்தால் அப்புறம் காட்டைக் கடக்கவும் நேரமிருக்காது'' என்றான். உச்சியிலிருந்த சூரியனையுய காட்டினான்.

''ஆம். பயணத்தைத் துவங்குவோம். பேசிக்கொள்வதற்கு நிரம்ப அவகாசமிருக்கிறது'' என்று கூறினார் பிக்கு.

அதுவரை சற்று மௌனமாயிருந்த அரசகுமாரி, ''பிக்கு!'' என்று உஷ்ணமாக அழைத்தாள்.

''அரசகுமாரி!'' என்று தலைவணங்கினார் பிக்கு.

''அதிராஜேந்திரனிடம் நான் மன்னிப்புக் கேட்டதாகச் சொல்ல உமக்கு யார் அதிகாரம் கொடுத்தது? நன்றி தெரிவிக்கத்தான் உமக்கு அதிகாரம் கொடுத்தது யார்?'' என்று மிகுந்த சீற்றத்துடன் வினவினாள் அரசகுமாரி.

''எதிரியிடம் மன்னிப்புக் கேட்பதா? அவமானம் அவமானம்'' என்றார் தர்மர்.

''வேண்டாம். இப்பொழுதுகூட மகாகிராமத்துக்குச் செல்வதை யாரும் தடுக்க போவதில்லை'' என்று எரிச்சலுடன் சொன்ன பிக்கு, ''அதிராஜேந்திரன் பெருந்தன்மையில் கால்வாசி நமக்கிருந்தால் இந்த மாதிரி வீண்பேச்சில் காலம் கழிக்க மாட்டோம். அவன் இஷ்டப்பட்டிருந்தால் நாம் இத்தனை நேரம் இளைய கேசதாதுவின் சிறையில் இருப்போம்.'' என்றும் இகழ்ச்சி மிக்க குரலில் பேசினார். ''சரி, உங்களைத்தான் சந்தேகத்தில் வைப்பானேன். நடந்ததைத் தெரிந்து கொள்ளுங்கள். அரசகுமாரி விஜயன் வந்தாலொழியக் கிளம்ப மறுத்ததைச் சோழ இளவரசனின் வீரர்கள் அவனிடம்

zeevaa

சொன்னதும் அவன் வருந்தினான். அன்று இரவு அவனைச் சந்தித்த இளைய கேசதாது அரசகுமாரியைச் சிறையெடுக்க அனுமதித்தால் விஜயபாகு சித்தம் செய்யும் படைகளைப் பின்பக்கத்தில் தாக்குவதாகச் சொன்னான். முடிந்தால் அரசகுமாரியைக் கடத்திச் செல்லும்படிக்கும், சோழ வீரர்கள் தடைசெய்ய மாட்டார்களென்று சோழ இளவரசனிடம் உறுதியும் வாங்கினான்.

''இளைய கேசதாது சென்றதும் என்னைக் கூப்பிட்டு அனுப்பிய சோழ இளவல் நடந்ததைச் சொன்னான். 'பிக்கு அரசகுமாரி என் தயவினால் தப்ப மறுக்கிறாள். இளைய கேசதாதுவின் சிங்கள வீரர்கள் அவளைச் சிறை செய்து அழைத்துச் சென்றால் நீங்களும் உடன் செல்லுங்கள். உங்கள் தாக்குதலைக் காட்டுமுகப்பில் நடத்துங்கள். இளைய கேசதாதுவின் வீரர்கள் பத்துப் பேர்தான் இருக்கிறார்கள். அவர்களைச் சமாளிப்பது கஷ்டமல்ல. எதற்கும் எனது வீரர்கள் மறைவிலிருப்பார்கள். அவசியமானாலொழிய தலையிடமாட்டார்கள் என்று கூறி எனக்கு அனுமதியும் கொடுத்தார். பிறகு நடந்தது உங்களுக்குத் தெரியும். இப்பொழுது வந்த புரவிப்படை நமது போர் நடந்த இடத்துக்குச் சற்றுத் தொலைவில் இருந்தது. அவசியமானால் தலையிட்டிருக்கும்-என்று நடந்ததை விளக்கினார்.

இதைக்கேட்ட தர்மர் வியப்பின் எல்லையை எய்தினார். ''அதிராஜேந்திரன் மகா உத்தமன்'' என்றார்.

''என்ன இருந்தாலும் சோழர்குலமல்லவா!'' என்று சிலாகித்தார் அர்த்தர். காமரும் மோக்ஷரும், அர்த்தர் சொன்னதை ஆமோதித்துத் தலையசைத்தார்கள்.

அதற்குப் பிறகு அரசகுமாரி ஏதும் பேசவில்லை. தனது புரவியை நடத்தினாள் தென்திசை நோக்கி. மற்ற துறவிகளும் பின் தொடர்ந்தனர். சிற்பி மூடுவண்டியில் பின் தொடர்ந்தான். அன்று முழுவதும் மறுநாளும் பயணம் தொடர்ந்து நடந்தது. இரண்டு

zeevaa

வேளைகளில் ஓரிரு ஜாமங்கள் தங்கியது போக மீதி நேரம் பயணத்தில் கழிந்தது.

இலங்கையை அப்பொழுதுதான் பார்த்த திரிலோகசுந்தரி அதன் அழகை-இயற்கை எழிலைப் பார்த்து மிகவும் மகிழ்ந்தாளானாலும் அந்த மகிழ்ச்சியில் பூர்த்தியில்லை. அடிக்கடி எழுந்த மலைகளும், அருவிகளும், ஆங்காங்கு குறுக்கே ஓடிய காட்டுவிலங்குகளும் அவளுக்குப் பிரமிப்பை அளித்தன. மறுநாள் காலை முதலே எழுந்த சமந்தகூடமலை மாலைவரை கண்ணில்பட்டுக்கொண்டே இருந்தது. தாங்கள் போகப்போக அந்த மலை உடன் வருவது போலுமிருந்த காட்சியில் மெய்மறந்த திரிலோகசுந்தரியைப் பிக்குவின் சொற்கள் இந்த உலகத்துக்கு மீட்டு வந்தன. ''அரசகுமாரி! இரவின் முதல் ஜாமத்திலேயே நாம் சிங்கள மன்னர் இருக்கு மிடத்தை அடைவோம்'' என்றார் பிக்கு.

விஜயனைப் பார்ப்பதிலுள்ள எண்ணம் அவளைப் பழைய விஷயங்களை, வருத்தங்களை மறக்க அடித்தன.

கடைசியாக குறுக்கு வழிகள் பலவற்றைத் தாண்டிப் பாழடைந்த மண்டபத்துக்கு முன்வந்த பிக்கு முதலில் புரவியிலிருந்து இறங்கினார். மற்றவர்களும் இறங்கியதும் அரசகுமாரியை இறங்கச் சொன்ன பிக்கு, ''அரசகுமாரி! உங்களை ,மன்னரிடம் அழைத்து வந்துவிட்டேன். என் கடமை முடிந்தது'' என்றார்.

அரசகுமாரி புரவியிலிருந்து சுற்றுமுற்றும் பார்த்தாள். முதல் ஜாமம் முடிந்து கொண்டிருந்ததால் எங்கும் ஓரளவு நிசப்தம் குடிகொண்டிருந்தது. மண்டப வாயிலிலிருந்த இரண்டு மூன்று வீரர்கள் எழுந்து தலைவணங்கி நின்றார்கள். சூ-சின் மட்டும் ஒரு தூண் மறைவில் ஒதுங்கி நின்றான்.

அரசகுமாரி ஒரு வினாடிதான் நின்றாள். அந்தச் சமயத்தில் அவளை நோக்கிவந்த மூர்சமத் தலைவணங்கி, ''வரவேண்டும் அரசகுமாரி'' என்று வரவேற்றான்.

zeevaa

''மன்னர் எங்கே?'' என்று அரசகுமாரி வினவ, மண்டபத்தின் உட்பகுதியை மூர்சமத் காட்டவே உள்ளே செல்ல முற்பட்ட அரசகுமாரியை பிக்கு, ''சற்றுப் பொறுங்கள், உங்கள் வருகையை சிங்கள மன்னருக்குத் தெரிவிக்கிறேன்'' என்று தடுக்க முயன்றார்.

''என்னை யாரும் அவருக்கு அறிமுகம் செய்து வைக்க அவசியமில்லை'' என்று கூறிய அரசகுமாரி வெகு வேகமாக மண்டபத்துக்குள்ளே நுழைந்துவிட்டாள். நீண்டநாள் பிரிவினால் ஆசை உந்த வேகமாக உள்ளே சென்ற அரசகுமாரி மண்டபத்தின் முதற்கட்டைத் தாண்டித் தூண்களிருக்குமிடம் சென்றதும் அதிர்ச்சியுற்றுச் சிலையென நின்றாள்.

உள் மண்டபத்தில் எரிந்த கல்தூண் அகல் விளக்கின் சிறு ஒளியில், அந்தத் தூணிலேயே கட்டழகி ஒருத்தியைச் சாய்த்து அவள்மீது விஜயன் நெருங்கியிருந்ததையும், அவள் கழுத்தில் அவன் முகம் புதைந்து கிடப்பதையும் கண்ட திரிலோகசுந்தரியின் தலை சுழல முற்பட்டது.

zeevaa

## 28. பிரளயம்

அகல் விளக்கின் சிறு ஒளியில் அழகியொருத்தியின் சங்குக் கழுத்தில் முகத்தைப் புதைத்துக்கொண்டு அவளைக் கல்தூணில் சாய்த்து அவளுடன் ஒன்றிக்கிடந்த விஜயபாகுவின் நிலையைக் கண்டதும் விவரணத்துக்கு அப்பாற்பட்ட அதிர்ச்சியை அடைந்த கலிங்க ராஜகுமாரி, தலைசுழலும் நிலைக்கு வந்ததால் புயலில் அகப்பட்ட கொடிபோல் ஒருமுறை ஆடினாள். அந்த ஆட்டத்துடனேயே லேசாகப் பின்னடைந்து பின்புறத்திலிருந்த ஒரு தூணில் சாய்ந்து கொண்டு கண்களிரண்டையும் தனது கைகளால் மூடிக்கொண்டாள். கண்களை மூடியதால் கலக்கம் விடவில்லை. கலிங்க ராஜகுமாரியை, முதலில் கண்ட காட்சி பேயுருவம் எடுத்து அவள் சித்தத்தைச் சிதற அடித்துக் கொண்டிருந்தது. 'உம்'மென்ற முனகலுடன் பெருமூச்சொன்றும் வெளிவந்தது. அந்த இரவின் முதிர்ச்சியில் மேலே தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்த வெளவாலொன்று திடீரெனப் பறந்த சிறகு ஒலிகூட அவளை அந்தச் சமயத்தில் அச்சுறுத்தியது. உள் மண்டபத்தின் ஒருகோடியில் சப்தித்த பல்லியும் ஏதோ துர்ச்செய்தி சொல்வதாகத் தோன்றியது கலிங்க மன்னன் மகளுக்கு.

தான் இல்லாதபோது இத்தகைய இழி செயலில் விஜயன் ஈடுபடுவானென்று சொப்பனத்திலும் நினைக்காத திரிலோகசுந்தரி, கலிங்கத்தில் சிவகோகர்ண ஸ்வாமி ஆசிரம அருவியின் கரையிலும், பின்னர் கப்பலிலும் அவன் தன்னிடம் காட்டிய மையலும் சரசமும் வெறும் போலியா என்று தன்னைக்

zeevaa



zeevaa

கேட்டுக்கொண்டாள். 'ஒருவேளை இந்தப் பெண் விஜயனின் பழைய காதலியாக இருக்குமோ? அவளிடமிருந்து என்னை மறைக்கத்தான் என்னைச் சந்நியாசிகளுடன் மகாகிராமத்துக்கு அனுப்பி விட்டாரோ?' என்றும் வினவிக்கொண்டாள். அவள் காதலியா மனைவியா என்ற சந்தேகமும் ஏற்படவே 'அவள் மனைவியானால் நான் இளையாளாகத்தானே இருக்க வேண்டும்? ஏற்கெனவே இவர் மணக்க வேண்டிய லீலாவதியும் சோழர் சிறையிலிருந்து வந்தால் இவருக்கு மூன்று மனைவிகள் ஆகி இவர் தசரதராகிவிடுவாரே?' என்றும் உள்ளூர ஏதேதோ கேள்விகளை எழுப்பிக் கொண்ட திரிலோகசுந்தரி மெதுவாகக் கண்களிலிருந்து கைகளை அகற்றிக் கண்களை அகல விரித்தாள். அப்பொழுதுதான் விஜயன் சுடர்விழியை இரு கைகளிலும் தூக்கிக்கொண்டு அடுத்த உள் மண்டபத்துக்குச் செல்லத் திரும்பினான். அதற்குப் பிறகு உணர்ச்சிகளை அடக்க முடியாததால் தலை கிறுகிறுவென்று சுழல இருமுறை தள்ளாடித் தரையில் விழுந்துவிட்டாள் சுந்தரி.

'தட்' என்று அவள் விழுந்த ஒலியைக் கேட்ட விஜயன் கையிலிருந்த சுடர்விழியை வேகமாக கீழே இறக்கிவிட்டு "யாரோ விழுந்து விட்டார்கள் போலிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே சுந்தரி விழுந்து கிடந்த இடத்தை நோக்கி வேகமாக அடிகளை எடுத்து வைத்தவன் கீழே கிடந்தவள் திரிலோகசுந்தரியென்பதை அறிந்ததும் அதிர்ச்சியின் எல்லையை எய்தினான். அவன் உடன் வந்த சுடர்விழியும் யாரோ ஒரு பெண் கிடப்பதைக் கண்டு "அப்பா! என்ன அழகி!" என்று வியந்து, "இவள் யார்? நம் உத்தரவில்லாமல் காவலர்கள் எப்படி இவளை உள்ளே விட்டார்கள்?" என்று கேள்விகளை எழுப்பினாள்.

விஜயன் ஏதும் சொல்லும் நிலையில் இல்லை. ஏதோ கொலைக் குற்றம் செய்துவிட்டு அகப்பட்டுக்கொண்டவன் நிலையில் இருந்ததால் பிரமை பிடித்தே நின்றான் பல விநாடிகள். கற்றூணின்

zeevaa

அகல்விளக்கு வேண்டுமென்று வெளிச்சத்தை அதிகப்படுத்தப் பெரிதாகச் சுடர்விட்டு எரிந்ததால் அதன் வெளிச்சம் பூராவும் திரிலோகசுந்தரியின் சுந்தர உடலின்மீது விழுந்தது. தெய்வ சாபத்தால் ஆகாயத்திலிருந்து விழுந்துவிட்ட அப்சர மங்கை போலும், அறுத்து வீசப்பட்ட புஷ்பக்கொடி போலும் தரையில் கிடந்த திரிலோகசுந்தரியைப் பார்த்த சுடர்விழி, மேலும் மேலும் பிரமை தட்ட ஒருபுறமாக நின்றவள் சுந்தரிகிடந்த இடத்திற்கு நேர் எதிராக வரவே அவள் உடலின் நிழல் சுந்தரிமீது பெரிதாக விழ, சுந்தரியின் வாழ்வில் ஏதோ இருட்டடிப்பதற்காகத்தான் சுடர்விழி தோன்றினாளா என்று விஜயன் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்ததால், ''சுடர்விழி! சற்று விலகி நில்'' என்று விஜயன் சற்று உஷ்ணத் துடனேயே கூறினான்.

அவன் சொற்களில் ஒலித்த வேகமும் சினமும் சுடர்விழியின் சந்தேகத்தைக்கிளறவே, ''நீங்கள் சற்று விலகியிருங்கள். இவள் மூர்ச்சையைத் தெளிவிக்கிறேன். நீங்கள் வெளியில் சென்று சற்று நீர் எடுத்து வாருங்கள், இவள் முகத்தில் தெளிக்க'' என்று சுடர்விழி கூறினாள்.

''நீ போய் பிக்குவை சிறிது நீர் எடுத்துவரச் சொல். நான் இவளைக் கவனிக்கிறேன்'' என்றான் விஜயன். அவன் குரலில் சினம் முன்னைவிடச் சற்று அதிகமாகவே தெரிந்தது.

சுடர்விழி சுந்தரியை உற்று நோக்கினாள். மயக்கமுற்றுச் சுருண்டு அவள் விழுந்தபோது அவள் மேற்பகுதியிலும் இடைப் பகுதியிலும், கால்களிலும் சேலை லேசாக நெகிழ்ந்து கிடப்பதைக் கண்டு, ''நீங்கள் இவளைக் கவனிக்க முடியாது. அதற்கு ஒரு பெண் தேவை'' என்று சுட்டிக்காட்டினாள் சுடர்விழி.

''என்னால் ஏன் முடியாது? எதற்காகப் பெண் தேவை?'' என்று சுள்ளென்று விழுந்தான் விஜயன்.

zeevaa

''அவளைச் சரியாகப் பாருங்கள்.'' - சுடர்விழி தெளிவாகச் சொல்ல முடியாமல் தயங்கினாள்.

''பார்த்தேன், பார்த்தேன்...''

''என்ன பார்த்தீர்கள்?''

''என்ன பார்க்க வேண்டும்?''

''இவள் ஆடை கலைந்திருக்கிறது...''

''இருந்தாலென்ன?'' - சிந்திக்காமல் பேசினான் சிங்கள இளவல்.

''இருந்தாலென்னவா?'' - சுடர்விழியின் குரலில் வியப்பு மிதமிஞ்சி ஒலித்தது.

''ஆம். இருந்தாலென்ன?''

''அவள் சேலையைச் சரிசெய்து...''

''நானே சரி செய்ய முடியும். நீ போய் பிக்குவை அனுப்பு. வீணாகப் பேசிக் காலம் கழிக்காதே'' என்று மிகுந்த சீற்றத்துடன் சொற்களை உதிர்த்த விஜயன், சுடர்விழி பார்த்துக்கொண்டிருக் கையிலேயே சுந்தரியின் சேலையை இழுத்துவிட்டு அவள் மார்பையும், வயிற்றுப் பகுதியையும், கீழே சுந்தரத் தொடை களையும் மூடினான்.

இம்முறை அதிர்ச்சியுற்றவள் சுடர்விழி, ''வெட்கமில்லை? நியாயமில்லை? என்ன செய்கிறீர்கள்?'' என்று திகைத்துத் தடுமாறிச் சொற்களை உதிர்த்தாள் அவள்.

''ஆபத்தில் உதவ வெட்கமென்ன, நியாயமென்ன? நீ போ. பிக்குவை அனுப்பு'' என்றான்.

அப்படியும் சுடர்விழி போகாது நிற்கவே விஜயன் தரையில் உட்கார்ந்து சுந்தரியின் உடலை எடுத்து மடியில் கிடத்திக்

zeevaa

கொண்டான். அவள் கண்களை மெதுவாக இருமுறை தனது வலது கையால் துடைத்தான். தாதுவைப் பிடித்துப் பார்த்தான். "பாதகமில்லை. வெறும் மயக்கந்தான்," என்று சொல்லிக்கொண்டு அவள் மார்புச்சேலைக்குள் கையைவிட்டு இதயத் துடிப்பைக் கவனித்தான். "இருதயம் சிறிது படபடப்பாக அடித்துக் கொள்கிறது. இன்னும் ஒரு நாழிகையில் இந்த அதிர்ச்சி தந்த மயக்கம் நீங்கிவிடும்," என்று இரைந்தே சொன்னான்.

சுந்தரிக்கு அவன் செய்த பணிவிடைகளையும், தான் பக்கத்தில் இருப்பதையும் லட்சியம் செய்யாமல் அந்தப் பெண்ணின் மார்பில் அவன் கை வைத்ததையும் கண்ட சுடர்விழி, "இவருக்கு என்ன துணிவு?" என்று வெகுண்டாள்.

அவள் அந்த இடத்திலிருந்து அசையாததைக் கண்ட விஜயன், "ஏன் மரம்போல் நிற்கிறாய்? போய் பிக்குவை அனுப்பு. கொஞ்சம் நீர் கொண்டு வரச்சொல்," என்றான்.

"நான் இவளைப் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் தான் போய் பிக்குவை அனுப்புங்கள்," - சுடர்விழி சுடச் சுடச் சொன்னாள்.

"சொல்கிறபடி கேட்கக் கற்றுக்கொள் முதலில்."

"நீங்கள் சொல்வது முறைகேடாயிருந்தால் எப்படிக் கேட்பது?"

"முறை தவறி எதுவும் நடக்கவில்லை."

"இவள் உங்களுக்கு என்ன வேண்டும்?"

"பிக்குவைக் கேள், சொல்லுவார்."

"பிக்குவைக் கேட்பானேன்? உங்களுக்கு வாயில்லையா?"

"இருக்கிறது. இப்பொழுது உனக்கு பதில் சொல்ல நேரமுமில்லை; அவசியமுமில்லை?"

zeevaa

அதுவரையில் பொறுத்துக் கொண்டிருந்த சுடர்விழியின் முகத்தில் சினம் சுடர்விட்டது. ஒரு தடவை விஜயனை முறைத்துப் பார்த்துவிட்டு வாயிலை நோக்கிச் சென்றாள். வாயிற்படியை அணுகியதும் திரும்பி நோக்கினாள். விஜயன், மயக்கமுற்றிருந்த அழகியின் அதரத்தைத் தனது இதழ்களால் மெதுவாகத் தொட்டான். பிறகு தனது முகத்தை அவள் கழுத்தில் புதைத்துக் கொண்டான். சற்று முன்பு வரை தனது கழுத்தில் புதைத்த அவன் முகம் புதிதாக வந்தவள் கழுத்தில் புதைந்து விட்டதைப் பார்த்த சுடர்விழியின் விழிகள் கோபத்தால் துடித்தன. ‘முகம் இப்படி அடிக்கடி இடம் மாறும் போலிருக்கிறது?’ என்று இகழ்ச்சியுடன் எண்ணமிட்டாள்.

அப்பொழுதுதான் அவளுக்கு அந்தப் புதுச் சிந்தனை ஏற்பட்டது. ‘பிக்குவை அழைத்து வரச் சொன்னாரே. பிக்குதான் மகாகிராமம் போயிருக்கிறாரே?’ என்று நினைத்தவள் அசைவற்று வாயிற்படியிலேயே நின்று விட்டாள். ‘பிக்கு வந்துவிட்டார். திரிலோகசுந்தரியையும் அழைத்து வந்து விட்டார். அப்படியானால் இவள் தான் திரிலோகசுந்தரியாயிருக்க வேண்டும்,’ என்ற உண்மை உள்ளத்தில் பளிச்சிடவே, ‘என்னைக் கணவன் அணைப்பில் கண்டதனால்தான் இவள் உணர்விழந்து விட்டாள். பாவம்!’ என்று அனுதாபமும் கொண்டாள். இத்தனையிலும் ஒரு பொறாமையும் அவள் மனத்தில் திளைத்தது. ‘‘அவளைப்போல் நானும் அவருக்கு மனைவிதானே?’’ என்று சற்றுச் சீற்றம் கொண்டாள் சுடர்விழி. இந்த உண்மை விளங்கியதாலும், விளங்கியதால் ஏற்பட்ட பொறாமை யாலும், வந்திருப்பவளும் சொக்கும் அழகு படைத்தவள் என்ற நினைப்பாலும், தான் மனைவியானாலும் அவள் தான் சிங்கள மன்னன் மகேசியாகமுடியும் என்ற சிந்தனை விளைவித்த மன நெகிழ்ச்சியாலும், வாயிற்படியிலிருந்து வெளியே நோக்கினாள் சுடர்விழி. வெளியே அடர்த்தியான காட்டிலும் ஆங்காங்கு விழுந்த நிலவு, இருளும் வெளிச்சமும் கலந்ததுதான் வாழ்வு என்பதை

zeevaa

நினைவுபடுத்தியது. அந்த நிலவிலும் இருட்டிலும் பாதி வெளிச்சம் பட்டு நின்ற புரவிகள் தலையைமேலே தூக்கிய போது ஏற்பட்ட காட்சி அவளுக்குச் சிந்தனையைக்கலைத்தது. இயற்கை தூண்டிய நினைப்பால் மெள்ள நடந்து வாயிலை அடைந்த சுடர்விழி, "பிக்கு! பிக்கு! கொஞ்சம் கமண்டலத்தில் நீர் எடுத்துக் கொண்டு உள்ளே செல்லுங்கள். மகேசியார் உடல் நிலை சரியில்லை," என்று சொல்லி வாயிலைக் கடந்து வெளியே நடந்தாள் தலைகுனிந்த வண்ணம்.

அவள் போகும் விதத்தையும் சொற்களிலிருந்த துக்கத்தையும் கண்ட பிக்கு உண்மையை உணர்ந்து கொண்டதால், அவளுக்குப் பதிலேதும் சொல்லாமல் கமண்டலத்தை எடுத்துக்கொண்டு, 'என்னதான் அவசரமோ பெண்களுக்கு? வந்ததும் வராததுமாகச் சுந்தரியை யார் உள்ளே ஓடச் சொன்னது? அட! இவள் தான் ஓடினாள். சிங்கள மன்னர் சாதாரணமாக இருந்திருக்கக் கூடாதோ? எந்த நிலையில் இருந்தாரோ?' என்று நினைத்துக் கொண்டு உள்ளே சென்றார்.

உள்ளே சென்றதும் "மன்னவா!" என்று மெதுவாக சற்று எட்ட இருந்தே அழைத்தார் பிக்கு.

விஜயன் பிக்குவைத் திரும்பிப் பார்க்காமலேயே கையை குழித்துக் கொண்டு நீட்ட, பிக்கு அதில் கமண்டலத்திலிருந்து சிறிது நீர் வார்க்கவே, அதைச் சுந்தரியின் சுந்தரமுகத்தில் தெளித்தான் விஜயன். பிறகு, கண்களைத் துடைத்து விட்டான். "பிக்கு உமது மேல் துண்டை இப்படிக் கொடும்" என்று கையை நீட்ட அவர் தமது காஷாயத் துண்டை எடுத்துக் கொடுத்தார். அதனால் மெல்ல விஜயன் விசிற, பிக்கு முனகினார், "துறவிகளின் காவி உடை எதற்குப் பயன்படுகிறது!" என்று.

அதைக் காதில் வாங்காத விஜயன் மேலும் விசிறி, சுந்தரியின் கன்னங்களையும் வருடவே அவள் மெதுவாகக் கண்களை அகல

zeevaa

விழித்து விஜயனை நோக்கினாள். திமிறி எழுந்திருக்கவும் முயன்றாள். முடியாதுபோகவே அவன் மீது மீண்டும் தலையைச் சாய்த்துக் கொண்டாள். ''பிக்கு! இனி நீர் போகலாம்!'' என்று விஜயன் கூற, பிக்கு ஏதோ முணுமுணுத்துக் கொண்டு வெளியேறினார்.



zeevaa

# 29. ஊடல்

எத்தனையோ அபாயங்களுக்கும் அதிர்ச்சிகளுக்கும் சித்தம் சிறிதும் கலங்காத கலிங்க ராஜகுமாரி அன்று திடீரென மயக்கமுற்று விழுந்ததும் பெரும் அச்சத்தை அடைந்த விஜயன், ஒருமுறை விழித்து இரண்டாம் முறை மயக்கமுற்றுத் தன்மீது சாய்ந்து கண்களை மூடிவிட்டதால் அவன் அவள் குழல்களைக் கோதிவிட்டு முகத்தில் தான் ஏற்கெனவே தெளித்த நீர்த்துளிகளையும் துடைத்து விட்டான். அப்பொழுதும் தனது கையிலிருந்த •பிக்குவின் காஷாயத்தை நோக்கி. 'இந்த வாழ்க்கை எத்தனை சிறந்தது?' என்று சந்நியாச ஆசிரமத்தைப்பற்றி நினைக்கவும் செய்தான். மறுபடியும் தனது மார்பில் அவளை நன்றாக இழுத்துச் சாத்திக்கொண்டு அவள் காதுக்கருகில் குனிந்து, ''சுந்தரி! சுந்தரி!'' என்று இருமுறை அழைக்கவும் செய்தான்.

சுந்தரி அந்த அழைப்புக்கும் எழுந்திருக்கவில்லை. அவன் சைத்தியோபசாரங்களில் அவளுக்குப் பூரண நினைவு வந்ததும் மூடிய கண்களைத் திறக்காமல் அந்தித் தாமரை போலக் குவிந்த முகத்துடன் அவன் மார்பில் சாய்ந்தே கிடந்தாள். சிறு விளக்கின் ஒளியில் அவள் சாய்ந்து கிடந்த நிலைகூட ஏதோ நாட்டிய பாவத்தை அவள் காட்டுவதுபோலத் தெரிந்தது விஜயனுக்கு. உடலில் கலை இருப்பவர்களின் உணர்வு, உறக்கத்திலும் அக்கலையைக் காட்டும் என்ற உண்மையைப் புரிந்து கொண்டான் விஜயன். 'ராவணன் பள்ளியறையில் உறங்கிக் கிடந்த பல பெண்களில் ஒருத்தி நாட்டியம் பயின்றவளாதலால் அந்த உறக்கத்திலும் நாட்டிய பாவ முத்திரையைக் காட்டிக்கொண்டு

zeevaa

கிடந்தாள்' என்ற வால்மீகியின் வாக்கியத்தை நினைத்து, தன்மீது சாய்ந்த நிலையிலும் அவள் ஒரு கையை தன் தோள்மீது போட்டு உடல் வளையப் படுத்திருந்ததைக் கண்டு வியந்தான்.

சுந்தரியின் சுந்தர உடலில் விழுந்த அகல்விளக்கின் வெளிச்சம் கூட, அவ்விளக்கின் சுடர் காற்றில் லேசாக அலைந்து கொண்டிருந்ததால், அவ்வப்பொழுது இடம் மாறி விழுந்து அவள் உடலில் அழகிடங்களைச் சுட்டிக் காட்டிக் காட்டி மறைத்துக் கொண்டிருந்தது. இந்த இந்திர ஜாலத்தைக் கண்டு கொண்டிருந்த விஜயன் ஒருமுறை பெருமூச்செறிந்து மறுபடியும் பிக்குவின் காஷாயத் துணியால் அவள் முகத்தில் விசிறினான். பிறகு அவள் மார்பில் முகத்தைப் புதைத்து உருட்டினான். ஒருகையால் அவள் கால்களையும் சூடுபறக்கத் தேய்த்துவிட்டுக் கன்னத்தை இருமுறை தட்டி முகத்தை அப்படியும் இப்படியும் புரட்டினான். மயக்கம் ஏற்கெனவே ஓரளவு அகன்றிருந்த சுந்தரிக்கு அவன் படும் அவஸ்தையைச் சகிக்க முடியாததால் மெள்ளத் தனது கண்களை விரித்தாள். அவன் விழிகளுடன் கலந்த அவள் விழிகளில் பரிதாபமில்லை, காதலுமில்லை, உஷ்ணம் பரிபூர்ணமாக இருந்தது. அந்த விழிகளைச் சந்திக்கத் திராணியில்லாததால் விஜயன் தனது விழிகளை அவள் உடலை நோக்கி ஓடவிட்டான். அந்த நிலையிலேயே மெதுவாக, "சுந்தரி!" என்று அழைத்தான்.

உணர்ச்சி மிகுதியாலும் அப்பொழுதும் சிறிதும் தணியாத கோபத்தாலும் அவள், "உம்" என்றாள்.

"இப்பொழுது எப்படியிருக்கிறது?" என்று ஏதோ விசாரிக்க வேண்டுமென்பதற்காக விசாரித்தான்.

"எது?" என்று அவள் உணர்ச்சியற்ற குரலில் கேட்டாள்.

"மயக்கம்" என்று மறுபடியும் பேச்சுக் கொடுத்தான் விஜயன்.

இந்தக் கேள்வியால் சக்தி வரப்பெற்ற சுந்தரி, "உங்கள் மயக்கத்தைவிடக் குறைந்ததுதான்" என்றாள்.

zeevaa

இந்த மாதிரி உரையாடல்களில் மிக அழகாகப் புன்னகை செய்யும் அவள் உதடுகள் அன்று புன்னகை ஏதும் செய்யவில்லை. பொறாமையாலும் சினத்தாலும் செம்பருத்தி உதடுகளை லேசாகக் கடித்துக் கொண்டாள்.

விஜயன் மெதுவாக அவளிடம் முழு உண்மையை அவிழ்க்க முயன்று, ''இப்பொழுது வெளியே சென்றாளே சுடர்விழி...'' என்று பேச்சைத் துவங்கினான்.

கலிங்க ராஜகுமாரி அவன் மார்பிலிருந்து முகமெடுத்து எழுந்து சற்று விலகி உட்கார்ந்தாள். ''அதுதான் அவள் பெயரா? சுடர் மாதிரிதான் இருக்கிறாள்'' என்று சிலாகிப்பதுபோல் இகழ்ச்சியாகப் பேசினாள்.

இப்படி அவள் இகழ்ச்சியால் மனம் புண்பட்ட விஜயன், ''சுந்தரி! அவள் சரித்திரம் உனக்குத் தெரியாது...'' என்று துவங்கினான்.

''உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. அதுவே போதும்'' என்றாள் சுந்தரி தரையை நோக்கியவாறு.

விஜயன் அப்படித் தலைகுனிந்து விலகித் துயரத்தின் உருவமாய் உட்கார்ந்திருந்த சுந்தரியை நோக்கினான். ''முழுக்கதையையும் கேள்'' என்று மீண்டும் பேச முற்பட்டான்.

சுந்தரி தரையில் விரல்களால் கோடுகளைக் கிழிக்க முற்பட்டுப் பாறாங்கல்லில் எந்தக் கோடும் விழாததால் சோகப் பெருமூச்சுவிட்டாள். ''பார்த்த கதையே போதும். மேலே கேட்க வேண்டியது எதுவுமில்லை'' என்றாள் வெறுப்புடன்.

''அவள் என் உயிரைக் காத்தவள்...'' விஜயன் சுந்தரியின் கோபத்தை மாற்ற முயன்றான்.

சுடர்விழி அவன் உயிரைக் காத்ததாகச் சொன்னதால் அதுவரை இருந்த சினத்தைச் சிறிது குறைத்துக்கொண்ட சுந்தரி, ''அப்படியா!'' என்று வினவினாள்.

zeevaa

''ஆம். அவள் சமயத்தில் உதவாவிட்டால் இன்று என்னை நீ பார்த்திருக்கமுடியாது'' - மேலும் சிறிது பொய்யைக் கலந்து பேசினான் விஜயன்.

சுந்தரி இகழ்ச்சி கலந்த சிரிப்பொன்றை உதிரவிட்டு, ''உங்கள் உயிரைக் காத்தாள். உயிர்க் காதலியாகி விட்டாள். நியாயந்தான். தவறில்லை'' என்று கூறினாள். ஆனால் அவள் குரலில் சிறிதும் மன்னிப்பு இல்லை.

அந்தக் குரலின் ஒலியைக் கவனிக்கவே செய்த விஜயன், ''பெண்களுக்கு ஒன்று அன்பைக் கொட்ட முடியும், அல்லது அடியோடு வெறுக்க முடியும். இரண்டுக்கும் நடுவில் சகிப்புத் தன்மை கிடையாதா? பெண்களைக் கருணையின் சொரூபம் என்று சொல்வது பொய்தானா?'' என்று பல கேள்விகளை எழுப்பிக் கொண்டான்.

பிறகு எழுந்து அவள் கையைப் பிடித்துத் தூக்கினான். அவளை அணைக்கவும் முயன்று அவள் உடலைத் தனது கைகளால் வளைத்தான். இறுக்கினான். உடலோடு உடல் நெருங்கிய சமயத்தில் அவள் திமிற முயன்றாள். தனக்கு மட்டும் சொந்தம் என்று நினைத்த அந்த ஆண்மகன் சற்று முன்புதான் இன்னொருத்தியைக் கட்டிப்பிடித்தான் என்ற எண்ணம் அவள் மனத்தைவிட்டு அகலவில்லை. திமிற முடியாத காரணத்தால் உடலை உணர்ச்சியற்ற கட்டையாக்கிக் கொண்டாள். அவள் இரும்பு உள்ளத்தை உணரவே செய்ததால் அவன் தனது கைகளை நீக்கி அவள் உடலுக்கு விடுதலையளித்து அவளிடமிருந்து நன்றாக விலகி நின்று, ''கலிங்க ராஜகுமாரி! காதல் உள்ளம், எதையும் மன்னிக்கும் என்று சொல்வார்கள். நீ அரசகுமாரிதான். ஆனால் உன் உள்ளத்தில் வேட்கையிருக்கலாம். காதல் இல்லை. கணவனைத் தாசி வீட்டுக்குக் கூடையில் சுமந்து சென்ற நளாயினியின் கதையை நீ கேட்டிருக்கலாம். அந்த மாதிரி மகாபதிவிரதை பிறந்த பாரதத்தில் நீயும் பிறந்திருக்கிறாய். உனக்கு அந்தத் தியாகத் தன்மை

zeevaa

யில்லையே! நீ மயங்கியதைக் கண்டதும் வெளியே சென்றாளே எனது படைத் தலைவன் மகள். அந்த உறுதி உனக்கில்லையே! மனித வாழ்வில் எத்தனையோ சம்பவங்கள் நிகழ்கின்றன. அதற்கு நாம் மட்டும் பொறுப்பாளிகளில்லை. சூழ்நிலையும் பொறுப்பாளி. விதியும் பொறுப்பாளி'' என்று சற்றுக் கோபத்துடனேயே பேசினான்.

இதைக் கேட்ட சுந்தரி தீவிழி விழித்தாள். ''இதையெல்லாம் உங்கள் ஆசை நாயகியிடம் சொல்லுங்கள்'' என்று கூறவும் செய்தாள்.

விஜயன் மனமும் சுந்தரியின் போக்கால் கெட்டிப்பட்டு விட்டதால் அவனும் துணிவுகொண்டு, ''அவள் ஆசை நாயகி அல்ல, என் மனைவி'' என்றான்.

இது இன்னும் அதிர்ச்சியைத் தரவே சுந்தரி கேட்டாள். ''மனைவியா!'' என்று அதிர்ச்சி நிரம்பிய குரலில்.

''ஆம்.'' திட்டமாக வந்தது விஜயன் குரல்.

''எப்பொழுது மணந்தீர்கள்?''

''இங்கு வந்த பிறகு.''

''யார் சாட்சி?''

''செய்து வைத்தவர்.''

''யாரது?''

''பிக்கு.''

சுந்தரிக்குப் பிக்குவின் மேல் சினம் பன்மடங்கு அதிகமாயிற்று. 'பிக்குவா!'' என்று சினம் குரலில் பலமாக ஒலிக்கக் கேட்டாள்.

''ஆம்.''

''துறவி செய்யும் வேலையா இது?'' என்று கேட்டாள் சுந்தரி.

zeevaa

விஜயன் துன்பப் புன்முறுவல் ஒன்றை இதழ்களில் தவழவிட்டு, ''நம்மை மணமுடித்தவரும் ஒரு துறவிதான். சிவகோகர்ண ஸ்வாமிகள் சைவத் துறவி. பிக்கு பௌத்தத் துறவி. ஆசிரமம் ஒன்றுதான். மதந்தான் வித்தியாசம்'' என்று விளக்கம் கொடுத்தான். ''இதோ பார் சுந்தரி! இந்த நாட்டுக்கு வந்த ராமனைத் தவிர வேறு எந்த அரசனும் ஒரு மனைவியோடு இருந்ததில்லை. அரசியல், போர்கள், சந்தர்ப்பச்சூழ்நிலைகள் இப்படி எத்தனையோ காரணங்களில் மன்னர்கள் பல மனைவிகளை மணக்கிறார்கள். அப்படிப்பட்ட மன்னனும் அல்ல நான். நீ எனக்கு ஒரு மனைவி இருப்பது தெரிந்தும் சுடர்விழி என்னை மணந்தாள். அவள் உன்னைப்போல, லீலாவதியைப்போல மகேசியாக முடியாதென்று தெரிந்தும் என்னை மணந்தாள். அவள் எனக்குச் சாதாரண மனைவியாகத் தான் இருக்க முடியும். உன்னையும் லீலாவதியையும் போல் என்னுடன் சரிசமமாக அரியணையில் உட்கார முடியாது. இருந்தும் மணந்தாள். இனி நடைபெறப்போகும் சிங்களத்தின் சுதந்திரப் போரில் அவளுக்காகப் பங்கு கொள்ள ஆயிரம் வேடர் குல வீரர்கள் இருக்கிறார்கள். அவள் தந்தை ரவிதேவன் மகாவீரன். எனது பிரதான படைத் தலைவர்களில் ஒருவன். எல்லாவற்றையும் இந்நாட்டு அரசி என்ற முறையில் சிந்தித்துப் பார்'' என்று கூறிவிட்டு அந்த இடத்தைவிட்டு அகன்றான்.

அவன் போவதைப் பார்த்துக் கொண்டே நின்ற சுந்தரி இரண்டடி நடந்து பக்கத்திலிருந்த தூணில் சாய்ந்து கொண்டாள். அவள் மனம் ஒரு நிலையில் இல்லை. அவன் சொன்ன பழங்கதைகள், காட்டிய உதாரணங்கள் அவள் மனத்தை அலைக்கழித்துக் கொண்டிருந்தன. அளவுக்கு மீறிய பிடிவாதத்தால் அவனை உதாசீனம் செய்து விட்டேனோ என்று ஏங்கினாள். ஏங்கும் நிலை மீறிவிட்டதையும் இனி அவனும் பிடிவாதத்தைக் காட்டினால் தனது கதி என்ன ஆகும் என்று எண்ணியதால் சற்று பயமும்கொண்டாள். மெள்ள வாயிற்புறம் நடந்தும் சென்றாள்.

zeevaa

அங்கு விஜயன் பிக்குவிடம் சீறிக் கொண்டிருந்தான். "சுடர்விழி எங்கு சென்றாள்?" என்று கேட்பது சுந்தரியின் காதில் விழுந்தது.

"தெரியாது," என்று விடையளித்தார் பிக்கு.

"உங்களிடம் சொல்லவில்லையா?" என்று கேட்டான் விஜயன்.

"இல்லை. வேகமாக வெளியில் வந்தாள். என்னை நோக்கி, 'பிக்கு! மன்னரிடம் சொல்லுங்கள், இனிமேல் என்னால் அவருக்கு எந்தத் தொந்தரவும் இருக்காது,' என்று கூறிவிட்டுப் புரவி யொன்றை அவிழ்த்துக் கொண்டு வேகமாகப் போய்விட்டாள்," என்றார் பிக்கு.

"அவளுக்குக் காவல்?" கவலையுடன் கேட்டான் விஜயன்.

"யாரும் தன்னைத் தொடர வேண்டாமென்று கூறி விட்டாள்," என்றான் மூர்சமத்.

"அவள் சொன்னால் நீங்கள் கேட்க வேண்டுமா?" என்றான் விஜயன்.

இதற்கு யாரும் பதில்சொல்லாததால் விஜயன் தனது புரவியின்மீது தாவி ஏறி வேகமாக மரங்களின் ஊடே காற்றெனப் பறந்தான். சுமார் ஒரு நாழிகை நேரம் பயணம் செய்ததும் மகாவலி கங்கையின் கரைக்கு வந்தவன் அதன் கரையில் சுடர்விழி நிற்பதைக் கண்டான். அவள் புரவி அவள் பக்கத்தில் நின்றிருந்தது. வேகமாகப் புரவியிலிருந்து இறங்கிய விஜயன் அவள் கையைப் பிடித்து, "இங்கு என்ன செய்கிறாய்?" என்று வினவினான் கோபத்துடன்.

"எது வேண்டுமானாலும் செய்வேன். நீங்கள் யார் கேட்பது?" என்றாள் சுடர்விழியும் சுடு குரலில்.

அவன் ஏதும் பதில் சொல்லவில்லை. அவளை அப்படியே இரு கைகளாலும் தூக்கினான். கைகால்களை உதைத்து அவள் திமிற

zeevaa

முயன்றாள். கால்களையும் இறுக்கி ஒருகையால் பிடித்துத் தனது புரவிமீது ஏற்றிக் கொண்டு தானும் பாய்ந்து அவள் பின்னால் ஏறி பாழடைந்த மண்டபத்தை நோக்கிப் புரவியை விரட்டினான்.

மண்டபத்தை அடைந்ததும் புரவியிலிருந்து தான் இறங்கி அவளையும் இறக்கி நிறுத்தினான். அவள், தலையை அனாயாசமாகத் திருப்பி அவனை முறைத்துப் பார்த்தாள்.

"போ உள்ளே! இன்னும் ஒரு அடி வெளியில் எடுத்து வைத்தால் உன் காலை உடைத்து விடுவேன்," என்று சீறிய விஜயன், வாயிலில் நின்றிருந்த சுந்தரியையும் நோக்கி, "நீயும் போ உள்ளே. இங்கு உங்கள் இரண்டு பேரில் வெளியில் யார் தலையைக் காட்டினாலும் என் கைகள் வாளாவிருக்காது" என்று மிரட்டினான்.

இரு பெண்களும் ஒருவரையொருவர் முறைத்துப் பார்த்தனர். பிறகு இருவரும் உள்ளே சென்றனர். சென்றவர்கள் பிரிந்தே சென்றனர். வடதுருவம் தென்துருவம் போல் தூரமாகவே நடந்தனர்.

அப்பொழுது தர்மர் இலக்கணம் சொன்னார். "இதைத் தான் ஊடல் என்று சொல்லுகிறார்கள்" என்று.

"இன்னொரு பெயரும் உண்டு. இருதலைக்கொள்ளி", என்றான் விஜயன் வெறுப்புடன், "ரவி தேவன் ஏன் இன்னும் வரவில்லை?" என்று காரணமில்லாமல் பிக்குவைக் கேட்டான்.

பிக்குவுக்குச் சிரிப்பு அதிகமாக வந்ததால் முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டார். சிறிது நேரம் வாயிலிலேயே உட்கார்ந்த விஜயன் உள்ளே சென்றான்.

"பாவம்!" என்று பரிதாபப்பட்டார் பிக்கு.

"நமது ஆசிரமம் எத்தனை சிறந்தது?" என்றார் தர்மர்.

zeevaa

உள்ளே சென்ற விஜயனின் நிலை சொல்லத் தரமில்லாத தாயிருந்தது. இரண்டு பெண்களும் உள் மண்டபத்தில் இரண்டு தூண்களில் சாய்ந்து உட்கார்ந்திருந்தார்கள். விஜயனைக் கண்டதும் இருவரும் வேறுபுறம் முகங்களைத் திருப்பிக் கொண்டார்கள்.



# 30. நுவரகிரி

பாழடைந்த பழைய விஹாரத்தின் உள்ளேயிருந்த முதல் மண்டபத்தில் இரண்டு பெண்களும் இரண்டு தூண்களில் சாய்ந்து உட்கார்ந்திருந்ததையும், இருவர் கைகளும் கன்னங்களில் புதைந்திருந்ததையும், முகத்தில் சோகமும் கோபமும் கலந்த சாயை படிந்திருந்ததையும் கண்ட விஜயன், அவர்கள் முன்பு பல விநாடிகள் நின்று அவர்களையே உற்றுப் பார்த்துக் கொண் டிருந்தான்.

தன்னைக் கண்டதும் அவர்கள் இருவரும் வெவ்வேறு புறங்களில் முகத்தைத் திருப்பிக் கொண்டதையும் கவனித்தான்.

அவர்கள் உள்ளங்களில் மூண்டெழுந்திருந்த பொறாமைத் தீதான் இத்தனைக்கும் காரணம் என்பதை அவன் அறிந்திருந்தாலும், தீயை அணைக்க என்ன செய்வது என்று அறியாமல் திணறிய படியே நின்றவன், கடைசியாக ஒரு முடிவுக்கு வந்து, "சுந்தரி! சுடர்விழி!" என்று அதட்டி ஒருமுறை அழைத்தான், உஷ்ணம் பூர்ணமாக ஒலித்த குரலில்.

இருவரும் அதற்குப் பதில் சொல்லாததால் வெகுண்டு, "அட பீடைகளா!" என்று அழைத்தான் அடுத்து. இதற்குப் பதில் கிடைத்தது சுந்தரியிடமிருந்து. "பீடையை ஏன் கட்டிக் கொண்டு அழவேண்டும்?" என்று அவள் கேட்டாள் முகத்தைத் திருப்பாமலே.

அதற்குமேல் தான் சும்மா இருப்பது தவறென்று கருதிய சுடர்விழி, "போன பீடையை ஏன் திரும்ப இழுத்து வரவேண்டும்?" என்று வினவினாலும் அவளும் முகத்தைத் திருப்பினாளில்லை.

zeevaa

''உங்கள் முகங்களுக்கு என்ன கேடு வந்துவிட்டது இப்பொழுது? திரும்பி நேராக என்னைப் பார்த்துப் பேசுவதுதானே?'' என்று வினவினான் விஜயன்.

''உங்களைப் பார்த்தது போதும்.'' என்றாள் திரிலோக சுந்தரி.

''பார்த்து அனுபவித்தது போதும்'' என்று சொன்னாள் சுடர்விழி.

''அனுபவித்ததா?'' - இதைச் சுள்ளென்று கேட்டான் விஜயன்.

''ஆம். சிவகோகர்ண ஸ்வாமி ஆசிரமத்து அருவிக் கரையை எண்ணிப் பாருங்கள்'' என்ற கலிங்க ராஜகுமாரியின் பதிலில் கோபத்துடன் வெட்கமும் கலந்திருந்தது, பழைய நினைப்பால். ஏற்கெனவே நடந்த இன்ப நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்த்ததால் சுடர்விழி சொன்னாள், ''என்னைப் பற்றி நினைக்க அத்தனை தூரம் செல்லவேண்டாம், பிக்கு காட்டிய உள்மண்டபம் போதும்,'' என்று.

அவர்கள் நினைவுபடுத்திய நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்த்த விஜயன் மனம் பெரிதும் நெகிழ்ந்தது. சிவகோகர்ண ஸ்வாமி ஆசிரம அருவிக் கரையில் திரிலோக சுந்தரியிடம் தான் அனுபவித்ததை எண்ணிப் பார்த்து அந்த மயக்க உலகத்துக்கே சென்றான் விஜயன். பிறகு தான் என்ன? சிம்மபுர மணவறை நிகழ்ச்சிகள், பிறகு கப்பலில் கிடைத்த சொர்க்க போகம் அனைத்தையும் நினைத்தான் அவன். ஒவ்வொரு நினைப்பிலும் திரிலோக சுந்தரியின் அங்கலாவண்யங்கள், அவளைத் தான் அலங்கோலப்படுத்திய முறைகள் அனைத்தையும் நினைக்க நினைக்க அவன் மனத்தில் ஏற்பட்ட இன்ப உணர்ச்சிகள் அவன் கண்களைச் சுந்தரிமீது நிலைக்க வைத்தன. அந்த இரவிலும், அந்தக் கோபத்திலும் அவள் அழகில் ஒரு கம்பீரமும் வனப்பில் ஒரு கவர்ச்சியும் இருந்ததை விஜயன் கவனித்தான்.

zeevaa

அடுத்து, புதிதாகப் பூத்த காட்டுமலர் போலச் செழித்த அழகுடன் விளங்கிய சுடர்விழியையும் கவனித்தான். அவளை அவன் இளையகேசதாது இருந்த கோட்டைத் தூணுக்கு அருகில் தூக்கிச் சென்று செய்த சரசங்களையும் இதே இரண்டாவது இரகசிய மண்டபத்தில் நடந்த கேளிக்கைகளையும் நினைத்து 'இரண்டும் இரண்டுவித அழகு. இரண்டு அனுபவங்களும் வெவ்வேறானவை. எதற்கு எது குறைந்தது? மல்லிக்கு முல்லை குறைந்ததா? தாமரைக்குத் தாழம்பூ குறைந்ததா?' என்று இரண்டு அழகிகளின் சிறப்பையும் தனது அனுபவங்களையும் எண்ணி இந்த இரண்டையும் எப்படி ஒருமைப்படுத்துவது?'' என்றும் சிந்தித்தான்.

இரண்டு பெண்களில் முதன் முதலாக முகத்தை நேராகத் திருப்பி விஜயனைப் பார்த்த திரிலோகசுந்தரி அவன் மனத்தில் ஏதேதோ எண்ணங்கள் ஓடுவதை முகபாவத்திலிருந்து தெரிந்து கொண்டாள். அவள் திரும்பியதை அவள் உடலசைவின் சிறு ஒலியாலேயே புரிந்து கொண்ட சுடர்விழியும் திரும்பி விஜயபாகுவை நோக்கினாள்.

இத்தனை சிந்தனையிலும் அவன் உடல் சிறிதும் வளையாமல் நிற்பதை இரண்டு பெண்களும் கண்டார்கள். அவனது வலிய நீண்ட கைகள் தங்களை என்னென்னவெல்லாம் செய்திருக்கின்றன. என்று இருவருமே ஒரே சமயத்தில் நினைத்தார்கள். அவன் வலிய உதடுகள் அப்பொழுது உறுதியும் சினமும் கலந்து காணப்பட்டாலும் தங்களை இன்பமாகத் துன்புறுத்திய நிலைகளை எண்ணிப் பார்த்தார்கள். அந்தத் திடமான கால்கள் தங்கள்மீது விழுந்தபோது விளைவித்த இம்சையையும் நினைத்துப் பெருமூச்சு விட்டார்கள். இந்த இருவர் பெருமூச்சினால் விம்மிய மார்புகளைக் கவனிக்கவே செய்த விஜயன் மனம் அன்று என்னமோ சிறிதும் கலங்கவில்லை. ஏதோ சிந்தித்தவன் திடீரென அவ்விரு பெண்களையும் நோக்கி, "எழுந்திருங்கள்" என்று வாயில் வரையில் கேட்கும்படி இரைந்து கட்டளையிட்டான்.

zeevaa

இரு பெண்களும் அந்தக் கட்டளையை லட்சியம் செய்ய வில்லை. பதிலுக்கு அவனை முறைத்தே பார்த்தார்கள். அதற்குப் பிறகு செயலில் இறங்கிய விஜயன் முதலில் திரிலோக சுந்தரியிடம் சென்று அவள் வலது கையைத் தனது இடது கையால் பிடித்து அவளைத்தூக்கி நிறுத்தினான். அடுத்து அவளை இழுத்துக் கொண்டு சுடர்விழி சாய்ந்திருந்த தூணை அணுகி வலது கையால் அவள் இடது கையைப் பிடித்துத் தூக்கி நிறுத்தினான்.

பிறகு இருவரையும் தரதரவென்று இழுத்துக் கொண்டு உள்ளேயிருந்த ரகசிய மண்டபத்துக்குச் சென்று இருவரையும் பலவந்தமாக உட்கார வைத்துத் தானும் அவர்கள் இருவருக்கும் நடுவில் உட்கார்ந்தான். இருவர் இடையிலும் தனது இரு கைகளையும் செலுத்தி நன்றாக இழுத்துக் கொண்டான் இரு வரையும். அவர்கள் சிற்றிடைகளைக் கன்றிப்போகும்படி இறுக்கி, ''எனது ஆசைமனைவிகளே! இப்பொழுதாவது புரிகிறதா என்னிடம் உங்கள் கோபம் பலிக்காது என்பது?'' என்று வினவினான்.

''தெரிகிறது'' என்றாள் திரிலோகசுந்தரி.

''வேலவர்'' என்றாள் சுடர்விழி.

''ஆம் ஆம். வள்ளி தெய்வானைகளுடன் உட்கார்ந்திருக்கிறார்'' என்றாள் சுந்தரி.

''நீங்கள் இருவர் மட்டும்தான் என் மனைவிமார்களென்று நினைக்காதீர்கள்'' என்றான் விஜயன்.

''இல்லை. இன்னும் பலர் இருப்பார்கள்'' என்று எரிந்து விழுந்தாள் சுந்தரி.

''தவறு. இன்னும் ஒருத்திதான் இருக்கிறாள். முதலில் நான் மணக்க வேண்டியவள் லீலாவதி. பாவம், சோழர் சிறையில் வாடுகிறாள்'' என்ற விஜயன் குரலில் துன்பத்தைக் காட்டினான்.

zeevaa

''அவளைப்போய் மீட்டு வருவதுதானே?'' என்று கேட்டாள் சுடர்விழி.

''அதற்குச் சோழர்களை வெற்றி கொள்ளவேண்டும்'' என்று நினைவுபடுத்தினாள் சுந்தரி.

''நம்மை வெற்றி கொண்டதுபோல் சோழர்களை எளிதில் வெற்றி கொள்ள முடியாது'' என்றாள் சுடர்விழி.

''பெண்களை ஜெயிப்பதில்தான் மன்னர் இவர்'' என்று சுந்தரி இடித்துக் காட்டினாள்.

''மும்முறை சோழர்களிடம் தோற்றிருக்கிறார்'' என்றாள் சுடர்விழி.

''ஆமாம். லீலாவதியும் வந்துவிட்டால், வேலவர் கிருஷ்ணனாகி விடுவாரே'' என்று சொன்ன சுந்தரி நகைத்தாள்.

அவளுடன் சேர்ந்து சுடர்விழியும் நகைக்கவே விஜயன் மனம் சினத்தின் சிகரத்துக்குச் சென்றது. அதன் விளைவாக அப் பெண்களின் இடைகளிலிருந்து அவன் இரு கைகளும் அவர்களைப் பின்புறமாக இழுத்து மண்டபத்தின் கருங்கல் தரையில் சாய்த்தன. அவர்கள் மத்தியில் தானும் மல்லாந்து படுத்து விஜயன் இருவர் உடல்களின் மீதும் தனது கைகளைப் போட்டான்.

''எடுங்கள் கையை'' என்று சீறினாள் சுந்தரி.

''ஆம், எடுங்கள் கையை'' என்று சுடர்விழியும் கடும் குரலில் சொன்னாள்.

''எதற்காக?'' விஜயன் கேட்டான் கைகளை எடுக்காமலே. ஒவ்வொரு கையும் ஒவ்வொருத்தியின் மார்புமீது தவழ்ந்தது.

உடனே இரண்டு 'உம்'கள் ஒலித்தன அவன் இரு பக்கங் களிலும்.

zeevaa

''என்ன உம் கொட்டுகிறீர்கள்?'' என்று விஜயன் வினவினான்.

''எனக்கு வெட்கமாயிருக்கிறது'' என்றாள் சுந்தரி.

''எனக்கும்தான்'' என்றாள் சுடர்விழி.

''எதற்காக வெட்கம்? அதுவும் என்னிடத்தில்'' என்று கேட்ட விஜயன் தனது கைகளை இருவர் உடல்கள் மீதும் அலைய விட்டான்.

இருவரும் அவன் கையை எடுத்து எறிந்துவிட்டு மறுபுறம் திரும்பிப் படுத்துக் கொண்டார்கள். விஜயன் மனத்தில் உணர்ச்சி அலைகள் மோதிக் கொண்டிருந்தன. இரண்டு பெண்களின் மனங்களும் அளவுக்குமீறி நெகிழ்ந்திருந்தாலும் பெண்களுக்கு இயற்கை அளித்திருக்கும் நாணம் அவர்களைப் பெரிதும் அடக்கியிருந்தது.

ஆனால் ஆண் மனத்தின் நைப்பாசையும் பலவீனமும் விஜயனை ஆட்கொண்டதாலும் அவன் கைகள் அவர்கள் எழில் மேடுகளின்மீது அலையவே செய்ததாலும் அவனுக்கு முதுகைக் காட்டிப் படுத்திருந்த இரு பெண்களின் மனங்களும் கட்டை மீறிக்கொண்டிருந்தன. அவர்கள் மானம் வெட்கமெல்லாம் இயற்கை ஏற்படுத்திய கரைகளை உடைத்துக் கொண்டிருந்தன. அடுத்து என்ன ஏற்படுமோ என்று தெரியாத நிலையில் வெளி மண்டபத்தில் பிக்குவின் குரல் பலமாக ஒலித்தது. ''மன்னவா! சீக்கிரம் வாருங்கள் அபாயம் துளிர்த்துவிட்டது'' என்று கூறினார் பிக்கு.

விஜயன் துள்ளி எழுந்தான். ''அபாயமா! யாரால்?'' என்று வினவினான்.

''நுவரகிரி சொல்வார்'' என்றார் பிக்கு.

zeevaa

தூக்கிவாரிப் போட்டது விஜயனுக்கு. ''நுவரகிரியா! எப்பொழுது வந்தார்?'' என்று கூறிக்கொண்டே எழுந்தான் படுத்த நிலையிலிருந்து?

''யாரது நுவரகிரி?'' என்று கேட்டாள் சுந்தரி.

''சிங்களத்தின் மாபெரும் படைத்தலைவர். மகாவீரர்'' என்றாள் சுடர்விழி.

''மன்னர் இருக்கும் இடத்துக்கு நானே போகிறேனே அவரை ஏன் கஷ்டப்படுத்த வேண்டும்?'' என்றது ஒரு கரகரத்த குரல்.

''அப்பா! என்ன பயங்கரக் குரல்!'' என்றாள் சுந்தரி.

''குரலிருக்கட்டும் நேரில் பார். நுவரகிரி சாட்சாத் யமனைப் போல் இருப்பார்'' என்றாள் சுடர்விழி.

''நுவரகிரி! நீர் உள் மண்டபத்துக்குப் போக வேண்டாம்'' என்றார் பிக்கு.

''ஏன்?'' நுவரகிரி கேட்டார்.

''தற்சமயம் அதுதான் மன்னரின் அந்தப்புரம்'' என்ற பிக்கு மெல்லப் புன்முறுவல் செய்தார்.

அவர்கள் விவாதித்துக் கொண்டிருக்கும் போதே. வெளியே வந்த விஜயன் ''நுவரகிரி! உங்கள் வரவு எனக்குத் துணிவை அளிக்கிறது'' என்றான்.

''நான் கொண்டு வந்திருப்பது நல்ல செய்தி அல்ல'' என்றார் நுவரகிரி, மேலும் சொன்னார்: ''ருஹுணாவில் கலகம் தொடங்கி விட்டது. நாம் உடனடியாகப் போரில் இறங்கினாலொழிய பெரும் நாசத்தைத் தவிர்க்க முடியாது'' என்று.

விஜயன் ஒரு விநாடி சிந்தித்தான். ''நிலைமையைப் பார்த்து வரத்தான் ரவிதேவனையும் காலனையும் அனுப்பினேன்'' என்றான் விஜயன் நுவரகிரியை நோக்கி.

zeevaa

"அவர்களும் வந்துவிட்டார்கள்" என்றார் நுவரகிரி.

அத்துடன் மேலும் பேச்சைத் தவிர்த்த விஜயன் வாயிலை நோக்கி நடக்கத் துவங்கினான். அங்கு அவன் கண்ட காட்சி அஞ்சாத அவன் மனத்தையும் கலக்கியது.



# 31. மந்திராலோசனை

அந்தப் புராதன விஹாரத்தின் உள் மண்டபத்தில் இரு மனைவிமார்களையும் அடக்கிவிட்டு, பிக்குவின் குரல் கேட்டு வெளிமண்டபத்துக்கு வந்த விஜயபாகு, பிக்குவிடம் நுவரகிரி நிற்பதையும், என்றும் சலிக்காத அவர் முகத்திலும் சலிப்புத் தட்டியிருப்பதையும் பார்த்து அதற்குக் காரணம் என்னவாயிருக்கும் என்று சிந்தித்தான். விஜயபாகுவின் பிரதான படைத்தலைவர்களில் ஒருவரான நுவரகிரி ஆஜானுபாகுவாய் அகன்ற மார்புடனும் மிகவும் திண்மையான தோள்களுடனும் முழந்தாளுக்குக் கீழே தொங்கிய நீண்ட கைகளுடனும் காட்சியளித்தார். அவர் அகன்ற முகத்தில் பருத்திருந்த கன்னங்களும் மெல்லிய வாள்போல் உதடுகளுக்கு மேல் தோன்றிய மீசையும் மிகப் பயங்கரமான தோற்றத்தை அளித்தன. அவரது அடர்ந்த புருவங்களும் சதா சிவப்பாகக் காட்சியளித்த கண்களும் பார்ப்பதற்கு மிக உக்கிரமான தோற்றத்தை அளித்தன. அவர் இடையில் கட்டியிருந்த நீண்ட அகலமான வாளும் கச்சையில் செருகியிருந்த குறுவாளும் அவர் உயரம் பருமனுக்கு ஈடுகொடுத்தன. நுவரகிரி தலையை புத்த பிக்ஷுக்கள்போல் மழுங்க வழித்திருந்ததால் அவர் பயங்கரத்தை அதுவும் அதிகப்படுத்தி, தலையை ஏதோ கவிழ்த்துவிட்ட இரும்புச் சட்டிபோல் காட்சியளிக்கச் செய்தது.

புத்த மதத்தில் தீவிர நம்பிக்கையுள்ளவரும் போரில் எல்லோரையும் வெட்டிச் சாய்ப்பதில் உற்சாகமுள்ளவருமான நுவரகிரி விஜயபாகுவுக்குத் தலைவணங்கிய முறையிலும் முரட்டுத் தனம் இருந்தது. ருஹுணாவில் கலகம் தொடங்கி விட்டதை அறிவித்த போதும் அவர் குரலில் சலிப்பு இருந்தது. அவரை

zeevaa

அழைத்துக் கொண்டு வாயிலில் வந்த விஜயபாகு அங்கிருந்த நிலை கண்டு அதிர்ச்சியடைந்தான்.

ரவிதேவன் மார்பிலும் கையிலும் காயங்கள் இருந்தன. காலன் காலில் பெரிய வெட்டுக் காயங்கள் இருந்தன. அவர்களுடன் வந்திருந்த இன்னும் பத்துப் பேர்களும் பெரும் காயங்களை அடைந்திருந்தார்கள். ஒரு வீரனின் முதுகில் சாட்டையடித்த காயங்கள் வரி வரியாகத் தெரிந்தன. அவர்கள் ஒவ்வொருவரையும் உற்றுக் கவனித்த விஜயபாகுவின் கண்களில் சீற்றம் மிதமிஞ்சிக் கனல் பறந்தது. "இதைச் செய்தது யார்?" என்ற உக்கிரத்துடன் வினவினான் விஜயபாகு.

"இளைய கேசதாதுவின் வீரர்கள்," என்றான் ரவிதேவன்.

விஜயன், ரவிதேவனைக் கூர்ந்து நோக்கி, "நீயே தனியாகப் பத்துப் பதினைந்து பேரைச் சமாளிப்பாயே அப்படியிருக்க இந்த விபரீதம் எப்படி நடந்தது?" என்று வினவினான்.

இதற்குப் பதில் காலன் சொன்னான்: "மகாராஜா! பத்து பதினைந்து பேர் என்ன, ஐம்பது பேரையும் எங்களால் சமாளிக்க முடியும். ஆனால் அதற்கு அவகாசமில்லை. ருஹுணாவிலிருக்கும் நமது படை வீரர்களைக் காண ஒற்றர்களிடத்தில் செய்தியனுப்பி விட்டு, குட்ட சாலகா மண்டலத்தின் ஒரு தனியிடத்தில் தங்கியிருந்தோம். நாங்கள் சென்றபோது குட்டசாலகா அமைதியாகத் தானிருந்தது. எங்களைக் காக்கவும் பத்து வீரர்கள் காவலிருந்தார்கள். எதிர்பாராத விதமாக ஓர் இரவில் பெரும் படையொன்று ரகசியமாகக் குட்டசாலகாவில் நுழைந்து சுற்றுப் புறங்களைக் கொளுத்தலாயிற்று. ஒரு படைப்பிரிவு நாங்களிருந்த இடத்தைச் சுற்றி எங்கள் காவல் வீரர்களைக் கொன்று உள்ளே

* GUTTASALAKA (MANDALA) is in South East CEYLON in Ruhana - Refer "Notes on Ceylon Topography in the Twelfth Century" - By H.W. CODRINGTON- C.C.E. Paper II - Page 71 - Journal R. A,S. CEYLON

zeevaa

நுழைந்தது. வந்தவர்களையெல்லாம் நாங்கள் கொன்றோம். பிறகு நாங்களிருந்த இல்லத்திற்குத் தீ வைக்கப்பட்டது. நாங்கள் போரிட்டுக் கொண்டே வெளியே வந்தோம். சூழ முயன்றவர்களை வெட்டிக் கொண்டே முன்னேறினோம். இருப்பினும் குட்டசாலகா முழுவதிலும் படைகள் நிறைந்திருந்ததால் கடைசியில் பிடிக்கப்பட்டோம் இளைய கேசதாதுவின் பாசறைக்கு நாங்கள் அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கு எங்களை நிராயுத பாணிகளாக்கி, கேசதாதுவின் தம்பி எங்களை வாள் கொண்டு காயப்படுத்தினான். பிறகு நாங்களும் இந்த வீரர்களும் விடுதலை செய்யப்பட்டோம். 'ருஹுணாவில் இனி நுழைய முடியாது என்று உங்கள் மன்னனிடம் சொல்லுங்கள்,' என்று இளைய கேசதாது சொன்னான். எங்கள் கைகள் சுவாதீனத்திலிருந்தால் அவன் கதை அந்த நிமிடத்திலேயே முடிந்திருக்கும்...'' இந்தக் கதையை காலன் துடிக்கும் உதடுகளால் சொல்லி முடித்தான்.

ரவிதேவன் ஏதும் சொல்லவில்லை. அவன் கண்கள் பதில் சொல்லின. அவற்றிலிருந்த விரோதமும் அவற்றிலிருந்து உதிர்ந்த கனலும் இளைய கேசதாதுவின் முடிவு அதிக நாளில்லை என்பதைத் தெளிவுபடுத்தின.

விஜயன் முகம் வறண்டு கிடந்தது. எந்தவித உணர்ச்சியையும் அவன் காட்டாவிட்டாலும் அவன் உள்ளத்தில் ஏதோ திட்டம் உருவானது மட்டும் புலப்பட்டது. விஜயன் அந்த இரு மாவீரர்களையும் மற்றவர்களையும் பார்த்து விட்டு, பிக்குவை நோக்கி, ''பிக்கு இவர்களுக்கு முதலில் சிகிச்சை நடக்கட்டும், காயங்களுக்குப் பச்சிலை வைத்துக் கட்டிவிட்டு பக்கத்துக் கிராமத்தில் யாராவது மருத்துவர் இருந்தால் அழைத்து வாருங்கள்,'' என்று உத்தரவிட்டான்.

அப்பொழுது அவனுக்குப் பின்னால் ஒரு குரல் ஒலித்தது. ''மருத்துவம் எனக்குத் தெரியும். பச்சிலைகளை மட்டும் பிக்கு பறித்து வரட்டும், '' என்ற குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்த

zeevaa

விஜயன், சுடர்விழி தனக்குப் பின்னால் நிற்பதைப் பார்த்தான். அவளுக்குப் பின்னால் சுந்தரியும் நின்றிருந்தாள். ''நானும் தங்கைக்கு உதவுகிறேன்,'' என்று சொல்லவே, பிக்கு தமக்குத் தாமே அர்த்தமில்லாமல் தலையை ஆட்டிவிட்டு வெளியே சென்றார். சுடர்விழி தனது தகப்பன் மார்பிலிருந்த காயத்தைப் பார்த்து, ''அப்பா! உங்களைக் காயப்படுத்துபவனும் ஒருவன் இருக்கிறான் என்பதை இன்றுதான் உணர்ந்தேன்'' என்று துன்பம் குரலில் ஒலிக்கப் பேசினாள்.

அப்பொழுது ரவிதேவன், ''என் கைகால்களைக் கட்டி விட்டால் எனக்குக் காயம் விளைவிப்பதில் என்ன கஷ்டம்?'' என்றவன், ''இதற்கு மருத்துவம் எதுவும் தேவையில்லை. நீ மற்றவர்களைப பார்,'' என்றான்.

ஆனால் திரிலோகசுந்தரி அதற்கு இடம் கொடுக்காமல், ''பேசுவதைப் பிறகு வைத்துக் கொள்வோம். எல்லோரும் இப்படி வாருங்கள்,'' என்று உத்தரவிட்டு எல்லோரையும் முன் மண்டபத்தின் தூண்களில் சாய வைத்தாள். பிறகு சுடர்விழியை நோக்கி, 'சுடர்விழி! நீ கங்கைக்குப் போய் ஒருகுடத்தில் நீர் கொண்டு வா. கங்கை பச்சிலைகளில் பாய்ந்து வருவதால் அதற்கே புண்களை ஆற்றும் குணம் உண்டு.'' என்று கூற, சுடர்விழி விரைந்தாள் மண்டபத்துக்குள். அங்கிருந்து ஓர் அபிஷேக குடத்தை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டு ஒய்யாரமாக நடந்தாள் கங்கையை நோக்கி.

அவள் போய், கங்கை ஜலம் பூர்ணமாக உள்ள குடத்தை மருங்கில் தாங்கி வருவதற்கும் பச்சிலைகளைப் பிக்கு கொண்டு வருவதற்கும் நேரம் சரியாக இருக்கவே சுந்தரியும் சுடர்விழியும் மருத்துவத்தைத் தொடங்கினர். சுடர்விழி பச்சிலையை ஏதோ இரண்டு மூன்று வேர்களை வைத்து நசுக்கி அரைத்தாள். அவள் அரைத்த நேரத்தில் கங்கை நீரைச்சிறு துணியில் பிழிந்து ரவிதேவன், காலன், மற்ற வீரர்கள் காயங்களைச் சுத்தம் செய்தாள் திரிலோக

zeevaa

சுந்தரி அவள் காயங்களைக் கழுவக் கழுவ, சுடர்விழி அரைத்த பச்சிலையைக் காயங்களில் பூசினாள்.

அந்த இருவர் பணிகளையும், அவர்கள் மருத்துவத் திறமையையும் கண்டு மூர்சமதும், சிற்பி, சீனன் இவர்களும் பிரமித்தனர். விஜயனும் அவர்களைக் கவனித்தான் வேறு கண்களால். தனது மனைவிகளும் ராணிகளுமான அந்த இரு எழில் மங்கைகள் மருத்துவம் செய்ய முன் வந்தது எத்தனை பெரிது என்று விஜயன் எண்ணினான். அவர்கள் ஒவ்வொரு வீரனையும் அணுகி மாறி மாறி நடந்தும் குனிந்தும் மருந்து போட்டபோது அவர்கள் அங்கங்களின் அசைவுகளில் எத்தனை அழகிருந்தது என்றும் கவனித்த விஜயபாகு, தான் செய்த பாக்கியம் உலகில் வேறு யாருமே செய்யவில்லை யென்பதை உணர்ந்து கொண்டான். இப்படி மருத்துவம் முடிந்ததும், உள்ளே தங்களுக்காக மூர்சமத் பக்கத்துக் கிராமங்களிலிருந்து வாங்கி வந்திருந்த பாலைச் சூடு பண்ணி, அந்த வீரர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தார்கள் அந்தப் பெண்கள்.

சருகுகளைச் சேர்த்து இரண்டு செங்கல்களை அணைப்புக் கொடுத்துத் தீ மூட்டி, பாலை சுந்தரி ஒரு சட்டியில் காய்ச்சி அகப்பையால் குடுவையில் ஊற்ற அதை எடுத்துப் போய் ஒவ்வொரு வீரனுக்காகக் கொடுத்தாள் சுடர்விழி.

இரு பெண்களும் செய்த சைத்தியோபசாரங்களால் காயமடைந்த வீரர்கள் சற்று உணர்ச்சி பெற்றுத் தங்கள் நன்றியைத் தெரிவிக்க முயன்ற சமயத்தில் திரிலோக சுந்தரி அவர்கள் முன்பு கம்பீரமாக நின்று, "நீங்கள் இன்றிரவு படுத்து உறங்குங்கள். மற்றவற்றை நாளை பார்ப்போம்," என்றாள். அடுத்து, சுடர்விழியை அழைத்துக் கொண்டு சட்டி குடுவைகளை எடுத்துக் கொண்டு அவற்றை மணலால் தேய்த்து மீதியிருந்த கங்கை நீரால் கழுவலானார்கள். "இது உங்கள் வேலையல்லவே? நான் செய்கிறேனே." என்று மூர்சமத் முன்வந்தான்.

zeevaa

இருவரும் மூர்சமதை நோக்கினர். சுந்தரி சொன்னாள், "மூர்சமத், இது பெண்களின் வேலை," என்று.

"ஆம் சமத்!" என்றாள் சுடர்விழி.

மூர்சமதின் ராட்சஸ விழிகள் இருவரையும் விசித்திரமாக நோக்கின. "நீங்களிருவரும் வருவதற்கு முன்பு மன்னருக்கு நான் தான் இறைச்சி வாட்டிக் கொடுப்பது வழக்கம்," என்றான், தனது தொழிலை அந்தப் பெண்கள் பிடுங்கிக் கொண்டார்கள் என்ற குறை குரலில் ஒலிக்க.

"அப்பொழுது சரி! இப்பொழுதுதான் நாங்கள் வந்து விட்டோமே!" என்ற சுந்தரி, "என்ன சுடர்விழி!" என்று கேட்க, சுடர்விழியும் தலையசைத்தாள்.

பிறகு இருவரும் அங்கு நிற்கவில்லை. வேகமாக மண்டபத்துக்குள் சென்று விட்டார்கள். அவர்கள் வேகமாக நடந்த போது அவர்கள் பின்னெழில்கள் அசைந்த அழகை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான் விஜயன். எழுந்த அந்த எழில்களுக்கு இணையாக அவர்கள் இடைகள் அசைந்ததையும், தோள்கள் திரும்பித் திரும்பிச் சென்ற முறையையும் கவனித்த விஜயன் மனம் உணர்ச்சிகளால் துள்ளிக் கொண்டிருந்தன.

அதுவரை வாளாவிருந்த நுவரகிரி வினவினார், "மன்னவா! நமது அடுத்த போர்த்திட்டம் என்ன?" என்று

"திட்டம் தயாராகிவிட்டது. நாளைக் காலையில் நமது மந்திராலோசனையில் திட்டத்தைத் தெரிவிக்கிறேன்," என்றான்.

"இப்பொழுதே மந்திராலோசனை துவங்கினால் என்ன?" நுவரகிரி கேட்டார்.

"ரவிதேவனும் காலனும் கலந்து கொள்ள வேண்டும்." என்ற விஜயபாகு, "நுவரகிரி நீங்களும் கண்களை மூடுங்கள்," என்று சொல்லி உள்நோக்கி நடந்தான்.

zeevaa

பிக்கு மன்னன் போவதைப் பார்த்துக் கொண்டு நின்றார். ''காலைக்கு முன்பு இன்னொரு மந்திராலோசனை உண்டு,'' இகழ்ச்சியாகப் பேசினார்.

சற்று நேரத்திற்கெல்லாம் உள்ளே மந்திராலோசனை துவங்கியது. மந்திராலோசனை மட்டுமல்ல, பூசலும் துவங்கியது. இரு பெண்களும் அவன் உள்ளே வந்ததும் இரண்டு தூண்களை நோக்கிச் சென்றார்கள். 'மறுபடியும் முருங்கை மரத்தில் வேதாளம் ஏறிக்கொண்டது' என்றான் விஜயன் அவர்கள் காதில் கேட்கும் படியாக. அதைக் கேட்டதும் இரண்டு அழகிகளும் அவனை நோக்கிச் சீறி வந்தனர்.



zeevaa

# 32. மந்திராலோசனைகள் இரண்டு

உள் மண்டபத்தில் தன்னை நோக்கிச் சீறிவந்த இரு பெண்களையும் கண்ட விஜயன் அவர்கள் சீற்றத்திலும் ஓர் அழகிருந்ததைக் கண்டான். சீற்றத்தால் அகல விரிந்த கண்கள், மேலே ஏறிய புருவங்கள், கைகளை அசைத்து அசைத்து வந்ததால் பக்கவாட்டுகளில் விலகி விலகிக் கூடிய மார்பகங்கள், துடித்துத் துடித்துக் கூடிக் கூடி விரிந்து பருத்த தொடைகள், இவை பல அஸ்திரங்களாக அவன் கண்களில் பட்டு மனத்தை உலுக்கியதன்றி, கண்கள் மூலம் இதயத்திலும் இறங்கியதாகத் தோன்றியது விஜயனுக்கு. அப்படிக் காமன் கணைகளால் தாக்கப்பட்ட விஜயபாகு உணர்ச்சிப் பெருமூச்சு விட்டான். அதை இரு பெண்களும் கவனித்தாலும் கவனிக்காதது போலவே அவனை நெருங்கி வந்து நின்று, ''என்ன சொன்னீர்கள்?'' என்று ஒரே சமயத்தில் கேட்டார்கள். அந்தக் கேள்வியிலிருந்த சீற்றமும் பதை பதைப்பும் துடித்த உதடுகளும் மனோகரமாயிருந்ததைக் கண்ட விஜயன், தனது இருகைகளையும் விரித்து அவ்விருவரையும் சுற்றி இழுக்க முயன்றான். அவன் மன ஓட்டத்தை முன்னதாகவே அறிந்து கொண்ட அந்த இரு பெண்களும் சற்றுப் பின்னடைந்ததன்றி, அவர்களில் சுடர்விழி மட்டும் ''கைகள் ஒழுங்காக இருக்கட்டும்,'' என்றாள்.

விஜயன் இதழ்களில் புன்முறுவலொன்று அரும்பியது. ''கைகளுக்கு இப்பொழுது என்ன குறைவு வந்து விட்டது.''

''இதற்கு விஜய மகாதேவி திரிலோகசுந்தரி, ''கைகளை அகல விரித்தது ஏன்?'' என்று கேட்டாள்.

zeevaa

விஜயன் முகத்தில் போலி திகில் விரிந்தது. "வேறு எதற்கு? உங்களைச் சாந்தப்படுத்தத்தான்," என்று கூறியபடி மீண்டும் அவர்களை நெருங்க முயன்றான்.

"உங்கள் கைகளை விரித்ததும் உங்கள் கைகளில் நாங்கள் வந்து விழுந்து விடுவோமா?" என்று கேட்டாள் சுடர்விழி.

"மாட்டீர்கள். ஆனால் கைகளால் உங்களை..." சொற்களை விழுங்கினான் விஜயன்.

"எங்களை...?" கோபத்துடன் கேட்டாள் சுந்தரி.

"உம்... உம்..." தடுமாறினான் விஜயன்.

"சொல்லுங்கள்," -சுடர்விழி விரட்டினாள்.

"உங்களைக் கைகளால் இறுக்கி இழுத்து இருவரையும்..." என்று விஜயன் சொல்லிக்கொண்டே இருக்கையில் திரிலோகசுந்தரி அவனை வலது பக்கத்திலும் சுடர்விழி இடது பக்கத்திலும் நெருங்கினார்கள். விஜயன் கை அவர்கள் இருவர் இடைகளையும் சுற்றி இழுத்தது. அவன் இழுத்ததாலும் இடைகள் கன்றிச் சிவக்கும்படி இறுகியதாலும் ஏற்பட்ட வலியால் இரு பெண்கள் உள்ளமும் கனிந்தாலும், அவர்கள் அதை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. அவர்கள் இடைகளை இறுக்கிய பிறகு முன்னங்கைகளைச் சற்றுத் தூக்கவே இருவர் மார்புகளின் அடித்தளத்தை அவன் உள்ளங் கைகள் தொட்டதால் சற்று நெளிந்த சுந்தரி, "உம், கை அங்கேயே நிற்கட்டும்," என்று கடிந்து கொண்டாள்.

"ஆம் ஆம். விளையாட்டு அதிகப் பட்டால் கையை இழப்பீர்கள்," என்றாள் சுடர்விழி.

விஜயன் மெல்ல நகைத்தான். "அதனால் உங்களுக்குத் தானே நஷ்டம்?" என்றும் கேட்டான்.

zeevaa

''உங்கள் கைகள் உடைந்தால் எங்களுக்கு என்ன நஷ்டம்?'' என்று கேட்டாள் சுந்தரி.

''நீங்களிருவரும் முடவனைக் கட்டிக்கொண்டு ஆயுள் முழுவதும் கஷ்டப்பட வேண்டியிருக்கும்'' என்று சொன்ன விஜயன் தனது தலையை ஒருபுறம் சாய்த்து சுந்தரியின் மார்புமீது வைத்தான்.

''உம். எடுங்கள் தலையை'' என்றாள் சுந்தரி.

''இல்லாவிட்டால் தலையை வெட்டி விடுவாயோ?'' என்று வினவிய விஜயன் தலையை எடுத்துச் சுடர்விழியை நோக்கித் திருப்பினான்.

அவள் தனது கையால் அவன் முகத்தைத் தடுத்தாள். ''முகம் இருக்கிற இடத்திலேயே இருக்கட்டும்'' என்று சொல்லவும் செய்தாள்.

''அதாவது சுந்தரியின்...''

''இல்லை இல்லை. ஒழுங்காக நிமிர்ந்தே இருக்கட்டும்'' என்றாள் சுடர்விழி.

சட்டென்று விறைத்து நின்ற விஜயன், ''வாருங்கள், உள்ளே போய்ப் பேசுவோம்'' என்று கூறி அவர்கள் இருவரையும் அணைத்த வண்ணம் மண்டபத்தில் அகல் விளக்கின் ஒளி படாத இடத்துக்கு இழுத்துச் சென்றான்.

''அங்கு வேண்டாம். வெளிச்சத்திலேயே நில்லுங்கள்'' என்றாள் சுந்தரி. அத்துடன் கேட்டாள். ''எங்களை எதற்காக வேதாளம் என்று சொன்னீர்கள்?'' என்று.

''நன்றாக, சகஜமாக உள்ளே வந்த நீங்கள் இரண்டு பேரும் ஏன் எதிர்ப்புறங்களில் சென்றீர்கள்?'' என்று வினவினான் விஜயன்.

''அதனால்?'' -சுந்தரி கேட்டாள்.

zeevaa

''வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது என்ற பழமொழியைச் சொன்னேன்'' - விஜயன் விளக்கம் தந்தான்.

''நாங்களென்ன பிசாசைப்போலவா இருக்கிறோம்?'' என்று சுடர்விழி கேட்டாள்.

விஜயன் துயர முகத்தைக் காட்டினான். ''உவமையை அப்படியே எடுத்துக் கொள்ளக் கூடாது. சுடர்விழி, உன் முகம் அசோக மலர் என்று சொல்கிறேன். அத்தனை தானா உன்முக அழகு? சுந்தரியின் முகத்தைக் கமலம் என்கிறேன். சுந்தரியின் முகம் கமலத்தைப் பழிக்கவில்லையா?'' என்று வினவிய விஜயன், இருவர் முகங்களையும் மாறிமாறி நோக்கினான்.

''வேறென்ன சொல்வீர்கள்?'' -சுந்தரியின் குரல் கனிந்து கிடந்தது.

அந்த ஆண்மகனின் பாராட்டு அவர்களுக்கு வேண்டியிருந்தது.

விஜயன் அவள் மனம் நெகிழ்ந்து விட்டதை உணர்ந்து கொண்டதால், ''மேலும் உவமை சொல்ல முடியும்'' என்று கூறிவிட்டு அவள் காதுக்கருகில் உதடுகளைக் கொண்டு போய் ஏதோ ரகசியம் சொன்னான்.

''சீச்சீ! வெட்கமில்லை உங்களுக்கு?'' என்றாள் சுந்தரி.

''என்ன சொன்னார் சுந்தரி!'' என்று கேட்டாள் சுடர்விழி.

''அவரையே கேள். சுத்த மோசமானவர்'' என்றாள் சுந்தரி.

''உம், சொல்லுங்கள். அவளிடம் என்ன ரகசியம் சொன்னீர்கள்?'' என்று சீறினாள் சுடர்விழி.

விஜயன் சுடர்விழியை நோக்கிக்குனிந்து அவள் காதிலும் ஏதோ சொன்னான். அதைத் கேட்டதும், ''விகாரம்! விகாரம்! மூடுங்கள் வாயை!'' என்றாள் சுடர்விழி.

zeevaa

''ஆம், மூடுங்கள் வாயை'' என்று சுந்தரி சுடர்விழியுடன் சேர்ந்து கொண்டாள்.

''எப்படி மூடட்டும்?'' என்று விஜயன் கேட்டதும் இருவருமே நகைத்தார்கள்.

''இவரை நம்பி எந்தப் பெண்ணையும் இவரிடம் விடக் கூடாது'' என்றாள் சுந்தரி.

''ஆம் ஆம். சுத்த அயோக்கியர்'' என்றாள் சுடர்விழி.

''இதில் மரியாதை வேறா? அயோக்கியன் என்றே சொல்லுங்களேன்'' என்ற விஜயன் அவர்களை மண்டபத்தின் இருண்ட பகுதிக்கு இழுத்துச் சென்றான்.

அவர்களும் இஷ்ட விரோதமாகச் செல்பவர்கள்போல் அவனுடன் சென்றார்கள். அகல்விளக்கு அடியோடு ஒளிவீசாத பகுதிக்கு வந்ததும் இருவரையும் தரையில் உட்கார வைத்த விஜயன் அவர்களுக்கு நடுவில் உட்கார்ந்து கொண்டான். இருவர் தோள்மீதும் கைகளைப் போட்டுக் கொண்டு, ''நீங்களிருவரும் இன்று எனது வீரர்களுக்குச் செய்த சிகிச்சையைக் கண்டேன். நீங்கள் இருவரும் போர்ப் பாசறைகளில் பெரிதும் பயன்படுவீர்கள்'' என்று சொன்னான் குரலில் உணர்ச்சி பொங்க.

இருவரும் பதில் சொல்லவில்லை. சுந்தரி தனது தோள்மீதிருந்த அவனது கையை எடுத்துத் தனது கன்னத்தில் வைத்துக் கொண்டாள். சுடர்விழி கையைச் சற்றுக் கீழே இழுத்து மலர் மேட்டின்மீது வைத்துக்கொண்டாள். சுந்தரியின் கன்னத்திலிருந்த கையை விஜயனே சற்றுக் கீழே இறக்கி இரு பெண்களுக்கும் சம அந்தஸ்தை அளித்தான். அந்த நிலையில் சொன்னான்: ''போர் இனி வெகு சீக்கிரம் மூளும்'' என்று.

''எந்த இடத்தில் துவங்கும்?'' என்று சுந்தரி கேட்டாள்.

zeevaa

"மலைநாட்டில் துவங்குமா?" என்று சுடர்விழி கேட்டாள்.

"இல்லை. துவங்காது. நெற்பயிர் விளையும் வனவாஹினிக்கு அருகில் துவங்கும்" என்று பதில் சொன்ன விஜயன், அவர்களது தோள்கள் மீதிருந்த கைகளை அவர்கள் இடைகளுக்கு மாற்றினான்.

"வனவாஹினியா! இப்படியொரு நதி சிங்களத்தில் இருகிறதா?" என்று சுடர்விழி கேட்டாள்.

"வாலவே கங்கையின் கீழ்ப்புறத்தில் இருக்கிறது. மஹாநாக குலா என்ற பட்டணம் கலாஓயா என்று அழைக்கப்பட்ட வாலவே கங்கைக்கு* வனவாஹினி என்பது பழைய பெயர். அதன் கரையில் இருக்கிறது மஹாநாகுலா என்ற பட்டணம்" என்று விளக்கிய விஜயன், "அங்கிருந்து கொண்டு படை திரட்டுவோம்" என்றும் சொன்னான்.

"படை திரட்டி?" என்று கேட்டாள் சுடர்விழி.

"மஹாநாகுலாவின் வடமேற்கிலுள்ள தம்பலகாமம் என்ற கோட்டையில் தளம் அமைப்பேன்" என்று விஜயன் விளக்கினான்.

"அந்தக் கோட்டை பழுதடைந்திருக்கிறது" என்று சுட்டிக் காட்டினாள் சுடர்விழி.

---

* According to native tradition we must look for Mahanaganula on the lower Valaveganga, N.W. of Ambalantota where to-day there are extensive rice-fields similar to those of 'Tissamaharama (H.W. CODRINGTON Notes on Ceylon Topography in the twelfth century II' from a proof-slip which I owe to the courtesy of the author.) In agreement with this is the statement in v. 10 of the Manavulu-sandesi that the river on which the town stood was the Vanavahini. Mr. Jayaratana of the Colombo Museum drew my attention to this passage, The Commentary explains the name of the river by cala hoya, which is the Valaveganga - Page 205 'SOOLA VAMSA' of Wilhelm Geiger.

zeevaa

''அதைப் பழுது பார்ப்போம். பலப்படுத்துவோம்'' என்று சொன்ன விஜயன் சற்றுப் பேச்சை நிறுத்தினான். ''வனவாஹினி வனவாஹினி'' என்று முணுமுணுத்தான். அவன் கைகள் அக்கம் பக்கத்தில் கிடந்த பெண்களின் இடையிலிருந்து கீழும் இறங்கியது. ''சிங்களத்தின் வளப்பம் பெரிது. அதன் உயர்ந்த மலைகள் தாழ்ந்த நிலங்கள், அருவிகள் அடவிகள், சமதரைப் பயிர்கள்'' என்று ஏதோ முணுமுணுத்துக்கொண்டே கைகளை அவர்கள் மீது அலைய விட்டான். பிறகு சொன்னான் சற்று இரைந்து, ''நீங்களும் சிங்களம் போலத்தான் இருக்கிறீர்கள். அதன் அழகை உங்களிடம் நான் பார்க்கிறேன்'' என்ற விஜயன். ''குட்டசாலகா! நீதான் எனது முதல் போரின் களம், வருகிறேன். சீக்கிரம்'' என்று சொல்லிக் கொண்டான். ''சரி நீங்களிருவரும் உறங்குங்கள். நான் சிந்திக்க வேண்டும்'' என்று கூறினான்.

அதைக்கேட்ட இரு பெண்களும் எழுந்து மண்டபத்தின் வெவ்வேறு திக்குகளில் சென்று படுத்துக் கொண்டனர். நீண்டநேரம் சிந்தனையில் இறங்கிய விஜயன் போர்த்திட்டத்தை உருவாக்கிக் கொண்டான். பிறகு எழுந்து உட்கார்ந்து இருபுறமும் கவனித்தான். இரு பெண்களும் இரு கோடிகளில் முடங்கிக் கிடந்தனர். மெள்ள அவன் எழுந்து நின்று சுந்தரி இருந்த இடத்தை நோக்கி மெதுவாகப் பூனைபோல் நடந்தான். மீண்டும் தனது இடத்துக்கு வந்த விஜயன் விடியற்காலைக்குச் சற்று முன்பு சுடர்விழி இருந்த இடத்தை நோக்கிச் சென்றான்.

மறுபடியும் திரும்பிவந்து படுத்தபோது பொழுது விடிந்து கொண்டிருந்தது. விஜயன் முகத்தில் சாந்தி நிரம்பி நின்றது. நாளை பகலுக்குள் புறப்பட்டுவிட வேண்டும் என்று உறுதிகொண்டு உறங்கிவிட்டான். விடிந்ததும் எழுந்த இரு பெண்களும் ஒருவரையொருவர் உற்று நோக்கிக் கொண்டனர். பிறகு நகைத்தனர். அந்த நகைப்பொலிகூட அவனை எழுப்பவில்லை.

zeevaa

மறுநாள் பகலவன் தோன்றிய பிறகே எழுந்த விஜயன் வெளி மண்டபம் சென்று, ''மூர்சமத், நாம் இன்று பிற்பகல் புறப்படு கிறோம்'' என்று கூறிக் கங்கையில் நீராடச் சென்றான்.

நீராடித் திரும்பியதும் புத்துடை அணிந்து நுவரகிரி, காலன், பிக்கு, ரவிதேவன், சிற்பி முதலியோரை அழைத்து உள் மண்டபத்தில் மந்திராலோசனையைத் துவங்கினான். கீழே சீலையை விரித்து அதில் திரிலோகசுந்தரியின் மைக் கூண்டிலிருந்து ஒரு சிறு துரும்பால் மையை எடுத்து திட்டத்தைத் தீட்டலானான். அவன் திட்டத்தை முடித்ததும் மற்றவர் பிரமித்தனர். பிக்குவின் முகத்தில் கவலை பெரிதும் படர்ந்தது. ''திட்டத்தை சிறிது மாற்றினால் என்ன?'' என்று கேட்டார்.

''திட்டம் நிறைவேறாது'' என்றான் விஜயன். ''நான் செய்வதை நீங்கள் செய்யக்கூடாது'' என்று திட்டமாக அறிவித்தான்.

''அபாயம்'' என்றார் பிக்கு.

''அதற்காகப் பிறந்தவன் நான்'' என்றான் விஜயன்.




zeevaa

# 33. குட்டசாலகா

உள் மண்டபத்தில் கீழே கிடந்த பழைய பாறை ஒன்றின் மீது உட்கார்ந்த விஜயபாகு ஒரு வெள்ளைச் சீலையில் மை கொண்டு முதலில் சில கோடுகளை வரைந்து சிங்கள தேசத்தின் சகல பகுதிகளையும் விளக்கமாகக் காட்டினான். அதில் புலஸ்திய நகரம் என்ற பொலோனாறுவாவைச் சுற்றி வட்டமாக்கினான். அங்கிருந்து சிங்களத்தின் தெற்குக் கோடி வரை நான்கு கோடுகளையும், குறுக்கே மூன்று கோடுகளையும் இழுத்து அதை ஆடு புலிக்கட்டமாகச் சிருஷ்டித்தான். சக்கரமாகச் சுழிக்கப் பட்ட புலஸ்திய நகரத்தைச் சுட்டிக் காட்டி, "இது சோழர்களின் தலைநகரம். இப்பொழுது அங்கிருந்து கொண்டு அவர்கள் அரசு நடக்கிறது. அகலத்தில் கிட்டத்தட்ட வடக்கு முழுவதும் அதாவது ராஜராட்டா (ராஜராஷ்டிரம்) உட்படச் சோழர்கள் வசத்தில் இருக்கிறது. இப்படியாகப் பாதி சிங்களத்தின் மீது அவர்கள் புலிக்கொடி பறக்கிறது. மாயாராட்டா என்ற சிங்களத்தின் மலை நாட்டிலும் ஒரு பகுதியை அவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள்.

"ஆகவே நாம் போரை மாயாராட்டா என்ற மலை நாட்டினின்றும் துவங்க முடியாது. ஆகையால் கீழேயுள்ள தக்ஷிண தேசத்துக்குச் செல்கிறேன். இதற்கு முன்பு தெற்கே மகாவலி கங்கையின் கிழக்குப் பகுதியிலுள்ள ருஹுணாவிலிருந்த மற்றொரு மகாகிராமத்திலிருந்து அரசு நடத்தினோம். வடதிசை மகாகாமம் இளைய கேசதாதுவின் வசத்திலுமிருப்பதால் நமது தளத்தை மேல் திசையில் வனவாஹினியின் மேற்குக் கரையிலிருக்கும் மகா நாககுலாவில் அமைத்துப் படை திரட்டுவோம். படைகளை நிறுத்தத் தம்பலகாமக் கோட்டையைப் பழுது பார்த்துச் சீர்படுத்துவோம்."

zeevaa

என்று தனது திட்டத்தை விளக்கினான். இந்தப் புலி ஆடு கட்டத்தில் கீழேயுள்ள பகுதி விஸ்தாரமாயிருப்பதால் அதில் பூராவும் நமது படைகள் நிறுத்தப்படும். அங்கிருந்து முதலில் கிழக்குப் புறம் போர் தொடுப்போம். இளைய கேசதாதுவைத்தாக்கி அவனை முறியடித்து விரட்டி ருஹுணா உள்பட தக்ஷிணதேசம் முழுவதையும் நமது வசமாக்கிக் கொள்வோம். அங்கிருந்து வடபுலப் போரைத் துவங்குவோம்,'' என்றான்.

இந்தத் திட்டத்தைக் கேட்டுக் கொண்டிருந்த பிக்கு முதலானவர்களில் நுவரகிரியே தமது ஆட்சேபனையைக் கிளப்பினார். ''நீங்கள் படை திரட்டும் வரை சோழர்கள் காத்துக் கொண்டிருப்பார்களா?'' என்று வினவினதன்றி, தமது இரும்பு மண்டையை இருபுறமும் ஆட்டினார், முடியாது என்பதற்கு அறிகுறியாக.

விஜயபாகு தனது படத்திலிருந்து கண்களைச் சற்றே உயர்த்தினான் நுவரகிரியை நோக்கி. ''நுவரகிரி! சோழர்கள் வடபுலத்திலிருந்து தெற்கு வருவதில் கஷ்டங்கள் இருக்கின்றன. உபராஜாவின் ராஜ்யம் என்று நாம் பிரித்திருக்கும் மலைநாட்டை அவர்களால் முழுதும் இன்னும் ஆக்கிரமிக்க முடியவில்லை. மலைகளும், பாறைகளும், இடையே குறுக்கிடும் வேகமான நதிகளும், அவர்களுக்குப் பெரும் தொல்லையைக் கொடுக்கின்றன. முன்னம் இருமுறை தென்கிழக்கிலிருக்கும் ருஹுணாவை சோழர்கள் வெற்றி கொண்டும் அவர்களால் கால் ஊன்ற முடியாமல் வடபுறத்துக்கே திரும்பி விட்டனர். தவிர வடக்குச் சிங்களம் தெற்குச் சிங்களத்தை விட சமபூமியை அதிகமாக உடையது. தவிர சோழ நாட்டுக்குச் சமீபம். அங்கிருந்து தெற்கே வர யோசிப்பார்கள். ஆகையால் நாம் தெற்கிலிருந்து போரைத் துவங்குவோம்,'' என்று கூறினான். நுவரகிரி அதற்குமேல் ஆட்சேபனை ஏதும் கிளப்பவில்லை.

zeevaa

ரவிதேவன் கேட்டான் ''நாம் எப்பொழுது இளைய கேசதாதுவைச் சந்திப்பது?'' என்று.

''தென்னிலங்கையில் நாம் கால் ஊன்றிய பிறகு,'' என்றான் விஜயன்.

''அது எப்படி?'' என்று காலன் வினவினான்.

''நான் வாதகிரியிலிருந்து கலிங்கம் போனபோது விட்டுப் போன படைகள் முறியடிக்கப்பட்டன சோழர்களால். அதில் சேதமானவை போக மீதிப் படை ருஹுணாவில்தான் இருக்க வேண்டும். இளைய கேசதாது இருக்கும் ருஹுணாவின் கிழக்குப் பகுதியில் அல்ல. மேற்குப் பகுதியில் காடுகளிலும் கிராமங்களிலும் அவர்கள் இருகக வேண்டும். நான் அதைக் கண்டுபிடித்துப் படை திரட்டுகிறேன். அது ரகசியப்படையாயிருக்கும். சரியான சமயத்தில் உங்களுக்குச் செய்தி வரும். அப்பொழுது வந்து சேருங்கள்,'' என்றான் விஜயன்.

அடுத்த உத்தரவுகளைப் பிறப்பிக்கலானான். ''சூ-சின்! நீயும் சிற்பியுமாகப் புறப்பட்டு தமானா நாட்டுக்குச் சிலாசத்திலிருந்து கப்பலில் சாதாரணப் பயணிகளாகப் புறப்படுகிறீர்கள். அங்கிருக்கும் மன்னருக்கு ஓலை தருகிறேன். அவரிடமிருந்து நல்ல கப்பல்களை வாங்கிக் கொண்டு சிங்களத்தின் தென்மேற்குக் கோடியிலுள்ள காலே துறைமுகத்துக்கு வாருங்கள். எப்படியும் இரண்டு மாதங்களுக்குள் திரும்பி விடுங்கள். காற்று அனுகூல மாயிருந்தால் திரும்பி விடலாம். இல்லையேல் மூன்று மாதங் களுக்குள் எப்படியும் திரும்பிவிடலாம். அந்த மரக்கலங்களை நிர்வகிக்க இங்கு நமது பழைய மாலுமிகள் இருப்பார்கள்,'' என்றான். பிறகு ரவிதேவனையும் காலனையும் நோக்கி, ''நீங்களிருவரும் திரிலோகசுந்தரியையும், சுடர்விழியை யும் அழைத்துக் கொண்டு இராவணன் மலைக்குச் சென்று அங்கு காடுகளிலிருக்கும் வேடர்களைத் திரட்டுங்கள்,'' என்று உத்தர விட்டான்.

zeevaa

அடுத்து, பிக்குவையும் மற்ற நான்கு துறவிகளையும் நோக்கினான். "நீங்கள் ஐவரும் துறவிகளாதலால் உங்கள் யாருக்கும் சோழர்களிடமிருந்து தொந்தரவு இருக்காது. ஆகவே புலஸ்திய நகரத்திலும் அனுராதபுரத்திலும் இருக்கும் நிலைமையை அறிந்து அவ்வப்பொழுது செய்தியனுப்புங்கள்," என்று கூறினான். மறுபடியும் ஆடு புலிக்கட்டத்தைக் காட்டி, "கீழேயிருக்கும் ஆடுகள் இனிப் புலிகளாகும். தெற்கிலிருந்து வடக்கு நோக்கி நமது பெரும்படை நகரும். இது இறுதிப் போர். சிங்களச் சுதந்திரத்தை நாட்டும் போர்," என்று உணர்ச்சி வசப்பட்டுப் பேசினான்.

அதுவரை ஏதும் பேசாதிருந்த இரு பெண்களும் விஜயனைக் கூர்ந்து நோக்கினர். திரிலோகசுந்தரி முதலில் தனது பவள வாய் திறந்து, "நீங்கள் செய்யும் ஏற்பாடுகளைக் கண்டு தமிழர்கள் கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருப்பார்களா? எதிரிகள் சாமான்யமானவர்களா?" என்று விசாரித்தாள்.

விஜயன் சற்றே திரும்பி அவளை நோக்கினான் "இல்லை சுந்தரி. நான் அப்படி நினைக்கவில்லை. தமிழர்கள் வீரத்தில் எந்த விதத்திலும் சிங்களவர்களுக்குக் குறைந்தவர்களல்ல. அவர்கள் வீரத்தை இங்கு வந்து நம்மை முறியடித்து நம்மை ஆண்டதிலேயே புரிந்து கொண்டிருக்கிறோம். ஆகையால் எந்த விதத்திலும் மீண்டும் நாம் தோற்கக் கூடாது என்றுதான் காலம் தாழ்ந்து நடவடிக்கை எடுக்கிறேன்," என்று கூறினான். அத்துடன் சுடர்விழியை நோக்கி, "சுடர்விழி! நீ ஏன் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை?" என்று கேட்டான்.

"கேள்வி கேட்பதற்கு நான் என்ன அரசகுமாரியா? அரசு விவகாரங்களைப் பற்றி எனக்கு என்ன தெரியும்? நீங்கள் எதைச் சொன்னாலும் பணியத்தான் தெரியும் எனக்கு," என்றாள் சுடர்விழி.

"என்ன தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் அவரைக் கைக்குள் போட்டுக் கொள்ளத் தெரிந்து கொண்டாயல்லவா?" என்று கூறினாள் திரிலோகசுந்தரி.

zeevaa

''நீ முன்பு செய்ததைத்தானே நான் பின்பற்றினேன்?'' என்றாள் சுடர்விழி.

திரிலோகசுந்தரி தனது கருவிழிகளைத் திருப்பினாள் விஜயன்மீது. ''இவள் என்னை அவமானப்படுத்துவதைக் கேட்டுக் கொண்டு குத்துக்கல் மாதிரி உட்கார்ந்திருக்கிறீர்கள்?'' என்று சீற்றம் மிகுந்த சொற்களை உதிர்க்கவும் செய்தாள். அத்துடன் எழுந்திருந்தாள் வேகமாக.

சுடர்விழி அடக்கமாக உட்கார்ந்து புன்னகை செய்தாள். ''என்ன சிரிக்கிறாய்'' என்று சுந்தரி அதற்கும் சீறினாள்.

அதுவரை அவர்கள் சண்டையைச் சகித்துக் கொண்டிருந்த விஜயன், ''இருவரும் உள்ளே செல்லுங்கள். வீணாக மந்திரா லோசனையில் தலையிட வேண்டாம். இது ஆண் மக்கள் விவகாரம்.'' என்று சினந்து இருவரையும் உள்ளே செல்லச் சைகை செய்தான். இரு பெண்களும் எழுந்து ஒருவரையொருவர் நோக்கிக் கொண்டு நின்றனர் ஒரு வினாடி. பிறகு விரைந்தனர் உட்புறத்துக்கு.

விஜயன் மறுபடியும் பேச்சைத் துவங்கி, ''நான் தெற்கே சென்று மஹாநாககுலாவில் படை திரட்டித் தம்பலகாமாவின் கோட்டையை யும் பழுது பார்க்கிறேன். நீங்களும் உங்களுக்கிட்ட பணிகளை நிறைவேற்றுங்கள். இம்முறை நாம் சரியாக இறங்கினால் சுதந்திரச் சிங்களம் ஒருகுடையின் கீழ் வரும்.'' என்று கூறிவிட்டு எழுந்தான், மந்திராலோசனை முடிந்துவிட்டது என்பதற்கு அறிகுறியாக.

எல்லோரும் எழுந்ததும் ''மூர்சமத்! புரவிகளைச் சித்தம் செய்'' என்று உத்தரவிட மூர்சமத் வெளியே சென்றான். அவன் நடையிலேயே உற்சாகமிருந்ததைக் கவனித்த நுவரகிரி, ''உங்களைப்பிரிந்து மூர்சமத் இருக்கமாட்டான் போலிருக்கிறது?'' என்றார்.

''ஆம்.'' என்றான் விஜயன் கனிவு துலங்கிய குரலில்.

zeevaa

"மந்திராலோசனையில் அவன் வாய் திறக்கவில்லையே," என்றார் நுவரகிரி வியப்புடன்.

"அவன் கர்ம வீரன். பேச்சிலோ விவாதத்திலோ நம்பிக்கையில்லாதவன்," என்று கூறிய விஜயன் முகத்தில் மகிழ்ச்சி நிரம்பி நின்றது.

நுவரகிரி கடைசியாக ஒரு சந்தேகம் கேட்டார். "எனக்கு ஒரு உத்தரவும் நீங்கள் இடவில்லையே?" என்று.

"நீங்கள் *தம்பலகாமத்தில் தங்கிவிடுங்கள். அங்கு வருபவர்களுக்கு ராணுவப் பயிற்சி அளிக்கலாம்," என்று கூறினான்.

அத்துடன் உள்ளே சென்று இரு மனைவிமாரிடமும் விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தான். அவனது கரிய நிறப்புரவி நின்று கொண்டிருந்தது. அதன் பக்கத்தில் மூர்சமதின் பழுப்பு நிறப் புரவியும் நின்றிருந்தது. விஜயன் மனம் பழைய நினைவுகளை உற்பத்தி செய்தது. தனது புரவியில் தாவி ஏறிய விஜயன் சிறிது நேரம் சென்ற பின் பக்கத்திலிருந்த மூர்சமதை நோக்கி, "நாம் மீண்டும் தனித்துப் பயணம் செய்கிறோம். ஆனால் இங்கு ரிஷிகுல்யா நதி இல்லை" என்றான்.

மூர்சமத் புன்முறுவல் செய்தான். "அதனாலென்ன? எதிரே மகாவலி கங்கை இருக்கிறது. அதைத் தாண்டினால் கலிங்கத்திலிருந்ததைவிடப் பெரிய ஆபத்துமிருக்கிறது" என்றான்.

விஜயன் மகிழ்ச்சியுடன் நகைத்தான். பிறகு ஏதும் பேசாமல் மகாவலி கங்கையின் கரையோரமே தெற்கு நோக்கிப் பயணம் செய்தான். இரண்டு நாள் பயணத்துக்குப் பிறகு, "மூர்சமத்! கங்கை

---

★ *கிராமம் என்ற பதத்தைச் சிங்களத்தில் காமம் என்று உச்சரிக்கிறார்கள். உதாரணம் கதிர் காமம். அதே மாதிரி தம்பல காமம்.*

zeevaa

இங்கே அகலமில்லை. ஆகவே இதைத் தாண்டினாலென்ன?'' என்று கேட்டான்.

''தாண்டலாம். அடுத்து இருப்பது குட்டசாலக மண்டலம். இளைய கேசதாதுவின் படை நடமாட்டம் அங்கிருப்பதாக ரவிதேவன் சொல்லவில்லை?'' என்று கேட்டான் மூர்சமத்.

''எதற்கும் அதைப் பார்ப்போம்'' என்ற விஜயன் சிறு வாய்க்கால் போல் ஓடிக்கொண்டிருந்த மகாவலி கங்கையின் முனையைத் தாண்டினான். மாலை மறைந்து இருள் சூழ்ந்த நேரத்தில் குட்டசாலக நகரின் புறக்காட்டில் புகுந்து தூரத்தே தெரிந்த ஒரு சிறு விளக்கொளியை நோக்கி புரவியை நடந்தினான். அந்த விளக்கொளியை அடைந்ததும் அங்கு அவனை வரவேற்க ஐந்து பேர் சித்தமாயிருந்தார்கள்.



zeevaa

# 34. பதுமைகள் நான்கு

சமந்தகூடம் என்று சிங்களத்திலும், ஆடம்ஸ் பீக் என்று ஆங்கிலத்திலும் அழைக்கப்பட்டுவரும் அந்த மாபெரும் மலையிலிருந்து சிறிது தூரத்திற்கப்பாலிருந்த பாழடைந்த விஹாரத்திலிருந்து புறப்பட்டு, பல சிற்றருவிகளையும் காடுகளையும் கடந்து, இரண்டு நாள் துரிதமான பயணத்திற்குப் பிறகு மகாவலி கங்கையின் சிற்றருவியைத் தாண்டி ருஹுணாவிலுள்ள குட்டசாலக நகரின் புறக்காட்டை அடைந்து தூரத்தே தெரிந்த சிறு விளக்கின் ஒளியை நாடி விஜயன் புரவியை நடத்தியதன் காரணத்தைப் புரிந்து கொள்ள முடியாத மூர்சமத், அங்கு நான்கு குடிசைகள் இருந்ததையும், அந்தக் குடிசைகளொன்றில் சிறு விளக்கொன்றை ஏற்றி வைத்து ஐந்து பேர் இருந்ததையும் கண்டு மிதமிஞ்சிய வியப்பை அடைந்தான். அந்த ஐவரில் ஒருவன் சிங்கள மன்னனின் பழைய படைத் தலைவனான ஜேட்டதிஸ்ஸன் என்பதையும் உணர்ந்ததும் மூர்சமதின் வியப்பு உச்சியை அடைந்தது.

''இந்த இடத்துக்கு நாங்கள் வருவது இவர்களுக்கு எப்படி முன்னதாகத் தெரியும்? தெரிய வசதியில்லையே?'' என்று சிந்தித்த மூர்சமத், ''சரி, அப்படியே தற்செயலாக அவர்கள் இங்கிருந்து நாம் சந்தித்திருந்தால் அவர்களிடம் வியப்போ அதிர்ச்சியோ இரண்டிலொன்று இருக்க வேண்டும். அதையும் காணோமே?'' என்று தனக்குள் வினவிக் கொண்டாலும் அதை வெளியில் காட்டவில்லை. விஜயன் அந்தக் குடிசையை நோக்கி வந்தபோது அவனும் தனது புரவியை மன்னன் புரவியுடன் நடத்தினான். மன்னன் புரவியிலிருந்து குதித்தபோது தானும் குதித்தான், மன்னன் புரவிமீது

zeevaa

சேணத்தை விட்டெறிந்தபோது தானும் தனது புரவிமீது சேணத்தை விட்டெறிந்தான். மன்னன் குடிசைக்குள் நுழைந்தபோது தானும் நுழைந்து, அந்த ஐவரும் தலைவணங்கியதற்கு மன்னன் பதிலாகத் தலையசைத்தபோது தான் மன்னனில்லை என்ற உணர்வால் அந்த ஐவருக்கும் தலையை நன்றாகவே வணங்கினான்.

அவன் மன்னனைச் சகலத்திலும் நிழல்போல் பின்பற்றுவதைக் கவனித்த சேனாதிபதியான ஜேட்டதிஸ்ஸன் மெல்லப் புன்முறுவல் செய்தான். அதன் காரணத்தைப் புரிந்து கொண்ட விஜயன், "மூர்சமத் பழையபடிதான் இருக்கிறான். என்னுடன் இருந்து எனது தொந்தரவுகளைத் தாங்கிக் கொள்வதைத் தவிர, வேறெதையும் அறியாதவன்" என்று கூறிவிட்டு "ருஹுணாவின் நிலை எப்படியிருக்கிறது?" என்று வினவினான்.

அவர்கள் அங்கு எப்படி வந்தார்கள்? ஏன் வந்தார்கள்? தாங்கள் வருவது முன்னமே அவர்களுக்குத் தெரியுமா? இந்த மாதிரி மன்னன் கேட்க வேண்டியதிருக்க, அதை விட்டு ருஹுணாவின் நிலைபற்றிக் கேட்பதைப் பற்றி வியப்படைந்த மூர்சமத் வழக்கத்தை மீறி, "ருஹுணாவின் படைத் தலைவரே! நாங்கள் வருவது உங்களுக்கு முன்னமே தெரியுமா?" என்று ஒரு கேள்வியை வீசினான்.

ஜேட்டதிஸ்ஸன் புன்முறுவல் கொண்டு, "மன்னர் சிங்களத்துக்குத் திரும்பிவிட்டது வெகு சீக்கிரத்தில் நாடு முழுவதும் பரவிவிட்டது. போதாக்குறைக்கு இளைய கேசதாது, சோழர் படைகளும் சிங்களப் படைகளும் கலந்த ஒரு படையுடன் இங்கு வந்து ருஹுணாவின் இந்தப் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டதும், அவனைச் சீதாவாகா நதி தீரத்திலிருந்து துரத்தியது சிங்கள மன்னர்தானென்பதைப் புரிந்துகொண்டோம். தவிர அவன் இந்தப் பகுதியில் குழப்பத்தையும் கலவரத்தையும் விளைவிக்கத் துவங்கியதும் மன்னர் படையிலிருந்த பலரும் காடுகளுக்குள்

மறைந்துவிட்டனர். இன்னும் சிலர் தென்மேற்குப் பகுதிக்குச் சென்று விட்டனர். மன்னர் படை திரட்டத் துவங்கியதும் சுமார் இருபதினாயிரம் பேர் கொண்ட படை இங்கு உருவாகிவிடும். அப்புறம் இளையகேசதாது இந்தப் பகுதியில் அரை க்ஷணம் இருக்க முடியாது. ஆகவே மன்னர் வந்தால், எப்படியும் இந்தப் பகுதியில் எங்காவதுதான் வர முடியும் என்று தீர்மானித்து இங்கு எங்கள் தளத்தை அமைத்துக்கொண்டோம்'' என்று விளக்கினான் மூர்சமதுக்கு.

அப்பொழுதும் மூர்சமத் திருப்தியடையவில்லை. ''இந்தப் பெரும் காட்டில் நீங்கள் இங்குதான் தங்கியிருப்பீர்களென்று மன்னருக்கு எப்படித் தெரியும்? தவிர இந்த ஐந்து குடிசைகள் தான் உங்கள் தளமா?'' என்றும் வினவினான்.

''மூர்சமத்! இத்தனை நாள் மன்னரிடம் அவர் நிழலைப் போலிருந்து விட்டு அவர் என்ன நினைப்பார் என்பதை நீ புரிந்து கொள்ளாதது விசித்திரமாயிருக்கிறது. மாற்றான் ஆட்சி இங்கு நடக்கும்போது நாம் தளத்தைப் பகிரங்கமாக அமைக்க முடியாது. இளைய கேசதாது இங்கிருந்து வடமேற்கிலுள்ள ஊருவலா நகரத்தில் ஒரு படைப் பகுதியை நிறுத்தியிருக்கிறான். படையின் பெரும்பகுதி குட்டசாலகா மண்டலத்தின் தென்பகுதியில் இருக்கிறது. ஆகவே நமது படையை இடையில் நிறுத்தியிருக் கிறோம். அவன் எந்தத் திக்கிலிருந்து முன்னே முயன்றாலும் நமது படைகள் தடுக்கும்'' என்று விளக்கிய ஜேட்டதிஸ்ஸன். ''மன்னவா! அமர்ந்து உணவருந்துங்கள்'' என்று வேண்ட, மன்னன் அக்குடிசையின் ஒரு கோடியில் வாயிலை நோக்கிய வண்ணம் குடிசையின் மூங்கிலில் சாய்ந்து கொண்டான்.

மூர்சமதும் சற்று எட்ட அமர்ந்த பின்பு ஜேட்டதிஸ்ஸன் தன்னுடனிருந்த மற்ற நால்வரையும் நோக்க, அவர்கள் மன்னனுக்குத் தலைவணங்கி வெளியே சென்றனர். சிறிது

zeevaa

நேரத்திற்கெல்லாம் அவர்கள் பக்கத்துக் குடிசையிலிருந்து கொணர்ந்த உணவை மன்னனும் மூர்சமதும் அருந்திய பிறகு மீண்டும் மந்திராலோசனை துவங்கப்பட்டது.

விஜயன் ஜேட்டதிஸ்ஸனைப் பார்த்து வினவினான், "நான் சென்ற பின்பு ருஹுணாவில் என்ன நடந்தது?" என்று.

"மன்னனில்லாத நாட்டில் என்ன நடக்குமோ அது நடந்தது. தடியெடுத்தவன் தண்டல்காரன் என்று இளைய கேசதாது சில பகுதிகளைச் சோழர் உதவியால் சேர்த்துக் கொண்டான். ஆனால் தங்களிடம் மக்களுக்கிருந்த பக்தியால் அவன் அதிகமாக, பூரணமாக, எந்தப் பகுதியையும் பிடிக்க முடியவில்லை. நுவரகிரியும் நமது படைகளைப் பிரித்து ஆங்காங்கு அனுப்பி விடும்படி உத்தரவிட்டார்," என்று விளக்கினான் ஜேட்டதிஸ்ஸன்.

விஜயன் ஜேட்டதிஸ்ஸனைக் கூர்ந்து நோக்கினான். "நுவரகிரி என்னிடம் அதைப்பற்றி ஏதும் சொல்லவில்லையே?" என்று வினவவும் செய்தான்.

"இங்கிருந்து சென்றபோது அவர் சொன்னார், 'படைகளை மன்னர் பிரித்தால் எப்படிப் பிரிப்பாரோ அப்படிப் பிரித்திருக்கிறேன்' என்று. ஆகையால் மன்னர் புரிந்து கொள்வார் என்பதால் அவர் ஏதும் சொல்லவில்லையென்று நினைக்கிறேன்," என்றான் தளபதி ஜேட்டதிஸ்ஸன்.

புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த விஜயன் சிறிது நேரம் தீவிர சிந்தனையிலிறங்கினான். பிறகு கேட்டான். "நான் சிங்களத்திலிருந்து சென்றபோது இருபதினாயிரம் வில்லவர். பதினாயிரம் புரவிப்படை, காலாட்படை இருபதி னாயிரம், ஆக மொத்தம் ஐம்பதினாயிரம் படைகளை விட்டுப் போனேன். அவற்றில் வாதகிரிக் கோட்டை முற்றுகையில் அழிந்தது போகப் பாக்கி எவ்வளவிருக்கும்?" என்று.

zeevaa

ஜேட்டதிஸ்ஸன் முகத்தில் துன்பத்தின் சாயை படர்ந்தது. ''சரிபாதி பாக்கி இருக்கும்,'' என்றான் துன்பம் தோய்ந்த குரலில்.

''அதை நுவரகிரி எப்படிப் பிரித்தார்?'' -மன்னன் அடுத்த கேள்வியைத் தொடுத்தான்.

''இங்கு என்னிடம் பத்தாயிரம் பேரைத் தங்க வைத்தார்.மீதிப் படையை மூன்றாகப் பிரித்து, மேற்குப் பகுதியில் தம்பலகாமாவைச் சுற்றிலும், தென்மேற்கில் மகாநாககுலாவிலும், காலே துறைமுகப் பகுதியிலுமாக தங்க வைத்திருக்கிறார். இதைத் தவிர, பதினையாயிரம் வேடர்கள் கொண்ட படையொன்று இராவண மலைக்கருகில் இருக்கிறது. நமது படைத் தலைவர் ரவிதேவன் கோடிகாட்டினால் அந்தப் படையும் நம்முடன் சேர்ந்துவிடும்,'' என்று படை நிலவரத்தை விளக்கினான் ஜேட்டதிஸ்ஸன்.

அடுத்து ஏதும் பேசாத விஜயன் தீவிரமான சிந்தனையிலிறங்கினான். ''இங்கு உளவு பார்க்க வந்த ரவிதேவனையும் காலனையும் எதிரிகள் தாக்கிப் படுகாயம் விளைவித்திருக்கிறார்களே, தெரியுமா?'' என்று வினவினான்.

''அவர்கள் தப்பிச் சென்று விட்டதும் கேள்விப்பட்டோம். முன்னதாகத் தெரிந்திருந்தால் நாங்கள் அவர்களைக் காத்திருப்போம். அல்லது அவர்களை எதிரிகள் அணுகுமுன்பு எதிரிகளுக்குப் பெரும் சேதத்தை விளைவித்திருப்போம். முன்னறிவிப்பு இல்லாததால் ஏதும் செய்ய இயவில்லை,'' என்றான் ஜேட்டதிஸ்ஸன்.

''இளையகேசதாது இப்பொழுது எங்கிருக்கிறான்?'' என்று வினவினான் விஜயன்.

''இந்த நகரத்தில்தான் இருக்கிறான்,'' என்று ஒரு வெடியை வீசினான் ஜேட்டதிஸ்ஸன்.

''நமது படைகள் இருக்கும் இடத்திலா?'' விஜயன் கேட்டான் வியப்புடன்.

zeevaa

''ஆம்.''

''நமது படைகள்?''

''சுற்றுப்புறக் காடுகளில் மறைந்திருக்கின்றன. மீதியுள்ள சிறு படையினர் சாதாரணப் பிரஜைகளாகப் பண்ட விற்பனை செய்கிறார்கள். சிலர் நகரத்தின் பெரிய கடைகளிலும் பணி புரிகிறார்கள்.''

''இளையகேசதாதுவுடன் வந்திருக்கும் படைப் பலம் எத்தனை?''

''அதிகமில்லை. ஐயாயிரம் பேர்தான் இருக்கும். அனைவரும் சோழர்கள். அவர்களில் சிலர் வேலைக்காரப் படையினர்.''

அடுத்து ஏதும் பேசவில்லை சிங்கள இளவல் நீண்ட நேரம். ''நகரத்தின் கடைகள் சிலவற்றில் நமது வீரர்கள் மாற்றுடையில் இருப்பதாகச் சொன்னாயே, அவற்றில் பெரிய கடை எது?'' என்று கேட்டான் சிறிது சிந்தனைக்குப் பிறகு.

''குட்டசாலகா பண்டகசாலை,'' என்றான் ஜேட்டதிஸ்ஸன்.

''இளையகேசதாது தங்கியிருக்கும் மாளிகைக்கும் அதற்கும் எத்தனை தூரம்?'' என்று வினவினான் விஜயன்.

''பக்கத்தில்தான்,'' என்றான் படைத்தலைவன்.

விஜயன் ஒரு முடிவுக்கு வந்து, ''சரி. இன்று ஊரடங்கியதும் நாம் அந்தப் பண்டகசாலைக்குப் போகிறோம். வணிகர் உடை ஒன்று எனக்கும் மூர்சமதுக்கும் கொண்டு வா. தவிர உன் வீரர்களில் நான்கு பேர் என்னுடன் வரட்டும்,'' என்றான் விஜயன்.

---

★ *வேலைக்காரர் படை என்பது தமிழரும் மலையாளத்தினரும் கலந்த கூலிப் படை. அதிக ஊதியம் கொடுப்பவர்களுடன் சேர்ந்து போராடுவார்கள்.*

zeevaa

பிறகு தனது திட்டத்தை விளக்கினான் விஜயன். அதைக்கேட்ட ஜேட்டதிஸ்ஸனும் அவனது உபதளபதிகள் நால்வரும் திகைத்தனர். "மிகவும் துணிகரத் திட்டம்," என்றான் ஜேட்டதிஸ்ஸன்.

"அபாயம்," என்றான் ஓர் உபதளபதி.

"ஆபத்தில்லாமல் வெற்றியில்லை" என்ற விஜயன் அன்று பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலானான்.

அடுத்து நடக்கவிருக்கும் பயங்கர நாடகத்தை உணராமலே குட்டசாலகா நகரம் மெதுவாக அமைதியை அடைந்து கொண்டிருந்தது. அமைதியைக் கிழிக்க ஆங்காங்கு காவல் வீரர்கள் எழுப்பிய ஒலிகளைத் தவிர வேறெதுவும் எங்கும் கேட்கவில்லை. நள்ளிரவு தாண்டி விட்ட சமயத்தில் இளையகேசதாது தங்கியிருந்த மாளிகையில் மாளிகைக் காப்பான் ஒருவன் தாழ்வார விளக்குகளை ஒவ்வொன்றாக அணைத்துவிட்டுத் தனது காவல் அறையில் சென்று படுத்தான்.

பெரிய பஞ்சணையின் கட்டிலில் சுகநித்திரை செய்து கொண்டிருந்த இளைய கேசதாதுவின் அறையில் மட்டும் சிறு விடிவிளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது. மெள்ள என்ன காரணத்தாலோ கட்டில் அசையவே, கண்விழித்த இளையகேசதாது தனது கால்மாட்டில் ஒரு வணிகர் உட்கார்ந்திருந்ததைக் கண்டு, "யார் நீ?" என்று சீறி எழுந்திருக்க முயன்றான். "எழுந்திருக்காதே!" என்று அன்பு நிறைந்த குரலில் எச்சரித்தது. அந்தக் குரலில் இருந்த அன்பு தனது கழுத்தை அறுக்கக் கூடியது என்பதைப் புரிந்து கொண்டான் இளையகேசதாது. "நீ... நீ..." என்று உளறவும் முற்பட்டான்.

"உன்னுடன் பேச வந்திருக்கிறேன். சத்தம் போடாதே உனக்கு நல்லதல்ல," என்றது அந்த இனிமையான குரல் மீண்டும்.

திடீரென்று இளையகேசதாது கையைத் தட்டினான். வாளை உருவிய நான்குவீரர்கள் உள்ளே விரைந்து புகுந்தனர்.

zeevaa

"இவனை வெட்டிப் போடுங்கள்" என்று கூவினான் இளைய கேசதாது.

வாட்களை உருவிய நால்வரும் பதுமைகள் போல் சற்றும் அசையாமல் நின்றிருந்தனர்.




விஜய மகாதேவி

zeevaa

# 35. கனவுச் சிரிப்பா?
# நனவுச் சிரிப்பா?

குட்டசாலக நகரத்தின் பெரிய மாளிகையில் சுக நித்திரை புரிந்து கொண்டிருந்த இளையகேசதாதுவுக்கு, தான் இருப்பது பூலோகமா நரக'ா என்ற சந்தேகம் எழவே, அவன் கண்களை மட்டும் சுற்றும்முற்றும் சுழல விட்டான். தன் காலடியில் தமிழ் நாட்டு வணிகன்போல் பெரிய முண்டாசுடன் உட்கார்ந்திருந்தவனைப் பார்த்துச் சோழ ன்னன் அனுப்பிய தளபதி யாராவது மாற்றுடையில் வந்திருக்கலாமென்று நினைத்த இளைய கேசதாது, அந்த மாற்றுடையிலிருந்தவன் விஜயபாகு என்பதை உணர்ந்ததும் சிறிது அச்சத்தை அடைந்தாலும் அதை உதறிக் கைகளைத் தட்டவே, உருவிய வாளுடன் தனது வீரர் நால்வர் நுழைந்ததும் சிறிது தைரியம் வந்ததால், "இவனை வெட்டிப் போடுங்கள்," என்று சற்றுச் சத்தம் போட்டே உத்தரவிட்டான்.

அந்த உத்தரவுக்கு அவர்கள் பணியாமல் பதுமைகளைப் போல் நிற்கவே, தனக்கும் அறியாத ஆபத்து தன்னைச் சூழ்ந்திருப்பதை உணர்ந்தான். அந்த சமய'த்தில் மீண்டும் சொன்னான் விஜயன், "சத்தம் போடாதே, உனக்கு நல்லதல்ல," என்று. இம்முறை அவனது குரலில் முந்திய இன்ப நாதத்திற்குப் பதில் அச்சுறுத்தல் ஒலித்தது.

விஜயனின் சொற்களைக் கேட்டதும் படுக்கை நிலையிலிருந்து எழுந்து உட்கார முயன்ற அவன் கழுத்தில் பதுமைகளின் நான்கு வாட்களின் நுனிகளும் லேசாகப் பதிந்தன. அதற்கு மேல் தனது உயிர் அரைக் காசு பெறாதென்பதையும் தான் சற்று ஏறுமாறாக நடந்து கொண்டாலும் மரணம் நிச்சயமென்பதையும் உணர்ந்

zeevaa



zeevaa

திருந்ததன் விளைவாக இளையகேசதாது அடுத்து எந்தவித எதிர்ப்பையும் காட்டாமல் மௌனம் சாதித்தான்.

விஜயன் தனது கூர்விழிகளால் அவனை நோக்கிவிட்டு, "வாட்களை அகற்றுங்கள். இவன் பயமின்றிப் பேசட்டும்," என்று கூற, அக்கம் பக்கத்தில் நின்றிருந்த வீரர்கள் தங்கள் வாட்களின் நுனிகளை அவனது கழுத்திலிருந்து நீக்கினாலும் உருவிய வாட்களை உறைகளில் போடாமலே நின்றிருந்தார்கள். அவர்களின் எச்சரிக்கையைக் கவனித்துச் சிறிது புன்முறுவல் கொண்டு, "கேசதாதுவின் தம்பி என்னிடமிருந்து, அதாவது சத்தியத்திட மிருந்து, தப்புவது அத்தனை எளிதென்று நினைக்க வேண்டாம்." என்று கூறிவிட்டு, "உன் தலைவன் என்ன உத்தரவிட்டிருக்கிறான் உனக்கு?" என்று ஒரு கேள்வியை வீசினான்.

அந்தக் கேள்விக்கு இளையகேசதாது பதில் சொல்வதற்குப் பதிலாக, "நீ எப்படி இங்கு வந்தாய், இந்த மாளிகையின் கட்டுக் காவல்களை நீக்கி?" என்று வினவினான்.

விஜயன் லேசாகப் புன்முறுவல் கொண்டு, "சொன்னால் உனக்குப் புரியாது." என்றான்.

"ஏன் புரியாது?" இளையகேசதாது சிறிது துணிவுடனேயே வினவினான்.

"சுதந்திர புத்தியுள்ளவனுக்குத்தான் புரியும். அடிமைகளுக்குப் புரியாது."

"யார் அடிமை?"

"சோழர்களுக்காகச் சொந்த நாட்டுக்குத் துரோகம் செய்பவன்."

"நான் அப்படிப்பட்டவனல்ல."

"அப்படியானால் சோழர்களுக்கு எதிராகப் போரிட முற்படும் எனது படையில் நீயும் சேர்ந்து விடு. உன் படைகளையும் என்

zeevaa

படைகளுடன் இணைத்து விடு.'' இதைத் திட்டமாகச் சொன்னான் விஜயன்.

''என் அண்ணனைக் கொன்றவனுடன் நான் எப்படிச் சேர முடியும்?''

''உன் அண்ணனைப் போரில் கொன்றேன். அது க்ஷத்திரிய தர்மம். நாட்டுக்கு விரோதியாயிருந்தான். அவனை அழிப்பது கடமையாயிற்றே. நீயும் அதே பாதையில் போகிறாய். உன்னையும் கொல்வேன். நீ இங்கு வந்திருக்கும் காரணம் எனக்குத் தெரியும்.''

''என்ன காரணம்?''

''விரோதிகள் எது செய்வார்களோ அதைச் செய்வது.''

''அதாவது?''

''என்னை முதுகில் குத்துவது.'' என்ற விஜயன், காரணத்தை விவரிக்கலானான். ''நான் வெகு சீக்கிரம் சிங்களத்தின் சுதந்திரப் போரைத் துவங்கப் போகிறேன் என்பதை அதிராஜேந்திரன் அறிவான். ஆகையால் என்னைப் பலவீனப்படுத்த உன்னை உபயோகிக்கிறான். நான் படைகளுடன் வடக்கு நோக்கி முன்னேறும் போது, நீ பின்னிருந்து தாக்குவதால் உண்டாகும் பயனை அவன் அறிவான். ஆனால் இம்முறை அதையும் நீ செய்ய முடியாது. இன்னும் பத்து நாட்களுக்குள் நீ உன் படைகளைத் தென் கோடியிலுள்ள மகாகாமத்துக்கு அழைத்துச் சென்றுவிடு. அதன் மேல் பகுதியில் எங்கிருந்தாலும் உன்னையும் உன் படைகளையும் அழித்து விடுவேன்,'' என்று சர்வசாதாரணமாக சொன்னான் விஜயன்.

''எனக்கு இப்படி முன்னெச்சரிக்கை செய்யக் காரணம்?'' என்று கேட்டான் இளையகேசதாது.

''சிங்கள மக்கள் சிங்கள மக்களுடன் மோதுவதை நான் விரும்பவில்லை. அவர்கள் அழிவதை நான் விரும்பவில்லை. இந்த

zeevaa

நாட்டில் தமிழர்களால் ஏற்பட்ட அழிவை விடச் சிங்களர்களால் ஏற்பட்ட அழிவு அதிகம். அதைத் தவிர்க்க விரும்புகிறேன்," என்று சொன்ன விஜயன், "கடைசி முறையாக உன்னை எச்சரிக்கிறேன். அடுத்த முறை நாம் சந்திக்கும்போது எதிரிகளாகச் சந்தித்தால் உன் அண்ணனிடம் உன்னை அனுப்பி வைப்பேன்" என்று எச்சரித்துவிட்டு எழுந்தான் பஞ்சணையை விட்டு.

அப்பொழுதும் எழுந்திருக்கத் துணிவில்லாத இளைய கேசதாது, "இங்கிருந்து எப்படிப் போவாய்?" என்று வினவினான்.

அக்கம் பக்கத்தில் நின்ற நான்கு வீரர்களையும் நோக்கிய விஜயன், கண்ணைக்காட்ட அவர்கள் வெளியே சென்று ஆளுக்கொரு வீரனாக நான்கு காவல் வீரர்களையும் கொண்டு வந்து இளைய கேசதாது முன்பு கிடத்தினார்கள். இளைய கேசதாது பிரமிப்படைந்தான். "இவர்கள் நால்வரும் பண்டகசாலை சுரங்கக் காவலர்," என்று பிரமிப்புடன் கூறவும் செய்தான். "இவர்கள் ஒவ்வொருவரையும் ஏன் போர்வையால் கட்டியிருக்கிறீர்கள்." என்றும் விசாரித்தான்.

இந்தக் கேள்விக்கு விஜயன் பதில் சொல்லவில்லை. வீரர்களில் ஒருவன் சொன்னான், "இவர்கள் உடைகளை நாங்கள் போட்டுக் கொண்டு விட்டோம்," என்று.

"வேண்டுமானால் எடுத்து விடுகிறேன்," என்றான் இன்னொரு வீரன்.

தனது வீரர்களின் நிலையைப் புரிந்த கொண்ட இளைய கேசதாது, "கிரகசாரம்! வேண்டாம்! வேண்டாம்!" என்று கெஞ்சினான்.

அதற்கு மேல் அங்கு தாமதிக்காத விஜயன், "வா, நீயும் புறப்படு," என்று உத்தரவிட, "நான் எதற்கு?" என்று இளைய கேசதாது கேட்டான்.

zeevaa

''எங்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும்'' என்ற விஜயன், அவனைப் படுக்கையிலிருந்து இறங்கச் சொல்லி அவன் தோள்மீது தனது கையைப் போட்டுக் கொண்டு அறைக் கதவைத் திறந்து கொண்டு காவலர் பின்தொடர நடந்தான். வெளித்தாழ்வரையின் கோடியில் படுத்திருந்த மாளிகையின் விளக்குகளுக்குப் பொறுப் பாளியான காவலன் அவர்களைக் கண்டதும் சுருட்டியடித்துக் கொண்டு எழுந்திருந்து அவர்களுக்குத் தலை வணங்கினான். அவனைக் கவனிக்காமலேயே அவனைத் தாண்டிச் சென்று படிகளில் இறங்கிச் சென்ற விஜயன் இரண்டாவது தளத்துக்கு வந்ததும் கீழே இருந்த இரும்புத் தளவாடத்தைக் காலால் நகர்த்த அதன் கீழே படிகள் ஓடின. அந்தப் படிகளில் இறங்கிச் சென்று பிறகு மேலே ஏறிய படிகள் வந்ததும் இளையகேசதாதுவிடம் விடை பெற்றுக் கொண்டான்.

''இளையகேசதாது! நன்றாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வா. உன்னைச் சுதந்திரமாக விட்டுப் போகிறேன். சுதந்திரப் போரில் நீயும் பங்கு கொள்ள விரும்பினால் எனக்குச் செய்தியனுப்பு.'' என்று கூறிவிட்டுப் பண்டகசாலைக்குள் ஏறிச் சுரங்க வழியை மூடி விட்டான்.

அடுத்து, தனது வீரர்கள் நால்வருடன் காட்டை நோக்கி விரைந்தவன், காட்டு முகப்பில் சிறிது நின்றான். காட்டுக் குள்ளிருந்து பெரும்புகை வந்து கொண்டிருந்தது. திடீரென மரங்கள் தீப்பிடித்து எரியும் நிலை வந்து கொண்டிருந்ததைக் கவனித்த விஜயன், வீரர்களைத் தன்னைத் தொடரும்படி கூறிவிட்டுத் தீயில்லாத பக்கமாக அடவிக்குள் நுழைந்தான். அடவியின் மேற்குப் பகுதியில் மூர்சமதும், ஜேட்டதிஸ்ஸனும் சுமார் மூன்று வீரர்களுடன் நின்றிருப்பதைப் பார்த்து, ''என்ன நடந்தது?'' என்று வினவி னான்.

''நாங்கள் இந்தக் காட்டில் ரகசியமாக உறைவது எப்படியோ இளையகேசதாதுவின் படைகளுக்குத் தெரிந்திருக்கிறது. எங்கள்

zeevaa

குடிசைகளுக்கு அவன் வீரர்கள் தீ வைத்து விட்டார்கள்'' என்றான் ஜேட்டதிஸ்ஸன்.

''தீ வைத்தவர்கள் என்ன ஆனார்கள்?'' என்று விஜயன் வினவினான்.

மூர்சமதை நோக்கினான் ஜேட்டதிஸ்ஸன். ''அவர்கள் வைத்த தீயிலேயே அவர்களை எடுத்துப்போட்டேன்'' என்றான் மூர்சமத் சர்வசாதாரணமாக.

''எத்தனை பேர்?'' என்று விஜயன் வினவினான்.

''நான் தூக்கிப் போட்டது நான்கு பேர். மற்றும் சிலர் ஓடிவிட்டார்கள்'' என்று அவர்கள் ஓடியது தவறு என்பதுபோல் பேசினான் மூர்சமத்.

அடுத்து மூர்சமதிடம் தனது புரவியைக் கொண்டு வரப் பணித்த விஜயன், ஜேட்டதிஸ்ஸனை நோக்கி, ''ருஹுணாவை எச்சரிக்கையுடன் கவனித்து வாருங்கள். நிலைமையில் மாறுதல் ஏதேனுமிருந்தால் உடனடியாக மகாநாககுலாவுக்குச் செய்தியனுப்புங்கள்'' என்று உத்தரவிட்டான். ''முடிந்தால் நமது படைகளைவிட்டு இந்தக் காட்டுத் தீயை அணைக்கப் பாருங்கள்'' என்றும் சொன்னான்.

ஜேட்டதிஸ்ஸன் காட்டுத் தீயை நோக்கி, தென்திசையையும் நோக்கினான். ''அஞ்சவேண்டாம் பிரபு. இந்தத் தீ காட்டை அழிக்காது. மேற்குக் காற்றுதான் வீசுகிறது. ஆகையால் காட்டின் கிழக்குப் பக்கம்தான் தீ செல்லும். கிழக்கில் கட்டிடங்கள்தான் இருக்கின்றன. அவற்றைக் காப்பாற்றுவது அவன் பொறுப்பு'' என்று விளக்கினான்.

அதற்குமேல் தாமதிக்காத விஜயன், தனது புரவியில் ஏறிக் கொண்டான். மூர்சமதும் புரவியில் ஏறியதும் ஜேட்டதிஸ்ஸனை நோக்கிய விஜயன், ''இன்னும் சிறிது படை திரட்ட முடியுமானால் திரட்டு. எப்படியும் வெகு சீக்கிரம் நான் சோழர்களைச் சந்திப்பேன்''

zeevaa

என்று சொல்லிவிட்டுப் புரவியைத் தட்டிவிட்டான். வந்த வழியே சென்றவன் சில சிற்றாறுகளைத் தாண்டி மலைகளையும் கடந்து பெரும் அடவிக்கருகில் வந்தான். இம்முறை அவன் மிக நிதானமாகத் தென்மேற்கில் பயணம் செய்தான். வரவரக் காடுமிக அடர்த்தியாயிற்று. ''நாளைக்கு நாம் வனவாஹினி நதியை அடைவோம். அங்கு அநேகமாக நுவரகிரியைச் சந்திப்போம்'' என்று கூறிக்கொண்டே பயணம் செய்தவன், வளவே கங்கை சலசலப்புடன் ஓடும் ஓசையைக் கேட்டு, ''இங்கு நாம் இன்றிரவைக் கழிப்போம்'' என்று கூறி அதன் கரையில் இறங்கினான்.

இரவு மூண்டு கொண்டிருந்தது. வானத்தில் மதி லவலேசமும் இல்லாததால் சிறு சுள்ளிகளைக் கொண்டு மூர்சமத் நெருப்பு மூட்டினான். எங்கோ சென்று முயலொன்றையும் அடித்து வந்து இறைச்சியை வாட்டித் தனது தோற்பையிலிருந்த சாமக்கிரியை களை அதில் பூசி இரவு உணவளித்தான். இருவரும் சற்றுப் பசியைத் தணித்துக் கொண்டதும் வனவாஹினியின் தெள்ளிய நீரைப் பருகிவிட்டு அதன் கரையிலிருந்த புல்லில் மல்லாந்து படுத்தனர். நேரம் ஓடியது. எத்தனை நேரம் ஓடியிருக்குமோ தெரியாது. விஜயன் கனவு கண்டான், பிறகு சிரித்தான். என்ன கனவு? ஏன் சிரித்தான்? ஆனால் சிரித்தது அவன் மட்டுமல்ல, வேறு இருவரும் சிரித்தனர். அது கனவுச் சிரிப்பா, நனவுச் சிரிப்பா?



zeevaa

# 36. கோணியும் குருதியும்

அடர்ந்த அந்தக் காட்டில் அந்த நள்ளிரவில் சற்றுத் தூரத்தில் ஓடிக்கொண்டிருந்த வளவே கங்கையின் சலசலத்த நீருடன் போட்டி போடுவதுபோல் கேட்ட மற்றும் இருவர் சிரிப்பொலி கேட்டு உறக்கத்தை உதறி எழுந்து உட்கார்ந்த விஜயன், எட்ட அணைந்து விட்ட சுள்ளிகளின் அருகில் உட்கார்ந்திருந்த மூர்சமதை நோக்கி "மூர்சமத்! இப்பொழுது யார் சிரித்தது?" என்று வினவினான்.

அதற்கு உடனடியாக பதில் சொல்லாத மூர்சமத் அணைந்த சுற்றிகளைச் சிறிது ஊத, அடியிலிருந்து சிறு தணல் சற்றே தெரிந்ததால் அதன்மீது பக்கத்திலிருந்த இன்னும் இரண்டு மூன்று சுள்ளிகளை உடைத்துப்போட்டு வாயால் ஊதித் தணலை ஒளிவிடச்செய்தான். அதனால் ஏற்பட்ட சிறு ஜ்வாலையில் விஜயன் முகத்தைக் கூர்ந்து நோக்கி, "என்ன கேட்டீர்கள் எசமான்?" என்று வினவினான்.

"இப்பொழுது யார் சிரித்தது?" என்று இன்னொரு முறை விஜயன் பழைய கேள்வியைத் திருப்பினான்.

"தாங்கள்தான்" என்றான் மூர்சமத், தனது மீசையையும் தாடியை யும் தடவிவிட்டுக்கொண்டு.

"என்னைத் தவிர..." என்று வினவினான் விஜயன்.

மூர்சமத் புன்னகை செய்தான் மெல்ல. காதைத் தீட்டிக் கொண்டான் ஒருமுறை. பிறகு பதில் சொன்னான். "வளவே கங்கை" என்று.

zeevaa



zeevaa

விஜயன் முகத்திலும் புன்முறுவல் படர்ந்தது. ''மூர்சமத்! நீ வரவரக் கவியாகி வருகிறாய்'' என்று பாராட்டினான்.

மூாசமதும் சளைக்கவில்லை. ''எசமானுடன் சேர்ந்தால் எப்படித்தான் ஆக முடியாது?'' என்று வினவினான்.

அப்படி அவன் கேட்டதும் மீண்டும் இருவர் சிரிப்பொலி அந்த அடவியின் மற்றொரு பகுதியிலிருந்து தெளிவாகவே காதில் விழ மூர்சமத் உட்கார்ந்த நிலையிலிருந்து எழுந்து நின்று. ''ஆம் எசமான்! யாரோ சிரிக்கிறார்கள். பார்த்துவிட்டு வருகிறேன்'' என்று கூறினான்.

''நீ பார்க்க வேண்டாம்'' என்று அவனைத் தடுத்த விஜயன் ''நானே போகிறேன்'' என்று ஒலி வந்த திசையை நோக்கிக் கிளம்பினான்.

''எசமான்!'' மூர்சமதின் குரல் கவலையுடன் ஒலித்தது.

''என்ன மூர்சமத்?'' என்று விஜயன் வினவினான்.

''நீங்கள் தனித்துப் போவது அவ்வளவு சரியல்ல'' என்றான் மூர்சமத்.

''ஏன்?''

''இது எதிரியின் எல்லையில் இருக்கிறது. இதை விட்டு நாம் இன்னும் தாண்டவில்லை.''

விஜயன் சற்றுப் பெரிதாகவே நகைத்தான். ''சமத்! நீ எனக்குத் தாயாய்ப் பிறந்திருக்க வேண்டும். என்னை என்ன இன்னும் குழந்தை என்று நினைத்துக்கொண்டிருக்கிறாயா?'' என்று நகைப்பின் ஊடே கூறிவிட்டுச் சிரிப்பொலி வந்த திசையை நாடிச் சென்றான்

அவன் நடக்கத் துவங்கியதும் சிரிப்பொலி சட்டென்று நின்று விட்டதால் அது முதலில் வந்த திசையைச் சுமாராக அடையாளம்

zeevaa

பிடித்துக்கொண்டே நடந்த விஜயன் மனத்தில் சந்தேகம் நிரம்பி நின்றது. அவன் கேட்ட சிரிப்பொலியில் சுந்தரியின் குரலுடன் சுடர்விழியின் குரலும் தெரிந்ததால் அவர்கள் இருவரும் இந்த அடவிக்கு எப்படி வர முடியும் என்ற சந்தேகம் அவன் மனத்தை வாட்டிக்கொண்டிருந்தது. 'இவர்களை ரவிதேவன், காலன் இவர்களுடன் இராவணன் மலைக்குப் போகச் சொல்லியிருக்க இங்கு ஏன் வந்தார்கள்? அங்கு நிலைமை சரியில்லையா?'' என்று உள்ளூர வினவிக்கொண்டான். இத்தகைய சிந்தனையில் நடந்து சென்றவன் சற்றுத் தூரத்தில் தெரிந்த சிறு வெளிச்சத்தை நோக்கி நடந்தான். எதிரிலிருந்த புதர்களைத் தாண்டியும் விலக்கிக் கொண்டும் சென்றவன் சிறிது தூரம் சென்றதும் தன் கண்களையே நம்ப முடியாமல் நின்றுவிட்டான் பல விநாடிகள்.

அவன் நின்றிருந்த புதருக்கு அப்பால் சக்கரமாக அமைந்திருந்த செடிகளின் நடுவில் திரிலோகசுந்தரி, சுடர்விழி இருவருமே உட்கார்ந்திருந்தார்கள். ஆண் துணையாருமே காணாததால் 'இவர்கள் எப்படி இங்கு வந்தார்கள்? துணையின்றி ஏன் வந்தார்கள்?' என்று வினவிக் கொண்டவன் சற்று எட்ட இருந்த மரங்களிடை ஆள் நடமாட்டம் தெரியவே ரவிதேவனும் காலனும் உடன் வந்திருக்கிறார்களென்ற தீர்மானத்துடன் அவர்களிருந்த வெளிச்சத்துக்குள் நுழைந்தான்.

அவன் அந்த சக்கர வட்டதுக்குள் நுழைந்ததும் நுழையாததுமாக விர்விர்ரென்று ஈட்டிள் இரண்டு பறந்து வந்தன அவனை நோக்கி. உடனடியாகத் தரையில் படுத்து அந்த இரு மங்கையரையும் தரையில் படுக்க வைத்த விஜயன் திடீரென எட்ட வாட்கள் உராயும் சத்தம் கேட்கவே, அந்த இரு மங்கையரையும் தவழ்ந்து வரச் சொல்லித் தானும் அவர்களிடை தவழ்ந்து புதர்களின் மறைவை அடைந்தான். ''இந்த மறைவில் பேசாமல்படுத்திருங்கள். நான் வருகிறேன்'' என்று கூறிவிட்டுப் பக்கத்திலிருந்த மரக்கூட்டத்தின் நடுவே பதுங்கிச் சென்றான்.

zeevaa

சுமார் பத்தடி தூரம் சென்றதும் நுவரகிரி ராட்சஸன் போல் எழுந்து நின்று ஒரு வேலை இடது கையிலும் வாளை வலது கையிலும் பிடித்து, வேலை தற்காப்புக்காக உபயோகப்படுத்தி வாளால் மட்டும் எதிரிகளைச் சமாளித்துக் கொண்டிருந்தார். ஈட்டிகளையும் வாட்களையும் ஏந்திய சுமார் பத்துப்பேர் அவரை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்ததால் அவர் அவர்களைச் சமாளிக்க மெள்ளப் பின்னடைந்து ஒரு மரத்தின்மீது சாய்ந்து கொண்டு தமது நீண்ட வாளை நீட்டினார், சுழற்றினார்.

ஏற்கனவே அவருடைய வாளுக்குப் பலியான இரண்டு வீரர்கள் அவர் இருந்த இடத்திலிருந்து சற்று தூரத்தில் மல்லாந்து கிடந்தனர். போராடிய வீரர்களில் இருவர் காட்டுச் சுள்ளிகளைப் பந்தமாக்கிப் பிடித்துக் கொண்டிருந்ததால் அவை வீசிய வெளிச்சத்தில் மாண்டவர் மார்பிலிருந்து பிரவாகித்துக் கொண்டிருந்த குருதிச் செந்நீர் அந்த இரவின் பயங்கரத்தை மேலும் பயங்கரமாக அடித்தது. இத்தனையிலும் நுவரகிரி வெகு அலட்சியமாகப் போராடிக் கொண்டிருந்ததன்றிப் போரை ரசித்துக் கொண்டுமிருந்தார். "அட நரிகளா! உங்கள் அனைவரையும் கொன்று உங்கள் சடலங்களைப் படுக்கையாகப் போட்டுக் கொண்டு படுக்கிறேன்" என்று ஆவேசத்துடன் கூறி நெருங்கிய ஒருவன்மீது வாளை வீசாமல் இடது கையிலிருந்த ஈட்டியால் மார்பில் குத்த அவன் அலறிக் கீழே விழுந்தான்.

மறைவில் நின்றிருந்த விஜயன் அவர்கள் இளைய கேசதாதுவின் வீரர்கள் என்பதைப் புரிந்து கொண்டான். குட்டசாலகாவைத் தாண்டி இவ்வளவு தூரம் அவன்படைகள் நடமாட்டம் இருக்கும் என்பதை அறவே நினைக்காத விஜயன், மூர்சமதின் எச்சரிக்கையில் எத்தனை பொருளிருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டான். அப்படி அவன் யோசிக்க யோசிக்க நுவரகிரியின் நிலை ஆபத்தை அணுகுவதைக் கண்டதால் தனது வாளையும் உருவிக்கொண்டு அந்த வீரர்களை

zeevaa

நோக்கிச் சென்றான். அவன் அப்படிச் சென்ற அதே விநாடியில் எதிரி வீரனொருவன் ஆகாய மார்க்கத்தில் பறந்து வந்து நுவரகிரியின் காலடியில் விழுந்ததைக் கண்டதும் அதன் காரணத்தை ஊகித்துக் கொண்ட விஜயன், ''பிழைக்க ஆசையிருந்தால் ஆயுதங்களைக் கீழே போடுங்கள்'' என்று உரக்கக் கத்தினான். அவன் கூறிய அதே சமயத்தில் இன்னொரு வீரனும் பறந்து வந்து விழவே மீதியிருந்த வீரர்கள் திரும்பி நோக்க மூர்சமத் பெரிய ராட்சஸன்போல் அவர்களை நோக்கித் தனது வாளை வீசி இன்னொருவன் தலையை நிலத்தில் உருண்டோடச் செய்தான்.

தலையிழந்தவன் ஒருமுறை ஆடித் தலையை மீண்டும் ஒட்ட வைத்துக்கொள்ள முயல்பவனைப்போல் அதை நோக்கி விழுந்தான். இந்தச் சமயத்தில் வாளை உருவிய விஜயனும் வாளுடன் நுவரகிரிக்குத் துணையாகப் போரில் இறங்கினான்... எதிரே நுவரகிரியாலும் விஜயனாலும், பின்பக்கத்தில் மூர்சமதாலும் தாக்கப்பட்டதாலும் ஆள் பலமும் பாதியாகக் குறைந்து விட்டதாலும் அச்சமடைந்த எதிரி வீரர்கள் சிறிதும் நிதானிக்காமல் ஆவேசத்துடன் போரில் இறங்கினார்கள். ஆள் குறைந்த நிலையிலும் அவர்கள் சரணடையாமல் போரிலிறங்கியதைக் கண்டதால் அவர்களைக் கொல்லாதிருக்க நுவரகிரிக்குச் சைகை செய்துவிட்டுத் தனது வாளைச் சுழற்றி மற்றும் இருவர் வாட்களைத் தட்டிவிட்டான். அதே தோரணையில் ''வீணாக மடியாதீர்கள். உங்களைப் போன்ற வீரர்களைக் கொல்ல எனக்கு இஷ்டமில்லை. ஆயுதங்களைக் கீழே போடுங்கள்'' என்று மற்றுமொருமுறை கூறினான் வாளைச் சுழற்றிய வண்ணம்.

போருக்கு வந்த பத்து வீரர்களில் மீதியிருந்த நான்கு வீரர்களும் சற்று நிதானித்தார்கள். ''நாங்கள் வீரர்கள்'' என்றான் அவர்களில் ஒருவன்.

zeevaa

''போரில் மடிவதுதான் வீரர்களின் லட்சணம்'' என்றான் இன்னொருவன்.

''தர்மமான போரில் மடியலாம். நீங்கள் இடும் போர் இளைய கேசதாதுவினுடையது. அது அறப்போர் அல்ல. அதில் செத்துப் பயனில்லை'' என்று சுட்டிக்காட்டினான் விஜயன்.

''போரில் தர்மாதர்மங்களை விவாதிப்பது வீரன் கடமையல்ல. தலைவன் கட்டளைப்படி போரிடுவதுதான் கடமை!'' என்றான் முதலில் பேசிய வீரன்.

அதற்குப் பிறகு பேசிப் பயனில்லை என்பதைப்புரிந்து கொண்ட விஜயனும் மற்ற இருவரும் தீவிரமாகச் சண்டையில் இறங்கவே அடுத்த ஒரு நாழிகைக்குள் எதிரி வீரர்கள் ஆயுதங்களைத் திரட்டி நுவரகிரியிருந்த மரத்தடியில் போட்ட மூர்சமத், ''எசமான்! இவர்களை என்ன செய்யட்டும்?'' என்று கேட்டான்.

''மூர்சமத்! இவர்களைச் சுதந்திரமாகப் போகவிடு. இவர்களிடம் இந்தக் காட்டுப் பகுதியில் இன்னும் எத்தனை வீரர்கள் இருக்கிறார் களென்பதைத் தெரிந்து கொள்'' என்றான்.

அத்தகைய விசாரணைக்கு ஏதும் இடமில்லாமல் வைத்து விட்டான் எதிரி வீரர்களில் ஒருவன். ''இந்தக் காடு குட்டசாலகாவின் எல்லைப்புறம். எங்கள் எல்லைப்புறப் படைகள் இங்கு நடமாடுகின்றன. அதில் ஒரு பிரிவு எங்கள் சிறுபடை. ஆகையால் நீங்கள் விரைவில் இந்த இடத்தைவிட்டு வளவே கங்கையின் எதிர்ப்புறம் சென்று விடுவது நல்லது'' என்று கூறிவிட்டு விஜயனுக்குத் தலை வணங்கிவிட்டுத் தனது சகாக்களுடன் சென்று விட்டான்.

அடுத்த சில விநாடிகளில் நுவரகிரி, மூர்சமத், தனது இரு மனைவிமார்கள் ஆகியோர்களுடன் புரவிகளில் பயணப்பட்ட விஜயன் வளவே கங்கைக் கரையோரமாகவே சென்று

zeevaa

தென்புறத்தில் அதைத் தாண்டினான். ஒரு முழுநாள் பயணத்துக்குப் பிறகு மகாநாககுலாவை அடைந்து அங்கு தளமும் அமைத்தான். அதுவரை மனைவிமார் இருவரையும் ஏதும் விசாரிக்காத விஜயன், மகாநாககுலாவின் பயண விடுதியொன்றில் முதன் முதலாகத் தனது விசாரணையைத் துவக்கினான்.

நுவரகிரி தமது அனுபவங்களைச் சொல்லலானார். தாம் மட்டும் இரண்டு மங்கையருடன் வளவே கங்கைக்கு வந்த விவரங்களைச் சொன்னார். அவற்றைக் கேட்ட விஜயன் தனக்கு எதிர்ப்பு மிகவும் பலமாக இருப்பதைப் புரிந்து கொண்டான். சோழர் நடமாட்டம் தெற்கிலும் ஊடுருவுவதைக் கண்டு தான் துரிதமாக நடவடிக்கை எடுக்காவிட்டால் சிங்களத்தின் விடுதலை பயனற்ற ஒரு சொப்பனமாக முடியுமென்பதையும் புரிந்துகொண்டான். அதனால் அவன் செய்த துரித முயற்சியின் பயனாகப் பறையறைவிப்போர் நாலா பக்கமும் பறந்தனர். அடுத்த பத்து தினங்களில் மகாநாககுலா பயங்கரமான ஒரு போர் பாசறையாகத் திரும்பியது. விஜயன் தானே படைகளுக்கு வீரர்களைச் சேர்க்கலானான். சூரியோதயத்தில் பூர்ண ராணுவ உடையணிந்து வீரர்களைப் பொறுக்க முற்பட்டவன் பகலவன் மறையும்வரை வீரர்களைச் சேர்த்துக் கொண்டிருந்தான். அந்தப் படை திரட்டத் திரட்ட அவர்களுக்கு பயிற்சியளிக்க முற்பட்டார் நுவரகிரி. மகாநாககுலா சுற்றுப்புறங்கள் ஆயுத ஒலிகளால் துடித்து எழுந்து கொண்டிருந்தன. எங்கும் ஒரு போர் வெறி மூண்டு கொண்டிருந்தது. அப்படியிருந்த ஒருநாளில் படையில் சேரவந்த ஒருவனை நுவரகிரி பிடித்து வந்தார். ''மகாராஜா! இவன் சோழ ஒற்றன். இவனை என்ன செய்வது?'' என்று வினவினார்.

ஒற்றன் விஜயனை அலட்சியமாக உற்றுப்பார்த்தான். ''மன்னவா! இந்தப் போரை உடனடியாக நிறுத்து'' என்று உத்தரவிடும் தோரணையில் பேசினான்.

zeevaa

"இவன் பைத்தியம் போலிருக்கிறது" என்றான் விஜயன்.

"பைத்தியம் நானில்லை" என்றான் அந்த மனிதன். அத்துடன் தனது கையிலிருந்த ஒரு கோணியை விஜயன் காலில் விட்டெறிந்தான். கோணியிலிருந்து குருதி வழிந்தோடியது.



zeevaa

# 37. நுவரகிரியின் சிகிச்சை

சோழர்களின் ஒற்றன் என்று தளபதி நுவரகிரியால் பிடித்துக் கொண்டுவரப்பட்ட மனிதன் உடனடியாகப் போரை நிறுத்துமாறு தனக்கு உத்தரவிட்டதும் அவனைப் பைத்தியமென்று நினைத்த விஜயன், அவன் தனது காலில் ஒரு கோணியை விட்டெறிந் ததையும், அதிலிருந்து குருதி வழிந்தோடியதையும் கண்டதும் ஒரு விநாடி நிதானித்தான். பிறகு எழுந்து அந்தக் கோணியில் கையைவிட்டு அதிலிருந்த தலையொன்றை மயிரைப் பிடித்துத் தூக்கி அதை உற்று நோக்கினான். அந்தத் தலையின் கழுத்தில் இருந்து அப்பொழுதும் குருதி வடிந்து கொண்டிருந்தபடி யால் அந்தத் தலைவெட்டப்பட்டு அதிக நேரமாகவில்லை என்பதை உணர்ந்து கொண்ட விஜயன் முகத்தில் கோபத்திற்கு பதில் பயங்கர அமைதியொன்று குடிகொண்டது. அத்துடன் கேட்டான் விஜயன், ''இவனை நீ எப்பொழுது வெட்டினாய்?'' என்று.

''நான் வெட்டவில்லை'' என்றான் அந்த மனிதன். அடுத்து அதுவரை இருந்த துணிவு அவனைக் கைவிட்டதால் விஜயனின் கூர்விழிகளைச் சந்திக்க முடியாமல் அவன் தலையைக் கவிழ்த்துக் கொண்டான் நிலத்தை நோக்கி.

''உண்மையைச் சொல்'' என்ற கட்டளை சுடர்விட்ட தீயென உதிர்ந்தது விஜயனிடமிருந்து. ஒற்றன் என அழைத்து வரப்பட்டவன் பதிலேதும் சொல்லவில்லை.

''உண்மையைச் சொல்'' இரண்டாம்முறை ஒலித்தது விஜயன் குரல், முன்னைவிட அதிகக் கடுமை அதில் காணப்பட்டது.

zeevaa

''உண்மைதான் மன்னவா! இவனை நான் கொல்லவில்லை. இவனைக் கொன்றவன் சற்று முன்பு என்னிடம் இந்தக் கோணியைக் கொடுத்தது. செய்தியையும் சொல்லச் சொல்லிச் சென்றுவிட்டான்'' என்ற அந்த மனிதனின் உடல் லேசாக ஆடியது.

''இந்தக் கோணியிலிருந்து அப்பொழுதும் குருதிவந்தது?''

''ஆம், மன்னவா''

''அதைப்பற்றி நீ ஏதும் கேட்கவில்லை அவனை?''

''இல்லை.''

''சரி, அவன் யார்?''

''தெரியாது மன்னவா. திடீரென்று புரவியில் வேகமாக ஆற்றைத் தாண்டி வந்தான். இதை என்னிடம் கொடுத்துவிட்டுத் திரும்பிச் சென்றுவிட்டான்.''

இந்த உரையாடலைக் கேட்டுக்கொண்டு அதுவரை பொறுத்திருந்த நுவரகிரி இரும்புக் கவசம் போன்ற தமது வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டார். பிறகு அந்த மனிதனை அணுகி வந்து அவன் கையொன்றைத் தமது கையால் பிடித்து. ''மன்னவா! இவனிடமிருந்து உண்மையினை வரவழைக்க உத்தரவா?'' என்று வினவினார்.

''மயிலை மயிலே என்றால் இறகு போடாது. செய்ய வேண்டிய உபசாரத்தைச் செய்'' என்ற விஜயன் தனது கையில் பிடித்திருந்த தலையையும் சிகையுடன் நுவரகிரியிடம் கொடுத்தான். அவனை ஒரு கையால் இழுத்துக் கொண்டு, இன்னொரு கையால் தலையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு திரும்ப முயன்ற நுவரகிரியை, ''நுவரகிரி!'' என்றழைத்தான் விஜயன்.

''மன்னவா?'' என்று சற்றே திரும்பினார் நுவரகிரி.

zeevaa

''இந்தத் தலை ஜேட்டதிஸ்ஸனின் நான்கு படைத்தலைவர்களில் ஒருவனுடையது. இதற்கு இளையகேசதாதுவுக்குப் பதில் சொல்ல வேண்டியது அவசியம். எதற்கும் இவனை விசாரித்துப் பாரும்,'' என்ற விஜயன் மேற்கொண்டு படைக்கு ஆள் திரட்டும் பணியில் ஈடுபடலானான்.

மன்னவன் படை சேர்க்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயத்தில் தலையைக்கொண்டு வந்த மனிதனை ஆற்றங்கரைக்கு இழுத்துச் சென்று அங்கே அவனை நோக்கித் தமது வரிசைப் பற்களைக் காட்டிய நுவரகிரி, ''நீ ஒற்றனா, தூதனா?'' என்று விசாரித்தார்.

''தூதன்,'' என்றான் அவன் நடுங்கிய குரலில்.

நுவரகிரி தமது உயரத்திலிருந்து அவனைச் சற்றுக் குனிந்து நோக்கி, ''அப்படியானால் உன்னைக் கொல்வதற்கில்லை,'' என்றார் துன்பம் தோய்ந்த குரலில். அந்த வாய்ப்புத் தனக்குக் கிட்ட வில்லையே என்ற ஏக்கம் அவர் குரலில் நன்றாக ஒலித்தது.

அந்தப் போலித் தூதனும் நல்ல திடகாத்திரனாயிருந்தான். இருப்பினும் நுவரகிரியின் ராட்சஸ உருவமும் சுழன்று சிவந்த பெரிய கண்களும் அடர்த்தியான மீசையும் அவனுக்குப் பயத்தை அளித்திருக்க வேண்டும், ''தூதனைக் கொல்வதற்குச் சாஸ்திரத்தில் அனுமதி கிடையாது.'' என்றான் அவன் நடுங்கிய குரலில்.

நுவரகிரி மெல்ல ராட்சஸச் சிரிப்பொன்றை உதிரவிட்டார். ''நல்லது நல்லது,'' என்று சொல்லவும் செய்தார்.

''நல்லதா!''

''ஆம். நீ சாஸ்திரம் படித்திருப்பது நல்லது.''

''அதில் நல்லதென்ன இருக்கிறது?''

zeevaa

''நீ தப்ப வழி இருக்கிறதல்லவா?'' என்று கேட்ட நுவரகிரி, ''உன்னைக் கொல்வதாக உத்தேசமில்லை. பயப்படாதே,'' என்று அபயம் கொடுத்தார். அடுத்து நதி தீரத்தில் காவல் செய்து கொண்டிருந்த இருகாவலர்களை அழைத்து, தமக்கு ஓர் ஆசனம் கொண்டு வரும்படி கட்டளையிட்டார். அவர்கள் கொண்டு வந்த ஆசனத்தில் அமர்ந்து, தூதனைத் தரையில் உட்காரும்படி தமது கையால் அழுத்தினார்.

அந்த இரும்புலக்கையால் அழுத்தப்பட்டுத் தரையில் உட்கார்ந்த மனிதனைச் சற்று நேரம் உற்று நோக்கிய பிறகு தூர உலாவிக் கொண்டிருந்த காவலர் இருவரை அழைத்து, ''இவர் தூதர். இவரை மரியாதையாக நடத்த வேண்டும். இவர் எழுந்திருந்தால் மறுபடியும் உட்கார வையுங்கள்,'' என்று உத்தரவிட, காவலர் இருவரும் குறிப்பறிந்து அந்த மனிதனின் இரு பக்கத்திலும் நின்று விட்டனர். தனக்குச் சிகிச்சை ஆரம்பமானதை உணர்ந்து கொண்ட மனிதன், ''தலைவரே! என்று பேச முற்பட்டான்.

நுவரகிரி தமது பெரும் பற்களைப் பயங்கரமாகக் காட்டி, ''நீர் அப்படி அழைப்பது பொருந்தும். என் தலை இன்னும் கழுத்து மீதுதான் இருக்கிறது,'' என்றார்.

அந்தக் கொடிய நகைச்சுவையை ரசிக்காத அந்த மனிதன், ''என்னைக் கொல்வதானால் உடனே கொன்று விடுங்கள்,'' என்று கெஞ்சினான்.

''தூதனைக் கொல்வதற்கில்லையென்று நீர்தானே சாஸ்திரம் சொன்னீர்? அப்படியிருக்க மாறுபட்டுப் பேசுகிறீரே? உமது சுபாவத்திலேயே மாறாட்டம் இருக்கிறது.'' என்று சொன்ன நுவரகிரி, ''நீர் சாப்பிட்டு எத்தனை நேரமாகிறது?'' என்று கேட்டார்.

''நேற்றுச் சாப்பிட்டது,'' என்றான் அந்த மனிதன்.

zeevaa

''இதை ஏன் முன்னமே சொல்லவில்லை?'' என்று கடிந்து கொண்ட நுவரகிரி காவலரை நோக்கி, ''தூதர் சாப்பிடவில்லை,'' என்றார்.

இரு காவலரும் பதுமைகள் போல் நின்றனர். ''நாம் சாப்பிடும் உணவுதான். அதைவிட ரத்தத்தையே உணவாகக் கொடுத்து விட்டால் ஜீரண உறுப்புகளுக்கு வேலை மிச்சமல்லவா?'' என்று காவலனொருவனிடம் கொடுத்து, ''இந்தக் கழுத்தை இவர் வாயில் வை. ரத்தத்தைக் குடிக்கட்டும். தேவையானால் மாமிசத்தையும் சாப்பிடட்டும்,'' என்று உத்தரவிட்டார்.

''ஐயோ! அது நரமாமிசம்!'' என்று கூவினான் அந்த மனிதன்.

''அரக்கர்களுக்குப் பட்சணம்,'' என்ற நுவரகிரி பெரிதாக நகைத்தார்.

அதற்குள் ஒரு காவலன் தூதனின் தலையைப் பிடித்துக் கொள்ள இன்னொருவன் கழுத்தைத் தூதன் வாயில் வைத்தான். அவன் தலையை இருபுறமும் திருப்பி, ''ஐயோ! ஐயோ!'' என்று கத்தினான்.

''பயப்படாதே. நீ கொண்டு வந்த தலை. அது உனக்குத்தான் சொந்தம்,'' என்றார் நுவரகிரி. ''ஏற்கனவே ராட்சஸர்கள் இருந்த தீவுதான் இந்த இலங்கை,'' என்று சரித்திரமும் படித்தார்.

காவலர் தனது வாயில் திணித்த தலையிலிருந்து விடுபடப் பலவிதமாக முயன்றான் அந்த மனிதன். ஒரு முறை காவலன் பிடியிலிருந்து கூடத் தப்பினான். அடுத்து நுவரகிரியே அவன் தோள்களில் தமது முழங்கால்களை வைத்து அழுத்தி, தலையை அவன் வாயில் வைத்து அடக்க முயன்றார். அந்த மனிதன் கண்கள் மங்கின. தலை துவண்டு விழுந்தது. நுவரகிரி அவன் மீதிருந்து எழுந்து காவலனொருவனை நோக்கி அவன் முகத்தின் மீது நீரைத் தெளிக்கச் சொன்னார். அப்படியும் அவனுக்கு நினைவு வராது போகவே அவனை ஆற்று நீரில் முக்கி எடுத்து வரச்சொன்னார்.

zeevaa

அப்படி அவன் தலையை ஆற்று நீரில் அழுத்தி இழுத்து வந்ததும் பழையபடி தமது ஆசனத்தில் உட்கார்ந்து கொண்ட நுவரகிரி, ''இப்பொழுது சொல் உண்மையை,'' என்று சர்வசாதாரணமான குரலில் கேட்டார். ''இப்பொழுது உனக்கு அளிக்கப்பட்டது. ஆரம்ப சிக்ச்சைதான். இனிமேல் இதைவிடச் சிறந்த சிட்சைகள் கிடைக்கும்,'' என்றும் விளக்கினார்.

அந்த மனிதன் குருதி படிந்த தனது உதடுகளைத் துடைத்துக் கொண்டான். நனைந்த தலையையும் உலுப்பிக்கொண்டு, ''நான் தூதன்தான், சோழ தூதனல்ல...'' என்று உண்மையைக் கக்கமுற்பட்டான். அதற்கு மேல் எந்தக் கேள்வியையும் கேட்கவில்லை நுவரகிரி. அந்த மனிதனே பேசினான். ''ருஹுணா மன்னர் இளைய கேசதாது என்னை அனுப்பினார். ஜேட்டதிஸ்ஸன் படைத் தலைவர்களில் ஒருவன் எங்களிடம் சிக்கினான். அவனை அழைத்துச் சென்று அவன் தலையை வெட்டிச் சிங்கள மன்னரிடம் கொடுக்கும்படி உத்தரவிட்டார். உடனடியாகச் சிங்கள மன்னர் போர் ஏற்பாடுகளை நிறுத்த வேண்டுமென்றும், இல்லாவிட்டால் அவரது படைகள் வளவே கங்கையைத் தாண்டி வருமென்றும் சொல்லச் சொன்னார். நான் ஒழுங்காகத் தூதை முடிப்பேனோ இல்லையோ என்ற சந்தேகத்தால் என்னுடனும் பிடிபட்ட படைத் தலைவனுடனும் தமது வீரர்கள் நால்வரை அனுப்பினார். நதிக்கு அக்கரை வந்ததும் அவர்கள் பிடிபட்ட படைத் தலைவன் தலையை வெட்டினார்கள். கோணியொன்றில் போட்டு என்னிடம் கொடுத்தார்கள். அதை எடுத்துக் கொண்டு நான் வந்தேன். நான் துரிதமாகப் பணியை முடிக்காமல் திரும்பினால் என்னைக் கொன்றுவிட நதிக்கு அக்கரைக் காட்டில் மறைந்திருக்கிறார்கள். நீங்கள் படைக்கு ஆள் சேர்ப்பதைப் பார்த்ததும் உங்களிடம் வந்தேன்...'' என்ற அவன் நிதானித்தான்.

''மேலே சொல்.'' என்றார் நுவரகிரி.

zeevaa

''அக்கரையில் கால் காதத்துக்கு அப்பால் இளைய கேசதாதுவின் படை சித்தமாயிருக்கிறது உங்களைத் தாக்க. நான் தூதைச் சொன்னவுடன் அந்தப் படைகள் நதியைக் கடந்து நீங்கள் எதிர்பாராதபோது உங்களைத் தாக்கும் என்றும் சொன்னார்கள். ஆனால் அது எதுவும் நடக்கவில்லை.'' இதைச் சொன்ன அந்த மனிதன் எழுந்து நின்றான். அவன் கால்களில் பழைய வலு திரும்பி இருந்தது. தலைக்கு மேல் ஓடிய வெள்ளம் சாண் ஓடினால் என்ன முழம் ஓடினால் என்ன என்ற நினைப்பில் அவன் சற்றுத் தைரியமும் அடைந்தான். ''இனி நீங்கள் கொடுக்கும் தண்டனை எதையும் நான் ஏற்கச் சித்தம்,'' என்றும் துணிவுடனும் விரக்தியுடனும் பேசினான். ''கேவலமான இந்தத் தூது வந்ததற்கு வேறு காரணமும் உண்டு.'' என்ற அந்த மனிதன் அந்தக் காரணத்தையும் விளக்கினான்.

எதற்கும் மசியாத நுவரகிரியும் அந்தக் காரணத்தைக் கேட்டதும் சிறிது மசிந்தார். அந்த மனிதனிடம் ஓரளவு அனுதாபம் கூட ஏற்பட்டது அவருக்கு. ''வா, இதை மன்னரிடம் சொல்'' என்று அவனை அழைத்துச் சென்றார்.

தூதுவன் கதையைக் கேட்ட விஜயபாகு. ''இப்படிப்பட்ட அதர்மன் சிங்களத்திலிருக்கிறானா?'' என்று மிகுந்த சீற்றம் கொண்டான். ''நுவரகிரி. இவனைச் சிறையில் அடைத்து வையுங்கள். இன்னும் பத்து நாட்களில் நமது படைகள் ஆற்றைக் கடக்கும். அதற்குள் தம்பலகாமக் கோட்டை சித்தமாகட்டும் நமது படைகளை ஏற்க,'' என்று உத்தரவிட்டான். ''சிங்களப் போர் துவங்கி விட்டது.'' என்று தனக்குள்ளேயே சொல்லியும் கொண்டான். ''இளையகேசதாது வலிய அழைக்கிறான் போருக்கு,'' என்றான் நுவரகிரியை நோக்கி.

''நாளையே நாம் போர் துவங்க முடியும்,'' என்றார் நுவரகிரி.

விஜயன் வியப்பு நிரம்பிய விழிகளை அவர்மீது நிலைக்க விட்டான். ''படை?'' என்ற ஏதோ கேட்டான்.

zeevaa

"பத்தாயிரம் பேர் கொண்ட படையைச் சித்தம் செய்து விட்டேன். இளையகேசதாதுவை நசுக்க அதுபோதும்," என்றார் நுவரகிரி.

புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் விஜயன். அந்தச் சமயத்தில் தூரத்தில் படுதூள் கிளம்பியது. சிறு படையொன்று மகாநாககுலாவை நோக்கி வந்து கொண்டிருந்தது.



zeevaa

## 38. இருபுறம் இரு வேல்கள்

இலங்கையின் நான்காவது முக்கிய நதியென அழைக்கப் பட்டதும், கரையோரமாக அழகிய மலர்களை உடையதுமான வளவே கங்கையின் அழகிய நீரோட்டம் காலை வெய்யிலில் பளபளத்துத் தனது அழகைப் பன்மடங்கு உயர்த்திக் கொண்ட நதிப் பிரவாகத்தைப் பார்த்துக்கொண்டே ஆழ்ந்த யோசனையிலிருந்த விஜயன், தூரத்திலிருந்து ஒற்றனை ஒரு கையிலும் வெட்டிய தலையை இன்னொரு கையிலும் பிடித்துக்கொண்டு வந்த நுவரகிரியை ஏறெடுத்து நோக்கினான் கேள்வி கேட்கும் பாவனையில்.

மன்னன் புருவங்கள் உயர்ந்ததிலிருந்தே அவனது கேள்வியைப் புரிந்துகொண்ட நுவரகிரி, ''மன்னவா! இவனை முதலில் சோழர்கள் ஒற்றனென்று பிடித்தேன். பிறகு இவன் தனக்குத்தானே தூதன் என்ற திரு நாமத்தைச் சுட்டிக் கொண்டான். கடைசியாக இளைய கேசதாது அனுப்பியதாகச் சொன்னான், இப்பொழுது இன்னுமொரு கதை சொல்கிறான்'' என்று கூறிவிட்டுத் தனது கையிலிருந்த தலையையும் நோக்கி, தூதுவன் தலையையும் நோக்கினார். ''இரண்டு தலைகளும் கிட்டத்தட்ட ஒரே அளவு இருக்கிறது. இந்தத் தலைக்குப் பதில் இவன் தலையை அனுப்பிவிடலாமென்று தீர்மானித்தேன். ஆனால் அதைச் செய்ய மனம் வரவில்லை'' என்று கூறி ஏமாற்றப் பெருமூச்சும் விட்டார்.

ஒற்றன் தலையை வெட்ட முடியாததற்கு அவர் படும் வருத்தத்தைப் பார்த்துப் புன்முறவல் கொண்ட விஜயன், ''நுவரகிரி!

zeevaa

உங்களுக்குக் கூடவா இவனைக் கொல்ல மனம் வரவில்லை?'' என்று வினவினான்.

'உங்களுக்கு கூடவா' என்று விஜயன் சொன்னதன் பொருளைப் பூர்ணமாகப் புரிந்து கொண்டார் நுவரகிரி. ராக்ஷஸர்கள் என்று அழைக்கப்பட்டு, பிறகு ராக்கர்கள் என்று திரிந்த இனத்தின் வழிவந்த அரக்கனான தனக்கு ஒற்றனைக் கொல்ல மனம் வரவில்லையென்று சொன்னதால் மன்னன் ஏளனம் செய்கிறாரென் பதை உணர்ந்து கொண்டதால், ''மன்னவா! நான் அரக்கர் வம்சமானாலும் இவன் கதையைக் கேட்க என் மனமே உருகுகிறது. இல்லாவிடில் இவன் தலையைத் திருகி இரண்டு தலைகளையும் கோணியில் போட்டு இளைய கேசதாதுவுக்கு நானே அனுப்பி யிருப்பேன்'' என்று தமது இளகிய மனத்துக்குக் காரணம் காட்டிய நுவரகிரி, ''டேய்! நீ தூது வந்த காரணத்தை மன்னனிடம் சொல்'' என்று கூறினார்.

அந்தச் சாதாரணப் பேச்சே குலைநடுங்கும்படியிருந்ததால், ''மன்னவா!'' என்று குழையும் குரலில் துவங்கினான் தூதன்.

''சொல்'' என்றான் விஜயன்.

அப்பொழுது வளவே கங்கையின் மேல் கரையிலுள்ள ஒரு பெரிய பாறையில் உட்கார்ந்து கையிலிருந்த ஒரு குறுவாளால் பாறையிலிருந்த ஒரு செடியை எடுக்க முயன்று கொண்டிருந்தான் விஜயன். மன்னவன் தன்னைப் பார்க்காமல் செடியைக் கிளறிக் கொண்டிருக்கிறானே என்று தனது பதிலைச் சற்றுத் தாமதித்த ஒற்றன், ''மன்னவா!'' என்று மீண்டும் மெதுவாக அழைத்தான்.

''சொல். கேட்கிறேன்'' என்று மன்னன் பழையபடி பாறையைக் கிளறுவதில் இருந்தான்.

ஒற்றன் மெதுவாக தனது கதையை சொல்லத் துவங்கி, ''மன்னவா! இந்த மாதிரி இழிவான வேலை என் தலையில்

zeevaa

ஏற்றப்படும் என்று கனவிலும் எண்ணவில்லை. குட்டசாலகா பண்டகசாலையின் தலைவனாக இருந்தேன் நான். அந்தப் பண்டகசாலையின் மூலம் நீங்கள் மன்னர் அரண்மனையில் நுழைந்துவிட்டதாக மறுநாள் பேச்சு அடிபட்டது குட்டசாலகா நகரத்தில். அன்று இரவே பண்டக சாலையும் கொளுத்தப்பட்டது. அது தீப்பிடித்து எரியவே, நானும் எனது மனைவியும் இரண்டு குழந்தைகளும் வெளியே ஓடினோம். பண்டகசாலை ஆட்களில் இரண்டு பேர் தப்பினார்கள். மற்றவர்கள் தீயில் மாய்ந்தார்கள். பண்டகசாலையை இழந்து வெளியிலிருந்த எங்களை இளைய கேசதாதுவின் வீரர்கள் அழைத்துப்போய் ஒரு சத்திரத்தில் காவல் வைத்தார்கள் இரண்டு நாட்கள் கழித்து, 'நீங்கள் அரண்மனைக்குள் எப்படி வந்தீர்கள்?' என்று விசாரித்தார்கள். எனக்குத் தெரியாது என்று சொன்னதை அவர்கள் நம்பவில்லை. என் குடும்பமே சிறையில் வைக்கப்பட்டது. இரண்டு நாட்களுக்கு முன்னால் அந்த நகரத்தின் படைத்தலைவன் நான் தங்களிடம் தூது போக வேண்டுமென்றும், உங்கள் படைத்தலைவன் தலையை வெட்டி உங்களிடம் கொடுக்க வேண்டுமென்றும் சொன்னான். நான் ஒப்பாததால் என் மனைவி மக்களை அவன் பலவந்தமாக இழுத்துச் சென்றான். அன்று மாலை இளையகேசதாதுவிடம் நான் அழைத்துச் செல்லப்பட்டேன். இதற்கு நான் ஒப்பாவிடில் படைவீரர்கள் ஆசை தீர்த்துக்கொள்ள அவர்களிடம் என் மனைவி ஒப்படைக்கப்படு வாளென்று அவரே சொன்னார். அப்பொழுதும் நான் இணங்க வில்லை. என் மனைவி எங்கிருந்தோ ஒரு வீரனால் இழுத்துவரப் பட்டாள். இளைய கேசதாது கண்ணைக் காட்ட என் மனைவியை நிர்வாணமாக்க முயன்றான், அவளை இழுத்துவந்த வீரன். அவள் கதறினாள். ''மன்னவா! இது உங்களுக்கு அழகல்ல' என்றும் 'விடுங்கள் அவளை' என்றும் நானும் கதறினேன்.

''ஒப்புக் கொள்கிறாயா?'' இந்த ஒரு வார்த்தையைத்தான் கேட்டார் மன்னர்.

zeevaa

'ஒப்புக்கொண்டால்...' என்று சந்தேகம் கேட்டேன்.

'உ.ன் மனைவி தூய்மையுடன் உன்னிடம் வருவாள்' என்றார் அவ'ர்.

குழந்தைகள்...?' என்று கேட்டேன்.

'ஆபத்து எதுவும் ஏற்படாது' என்றார் இளைய கேசதாது.

அதற்குப் பிறகு வேறு வழியில்லாமல் ஒப்புக்கொண்டேன். பிறகு நடந்தது உங்களுக்குத் தெரியும்'' என்ற அந்த மனிதன் உடல் நடுங்கி:பது. பழைய கதையை நினைத்ததால்.

விஜயன் நீண்டநேரம் மௌனமாயிருந்தான். பிறகு தான் கிளறிக் கொண்டிருந்த செடியை வேருடன் பிடுங்கி அதன் வேர்களை அறுத்தான். ''இளைய கேசதாதுவையும் இப்படி வேருடன் ஒழிக்க வேண்டும்'' என்று அவன் சொன்ன போதுதான் நுவரகிரி தாம் அதற்குச் சித்தமாயிருப்பதைச் சொன்னார்.

அதே நேரத்தில் தூரத்தில் படுதூள் கிளம்பியதைப் பார்த்து எழுந்து பாறைமீது நின்றான் மன்னவன். நுவரகிரியைப் பார்த்து. ''இவனை நாளை அனுப்புவோம்'' என்று தூதனைச் சுட்டிக்காட்ட, அவன் இரு வீரர்களால் அழைத்துச் செல்லப்பட்டான்.

பிறகு தூதனை அறவே மறந்துவிட்ட விஜயன் தூரத்தில் எழுந்த புழுதியை நோக்கிக் கொண்டிருந்தான். கிட்டே வரவர முகப்பிலிருந்த இரு தலைவர்களும் தங்கள் வாட்களை உயரத் தூக்கி ஆட்டியும் பிறகு தாழ்த்தியும் வணக்கம் தெரிவித்ததைக் கண்ட விஜயனின் முகத்தில் பெருமகிழ்ச்சியும் பெருமையும் கலந்த சாயை படர்ந்தது. வந்த படையின் முகப்பில் தோன்றிய ரவிதேவனும் காலனும் கைகளைத் தூக்கி, பின்னால் வந்த படையை நிறுத்திவிட்டு வந்து மன்னவனுக்கு முன்னால் மண்டியிட்டுத் தலைவணங்கினர்.

zeevaa

பிறகு எழுந்த ரவிதேவன், ''இந்தப் படையில் இரண்டாயிரம் வேடர்கள் இருக்கிறார்கள். இவர்களனைவருக்கும் புரவிமீது வேகமாகச் செல்லும் பழக்கம் இருக்கிறது. புரவியில் வேகமாகச் சென்றபடி வேல்களை வீச வல்லவர்கள். இந்த வேல் படையை அடுத்து நமது காலாட்படை இருக்கிறது. அவர்கள் அனைவரும் வில்லவர்கள். ஆயிரம் பேருக்குமேல் இருக்கிறார்கள்'' என்று கூறினான்.

''சமயத்தில் வந்தாய் ரவிதேவா. நாம் போரைத் துவங்கும் தருவாயில் இருக்கிறோம்'' என்று கூறிய விஜயன், ''நுவரகிரி, நான் இந்தப் படைப்பிரிவைப் பார்வையிட்டு வருகிறேன். இவர்களுக்கு உணவளிக்கவும் ஏற்பாடு செய்யுங்கள்'' என்று உத்தரவிட்டு, ரவிதேவனும் காலனும் பின்தொடர. படைகளைப் பார்வையிடச் சென்றான். இரண்டாயிரம் புரவிப்படை வீரர்களும் புரவிகளில் செங்குத்தாய் உட்கார்ந்து நெடிய வேல்களைக் கைகளில் தாங்கிக் கொண்டிருந்தார்கள். அந்தப் படையை இரு படைத்தலைவர்களும் பின் தொடரச் சுற்றி வருவதற்குள் காலை நேரத்தில் பாதி தீர்ந்து. நடுப்பகல் நெருங்கிக் கொண்டிருந்தது.

விஜயன் உத்தரவுப்படி புரவிகள் அடுத்திருந்த அடவி மரங்களில் கட்டப்பட்டன. வீரர்களும் அப்புரவிகளுடன் தங்கி னார்கள். நுவரகிரியின் உத்தரவால் பணியாளர்கள் அடுத்திருந்த கிராமங்களுக்குப் பறந்தார்கள். நடுப்பகல் தாண்டுவதற்குள் பெரிய அண்டாக்களில் சோறு சமைக்கப்பட்டு, படை வீரருக்கு ஆங்காங்கு உணவு பரிமாறப்பட்டு, புரவிகளும் கவனிக்கப்பட்டன. எப்பேர்ப்பட்ட ராணுவத் தளபதி தான் என்பதைக் காட்டினார் நுவரகிரி.

ரவிதேவனும் காலனும் மன்னனைப் பின் தொடர்ந்தனர் அன்று முழுவதும். அன்று மாலையில் விஜயன் மகாநாகுலாவின் பெரிய

zeevaa

மாளிகையில் படைத்தலைவர்களுடன் மந்திராலோசனை நடத்தினார். ''நாம் சோழருடன் பெரும்போர் துவங்குமுன்பு நமக்குப் பக்கத்திலிருக்கும் எதிரியைக் கவனிக்க வேண்டும். இளையகேசதாது நம்மை வலிய சண்டைக்கு இழுக்கிறான். தவிர. நாம் வடக்கே போவதானால் பின்னால் முதுகில் குத்தக் கூடிய எதிரியை அழிக்காமல் சோழர்களை நோக்கி முன்னேறுவதில் பயனில்லை. ஆற்றங்கரைக்கு அக்கரையில் இளையகேசதாதுவின் படைப்பிரிவு இருக்கிறதாக இங்கு வந்த தூதன் ஒருவன் சொன்னான்'' என்று விஜயன் ரவிதேவனுக்கும் காலனுக்கும் சொன்னான் ''இந்தத் துரோகியை எப்படிச் சமாளிப்பதாக உத்தேசம்'' என்றும் கேட்டான் ரவிதேவனை நோக்கி.

''அக்கரையின் படைபலத்தைப் பொறுத்தது. இப்பொழுதே நமது முன்னோடிகளை அனுப்புகிறேன்'' என்றான் ரவிதேவன்.

''படைபலம் அதிகமிருக்கக் காரணமில்லை'' என்றான் விஜயன்.

''எப்படி அத்தனை திட்டமாகச் சொல்ல முடியும்?'' என்று கேட்டான் காலன்.

''நுவரகிரி, ஒற்றன் கதையைச் சொல்லும்'' என்று விஜயன் கட்டளையிட நுவரகிரி நடந்ததை விளக்கினார்.

ரவிதேவனும் காலனும் அந்தக் கதையைக் கேட்டதும் பிரமித்தனர். ''இத்தனை அருகிலிருந்தால் இப்பொழுது நாம் கொண்டு வந்திருக்கும் புரவிப் படையைக் கொண்டே அதை அழித்து விடலாமே'' என்றான் காலன்.

''படை இருந்தால் அழித்துவிடலாம். இல்லாவிட்டால்?'' என்று விஜயன் கேட்டான்.

''ஒற்றன் தான் சொன்னானே?'' என்றான் ரவிதேவன்.

zeevaa

''முதலில் அது உண்மையாயிருக்க வேண்டும். அப்படியே இருந்து நாம் போரிட முற்பட்டதும் எதிரிப்படை பின்வாங்கி நம்மை ருஹுணாவுக்குள் இழுத்துவிட்டால்?'' என்று விஜயன் வினவினான். ''எதிரி நம்மை மகா நாககுலாவிலிருந்து - அதாவது வளவே கங்கையின் அடிப்பகுதியிலிருந்து - எதிர்க்கரையின் உட்பகுதிக்கு இழுத்துவிட்டால், எதிர்ப்படை மேற்புறத்திலிருந்து வளைந்து நம்மைப் பின்புறம் சூழ்ந்து கொள்ளலாம். அத்தகைய போர் நமக்குப் பயனளிக்காது,'' என்றான்.

''அப்படியானால்?'' என்று நுவரகிரி கேட்டார்.

''மகாநாககுலாவில் படை திரட்டும் தளமிருக்கும். சிறிய காவற்படையுமிருக்கும். மீதிப் படைகள் வடக்கே தாம்பல காமத்தில் கோட்டையில் இருக்கும். இப்படி இரு தளங்கள் இருந்தால், இளையகேசதாது எந்தப் புறம் தாக்கினாலும் நாம் சித்தமா யிருப்போம்,'' என்ற விஜயன். தனது போர்த் திட்டத்தை விளக்கத் துவங்கி, ''மகாநாககுலாவில் வளவே கங்கை மிக ஆழம். அதுவும் மாரிகாலத்தில் அதன் நீர் இருபது அடி ஆழமிருக்கும். வேகமும் அதிகமாயிருக்கும். தாம்பலகாமத்தில் அப்படியில்லை. உண்மை யில் அங்கிருந்து வளவே கங்கையைத் தாண்டுவது மிகவும் சுலபம் *தாம்பலகாமம் உண்மையில் தாம்பூல கிராமம். வெற்றிலைக் கொடிக்கால்களை அதிகமாக உடையது. வெற்றிலைக் கொடிக்கால் வழியே நதியைத் தாண்டுவோம். போரின் முறையைச் சொல்கிறேன். கேளுங்கள்,'' என்று விவரிக்க முற்பட்டான் விஜயன்.

மடியிலிருந்து ஓர் ஆட்டுத் தோலை எடுத்து அவர்கள் முன்பு விரித்த விஜயன் அதில் தான் வரைந்திருந்த படத்திலிருந்து

---

* Tambalagamam ot Tamblegam, so called from Tamboolagama (village of betel leaf)" -An Historical and Statistical Account of Ceylon - By C. PRIDHAM B.A., F.R.C.S. Page 349.

zeevaa

இலங்கையின் முக்கிய இடங்களைத் தொட்டுக்காட்டி, "தாம்பூல கிராமத்திலிருந்து நேர் கிழக்கே குட்டசாலகா இருக்கிறது. அங்கிருந்து சிறு அருவியாக ஓடும் வளவே கங்கையைத் தாண்டி இளையகேசதாதுவின் படைத்தளமிருக்கும் குட்டசாலகாவைத் தாக்குவோம். இப்பொழுது நமது இருப்பிடத்தைத் தாம்பூல கிராமத்திற்கு மாற்றுகிறேன். மேலிருந்து குட்டசாலகாவைத் தாக்கும் அதே சமயத்தில் மகாநாககுலாவிலிருக்கும் நமது படைப் பிரிவு கீழிருந்து தாக்கும் எதிரியை இரண்டு அதாவது இரண்டு வேல்கள் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிப் பாயும். இந்தத் தாக்குதல் களுக்கிடையில் வெற்றிலையைக் கிழிப்பதுபோல் இரண்டாக எதிரியைக் கிழித்துப் போடுவோம்," என்று தனது திட்டத்தை விளக்கினான்: "நாளை நானும் நுவரகிரியும் தாம்பூல கிராமத்துக்குக் கிளம்புகிறோம். இன்று நீங்கள் கொணடு வந்திருக்கும் புரவிப் படையும் நாளை வரும் வில்லவரும் இன்றிலிருந்து பத்தாவது நாள் நேர் கிழக்கில் ருஹுணாவில் நுழைந்து விடுங்கள்," என்றும் சொன்னான்.

மந்திராலோசனையை முடித்துக் கொண்டு அந்தப்புரத்துக்குள் நுழைந்த விஜயன், அங்கிருந்த சுடர்விழியையும் சுந்தரியையும் நோககித் தனது போர்த்திட்டத்தைச் சுருக்கமாகச் சொல்லி, "நாளை நான் தாம்பூல கிராமம் போகிறேன்" என்றான்.

"நாங்கள்?" என்று ஒரே குரலில் இரு பெண்களும் கேட்டார்கள்.

"ஓகோ! நீங்கள் வேறு இருக்கிறீர்களா? உங்களுக்கும் ஏதாவது ஏற்பாடு செய்கிறேன்," என்றான் சர்வ சாதாரணமாக.

இரண்டு பெண்களும் புரிந்து கொண்டார்கள், நாட்டு நலன் என்றால் தாங்கள் விஜயனுக்கு இரண்டாம் பட்சம் என்பதை. அதன் விளைவாகச் சினத்தால் சிவந்த முகங்களைத் திருப்பிக் கொண்டு வேகமாக அந்தப்புரத்துக்குள் நுழைந்து விட்டார்கள்.

zeevaa

அவர்கள் போனதைக் கூட விஜயன் கவனிக்கவில்லை. அவன் மனத்தையெல்லாம் போர் யோசனை ஆட்கொண்டிருந்தது. மறுநாள் காலை இரண்டு பெண்களும் எழுந்தபோது விஜயன் மகாநாகதுலாவில் இல்லை.




zeevaa

# 39. காதலர், கள்வர், கடன்காரர்!

மகாநாககுலாவின் அரண்மனை அந்தப்புரத்து அறையொன்றுக்குள் புகுந்துவிட்ட இரண்டு பெண்களும் அன்றிரவு நீண்டநேரம் உறங்கவேயில்லை. இரவு நன்றாக முதிர்ந்து படை அணி வகுப்பு வேலைகள் முடிந்ததும் சிங்கள இளவல் நிச்சயம் தங்களை நாடி வருவாரென்று நம்பியிருந்த இருபெண்களும் நடுநிசி தாண்டியும் அவன் வராததைக் கண்டு சாளரத்தின் மூலம் வெளியே நோக்கினார்கள். சற்றுத் தூரத்தில் ஓடிக் கொண்டிருந்த வளவே கங்கையின் நீரின் அழகும், வான் மதியின் வெள்ளி நிலவும், தூரத்தே தெரிந்த தென்னை மரங்கள் கடல் வழியைக் காக்கும் காவலர்போல் செங்குத்தாக நின்ற நிலையும் அவற்றின் பச்சையும் சிவப்புமான இளநீர்க் குலைகளும், மிகுந்த மனோகரமான காட்சியை விளைவித்திருந்தும் பெண்கள் இருவர் மனங்களையும் ஈர்க்க முடியவில்லை இயற்கையின் வனப்பால்.

இவற்றையெல்லாம் கண்டும் மன்னவனைக் காணாத அந்த மங்கையர் இருவரும் சேர்ந்து பெருமூச்சு விட்டனர். வேட்கையால் இருவர் மனமும் இணைந்திருந்த காரணத்தால், சுடர்விழியின் புஷ்டியான அழகு உடலும். அதிக மெல்லியதாகவோ் புஷ்டியாகவோ இல்லாத சுந்தரியின் நடுத்தர உடலும் அக்கம் பக்கத்தில் சாளரங்களில் சாய்ந்திருந்தது, அசோக விருட்சமும் அல்லிக் கொடியும் அக்கம் பக்கத்தில் வளர்ந்திருந்த அழகுக்கு உவமையாயின. இருவரும் சாளரக் கட்டையில் சாய்ந்திருந்ததால் வெளியே புலப்பட்ட இருவர் மதிவதனங்களும், கட்டைகளைத் தாண்டித் தெரிந்த திண்மையான மார்பகங்களும், அழகிய

zeevaa

சிற்பங்களை அரண்மனைக்குள் வகுத்த சிற்பியின் திறமைக்கு அத்தாட்சிகளாக இருந்தன போலக் காட்சியளித்தன. அரண் மனையின் மேல் பொந்துகளிலிருந்த சில புறாக்கள் கூவியது இன்னிசையைத் தோற்கடித்தாலும் அது நாராசமாக இருந்தது அந்த இரு நாரீமணிகளுக்கும். அதனால் சுடர்விழி கேட்டாள். "இந்தப் புறாக்கள் ஏன் இப்படிக் கூவுகின்றன?" என்று.

துன்பம் கலந்த புன்முறுவலொன்று திரிலோகசுந்தரியின் கடை இதழ்களிலிருந்து உதயமாயிற்று. "அந்தப் புறாக்களின் ஆண்களும் சிங்கள மன்னனாக மாறியிருக்க வேண்டும்" என்றாள் துன்பக் குரலில்.

"அதற்காகக் கூவவேண்டுமா?" என்று சுடர்விழி கேட்டாள்.

"வேறு என்ன செய்வது?" சுந்தரி வினவினாள்.

"நாம் செய்வதைச் செய்வது. சும்மா இருப்பது."

"இங்குதான் மனிதர்களுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் வித்தியாசமிருக்கிறது."

"என்ன வித்தியாசம்?"

"மனிதர்கள் தங்கள் இச்சைகளை வெளியில் காட்டமாட்டார் கள். அடக்கி வைப்பார்கள். அவர்கள் இதயங்கள் கூவும். இதழ்கள் கூவா. மனங்கள் அலறும், வாய் அலறாது. மனிதனுக்கு எதிலும் ஒரு திரிசமன். பறவைகளுக்கு அது இல்லை. அதோ புறாக்கள் கூவுகின்றன. தூரத்தில் தெரியும் தோப்புகளுக்குப் போனால் மற்றப் பட்சி ஜாலங்கள் கூவும், நாம்தான் கூவ முடியவில்லை." இதை மிகுந்த வருத்தத்துடன் சொன்னாள் திரிலோகசுந்தரி.

இதைக் கேட்ட சுடர்விழி சிறிது நேரம் பேசவில்லை. ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தாள். பிறகு மெதுவாகக் கேட்டாள், "சுந்தரி! நாமாக அவரைத் தேடிப் போனால் என்ன?" என்று.

zeevaa

"இயற்கைக்கு ஒவ்வாதது சுடர்விழி," என்றாள் சுந்தரி.

"ஏன் ஒவ்வாதது?" என்று சுடர்விழி கேட்டாள்.

"ஆண்மகன்தான் பெண்ணைத் தேடி வரவேண்டும் அப்பொழுதும் பெண் பிணங்கவேண்டும். அவனிடமிருந்து தப்ப முயலவேண்டும். அவன் ஓடிவருவான். நம்மைப் பிடிப்பான்..." என்று சுந்தரி சட்டென்று பேச்சை நிறுத்தினாள். அவள் முகத்தில் வேட்கை மிகுந்து கிடந்தது. அழகிய உடலும் சிறிது நடுங்கியது.

சுடர்விழி நகைத்தாள். பிறகு மெதுவாக வந்து சுந்தரியின் தோள்மீது தனது கையை வைத்து, "அக்கா!" என்று மெதுவாக அழைத்தாள்.

"என்ன சுடர்விழி?" மெல்லக் கேட்டாள் சுந்தரி.

"உன்னை..."

"உம்..."

"அவர் அப்படித்தான் ஓடிப் பிடித்தாரா?"

"நான் ஓடினால்தானே அவர் பிடிப்பதற்கு"?

"வேறு எப்படி?"

"அவரைக் கண்டதும் நான் தான் விழுந்தேன். அவர் தீ, நான் மெழுகு. என்ன ஆகியிருக்கும்?"

"நானும் அப்படித்தான் அக்கா. அவர் மகா கெட்டிக்காரர்."

"என்ன கெட்டிக்காரர்..." அலுத்துக் கொண்டாள் சுந்தரி.

"ஏன்? அவர் கெட்டிக்காரத்தனத்துக்கு என்ன?" என்று சுடர்விழி கேட்டாள்.

"லீலாவதி சிறைக்குப் போனாள். அவளை விட்டு என்னைப் பிடித்தார். உன்னைப் பார்த்ததும் என்னை விட்டு உன்னைப்

zeevaa

பிடித்தார். மறுபடியும் லீலாவதி வந்தால் நாமிருவரும் இரண்டாம் பட்சம்,'' என்றாள் சுந்தரி.

அந்தச் சமயத்தில் சாளரத்துக்குப் பக்கத்திலிருந்த ஒரு மரத்திலிருந்து வண்டு ஒன்று பறந்து சாளரக் கட்டையிலும் பக்கங்களிலும் மோதியது. அழகாக ரீங்காரமும் செய்தது.

''அக்கா! வண்டு!'' என்று எச்சரித்தாள் சுடர்விழி.

''இந்த வண்டு சுவையில்லாதது. மலரில் மோத வேண்டியது கட்டையில் மோதுகிறது,'' என்று சிலேடையாகப் பேசினாள் சுந்தரி.

''நமது வண்டு எதில் மோதுகிறது?'' என்று கேட்டாள் சுடர்விழி.

''இளையகேசதாதுவின் மீது,'' என்ற சுந்தரி, ''அந்தச் சுரணையற்ற கட்டை நமது வண்டுக்குக் கிடைக்கவில்லை. இந்த வண்டே அங்கு போகும்?'' என்று கூறினாள்.

மூன்றாம் ஜாமம் துவங்கிவிட்டதால் அரண்மனைக்கு வெளியே நகரெங்கும் பரந்து கிடந்த படையில் காவல் வீரர் எச்சரிக்கைக் கூவலைத்தவிர மற்ற ஒலிகள் அடங்கிக் கிடந்தன. ஆயுதப் பட்டறைகளின் ஒலிகளும் அடங்கிவிட்டன. அக்கம் பக்கத்திலிருந்த பெரிய தோட்டங்களில் பிணைக்கப்பட்டிருந்த புரவிகளின் கனைப்பொலிகள்கூட அடங்கின. எங்கோ ஓரிரு யானைகள் பிளிறினாலும் அந்தப் பிளிறல்களில் வலுவைக் காணோம்.

அத்தனையும் அடங்கியும் இரு பெண்களுக்கும் உறக்கம் வரவில்லை. ''அக்கா! நகரமே உறக்கத்தில் ஆழ்ந்து விட்டது. நாம் உறங்க வேண்டாமா?'' என்று கேட்டாள் சுந்தரி.

''உனக்கு உறக்கம் வந்தால் படுத்துக்கொள். அதோ பஞ்சணை இருக்கிறது.''

''உறக்கம் வரவில்லை.

''சுடர்விழி!''

zeevaa

''அக்கா!''

''உலகத்தில் மூன்று வகைப்பட்டவர்களுக்கு உறக்கம் கிடையாது''

''யார் அக்கா அது?''

''நம்மைப்போல் காதல் வசப்பட்டவர்கள், கள்வர்கள், கடன்காரர்கள் இவர்களுக்குத் தூக்கம் வராது.''

இதைக் கேட்ட சுடர்விழி பலமாகவே நகைத்தாள். ''இதில் நாம் எந்தப் பிரிவு?''

சுந்தரி, சுடர்விழியை அணுகித் தழுவிக் கெண்டாள். ''நாம் காதல் வசப்பட்டவர்கள், அவர் நம்மை ஏமாற்றியகள்வர், நமக்கும் அவருக்கும் இடையில் நிற்கும் இளைய கேசதாது கடன்காரன்,'' என்று விளக்கினாள் சுந்தரி. அத்துடன் அவளை அழைத்துக் கொண்டு பஞ்சணைக்குச் சென்று படுத்தாள். ''சற்றுக் கண்களை மூடுவோம் சுடர்விழி நாளைக் காலையில் அவருக்குப் பணிவிடை செய்ய நாம் எழுந்திருக்க வேண்டாமா?'' என்று சொன்னாள் சுடர்விழியை அணைத்துக் கொண்டு.

இருவரும் கண்களை மூடிப்படுத்தார்களே தவிர உறக்கம் பிடிக்கவில்லை. நான்காவது ஜாமமும் துவங்கியது. சுடர்விழி மெதுவாக எழுந்து சுந்தரியின் நித்திரையைச் சோதித்தாள். சுந்தரியை இருமுறை அசக்கிப் பார்த்து விட்டு மெதுவாக எழுந்து வெளியே நடந்தாள். அந்தப்புரத்தின் மறுகோடியிலிருந்த விஜயன் அறையை அடைந்து மெதுவாகக் கதவைத் திறந்தாள். பள்ளியறைப் பஞ்சணையில் அவன் துயிலவில்லை என்பதற்குப் பஞ்சணையே அத்தாட்சியாயிற்று. மெள்ளச் சென்று பஞ்சணையில் உட்கார்ந்தாள். பிறகு பெருமூச்சுவிட்டு எழுந்தாள். அறை வாயிற்படியில் சுந்தரி நின்றிருந்தாள். அவள் முகத்தில் இகழ்ச்சி நகை படர்ந்திருந்தது.

zeevaa

''சுந்தரி!'' என்று அழைத்தாள் சுடர்விழி.

''என்ன சுடர்விழி?''

''நீ ஏன் வந்தாய்?''

''உன் கள்ளத்தனத்தைக் கண்டுபிடிக்க''

சுடர்விழியின் முகத்தில் வெட்கம் தெரிந்தது. ''சுந்தரி! உன்னை ஏமாற்ற உத்தேசமில்லை. ஆனால்...'' என்று சுடர்விழி இழுத்தாள்.

''பாதகமில்லை சுடர்விழி. நாம் ஒருவரையொருவர் ஏமாற்றப் பார்க்கிறோம். அவர் நம் இருவரையும் ஏமாற்றி விட்டார். அவர் மீது தவறில்லை. காதலிலும் களத்திலும் எதுவும் நியாயம். அவர் இப்பொழுது நம்மைவிடக் களத்தைக் காதலிக்கிறார். போர்க் களத்தில் அவர் புகும் நாள் அதிக தூரத்தில் இல்லை. நாளை அவரைச் சந்தித்துப் போருக்கு நாமும் உதவுவோம்'' என்று அவளைச் சமாதானப்படுத்திய சுந்தரி மீண்டும் தனது அறையை நாடிச் சென்றாள்.

அன்று பொழுது விடிந்து இரு பெண்களும் நீராட்டத்தை முடித்துக்கொண்டு விஜயனுக்காகக் காத்திருந்தும் அவன் வரவில்லை. காவலன் ஒருவனை அழைத்த சுந்தரி படைத் தலைவரை அழைத்து வரும்படி உத்தரவிட்டாள். நுவரகிரி வந்து அவ்விரு மங்கையருக்கும் தலைவணங்கி நின்றார். ''என்ன உத்தரவு?'' என்று பூர்வாங்கம் எதுவுமில்லாமல் கேட்டார் தமது கரகரத்த குரலில்.

''மன்னர் எங்கே?'' என்று கேட்டாள் சுந்தரி.

''தம்பலகாமாவுக்குப் போய் விட்டார்'' என்றார் நுவரகிரி.

''எப்பொழுது?'' -சுடர்விழி கேட்டாள்.

''நேற்றிரவா'' என்று கேட்டாள் சுந்தரி.

zeevaa

''ஆம். நேற்றிரவு'' என்றார் நுவரகிரி.

''நாங்கள் எப்பொழுது புறப்படுவது?'' என்று கேட்டாள் சுந்தரி.

''எங்கு புறப்பட?'' என்று நுவரகிரி கேட்டார்.

''மன்னர் இருக்குமிடத்திற்கு'' என்று திட்டமாகச் சொன்னாள் சுந்தரி.

''மன்னர் தம்பலகாமாவில் போர்ப் பாசறையிலிருக்கிறார். நீங்கள் அங்கு செல்ல உத்தரவில்லை'' என்று நுவரகிரி திட்டமாகச் சொன்னார்.

சுடர்விழி ஏதும் பேசவில்லை. பிரமித்து நின்றாள். சுந்தரி மட்டும் சினத்தைக் காட்டிப் பேசினாள். ''எங்களுக்கு யார் உத்தரவும் தேவையில்லை'' என்று.

நுவரகிரி சிறிது சங்கடத்துடன் அவர்களைப் பார்த்தார். ''என் உத்தரவு தேவை'' என்றார் மெதுவாக, உறுதியாக.

''உங்கள் உத்தரவா?'' சுந்தரி சீறினாள்.

''ஆம்.''

''நாங்கள் செல்வதை நீர் தடுப்பதைப் பார்க்கிறேன்.''

நுவரகிரி தமது வழுக்கைத் தலையை நன்றாகச் சாய்த்து வணங்கினார். 'மகேசி! வீணாக என்னைச் சோதிக்காதீர். உங்கள் இருவரையும் இங்கேயே இருத்தி வைக்கும்படி மன்னர் உத்தரவு. நான் அவரது ஆயுதம். நானாக எதுவும் செய்வதற்கில்லை. மன்னர் உத்தரவுக்கு நீங்கள் கீழ்ப்படிவதுதான் முறை'' என்றார் நுவரகிரி.

அதற்குமேல் சுந்தரி ஏதும் பேசவில்லை. பதிலேதும் சொல்லாமல் அந்தப்புரத்துள் சுடர்விழியுடன் போய் விட்டாள். அன்று உணவருந்தியதும் சுடர்விழியை அழைத்துக்கொண்டு வெளியே கிளம்பினாள். காவலர் தலைவணங்கி வழிவிட்டனர்.

zeevaa

அரண்மனைப் புரவிக்கொட்டடிக்குச் சென்று இரு புரவிகளைச் சேணமிட உத்தரவிட்டாள். கொட்டடிக்காரனிடம். கொட்டடிக் காவலன் கிளம்பினான் வெளியே.

''எங்கே போகிறாய்?'' என்று சுந்தரி கேட்டாள்.

''தளபதியைக்கேட்டு வருகிறேன்'' -இதை மிகுந்த அடக்கத்துடன் சொன்னான் கொட்டடிக் காவலன்.

''எதற்கு?''

''அவர் அனுமதி பெறாமல் புரவி எதையும் கொட்டடியிலிருந்து அவிழ்க்கக் கூடாது என்று கட்டளை.''

அங்கிருந்து சினந்து கிளம்பியவள் மகாநாககுலாவின் தெருக்களில் சென்று வாடகைப் புரவிகளை அமர்த்த முயன்றாள். எங்கும் அவளுக்கு மறுப்பே கிடைத்தது. சுந்தரியின் சினம் எல்லை கடந்தது. நுவரகிரி ஒரே நாளிரவில் மகாநாககுலா முழுவதையும் தமது ஆணைக்குள் அடக்கி விட்டதை எண்ணி வியந்தாள். ஆகவே அங்கிருந்து பாசறைக்குச் சென்று நுவரகிரியை நோக்கி.

''தளபதி! எனக்கும் ஒரு காலம் வரும்'' என்று எச்சரித்தாள்.

''அந்தக் காலத்தின் விளைவு எதுவாயிருந்தாலும் நுவரகிரி சித்தமாயிருப்பான்'' என்றார் நுவரகிரி.

''நீர் என்ன ராவணனா? வணங்காமுடியா?'' என்று சுந்தரி கேட்டாள்.

''அவர் குலம்தான் நான். இலங்கையில் எல்லோருமே ராட்சஸ கனம். எல்லோருக்குமே ராட்சஸ குணம் உண்டு'' என்று விளக்கம் சொன்னார் நுவரகிரி. ''இன்னும் பத்து நாட்களில் போர் விளையும். அப்பொழுது பாருங்கள் நாசத்தை, உங்களுக்குப் புரியும்'' என்றும் சொன்னார்.

zeevaa

அன்றிலிருந்து பத்தாவது நாள் தாம்பலகாமாவிலிருந்து வளவே கங்கையைக் கிழக்கில் கடந்தான் விஜயபாகு, தனது படையுடன். ஐயாயிரம் புரவிப்படையும் காலாட்படை இரண்டாயிரமும் அவனுடன் சென்றன. அதே சமயத்தில் நுவரகிரி மஹாநாககுலாவி லிருந்து வளவே கங்கையை ரவிதேவனுடனும் ஆயிரம் வில்லவ ருடனும் கிழக்கில் கடந்து ருஹுணாவின் மேற்குப் பகுதியை ஊடுருவினார்.




zeevaa

# 40. ஜேட்டதிஸ்ஸன் மர்மம்

தாம்பலகாமம் என்ற தாம்பூல கிராமத்தின் கோட்டையை ஏராளமான ஆட்களை வைத்து சுவர்களை உயர்த்தி வடக்குப் பெருவாயிலிலும் தெற்குப் பெருவாயிலிலும் பலமான காவலை ஏற்படுத்திய விஜயபாகு, அந்த நகருக்குள்ளே பெரும்பட்டறை களையும் அமைத்து இரவும் பகலுமாகத் தளவாடங்களை உற்பத்தி செய்தான். தான் கலிங்கம் செல்லு முன்பு தன்னிடமிருந்து பிறகு கலைந்து விட்ட படைகளையும் ஒன்று திரட்டிப் பலமான ராணுவத்தையும் சிருஷ்டித்துக் கொண்டான். புரவிகளை ஏராளமாக வாங்கி அவற்றில் ஏறிப் போர் புரியப் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்களுக்குப் பயிற்சியும் அளித்தான். இவற்றுடன் பெரிய யானைப் படையையும் திரட்டி அவற்றையும் போர் சன்னத்தம் செய்து வைத்தான்.

இந்த ஏற்பாடுகளைச் செய்து முடித்துவிட்டதும் தாம்பலகாமத்தி லிருந்து நேர் வடகிழக்கில் மகாவலி கங்கையின் மேற்குக் கரையிலிருந்து குட்டசாலக மண்டலத்தை நோக்கித் தனது படையில் பாதியை அழைத்துக் கொண்டு வளவே கங்கையைத் தாண்டிச் சென்றான். தாம்பலகாமத்தில் வளவே கங்கை அதிக ஆழமில்லாத தால் அதைக் கடப்பதும் அதிக கஷ்டமில்லாததால் படைகள் மிகத் துரிதமாக அடுத்தடுத்து வந்த வளவே கங்கையின் சிறு கிளைகளையும் பிரதான நதியையும் தாண்டிச் சென்றன. காலாட் படையை முன்னால்விட்டுப் புரவிப்படையைப் பின்னால் வரச்செய்த விஜயபாகு எல்லாவற்றிற்கும் முன்னால் தான் மட்டும் மூர்சமதுடன் தங்கள் புரவிகளில் சென்றான். இடையேயிருந்த

zeevaa

பாறைப் பகுதிகளையும் காடுகளையும் சின்னஞ்சிறு அருவிகளை யும் விஜயபாகுவின் கரிய நிறப்புரவியும் மூர்சமதின் பழுப்பு நிறப் புரவியும் அனாயாசமாகக் கடந்து சென்றன. இப்படி ஒருநாள் பயணத்துக்குப் பிறகு பெரும் காட்டுப் பகுதியில் படைகளுக்கு ஓய்வு கொடுத்தான்.

அங்கிருந்த பெரிய மரத்தடியில் உட்கார்ந்து கொண்ட விஜயபாகு நான்கு வீரர்களை அழைத்து அவர்களை எதிரியின் படை பலத்தையும் அவன் படைகள் குழுமியிருக்கும் இடங்களை யும் கண்டு வருமாறு உத்தரவிட்டான். "இளையகேசதாது குட்டசாலக மண்டலத்தில் நமக்காகக் காத்திருப்பானென்பது எனக்குத் தெரியும். ஆனால் அவன் முழுப் படையும் குட்டசாலக நகரத்திலும் அதன் புறக்காடுகளிலோ அல்லது கிராமங்களிலோ தங்கியிருக் கின்றனவா, அல்லது பல பிரிவுகளாக அவற்றைப் பிரித்துக் கேசதாதுவின் தம்பி அவற்றைப் பல இடங்களில் நிறுத்தியிருக்கிறானா, என்பதைப் புலன் அறிந்து வாருங்கள். கூடிய வரையில் குட்டசாலக நகரத்தை அணுகாமலே விசாரியுங்கள். அவசியமானால் மாற்றுடையிலேயே செல்வது நல்லது" என்று உத்தரவிட்டான்.

இந்தச் சமயத்தில் மூர்சமத் ஒரு கேள்வி கேட்டான்: "எதிரிப் படைகளைப் பிரிக்க வேண்டிய அவசியமென்ன?" என்று.

"நாம் வளவே கங்கையின் வடக்குப் பகுதியிலிருந்து வருகிறோம். தெற்குப் பகுதியிலுள்ள மகாநாககுலாவிலிருந்து கிழக்குப் பக்கமாக நுவரகிரி எதிரிகளின் ஆதிக்க நிலங்களை ஊடுருவுகிறார். இது எதிரிக்குத் தெரிந்தால் அவன் நமது படைகளை இரண்டு இடங்களில் சந்திப்பான். அதற்காகப் படைகளை இரண்டாகப் பிரித்து நம்மை இருபகுதிகளிலும் சந்திப்பான். அப்படி நிலைமை இருந்தால் நாமும் நுவரகிரியுடன் ஒரு பாலத்தைச் சிருஷ்டிப்போம். சங்கிலித் தொடர் போன்ற

zeevaa

ஆயிரம் புரவி வீரர்கள் நமக்கும் நுவரகிரிக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்துவார்கள்'' என்றான் விஜயன்.

''இப்பொழுதே நாம் அந்தத் தொடர்பை, பாலத்தை ஏற்படுத்திக் கொண்டாலென்ன?'' என்று வினவினான் மூர்சமத்.

''இணைப்பை ஏற்படுத்தலாமா வேண்டாமா என்பது எதிரியின் போர்த்திட்டத்தைப் பொறுத்தது. அதை நுவரகிரியும் ஒற்றர்கள் மூலம் கவனிப்பார். அவசியமானால் நமக்குச் செய்தியும் அனுப்புவார்'' என்றான் விஜயன்.

''அனுப்பாவிட்டால்!'' மூர்சமத் சந்தேகத்துடன் கேட்டான்.

''நாம் நமது திட்டப்படி இங்கு முன்னேறுவோம். அவர் கிழக்கு முழுவதையும் ஊடுருவித் தமது படையை வடக்கில் திருப்புவார். நாம் வடக்கில் எதிரியை நாசம் செய்து தெற்கே திரும்புவோம். நமது இருவர் படைகளும் சந்திப்பதற்குள் குட்டசாலகா நமது கையில்விழுந்துவிடும். இல்லையேல் நமது இரு படைகளுக்கும் இடையில் எதிரிப் படைகள் சிக்கிக்கொள்ளும். பாக்குவெட்டிக்கு இடையில் அகப்பட்ட பாக்குபோல் டக்கென்று எதிரிப்படைகள் நசுக்கப்படும். அப்படியானால் எதிரிக்கு நாசம் பலமாயிருக்கும்.''

''நமக்கு?''

''எந்தப் போரிலும் நஷ்டம் இருதரப்புக்கும் உண்டு. போர் என்பதே நாசத்துக்குத்தான். புத்த பகவான் இந்த நாசத்தைத் தவிர்க்கத்தான் அஹிம்சையைப் போதித்தார். யார் கேட்டார்கள்? கேட்டிருந்தால் பகை, நாசம், குரோதம், சமுதாய அழிவு இவை ஏற்பட்டிருக்குமா? அதை இன்று நினைத்துப் பலனில்லை. நமது தரப்பில் நாசத்தைக் குறைக்கத்தான் முயலவேண்டும்'' இதைச் சொன்ன விஜயபாகு பெருமூச்சுவிட்டு, ''மனிதன் பிறக்கும்போதே சுயநலத்துடன் பிறக்கிறான். சுயநலம் ஆசையை விளைவிக்கிறது. ஆசை போருக்குத் தூண்டுகிறது. போர் நாசத்தை விளைவிக்கிறது.

zeevaa

இந்தச் சங்கிலித் தொடரை அழிக்க முற்பட்ட மகான்கள் எல்லோருமே தோல்வியுற்றனர்'' என்றும் கூறினான்.

அவன் ஆணையைப் பெற்றுக்கொண்ட வீரர்கள் எதிரி படை பலத்தையும் போர் பலத்தையும் அறிய விரைந்தனர். அன்று வரை அந்தக் கானகத்திலிருந்த அமைதி அன்று கிழிந்தது. புரவிகள் ஆங்காங்கு கர்ஜனை செய்தன, இரவு உணவுக்காகவும் வழியில் கட்டுமூட்டைக்காகவும் கொல்லப்பட்ட மான், ஆட்டுக்கிடா முதலிய மிருகங்களைத் தோலுரித்து நெருப்பில் வாட்டிக் கொண்டிருந்த சமையற்காரர்களின் சின்னஞ்சிறு பாத்திரங்களின் ஓசையும் காட்டின் அமைதிக்கு பங்கம் விளைவித்தன. மனிதர் முகாம் செய்திருந்ததால் வழக்கமாக இரவில் கூவும் பட்சி ஜாலங்கள் கூட அன்று கூவவில்லை. வருகிற உற்பாதத்தை உணர்த்த ஆந்தைகள் மட்டும் விபரீத ஒலிகளைக் கிளப்பின. எங்கேயோ ஓர் புலியின் உறுமல் ஒலி மட்டும் பயங்கரமாகக் கேட்டது.

இந்த எதையும் காதில் வாங்காமலே மரத்தடியில் உட்கார்ந்திருந்த விஜயனுக்கு மூர்சமதே உணவை எடுத்து வந்தான். ஆட்டு மாமிசத் துண்டுகள் இரண்டை மட்டும் உண்ட விஜயபாகு நீரை அருந்தி, ''சமத், நீயும் உணவருந்தி வா'' என்றான்.

எள்ளென்றால் எண்ணெயென நிற்கும் மூர்சமத் வெகு விரைவில் உணவை முடித்துக்கொண்டுவர, விஜயன் மூர்சமதுடன் புரவிகளில் ஏறி மெதுவாகக்கிழக்கு நோக்கிப் பயணம் செய்தான். சிறிது தூரம் பயணம் செய்த பிறகு உரையாடலைத் துவங்கி, ''சமத்! அநேகமாக இளையகேசதாது கதிராங்கனி கோட்டையில் இருப்பான்'' என்று சொன்னான்.

கதிராங்கனியா?'' என்று வியப்புடன் கேட்டான் மூர்சமத்.

''ஆம். குட்டசாலா கோட்டையைத்தான் நாம் தாக்குவோம் என்று எதிர்பார்ப்பான். ஆகவே அதற்குச் சற்றுத் தூரத்திலுள்ள

zeevaa

கதிராங்கனி கோட்டையில் இருப்பான். நாம் முற்றுகையிட்டாலும் ஒரு மாத காலமாவது தான் சமாளிக்கலாம் என்று நினைப்பான். ஆனால் அதில் ஒரு பலவீனமும் இருக்கிறது'' என்று சொன்னான் விஜயன்.

''என்ன பலவீனம் எசமான்? அதுதான் நல்ல பலமான கோட்டையாயிற்றே?'' என்று மூர்சமத் வினவினான்.

''கோட்டை பலமானதுதான். ஆனால் நாம் இருபுறமும் இருந்து தாக்கும்போது அதைப்பாதுகாப்பது கஷ்டம். தவிர நமது படைகள் சுற்றுப்புற கிராமங்களைத் தங்கள் அதிகாரத்தில் கொண்டு வந்து விட்டால் அந்தக் கோட்டைக்கு உணவு செல்வது கஷ்டம். பட்டினியால் பலவீனப்பட்டு வெளிவரும் படை போருக்கு உதவாது. வீண்நாசம், பயங்கர நாசம்தான் ஏற்படும்'' என்று கூறிக்கொண்டே புரவியைச் செலுத்தியவன் சட்டென்று நின்று ஏதோ சப்தத்தைக் கேட்டான்.

மூர்சமதின் காதிலும் அந்தச் சத்தம் விழவே, ''இது என்ன எசமான்?'' என்று வினவினான்.

''புரவிகள் நதியைக் கடக்கும் ஒலிகள் கேட்கின்றன'' என்றான் விஜயன்.

''மஹாவலி கங்கை அருகிலா இருக்கிறது?''

''ஆம்'' என்றதும் அந்தப் புரவிகளின் குளம்பொலிகள் வரவர அதிகமாகக் கேட்டதைக் காதில் வாங்கிய விஜயன், ''மூர்சமத்! நாம் காட்டின் மறைவில் இருப்போம். வருவது யாரென்று பார்ப்போம்'' என்று கூறி மரங்களின் அடர்த்திக்குப் புரவியைச் செலுத்தி நின்றான்.

நான்கைந்து புரவிகள் வெகு வேகமாக ஆற்றைக் கடந்தன. கரையேறியதும் காட்டுக்குள் நுழையவும் செய்தன. அந்த அரவம்

zeevaa

விஜயன் படையின் முன்னோடிகளின் காதுகளிலும் விழுந்திருக்க வேண்டும். அந்தக் காலாட்படையினர் மரங்களிலிருந்தபடி தங்கள் வில்களில் அம்புகளைப் பூட்டி முனையில் தீப்பற்ற வைத்து எய்தனர். பதிலுக்கு வந்த புரவி வீரர்களிடமிருந்து இரு எரிவாளிகள் ஆகாயத்தில் எய்யப்பட்டன.

அதைக் கண்ட விஜயபாகு, "சரி சரி! வருவது நண்பர்கள்தான்" என்று கூறிப் புரவியை முன்னால் நகர்த்தினான். தனது கச்சையிலிருந்த குறுவாளின்மீது கையை வைத்த வண்ணம் தனது புரவியையும் மூர்சமத் விஜயனுக்கு முன்பாக நடக்கவிட்டான். அவர்கள் புரவிகள் சென்ற சில விநாடிகளுக்குள் அவர்களை நோக்கி வந்த புரவிகள் திடீரென நிறுத்தப்பட்டு, பந்தங்கள் பளிச்சிட்டன. அந்தப் பந்தங்களின் முன்னிலையிலும் ஜேட்ட திஸ்ஸன் தனது புரவியில் காட்சியளித்தான். "மன்னர் எங்கே? நான் உடனடியாகப் பார்க்க வேண்டும்" என்றும் அறிவித்தான்.

மன்னன் தனது புரவியை முன்னால் செலுத்தி "ஜேட்டதிஸ்ஸா! என்ன விசேஷம்?" என்றும் வினவினான்.

விஜயனைக் கண்டதும் தலைவணங்கிய ஜேட்டதிஸ்ஸன் "பிரபு! தாங்கள் உடனடியாக இந்தக் காட்டிலிருந்து கிளம்பி மச்சுஸ்தலாவில் போர்ப்பாசறையை அமைக்க வேண்டும்" என்று கூறினான்.

"ருஹுணாவிலுள்ள நமதுபடைகள் என்னவாயின?" என்று விஜயன் கேட்டான்.

"நான் செய்தியனுப்பாமலே பற்பல கிராமங்களில் மறைந்து உறைந்த படைவீரர்கள் திரண்டு விட்டனர். பத்தாயிரம் வீரர்கள் மச்சுஸ்தலாவில் காத்திருக்கிறார்கள். உங்கள் பாசறை சித்தமாயிருக்கிறது" என்று கூறினான்.

zeevaa

இதனால் பெரும் மகிழ்ச்சிக்குள்ளான விஜயன், ''ஜேட்ட திஸ்ஸா! அந்தப் பத்தாயிரம் படைகளுக்கு நீயும் உன் சகோதரர் மூவரும் தலைமை வகியுங்கள். உன் சகோதரர்களில் ஒருவன் இளைய கேசதாதுவினால் கொல்லப்பட்டது உனக்குத் தெரியுமென்று நினைக்கிறேன்'' என்று சொன்னான்.

''கொன்றவன் என்ன ஆனான்?'' -வருத்தத்துடன் பிறந்தது ஜேட்டதிஸ்ஸனின் கேள்வி.

''நுவரகிரியிடம் ஒப்படைக்கப்பட்டான்'' என்று விஜயன் சொன்னதும் பெருமகிழ்ச்சி நிலவியது ஜேட்டதிஸ்ஸனின் முகத்தில்.

''நுவரகிரி'' என்று ஏதோ துவங்கினான் ஜேட்டதிஸ்ஸன்.

''உன் சகோதரனைச் சகல மரியாதைகளுடன் அடக்கம் செய்தார். அதற்கு முன்பு அவர் இளையகேசதாதுவின் ஒற்றனை...'' என்ற விஜயன் வேறெதுவும் பேசவில்லை. அவர் முகத்தில் விரிந்த வெறுப்பிலிருந்தே நுவரகிரி என்ன செய்திருப்பார் என்பதை ஊகித்துக்கொண்டே ஜேட்டதிஸ்ஸன் மேலே எதுவும் கேட்கவில்லை.

''நாங்கள் முன்னால் செல்கிறோம் மன்னவா! இன்றைக்கே நீங்கள் படைகளை மச்சுஸ்தலாவுக்கு அழைத்து வாருங்கள். அங்கு வந்ததும் உங்களுக்குப் பரிசுகள் வைத்திருக்கிறேன்'' என்று கூறிய ஜேட்டதிஸ்ஸன் மேற்கொண்டு எதுவும் சொல்லாமல் புரவிகளைத் திருப்பிக் கொண்டு சென்றான்.

விஜயன் மூர்சமதை நோக்கி, ''ஜேட்டதிஸ்ஸன் மர்மம் பேசுகிறான்'' என்றான்.

''அதை அங்கு சென்றதும் அறிவோம்'' என்றான் சமத்.

zeevaa

"எனக்கு ஏதும் புரியவில்லை" என்றான் விஜயன்.

புரிந்தபோது பெரும் பிரமிப்பை அடைந்தான். பிரமிப்பை மட்டுமா? விவரணத்துக்கும் அப்பாற்பட்ட சினத்தையும் அடைநதான்.




zeevaa

# 41. காத்திருந்த பரிசுகள்

ஜேட்டதிஸ்ஸன் சொன்ன அன்றிரவே படைகள் புறப்பட உத்தரவிட்ட விஜயபாகு, திஸ்ஸன் திட்டத்தில் சில அனுகூலங் களிருப்பதைப் புரிந்து கொண்டான். குட்டசாலாவுக்கு நேராகச் சென்றால் மாவலி கங்கையின் ஒரு கிளையைத் தாண்ட வேண்டுமாகையாலும் மச்சுஸ்தலாவில் பாசறை அமைத்தால், அந்தக்கிளை நதிக்குக்கீழே பயணம் செய்து தெற்கிலிருந்து வடக்காகக் குட்டசாலகாவைத் தாக்குவது சுலபமென்பதை அறிந்து கொண்டான். இரண்டு நாள் பயணத்துக்குப் பிறகு அவன் மச்சுஸ்தலாவை அடைந்தபோது அங்கு பலமான பாசறை ஏற்கனவே அமைக்கப்பட்டிருப்பதைக் கண்டு ஜேட்டதிஸ்ஸனை மனத்துள் பெரிதும் பாராட்டினான். இத்தகைய முன்யோசனையுள்ள படைத் தலைவர்களிருக்கும்போது, தான் சிங்களத்தை வெற்றி கொண்டு, அதைச் சோழர்கள் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கா விட்டால், அது தன் குறையே தவிர, படைத்தலைவர்கள் குறையோ மக்கள் குறையோ ஆகாதென்று சிங்கள இளவல் எண்ணினான்.

அத்தகைய எண்ணத்தாலும் மச்சுஸ்தலா இருந்த நிலையாலும் பேருவகை எய்திய விஜயபாகு, மூர்சமதுடன் அந்த மாநகரத்துக் குள் பிரவேசித்தான். மச்சுஸ்தலா சமவெளியாயிருந்தாலும் அதனருகே பல குன்றுகள் இருந்தபடியால் பெரும் பாதுகாப்புடன் காணப்பட்டது.

அந்த மலை வட்டாரத்துக்குள் ஜேட்டதிஸ்ஸனின் பெரும்படை பாசறை அமைத்திருந்ததைப் பார்த்துத் தன்னுடன் வந்த படையை

zeevaa

அந்தப் படையுடன் கலக்கவிடாமல், இரண்டுக்கும் இடையே அரைக்கால் காதம் இடம் விட்டே தான் அழைத்து வந்திருந்த படையை இருக்கச் செய்தான். அவன் படை வந்து மச்சுஸ்தலாவின் சமவெளியில் புகுந்ததும் அதை வரவேற்கச் சித்தமாக நின்றிருந்த ஜேட்டதிஸ்ஸன், "சிங்கள மன்னர் வாழ்க!" என்று விருது கூற, மற்ற உபதலைவர்கள் அந்த வாழ்த்துடன் கலந்து கோஷிக்க மன்னரைத் தலைவணங்கி வரவேற்றான். அங்கு மன்னன் படைகள் இரண்டாவது பாசறை அமைத்தபின், ஜேட்டதிஸ்ஸன் மன்னனை நகருக்குள் அழைத்துச் சென்றான், அப்பொழுது கேட்டான் சிங்கள இளவல், "ஜேட்டதிஸ்ஸா, எனக்கு ஏதோ பரிசு இங்கு வைத்திருப்பதாகச் சொன்னாயே?" என்று.

ஜேட்டதிஸ்ஸன் மீண்டும் மன்னனுக்குத் தலைவணங்கி, "பரிசுகள் என்று சொல்லுங்கள் மன்னவா. மன்னர் குலத்தாருக்கு எதிலும் ஒற்றைவிகுதி உதவாது," என்று சொல்லி, "முதலில் தங்கள் பாசறையைப் பார்வையிடுங்கள். கிராமங்களிலிருந்து பெருவாரி யாகத் திரண்டு வந்திருக்கும் தங்களுக்காக உயிரைத்தியாகம் செய்யச் சித்தமாயிருக்கும் உங்கள் குடி மக்களைப் பாருங்கள்," என்று கூறி, மன்னனை அழைத்துச் சென்றான்.

விஜயன் அன்றைய பாதிப் பொழுதை ஆங்காங்கு தங்க வைக்கப்பட்டிருந்த படைகளைப் பார்வையிடுவதில் செலவிட் டான். புரவிகளும் புரவி வீரர்களும் வரிசை வரிசையாகத் தங்கியிருந்த பல படை வரிசைகளூடே பயணம் செய்து பார்வையிட்ட விஜயன், தாம்பலகிராமத்திலிருந்து அழைத்து வந்த படைப் பிரிவையும் பார்வையிட்ட பிறகு அஸ்தமன சமயம் வந்ததால், மூர்சமதுடன் ஜேட்டதிஸ்ஸன் அழைத்துச் சென்ற மச்சுஸ்தலாவின் குடியிருப்பிருந்த பகுதிக்குச் சென்று ஒரு மாளிகையில் தங்கிச் சுற்றும் முற்றும் பார்த்தான்.

zeevaa

''தாங்கள் தங்கவேண்டிய இடம் அந்த மலையடி வாரத்தில் சற்று ஏற்றமான இடத்திலிருக்கிறது. அந்த இடத்திலிருந்தால் தங்களது இருபாசறைகளும் நன்றாகப் புலப்படும்,'' என்று ஒரு சிறு மாளிகையை ஜேட்டதிஸ்ஸன் காட்ட அதை நோக்கி மூர்சமதுடன் சென்றான் விஜயன்.

மாலை முதிர்ந்துவிட்டபடியால் அந்த இரு பாசறைகளிலும் பந்தங்கள் சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்தன. இரண்டு பாசறைகளுக்கும் இடைவெளியிருந்ததால் பந்தச் சுடர்க் கூட்டங்கள் தனித் தனியாகத் தெரிவதைக் கண்டு தான் தங்கவும், படைகளுக்கு உத்தரவிடவும் அதைவிடச் சிறந்த இடம் கிடைக்காது என்று நினைத்த விஜயபாகுவின் வதனத்தில் மகிழ்ச்சிச் சாயை படர்ந்தது. இரவு மெள்ள உட்புகுந்த சமயத்தில் மூர்சமத் உள்ளே வந்து உத்தரவு ஏதாவது உண்டா என்று விசாரித்தான்.

சற்றுச் சிந்தித்தான் விஜயன், பிறகு மூர்சமதை நோக்கி, ''மூர்சமத், நீ தாம்பலகாமா படைகளின் பாசறையில் தங்கு. எனது உத்தரவுகளை நிறைவேற்ற அதுசௌகரியமாயிருக்கும்,'' என்று அவனை அனுப்ப முயன்றான்.

''நான் போய்விட்டால் தங்களுக்கு மெய்க்காவலன் யார்?'' என்று கேட்டான் மூர்சமத் கவலை துலங்கிய குரலில்.

''இங்கு நம்மைச் சுற்றிலும் நமது படைவீரர்கள் தானே இருக்கிறார்கள்? இங்கு எனக்கு மெய்க்காவலன் எதற்கு?'' என்று வினவினான்.

''எசமான், இந்த மூர்சமதின் ஒரே நோக்கம் தங்கள் உடலைக் காப்பதுதான். உங்களுக்கு எந்தத் தீங்கும் நேரிடாமல் பாதுகாப்பதுதான் எனது வாழ்க்கையின் லட்சியம். எந்தப் படைக்கும் தலைவனாயிருக்க நான் விரும்பவில்லை. அதற்கு வேறு

zeevaa

யாரையாவது நியமித்துக் கொள்ளுங்கள்,'' என்று திட்டமாகக் கூறிவிட்டான்.

''எனக்கு இங்கு என்ன தீங்கு நேரிடும்?'' என்று விஜயன் வினவினான் அன்பு கொட்டிய குரலில்.

''எசமான்! மன்னனுக்கு எந்த விதத் தீங்கு யாரிடமிருந்து எந்தச் சமயத்தில் ஏற்படுமென்று சொல்ல முடியாது. அதனால்தான் பழைய காலத்திலிருந்து மன்னர்கள் மெய்க்காவலர்களை வைத்திருந்தார் கள்,'' என்று சுட்டிக் காட்டினான் மூர்சமத்.

''மெய்க்காவலனால் தீங்கு வராதா?'' -விஜயன் இதைப் புன்முறுவலுடன் கேட்டான்.

''நேராது. இதுவரை மெய்க்காவலர் யாரும் எந்த மெய்யைக் காப்பாற்ற வேண்டுமோ அதற்குத் தீங்கு விளைவித்ததாக வரலாற்றில் கிடையாது. இனிமேல் உண்டானால், அது ராஜபக்தி வைராக்கியத்தையே உடைக்கும் ஈனச் செயலாகும்'' என்று உறுதியாகச் சொன்ன மூர்சமத், அந்த அறையிலிருந்து விலகி வாயிலுக்குச் சென்றுவிட்டான்.

மூர்சமதின் இணையிலா அன்பைக் கண்டு விஜயன் பெரிதும் மனமகிழ்ச்சிக்குள்ளானான். ''இப்படி ஒருவன் கிடைத்ததே சிங்களமகுடம் கிடைத்த மாதிரிதான். சிங்கள மகுடம் இத்தனை சிறப்பு வாய்ந்ததல்ல'' என்று உள்ளதுக்குள்ளே பெருமைப்பட்டும் கொண்டான்.

மூர்சமதை நினைத்ததால் அவனுக்கு வேறு எண்ணங்கள் எதுவும் நினைப்பில் ஏறவில்லையாதலால் நேரம் போவது தெரியாமல் சாளரத்தின் மூலம் படைத்தளங்களை நோக்கிக் கொண்டே இருந்தான். உணவைக்கூட நினைக்காமலே நேரத்தை ஓட்டிக் கொண்டிருந்தபோது உணவுத் தட்டுகளையும் இரண்டு

zeevaa

முக்காடிட்ட அடிமைகள் ஏந்தி வந்தார்கள். அவர்கள் யாரென்பதை விசாரிக்காமலே உணவை உண்ட விஜயன், அவர்கள் தட்டுக்களை வெளியே யாரிடமோ கொடுக்க, அவர்கள் வாங்கிச் சென்றார்கள். "சரி, நீங்கள் போகலாம்," என்று மன்னன் உத்தரவு கொடுத்ததும் அவர்கள் போகவில்லை. அவர்கள் முக்காடு மூடிய முகங்களையும் உடல்களையும் பார்த்த விஜயன், அவர்கள் மூர் ஜாதிக்காரர் களாக இருக்கலாமென்று, "ஏன்?" என்ன தயக்கம்?" என்று விசாரித்தான்.

"ஜேட்டதிஸ்ஸன் அனுப்பியிருக்கிறார்," என்றது ஓர் உருவம் கரகரத்த குரலில்.

"உங்களுக்குப் பரிசுகளை அனுப்புவதாகச் சொன்னாராம். அதற்காக அனுப்பியிருக்கிறார்," என்றது இன்னொர் உருவம் அதிகமாகக் கரகரத்த குரலில்.

விஜயனுக்குச் சிந்தனை போரிலும் படைத்தளத்திலும் இருந்ததால், "சரி, சரி; பரிசுகளை அங்கீகரித்துவிட்டோம். நீங்கள் போய் மூர்சமதிடம் சொன்னால் அவன் உங்களுக்கு ஓர் அறை ஒதுக்கி விடுவான்," என்று கூறி அவர்களை வெளியே செல்லக் கையால் சைகை செய்தான்.

அந்த இருவரும் அதற்கும் அசையவில்லை. "இந்த அறையே எங்களுக்குப் போதும்," என்றது ஒரு முக்காடு.

"நாங்கள் வேறெங்கும் தங்க உத்தேசமில்லை," என்றது இன்னொரு முக்காடு.

அடுத்த வினாடி இரண்டே எட்டில் அவர்களை நெருங்கிய விஜயன் அந்த முக்காடுகளோடு அவர்கள் உடலைச் சுற்றி மறைத்திருந்த உறையையும் களைந்து விடவே, முக்காட்டுக் குள்ளிருந்த மோகினிகளிருவரும் மெல்ல இன்பமாக நகைத்தனர்.

zeevaa

தன் எதிரே நின்ற திரிலோகசுந்தரியையும் சுடர்விழியையும் கண்ட விஜயன் அவர்களின் அன்புச் சிரிப்புக்குப் பதில் உக்கிரத்தைக் காட்டினான். ''உங்களை யார் இங்கு வரச்சொன்னது? நுவரகிரி எப்படி உங்களை மகாநாககுலாவிலிருந்து வெளியே அனுப்பி னார்?'' என்று சீற்றத்துடன் கேள்விகளைத் தொடுத்தான்.

அவன் முகத்தில் துளிர்த்த சீற்றத்தைக் கண்டு இரு மங்கையருமே திகைத்தார்கள். நுவரகிரியை ஏமாற்ற முடியாததால், அவர் படையுடன் மகாநாககுலாவிலிருந்து கிழக்கே சென்றதும், தாங்கள் மாளிகைக் காவலரை ஏமாற்றி மகாநாககுலாவிலிருந்து புறப்பட்டதும், சில வில்லவரின் துணைகொண்டு ஜேட்டதிஸ்ஸன் படைத்தளத்துக்கு வந்ததும், மன்னரைத் தாங்கள் எதிர்பாராத விதமாகச் சந்திக்கப் போவதாகச் சொல்லி அவனையும் கைக்குள் போட்டுக் கொண்டதும், மன்னனுக்குத் தெரிந்தால் அவன் சீற்றம் இன்னும் அதிகப்படுமென்பதை அறிந்ததால் இருவரும் பிரமிப்பும் அச்சமுமே அடைந்தார்கள். அதன் விளைவாக மௌனமே சாதித்தார்கள்.

அவர்களை நெருங்கி இரு கைகளாலும் பிடித்து உலுக்கிய விஜயன், ''முட்டாக்கு மோகினிகளே! நீங்கள் வந்த வழியே வந்த இடத்துக்குப் போய் விடுங்கள். எந்த நேரத்திலும் இங்கு கடும்போர் நிகழலாம். அந்த சமயத்தில் உங்களை என் காலில் கட்டிக்கொண்டு நான் திண்டாட முடியாது,'' என்று கூறினான்.

திகைத்த இரு மங்கையரில் சுந்தரியே முதலில் அவனை ஏறெடுத்து நோக்கினாள். ''கணவனிருக்கும் இடத்தில் கற்புடைய மங்கையர் இருப்பதுதான் தர்மம்,'' என்றாள்.

''எதற்கும் இடமுண்டு. நாம் கூடிக் குலாவப் போர்ப் பாசறை அல்ல இடம்,'' என்று சினம் சற்றும் தணியாத குரலில் கூறிவிட்டு, ''சமத்! சமத்!'' என்று அழைத்தான்.

zeevaa

சமத் வந்ததும், ''எனது ராணிகள் இருவரையும் ஜேட்டதிஸ்ஸ னிடம் ஒப்படைத்து இவர்களுக்குத் தகுதியான இடம் கொடுக்கச் சொல். பாசறைக்குள் இவர்கள் நுழைவதைத் தடுக்கும்படி நான் உத்தரவிட்டதாகச் சொல்,'' என்று கூறிக்கொண்டிருக்கையிலேயே ஜேட்டதிஸ்ஸன் தலையை நீட்டினான்.

விஜயனின் உக்கிரத்தைக் கண்டு திறந்த வாயிற் கதவுக்கு அருகிலேயே பிரமித்து நின்றான். தனது மர்மப் பரிசுகளைக் கண்டு மன்னன் மகிழ்வாரென்று நம்பி வந்த ஜேட்டதிஸ்ஸன் தனது எதிரில் பிரளயகால ருத்திரன் போல் மன்னனிருப்பதைக் கண்டு சட்டென்று பின்வாங்கினான். அதே சமயத்தில் சுந்தரியும் தனது தீவிழிகளை மூர்சமதின் மீது திருப்பி, ''போ வெளியே!'' என்று உத்தர விட்டாள்.

உத்தரவைக் காதில் வாங்கவில்லை மூர்சமத். நின்ற இடத்தை விட்டு நகரவும் இல்லை. அறையின் அந்தக் கொந்தளித்த நிலையில் மூர்சமதின் குரல் இரும்புச் சலாகையென ஒலித்தது. ''ராணிகளே! மன்னர் உத்தரவை மீற முயலாதீர்கள்'' என்று கூறினான்.

''நீ யார் எங்களுக்கு உத்தரவிட?'' என்றாள் சுடர்விழி.

''மன்னரின் மெய்க்காவலன்!'' இதைச் சந்தேகத்துக்கு இடமின்றிச் சொன்னான் சமத்.

''நாங்களிருக்கும்போது நீ கூட இருப்பாயா?''

''அதைத் தீர்மானிப்பது மன்னரைப் பொறுத்தது,'' என்றான் சமத்.

மங்கையர் இருவரும் வெட்கத்தாலும் மன்னன் தங்களை மூர்சமதின் முன்பாக அவமானப்படுத்தியதாலும் தலை குனிந்து

zeevaa

நின்றார்கள். இருவர் உடல்களும் உணர்ச்சி மிகுதியால் ஆடின. உணர்ச்சிகளின் மிகுதியால் சுந்தரியின் தலை சுற்றியது. மயக்கமுற்று விழப்போன சுந்தரியைச் சுடர்விழி தாங்கிப் பிடித்தாள்.

அப்பொழுது விஜயன் இருந்த இடத்திலிருந்து நகரவில்லை. மூர்சமதும் வாயிலை நோக்கித் திரும்பவில்லை.



# 42. வீர மகாதேவி

கணவனைக் காணும் ஆசையுடன் வந்து அவனால் சீற்றத்துடன் மூர்சமதின் முன்பாகவும் ஜேட்டதிஸ்ஸன் முன்பாகவும் அவமானப் படுத்தப்பட்டதன் விளைவாக, ஆசை நிராசையாகி உணர்ச்சிகள் கொந்தளித்த காரணத்தால், சுடர்விழி சிறிது நிலைமையைச் சமாளித்துக் கொண்டாலும், கலிங்க ராஜகுமாரி அதைத் தாங்க முடியாமல் மயக்கமுற்றுச் சாய்ந்தபோது சுடர்விழியே அவளைத் தாங்கிப் பிடித்தாள். அப்பொழுதும் விஜயன் தங்களை நோக்கி நகராமலும் கோபம் சிறிதும் தணியாமலும் நிற்பதைக் கண்ட சுடர்விழியும் சீற்றம் மிகக் கொண்டு, "மகாராஜா! உங்களை நம்பி நாட்டைவிட்டு நாடு வந்து இடையில் எத்தனையோ அல்லல்களை அடைந்த இந்த அரச குமாரியிடம் உங்கள் பௌருஷத்தைக் காட்ட உங்களுக்கு வெட்கமாயில்லை? உங்கள் மனம் இரும்பா, கல்லா?" என்று வினவினாள், சொற்கள் தீப்பொறிகளென வெளிவர. அவள் சுடர்விழிகளும் சுடுவிழிகளாக காட்சியளித்தன.

அப்படி வினா எனும் கணை தொடுத்த சுடர் விழியை நோக்கிய விஜயன் அவள் கண்களும் சொற்களைப் போலவே சுடர்வீசி, சுட்டுவிடுவதுபோல் பார்த்தும், நின்ற இடத்தைவிட்டு இம்மிகூட அகலாதவனாய், சுடர்விழி! உங்களை மகாநாககுலாவிலிருந்து வெளியேற அனுமதிக்க வேண்டாம் என்று நுவரகிரியிடம் உத்தரவிட்டு வந்தேன். அவரை மீறி அவரை ஏமாற்றித்தான் நீங்கள் இங்கு வந்திருக்க வேண்டும். இந்த இடம் ராணிகளோடு குலாவும் அந்தப்புரமல்ல. நாசத்தை விளைவிக்க, போரில் ஈடுபட, எந்த

zeevaa

விநாடியும் சித்தமாயிருக்கும் பாசறை. இங்கு நீங்கள் வந்ததால் முதலில் கணவன் கட்டளையை மீறிய குற்றத்தைச் செய்தவர் களாகிறீர்கள். இரண்டாவதாக, போர் மத்தியில் உங்களைக் காக்கும் பொறுப்பையும் கணவன் மீது சுமத்தியவர்களாகிறீர்கள். இந்த இரண்டு குற்றங்களுக்கும் என்ன தண்டனை?'' என்று வினவினான்.

அப்படி வினவியபோது அவன் குரலில் பரிதாபம் சிறிதும் இல்லை. உடல்கூடச் சிறிதும் அசையவில்லை. சாளரத்தருகே செங்குத்தாகப் படைத்தலைவனாகவே நின்றான். சுடர்விழி அவன் இரக்கமற்ற தோற்றத்தையும் கம்பீரத்தையும் கண்டு, நாடு என்று வரும்போது விஜய பாகுவும் இரக்கமற்ற ராட்சதன்தான் என்று தீர்மானித்தாலும் அவள் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. தான் கையில் தங்கிப் பிடித்திருந்த கலிங்க ராஜகுமாரியின் முகத்திலிருந்த வியர்வையைத் தனது முந்தானையால் துடைத்தாள். வலுவான அவள் கைகள் சுந்தரியின் பூவுடலை நன்றாக இழுத்துத் தன் உடலுடன் அணைத்துக்கொண்டன. பிறகு சற்றுத் தலையை மட்டும் திருப்பிப் பின்னால் உணர்ச்சியற்று நின்றிருந்த மூர்சமதை நோக்கி, ''சமத்! கப்பலில் நீ உயிருக்கு மன்றாடியசமயத்தில் இந்த அரசகுமாரி உனக்குப் பணிவிடை செய்ததாகக் கேள்விப் பட்டேன். நீ அரசரின் மெய்க்காவலனாக இருக்கலாம். ஆனால் கல்நெஞ்சம் படைத்த கயவனாக இருக்க முடியாது. துவண்டு விழுந்த இந்தப் பூங்கொடியைத் தாங்கிப் பிடிக்கக்கூட உன்மனத்தில் ஈர மில்லையா?'' என்று சீறினாள். பிறகு திரிலோகசுந்தரியைப் பிடித்த வண்ணம் அந்த அறையின் தரையில் உட்கார்ந்தாள். தனது முந்தானைத் தலைப்பால் சுந்தரியின் முகத்தில் சிறிது விசிறினாள். அப்படி விசிறிக்கொண்டே விஜயனை ஏறெடுத்து நோக்கி, ''மகாராஜா! போரிடும் இடங்களில் பெண்கள் கூடாதல்லவா?'' என்று கேட்டாள்.

zeevaa

விஜயன் மனம் பெரும் சங்கடத்தில் இருந்தது. மெள்ள ஏதோ உறுமினான். "ஆம். அதில் சந்தேகமிருக்கிறதா உனக்கு?" என்று மெதுவாக வினவவும் செய்தான்.

"சந்தேகமிருக்கிறது மகாராஜா! சண்டையும் சரசமும் ஒன்று சேராதென்றால் அந்தப் பாழடைந்த மண்டபத்தில் என் முதுகில் உங்கள் போர்த்திட்டக் கோடுகள் பதிந்ததை பார்த்து ஏன் மயங்கினீர்கள்? சிற்பியைக் கலிங்கத்தில் தேடப்போன நீங்கள் இந்த கலிங்க ராஜகுமாரியை ஏன் அழைத்து வந்தீர்கள்? சிற்பியை அழைத்து வந்து கப்பல்களைக் கட்டி விடுதலைப்போர் முடிந்து இந்த நாட்டு மக்கள் விடுதலையடைந்த பின் அல்லவா திருமணத்தைப் பற்றிச் சிந்தித்திருக்க வேண்டும்? அங்குள்ள எவ்வளவு சண்டை சச்சரவுகளில் இந்த ராஜகுமாரி தலையிட்டிருப் பாள்? எல்லாவற்றையும் கேள்விப்பட்டேன் மகாராஜா. உங்களுக்கு அவசியமானபோது பெண்கள் வேண்டும். தேவையில்லாதபோது உதறிவிடுவீர்கள். இதுதான் உங்கள் மனித நீதியா?" என்று மிகமெதுவாகவும் கசப்புத் தொனிக்கும்படியாக வும் பேசினாள் சுடர்விழி.

அவள் பேசிய எதற்கும் பதில் சொல்லக்கூடிய நிலையில் தான் இல்லையென்பதை விஜயன் உணர்ந்தான். சுடர்விழியின் சொற்களில் நியாயம் இருப்பதும் அவனுக்குப்புலப்பட்டது. இருப்பினும் சொன்னான்: "சுடர்விழி நியாயத்தில் இருவிதம் உண்டு. சாதாரண நியாயம், அசாதாரண நியாயம் என்ற இருவகை நியாயங்களில் நீ சொல்வது முதல்வகை நியாயம். போர்க்கால நியாயம் வேறு. இங்கு யுத்த சன்னத்தமும் கொலையும் நாசமுந்தான் நியாயம். பௌத்தனான நான் போரிடுவதும் உயிர்வதை செய்வதும் மதப்படி நீதி அல்ல. ஆனால் மதத்தின் அடிப்படையில் வாழ்க்கையை யாரும் நடத்த முடியாது. மதத்துடன் உலக க்ஷேமத்தையும் மன்னன் கவனிக்க வேண்டியிருக்கிறது. பெருவாரியான மக்களின் நலனுக்காக, அவர்களின் அடிமைத்

தளைகளைத் தவிர்ப்பதற்காகப் போர் எனும் இந்தச் சேதத்துக்கு நான் உடன்பட்டேன். இல்லையேல், நான் கலிங்கம் செல்ல அவசியமில்லை. கலிங்கம் செல்லாதிருந்தால் இந்த அரசகுமாரி யையும் சந்தித்திருக்க மாட்டேன். வாழ்க்கையின் தொடர்ச்சியான பிணைப்புகள் நாம் நாடுவதல்ல. அவை தாமாகவே வருகின்றன'' என்று சொல்லிப் பெருமூச்சும் விட்டான்.

சுடர்விழி மெதுவாகக் கோபம் துளிர்க்க நகைத்தாள். ''மன்னவா! வேதாந்தம் பேசுகிறீர்கள். நீங்கள் துறவியாவதுதான் சரி. எங்களாலும் துறவறம் மேற்கொள்ள முடியும். போதிசத்வர் மதத்தில் பிக்ஷுக்களுடன் பிக்ஷுணிகளும் உண்டு. அதுமட்டுமல்ல மன்னவா! நான் இஷ்டப்பட்டால் உங்கள் படையை இப்பொழுதே இரண்டாகப் பிளந்து விடுவேன். இங்கு அம்புக்குறி தவறாது எய்யும் என் இனக் குறவர்களுக்கு நான் இட்டது தான் சட்டம். அந்த வேட்டுவருக்கு என் வார்த்தைதான் சட்டம். நான் வெளியே சென்று ஒரு குரல் கொடுத்தால் அத்தனை வில்லவரும் பிரிந்து நிற்பார்கள், என் தலைமையில் போரிடுவார்கள். உங்களைப்போல் என் மனத்தில் இரக்கமற்ற அரக்க இச்சை இருந்தால் அதை நானும் செய்வேன். ஆனால் உங்களை மணந்த தோஷம் அதைச் செய்ய மனம் இடம் தரவில்லை'' என்று கூறிவிட்டுக் குனிந்து, ''அக்கா! அக்கா!'' என்று இருமுறை சுந்தரியை அழைத்தாள்.

சுந்தரி மெள்ளக் கண்விழித்தாள். சுற்றுமுற்றும் மிரளமிரளப் பார்த்தாள். எதிரே நின்ற மன்னவனைப் பார்த்தாள் ''ஓகோ! சிங்களத்தின் படைத்தலைவரா?'' என்று வெறுப்புடன் கூறினாள். மயக்கம் தீர்ந்துவிடவே மெதுவாக எழுந்து, ''வா சுடர்விழி! இங்கு நாம் தேவைப்படவில்லை. வந்த வழியே போய்விடுவோம்'' என்று கூறி உட்கார்ந்தாள். பிறகு சுடர்விழியின் தோளைப் பிடித்த வண்ணம் எழுந்து நின்றாள். சுடர்விழி சுந்தரியின் தோளைப் பற்றி நின்றாள்.

zeevaa

எழுந்த சுந்தரிக்கும் விழுந்த சுந்தரிக்கும் வித்தியாசம் நிரம்ப இருந்ததை விஜயன் கவனித்தான். பரஸ்பரம் தோளைப் பற்றி நின்ற அந்த இருவரும் வீராங்கனைகளாக காணப்பட்டதைக் கண்ட விஜயன் பார்வையிலும் சிறிது சலனம் ஏற்பட்டது. தலையை நிமிர்ந்து நின்ற திரிலோக சுந்தரியின் கம்பீரத்திலும் ஒரு தனிப்பட்ட அழகு இருந்தது. "மன்னவா! போர் எங்கள் நாட்டுக்கு புதிதல்ல. தவிர என் தந்தை அடிக்கடி சோழர்களால் துரத்தப்படவும் இல்லை. போர் முறைகள் அத்தனையையும் நானும் பயின்றிருக்கிறேன். நான் பயிலாதது ஒன்று. ஆண்மக்களின் இதயத்தைத்தான் நான் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. என்னாலும் போரிட முடியும் மன்னவா..." என்று வெறுப்பு மிகுந்த குரலில் கூறினாள்.

தோளோடு தோள் பற்றி அக்கம் பக்கத்தில் நின்றிருந்த இந்த இரு வீரப் பெண்மணிகளையும் விஜயன் ஏறெடுத்துப் பார்க்கவும் அஞ்சினான். அப்பொழுது ஒலித்தது சுடர்விழியின் குரல். "அக்கா! உன் பெயரைச் சிறிது மாற்றிக் கொள்," என்று.

சுந்தரி அவளைத் திரும்பி நோக்கி, "பெயர் மாற்றமா சுடர்விழி? எப்படி மாற்றலாம்?" என்று வினவினாள்.

"அக்கா, உன்னை விஜய மகாதேவி என்றுதான் நினைத்தேன் இன்றுவரை. இப்பொழுது..." என்று இழுத்தாள் சுடர்விழி.

"இப்பொழுது, சொல் சுடர்விழி" என்றாள் சுந்தரி.

"வீர மகாதேவியாகக் காட்சியளிக்கிறாய். இந்த நாட்டு அரசர்களின் வீரத்தை இதுவரை பார்த்தோம். சதா சோழர்களிடம் தோல்வியும் ஓட்டமுந்தான் இவர்கள் வீர சரிதம். இனி வீர மகாதேவி இந்த நாட்டு விடுதலைப் பொறுப்பை மேற் கொள்ளட்டும்," என்று கூறினாள்.

தனது ராணிகள் இருவரின் சீற்றமும், மூர்சமத் முன்பாக அவர்கள் தன்னைப் படுத்திய அவமானமும் கலங்காத விஜயன்

zeevaa

இதயத்தையும் கலக்கியது. அவர்களை நோக்கிய அவன் கண்கள் வெளியே படைகளை நோக்கின. ஏதேதோ வேல்கள் அவன் இதயத்தில் பாய்வது போன்ற பிரமை ஏற்பட்டது விஜயபாகுவுக்கு. தனது மூர்க்கத்தனத்தில் தான் அத்துமீறிப் போய்விட்டதாகக் கூட ஓர் எண்ணம் துளிர்த்தது அவன் புத்தியில். அசைந்த இதயம் உடலையும் உணர்ச்சிகளையும் லேசாக அசைத்தது. மீண்டும் ஒருமுறை இருந்த இடத்தை விட்டு அசையாமல் ஒருத்தியின் தோள்மீது இன்னொருத்தி கையைப் போட்டுக் கொண்டு நின்ற அந்த இரு பெண்மணிகளின் கண்களில் அனல் பறப்பதைக் கண்ட விஜயன், அந்த நிலையிலிருந்து எப்படி மீள்வது என்று தெரியாமல் கலங்கினான். அந்த இரு பெண்மணிகளில் சுடர்விழியே பேசினாள். ''மகாராஜா! என்ன உத்தரவு எங்களுக்கு? போர்ப் பாசறையில் நாங்கள் தங்கவா? வந்த வழியே திரும்பிச் செல்லவா? திட்டமாகச் சொல்லுங்கள்,'' என்று.

''ஆம் சொல்லுங்கள்,'' என்றாள் திரிலோகசுந்தரி. இம்முறை அவள் சொல்லில் மகாராஜா என்ற வார்த்தை கலக்கவில்லை· யென்பதை விஜயன் கவனித்தான். அவள் சீற்றத்துக்குக் காரணம் அவனுக்குப் புரிந்தது. இருப்பினும் மெதுவாக உறுதியை வரவழைத்துக் கொண்டு, ''வந்த வழியே செல்வதில் ஆபத்து இருக்கிறது,'' என்று மென்று விழுங்கினான்.

''அதைப்பற்றி உங்களுக்கென்ன?'' என்று சுடர்விழி கேட்டாள்.

அதற்கு நேர்முகமாகப் பதில் சொல்லவில்லை விஜயன். ''இங்கு நமது படைத் தலைவர்கள் இருக்கிறார்கள். நீங்கள் ஜேட்டதிஸ்ஸனிருக்குமிடத்தில் தங்கலாம். இல்லையேல் மூர்சமதுடன் தங்கலாம். அதற்கெல்லாம் ஏற்பாடு செய்யப்படும்,'' என்று விஜயன் சொன்னான்.

zeevaa

அப்பொழுது சுந்தரி முழு சுய உணர்வை அடைந்து விட்டதால் வெறுப்பு ஒலித்த குரலில், "மகாராஜா! நீங்கள் ராமாயணத்தைத் திருப்பிப் படிக்கிறீர்கள்," என்றாள்.

"திருப்பிப் படிக்கிறேனா?" வியப்பு இருந்தது விஜயன் குரலில்.

"ஆம். மகாராஜா! இராவணனை வெற்றிகொண்ட பிறகு வந்த சீதையை ராமன், 'நீ எங்கு வேண்டுமானாலும் போ. விபீஷணனிடம் தங்கு. இல்லாவிட்டால் சுக்கிரீவனிடமோ பரதனிடமோ போ' என்று நீதிக்குப் புறம்பாக பேசினான். நீங்கள் இன்னும் வெற்றியைக் காணாமலே பேசுகிறீர்கள். அந்த விதத்தில் நீங்கள் ராமனை மிஞ்சி விட்டீர்கள்," என்ற சுந்தரி திரும்பி, "டேய் மூர்சமத்! வெளியே போ," என்று உத்தரவிட்டாள். அவன் போகாததால் "முடிந்தால் என் எசமானன் உடலைக்காப்பாற்று," என்று கூறிக்கொண்டே விஜயனை நோக்கி நடந்தாள். சுடர்விழியும் அவள் பக்கத்தில் சென்றாள்.

இரண்டு பெண்களும் உறுதியுடன் தன்னை நோக்கி வருவதைக் கண்ட விஜயன் சற்று நிலை தடுமாறினான். அவர்கள் மூர்சமத் இருப்பதைப் பற்றி அக்கறை சிறிதும் காட்டாமல் தன்னை நோக்கி மூர்க்கத்தனமாக வருவதைக் கண்டு சாளரத்தின் மூலம் ஏறிக் குதித்து விடலாமா என்று நினைத்தான். பிறகு அது தனது ஆண்மைக்கு அழகல்ல என்று நினைத்து, "நில்லுங்கள் அப்படியே. அருகே வராதீர்கள்," என்று அதட்டினான்.

அந்த அதட்டலில் வலுவில்லாததைக் கண்ட இரு பெண்மணிகளும் நேராகச் சுவர்போல் அவனை அணுகி விட்டதைக் கண்ட மூர்சமத் சட்டென்று தலைகுனிந்து வாயிற்படிக்கு வெளியே சென்று கதவை மூடிவிட்டான். அடுத்துச் சாளரக் கதவுகள் தடாலென மூடப்படுவதையும் உள்ளே பெரும் ரகளை நடந்து கொண்டிருந்ததற்கான ஒலிகள் கேட்டதையும் கவனித்த மூர்சமத்

zeevaa

என்ன செய்வதெனத் தெரியாமல் திகைத்த சமயத்தில் உள்ளே இரண்டு வீர மகாதேவிகளின் பிடியில் சிங்கள மகாராஜா தத்தளித்துக் கொண்டிருந்தார், ''பிசாசுகளே! விடுங்கள் என்னை'' என்று மன்னன் கூறியதுமட்டும் அவன் காதில் விழுந்தது. உள்ளே பிரளயம் துவங்கி விட்டதை அவன் மட்டுமல்ல ஜேட்டதிஸ்ஸனும் உணர்ந்தான்.



zeevaa

# 43. மாதரும் மந்திராலோசனையும்

மாறுபட்ட ஆனால் மனத்தை ஈர்க்கும் சக்தியில் ஒன்றுபட்ட இரு அழகிகளும், தன்னை நோக்கி அச்சத்தை அறவே உதறி, உறுதியான நடையுடனும் திடசித்தத்துடனும் வருவதைக் கண்டதுமே அதுவரையில் காட்டிய உறுதியைக் கைவிட்ட சிங்கள இளவல், "அங்கேயே நில்லுங்கள்!" என்று கூவியும் அவர்கள் நிற்காததைக் கண்டு சிறிது பின்னடையவே செய்தவன், பின்னால் சுவரால் தடுக்கப்பட்டு நின்றுவிட்டான். பின்னால் கட்டிடச் சுவர் தடைசெய்ய முன்னால் இருகட்டழகிகளின் சுவர் நெருங்க என்ன செய்வதென்று கலங்கிய சமயத்தில், இரு பெண்களும் அவனை நெருங்கி அவன் மார்பில் சாய்ந்து வலுவுடன் அவன் கழுத்தையும் தங்கள் மலர்க் கரங்களால் வளைக்கவே, விஜயன் அறை வாயிற்படிக்கருகே நின்ற மூர்சமதை நோக்க, மூர்சமத் வெளியே பறந்து கதவை மூடினான். "மகாராஜா! சற்று உட்காருங்கள். நிதானமாகப் பேசலாம்," என்று கூறிய சுடர்விழி சாளரத்தை மூடிவிடு. யாராவது தலையை நீட்டப்போகிறான்," என்று கூறவே சுந்தரி விஜயனை விட்டு விலகி, சாளரங்களைத் தடால் தடாலென்று பெரும் ஓசையுடன் சாத்திவிட்டுத் திரும்பி வந்து சுடர்விழியின் பிடியிலிருந்த விஜயனை இன்னொரு பக்கத்தில் தானும் பிடித்துக் கொண்டாள். அப்படிப் பிடித்தவர்கள் அவனை வலுவாகப் படுக்கவும் வைத்தார்கள்.

வீரனான விஜயபாகு அந்த இருபெண்களின் சிறையிலிருந் தாலும், தனது உடல்வலு அப்பொழுதும் குறையாதிருந்தாலும் முதலில் காட்டிய மன வலு போய்விட்டதை உணர்ந்தான். அந்த இரு

zeevaa

அழகிகளின் மலர் உடல்களின் உயிர்ப்பகுதிகள் தனது உடலில் பட்டதன் விளைவாக உணர்ச்சிகள் அதிகமாகவே அவற்றினின்றும் விடுபட, ''பிசாசுகளே! விடுங்கள் என்னை!'' என்று கூவினான்.

சுடர்விழியின் ஒரு பாதி உடல் அவன் வலப்பக்கத்தை ஆட்கொண்டதென்றால் இடப்பக்கத்தைச் சுந்தரியின் பாதி உடல் ஆட்கொண்டிருந்தது. இரண்டு அழகிகளின் இதழ்களும் அவன் கழுத்தின் இருபக்கங்களில் புதைந்து கிடந்தன. இருவர் கைகளும் அவன் எழுந்திருக்க முடியாமல் அவன் மார்பை அழுத்தியிருந்தன. அந்த இரு பெண்களின் அடாத இந்தச் செய்கைகளால் உணர்ச்சிக்கு இலக்கானாலும் மசியாத விஜயன், ''உம் சுந்தரி! சுடர் விழி! உங்களுக்கு வெட்கமில்லை?'' என்று உஷ்ணமான பேச்சால் அவர்களை அடக்க முயன்றான்.

''இருந்த வெட்கத்தை உடைத்தது நீங்கள்தான்,'' என்றாள் சுடர்விழி. அவன் கழுத்திலிருந்த உதடுகளை நீக்கி.

''மூர்சமதின் முன்பு எங்களைத் தாறுமாறாகப் பேசினீர்களே, அப்பொழுது நாங்கள் பட்ட அவமதிப்பைப் பற்றியும் வெட்கத்தைப் பற்றியும் நினைத்துப் பார்த்தீர்களா?'' என்று கேட்டாள் சுந்தரியும் எழுந்து அவன் பக்கத்தில் உட்கார்ந்து.

தான் அவர்களைச் சமதின் முன்பாக அதட்டியதும் அளவுக்கு மீறிப் பேசியதும் தவறென்பதை உணர்ந்த விஜயன், ''அதற்கு இதுதானா தண்டனை?'' என்று கேட்டான். மெள்ள அவன் கைகளிரண்டும் அவர்கள் இடைகளை நோக்கி நகர்ந்தன. இடைகளைத் தழுவிய வண்ணம் கேட்டான் விஜயபாகு, ''இப்பொழுது என்னை என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று.

அதற்குச் சுந்தரி பதில் சொன்னாள், ''இதோ பாருங்கள் மன்னவா! நாங்கள் *சீதைகள்* அல்ல, கணவன் வெறுத்ததும் தீ மூட்டச் சொல்லி அக்னிப்பிரவேசம் செய்ய. நீங்கள் எங்களைத்

zeevaa

துரும்புபோல் நடத்துவதை நாங்கள் விரும்பவில்லை. நீங்கள் இருக்குமிடத்தில் நாங்கள் இருப்போம். நீங்கள் இடும் போரிலும் பங்கு கொள்வோம்,'' என்று.

மல்லாந்து படுத்துக் கிடந்த விஜயபாகு தனது உடலின் இருபுறங்களிலும் உட்கார்ந்திருந்த அந்த இரு அழகிகளை நோக்கினான். தன்னை ஆக்கிரமித்த வேகத்தில் இருவர் மேலாடைகளும் சரிந்து கிடப்பதையும், மறைக்கப்பட வேண்டிய அமுத கலசங்கள் தன்னை வெறித்து நோக்குவதையும் கண்டான். தன்மீது அரைவாசி சாய்ந்து கிடந்த இருவர் இடைகளும் தன் கைகளில் அசைவதையும் பார்த்தான். அந்தக் காட்சிகளால் தனது இரும்பு நெஞ்சம் மென்மையாகி விட்டதையும் உணர்ந்து தனது கைகளில் ஒன்றைச் சுந்தரியின் தொடைமீதும் வைத்து ஏதோ சிந்தனையில் ஆழ்வதுபோல் பாசாங்கு செய்தான். சுந்தரிமீது அவன் கை ஊர்ந்ததைக் கவனித்த சுடர்விழி தனது தலையை வெட்கத்தால் குனிந்துகொண்ட சமயத்தில் அவள் தொடைமீது அவனது இன்னொரு கை பதியவே தனது முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

அந்த இருவரும் வேறு பக்கம் பார்த்த சமயத்தில் சட்டென்று எழுந்து உட்கார்ந்த விஜயன் சிந்தனை வசப்பட்டான். கடைசியாக ஒரு முடிவுக்கு வந்து, ''சுந்தரி! சுடர்விழி! நான் உங்களை அத்தனை வேகமாகப் பேசியதற்குக் காரணம் தெரியுமா?'' என்று வினவினான்.

''சொல்லுங்கள்,'' என்றாள் சுந்தரி.

''உங்கள் மீதிருந்த அன்பு ஒரு காரணம். போர் மூளும் சமயத்தில் உங்களை எப்படிக் காப்பாற்றுவதென்ற அச்சம் இன்னொரு காரணம்,'' என்றான்.

''அன்பைக் காட்ட வசை பாடவேண்டுமா?'' என்று சுட்டிக் காட்டினாள் சுடர்விழி.

zeevaa

சுந்தரி சொன்னாள்: "அடிக்கலாம் மகாராஜா. கணவன் அடித்தால் வலி எடுக்காது. இன்பமாகக்கூட இருக்கும். ஆனால் சொல்லால் அடித்தீர்கள். அந்த நாவினால் சுட்ட வடு லேசில் போகாது. இப்படியும் ஒரு பழமொழி உண்டு."

இதைக் கேட்ட விஜயன் அவ்விருவரையும் சேர்த்து அணைத்துக் கொண்டு, "சுடர்விழி! சுந்தரி நீங்கள் சொல்வதெல்லாம் சரி. போர்க் காலத்தில் சில தொந்தரவுகள் இருக்கின்றன. போர் எக்கச்சக்கமாகி உங்களை நான் இழக்க நேரிடுமானால் அப்புறம் இந்தச் சிங்கள சிம்மாசனமும் எனக்கு மண்ணுக்குச் சமானம்," என்றான்.

அவன் அரவணைப்பினால் அமைதியும் ஓரளவு சந்துஷ்டியும் அடைந்த சுந்தரி, "மகாராஜா! மண்ணை அத்தனை அலட்சியமாகப் பேசாதீர்கள். இந்த மண் உங்கள் தாய் மண். உலகத்தில் ஆதிகால முதல் மண்ணை ஆள்வதற்கே போர்கள் நடந்திருக்கின்றன," என்றாள்.

"அப்படியானால் கலிங்கத்து மண்ணை விட்டு ஏன் வந்தாய்?" என்று கேட்டான் விஜயன்.

"அது நான் பிறந்த மண். உங்களை மணந்த பிறகு சிங்களத்தின் மண்தான் எனது மண்," என்றாள் சுந்தரி.

அவள் உறுதியைக் கண்ட சுடர்விழி சிங்கள இளவலைப் பரிதாபத்துடன் பார்த்து, "மன்னவா! இந்த அரசகுமாரியை என்ன பேச்சுப் பேசினீர்கள்? இவள் கிடைத்தது இந்த நாட்டுக்கு அதிர்ஷ்டம்!" என்றாள்.

அதற்கு மேல் விஜயன் பேசாமல் செயலில் இறங்கினான். இருவர் மேலாடைகளையும் தூக்கி அவர்கள் மார்புகளை மறைத்தான். அவன் இருவர் மேலாடைகளையும் கையாண்ட அழகைப் பார்த்து இருபெண்களும் மெள்ள நகைத்தார்கள். "இது சரி," என்றாள் சுடர்விழி. "இது தான் நியாயம்," என்றாள் சுந்தரி.

zeevaa

''எது?'' ஒற்றைச் சொல்லை வீசினான் விஜயன்.

''எங்கள் மானத்தைக் காக்க முயல்வது,'' என்றாள் சுடர்விழி.

''எப்படியும் நாங்கள் உங்கள் சொத்து. காப்பது உங்கள் கடமை. கடமையைச் செய்கிறீர்கள்,'' என்றாள் சுந்தரி.

மெள்ள மெள்ள விஜயன் மனமும் இளகி, சந்துஷ்டியடையவே அவன் மெதுவாக எழுந்து நின்றான். இரு ராணிகளும் உடன் எழ அவ்விருவர் இடைகளையும் தழுவிய வண்ணம் நின்று, ''இனி மூர்சமதைக் கூப்பிடலாம்,'' என்றான்.

''எதற்கு?'' சுடர்விழி கேட்டாள்.

''கிருஷ்ணனைப் பார்க்கவா?'' சுந்தரி வினவினாள்.

''கிருஷ்ணனா?'' விஜயன் ஏதும் புரியாமல் வினவினான்.

''ஆம் மகாராஜா! ருக்மணியையும் சத்தியபாமாவையும் இருபுறத்திலும் கிருஷ்ணன் அணைத்து நிற்பதுபோல் தமிழ்நாட்டில் ஓவியங்கள் உண்டு,'' என்று சுந்தரி விளக்க சுடர்விழி நகைத்தாள்.

அந்த உவமை விஜயனுக்கும் மகிழ்ச்சியை அளித்தாலும், ''ஓவியத்தில் இருவரைத்தான் காட்டியிருக்கிறார்கள், ஓவியத்தில் காட்சியளிக்காத மற்றும் பலர் இருக்கிறார்கள்,'' என்று விஷமமாகப் பேசினான்.

''அந்த ஆசையும் இருக்கிறதா? அதுவும் நடக்கும்,'' என்றாள் சுந்தரி.

''மகாராஜாவுக்குக் கிடைக்காத மடந்தைகளா?'' என்றாள் சுடர்விழி.

''எனக்கு இருப்பது இரண்டு கைகள்தான். அதற்கு இருவர் இருக்கிறீர்கள். நீங்களே போதும்,'' என்று மெள்ள நகைத்தான் விஜயன்.

zeevaa

''மகாராஜா! இன்னொருத்தி லீலாவதி இருக்கிறாளே. அவளை எந்தக் கையால் அணைப்பீர்கள்?'' என்று விஷமமாகக் கேட்டாள்.

விஜயனும் சளைக்கவில்லை. அவன் சித்தத்தைக் காமம் சூழ்ந்து கொண்டது. ''அவள் கைகளால் என்னை நேருக்கு நேர் நின்று அவளே சுற்றுவாள். உங்கள் மூவருக்குள் மகாராஜா மூழ்கி விடுவான். அப்புறம் அவனுக்கு நிம்மதி ஏது?'' என்று சொல்லிக் கொண்டே அவர்கள் இருவரையும் இழுத்துக்கொண்டே வாயிலை நோக்கி நடந்து, ''மூர்சமத்! மூர்சமத்!'' என்று குரல் கொடுக்கவே அறைக்கதவு தடாலெனத் திறந்தது. வாயிற்படியில் மூர்சமத் பிரமை பிடித்து நின்றான். அவனுக்குப் பக்கத்தில் நின்றிருந்த ஜேட்ட திஸ்ஸன் சுவர்ப்புறமாக மறைந்தான்.

மூர்சமத் அந்தப் பிரமையிலிருந்து நீங்கித் தலையைக் குனிந்து வெளியே செல்லத் திரும்பினான். ''மூர்சமத்!'' என்று விஜயன் குரல் மீண்டும் அவனைத் தடுத்தது. ''ஜேட்டதிஸ்ஸனையும் மற்றப் படைத் தலைவர்களையும் அழைத்து வா,'' என்று உத்தரவிட்டான்.

அப்பொழுது மறைவிலிருந்த ஜேட்டதிஸ்ஸன் மெள்ள முன்னால் வந்து, ''இப்பொழுதே அழைத்து வர வேண்டுமா மகாராஜா?'' என்று வினவிய அவன் குரலில் சங்கடம் பலமாகத் துலங்கியது.

''ஆம். இப்பொழுதே,'' என்றான் விஜயன்.

''எதற்கு மகாராஜா?''

''போர்த் திட்டத்தை நிச்சயப்படுத்திக் கொள்ள.''

''இந்தச் சந்தர்ப்பம்...''

''சரியானதுதான். ராணிகளிருவரையும் கலந்து கொள்ளலாம்.''

zeevaa

"அவர்களுக்கு..."

"போர் முறைகள் நன்றாகத் தெரியும். என்னையே வென்றவர்கள்...."

இதை விஜயன் வேண்டுமென்று சொல்கிறானா, உண்மையாகவே பேசுகிறானா என்று புரியாததால் தயங்கிய ஜேட்டதிஸ்ஸனை நோக்கிய விஜயன், "உண்மைதான். போய் அழைத்து வா" என்று சொல்ல ஜேட்டதிஸ்ஸன் விரைந்தான்.

அவன் சென்றதும் கதவை மூடிய விஜயன், "சரி சரி! உங்கள் ஆடைகளைச் சீர்செய்து கொள்ளுங்கள். படைத்தலைவர்கள் வந்ததும் எனது போர்த்திட்டத்தைச் சொல்கிறேன்" என்றான்.

"நீங்கள் எனக்குப் போர் மந்திரிகள்" என்று கூறி அறையின் ஒரு புறத்திலிருந்த மஞ்சத்தில் கம்பீரமாக அமர்ந்தான், இருபுறத்திலும் இரு மாதரும் நிற்க.

அன்று மந்திராலோசனை நடந்து கொண்டிருந்த சமயத்தில் அவசரச் செய்தியொன்று வந்தது. மச்சுஸ்தலாவில் மேற்கொண்டு தாமதிப்பதற்கில்லை என்பதைப் புரிந்துகொண்ட விஜயன் தனது படைகளை அன்றே புறப்பட உத்தரவிட்டான். கதிராங்கனிக் கோட்டையை அணுகு முன்பே ராட்சத நுவரகிரி அந்தக் கோட்டையைத் தாக்கிக் கொண்டிருந்தார்.

அத்தனை துரிதமாக நுவரகிரி மகாநாககுலாவிலிருந்து கதிராங்கனிக்கு வந்து சேருவார் என்று எதிர்பார்க்காத விஜயன் அவரது படையின் தொகை, தான் விட்டுவந்த படையின் எண்ணிக்கையைவிட அதிகமாயிருப்பதைக் கண்டு வியந்தான். நுவரகிரி செய்த யோசனை தான் தனது ராணிகளுடனும் படைத்தலைவர்களுடனும் நடத்திய மந்திராலோசனையைவிடச் சிறந்தது என்பதைப் புரிந்து கொண்டான். நுவரகிரி அவனது

zeevaa

பாசறைக்கு வந்து, ''நாளை நாம் இந்தக் கோட்டையைத் தாக்குகிறோம்'' என்று திட்டமாகக் கூறினார்.

ஒப்புதலுக்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் விஜயன். மூன்று வழிகளில் கதிராங்கனிக் கோட்டையை நோக்கி நகர்ந்தன விஜயன் படைகள்.




zeevaa

# 44. முப்புறப் போர்

மச்சுஸ்தலாவில் தனது தனி அறைக்கு ஜேட்டதிஸ்ஸனும் அவனது உபதளபதிகள் மூவரும் வந்ததும் மந்திராலோசனையைத் துவக்கிய விஜயபாகு தனது பக்கங்களில் நின்று கொண்டிருந்த இரு ராணிகளையும் சுட்டிக் காட்டி, ''இவர்களும் போர் முறைகளை அறிந்தவர்கள், இவர்களிருப்பதால் பாதகமில்லையென நினைக்கிறேன்'' என்று பூர்வ பீடிகை போட்டதும், ஜேட்டதிஸ்ஸனும் உபதளபதிகள் மூவரும் புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தாலும் மூர்சமத் மட்டும் பதிலேதும் பேசாமலும் முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டாமலும் நின்று கொண்டிருந்தான்.

அதை விஜயன் கவனித்தாலும் கவனித்ததாகக் காட்டிக் கொள்ளாமலே பேசமுற்பட்டு, ''ஜேட்டதிஸ்ஸா! நம் வருகையைக் கேட்டு ருஹுணா பகுதியின் கிராமங்களிலிருந்து எழுந்த வீரர்களின் தொகை எவ்வளவிருக்கும்?'' என்று கேட்டான்.

ஜேட்டதிஸ்ஸன் சிறிதும் சிந்திக்காமலே பதில் சொன்னான். ''இருபதினாயிரம் பேர்'' என்று.

''அவ்வளவு பேரும் போர் வீரர்களா?'' என்று வினவினான் விஜயன்.

''ஆம் மகாராஜா! தாங்கள் மறுபடியும் போர்க் கொடியை உயர்த்திவிட்டதைக் கேட்டதும் மறைவிலிருந்து வெளியே வந்தவர்கள், போர் அனுபவம் மிக்கவர்கள்'' என்று ஜேட்டதிஸ்ஸன் பதில் சொன்னான்.

zeevaa



zeevaa

''அப்படியானால் ஏற்கெனவே உள்ள நமது இருபடைகளையும் சேர்த்தால் எண்ணிக்கை முப்பதினாயிரத்துக்குமேல் போகிறது?'' என்று விஜயன் கேட்டான்.

''ஆம்'' என்றான் ஜேட்டதிஸ்ஸன்.

இதைக் கேட்ட பின்பு சிறிது சிந்தனையிலிறங்கிய விஜயபாகு, ''ஜேட்டதிஸ்ஸா! ராணிகளே! நன்றாகக் கேளுங்கள்'' என்று துவங்கி, ''நான் முதலில் இட்ட திட்டம் வேறு. மகாநாககுலாவிலிருந்து நுவரகிரியைத் தாம்பல காமத்திற்கு அழைத்துப்போய் அவரும் நானுமாகத் தாம்பலகாமத்திலிருந்து ருஹுணாவை வடக்கில் ஊடுருவலாமென்றும், ரவிதேவனையும் காலனையும் மகாநாககுலாவிலிருந்து தெற்குப் பகுதியில் ருஹுணாவை ஊடுருவச் செய்யலாமென்றும் நினைத்தேன். அப்படிச் செய்தால் மகாநாககுலாவும் தாம்பலகாமமும் தற்காப்புத் தலைவர்கள் இல்லாது திண்டாடும் என்பதால் ரவிதேவனை மகாநாககுலாவிலும், காலனைத் தாம்பலகாமத்திலும் இருக்கச் செய்துவிட்டு, நான் தாம்பல காமத்திலிருந்தும் நுவரகிரி மகாநாககுலாவிலிருந்தும் ருஹுணாவை ஊடுருவத் திட்டமிட்டேன். அந்தத் தீர்மானத்தின் விளைவாக நுவரகிரி மகாநாககுலாவில் தங்கி விட்டார். அப்படித் தங்கிவிட்டதால் இந்த ராணிகள் நிலைமையிலும் சிறிது திண்டாட்டமிருந்தது'' என்று கூறினான்.

தங்களுக்கு நுவரகிரியால் விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டை மன்னர் குறிப்பிடுகிறாரென்பதை உணர்ந்ததால் இருவரும் இதழ்களில் கோப நகை காட்டினர். அதைக் கண்ட மன்னன், ''ராணிகளே! நுவரகிரி போர் வீரர். நான் சொன்னதைச் செய்யும் மகாவீரர். அவர்மீது கோபித்துப் பயனில்லை'' என்று அவர்களைச் சமாதானப்படுத்திவிட்டு, ''இப்பொழுது ஆகவேண்டிய காரியத்தைக் கவனிப்போம். நாம் இங்கிருந்து இளையகேசதாது இருக்கும் கதிராங்கனியைத் தாக்குவோம். நான் போவதற்கும் நுவரகிரி அங்கு வருவதற்கும் கிட்டத்தட்ட சமயம் சரியாயிருக்கும்.

zeevaa

நுவரகிரி அதற்குள் வராவிட்டால் நாம் கோட்டையை முற்றுகையிடுவோம்'' என்று சொன்னான்.

அந்தச் சமயத்தில் நாலைந்து புரவிகள் வாயிலில் வந்து நின்ற ஓசை கேட்கவே, தான் பேசுவதைச் சிறிது நிறுத்தினான். வாயில் காவலன் ஒருவன் ஓடிவந்து, ''நுவரகிரியிடமிருந்து தூதர்கள் நால்வர் வந்திருக்கிறார்கள். தங்களை அவசரமாகப் பார்க்க வேண்டுமாம்'' என்று அறிவிக்கவே, ''சரி, வரச்சொல்'' என்று உத்தரவிட்டான் மன்னவன்.

சில வினாடிகளுக்குள் உள்ளே வந்த வீரனொருவன், ''நுவரகிரி கதிராங்கனியை நெருங்கிவிட்டார். தங்களைத் துரிதமாக வரச் சொன்னார். தங்கள் உத்தரவைக் கேட்டுத்தான் கதிராங்கனியைத் தாக்க வேண்டுமாம்'' என்று கூறினான்.

''காலையில் புறப்படுகிறோம் என்று சொல் நுவரகிரிக்கு. நாளை விளக்கு வைக்கும் நேரத்தில் கதிராங்கனி கோட்டை முன்பு இருப்போம்'' என்று விஜயன் கூறவே வீரன் திரும்பத் தலைவணங்கி வெளியேறினான்.

அவன் சென்ற பிறகு ஜேட்டதிஸ்ஸனை நோக்கிய விஜயன், 'படைகள் நாளை விடியற்காலையில் புறப்படத் திட்டம் செய். ராணிகள் இங்கேயே தங்கட்டும். அவர்களைப் பாதுகாக்க ஒரு படைப்பிரிவு இங்கிருக்கட்டும்'' என்று உத்தரவிட்டான்.

அதுவரை ஏதும்பேசாமலிருந்த இருமங்கையரில் சுடர் விழி கேட்டாள், ''இங்கு தங்குவதானால் நாங்கள் மகாநாகுலாவிலேயே தங்கியிருக்கலாமே?'' என்று.

''அப்படிச் செய்திருக்கலாமே!'' என்ற சுந்தரியின் குரலிலும் உஷ்ணம் இருந்தது.

''அப்படிச் செய்திருக்கலாம். ஆனால் பெண் புத்தி பின்புத்தி என்பதை இப்பொழுது நிரூபித்திருக்கிறீர்கள். உங்களை நான் போர்

zeevaa

முனைக்கு அழைத்துச் செல்ல முடியாதென்பது உங்களுக்கு தெரியும். உங்களுக்கு ஏதாவது போரில் ஆபத்து நேர்ந்தால் எனது பிற்கால வாழ்க்கை நாசமாகிவிடும். இது உங்களுக்குப் புரியவில்லையா?'' என்று கேட்ட விஜயன் கண்காட்ட மூர்சமதும் வெளியே சென்றான்.

பிறகு தானே சென்று அறைக் கதவைச் சாத்திவிட்டு வந்த விஜயன் தனது இரு ராணிகளையும் மஞ்சத்தில் உட்கார்ந்த வண்ணம் இருபுறத்திலும் இழுத்து அணைத்து, ''சுடர்விழி! சுந்தரி! எனது கண்ணின் இரு மணிகளில் எது போனாலும் என் கண்ணுக்கு ஊனந்தான். இரண்டும் போய்விட்டால் நான் கபோதி. அப்புறம் எனக்கு வாழ்க்கை என்ன இருக்கிறது? எனக்கு அரசுதான் எதற்கு?'' என்று கேட்டு அவர்கள் இருவரையும் மஞ்சத்தில் தனது இரு பக்கங்களிலும் இருத்தினான்.

அவன் இரு கைகளும் அவர்கள் அழகிய இடைகளை இழுத்தன. அவை அசைந்து நெளிந்து அளித்த உணர்ச்சிகளால் இரு பெண் களும் சுவர்க்கத்தை அடைந்துகொண்டிருந்தனர்.

அவன் கைகள் இறங்கியதும் இரு பெண்களும் ஒருவரை யொருவர் பார்க்க அஞ்சித் தங்கள் முகங்களை வேறுபுறம் திருப்பிக் கொண்டார்கள் முகங்கள் திரும்பினவேயொழிய உணர்ச்சிகள் அவனை நோக்கவே செய்தன. இருவர் கைகளும் அவன் கைகளைப் பற்றி நெறித்தன. விஜயன் உணர்ச்சிகளும் அவன் அறிவை அள்ளிச் சென்றதால் அவன் மஞ்சத்திலிருந்து பெருமூச்சு விட்டான். பிறகு மஞ்சத்திலிருந்து எழுந்து தரையில் படுத்தான். அவர்களையும் தன்னருகில் படுக்கச்சொல்லி, ''சுடர்விழி! சுந்தரி! போருக்கும் சுகத்துக்கும் சம்பந்தமில்லை, அமைதி சாந்தியை அளிக்கிறது. சீக்கிரம் இந்த நாடு சுதந்திரம் அடையும். அன்று நான் சுதந்திரம் இழப்பேன். உங்கள் இருவரிடமும் சிறைபடுவேன்'' என்று மெதுவாகச் சொன்னான்.

zeevaa

இரு மாதர்களும் ஏதும்பேசவில்லை. தங்கள் கணவன் கைகள் தங்கள்மீது உலாவிக் கொண்டிருந்ததால் உணர்ச்சிப் பெருக்கை அடைந்து கொண்டிருந்தார்கள். காலையில் அவன் பிரிந்து விடுவானென்ற ஏக்கத்தில் பெருமூச்சும் விட்டார்கள். சுந்தரி மட்டும் அவன் பக்கத்தில் எழுந்து உட்கார்ந்து..''மகாராஜா! சிறிது நேரம் உறங்குங்கள். காலையில் புறப்பட வேண்டுமே'' என்று கூறினாள்.

சுடர்விழி இன்னொரு பக்கத்தில் உட்கார்ந்து, ''ஆம் மகாராஜா! உறங்குங்கள்'' என்றாள்.

விஜயன் இதழ்களில் புன்முறுவல் அரும்பியது. ''நீங்கள் இருவரும் அருகிலிருக்கும்போது எனக்கு உறக்கம் எப்படி வரும்?'' என்று வினவினான் புன்முறுவலின் ஊடே. ''நீங்கள் சற்று உறங்கலாமே?'' என்றான் அவர்களை நோக்கி.

இரு பெண்களும் நகைத்தார்கள். ''உங்களுக்கே உறக்கம் வராதபோது எங்களுக்கு மட்டும் எப்படி வரும்?'' என்று சுடர்விழி கேட்டாள்.

''ஆம். எப்படி வரும்?'' என்றாள் சுந்தரி.

''வராது'' என்ற விஜயன், ''இன்பம் உறக்கத்தின் விரோதி'' என்று சொன்னான்.

இப்படிப் பேசி விழித்துக்கொண்டே இரவின் முக்கால் பகுதியைக் கழித்த அந்த மூவரும் நான்காம் ஜாம ஆரம்பத்தில் தாரைகள் ஊதப்பட்டதால் எழுந்து சாளரத்தை அணுகி வெளியே பார்த்தார்கள். படைகள் உறக்கத்தை உதறி அணிவகுப்பாய் நடப்பதைக் கண்டனர். அதைக் கண்டு அவர்கள் திரும்பியபோது விஜயன் எழுந்து அறை மூலையிலிருந்த தனது போருடைகளை அணிய முற்பட்டதை இரு தேவிகளும் கண்டனர். அடுத்த சில விநாடிகளில் போருடை அணிந்து இடையில் கச்சை கட்டி வாள் அணிந்து புறப்பட மன்னர் சித்தமானதும் இரு தேவிகளையும் அழைத்து, ''நான் இங்குள்ள இரு கனிகளைவிட்டுக் கதிராங்

zeevaa

களிக்குச் செல்கிறேன். திரும்பி வெகு விரைவில் வருவேன். அதுவரை இந்த மச்சுஸ்தலாவைக் காத்து வாருங்கள். அதற்குத் தேவையான படை இங்கு நிறுத்தப்படும்'' என்று அவன் கூறி முடிப்பதற்குள் வெளியே சங்குகள் பல முழங்கவே மூர்சமத் உள்ளே நுழைந்து, ''தங்கள் புரவி சித்தமாயிருக்கிறது'' என்றான்.

விஜயன் வாயிலுக்குச் சென்று அணிவகுத்து நிறுத்தப்பட்டிருந்த பெரும்படையைப் பார்த்தான். பிறகு தனது கையை உயர ஆட்டிவிட்டுத் தனது கரியபுரவிமீது பாய்ந்து ஏறினான். அவனைத் தொடர்ந்து மூர்சமத் தனது பழுப்பு நிறப் புரவியில் ஏற, புரவிகள் இரண்டும் படை அணிக்கு முன் சென்றன. சாளரத்திலிருந்து விஜயன் செல்வதைக் கண்ட தேவிகளிருவரும் ஒருவரையொருவர் அணைத்து நின்றனர். ''அதோ ஒரு மகாவீரர் போகின்றார்'' என்றாள் சுந்தரி.

சுடர்விழி பேசவில்லை. அவள் உதடுகள் சுந்தரியின் வாக்கியத்தைத் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தன.

மச்சுஸ்தலாவிலிருந்து கிளம்பிய விஜயன் தனது பெரும்படையுடன் எங்கும் நிற்காமல் கதிராங்கனியை அன்றிரவின் ஆரம்பத்திலேயே அடைந்து அதன் முன்பு பாசறை அமைத்தான். தனது படையை விடச் சிறிது அதிகமான படையுடன் நுவரகிரி கதிராங்கனியின் இன்னொரு புறத்தில் தங்கியிருப்பதை கண்ட விஜயன், ''நுவரகிரிக்கு ஏது இத்தனை படை?'' என்று ஜேட்ட திஸ்ஸனை விசாரித்துக் கொண்டிருக்கையிலேயே நுவரகிரி அங்கு வந்து சேர்ந்து மன்னனுக்குத் தலை வணங்கினார். மன்னர் கேட்கும் முன்பே கேள்வியை ஊகித்துப் பதிலும் சொன்னார். ''மகாராஜா! தாங்கள் இங்கு படையெடுக்கப் போவதை அறிந்த பல வீரர்கள் கூட்டம் கூட்டமாக எனது படையில் சேர்ந்தார்கள். ஆகவே ருஹுணாவை ஊடுருவியதில் நமக்கு படைக்குறைவு ஏதுமில்லை. இளையகேசதாதுவின் கொடுங்கோலால் போர் நமக்கு அனுகூலமாயிருக்கிறது. இவனை வெற்றி கொள்வதில் நமக்கு

zeevaa

பெருமை ஏதுமில்லை. நாம் சிறிது தாமதித்திருந்தால் மக்களே அவனை அழித்திருப்பார்கள்'' என்று சொன்னார்.

விஜயன் எழுந்து நுவரகிரியின் தோள்மீது கையை வைத்து, ''நுவரகிரி இளையகேசதாது இத்தனை கேவலமானவன் என்று எனக்குத் தெரியாது. இருப்பினும் நாம் எச்சரிக்கையுடனிருப்பது நல்லது'' என்று கூறிவிட்டு, எதிரே பிரும்மாண்டமாகத் தெரிந்த கதிராங்கனிக் கோட்டையை ஏறெடுத்து நோக்கினான். கோட்டை சற்று மேடான இடத்தில் அமைக்கப்பட்டிருந்தாலும் கோட்டையின் சுவர்கள் பலமாயிருந்ததாலும் அதன் முன்புற வாயிலும் பலமான மரக்கதவுகளால் அமைக்கப்பட்டிருந்ததாலும் அதை எதிர்ப் புறமாகத் தாக்குவதைவிட, பக்கங்களில் தாக்குவதே நல்லதென்று நினைத்த விஜயன், ''நுவரகிரி! இந்தக் கோட்டையில் பிரதான வாயிலை விட்டு விடுவோம். மற்ற மூன்று பக்கங்களிலிருந்தும் தாக்குவோம். நீர் உமது படைப் பிரிவுடன் அதைப் பின்னிருந்து தாக்கும். நான் கிழக்குப் புறத்திலும் மேற்குப் புறத்தில் ஜேட்ட திஸ்ஸனும் தாக்குவோம். இப்படி முன்புறத்தில் தாக்கும்போது இளையகேசதாது பிரதான வாயில் புறமாக வெளியே ஓடினால் நானும் ஜேட்டதிஸ்ஸனும் அவனைத் தொடருகிறோம். நீர் இந்தக் கோட்டையைக் கைப்பற்றி இங்கே தங்கும்'' என்று உத்தர விட்டான்.

அந்த இரவிலேயே முப்புறத்திலும் மன்னன் படைகள் கதிராங்கனிக் கோட்டையை நோக்கி முன்னேறின. இரவுப் போர் பயங்கரமாயிருந்தது. அவர்கள் முன்னேற்றத்தை எதிர்பார்த்திருந்த இளையகேசதாது கோட்டைக் கைப்பிடிச் சுவர் மீதிருந்த கூடங்களிலிருந்து வேல்களையும் அம்புகளையும் வீசச் செய்தான். முன்னேறிய படைகள் பந்தங்களைக் கொளுத்த வேண்டாமென்று விஜயபாகு உத்தரவிட்டிருந்ததால் இருட்டில் குறி வைப்பது கஷ்டமாயிருந்தது எதிரிகளுக்கு. கோட்டைச் சுவரைப் பின்புறத் தெற்குத் திசையிலிருந்து அணுகிவிட்ட நுவரகிரியின் வேல்களும் அம்புகளும் எதிரியின் விற்கூடங்களுக்குப்பெரு நாசத்தை

zeevaa

விளைவித்துக் கொண்டிருந்தன. பக்கங்களில் ஏறிவந்த விஜய பாகுவும் ஜேட்டதிஸ்ஸனும் அந்தந்தப் பக்கத்திலிருந்து விளைவித்த மும்முரத் தாக்குதலால் விற்கூடங்களிலிருந்த வீரர்கள் மாய்ந்து கொண்டிருந்தார்கள். அப்படி மாய்ந்து கோட்டையின் உட்புறத்தில் விழுந்த வீரர்களின் மரணக் கூச்சல் அந்த இரவை மிகப் பயங்கரமாக அடித்தது. முப்புறத்திலும் போர் மும்முரமாக நடந்தது.

விஜயபாகுவின் வீரர்கள் பலரும் ஜேட்டதிஸ்ஸன் வீரர்கள் பலரும் சுவர்களில் ஏறிப் போராடத் துவங்கினார்கள். அந்தச் சமயத்தில் நுவரகிரி தென்புறக் கதவுகளைப் பெரும் மரமொன்றைக் கொண்டு உடைத்துக் கொண்டிருந்த ஒலி மிகப் பயங்கரமாகக் கேட்டது. கோட்டைக்குள்ளே குழப்பமும் கூச்சலும் கேட்டன. அன்றிரவு பாதி வரையில் நடந்த உக்கிரமான போரில் ஒரு திடீர்த் திருப்பத்தை எதிரி ஏற்படுத்தினான். விஜயன் முற்றும் எதிர்பாராத வகையில் வடக்குத் திசை முன்புறக் கதவுகள் பெருத்த ஓசையுடன் திறக்கப்பட்டு எதிரிப் படைகள் மிகுந்த வேகத்துடன் போரிட்டுக் கொண்டே வெளியே பாய்ந்து வந்தன. இளையகேசதாதுவும் தனது புரவிமீது மிக வேகமாக வெளியே வந்தான்.



zeevaa

# 45. அவன் ஒரு துறவி

யாராலும் எளிதில் கைப்பற்ற முடியாததென்று பிரசித்த பெற்ற கதிராங்கனிக் கோட்டைக்குள் பாதி ராத்திரிக்குள் பலமான சேதத்தை விஜயபாகு ஏற்படுத்தி விட்டதாலும், பின் வாயிலை ராட்சத நுவரகிரி பெரிய மரங்களைக் கொண்டு இடித்துப் பிளந்து உள்ளே நுழைந்துவிட்டதாலும் மதில்கள் மேலும் உள்ளுக்குள்ளும் போர் மிக மும்முரமாகிவிட்டதாலும் கோட்டையை விட்டு ஓடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று தீர்மானித்த இளையகேசதாது தனது இரு படைத் தலைவர்களையும் அழைத்து ''வடக்குப் பெரு வாயிலைத் திறந்து விடுங்கள். நமது புரவிப்படை வெகுவேகமாக, வெளியில் பாயட்டும். எதிர்ப்படும் எதிரிகளைத் தயை தாட்சண்யமின்றி வெட்டிப்போட்டு முன்னேறுங்கள்'' என்று உத்தரவிட்டான்.

அந்த உத்தரவைக் கேட்ட படைத் தலைவனொருவன் மிதமிஞ்சிய வியப்பை முகத்தில் காட்டி ''மகாராஜா! எதிரியிட மிருந்து தப்பி ஓடச் சொல்கிறீர்களா?'' என்று வினவினான்.

''போரில் ஓடுவதைவிடப் போரிட்டு மடிவது புகழ் தருமல்லவா?'' என்று இரண்டாவது படைத்தலைவன் வினவினான்.

இளையகேசதாது எரிச்சலுடன் இரு படைத்தலைவர்களை யும் நோக்கி, ''செத்த பின் புகழ் ஏற்படுவதால் என்ன பயன்?'' என்றான்.

''போரில் மடிந்தால் வீர சொர்க்கம் கிடைக்கும்'' என்றான் முதல் படைத்தலைவன்.

zeevaa




zeevaa

''சொர்க்கத்தை நீ பார்த்திருக்கிறாயா?'' என்று இளையகேசதாது வினவினான்.

''இல்லை. இறந்தால்தானே பார்க்கலாம்'' என்று முதல் படைத்தலைவன் கேட்டான்.

''தெரியாததை ஏன் பார்க்க விரும்புகிறாய்? அதை விட இந்த வீர மண்ணில் உயிரோடிருப்பது நல்லதல்லவா?'' இதை இளையகேசதாது மிகுந்த இகழ்ச்சியுடன் கேட்டான்.

''நாம் போரிட்டால் தான் இது வீரமண்ணாகும். ஓடினால் இந்த மண்ணின் பெயர் நம்மால் கெட்டுப்போகும்'' என்று இரண்டாவது படைத்தலைவன் தனது கருத்தை வெளியிட்டான்.

இளையகேசதாதுவின் முகத்தில் கோபம் சுடர்விட்டது. ''இங்கிருந்து நாம் போவது தோற்பதற்கல்ல, இதைவிடச் சௌகரிய மான இடத்தில் எதிரியைச் சந்திக்க, அப்படிப் பின்வாங்கும் முறைக்கு வெற்றிகரமாகப் பின்வாங்குதல் என்று ராணுவ சரித்திரத்தில் பெயர் உண்டு,'' என்று சினத்துடன் கூறி, ''நாம் விஜயபாகுவை மீண்டும் குபுலகல்லாவில் சந்திக்கிறோம். நமது படையை வெளியேறச் சித்தம் செய்யுங்கள்'' என்று உத்தர விட்டான். அத்துடன் பேச்சு முடிந்தது என்பதற்கு அறிகுறியாகத் தனது ஆசனத்திலிருந்து எழுந்து மாளிகை வாயிலுக்குச் சென்றான்.

கோட்டையின் பகுதிகளுக்குள் போர் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. விஜயபாகுவின் வில்லவரும் வேற்போர் வல்லுனரும் கோட்டையின் மதில்களிலிருந்து பெரும் நாசத்தை விளைவித்துக் கொண்டிருந்தார்கள். பின் வாயிற்கதவுகள் தடாலென்ற சப்தத்துடன் வீழ்ந்த ஒலியும் அதைத் தொடர்ந்து நுவரகிரியின் பெரும் கூச்சலும் மும்முரப் போரின் ஒலியும் காதில் விழவே தனது வாளை எடுத்து உயர்த்தி ஆட்டினான் இளையகேசதாது. அதே சமயத்தில் போர்ச் சங்குகள் பல

zeevaa

இடங்களில் முழங்க இளையகேசதாதுவும் தனது புரவிமீது பாய்ந்து ஏறினான். அத்துடன் தனது புரவிப்படைக்கு அக்கம் பக்கங்களில் சாதாரண மக்களை அழைத்து வரும்படி செய்யவே, வெளியே பாய்ந்து வந்த புரவிப்படையை விஜயபாகுவால் எதிர்க்க முடியவில்லை. அப்படி எதிர்த்தால் புரவிப்படைகளின் பக்கங்களை அணைத்து ஓடிவந்த சாதாரண மக்கள் அழிவார்கள் என்ற நோக்கத்தால் விஜயபாகு இளைய கேசதாதுவை ஓடவிட்டான்.

இளையகேசதாது ஓடிவிட்ட நாலைந்து நாழிகைக்குள் கதிராங்கனிக் கோட்டைக்குள் நுழைந்துவிட்ட விஜயபாகு கோட்டையைச் சீர்செய்யும் பொறுப்பை ஜேட்டதிஸ்ஸனிடமும் நுவரகிரியிடமும் ஒப்படைத்தான். பிறகு இளையகேசதாதுவின் மாளிகை வாயிலில் நின்ற விஜயபாகு, "நுவரகிரி! மாண்ட வீரர்கள் சடலங்கள் மரியாதைகளுடன் தகனம் செய்யப்படட்டும். இன்னும் ஒரு ஜாமத்தில் நான் இளையகேசதாதுவைப் பின்பற்றிச் செல்லப் போகிறேன்" என்றான்.

"ஓடும் எதிரியைத் துரத்தலாமா?" என்று நுவரகிரிகேட்டார்.

விஜயன் சிறிதும் சிந்திக்காமலே பதில் சொன்னான், "இளையகேசதாது வீரனல்ல. இந்த நாட்டைக் கெடுக்க வந்த புல்லுருவி, விஷப்பாம்பு. அதை அழிக்காமல் விட்டால் சிங்கள விடுதலைப் போருக்கு எப்பொழுதும் ஒரு முட்டுக்கட்டை இருந்து கொண்டே இருக்கும். ஆகவே அவனை முறியடிக்காமல் விடுவதற்கில்லை" என்று.

இதைக் கேட்ட நுவரகிரியும் விஜயபாகுவின் கருத்தை ஆமோதித்தார். "அப்படியானால் எனக்கென்ன கட்டளை?" என்று வினவினார்.

"கதிராங்கனி தாக்குதலை நாம் இருபுறமும் நடத்தியதால் பாக்கு வெட்டிக்கு இடையில் அகப்பட்ட பாக்கென வெட்டப்பட்டான் இளையகேசதாது. அடுத்தமுறை போர் இப்படி நடக்காது. நான்

zeevaa

அவனை துரத்திச்சென்று அவன் தங்க முற்படும் இடத்தில் அவனை நேருக்கு நேர் சந்திப்பேன். அவன் படைகளை தீர்த்துக்கட்டி விடுகிறேன்'' என்று கூறினான் விஜயபாகு. அவன் குரலில் தீர்மானமும் உறுதியுமிருந்தது. அந்த உறுதியுடனேயே பேசிய விஜயபாகு, ''நுவரகிரி! இந்தக் கோட்டையை நீர் வலுப்படுத்தி, படைப்பிரிவில் ஒன்றை இங்கு நிறுத்திவிட்டு மச்சுஸ்தலாவுக்கு வந்து சேரும். என் ஊகம் சரியானால் இளைகேசதாது குபுல கல்லாவை நோக்கித்தான் ஓடுவான். அவன் அதை அடைவதற்கு முன்னாலேயே அவன் படையுடன் என் படைமோதும். அங்கு அவனை முறியடித்த பின்பு நானும் மச்சுஸ்தலா வருகிறேன்'' என்று கூறிவிட்டு ஜேட்டதிஸ்ஸனுடன் கிளம்பினான் கதிராங்கனியை விட்டு. தன்னுடன் புரவிப்படையை மட்டும் அழைத்துச் சென்றான், காலாட்படை வேகமாகத் தொடர முடியாது என்ற காரணத்தால்.

ஒவ்வொரு புரவி வீரனிடமும் அம்பறாத்தூணியும் வில்லும், வேல்களும் இருந்தன. புரவியின் பக்கத்திலிருந்த சிறு மூங்கில் கூடையில் இரண்டு வேல்கள் இருந்தன. எதிரியை எங்கும் தங்கவிடாமல் துரத்திச் சென்ற விஜயன் குபுலகல்லாவின் பெரும்பாறைகளுக்கு முன்னிருந்த சமவெளியிலேயே எதிரியை மடக்கத் திட்டமிட்டு ஜேட்டதிஸ்ஸனை அருகில் அழைத்து ''ஜேட்டதிஸ்ஸா! ஒரு பாதிப் புரவிப் படையுடன் இளைய கேசதாதுவை வலது பக்கத்தில் தாக்கு. நான் நேராகத் தாக்குகிறேன். அவன் படையை நான் பிளக்கும் அதே நேரத்தில் நீயும் பக்கவாட்டில் பிளந்து விடு. தாக்கப்படாமலிருக்கும் இன்னொரு புறத்தில் எதிரி பின்வாங்க முற்பட்டால் நான் அந்தப்பகுதியை அழித்துவிடுவேன். அப்புறம் நீயும் தயை தாட்சண்யம் பார்க்க வேண்டாம். குபுலகல்லாவின் பாறைகள் முன்பு இன்று இரத்த ஆறு ஓடும்'' என்று உத்தரவிட்டான்.

விஜயபாகு தன்னை அசுரவேகத்தில் தொடர்ந்து வருவதைக் கண்ட இளையகேசதாது வெகுவேகமாக ஓடினான். குபுலகல்லா வின் பாறைகள் தனக்கு அபயமளிக்கும் என்று நம்பியவன் அதற்கு

zeevaa

அவகாசமில்லை என்பதை அறிந்து தனது படையைச் சரேலென்று திருப்பி எதிரியை சந்தித்தான். இருபகுதிகளிலும் சங்கங்களும் முரசுகளும் முழங்கின. இரண்டு படைகளும் இரண்டு பேரலைகளைப் போல் மோதின. அதுவரை சாத்வீகனாக இருந்த விஜயன் ராட்சஸனாக மாறினான். தன்னிடமிருந்த இருவேல்களை வீசினான். பிறகு வாளை எடுத்து எதிர்ப்பட்டவர் களை வெட்டிச் சாய்த்துக்கொண்டு முன்னேறினான். அவன் போட்ட ரணகளப் பாதையில் அவன் புரவிப்படையும் முன்னேறியது. அதே சமயத்தில் பக்கவாட்டில் நுழைந்த ஜேட்டதிஸ்ஸன் படையும் பெரிதாக வீரக் கூச்சலைப் போட்டு எதிரிப் படையைப் பக்கவாட்டில் பிளந்தது.

எங்கும் அம்புகளும் வேல்களும் பறந்தன. வாட்களோடு வாட்கள் உராயும் சப்தமும் உச்சஸ்தாயிக்குச் சென்று கொண் டிருந்தது. அப்பொழுது ஒரு விசித்திரம் நடந்தது. எதிர்ப் பட்டவர்களை வெட்டிச் சாய்த்துக் கொண்டு முன்னேறிய விஜயன் நேராக இளையகேசதாதுவை அணுகிக்கொண்டிருந்தான். பிரளய ருத்திரன் போல் பிற்பகல் வெயிலில் முகம் ஜொலிக்க விஜயபாகு நெருங்குவதைப் பார்த்ததும் இளையகேசதாது சரேலென தனது புரவியைத் திருப்பிக்கொண்டு வேகமாக ஓடலானான். அவன் ஓடிவிட்டதைக் கண்ட அவனது படைகள் போரை நிறுத்தி வாட்களைக் கீழே எறிந்தன. சரணாகதிக்கு அறிகுறியாக, வாளையும் எறிந்துவிட்டுப்புரவியில் பறந்துவிட்ட எதிரியை நோக்கிய விஜயபாகுவின் முகத்தில் இகழ்ச்சிக் களை படர்ந்தது.

அப்பொழுது சிங்கள இளவலை அணுகிய ஜேட்டதிஸ்ஸன், "மகாராஜா! எதிரி ஆயுதங்களையும் கீழே போட்டுவிட்டு ஓடிவிட்டான்" என்று கூறினான்.

விஜயன் தனதுபடைத்தலைவனை நோக்கி, "ஜேட்டதிஸ்ஸா! இன்று அவன் வாளை மட்டும் போடவில்லை. களத்தில் வீரத்தையும் போட்டுவிட்டான்" என்றான் வெறுப்புடன்.

zeevaa

''அவன் மனைவி மக்கள்...'' என்றான் ஜேட்டதிஸ்ஸன்.

''அவர்களையுந்தான் கைவிட்டு விட்டான்'' என்று கூறினான். மேலும் சொன்னான்: ''ஜேட்டதிஸ்ஸா! இந்தப் போருடன் குட்டசாலக மண்டலமும் சிங்களத்தின் தென்பகுதி முழுவதும் நமது வசமாகிவிட்டது. நீ படைகளைத் திரட்டி இங்கு ஒழுங்கை நிலை நிறுத்திவிட்டு வா. உன்னை குட்டசாலக நகரில் சந்திக்கிறேன்'' என்று கூறிப் புரவிகளைத் திருப்பினான் போர்க்களத்திலிருந்து. இளைய கேசதாது மிக வேகமாக விரைந்தான் சோழர்களிருந்த பகுதியை நோக்கி.

''மனைவி மக்களை விட்டு ஓடுபவன் ஒரு மனிதனா?'' என்று வினவினான் ஜேட்டதிஸ்ஸன்.

புரவியைச் செலுத்த முற்பட்ட விஜயபாகு திரும்பி ''ஜேட்டதிஸ்ஸா! அவன் ஒரு துறவி'' என்றான்.

''துறவியா!'' ஜேட்டதிஸ்ஸன் குரலில் வியப்பு இருந்தது.

''ஆம். மனைவி மக்களை துறந்தான். மானத்தைத் துறந்தான், வீரத்தைத் துறந்தான். இன்னும் துறக்க என்ன இருக்கிறது?'' என்று கேட்ட விஜயன் தன் புரவியை மெதுவாக நடக்கவிட்டான் மச்சுஸ்தலாவை நோக்கி.

குபுலகல்லா போரின் விளைவாக அவன் தோளின் இரண்டொரு இடங்களிலும் இடது காலின் மேற்பகுதியிலும் காயம்பட்டு அவற்றிலிருந்து ரத்தம் லேசாக வந்து கொண்டிருந்தாலும், அவற்றைப் பற்றியெல்லாம் நினைக்காமல் போர்க்களத்தை விட்டு மிகுந்த சிந்தனையுடன் புரவியை மெதுவாக நடத்திச் சென்ற விஜயனைக் கண்ட மூர்சமதும் தனது புரவியையும் திருப்பிக் கொண்டு எசமானைத் தொடர்ந்தான். போரின் மும்முரமான இடத்தில் அவனும் உட்புகுந்து போரிட்டதால் அவன் உடலிலும் சிறு காயங்கள் இருந்தாலும் அவற்றைப் பற்றி லட்சியம் செய்யாமல்

zeevaa

விஜயன் காயத்தைப் பற்றியே நினைத்துக் கொண்டும் அவற்றுக்குப் பரிகாரம் செய்யும் நோக்கத்தையே பிரதானமாகக் கொண்டும் எசமானை நெருங்கிய மூர்சமத் ''எசமான்! தங்கள் உடலில் இருக்கிற காயங்களை சிறிது கழுவிச் சிகிச்சை செய்ய அனுமதியுங்கள்'' என்று வணக்கத்துடன் கேட்டான். சற்று எட்ட ஓடிக் கொண்டிருந்த ஒரு அருவியையும் காட்டி ''சற்று இறங்குங்கள். அந்த அருவியில் காயங்களை கழுவி மருந்து போட்டு விடுகிறேன்'' என்றும் கூறினான்.

விஜயன் அவனை நோக்கித்திரும்பி ''சமத்! காயங்கள் அப்படி யொன்றும் பலமில்லை. சிறிது நேரத்தில் குருதிதானாகவே உறைந்து நின்றுவிடும்'' என்று கூறினான்.

''சற்று அருவிக்கரையில் இறங்குங்கள். எதற்கும் நான் காயங்களைப் பார்த்துவிடுகிறேன்'' என்று மூர்சமத் பிடிவாதம் பிடிக்கவே அருவிக்கரையை நோக்கி விஜயன் தனது புரவியைச் செலுத்தினான்.

அவனுக்கு முன்னதாகவே அருவிக்கரையை அடைந்த மூர்சமத், விஜயன் புரவியிலிருந்து இறங்கியதும் அவனது ஆடைகளை லேசாக இரண்டொரு இடங்களில் நீக்கி காயங்களை சோதித்து அவற்றை அருவிநீர் கொண்டு கழுவினான், பிறகு தனது புரவியின் தோற்பையில் சித்தமாக வைத்திருந்த பச்சிலைக் களிம்பை எடுத்துக் காயங்களில் தடவிவிட்டு திருப்தியடைந்தவனாய் தலையை அசைத்து ''இனி நீங்கள் கிளம்பலாம்'' என்று சொன்னான் விஜயனை நோக்கி.

''உன் காயங்களைக் கவனிக்க வேண்டாமா?'' என்று விசாரித்தான் விஜயபாகு.

''தேவையில்லை எசமான். என் காயங்களில் குருதி நின்றுவிட்டது. மச்சுஸ்தலாவுக்குப் போய் நான் அவற்றைக் கவனித்துக் கொள்கிறேன்'' என்றான் மூர்சமத்.

zeevaa

விஜயன் முகத்தில் வியப்பைக் காட்டி, "நான் மச்சுஸ்தலாவுக்குப் போகிறேனென்பது உனக்கு எப்படித் தெரியும்?" என்று வினவினான்.

"வேறு எங்கு போக முடியும்? அங்குதானே தங்கள் ராணிகள் இருக்கிறார்கள்?" என்று சர்வசாதாரணமாகக் கூறினான் மூர்சமத்.

"சமத்!" விஜயன் அழைப்பு மிதமிஞ்சிய உணர்ச்சியுடன் வெளிவந்தது.

"என்ன எசமான்?"

"எனக்குச் சிகிச்சை செய்ய இரண்டு ராணிகள் இருக்கிறார்கள். உனக்கு யார் இருக்கிறார்கள்?"

"நீங்களிருக்கிறீர்கள். வேறு யார் எனக்கு வேண்டும்?"

"நானிருந்து பயன் என்ன?"

மூர்சமதின் முகத்தில் முதன் முதலாக சற்று உணர்ச்சி தெரிந்தது. "எசமான்! கலிங்கத்துக் கப்பலில் எனக்குச் சிகிச்சை செய்ய கலிங்கத்து அரசகுமாரியையே நியமித்தீர்கள். அப்பேர்ப்பட்ட எசமானிருக்க வேறு யாரும் எனக்குத் தேவையில்லை" என்று உணர்ச்சி தொனித்த குரலில் கூறினான் சமத்.

விஜயன் உணர்ச்சியின் எல்லையை எய்தியதால் மூர்சமதை அப்படியே தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டான். "மூர்சமத்! நீ இருக்கும்போது எனக்கு உலகில் யாரும் தேவையில்லை" என்றான் அவனை அணைத்த வண்ணம்.

மூர்சமதின் கண்களில் சிறிது கலக்கம் தெரிந்தாலும் அவன் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், "ராணிகள் கூடத் தேவையில்லையா?" என்று வினவினான்.

விஜயன் பலமாக நகைத்தான். "சமத்! உனக்கு நகைச்சுவையும் இருக்கிறது. சரி வா. சீக்கிரம் ராணிகள் இருக்குமிடம் போவோம்"

zeevaa

என்று கூறிப் புரவிமீது ஏறினான். புரவியை வேகமாகச் செலுத்தி அன்றிரவில் மச்சுஸ்தலா வந்து சேர்ந்தான். அவனை எதிர்கொண்ட ராணிகளை நோக்கி, ''முதலில் மூர்சமதின் காயங்களைக் கவனியுங்கள்'' என்று உத்தரவிட்டான்.

அந்தக் கட்டளையைக் கேட்டு ராணிகள் இருவரும் மலைத்தார்கள். அந்த மலைப்பைக் கவனித்த விஜயன், ''இன்று குபுலகல்லாவில் தோற்று ஓடிய இளைய கேசதாதுவுக்கு மாறுபட்ட துறவி இவன். மகாவீரன். தனது சுகங்களையெல்லாம் எனக்காக உதறியவன்'' என்று கூறி மூர்சமதை நோக்கித் திரும்பினான். மூர்சமத் அங்கில்லை. இரு புரவிகளையும் அழைத்துக்கொண்டு புரவிக்கொட்டடியை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.



zeevaa

# 46. பஞ்சணை தந்த வேதனை

மச்சுஸ்தலா மாளிகை வாயிலிலேயே தன்னை எதிர் கொண்ட ராணிகளிருவரையும் முதலில் மூர்சமதின் காயங்களைக் கவனிக்கும்படி உத்தரவிட்டும், அவர்களின் பணிவிடையை ஏற்க மறுத்துப் புரவிகளிரண்டையும் அழைத்துக் கொண்டு கொட்டடியை நோக்கி நடந்து கொண்டிருந்த மூர்சமதை நோக்கிய விஜயன் கண்களில் வியப்புக் கலந்த நன்றியும் மதிப்பும் தாண்டவமாடவே ராணிகளிருவரும் பொறாமை கொள்ளவே செய்தனர். அதன் விளைவாக திரிலோகசுந்தரி சொன்னாள், ''எங்களை மணந்ததை விட மூர்சமதையே மணந்திருக்கலாம்'' என்று.

''ஏன் மணக்கவில்லையென்பதற்கு இன வேற்றுமை தான் காரணமாயிருக்கும்'' என்று தூபம் போட்டாள் சுடர்விழி.

மூர்சமதிடம் தான் கொண்ட அக்கறை காரணமாக ராணிகள் இருவரும் தன்னைக் கேலி செய்வதைப் புரிந்து கொண்ட விஜயன், ''ராணிகளே! நீங்கள் சொல்வதில் பொருளில்லை'' என்று கூறினான்.

''ஏன் பொருளில்லை?'' என்று வினவினாள் திரிலோக சுந்தரி.

''இத்தனை நாட்கள் மனைவிகளைப் பிரிந்திருந்தும் மூர்சமதைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறீர்களே?'' என்று குற்றம் சாட்டினாள் சுடர்விழி.

விஜயன் அவர்கள் சொல்தாக்குதல்களைக் கண்டு சிறிதும் மசிந்தானில்லை. ''காரணம் உங்களுக்குத் தெரியாது'' என்று மட்டும் சொன்னான் உற்சாகம் நிறைந்த குரலில்.

zeevaa

''என்ன காரணமோ?'' -சுந்தரி வினவினாள் சுடு குரலில்.

''ஏதாவது காரணம் கண்டு பிடிப்பார்'' -சுடர்விழி இகழ்ச்சி நிரம்பிய குரலில் சொன்னாள்.

அந்த ராணிகளின் மனம் விஜயனுக்குச் சந்தேகமறப் புரிந்திருந்தாலும், இந்தனை நாள் பிரிந்ததால் ஏற்பட்ட வேட்கையே அவர்கள் சினத்துக்கும் பிணக்குக்கும் அஸ்திவாரம் என்பது அறிந்தே இருந்தாலும், அதை வெளிக்குக் காட்டாமலே, ''சுந்தரி! சுடர்விழி! எனக்குத் தாயாரில்லை'' என்றான் கனிவு நிரம்பிய குரலில்.

''கடைசி வரையில் யாருக்குத்தான் தாயாரிருப்பார்கள்? என்றாவது ஒருநாள் அந்தப் பிரிவு வந்துதானே தீரும்?'' என்று தத்துவம் பேசினாள் திரிலோகசுந்தரி.

''தாயாரை எங்கிருந்து கொண்டுவரமுடியும்? தாய்க்கு இணை தாய் தானே?'' என்றாள் சுடர்விழி.

''அப்படியல்ல சுடர்விழி, சுந்தரி. எனக்குத் தாய்க்குப் பதில் மூர்சமத் இருக்கிறான். என்மீது தும்பு பட்டாலும் சகிக்கமாட்டான். குபுலகல்லா போர்முடிந்ததும் என்னைத் துரிதப் பயணம் செய்யவிடவில்லை அவன். வழியில் ஓர் அருவியில் இறக்கி எனது காயங்களுக்குச் சிகிச்சை செய்த பின்பே புரவியேற விட்டான். அவன் காயங்களை அவன் கவனிக்கவில்லை. இங்கு வந்த பிறகு உங்களை அவன் காயங்களைப் பரிசோதிக்கச் சொன்ன பிறகும் அவன் அதைப்பற்றி பதிலேதும் சொல்லாமல் புரவிகளை அழைத்துக்கொண்டு கொட்டடிக்குச் சென்றுவிட்டான். புரவிகளைத் தேய்த்துவிட்டு அவற்றுக்குத் தீனி போட்ட பிறகுதான் தன்னைப் பற்றிச் சிந்திப்பான். வேண்டுமானால் போய்ப் பாருங்கள்'' என்று ராணிகளை நோக்கி கூறிவிட்டு மாளிகைக்குள் சென்றான் விஜயன்.

zeevaa

அவனைத் தொடராமல் கொட்டடியை நோக்கிச் சென்றனர் ராணிகளிருவரும். அங்கு மூர்சமத் மேலங்கியை நீக்கிவிட்டு இடுப்பு வரையில் சராய் அணிந்தபடி புரவிகளைத் தேய்த்துவிட்டுக் கொண்டிருந்தான். அவன் மார்பில் காணப்பட்ட இரண்டு பெரிய வெட்டுக் காயங்களையும், வலது காலில் பாய்ந்த ஒரு வேலின் விளைவாகச் சராயில் பட்டுக் காய்ந்திருந்த சக்கர வட்டமான குருதிக் கறையையும் பார்த்த ராணிகள் அந்தக் கர்ம வீரனைக் கண்டு பிரமித்தார்கள். அவர்கள் கொட்டடிக்குள் வந்ததைக் கூடப் பாராமல் புரவிகளைத் தேய்ப்பதில் முனைந்திருந்ததைப் பார்த்த சுந்தரி, "சமத்!" என்று மெதுவாக அழைத்தாள்.

ராணியின் குரல் திடீரென்று கேட்டதால் புரவியைத் தேய்ப்பதை நிறுத்திச் சற்றே திரும்பிய மூர்சமத் "மகேசி! என்ன கட்டளை?" என்று கேட்டான்.

சுந்தரி பதில் சொல்லுமுன்பு சுடர்விழி முந்திக் கொண்டு, "சமத்! உன் உடம்புக் காயங்களை கவனித்து விட்டுப் புரவிகளைக் கவனிக்கக் கூடாதா?" என்று வினவினாள்.

மூர்சமத் அவ்விருவரையும் வியப்புடன் நோக்கிவிட்டு, சுடர்விழிமீது தன் பார்வையை நிலை நிறுத்தி, "ராணி! இந்த உடம்பைச் சுமந்து செல்லும் இந்தப் புரவிக்குத் தனது அலுப்பை வாய்விட்டுச் சொல்ல முடியாது. அதைக் கவனித்துவிட்டு எனது உடம்பை நான் கவனிக்கிறேன். அப்படி எனக்குக் காயம் எதுவும் பலமில்லை" என்று கூறிவிட்டு, "நீங்கள் சென்று மன்னரைக் கவனியுங்கள்" என்றான்.

அதைக் கேட்ட சுந்தரி புன்முறுவல் கொண்டாள். "சமத்! தாயைக் கவனிக்காமல் நாங்கள் சேயைக் கவனிக்க முடியாது," என்றாள்.

"தாயா!" பிரமிப்புடன் வந்தது சமதின் கேள்வி.

zeevaa

''ஆம். நீ எங்கள் கணவருக்குத் தாயார். ஆகையால் எங்கள் மாமியார், உங்களை முதலில் கவனிக்கிறோம் வாருங்கள்,'' என்று கூறிய சுந்தரி, ''சுடர்விழி! சிறிது துணியை எடு,'' என்றாள்.

சுடர்விழி துணி ஏதும் கொண்டு வராததால் தனது முந்தானையைச் சிறிது கிழித்துக்கொடுக்க சுந்தரி அங்கிருந்த நீரில் அதைப் பிழிந்து மூர்சமதின் மார்பு காயங்களைக் கழுவினாள். ''ஐயோ! விடுங்கள் என்னை. இது தகாது தங்கள் பதவிக்கு. நான் கேவலம் பணியாள்,'' என்று சமத் அலறியும் இருவரும் கேட்கவில்லை. அவன் மார்புக் காயங்களைத் துணிகொண்டு துடைத்தாள் சுந்தரி. காலில் சராயைச் சிறிது கிழித்து, கணுக்காலுக்குச் சிறிது மேலே வேல் பாய்ந்த காயத்தைச் சுடர்விழி துடைத்தாள். ''உன்னிடம் ஏதோ களிம்பு இருக்கிறதாமே?'' என்று கேட்ட சுந்தரி அவன் மேலங்கிப் பையிலிருந்து அதை எடுத்து வந்து காயங்களுக்குத் தடவினாள். ''சமத்! இனிப் புரவிகளை நீ கவனி. சீக்கிரம் உனக்கு உணவை அனுப்பி வைக்கிறோம்,'' என்று சுந்தரி கூற, இருவரும் மாளிகையை நோக்கி நடந்தார்கள்.

மாளிகையில் அவர்கள் நுழைந்தபோது முதல் கூடத்தின் நடுவிலேயே விஜயன் உட்கார்ந்திருந்தான். சுந்தரியும் சுடர்விழியும் வேகமாக உள்ளே நுழைவதைப் பார்த்ததும், ''சமத்!'' என்று ஏதோ சொல்லத் துவங்கியவனை பேச வொட்டாமல் தடுத்த சுடர்விழி, ''மாமியாரைக் கவனித்து விட்டோம். இனி மருமகப் பிள்ளையைக் கவனிக்கிறோம்,'' என்றாள். சுந்தரி அதிகமாக ஏதும் பேசாமல், ''வாருங்கள் நீராட்ட அறைக்கு,'' என்று அவனது வலது கையைப் பிடித்துத் தூக்கினாள். இடது புறம் அதே சேவையைச் சுடர்விழியும் செய்யவே இரண்டு வீரர்களுக்கிடையில் செல்லும் கைதியைப் போல விஜயன் அவர்களிடையே சென்றான். வேறு பணிமக்கள் யாரையும் விடாமல் இரண்டு ராணிகளுமே அவனுக்கு

zeevaa

நீராட்டினார்கள். வாசனை திரவியங்களின் சொட்டுக்கள் விடப்பட்ட பரிமளமான நீரை அவன் மீது மொண்டு சுந்தரி ஊற்ற வாசனைப் பொடி கொண்டு அவன் உடலைச் சுடர்விழி தேய்க்க மகாராஜாவுக்குச் சுகஸ்நானம் நடந்தது. இருவரும் அவனை நீராட்ட வேண்டிய அவசியத்தால் தங்கள் ஆடையின் மேற்பகுதியை இழுத்து இடுப்பில் கட்டிக் கொண்டு, நீர் படாதிருக்கத் தங்கள் சேலையையும் தூக்கி இடுப்பில் செருகிக் கொள்ளவே அவர்கள் வழவழத்த தொடைகளைக் கண்ட வண்ணம் நீராடிய விஜயன் தனது தலையில் அவர்கள் நீரை மொண்டு ஊற்றியபோது கண்களின் மீது நீர் வழிந்தோடியதன் விளைவாகக் கண்களில் அவர்கள் தொடைகளின் பரிமாணம் சற்று அதிகமாகவே தெரிந்ததைக் கண்டு உணர்ச்சிகளில் சிக்கி, "இங்குதான் விஞ்ஞானம் வருகிறது." என்று கூறினான்.

"விஞ்ஞானமா?" என்றாள் நீரை மொண்டு ஊற்றிய சுந்தரி.

முகத்திலிருந்த நீரைத்துடைத்துக் கொண்ட விஜயன், "ஆமாம், விஞ்ஞானம்தான்!" என்றான்.

"விஞ்ஞானத்திற்கு என்ன இப்பொழுது?" எரிந்து விழுந்தாள் சுடர்விழி.

"சுந்தரி என் தலையில் நீரை மொண்டு ஊற்றினாளா?" என்று துவங்கினான் விஜயன்.

"ஆமாம் ஊற்றினேன். அதனாலென்ன?" -சுந்தரியின் குரலில் பொய் ஆத்திரம் துலங்கியது.

"ஊற்றும் நீர் முகத்தில் விழுகிறது." விஜயன் விளக்க முற்பட்டான்.

"விழுந்தாலென்ன?" சுடர்விழி கேட்டாள்.

zeevaa

"நான் உட்கார்ந்து நீராடுகிறேன்..." விஜயன் சொன்னான்.

"ஆம்," என்றாள் சுந்தரி.

"நீங்களிருவரும் நின்றுகொண்டு என்னை நீராட்டுகிறீர்கள்."

"ஆம்."

"அதனால் எனது இரு பக்கங்களிலும் இரண்டு..."

"ஓகோ!"

"நீர் முகத்தில் விழுவதால்..."

"விழுவதால்?"

"நீரின் மூலம் பார்க்கும்போது உங்கள் மேல்கால்கள் நான்கும் பெரிதாகக் கதலி..."

"நிறுத்துங்கள்," என்றாள் சுந்தரி.

"பொல்லாத கண்கள்," என்றாள் சுடர்விழி.

ஆனால் இந்த இருவர் சொற்களிலும் ஆவல் நிறைந்து கிடப்பதைக் கவனித்த விஜயன் அவர்களைத் தலை துவட்டச் சொல்லி எழுந்தான். இருவரும் அவன் உடலையும் கால்களையும் துவட்டிய பிறகு அவர்களை வெளியே செல்லப் பணித்த விஜயன் நீராட்ட அறைக் கதவைச் சாத்திக் கொண்டு உடல் பூராவையும் துடைத்துக் கொண்டு அங்கிருந்த பட்டாடையை அணிந்து வெளியே வந்தான். கதவுக்கருகிலேயே நின்ற ராணிகள் அவன் காயங்களுக்கு மருந்துபோட்டதும் அவனை உள்ளறைக்கு அழைத்துச் சென்று உணவு பரிமாறினார்கள். அவர்களையும் உணவருந்த வருமாறு சொல்லித் தனது சயன அறைக்குச் சென்று

பஞ்சணையில் மல்லாந்துவிட்ட சிங்கள இளவல் தனது சுகந்த நீராட்டத்தையும், நீராட்டத்தைக் கூட மறக்கடித்த இரு ராணிகள் ரகசிய அழகுகளையும் நினைத்து நினைத்து உணர்ச்சி வசப்பட்டுக் கொண்டிருந்தான்.

இரவு நன்றாக முற்றிவிட்ட சமயம். சாளரத்தின் மூலம் தென்றல் மிக மெதுவாக வந்து அவன் உடல்மீது இதமாக ஊர்ந்து கொண்டிருந்தது. சாளரத்துக்கு வெளியே வானில் மின்னிய நட்சத்திரங்களின் மிக லேசான வெளிச்சம் வெளிச்சமாகவே காணப்படாததால், அநேகமாக அறையில் இருட்டுத்தான் சூழ்ந்திருக்க வேண்டும். அங்கிருந்த அலங்காரத் தூங்கா விளக்கு மட்டும் கண்சிமிட்டி எரியாவிட்டால், விளக்கு மங்கலாயிருந்தாலும் அவன்மீது ராணிகள் பூசிய நறுமண நீராட்டப் பொடியின் காரணமாகவோ, தலையில் தடவித்தான் பிறகு வாரிக் கொண்ட எண்ணெயின் சுகந்தத்தினாலோ அந்த அறையை மணம் சூழ்ந்திருந்தது. அதை அவன் முகர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கையில் உள்ளே வந்த சுடர்விழி தனது கையிலிருந்த சாம்பிராணி கிண்ணத்தை ஒரு மூலையில் வைக்கவே .அதன் நறுமணம் வேறு அறையைச் சூழ்ந்து கொண்டது.

சுடர்விழி வந்ததும் சுந்தரியும் உள்ளே வந்தாள். இருவரையும் கட்டிலிலிருந்தபடியே மாறி மாறிப் பார்த்த விஜயன் அவர்கள் உடை மிகச் சிக்கனமாக இருப்பதைக் கவனித்தான். இருவரும் நீராடியிருந்ததால் அவர்கள் கருங்குழல்கள் லேசான பட்டுக் கயிற்றால் கட்டப்பட்டிருந்தாலும் முக்கால் கூந்தல் பிரிந்தே நின்றன. இருவரும் அந்த இரவிலும் மைதீட்டியிருந்தார்கள் தங்கள் கருவிழிகளுக்கு "இருட்டில் எதற்காக மை தீட்டவேண்டும்?" என்று தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டாலும் அந்த மையும் அவன் உணர்ச்சிகளைக் கிளறலாயிற்று.

zeevaa

இருவரும் சிறு கச்சைகளையே அணிந்திருந்தார்கள். சேலைக்குப் பதில் சிற்றாடையே அணிந்திருந்ததால் அந்த ஆடைகள் மறைப்பதுபோல் அரை குறையாக வெளிப்படுத்திய அழகுகள் சிங்கள இளவலின் சித்தத்தை அள்ளிச் சென்றன.

இரு அழகிகளும் அவன் இரு பக்கங்களிலும் அமர்ந்து அவன் கால்களை வருடினார்கள். "மன்னவா! போருக்குப் பின்பு களைத்து வந்திருக்கிறீர்கள். பேசாமல் உறங்குங்கள்." என்றாள் சுந்தரி, அவன் வலது காலைச் சற்று அதிகமாகவே அழுத்திக் கொடுத்து.

"சுந்தரி சொல்வது உண்மைதான் மகாராஜா- போரில் வெற்றிவாகை சூடி வந்திருக்கிறீர்கள். உடம்பில் காயங்கள் வேறு இருக்கின்றன," என்ற சுடர்விழி அவன் இடது காலின் மேற்பகுதியை வருடினாள்.

"போர்வீரர் காயத்துக்கு மருந்து எது தெரியுமா?" என்று விஜயன் சொன்னான் கூரையைப் பார்த்த வண்ணம்.

"எது சொல்லுங்கள்," என்றாள் சுடர்விழி.

"அந்த மருந்தை நாங்கள் அளிக்கிறோம்," என்றாள் சுந்தரி.

"பெண்களே கதை சொல்லட்டுமா?" என்று வினவினான் விஜயன் புன்முறுவல் கொண்டு.

"சொல்லுங்கள்," என்றாள் சுந்தரி.

"ராமன் என்றொரு மகாவீரன் இருந்தான்..." விஜயன் துவங்கினான்.

"ராமாயணம் எங்களுக்கும் தெரியும்..." என்றாள் சுந்தரி.

"ஆனால் ஒன்று தெரியாது உங்களுக்கு," என்ற விஜயன் லேசாக நகைத்தான்.

zeevaa

"எது?" சுடர்விழி கேட்டாள்.

"தண்டகாரண்யத்தில் கரதூஷணர்களுடன் போரிட்டு வெற்றி கொண்ட ராமன் மார்பில் பல காயங்களுடன் சீதையிடம் வந்தான். அவள்..."

"சொல்லுங்கள்," என்றாள் சுந்தரி.

"சீதை அவன் காயங்களுக்கு மருத்துவம் செய்தாள்..." விஜயன் தயங்கினான்.

"எப்படி?" சுடர்விழி கேட்டாள்.

"பர்த்தாரம் பரிவுஸ்வஜே" என்று சமஸ்கிருதத்தில் சொன்ன விஜயன், "கணவனை இறுக அணைத்தாள். அதுவே மருந்தாயிற்று அவனது காயங்களுக்கு. கணவனுக்கு மருத்துவம் பார்க்கும் முறை அதுதான்," என்று தமிழிலும் சொல்லி, "வால்மீகி முனிவரே இதை எழுதியிருக்கிறார், இது என் கற்பனை அல்ல," என்றவாறு கண்களை மூடிக்கொண்டான்.

இதைக் கேட்டதும் சுந்தரி தனது விழிகளைச் சுடர் விழியின் விழிகளுடன் கலந்தாள். அடுத்து இரு மங்கையரும் அவன் மார்புமீது படுத்தார்கள். இருவருடைய பனைத்த மார்பகங்கள் பட்டதால் உணர்ச்சி வெள்ளத்தில் அழுந்தினாலும் அதை வெளிக்குக் காட்டாமல், "அடடே! என்ன செய்கிறீர்கள் என்னை?" என்று எரிந்து விழுவது போல் நடித்தான்.

"மருத்துவம் செய்கிறோம்," என்றாள் சுந்தரி அவன் இடது காதுக்கருகில்.

"முனிவர் சொன்னபடி செய்கிறோம்" என்றாள் சுடர்விழி அவன் வலது காதுக்கருகில்.

zeevaa

விஜயன் அவர்கள் அணைப்பில் திண்டாடினான். அவன் கைகள் மேலெழுந்து அவர்கள் இருவர் கழுத்தையும் இறுக்கின. பிறகு முன்புறமாக இறங்கித் துழாவத் தொடங்கின.

இரு பெண்களும் பேசவில்லை. உணர்ச்சிப் பெருக்கால் பெருமூச்சு விட்டனர். "சரி சரி! உறங்குங்கள்," என்றாள் சுந்தரி.

"ஆம், அலுத்திருக்கிறீர்கள்," என்று கூறிவிட்டுக் கட்டிலை விட்டிறங்கித் தரையில் படுத்துக் கொண்டாள் சுடர்விழி.

"நானும் வருகிறேன் சுடர்விழி" என்றாள் சுந்தரி.

"வேண்டாம். எனக்கு இதுவே சௌகரியமாயிருக்கிறது," என்ற சுடர்விழி, "அக்கா! இந்த மண்ணுக்காகத்தான் மன்னர் போராடு கிறார். அதைவிடக் கட்டில் உயர்ந்ததா?" என்று வினவினாள். பிறகு கண்களை மூடி உறங்கிவிட்டாள். உறங்கிவிட்டாளா, உறங்கிய தாகப் பாசாங்கு செய்தாளா? கட்டிலில் இருந்த இருவருக்கும் தெரியாது. நள்ளிரவுக்குப் பின்பு அலுத்து உறங்கினாள் சுந்தரி.

அவளை நித்திரை சோதித்த விஜயன் கட்டிலிலிருந்து இறங்கி மண்ணில் கிடந்த மலர் உடலைத் தழுவினான். அவள் கைகளும் எழுந்து அவனை வளைத்து இறுக்கின.

"நான்..."

"வருவீர்களென்பது தெரியும்."

இதைச் சொன்ன பிறகு சுடர்விழி பேசவில்லை. பேச்சுக்கு அவசியமில்லாத நேரம் கட்டிலில் கிடந்த சுந்தரி சிந்தித்தாள். பூனை கண்ணை மூடிக்கொண்டால் உலகம் அஸ்தமித்து விட்டதாக நினைக்கிறது!" என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டாள். மெல்லப் புன்முறுவல் கொண்டாள். கீழிருந்து மெல்லக் காதில் விழுந்த அரவத்தால் பஞ்சணையும் நொந்தது அந்தப் பைங்கிளிக்கு.

zeevaa

அப்பொழுது சிந்தித்தாள் சுந்தரி. ''சோழர் சிறையிலிருக்கும் மூன்றாமவளும் வந்தால் நிலைமை எப்படி?'' என்று. அந்த நினைப்பு, பஞ்சணை தந்த வேதனையை விட அதிக வேதனையைத் தந்தது.



zeevaa

# 47. பட்டணப் பிரவேசம்! பயங்கர அலறல்!!

மச்சுஸ்தலாவின் மாளிகைப் பஞ்சணையில் இரவு நிகழ்ச்சியால் துவண்டு கிடந்த கலிங்கத்துப் பைங்கிளி கண்விழித்தபோது வெளியே மரங்களிலிருந்த பட்சி ஜாலங்கள் உதயகால கீதத்தைப் பலவகைக் குரல்களில் ஒலித்துக் கொண்டிருந்ததாலும், பள்ளியறைச் சாளரத்தை அடுத்து, சுவரில் தொற்றி ஏறியிருந்த ஒரு வாசமலர்க் கொடியின் இன்ப வாசனையும் அவளது செண்பக மொட்டுப்போன்ற நாசியில் நுழைந்து அவளைப் பரவசப்படுத்தியதாலும், உதயமாகிச் சிறிது நேரமும் ஆகிவிட்டதை உணர்ந்தாள். அதன் விளைவாகப் பஞ்சணையின் கோடிக்குப் புரண்டு கீழே தரையை நோக்கவும் செய்தாள். அங்கு சுடர்விழி இதழ்களில் இன்ப முறுவல் படர, உடல் அலுத்து அலங்கோலமாகப் படுத்திருந்ததைக் கண்டதும், 'சிங்களத்து மகேசி நானா, இவளா?' என்று உள்ளூர எண்ணி, 'இளையாளிடந்தான் எந்தக்கணவனுக்கும் அதிக ஆசை' என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டு கட்டிலிலிருந்து இறங்கிச் சுடர்விழியைக் குலுக்கி, "சுடர்விழி! எழுந்திரு. வெட்கமாயில்லை உனக்கு?" என்று சொல்லி எழுப்பினாள்.

சுடர்விழி மெள்ள கண்விழித்துத் திரிலோகசுந்தரியை நோக்கினாள். பிறகு அக்கம் பக்கத்தில் கண்களை ஓட்டினாள். "எதற்கு வெட்கம்?" என்று மெதுவாக வினவியவண்ணம் எழுந்து உட்கார்ந்து ஆடைகளைச் சரிசெய்து கொண்டாள்.

zeevaa

"ஆம். எதற்கு வெட்கம்?" என்று கேட்டுச் சுந்தரி நகைத்தாள். "இப்பொழுது அக்கம் பக்கத்தில் பார்த்தாயே, யாரைத் தேடினாய்?" என்று நகைப்பின் ஊடே கேட்கவும் செய்தாள்.

"தேட யார் இருக்கிறார்கள் இங்கே?" என்று சுடர் விழியும் கேட்டாள்.

"நாமிருவர்தான் இருக்கிறோம். ஒருவரையொருவர் தேட அவசியமில்லை. இருவரையும் விட்டுப்போன அந்தக் கள்வரைத் தான் தேட வேண்டும்" என்ற சுந்தரி, "வா சுடர்விழி அவர் நமக்கு முன்னரே எழுந்து போய்விட்டார். அவர் எங்கேயென்று பார்ப்போம். நாம் இத்தனை நேரம் கழித்து எழுந்திருப்பதைப் பார்த்தால் பணிப்பெண்கள் நகைப்பார்கள்" என்றும் சுட்டிக்காட்ட, சுடர்விழி சற்றுத் திணறி எழுந்திருந்தாள்.

பிறகு ராணிகளிருவரும் அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றதும் அவர்களைச் சந்தித்த ஒரு பணிப்பெண், "நீங்கள் நீராடலாம். எல்லாம் சித்தமாயிருக்கின்றன" என்றாள்.

சுந்தரியும் சுடர்விழியும் பரஸ்பரம் பார்த்துக்கொண்டார்கள். இருவர் பார்வையிலும் அர்த்தங்கள் ஆயிரமிருந்ததைப் பணிப்பெண் கண்டாலும், காரணத்தை அவள் அறிந்திருந்ததால், அதை வெளிக்குக் காட்டாமலே, "சிங்கள மன்னர் சித்தமாகி விட்டார். உங்களுக்காகக் காத்திருக்கிறார்" என்று அறிவித்தாள்.

"எங்களுக்காகவா!" வியப்பிருந்தது சுந்தரியின் குரலில்.

"காத்திருக்கிறாரா!" அதிக வியப்பிருந்தது சுடர்விழியின் குரலில்.

"ஆம்" என்றாள் பணிப்பெண். தனது முகபாவத்தை ராணிகள் உணராதிருக்கத் தலை தாழ்த்திக் கொண்டு தரையைப் பார்த்தாள்.

zeevaa

''எதற்காகக் காத்திருக்கிறார்?'' என்று சுந்தரி வினவினாள்.

''பயணத்துக்காக'' என்ற பணிப்பெண், ''புரவிகள் சித்தமாயிருக் கின்றன'' என்றும் சொன்னாள்.

அதற்குமேல் பணிப்பெண்ணைக் கேள்வி கேட்பதில் அர்த்த மில்லையென்பதைப் புரிந்து கொண்ட ராணிகள் இருவரும் நீராட்ட அறையை நோக்கிச் சென்றார்கள். துரிதமாக நீராடி, புத்துடை புனைந்து, குழலைச்சீவி முடித்து சர்வாலங்காரத்துடன் விஜயனிருந்த கூடத்துக்கு வரவே, அவர்களை நோக்கிய விஜயன், ''ஏன் இத்தனை நேரம்? உதயமாகி நான்கு நாழிகைகள் ஓடிவிட்டன'' என்று உஷ்ணமாகவே கேட்டான்.

''ஏன் இத்தனை நேரமா?'' என்று கேட்டு, வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டாள் சுந்தரி.

''அவருக்குப் புரியவில்லை, கேட்கிறார்'' என்று கூறிய சுடர்விழி இகழ்ச்சி கலந்த இளநகை கூட்டினாள் தனது இதழ்களில்.

அவர்கள் உதிர்த்த சொற்களின் கருத்தைப் புரிந்து கொண்டாலும் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாத விஜயன், ''ராஜ்யபாரத்தைச் சுமக்க வேண்டிய ராணிகள் தூங்குமூஞ்சிகளாக இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் ராஜ்யம் விடியாது'' என்று சற்றுக் கடுமையாகப் பேசினான்.

அவன் சொற்களைக் கேட்ட சுந்தரி, ''மகாராஜா நீங்கள் சொல்வது நியாயந்தான்'' என்றாள்.

''சுமக்க வேண்டியது ராஜ்யபாரமாக மட்டும் இருந்தால் நீங்கள் சொன்னதில் தவறில்லை,'' என்றாள் சுடர்விழி.

இதைக் கேட்ட சுந்தரி மெல்ல நகைத்தாள். ''இதில் சிரிப்புக்கு என்ன இருக்கிறது? சென்ற போருடன் சிங்களத்தின் தென்பகுதி

zeevaa

பூராவும் நமது வசமாகிவிட்டது,'' என்றான் விஜயன். அந்த விடுதலையை நினைத்து முகத்தில் மகிழச்சியையும் படர விட்டுக் கொண்டான்.

''ஆமாம். முன்பு இருந்ததைவிட இப்பொழுது அதிக பகுதியை ஆட்சி செய்ய வேண்டும்,'' என்றாள் சுந்தரி.

''அதனால் பாரம் அதிகமாகிறது,'' என்று சுடர்விழி மெதுவாகச் சொன்னாள்.

''சகலத்தையும் சேர்த்து, பாரம் நமது மீதுதானே விழும்?'' என்றாள் சுடர்விழி.

ராணிகளிருவரின் இடக்குப் பேச்சு விஜயபாகுவுக்குப் புரியாமலில்லை. இருப்பினும் அவன் அவர்களுக்குப் பதில் சொல்லாமல், ''ராஜ்யம் விஸ்தாரமாகும்போது கடமைகளும் அதிகமாகின்றன. இனி இந்த தக்ஷிண சிங்களத்தின் நிர்வாகத்தையும் பாதுகாப்பையும் திடப்படுத்த வேண்டும். ஆகவே நாம் இப்பொழுதே குட்டசாலகாவுக்குப் புறப்படுகிறோம். அந்த நகருக்கு நமது தளபதிகளும் வந்து சேருவார்கள். அங்கு மந்திராலோசனை நடத்துவோம்,'' என்று அவன் கூறவும் மூர்சமத் உள்ளே நுழையவும் நேரம் சரியாயிருந்தது.

விஜயனுடனும் ராணிகளிருவரும் சித்தமாயிருப்பதைப் பார்த்த மூர்சமத், ''மகாராஜா! புரவிகள் சித்தமாயிருக்கின்றன. தாங்கள் உத்தரவு கொடுத்தால் கிளம்பலாம்,'' என்று கூறிவிட்டு ராணிகளிருவரையும் பார்த்தான்.

''மூர்சமத்'' என்றாள் சுந்தரி.

''மகேசி,'' என்று தலைவணங்கினான் மூர்சமத்.

zeevaa

''எங்களை எதற்குப் பார்த்தாய்? நாங்கள் புறப்படச் சித்தமாகத்தானிருக்கிறோம்,'' என்றாள் சுந்தரி.

''தெரிகிறது மகாராணி,'' என்ற மூர்சமத், ''உங்களுக்கு நன்றி தெரிவிக்கப் பார்த்தேன்,'' என்றான்.

''எதற்கு நன்றி?'' என்று சுந்தரி கேட்டாள்.

''இந்த ஏழைக்கு நீங்களிருவரும் சிகிச்சை செய்தீர்கள். உங்கள் பதவி என்ன? இந்த அடிமையின் நிலை என்ன?'' என்றான் மூர்சமத்.

கலிங்க ராஜகுமாரி, ''சமத்!'' என்று உஷ்ணமாக அழைத்தாள்.

''அம்மணி!''

''எங்களைவிட மகாராஜா உன்னைத்தான் அதிகமாக நேசிக்கிறார்.''

''தவறு அம்மணி!''

''என்ன தவறு? உனக்கென்ன தெரியும் அவரைப் பற்றி?''

''ஆயிரம் பணிவிடைகள் நான் செய்தாலும் நீங்கள் செய்யும் பணிவிடைக்கு ஈடாகுமா?''

இதைச்சர்வசாதாரணமாகவும் அடக்கமான குரலிலும் மூர்சமத் சொன்னாலும், அவன் சற்று விஷமமாகப் பேசுகிறானென்பதை உணர்ந்து கொண்ட விஜயபாகு, சம்பாஷணையை வளர்த்தினால் ஏற்படக்கூடிய பூசலைத் தடுக்க, ''சரி சரி, மூர்சமத்! இதோ நாங்கள் கிளம்பி விட்டோம். நீ போய் நம்முடன் இருபது வீரர்களாவது வர ஏற்பாடு செய்,'' என்றான்.

zeevaa

"சிறு படைப்பிரிவே சித்தமாயிருக்கிறது" என்று கூறித் தலைவணங்கிச் சென்றதும் விஜயன் தனது ஆசனத்திலிருந்து எழுந்து ராணிகள் இருவரும் அக்கம் பக்கத்தில் வர வாயிலை நோக்கி நடந்தான். வாயிலில் இருந்து தனது புரவியின் அக்கம் பக்கத்தில் இரண்டு நல்ல புரவிகள் சேணமிட்டு நிற்பதைக் கண்டதும் ராணிகளைப் புரவிகளில் ஏறச்சொல்லித் தானும் தனது புரவிமீது பாய்ந்து ஏற, மூர்சமத் தனது பழுப்புநிறப் புரவியின் மீது ஏறி முன்னால் அதை நடத்திச் சென்றான். அடுத்து மகாராஜா இரு ராணிகளுடன் வர, பின்னால் படைப் பிரிவு தொடர ஏதோ ஊர்வலம் போல் விஜயபாகு ராணிகளுடன் சென்றான்.

மச்சுஸ்தலாவிலிருந்து கிளம்பிய விஜயபாகுவுக்கு வழியி லிருந்த கிராமங்களிலும் பட்டணங்களிலும் வரவேற்பு பலமா யிருந்தது. சிங்களத்தின் விடுதலை வீரன் என்ற முறையில் எங்கும் கொண்டாட்டமும் குதூகலமும் காணப்பட்டன. ஆங்காங்கு மடங்களிலிருந்த துறவிகள் அவனுக்கு ஆசி கூறினார்கள். மக்கள் காட்டிய உற்சாகத்தால் இதயத்தில் படர்ந்த மகோன்னத மகிழ்ச்சியில் அதிகமாக எங்கும் தங்காமல் இரண்டு நாள் பயணம் செய்த விஜயபாகு, மூன்றாவது நாள் பிற்பகலில் குட்டசாலக நகரத்துக்குள் நுழைந்தான். அவனை வரவேற்க மகாஜனங்களும் படைப்பிரிவுகளும் ஏராளமாகக் காத்திருந்தனர். அவர்களை யெல்லாம் தனது கையை உயரத் தூக்கியும் ஆட்டியும் நன்றி தெரிவித்த விஜயபாகுவுக்குக் குட்டசாலக அரண்மனையில் பெண்கள் ஆரத்தி எடுத்தார்கள். ராணிகளுக்கும் திலகமிட்டார்கள். அந்த உபசாரங்களை ஏற்றுக் கொண்டு விஜயபாகு குட்டசாலக அரண்மனையில் நுழைந்ததும் அந்திப்பொழுதும் நகரத்தில் நுழையவே எங்கும் தீபங்கள் ஏற்றப்பட்டு, குட்டசாலகா விழாக் கோலம் கொண்டது.

zeevaa

குட்டசாலக அரண்மனை அலங்காரமும் அன்று மிகப் பலமாக இருந்தது. தூண்கள் அலங்காரம் செய்யப்பட்டிருந்தன. ஆங்காங்கு அலங்கார விளக்குகளும் காட்சியளித்தன. படைகளின் உப தலைவர்களும் நகரப் பிரமுகர்களும் சிங்கள மன்னனை வணங்கத் தொடர்ந்து வந்து கொண்டிருந்தார்கள். நள்ளிரவு வந்ததும் வரவேற்பு நிகழ்ச்சிகள் முடிய, விஜயன் காலையில் அனைவரையும் பார்ப்பதாகச் சொல்லிவிட்டுத்தனது ராணிகளுடன் அந்த அரண்மனைப் பள்ளியறையில் நுழைந்தான்.

அந்தப் பள்ளியறை விஜயனுக்குப் பழைய நினைவுகளை ஊட்டவே அவன் நீண்டநேரம் பேசாமல் நின்றான். ராணிகள் கேட்டதற்கு, "இதே கட்டிலில் இளைய கேசதாது படுத்திருந்தான். அவன் கழுத்தில் எங்கள் வாட்களின் நுனிகள் பதிந்திருந்தன. இளையகேசதாது விழித்தான். இதே கட்டிலில் நான் படுக்கப் போகிறேன். என்னையும் நான்கு வாட்கள் அச்சுறுத்தும்," என்றான் விஜயன்.

அப்பொழுது எல்லோரும் சென்றுவிட, அவனும் ராணிகளும் மட்டுமே இருந்ததால், "இங்கு யார் துணிவுடன் வருவார்கள்," என்று சுந்தரி கேட்டாள்.

"நீங்கள் இருக்கும்போது யாரும் துணிந்து வரமாட்டார்கள்," என்றான் விஜயன்.

"அப்படியானால் நான்கு வாட்கள்...?" என்று சுடர்விழி கேட்டாள்.

"இதோ நான்கு வாட்கள்!" என்று கூறி அவர்கள் விழிகள் நான்கையும் காட்டினான் சிங்கள இளவல்.

அவன் அவர்கள் விழிகளைத் தொட்ட அதே நேரத்தில் அந்த அரண்மனையில் மற்றொரு பகுதியில் யாரோ பயங்கரமாக அலறும்

zeevaa

சத்தம் கேட்கவே, விஜயன் சட்டென்று கிளம்பி அந்த அலறல் வந்த திசையை நோக்கி விரைந்தான். சற்று எட்ட இருந்த ஒரு சிறு அறையிலிருந்து யாரோ முனகும் சத்தம் கேட்கவே அந்த அறைக் கதவைத் திறந்து கொண்டு விஜயன் உள்ளே சென்றான். அங்கே ஓர் அழகி நின்றிருந்தாள் தலைவிரிகோலமாக. அவள் கழுத்தில் குறுவாளை ஊன்றிய வண்ணம் நின்றிருந்தான் ஒரு மூர்க்கன்.



# 48. நுவரகிரியின் புதிர்

கூட்டசாலக அரண்மனையில் பிற்பகலில் துவங்கிய வரவேற்பு வைபவங்களை நள்ளிரவில் முடித்துக்கொண்ட விஜயபாகு, பள்ளியறைக்குச் சென்று ராணிகளின் விழிகளை வாட்களுக்கு உவமை காட்டிக் கொண்டிருந்த சமயத்தில், எழுந்த பயங்கர அலறலுக்குக் காரணம் என்னவென்பதைக் கவனிக்க வெளியே ஓடியதும், மூலை அறையொன்றில் யாரோ முனகும் சத்தம் கேட்டு அந்த அறைக்குள் நுழைந்தபோது அங்கிருந்த காட்சியைக் கண்டு சில விநாடிகள் பேசாமல் நின்றான். அந்த அறையின் மூலையில் விரிந்த தலைக்குழலுடனும் அச்சம் நிறைந்த முகத்துடனும் நின்ற அழகியையும், அவளுக்கு முன்பு நின்று அவள் கழுத்தில் குறுவாளொன்றை ஊன்றிக் கொண்டிருந்தவனையும் கண்ட விஜயபாகுவுக்கு விஷயத்தை ஊகிப்பதில் அதிகக் கஷ்டமில்லையென்றாலும் அவன் ஏதும் பேசாமலும் அசையாமலும் நிற்கவே செய்தான்.

பின்னால் விஜயன் நிற்பதை அறியாத அந்த மூர்க்கன் பேச முற்பட்டு, "அடி அழகு ராணி! உன் கணவன் உன்னையும் உன் குழந்தையையும் விட்டு ஓடிவிட்டான். அது எனக்கு நல்லதாயிற்று. என் மனைவியைக் கெடுத்தவன் மனைவி மீது எனது ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்வது நீதியாகும். மரியாதையாக இப்படி வா," என்று குறுவாளைக் கழுத்தில் ஊன்றிய வண்ணம் அவள் தலை மயிரைப் பற்றி அவளைத் தன்னை நோக்கி இழுக்க முற்பட்டான்.

அந்தப் பெண்ணின் விழிகளில் சீற்றம் தூக்கி நின்றது. "அடப்பாவி! விடு என்னை. நான் அனாதரவான பெண்," என்று கூறினாள் சீற்றம் குரலிலும் ஒலிக்க.

zeevaa

"என் மனைவி உன்னைவிடப் பெண்மையில் குறைந்தவளா? அவளைப் படை வீரர்களிடம் அனுப்பவில்லை உன் கணவன்? அப்பொழுது நீ என்ன செய்து கொண்டிருந்தாய்?" என்று அந்த மனிதன் வினவினான். அவன் குரலில் பழிவாங்கும் உணர்ச்சி பரிபூரணமாக இருந்தது.

விஜயனுக்கு விஷயம் தெள்ளெனப் புரிந்தது. சோழதூதன் என்று சொல்லிக் கொண்டு ஜேட்டதிஸ்ஸன் படைத் தலைவனொருவனின் வெட்டிய தலையை கோணியில் போட்டு வந்தவனே அந்த மூர்க்கன் என்பதையும், தனது மனைவியைப் படைவீரர் காமத்துக்கு இரையாக அளிப்பதாக இளையகேசதாது கூறியதாகச் சொன்னவனே அந்த மனிதன் என்பதையும் புரிந்து கொண்ட விஜயன், "டேய்! அந்தப் பெண்ணை விடு." என்று பின்புறமிருந்து மெதுவாகச் சொன்னான்.

அந்தச் சொற்கள் காதில் விழுந்ததும் சரேலெனத் திரும்பிப் பார்த்த அந்த மூர்க்கனின் கையை, இரும்பு போன்ற விஜயன் வலது கை பிடித்து உலுக்க, அவன் கையிலிருந்த குறுவாள் தரையில் விழுந்து பயங்கரமான ஒலியை அந்த அறையில் கிளப்பவே, அந்த மனிதன் கண்களில் பெரும் அச்சம் விரிந்தது. "இவள்..." என்று ஏதோ சொல்ல முயன்றவன் விஜயபாகுவுக்குப் பின்னால் மூர்சமதும் ஓசைப் படாமல் வந்து நிற்பதைக் கண்டதும் சொற்கள் நாவில் உறைய நின்றான், இதயத்தில் ஏற்பட்ட அதிர்ச்சியின் காரணமாக அவன். ஆனால் அப்பொழுதும் அந்த அழகியின் கூந்தலிலிருந்து தனது இடது கையை எடுத்தானில்லை.

"அந்தக் கையைவிடு!" என்ற விஜயன் குரல், அவன் இடது கையையும் குழலிலிருந்து விடுவித்துவிடவே அந்தப் பெண் சற்று பின்னால் நகர்ந்தாள். அவள் நகர்ந்ததும் அறையின் ஒரு மூலையில் சீலைக்குப் பின்னால் மறைந்திருந்து சிறுவனொருவன் ஓடி வந்து அவள் கால்களைக் கட்டிக்கொண்டான். இளையகேசதாதுவை

zeevaa

உரித்துவைத்திருந்தது போன்ற அந்தச் சிறுவன் முகத்தைக் கண்ட விஜயன் வெறுப்பைக் கொண்டானானாலும், அதை வெளிக்குக் காட்டாமல் "அம்மா! நீ இளையகேசதாதுவின் மனைவியென்று புரிகிறது. நீ ஏன் இந்த அரண்மனையில் தனியாகத் தங்கி இருக்கிறாய்?" என்று வினவினான்.

அந்த அழகி தனது அழகிய விழிகளை நிலத்தில் தாழ்த்தினாள். பிறகு படிப்படியாக விம்ம ஆரம்பித்துக் கடைசியில் துக்கம் மீறி அழ முற்பட்டாள். "அவர்... அவர்..." என்று அந்த அழுகையின் ஊடே ஏதோ சொல்ல முயன்றாள்.

"அம்மா! உனக்கு ஆபத்து எதுவும் நேரிடாது. சீக்கிரம் அவனிடம் உன்னை சேர்ப்பிக்கிறேன்!" என்று ஆறுதல் கூறினான் விஜயன்.

அவன் கொடுத்த தைரியத்தால் அவள் சாந்தமடையவில்லை. "அவரிடம் நான் போக விரும்பவில்லை. இந்த அரண்மனை யிலேயே ஒரு இடம் கொடுத்தால் தங்கிவிடுகிறேன்," என்றான்.

"கணவனிருக்கும் இடந்தானே மனைவியின் இடமும்?" என்றான் விஜயபாகு.

"எந்த இடத்தில் நானிருந்தாலும் கோழையின் மனைவி என்று மக்களால் தூற்றப்படுவேன். என்னைப் பற்றிக்கூட நான் கவலைப்படவில்லை. இந்தக் குழந்தையைக் கோழையின் மகன் என்று நாடு தூற்றுமே. அதை நினைக்கும் போது என் நெஞ்சம் பதறுகிறது" என்றாள். பிறகு விஜயனை ஏறெடுத்துப் பார்த்து, "இந்தக் குழந்தை இனி உங்கள் அடைக்கலம். இவனை மட்டும் வீரனாக வளர்த்து விடுங்கள். தகப்பனுக்கு ஏற்பட்ட மாசை இவன் துடைக்கட்டும்," என்றும் சொன்னாள்.

விஜயன் ஏதும் பேசவில்லை சில விநாடிகள். பிறகு அவளைக் கேட்டான். "அம்மா! இவன் மனைவியையும் குழந்தையையும் என்ன செய்தான் உன் கணவன்?" என்று.

zeevaa

"இவன் மனைவியை அவர் எதுவும் செய்யவில்லை. என்னுடன் தானிருக்கிறாள். இவனைத் தூதுக்குத் தூண்டும் பொருட்டு அவர் அப்படிச் சொன்னார். ஆனால் அத்தகைய ஈனச் செயலை செய்யும் அளவுக்கு அவர் இறங்கவில்லை. வேண்டுமானால் அவளையே அழைக்கிறேன். நீங்கள் கேட்டுக் கொள்ளுங்கள்" என்றாள் இளைய கேசதாதுவின் மனைவி. அப்படிச் சொன்னது மட்டுமல்லாமல் சீலைக்குப் பின்புறம் சென்று குரல் கொடுக்க அந்தத் தூதன் மனைவி அறைக்குள் வந்தாள். அவளைப் பார்த்த அந்த மூர்க்கன் "எங்கிருந்தாய் இத்தனை நேரம்?" என்று சீறினான்.

"சீலைத் திரைக்கு அடுத்த அறையில் இருந்தேன். என்னைக் காப்பாற்றிய இந்தப் புண்யவதியின் அலறலைக் கேட்டதும் ஓடி வந்தேன். அந்தச் சமயத்தில் அவரும் வந்ததால் பின்னாலேயே தங்கி விட்டேன்," என்று அந்த மூர்க்கனை வெறுப்புடன் பார்த்தாள், விஜயனையும் சுட்டிக்காட்டினாள்.

விஜயன் பின்னாலிருந்த மூர்சமதை நோக்கி "மூர்சமத்! இவனை அழைத்துக் கொண்டு போய்க் காவலில் வை. இவன் இந்த அரண்மனையின் காவலை மீறி எப்படி உள்ளே நுழைந்தான் என்பதை நாளை விசாரிக்கிறேன்," என்று கூற மூர்சமத் அந்த மனிதனை நெருங்கினான். மூர்சமதின் பிடி அவன் கழுத்தில் விழுந்ததும் புலிபோலிருந்த மூர்க்கன் பூனையானான். "மகாராஜா! என் ஆத்திரத்தில் நான் காவலருக்குத் தெரியாமல் இந்த அரண்மனைக்குள் வந்தேன். பண்டகசாலைச் சுரங்கவழி எனக்குத் தெரியுமென்பதைத் தாங்கள் ஏற்கனவே ஊகித்திருக்கலாம்," என்று கெஞ்சினான்.

"நாளைக் காலையில் விசாரிப்போம்," என்று விஜயன் கூற மூர்சமத் அவனை இழுத்துச் சென்றான். அவன் சென்றதும் இளையகேசதாதுவின் மனைவியை நோக்கிய சிங்கள இளவல்,

zeevaa

''அம்மா! இன்னும் உன்னைப்போல் எத்தனை பேர் இந்த அரண்மனையில் பதுங்கி இருக்கிறார்கள்?'' என்று வினவினான்.

அவள் தலையைக் குனிந்து கொண்டாள். ''இருபது பேர் இருக்கிறார்கள்,'' என்றாள் அந்தப் பெண்.

''அத்தனை பேரும்...?'' வாக்கியத்தை முடிக்காமல் கண்களாலேயே கேள்வியைத் தொடுத்தான் விஜயன்.

''அவரது ஆசை நாயகிகள்...'' என்றாள் இளையகேசதாதுவின் மனைவி வெறுப்பு நிறைந்த குரலில்.

விஜயன் சிந்தனை பின்னால் ஓடியது. நான் மட்டும் தலையிடா திருந்தால் இருபத்தி ஒன்றாயிருக்கும் இந்தத் தொகை என்றான் விஜயன். ''அவள் என் மனைவி சுடர்விழி'' என்றும் சொன்னான்.

அந்தப் பெண்ணின் முகத்தில் மீண்டும் அச்சம் துளிர்த்தது. விஜயன் எப்படிப் பழி வாங்குவானோ என்ற நினைப்பால், அவனை ஏறெடுத்து நோக்கவும் செய்தாள் இளையகேசதாதுவின் ராணி.

''அஞ்சாதே பெண்ணே! சுடர்விழியை இளையகேசதாது தொட்டிருந்தால் அன்றே அவனைக் கொளுத்தியிருப்பேன். அவன் அன்று தப்பினான். அவன் ஈனச் செயல்களுக்கு நீ பொறுப்பாளி யல்ல. உனக்கு எந்தத் தீங்கும் நேரிடாது. காமப்பித்தர்களுடைய கதி இதுதான். குழந்தையை அழைத்துக்கொண்டு நீ போ, இந்த அரண்மனையிலேயே உன்னைச் சேர்ந்த மற்ற பெண்களும் தங்கட்டும்'' என்று உத்தரவிட்டான். அடுத்து அவள் நிற்கவில்லை. அந்த மூர்க்கன் மனைவியையும் தன்னுடன் அழைத்துச் சென்றாள். அவள் குழந்தையும் திரும்பித் திரும்பி விஜயனைப் பார்த்த வண்ணம் தாயைத் தொடர்ந்தது.

தீர்க்க சிந்தனையுடன் பள்ளியறைக்குத் திரும்பிய விஜயன் இரு ராணிகளுடன் ஏதும் பேசாமல் பஞ்சணையில் விழுந்தான். இரு

zeevaa

ராணிகளும் அவன் பக்கத்தில் உட்கார்ந்தார்கள். "ஆமாம், என்ன யோசனை செய்கிறீர்கள்?" என்று சுந்தரி கேட்டாள்.

விஜயன் புன்முறுவல் செய்தான். "இளையகேசதாதுவுக்கு இருபது ஆசை நாயகிகள் இருக்கிறார்கள்," என்று சொல்லிச் சோகப் பெருமூச்சு விட்டான்.

"அந்தக் குறை இருந்தால் நீங்களும் தீர்த்துக் கொள்ளலாமே," என்றாள் சுந்தரி.

"இளையகேசதாதுவின் மனைவி மிக நல்லவள்," என்றான் விஜயன்.

"எப்படி?" என்றாள் சுடர்விழி.

"அவன் மனத்துக்கு இடைஞ்சல் செய்யாதவள். அவன் விருப்பத்தை எதிலும் தடுக்காதவள்," என்று பாராட்டினான் விஜயன்.

"உங்கள் மனைவிகள் எப்படியோ?" என்று விசாரித்தாள் சுந்தரி.

கேட்பானேன்?" என்று அவன் சொன்னதும் இரு ராணிகளும் அவன்மீது பாய்ந்தார்கள்.

அவன் பெரிதாக நகைத்தான். அடுத்த விநாடி இரு மங்கையருக்குள் விஜயன் மறைந்து முனகினான். அந்த முனகலுக்குச் சாளரத்துக்கு வெளியே இருந்த கொடியொன்றில் மறைந்திருந்த சிட்டுக் குருவிகள் இரண்டு மெல்லச் சுருதி கூட்டிக் கூவின.

மறுநாள் விடியு முன்னதாகவே எழுந்துவிட்ட இரு ராணிகளும் வெளியே பேரரவம் கிளம்பியதைக் கேட்டு எட்டிப் பார்த்தனர். அந்தப் பெரிய ராஜ வீதியில் நுவரகிரி தமது பெரிய புரவியில் சுமார் நூறு புரவி வீரர்கள் பின் தொடர வந்து கொண்டிருந்தார். சிங்களத்தைப் பற்றிய பெரும் முடிவுகளை அன்று விஜயன் செய்ய

zeevaa

உத்தேசத்திருக்கிறான் என்பதை இரு ராணிகளும் புரிந்து கொண்டார்கள்.

''நுவரகிரி இங்கு வரப்போவது உனக்குத் தெரியுமா சுந்தரி?'' என்று சுடர்விழி கேட்டாள்.

''அவர் எதைத்தான் நம்மிடம் சொல்கிறார்?'' என்று சுந்தரி பதில் சொன்னாள்.

''இதில் ஏதோ விசேஷம் இருக்கிறது,'' என்றாள் சுடர்விழி.

''ஆம்'' என்றாள் சுந்தரி.

அந்த விசேஷம் என்ன என்பதை அடுத்த நாள் பிற்பகலில் அறிந்த இரு ராணிகளும் வெகு விரைவில் சிங்களத்தில் பெரும் போர் துவங்கப் போவதை உணர்ந்தார்கள்.

மறுநாள் மந்திராலோசனையின் முடிவில், ''நாம் துரிதமாகத் தாம்பலகாமத்துக்கு செல்லவேண்டும்,'' என்று கூறிய நுவரகிரி அதற்கான காரணத்தையும் எடுத்துச் சொன்னார். அதைக் கேட்ட விஜயன் ''மரக்கலங்கள் எப்பொழுது வந்தன?'' என்று வினவினான்.

''இன்று துறைமுகத்தை அடைந்திருக்க வேண்டும்,'' என்று சொன்னார் நுவரகிரி.

''அப்படியானால் நாளைக் காலையில் புறப்படுவோம். படைப்பிரிவுகள் பின்னால் வரட்டும்,'' என்று ஆணையிட்டான் சிங்கள இளவல், அன்றிரவு நீண்ட நேரம் நுவரகிரியுடன் தனிமையில் பேசிக் கொண்டிருந்தான்.

''மொத்தம் எத்தனை மரக்கலங்கள் வருகின்றன?'' என்று கேட்டான் விஜயன் நுவரகிரியை.

''ஐந்து மரக்கலங்கள் வருவதாகக் கேள்வி,'' என்றார் நுவரகிரி.

zeevaa

"அவற்றில்...?" சிங்கள இளவல் வினவினான்.

"நான்கில் தளவாடங்கள்."

"ஐந்தாவதில்?"

"நீங்கள் எதிர்பார்க்காத ஒருவர்" என்ற நுவரகிரி மிக மர்மமாகப் புதிர் போட்டார்.



zeevaa

# 49. மரக்கல மின்னல் கொடி

நுவரகிரியின் புதிரை அவிழ்க்கவோ அதைப்பற்றி விளக்கம் கேட்கவோ முயலாத விஜயபாகு குட்டசாலகாவிலிருந்து மறுநாள் விடியற்காலையில் புறப்படச் சித்தமாகி அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய மூர்சமதுக்கு உத்தரவிட்டான். ஜேட்டதிஸ்ஸனைக் குட்டசாலக நகரத்திலேயே தங்கி அந்த மண்டலத்திலும் அதற்கு கீழிருந்த ருஹுணாவின் பகுதிகளிலும் நிர்வாகத்தைத் திடப்படுத்து மாறு உத்தரவிட்டான். இளையகேசதாதுவின் மனைவியை அவள் தங்கியிருந்த அரண்மனையிலேயே இருக்கச் செய்து ஒரு ராணிக்குள்ள மரியாதையுடன் நடத்துமாறும் பணித்தான். அவள் கணவன் துர் நடத்தைக்காக அவளைப் பழிவாங்க வந்த மனிதனை அவன் மனைவியோடு குட்டசாலக நகரத்திலிருந்து தென்புலத்துக்கு அனுப்பிவிடுமாறும் கட்டளையிட்டான். இப்படி ஏற்பாடுகளைச் செய்துவிட்டு அன்றிரவு அந்தப்புரம் சென்று படுத்தபோது சுந்தரி கேட்டாள். ''ஐந்தாவது கப்பலில் யாரோ வருவதாக நுவரகிரி சொன்னாரே, அது யார்?'' என்று.

விஜயபாகு தனது இதழ்களில் புன்முறுவலைப் படரவிட்டு, ''யாராயிருந்தால் உனக்கென்ன?'' என்று வினவினான்.

''உங்களுக்குத் தெரியுமா? தெரியாதா?'' என்று சுடர்விழி கேட்டாள்.

''தெரியாது,'' என்று அலட்சியமாகப் பதில் சொன்னான் சிங்கள இளவல்.

zeevaa

''வருவது யாரென்று நுவரகிரியை கேட்பதுதானே?'' என்றாள் சுந்தரி.

''உடனடியாகச் சொல்லவேண்டிய அவசியமிருந்தால் நுவரகிரியே சொல்லியிருப்பார். அவர் சொல்லவில்லையென்றால் அதற்குக் காரணமிருக்கும்'' என்ற விஜயன் ''வருவது யாராயிருந் தால் உங்களுக்கென்ன?'' என்று மீண்டும் இரு ராணிகளையும் வினவினான்.

''உங்கள் படைத்தலைவர் மர்மமாகப் பேசுவது, அதைக் கேட்டுக் கொண்டு வருவதுதான் மன்னனுக்கு அழகா?'' என்று சுந்தரி கடுமையான குரலில் கேட்டாள்.

''படைத்தலைவர் யாரென்பதையும் கவனிக்க வேண்டும். நுவரகிரி எதையாவது சொல்ல இஷ்டப்படாவிட்டால் தலை போனாலும் சொல்லமாட்டார். சொல்ல வேண்டியதை, சொல்லக் கூடியதை, சொல்லாமலும் இருக்கமாட்டார்,'' என்று திட்டமாகச் சொன்ன விஜயன் ''தவிர, நான் பெண்ணும் அல்ல,'' என்றும் கூறினான்.

''என்ன சொன்னீர்கள்?'' என்று சீறி எழுந்தாள் திரிலோக சுந்தரி.

''நான் பெண்ணல்ல என்று சொன்னேன்'' என்ற விஜயன் லேசாக நகைத்தான்.

''நீங்கள் சொல்லித்தான் நாங்கள் அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமா?'' என்று சுடர்விழி சீறினாள்.

''முன்பே உங்களுக்குத் தெரியும். நான் சொன்ன காரணம் வேறு. யார் எதைச் சொல்கிறார்கள் என்பதை அறிவதிலுள்ள ஆவல் பெண்களுக்குத்தான் உண்டு என்பதற்காகச் சொன்னேன்,'' என்ற விஜயன், ராணிகளே! நானும் நுவரகிரியும் நாளைக்காலையில் புறப்படுகிறோம். உங்களைத் தகுந்த பாதுகாப்புடன் ஜேட்ட

திஸ்ஸன் அனுப்பி வைப்பான்'' என்றும் சொன்னதைக் கேட்ட ராணிகள் இருவரும் கோபத்தின் உச்சத்தை அடைந்தார்கள். ''நாங்களும் உங்களுடன் வந்தால் என்ன?'' என்று கேட்டாள் சுந்தரி.

''உங்களை அழைத்துச் செல்ல எனக்கு அவகாசமில்லை. தாம்பலகாமம் போய் நான் அங்கிருந்து உடனடியாகக் காலே துறைமுகம் செல்ல வேண்டும். நீங்கள் நிதானமாக வரலாம்'' என்று விஜயபாகு முடிவாகச் சொன்னதை இரு ராணிகளும் ஒப்பவில்லை.

''நாங்கள் உடன் வருவதில் உங்களுக்கு என்ன கஷ்டம்?'' என்று சுடர்விழி வினவினாள்.

இதைக்கேட்ட விஜயன் சிறிது முகம் சுளித்து, ''போகிற இடங்களுக்கெல்லாம் இரண்டு பெண்களைக் கழுத்தில் கட்டிக்கொண்டு போவது சுலபமல்ல. தவிர, பெரும் போர் சிங்களத்தில் நிகழும் காலம் நெருங்கி விட்டது. இப்பொழுது உங்களை அழைத்துக் கொண்டு சுற்றிக் கொண்டிருந்தால் மக்கள் என்னை ஸ்திரீலோலன் என்று நினைப்பார்கள். ஆகையால் நீங்கள் தம்பலகாமம் வந்ததும் போர் முடியும்வரை அங்கேயே இருப்பதற்கு ஏற்பாடு செய்யப்போகிறேன். இனி நான் இந்த நாட்டு விடுதலைப்போரில் முனைய வேண்டும்'' என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டு கண்களை இறுகமூடி நித்திரைவசப் பட்டான்.

விஜயன் உறங்கிவிட்டதாக நினைத்துக் கொண்ட சுந்தரி மெள்ள சுடர்விழியை அசக்கி, ''சுடர்விழி! அந்த ஐந்தாவது மரக்கலத்தில் வருவது ஒருவேளை யாராவது பெண்ணாக இருக்குமோ?'' என்று மெதுவாக வினவினாள்.

''அப்படித்தான் இருக்கும். தெரிந்துதான் இவர் மறைக்கிறார்'' என்று சுடர்விழியும் ரகசியமாகச் சொன்னாள்.

''ஒருவேளை சோழர் சிறையிலிருக்கும் லீலாவதி தப்பி விட்டாளோ?'' என்று சுந்தரி கேட்டாள்.

zeevaa

''இருக்காது. அவள் தப்பியிருந்தால் இத்தனை நேரம் அது இங்கு பெரும் தீயாக பரவியிருக்கும். தவிர சோழர் சிறையிலிருந்து தப்புவதும் அத்தனை எளிதல்ல'' என்றாள் சுடர்விழி.

இப்படித் தனக்கு இருபுறத்திலும் படுத்திருந்த ராணிகள் ரகசியம் பேசிக்கொண்டதை கேட்டாலும் கேட்காதது போலவே உறங்குவதுபோல் பாசாங்கு செய்தான் சிங்கள இளவல். இரு பெண்களும் இரண்டு புறத்திலிருந்தும் தலைகளைத் தூக்கி அவன் மார்ப்புக்கு குறுக்கே சந்தித்து மெதுவாகப் பேசுவதைக் கேட்டு விஜயன் புன் முறுவல் கொண்டான். ஆனாலும் அதை இரு ராணிகளும் கவனிக்காமல் உரையாடலைத் தொடர்ந்து நடத்தினார்கள்.

விஜயன் உள்ளூர நகைத்துக்கொண்டு, 'இரண்டு ராணிகள் இருக்கும்போதே இளைப்பாறுவதும் தூங்குவதும் குதிரைக் கொம்பாயிருக்கிறது. அவளும் வந்து விட்டால் அப்புறம் இந்த அரசே எனக்குக் கசந்துவிடும்' என்று உள்ளூரச் சொல்லிக்கொண்டு தனது உடலுக்குக் குறுக்கேயிருந்த இரு ராணிகளின் கழுத்துக் களையும் இரு கைகளாலும் இழுத்து மார்புமீது அழுத்திக் கொண்டான்.

இப்படி இரவு முழுவதும் அல்லல்பட்டு அவன் விடியற்காலையில் எழுந்தபோது இரு ராணிகளின் முகங்களும் தனது மார்புமீது இருப்பதைக் கண்டு அவற்றை மெள்ளத் தூக்கிப் பக்கங்களில் படுக்க வைத்து மெதுவாகப் பஞ்சணையைவிட்டு இறங்கினான். அதற்குமேல் காலதாமதம் செய்யாமல் நீராடிப் புத்துடை அணிந்து நுவரகிரியுடனும் மூர்சமதுடனும் தம்பல காமத்தை நோக்கிப்பயணமானான். அன்றிரவே தம்பலகாமத்தை அடைந்ததும் அங்கிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளையும் படைகளின் போர் சன்னத்தையும் கண்டு மிகுந்த திருப்தி அடைந்து, ''நுவரகிரி! மரக்கலங்களிலுள்ள தளவாடங்களும் வந்துவிட்டால் நாம் நமது

zeevaa

இறுதிப் போருக்குச் சித்தமாகலாம்'' என்று உற்சாகத்துடன் கூறினான்.

நுவரகிரி சொன்னார்: ''மகா குட்டசாலக மண்டலத்தின் புரட்சி அடங்கியதுமே தென்திசையில் நமது ஆட்சி ஸ்திரப்பட்டு விட்டது. இனி இங்கிருந்து வடபுலம் சென்று சோழர்களை நாம் தாக்கத் திட்டமிட வேண்டியது தான்'' என்றதுடன், ''எதற்கும் வந்திருக்கும் தளவாடங்களையும் பார்த்து ஒரு முடிவு செய்வோம்'' என்றார்.

தம்பலகாமத்தின் கோட்டை நடு மாளிகை உப்பரிகையிலிருந்து சுற்றுமுற்றும் கண்களை ஓட்டிய விஜயபாகு, ''நுவரகிரி! இந்தத் தம்பலகாமத்தைவிடப் பாதுகாப்பான கோட்டை தென்புலத்தில் கிடையாது. *ஜின் கங்கைக்கு வடக்கிலிருப்பதால் இது துறைமுகங் களுக்கு அருகில் இருக்கிறது. வளவே கங்கைக்கு மேற்புறம் இருப்பதால் நமது நிலப்படைத் தளமான மகாநாக அருகிலிருக் கிறது இரு நதிகளின் பாதுகாப்பிலிருக்கும் நாம் போர் துவங்குவதும் பெரும் அனுகூலம். இந்த இடத்தைவிடச் சோழர்களிடமிருந்து நமக்குப் பாதுகாப்பை அளிக்கும் இடம் வேறு கிடையாது'' என்றான்.

நுவரகிரி, மன்னன் சொன்னதை ஆமோதிப்பதற்கு அறிகுறி யாகத் தலையை அசைத்தார். ''மகாராஜா! நாம் காலையில் புறப்படுகிறோம் காலே துறைமுகத்துக்கு'' என்றார். அத்துடன் மன்னனிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றார்.

விஜயபாகு மாளிகை தளத்தில் நின்றவண்ணம் தூர ஓடிக்கொண்டிருந்த ஜின் கங்கையின் தெள்ளிய நீர்ப்பிரவாகத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தான். ''இது மட்டும் சற்றுப் பெரிய

---

* In Tambalagama on the upper Ginganga Vijayabahu was safe from an attack of Cholas - The Early History of Ceylon - By G.C. Mendis, B.A., Ph.D. - Chapter IV - Page 87.

zeevaa

நதியாயிருந்தால் இதன் மூலமே தளவாடங்களைப் படகுகளில் கொண்டுவந்து விடலாம்'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அதற்குப் பிறகு அவன் எண்ணமெல்லாம் அடுத்துவரும் போரைப்பற்றியே சுற்றிச்சுற்றி வந்து கொண்டிருந்ததால் அவன் அன்று சரியாக உறங்கவில்லை. மறுநாள் விடிவதற்கு மூன்று நாழிகைகள் முன்பாகவே நுவரகிரி அவனை அழைக்க வந்தபோது சிங்கள இளவல் பூர்ணமாகவே உடை தரித்து இடையில் வாள் துலங்க இறங்கி வந்தான் பயணத்துக்குச் சித்தமாக. தம்பலகாம மாளிகை வாயிலில் புரவியேறியவன் ஜின் கங்கை ஓரமாகவே பயணம் செய்து காலே துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தபோது நன்றாக இருட்டாகியும், மரக்கலங்களின் விளக்குகளாலும் அரபு மாலுமிகள் பலர் துறைமுகத்தில் நடமாடிக் கொண்டிருந்ததால் ஏற்பட்ட அரவத்தாலும், வணிகர்களின் கூச்சலும் நிரம்பி யிருந்ததால் இரவும் பகல் போலவே அதிக சுறுசுறுப்பை காட்டிக் கொண்டிருந்தது. அவ்வப்பொழுது கடலிலிருந்த மரக்கலங்களி லிருந்து துடுப்புக் களைத் துழாவி வந்த படகுகளிலிருந்து இறக்கப்படும் சரக்குகளும், இறக்கிய வேலையாட்களின் சத்தமும் அந்தத் துறைமுகம் வாணிபத்துக்கு எத்தனை முக்கியமானது என்பதை நிரூபித்தது. சிங்களத்தின் மேற்குக் கரையின் தென்கோடியிலிருந்த காரணத்தினாலும் அதற்கு அப்புறம் நிலப்பரப்பு அதிகம் இல்லாததாலும் காற்று வெகுவேகமாக அடித்துக்கொண்டிருந்த தால், துறைமுகத்தில் எட்ட நின்ற மரக்கலங்கள் சற்று அதிகமாகவே ஆடிக்கொண்டிருந்தன. காற்றால் உந்தப்பட்டு நீர்மட்டத்தில் விளக்குகளுடன் ஆடிய மரக்கலங்கள் ஆபரணங்கள் கூடிய அப்ஸர மங்கைகள் அலைமீது ஆடுவது போன்ற பிரமையை அளித்தன.

இயற்கையின் இந்த அற்புதக் காட்சிகளைக் கண்டு அனுபவித்துக் கொண்டிருந்த சிங்கள இளவலை நுவரகிரியின் கரகரத்த குரல் இவ்வுலகத்துக்கு இழுத்தது. ''மன்னர் இஷ்டப்

zeevaa

பட்டால் இப் பொழுதே மரக்கலங்களைப் பார்வையிடலாம்'' என்றார் நுவரகிரி.

அதைக் கேட்ட விஜயபாகு தனது புரவியிலிருந்து இறங்கி, தனக்கு முன்பாகவே இறங்கிவிட்ட மூர்சமதிடம் தனது புரவியின் கடிவாளங்களை ஒப்படைத்தான். அலைகள் சற்று அதிகமாயிருந்ததை சிறிதும் பொருட்படுத்தாது ராட்சதத்தனமாக நுவரகிரி துடுப்புகளைத் துழாவ, சிங்கள இளவல் முதல் மரக்கலத்தை அடைந்தான். அப்பொழுது நுவரகிரி சொன்னார்: ''மன்னவா! இது முதல் மரக்கலமல்ல ஐந்தாவது மரக்கலம்'' என்று.

விஜயன் நுவரகிரியை உற்று நோக்கிவிட்டு, ''நான் முற்றும் எதிர்பார்க்காதவர் இதில்தான் இருக்கிறாரா?'' என்று வினவினான்.

''ஆம்'' என்றார் நுவரகிரி.

''சரி, முதலில் அவரையே பார்த்து விடுகிறேன்'' என்று விஜயன் சொன்னதும், நுவரகிரி சைகை செய்ய, மேலிருந்து ஒரு நூலேணி இறக்கப்பட்டது. அதன்மீது ஏறிச்சென்ற நுவரகிரி அடுத்து ஏறிவந்த மன்னனைக் கைலாகு கொடுத்துத் தளத்தின்மீது ஏற்றினார்.

விஜயன் தளத்தைச் சுற்றும் முற்றும் நோக்கினான். பாய்மரங்கள் மூன்றிருந்தாலும் அதில் தற்காப்பு இருந்ததால் அது ஒரு போர்க் கப்பல் என்பதைப் புரிந்துகொண்ட விஜயன் ''நுவரகிரி, இந்த மரக்கலத்தின் தலைவன் எங்கே?'' என்று வினவினான்.

''அதோ அந்த அறையில் இருக்கிறார்'' என்று தூரத்திலிருந்த ஓர் அறையைச் சுட்டிக்காட்டினார் நுவரகிரி.

அந்த அறையை நோக்கிச் சென்ற விஜயன் திடீரெனயாரோ மணியடிக்கும் சத்தம் கேட்டுச் சிறிது நின்றான். பிறகு அந்த அறையை இரண்டு எட்டில் அடைந்து அறைக் கதவை வேகமாகத் திறந்தான். அங்கிருந்த காட்சி அவனுக்கு விவரிக்க முடியாத

zeevaa

பிரமிப்பை அளிக்கவே சிலையென நின்றுவிட்டான் சிங்கள இளவல். அங்கு அவனுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு சுவாமிகள் ஒருவர் பூஜை செய்து கொண்டிருந்தார். அவர் எதிரே ஒரு பெண் மண்டியிட்டு வணங்கி எழுந்திருந்தாள். எழுந்திருந்த சமயத்தில் சுவாமிகள் காட்டிய கற்பூர ஜ்வாலை அந்தப் பெண்ணின் முகத்தில் விழவே மூச்சைப் பிடித்துக் கொண்டான் விஜயன். மின்னல் கொடி போலிருந்த அந்தப் பெண்மணி, ''சுவாமி! அவர் எப்பொழுது வருவார்?'' என்று வினவியபோது அவள் குரல் குழல் இசைப்பது போலிருந்தது. முகமும் அவள் முழுத் தோற்றமும் திடீரென மேகத்தினிடையே ஓடும் மின்னல்கொடியை நினைவுபடுத்தின. சுவாமி மெதுவாகத் திரும்பினார். அவர் கண்களும் விஜயன் கண்களும் சந்தித்தன, பேசின, உறவாடவும் செய்தன.



# 50. சுவாமிகள் உணர்ச்சி வசம்

இருள் சூழ்ந்த காலே துறைமுகத்தின் கடற்பகுதியில், தெற்கத்திக் காற்றில் லேசாக ஆடிநின்ற அந்த பெரும் போர்க் கப்பலில், கணகணவென்று ஒலித்த மணிச் சத்தத்தைக் கேட்டு அந்த அறைக்குள் நுழைந்த சிங்கள இளவல், தனக்கு முதுகைக் காட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தவர் யாரென்பதை உடனே உணர்ந்து கொண்டாலும், உணர்ந்ததன் விளைவாகப் பெருவியப்பை அடைந்தாலும், அதைச் சிறிதும் வெளிக்குக் காட்டிக் கொள்ளாமலே நின்றுவிட்டான் வாயிற்படிக்கு அருகிலேயே. செக்கச் செவே லென்று பருமனாய்த் தங்கத்தால் செய்யப்பட்டது போன்ற வழவழத்த உடலைப் படைத்த சிவகோகர்ண ஸ்வாமிகள் சிங்களத்துக்கு வர எந்தவிதக் காரணமும் இல்லையென்பதை உணர்ந்திருந்தாலும், அவர் அங்கு பிரத்யக்ஷமாய் உட்கார்ந்து சிவபூஜையிலும் ஈடுபட்டிருப்பதைப் பார்த்ததும் அவன் பிரமித்தே போனான்.

அவர் எதிரில் மின்னல் கொடிபோன்ற பெண் ஒருத்தி மண்டியிட்டுத் தலைவணங்கியிருந்ததைப் பார்த்ததும் அவன் பிரமிப்பு பலமடங்கு அதிகமாயிற்று. அவர் கற்பூரம் ஏற்றி அதன் ஜ்வாலை அந்தப் பெண்ணின் முகத்தில் பட்ட போது அவன் பிரமை உச்சநிலைக்கே சென்றுவிட்டது. அப்படி வணங்கி எழுந்தவள் லீலாவதி என்பதை உணர்ந்து கொள்ள அதிக நேரம் பிடிக்கவில்லை விஜயனுக்கு. அந்தச் சமயத்தில் சிவகோகர்ண சுவாமிகள் திரும்பித் தன்னைப் பார்த்ததும் தனது கண்களைச் சந்தித்த அவர் கண்களில் விஷமச் சாயை இருந்ததும் அவனுக்கு ஓரளவு மனச்சாந்தியை அளித்தாலும், அவர் சிங்கள விஜயத்துக்குத் தனக்குப் புரியாத

zeevaa

காரணம் ஏதோ இருக்க வேண்டுமென்று முடிவுக்கு வந்தான். இருப்பினும் அதைப்பற்றி ஏதும் கேட்காமல் அவர் முன்பு நின்ற மின்னல் கொடியைத் தனது கண்களால் ஆராயத் தொடங்கினான்.

கன்னோசி ராஜ்யத்தைச் சேர்ந்தவனும் ருஹுணாவின் ஒரு பகுதியை ஏற்கனவே ஆண்டவனுமான ஜகதிபாலன் மகள் லீலாவதியையும் அவள் தாயையும் சோழர்கள் சிறையெடுத்துப் போய்ப் பல வருஷங்கள் ஆகிவிட்டபோதிலும் அந்த வருஷங்களோ, சிறைவாசமோ லீலாவதியின் வளர்ச்சிக்கும் அழகுக்கும் எந்தவித ஊறும் விளைவிக்கவில்லை. அவள் மெல்லிய உடல் அவள் வளைந்து சுவாமியை வணங்கியபோது இருந்த அழகு நிமிர்ந்த பின்னும் சிறிதும் குறையாமல் இருந்தது. அவள் அழகுடன் ஒரு கம்பீரமும் அவள் நின்ற தோரணையில் கலந்திருந்ததால் ராஜபுத்ர இனத்தவளான அவள் வீரமும் அழகும் இணைந்த கொடிபோல் விளங்கினாள். சிலகோகர்ண ஸ்வாமிகள் காட்டிய கற்பூரத்தின் சுடரில் அவள் பொன்னிற முகம் அதிக மெருகுடன் பிரகாசித்ததன்றி, கண்களும் நக்ஷத்திரங்கள் போல் மின்னின.அந்தக் கருவண்டு விழிகள் அவனை நிமிட நேரத்தில் அளவெடுத்து விட்டதையும், பிறகு தனது கண்களைச் சந்திக்க மாட்டாமல் தாழ்ந்து விட்டதையும் கண்ட விஜயன் அவள் வீரத்துடன் நாணமும் கலந்திருப்பதைக் கண்டு பெரிதும் மகிழ்ச்சி கொண்டான்.

அவள் தேகம் ஒல்லியாயிருந்தது அவள் அழகை எந்த விதத்திலும் குறைக்கவில்லை. அவள் தேகவாகு இருந்த விதத்தால் சிற்றிடை மிகவும் சிறிதாகப் போய் விட்டாலும், அதற்குக் கீழே முன்னும் பின்னும் லேசாகப் பருத்திருந்த அழகுகள் பருமனின் குறைவின் காரணமாகவே அதிகமாகக் கெட்டிப்பட்டனபோல் தெரிந்தன. அவள் சேலை வளைந்து மூடியிருந்த மார்பகக் குன்றுகளின் சிறுமையே அவற்றுக்கு இணையிலாத ஒரு கூர்மையையும் திடத்தையும் அளித்திருந்ததைக் கண்டு, அது ஒரு புதுவித அழகென்பதையும் அறிந்து கொண்டான் சிங்கள மன்னன்.

zeevaa

இத்தனைக்கும் அவள் விசால நெற்றியும், புஷ்டியான கன்னங்களும் தலைக்குழலெனும் கருமேகத்தால் ஆங்காங்கே முத்தமிடப் பெற்றிருந்ததால், குழலின் அதிர்ஷ்டத்தை நினைத்து உணர்ச்சிகளின் வசப்படத் தொடங்கினான் விஜயன். அவள் பாதத்தில் ராஜபுதனச் சிலம்பு ஒன்றிருந்தது. நடந்தால் அது எப்படி ஜலதரங்கம் வாசிக்கும் என்பதை எண்ணிப் பரவசமடைந்த விஜயபாகு அவள் கழுத்திலிருந்த மெல்லிய சங்கிலியின் பதக்கம் மார்புக் கச்சைக்குள் இறங்கியிருப்பதைக் கண்டு, 'இவள் மெல்லிய உடலை இது வருத்தாதோ?' என்று எண்ணமிட்டான்.

இப்படி அவன் தன்னை அக்கக்காக அலசுவதைக் குனிந்த தலையின் கடைக்கண்ணால் கண்டதால் மகிழ்ச்சிக்குட்பட்ட லீலாவதி, 'இவன் இன்னும் என்னை மறக்கவில்லை' என்று உள்ளூரச் சொல்லிக்கொண்டாள். தனது கடைக்கண்ணாலேயே அவனது ராஜ கம்பீர உருவத்தையும் வீரவதனத்தையும் கண்ட லீலாவதி, சோழ நாட்டுச் சிறையிலிருந்த காலத்தை அடியோடு மறந்து, விடுதலைக்குப் பின் சிங்களத்தில் தனக்கு ஏற்படப்போகும் பதவியை நினைத்துப் பரவசமடைந்தாள்.

இப்படி விஜயனும் அவனது பிற்கால மனைவியும் பரஸ்பரம் எடை போட்டுக்கொண்டு நின்ற நிலைக்குள் தலையிடாமல் மௌனமாகவே இருந்த சிவகோகர்ண சுவாமிகள், ''சிங்கள மன்னனே! இப்படி வா. பிரசாதத்தைப் பெற்றுக்கொள்'' என்று அழைத்து அவன் கையில் விபூதிப் பிரசாதம் கொடுத்தார். அதை அவன் வாங்கி நெற்றியில் லேசாகத் தீட்டிக்கொண்டு மீதியை வாயில் போட்டுக் கொண்டதால் திருப்தியடைந்த சுவாமிகள், ''சிங்கள மன்னனே! உனக்கு வெற்றிக் காலம் கிட்டி விட்டது. இன்றுடன் எனது லக்ஷார்ச்சனை முடிந்து விட்டது. அதன் பிரசாதம் உனக்குக் கிடைத்தது. உன் பாக்கியம். நீ பௌத்தனாயிருந்தாலும் விபூதியை வாங்கி நெற்றியில் தீட்டிக் கொண்டதில் தவறில்லை. பகவானுக்கு மதபேதம் கிடையாது. சிவன் எல்லோருக்கும் மங்களத்தைச் செய்பவர். உனக்கும் மங்களம் செய்வார். இலங்கை

zeevaa

சுதந்திரமடையும் காலமும் நெருங்கிவிட்டது'' என்று ஏதோ ஜோதிடம் சொல்பவர்போல் பேசினார்.

விஜயன் அவர் முன்பாக மண்டியிட்டு வணங்கினான். ''சுவாமி! தங்கள் வருகையை நான் எதிர்பார்க்கவில்லை. எதிர்பார்த்தி ருந்தால் நான் வரவேற்றிருக்கக்கூடிய முறையே வேறு'' என்று கூறவும் செய்தான்.

இதைக்கேட்ட சிவகோகர்ண சுவாமிகள் புன்முறுவல் கொண்டார். ''விஜயா! சந்நியாசிகள் வருகைக்கு எந்தப் படாடோபமும் தேவையில்லை. படாடோபத்தைத் துறக்காதவன் சந்நியாசியே அல்ல. இதோ உன் பட்டமகிஷி லீலாவதி. இவளை உன்னிடம் ஜாக்கிரதையாக ஒப்படைத்து விட்டேன். என் கடமை தீர்ந்தது'' என்று கூறி, ''லீலாவதி! இப்படி வா'' என்று அழைத்து அவள் கையை எடுத்து விஜயனின் கையில் ஒப்படைத்தார். ''இத்துடன் எனக்கு இடப்பட்ட கட்டளையும் தீர்ந்தது'' என்றார்.

லீலாவதியின் மெல்லிய கையைத் தனது வலிய கையால் பற்றிய விஜயன் சுவாமிகளின் சொற்களைக் கேட்டு வியப்படைந்து, ''கட்டளையா! யார் கட்டளை?'' என்று வினவினான் வியப்புக் குரலிலும் துலங்க.

''மரணத் தருவாயிலிருக்கும் ஒரு மாமன்னன் கட்டளை, அது ஒரு பெரிய கதை. முதலில் உணவருந்து விஜயா. பிறகு பேசுவோம்'' என்று சிவகோகர்ண சுவாமிகள், ''அந்த ராட்சஸன் நுவரகிரி எங்கே'' என்று விசாரித்தார்.

''வெளியில் நிற்கிறார்'' என்று விஜயன் சொல்வதற்கும் நுவரகிரி உள்ளே தலையை நீட்டுவதற்கும் சமயம் சரியாயிருந்தது. ''நீயும் வந்திருக்கிறாயா? என் ஓலை கிடைத்ததா உனக்கு?'' என்று சுவாமி வினவினார்.

''கிடைத்தது சுவாமி! அதனால்தான் மன்னரையும் அழைத்து வந்தேன்'' என்றார் நுவரகிரி.

zeevaa

சுவாமி தலையை அசைத்துவிட்டு, "நுவரகிரி! நீயும் இங்கேயே உணவருந்தலாம். பிறகு பேசுவோம். லீலாவதிக்குப் பணிமக்கள் யாருமில்லை. ஆகையால் லீலாவதியே உணவைப் பரிமாறுவாள்" என்று கூறிவிட்டுச் சிவலிங்கத்தையும் பூஜா திரவியங்களையும் மணியையும் எடுத்துத் தமது பூஜைப் பெட்டியில் பத்திரப் படுத்தினார். பிறகு எழுந்து அனைவரையும் அடுத்த அறைக்கு அழைத்துப் போனார். அங்கு லீலாவதி உணவு பரிமாற உணவை முடித்துக்கொண்டதும் சிவகோகர்ண சுவாமிகள், "இனி நமது உத்தியோக அறைக்குப் போவோம்" என்றார்.

"உத்தியோக அறையா?" -வியப்புடன் வினவினான் விஜயன்.

"ஆம். இந்த மரக்கலத்தின் தலைவன் அறை" என்றார் சுவாமிகள்.

"தலைவன் யார்?" என்று வினவினான் விஜயன்.

"அந்தப் பொறுப்பு இந்தச் சந்நியாசியின் தலையில் தான் விழுந்திருக்கிறது" என்று அலுத்துக் கொண்டார் சுவாமிகள்.

"தாங்களா! மரக்கலத்தின் தலைவரா!" என்று சிங்கள இளவலின் சொற்களில் வியப்பு எல்லை மீறியது.

"தலைவன் மாண்ட பின்பு மரக்கலத்தைச் செலுத்தத் தகுந்தவர் யாருமில்லை. வேண்டாவெறுப்பாக இந்தப் பணியை ஏற்றுக் கொண்டேன்" - சுவாமியின் குரலில் அலுப்புக்குப் பதில் உற்சாகமிருந்தது.

"தலைவன் ஏன் மாண்டான்?" -விஜயன் கேட்டான் விஷயத்தை முழுதும் புரிந்து கொள்ள.

சுவாமிகள் முகத்தில் வருத்தத்தைக் காட்டினார். "தலைவனா யிருப்பவன் விளையாடக் கூடாது. விளையாட்டு வினையாகும் என்பதை உணர்ந்திருக்க வேண்டும்" என்றார் சிவகோகர்ணர்.

zeevaa

விஜயனுக்கும் நுவரகிரிக்கும் ஏதும் புரியாதிருக்கவே, சிவகோகர்ண சுவாமியே விஷயத்தை விளக்க முற்பட்டு, ''லீலாவதியைப் பெண்ணென்று நினைத்து விளையாட முயன்றான். அவன் முயற்சி திருவினையாக்கவில்லை. பழமொழியில் சிறிது விட்டுப் போயிற்று. முயற்சி வினையாகியது. லீலாவதி தனது குறுவாளை அறைக்குள்ளிருந்தே விட்டெறிந்தாள். கப்பல் தலைவன் சட்டென்று அறை வாயிலிலேயே விழுந்தான். அவனை நான் அணுகுவதற்கு முன்பே அவன் உயிர் பறந்துவிட்டது. இப்படித் தலைவன் போய் விட்டதால் எல்லோர் வற்புறுத்தலுக்கும் நான் இணங்க வேண்டியதாயிற்று'' என்று விளக்கினார். அத்துடன் பெருமூச்செறிந்து, ''துறவிக்கு உதவாத வேலையெல்லாம் இந்தச் சிவனடியானுக்கு வந்து சேருகிறது. கலிங்கத்தில் ஒரு பெண்ணை நீ தூக்கிச் செல்ல உதவினேன். இப்பொழுது இன்னொரு பெண்ணை அழைத்து வந்திருக்கிறேன் உனக்கு. சிவ சிவ! என்ன பணிகள் எனக்கு!'' அலுத்துக்கொண்டார் சுவாமிகள்.

''சுவாமி! லீலாவதியை எப்படிச் சிறை மீட்டீர்கள்?'' என்று வினவினான் விஜயன்.

''சிறை மீட்டவன் வேறு'' என்றார் சுவாமிகள்.

''யார் சுவாமி?''

சுவாமி சொன்ன பதில் விஜயனை மட்டுமின்றி நுவரகிரியையும் வியப்பில் ஆழ்த்தியது. ''என்ன சுவாமி சொல்கிறீர்கள்?'' என்று விஜயன் உணர்ச்சி பொங்கக் கேட்டான்.

''ஆம் விஜயா! லீலாவதியின் விடுதலைக்குச் சோழப் பேரரசன் வீரராஜேந்திரன் தான் காரணம். அதற்காக அவன் ஆடிய நாடகம் புதுவிதம், கற்பனையின் உச்சம். அதில் நானும் ஒரு பாத்திரம்'' என்றார் சிவகோகர்ண சுவாமிகள். ''இனி விவரமாகச் சொல்கிறேன். அந்த விசித்திரக் கதையை, ஒரு மாவேந்தனின் இணையற்ற பண்பாட்டை, பக்குவ நெஞ்சத்தை, விளக்குகிறேன் கேளுங்கள்''

zeevaa

என்று பூர்வ பீடிகையுடன் துவக்கினார் லீலாவதி தப்பிவந்த கதையை: ''நான் வீரராஜேந்திரனைப் பார்த்தபோது அவனுக்கு மூச்சு விடுவதுகூடக் கஷ்டமாயிருந்தது. அந்த மரண வேதனையிலும் புன்முறுவலுடன் என்னை வரவேற்றான். என்னைப் பஞ்சணையில் தன் பக்கத்தில் அமரும்படி செய்தான். நான் உட்கார்ந்து எனது சம்புடத்திலிருந்து விபூதியை எடுத்து அவன் நெற்றியில் இட்டு வாயிலும் போட்டேன். அப்பொழுதும் இந்தச் சங்கடத்துடன் மூச்சுவிட்டு, ''ஸ்வாமி! தங்களிடம் ஒரு வரம் வேண்டும்'' என்றான் மெதுவாக. அந்த வரம்....'' என்ற சிவ கோகர்ண சுவாமியின் நெஞ்சுகூட் லேசாக அடைத்துக் கொண்டது. அவர் சில விநாடிகள் பேச்சை நிறுத்தினார்.



zeevaa

# 51. சோழ நாடகம்

அந்தப் பெரும் போர்க் கப்பலின் தலைவன் அறையில் தலைமைப் பதவியை ஏற்று உட்கார்ந்திருந்த சிவகோகர்ண சுவாமிகள், சோழர் சிறையிலிருந்து லீலாவதி விடுதலையடைந்த விசித்திரக்கதையை விவரிக்க முற்பட்ட போது பெரிதும் உணர்ச்சி வசப்பட்டுக் கண்களில் தொலைதூரக் கனவைக் காண்பது போன்ற பிரமையைச் சிருஷ்டித்துக்கொண்டார். அத்துடன் மெல்லத் தழுதழுத்த குரலிலும் பேசலானார்.

"எனது ஆசிரமும் அதன் நிர்வாகமும் பெரிதும் விரிவடைந்த காரணத்தால் நான் பல ஆண்டுகளுக்கு எங்குமே போனதில்லை. அப்படியிருந்த எனக்குச் சோழ சாம்ராஜ்யாதிபதி தூது அனுப்பி அவர் தலைநகருக்கு வந்து போகும்படி கேட்டபோது என்னால் மறுக்க முடியவில்லை. வீரராஜேந்திரனை நான் பல ஆண்டுகளாக அறிவேன். நிதானம் சிறிதும் பிசகாதவனும் நெறியின் சின்னமுமான வீரராஜேந்திர சக்கரவர்த்தி அரசகுலத்துக்கே அணிகலன். அப்பேர்ப்பட்டவன் என்னை அவசியம் வரவேண்டுமென ஓலை விடுத்ததால் நான் சோழ நாட்டுக்குப் புறப்பட்டேன்.

தஞ்சை மாநகரை நான் அணுகியதும் கோட்டை வாயிலிலேயே சகல மரியாதைகளுடன் மன்னனின் மந்திரி பிரதானிகளால் வரவேற்கப்பட்டு, சக்கரவர்த்தியின் அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அரண்மனையில் எந்த இடத்திலும் என்னைத் தாமதிக்க அனுமதிக்காமல் சக்கரவர்த்தியின் பள்ளியறைக்கே பிரதம மந்திரி அழைத்துச் சென்றார். அந்த அறையின் வாயிலில் கூட நான் நிற்கவில்லை நேராக உள்ளே அழைத்துச் சென்ற பிரதம மந்திரி,

zeevaa

அரசன் பஞ்சணையைக் காட்டினார். அங்கு நான் கண்ட காட்சி என்னை அப்படியே அதிர்ச்சியில் ஆழ்த்தி விட்டது.

எவ்வளவோ களங்களில் வெற்றிவாகை சூடிய வீரராஜேந்திரன் உடல் மெலிந்து படுத்திருந்தான். அவ்வப்போது சுர வேகத்தாலும் லேசான இழுப்பினாலும் மூச்சைச் சிரமப்பட்டே விட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்ததும் என் மனம் பெரிதும் அல்லல் பட்டது. நான் மெதுவாகப் பஞ்சணையை நெருங்கி மெல்லக் குனிந்து, 'மன்னவா' என்று அழைத்தேன். வீரராஜேந்திரன் மெதுவாகத் திரும்பி என்னைப் பார்த்ததும் உதடுகளில் புன்முறு வலைப் படரவிட்டான். அவன் கட்டில், சாளரத்தை நெருங்கி இருக்கும்படி நகர்த்தப்பட்டிருந்ததால் அங்கிருந்து நேராகத் தஞ்சைப் பெரிய கோவிலின் விமானம் தெளிவாகத் தெரிந்தது. அதைச் சுட்டிக்காட்டிய வீரராஜேந்திரன் 'அதோ என் மூதாதை நிர்மாணித்த கலைத்தோற்றம், தெய்வீகத்தின் இருப்பிடம், மனதுக்குச் சாந்தியளிக்கும் இணையிலா மருந்து. அதை வேண்டிய போதெல்லாம் பார்க்கவே கட்டிலை இப்படிப் போட்டுக் கொண்டேன்'' என்று மிக மெதுவாக திணறித் திணறிப் பேசினான்.

பேசுவதில் அவனுக்கிருந்த கஷ்டத்தைப் பார்த்த நான் மிகவும் மனம் நொந்தேன். அத்தனை சிரமத்திலும் அவன் காட்டிய சிவபக்தி என் மனத்தை உணர்ச்சி வசப்படுத்தவே, 'மன்னவா! இப்படித் திரும்பு' என்று சொல்லி எனது மடியிலிருந்த சம்புடத்தை எடுத்து அவன் நெற்றியில் விபூதியைத் தீட்டி வாயிலும் சிறிது போட்டேன். மந்திரமாவதும் நீறு என்ற வாக்கியத்தின் வன்மையை அன்று கண்டேன். வீரராஜேந்திரன் விபூதியைச் சாப்பிட்டதும் சற்றுத் திடத்துடன் பேசலானான். ''சுவாமி! நீங்கள் என் அழைப்புக்கு இணங்கி வந்தது எனது பாக்கியம்'' என்று துவங்கி, ''துறவிகள் இருக்குமிடம் மன்னன் போகவேண்டும். ஆனால் என் தேகநிலை இடம் கொடுக்காததால் தங்களை வரவழைக்க வேண்டியதாயிற்று,' என்று கூறிய மன்னன் தனது கண்களால் சுற்று முற்றும் நோக்க,

பிரதம மந்திரியும் தலைப்பகுதியில் நின்ற மகாராணியும் வெளியே சென்றார்கள். அவர்கள் சென்றதும் மன்னன் சொன்னான் : 'சுவாமி! கலிங்கத்தில் சிங்கள விஜயபாகுவுக்கு நீங்கள் காட்டிய ஆதர வெல்லாம் ஒற்றர்கள் மூலம் அறிந்தேன். அதனால் நான் எண்ணியுள்ள முக்கிய பணிக்கு உங்களைத் தவிர வேறு யாரையும் வேண்டிக்கொள்ள எனக்கு இஷ்டமில்லை. ஆகையால் தான் உங்களுக்குத் தூது அனுப்பினேன்'' என்று.

சிறிது தாமதித்தான் மூச்சைச் சரிப்படுத்திக் கொள்ள, மேலும் பேசினான்: ''சுவாமி! எனது தந்தையும் பாட்டனாரும் மகாவீரர்கள். சோழப் பேரரசை நிலத்திலும் நீரைத் தாண்டியிருந்த நாடுகளிலும் பரப்பினார்கள்; அந்த மகாவீரர்கள் அடைந்த பெருவெற்றிகளைச் சரித்திரம் சொல்லும். அத்தகைய மகாவீரர்களின் பெருமைக்கு மாசு கற்பிக்கும் ஒரு காரியம் நடந்திருக்கிறது. அந்த மாசைத் துடைக்கவே தங்கள் உதவியை நாடுகிறேன்,'' என்ற சோழச் சக்கரவர்த்தி, ''சுவாமி! என் தந்தையும் பாட்டனும் சிங்களத்தை வெற்றி கொண்டார்கள். அங்குள்ள செல்வங்களைத் திரட்டி வந்தார்கள். அதெல்லாம் போரின் தர்மங்கள். இதற்கிடையே ஒரு அதர்மமும் நடந்திருக்கிறது. ஜகதிபாலனுடைய மனைவியையும் மகளையும் பிடித்து வந்து இங்கு சிறையில் வைத்திருக்கிறார்கள். அந்த மகாவீரர்களின் சரித்திரத்தில் இந்த ஒரு கரும்புள்ளி கூடாது. அதை நீங்கள் துடைக்க வேண்டும், என்றும் கூறிக் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

எதற்கும் உணர்ச்சி வசப்படாத என்மனமே உணர்ச்சி அலைகளில் சிக்குண்டு தத்தளித்தது. 'மன்னா! உன் ஆணை என்ன?' என்று நான் நா தழுதழுக்க கேட்டேன்.

'தஞ்சைப் பெரிய சிறையிலிருக்கும் ஜகதிபாலன் மனைவியை யும் மகள் லீலாவதியையும் அழைத்துப்போய் சிங்கள விஜயபாகுவிடம் ஒப்படைத்துவிட வேண்டும்,' என்று மெதுவாகக் கூறினான் மன்னன்.

zeevaa

'மன்னா! இதற்கு நான் எதற்கு? அவர்களை விடுதலை செய்து நீயே அனுப்பிவிடலாமே,' என்று கேட்டேன்.

சக்கரவர்த்தி முகத்தில் வருத்தத்தின் சாயை படர்ந்தது. 'அவர்கள் விடுதலையாக மறுக்கிறார்கள். அதுவும் அந்தப் பெண் லீலாவதி தந்தையைக் கொன்றிருக்கிறார்கள். அவள் ராஜபுதன ரத்தம் என் உதவியையோ கருணையையோ ஏற்க மறுக்கிறது. விடுதலையாக இஷ்டப்படவில்லை என்று செய்தியனுப்பி விட்டாள்,' என்று குரலிலும் வருத்தம் தோன்றச் சொன்னான்.

'அவள் மறுத்தால் நீ என்ன செய்யமுடியும்! உன் பொன்மனத்தை உணராத அந்தப் பெண்ணைப்பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய்?' என்று நான் கேட்டேன்.

'கவலைக்குக் காரணம் ஒன்றுதான் சுவாமி! மகாவீரர்களும், தர்மவான்களுமான சோழ சாம்ராஜ்யாதிபதிகளில் ஒருவர் பெண்ணைச் சிறையெடுத்தார் என்று அவப்பெயர் கூடாது,' என்ற வீரராஜேந்திரன் துன்பப் பெருமூச்சு விட்டான். 'இந்தச் சிக்கலை அவிழ்க்கத்தான் உங்களை வரவழைத்தேன்,' என்றும் சொன்னான் திணறலுக்கிடையே.

'சொல் மன்னவா? என்னால் என்ன ஆகவேண்டும் சொல்,' என்று நான் கேட்டேன்.

மன்னன் இதழ்களில் முறுவல்விரிந்தது. 'சுவாமி! நான் விடுதலை செய்யாமல் அவர்களாகச் சிறையிலிருந்து தப்பிவிட்டாலென்ன?' என்று மெதுவாக கேட்டான் சோழச் சக்கரவர்த்தி.

வீரராஜேந்திரன் இதைச்சொல்லி வியாதியின் அத்தனை கஷ்டத்திலும் விஷமமாகக் கண்ணைச் சிமிட்டினான். அவன் எண்ணம் எனக்குத் தெள்ளெனப் புரிந்தது. இருப்பினும் ஒரு சந்தேகம் மனத்தில் எழுந்ததால் 'மன்னா! இதற்கு என்னை வரவழைப்பானேன்? சோழ நாட்டில் இதற்கு சந்நியாசி யாரும்

zeevaa

கிடைக்கவில்லையா? தவிர இதற்குச் சந்நியாசியும் தேவை யில்லையே,' என்று கேட்டேன்.

வீரராஜேந்திரன் பஞ்சணையில் லேசாகப் புரண்டு படுத்தான். 'சுவாமி! அந்தப் பெண்ணை எளிதில் ஏமாற்ற முடியாது. யார் அவளைத் தப்பவைப்பதாகச் சொன்னாலும் சந்தேகப்படுவாள். ஆனால் நீங்கள் அவள் வருங்கால கணவனுக்குச் செய்திருக்கும் உதவிகளை அவள் அறிவாள். ஆகவே உங்களை நம்புவாள்,' என்று கூறினான் ஒருக்களித்துப் படுத்த நிலையில். அவன் திட்டமிட்டிருந்த நாடகத்திற்கு நானும் ஒப்புக் கொண்டேன். அவன் கடைசியாகச் சொன்னான்: 'நீங்கள் தாயையும் மகளையும் அழைத்துக் கொண்டு புகார் செல்லுங்கள். அங்கு வரும் வெளிநாட்டு மரக்கலம் ஏதாவதொன்றில் சிங்களம் செல்லுங்கள்,' என்றான்.

அவன் திட்டப்படி அன்றிரவு நான் லீலாவதியையும் அவள் தாயையும் சிறையில் சந்தித்தேன். அவர்கள் இருந்த சிறைகூட அரண்மனையின் அறைபோல மிக விசாலமாகவும் சகல வசதி களுடனும் காணப்பட்டது. அங்கு என்னை உள்ளே விட்டுக் காவலன் சென்றுவிட்டான். நான் லீலாவதியை அவர்கள் நிலைபற்றி விசாரித்தேன். தங்களுக்குச் சௌகரியத்தில் குறையேதுமில்லை யென்று அவள் தாய் சொன்னாள். 'கூண்டு தங்கத்தால் செய்யப்பட்டால் அது உயர்வா? சிறை சிறைதான்' என்றாள் லீலாவதி. அதைக் கேட்ட நான் சுற்றுமுற்றும் பார்த்தேன். 'லீலாவதி! இப்படி வா' என்று அழைத்து 'இன்றிரவு நீயும் உன் தாயும் இங்கிருந்து தப்பவேண்டும். அதற்கான ஏற்பாட்டுடன் வந்திருக்கிறேன்' என்று சொல்லி வீரராஜேந்திரன் எனக்குச் சொல்லிக் கொடுத்தபடி தப்பும் திட்டத்தையும் சொன்னேன். லீலாவதியின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. அன்று நள்ளிரவில் வருவதாகச் சொல்லிவிட்டுத் திரும்பினேன். பிறகு மன்னனைப் பார்த்து, 'மன்னவா, இன்றிரவு உன் கருணைத் திட்டம் நிறைவேறும்' என்று சொன்னேன்.

zeevaa

மன்னன் பூரிப்படைந்தான். 'சோழர்கள் தர்மம் காப்பாற்றப் பட்டது' என்று சொல்லிக் கண்களில் நன்றியைக் காட்டினான். அன்றிரவு நடுச்சாமத்தில் நான் தலையைப் போர்வையால் முக்காடிட்டுப் பூஜைப்பெட்டியை இடுப்பில் வைத்துக்கொண்டு சிறைச்சாலையை அடைந்தேன். கையில் சிறைச்சாலை அதிகாரி கொடுத்த சாவியிருந்தது. கதவைத்திறந்து மெதுவாக உள்ளே சென்று, 'லீலாவதி! கிளம்பு. சத்தம் ஏதும் செய்யாமல் உன் தாயுடன் என்னைப் பின்பற்றி வா' என்று ரகசியமாகச் சொன்னேன். 'உங்கள் உடலைத் தலையிலிருந்து கால்வரை போர்த்துக் கொள்ளுங்கள்' என்றேன். பிறகு மெதுவாக அக்கம்பக்கம் பார்த்து நடந்தேன். நான் பெரிய பெரிய சமஸ்கிருத நாடகங்களைப் படித்திருக்கிறேன். பெரிய நடிகர்கள் நடித்த நாடகங்களையும் பார்த்திருக்கிறேன். ஆனால் எனது நடிப்புக்கு எந்த நடிகனும் இணையாக மாட்டான். அப்படி நடித்து இருவரையும் அழைத்துக்கொண்டு சிறைச்சாலைக்கு வெளியே கூப்பிடு தூரத்தில் புகாரின் பெருஞ்சாலையில் மரத்தின் மறைவிலிருந்த ஒரு மூடுவண்டியை அணுகி அதில் பெண்களை ஏற்றி நானும் ஏறி உட்கார்ந்தேன். வண்டி புகாரை நோக்கிப் பறந்தது. அங்குள்ள இந்தப் போர்க்கப்பலில் நாங்கள் செல்ல வீரராஜேந்திரனே ஏற்பாடு செய்திருந்தான். ஆகவே இதில் ஏறுவதும் இங்கு வருவதும் சாத்தியமாயிற்று. இலங்கையை அணுகும் தருவாயில் கப்பல் தலைவனை இவள் கொன்று விடவே நானே தலைவனானேன். கப்பலிலிருந்த மாலுமிகளுக்குச் சிங்களத்தில் நிறையப் பணம் கொடுப்பதாக ஆசையும் காட்டினேன். நான் சிங்களத்தை அணுகும் சமயத்தில் சூ-சின்னும் சிற்பியும் கொண்டு வந்த நான்கு மரக்கலங்களைக் கண்டு அவற்றுடன் சேர்ந்து கொண்டேன்'' என்று கதையை முடித்தார் சுவாமிகள்.

இதைக் கேட்ட விஜயனும் நுவரகிரியும் பிரமித்தார்கள். ''இப்படியும் ஒரு மன்னன் உண்டா?'' என்று நுவரகிரி கேட்டார்.

zeevaa

''நுவரகிரி! சோழர்கள் சூரியவம்சம். அந்த வம்சத்தைச் சேர்ந்த சிபி புறாவுக்காகத் தனது சதையையே வெட்டிக் கொடுத்தவன்'' என்று சோழச் சக்கரவர்த்தியின் தயாளத்துக்கு புராணச்சான்றும் சொன்னார். ''அதுமட்டுமல்ல. வழியில் கடல்நோய் கண்டு லீலாவதியின் தாயார் இறந்துவிட்டாள். இப்பொழுது லீலாவதிக்கு விஜயனைத் தவிர வேறு ஆதரவில்லை'' என்றும் குறிப்பிட்டார்.

இந்தக் கதையைக் கேட்டவர்களில் லீலாவதி மட்டும் ஏதும் பேசாமல் மௌனமாக உட்கார்ந்திருந்தாள். பிறகு மிக மெதுவாகவும் கடினமான குரலிலும் சொன்னாள்: ''சுவாமி! நான் சிங்களத்தில் இறங்கவில்லை. மீண்டும் தஞ்சைச் சிறைக்குப் போகிறேன்'' என்று.

''ஏன் லீலாவதி?'' சுவாமிகள் வியப்புடன் வினவினார்.

'இந்த மாதிரி வெட்கம் கெட்ட விடுதலையைவிட சிறைவாசம் சிறந்தது'' என்ற லீலாவதி தலையை மிக உயர்த்தி கம்பீரமாக நின்றாள்.

சுவாமிகள் விஜயபாகுவைப் பார்த்தார். ''இந்தச் சங்கடத்துக்கு என்ன செய்வது? பிடிவாதத்துக்கே பெண்கள் பிறந்திருக்கிறார் களா?'' என்று வினவினார்.

விஜயபாகு ஏதும் பேசாமல் எழுந்து நின்றான். ''சுவாமி! இவள் சிறையை விரும்புகிறாள். அதை வீரராஜேந்திரன் என்ன, நானும் அளிக்க முடியும்'' என்று கூறிவிட்டு லீலாவதியைத் தரதரவென்று வேகமாக கையைப் பற்றி இழுத்துக் கொண்டு சென்றான். நூலேணியில் அவளை இறக்கித் தானும் இறங்கிப் படகொன்றில் கரைக்கு வந்து அங்கு நின்றிருந்த மூர்சமதை நோக்கி, ''சமத்! இவளை அழைத்துக்கொண்டு போய் நமது துறைமுக மாளிகையின் அறையில் அடைத்து வை. நான் சிறிது நேரம் கழித்து வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

zeevaa

நள்ளிரவு தாண்டியதும் துறைமுக மாளிகைக்குச் சென்ற விஜயன் அங்கிருந்த பெரிய அறையைத் திறக்க முயன்றான். அறை தாளிடப்பட்டிருந்தது. கதவை ஒருமுறை இடித்தான். அப்பொழுது இன்னொரு தாழ்ப்பாளும் போடும் சத்தம் கேட்கவே நகைத்தான். ''தேவி! திற கதவை'' என்றான் நகைப்பின் ஊடே.

கதவு திறக்கப்படவில்லை. மெதுவாகத் தாழ்வரையின் மறுபுறம் சென்று அங்கிருந்த சாளரத்தின் கதவை மெல்லத் திறந்து உள்ளே ஓசைப்படாமல் இறங்கினான் விஜயன். அதே நேரத்தில் மற்றொரு சாளரத்தின் வழியாகக் கீழே இறங்க லீலாவதி முயன்று கொண்டிருந்தாள்.




zeevaa

# 52. பஞ்சணைப் பறவை

நள்ளிரவு தாண்டிவிட்ட நேரத்தில் நளினமான தேகத்தையுடைய லீலாவதி சாளரக் கட்டைக்கு வெளிப்புறம் ஒரு காலும் உட்புறம் ஒரு காலும் இருக்க, கீழே குதித்து விடலாமா, மெதுவாக இறங்கிவிட முடியுமா என்று சிந்தித்த வண்ணம் சாளரத்தின் நடுமரத்தை ஒரு கையால் பிடித்து வெளியே நோக்கி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்ததால் இன்னொரு சாளரத்தின் வழியாக உள்ளே இறங்கிய விஜயனைக் கவனிக்கவில்லை. அவன் பூனைபோல் அடிமேல் அடி எடுத்து வைத்து அவள் பூவுடலைஇரு கைகளாலும் கட்டிப்பிடிக்கும் வரையில் அவன் வருகையை அறியாத லீலாவதி அதிர்ச்சியுற்று. திடீரெனத் தனது முகத்தைத்திருப்பவே, எதிரே தெரிந்த உதடுகளைத் தனது உதடுகளால் மட்டுமின்றிப் பற்களாலும் லேசாகப் பற்றினான் சிங்கள மன்னன். அதன் விளைவாக வெறி முற்றிய அந்த ராஜபுதன மகள் அவன் கைச்சிறையிலிருந்து மீளவும் உதடுகளைவிடுவித்துக் கொள்ளவும் திரும்பித்திரும்பி அவனை உதற முற்பட்டபோது அவன், சாளரத்திலிருந்து தூக்கி அறை நடுவிலிருந்த பஞ்சணைக்குக் கொண்டு சென்று அதில் மெதுவாக அந்த அஞ்சுகத்தைப் படுக்க வைத்தான். ஆனால் அஞ்சுகம் அப்பொழுதும் அடங்காமல் தனது சிறகுகளை விரித்து அடித்துக்கொண்டு பஞ்சணையிலிருந்து பறக்க முற்பட்டதால் விஜயன் அதன் கைகால்களைப் பலமாக அழுத்தி, சிறகடித்தும் பயனற்ற நிலையைச் சிருஷ்டித்தான். ''விடுங்கள் என்னை. ஒரு சிறையிலிருந்து இன்னொரு சிறைக்கு தாவ நான் முட்டாளல்ல'' என்று சீறினாள் லீலாவதி.

zeevaa



zeevaa

தனது கைகால்களால் அழுத்தப்பட்டு, திமிறித் திண்டாடிப்பேசிய லீலாவதியை நோக்கி நகைத்த சிங்கள இளவல், ''நான் வீர ராஜேந்திரனல்ல உன்னைச் சிறையிலிருந்து பறக்கவிட. என் சிறையிலிருந்து நீ தப்ப முடியாது.'' என்று கூறினான் நகைப்பின் ஊடே.

''சோழமன்னன் கருணைக்கு இலக்காக நான் விரும்பவில்லை. யார் தயவும் எனக்குத் தேவையில்லை. இன்னும் சில விநாடிகள் கழித்திருந்தால் என்னை நீங்கள் கண்டு பிடித்திருக்க முடியாது.'' என்றாள் லீலாவதி.

''முடியும். ஆனால் நான் கண்டு பிடிக்கும்போது நீ முழுமையாக இருக்கமாட்டாய். தலை சிதறாவிட்டாலும் காலாவது உடைந்திருக் கும். நொண்டிக்கிளியை நான் மணக்க இஷ்டப்படவில்லை. எனது மூத்த மகேசி ஆட்சி மண்டபத்துக்குள் நொண்டிக் கொண்டு வந்தால் எப்படியிருக்கும்!'' என்று வினவியதன்றி அந்தக் காட்சியை நினைத்து நகைக்கவும் செய்தான்.

அவன் நகைப்பு அவளுக்கு வேப்பங்காயாக இருந்ததால் அவள் முகம் சுளித்தாள். சீற்றத்தால் அவள் உதடுகளும் துடித்தன. அந்த நிலையில் பல்லைக் கடித்துக் கொண்டு கேட்டாள், ''உங்களை நான் மணம் செய்து கொள்ளப் போவதாக யார் சொன்னது?'' என்று.

''உன் தந்தை.'' இதைச் சர்வசகஜமாகச் சொன்னான் விஜயன்.

''அவர் இப்பொழுது இல்லை,'' என்றாள் லீலாவதி. விஜயனைச் சுடச்சுடவும் பார்த்தாள்.

''இருப்பவர் விருப்பத்தை விட இறந்தவர் விருப்பத்தைப்பூர்த்தி செய்வது அவசியம். அது கடமை, கண்ணியமும் கூட.''

''என் தந்தையின் விருப்பத்தைப் பற்றி என்னைவிட உங்களுக்கென்ன அக்கறை?''

''நான் மன்னன். கொடுத்த வாக்கை மீற முடியாது. உன்னை மணப்பதாக உன் தந்தைக்கு வாக்குக் கொடுத்து விட்டேன்.''

zeevaa

''நான் வருமுன்பாகவே இன்னும் இரண்டு பேரை மணக்கவும் தந்தை வரம் கேட்டாரா?''

''மணக்க வேண்டாமென்று தடை உத்தரவு போடவில்லை உன் தந்தை,'' என்ற விஜயன் இந்த வாக்குவாதம் நடந்து கொண்டிருந்த சமயத்தில் அவள் கேட்ட ஒவ்வொரு கேள்வியை அடுத்தும் அவளது மேலாடையை மெல்ல மெல்ல விலக்கிக் கொண் டிருந்தான்.

உரையாடலின் வேகத்தாலும், கோப உணர்ச்சியின் கொந்தளிப் பாலும் அவள் விஜயனின் இந்தக் கை லாவகத்தை கவனிக்கத்தான் இல்லையோ அல்லது கவவனித்தும் அவன் மற்றொரு கையும் அவள் பூவுடலை அழுத்திக் கொண்டிருந்ததால் செயலிழந்து விட்டாளோ, சொல்ல முடியாது. அவள் திமிறலும் சற்றுக் குறையவே, அவள் கச்சையையும் லேசாகத் தளர்த்தினான் அந்த வாலிபன்.

அவள் உணர்ச்சிகள் சினத்திலிருந்து வேறு துறைக்குத் திருப்பினாலும் அதை அவள் வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், ''இது எதற்கு?'' என்று வினவினாள். அவன் கையையும் அகற்றவும் முயன்றாள்.

ஆனால் அந்தத் துஷ்டக் கை விலகுவதாக இல்லை. அவள் கையை அகற்றி விட்டு அவள் திமிறிய உடம்புமீது லேசாக ஊர்ந்தது. அத்தனை சிறிய உடல் எத்தனை கெட்டியாக, எத்தனை அழகாக இருக்க முடியும் என்பதை உணர்ந்த விஜயன், 'சிருஷ்டியில் எத்தனை விதம்! எத்தனை விசித்திரம்!' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டான். காட்டுப் புஷ்பமான சுடர்விழியின் செழித்த பருத்த மார்பையும், திரிலோகசுந்தரியின் அளவுடன் அமைந்திருந்த லேசாக விகசித்த திண்ணிய தாமரை மொட்டுகளையும், கிண்கிணி வாய்த்த தாமரையாக இல்லாமல், சின்னதிலும் கூர்ந்து நிமிர்ந்து நின்ற லீலாவதியின் மார்பின் அளவையும் கடினத்தையும்

zeevaa

ஸ்பரிசித்த விஜயன், 'இவள் மனமும் மார்பைப் போல கடினமாகத்தான் இருக்கிறது. இருந்தாலென்ன? ஆண்மகனால் அசைக்க முடியாத பெண்கடினம் உலகத்தில் இருக்கிறதா என்ன?' என்று பலபடி எண்ணிய வண்ணம் அவள் கச்சையை அடியோடு அகற்றவும் செய்தான்.

அந்த ஆண்மகனின் கர சரத்தால் தனது உணர்ச்சிகள் அலைகளாக எழுந்துவிட்டதையும் தனது சித்தம் சிதறுவதையும் உணர்ந்த லீலாவதி தனது திமிறலை நிறுத்தி மெதுவாக அசைந்தாள். ஒரு பெருமூச்சும் விட்டாள். அதில் சோகமும் இருந்தது. வேட்கையும் இருந்தது. அந்தப் பெருமூச்சு அளித்த இடத்தால் விஜயன் தனது முகத்தைத் தாழ்த்தி அவள் கழுத்தில் உதடுகளைப் பதித்தான். ''விடுங்கள் என்னை,'' என்று முனகினாள் லீலாவதி. அந்த முனகலில் சக்தி சிறிதும் இல்லாததைக் கவனித்த விஜயன் உவகை உள்ளத்தில் துள்ள, உணர்ச்சிகள் உடலெங்கும் ஊடுருவ அவளை அப்படியே இடது கையால் தூக்கி எடுத்தான். அப்படி எழுந்த உடலைத் தன்னுடன் இடது கையாலேயே சேர்த்து அணைத்தான். அந்த அணைப்பில் உள்ளே சிக்கிக் கொண்ட அவன் உடல் அவள் மார்பில் அதிகமாக அழுந்தவே அந்தச் சுதந்திரப் பறவை மெள்ள மெள்ள சுதந்திரத்தை இழக்கலாயிற்று.

மார்பில் அழுந்திய அந்த வலது கையும், மார்பை விடுத்து அவள் சிற்றிடையில் அலைந்து சற்றுக் கீழேயும் இறங்கி அவள் பருவத் தண்டுகளில் தவழ்ந்தது. அந்தக் கதலித் தொடையின் வழவழப்பினாலும், மெல்லிய அவள் உடலில் அந்தப் பருவப் பகுதிகள் மட்டும் உருண்டும் பருத்துமிருந்ததாலும் அவற்றை இயற்கை வேண்டுமென்றே செப்பனிட்டு இருக்கிறதென்று தீர்மானித்தான் சிங்கள இளவல். அங்கிருந்து விலகி அவள் முழங்கால்களையும், செம்பஞ்சுக் குழம்பு தீட்டிய பாதங்களையும் லேசாக வருடிய அவன் வலது கை, பாதத்தைச் சிறிது வலிக்கவே பிடித்தது. பிறகு அவள் நிலையையும் தனது நிலையையும் அடியோடு மாற்றிக் கொண்ட விஜயன் அவள் கன்னத்தில்

zeevaa

உதடுகளைப் புரட்டி அவள் காதுக்கருகில் மெதுவாகச் சொன்னான், "லீலாவதி! தூரப்பார்வைக்கு நீ மெல்லிய கொடி. அருகே வந்தால் நான் நீ மறைத்திருக்கும் மலர்களை உணரமுடிகிறது." என்று.

அவள் பதிலேதும் சொல்லவில்லை. அவன் கைகளில் தான் பெரிதும் பலவீனப்பட்டு விட்டதை உணர்ந்தாள். தனது பூவுடல் அவன் இரும்பு உடலை விட்டு நீங்க மறுப்பதையும், அவன் செய்யக்கூடிய இன்ப இம்சையை அது எதிர்பார்க்கிறதென்றும் அறிந்து கொண்டதால், 'பெண்ணாகப் பிறப்பதே பிசகு.' என்று உள்ளூர சொல்லிக் கொண்டாள். 'மறைந்திருக்கும் மலர்களைப் பற்றி ஏதோ சொன்னாரே?" என்று எண்ணிய அந்தப்பூங்கொடி, 'அவற்றை ஆராய்ச்சி செய்யத்தான் முனைந்திருக்கிறாரா?' என்று கேட்டுக் கொண்டாள். அப்பொழுது அவன் கை அவளது அழகிய கால்களில் தவழ முற்படவே அதைத் தனது கையொன்றால் இறுகப் பிடித்து நிறுத்தினாள்.

"ஏன் தேவி!" என்று முணுமுணுத்தான் விஜயன்.

அந்தக் கேள்வியால் சுரணை திரும்பிவிடவே, "நான் இன்னும் உங்கள் தேவியாகிவிடவில்லை," என்றாள்.

"எல்லாம் உன்னிஷ்டத்தைப் பொறுத்தது," என்றான் விஜயன்.

"என்னிஷ்டப்படி என்ன நடக்கிறது இங்கே?" என்றாள் லீலாவதி.

"உன்னிஷ்டமில்லாமல் எதுவும் நடக்காது."

"என்னிஷ்டப்படிதான் இத்தனை நேரம்... இதெல்லாம்..."

"எதெல்லாம்?"

"உங்கள்..."

"ஏன்?"

zeevaa

''நடத்தை.''

''எனது நடத்தைக்கென்ன?''

''இன்னும் என்ன வேண்டும்?''

பதிலைச் சொல்லச் சற்றுத் தாமதித்தான் விஜயன். பிறகு அவள் காதுக்கருகில் உதடுகளைக் கொண்டுபோய், ''சொல்லட்டுமா லீலாவதி?'' என்று மெதுவாகக் கேட்டான்.

''உம்...'' அவள் அந்த 'உம்'ல் ஊக்கம் இருந்தது.

''பூர்த்தி...'' இதை மிக மெதுவாகச் சொன்னான்.

''ஊஹூம், முடியாது'' என்றாள் அவள்.

''ஏன் முடியாது லீலாவதி?''

''திருமணமாகவில்லை.''

''அது தடையாயிருக்க முடியாது.''

''என்ன உளறுகிறீர்கள்?''

''நமக்குக் காந்தருவம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.''

இப்படிச் சொல்லிக் கொண்டே அவளைப் பஞ்சணையில் கிடத்தினான் விஜயன். இம்முறை அவள் திமிறவில்லை. வீசியெறியப்பட்ட புஷ்பக் கொடிபோல் பஞ்சணையில் கிடந்தாள். காலே துறைமுகத்தின் காற்று சாளரத்தின் மூலம் அறையில் புகுந்து அவள் ஆடைகளைச் சீர்குலைத்துக் கொண்டிருந்தது. அதைச் சீர்படுத்தவோ, அழகுகளை மறைக்கவோ அவள் முயலவில்லை. 'இந்தக் காற்றும் இவருக்குத்தான் அனுகூலமாயிருக்கிறது.' என்று உள்ளூர எண்ணினாள். ''எனது ராஜபுதன கௌரவம் எங்கே போயிற்று? என் வீரமரபின் லக்ஷணம் இதுதானா?'' என்று வினவிக் கொண்டாள்.

zeevaa

பஞ்சணையில் விகசித்த புஷ்பம் போலும் சிறகு விரித்த பறவை போலும் அவள் கிடந்த நிலையைப் பஞ்சணையில் உட்கார்ந்த வண்ணமே விஜயன் கவனித்தான். அவள் சயனத் திருக்கோலம் அவள் சுதந்திரத்தை அழித்திருந்ததைக் கவனித்த சிங்கள் இளவல் அவளிடம அனுதாபமும் காமமும் ஒருங்கே கொண்டான் ''இவளை மகேசியாகப் பெற்றது சிங்களத்தின் பாக்கியம்,'' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டான். அவள் அவனைக் கடைக்கண்ணால் நோக்கினாள். அவள் கைகளிரண்டும் எழுந்தன அவனை நோக்கி. அந்தக் கைகளில் சிறைப்பட்ட சிங்கள இளவல், ''சுதந்திரமிழந்தது நான்தான்,'' என்று நினைத்துக் கொண்டு அந்தக் கைகளுக்குள் நுழைந்தான். காந்தருவம் தொடர்ந்தது. சுதந்திரம் பறந்தது. அந்த இருவரின் உணர்ச்சி அலைகள் காலே கடலின் அலைகள் போல எழுந்து எழுந்து திரும்பத் திரும்ப மோதின.



zeevaa

# 53. சுவாமிகளின் போர்க்கலை

பொழுது மெள்ள மெள்ளப் புலர்ந்து கொண்டிருந்தாலும், விடிகாலைப் பனிமூட்டம் முழுதும் விலகாததால் காலே துறைமுகம் மெல்லிய வெள்ளைக் கலை உடுத்திய யுவவதியைப்போல் காட்சியளித்தது. விடியற்காலை இன்பப் பறவைகள் ஏதும் கூவாவிட்டாலும் துறைமுகக் கடற்பட்சிகளின் கரகரத்த கூவல் திரும்பத்திரும்ப எழுந்ததால் அந்த மனோகரச் சூழ்நிலையில் அந்த ஒலியும் இன்பமாகவே காதில் விழுந்தது. துறைமுகத்தில் ஆடி நின்ற மரக்கலங்களுக்குப் பனி திரையிட்டிருந்ததால் அவை ஏதோ மாயக்கப்பல்கள்போல் தோன்றி யாரோ ஒரு மந்திரவாதி இந்திர ஜாலம் காட்டுவது போன்ற பிரமையை அளித்திருந்தது. அந்தக் காட்சியைக் சாளரக் கட்டையைப் பிடித்துக்கொண்டே பார்த்து மனத்தைப் பறிகொடுத்த லீலாவதி மகிழ்ச்சிப் பெருக்கால் 'ஹூம்' கார ஒலி கிளப்பினாள். வீணையின் தந்தியை யாரோ சுண்டிவிட்டது போன்ற நாதத்தில்.

அந்த 'ஹூம்' காரத்தைக் கேட்டவண்ணம் பஞ்சணையில் மல்லாந்து கிடந்த விஜயன், சாளரத்தருகே நின்ற அந்தப் பூங்கொடியைப் படுத்த வண்ணமே பார்த்து, 'இத்தனை மெல்லிய உடலில் எத்தனை வலிமை இருக்கிறது!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் கடந்த இரவின் நிகழ்ச்சியை சிந்தித்து. 'ராஜபுதனத்தின் இந்த வீரப்பெண்மணிக்கு வலிமையும்இருக்கிறது, மிருதுத் தன்மையும் இருக்கிறது. இரண்டும் எப்படிக் கலந்தது?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். பிறகு மெதுவாக எழுந்து கட்டிலை விட்டிறங்கி அந்த அஞ்சுகத்தை நோக்கி நடந்து,

zeevaa

சாளரத்தை எட்டியதும் அவள் தோள்மீது தனது கையை வைத்தான். "லீலாவதி!" என்று மெதுவாக அழைக்கவும் செய்தான்.

அவள் அவனைத் திரும்பிப்பாராமலே தனது தலையை அவன் தோள்மீது சாய்த்துக் கொண்டாள். அந்தத் தலையைக் கோதிவிட்ட வண்ணம் விஜயன் வினவினான், "லீலாவதி, காலே துறைமுகத்தின் அழகை உலகில் வேறெங்காவது பார்த்திருக்கிறாயா?" என்று. இன்னொரு கேள்வியையும் கேட்டான். "இந்தத் துறைமுகத்துக்குள் விடியற்காலையில் நுழைந்திருக்கிறாயா?" என்று.

"இல்லை. ஏன் கேட்கிறீர்கள்?" என்று வினவினாள் ஜகதிபாலன் மகள்.

"அது ஒரு தனி இன்பம். கண்ணுக்கு வேறெங்கும் கிட்டாத விருந்து" என்ற விஜயன் மேலும் விளக்க முற்பட்டு, "சிறுவயதில் ஜாலவித்தை பார்த்திருக்கிறாயா? செப்பிடுவித்தையைக் கண்டிருக்கிறாயா?" என்று கேட்டான்.

"இல்லை. ஏன்?" என்று வினவிய லீலாவதி, அவன் கையொன்று தனது இடையிலிருந்து கீழே இறங்குவதை உணர்ந்து உவகைப் புன்முறுவல் காட்டினாள்.

அவள் பின்னெழிலில் திளைத்த கையுடன் பேசலானான் விஜயன். •"தேவி! இந்தத் துறைமுகத்துக்குள் நான் பலமுறை மரக்கலத்தில் வந்திருக்கிறேன். அதுவும் இந்த மாதிரி நாட்களில்

---

• If as is frequently the case, the ship approaches the land at daybreak, the view recalls, but in an intensified degree, the emotions excited in childhood by the slow rising of the curtain in a darkened theatre to disclose some magical triumph of the painter's fancy, in all the luxury of colouring and all the glory of light. The sea, blue as sapphire, breaks upon the fortified rocks which form the entrance to the harbour, the headlands are bright with verdure, and the yellow sand is shaded by palm-trees that incline towards the sea, and bend their crowns above the water. The shore is gemmed with flowers, the hills behind are draped with forests of perennial green; - Ceylon an Account of the Island - Description of Gale Harbour-Sir J.E. Tennent. Vol. II Page 99.

zeevaa

பலமுறை வந்திருக்கிறேன். பாறைகளைப் புகுவாயிலாக உடையதும் மலைகளால் சூழப்பட்டதுமான இந்தக் காலே துறைமுகத்தில் இப்படிச் சூழ்ந்துள்ள பனி விடியற்காலையில் மெல்ல மெல்ல எழுந்து திரையை நீக்கும். மரக்கலம் உள்ளே நுழையும் போது மேலே எழும் பனி, நாடகமேடை திரை எழுந்ததும் உள்ளே தெரியும் வண்ணப் பின்னணிப் படுதாவைப்போல வர்ண ஜாலங்களைக் கண்ணுக்குக் காட்டும், புகுமுக பாறைகள் மீது மோதும் அலைகளும் பறக்கும் பறவைகளும் சூழ்ந்த மலைகளில் புஷ்பித்த மரங்களுமாகச் சேர்ந்து பற்பல அற்புதங்களைக் கண்ணுக்குக் காட்டும். காலே துறைமுகத்தின் காட்சி இத்தனை அற்புதம். நாம் இங்கு புகும்போது, இயற்கை செப்பிடு வித்தைக்காரனாகி நமது மனத்தை ஈர்த்துக் கொள்கிறது. துறையில் உள்ள பெரும் பனைகள் தலை தாழ்த்தி தங்கள் மகுடங்களை நீர்மட்டத்துக்குமேல் வளைக்கும் காட்சி நம் சித்தத்தைத் தன் வனப்புக்குச் சிறையாக்கிக் கொள்கிறது'' என்று விளக்கினான் விஜயன்.

இதைச் சொன்ன விஜயன் ஏதோ கனவுலகத்துக்குப் போய்விட்டதை உணர்ந்த லீலாவதி, ''கனவு காண்கிறீர்கள்'' என்றாள் மெதுவாக.

''அதோ பனி மெள்ள மெள்ள விலகுவதைப் பார். பனிமூட்டம் எட்ட இருக்கும் மலைகளில் தொற்றிக்கொண்டிருப்பதையும் கவனி'' என்று உஷ்ணத்தோடு கூறி, அவளைக் கட்டித் தூக்கிக்கொண்டு மீண்டும் பஞ்சணைக்குச் சென்று அவளை அதில் கிடத்தினான். ''நீண்ட பயணம் செய்திருக்கிறாய். இப்படியே படுத்திரு இன்னும் கொஞ்ச நேரம். நான் நீராடி வருகிறேன்'' என்று சொல்லி அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றான்.

அவன் அறையைவிட்டுச் சென்றதும் பஞ்சணையில் இரண்டு வினாடிகளே புரண்ட அந்தப் பைங்கிளி மீண்டும் எழுந்திருந்து சாளரத்தை நோக்கிச் சென்றாள். விஜயனுடைய நெடிய உருவம்

கடலை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருப்பதைக் கண்ட லீலாவதி, தானும் கடலில் நீராடத் தீர்மானித்து துறைமுக மாளிகை அறையிலிருந்து கிளம்பினாள். கடற்கரையை அடைந்ததும் அங்கிருந்த பாறையொன்றின்மீது நின்று விஜயன் கடலில் நீந்திச் செல்வதைக் கண்டு தானும் இறங்கினாள் கடல் நீரில் . துறைமுக அலைகள் அன்று காலை அதிகமாக இல்லாததால் அவள் உடலை அலை தழுவித் தாங்கியபோது நீராட்டம் மிக இன்பமாயிருந்தது அவளுக்கு. சிறிதுநேரம் நீந்தித் திளைத்த பிறகு கரைக்கு வந்து கரையின் மெல்லிய உப்பு மணலாலேயே பல் துலக்கினாள். அந்த உப்பு மண்ணும் உப்பு நீரும்கூட அன்று அவளுக்கு மிக இன்பமாயிருந்தது. வாயைக் கொப்பளித்து நீரில் மீண்டும் இறங்கிப் பூவுடலைத் தேய்த்துக்கொண்ட லீலாவதி புடவையைப் பிழிந்து கொள்ளவும் உடலைத் துவட்டிக் கொள்ளவும் ஒரு பாறையின் மறைவுக்குச் சென்றாள். அங்கு அவள் உடலைத் துவட்டிய பிறகு மற்றொரு பாறை மறைவிலிருந்து வெளியே வந்த விஜயன் கையிலிருந்த பூங்கொத்து ஒன்றை எடுத்துக் கட்டிய அவளுடைய குழலில் சூட்டினான். அவன் பின்னால் வருவதை முன்பாக அறியாத லீலாவதி சட்டென்று திரும்பியதால் அவன் பிணைப்பில் இருந்தாள். அதிலிருந்து மீள முற்பட்டு "பனிமூட்டம் கலைந்துவிட்டது" என்றாள்.

"ஆம்."

"நம்மை எல்லோரும் பார்ப்பார்கள்."

"கவலையில்லை."

"உங்களுக்குக் கவலையில்லை, எனக்கு?" .

"உனக்கு மட்டுமென்ன?"

"நான் பெண்"

"ஆண் பெண் உறவு உலகத்துக்குப் புதிதல்ல."

zeevaa

''எதற்கும் மறைவு வேண்டும்'' இதைச் சொன்ன லீலாவதி, ''அதோ பாருங்கள்'' என்று எட்ட வந்து கொண்டிருந்த படகைச் சுட்டிக்காட்டினாள்.

படகில் நுவரகிரியும் சிவகோகர்ண ஸ்வாமிகளும் வந்து கொண்டிருப்பதைக் கண்ட விஜயன், ''வா வா! நாம் போய் அவர்களை வரவேற்போம்'' என்று கூறி, பாறைகளில் தாவித் தாவி மணல் தரைக்கு வந்தான்.

அதே சமயத்தில் சுவாமியின் படகும் அருகே வரவே சுவாமி படகில் எழுந்து நின்றார்.

காலைக் கதிரவனின் கிரணங்களில் சுவாமிகளின் மாசு மருவில்லாத வழவழத்த தேகம் தங்கம் போல் பளபளத்தது. அவர் மார்பில் புரண்ட ருத்திராட்ச மாலையின் தங்க அமைப்புகள் அவர் சரீர ஜாஜ்வல்யத்துடன் போட்டி போட முடியாமல் தத்தளித்து அவர் மார்பில் அசைந்தன. திரணை திரணையாக இருந்த கைகளும் கால்களும் அவர் மகாசக்திக்கு அத்தாட்சிகளாயிருந்தன. நெற்றியில் தீட்டிய விபூதியும் குங்குமமும் அந்த விடியற்காலையின் அமைப்புக்குப் பெரிதும் மெருகு ஊட்டின. சுவாமிகள் படகிலிருந்து அனாயாசமாகத் தரையில் இறங்கி, தம்மை வணங்கி நின்ற லீலாவதியின் நெற்றியிலும் விஜயன் நெற்றியிலும் குங்குமம் இட்டார். ''எந்த நெற்றிக்கும் அலங்காரம் அவசியம்'' என்றும் கூறினார்.

''நான் பௌத்தன்'' என்று சிறிது ஆட்சேபணை கிளப்பினான் விஜயன்.

''அதுவும் ஹிந்து மதந்தான். வேதத்திலிருந்துதான் வந்தது'' என்றார் சுவாமிகள். ''மதம் எதுவாயிருந்தாலென்ன? நெற்றி சூன்யமா யிருக்கக் கூடாது. நீ பௌத்தனாயிருந்தாலும் நீ மணந்து கொண்டிருக்கிற மூவரும் சிவஜாதி. ஆகையால் விபூதி உன்னைச் சுற்றிக் கொண்டிருக்கிறது'' என்று கூறி நகைத்தார்.

zeevaa

அத்துடன் சொன்னார்: "நான் உன் மாளிகைக்குப் போகிறேன். நீ நான்கு கப்பல்களையும் பார்வையிடு. லீலாவதி என் கப்பலிலிருந்து எனது பூசைப்பெட்டியை கொண்டு வரட்டும்" என்று. "நுவரகிரி! நீர் சிங்கள மன்னனை சூ-சின்னின் கப்பலில் விட்டுவிட்டு லீலாவதியை எனது கப்பலுக்கு அழைத்துச் செல்லும்" என்றும் உத்தரவிட்டார்.

நுவரகிரியின் படகில் விஜயனும் லீலாவதியும் ஏறிக்கொள்ள. நுவரகிரி படகைச் செலுத்தினார் வேகமாக. விஜயனை மரக்கலமொன்றில் இறக்கிவிட்டு, சுவாமிகளின் மரக்கலத்திற்கு லீலாவதியை அழைத்துச் சென்றார்.

சூ-சின்னின் மரக்கலத்தில் ஏறிய விஜயன் சிற்பியாலும், சூ-சின்னாலும் வரவேற்கப்பட்டு சுற்றி அழைத்துச் செல்லப் பட்டான், மீதி மூன்று மரக்கலங்களையும் விஜயன் பார்வையிட்டான். ஏராளமான தளவாடங்கள் மட்டுமின்றிச் சீன வெடிமருந்துகளும் வந்திருப்பதைக் கண்ட விஜயன், "சிற்பி! சூ-சின் உங்கள் கடமையைத் திறம்பட நிறைவேற்றி விட்டீர்கள். ராமன்னா (பர்மா) நாட்டு மன்னர் என்ன சொன்னார்?" என்று வினவினான்.

"வேண்டிய தளவாடங்களைத் தங்குதடையின்றிக் கொடுத்தார். வெகு சீக்கிரம் உங்களைச் சிங்கள சிம்மாதனத்தில் பார்ப்பதாகச் சொன்னார்" என்றான் சூ-சின்.

அதனால் உணர்ச்சி வசப்பட்ட விஜயன், "இன்றிரவு நாம் மந்திராலோசனையில் இறங்குகிறோம்" என்று கூறினான். "சீக்கிரம் வேறு ஆட்களைக் கொண்டு தளவாடங்களை இறக்க ஏற்பாடு செய்யுங்கள்" என்று உத்தரவிட்டுத் தானே ஒரு படகை எடுத்துக் கொண்டு கரைக்குச் சென்றான்.

அன்றிரவு சுவாமிகள் பூசைமுடித்து மந்திராலோசனையில் கலந்து கொண்டார். அவருடைய போர் அறிவையும் சிங்களத்தைப்

zeevaa

பற்றிய அறிவையும் கண்ட விஜயன் மட்டுமின்றி, நுவரகிரியும் அசந்து போனார். லீலாவதி பிரமிப்பின் உச்சநிலையை அடைந்தாள். ''சுவாமி! தாங்கள் துறவறம் பூண்டது போர்க் கலைக்குப் பெரும் நஷ்டம்'' என்றும் பாராட்டினாள்.

''உம்'' என்ற பெருமூச்சு விட்ட சுவாமிகள், ''உலகாயதம் இன்னும் இந்த அடியவனை விடவில்லை'' என்று பெருமூச் செறிந்தார். ''சிங்களத்தில் இப்பொழுது யானைப் படை மிகவும் குறைவு, அதைப் பிரதானமாக வைத்துப் போரிட முடியாது'' என்று துவங்கினார் தனது போர்த் திட்டத்தை. அவரது போர் சூட்சுமத்தைக் கண்டு விஜயனும் மற்றோரும் பிரமிப்படைந்தனர்.



zeevaa

# 54. கழுத்தைப் பிடித்தவன் கதி

சிங்களத்தின் வெளிநாட்டு ஏற்றுமதிக்குச் சரித்திர ஆரம்ப காலத்திலிருந்து பெயர் போனதான காலே துறைமுகத்தில் அன்றும் பலநாட்டுக் கப்பல்களும் நின்றிருந்ததால் ராமன்னா நாட்டிலிருந்து வந்த நான்கு கப்பல்களிலிருந்து தளவாடங்களை இறக்கிக் கரைக்குக் கொண்டு வருவது பிரும்மப் பிரயத்தனமாயிருந்தது. காலையி லிருந்தே ஏராளமான ஆட்களை வேலைக்கு வைத்தும் மாலைவரை தளவாடங்கள் இறக்கப்பட்டு வந்தும் வேலை அன்று முடிய வில்லை. இடையிடையே அரபு நாட்டுப் படகுகளும் சீனத்துப் படகு களும் கரையை நோக்கி வந்து கொண்டிருந்ததால் தளவாடங்களை இறக்குவதில் சிறிது சிரமமும் இருந்தது. தவிர தளவாடங்கள் உடனடியாகத் தாம்பலகாமத்துக்குப் போக வேண்டியிருந்ததால் காலே பட்டணத்தின் உட்புறக் கிடங்குகளுக்குக் கொண்டுபோகப் படாமல் துறைமுகத்தை அடுத்திருந்த கொட்டடியிலேயே அடுக்கப் பட்டன. இந்த வேலையை நாள் பூராவும் வேலைக்காரர்களில் தானும் ஒரு வேலைக்காரனாக நடத்திய விஜயபாகு மாலையில் சுவாமிகளைச் சந்திக்கத் துறைமுக மாளிகைக்கு வந்து சேர்ந் தான்.

அவன், நீராடிச் சீருடை அணிந்து வருவதற்குள் சுவாமிகள் - லீலாவதியின் பணிவிடையால் பூஜையை முடித்துக் கொண்டு மந்திராலோசனைக்கு சித்தமாக இருந்தார். பூஜை அறையை ஒட்டியிருந்த விசாலமான கூடத்தில் திண்டின்மீது மான் தோலை மடிப்பாக விரித்துச் சாய்ந்து கொண்டிருந்த சுவாமிகள், விஜயன், நுவரகிரி, சூ-சின், சிற்பி எல்லோரும் வந்ததும் தமது மந்திரா

zeevaa

லோசனையைத் துவக்கினார். முதலில் காலே துறைமுகத்தின் மகிமையை விளக்க முற்பட்டு, இந்தக் காலே துறைமுகத்தைவிடச் சிறந்த துறைமுகம் உலகத்தில் கிடையாது. சரித்திர காலத்துக்கு முன்பிருந்தே வணிகப் பொருள்களுக்குப் பிரசித்தி பெற்றது. உலகத்திலுள்ள எல்லா நாட்டு மரக்கலங்களும் சந்திக்கும் துறை முகம் இது. 'ஆயிரத்தொரு இரவுகள்' என்று அராபிய நாட்டுக் கதையில் வரும் சக்கரவர்த்தியான ஹரூன்-ஆல் ரஷீத்தின் மரக்கலங்கள் சீன மரக்கலங்களைச் சந்தித்ததாகக் காணப்படும் 'காலா' என்ற துறைமுகம் இதுதான். நீதி வழங்குவதில் பெயர்போன ஸாலமன் சக்கரவரத்தி காலத்தில் சொல்லப்பட்ட *தார்ஷிஷ் என்ற துறைமுகம் இதுதான். ஸாலமனுக்கு மயில்கள், மாணிக்கங்கள் முதலியன ஏற்றுமதியானதும் இதே துறைமுகத்திலிருந்துதான். இன்று நாம் இங்கிருந்து சிங்கள விடுதலைப் போரைத் துவங்குகிறோம். இம்முறை சிங்களவர்களுக்கு வெற்றி நிச்சயம்,'' என்ற சுவாமிகள் பழையகாலத்துப் பெருமையை நினைத்துப் பெருமூச்சு விட்டார்.

அவருக்கிருந்த சரித்திர அறிவைக் கண்டு விஜயன் முதலான அனைவருமே பிரமித்தார்களென்றால் அவர் அடுத்து விளக்கிய விவரங்கள் நுவரகிரியையே அசர வைத்தது. சுவாமிகள் சொன் னார்: ''இன்று சிங்களத்தில் மகிந்தர் காலத்திலிருந்த யானைகளின் தொகை கிடையாது. சிங்கள மன்னன்ான தேவனாம்பிரிய திஸ்ஸனுக்கும் இங்குள்ள மக்களுக்கும் புத்த தர்மத்தை உபதேசிக்க மகிந்தர் பாரதத்திலிருந்து வந்தபொழுது இங்கு அவருடைய உபதேசத்தைப் பெறப் பதினாயிரம் மக்களுக்கு மேல் திரண்டார்கள். அவர்களை உட்கார வைக்க தேவனாம்பிரியதிஸ்ஸன் பெரிய மாளிகையில் கூட இடம் இல்லாததால் மன்னன் தனது யானைக்

---

* The Long-sought locality of Tarshish may be found identical with that of Point de Galle" - Tennent' Ceylon - Vol. II, Part VII Page 100.

zeevaa

கொட்டடியை ஒழித்துவிட ஏற்பாடு செய்தான். அப்படியானால் *யானைக் கொட்டடி எத்தனை பெரியதாயிருக்க வேண்டும், எத்தனை யானைகள் இருந்திருக்க வேண்டும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அவ்வளவு பெரிய யானைப்படை சிங்களத்தில் இப்பொழுது கிடையாது. இருக்கிற சொற்ப யானைப்படையும் போருக்கு அதிகமாக உதவாது, ஆகவே நாம் புரவிப் படையைப் பிரதானமாக வைத்தே போரைத்துவங்குவோம்,'' என்று அறிவித்ததைக் கேட்ட நுவரகிரியின் கண்கள் பிரமை தட்டிக்கிடந்தன.

இதைக் கேட்ட மற்றவர்கள் பேசாவிட்டாலும் நுவரகிரி வினா எழுப்பினார். ''புரவிப்படை மட்டும் போதுமா?'' என்று.

சுவாமிகள் தமது கூரிய விழிகளை நுவரகிரி மீது நாட்டி ''போதாது. காலாட் படை வேண்டும். காலாட்படையிலும் வில்லவர், வேலேந்துவோர் என்ற இருவகையாகப் பிரிப்போம். புரவிப்படை முன் சென்றால் பக்கங்களில் வில்லவரும் வேல் வீசுவோரும் காவல் புரிந்து வரலாம். போர் துவங்கும்போது புரவிகள் வேகமாகப் பாய்ந்து செல்லும்போது அக்கம்பக்க மேட்டு நிலங்களிலிருந்து வில்லவர் அம்புகளை எதிரிப் படைமீது ஏவிப் புரவிப்படைக்கு பாதுகாப்புக் கொடுக்கலாம். வேல் வீசுவோரும் இந்தப் பணியில் ஈடுபடலாம்,'' என்றார்.

விஜயன் கேட்டான், ''சுவாமிகள் போர்ப் பாசறைகளைப் பற்றி என்ன நினைக்கிறார்?'' என்று.

சுவாமிகள் விஜயனை உற்றுநோக்கி, ''நீ இப்பொழுது தாம்பலகாமக் கோட்டையிலும் மகாநாககுலாவிலும் பாசறைகளை அமைத்திருப்பதாகக் கேள்வி. தாம்பலகாமாவில் ஒரு சிறு

---

* The King replied: "The palace is much too small for this multitude. The Fiephant stables are not small. There these crowds may see the Thera (Mahinda)' - The Deepa - yanmsa - By Herman Oldenberg - page 175.

zeevaa

படையிருந்தால் போதும். முன்னேறும் படைகள் மகாநாககுலாவில் இருக்கட்டும். இப்பொழுது தக்ஷிணபாதம் முழுவதும் உன் வசத்திலிருப்பதால் சிங்களத்தின் தென்கோடியில் செய்யப்படும் ஏற்பாடுகளை பொலனூருவாவிலிருந்து (புலஸ்திய நகரத்திலிருந்து) சோழர்கள் அறிய முடியாது. ஆகவே நீ மகாநாககுலாவிலேயே படைகளைத் திரட்டி வை. அங்கிருந்து முப்புறத்திலிருந்தும் முன்னேறுவது சௌகரியம்,'' என்றார்.

''முப்புறத்திலிருந்தா?'' சூ-சின் கேட்டான் வியப்புடன்.

''சூ-சின்! விஜயனுக்கு இந்த நாட்டைப்பற்றி எவ்வளவு தெரியுமோ அவ்வளவு தெரியும் சீனனான உனக்கும். இப்பொழுதுள்ள சோழர்கள் தலைநகரைத் தாக்க வேண்டுமென்றால் எப்படி முன்னேறுவாய்?'' என்று வினவினார்.

''இரு பக்கங்களில் முன்னேறலாம். கிழக்கு வழியாகவும், மேற்கு வழியாகவும்'' என்றான் சூ-சின்.

சுவாமிகள் முகத்தில் விஷமச் சாயை படர்ந்தது. ''இது எதிரிகளுக்குத் தெரியும். எதிரிகளுக்குத் தெரியாத வழி எது?'' என்று வினவினார்.

''எதுவுமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை,'' என்றான் சூ-சின்.

சுவாமிகள் நகைத்தார். ''நீ கடற்கொள்ளைக்காரன். நிலப்போரைச் சரியாக அறியமாட்டாய். விஜயன் முப்புறங்களில் முன்னேறத் திட்டமிட்டிருக்கிறான். கிழக்கு வழி, மேற்குவழி, தவிர நடுவழி,'' என்றும் சொன்னார் நகைப்பின் ஊடே.

''நடுவழியா!'' வியப்புடன் கேட்டான் சூ-சின்.

''ஆம். மலைப்பகுதி,'' என்றார் சுவாமிகள்.

''அங்கு எப்படிப் படைகள் போக முடியும்?''

zeevaa

''எதிரி எதிர்பார்க்காத வழி அதுதான். அந்தவழியில் தான் விஜயபாகு செல்வான். இந்த முப்புறத் தாக்குதலைச் சமாளிக்கச் சோழர்களால் முடியாது. சுமார் ஒரு லக்ஷம் படைகள் இந்த விடுதலைப் போரில் பங்கு கொள்ளும்,'' என்றார் சுவாமிகள். ''இந்த முயற்சியிலும் விஜயபாகு வெற்றியடையவில்லையென்றால் அவன் இங்கு சக்கரவர்த்தியாகும் கனவை விட்டுவிடலாம்.'' இதை அழுத்தந்திருந்தமாகச் சொன்னார் சுவாமிகள்.

அப்பொழுதுதான் நுவரகிரி வினவினான், ''சுவாமி! இத்தனை நுணுக்கமான போர்க் கலையை எங்கு கற்றீர்கள்?'' என்று.

''இதுவா! இது பூர்வாசிரம பந்தம்,'' என்று சுவாமிகள் துன்பப் பெருமூச்சு விட்டார்.

இதைக் கேட்ட மற்றவர்கள் சுவாமிகளின் துன்பம் வெறும் வேஷம் என்பதையும், பூர்வாசிரமப் போர் வெறி அவரை விடவில்லையென்பதையும் சந்தேகமற உணர்ந்து கொண்டார்கள். அவர்கள் கருத்தை அடுத்த நாள் சுவாமிகளே உறுதிப்படுத்தினார். மறுநாள் பூஜையைத் துவங்கு முன்பாகவே தளவாடங்களை நேரில் பார்வையிட்டார். சில வாட்களையும், வேல்களையும், கோடரிகளையும் தூக்கிக் கனத்தைப் பார்த்துச் சிறிது வீசியும் பார்த்துத் திருப்தியடைந்தார். வாளின் கூர்மையைக் கவனிக்கப் பக்கத்திலிருந்த ஒரு செடி மீது வீசி அதை வெண்ணெய் போல் துண்டித்துத் தூரத்தில் விழச் செய்தார். ''இதுவே மனிதன் தலையாயிருந்தால் எப்படி உருளும்?'' என்று சற்று இரைந்தே கேட்டுக்கொண்டார். அவர் பக்கத்தில் நடந்த நுவரகிரி, ''சுவாமி! தாங்கள் இப்படி நினைப்பது சரியா?'' என்று கேட்டார்.

''ஏன் சரியில்லை? மனிதன் மூளையில் கெட்டதைத் தவிர வேறென்ன இருக்கிறது? அதை உள்ளடக்கி வைத்திருக்கும் தலையைச் சீவினால் தவறென்ன?'' என்று சமாதானம் சொன்ன சுவாமி, ''நுவரகிரி, கடவுள் மனிதனைப் படைத்து அவனுக்கு வேண்டிய உணவு, ஆடை, ஆபரணம் அனைத்துக்கும் வழி

zeevaa

செய்தார். அப்படியிருக்க மனிதன் ஏன் போராடுகிறான். உயிர்நாசத்தை ஏன் ஏற்படுத்துகிறான்?'' என்று வினவினார்.

நுவரகிரி பதிலேதும் சொல்லவில்லை பல விநாடிகள். ''சுவாமி! உங்களை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு சமயம் போரின் முறைகளைச் சொல்கிறீர்கள். இன்னொரு சமயம் தத்துவங்களைச் சொல்கிறீர்கள். முரண்பாடாகப் பேசுகிறீர்கள்'' என்றார் நுவரகிரி.

''முரண்பாடுதான் உலக சிருஷ்டியின் நியதி. துன்பமில்லா விட்டால் இன்ப அனுபவத்தில் பூர்த்தியிருக்காது. போர்கள் இல்லாவிட்டால் உலகத்தில் ஜனப்பெருக்கம் அதிகப்படும். ஜனப்பெருக்கம் அதிகமானால் உடை, உணவு இவற்றுக்கு வழியில்லாமல் உலகம் திண்டாடும், எல்லாம் நன்மைக்குத்தான் நடக்கிறது'' என்ற சுவாமிகள் புன்முறுவல் கொண்டார். அப்பொழுது அஸ்தமனம் நெருங்கிக் கொண்டிருந்ததால் காலே துறைமுகத்தின் பாறையொன்றில் உட்கார்ந்து மாலைக் கடன் முடித்து ஜபத்தில் ஆழ்ந்தார். ஜபத்தில் நம்பிக்கையில்லாத நுவரகிரி துறைமுக மாளிகையை நோக்கிச் சென்றார்.

அன்று மாளிகைக்குச் சுவாமிகள் வந்தபோது நன்றாக இருட்டிவிட்டதால் துறைமுகப் பகுதி முழுவதும் தீபங்கள் எரிந்து கொண்டிருந்தன. அன்று பூஜையை நிறுத்தி வைக்கத் தீர்மானித்த சுவாமிகள் தளவாடங்களை மீண்டும் பார்த்துத் திருப்தி செய்து கொண்டு மாளிகைக்கு நீண்ட நேரம் கழித்துத் திரும்பினார். நேராக மாளிகைக்குள் நுழையாமல் பின்னாலிருந்த தோட்டத்தின் வழியாக உள்ளே நுழைந்தார். பெரிய மரங்களாலும் பாறைகளாலும் நிரம்பிய அந்தத் தோட்டத்தில் இருள் சூழ்ந்து கிடந்தது. தோட்டத்து இருளில் சுவாமிகள் நுழைந்ததுமே அவர் தலைமீது பெரிய துணியொன்று வீசப்பட்டது.

மரத்தின் மேலிருந்த இருவர் அவர்மீது குதித்து அவரை பலமாகப் பிடித்துக்கொண்டார்கள். சுவாமிகளின் பெரும் கழுத்தை

zeevaa

இரண்டு பலமான கைகள் பிடித்து இறுக்கின. சுவாமிகளின் மூச்சு திணறலாயிற்று. விழிகள் பிதுங்கிக் கொண்டிருந்தன. சுவாமிகள் ஒருகணம் தாமதித்தார். பிறகு தமது பெரிய உடலை மூச்சுப் பிடித்து இரும்பாகச் செய்து கொண்டார். தன்னைப் பிடித்தவர்களை ஒருமுறை உதறினார். தனது கழுத்தைப் பற்றியவன் கழுத்தைத் தனது கைகளால் பிடித்து இறுக்கினார், அவன் ஊட்டியை அவர் இரும்புப் பிடியாகப் பிடித்ததால் சுவாமிகளின் கழுத்தை இறுகப் பிடித்திருந்த கை தளர்ந்தது. அடுத்த விநாடி அந்த மனிதன் சுவாமிகளை விட்டு மல்லாந்து விழுந்தான். அதே சமயத்தில் உப்பரிகையிலிருந்து காட்டப்பட்ட விளக்கொளியில் கழுத்தைப் பிடித்தவன் முகம் தெரியவே, ''அடபாவி! நீயா! இருக்கிறாயா, செத்துவிட்டாயா?'' என்று வினவினார் துன்பம் நிறைந்த குரலில். அவன் கழுத்தைத் தடவியும் கொடுத்த சுவாமிகள் அந்த மனிதனைத் தூக்கி மார்பில் சாய்த்துக்கொண்டார்.



zeevaa

# 55. அந்தரங்க தர்மம்

காலே துறைமுக மாளிகை பின்புறத் தோட்டத்தின் வழியாக வந்த சிவகோகர்ண ஸ்வாமிகள், தமது தலை மீது பெரிய துணியொன்றை வீசி, மரத்தின் மீதிருந்த இருவர் குதித்துத் தம்மை இரு புறங்களிலும் பிடித்து அழுத்தியதன்றி, யாரோ ஒருவர் தமது கழுத்தையும் நெறிக்க முற்பட்டதும் தரையில் விழுந்த நிலையிலேயே மூச்சைப் பிடித்து, தமது உடலை இரும்பாக்கி ஒரே உதறலில் தன்னைப் பற்றியிருந்தோரைத் தள்ளி விழும்படிச் செய்ததல்லாமல், தமது கழுத்தைப் பிடித்தவனின் குரல் வளையைத் தாம் பிடித்து இறுக்கியதால் அவன் முனகியதைக் கேட்டு திருப்தியடைந்த சமயத்தில், மாளிகை உப்பரிகை விளக்கு ஒளி கீழே கிடந்தவன் மீது விழவே சட்டென்று தமது கைகளை நீக்கி, ''அடபாவி! நீயா? இருக்கிறாயா, செத்துவிட்டாயா?'' என்று கேட்டு அவனைத் தூக்கி மார்பில் சாத்திக் கொண்டு அவன் முதுகைத் தடவிக் கொடுத்தாரென்றால் அதற்குக் காரணம் இருக்கவே செய்தது.

விளக்கில் தெரிந்த முகம் தமது சீடரான மோக்ஷர் முகமென்பதை அறிந்ததும் சுவாமிகள் அவருக்கு என்ன ஆயிற்றோ என்று துடிதுடித்தார். சுவாமிகளின் குரலிலிருந்து அவர் யாரென்பதைப் புரிந்து கொண்ட அர்த்தரும், காமரும் சுவாமிகள் உதறியதால் விழுந்த இடத்திலிருந்து எழுந்து, ''சுவாமிகளா! குருநாதரா!'' என்று வியப்புக் கேள்வியை எழுப்பினார்கள். இவர்கள் யாருடனும் சம்பந்தப்படாத தர்மர் மட்டும் சற்று எட்ட இருந்து மெள்ள நடந்து வந்து சுவாமிகளின் திருவடிகளில்பணிந்து நின்றார்.

zeevaa

வந்திருந்தவர்கள் தமது சீடர்களென்பதை அறிந்ததும், ''யாரங்கே! ஒரு விளக்குக் கொண்டு வாருங்கள்'' என்று சுவாமிகள் இரைந்து குரல் கொடுக்க, மூர்சமத் மாளிகையிலிருந்து ஒரு விளக்கை எடுத்துக்கொண்டு தோட்டத்துக்கு வந்தான். அந்த விளக்கொளியில் மோக்ஷரைப் பரிசோதித்த சுவாமிகள் அவர் மூச்சு சாதாரணமாக வருவதைக்கண்டு, ''அப்பனே! விழித்துக்கொள்'' என்று அன்புடன் அழைக்க மோக்ஷர் மெதுவாகக் கண்களைத் திறந்தார். சுவாமிகளின் அணைப்பிலிருந்து நழுவி அவர் பாதங்களில் தலையை வைத்த மோக்ஷர், ''குருநாதரே! அபசாரம் செய்து விட்டேன்'' என்று நாத் தழுதழுக்கும் குரலில் பேசினார்.

மோக்ஷரை அன்புக் கண்களால் நோக்கிய சுவாமிகள் ''மோக்ஷா! உனக்கு இன்னும் அனுபவம் போதவில்லை'' என்றார்.

''எனக்கா சுவாமி?'' -என்று மோக்ஷர் வியப்புடன் கேட்டார்.

''ஆம். நாம் உமக்கு சொல்லிக் கொடுத்த வித்தையைச் சரியாக அப்பியாசம் செய்யவில்லை. ஒருமுறை நீர் கழுத்தைப் பிடித்தால் அந்த மனிதன் பிழைக்கக் கூடாது. நீர் பிடிக்கும் முறையும் சரியாயில்லை. உமது கை கழுத்தை முழுவதும் பற்றுவதற்கு பதிலாகக் குரல்வளையை மட்டும் பிடித்து இறுக்கியிருக்க வேண்டும்'' என்று சுவாமிகள் உபதேசம் செய்தார்.

''ஆம் சுவாமி! தவறி விட்டேன்'' என்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டார் மோக்ஷர்.

சுவாமிகள் மோக்ஷரின் மொழியைக் கேட்டுப் புன்முறுவல் கொண்டு, ''என்ன பேசுகிறான் இவன்? என்னைக் கொல்லாதது தவறு என்கிறானா?'' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டார். பிறகு பக்கத்தில் நின்றிருந்த அர்த்தரையும் காமரையும் பார்த்து, ''நீங்கள் இருவரும் கிஷ்கிந்தையிலிருந்து வந்தீர்களா?'' என்று வினவினார் விஷமப் புன்முறுவலுடன்.

zeevaa

தாங்கள் மரத்தில் உட்கார்ந்திருந்ததை மறைமுகமாகச் சுவாமிகள் குறிப்பிடுவதை உணர்ந்த இருவரில் அர்த்தர் பதில் சொன்னார். 'நாங்கள் சுவாமிகளின் சீடர்கள் சுவாமி எப்படியோ அப்படித்தான் நாங்கள்'' என்று.

''நீரும் காமரும் பிராணாயாமம் செய்து எத்தனை நாளாகின்றன?'' -என்று வினவினார் சுவாமிகள்.

''தினம் செய்கிறோம்'' -என்றார் அர்த்தர்.

''இருக்க முடியாது'' என்ற சுவாமிகள் ''மரத்திலிருந்து குதித்து என்னைப் பற்றிய கைகளில் போதிய வலுவில்லை. எனது ஒரே உதறலில் எட்டப் போய் விழுந்தீர்கள். நான் மட்டும் பிடித்தால்...'' என்று சற்று நிறுத்திச் சீடர்களைப் பார்த்தார்.

''எமப் பிடியாயிருக்கும்'' என்று காமர் மெதுவாகப் பேசினார்.

''பிராணாயாமம் தனி பலத்தைக் கொடுக்கிறது. உங்களுக்கு அந்தப் பலம் போதவில்லை. நாளை முதல் என்னுடன் சேர்ந்து பிராணாயாமம் செய்யுங்கள்'' என்று உத்தரவிட்டார்.

''உத்தரவு சுவாமி'' என்றார் காமர், அர்த்தர் தலையாட்டினார்.

''நல்லது'' என்ற சுவாமிகள் சிறிது தனித்து நின்ற தர்மரை நோக்கி, ''தர்மா! நீ ஏன் ஏதும் சொல்லவில்லை?'' என்று கேட்டார்.

தர்மர் குருவின் பாதத்தில் விழுந்து வணங்கி, ''பேச்சில் என்ன இருக்கிறது சுவாமி? இங்கு போர் மூளும் போது பாருங்கள். இந்த அடியவன் பங்கு கொஞ்சமாயிருக்காது'' என்று பணிவுடன் தெரிவித்துக்கொண்டார்.

குருவுக்கும் சீடர்களுக்கும் நடந்த இந்த உரையாடலைக் கேட்ட மூர்சமத் உள்ளூர நகைத்தாலும் முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல் விளக்கை அசையாமல் பிடித்துக்கொண்டு நின்றான்.

zeevaa

இந்த உரையாடலை ஒரு முடிவுக்குக் கொண்டுவர, ''சுவாமிகள் மாளிகைக்குள் போகலாமே. கடற்காற்று வரவர அதிகமாகிக் கொண்டு வருகிறது'' என்று மிகுந்த பணிவுடன் குறிப்பிட்டான் மூர்சமத்.

''அப்பனே! இந்தத் தவசியின் உடல் எதையும் தாங்கும். சுகத்தைத் துறவி எதிர்பார்க்கக் கூடாது'' என்று அறிவித்த சுவாமிகள் மெள்ள எழுந்திருந்து, ''சரி வா போவோம்'' என்று சொல்லி மாளிகை பின்புற வாயிலை நோக்கி நடந்தார். சீடர்களும் குருவைத் தொடர்ந்து சென்றார்கள்.

மாளிகையின் மாடியிலிருந்த சுவாமிகளின் பூஜை அறையில் விஜயனும் லீலாவதியும், சிற்பி, சூ-சின் இவர்களும் சுவாமிகளின் கோஷ்டியை வரவேற்றார்கள். தர்மர், அர்த்தர், காமர், மோக்ஷர் ஆகிய நால்வரையும் கண்ட விஜயன், ''சுவாமிகளே! தங்களுக்கு நானும் திரிலோகசுந்தரியும் எத்தனை கடமைப்பட்டிருக்கிறோம்? கலிங்கத்திலும் ஹண்டுமானிலும் தங்கள் துணையால் எத்தனை பலனடைந்திருக்கிறோம்?'' என்று முகமன் கூறினான்.

இதைக் கேட்டதும் லீலாவதியின் முகத்தில் சிறிது பொறாமைச் சாயை படர்ந்தது. ''உங்களையும் திரிலோகசுந்தரியையும் சேர்த்து வைக்க சுவாமிகள் நிரம்ப கஷ்டப்பட்டிருக்கிறார்கள் போலிருக் கிறது?'' என்று வினவினாள் குரலிலும் பொறாமை ஒலிக்க.

''நாங்களாக எதுவும் செய்யவில்லை. எல்லாம் குருநாதரின் கட்டளை'' என்றார் தர்மர்.

''ஆம், குரு சொல்லின்றி நாங்கள் இயங்க மாட்டோம்'' என்றார் அர்த்தர்.

''குரு கண்ணைக் காட்டினால் போதும். மற்றதை நாங்கள் முடிப்போம்'' என்றார் காமர்.

zeevaa

''இருப்பினும் எங்களுக்கு இன்னும் பக்குவம் வர வில்லை. கழுத்தைப் பிடிக்கும். வித்தையில்கூட எனக்குப் பயிற்சி வேண்டும்'' என்று அலுத்துக் கொண்டார் மோக்ஷர்.

சீடர்களின் சொற்களைக் கேட்ட சிவகோகர்ண ஸ்வாமிகள் மகிழ்ச்சிப் புன்முறுவல் கொண்டாலும் லீலாவதியின் இதயத்தில் சீற்றமே குடிகொண்டிருந்தது. 'இவர்கள் துறவிகளா?' என்ற இகழ்ச்சி நினைப்பு அவள் சித்தத்தில் உருவாயிற்று.

சுவாமிகள் அங்கிருந்த ஒவ்வொருவர் மனநிலையையும் அறிந்தார். ஆகவே பேச்சின் போக்கைச் சிறிது மாற்றி, ''சிங்கள மன்னனே! கடந்த சம்பவங்களில் காலம் கழிக்க அவகாசமில்லை. நடக்க வேண்டியதைக் கவனிப்போம். இனிப் போரைப் பற்றிப் பேசுவோம்'' என்று கூறி, ''எங்கே நுவரகிரி?'' என்றும் கேட்டார்.

அவர் கேட்டதும் கேட்காததுமாக உள்ளே நுழைந்த நுவரகிரி சுவாமிகளை நோக்கி, ''சுவாமி! தளவாடங்கள் அத்தனையும் இறக்கப்பட்டன. தங்கள் மரக்கலத்தை மட்டும் நாங்கள் தொடவில்லை'' என்று கூறினார்.

''அதையும் கவனியுங்கள் நுவரகிரி, அங்கு தளவாடங்கள் அதிகமில்லை. ஆனால் பரிசுப் பொருள்கள் அதிகமிருக்கின்றன. மற்ற மரக்கலங்களின் அடித்தள அறைகளிலும் படை வீரருக்கு வேண்டிய தோள்வளைகள், கங்கணங்கள் ஆகிய ஆபரணங்கள் பல இருக்கின்றன. அவற்றை வீரர்களுக்கு அளிப்போம்'' என்றார்.

''இப்பொழுது எதற்கு அவர்களுக்குப் பரிசு? என்ன செய்து விட்டார்கள்?'' என்று வினவினார் நுவரகிரி.

''முன்கூட்டியே மகிழ்ச்சி ஊட்டினால் வீரர்களுக்கு உற்சாகமேற்படும். உற்சாகத்தால் போரில் திறமை இருக்கும்'' என்று சுவாமிகள் சுட்டிக்காட்டினார்.

zeevaa

*''அதுதான் சரி'' என்றான் விஜயன். ''ராமன்னா நாட்டு மன்னரே பரிசுப் பொருள்களை அனுப்பியிருக்கிறார்'' என்று சுட்டியுமீ காட்டினான். ''அவை நமது வீரர்களுக்கும் அவர்கள் குடும்பத்துக்கும் வழங்கப்படும்'' என்று அறிவிக்கவும் செய்தான்.

அடுத்து குருநாதர் போரைப் பற்றித் தமது கருத்துக்களை அறிவித்தார். ''விஜயா! இப்பொழுது நீ இரண்டு இடங்களில் பாசறைகளை அமைத்திருக்கிறாய். தாம்பலகாமத்தில் பெரும் பான்மையான தளவாடங்கள் சேமிக்கப்பட்டிருக்கின்றன. மகாநாக குலாவில் பயிற்சி மட்டும் வீரர்களுக்கு அளிக்கப்படுகிறது. இனி மகாநாககுலாவே பிரதான பாசறையாக இருக்கும். நாளையே நாம் மகாநாக தலாவுக்குப் பயணமாகிறோம்'' என்று சுவாமிகள் அறிவித்தார்.

சுவாமிகள் தாமே போரை மேற்கொண்டு விட்டது போல் பேசியதைக்கண்ட லீலாவதி புன்முறுவல் செய்தாள். அதைப்பற்றி அன்றிரவு விஜயனை விசாரிக்கவும் செய்தாள். இரவு நீண்ட நேரம் சுவாமிகளுடன் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் பள்ளியறைக்கு வந்த விஜயனை அறை வாயிலிலேயே எதிர்கொண்ட லீலாவதி, ''ஏன் இத்தனை நேரம்?'' எனறு வினவினாள் சற்றுக் கோபத் துடன்.

''சுவாமிகளுடன் பேசிக்கொண்டிருந்து விட்டேன்'' என்றான் விஜயன்.

''ஒருவேளை அங்கேயே படுத்துக்கொண்டு விட்டீர்களோ என்று நினைத்தேன்'' என்றாள் லீலாவதி.

---

* Then arrived in the Harbour many ships laden with various stuffs... By all kinds of valuable gifts he (Vijayabahu) inclined his soldiers to him" Geiger's "Culavamsa" - Chapter 48.

zeevaa

''அவருடன் பேசிக்கொண்டிருந்தேனே தவிர எண்ணமெல்லாம் உன்மீது தானே!'' என்ற விஜயன் தனது அங்கியைக் களைந்து விட்டுப் பஞ்சணையை நோக்கிச் சென்றான்.

கதவைத் தாளிட்டுப் பஞ்சணையை நெருங்கிய லீலாவதி ''இன்று முழுவதும் தளவாடங்களை இறக்கியிருக்கிறீர்கள். மிகவும் களைத்திருக்கிறீர்கள். படுத்துக் கொள்ளுங்கள்'' என்று உபசரித்து அவனை மெதுவாகப் படுக்க வைத்தாள். அவன் படுத்ததும் அவன் கால்களை வருடவும் செய்தாள். அப்படி வருடிக்கொண்டே கேட்டாள், ''ராமன்னா நாட்டிலிருந்து ஏதோ பரிசுகள் வந்திருக்கிறதாமே?'' என்று.

''ஆம்'' புன்முறுவல் கொண்டான் விஜயன்.

''எனக்கு ஏதும் இல்லையா?''

''இருக்கிறது?''

''என்ன பரிசு?''

''பெரிய பரிசு.''

''எத்தனை பெரியது?''

''அநேகருக்குக் கிட்டாதது.''

''எது?''

''இது'' என்று தன் மார்பைத் தட்டிக் காட்டினான் விஜயன்.

லீலாவதி மகிழ்ச்சிப் புன்முறுவல் செய்தாள். ''இதை என்னால் தூக்க முடியாதே'' என்றாள் புன்முறுவலின் ஊடே.

''அதனால் பாதகமில்லை. இந்தப் பரிசு உன்னைத் தூக்கும்'' என்று சொல்லிக்கொண்டே கட்டிலில் எழுந்து உட்கார்ந்த விஜயன்

zeevaa

லீலாவதியை அப்படியே உட்கார்ந்த நிலையிலேயே தனது தலைக்குமேல் இரு கைகளாலும் தூக்கிப் பிடித்தான்.

"போதும் போதும்! விடுங்கள் என்னை" என்றாள் லீலாவதி.

அவளை மெள்ள இறக்கி மடியில் கிடத்திக்கொண்ட விஜயன், "லீலாவதி! நாளையே நாம் மகாநாககுலாவுக்குக் கிளம்புகிறோம்" என்றான்.

"ஏன்?" என்று கேட்டாள் லீலாவதி.

"அங்கு பாசறையை வலுப்படுத்தப் போகிறோம். அங்கிருந்து போரைத் துவங்கப் போகிறோம்" என்ற விஜயன் மடியில் கிடந்த அந்த மாணிக்கத்தை நோக்கிக் குனிந்தான். அவன் வலிய உதடுகள் அவள் இதழ்களைப் பற்றின. கையொன்று அவள் காலை வருடியது.

"நீங்கள் என் காலைப் பிடிக்கக் கூடாது" என்று வெட்கத்துடன் சொன்னாள் லீலாவதி.

"ஏன்?"

"நீங்கள் ஆண் பிள்ளை, என் கணவர்."

"அதனாலென்ன?"

"உங்கள் காலை நான் பிடிப்பதுதான் தர்மம்."

"அது பொது தர்மம்" என்ற விஜயன் அவள் கண்களுடன் தனது கண்களைக் கலக்கவிட்டான்.

அவள் மெதுவாக நகைத்தாள். "என்ன சொன்னீர்கள்?" என்று கேட்டாள்.

விஜயன், "பொது தர்மம் என்று சொன்னேன்" என்று கூறினான்.

"இது?" என்று காலைப் பிடித்த அவன் கையைப் பிடித்து நிறுத்திக் கேட்டாள்.

zeevaa

விஜயன் அவள் காலைப் பிடித்த கையை அவள் காலின் மேல் பகுதிக்குக் கொண்டு போனான். அவள் காதுக்கருகில் தன் உதடுகளைக் கொண்டுபோய் ''இது அந்தரங்க தர்மம்'' என்று மிக மெதுவாகக் கூறினான்.

அவள் உணர்ச்சியால் தவித்தாள். அதன் சுழலில் சுழன்றாள். தர்மம் தொடர்ந்தது. நாணம் அகன்றது.



zeevaa

# 56. நிலை எரிமலை

முதல் நாள் ஏற்பட்ட அலுப்பின் காரணமாக நீண்ட நேரம் உறங்கிவிட்ட ஜகதிபாலன் மகள் கண்ணை விழித்ததும், பொழுது புலர்ந்து வெகுநேரம் ஆகிவிட்டதை உணர்ந்து அவசர அவசரமாகக் கலைந்த உடைகளையும் தலைக்குழல்களையும் சீர்செய்து கொண்டு சாளரத்திடம் சென்று வெளியே நோக்கினாள். வெளியே காலே துறைமுகமும் காலே நெடுஞ்சாலையும் அழகை அள்ளித் தெளித்துக்கொண்டிருந்ததைக் கண்டாள். கடலலைகளில் ஆடிய மரக்கலங்களும், மலைப் பாறைகளில் உட்கார்ந்திருந்த நீண்ட கால்களை உடைய கடலோரக் கொக்குகளும், இணையற்ற ஓர் அழகைச் சிருஷ்டித்திருந்ததென்றால், காலே நிலப்பாதையின் இருபுறங்களிலும் தென்னை மரங்கள் நெடுகக் காவல் வீரர்களைப்போல் நின்றிருந்ததையும் அடுத்து நின்ற மலர்ச் செடிகள் பற்பல வண்ண மலர்களை அணிந்த பெண்களைப்போல் காற்றில் தலையை ஆட்டிக் கொண்டிருந்ததையும் கண்டு, அந்தக் கவர்ச்சிகளில் மனத்தைப் பறிகொடுத்து நின்றாள்.

அந்த இயற்கை அழகை அவள் அனுபவித்துக் கொண்டிருந்த நேரத்தில் மாளிகையின் உட்புறத்திலிருந்து சுவாமிகளும் அவர் சீடர்களும் எழுப்பிய தேவகோஷங்கள் அவள் காதில் விழவே, 'சுவாமிகள் பூஜையைத் துவங்கி விட்டார். இனி தாமதிப்பது கூடாது' என்று தனக்குள் சொல்லிக்கொண்ட லீலாவதி, அறைக் கதவைத் திறந்து கொண்டு நீராட்ட அறைக்குள் சென்றாள்.

அங்கு துரிதமாக நீராடித் திரும்பி சீருடை அணிந்து பூஜை அறைக்குச் சென்றாள். அங்கிருந்த புனிதச் சூழ்நிலையைக் கண்டு சற்றுப் பயத்துடனேயே எல்லோருக்கும் பின்னால் நின்றாள்.

zeevaa

சிவகோகர்ண சுவாமிகள் பெரிய தாம்பாளத்தில் சிவலிங்கத்தை வைத்து, பக்கத்திலிருந்த தமது தாமிரக் கமண்டலத்திலிருந்த நீரைக் கொண்டு அபிஷேகம் செய்தார். அந்த அபிஷேகத்திற்குச் சுவாமிகள் வாயைத் திறந்து மந்திரம் சொல்லாவிட்டாலும் அவருடைய தாஷ்டீக சிஷ்யர்கள் தங்கள் குரல்களைக் கணீர் என்று உயர்த்தி வேத கோஷம் செய்யவே, அந்த அறையில் வேதத்தின் அதிதேவதைகளே வந்துவிட்டது போன்ற பிரமையை ஏற்படுத்தியது. சிஷ்ய சுவாமிகளின் குரல்கள் ஒரேவிதமாக இல்லாமலிருந்தாலும், அவை ஒன்று சேர்ந்த பலமான கரகரப்பிலும் ஒரு நாதம் இருக்கத்தான் செய்தது. தனித்தனி விதமான குரல்களைக் கூட ஒன்றுபடுத்தும் வலிமை வேதத்திற்கு உண்டென்பது அந்த வேத உச்சாடனத்திலும் சுவாமிகளின் சீடர்கள் முறையாகப் பயின்றதன் விளைவாக ஓரளவு பக்குவப்பட்ட கோஷத்திலும் தெரிந்தது. தவிர அப்படிச் செய்த வேத கோஷத்தின்போது சிஷ்ய சுவாமிகள் அடிக்கடி ஒருவரையொருவர் சீற்றத்துடன் பார்த்துக் கொண்டு அடுத்தவர் ஏதோ தவறு செய்துவிட்டது போன்ற பிரமையை ஏற்படுத்தினாலும் அந்தப் பார்வைகள் விரோத பாவத்தால் ஏற்பட்டதல்லவென்பதும், வேதமோதும் சமயங்களில் ஏற்படும் ஆனந்த ஆவேசமே என்பதும் கடைசியில் நின்ற லீலாவதிக்கு சந்தேகமறப் புரிந்தது. அபிஷேகத்தை அடுத்து குருசுவாமிகள் லிங்கத்தையும் ஸ்படிக விநாயகர் முதலிய விக்கிரகங்களையும் பட்டினால் துடைத்து, சந்தனம் இட்டு, மந்திரங்களை முணுமுணுத்து மலர்களைச் சூட்டினார் தெய்வ பிம்பங்களுக்கு. பிறகு சம்பிரதாய முறையில் தீப நைவேத்தியங்கள் முடிந்ததும் சுவாமிகள் எதிரே பயபக்தியுடன் நின்ற விஜயனை நோக்கி, ''உன் புது மசேசி எங்கே?'' என்று வினவினார். ''மனைவியுடன் சேர்ந்து பிரசாதம் வாங்கிக் கொள்வது தான் கிரகஸ்தனுக்கு அழகு,'' எனறும் கூறினார்.

லீலாவதி நீராடி வந்துவிட்டதைப் பூஜை மும்முரத்தில் அறியாத விஜயன், ''அவள் இன்னும் எழுந்திருக்கவில்லை'' என்றான்.

''கணவனுக்குப் பின் தூங்கி முன் எழும் பேதையே மனைக் குகந்த மணாட்டியாக முடியும். இது ஆன்றோர் பழக்கம்,'' என்றார் சிவகோகர்ண சுவாமிகள்.

அந்தச் சமயத்தில் பின்னாலிருந்து முன்னால் வந்துவிட்ட லீலாவதி, சுவாமிகளின் முன்பு மண்டியிட்டுத் தலை தரையில் தொட வணங்கினாள். பிறகு நாணத்துடன் பிரசாதத்துக்கு இரு கைகளையும் நீட்டினாள்.

சிவகோகர்ண சுவாமிகள் அவளிடம் பிரசாதத்தைக் கொடுத்து, ''மகளே! நீண்ட நேரம் உறங்கி விட்டாய்,'' என்றார்.

''ஆம் சுவாமி,'' என்றாள் லீலாவதி மெதுவாக.

''மக்களுக்கு வழிகாட்ட வேண்டிய மகேசி அதிகமாக உறங்கக் கூடாது,'' என்று புத்தியும் கூறினார்.

லீலாவதி பதிலேதும் சொல்லவில்லை. கடைக் கண்ணால் பக்கத்திலிருந்த விஜயனைப் பார்த்து, தாமதத்திற்கு அவன்தான் காரணமென்பதை உணர்த்தினாள். அவள் கண்போன திக்கைக் காணவே செய்து, காரணத்தையும் ஊகித்துப் புன்முறுவல் செய்தார் சுவாமிகள். பிறகு அதைப்பற்றி மேற்கொண்டு எதுவும் பேசாமல், ''சிங்கள மன்னனே! இனி தாமதிப்பதற்கில்லை. இன்றே நாம் மகாநாககுலாவுக்கு புறப்படுகிறோம்,'' என்று போர் ஏற்பாடுகளில் தமது அக்கறையையும் துரிதத்தையும் காட்டினார். பிறகு லிங்கம் முதலிய பூஜா தெய்வங்களைத் தமது பூஜைப் பெட்டியில் வைத்து, பட்டொன்றைப் போட்டுக் கட்டி தர்மரிடம் அதை நீட்டி, ''தர்மா, நீயும் உன் சகாக்களும் இதைக் கவனித்துக் கொள்ளுங்கள். நானும் மன்னனும் நுவரகிரியும் தளவாடங்களை முன்னால் அனுப்ப ஏற்பாடு செய்கிறோம்,'' என்று கூறிவிட்டு மாளிகைப் படிகளில் இறங்கிச் சென்றார்.

அவரைத் தொடர்ந்து சென்ற விஜயனும் நுவரகிரியும் அவர் கடற்கரையை நோக்கிச் செல்வதைக்கண்டு அவரைப் பின் தொடர்ந்து சென்றனர்.

zeevaa

கடற்கரையில் இறக்கப்பட்டுச் சீராக அடுக்கி வைக்கப்பட்டிருந்த போர்த் தளவாடங்களையும் சற்று ஒதுக்குப் புறமாக குவிக்கப் பட்டிருந்த பரிசுப் பொருள்களையும் சுற்றிச் சுற்றிப் பார்வையிட்ட சுவாமிகள், திருப்திக்கு அறிகுறியாகத் தலையை அசைத்து நுரவகிரியை நோக்கி, "படைத்தலைவரே! இந்த தளவாடங்களை மகாநாககுலாவுக்குக் கொண்டு செல்ல என்ன ஏற்பாடு செய்திருக் கிறீர்கள்?" என்று வினவினார்.

நுவரகிரி தளவாடங்கள் இருந்த இடத்துக்குச் சற்றுத் தூரத்தில் வரிசையாக அவிழ்த்து விடப்பட்டிருந்த கூண்டில்லா வண்டிகளைக் காட்டினார். கூண்டுடன் இருந்த வண்டிகளைக் காட்டி, "அவற்றில் பரிசுப் பொருள்கள் வரும்," என்றும் கூறினார்.

சுவாமிகள் பரம திருப்தியை முகத்தில் காட்டி, "நுவரகிரி, உம்மைப் போன்ற படைத் தலைவரைப் பெற்றதால் சிங்கள மன்னன் சிறப்படைகிறான்," என்று வாய்விட்டுப் பாராட்டவும் செய்தார். பிறகு மன்னனை நோக்கித் திரும்பி, "மன்னவா! உணவை வழியில் பார்த்துக் கொள்வோம். உடனடியாகக் கிளம்புவோம் மகாநாககுலாவுக்கு," என்று கூறினார்.

சுவாமிகளின் போக்கைக் கண்டு பெரிதும் வியப்புற்றான் விஜயன். சுவாமிகளுக்கு இருக்கும் உற்சாகத்தில் தன்னைக் கூடப் புறக்கணித்துவிட்டுப் போரில் இறங்கி விடுவாரோ என்று உள்ளூர எண்ணமிட்டான். சுவாமிகள் தமது பூர்வாசிரம வாசனையை விடாததே இதற்குக் காரணமென்பதைப் புரிந்து கொண்ட விஜயன், அவர்யோசனை சிங்களத்தின் விடுதலைப் போருக்கு மிகவும் பயன்படுமென்பதை உணர்ந்தான். ஆகவே, சுவாமிகள் சொல்லுக்குக் குறுக்கே எதுவும் சொல்லாமல் "சுவாமிகள் கட்டளை, அடியவன் பாக்கியம்" என்றான்.

சுவாமிகள் கட்டளைப்படி அன்று எல்லாமே நடந்தது. தளவாடங்களை நுவரகிரியே நேரில் சென்று ஆட்களை விட்டு

zeevaa

வண்டிகளில் ஏற்றினார். பரிசுப் பொருள்கள் பத்திரமாகக் கூண்டு வண்டிகளில் ஏற்றப்பட்டன. அந்த வண்டிகளை உடனடியாகப் புறப்பட உத்தரவிட்டு மன்னன் மாளிகைக்கு வந்து சுவாமிகளைக் கேட்டார். ''சுவாமி! வண்டிகள் புறப்பட்டு விட்டன. உத்தரவு கொடுத்தால் அவற்றுடன் நான் செல்கிறேன்,'' என்று.

சுவாமிகள் கையைத் தூக்கி ஆசீர்வதித்துவிட்டு, ''மகாநாக குலாவுக்கு வந்து சேருங்கள் நுவரகிரி, நானும் மன்னனும் மகேசியும், என் சீடர்களும் முன்னால் செல்கிறோம்,'' என்று கூற, நுவரகிரி வண்டிகளின் முன்பாகத் தமது பெரும் புரவியில் கிளம்பினார்.

அடுத்து, சுவாமிகள் பரபரப்பைக் காட்டினார். சீடர்களை நோக்கி, ''பூஜைப் பெட்டியுடன் நாம் செல்ல ஒரு வண்டி சித்தமாகட்டும். மன்னனும் மகேசியும் மூர்சமதும் புரவிகளில் வருவார்கள்,'' என்று உத்தரவிட அதற்குண்டான ஏற்பாடுகள் துரிதமாக நடந்தன.

பூஜைப் பெட்டியைத் தாங்கிய வண்டியை மற்றவர் ஓட்டுவது அநாசாரமென்று கருதி, தர்மரே வண்டி முகப்பில் உட்கார்ந்து தமது திருக்கைகளில் கடிவாளத்தை ஏந்திப் புரவியை அனாயாசமாகச் செலுத்தினார். உள்ளே குருசுவாமிகளும் மற்ற மூன்று சீடசுவாமிகளும் அமர்ந்ததும் வண்டி காலே நெடுஞ்சாலையில் பறந்தது. மகாநாககுலாவை நோக்கி.

அந்த வண்டிக்குப் பின்னால் புரவிகளில் சென்ற விஜயன் மகேசியையும் மூர்சமதையும் நோக்கி, ''சுவாமிகள் வண்டியோட்டும் வேகத்தில் வண்டி குடை சாயாமல் போய்ச் சேரவேண்டுமே,'' என்று கவலை தெரிவித்தான்.

''மன்னவா! எதுவும் ஆகாது. முன்பாரம் பின்பாரம் வண்டியில் சரியாயிருக்கிறது,'' என்று கூறினான் மூர்சமத் வண்டியின் சீரான ஓட்டத்தை கவனித்து.

zeevaa

அப்புறம் விஜயன் பேசவில்லை. பயணம் அன்று பிற்பகலின் ஆரம்பம்வரை இடைவிடாது நடந்தது. இடையே ஒரு கிராமத்தில் சிறிது நேரமே தங்க அனுமதித்த சுவாமிகள் உணவு முடிந்ததும் மீண்டும் பயணத்தைத் துவங்கினார். அன்றிரவுகூட எங்கும் தங்காமல் பயணம் செய்த சுவாமிகள், அடுத்த நாள் சூரியோதய காலத்தில் மகாநாககுலாவை அடைந்தார்.

மகாநாககுலா நகரத்தின் புற ஊர்களிலிருந்தே கெடுபிடி அதிகமாயிருந்தது. பயிற்சி பெற்ற படைவீரர்கள் எங்கும் காவல் புரிந்து கொண்டிருந்ததால் சுவாமிகளின் வண்டிகூடப் பரி சோதனைக்குப் பிறகே நகருக்குள் அனுமதிக்கப்பட்டது. நகருக்குள் இருந்த ராணுவ நடமாட்டத்தையும், எச்சரிக்கையையும் கண்ட சிவகோகர்ண சுவாமிகள் பெரும் உற்சாகம் கொண்டார். ஆனால் விஜயபாகு எத்தனை வேண்டியும் அரண்மனைக்குள் வரமறுத்து, புறநகரில் வளவே கங்கைக்கரையிலிருந்த சிறு விடுதியில் தங்கினார். தமது நீராட்டத்தையும் பூஜை புனஸ்காரங் களையும் சீடர்களுடன் முடித்துக் கொண்ட சுவாமிகள் மறுநாள் காலை போர் ஆலோசனைக்கு வருவதாக விஜயபாகுவுக்குச் சொல்லியனுப்பினார்.

சுவாமியை விட்டு லீலாவதியுடனும், மூர்சமதுடனும் அரண் மனையை அடைந்த விஜயபாகுவை மாளிகை முகப்பிலேயே பணிப்பெண்கள் நிறுத்தினார்கள். அவனையும் லீலாவதியையும் அக்கம் பக்கத்தில் நிறுத்தி வைத்ததும் உள்ளிருந்து சுடர்விழியும், திரிலோகசுந்தரியும் வந்து இருவருக்கும் மங்கல ஆரத்தி எடுத்துவிட்டு உள்ளே சென்றார்கள். கப்பலில் வந்தவள் யார் என்பதை முன் கூட்டித் தாங்கள் ஊகித்து விட்டதைக்காட்டவே திரிலோகசுந்தரியும் சுடர்விழியும் இந்த ஏற்பாட்டைச் செய்திருக் கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்ட விஜயபாகு அரண் மனைக்குள்ளே நடந்தான், லீலாவதி பின்தொடர.

zeevaa

அந்த அரண்மனை லீலாவதிக்குப் புதிதல்ல. மேலை ருஹுணாவில் தனது தந்தை ஜகதீபாலன் அரசாண்ட காலத்தில் எத்தனையோ முறை அந்த அரண்மனையில் அவள் தங்கியிருந் திருக்கிறாள். ஆகவே சர்வசகஜமாக அந்த அரண்மனையின் அந்தப்புரத்துக்குச் சென்று தனது சக்களத்திகளைச் சந்தித்தாள். அவளுடைய மெல்லிய சரீரத்தையும், உறுதியான கம்பீரமான நடையையும் கண்ட திரிலோகசுந்தரியும், சுடர்விழியும் முகபாவத் தில் எந்தவித சலனத்தையும் காட்டாமல் அவளை வரவேற்றார்கள். ''சிங்களத்தின் பட்ட மகிஷியை அவர் அறைக்கு அழைத்துச் செல்லுங்கள்,'' என்று பணிப்பெண்களுக்கு உத்தரவிட்ட திரிலோகசுந்தரி, சுடர்விழியுடன் திரும்பித் தனது அறைக்குச் சென்றாள். அந்த இருவரும் தன்னைத் தனியாக ஒதுக்கி விட்டதைப் புரிந்து கொண்ட லீலாவதி, 'இனிச் சக்களத்திப் பூசல் துவங்கும்,' என்று சந்தேகமறப் புரிந்து கொண்டாலும் அவள் அதைச் சிறிதும் வெளிக்குக் காட்டினாள் இல்லை. 'இரவு அவர் வரட்டும், பேசிக் கொள்கிறேன்,' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டாள்.

இரவு மூண்டு நீண்ட நேரம் ஆகியும் விஜயன் வராத காரணத்தால் பணிப்பெண்ணொருத்தியை அழைத்து, ''மன்னர் எங்கே?'' என்று விசாரித்தாள்.

''தெரியாது,'' என்றாள் பணிப்பெண்.

''திரிலோகசுந்தரியை விசாரித்து வா,'' என்றாள் லீலாவதி.

அவள் கட்டளையை ஏற்றுத் திரிலோகசுந்தரியின் அறைக்குச் சென்று திரும்பிய பணிப்பெண், ''அவர்களுக்குத் தெரியாதாம்,'' என்றுரைத்தாள்.

அப்பொழுது மூர்சமத் உள்ளே வந்தான். இரு கோடி அறைகளிலிருந்தும் வெளிவந்த மூன்று மனைவிமார்களும் அவனை வளைத்துக்கொண்டு, ''எங்கே மன்னர்?'' என்று வினவினார்கள்.

zeevaa

''சுவாமிகளிடம் இருக்கிறார்,'' என்று சர்வ சாதாரணமாகச் சொன்னான் மூர்ச்மத்.

''அங்கு என்ன வேலை?'' சீறினாள் லீலாவதி.

''பூஜை செய்கிறாரா மன்னரும்?'' கலிங்கத்து இளவரசி கேட்டாள்.

''போர் யோசனை செய்கிறார்,'' என்றான் மூர்சமத்.

''இரவில் வருவாரா'' சுடர்விழி வினவினாள்.

''வரமாட்டார்,'' என்றான் மூர்சமத் திட்டமாக.

''ஏன்?'' கலிங்க அரசமகள் கேட்டாள். பிறகு லீலாவதியைச் சுடச்சுட நோக்கினாள்.

''அலுவல் இருக்கிறது.'' - மூர்சமத் சொன்னான்.

''என்ன அலுவல்?'' சுந்தரி கேட்டாள்.

''போர் அலுவல்.'' மூர்சமதின் குரலில் லேசாக இகழ்ச்சி தெரிந்தது.

''இரவிலுமா?'' - லீலாவதி கேட்டாள் சினத்துடன்.

''ஆம். அதைச் சொல்லத்தான் என்னை அனுப்பினார். அவரை நீங்கள் மூவரும் எதிர்பார்க்க வேண்டாம்,'' என்று சொன்ன மூர்சமத், ''இந்த அந்தப்புர போரைவிட நாட்டுப்போர் எத்தனையோ சிறந்தது. இவ்வளவு இம்சை அதில் கிடையாது.'' என்று முணுமுணுத்துக் கொண்டே திரும்பிச் சென்றான்.

மனைவிமார் மூவரும் அவனை எரித்துவிடுவது போல் பார்த்தனர். பிறகு திரும்பி அவரவர் அறைக்குக் கோபநடை நடந்தனர். அந்தப்புரத்திலிருந்து வெளிக் கட்டிடத்துக்கு வநத மூர்சமத் அங்கிருந்த அறையொன்றைத் தட்டி உள்ளே நுழைந்தான்.

zeevaa

அங்கு ஒரு மஞ்சத்தில் உட்கார்ந்திருந்த விஜயன், ''சமத்! எப்படி இருக்கிறது நிலை?'' என்று வினவினான்.

''நிலை எரிமலை,'' என்றான் சமத்.

''சரி. நீ என்னுடன் படுத்துக்கொள்,'' என்று கீழிருந்த தரையைக் காட்டினான் விஜயன்,'' கதவை தாளிடு. என்றும் உத்தரவிட்டான்.



zeevaa

# 57. பிக்குவின் செய்தி! விஜயன் அதிர்ச்சி!!

விஜயபாகு அந்தப்புரத்துக்கு அன்று வரமாட்டாரென்றும் சுவாமிகளிடம் போர் ஆலோசனையிலிருப்பதாகவும் கூறிவிட்டு மூர்சமத் சென்றதும் அவனைச் சுடு விழிகளால் நோக்கி விட்டுத் தங்கள் அறைகளுக்குச் சென்றுவிட்ட ராணிகள் மூவரும் அன்றிரவு முழுவதும் உறக்கம் பிடிக்காமல் பற்பல சிந்தனைகளில் சுடுபட்டிருந்தாலும், அவன் வராததற்குப் பற்பல விசித்திரமான காரணங்களைத் தாங்களே கற்பித்துக் கொண்டதாலும் மிதமிஞ்சிய சினமும் ஏமாற்றமும் கொண்டு, மறுநாள் விடியற்காலையில் எழுந்திருந்து தங்கள் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு நீராடி அலங்காரம் செய்து கொண்டு காலை உணவு அருந்தவாவது மன்னன் வருவாரென்று எதிர்நோக்கிக் கொண்டிருந்தாலும், அதுவும் ஏமாற்றமாகவே முடிந்தது. நீண்டநேரம் மன்னன் வராதுபோகவே பணிப்பெண் ஒருத்தியை அனுப்பி மனன்ரைப் பார்த்துவர ஏவி எப்படியும் மன்னரை அழைத்து வருமாறு பணிக்கவே பணிப்பெண்ணும் துரிதமாக மன்னனைத் தேடிச் சென்றாள். நீண்ட நேரம் கழித்து திரும்பிய பணிப்பெண்ணை மூன்று ராணிகளும் சுற்றிக் கொள்ளவே பணிப்பெண் என்ன சொல்வதென்று அறியாமல் திருதிருவென விழித்தாள்.

''ஏன் விழிக்கிறாய்? மன்னரைப் பார்த்தாயா?'' என்று லீலாவதி அதிகாரத் தோரணையில் வினவினாள். ராஜபுதன ஸ்திரீகளின கடுமை குரலில் ஒலிக்க.

zeevaa

சற்று எட்ட நின்ற திரிலோகசுந்தரியும் சுடர்விழியும் ஏதும் கேட்கவில்லையென்றாலும் லீலாவதியின் அதிகாரத்தை எண்ணி லேசாக இகழ்ச்சிப் புன்முறுவல் கொட்டினார்கள். ''கடைசியில் வந்தவள் கெடுபிடி மிக அதிகமாயிருக்கிறதே,'' என்றாள் சுடர்விழி மெதுவாக. அதை ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் திரிலோக சுந்தரி தனது தலையை ஆட்டியதைப் பார்த்த லீலாவதி அவர்களை நோக்கி, ''கடைசியில் வந்தாலும் மூத்த மகேசி நான் தான் நினைவிக்கட்டும்,'' என்று சீறினாள் விழிகளில் பொறி பறக்க.

''புது மகேசி வந்த பிறகுதான் மன்னர் அந்தப்புரத்திலிருந்து துறவறம் பூண்டிருக்கிறார்,'' என்றாள் திரிலோகசுந்தரி.

அதற்குமேல் பொறுக்க முடியாத லீலாவதி அவர்களை விட்டுத் தனது விழிகளை நீக்கி, பணிப்பெண்ணை நோக்கி, ''மன்னர் என்ன செய்கிறார்?'' என்று வினவினாள்.

பணிப்பெண் பெரும் குழப்பத்துக்கு உள்ளாகி, ''இப்பொழுது தான் எழுந்திருந்தார்'' என்று மிக மெதுவாகப் பேசினாள்.

இந்தப் பதில் ராணிகள் மூவருக்குமே வியப்பை அளிக்கவே, ''இத்தனை நேரமா உறங்கினார்?'' என்று திரிலோகசுந்தரி வினவினாள்.

''ஆம் மகாராணி, அதுவும் நான் கதவைத் தட்டிய பின்புதான் விழித்திருக்க வேண்டும்,'' என்று பணிப்பெண் சூசகமாகக் கூறினாள்.

''கதவைத் தட்டினாயா?'' என்று சுடர்விழி கேட்டாள் சந்தேகக் குரலில்.

''ஆம், மகாராணி.''

''தனியாகப் படுக்கவில்லையா மன்னர்?''

''இல்லை.''

zeevaa

''சுவாமிகளுடன் படுத்துக் கொண்டாரா?''

''இல்லை.''

''என்னடி புதிர் போடுகிறாய்? விளக்கமாகச் சொல். அவருடன் எந்த அழகி படுத்திருந்தாள்?'' இதைச் சீற்றத்துடன் கேட்டாள் சுடர்விழி.

பணிப்பெண் பரமசங்கடத்துக்குள்ளானாள். ''படுத்திருந்தது அழகியென்று சொல்ல முடியாது. ஆனால் அவருக்கு அந்தரங்க மானவர் படுத்திருந்தார். அவர்தான் கதவைத் திறந்தார்,'' என்று மிகுந்த எச்சரிக்கையுடன் பேசினாள் பணிப்பெண்.

''எங்களைவிட அந்தரங்கமானவர் யார் இருக்க முடியும்?'' என்று வினவினாள் லீலாவதி.

பணிப்பெண் அதற்குமேல் காலம் தாழ்த்தாமல் ''மூர்சமத், ''என்று சொல்லவே மூன்று ராணிகளும் சினம் தணிந்து புன்முறுவல் செய்தார்கள்.

''பாவம்! நீண்டநேரம் போர் யோசனையில் இருந்திருப்பார்; நேரம் கழித்துப் படுத்திருப்பார்,'' என்ற திரிலோகசுந்தரி பணிப்பெண்ணை நோக்கி, ''உணவருந்த நாங்கள் காத்திருப்பதாகச் சொல் மன்னரிடம்,'' என்று கூறவே, தப்பினால் போதுமென்று பணிப்பெண் விரைந்தாள் அந்தப்புர பகுதியை விட்டு.

ஆனால் விஜயன் அவர்களுடன் உணவருந்த வரவில்லை. அன்று பூராவும் பாசறையிலேயே காலம் கழித்தான்.

நீராடிய பிறகு சிவகோகர்ண ஸ்வாமிகள் இருந்த இடத்தை அடைந்த விஜயன், சுவாமிகள் பூஜையை முடித்து விட்டதையும் நுவரகிரியுடன் ஏதோ விவாதித்துக் கொண்டிருப்பதையும் கண்டு புன்முறுவல் கொண்டு அவரை வணங்கி நின்றான். சுவாமிகள் பக்கத்திலிருந்த தாம்பாளத்தை சுட்டிக்காட்டி, ''அது சரிதானா பார்,'' என்றார்.

zeevaa

தாம்பாளத்தில் மூன்று கோடுகள் முக்கோண முறையில் விபூதியால் இழுக்கப்பட்டு அந்தக் கோடுகள் இணையும் தலைப் புறத்தில் பெரிதாக குங்குமத்தை ஒருசக்கரமாக அப்பியிருந்தார் சுவாமிகள். அதைக் கவனித்த விஜயபாகு அந்தப் போர்த்திட்டம் தான் வகுத்த ஆடு புலி கட்டத்தைப் போலிருந்ததைக் கண்டு, ''சுவாமி! இதே மாதிரி நானும் ஒரு திட்டம் வகுத்திருந்தேன்,'' என்று கூறினான்.

''பலமான எதிரியை முறியடிப்பதென்றால் படைபலம் மட்டும் போதாது, புத்தி பலமும் வேண்டும். சோழர்கள் ஆதிக்கத்திலுள்ள ராஜரட்டாவை வெற்றிகொள்ள இது ஒன்று தான் வழி,'' என்று கூறிய சுவாமிகள், ''விஜயபாகு! நீ வகுத்த ஆடுபுலிக் கட்டத்தில் நான்கு பக்கக் கோடுகள், நான்கு கோடுகளையும் இணைக்கும் அடிக்கோடு ஒன்று. தலையில் புலிகள் மூன்று, இவை உண்டு. இங்கு அப்படியல்ல. மூன்று கோடுகளே இழுத்திருக்கிறேன். காரணம் மூன்று உனக்கு ராசியான எண்,'' என்றும் சொன்னார்.

விஜயன் சற்றுச் சிந்தித்து, ''சுவாமி! மூன்று எனக்கு ராசி என்று எப்படிச் சொல்கிறீர்கள்?'' என்று வினவினான்.

''உனக்கு மனைவிமார் மூவர். மனைவிகளை வைத்துத்தான் கணவன் அதிர்ஷ்டத்தைக் கவனிக்க வேண்டும். மனிதனின் வெற்றி தோல்விகளுக்கும் மனைவிதான் காரணம். அவன் இன்ப துன்பத்துக்கும், மன திடம், மனச் சோர்வு இவற்றுக்கும் மனைவியே காரணம். மூன்று மனைவிகள் இருக்கும போதும் மனம் நிம்மதியாயிருக்கிறதென்றால் உன்னையும் துறவியென்றே சொல்லலாம்,'' என்று விளக்கிய சுவாமிகள், ''இனி இந்தக் கோடுகளைக் கவனி'' என்றுகூறி, ''தர்மரே! இதை விளக்கும்'' என்றார்.

தர்மர் முகத்தில் பெருமிதம் நிரம்பி வழிந்தது. அந்தப் பெருமிதம் குரலிலும் நிலவச் சொன்னார்: ''விஜயபாகு! இந்த மூன்று கோட்டின் வழியாகவும் நீ படைகளை நடத்திச் செல்லலாம்.

zeevaa

இரண்டு புலஸ்திய நகரத்தை இரு புறத்திலும் தாக்கும். மூன்றாவது படைப்பிரிவு அனுராதாபுரத்துக்குச் செல்லும்..." என்று. அத்துடன் விஜயபாகு வின் மனத்தை அறிய அவனை நோக்கித் தமது கண்களை நிலைக்க விட்டார்.

அந்தத் திட்டம் கிட்டத்தட்ட தனது திட்டமேயானாலும் சுவாமிகளின் மனப்போக்கை அறிய, "ஆம் சுவாமி! அனுராதா புரத்தில் என்ன இருக்கிறது? அது பலமுறை படையெடுப்புகளால் அழிக்கப்பட்டதால்தானே புலஸ்திய நகரத்தைச் சோழர்கள் தலைநகராக்கியிருக்கிறார்கள்?" என்று வினவினான்.

அப்பொழுது சிவகோகர்ண ஸ்வாமிகள் இடைபுகுந்து "பழையது என்பதற்காக அதை ஒதுக்க முடியாது. அனுராதபுரம் சிங்களத்தின் முக்கியத் துறைமுகமான மகாதித்தாவை அடுத்திருக் கிறது. நீ புலஸ்திய நகரத்தைத் தாக்கும்போது சோழர்கள் படைகளை மகாதித்தாவில் இறக்கி உன்னைப் பின்புறம் தாக்கக்கூடும். ஆகவே பழைய நகரமானாலும் அதற்குப் பலம் உண்டு" என்று விளக்கம் தந்தார். "சரி! உன்னுடைய மூன்று பிரிவுகளுக்கும் யார் யார் தலைமை வகிப்பார்கள்? படைகளை எப்படி பிரிக்க உத்தேசம்?" என்று வினவவும் செய்தார்.

விஜயபாகு சிறிது நேரம் சிந்தனையில் இறங்கினான். "கிழக்குக் கடற்கரையோரமாக நுவரகிரி ஒரு படையுடன் சென்று புலஸ்திய நகரத்தை நோக்கி மேற்கே திரும்புவார். ஜேட்டதிஸ்ஸன் மேற்குக் கடற்கரையோரமாகச் சென்று அனுராதபுரத்தைத் தாக்குவார். நான் வடக்கு திக்கில் இடையேயுள்ள மலை நாட்டு வழியே ரவிதேவனுடனும் காலனுடனும் சென்று கிழக்கே திரும்பி, புலஸ்திய நகரத்தை அடைவேன்" என்று முடிவாக அறிவித்தான்.

அவன் முடிவைக் குதூகலத்துடன் சிரம் அசைத்து ஒப்புக் கொண்டாலும் சுவாமிகள் ஏதோ சந்தேகத்தில் ஆழ்ந்தார். அதைக் கவனிக்கவே செய்த நுவரகிரி, "சுவாமி சந்தேகம் ஏதாவது உண்டா?" என்று வினவினார்.

zeevaa

''நாம் இங்கு நமது போர் முறைகளை நிர்ணயித்துக் கொண்டிருக்கிறோம். எதிரியின் நிலை என்ன? புலஸ்திய நகரம் எந்த நிலையிலிருக்கிறது?'' என்று வினவியதன்றி, ''எதிரியின் பலாபலம் அறியாமல் நாம் போரைத் துவக்குவது சரியல்ல'' என்றும் சொன்னார்.

இதைக் கேட்ட அர்த்தர், ''சுவாமி! நாங்கள் புலஸ்திய நகரத்திலிருந்துதானே வருகிறோம்? அங்கு நிலைமையில் மாறுதல் ஏதுமில்லை'' என்று கூறினார். தமது துப்பறியும் திறமையை எண்ணி உவகை முகத்தில் துளிர்க்கப் புன்முறுவலும் செய்தார்.

''உங்கள் துப்புப் போதாது. இந்த நாட்டை நன்றாக அறிந்த பிக்கு ஏன் உங்களுடன் வரவில்லை?'' என்று வினவினார் சுவாமிகள்.

''தாம் பின்னால் வருவதாகக் கூறி எங்களை முன்னால் அனுப்பினார்'' என்றார் மோஷர்.

''என் கழுத்தைப் பிடிக்க'' என்று அலுத்துக்கொண்ட சுவாமிகள், ''நமது படைகளுக்கு நன்றாக பயிற்சி அளிப்போம். பிக்கு வரட்டும். அவரைக் கலந்துகொண்டு படையெடுப்பைத் துவங்குவோம்'' என்றார்.

அன்றைக்கு சுவாமிகள் படையெடுப்பைப்பற்றிப் பேச்சை எடுக்கவில்லை. சதா நுவரகிரியுடனும் விஜயனுடனும் படைகளைப் பார்வையிட்டு வந்தார். மரக்கலத்தில் வந்த தளவாடங்களை மட்டுமின்றி, பரிசுப் பொருள்களையும் படை வீரர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தார். பரிசுகளைப் பெற்ற வீரர்கள் மகிழ்ச்சிக் கூத்தாடினார்கள். மகாநாககுலா அடுத்த இரண்டு நாட்களில் விழாக் கோலம் பூண்டது. ஆனால் அந்தப்புரத்தில் துயரமே குடிகொண்டிருந்தது விஜயன் அந்தப் பக்கமே தலை காட்டாததால் பத்தாவது நாள் விஜயன் சுவாமிகளுடனும் அங்கு வந்து சேர்ந்த ஜேட்ட திஸ்ஸன், ரவிதேவன், கார்லன் முதலிய படைத்தலைவர்களுடன் மந்திராலோசனையின்போது முற்றும் எதிர்பாராதவிதமாகத்

zeevaa

திடுதிப்பென்று பிக்கு உள்ளே நுழைந்தார். "இந்த நகரத்தில் என்ன கும்மாளம்? அதை முதலில் நிறுத்துங்கள்" என்று மிகுந்த கோபத்துடன் கூறினார்.

விஜயனும் மற்றோரும் பிக்குவை கவலை நிறைந்த முகங்களுடன் நோக்கினார்கள். பிக்கு நிதானமாகவும் துன்பம் தோய்ந்த குரலிலும் சொன்னார்: "இன்று துக்க நாளாகக் கொண்டாடுங்கள்" என்று மிகவும் அதிர்ச்சியை அளிக்கும் செய்தியையும் சொன்னார். அதைக் கேட்ட சிவகோகர்ண ஸ்வாமிகள் கூட மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டார், விஜயன் ஆசனத்திலிருந்து எழுந்து, "நகரத்தில் ஆர்ப்பாட்டங்கள் நிற்கட்டும்" என்று சீறிய குரலில் அறிவித்தான். பிக்கு கொண்டுவந்த செய்தி அவன் மனத்தை உலுக்கிக் கொண்டிருந்தது. அடுத்தும் ஒரு செய்தி சொன்னார் பிக்கு. அது விஜயனின் மனத்தைப் பிளந்து விட்டது. எதற்கும் அசையாத அவன் முகத்தில் வேதனை மிதமிஞ்சித் தெரிந்தது.



# 58. பத்து நாள் துக்கம்

பிக்கு என்று அன்புடன் அழைக்கப்பட்ட சத்வானந்த பிக்கு, சிவகோகர்ண சுவாமியின் மந்திராலோசனை அறைக்குள் நுழைந்ததும் சத்வகுணத்தையோ ஆனந்தத்தையோ எள்ளளவும் காட்டாமல் மிகுந்த கோபமும் துன்பமும் கலந்த குரலில் பேச முற்பட்டதையும், முதலில் மகாநாககுலாவின் விழாக் கோலத்தை நிறுத்துமாறு உத்தர விட்டதையும் கண்ட விஜயபாகு, "பிக்கு! தங்கள் கோபத்துக்குக் காரணம்?" என்று விசாரித்தான் பணிவு நிரம்பிய குரலில்.

கேட்டதும் பிக்கு உடனடியாகப் பதில் சொன்னாரில்லை. அந்த அறையிலிருந்த அனைவரையும் மௌனமாக நீண்ட நேரம் உற்று நோக்கிய பிறகு, "வீர ராஜேந்திரன் மரணப் படுக்கையிலிருக்கிறான். அநேகமாக காலமும் முடிந்திருக்கும்" என்று துன்பம் தோய்ந்த குரலில் சொன்னார். இந்தச் செய்தியைக் கேட்ட அந்த அறையிலிருந்த அனைவரும் அதிர்ச்சியடைந்தாலும் விஜயன் அதிர்ச்சி மற்றெல்லோர் அதிர்ச்சியைவிடச் சற்று அதிகமாகவே இருந்ததால் அவன் பிரமை பிடித்து ஏதும் பேசாமல் உட்கார்ந்தவன் உட்கார்ந்தபடி இருந்துவிட்டான். அந்த அதிர்ச்சியை உச்சத்துக்குக் கொண்டு போகவோ என்னவோ பிக்கு மீண்டும் சொன்னார்: "தந்தையைக் காண அதிராஜேந்திரன் புலஸ்திய நகரத்திலிருந்து சோழ நாட்டுக்குப் புறப்பட்டு விட்டான்" என்று.

பிக்குவின் இரண்டு அறிவிப்புகள் விளைவித்துள்ள நிலை என்ன என்பதை அந்த அறையிலிருந்த அனைவரும் புரிந்து கொண்டா லும், தளபதியில்லாத சோழர் படைகளைத் தாக்குவதும்

zeevaa



zeevaa

இந்தச் சமயத்தில் புலஸ்திய நகரத்தின் மீதும் படையெடுப்பதும் எந்தத் தர்மத்தில் சேரும் என்பதை எண்ணிப் பார்த்ததால் பேச்சுக்கோ தர்க்கத்துக்கோ இடமில்லாத ஒரு சூழ்நிலை அந்த மந்திராலோசனை அறையைச் சூழ்ந்து கொண்டது. விஜயன் மனம் பெரும் போராட்டத்திலிருந்தாலும் அவன் அதை வெளிக்குக் காட்டாமல் மூர்சமதை அழைத்து, ''மூர்சமத்! இந்நகரத்திலுள்ள களியாட்டங்களை உடனடியாக நிறுத்தச் சொல்'' என்று உத்தரவிட்டதன்றி, மூர்சமத் அந்தப் பணியை நிறைவேற்ற வெளியே சென்றதும், பிக்குவை நோக்கி, ''பிக்கு! படையெடுப்புக்கு நமது படைகள் சித்தமாயிருக்கின்றன. படைத் தலைவர்களும் சித்தமாயிருக்கிறார் கள். சோழர்களுக்கு பெரு நஷ்டமும் கஷ்டமும் ஏற்பட்டிருக்கும் இந்தச் சமயத்தில் நாம் அவர்கள் மீது படையெடுப்பது வரலாற்றில் நித்தனைக்குள்ளாகும். இந்த நிலையில் நாம் செய்ய வேண்டியது என்ன? என்று விசாரித்தான்.

அதுவரை நின்று கொண்டிருந்த பிக்கு பக்கத்திலிருந்த ஆசனமொன்றில் அமர்ந்து சிறிது தன்னை நிதானித்துக் கொண்டு விஜயனை நோக்கி, ''மன்னவா! இந்தக் கேள்வி நீ வீரன் என்பதை மட்டுமல்ல நாடாளத் தகுந்தவன் என்பதையும் நிருபிக்கிறது. எதிரியின் கை சோர்ந்திருக்கும் சமயத்தில் தாக்குவது தர்மமில்லை யென்று நினைக்கிறாய். நீ நினைப்பது சாமான்ய தர்மம். நாசத்தை விளைவிக்கும் போரின் தர்மங்கள் வேறு. ஆனால் நீ சோழர்களை உடனடியாகத் தாக்குவது உன்வீரத்துக்கு ஒவ்வாது. பத்து நாட்கள் கழித்துத் தாக்குதலைத் தொடங்கு. தவிர, நீ நினைப்பதுபோல் அதிராஜேந்திரன் சோழ நாடு சென்று விட்டதால் சோழர்படைகள் வலுவிழந்து விடவில்லை. சோழர்கள் படையில் மிகத் திறமை சாலிகளான படைத் தலைவர்கள் இருக்கிறார்கள். உன் பெரும் படையையும் அவர்களால் சமாளிக்க முடியும்'' என்றும் தெரிவித்தார்.

சிவகோகர்ண சுவாமிகளும் அதற்கு ஒப்புக்கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார். ''போரில் தர்மாதர்மங்களை

zeevaa

விவாதிக்க இடமில்லை. மகாபாரதப் போரின் நிகழ்ச்சிகளே எந்தத் தர்மமும் முடிவுகளையும் அவசியத்தையும் பொறுத்தது என்பதற்கு அத்தாட்சிகளாக விளங்குகின்றன. போரைத் துவங்கும்போது உறவினர்களைப் பார்த்துச் சோகமடைந்த பார்த்தனுக்கு கிருஷ்ணன் சொன்ன அறிவுரைகள் சாஸ்திரமாக விளங்குகின்றன. பிறந்தவன் இறப்பது நிச்சயமான தர்மம். வீர ராஜேந்திரன் போன்ற மகாராஜாவின் மரணம் நமக்குத் துக்கத்தைத் தருகிறது. உங்கள் எல்லோரையும்விட எனக்குத் துக்கம் அதிகம். சமீபத்தில் அவன் பெருந்தன்மையை அனுபவித்தேன். ஆகையால் உடனடியாகப் படையெடுக்க வேண்டாம். பத்து நாட்கள் கழித்துப் படைகள் முன்னேறட்டும்'' என்று சிவகோகர்ண ஸ்வாமிகள் தமது கருத்தை எடுத்துச் சொன்னார்.

''பத்து நாட்கள் என்ன கணக்கு?'' என்று கேட்டான் விஜயன்.

''துக்கம் பத்து நாள் என்பது வழக்கு'' என்றார் தர்மர்.

அதுவரை ஏதும் பேசாதிருந்த நுவரகிரி தமது பெருவிழிகளை அங்கிருந்தவர்கள்மீது சுழலவிட்டார் ஒருமுறை. ''இங்கு தர்மங்களும் பேசப்படுகின்றன'' என்று முணுமுணுத்தார் கரகரத்த குரலில்.

''அதில் தவறென்ன?'' என்று வினவினார் தர்மர்.

''தர்மஸாரம் இதம் ஜகத் (தர்மமே இந்த உலகத்தில் ஆதாரம்)'' என்று சுலோகம் சொன்னார் அர்த்தர்.

''பிறரைக் கொல்வது தர்மமா?'' -இன்னொரு வினாவை ஏவினார் நுவரகிரி.

''இல்லை,'' திட்டமாகச் சொன்ன காமர் மோக்ஷரை நோக்கினார்.

மோக்ஷர் ஏதும் பேசவில்லை. தமது கைகளிரண்டையும் மூடிமூடித் திறந்தார்.

zeevaa

நுவரகிரி மேலும் சொன்னார்: ''படைகளைச் சித்தம் செய்து விட்டு போருக்குத் தயங்கினால் உலகம் நம்மைக் கோழைகளென்று இகழும். தர்மம் பேசவும் கடைப்பிடிக்கவும் நேரம் காலம் உண்டு. எந்தத் தர்மத்தைப் பார்த்துச் சோழர்கள் ஜகதீபாலன் மனைவி யையும் மகளையும் சிறையெடுத்துப் போனார்கள்?'' என்று. ''போர் என்பது நாசத்துக்காக ஏற்பட்டது. வீரன் போரிடவே பிறக்கிறான். இப்பொழுது சிங்கள மகாராஜா நாட்டுச் சுதந்திரத்துக்காகப் போராடுகிறார். பலமுறை எதிரிகளால் துரத்தப்பட்ட பிறகு இது எப்படி அதர்மம்? இன்னும் பத்துநாட்களுக்குப் பிறகு படைகள் நகராவிட்டால் மகாராஜா வேறு படைத்தலைவனைப் பார்க்கட்டும்'' என்று கூறிவிட்டு மந்திராலோசனைக் கூடத்திலிருந்து எழுந்து சென்றார்.

''சுத்த ராட்சஸன்'' என்று பிக்கு அலுத்துக்கொண்டார், மற்ற சுவாமிகளும் தலையாட்டினார்கள்.

அத்துடன் மந்திராலோசனைச் சபையிலிருந்து விடை பெற்றுக் கொண்ட விஜயன் படைகளின் கொண்டாட்டங்களை நிறுத்தி வைக்கும்படி மூர்சமத் தவிர இரண்டொரு தலைவர்களுக்கும் உத்தரவிட்டு அந்தப்புரத்தை நோக்கி நடந்தான். அங்கு அவனை எதிர்கொள்ள மூன்று அறைகளிலிருந்து வந்த மூன்று ராணிகளின் வேகத்தையும் விஜயனின் ஒரே பார்வை நிறுத்திவிட்டது. அவன் முகத்திலிருந்த துன்பச் சாயையை நோக்கிய மூவரும் அதற்குக் காரணத்தை அறியாததால் சற்று எட்டவே நின்று அவனைக் கவலையுடன் நோக்கினர். அவர்கள் மூவரில் லீலாவதியே முதலில் பேசத் துவங்கி, ''உங்கள் மனநிலை சரியாயில்லை போலிருக் கிறது...?'' என்று மெதுவாகச் சொற்களை உதிர்த்தாள்.

''உன் மனநிலையும் சரியாயிருக்கக் கூடாது'' என்றான் விஜயன்.

''என் மனநிலையா?'' ஏதும் புரியாமல் கேட்டாள் லீலாவதி.

zeevaa

விஜயன் அவளைக்கூர்ந்து நோக்கினான். "உன்னை விடுதலை செய்து அனுப்பிய அந்த மகாராஜன் இத்தனை நேரம் மறைந்திருப் பான்" என்று கூறவும் செய்தான். உள்ளம் நெகிழ்ந்ததைக் குறிக்கும் குரலில்.

"யார் சோழப் பேரரசரா!"

"ஆம். வீரராஜேந்திரன்"

லீலாவதியின் கண்கள் கலங்கின. இரு கைகளாலும் தலையைப் பிடித்துக் கொண்டாள். அவள் உடல் சற்றே ஊசலாடவே மற்ற இரு ராணிகளும் அவளை அணுகி தாங்கிப் பிடித்துக் கொண்டனர். அதுவரை போட்டியிடும் சக்களத்திகளாக இருந்த அந்த மூவரின் ஒற்றுமையைக் கண்ட விஜயன், 'மரணம் எப்படி விரோதிகளை ஒன்று படுத்துகிறது!" என்று உள்ளூர வியந்தவன், "பத்து நாள் துக்க நாள்" என்றும் சொன்னான்.

"அவர் நமக்கு உறவல்லவே?" என்றாள் திரிலோகசுந்தரி.

"நல்லவன் எல்லோருக்கும் உறவு" என்று சொல்லிவிட்டு அன்று அந்தப்புரத்திலிருந்து சென்றவன் அடுத்த பத்து நாட்களுக்கு அங்கு திரும்பவே இல்லை.

அதிர்ச்சியைத் தரும் பிக்குவின் செய்தி சிங்கள இளவலின் மனத்தை மிகவும் பாதித்திருந்ததால் அவன் சந்துஷ்டி சிறிதும் இல்லாமலேகாலத்தைக் கழித்தான். மகாநாககுலாவின் விழாக் கோலத்தை அவன் அழித்துவிட்டதால் அமைதி நிரம்பிக் கிடந்த நகரத்தையும் அடிக்கடி பார்வையிட்டு வந்தான், அவனுடன் சதா மூர்சமதும் நுவரகிரியும் சுற்றி வந்தாலும் நுவரகிரியே படைகளுக்கு உற்சாகமூட்டி வந்தார். "உங்களுக்கு இந்த நாட்கள் ஓய்வு நாட்கள். இன்னும் பதினைந்து நாட்களில் நீங்கள் வெற்றிப் பாதையில் நடக்கப் போகிறீர்கள்," என்று கூறி வந்தார். அவர் உற்சாகம் மன்னனின் மனச்சோர்வையும் சிறிது குறைத்தது.

zeevaa

பிக்கு வந்த நாளுக்கு அடுத்த நாளே* வீரராஜேந்திரன் மரணச் செய்தி வந்தது. அதிராஜேந்திரன் சோழர் அரியணை ஏறிவிட்டதாகவும் வதந்தி அடிபடவே தனது கடமையும் சிங்கள இளவலுக்கு உதயமாகத் தொடங்கியது. யார் மரணத்துக்கும் உலகம் தேங்கி நின்று விடுவதில்லை என்ற நியதியை அவன் உணர்ந்தான். துக்கம் பத்து நாட்கள் தீர்ந்ததும் தனது படைகளை இயக்கச் சித்தமானான். அதற்கான திட்டத்திற்கு மறு மந்திராலோசனையில் இறங்கவில்லை அவன். தனிமையிலிருந்த சமயங்களில் திட்டத்தை அவனே உருவாக்கிக் கொண்டான் மகாநாககுலாவும் துக்ககோலம் நீங்கிப் போர்க்கோலம் பூண்டது.

---

★ *கி.பி.1070-ஆவது ஆண்டின் (புத்தர் ஆண்டு 1610) ஆரம்பத்தில் வீர ராஜேந்திரன் வீரசுவர்க்கம் எய்தினான்.*

zeevaa

# 59. அடைக்காத கதவு அடைந்த உறவு!!

சோழப் பேரரசனான வீரராஜேந்திரன் மரணமடைந்திருப்பான் என்ற ஊகத்திலேயே பத்து நாட்களைத் துக்க நாட்களாகக் கொண்டாடும்படியாக உத்தரவிட்ட விஜயபாகு, அந்தப் பத்து நாளையும் வீணாகக் கழிக்காமல் படையெடுப்புக்கு வழிமுறை களை வகுப்பதிலும், இறுதியாக ஒரு முடிவுக்கு வரத் திட்டங்கள் தீட்டியும், படைப்பிரிவுகளின் சன்னத்தத்தையும் ஆயுதக் கிடங்கு பார்வையிடுவதிலும் கழித்தான். அவன் சென்ற விடமெல்லாம் அவனை நிழலைப் போல் தொடர்ந்த மூர்சமத், பொதுவாக மௌனமே சாதித்தாலும் தனது கருத்து மாறுபட்ட இடங்களில் அதைத் தெளிவாக எடுத்துக் சொல்லவும் தயங்கவில்லை. முதல் இரண்டு நாட்கள் மன்னனுடன் சுற்றியவரை பேசாதிருந்த மூர்சமத், ''எசமான், நம்மிட்முள்ள வீரர்களைவிடத் தளவாடங்கள் குறைவாயிருப்பதாகத் தெரிகிறது,'' என்று மிக மெதுவாகவும், உறுதியுடனும் சொன்னான்.

அதைப்பற்றி ஏற்கெனவே உணர்ந்திருந்தாலும் அதை மூர்சமத் சுட்டிக் காட்டியதும் வியப்பின் வசப்பட்ட விஜயன், ''சமத்! நீயும் அதைக் கவனித்தாயா,'' என்று வினவினான்.

''கவனித்தேன் எசமான். இப்பொழுதிருக்கிற வேல்களைவிட இரட்டை மடங்கு அதிகமாக படையிலிருக்கிறார்கள். வாட்கள் கூடக்குறைவு,'' என்றான்.

விஜயன் சிறிது சிந்தனையில் இறங்கிவிட்டு, ''சமத் நீ சொல்வது சரி. ஆனால் ராமன்னா நாட்டிலிருந்து வந்திருக்கும் தளவாடங்

zeevaa



zeevaa

களையும் சேர்த்தால் ஏறக்குறைய நாம் படைகளுக்கு ஆயுதமளித்து விடலாம்,'' என்று கூறினான்.

''அப்பொழுதும் பூர்ணமாகப் படைகள் ஆயுதம் தரிக்க முடியாது. நீங்கள் திரட்டியிருக்கும் பெரும்படைக்கு ராமன்னா நாட்டிலிருந்து வந்திருக்கும் ஐந்து கப்பல் ஆயுதங்கள் போதா. சிறிது நாமும் சித்தம் செய்வது நல்லது,'' என்று திட்டமாகச் சொன்னான் மூர்சமத்.

விஜயன் இந்த யோசனைக்கு உடனடியாகப் பதில் சொல்ல வில்லை. சிறிது யோசித்து விட்டு, மூர்சமத்! நமது பட்டறைகளை நாளை முதல் இரவும் பகலுமாக இயக்கி வேல்களையும் வாட்களையும் தயார் செய்து விடுவோம்,'' என்று கூறிவிட்டு நகரத்துக்கு வெளியே இருந்த பட்டறைகளுக்கு மூர்சமதுடன் சென்று பட்டறைகளைப் பார்வையிட்டான்.

அந்த இரவு நேரத்திலும் பட்டறைகள் வேகமாக இயங்கிக் கொண்டிருந்ததால், இரும்பை உருக்கி வாட்களாகவும் வேல் முனைகளாகவும் அடிக்கும் பெரும் ஓசை நகரின் வெளிப்புறத்தைப் பயங்கர இரைச்சலுள்ளதாக அடித்திருந்தது. ஐம்பதுக்குமேலான உலைகள் ஒவ்வொரு பட்டறையிலும் இருந்ததால், வேகமாகக் காய்ச்சப்பட்ட பெரிய இரும்புத் துண்டுகள் சுத்தி கொண்டு உலைகளில் வாட்களாக அகன்றும்,வேல்முனைகளாக முக்கோணப் படுத்தப்பட்டும் ஆங்காங்கு விழுந்து கொண்டிருந்ததையும் கண்ட விஜயபாகு, ஒரு பட்டறையில் நின்று, ''இங்கு ஒரு நாளைக்கு எத்தனை வாட்கள், எத்தனை வேல்கள் தயாராகும்?'' என்று விசாரித்தான்.

அதைக் கேட்ட மூர்சமத் மனத்துக்குள் கணக்குப் போடத் துவங்கி மகாநாககுலாவிலுள்ள ஐம்பது பட்டறைகளும் இயங்கினாலும் மன்னன் திரட்டியிருக்கும் கடல் போன்ற படைக்குப் போதாதென்று தீர்மானித்து, ''மன்னவா! பட்டறைகள் ஒரு நாளைக்கு எத்தனை நேரம் வேலை செய்யும்?'' என்று வினவினான்.

zeevaa

மன்னன் பதில் சொல்லாமல் பட்டறைக்காரனை நோக்க, ''காலையிலிருந்து மாலை வரை வேலை செய்யும்'' என்று அறிவித்தான் பட்டறை முதல்வன்.

மூர்சமத் சற்றுத் தலையை அசைத்துக் கொண்டான். அப்புறமும் இப்புறமும், வேலை நேரம் போதாதென்பதற்கு அறிகுறியாக, ''எசமான்! இரவில் கொஞ்ச நேரம் வேலையைக் கூடுதலாகச் செய்தால்தான் நாம் இன்னும் ஒரு மாதத்தில் படைகளை முன்னேறச் செய்யமுடியும்.'' என்று முடிவில் அறிவித்தான்.

''அது எப்படிச் சாத்தியம்'' என்று பட்டறைக்காரன் கேட்டான்.

''தேச பக்தியிருந்தால் சாத்தியம்?'' என்று மூர்சமத் முரட்டுத் தனமாகச் சொன்னான். ''எசமான் உத்தரவு கொடுத்தால் பட்டறைகளை நான் கவனித்துக்கொள்கிறேன்,'' என்று கூறினான்.

விஜயன் புன்முறுவல் செய்து ''வேலைக்காரர்களை விரட்டிக் காரியத்தைச் சாதிக்க முடியாது மூர்சமத். அவர்களுக்கு ராஜ பக்தியும் தேசபக்தியும் இருந்தால் வேலை துரிதமாக நடக்கும்,'' என்று கூறிவிட்டு மூர்சமதை அழைத்துக் கொண்டு சென்றான்.

மன்னனின் அந்த ஓர் அறிவிப்பு, ஒரு பட்டறையிலிருந்து இன்னொரு பட்டறை என்று அத்தனை பட்டறைகளுக்கும் பரவவே, வேலை மிகத்துரிதப்பட்டு அடுத்த ஒரு வாரத்திற்குள் வாட்களும் வேல்களும் ஏராளமாகக் குவிந்து விட்டதால் ஆயுத வண்டிகள் நிரம்பி வழிந்து கொண்டிருந்தன.

அடுத்த நாளும் அதற்கு அடுத்த நாளும் விஜயன் மூர்சமதுடன் வளவே கங்கையின் இரு கரைகளிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பெரும் படைப் பிரிவுகளைப் பார்வையிட்டான். நல்ல வெய்யிலில் கூட நுவரகிரி இடையில் சல்லடம் கட்டி, பாதி திறந்த உடலுடன் வீரர்களைப் பழக்கிக் கொண்டிருந்தார். அவருடைய ராட்சத உருவத்தின் விளைவாகச் சில வீரர்கள் அவரை நெருங்க அச்சப்பட்டாலும் நுவரகிரி ராட்சதத்தனமாகச் சிரித்தும் அன்பாகப்

zeevaa

பேசியும் உற்சாகமூட்டிப் போர்ப் பயிற்சி அளித்துக் கொண்டிருந் தார். படைகளை வியூகங்களாக வகுத்தும், வியூகங்களை மேலுக்கு மோத விட்டும் போர்க்களத்தில் அவர்கள் இயக்க வேண்டிய முறைகளைக் கற்பித்துக் கொண்டிருந்தார்.

வளவே கங்கைக்கு அப்புறமிருந்த படைகளை ஜேட்டதிஸ்ஸன் இயக்கிக் கொண்டிருந்தான். படைகளை நாலாகப் பிரித்து ஒரு பிரிவுக்குள் மற்றொரு பிரிவு ஊடுருவும் போது எப்படி ஊடுருவ வேண்டும், ஊடுருவிய பின்பு எப்படித் திரும்பிப் போரிட வேண்டும் என்றெல்லாம் போதித்து, உயர்ந்த ஒரு மேட்டில் நின்று வாளைச் சுழற்றியும் அவ்வப்பொழுது முரசுகளை ஒலித்தும் பயிற்சி யளித்துக் கொண்டிருந்தான். வளவேகங்கையின் மேற்குப் புறத்தில் வடகோடியிலிருந்த இரண்டு பிரிவுகளுக்கு ரவிதேவனும் காலனும் பயிற்சியளித்துக் கொண்டிருந்ததன்றி தாங்களே ஒருவருக்கொரு வர் போரிட்டுத் தாக்கும் முறைகளைக் கற்பித்தும் கொண்டிருந் தார்கள்.

இப்படி துக்க நாட்கள் பத்திலும் வீரர்கள் அணிவகுப்பும், போர் சன்னத்தமும் நடந்து கொண்டிருந்ததால் துக்கங்களும் வீணாக வில்லையென்பதை விஜயன் உணர்ந்து கொண்டான். பத்து நாட்கள் முடிந்து பதினோராம் நாள் பொழுது விடிந்ததும் விஜயன் மாளிகையிலிருந்து கிளம்பி வளவே கங்கைக்குச் சென்று நீராடினான். அங்கிருந்தே ஈர ஆடையுடன் சமந்தகூட மலையின் திசையை நோக்கி ஸ்ரீபாதத்தை மனத்தால் வணங்கவும் செய்தான். ''உலகத்தில் போரை அழிக்க வந்த புத்த பிரானே! போரை நான் விரும்பவில்லை. சோழர் ஆதிக்கத்தால் நான் போரிட வேண்டிய நிலைக்கு வந்திருக்கிறேன். போர் முடிந்ததும் சிங்களம் விடுதலை யடைந்ததும் இங்கு உனது மகா சித்தாந்தமே நிலவும். போதிமரச் செடிகளை வளர்ப்பேன். தாக பசுக்களையும் நிர்மாணிப்பேன். இருப்பதைச் செப்பனிடுவேன், இல்லாதவற்றுக்கு வித்திடுவேன். இது சத்தியம்'' என்றான்.

zeevaa

அவன் சொன்னதை ஆமோதிப்பதுபோல் வளவே கங்கையின் சிற்றலைகளும் கரையிலுள்ள கற்களில் தாளம் போட்டன.

கங்கையில் நீராடிப் புத்துடையணிந்து சிவகோகர்ண ஸ்வாமிகளின் பூஜையில் விஜயன் கலந்து கொண்டான். பூஜையை அடுத்து சுவாமிகளே போர்ப்பேச்சை எடுத்தார். பூஜைப் பெட்டியிலிருந்த சுவாமிக்குக் கற்பூரத்தைக் காட்டிக் கொண்டே, ''பத்து நாட்கள் ஆகிவிட்டன மன்னவா! இனி படையெடுக்க லாமே!'' என்று கேட்டார்.

சுவாமிகள் பாதி நினைவு போரிலும், பாதி நினைவு கற்பூரம் காட்டுவதிலுமிருப்பதை உணர்ந்த விஜயன், ''சுவாமி! பூஜை முடியட்டுமே!'' என்றான்.

''பூஜை முடியாமல் எங்கே போகிறது? இங்குள்ள ஸ்படிகலிகங்கம் பூஜைப் பெட்டியிலிருந்து தப்பிவிட முடியாது'' என்ற சிவகோகர்ண ஸ்வாமிகள், ''தர்மரே! இந்தக் கற்பூரார்த்தியை மூன்று முறை எடும். அர்த்தரே, நீர் மணியடியும். காமரே, பூஜாதிரவ்யங்களைச் சற்று ஒன்று சேரும். மோக்ஷரே, அந்தக் கூடையிலிருந்து புஷ்பங்களை எடுத்துப் போடும்'' என்று உத்தரவிட, சீடர்கள் அந்தந்தப் பணிகளில் ஈடுபடவே, பூஜைப் பெட்டியி லிருந்து திரும்பி உட்கார்ந்து கொண்ட சுவாமிகள், ''விஜயா! இன்று நாள் நல்ல நாள். இன்று போருக்குப் புறப்படச் சங்கல்பம் செய்து கொள். வெற்றியைத் தரும் சண்டி ஹோமத்தை இன்றே துவங்கி விடுகிறேன்'' என்று கூறினார்.

பூஜையிலிருந்து சற்று எட்ட நின்ற பிக்கு, சுவாமிகள் போர் ஆசையைப் பார்த்துப் புன்முறுவல் செய்து, ''சுவாமி! இந்த ஹோமங்களெல்லாம் எங்களுக்குக் கிடையாது'' என்றார்.

''நல்லது; எங்கிருந்து கிடைத்தால் என்ன?'' என்றார் சுவாமி கள்.

zeevaa

''கொடுப்பவரும் கொடுப்பதற்குப் பாத்திரமுள்ளவராயிருக்க வேண்டும். வாங்குபவரும் சத்பாத்திரமாயிருக்க வேண்டும்'' என்றார் பிக்கு.

''இரண்டு பாத்திரங்களும் சரியாயிருந்ததால்தான் சிங்கள மன்னன் கலிங்கத்திலிருந்து உயிரோடு வந்திருக்கிறான்'' என்று சுவாமிகள் அறிவித்தார். ''சரி சரி. வீண் பேச்சு எதற்கு? போர் ஏற்பாடுகளைக் கவனிப்போம். விஜயா! இன்றே ஒரு படைப் பிரிவு உன் அரண்மனைக்கு முன்பு சித்தமாகட்டும் புறப்பட'' என்றார்.

அங்கிருந்து அந்தப்புரத்திற்குப் புறப்பட்ட விஜயபாகுவிடம் ராணிகளுக்குக் கொடுக்கக் குங்குமம் கொடுத்தார். மன்னர் வரப்போகிறான் என்பதை முன்னதாக அறிந்து மூன்று ராணிகளும் தங்கள் மணவாளனை வசீகரிக்க. பார்த்துப் பார்த்துச் சிங்காரம் செய்துகொண்டார்கள். அவன் அந்தப்புரத்தில் நுழைந்ததுமே அவனை முன்வந்து வரவேற்று வணங்கி நின்ற அவர்களை உற்று நோக்கினான் விஜயன். அவர்கள் வதனங்கள் நிலத்தை நோக்கி யிருந்தாலும் ஒவ்வொருவர் முகமும் தான் அருகில் சென்ற போது சிறிது உயர்ந்து கண்களால் அன்பைக் கொட்ட முயன்றதை உணர்ந்த சிங்கள இளவல் அவர்களிடம் ஏற்பட்ட வேட்கையைக் கடமை உணர்ச்சியால் மறைத்துக் கொண்டு, ''ராணிகளே! இன்னும் சற்று நேரத்தில் படைகள் நமது அரண்மனைச் சதுக்கத்தில் திரண்டு நிற்கும். அவை போருக்குப் புறப்படும் சன்னத்தை நீங்கள் பார்க்கலாம். இரவில் உங்களைச் சந்திக்கிறேன்'' என்று கூறிவிட்டு, அவர்கள் முகங்களை உயர்த்தி, சுவாமிகள் கொடுத்த குங்குமத்தை ஒவ்வொருவர் நெற்றியிலும் இட்டான். பிறகு ஒவ்வொருத்தியின் இதழ்களையும் லேசாகத்தனது இதழ்களால் தொட்டுவிட்டுச் சென்றான்.

அவன் வந்ததும் உதயகாலத் தாமரைகளாக விகசித்த அந்த ராணிகளின் முகங்கள் அவன் வந்த வேகத்தில் திரும்பிச் சென்றதும்

zeevaa

அந்தித் தாமரைகளாக மாறிவிடவே, மூவரும் ஒருவரையொருவர் வேகத்துடன் பார்த்துக் கொண்டு அவரவர் அறைகளுக்குத் திரும்ப எத்தனித்த சமயத்தில் வெளியில் போர் முரசு பலமாக ஒலித்தது. ஊது குழல்கள் அலறின. புரவிகளின் குளம்புகளால் அரண்மனைச் சதுக்கம் அதிர்ந்தது. மூன்று ராணிகளும் அந்தப்புர முகப்புச் சுவர்மீது சாய்ந்தவண்ணம் வெளியே கவனித்தார்கள். அக்கம் பக்கத்தில் மூன்று மலர்களைப் போல் நின்ற அந்த மகாராணிகளை நோக்கிப் படைகள் தலை தாழ்ந்தன. அடுத்து இன்னொரு முரசு முழங்க விஜயன் தனது படைத்தலைவர்களுடன் முழுப் போர்க் கோலத்தில் தனது கரிய புரவியின் மீது கம்பீரமாகச் சதுக்கத்திற்குள் நுழைந்தான். அவன் நுழைந்ததும் ஆயிரக்கணக்கான வாட்களும் வேல்களும் உயர்ந்தன. ஜெயவிஜயீபவ என்ற கோஷம் வானைப் பிளந்தது.

மன்னனைத் தொடர்ந்து மூர்சமதும் மற்றப் படைத்தலைவர் களும் வந்ததும் சிவகோகர்ண சுவாமிகளும் தமது சீடர்களுடன் தோன்றி மன்னனுக்கு ஆசி கூறினார். அவருக்குத் தலை வணங்கிய விஜயன், முடிவாகப் பிக்குவின் முன்பு தனது வாளைத் தாழ்த்தினான். பிக்குவின் கண்கள் ஜொலித்துக்கொண்டிருந்தன, தான் போர்களில் பங்குகொண்ட காலத்தை நினைத்துப் பெருமிதம் எய்தினார். பிறகு அவர் தனது கையை உயரத் தூக்கி அசைத்ததும் படைகள் வரிசையாக அணிவகுத்து மன்னன் முன்பு வளைந்து வளைந்து வாட்களைத் தாழ்த்திச் சென்றன. கடைசியாக நுவரகிரி, ஜேட்டதிஸ்ஸன், ரவிதேவன், காலன் முதலிய படைத்தலைவர்கள் மன்னனை வணங்கியதும் மன்னன் சொன்னான்: "நுவரகிரி! இன்று ஒரு சிறு பிரிவை முன்னால் சம்பிரதாயத்துக்கு நகர்த்தி விடுங்கள். நாளை எல்லாப் பிரிவுகளும் நகரும் பல திசைகளில். இன்றிரவு எல்லோரும் அமைதியுடனிருங்கள்" என்று கூறி விட்டு உப்பரிகை முகப்பிலிருந்த ராணிகளைக் கவனித்தான்.

zeevaa

அணிவகுப்பெல்லாம் முடிய மாலைவரை ஆனதால் விஜயன் நேராக அந்தப்புரம் சென்றான். அங்கு மீண்டும் நீராடிவிட்டுப் புத்தாடை அணிந்து நடுக்கூடத்தில் ராணிகளுடன் உணவும் அருந்தினான், உணவு முடிந்ததும். ''நான் இன்றிரவு இளைப்பாற வேண்டும்'' என்றாள்.

''என் அறையில் இளைப்பாறலாம்'' என்றாள் லீலாவதி.

''ஏன், என் அறைக்கு என்ன? நிம்மதியாக உறங்கலாம் மன்னர்'' என்றாள் சுந்தரி.

சுடர்விழி ஏதும் சொல்லவில்லை. மௌனமே சாதித்தாள். மூன்று ராணிகளையும் அவரவர்கள் அறைக்குப் போகச் சொல்லிவிட்டு, கூடத்து மஞ்சத்திலேயே கால் நீட்டிப் படுத்தான். நேரம் ஓடியது. அன்று பூராவும் இருந்த அலுவல்களின் காரணமாக அலுப்பாக கண்களை மூடிய விஜயனுக்கு அத்தனை அலுப்பிலும் உறக்கம் வரவில்லை. மெள்ள எழுந்து ராணிகளின் அறையை நோக்கி நடந்தான். இரண்டு அறைகள் தாழிடப்பட்டிருந்ததால் சற்று அழுத்தியும் திறக்கவில்லை. கடைசி அறை திறந்திருந்ததால் கதவை மெள்ளத் திறந்து உள்ளே நுழைந்தான். உள்ளே சுடர்விழியின் இரு கைகள் அவனை அணைத்துப் பஞ்சணைக்கு அழைத்துச் சென்றன.

பஞ்சணையில் படுத்த விஜயன் கேட்டான்: ''சுடர்விழி! நீ ஏன் அறையைத் தாளிடவில்லை?'' என்று.

''நான் மகேசியாக முடியாது. உங்கள் அடிமையாகத் தான் இருக்க முடியும்'' என்றாள் சுடர்விழி.

''அடிமைதான் எசமானை இழுக்க முடியும்'' என்று விஜயன் சுடர்விழியை இழுத்துத்தனது மார்புமீது கிடத்திக் கொண்டான்.

''சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தமில்லையே!'' -சுடர்விழி இதை மெதுவாகச் சொன்னாள்.

zeevaa

''என்ன சம்பந்தமில்லை?'' விஜயன் கேட்டான்.

''அடிமை தான் எசமானை இழுக்க முடியும் என்று சொன்னீர்கள்?''

''ஆம்''

''இப்பொழுது எசமானர்தானே அடிமையை இழுக்கிறார்?''

இதைக் கேட்ட விஜயன் நகைத்தான். ''பதவி மாறி விட்டது. இப்பொழுது நான்தான் அடிமை, நீ எசமானி'' என்றான்.

அவன் கைகள் மார்பில் கிடந்த அவளை இறுகத் தழுவின. அசோக மலர்போல் செழித்த அவள் மார்பகம் அவன்மீது அழுந்திப் பரவியது. அடைக்காத அந்த அறைக் கதவை அடைக்கும் படி அரசன் உத்தரவிட்டான். கதவு அடைந்தது. உறவு வளர்ந்தது.



zeevaa

## 60. நாடு முற்படும்போது...

சுடர்விழியைத் தனது அகன்ற மார்புமீது இழுத்து இறுக அணைத்த விஜயன் அவள் அசோக மலர்கள் இரண்டும் முன்னைவிட அதிகமாகக் கடினப்பட்டாலும் தனது தழுவலின் வேகத்தால் அகன்று விட்டதையும் அவள் மூச்சுக் கூட வேகமாக வருவதையும் கவனித்து, அந்தப் பெருமூச்சு உணர்ச்சியின் வேகத்தாலா தழுவலின் காரணத்தாலா என்பதை எண்ணிப் பார்த்து, எதுவாயிருந்தாலும் இருக்கட்டும் என்று அவள் கழுத்தில் தனது இதழ்களைப் புதைத்து, ''சுடர்விழி! கதவை அடைத்துவிடு,'' என்று ரகசியமாகச் சொன்னான்.

காமவேகத்தில், கணவனை இரு கைகளாலும் தழுவி உள்ளே அழைத்த வேகத்தில், அவர் தன்னை மார்பின் மீது கிடத்தி இறுக்கிய இன்ப வேதனையால் ஏற்பட்ட உணர்ச்சிகளின் சுழற்சியில், கதவுகள் திறந்தபடியே கிடப்பதை அவன் கழுத்தில் சொன்ன ரகசியத்துக்குப் பின்பே உணர்ந்த சுடர்விழி ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காக, ''இந்த அந்தப்புரத்தில் இந்த நேரத்தில் யார் வருவார்கள்?'' என்று பதில் சொன்னாள்.

விஜயன் அவள் கழுத்தில் புதைந்திருந்த உதடுகளை லேசாகத் திறந்து, ''உன் சக்களத்திகள் வந்தால்?'' என்று கேட்டு மெதுவாக நகைத்தான்.

கேள்வியின்போது அவனது உதடுகள் பிரிந்து மூடியதால் கழுத்தில் ஏற்பட்ட உணர்ச்சியாலும் சிரித்தபோது ஏற்பட்ட ஒலி உடலெங்கும் பரவி உன்மத்தத்தை விளைவித்ததாலும் பெரிதும்

zeevaa



zeevaa

சங்கடத்துக்குள்ளான சுடர்விழி. அந்த நிலையிலிருந்து சற்றே விடுபட அவன் பிணைப்பிலிருந்து எழுந்திருந்து பஞ்சணையை விட்டிறங்கி, கதவை நோக்கிச் சென்றாள். அப்படிச் சென்றபோது அவள் நடையில் பின்னெழில்களிலிருந்த அசைவையும், அழகுடன் லயம் தப்பாமல் இலங்கிய நுண்ணிடையையும், லேசாக சரிந்த குழலையும் மேலாடையில் ஒரு பகுதியையும் கவனித்த விஜயன், தனது எண்ணத்தையும்அவள் பின்னாலேயே ஓட விட்டான். அதுவரை அடைக்காதிருந்த கதவை அடைத்துவிட்டு அதன் மீதே சாய்ந்து திரும்பி நின்றாள் சுடர்விழி. அப்படிச் சாய்ந்த வண்ணமே கணவனை நோக்கிய அந்தக் காரிகையின் பார்வையில் எத்தனை வேட்கை இருந்தது. இதழ்கள் லேசாக ஒரு புறம் இழுக்கப்பட்ட வெட்கப் புன்முறுவலில் எத்தனை ஆசையிருந்தது; சற்றே சரிந்த ஆடை எத்தனை வரவேற்பை தனக்கு அளித்தது என்பதையெல்லாம் நினைத்து நிலைகலங்கிய விஜயன், "ஏன் அங்கேயே நிற்கிறாய்? வா இங்கே" என்று அழைத்துப் பஞ்சணையில் எழுந்து உட்கார்ந்தான்.

அப்படியும் கதவிலிருந்து நகராது அவள் அங்கேயே நிற்கவே, "எந்தச் சமயத்திலும் விட்டுக் கொடுக்க வேண்டியதும், வேண்டுவதும். ஆண் மகனாகத்தான் இருக்க வேண்டுமா?" என்ற கேள்வியை விஜயன் எழுப்பிக்கொண்டாலும், அதை வெளிக்குக் காட்டிடாமல் பஞ்சணையிலிருந்து இறங்கிக் கதவை நோக்கி நடந்து அவளைத் தூக்கினான்.

"ஐயோ விடுங்கள்! ஏன் தூக்குகிறீர்கள்?" என்று நடித்தாள் சுடர்விழி.

அவளை தூக்கி உடலுடன் உடலுராய நிறுத்திய விஜயன், "உன்னால் நடக்க முடியவில்லை," என்றான்.

"யார் சொன்னது?" என்று கேட்டுத் திமிற முயன்றாள் சுடர்விழி.

zeevaa

''முடிந்தால் கதவைத் தாளிட்டு ஏன் வரவில்லை?'' என்று வினவிய விஜயன் அவள் தோளில் தனது தலையைப் புதைத்துக் கன்னத்துடன் கன்னத்தை இழைத்தான்.

''தாளிட்டேன் கதவை,'' முனகினாள் சுடர்விழி.

''உம்.''

''பிறகு...''

''நான் வந்து அழைக்க வேண்டுமென்று இருந்தாய்...''

''அப்படியொன்றுமில்லை''.

''தெரியும் எனக்கு உன் உள் வயணம்...''

இதைக் கேட்ட சடர்விழி நகைத்தாள் மிக இன்பமாக. அப்படி அவள் நகைத்துக் கொண்டு இருக்கும் போதே அவளைப் பஞ்சணைக்கு தூக்கிப் போய்ப் படுக்க வைத்தான் மெதுவாக. செழித்த புஷ்பங்களைத் தாங்கிய செடியைப் போல் அவள் அரைகுறையாகச் சாய்ந்து கிடந்தாள். அவள் பட்டாடை கால்களிலும் மார்பிலும் ஒதுங்கிக் கிடந்ததால் அசோக வனத்தில் முதன்முதலாகத் தான் கண்டபடியே அவள் இருந்ததை விஜயபாகு கவனித்தான். அப்பொழுது அவள் தரித்திரிந்த மரவுரி ஆடை, போதும் போதாததுமாகச் செவ்விய அவள் காலின் மேல்பகுதியையும் மார்புகளின் விளிம்புகளையும் காட்டி வன தேவதையாக அவள் காட்சியளித்த நிலையை எண்ணிப் பார்த்தான். அப்பொழுது அவள் கையில் தாங்கிய பந்தத்தின் ஒளியில் அவள் தொடைகள் தங்கம் போல் பிரகாசித்ததையும் அவள் உலோக விக்ரகம் போல் தெரிந்ததையும் திரும்பவும் மனத்துக்குள் கொண்டு வந்தான். இந்தப் பட்டாடையும் அந்த மரவுரியின் நிலைக்கு வந்து இவள் வசீகரத்தை லேசாகப் புலப்படுத்தினாலும் மரவுரியின் அழகு பட்டாடையில் இல்லையென நினைத்தான் சிங்கள இளவல்.

zeevaa

அதைச் சொல்லவும் செய்தான்: ''சுடர்விழி! இன்று நீ அன்று போல் இல்லை'' என்று.

அவள் மூடிய கண்களைத் திறக்காமல் அவன் கைகளிலொன்றை எடுத்துத் தனது வயிற்றின்மீது வைத்துக் கொண்டு, ''என்றுபோல்?'' என்று வினவினாள்.

வயிற்றில் வைத்த கை சற்றுப் புரண்டது ''அசோக வனத்தில் இருந்தது போல்,'' என்றான்.

''இப்பொழுது என்ன வித்தியாசம். இது நாடு.'' முணுமுணுத்தாள் சுடர்விழி.

''அது காடு. இயற்கை நிரம்பியது. இது நாடு, செயற்கையில் திகழ்வது.''

அவள் மெள்ளப் பங்கயக் கண்களை விழித்தாள். ''காடாக இருந்தாலும் நாடாயிருந்தாலும் நடைமுறை ஒன்றுதானே?'' என்று அவள் கேட்டாள்.

''ஆம். இரண்டும் கரடுமுரடானதுதான்,'' என்றான் அவன்.

''கரடும் முரடும் தேவைதானே?'' என்றாள் சுடர்விழி.

''ஆம்.'' என்ற விஜயன், ''இன்பமும் வேதனையும் கூட ஒன்றுதான்'' என்று கூறிவிட்டு அவள் இதழ்களை நோக்கிக் குனிந்தான்.

அப்படிக் குனிந்த அவன் இதழ்கள் அவள் இதழ்களைக் கவ்வின. அவள் கைகளிரண்டும் எழுந்து அவன் கழுத்தை வளைத்தன. இருவரிடமும் மென்மை அகன்றது. வன்மை துளிர்ந்தது. இன்பமும் வேதனையும் கலந்து மாறி மாறித் தொடர்ந்தது. உச்ச நிலையைச் சிருஷ்டித்தன.

zeevaa

நேரம் ஓடியது தெரியவில்லை. தெரிந்தபோது சுடர்விழிக்குச் சுரணை இல்லை. அரண்மனைக்கு வெளியே தூரி வாத்யங்கள் முழங்கின. பிறகே சுடர்விழி விழித்தாள். அவள் விழித்தபோது அவன் அருகிலில்லை. சாளரத்தின் வழியாகக் காலைக் கதிரவனின் கதிர்கள் உள்ளே நுழைந்திருந்தன. மெள்ள எழுந்திருந்த சுடர்விழி சாளரத்தின் வழியாக வெளியே எட்டிப் பார்த்தாள். 'அரண்மனை சதுக்கத்தில்' படைப்பிரிவுகள் அணிவகுத்துச் சென்று கொண்டி ருந்தன. அன்று அவள் கண்டது காலாட்படைப் பிரிவு. வீரர்களின் ஒரே சீரான நடையும், வேல்களை உயர்த்திப் பிடித்த வேகமும், வாட்கள் ஆடியதால் சூரியரச்மியில் அவை எதிரொளி கொடுத்து மின்னியதையும் கண்டு பிரமித்து சாளரத்திலேயே நின்றாள் நீண்ட நேரம்.

அப்படி அவள் அணிவகுப்பைப் பார்த்துக்கொண்டிருந்த சமயத்தில் இருபுரவிகள் அந்தச் சதுக்கத்தில் நுழைந்ததையும் கரிய புரவியில் விஜயனும், பழுப்பு நிறப்புரவியில் மூர்சமதும் வந்ததையும், இருவரும் போர்க் கோலம் பூண்டிருந்ததையும் கவனித்தாள். வாளிப்பான சரீரத்துடன் விஜயனும், ராக்ஷஸ சரீரத்துடனும் வழுக்கைத் தலையுடனும், தாடி மீசைகளுடனும் மூர்சமதும் வந்ததும் "இப்படித்தான் அசோகவனத்திலும் இருவரும் நுழைந்திருக்க வேண்டும்," என்று நினைத்து பரவச மடைந்தவள், "இவர் எழுந்து போகும்போது என்னை ஏன் எழுப்பவில்லை? இப்பொழுது பார்ப்பதற்கு நான் எத்தனை கேவலமாயிருக்கிறேன்?" என்றும் எண்ணி வெட்கத்தின் சாயையை முகத்தில் படரவிட்டுக் கொண்டாள்.

விஜயனும் மூர்சமதும் அணிவகுப்பைப் பார்வையிட வந்ததை அந்தப்புர முகப்புத் தாழ்வரையில் சாய்ந்து பார்த்துக் கொண்டிருந்த மற்ற இருராணிகளில் திரிலோக சுந்தரியின் எண்ணமும் கடந்த நாட்களுக்குப் பறந்தது. ரிஷிகுல்யா நதி தீரத்தில் அந்த இருவரும்

zeevaa

படகு ஏறித்தன்னைத் தொடர்ந்ததை எண்ணி, "அன்றும் இதே கதைதான். இவர்கள் இரட்டையர்களாகப் பிறந்திருக்க வேண்டும்." என்று எண்ணினாள் கலிங்கன் மகள். எந்தச் சமயத்திலும் எந்தக் காலத்திலும் விஜயன் மூர்சமதை விடாததை எண்ணிப் பார்த்த சுந்தரி, "மூன்று மனைவிகளிருந்தாலும் மூர்சமதிடம் தான் அவருக்குப் பற்றுதலும் பிணைப்பும்," என்று சொல்லிக் கொண்டாள்.

சுந்தரி தீர்க்க சிந்தனையிலிருப்பதைக் கவனித்த லீலாவதி கேட்டாள். "என்ன சிந்திக்கிறாய் சுந்தரி" -என்று.

"அவர்கள் ஒற்றுமையைப் பற்றிச் சிந்திக்கிறேன்," என்று சுந்தரி சொன்னாள்.

"மெய்க்காவலனிடம் எசமானுக்குப் பிடிப்பு இருப்பது சகஜம்தானே?" என்று லீலாவதி கேட்டாள்.

"இது எசமான் அடிமை சம்பந்தத்துக்கு மேற்பட்டது."

"எப்படித் தெரியும் உனக்கு?"

"மூர்சமதுக்கு நான் பணிவிடை செய்திருக்கிறேன்."

"அரசகுமாரியான நீயா?"

"ஆம்."

"ஏன்?"

"அவர் கட்டளையிட்டார். நாங்கள் கலிங்கத்திலிருந்து புறப்படும் கப்பலில் நடந்தது. அப்பொழுது மூர்சமத் காயப்பட்டு மரண வேதனையிலிருந்தான்."

மேற்கொண்டு லீலாவதி எதையும் கேட்கவில்லையென்றாலும் சுந்தரியே சொன்னாள்: "நீயும் நானும் மகிஷிகளாகலாம், சுடர்விழி

சாதாரண ராணியாகலாம். ஆனால் நம் அனைவருக்கும் மேலாக அவர் நேசிப்பது மூர்சமதைதான்'' என்று.

அவர்கள் இவ்விதம் பேசிக்கொண்டிருந்த சமயத்தில் தலையை உயர்த்திய விஜயன் அந்த இருவரையும் கண்டு சற்று அப்பாலிருந்த சாளரத்தில் சரிந்து இணைந்து நின்று கொண்டிருந்த சுடர் விழியையும் கவனித்தான். பிறகு மூர்சமதிடம் ஏதோ சொன்னான். அவன் தங்களைப் பற்றித்தான் பேசுகிறான் என்று நினைத்துச் சீற்றம் கொண்ட இரு ராணிகளும் உள்ளே திரும்ப முயன்ற சமயத்தில் முரசுகள் முழங்கின. மூர்சமத் அணிவகுத்த படைகளுக்குள்ளே தனது புரவியைச் செலுத்தினான். விஜயன் அவனைத் தொடராமல் புரவியைத் திருப்பி, தனது வாளை ஓங்கிச் சைகை செய்துவிட்டு அரண்மனையின் முன் சதுக்கத்திலிருந்து கிளம்பி உள்ளே வந்தான்.

தங்களை அவன் பார்த்ததும் பாராததுமாகப் புரவியைத் திருப்பிக் கொண்டு வந்ததைப் பார்த்த இரு ராணிகளும் உள்ளே வேகமாக வந்தவர்கள், மன்னன் வராததைக் கவனித்ததும் மன்னர் இருக்குமிடத்தை அறிந்து வரப் பணிமக்களை அனுப்பினார்கள். ''ஏதோ அவசரச் செய்தி வந்திருக்கிறதாம். அதைப்பற்றி மன்னர் சுவாமிகளுடனும் படைத்தலைவவர்களுடனும் பேசிக்கொண்டி ருக்கிறார்'' என்று பணிமகள் செய்தி கொண்டு வந்தாள்.

மற்றொருத்தி சிறிது நேரத்திற்கெல்லாம் வந்து, ''உங்கள் மூவரையும் பயணத்துக்குச் சித்தமாகும்படி மன்னர் உத்தரவிட்டி ருக்கிறார்'' என்று கூறினாள்.

''எங்கு போவதற்கு?'' என்று லீலாவதி கேட்டாள்.

''எனக்குத் தெரியாது'' என்றாள் பணிமகள்.

அப்பொழுது சுடர்விழி சாளரத்தைவிட்டு வாயிற்படியில் நின்றாள். அவள் அலங்கோலத்தைப் பார்த்து மற்ற இரு ராணிகளின்

zeevaa

முகத்திலும் தீப்பொறி பறந்தது. இருவரும் அவளை நோக்கி நடந்து, "அப்படியா சமாசாரம்?" என்று ஏககாலத்தில் வினவினார்கள்.

சுடர்விழி பதில் சொல்லவில்லை. "மன்னரை இழுக்க என்ன சாகசம் புரிந்தாய்?" லீலாவதி தனியாக ஒரு கேள்வியை விடுத்தாள்.

"கதவை அடைக்கவில்லை. அடைத்த கதவுகளுக்குள் அவரால் புகமுடியவில்லை" என்ற சுடர்விழி நிலத்தை நோக்கினாள்.

"ஏன், கதவைத் தட்டினால் நாங்கள் திறக்க மாட்டோமா?" என்று சீறினாள் சுந்தரி.

"தட்டாமலே கதவொன்று திறந்திருக்கும்போது கதவை ஏன் தட்ட வேண்டும்? கணவனுக்குத் கதவடைக்கவா நாம் பிறந்திருக்கிறோம்?" என்று சுடர்விழியும் சீறிவிட்டு நீராடச் சென்றாள்.

இந்தச் சக்களத்திச் சண்டை இங்கு நடந்து கொண்டிருக்கும் போது மந்திராலோசனை மண்டபத்தில் விஜயபாகு தனது இறுதிப் போரைப் பற்றிய திட்டத்தைப் படைத் தலைவர்களுக்கு எடுத்து விளக்கிக் கொண்டிருந்தான். எதிரேயிருந்த மரமஞ்சத்தில் பெரிய சீலையொன்றை விரித்திருந்தான் சிங்கள இளவல். தனது கையிலிருந்த குறுவாளால் இடங்களைத் தொட்டுக் காட்டிப் படைகளின் முன்னேற்றப் பாதைகளையும், தாக்க வேண்டிய இடங்களையும் குறிப்பிட்டுக் கொண்டிருந்தான். "முதலில் தக்ஷிண தேசத்தைத் தாக்குவோம்" என்று மலைநாட்டைச் சுட்டிக்காட்டினான். வடக்குப் பகுதியை அவன் தக்ஷிண தேசம் என்று சுட்டிக் காட்டுவதைக் கண்டு மற்றவர்களும் பிரமித்தார்கள். அவர்கள் பிரமிப்பைக் கண்ட விஜயன், "படைத்தலைவர்களே! சற்று முன் காலத்துக்குச் செல்லுங்கள். சரித்திர நிலையையும் புரிந்து கொள்ளுங்கள். தக்கின்பாஸுன் என்று யாலிமொழியில் காண்பது

zeevaa

இந்தத் தேசத்தின் தெற்குப் பகுதியல்ல. *தலைநகருக்குத் தெற்கேயிருக்கும் நாடான மாயாராஷ்டிரம் அதாவது மலைநாடு'' என்று அறிவித்தான் ''அதை ஆதாரமாகக் கொண்டு எனது திட்டத்தைப் பாருங்கள்'' என்று சொல்லி மிக ஆபத்தான தனது திட்டத்தை விளக்கலானான் விஜயன். அந்த நேரத்தில் முந்திய இரவை மறந்தான். அவன் ஐந்து இந்திரியங்களும் எதிரே விரிந்திருந்த நாட்டுப் படத்தின் மேல் நிலைத்திருந்தன. நாடு முற்படும்போது மற்ற எதிலும் அவனுக்குக் கவலை இல்லை என்பதை மற்றவர்கள் புரிந்து கொண்டார்கள்.

---

* It is ttherefore clear that Southern Country it was so called not from its position in the island but from its situation as regards the capital" - Notes on, Ceylon Topography by Codrington.

zeevaa

# 61. நிம்மதியும் ராணிகளும்

**கா**லை அணிவகுப்பிலிருந்து திரும்பிய விஜயபாகு அவனது ராணிகள் எதிர்பார்த்தபடி அந்தப்புரத்துக்குள் நுழையாமல், அரண்மனை உப்பரிகையின் நடுக்கட்டிலிருந்த போர் ஆலோசனை அறைக்குள் நுழைந்து தனது கச்சையிலிருந்த பெரிய சீலையொன்றை எடுத்து எதிரே மூன்று யானைத் தந்தங்களின் மீது பொருத்தப்பட்டிருந்த பெரிய பலகையின் மீது விரித்து, தன்னைத் தொடர்ந்து வந்த மூர்சமதையும் மற்றப் படைத்தலைவர்களையும் பலகைக்கு எதிர்ப்புறத்தில் நிற்கப் பணித்து, சீலையில் தான் வரைந்திருந்த இலங்கைத் தேசப்படத்தின் குறிப்புகளைத் தனது குறுவாளால் சுட்டிக்காட்ட முற்பட்டான்.

"இந்தப் படத்தையும் நான் குறிப்பிட்டுள்ள இடங்களையும் நன்றாகப் பாருங்கள். நாம் இப்பொழுது இருக்கும் இந்த மகாநாகருலா இலங்கையின் தென்கோடியாயிருந்தாலும் நாட்டுப் பிரிவுகளை வரையறுத்தவர்கள் இதற்கு வடக்கேயிருக்கும் மாயாராட்டா என்ற மலைநாட்டையே தக்ஷிணதேசம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சிங்களத்தின் ஆதித்தலைநகரான அனுராதபுரத்தை வைத்தே அதற்குத் தெற்கே இருப்பதைத் தக்ஷிணதேசம் என்று அழைத்திருக்கிறார்கள். *அனுராதபுரத்துக்குத் தெற்கே முக்கால் யோஜனை தென்மேற்கிலுள்ள ஒரு கிராமத்தையே தக்ஷிண தேசத்தில் சேர்த்திருக்கிறார்கள். ஆகவே இந்தத் தென்கோடியிலிருந்து தக்ஷிண தேசம் செல்ல நாம் வடக்கே

---

* A village situated 15 miles south west of Anuradhapura is said to be in Dakin Pasun-Codrington's Ceylon Topography-Page 65.

zeevaa

போகவேண்டும். வடக்கு எப்படித் தெற்கு ஆகுமென்று கேட்காதீர்கள். அரசியல் வக்கிரத்தில், இது ஒன்று'' என்று கூறிப் புன்முறுவல் செய்தான்.

அடுத்து அவன் அனுராதபுரத்தைக் கத்தி முனையால் தொட்டுக் காட்டி., ''இந்தப் புராதனத் தலைநகரம், சிங்களர்களின் நாகரிகத்தின் சின்னம், கலை எங்கும் பரவிக் கிடக்கும் மகோன்னதப் பட்டணம், மகா நாககுலாவிலிருந்து நேர் வடக்கே இருக்கிறது. அந்தப் பகுதி நோக்கி ஒரு படை செல்லும்,'' என்று கூறி எதிரே நின்றிருந்த ஜேட்டதிஸ்ஸனை ஏறிட்டு நோக்கி; ''இந்தப் படைக்கு நீ தளபதி. முதலில் தக்ஷிண தேசத்தை அடைந்து அங்கிருந்து நேராக அனுராதபுரத்துக்குச் சென்று அதை முற்றுகையிடு. உடனடியாக அதன் கதவுகளை உடைத்து உட்புகுந்து விடாதே. ஏற்கனவே நாசப்பட்டிருக்கும் அதன் கலைச்சின்னங்கள் மேலும் சேதப் படுவதை நான் விரும்பவில்லை. முற்றுகையிட்டு எதிரிகளைப் பட்டினி போட்டு வெளியே வந்ததும் போரிடு,'' என்று உத்தர விட்டான். ஜேட்டதிஸ்ஸன் புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான்.

பிறகு ராட்சத நுவரகிரி மீது கண்களை ஓட்டிய சிங்கள மன்னன், ''நுவரகிரி! சோழர்களின் இன்றைய தலைநகர், நானே பலப்படுத்திய கோட்டைக் கொத்தளங்களை உடைய பெருநகர். புலஸ்திய நகரத்தைப் பிடிப்பதை உமது கைகளில் ஒப்படைக் கிறேன். இங்கிருந்து கடற்கரை வழியாக நீர் வடக்கிழக்கிலுள்ள* சாகாமல் கோட்டையைப் பிடித்து விட்டு, மீண்டும் கடற்கரை வழியாகவே மட்டக்களப்பைத் தாண்டி இரண்டுகாதம் சென்று மீண்டும் காடுகளால் சூழப்பட்ட புலஸ்திய நகரத்துக்கு வந்து அந்த நகரை முற்றுகையிடும்,'' என்று கூறினான்.

சிங்கள மன்னன் குறுவாளின் நுனியால் தொட்டுக் காட்டிய இடங்களை நுவரகிரி கூர்ந்து கவனித்து, ஒரே ஒரு சந்தேகம்

---

* Now Sakamam, Chagama is in Batticola (மட்டக்களப்பு) District.

zeevaa

கேட்டார். ''தாங்கள் ஏற்கனவே சொன்ன முப்புறத் தாக்குதல் திட்டத்துக்கும், ஆடுபுலியாட்டத் திட்டத்துக்கும் இந்தப் புதுத்திட்டம் பொருந்தவில்லை. தாக்குதல் இருபுறத்தில்தானே நடக்கும்?'' என்று கேட்டார்.

விஜயபாகு நுவரகிரியை நோக்கி மெதுவாகப் புன்முறுவல் செய்தான். ''நுவரகிரி! உமக்கும் ஜேட்டதிஸ்ஸனுக்கும் பணிகளைக் கொடுத்தேன். உங்களை அனுப்பிவிட்டு உங்கள் மன்னன் அந்தப்புரத்தில் உல்லாசப் பொழுது போக்குவானென்று எதிர்பார்த்தீர்களா?'' என்று புன்முறுவலின் ஊடே கேட்டான். மேலும் சொன்னான்: ''திட்டத்தில் மாறுதல் ஏதுமில்லை நுவரகிரி. நீங்கள் இருவரும் ஒருவர் வடமேற்கிலும் இன்னொருவர் வடக்கிழக்கிலும் செல்லும்போது நான் மலை நாட்டின் நடுப்பகுதியில் வந்து புத்தகாமாவைத் தாண்டிக் கிழக்குக் காடுகளில் திரும்புவேன், புலஸ்திய நகரத்தை நோக்கி, உங்கள் இருவர் படைகளும் மேற்கு கிழக்கு எனும் இரு கோடிகளில் வரும்போது எனது படை இரண்டாகப் பிரிந்து அக்கம்பக்கத்தில் நேர்வடக்கில் முன்னேறும் இப்பொழுது பாருங்கள். புலஸ்திய நகரத்தைப் புலிச்சக்கரமாக வைத்துப் புலிவட்டத்தை நோக்கிக் கீழேயிருந்து நேராக நான்கு படைப் பிரிவுகள் வருகின்றன. நன்றாக மனக்கண் முன் பாருங்கள். ஆடுபுலிக் கட்டம் தெரியும். இம்முறை முன்னேறுவது ஆடுகள் அல்ல, ஆடுகளின் உருவத்தில் சிங்கங்கள். அவற்றுக்குத் தலைமை வகித்து சிம்ஹலன் வம்சத்தில் வந்த விஜயபாகு வருகிறான் நாட்டு விடுதலைப் பாதையில். இது எனது கடைசி பலப்பரீட்சை. ஒன்று நாட்டு விடுதலை அல்லது விஜயபாகுவின் மரணம், இரண்டிலொன்று நிச்சயமாய் நடக்கும்.'' இதை மிகுந்த உணர்ச்சியுடன் சொன்னான் சிங்கள மன்னன்.

பிறகு தனது இடது முழந்தாளை எடுத்துப் பலகை மீது வைத்துப் பெருமூச்செறிந்தான். ''இந்தப் போரில் உயிர் நாசம் அதிகமாகும். அதை நான் விரும்பவில்லை. தமிழரும் நாமும் ஒன்றாக வாழ இந்த நாட்டில் இடமிருக்கிறது, வளமிருக்கிறது, வாய்ப்பு இருக்கிறது.

zeevaa

ஆனால் ஒருவர்மீது ஒருவர் ஆதிக்கம் செலுத்தி, ஒருவரை இன்னொருவர் சுரண்டி, நாசம் செய்து வாழ்வது நடக்காது. தமிழரும் நாமும் ஒருவரையொருவர் கொல்வதால் யாருக்கும் லாபமில்லை. ஆனால் மனித சரித்திரத்தில் இதைச் சிந்தித்து யாரும் பார்ப்பதில்லை. மனிதனின் சாபக்கேடு அது,'' என்ற விஜயபாகு மேற்கொண்டு படைப் பிரிவுகளைப் பற்றி விளக்கலானான். நுவரகிரியை முதலில் கேட்டான், ''உங்களுக்குப் படைப்பிரிவு எத்தனை வேண்டும்?'' என்று.

''மொத்தம் நம்மிடம் எத்தனை படைவீரர் இருக்கிறார்கள்?'' என்று வினவினார் நுவரகிரி.

இதற்குப் பதில் சிங்கள் இளவல் சொல்லவில்லை. ''இரண்டு லட்சம் பேர் இருக்கிறார்கள்!'' என்று பதில் வந்தது, அதுவரை மௌனமாயிருந்த மூர்சமதிடமிருந்து.

வியப்புத் ததும்பும் விழிகளை விஜயபாகு மூர்சமதின் மீது திருப்பினான். ''படைகள் கணக்கை நீ வைத்திருக்கிறாயா!'' என்று வியப்பு குரலிலும் துலங்கக் கேட்கவும் செய்தான்.

''அது சுமாரான கணக்குதான். மொத்தம் இரண்டு லட்சத்து முன்னூற்று ஐம்பத்தாறு. இவற்றில் யானைப் படை முன்னூற்று ஐம்பத்தாறு. புரவிப்படை ஒரு லட்சம். மீதி காலாட் படை,'' என்று விளக்கினான் மூர்சமத்.

நுவரகிரியின் கண்களும் ஜேட்டதிஸ்ஸனின் கூர்விழிகளும் ஏக காலத்தில் மூர்சமதை நோக்கின. ''மூர்சமத்! இந்தக் கணக்கை யெல்லாம் எப்பொழுது எடுத்தாய்? இதற்கெல்லாம் கணக்கு வைத்திருப்பவர் பிக்கு அல்லவா?'' என்று வினவினார் நுவரகிரி.

மூர்சமத் தனது மீசைத் தாடிக்குள்ளிருந்த வாயைச் சிறிது திறந்து பயங்கரமாய்ப் புன்முறுவல் செய்தான். ''அவசியத்தினால் கணக்கு வைத்தேன்,'' என்று கூறினான் பணிவுடனும் சற்று வெட்கத்துடனும்.

zeevaa

அவன் வெட்கப்படுவது எல்லோருக்கும் வேடிக்கையாயிருந்தது. ''மூர்சமத்! இது வெட்கப்பட வேண்டிய விஷயமல்ல!'' என்று ஜேட்டதிஸ்ஸன் சொன்னான்.

''நானாக இந்தக் கணக்கை எடுக்கவில்லை. வாட்கள் வேல்களை சித்தப்படுத்த எசமானர் உத்தரவிட்டார். அதனால் கணக்கு அவசியமாயிற்று. படைகளுக்கு வேண்டிய தளவாடங்களுக்கு மேல் ஒன்றரை மடங்கு அதிக தளவாடங்கள் இருக்கின்றன,'' என்று கூறிய மூர்சமத் வேறொன்றும் சொன்னான். ''புலஸ்திய நகரத்துக் கதவுகளைப் பிளக்கவும் ஒரு யந்திரம் தயாரித்திருக்கிறேன்,'' என்று.

ஏதும் புரியாமல் நுவரகிரி அவனை நோக்கினார். மூர்சமத் அவரை நோக்கி, ''சாளரத்துக்கு வெளியே சற்றுத் தயை செய்துபாருங்கள்,'' என்று கேட்டுக் கொண்டான். நுவரகிரி மட்டுமின்றி எல்லோருமே சாளரத்தை நோக்கி விரைந்தனர். வெளியே அணிவகுப்புச் சதுக்கத்தில் பெரிய இரண்டு வண்டிகள் நின்றிருந்தன. ஒன்றில் ஐம்பது அடி நீளத்துக்கு இரும்புப்பூண் போட்ட பெரிய அடி மரத்துண்டு காட்சியளித்தது. இன்னொன்றில் அதில் பாதி நீளத்துக்கு பெரிய அடிமரத்துண்டும் அதன் முனையில் முறம் போன்ற இரும்புக் கூடையும் இருந்தன. நுவரகிரியும் மற்றோரும் சாளரங்களை அடைந்ததும் மூர்சமத் சைகை செய்ய முதல் பெருமரத் துண்டு நான்கு யானைகளால் தூக்கப்பட்டு விரைந்து முன்னே சென்றது. இன்னொரு வண்டியிலிருந்து மரம் சரேலென்று ஏற்றம் போல் ஒருபுறம் சாய்க்கப்பட்டதும் இரும்பு முறத்திலிருந்த பெரும்கல்லொன்று அதிவேகத்துடன் ஆகாயத்தை நோக்கி வீசப்பட்டது.

''முற்றுகை நீடித்தால் இம்மாதிரி கற்கள் நூற்றுக்கணக்கில் புலஸ்திய நகரக் கோட்டைக்குள் வீசப்படும். யானைகள் மரத்தால் கதவுகளைத் தாக்கும், பிளக்கும்,'' என்று மூர்சமத் விளக்கினான்.

''இவற்றை எப்பொழுது தயாரித்தாய்? இந்த யோசனை உனக்கு எப்படி வந்தது?'' என்று வியப்புடன் கேட்டான் விஜயன்.

zeevaa

''தமிழர்களிடமிருந்து கற்றேன். இதெல்லாம் பழந்தமிழர் போர் முறை,'' என்று கூறினான்.

விஜயன் மூர்சமதின் தோள்மீது கையைப் போட்டுக் கொண்டான். ''சமத்! நீ இல்லாமல் நான் என்ன செய்வேன்?'' என்று அன்புடன் பேசினான். பிறகு நுவரகிரியை நோக்கி, ''நுவரகிரி! உங்களுடன் முப்பதினாயிரம் புரவி வீரரும், இருபதாயிரம் காலாட்களும் வரட்டும். அதே மாதிரி ஜேட்டதிஸ்ஸனும் அழைத்துச் செல்லட்டும். மீதிப்படையில் இங்கு பாதியைப் பிக்குவுக்கு வைத்துவிட்டு நான் வருகிறேன். இங்கிருந்து சிங்கக் கோட்டைக்குப் போய் அங்கிருந்து புலஸ்திய நகரம் வருகிறேன்,'' என்று கூறினான்.

பிறகு அங்கிருந்து அந்தப்புரம் சென்று ராணிகள் மூவரையும் அழைத்து, ''சித்தமாகி விட்டீர்களா?'' என்று வினவினான்.

''எதற்கு?'' லீலாவதி கேட்டாள்.

''தம்பலகாமாக் கோட்டைக்குப் போக,'' என்றான் விஜயன். அவன் சொல்லில் அன்போ ஆர்வமோ தென்படவில்லை. பேச்சு ஏதோ கட்டளை போல் தெரிந்தது.

''தம்பலகாமம் போய்?'' திரிலோகசுந்தரி கேட்டாள்.

''போர் முடியும் வரையில் நிம்மதியாய் இருக்க'' என்றான் விஜயன்.

''நீங்களில்லாமல் நாங்கள் எப்படி நிம்மதியாய் வாழ முடியும்? எங்களையும் போருக்கு அழைத்துக் கொண்டு போனால் என்ன?'' என்று சுடர்விழி வினவினாள்.

''எனக்கு நிம்மதியிருக்காது,'' என்று விஜயன் பெரிதாக நகைத்துவிட்டு அங்கிருந்து வெளியேறினான். அதற்குப் பிறகு மூன்று ராணிகளும் அவனைப் பல நாட்கள் பார்க்கவில்லை. அன்றைய முறைப்படி பிரிக்கப்பட்ட விஜயன் படை முப்புறத்திலும் நிலம் அதிர முன்னேறியது. படைகள் நகருமுன்பு முக்கியமான சில

zeevaa

உத்தரவுகளை இட்டான் விஜயன். சூ-சின்னுக்கும், இட்ட உத்தரவுகள் அவன் தீர்க்கதரிசனத்துக்குச் சான்றாக அமைந்தன. ''காலே துறைமுகத்திலுள்ள ஐந்து மரக்கலங்களையும் போர்க் கலங்களாக அமைத்து விடுங்கள். அவற்றை மகாதித்தாவை நோக்கி நகர்த்துங்கள்,'' என்ற உத்தரவைக் காதில் வாங்கிய சிற்பி தனது வெறிச் சிரிப்பை உதிரவிட்டான். சூ-சின்னின் முகத்தில் கபடங்கலந்த சாயையொன்று படர்ந்தது.




zeevaa

## 62. ரத்தப் பாதை

கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டு காலமாக கலிங்கத்திலும் ஹண்டுமானிலும் பயணம் செய்து, கடற்படை கட்ட சிற்பியையும், சூலதன மகாரத்தினத்தையும், கலிங்க மன்னன் குலரத்தினமான திரிலோகசுந்தரியையும் அடைந்து திரும்பிய விஜயபாகு இம்முறை சோழர்களை முறியடித்து நாட்டுக்கு விடுதலை பெறவேண்டுமென்ற திட சித்தத்துடனிருந்ததால், யாருக்கும் எதற்கும் மசியாமலும் மற்ற உணர்ச்சிகளுக்கும் இடம் கொடாமலும் முடிவுகளைத் தன்னிஷ்டப்படியே செய்தான். ஆகவே, ராணிகள் மூவரும் அவனைப் பார்க்கப் பலமுறை முயன்றும் அதற்குச் சிங்கள இளவல் இடம் கொடுக்கவில்லை. ஒவ்வொரு முறையும் ராணிகள் கணவனைப் பார்க்க அனுமதி கேட்டபோது பதிலை மூர்சமதே சொன்னான். "மன்னர் போர் ஏற்பாடுகளில் முனைந்திருக்கிறார். இப்பொழுது பார்க்கச் சௌகரியப்படாது," என்று. ஒருமுறை லீலாவதி அவனை மீறி விஜயன் அறைக்குள் நுழைய முயன்றபோது வாயிற்படியின் நட்டநடுவில் நின்ற மூர்சமத், "மகேசி! நீங்கள் போய்விடுவது உங்களுக்கு நல்லது," என்று சற்று முரட்டுத்தனமாகவே சொன்னான்.

"நீ யார் என்னைத் தடை செய்ய, எனக்கு உத்தரவிட?" என்று ராஜபுத்ரப் பெண்ணான லீலாவதி உக்கிரத்துடன் கேட்டாள்.

"மன்னரின் மெய்க்காவலன்," என்றான் மூர்சமத். அவன் குரலில் பெருமையுமிருந்தது, யாரும் தன் உத்தரவை மீறி உள்ளே நுழைய முடியாதென்ற கண்டிப்பும் அதிகாரமும் இருந்தது.

zeevaa




zeevaa

சிலையென நின்றாள் லீலாவதி சில நிமிடங்கள். பிறகு சொன்னாள், "நான் மகேசி, மகாராணி," என்று.

"ஆம்." சற்று வெறுப்புடன் வந்தது மூர்சமதின் பதில்.

"உன்னைச் சிறை செய்யும்படி நான் உத்தரவிட முடியும்," சீற்றத்துடன் சொன்னாள் லீலாவதி.

"முடியும்...."

"என்ன மழுப்புகிறாய்? சொல்லவேண்டியதைத் தெளிவாகச் சொல்."

"நீங்கள் உத்தரவிட முடியும். நிறைவேற்ற முடியாது."

"ஏன்?"

"மன்னருக்கு அடுத்தபடி சிறை செய்ய நான் உத்தர விட்டால்தான் வீரர்கள் செயல்படுவார்கள்," என்ற மூர்சமத் மேலும் சொன்னான்: "மகேசி! சீக்கிரம் அந்தப்புரம் சென்று பயணத்துக்குச் சித்தம் செய்து கொள்ளுங்கள். இன்று மாலை நீங்கள் தம்பலகாமக் கோட்டைக்குப் போகிறீர்கள்?" என்று. அவன் குரலில் சற்று மூர்க்கத்தனம் இருந்தது.

"நான் போக மறுத்தால்?" என்று கேட்டாள் லீலாவதி, மூர்சமதின் முரட்டுத்தனத்தைக் கண்டு வியப்படைந்து.

"மன்னர் உத்தரவை மீறுபவர்களுக்குச் செய்யப்படும் மரியாதை உங்களுக்கும் செய்யப்படும். உங்களை அழைத்துச் செல்லப் புரவிகள் கட்டிய ரதம் சித்தமாயிருக்கிறது. இன்று பிற்பகல் உங்களை அழைத்துச் செல்ல வீரர்கள் வருவார்கள்," என்று திட்டவட்டமாகச் சொன்னான் மூர்சமத்.

அதற்குமேல் அங்கு நிற்கவில்லை லீலாவதி. கோபத்துடன் காலைத் தரையில் உதைத்துவிட்டு, "நான் மன்னரைக் கவனித்துக் கொள்கிறேன்" என்று அச்சுறுத்தி விட்டுச் சென்றாள்.

zeevaa

இந்த உரையாடலையெல்லாம் அறைக்குள்ளிருந்தே கேட்டுக் கொண்டிருந்த விஜயன் மெதுவாக நகைத்தான். மூர்சமத் உள்ளே நுழைந்ததும், ''சமத்! நீதான் சரியான மெய்க்காவலன். திட்டப்படி ராணிகளைப் பிற்பகலில் தம்பலமாகக் கோட்டைக்கு அனுப்பிவிடு'' என்றான்.

அதை முன்னரே தீர்மானித்த மூர்சமத், ''சித்தம் மகாராஜா,'' என்று கூறியவன், பிற்பகலில் பத்து வீரர்களுடன் அந்தப்புரத்துக்குச் சென்று, ''ராணிகளுக்கு ரதம் சித்தமாயிருக்கிறது'' என்று அறிவித்தான்.

லீலாவதி சற்று முரண்டினாள். ஆனால் திரிலோகசுந்தரி, ''லீலாவதி! கணவன் கட்டளைப்படி நடப்பது மரபு. ராஜபுத்ர மரபும் அதுதான். அதை மீறுவதும் நீதியல்ல. பதிவிரதைகளின் வழியு மல்ல,'' என்று சொல்லிவிட்டு முன்னால் நடந்தாள்.

அடுத்து சுடர்விழியும், கடைசியாக லீலாவதியும் வெளியேறி யதும் சில நாழிகைகளுக்கெல்லாம் ராணிகளைத் தாங்கிய மூடு ரதம் தம்பலகாமாவை நோக்கிப் பறந்தது. அந்த ரதம் போவதைத் தனது அறை சாளரத்திலிருந்து கவனித்த விஜயன், ''ஒரு தடை தீர்ந்தது''என்று சொல்லிக் கொண்டான். இம்முறை வெற்றி காண, நாட்டு விடுதலை காண, கல்லாகிவிட்ட அவன் மனம் ராணிகளைப் பிரிந்ததால் சிறிதும் கலங்கவில்லை.

அன்றிரவே மற்ற ஏற்பாடுகளை முடிப்பதிலும் முனைந்து சிற்பியையும் சூ-சின்னையும் அழைத்து ஐந்து மரக்கலங்களைப் போர்க்கலங்களாக மாற்ற உத்தரவிட்டு, ''காலேயிலிருந்து போர்க்கலங்கள் ஐந்தும் மகாதித்தாவின் முன் நடமாடிக் காவல் புரியட்டும். சோழர் போர்க் கலங்கள் வந்தால் மாலுமிகளை மகாதித்தா துறைமுகத்தில் இறங்க விடாதீர்கள். போர்க்கலங்களைப் பற்ற வைத்து விடுங்கள். சூ-சின்! கப்பல்களுக்குத் தீ வைப்பதில் நீ நிபுணன். நீ கொண்டுவந்த வாண மருந்துகளையும், வெடிகளையும்

zeevaa

நீயே மரக்கலங்களில் எடுத்துப்போ. அதை உபயோகிக்க யார் உத்தரவையும் நீ கேட்கவேண்டாம். தேவையான மாலுமிகளை நீயே திரட்டிக்கொள்,'' என்று உத்தரவிட்டு அவ்விருவரையும் அனுப்பினான்.

இப்படிக் கடல் மார்க்கத்தைச் சோழர்களுக்கு அடைத்து விட்ட விஜயபாகு அடுத்து நில மார்க்கத்தில் படைகளை ஏவினான். கிழக்குப் புறமாகக் கடலோரப் பாதையில் நுவரகிரியையும் தக்ஷணதேசம் என்ற வடக்குப் பாதையில் ஜேட்டதிஸ்ஸனையும் பிக்குவையும் அனுப்பினான். போர் விவரங்களை அவ்வப் பொழுது தனக்கு அனுப்புமாறு அந்த இரு தலைவர்களுக்கு உத்தரவும் இட்டான். ஜேட்டதிஸ்ஸனோடு அவனது உபதளபதி களையே அனுப்பிவிட்டு நுவரகிரிக்குத் துணைத் தலைவர்யார் வேண்டும் என்று வினவினான்!

''யாரும் தேவையில்லை,'' என்றார் நுவரகிரி.

மன்னன் நுவரகிரியை நோக்கி, ''நுவரகிரி! போரில் யாரும் நிலையாக இருக்கமுடியுமென்று சொல்லமுடியாது. யாரையாவது அழைத்துப் போம்,'' என்று சொன்னான்.

''என்னிடமிருக்கும் வீரரில் ஒருவனை நியமித்துக் கொள்கி றேன்,'' என்று கூறிய நுவரகிரி, ''நாளைக் காலையில் என் படைகள் நகரும்,'' என்று கூறி மன்னனுக்குத் தலை வணங்கினார்.

திட்டப்படி நுவரகிரி மறுநாள் காலை புறப்பட்டார். தனது அறைச் சாளரத்திலிருந்து நுவரகிரியின் படை அணிவகுப்பைப் பார்த்த விஜயன் பிரமித்தான். முப்பதினாயிரம் புரவி வீரர் முன்பும் இருபதினாயிரம் காலாட்கள் கொண்ட படை பின்னாலும் ஏதோ இரும்பு அரண்களைப் போல் ஒரே சீராக நகர்ந்தன. அந்தப் படைகளுக்கு முன்னால் நுவரகிரி பெரிய ராட்சதன் போல் சென்றார்.

zeevaa

ராட்சத நுவரகிரியின் முறைக்கு மாறாக, ஜேட்டதிஸ்ஸன் படை அணிவகுப்பில் சிறிது கலை இருந்தது. முப்பதாயிரம் புரவி வீரர்கள் மூன்று அணிகளாகப் பிரிக்கப் பட்டிருந்தார்கள். இருபதினாயிரம் காலாட்படை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஐந்து சைன்னியங்கள் ஏக காலத்தில் நகருவது போல் தெரிந்தன. ஜேட்டதிஸ்ஸன் தனது போருடையில் ஏதோ அரசகுமாரன் போல் விளங்கினான். படைகள் புறப்படச் சைகை செய்ததும் தனது தலையைத் திருப்பிச் சாளரத்தில் நின்ற மன்னனைப் பார்த்தவன் லேசாகச் சிரம் தாழ்த்தி, பிறகு புறப்பட்டான் படைக்கு முன்பாக. இப்படி வடகிழக்கிலும் வடமேற்கிலும் மகாநாககுலாவிலிருந்து நகர்ந்த இருபடைகளையும் அவை கண்ணுக்கு மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்த மன்னன், "மூர்சமத்! நாம் இன்னும் இரண்டு நாட்கள் கழித்துப் புறப்படுகிறோம்," என்றான். "முதலில் நாம் சிகிரியா என்ற சிங்கக் கோட்டையை நோக்கிப் போகிறோம். அதற்கு ஏற்பாடு நடக்கட்டும்" என்றான்.

அடுத்த இரண்டு நாட்களுக்குள்ளேயே நுவரகிரியைப் பற்றிக் குற்றச்சாட்டுகள் வந்தன. அவர் போகிற வழிகளிலெல்லாம் கிராமங்களைக் கொள்ளையடிப்பதாகச் செய்திகள் வந்து குவிந்தன. அதைக் கேட்ட விஜயன் மனம் கலங்கவே மூர்சமத் சுட்டிக் காட்டினான், "இது போர். இந்த மாதிரி விஷயங்களைத் தடுக்க முடியாது," என்று.

விஜயன் முகத்தில் கவலை படர்ந்தது. "கொள்ளை போராகாது," என்று கூறினான்.

மூர்சமத் பதில் சொல்லவில்லை. "ஏன் பேசாதிருக்கிறாய் சமத்?" என்று கேட்டான் விஜயன்.

"எசமான்! சோழர்கள் செய்ததைத்தானே நுவரகிரி செய்கிறார்?" என்று மெதுவாகப் பதில் சொன்னான்.

zeevaa

''நாம் சோழர்களைப் பின்பற்ற அவசியமில்லை,'' என்றான் விஜயன்.

''நாளை நமது படைகள் புறப்படட்டும். நாம் சிகிரியா என்ற சிங்ககிரிக்குப் போகிறோம்,'' என்று உத்தரவிட்ட விஜயன் அதற்கான ஏற்பாடுகளையும் செய்தான்.

அன்றிலிருந்து மூன்றாவது நாள் அவன் தம்பலகாமா கோட்டையை அடைந்தபோது மேலும் பயங்கரச் செய்திகள் கிடைத்தன. நுவரகிரி சகாமா கோட்டையை நெருங்கி விட்டதாகவும் சென்ற வழிகளிலெல்லாம் எதிரிகளை வெட்டிக் குவித்துப் புலஸ்திய நகரத்துக்கு ரத்தப் பாதையைப் போடுவதாகவும் ஒற்றர்கள் செய்தி கொண்டு வந்தார்கள். *அதைக் கேட்ட விஜயன் நுவரகிரிக்கு ஓலை எழுதினான். அவசியமான அளவுக்குமேல் சேதத்தை விளைவிக்காமல் முறையுடன் படையெடுப்பை நடத்தும்படி உத்தரவு அனுப்பினான்.

அந்த உத்தரவைப் படித்த நுவரகிரி ராட்சதச் சிரிப்பாகச் சிரித்தார். ''எனக்கு ஒரு முறைதான் தெரியும். அது போர் முறை,'' என்று கூறினார் இடி இடியென்ற நகைப்பின் ஊடே ''சகாமாவின் சுவர்களை நொறுக்கித் தள்ளுங்கள். அவசியமானால் கதவுகளுக்குத் தீயும் வையுங்கள்,'' என்று அவர் இட்ட உத்தரவில் குதூகலம் பலமாயிருந்தது.

அடுத்த இரண்டாவது நாள் சகாமா வீழ்ந்தது. ரத்தம் தோய்ந்த உருவிய வாளை ஓங்கிப் பிடித்த வண்ணம் நுவரகிரி சகாமாவுக்குள் நுழைந்தார். அந்தக் கோட்டையின் நட்டநடுவிலிருந்த மாளிகையை பாசறையாக்கிக் கொண்ட நுவரகிரி அந்த நகரத்திலுள்ள ஜங்கம சொத்துக்களை, அதாவது உணவுப் பொருள்கள், நகைகள்

---

* "The two Generals (Nuvaragiri and his assistant) plundered Chagama and other armed camps" - Geizer's Culavamsa - Chapter VIII - page 207.

zeevaa

இவற்றைக் கைப்பற்றும்படி தனது படைப் பிரிவை ஏவினார். மேலும் கொள்ளை, கொலை, ரத்தக்களரி ஏற்பட ரத்தப் பாதையை அமைத்துக்கொண்டே புலஸ்திய நகரப் பாதையில் ராணுவத்தைச் செலுத்தினார் நுவரகிரி.

சகாமாவைச் சூறையாடிய பிறகு கிழக்குக் கட்றகரையோரமே இருந்த பழைய பாதையில் சென்று தமது படைகளைப் புலஸ்திய நகரத்தை நோக்கி வடமேற்கில் திருப்பினார். அப்படித் திருப்பி முன்பு தாம் அமைத்திருந்த பாசறையிலிருந்து மன்னருக்கு ஓலையொன்றை அனுப்பினார். "மன்னவா? நான் இன்னும் சில தினங்களில் புலஸ்திய நகரத்துக்கு முன்பு இருப்பேன். அந்த நகரம் என் மூதாதைகளுக்குச் சொந்தமானது. பிரும்மாவின் மகன் புலஸ்திய பகவான். அவர் மகன் விச்ரவசு முனிவர். அவரது மகன் இராவணன். அந்த வம்சத்தில் நான் வந்தவன். எங்கள் சொத்தைக் கொள்ளை கொண்ட சோழர்களை நான் பழிவாங்கத் தவறமாடேன். புலஸ்திய நகரம் வெகு சீக்கிரம் எனது கைகளில் இருக்கும்," என்று எழுதியிருந்தார்.

"நூற்றுக்கு நூறு ராட்சதன்," என்றான் விஜயன் அதைப் படித்துவிட்டு.

அதற்கு மன்னன் பக்கத்திலிருந்த ரவிதேவன் பதில் சொன்னான். "சிங்களத்தின் ஆதிவாசிகள் ராக்கதர்கள், ராட்சதர்கள்தானே. நாமெல்லோரும் அந்த வழி வந்தவர்கள்தானே?" என்று கேட்டான்.

"அப்படியில்லை. நாம் சிங்களவர். இங்கு வந்து குடியேறியவர். வங்கத்திலிருந்தும் கலிங்கத்திலிருந்தும் வந்தோம்," என்றான் விஜயபாகு.

"அப்படியானால் இந்த நாடு நம்முடையது அல்லவா?" என்று ரவிதேவன் கேட்டான்.

zeevaa

''ரிஷிமூலம், நதிமூலம், சரித்திர மூலம் பார்ப்பது விவேக மல்ல,'' என்ற விஜயன் புன்முறுவல் செய்தான்.

அடுத்த நாள் மேலும் திடுக்கிடக்கூடிய செய்திகள் வந்தன, நுவரகிரியிடமிருந்து. இனித் தாமதிப்பதற்கில்லையெனத் தம்பலகாமத்திலிருந்து விஜயன் படைகளுடன் சிங்ககிரியை நோக்கிக் கிளம்பினான். அடுத்த பத்தாவது நாள் அவன் சிங்ககிரியை ஏறெடுத்துப் பார்த்துக் கொண்டு நின்றான். சிங்கக்கோட்டை பயங்கரமாக எழுந்தது. அவன் கண் முன்பு அதன் கால்களும், நகங்களும் அருகே வருவது அபாயம் என்று எச்சரித்தன.



zeevaa

# 63. சிங்ககிரி நிகழ்ச்சிகள்

அடர்த்தியான காட்டிற்கு இடையே காட்டு மரங்களின் உயரத்தை மீறிச் செங்குத்தாக நின்ற சிகிரியா என்ற சிங்ககிரியின் அருகே வந்து, படைகளுக்கு ஒரு நாள் ஓய்வு அளிக்கத் தீர்மானித்த விஜயபாகு சிங்ககிரியை ஏறெடுத்து நோக்கிக் கொண்டு நின்றவண்ணம் அதன் பழைய கால சரித்திரத்தை எண்ணிப் பார்த்தான். அந்த நெடிய பாறையின் உச்சியில் ஒரு கோட்டையை யும் கட்டிய காசியப்பனை நினைத்து இது பாவிகளுக்கே ஏற்பட்ட ஒரு பாறை என்று எண்ணியதால் சிங்களத்தின் கதியை நினைத்துப் பெருமூச்சும் விட்டான். அந்த மலைக்கோட்டைக்கு எதிரே நின்றது மாலை நேரமாதலால் அதன் வழவழத்த மஞ்சள் பாறைகள் கதிரவன் பொற்கிரணங்களில் பிரதிபலித்ததால் பொன் தகடுகள் போல் பிரகாசித்ததையும், கதிரவன் கிரணங்கள் நேரமாக ஆகச் சிவப்பு நிறம் பெற்றுவிட்டதால் அந்தச் சிவப்பு நிறக் கிரணங்கள் அதே பாறைகளைக் குருதியை உதிர்ப்பது போன்ற பிரமையை ஏற்படுத்தி விட்டதையும் பார்த்து, பொன்னாசைக்கும் குருதிப் பெருக்கத் துக்கும் நெருங்கிய சம்பந்தம் வரலாற்றில் அதிக மிருப்பதையும் நினைத்து, ''ஆசை மனிதனைப் பிசாசாக அடிக்கிறது, எந்தத் துர்ச் செய்கைக்கும் தூண்டுகிறது.'' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டான்.

மன்னன் இப்படிச் சிங்ககிரிக் கோட்டையைப் பார்த்துக் கொண்டே நிற்பதையும், தீவிர சிந்தனையில் இறங்கி விட்டதையும் கண்ட ரவிதேவன் மன்னனை அணுகி, ''மன்னவா! படைகள் மேற்கொண்டு செல்லட்டுமா? அல்லது இன்றிரவு இங்கேயே தங்கட்டுமா?'' என்று வினவினான்.

zeevaa

விஜயன் அவனைத் திரும்பிப் பார்க்காமலே சிங்ககிரியை நோக்கிய வண்ணம் சொன்னான், "இங்கேயே இன்றிரவு தங்கட்டும், இரவு இளைப்பாறிக் காலையில் புறப்படுவது நல்லது. படைகளைக் களைப்புடன் புலஸ்திய நகரத்துக்கு அழைத்துச் செல்வது சரியல்ல," என்று.

அந்த முடிவைக் கேட்டும் ரவிதேவன் நகரவில்லை, மன்னனுடைய சந்திதானத்திலிருந்து. "தாங்கள் மலை உச்சிக் கோட்டையில் தங்குகிறீர்களா?" என்று வினவினான்.

"பாவத்தின் சின்னமான இந்தக் கோட்டையில் நான் தங்கவில்லை. படைகளுடன் தங்குகிறேன்," என்றான் விஜயன்.

"அழகான கோட்டை மகாராஜா, பாதுகாப்பான கோட்டையுங் கூட," என்று ரவிதேவன் சொன்னான்.

விஜயன் சிங்ககிரியிலிருந்து தனது கண்களை நீக்கி ரவிதேவனை நோக்கித் திரும்பி, "ரவிதேவா! அழகிலிருந்து தான் ஆபத்து கிளம்புகிறது. இந்த சிங்ககிரியில் தங்கிய மகாராஜா காசியபன் தற்கொலை செய்து கொண்டான். இந்த மலைக் கோட்டையால் அவனைக் காக்க முடியவில்லை. இதில் தங்கிய எவனையும் ஏதோ ஒரு பீடை பிடிக்கிறது," என்று கூறினான்.

"அப்படியா!" என்று வாயைப் பிளந்தான் ரவிதேவன்.

"ஆம் ரவிதேவா, இந்தச் சிங்கக் கோட்டை சிங்கள மன்னர்களின் குரூரத்துக்குச் சான்றாக விளங்குகிறது," என்று கூறிய விஜயன், "இதன் கதையைக் கேள்," என்று மேலும் சிங்ககிரியின் பழைய கதையை விளக்கலானான்.

"ஐந்தாவது நூற்றாண்டில் ஏற்பட்ட தமிழர்கள் ஆதிக்கத்தால் புத்த சந்நியாசியாகிவிட்ட தாதுசேன மகாராஜா தனது குடிமக்களைப் பாதுகாக்க மீண்டும் அரியணை ஏறி, தமிழர்களால் சிதைக்கப்பட்ட மருத்துவமனைகளையும், தூபாராமாக்களையும் புதுப்பித்தார்.

zeevaa

தலை நகரத்தை மறுபடியும் பழைய கலையைக் கொண்ட புது நகரமாக அமைத்தார். குடிமக்களுக்கு ஏராளமான உதவிகளைப் புரிந்தார். இந்த நற்பணிகளோடு நின்றிருந்தால் அவர் வம்சம் க்ஷீணித்திருக்காது. ஆனால் இந்த நல்ல காரியங்களுடன் குரூரமான பணிகளும் கலந்துவிட்டன. மகாராஜாவுக்குக் காசியபன், மோகலானா என்ற இரு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் இருந்தார்கள். அந்தப் பெண்ணை தனது சகோதரி மகனும்சேனாதிபதியுமான மருமகனுக்கே திருமணம் செய்து கொடுத்தார்.

தாதுசேனன் மருமகன் சேனாதிபதி தனது மனைவியை (அரச குமாரியை) மிகக் கொடுமையாக நடத்தினான். அவளை நிர்வாணமாக நிற்கவைத்துச் சாட்டையால் அடித்தான். மகளின் பரிதாப நிலையைப் பற்றிக் கேள்விப்பட்ட தாதுசேனன் சேனாதிபதியின் தாயை அதாவது தனது சகோதரியை, நிர்வாணமாக்கிக் கொடுமைகள் பல இழைத்துக் கொன்று விட்டார். இதனால் வெகுண்ட மருமகன் தாதுசேனனைத் தீர்த்துக் கட்ட சூழ்ச்சி செய்தான்.

தாதுசேனனின் மூத்த புதல்வனான காசியபனைக் கிளப்பி விட்டுப் புரட்சி செய்தான். காசியபனும் தகப்பனைப் பிடித்துக் கட்டி ஓர் அறையில் அடைத்து, கற்களை வைத்துச் சுவரெடுத்துப் பூசினான். அந்தக் கல்லறையில் தாதுசேனன் மாண்டான். காசியபன் குரூரத்தைப் பொறுக்காத தாதுசேனனின் இளைய மகன் மோகலானன் புரட்சி செய்யவே மக்களும் அவனோடு சேர்ந்து கொண்டார்கள். இதனால் தலைநகரிலிருந்து தப்பிய காசியபன் இந்தச் சிங்ககிரிக்குத் தனது படைப்பிரிவுடன் வந்து இதைப் பலமான கோட்டையாக்கினான். இதைப் பெரிதும் அழகுபடுத்தினான். ஆனால் இளையவனான மோகலானன் சளைக்காமல் தமையனைத் தீர்த்துக் கட்ட படையெடுத்து வந்தான். காசியபன் தனக்குத் தோல்வி நிச்சயமென்பதை உணர்ந்து,

zeevaa

போர்க்களத்திலேயே தனது கழுத்தைக் கத்தியால் அறுத்து கொண்டு பிராணனை விட்டான். ஆகவே அந்த ஐந்தாவது நூற்றாண்டுக்குப் பிறகு இந்தச் சிங்ககிரி 'பாவியின் பாறை' என்று அழைக்கப் பட்டது,'' என்று கதையை முடித்தான்.

''இவ்வளவு குரூரமானவர்களா நமது முன்னோர்கள்!'' என்று வியப்புடனும் துக்கத்துடனும் கேட்டான் ரவிதேவன்.

*''குரூரம் என்று சொல்ல முடியாது. அந்தக் காலத்துச் சூழ்நிலையில் இது சகஜமாகக் கருதப்பட்டது,'' என்றான் விஜயன்.

ரவிதேவன் இந்தக் கதையை ஓரளவு கேள்விப்பட்டிருந்தாலும் இந்த விவரம் முழுவதையும்அறியாததால் விஜயன் விவரத்தைக் கேட்டதும் நீண்ட நேரம் பேசாமலே நின்றான். பிறகு கேட்டான்: ''மகாராஜா! நாம் இந்த இடத்தை விட்டுப் போய்விட்டாலென்ன?'' என்று.

''ஏன் போக வேண்டும் ரவிதேவா?'' மன்னன் சர்வ சாதாரணமாகவே கேட்டான்.

''மன்னவா! இந்த இடம் அழிவுக்கும் குரூரத்துக்கும் தற்கொலைக்கும் ஏற்பட்டதுபோல் தோன்றுகிறதே. நாம் இதில் தங்கவேண்டுமா?'' என்றான். அவன் குரலில் அச்சம் இருந்தது.

''ஓர் இரவு தங்கினால் என்ன நேரிட்டுவிடும் ரவிதேவா?'' என்று வினவினான் விஜயபாகு.

''நல்லது நிகழ நாளாகும் மன்னவா. துன்பம் நிகழ ஓர் இரவென்ன, ஒரு நிமிடங்கூடப் போதும் இந்தச் சிங்ககிரியை விட்டு நாம் போய் விடுவோம்,'' என்று கூறினான் ரவிதேவன்.

---

* This tragedy is thoroughly illustrative of the fiendish cruelty native to the Sinhalese princes of that age. The Book of Ceylon - By HENRY W. CAVE, M.A, (oxon) F.R.G.S. page 438.

zeevaa

தனது தளபதிகளில் அஞ்சா நெஞ்சமுள்ள படைத்தலைவனென்று பெயர்பெற்ற ரவிதேவனே அச்சப்படுவதைப் பார்த்து விஜயன், ''என்ன துன்பம் நிகழ்ந்து விடும்'' என்று வினவினான்.

''இந்தப் பாவப் பாறை எதை விளைவிக்குமோ யாருக்குத் தெரியும்?'' என்றான் ரவிதேவன்.

சிறிது சிந்தித்த விஜயன், ''ரவிதேவா! இந்தக் கோட்டையை நீ பார்த்திருக்கிறாயா?'' என்று வினவினான்.

''இல்லை.''

''பார்க்கிறாயா?''

''எதற்கு?''

''இதன் சரித்திரத்தைத் தான் நீ கேட்டாய். இதன் அமைப்பைப்பற்றிக் கேள்விப்படவில்லையே?''

''கேள்விப்பட என்ன இருக்கிறது மகாராஜா? இப்பேர்ப்பட்ட கோட்டையைத் தற்காப்புக்காகக் காசியப்ப மகாராஜா கட்டினார். அவர் பிராணனே தங்கவில்லையே!'' இதைச் சொன்ன ரவிதேவன் முகத்தில் வெறுப்புக் காட்டினான்.

''போர் வீரர்களுக்கு மூட நம்பிக்கையும் அதனால் விளையும் பயமும் கூடாது. தவிர, ஒருவனைப் பிடித்த துன்பம் அடுத்தவனையும் பிடிக்கும் என்று சொல்ல முடியாது. படைகள் தங்க ஏற்பாடு செய்துவிட்டு வா. நாம் போய் இந்த மலையின் அற்புதங்களைக் கவனித்து விட்டு வருவோம்,'' என்று விஜயன் கூற, மன்னன் பிடிவாதத்தை உணர்ந்திருந்த ரவிதேவன் படைகள் தங்கவும், ஒரு பகுதிப் படை உறங்கிய சமயத்தில் காவல் புரிய இன்னொரு பகுதியை ஏற்பாடு செய்யவும் சென்றான். சிங்ககிரியைத் தள்ளித் தங்கியிருந்த படைக்குத் தேவையான உத்தரவுகளைப் பிறப்பித்து, இன்னொரு படைத் தலைவனான காலனைப் படைகளைக்

கவனிக்கும்படி கூறிவிட்டுத் திரும்பி வந்தவனை விஜயன் நோக்கி, ''இதோ பாறை போல் மேலுக்குத் தெரியும் இந்தக் கோட்டைக்கு வழிகள் இரண்டும் மேற்குப் பகுதியில் இருக்கின்றன. இந்த வழிகளை வடக்கு வழி, தெற்கு வழி என்று இங்குள்ளவர் கூறுவது ஒரு வழிக்கு இன்னொரு வழி அமைந்திருப்பதைப் பொறுத்ததே தவிர, உண்மையில் இரண்டும் மேற்குப் பகுதியில் இருக்கின்றன. வா இப்படி,'' என்று கூறிய விஜயன் முன்னால் வழிகாட்டிச் செல்ல ரவிதேவன் பின் தொடர்ந்தான்.

அடவியில் சிறிது தூரம் சென்ற மலையடிவாரத்துக்கு வந்த விஜயன் அங்கு சிங்கத்தின் கால்களைப் போல் நிர்மாணிக்கப் பட்டிருந்த இரு படி வரிசைகளைக் காட்டி ''இதன் மூலம் ஏறவேண்டும்,'' என்று கூறித் தானே முதலில் ஏறலானான்.

சிறு வயதில் பலமுறை அந்தச் சிங்ககிரிக்கு வந்திருக்கும் விஜயன் படிகளில் அனாயாசமாக ஏறினான். இன்னொரு வரிசைப் படிகளில் ஏறி வரும்படி ரவிதேவனுக்குக் கூறினான். இப்படிப் படிகளில் ஏறி முதல் பாறையின் தளத்துக்கு வந்ததும் சுற்றிலும் எழுந்த காட்சியை ரவிதேவனுக்குக் காட்டினான். இரவில் அந்தச் சிங்கக் கோட்டையின் சுற்றுப்புறம் கண்ணைப் பறிக்கும்படியாக இருந்தது. தூரத்தே ஓர் ஏரியின் நீர் நிலவில் பளபளத்தது. எங்கும் பெரிய பெரிய பறவைகள் மலைப் பொந்துகளுக்குத் திருப்பி வந்து கொண்டிருந்தன. பறவைகள் அனைத்தும் ராட்சஸப் பறவைகளாக இருந்ததைக் கவனித்த ரவிதேவன் பிரமித்தான். மலை அடிவாரத்தை ஒட்டிய காடுகளில் பரவிக்கிடந்த தங்கள் படையின் பந்தங்கள் ஆங்காங்கு எரிந்து கொண்டிருந்தது கண் கொள்ளாக் காட்சியாயிருந்தாலும் அதைவிடப் பன்மடங்கு அழகுடன் விளங்கியது மலை உச்சிப் பாறைகள்.

இப்படிப் படிகளை ஏறி, குகை போல் தெரிந்த ஓர் இடத்துக்கு வந்ததும் ஒரு சுள்ளியைப் பக்கத்துச் செடி ஒன்றிலிருந்து உடைத்து

zeevaa

இரு மணிக் கற்களை மலைப் பாறையில் தட்டித் தீ உண்டாக்கி, சுள்ளியில் தீப்பிடிக்கச் செய்து, அந்தப் பந்தத்தைக் குகைக்குள் காட்டிய விஜயன் ''ரவிதேவா! குகை உச்சியைப் பார்,'' என்றான்.

ரவிதேவன் குகையின் உச்சியிலிருந்த வண்ண ஓவியங்களைக் கண்டு வியந்தான். காசியபனுடைய மண்டபங்களில் இது ஒன்று எனக் கூறிய விஜயன், ''ரவிதேவா! இந்த ஓவியங்கள் காலத்தால் அழியாமல் வர்ணங்களும் அப்படியே இருக்கின்றன பார். இங்கு சுமார் இருபத்தொரு பெண்களின் ஓவியங்கள் இருக்கின்றன. அந்தப் பெண்களின் உருவங்கள் சில மஞ்சள் நிறமாகவும் சில சிவப்பு நிறமாகவும், இன்னும் சில பச்சையும் சிவப்பும் கலந்த கறுப்பு நிறமாகவும் இருக்கின்றன. மஞ்சளும் சிவப்புமாகத் தெரியும் பெண்கள் காசியபனின் ஆசை நாயகிகள். கறுப்பாகத் தெரிபவர்கள் பணிப்பெண்கள்,'' என்று விளக்கினான்

''இந்த ஓவியங்கள் தத்ரூபமாக இருக்கின்றன. உயிருள்ளவை போல் தெரிகின்றன, ''என்று ரவிதேவன் பிரமிப்பும் அச்சமும் நிறைந்த குரலில் பேசினான். அவன் பேசிக்கொண்டே இருந்த சமயத்தில் அந்தப் பெண்களில் ஒருத்தி அசைவதாகத் தெரிந்தது ''ஐயையோ! மகாராஜா! இவையனைத்தும் பிசாசுகள்!'' என்று ரவிதேவன் கூறினான்.

அவன் சொல்லுக்கு அத்தாட்சி கூட்டுவது போல் பெரிய அலறலொன்று குகைக்குள் கேட்டது. அதைக் கேட்ட விஜயன் துரிதமாகச் செயல்பட்டு, காசியபனின் அரண்மனையின் ஒரு பகுதிக்கு ஓடினான் நீளமான அந்தக் குடைவரை மண்டபத்தின் ஆட்சிக் கூடத்தின் நடுவில் இருந்த அரியணையில் காசியபன் அமர்ந்திருந்தான். அவன் எதிரே ஒரு பெண் தலைவிரி கோலமாக நின்றிருந்தாள். விஜயனும் ரவிதேவனும் அங்கு வந்ததும் அரியணையிலிருந்த காசியபன் இறங்கி ஓட முற்பட்டான். அவன் ஓட முற்பட்டதும் மீண்டும் ஒருமுறை அந்தப் பெண் அலறினாள்.

zeevaa

அந்த அலறல் அந்த மண்டபம் முழுவதும் பயங்கரமாக எதிரொலி செய்ததுடன் மற்றொரு பயங்கர நிகழ்ச்சியும் நடந்தது. ஐந்தாவது நூற்றாண்டில் காலமாகிவிட்ட காசியபன் ஐந்நூறு வருஷங்கள் கழித்து எப்படி வந்தான் என்று ரவிதேவன் வியப்படைந்து சிலையாகிவிட்ட சமயத்தில் விஜயன் தனது இடையிலிருந்த குறுவாளை எடுத்து ஓட முயன்ற காசியபன் மீது வேகமாக எறிந்து விட்டான்.



zeevaa

# 64. அன்பே விஷம்

சிங்ககிரியின் உச்சி அரண்மனையின் ஆட்சி மண்டபத்தில் நுழைந்த விஜயன் அங்கிருந்த அரியணையில் காசியபன் உட்கார்ந்திருந்ததைக் கண்டு ஒருவிநாடி பிரமித்தான். ஆனாலும் அடுத்தவிநாடி அந்தப் பிரமையை உதறிக் கொண்டு தனது கையிலிருந்த சுள்ளிப் பந்தத்தை ரவிதேவன் கையில் கொடுத்து விட்டுக் காசியபனை உற்றுக் கவனிக்கலானான். அப்படிக் கவனித்த விநாடி நேரத்திற்குள் காலமான காசியபனின் புருவங்கள் லேசாக அசைந்ததையும், கண்களின் இமைகளும் கொட்டத் துவங்கியதை யும் கண்டதும். அரியணையில் உட்கார்ந்திருந்த போலி காசியபன் யாரென்பதை உணர்ந்து கொண்ட விஜயன் தனது இடையில் செருகியிருந்த குறுவாளில் கைவைத்தான். அடுத்த விநாடி அரியணையிலிருந்த போலி காசியபன் இறங்கி ஓடத்துவங்கியதும், அதைக் கண்டு அரியணைக்கு எதிரே அதுவரை சிலை போல் நின்ற பெண் அலறத் தொடங்கியதும், ஓடும் போலியின் முதுகின் மீது தனது குறுவாளை வீசிவிட்ட சிங்கள இளவல் போலி காசியபனைத் தொடர்ந்து ஓடவும் முற்பட்டான்.

முதுகில் குறுவாள் பாய்ந்தும் அதை லட்சியம் செய்யாமலும் குருதியைப் பெருக்கிக் கொண்டும் வெளியே ஓடிப் படிகளில் ஓடியவன் திடீரெனச் சிங்கத்தின் கால்களெனும் படிகளில் தடுக்கி உருண்டான். அப்பொழுதும் அவனைத் தொடர்ந்து வந்து அவன் படிகளில் உருளுவதைத் தனது காலொன்றால் தடுத்து நிறுத்திய விஜயபாகு அவன் முதுகிலிருந்த குறுவாளைக் கவனித்தான்.

zeevaa

குறுவாள் காசியபன் முதுகின் ஆழப் புதைந்து கிடந்ததால் குருதி நிற்காமல் பிரவகிக்கவே, ரவிதேவனைக் குரல் கொடுத்து அழைத்துப் படிகளில் கிடந்தவனையும், அலறிய பெண்ணையும் அழைத்து வரும்படி உத்தரவிட்டான். ரவிதேவன் அந்தப் பெண்ணை இழுத்து வந்ததும், "ரவிதேவா இவன் முதுகில் குறுவாள் ஆழப் புதைந்திருக்கிறது. இவனது குருதி ஓட்டத்தைச் சீக்கிரம் நிறுத்தாவிடில் செத்து விடுவான்," என்று கூறினான் விஜயன்.

"இவன் யார் மகாராஜா?" என்றும் ரவிதேவன் வினவினான்.

"காசியபன் வம்சத்தில் வந்தவன்தான். பெயர் இளையகேசதாது முகத்தை நன்றாகப் பார் தெரியும்," என்ற விஜயன் "இவனைப் பழையபடி ஆட்சி மண்டபத்துக்கு எடுத்துப்போ. விசாரணையை அங்கேயே நடத்துவோம்" என்று கட்டளையிட, அதை நிறைவேற்ற இளையகேசதாதுவை ஏதோ சிறு குழந்தையைத் தூக்குவதுபோல் கைகளில் தூக்கிக் கொண்ட ரவிதேவன் படிகளில் ஏறி மீண்டும் சிங்ககிரியின் உச்சியை நோக்கிச் சென்றான். மண்டபத்தில் ஏற்கனவே அலறிய பெண்ணையும் தன்னைப் பின்பற்றும்படி சைகை காட்டிய விஜயன். ஆட்சி மண்டபத்தை அடைந்ததும் இளையகேசதாதுவின் காயத்தைப் பரிசோதித்துக் கொண்டிருந்த ரவி தேவனை நோக்கி, "காயம் எப்படியிருக்கிறது. பிழைப்பானா?" என்று வினவினான்.

அப்பொழுது குறுவாளை எடுத்துவிட்டுக் காயத்துக்குள் துணியடைத்து ரத்தத்தை நிறுத்திக் கட்டும் போட்ட ரவிதேவன், "உடனடியாக இவன் இறக்கமாட்டான். நீங்கள் விசாரிக்கலாம்," என்று கூறினான்.

சிறிது நேரம் சிந்தித்த விஜயன் தனக்குப் பின்னால் நின்றிருந்த பெண்ணை நோக்கி, "பெண்ணே! இங்கு இவனுக்குப் புகட்டப் பால் இருக்கிறதா?" என்று விசாரித்தான்.

zeevaa

''மது இருக்கிறது.'' என்ற அந்தப் பெண் மண்டபத்தின் உள்ளறை ஒன்றிலிருந்து ஒரு குடுவையை எடுத்து வந்தாள். அதிலிருந்து மதுவை இளையகேசதாதுவுக்குப் புகட்டவும் செய்தாள். அதைப் பருகியதும் மெள்ளக் கண்விழித்த இளைய கேசதாது தனக்கு மதுவை புகட்டிக் கொண்டிருந்த பெண்ணை நோக்கி மெல்லப் புன்முறுவல் செய்தான். ''என் எதிரியிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டாயா?'' என்று மிகவும் தீனமான குரலில் கேட்கவும் செய்தான்.

அவள் பதில் சொல்லவில்லை அவன் கேள்விக்கு. அவனையும் நோக்கி, பக்கத்தில் நின்றிருந்த விஜய பாகுவையும் ஏறெடுத்து நோக்கினாள். அவள் பார்வையைத் தொடர்ந்து தனது பார்வையை ஓடவிட்ட இளைய கேசதாது. விஜயன் கண்களைக் கண்டதும் மெதுவாக நகைத்து, ''விஜயா! நீ எப்பொழுதும் என்னைவிட அதிர்ஷ்டசாலி, நான் விரும்பும் பெண்களெல்லாம் ஏற்கனவே உன்னிடம் ஆசை கொண்டு விடுகிறார்கள். சுடர்விழி என்னைத் துரும்பாக நினைத்தாள். இவள் புதிது என்றாலும் உனக்கு ஏற்கனவே பழக்கம் போல் தெரிகிறது. இவள்தான் என்னைக் காட்டிக் கொடுத் தாளா?'' என்று வினவினான். இப்படிப் பேசியதால் அவன் மூச்சுக்காற்று பெருமூச்சாக வரத்தொடங்கியது.

விஜயபாகு அந்தப்பெண்ணை எழுந்திருக்கச் சொல்லி இளையகேசதாதுவின் பக்கத்தில் அமர்ந்து அவன் மார்பில் கையை வைத்து இதயத் துடிப்பைக் கவனித்தான். இதயம் மிக வேகமாகவும் சீர்கெட்டும் ஓடிக் கொண்டிருந்ததால் அவனுக்கு இன்னும் கொஞ்சம் மதுவைத்தானே குப்பியிலிருந்து புகட்டி விட்டு, ''உன் இதயம் சரியாயில்லை, பதட்டம் தெரிகிறது. அதிக உணர்ச்சி வசப்பட்டால் இறந்து விடுவாய். ஆகவே எனது கேள்விக்குப் பதில் சொல்! இவள் யார்? இங்கு எப்படி எப்பொழுது வந்தாள்?'' என்று வினவினான்.

இளையகேசதாது அப்பொழுதும் அச்சத்தைச் சிறிதும் காட்டாமல் தடுமாறிப் பேசினான், ''இவள் புலஸ்திய நகரத்திலுள்ள

zeevaa

தமிழர் படைத்தலைவன் ஆசை நாயகி . இவளைக் காரணமாகத் தான் கடத்தி வந்தேன். இவள் என் வசமிருக்கும்வரை தமிழர் படைத் தலைவன் என்னைக் கொல்ல மாட்டான்,'' என்று.

இதைக் கேட்ட விஜயன் பக்கத்தில் நின்றிருந்த பெண்ணை நோக்கி, ''நீ ஏன் இவனுடன் வந்தாய்?'' என்று வினவினான்.

அந்தப் பெண் தனது சிவந்த விழிகளை இளையகேசதாதுவின் மீது நிலைக்க விட்டாள், சில விநாடிகள். ''இந்த அயோக்கியன், என் கணவர் உங்களிடம் சிக்கி விட்டதாகவும், நான் வந்தால், கணவரிடம் என்னை ஒப்படைப்பதாகவும் சொன்னான். என் கணவர் எப்பொழுதும் கழுத்தில் அணியும் வீரர் பதக்க சங்கிலியையும் சாட்சி காட்டினான். இதோ அந்தச் சங்கிலி,'' என்று கூறிய அந்தப் பெண் தனது மடியிலிருந்து ஒரு தங்கச் சங்கிலியையும் எடுத்துக் காட்டினாள்.

அந்தச் சங்கிலியைக் கையில் வாங்கிப் பார்த்த விஜயன் அதில் காணப்பட்ட சோழர்களின் புலிக்கொடிச் சின்னத்தைப் பார்த்து அது தமிழர் தலைவன் சங்கிலிதானென்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டு, ''இது ஏது இவனுக்கு?'' என்று வினவினான்.

''என் கணவர் கழுத்திலிருந்து இதை யாரும் கழற்றியிருக்க முடியாது. அவராகக் கொடுத்திருந்தாலொழிய இது இவனிடம் வரக் காரணமில்லை,'' என்று திட்டமாகக் கூறினாள். ''இதில் ஏதோ சூது இருக்கிறது'' என்றும் சொன்னாள்.

அதுவரை பேசாமல் நின்றிருந்த ரவிதேவன், ''இளையகேசதாது வேறு, சூது வேறில்லை,'' என்று கூறியதன்றி, ''மகாராஜா! இவனிடமிருந்து உண்மையை வரவழைக்கட்டுமா?'' என்று கேட்டான்.

விஜயன் இளையகேசதாதுவை நோக்கி, ''நீயே நடந்ததைச் சொல்லிவிடு. இல்லையேல் ரவிதேவன் உனக்குப் பணிவிடை செய்வான்,''

zeevaa

அப்பொழுது வேறு குரலும் அந்த அறைக்குள் கேட்டது. ''அவனை என்னிடம் ஒப்படைத்து விடுங்கள். ரவிதேவனை விட நல்ல பயன் தரும் பணிவிடையை என்னால் செய்ய முடியும்,'' என்ற குரல் வந்த திசையை நோக்கிய விஜயபாகு, ரவிதேவன், இளையகேசதாது மூவருமே மிதமிஞ்சிய பிரமிப்புக்கு உள்ளானார்கள். தமது கண்களில் கொலை வேட்கையைக் காட்டிக் கொண்டும் புன்முறுவலை இதழ்களில் தவழ விட்டுக் கொண்டும் மோக்ஷர் அந்தக் கூடத்துக்குள் நுழைந்தார்.

''மோக்ஷரே! நீங்களா!'' என்று வியப்புத் ததும்பக் கேட்டான் விஜயன்.

''ஆம்.''

''நீங்கள் படைகளுடன் வரவில்லையே.''

''இல்லை. தனியாக வந்தோம். நாங்கள் ஐவரும் குறுக்கே மலைக்காடுகள் வழியாக வந்தோம். சிங்ககிரியின் மகிமையைக் கேட்ட குருநாதர் இங்கு திரும்பினார். நாங்களும் திரும்பினோம். 'மோக்ஷா! இந்த மலையில் பல கொலைகள் நடந்திருக்கின்றன. எதற்கும் நீ ஏறிப் பார்த்துவிட்டு வா' என்றார். நான் வந்தேன். இங்கிருந்து உனது படைகளைப் பார்த்தேன். அலறல் ஒன்று கேட்கவே உள்ளே வந்தேன். கொஞ்சம் முன்பு வந்திருந்தால் நீ குறுவாளெறிய வேண்டிய அவசியத்தைத் தடுத்திருப்பேன்,'' என்று கூறித் தமது கைவிரல்களைப் பிரித்துப் பிரித்து மூடிக்கொண்டார்.

அவர் கைகளின் கொலை வேட்கையைக் கவனித்த விஜயன், ''இவனைக் கொல்ல உத்தேசமில்லை. இவனிடம் சில விஷயங்களைக் கேட்கவேண்டும்,'' என்றான்.

''கேளுங்கள் மன்னவா? பதில்களை நான் கக்க வைக்கிறேன்,'' என்று கூறிய வண்ணம் இளையகேசதாதுவைத் தனது அருட் கண்களால் நோக்கினார். மோக்ஷர்.

zeevaa

அந்தக் கண்களிலிருந்த வெறியைக் கண்டு நடுங்கிய இளையகேசதாது மேற்கொண்டு தாமதிக்காமல், ''விஜயா! உன்னை எப்படியும் தமிழர்களிடம் சிக்கவைக்கும் உத்தேசத்துடன் ஒரு திட்டம் தீட்டி வந்தேன். இங்கு நிலைமை மாறிவிட்டது. ஆகையால் கேள், நீ கையில் வைத்திருக்கும் சங்கிலி அதிராஜேந்திரனால் புலஸ்திய நகரப் படைத் தலைவனுக்குக் கொடுக்கப்பட்டது. நீ குட்டசாலகாவைப் பிடித்த பின்பு நான் அதிராஜேந்திரனிடம் வந்து சரணடைந்தேன். உன்னை எப்படி முறியடிக்கலாமென்று யோசனையையும் சொன்னேன். அவன் காதில் வாங்கவில்லை. வீரனை வீரனாகக் களத்தில் சந்திப்பதே முறையென்று என் யோசனையை மறுத்துவிட்டான். இப்பொழுது அதிராஜேந்திரனும் இங்கில்லை. ஆனால் அவன் படைத்தலைவன் லேசுப்பட்டவ னல்ல. படைகளை மிகத் திறமையாக நடத்த வல்லவன். நுவரகிரியும் நீயும் இரு திசைகளில் வருவதை அறிந்ததும் தனது படைகளை நகரத்துக்குள் இழுத்துவிட்டான். பெரும் முற்றுகையைச் சமாளிப்பதற்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் உள்ளே சேர்த்துவிட்டான். புலஸ்திய நகரத்தை, அடுத்த பல மாதங்களுக்கு நீ பிடிக்க முடியாது. ஆனால் ஒரு வழி இருக்கிறது. இவளை வைத்துப் படைத்தலைவனைப் பிடிக்கலாம். அதற்கு வழியும் எனக்குத் தெரியும்,'' என்று விளக்கினான் தனது எண்ணத்தை.

விஜயன் முகத்தில் வெறுப்பு பெரிதும் படர்ந்தது. ''முதலில் என்னைத் தமிழர்களிடம் காட்டிக் கொடுக்கத் திட்டமிட்டாய். இப்பொழுது அவர்களை என்னிடம் காட்டிக் கொடுக்க வழி சொல்கிறாய். நீ ஒரு வீரனா?'' என்று வெறுப்பு குரலிலும் துலங்கப் பேசினான்.

பிறகு ரவிதேவனை நோக்கி, ''ரவிதேவா! இவனுக்குச் சரியாகச் சிகிச்சை நடக்கட்டும். இவனை உபயோகிக்கும் வழி எனக்குத் தெரியும்!'' என்று கூறிவிட்டு, ''இந்தப் பெண்ணையும் அழைத்துப் போய் வசதிகளைச் செய்து கொடு.'' என்றும் உத்தரவிட்டான்.

zeevaa

''நாளைக் காலையில் நமது படைகள் புலஸ்திய நகரத்தை நோக்கிப் புறப்படட்டும்,'' என்றும் கட்டளை பிறப்பித்தான்.

ரவிதேவன் இளைய கேசதாதுவைத் தூக்கிக் கொண்டு வெளியே சென்றான். அந்தப் பெண்ணும் அவனைத் தொடர்ந்து தலையைக் கவிழ்த்த வண்ணம் சென்றாள். அடுத்து மோக்ஷரை நோக்கிய விஜயபாகு, ''சுவாமி, குருநாதரும் தங்கள் சகாக்களும் எங்கிருக்கிறார்கள்?'' என்று வினவினான்.

''என்னுடன் வா,'' என்ற மோக்ஷர் சிங்ககிரியிலிருந்த மற்றொரு குகைக்கு அழைத்துச் சென்றார். அங்கு நிஷ்டையில் உட்கார்ந்திருந்த சிவகோகர்ண ஸ்வாமியை விஜயன் நிலத்தில் நெடுஞ்சாண் கட்டையாக விழுந்து வணங்கினான். நிஷ்டை கலைந்து சுவாமிகள், ''ஜெயவிஜயீபவ! எழுந்திரு விஜயா,'' என்றார்.

விஜயன் எழுந்து கைகூப்பி நின்றான். ''விஜயா இந்த இளையகேசதாது இங்கு வந்து மூன்று நாட்களாகின்றன. நானும் அவன் வந்த அன்றே இங்கு வந்தேன். அவனை எனது நான்கு சீடர்களும் கண்காணித்து வந்தார்கள். வந்ததும் முதல் நாளே கூடவந்த பெண்ணை ஒரு குகையில் அடைத்து வைத்தான். நேற்றுத்தான் ஆட்சி மண்டபத்துக்கு அழைத்துப் போனான். அவன் வகுத்த பயங்கரத் திட்டத்தை நான் அறிந்ததும் உன்படைகள் வருகைக்காகக் காத்திருந்தேன். நீ இன்றிரவு இங்கு வந்திருக்காவிட்டால் நானே உன் பாசறைக்கு வந்திருப்பேன்,'' என்று விளக்கினார் சிவகோகர்ண சுவாமிகள்.

விஜயன் சிந்தனை வசப்பட்டு நின்றான். ''சுவாமி! அவன் எண்ணத்தையும் திட்டத்தையும் புரிந்து கொண்டேன். ஆனால் இப்பொழுது அவனைக் கொல்வதற்கில்லை. அவனால் உபயோகமிருக்கிறது. புலஸ்திய நகரத்தை நாம் அடைந்த பின்பு பாருங்கள்,'' என்று கூறினான்.

zeevaa

அன்றிலிருந்து மூன்றாவது நாள் புலஸ்திய நகரத்தை அடைந்த விஜயன் தனது திட்டத்தை அமுல்படுத்த முற்பட்ட சமயத்தில்தான் சிவகோகர்ண சுவாமிகள் அவன் திட்டத்தின் முழு சூட்சுமத்தை அறிந்தார். அதனால் பெருவியப்பும் அடைந்தார். விஜயபாகு அன்று இளையகேசதாதுவை அழைத்து, "இன்று என் தூதனாக நீ தமிழரிடம் போய் வா," என்று ஒரு குழலை அவனிடம் கொடுத்தான்.

"ஐயோ! நான் மாட்டேன். என்னைப் பார்த்ததும் தமிழர் படைத் தலைவன் வெட்டிப் போடுவான்," என்று கூறினான் இளைய கேசதாது.

"அஞ்சாதே! நீ அழைத்து வந்த அந்தப் பெண்ணும் உன்னுடன் வருகிறாள்," என்று விஜயன் சொன்னான்.

"சித்திரவதையிருக்கும்," என்று நடுங்கினான் இளையகேசதாது.

"தூதர்களைத் தமிழர்கள் கொல்வதில்லை," என்று திட்டமாகச் சொன்ன விஜயபாகு அவனை அன்றே அனுப்பினான் கோட்டை வாயிலை நோக்கி. உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நடுங்கிய வண்ணம் புரவியில் சென்ற இளையகேசதாது தனது பக்கத்தில் இன்னொரு புரவியில் வந்த படைத்தலைவன் ஆசைநாயகியை வெறுப்புடன் நோக்கினான். அடுத்து இருகொம்புகள் பலமாக ஊதப்பட்டதும் கோட்டைத் தளத்தின் மீது இரு சோழ வீரர்கள் தோன்றினார்கள். கோட்டை வாயிலின் திட்டிக் கதவு ஒன்று மெதுவாகத் திறக்கப்பட்டது. அங்கு இளைய கேசதாதுவை வரவேற்கச் சோழர் படைத்தலைவனே நேரில் வந்து நின்றிருந்தான். புரவியிலிருந்து இறங்கி வந்த இளையகேசதாது திட்டி வாசலுக்குள் நுழைந்ததும் வலிய இரு கைகள் அவனைப் பிடித்து உள்ளே இழுத்தன. இழுத்தவன் முகத்தை நோக்கிய இளையகேசதாது தனது காலம் முடிந்து விட்டதை உணர்ந்து கொண்டான். "நான் தூதன். நான் தூதன்," என்று உளறினான்.

zeevaa

''ஆம். வாருங்கள் தூதரே! உமக்குத் தகுந்த மரியாதை செய்யப்படும்,'' என்று அன்பு கொட்டிய குரலில் அழைத்தான் சோழர் படைத் தலைவன். அந்த அன்பே விஷம் என்பதை உணர்ந்தான் இளையகேசதாது. அடுத்துப் படைத் தலைவன் ஆசைநாயகியும் உள்ளே இழுக்கப்பட்டாள். அடுத்த விநாடி திட்டி வாசல் மூடப்பட்டது.



zeevaa

# 65. ஏரிக்கரையில் கிடந்த எழிலரசி

சுற்றிலும் நீண்ட தூரத்துக்கு அடர்த்தியான காடுகள் இருந்ததால் எதிரிப் படைகள் சுலபமாக நெருங்க முடியாததும், காட்டு நகரமென்றே பிரசித்தி பெற்றதும், ஏழாவது நூற்றாண்டில் மூன்றாவது அக்கபோதி மன்னால் நிர்மாணிக்கப்பட்டு எட்டாவது நூற்றாண்டில் ஏழாவது அக்கபோதி அரசனால் வலுப்படுத்தப் பட்டது மான புலஸ்திய நகரத்தின் வடபெரு வாயிலின் திட்டிக் கதவின் மூலம் இளையகேசதாதுவும், தமிழர் தலைவன் ஆசைநாயகியும் உள்ளே இழுக்கப்பட்டதையும், பிறகு திட்டிவாசல் பலமாக மூடப்பட்டதையும் தூரத்திலிருந்தே கவனித்துக் கொண்டிருந்த விஜயபாகு திருப்தியடைந்த முகத்துடன் தனது பாசறைக்குத் திரும்பினான். அங்கு சித்தமாகக் காத்திருந்த சிவகோகர்ண ஸ்வாமிகள், ''விஜயா! இளைகேசதாதுவின் கதி என்ன ஆகும்?'' என்று விசாரித்தார்.

விஜயபாகு சுவாமிகளை நோக்கி, ''உயிருக்கு ஆபத்து ஏற்படாது,'' என்று திட்டமாகச் சொன்னான்.

''அதெப்படி அத்தனை திட்டமாகச் சொல்ல முடியும்?'' என்று சுவாமிகள் கேட்டார்.

''இளையகேசதாது எனது தூதனாகப் போயிருக்கிறான். தூதனைக் கொல்லும் அதர்மத்தைத் தமிழர்கள் செய்ய மாட்டார்கள்,'' என்று உறுதியுடன் கூறினான் விஜயபாகு.

''தமிழர்களிடம் அத்தனை நம்பிக்கையா உனக்கு?'' என்று சுவாமிகள் வினவினார்.

zeevaa

விஜயபாகு சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான். பிறகு மிக மெதுவாகவும் தீர்மானத்துடனும் பேசினான். "சுவாமி! தமிழர்கள் நம்மைப் பலமுறை போரில் வென்றிருக்கிறார்கள். பலமுறை நமது படைகளை அழித்தும் இருக்கிறார்கள். நகரங்களைக்கூட நாசம் செய்திருக்கிறார்கள். ஆனால் அநாகரிகமாக, அதர்மமாக எதுவும் செய்யவில்லை. முதலில் அதர்மம் செய்தாலும் அதைத் திருத்தும் மனப்பக்குவமும் அவர்களுக்கு இருக்கிறது. வீரராஜேந்திரன் லீலாவதியை ஏன் உங்களுடன் விடுவித்து அனுப்பினான்? அனுப்பும் பணியை எத்தனை தந்திரமாக எத்தனை கண்ணியத் துடன் செய்து முடித்தான்? சிந்தித்துப் பாருங்கள்," என்று சொன்ன விஜயன், "இந்த இளையகேசதாதுவும் திருப்பி அனுப்பப் படுவான்," என்றும் கூறினான்.

விஜயனுக்கு எதிரிகளிடம் இருந்த மதிப்பை எண்ணிப் பார்த்த சிவகோகர்ணர் பெருவியப்படைந்தார். 'இவன் சிங்களத்தின் சக்கரவர்த்தியாவதற்கு முற்றிலும் தகுந்தவன்,' என்று உள்ளூர சிலாகித்தும் கொண்டார். "இப்பொழுது இளையகேசதாதுவின் நிலை எப்படி இருக்கும்?" என்று எண்ணத்தை ஓடவிட்டார்.

உண்மையில் நகரத்துக்குள் திட்டிவாசல் மூலமாக இழுக்கப் பட்ட இளையகேசதாதுவின் நிலை அத்தனை திருப்திகரமாயில்லை யென்றால் அதற்குக்காரணம் அவன் தூது சென்றதல்ல, தமிழர் தலைவன் மனைவியை அழைத்துச் சென்றது. தவிர பல காரணங்கள் இருந்ததால் தமிழர் படைத்தலைவன் அவனைத் திட்டிவாசல் மூலமாகத் தனது கைகளாலேயே உள்ளே இழுத்து நிறுத்தினான். அவன் அழைத்துச் சென்ற பெண்ணைக் காவலரை விட்டு இழுக்கச் சொன்னான். பிறகு அந்தப் பெண்ணைத் திரும்பிப் பாராமலே இளைய கேசதாதுவைத் தன்னைப் பின் தொடரும்படி சைகை காட்டி நகரத்தின் நடுவிலிருந்த அரண்மனைக் காவல் கூடத்துக்கு அழைத்துப் போய் அந்தக் கூடத்திலிருந்த ஒரு மஞ்சத்தில் அமர்ந்து. "தூதரே! என்ன செய்தி கொண்டு வந்திருக்கிறீர் எதிரியிடமிருந்து?" என்று வினவினான்.

zeevaa

அந்தக் காவற்கூடத்தில் தன்னையும் தலைவனையும் தவிர வேறு காவலர் யாருமில்லாதிருந்ததைக் கவனித்த இளையகேசதாது பக்கத்திலிருந்த சாளரத்தை நோக்கினான். அவன் பார்வை சென்ற இடத்தைக் கவனித்த தலைவன், ''முடிந்தால் அந்த வழியில் போகலாம்,'' என்று சொல்லி நகைத்தான்.

அந்த நகைப்பின் ஒலியே தன் கழுத்தை அறுக்கும் கத்தியின் ஒலியைப் போல் இளையகேசதாதுவின் காதில் விழவே, ''நான் தப்பப் போவதாக யார் சொன்னது?'' என்று கேட்டான் சிறிது துணிச்சலுடன்.

''எவை என்று கேள்,'' என்றான் தலைவன்.

''எவையா?''

''ஆம். உன் கண்கள் ஓடிய திக்கைப் பார்த்தேன்'' என்ற தலைவன், ''சரி உன் பையிலிருக்கும் குழலைக் கொடு,'' என்று கையை நீட்டினான்.

நடுங்கும் கைகளுடன் இளையகேசதாது நீட்டிய குழலைக் கையில் வாங்கி முத்திரைகளை உடைத்து உள்ளிருந்த செய்திச் சீலையை எடுத்துப் பிரித்துப் படித்த தலைவன் முகத்தில் பெரும் திருப்தி நிலவியதைக் கண்டதும் தூதன் உடல் நடுங்க ஆரம்பித்தது. 'இவனுக்குத் திருப்தி அளிக்கக்கூடிய செய்தி எதை விஜயபாகு எழுதியிருக்க முடியும்?' என்று எண்ணி, தனக்கு ஏதோ விபரீதம் நடக்க இருக்கிறது என்ற முடிவுக்கு வந்தான்.

ஆனால் தமிழர்படைத்தலைவன் உடனடியாக எந்த வித நடவடிக்கையிலும் இறங்காமல். ''தூதரே! உமக்கு எதிரி மிகவும் பரிந்து எழுதியிருக்கிறார். தூது சம்பந்தப்பட்ட வரையில் உமக்கு எந்தவிதத் தீங்கும் செய்யக்கூடாதெனக் கேட்டுக் கொண்டிருக் கிறார். உம்மை உமது விருப்பப்படி திரும்ப அனுப்பும்படியும் சிபாரிசு செய்திருக்கிறார்.'' என்று தெரிவித்தான்.

zeevaa

இதனால் சிறிது தைரியமடைந்த தூதன், படைத்தலைவனின் அடுத்த சொற்களால் அந்தத் தைரியத்தை அறவே இழந்தான். ''தூது'' என்று மெதுவாக அழைத்த படைத்தலைவன், ''இளையகேசதாது! எத்தனை நீளமான பெயர். உம்மைக் கொஞ்சம் குறைப்பது பேசுவதற்குச் சுலபம். விஜயபாகு விசயம் தெரிந்தவர். தூது சம்பந்தப்பட்ட வரையில்தான் உம்மைச் சரியாக நடத்தச் சொல்லியிருக்கிறார். மற்றக் குற்றங்களுக்கு உம்மை மன்னிக்கச் சொல்லவில்லை,'' என்று அன்பு சொட்டும் குரலில் கூறினான். மேலும் தொடர்ந்து, ''நமது சொந்த விஷயங்களைப் பிறகு கவனிப்போம். முதலில் தூதுக்குப் பதில் சொல்கிறேன் கேட்டுக் கொள்ளும். இந்த கோட்டையை மூன்று நாட்களுக்குள் தன்னிடம் ஒப்படைக்காவிட்டால் பலவந்தமாக உள்ளே நுழையப் போவதாக எழுதியிருக்கிறார் எதிரி. அவர் உள்ளே நுழைவதானால் எங்கள் பிணங்களின் மீதுதான் உள்ளே நுழைய முடியும் என்று தெரிவித்து விடு. உள்ளே நுழைவது அப்படி எளிதல்லவென்பதையும், உனது உடல்போல் கோட்டைச் சுவர்கள் மாறினாலொழிய இந்த நகரைப்பிடிக்க முடியாதென்று நான் சொன்னதாகச் சொல்,'' என்று கூறினான்.

இளையகேசதாதுவுக்குச் சந்தேகம் பலமாக எழுந்தது. 'கோட்டை என் உடலைப் போல் ஆக வேண்டுமென்றால் என் உடலுக்கு என்ன இப்பொழுது கேடு?' என்று சிந்தித்தான் மனதுக்குள்.

தமிழர் தலைவன் மேற்கொண்டு எந்த விவாதத்திலும் இறங்காமல், ''தூதரே! நீர் போகலாம் எதிரி பாசறைக்கு. முதலில் தூதுக்கு எனது பதிலைத் தெரிவித்து விட்டு வாரும். பிறகு நீர் என் மனைவியைக் கடத்திச் சென்றது பற்றி விசாரிக்கிறேன்,'' என்று கூறி, அவன் செல்லலாமென்பதற்கு அறிகுறியாகக் கையை அசைத்தான்.

'பிழைத்தேன்,' என்று எண்ணி வாயிற் பக்கம் திரும்பிய இளையகேசதாது வாயிற் கதவுகள் மூடப்பட்டிருப்பதைப் பார்த்து, ''தலைவரே! கதவுகள் மூடியிருக்கின்றனவே?'' என்றான்.

zeevaa

படைத்தலைவன் புன்முறுவல் செய்து, ''தூது!'' என்று அழைத்தான் கனிவுடன்.

''தலைவரே!''

''கதவு காரணமாகத்தான் அடைக்கப்பட்டிருக்கிறது.''

''காரணமாகவா?''

''ஆம். நீர் சாளரத்தின் வழியாகத்தானே போக விரும்பினீர்?''

''தலைவரே...'' திகிலிருந்தது தூதன் குரலில்.

உமது விருப்பப்படி செய்யும்,'' என்றான் படைத் தலைவன். அத்துடன் கேட்டான், ''தூது! நீராகப் போகிறீரா, காவலரை விட்டு அனுப்பச் சொல்லட்டுமா?'' என்று.

வேறு வழியின்றித் திகிலால் உடம்பும் உள்ளமும் நடுங்கச் சாளரத்திடம் சென்று வெளியே எட்டிப் பார்த்த இளைய கேசதாதுவின் திகில் உச்சத்துக்குச் சென்றது. சாளரம் மிக உயரத்திலிருந்ததால் கீழே குதிப்பது ஆபத்து என்பதை உணர்ந்தான். அதுமட்டுமின்றி, சாளரத்தின் நேர் கீழே பல அடிகளுக்கு முட்களும் கூர்மையான பாறைகளும் போடப்பட்டி ருந்தன. அதில் குதிப்பதை விட பிராணனை விடுவது நல்லது என்று இளையகேசதாது அச்சத்தின் வசப்பட்டிருந்தபோது படைத் தலைவன் கையைத் தட்டவே இரு காவலர் உள்ளே வந்து இளைய கேசதாதுவைத் தூக்கிச் சாளரக் கட்டை மீது நிற்க வைத்தனர். ''போய் வாரும் தூதரே!'' என்று ஏளனக் குரலில் சொன்ன படைத்தலைவன் மெள்ளச் சாளரத்தை அணுகினான்.

இளையகேசதாது நடுங்கினான். ''ஐயோ! என்னைக் கொன்று விடுங்கள். இந்தச் சித்திரவதை வேண்டாம்,'' என்று கூவினான்.

''தூதனைக் கொல்வது அதர்மம்,'' என்றான் தலைவன்.

''இம்மாதிரி சித்திரவதை செய்வது?''

zeevaa

''என் நோக்கமல்ல. இதன் வழியாகச் செல்ல விரும்பியது நீர்தான்,'' என்ற தலைவன், சாளரத்தில் நிறுத்தப்பட்டிருந்த இளையகேசதாதுவைத் தனது கையாலேயே ஒரு தள்ளு தள்ளவே, கீழ் நோக்கிப் பறந்த தூதர் அடுத்த விநாடி, ''ஐயோ!'' என்று புலஸ்திய நகரமே நடுங்கும்படி ஓலமிட்டார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அந்த ஓலம் அடங்கியது. இளையகேசதாது மூர்ச்சையானான்.

சாளரத்தின் மூலம் கீழே நோக்கிய படைத்தலைவன், ''இவன் துரோகத்துக்கு இந்தத் தண்டனை போதாது,'' என்று வருத்தப்பட்டுக் கொண்டான்.

அடுத்து, இளைய கேசதாதுவால் அழைத்துச் செல்லப்பட்ட தனது ஆசைநாயகியை விசாரித்தான். இளைய கேசதாது எதிரியைப் பிடித்து வருவதாகவும் அதற்கு உதவ வேண்டுமென்றும் ஆசை காட்டித் தன்னைச் சிங்ககிரி குகையில் சிறை வைத்தது. பிறகு சமயத்தில் விஜயபாகு வந்து காப்பாற்றியது ஆகிய விவரங்களைச் சொன்னாள் தனது மடியிலிருந்து தலைவனின் சங்கிலியையும் எடுத்துக் கொடுத்தாள்.

''உன்னை அவன்...'' என்று ஏதோ கேட்க முற்பட்டான் தலைவன்.

''தொட்டிருந்தால் பிணமாகியிருப்பான்,'' என்று தன் இடையில் செருகியிருந்த சிறு கத்தியைக் காட்டினாள்.

அவளை மற்றப் பெண்களிருந்த இடத்துக்கு அனுப்பிய தலைவன் அடுத்து நடக்க வேண்டியதைப் பற்றிச் சிந்திக்கத் தனது உப தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தான். அன்று மாலையே ஒரு முடிவுக்கும் வந்தான். அதன் விளைவாகக் கோட்டை மதில் மீதிருந்த பாதுகாப்பு இரட்டிக்கப்பட்டது. வடக்கு வாசல் மதில் மீதிருந்து அவனது வீரர்களும் ஒரு குழலை ஊத ரவிதேவன் இருவீரர்களை

zeevaa

அனுப்பினான் தூதனை அழைத்துவர. தூதனை எதிர்பார்த்து விஜயனும் தனது பாசறை வாயிலில் நின்றான்.

அந்த மாலை நேரத்தில் புலஸ்திய நகரத்தின் சூழ்நிலை மயக்கம் தருவதாயிருந்தது. மேற்குப் புறத்திலிருந்த பெரிய ஏரியில் அழகிய பட்சிகள் கூச்சிலிட்டுப் பறந்தன. அப்பொழுது திட்டி வாசல் மூலம் வெளியே வந்த இரு தமிழ் வீரர்கள் ஒரு மூட்டையை வெளியே கொண்டு வந்து ரவிதேவன் அனுப்பிய வீரர்களிடம் கொடுத்து, ''தூதரை எடுத்துச் செல்லுங்கள்,'' என்று கூறிவிட்டுக் கோட்டைக்குள் சென்றுவிட, ரவிதேவனின் காவலர்கள் அந்த மூட்டையைக் கொண்டு வந்து விஜயபாகுவின் பாசறையில் இறக்கினார்கள்.

மூட்டையைப் பிரிக்கும்படி விஜயபாகு உத்தரவு பிறப்பித்ததும் மூட்டை பிரிக்கப்பட, இளையகேசதாது ஏராளமான காயங்களுடன் உடைந்த எலும்புகளுடனும் வெளியே உருண்டு தான் உயிருடனிருப்பதை நிரூபிக்க, ''ஐயோ! அப்பா!'' என்று கூக்குரலைக் கிளப்பினான்.

அவன் நிலை கண்ட விஜயபாகுவும் துறவிகள் நால்வரும் பேச நா எழாமல் நின்றார்கள். இளையகேசதாதுவின் எலும்புகள் பல இடங்களில் முறிந்து கிடப்பதைக் கண்ட விஜயன், ''இவனுக்குச் சிகிச்சை நடக்கட்டும். நாளை முதல் முற்றுகை தொடங்கட்டும்,'' என்று உத்தரவுகளைப் பிறப்பித்தான்.

அன்றிரவே தனது படைத் தலைவர்களைக் கூட்டி போர் ஆலோசனையிலும் இறங்கினான். சிங்களத்தின் இரண்டாவது தலைநகரத்தின் முற்றுகை மும்முரமாக மறுநாளே தொடங்கியது. ஆனால் நான்கு மாதங்களுக்குப் பிறகும் அந்தக் கோட்டை சரணடைவதாகத் தெரியவில்லை. அதனால் சிறிதே சலித்த மனத்துடன் அக்கோட்டைப் புறத்தே இருந்த ஏரிக்கரையில் விஜயன் உட்கார்ந்திருந்த சமயத்தில் வெற்றி மார்க்கம் தெரிந்தது. அதுவும்

zeevaa

காற்றில் மிதந்து வந்த இசைமூலம் ஒலி கிட்டியது. விஜயன் எழுந்து இசை வந்த திசையை நோக்கி நடந்து சென்றான் ஏரிக்கரை ஓரமாக. சுமார் ஐம்பது அடி தூரத்துக்கு அப்பாலிருந்த ஒரு மரத்தின் கீழ் உதடுகள் இசை கிளப்ப ஓர் எழிலரசி மல்லாந்து படுத்துக் கிடந்தாள். அவளைப் பார்த்த விஜயன் உணர்ச்சிகள் உறைந்து போக மலைத்து நின்றான்.



# 66. கருங்கல் பள்ளியறை

நான்கு மாத கால மும்முரமான முற்றுகைக்குப் பிறகும் சிறிதும் அசையாதிருந்த புலஸ்திய நகரத்தின் பலத்தையும் தமிழர்களின் திடசித்தத்தையும் எண்ணி ஏக்கமடைந்து, எந்த ஏரிக்கரையருகே அந்த மாநகர் நிர்மாணிக்கப்பட்டிருந்ததோ அந்தத் தோபாவீவா (வாவி) ஏரிக்கரையில் உட்கார்ந்து சிந்தனை வசப்பட்டிருந்த விஜயபாகுவின் காதில் இன்பமான இசை தொடர்ந்து காதில் விழவே. அவன் எழுந்திருந்து அந்த இசையொலி வந்த திக்கில் சிறிது தூரம் நடந்ததும், சற்று எட்ட ஏரிக்கரையின் மீது மல்லாந்து படுத்து இதழ்களைக் குவித்துக் குழலோசை போன்ற இன்னிசையை அழகியொருத்தி கிளப்பிக் காற்றில் மிதக்க விட்டிருந்ததைக் கவனித்ததும் சிறிது வியப்பே அடைந்தான். சிங்கள இளவல்.

அந்த நள்ளிரவில் தனது படை வீரரின் சமீபத்தையும் லட்சியம் செய்யாமல் தனித்துப்படுத்து உல்லாசக் கீதம் எழுப்பிக் கொண்டிருந்த அந்த ஏந்திழை யாராயிருக்கும் என்றறிய அவள் இருந்த இடத்தை மெதுவாக அணுகினான். எந்தவித அரவமும் செய்யாமல் பூனைபோல் நடந்த விஜயன் அந்த அழகி படுத்திருந்த இடத்தை அணுகியதும் சற்று எட்டவே நின்று அவளை நோக்கினான். தோபாவீவாவின் பச்சைப் புல் வளர்ந்த ஏரிக்கரை மீது வெளேரென்று அவள் படுத்திருந்தது ஏதோ மரகதப்பாயில் தேவ மங்கையொருத்தி படுத்திருந்ததுபோல் தெரிந்தது விஜயன் கண்களுக்கு. பளிச்சென்று சாய்ந்து கொண்டிருந்த நிலவு ஏற்கனவே அழகாயிருந்த அவள் தேகத்தை அதிக வெளுப்பாக அடித் திருந்தது. சந்திர வெளிச்சத்தில் தனது சிற்றலைகளைச் சின்னஞ்சிறு கண்ணாடிகளாக்கிக் கொண்ட தோபாவீவாவின் பரந்த நீர்ப்பரப்பு

zeevaa



zeevaa

சூழ்நிலைக்குப் பெரும் மயக்கத்தைக் கொடுத்ததன்றி அந்த அழகியின் இசை ஊதலுக்குத் தனது சிற்றலைகளைக் கரையில் தாக்கித் தாக்கி மெதுவாகத் தாளமும் போட்டது. காட்டில் சதா பறந்து ஒலி கிளப்பும் வெள்ளைப் பறவைகள் சில அந்த அழகி வந்திருந்த காரணத்தாலோ என்னவோ உறக்கம் துறந்து, நீர்க்கரைக்கு அருகே பறந்தும் நடந்தும் அடிக்கடி தங்கள் நீண்ட கழுத்துக்களைத் திரும்பிப் பார்த்தும் அவள் அழகை ரசித்துக் கொண்டிருந்ததைக் கவனித்த விஜயன், பட்சிகளும் மையல் கொள்ளும் இவள் யாராக இருக்கக் கூடும் என்று சிந்தித்துப் பார்த்து விடை காணாததால் அவளையே விசாரித்து விடுவது என்ற எண்ணத்துடன் அவளை அணுகியவன் திடீரென்று பெரும் பிரமை அடைந்து சிலையென நின்றுவிட்டான் சில விநாடிகள். அசோக வனத்துச் செழித்த புஷ்பம்போல. சிங்களத்தில் தான் வந்திறங்கிய போது முதன் முதலில் கண்ட அதே வேட்டுவ உடையுடன் சுடர்விழி படுத்துக் கிடந்தாள். அவன் மிக மெதுவாக வந்த காரணத்தாலோ அல்லது இசையில் சிந்தை திளைத்திருந்த காரணத்தாலோ அவள் சயன நிலையிலிருந்து எழுந்திருக்கவுமில்லை, இதழ்களைக் குவித்து ஊதிக் கிளப்பிய குழலோசை போன்ற கீதத்தை நிறுத்தவுமில்லை.

மலர இஷ்டப்படாத குவளைப் புஷ்பம் போன்ற விழிகள் மூடிக் கிடக்க, குழலின் துவாரத்தைப் போலவே இசை எழுப்பிய குவிந்த உதடுகள் குவிந்தே இருக்க, கருங்குழல்கள் காற்றில் அலைய, அந்தக் குழலின் இரு மயிர்கள் நுதலின் குறுக்கே படுத்துக் கிடக்க, நன்றாக இழுத்துக் கட்டப்பட்டிருந்தாலும் செழித்த தொடைகளை மறைக்காது வெளிப்படுத்திக் கொண்டும், மார்பை மூடும் நோக்கத்துடன் கட்டப்பட்ட புலித்தோல் கஞ்சுகமும் அடக்க முடியாததால் திமிறி நின்று திண்ணிய மார்பின் விளிம்புகளை வெளிக்காட்டிக் கொண்டும் கிடந்த அந்த மோகனச் சிலையைப் பார்த்துப் பார்த்து மனம் குலைந்து நின்று கொண்டிருந்த விஜயன், மிக மெதுவாக நடந்து அவள் பக்கத்தில் உட்கார்ந்தான். அவன் வந்ததை அறிந்ததாலோ, இல்லை சொப்பனம் எதையோ

கண்டதாலோ அவள் இதழ்களின் ஊதல் நின்றது. குவிந்த அதரங்கள் விரிந்து மந்தகாசம் செய்தன. இப்படிச் சில விநாடிகள் ஓடியும் அவள் கண்களைத் திறக்கவும் இல்லை, சிறிதும் அசையவும் இல்லை.

விஜயன் இதழ்களும் சிறிதே இளநகை கூட்டின. அவன் வலது கை எழுந்து வழவழத்த அவள் பெரும் தொடையொன்றில் பதிந்தது. அதற்கும் அவள் அசையாது போகவே அவன் தனது இடது கையை அவள் பருத்த மார்புமீது வைத்தான். அதற்கும் அவள் அசைய மறுக்கவே மெள்ளத் தனது முகத்தை அவளது முகம் நோக்கிக் குவித்தான். அப்பொழுது அவள் திடீரெனச் செயல் பட்டாள். அதுவரை பக்கவாட்டில் கிடந்த அவள் கைகளிரண்டும் எழுந்து அவன் கழுத்தை வளைத்து இழுத்தன. குவிந்து பரந்த இதழ்கள் அவன் இதழ்களைக் கவ்வின. சற்றே திரும்பிய அவள் அழகிய உடல் அவன் உடலுடன் இழைந்தது. அவள் காட்டிய உக்கிரத்தால் அவள் மீது முழுதும் சாய்ந்து விட்ட விஜயபாகு அவள் கால்கள் தனது கால்களுடன் பின்னிவிட்டதை உணர்ந்ததான். அந்த உணர்வு எதிர் உணர்வைத் தூண்டியதால் அவன் அந்த மரகதத் தரையில் அவளை அணைத்த வண்ணம் உருண்டான் ஒருமுறை.

நீண்டநாள் பிரிவினால் ஏற்பட்ட உணர்ச்சி வேகத்தில் சிக்கிய இருவரும் மௌனமாகவே ஒருவருடன் ஒருவர் இழைந்து கிடந்தனர். இருவரையும் அங்கிருந்த ஏரி மறைத்தது சற்று எட்ட இருந்த கோட்டை மதில் மறைத்தது. கோட்டைச் சுவர் மீது உலாவிக் கொண்டிருந்த எதிரி வீரர்களின் எச்சரிக்கைக் கூச்சல் கூட அவர்கள் காதுகளில் விழவில்லை. அப்படிப் பரஸ்பர உறவில், உறவினால் ஏற்பட்ட உவகையில், உணர்ச்சிகளின் கொந்தளிப்பில் பிணைந்து கிடந்த அந்த இரு உடல்களும் திடீரெனப் பிரிய அவசிய மேற்பட்டது, எட்ட இருந்த தோப்பிலிருந்து காதில் விழுந்த சலசலத்த ஒலியால். அவளிடமிருந்து பிரிய முயன்று, "தோப்பில் யாரோ நடமாடுகிறார்கள். எனது காவல் வீரர்களாயிருக்கலாம்," என்று அவள் காதில் செய்தி சொன்னான் சிங்கள இளவல். அந்த

zeevaa

இதழ்களைக் கீழே கொணர்ந்து கன்னக் கதுப்பையும் லேசாகப் பற்களால் கவ்வினான்.

''உங்கள் வீரர் இங்கு யாரும் இல்லை. உம்,'' என்று உணர்ச்சி ஒலி எழுப்பித் தனது இன்னொரு கன்னத்தையும் திருப்பினாள் அவன் இதழ்களை நோக்கி. அப்படி அவள் புரண்டபோது கன்னத்தை அணுகாமல் அவள் சங்குக் கழுத்தில் இதழ்களைப் புதைத்த விஜயன் தனது முகத்தை மேலும் கீழே கொணர்ந்து அவள் மார்பின் மீது புரட்டினான். அதுவரை அவன் செயல்களுக்கெல்லாம் இடமளித்த சுடர்விழி, ''இங்கு வேண்டாம். வாருங்கள் அந்தத் தோப்புக்கு'' என்று சொல்லி எழுந்திருக்க முயன்றாள்.

அவளை எழுந்திருக்க விடாமல் தனது உடலாலேயே அழுத்திய விஜயன் ''சுடர்விழி! இந்த மரகதப் பாய்க்கு என்ன? தோபா வீவாவின் பரந்த நீருக்கென்ன?'' என்றான்.

அவள் மெள்ள நகைத்தாள். ''எல்லாம் நன்றாகவே இருக்கின்றன. ஆனால் மறைவில்லை,'' என்று கூறினாள் நகைப்பின் ஊடே.

''மறைவு எதற்கு நமக்கு?'' என்றான் விஜயன் காமவெறியில்

''ஆண்களுக்கு வேண்டியதில்லை. அவர்கள் முரட்டுத்தனம் எதையும் மறைக்கும். ஆனால் பெண்கள் கதைவேறு,'' என்று கூறித் தனது கைகளால் அவனைச் சற்றே விலக்கினாள். ''தோப்புக்கு வாருங்கள், புதிதாக ஒன்று காட்டுகிறேன்'' என்று சொன்னாள்.

அவள் சொற்களுக்கு விகாரப் பொருளைக் கற்பித்த விஜயன் ''இதுவரையில் நான் அறியாத புதுமை என்ன இருக்கிறது உன்னிடம்?'' என்று கேட்டான். இந்த மாதிரி. சந்தர்ப்பங்களில் ஆண்கள் சிரிக்கும் அசட்டுச் சிரிப்பையும் உதிரவிட்டான்.

அவள் அந்த அசட்டுத் தனத்துக்குப் பதிலேதும் சொல்லாமல் அவன் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு எழுந்து

zeevaa

நடந்தாள் எதிரேயிருந்த தோப்பை நோக்கி. அவள் போவதை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டே நின்ற விஜயன் சொர்க்கலோகத்தில் இருந்தான். அவள் நடந்தபோது ஏற்கனவே தனது அவசரத்தால் சரிந்துவிட்ட அவள் இடைமரவுரி அவள் இடைக்குக் கீழுள்ள எழுச்சியைச் சிறிதே காட்டினாலும் அந்தக் காட்சி உன்மத்தம் அளிக்கக்கூடியதாய் இருந்தது. அவள் மரவுரியின் மேல்பகுதி நெகிழ்ந்து தோள்பட்டையையும் திடமான வழவழத்த அவள் முதுகையும் புலப்படுத்தியது. மழமழப்பான தோள்கள் அசைந்ததிலேயே அழைப்பு இருந்ததைக் கவனித்த விஜயன் உ...த்தை அடைந்த வெறியுடன் அவளைத் தொடர்ந்தான். அவள் அவளை அணுகுவதற்குள் அவள் தோப்பில் மறைந்துவிட்டதால் விஜயன் தோப்பில் நுழைந்து நாற்புறமும் பார்த்தும் அவளிருக்குமிடம் தெரியவில்லை. தோப்பின் அடர்த்தியிலும் ஆங்காங்கு சந்திரக் கிரணங்கள் புகுந்திருந்ததால் கறுப்புச் சேலையில் வெள்ளிக் கோடுகள் போட்டது போன்ற உவமையைச் சிருஷ்டித்தது அந்த ஏரிக்கரைத் தோப்பு. அதனால் அப்புறமும் இப்புறமும் பார்த்த விஜயன், ''சுடர்விழி! எங்கிருக்கிறாய்? எனக்கு கண்தெரியவில்லை,'' என்று மெதுவாகப் பேசினான்.

அவனைப் பின்னாலிருந்து தழுவின இரு கைகள். ''காமுகனுக்குக் கண் எப்படித் தெரியும்?'' என்ற சொற்களும் ஒலித்தன.

சுடர்விழியின் பூவுடல் தன்னைப் பின்னாலிருந்து அழுத்துவதை உணர்ந்த விஜயன் தனது கைகளைப் பின்புறமாகச் செலுத்தி அவளைப் பிடித்தான். பிறகு சரேலெனத் திரும்பி அவளைத் தனது கைகளில் தூக்கிக் கொண்டு சில அடிகள் நடந்தான். அப்படி அவன் நடந்த போது காற்றில் அசைந்த மரங்களிலிருந்து மலர்கள் அவ்விருவர் மீதும் விழுந்தன. ஒரு மல்லிகை மரத்தின் அடியில் நீண்ட பல மலர்கள் கொட்டியிருப்பதைக் கண்ட விஜயன் அவளை அதில் படுக்கவைக்கத் தீர்மானித்து. ''சுடர்விழி! உனக்கு

zeevaa

மலர்ப்படுக்கை தருகிறேன்.'' என்று கூறி அவளை இறுக்க முயன்றான்.

அவன் கைகளில் படுத்துக் கிடந்த சுடர்விழி இறங்க மறுத்து அவன் கழுத்தை நன்றாகக் கட்டிக் கொண்டாள். ''கொஞ்சம் விடுங்கள்.'' என்று அவள் கெஞ்சினாள்

''எதற்கு?'' என்று அவன் வினவினான்.

''சொல்கிறேன், விடுங்கள்.''

''இந்த மலர்ப்படுக்கை இயற்கை சிருஷ்டித்திருக்கிறது சுடர்விழி.

''எனக்கு மலர்ப்படுக்கை வேண்டாம்.''

''ஏன் சுடர்விழி?''

''அது மென்மையாயிருக்கிறது.''

''கடினம்தான் உனக்குப் பிடிக்குமா?''

''ஆம்.''

''அப்படியானால்?''

''கருங்கல் தரையில் கிடத்துங்கள்.''

''கருங்கல்லா?''

''ஆம்.''

''எங்கிருக்கிறது?''

''நான் காட்டுகிறேன்.''

''நீ காட்டுவதாகச் சொன்ன புதுமை இதுதானா?''

''ஆம். காட்டுகிறேன் வாருங்கள்,'' என்ற சுடர்விழி அவன் கைகளிலிருந்து இறங்கி, ''ஓசை செய்யாமல் என்னுடன் வாருங்கள்,'' என்று கூறி முன் நடந்தாள். விஜயனும் அவள் எங்கே

zeevaa

போகிறாள், எதற்காகப் போகிறாள் என்ன புதுமையைக் காட்டப் போகிறாள் என்று எண்ணிய வண்ணம் அவளைப் பின் தொடர்ந்தான்.

அந்த தோப்பு அவர்கள் செல்லச் செல்ல மிகவும் அடர்த்தியாகியது. ஆங்காங்கு புதர்கள் தோன்ற முற்பட்டதன்றி அந்த புதர்களிலிருந்து பற்பல ஜீவராசிகளும் எழுந்து ஓட முற்பட்டன. முயல்கள் சில புதர்களிலிருந்து வெளிப்போந்து பந்தயத்துக்கு ஓடுவதுபோல் விரைந்தன. அணில்கள் மரங்களிலிருந்து கிரீச்கிரீச்சென்று ஒலி கிளப்பின. இருப்பிடத்தை ஒத்து நிறம் மாறும் பச்சோந்திகள் மரக்கிளைகளில் ஊர்ந்தன. இந்த ஒலிகள் எல்லாம் ஒலித்தும் தோப்பின் மோகனச் -சூழ்நிலையைக் கண்டும். எதையும் கேளாமலும் காணாமலும் கொக்குக்கு ஒன்றே மதியென்று நினைத்துச் சுடர்விழியைப் பின்பற்றிச் சென்றான். தோப்பில் நீண்ட தூரம் வந்துவிட்டதாக எண்ணம் ஏற்பட்ட சமயத்தில் சுடர்விழி சட்டென்று விஜயனை நோக்கித் திரும்பி, ''இப்படி வாருங்கள்,'' என்று அழைத்தாள்.

விஜயன் அவளை வேகமாக அடைந்ததும் சுடர்விழி எதிரேயிருந்த புதரைச் சுட்டிக் காட்டி, ''ஏதும் கேட்காதீர்கள். சத்தம் செய்யாதீர்கள். என்னைப் பின்பற்றி வாருங்கள்,'' என்று மர்மமாகப் பேசினாள். பிறகு புதரை அணுகி அதை மறைத்திருந்த பெரிய செடிகளைத் தனது கைகளால் விலக்கி ''இதைப் பாருங்கள்,'' என்றாள்.

விஜயன் அவளை நன்றாக நெருங்கி அவள் காட்டிய இடத்தைப் பார்த்தான். ''ஏதும் தெரியவில்லையே சுடர் விழி?'' என்றான். அவள் கீழே உட்கார்ந்து இரண்டு மணிக்கற்களைத் தட்டி, தீப்பொறி உண்டாக்கி, காட்டுச் சுள்ளியொன்றைப் பந்தமாகக் கொளுத்தி ''இப்பொழுது பாருங்கள்,'' என்றாள்.

விஜயன் நோக்கி வியப்பின் எல்லையை அடைந்து, ''இதென்ன சுடர்விழி?'' என்றான்.

zeevaa

கீழே சருகுகளின் மறைவில் பெரும் பாறையொன்று தெரிந்தது. அதைத் தனது கைகளால் மெதுவாக நகர்த்தினாள் சுடர்விழி. கீழே ஒரு காட்டு வழி தெரிந்தது. அதில் இறங்கிச் சென்றாள் சுடர்விழி. விஜயனும் பின்பற்றினான். சற்று தூரத்திலிருந்த கதவொன்றைத் திறந்தாள் சுடர்விழி. அடுத்துக் காணப்பட்டது ஒரு சிறு கல்மண்டபம். ''வாருங்கள்!'' என்று அழைத்தாள் சுடர்விழி.

விஜயன் அந்த மண்டபத்திற்குள் நுழைந்தான். ''இது அறை போலிருக்கிறதே?'' என்றான்.

''அறைதான். கருங்கல் அறை?'' என்றாள் சுடர்விழி.

''கல்லறையா?'' என்று விஜயன் வினவினான்.

''இல்லை உங்கள் பள்ளியறை.'' என்று சொன்ன சுடர்விழி மண்டபச் சிறு கதவை மூடிவிட்டு கையிலிருந்த சுள்ளிப் பந்தத்தை ஒரு மூலையில் வைத்துவிட்டு, கருங்கல் திண்ணையில் படுத்தாள். அவனை வரவேற்கத் தனது இரு கைகளையும் நீட்டினாள். விஜயன் மெதுவாக நடந்து அவள் கைகளில் புகுந்தான்.

''கீழே கருங்கல் கடினப் படுக்கைதான். காதலின் விளையாட்டே கடுமைதானே?'' என்றாள் சுடர்விழி. அது மெய்யென்பதை நிரூபிக்க அவளை அசுரத்தனமாகத் தழுவினான் விஜயபாகு.

zeevaa

## 67. பள்ளியறைப் போர்த்திட்டம்

கருங்கல் பள்ளியறையில் கட்டழகி சுடர்விழியைக் கடுமையாகத் தழுவிய விஜயன், பெண் இனமும் அத்தனை பலவீனமானதல்லவென்பதை அடுத்த சில விநாடிகளிலேயே புரிந்துகொண்டான். சுமார் நான்கு மாதப் பிரிவால் வெறிகொண்ட அந்தக் காட்டுமலரின் கொடிக்கைகள் கழுத்தை இறுக்கியபோதும் அவை கொடிக் கைகளா, கொடிய கைகளா என்ற சந்தேகத்தை அடைந்த சிங்கள இளவல், மூச்சை சிறிது கஷ்டப்பட்டே விட்டான். ஆனாலும் பிறகு தனது முழு மூர்க்கத்தனத்தைக் காட்டி லேசாக நகைக்கவும் செய்தான். அந்தச் சரச வேளையில் கூடச் சுடர்விழி சிறிது நிதானத்தைக் காட்டி "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று வினவினாள். அவன் பதிலேதும் சொல்லாது இதழ்களைத் தனது கழுத்தில் புதைத்திருக்கவே, "என் வெட்கங்கெட்ட நடத்தையை நினைத்தா?" என்று கேட்டவள். "விஜயா! இது வெட்கத்தை ஆணும் பெண்ணும் துறக்கும் நேரந்தானே?" என்று இன்னொரு கேள்வியால் பதிலும் சொன்னாள்.

மெள்ள அவள் கழுத்திலிருந்து உதடுகளை நீக்கி சற்றே கருங்கல் திண்ணையில் பக்கவாட்டில் புரண்டு அந்தக் காட்டுப் புஷ்பத்தையும் தன்மீது திருப்பிக் கொண்ட விஜயபாகு, சுடர்விழி தன்னை மரியாதையைக் கைவிட்டு விஜயா என்று விளித்ததை எண்ணினான். அதனால் உவகையும் உன்மத்தமும் கொண்ட விஜயபாகு "அதற்காக நகைக்கவில்லை சுடர்விழி" என்றான் மெதுவாக.

"வேறு எதற்கு?" என்று கேட்டு அவன் விசால மார்பில் முகத்தைப் புரட்டினாள் சுடர்விழி.

zeevaa




# விஜய மகா தேவி

zeevaa

விஜயன் அவள் முகத்தைத் தனது கையொன்றால் நன்றாகத் தனது மார்பில் அழுத்தி. ''சுடர்விழி!'' என்று இன்பமாக அழைத்தான்.

''உம்'' அவள் உம்மில் பேரின்பத்தைக் காட்டினாள்.

''நம் இருவரில் யார் மேம்பட்டவர் என்று எண்ணினேன்'' என்று அவன் பேச்சைக் கொடுத்தான்.

''நீங்கள் தான். சந்தேகமென்ன?'' என்று சுடர்விழி கொஞ்சினாள்.

அவன் கைகள் அவள் பூவுடலை எடுத்துத் தன்மீது உருட்டிக் கொண்டன. 'இப்பொழுது நீதான் மேல்' என்று உதடுகள் கூறின... ''இப்போது நாம் வடமொழிப் பழமொழியை உடைத்து விட்டோம்'' என்றும் விளக்கினான்.

அவன் வேறு ஏதோ விவகாரத்துக்கு அடிகோலுகிறானென்பதைப் புரிந்துகொண்டே சுடர்விழி ''இப்பொழுதென்ன வடமொழிப் பழமொழிக்கு?'' என்றாள்.

''அந்தப் பழமொழியில் ஆடவன் மேலா பெண் மேலா என்ற கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது.''

''உம்...''

''பதிலும் அதிலேயே இருக்கிறது.''

''என்ன பதிலோ?''

''ஆண் பிள்ளை மேலா பெண் பிள்ளை மேலா என்று கேட்டால் மற்ற சமயங்களில் பலபடி இருக்கலாம். ஆனால் 'சய்யாருடே ஜாயா ஜயா பதிப்பதிஹி' என்று விடை தருகிறது சுலோகம். அதாவது பஞ்சணையில் கணவன் கணவன் தான், மனைவி மனைவிதான் என்று கூறுகிறது. அர்த்தம் புரிகிறதா?'' என்று கேட்டான்.

zeevaa

சுடர்விழி நகைத்தாள். ''நன்றாகத் தெரிகிறது. உங்களுக்குத் தேவையான விஷயங்களுக்குச் சுலோகம் கற்றுக் கொண்டிருக்கிறீர் கள்!'' என்று ஏளனமாகச் சொன்னாள் சுடர்விழி.

''உன்னைப் பிடிக்க வேறு வழி?'' என்று கூறி அவளை இறுகப் பிடித்தான் விஜயன்.

''என்னைப் பிடிக்க வழி கண்டு பிடித்தீர்கள். நாலு மாதமாகியும் கோட்டையைப் பிடிக்கக் காணோம்'' என்று நகைத்தாள்.

அதனால் சினம் கொண்ட விஜயன் அவளிடம் தனது முரட்டுத்தனம் முழுமையையும் காட்டினான். அதை அவள் பெரிதும் வரவேற்றாள். பிறகு வாய்ச்சொல் ஏதுமில்லை நீண்ட நேரத்துக்கு. பிறகு அக்கம் பக்கத்தில் களைத்துக் கிடந்த அவ்விருவரில் சுடர்விழியே பேச்சுக் கொடுத்தாள். ''என்ன மன்னவா? நான் இங்கு வந்த காரணத்தைக் கேட்கவில்லையே?'' என்று.

''கேட்க வேண்டுமா?'' என்றான் விஜயன், நகைக்கவும் செய்தான்.

''நீங்கள் நினைப்பதற்காக அல்ல; உங்களைப் பிரிந்திருக்கும் ஒவ்வொரு நொடியும் எனக்கு ஒரு யுகந்தான். ஆனால் நான் எனக்காக வரவில்லை இங்கு! இந்த புலஸ்திய நகரத்தை நீங்கள் நான்குமாத காலம் பிடிக்காதிருந்தது எனது மனத்தைத் துன்புறுத்தியது. வேதனை அதிகரித்தது. எந்த நகரமும் எந்த முன்னேற்பாடு இருந்தாலும் தொடர்ச்சியாக நான்கு மாத காலம் உங்கள் பெரிய சேனையை எதிர்த்து நிற்கமுடியாது. ஆயுதங்களை உள்ளே மடக்கியிருக்கலாம் எதிரி. ஆனால் நீண்ட காலத்துக்கு உணவுப் பொருள்களைத் திரட்டியிருக்க முடியாது. அந்த உணவுப் பொருள் எப்படியோ வெளியிலிருந்து உள்ளே போகிறது'' என்று தனது கருத்தை விளக்கினாள் சுடர்விழி.

zeevaa

இதைக் கேட்டதும் சட்டென்று எழுந்து உட்கார்ந்த விஜயன் அவளைச் சில விநாடிகள் கூர்ந்து நோக்கினான். காட்டுச் சுள்ளி பந்தத்தின் பொன்னொளி அவள் அழகிய உடலை பொன்னாக அடிக்கவே பொற்சிலையின் அழகை யாரும் பார்க்கக் கூடாதென்ற காரணத்தாலோ அந்த உரிமை தனக்குத்தான் உண்டென்ற சுய நலத்தாலோ மரவுரி அகன்றிருந்த இடங்களை மரவுரியை இழுத்து விட்டு ''இப்பொழுது சொல் சுடர்விழி. இந்தக் கோட்டையின் நாற்புறத்தையும் எனது பெரும்படை சூழ்ந்திருக்கிறது. அப்படி யிருக்க உணவை எப்படி உள்ளே கொண்டு போக முடியும்?'' என்று வினவினான் விஜயன்.

சுடர்விழியும் எழுந்து உட்கார்ந்து தனது குழலை சரிப்படுத்திக் கொள்ள முயன்றதும் அந்தப் பணியை தானே விஜயன் செய்ய முற்பட்டு அவளைத் திருப்பி குழலை சிக்கெடுத்தான். பிறகு எடுத்து முடிந்தும் விட்டான். அந்த அளகபாரம் எத்தனை பெரிய முடிப்பாக அமைந்தது என்பதைப் பார்த்து பிரமிப்பும் அடைந்தான். அந்த பிரமிப்புடன் இன்னொரு பிரமிப்பையும் அவனுக்கு அளிப்பதற் காக ''புலஸ்திய நகரக் கோட்டையின் அமைப்பு உங்களுக்குத் தெரியுமா?'' என்று வினவினாள்.

''நன்றாகத் தெரியும். எனது நாட்டுத் தலைநகரத்தின் கோட்டை அமைப்புக்கூட எனக்குத் தெரியாதா?'' என்று விஜயன் கேட்டான்.

''இந்த அறை இங்கிருப்பது உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியாது.''

''இந்த ஏரிக்கரையில் உங்கள் படை நடமாட்டம் இருந்தால் தெரிந்திருக்கும் அல்லவா? நீங்கள் கோட்டையைச் சூழ்ந்திருக்கும் அழகில் நான் வந்ததுகூட உங்களுக்கோ உங்கள் படை வீரருக்கோ தெரியாது.''

''ஆம் தெரியாது. எப்படி வந்தாய்?'' என்று வினவினான் விஜயன்.

zeevaa

அவள் மெதுவாகவும் திடமாகவும் பேசினாள். *''மூன்றாவது அக்கபோதி மன்னனால் கட்டப்பட்டு ஏழாவது அக்கபோதி மன்னனால் அபிவிருத்தி செய்யப்பட்ட இந்த மாநகருக்கு முப்புறந்தான் பலமான கோட்டைச் சுவர் இருக்கிறது. வடக்கில் 1000 கஜம், கிழக்கில் 1800 கஜம், தெற்கில் 1000 கஜமும் இப்படி நீளமும், அகலம் ஒன்றரை கஜமும் உள்ள பலமான சுவர்கள் இருந்தாலும் மேற்கு திசைக்கு சரியான சுவர் கிடையாது. தோபாவீவாவின் பெரும் கரையே அரணாக அமைந்திருப்பதால் அதற்கு ஒழுங்கான சுவர் கிடையாது. ஆங்காங்கு விட்டுவிட்டு சுவர்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. இந்த நகரின் கோட்டைச் சுற்றளவு கிட்டத்தட்ட **கால் யோஜனை இருக்கிறது...'' இந்த இடத்தில் சிறிது நிறுத்தினாள் சுடர்விழி.

அவளது கூரிய அறிவையும் நாட்டையும் கோட்டைகளையும் அவள் புரிந்து கொண்டிருக்கும் தன்மையையும் உணர்ந்து அவன் பிரமித்தான். இன்னும் அவள் என்ன சொல்லமுடியும் என்பதை எதிர்பார்த்துப் பேசாமலே நின்றான். ''எனது அதிகப் பிரசங்கித் தனத்தை நீங்கள் மன்னிக்க வேண்டும். நீங்கள் வெற்றி காண்பதில் எனக்கிருக்கும் ஆசை பேசத் தூண்டுகிறது'' என்று பீடிகை போட்டுக் கொண்ட சுடர்விழி. ''பொதுவான விவரங்கள் உங்களுக்குத் தெரியும். ஆனால் இப்பொழுது நாமிருக்கும் அறை உங்களுக்குத் தெரியாது. இம்மாதிரி நான்கு அறைகள் இந்தப் பகுதியில்

---

* The city Rampart runs on the north for over 1000 yards, to the east 1,800, to south nearly 1000. On the west side the bund of Topa Wewe served as the city's Protection for some distance, the wall being carried on it along the former contour of the bank for 1,100 yards or so. Including a crossramp of 500 yards and the citadel confines, the city ramparts (exclusive of the unwalled tank bund to the west) covered a circuit of about 6,850 yards or little short of four miles" The Last Cities of CEYLON - By G.E. Mitton - Page 179.

** நான்கு மைல்.

zeevaa

இருக்கின்றன. சமணத் துறவிகளும் பௌத்தத் துறவிகளும் குகைகளில் வாழ்ந்து தவம்செய்யும் வழக்கம் இருப்பது உங்களுக்குத் தெரியும். அதற்காகச் சிங்களத்தின் பழைய மகாராஜாக்கள் பின்னால் வந்த பல அரசரும் பிக்குகள் தனிமையில் தவம் செய்ய இந்த மாதிரி சின்னஞ்சிறு ஆசிரமங்களையும், குகைகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அப்படியே இந்த நகரத்தின் அக்கபோதி மன்னர்களும் கல்லால் தனியறைகளை சிருஷ்டித்தார்கள். சுற்றிலும் புதர்களையும் வளர்த்தார்கள். இந்த அறைகளிலிருந்து நகருக்குள் செல்ல வழிகள் உண்டு. இங்கிருந்து வடக்கே காட்டின் அருகாமையில் ஏரிக்கரையை அடுத்துப் பெரும் புதர் இருக்கிறது. அதன் வழியாக உணவுப் பொருள்கள் உள்ளே போகமுடியும்,'' என்று சுடர்விழி சொன்னாள்.

இதைக் கேட்ட விஜயன் தீவிர சிந்தனையில் இறங்கினான். அவள் சொன்ன செய்திகளைக் கேட்டதால் தோபாவீவா அத்தனை பாதுகாப்பல்ல என்று முடிவும் செய்தான். சுடர்விழி மேலும் சொன்னாள், ''அமாவாசைக்கு முன்பாக இரண்டொரு நாள் சில படகுகள் தோபாவீவாவில் உணவுப் பொருள்களுடன் வரும். அவை கரையை அடுத்த பெரும்புதர் வழியாகச் சென்று உள்ளேயுள்ள கல்லறைக் கதவைத் திறந்தால் நகரின் உட்புறம் போகமுடியும். அதற்கும் ஏதோ சைகை இருக்க வேண்டும்'' என்று.

விஜயன் கல் திண்ணையிலிருந்து இறங்கிக் கீழே நின்று சுடர்விழியையும் இறக்கி ''வா, எனது பாசறைக்குச் செல்வோம்'' என்றான்.

''வேண்டாம்.''

''நீ தனித்திருப்பது அபாயம்.''

''எனக்குத் துணை இருக்கிறது.''

''யார்?''

zeevaa

''வாருங்கள் காட்டுகிறேன்'' என்று கூறி விஜயனை அழைத்துக் கொண்டு பழைய வழியே நடந்து மேலேயிருந்த கல்லை அகற்றி பழைய தோப்புக்கு வந்தாள். அங்கு வந்ததும் அவள் பழையபடி இருமுறை விட்டுவிட்டு இதழ்களால் குழலூத சலசலவென்று சருகுகள் கலையும் சத்தம் கேட்டது. வில்லும் அம்பும் தரித்த சுமார் பதினைந்து வேடர்கள் தோப்பின் நாற்புறமிருந்தும் தோன்றினார் கள். அவர்கள் தலைவனான முருகன் விஜயனுக்குத் தலைவணங்கி ''இராவணன் மலைக் குடிசையில் தங்களைப் பார்த்ததுதான். பிறகு பார்க்கவில்லை'' என்று பணிவு நிரம்பிய குரலில் சொன்னான்.

விஜயன் சிந்தனை, தான் முதலில் நாடு திரும்பிய நாட்களுக்கு ஓடியது. தான் இராவண மலைக் குடிசையில் சுடர்விழியுடன் தங்கியபோது முருகனை சந்தித்த நிகழ்ச்சிகள் நினைவுக்கு வந்ததால் மிகுந்த மகிழ்ச்சியை முகத்தில் காட்டி ''முருகா! உன் எஜமானியை நீ இன்னும் விட வில்லை போலிருக்கிறது?'' என்றான்.

''மன்னவா! தகப்பன் எப்படி குழந்தையை விடமுடியும்?'' என்று வினவிவிட்டு ''அம்மா! மன்னருக்கு கோட்டை வழியைக் காட்டுவோமா?'' என்று வினவினான்.

''பத்து நாள் போகட்டும். அமாவாசையன்று காட்டுவோம். இங்கு வரும் படகோட்டிகளுக்குப் பதில் நாம் நுழைவோம் நகருக்குள்,'' என்று கூறி மிகவும் பயங்கரமான திட்டத்தையும் விவரித்தாள். ''இந்தத் திட்டம் மர்மமாக இருக்கட்டும். இன்னும் பத்து நாட்களுக்குள் இந்தக் கோட்டை நமது வசமாகும்'' என்றும் சொன்னாள்.

ஆனால் அந்தத் திட்டம் பத்து நாட்களுக்குள் பலிக்கவில்லை. அது உரு எடுக்க இரண்டு வாரங்கள் பிடித்தன. முற்றுகை துவங்கிய ஆறாவது வாரத்தில் பயங்கர நிகழ்ச்சிகள் துவங்கின.

போர் சன்னத்துடன் நுவரகிரியும், ரவிதேவனும் காலனும் சித்தமாக நின்றார்கள். சிவகோகர்ண சுவாமிகளும் மற்ற நான்கு

zeevaa

சீடர்களும் போரை எதிர்பார்த்து உவகையுடன் நின்றார்கள். கோட்டை வாசலை இடிக்கவும் கோட்டைக்குள் கற்களை வீசவும் மூர்சமத் தயாரித்த பெரிய யந்திர வண்டிகள் கோட்டை வாயில் முன்பு நின்றன. கோட்டை மீது எதிரி வீரர்கள் வில் அம்பு வேல் முதலிய ஆயுதங்களைத் தாங்கி நின்றார்கள்.

எங்கும் இருளும் பயங்கர நிசப்தமும் நிலவின. அந்த நிசப்தத்தை ஏரியில் வந்த சுமார் பத்துப் படகுகள் மெல்லக் கிழித்தன. அவர்களை வரவேற்க சுடர்விழியும் விஜயனும் மூர்சமதும் நின்றிருந்தார்கள். தோப்பு மறைவில் முருகன் தனது வேடர்களுடன் விற்களில் அம்பைப் பூட்டிக் கொண்டிருந்தான். படகுகள் கரைக்கு வந்ததும் தரையில் இழுக்கப்பட்டன. படகிலிருந்த பொதி மூட்டைகள் இறக்கப்பட்டதும் மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு படகில் வந்தவர்கள் முருகனிருந்த தோப்பு மறைவை நோக்கி நடந்தனர். உள்ளே காத்திருந்த விபரீதத்தை அறியாமலே.

zeevaa

# 68. இடிந்த பெருங்கதவு உடைந்த பாதுகாப்பு!

நுவரகிரியின் படையும் தனது படையும் இணைந்து புலஸ்திய நகரத்துக்குள் ஈ எறும்பு கூட நுழைய முடியாத வலிய முற்றுகையை ஏற்படுத்தியும் அந்த மாநகர் எப்படிச் சரணடையாதிருக்கிறது என்று வியந்திருந்த விஜயபாகுவின் விழிகளைச் சுடர்விழியின் விழிகள் திறந்துவிடவே, அவன் உடனடியாக மற்றத் தலைவர்களுடன் போர் ஆலோசனையில் இறங்கினான். அந்தப் போர் ஆலோசனைக்குச் சுடர்விழியையும் அழைத்துச் சென்றான். தோபாவீவாவின் பெரிய கரைக்கு அருகே நிறுவப்பட்டிருந்த தனது பெரும் பாசறையில் விஜயன் போர் ஆலோசனையைத் துவங்கிய சமயத்தில் அங்கு சுடர்விழியும் தோன்றியதைக் கண்ட நுவரகிரி மட்டுமின்றி, துறவிகளும் பெரும் பிரமிப்பை அடைந்தனர்.

அந்தப் பிரமிப்பை நீக்குவதற்காக ஆலோசனையைத் துவங்கு முன்பாக, "சுடர்விழி என்னைத் தேடி வந்திருக்கிறாள், எதற்கு என்று உங்களால் முடியுமானால் ஊகிக்கலாம்," என்று பூர்வ பீடிகை போட்ட விஜயனை விஷமக் கண்களுடன் நோக்கிய சிவகோகர்ண ஸ்வாமிகள், "ஊகத்துக்கு இதில் அதிக இடமிருப்பதாகத் தெரியவில்லை. அவர்களும் வந்திருந்தால் புலஸ்திய நகர் கோட்டைக்கு வெளியே வேறொரு யுத்தமும் துவங்கியிருக்கும்," என்று கூறினார்.

விஜயன் சில விநாடிகள் சுவாமிகள் மீது தனது கண்களை நிலைக்கவிட்டான். பிறகு சொன்னான், "சுவாமிகள் ஊகம் சரியல்ல.

zeevaa

சுவாமிகள் நினைப்பு சதா கிருகஸ்தாசிரமத்திலிருப்பதால் அந்த வழியிலேயே ஓடுகிறது அவரது சிந்தனை. சுடர்விழி வந்திருப்பது நமது விழிகளைத் திறக்க,'' என்று.

விஜயன் குரலிலிருந்த அமைதியையும் உறுதியையும் கவனிக்கவே செய்த ராட்சச நுவரகிரி, ''மகாராஜா! நாம் கண்ணை மூடிக்கொண்டா இங்கு உட்கார்ந்திருக்கிறோம். நமது விழிகளைத் திறந்துவிட ஒரு பெண் வருவதற்கு?'' என்று வினவினார். அவரது ராட்சதக் கண்கள் மன்னனையும் பார்த்து, சுடர்விழியையும் நோக்கின.

விஜயன் உதடுகளில் புன்புறுவலொன்று விரிந்தது. ''நாம் கண்ணிருந்தும் குருடர்களாக இருந்திருக்கிறோம். அறிவிருந்தும் சிந்திக்க மறுத்தோம். ஒரு மாதத்திற்கு மேலாகியும் இந்தக் கோட்டை ஏதும் நடவாதது போல் சர்வ சாதாரணமாக இருக்கிறதே. உள்ளே எத்தனை நாளைக்குத்தான் உணவை முடக்கி வைக்க முடியும்? இதை யோசித்தோமா?'' என்று வினவினான்.

சிறிது சிந்தனையில் இறங்கிய நுவரகிரி, ''குறைந்த பட்சம் மூன்று மாத காலத்திற்கு உணவுப் பொருள்களைச் சேமித்து வைக்கலாம்,'' என்றார்.

''உண்மை. நமது படையெடுப்பைப் பற்றி முன்னதாக எதிரி அறிந்திருந்தார். ஆனால் நுவரகிரி, உமது படைகளை வாயு வேகத்தில் இங்கு கொண்டு வந்து விட்டீர்கள். வெளியில் காத்திருந்த எதிரிப்படைகள் உமது தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் உள்ளே சென்று கதவைச் சாத்திக் கொண்டன. அப்படியிருக்க, உணவு சேமிப்புக்கு அதிக அவகாசமில்லை. அப்படியே சேமித்து வைத்திருந்தாலும் அதிகமாகச் சேர்க்கவோ வெளியிலிருந்து உணவுப் பொதிகளைப் பெருமளவில் கொண்டு வரவோ வழியில்லை,'' என்று விஜயன் விளக்கினான்.

zeevaa

''வழிகளை நாம் அடைத்துவிட்டோம்,'' என்றார் நுவரகிரி.

''நில வழியை அடைத்து விட்டோம், நீர் வழியை அடைக்கவில்லை,'' என்ற விஜயன் சுவாமிகளை நோக்கினான்.

சிவகோகர்ண ஸ்வாமியின் கண்கள் பளிச்சிட்டன. ''ஆம். ஆம். நீர்வழியை மறந்து விட்டோம்,'' என்று கூறினார்.

நுவரகிரி பேசும் சக்தியை அறவே இழந்தார். ''தோபாவீவா கரையில் தான் நாம் இருக்கிறோமே...'' என்று மென்று விழுங்கினார்.

விஜயன் எழுந்து தனது படைத் தலைவர்கள் முன்பாக அங்குமிங்கும் சிந்தனையுடன் நடமாடினான். தோபாவீவா கரை முழுவதும் சுவரால் அடைக்கப்படவில்லை. அங்குமிங்கும் சுவர் விட்டுவிட்டு ஓடுகிறது. இடைவெளிகள் மரங்களாலும் புதர்க ளாலும் மறைக்கப்பட்டிருக்கின்றன. இது ஒன்றை மட்டும் நாம் மறந்துவிட்டோம். அது மட்டுமல்ல புத்தத் துறவிகள் தவம் செய்யக் குகைகள் வேண்டும் என்பதையும் மறந்துவிட்டோம். அத்தகைய குகைகள் நான்கு இருக்கின்றன வாவிக் கரையை ஒட்டி. அவற்றிலொன்றைச் சுடர்விழி எனக்குக் காட்டினாள். அங்குதான் நான் இந்த முடிவுப் போர்த்திட்டத்தை வகுத்தேன்'' என்று கூறி திட்டத்தை விளக்கினான். ''அடுத்த அமாவாசையன்று உணவுப் படகுகள் வரும்போது அவற்றை நாம் தடுப்போம். அன்றே போரை யும் துவங்குவோம். ஒரு நாள் தாக்குதல் போதும் எதிரிகளை அழிக்க,'' என்று விஜயன் திட்டத்தை விவரித்தான்.

திட்டம் அபாயமானதுதான்; ஆனால் பலன் தரக்கூடியது என்பதை நுவரகிரி ஒப்புக் கொண்டார். பிறகு கேட்டார். ''நமது படைகள் கோட்டையைச் சுற்றியிருக்க, ஒரு முகமாக நாம் தாக்குவதற்கு வழி என்ன?'' என்று. விஜயன் விளக்கலானான்; ''அமாவாசை நள்ளிரவில் ஆகாயத்தில் எரியம்பு ஒன்று சீறிவரும்.

zeevaa

அதுதான் தாக்கும் சமயம்,'' என்ற விஜயன், ''மூர்சமத்! அந்த அம்பைக் கண்டதும் நீ வடபுறத்திலிருக்கும் பிரதான கதவை உனது பெரிய வண்டியின் மரத்தைக் கொண்டு இடிக்க முயற்சி செய். நாம் கொண்டு வந்திருக்கும் யானைகளில் நாலைந்தை அதற்கு உபயோகப்படுத்திக் கொள். ரவிதேவா! காலா! நீங்களிருவரும் நம்முடன் வந்திருக்கும் படைகளைக் கொண்டு முறையே கிழக்குச் சுவரையும் தெற்குச் சுவரையும் தாக்குங்கள். அந்தச் சுவர்களின் மேலிருக்கும் எதிரிகளை அழிக்கும் வழிகளை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. ஏணிகளைச் சுவர்களில் சாத்தி ஏறவேண்டாம். சுவர்களை நெருங்கி ஆகாயமளாவும் மரங்கள் நிரம்ப இருக்கின்றன. அவற்றில் ஏறி மௌனமாக இருங்கள். எரியம்பைக் கண்டதும் சுவர் மீதுள்ள வீரர்கள் மீது பாய்ந்து விடுங்கள். கதவுகளை இடிக்க முடியவில்லையானால் கதவுகளைத் திறக்க நான் ஏற்பாடு செய்கிறேன். போர் துவங்கும் முன்பு எங்கும் நிசப்தம் நிலவட்டும்.''

இப்படிப் போர்த் திட்டத்தை விளக்கிய விஜயன் சுவாமிகளை நோக்கி, ''சுவாமிகளே! இந்தப் போருக்கும் கலிங்கத்துக்கும் சம்பந்தமில்லை. நீங்கள் இதில் கலந்து கொள்ள அவசியமில்லை,'' என்றும் சொன்னான்.

சுவாமிகள் முகத்தில் மந்தகாசம் மலர்ந்தது. ''விஜயா! கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்க நாங்கள் இங்கு வரவில்லை. கலிங்கத்துக்கும் சோழ நாட்டுக்கும் என்றும் பகை உண்டு. கங்கை கொண்ட சோழன் கங்கைக்குக் கலிங்கத்தை மிதித்துத்தான் சென்றான். தவிர, கலிங்க ராஜகுமாரியை நீ மணந்திருக்கிறாய். ஆகையால் கலிங்கம் உனது நட்பு நாடாகிறது. மது மட்டுமல்ல, பல ஆபத்துக்களில் உன்னைக் கைவிடாதவர்களும் பூர்வாசிரமத்தில் பெரும் படைத் தலைவர்களாக இருந்தவர்களுமான எனது சீடர்களைப் போரிலிருந்து நிறுத்த முடியுமா?'' என்று துறவிப்

பெருமக்களான தாங்கள் போரில் ஈடுபட வேண்டிய அவசியத்தைத் தெரியப்படுத்தினார்.

அடுத்து, படைப் பிரிவுகள் நிற்கவேண்டிய முறை விவாதிக்கப் பட்டது. நுவரகிரி வடக்கிலும் ரவிதேவன், காலன் இவர்கள் கிழக்கு, தெற்கு திசைகளிலும் தாக்க வேண்டியதைப் பற்றியும், மேல் திசையை மூர்சமத் கவனித்துக் கொள்வானென்றும் திட்டம் செய்தான் விஜயன். அதற்குப் பிறகு போரைப் பற்றி எந்த விவாதமும் அடுத்த பத்து நாட்களுக்கு இல்லை. படைகள் ஆங்காங்கு நகர்த்தப் பட்டும் அவற்றுக்கான தளவாட வண்டிகள் அவற்றுடன் செலுத்தப்பட்டும் வந்தன. திட்டத்தை விவரித்த பிறகு, அவ்வப்பொழுது படைகளை எச்சரிக்கவும் மேற்பார்வை பார்க்கவும் விஜயன் தனது கரிய புரவியில் கோட்டைப் புறங்களைச் சுற்றி வந்தான். அவன் சென்றவிடமெல்லாம் மூர்சமதும் தனது பழுப்பு நிறப் புரவியில் அவனைத் தொடர்ந்தான். மாலைப் பொழுதில் சுடர்விழியுடன் ஏரிக்கரையிலும் அடர்ந்த காடுகளிலும் சஞ்சரித்தான். இரவில் கருங்கல் பள்ளியறையில் தங்கினான். ஒருநாள் சுடர்விழி கேட்டாள், "இது தவசிகளுக்காக ஏற்பட்டது. நீங்கள்...?" என்று.

"நானும் சந்நியாசிதான்," என்றான் விஜயன் நகைத்து.

"அர்ஜுன சன்னியாசி," என்றாள் சுடர்விழியும் நகைத்து.

"நான் அர்ஜுன சன்னியாசியல்ல. யாரையும் திருடிச் செல்ல அவசியமில்லை. சுபத்திரை தானாகவே என்னைத் தேடிவந்திருக் கிறாள்" என்ற விஜயன் அவள் முதுகுச் சேலையை நெகிழ்த்தினான்.

"என்ன இது?" வெகுண்டாள் சுடர்விழி.

"நினைவில்லையா உனக்கு?"

"எது?"

zeevaa

''பழைய கதை.''

''பழைய கதையா?''

''ஆம். அந்தப் பாழடைந்த மண்டபத்தில் என் போர்த்திட்டத்தை முதுகில் தீட்டிக் கொண்டாயல்லவா?''

''நானா தீட்டிக் கொண்டேன்? நீங்கள் தரையில் வரைந்தீர்கள். முதுகில் அப்படியே படிந்துவிட்டது.

''ஏன் அதன்மீது படுத்தாய்?''

''நான் படுத்தேனா, நீங்கள் படுக்க வைத்தீர்களா?'' இதைச் சொல்லிச் சீறினாள் சுடர்விழி.

''எப்படியிருந்தாலென்ன? உன் முதுகுக்கு ராசி உண்டு. இப்பொழுதும் போர்த்திட்டத்தைத் தீட்டுகிறேன் முதுகில்,'' என்று கூறி, கையிலிருந்த சுண்ணாம்புக் கல்லால் முதுகில் எழுதத் தொடங்கினான்.

அவன் கையைப் பிடித்து அவள் தடுத்தாள் ''இனி முதுகில் தீட்ட வேண்டியதில்லை திட்டத்தை, இதயத்தில் தீட்டிக் கொள்ளுங்கள். இன்னும் நான்கு நாட்களே இருக்கின்றன,'' என்றாள்.

நான்கு நாட்களும் ஓடின. அமாவாசையும் வந்தது. விஜயன் படைகள் கோட்டையைத் தாக்கச் சித்தமாய் நின்றன. ரவிதேவனும் காலனும் வீரர்கள் சிலருடன் மரக்கிளைகளில் பதுங்கியிருந்தார்கள். எங்கும் காரிருள் சூழ்ந்திருந்தது. எதிரிகள் வேண்டுமென்றே பந்தங்களைக் கொளுத்தாததால் புலஸ்திய நகரச் சுவர்கள் பிசாசுகளைப் போல் பயங்கரமாகக் காட்சியளித்தன. பெரும் கதவுகளை உடைக்கச் சித்தமாய் நின்ற பெரும் வண்டியும், கற்களை வீசும் யந்திர வண்டியும் சித்தமாக நின்றன. துறவிகள் நால்வரும் நான்கு திசையில் வாளேந்தி நின்றார்கள்.

zeevaa

நள்ளிரவு மெள்ளமெள்ள நெருங்கியது. தோபாவீவாவின் அலைகளா கூட அன்று ஏற்படக்கூடிய பயங்கரப் போரை நினைத்தோ என்னவோ, அலைகளைக் குறைத்திருந்தன. சுமார் பத்துப் படகுகள் மெல்ல மெல்ல நீரில் வந்து கொண்டிருந்ததும் விஜயன் கையால் சைகை செய்ய முருகனும் அவன் வீரர்களும் எதிரேயிருந்த பெரும் புதரில் மறைந்தார்கள்.

காட்டு மிருகங்களின் சிறு ஓலங்களைத் தவிர வேறு அரவம் ஏதுமில்லாத நிலையில் சிறிதும் சத்தமின்றிப் படகுகள் கரைக்கு இழுக்கப்பட்டன. முதல் படகில் வந்தவர்களில் தலைவனாகக் காணப்பட்டவன் சைகை செய்ய, மற்றப் படகுகளிலிருந்து இறங்கியவர்கள் பொதிகளைத் தூக்கிக் கொண்டு புதருக்குள் சென்றார்கள். முதலில் சென்ற நான்கு பேரும் திரும்பவில்லையென்றாலும் அதைப் பற்றி லட்சியம் செய்யாமலே மற்றவர்களும் புதருக்குள் நுழைந்தார்கள். பொதிகள் புதருக்குள் போனதும் வெளிவந்த விஜயன் சுடர்விழியை அழைத்து, ''சுடர்விழி, நீ என் பாசறைக்குப் போய்விடு. சீக்கிரம் உன்னைச் சந்திக்கிறேன்,'' என்றான்.

சுடர்விழி நகர மறுத்தாள். ''ஊருக்குள் செல்லும் வழி உங்களுக்குத் தெரியாது. எனக்கும் முருகனுக்கும் மட்டுமே தெரியும். நாங்கள் உடன் வருகிறோம்,'' என்று திட்டமாகச் சொல்லிவிட்டுப் புதருக்குள் நுழைந்தாள். பொதியைக் கொண்டு வந்தவர்களில் இரண்டு மூன்று பேர் இறந்து கிடந்தார்கள். மற்றவர்கள் தலைக்காயத்தினால் மயக்கமடைந்திருந்தார்கள். அவர்களைக் கவனியாமலே புதருக்குள் நடந்த சுடர்விழி, ''முருகா, நமது ஆட்கள் பொதிகளை எடுத்துக் கொள்ளட்டும். ஊருக்குள் சென்றதும் மேற்குச்சுவர் ஓரமாக நடந்து வடக்கு கதவுக்கருகில் இருக்கும் சிவதேவலே (தேவாலயம்) மண்டபத்தில் பொதிகளை இறக்கட்டும்,'' என்று உத்தரவிட்டு ஒரு பெரிய போர்வையால்

zeevaa

தலையிலிருந்து கால்வரை மூடிக்கொண்டு முன்னால் நடந்தாள். விஜயனும் மற்றோரும் அவளைப் பின்பற்றிச் சென்றனர். சுமார் நாற்பதடி தூரம் கடும் புதர்கள் வழியாக இருந்த ஒற்றையடிப் பாதையில் நடந்த சுடர்விழி, கடைசியாக ஒரு சுவருக்கருகில் நின்று அங்கிருந்த கருங்கல் கதவை அதற்கருகில் கிடந்த சிறு குழவி கொண்டு தட்டினாள். அடுத்த சில வினாடிகளில் கருங்கல் கதவு மெதுவாகத் திறக்கவே, பொதி மூட்டைகளைத் தாங்கியவர்கள் உள்ளே சென்றனர். கடைசியாக விஜயனும் சுடர்விழியும் அவர்களைத் தொடர்ந்தபோது கதவைத் திறந்த சோழ வீரன், "எங்கே பொதி?" என்று வினவி, குறுக்கே அவர்களைத் தடை செய்யக் கையை நீட்டினான். பின்னாலிருந்து முருகன் இரும்புச் சலாகையால் தலையைத் தாக்கியதால் அடுத்த வார்த்தை ஏதும் பேசாமல் வீரன் தரையில் சாய்ந்தான். அவனைத் தாங்கிப் பிடித்து, கதவுக்கு அப்புறம் தள்ளிக் கதவை முருகன் சாத்தியதும் பொதி மூட்டைகள் சிவதேவாலயத்தை நோக்கி நகர்ந்தன.

"வழி அதுவல்ல," என்று இரண்டு வீரர்கள் தடுக்க முயன்ற சமயத்தில், "முருகா! வில்லையும் அம்பையும் கொடு." என்று கேட்டு வாங்கிய விஜயன், "சுடர்விழி! நீ பொதிகளுடன் சென்றுவிடு," என்று கூறிவிட்டு, முருகன் எண்ணெய் தோய்த்துக் கொளுத்திக் கொடுத்த அம்பை ஆகாயத்தை நோக்கி எய்தான். அடுத்து விஜயன் அங்கு நிற்கவில்லை. சுடர்விழியைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு சிவதேவாலயத்தை நோக்கி ஓடினான். முருகனும் தொடர்ந்தான்.

தமிழர்களால் கட்டப்பட்டு பெரிய லிங்கத்தையும் ஆவுடையாரையும் கொண்டிருந்த அந்தத் தேவாலயத்தில் விஜயனும் சுடர்விழியும் நுழைவதற்கும் நகருக்கு உள்ளும் புறமும் பெரும் பிரளயம் நிகழ்வதற்கும் நேரம் சரியாயிருந்தது. எங்கும் ஓட்டம். கூச்சல். வீரர்கள் நாற்புறமும் தங்கள் காவலிடங்களுக்கு ஓடியதால்

zeevaa

காலணிகள் விளைவித்த பெரும் ஒலிகள் வெளியே யானைகளின் பிளிறல்களோடு இணைந்தன பயங்கரமாக. கோட்டைச் சுவர்மீது வாளும் கையுமாக ஏராளமான வீரர்கள் குதித்ததால் மதில்மீது ஏற்பட்ட பயங்கர ஆயுத ஒலிகள், வடபெருங் கதவில் மோதிய பெரிய மரத்துண்டு 'டணால் டணால்' என்று மோதிய பேரரவமும் புலஸ்திய நகரக்கோட்டைச் சுவர்களில் தாக்கிப் பிரதிபலித்தது. எங்கும் பீதியைப் பரப்பியது. உள்ளே முரசு பெரிதாக ஒலிக்க, வீரர்கள் பாசறைகளிலிருந்து வெளிப்போந்து காவலைப் பலப்படுத்தவும் போரில் குதிக்கவும் நானாவித ஆயுதங்களைத் தாங்கி நாலா திக்குகளிலும் விரைந்தார்கள். அடுத்த சில வினாடிகளுக்குள் பயங்கரப் போர் புலஸ்திய நகரத்தின் நான்கு பக்கங்களிலும் மும்முரமாக மூண்டுவிட்டது. புலஸ்திய நகரத்திற்குள்ளிருந்த தமிழர் படையும் எந்தச் சமயத்திலும் போருக்குச் சன்னத்தமாக இருந்ததாலும், பாசறைகளிலிருந்து படைவீரர் வரிசை வரிசையாக அணிவகுத்து முன்னேறியதாலும் போரின் மும்முரம் நாழிகைக்கு நாழிகை அதிகப்பட்டது.

அந்தச் சமயத்தில் மூர்சமதின் யந்திர வண்டியிலிருந்து வீசப்பட்ட பெரும் கற்கள் கோட்டைக்குள் வேகமாக வந்து சோழர், சிங்களர் என்று வித்தியாசம் பார்க்காமல் எல்லோர் மீதும் விழுந்து நாசத்தைப் பரப்பின. எங்கும் தீப்பந்தங்கள் கொளுத்தப்பட்டதால் இரவு ஓரளவு கிழிக்கப்பட்டது. உள்ளேயிருந்த வெளிச்சத்தில் போராடியவர்கள் கோட்டைச் சுவர்களுக்கு மேலே திடீர் திடீரெனச் சிங்கள வீரர் குதித்து வேலும் வாளும் கொண்டு காவல் வீரர்களை வெட்டிக் கோட்டைக்குள் தள்ளுவதையும், அப்படி தள்ளப்பட்ட வீரர்கள் அலறிக்கொண்டு மல்லாந்து குப்புறவும் பக்கவாட்டில் சாய்ந்தும் பலபடி வீழ்வதும் போரின் கோரத்தை அதிகப்படுத்தின. அடுத்த இரண்டு மூன்று நாழிகை நேரத்துக்குள் வடபெருங் கதவு பெருத்த சத்தத்துடன் இடிக்கப்பட்டு வீழ்ந்து விடவே அதன் மீது

zeevaa

விஜயனின் புரவி வீரர் பாய்ந்து வந்தனர். அவர்கள் முன்னணியில் தனது பெரிய வாளைச் சுழற்றி, எதிர்ப்பட்டவர்களையெல்லாம் வெட்டிச் சாய்த்துக் கொண்டு தனது பழுப்பு நிறப் புரவியில் மூர்சமத் வடக்குப் பெருவாயிலில் ராட்சஸன் போல் புகுந்து விட்டான்.



# 69. விஜய திலகம்

இந்திரத்வஜமே உடைந்து வீழ்ந்துவிட்டதுபோல் புலஸ்திய நகரத்தின் வடபெருங்கதவு இடிபோன்ற பேரொலியைக் கிளப்பிக் கொண்டு வீழ்ந்ததும், அதன் மூலம் பழுப்பு நிறப் புரவியில் புரவி வீரருடன் உட்புகுந்து விட்ட மூர்சமத் தனது பெரிய வாளால் எதிர்ப்பட்டோர் எல்லோரையும் வெட்டி வீழ்த்திக் கொண்டே செல்ல, புயலுக்குப் பின் இன்னொரு புயல் தொடருவதைப் போல ராட்சஸ நுவரகிரியும் தனது புரவிப் படையுடன் உள்ளே நுழைந்து தமது வீரர்களைப் பரவலாக நான்கு புறமும் போரிடும்படி வாளால் சைகை செய்யவே புலஸ்திய நகர முகப்பு வாயில் முழுவதிலும் பெரும்போர் துவங்கியது.

பெருவாயிற் கதவை மிதித்து வேகமாக வந்த மூர்சமதின் புரவியுடன் பக்கத்தில் தன்னந்தனியே வந்த கரிய நிறப் புரவி நாற்புறமும் தலையைத் திருப்பி வேகமாக வடகிழக்கு மூலையிலிருந்த சிவதேவாலயத்தை நோக்கி ஓடவே, அது வரும் வரை அம்புகளை எய்து எதிரிகளை அழித்துக் கொண்டிருந்த விஜயபாகு தனது புரவிமீது தாவி ஏறித் தனது மெல்லிய நீண்ட வாளை எடுத்துச் சமருக்குள் புகுந்தான். எத்தனையோ போர்களைக் கண்டிருக்கும் நுவரகிரி, விஜயன் கீழ்த்திசையில் புரவியுடன் நுழைந்ததும், மேல் திசையில் தனது படைப் பிரிவை நகர்த்தி, மூர்சமத் முகப்புச் சதுக்கத்தின் நடுவிலும் கிழக்குப் புறத்தில் விஜயனும் மேற்கில் தமது படைகளுமாகப் போரிட வழி வகுத்தார்.

zeevaa

இவ்வண்ணம் மூன்று பிரிவாகப் பிரிந்த விஜயபாகுவின் படைகளைச் சமாளிக்கத் தமிழர் படைத் தலைவன் குமரவேல் சித்தமாக இருந்ததால் சோத படைகளும் முப்புறத்திலிருந்த பாசறைகளிலிருந்து முன்னேறிச் சிங்களப் படைகளைச் சந்தித்தன. கோட்டையின் முகப்புச் சதுக்கத்தில் வடபெருங் கதவுக்கு அருகில் போர் மும்முரமாகியது. சோழர் படைகள் மிகுந்த வீரத்துடன் போராடுவதைக் கண்ட விஜயன், "எதிரி சப்பையல்ல, இந்தப் போரின் வெற்றி உண்மையான வெற்றிதான்," என்று உள்ளூர நினைத்த வண்ணம் வாளைச் சுழற்றிக் கொண்டும் எதிர்ப்பட்டோரையெல்லாம் வெட்டிக் கொண்டும் சீறிவரும் ராவண பாணம் போல் தனக்கெதிரே வந்த எதிரிப் படைகளை ஊடுருவி விட்டான். எதிரிகளின் நட்ட நடுவில் நுழைந்துவிட்ட எசமானைக் காக்க மூர்சமதும் தனது படையின் ஒரு பிரிவை வடகிழக்குப் புறமாகத் திருப்பிக்கொண்டு விஜயனின் உதவிக்கு வந்தான்.

நுவரகிரி இது எதையும் கவனிக்காமல் நீண்ட நாட்களாக ஆகாரம் கிடைக்காத பகாசுரன் போல் பெரிதாகக் கொக்கரித்துக் கொண்டு, தனது தடித்த அகலமும் நீளமும் கொண்ட பெருத்த வாளால் எதிரிகளை வெட்டி ஒவ்வொருவர் தலை உருண்டபோதும் கோரச் சிரிப்பு சிரித்தும், எதிர்ப்பட்டவன் மார்பில் தனது வாளைச் செலுத்திய போது அவன் மல்லாந்து புரவியிலிருந்து சாய்வதைப் பார்த்துப் பார்த்துச் சிங்கநாதம் செய்தும் போர்விருந்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்.

மூர்சமதின் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் இல்லை. அவன் குறுகிய தாடிக்கும் பெரிய மீசைக்கும் இடையே தெரிந்த உதடுகள் ஒவ்வொரு எதிரி விழுந்தபோதும் சற்று விரிந்து விரிந்து மூடின. விஜயனுக்குச் சிறிது உதவியளிக்க மூர்சமத் தனது படையின் ஒரு பகுதியைத் திருப்பிய போது, பிரிந்தபகுதிக்கும் மூர்சமதின் பிரிவுக்கும் இடையில் குமரவேல் தனது படையை நுழைத்துவிட்டு

zeevaa

மூர்சமதின் படையை இரண்டாகப் பிளந்துவிட்டான். அதனால் கிடைக்கக் கூடிய பயனைச் சோழர் அடையுமுன்பு நாற்புற மதில்கள் மேலிருந்தும் பயங்கரக் கூக்குரல் கேட்டது. அவர்களை அண்ணாந்து பார்த்த தமிழர் படைத் தலைவன் பெரிதும் திகைத்தான்.

*விஜயன் முன்கூட்டியே தீட்டிய திட்டப்படி கிழக்கு தெற்குச் சுவர்களை அடுத்திருந்த மரங்களில் ஏறிய ரவிதேவனும் காலனும் சிறிது நேரம் மௌனமாயிருந்து ஏதோ கீழ்நோக்கிச் சைகை செய்யவே, கீழேயிருந்த காலாட் படையினர் விற்களில் அம்பைப் பூட்டிக் கோட்டைச் சுவர்மீது காவல் செய்த எதிரி வீரர்கள்மீது அம்பு மழை பொழியவே திடீரென மாண்ட சில வீரர்கள் பெருத்த ஓலத்துடன் கோட்டையின் உட்புறம் மல்லாந்து வீழ்ந்தனர். அப்படிச் சிலர் வீழ்ந்தவுடனேயே விழிப்படைந்த மற்றத் தமிழ் வீரர்கள், வீழ்ந்த காவலர் இருந்த இடத்தை நிரப்ப விரைந்ததும் அவர்கள் மீது பெரிதாகக் கூச்சலிட்டுக் கொண்டு ரவிதேவன் வீரர்கள் கிழக்குச் சுவர் மீதும், காலன் வீரர்கள் தெற்குச் சுவர்மீதும் பாய்ந்து தங்கள் வாட்களைச் சுழற்றியும் வேல்களை வீசியும் அவர்களை ஆங்காங்கு தேக்கிவிட்டனர். கிழக்குச் சுவர்மீது ரவிதேவனும் தெற்குச் சுவர்மீது காலனும் மரங்களிலிருந்து குதித்து வாட்களை வீசிக்கொண்டு பாய்ந்தார்கள் எதிரி மீது. மகா பலசாலிகளென்றும், போரில் இணையற்றவர்களென்றும் சிங்களத்தில் பெயர் பெற்றிருந்த அந்த ரவிதேவனும் காலனும் சுவர்கள்மீது எங்கும் நாசத்தை விளைவிக்கத் தொடங்கினார்கள். எதிர்ப்பட்டவர்களை வெட்டிச்

---

* "The great heroes, the great fighters, the great warriors of the great King, the mighty ones with great pride, Ravideva, Cala and the others scaled the walls, broke furiously into the town and at once exterminated all the Damilas roof and branch" - Culavamsa - From an English Translation By Mrs. Mabel Rickmers - pp 207 - 208.

zeevaa

சுவர்மீது விழுந்த உடல்களை மிதித்து முன்னேறிப் போரிட்டார்கள். ரவிதேவன் இடதுகையில் எதிரியின் வேலொன்று பாய்ந்ததாலும் அதையே பிடுங்கி அதே வீரன் மீது எறிந்து அவனைக் கொன்று, ''விஜயபாகு வாழ்க!'' என்று வெற்றிக் கோஷம் செய்தான். எதிரி வேல் தைத்த இடத்திலிருந்து குமிழியிட்ட குருதியையும் அனாயாசமாகத் துடைத்துப் போரைத் தொடர்ந்து நடத்தினான். ரவிதேவனை விடக் காலன் தனது பெரிய சரீரத்தைச் சர்வ சாதாரணமாக வளைத்து வளைத்து ஒரு கையில் வேலையும் இன்னொரு கையில் வாளையும் கொண்டு நாசத்தை விளைவித்துக் கொண்டிருந்தான்.

சிங்களப்படையின் தொகை அதிகமென்றும் இம்முறை போராட வந்திருப்பவர்கள் எதற்கும் அஞ்சாத அரக்கர்களென்பதையும் உணர்ந்த பின்பும் குமாரவேல் தனது படைகளை இயக்கியதன்றி, தானும் போரின் நடுவுக்குப் புரவியுடன் வந்து மிகுந்த திறமையுடன் போரிட்டுக் கொண்டிருந்த சமயத்தில் மதில்கள்மீது திடீரென்று ஏற்பட்ட கூச்சலால் சிறிது தலை நிமிர்ந்து பார்க்கவே, சுவரை அடுத்திருந்த காட்டு மரக் கிளைகளிலிருந்து ரவிதேவனும் காலனும் குதித்து விட்டதையும் அவர்களைத் தொடர்ந்து மற்ற வீரர்களும் பாய்ந்து சுவர்மீது தாவி விட்டதையும், இந்த எதிர்பாராத முறையால் சற்றே அயர்ந்துவிட்ட தமது படைவீரர் நிர்மூலப்பட்டு வருவதையும் கண்டு மிகுந்த பிரமிப்பையும் அடைந்தான். கோட்டைச் சுவர்கள் மீது தான் எத்தனையோ பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தும், எதிரிகள் சம்பிரதாயப் போர் முறைப்படி ஏணிகளைச் சாத்திச் சுவர்கள் மீது ஏறாமல் மரக்கிளைகளிலிருந்து குதித்ததால் போரின் போக்கு மாறிவிட்டதை உணர்ந்தான். தவிர ரவிதேவன், காலன் இந்த இருவரின் பிரும்மாண்ட சரீரங்களைப் பார்த்து அரக்கர்கள் மனித உருவத்தில் வத்திருக்கிறார்களென்ற முடிவுக்கு வந்தான். அந்த இரு அரக்கரும் விளைவித்த நாசத்தைக் கண்ட குமரவேல் தன்னை எதிர்நோக்கி

zeevaa

வந்து கொண்டிருந்த நுவரகிரியை நோக்கி, மதில் தளத்தில் இரு ராட்சதர்களைத் தவிர தரையிலும் ஒரு ராட்சதன் வருகிறானென்ற நினைப்பில் மிகுந்த மும்முரத்துடன் நுவரகிரியைச் சந்திக்கச் சென்றான். அந்தச் சமயத்தில் நான்காவது ராட்சதனான மூர்சமத் வாளை நாலாபுறமும் பாய்ச்சி வீர கர்ஜனை செய்து கொண்டிருந்ததைக் கவனித்தான் தமிழர் தலைவன். நான்கு ராட்சதர்களால் தனது படைகள் நாசப்பட்டுக் குறைந்து வருதைக் கண்டு போரின் முடிவை எண்ணிச் சிறிது சந்தேகம் கொண்டாலும் போரிடுவதை நிறுத்தினானில்லை. தனது படைகளைச் சிறிது விலகச் சொல்லித் தான்மட்டும் நுவரகிரியை நோக்கிச் சென்றான். அருகில் வந்ததும் நுவரகிரியின் வாளைச் சந்திக்கவும் செய்தான். இருவர் வாட்களும் சளைக்காமல் மீண்டும் மீண்டும் சந்தித்தன. நுவரகிரியின் பெரிய வாள் தமிழர் தலைவனின் லாவகமான வாளுக்கு முன்பு ஏதும் செய்ய இயலாமல் தவித்த சமயத்தில் நுவரகிரி தனது நிதானத்தை இழந்து வாளை எதிரியை நோக்கி எறிந்துவிட்டுப் புரவியைச் செலுத்தி எதிரிமீது பாய்ந்து அவனையும் இழுத்துக் கொண்டு தரையில் விழுந்தார். தமிழர் த்லைவன் தரையில் வீழ்ந்ததும் வாளிப்பான சரீரத்தின் காரணமாக எழுந்து தனது வாளை ஓங்கினான் நுவரகிரியை முடித்துவிட. நுவகிரியின் வாழ்க்கை அந்த இடத்திலேயே முடிந்திருக்கும் வேறொரு மெல்லிய வாள் அதைத் தடுத்திருக்காவிட்டால். தமிழர் தலைவன் நிமிர்ந்து பார்த்தான் தனது வாள் தடைப்பட்ட காரணத்தைச் சர்ப்பம் போன்ற விஜயன் வாள் தனது வாளைத் தடுத்திருப்பதையும் கண்டான். கிழக்குக் கோடியி லிருந்த விஜயன் எப்படிப் போரின் நட்டநடுவுக்கு வந்தான் என்பது புரியாததால் விழித்தான் பிரமை பிடித்து.

எதிரியின் வாளை ஒரு சுழற்றுச் சுழற்றித் தட்டிவிட்ட விஜயன் புரவியிலிருந்தபடியே அந்த வாளை இடது கையால் பிடித்து

zeevaa

எதிரியிடம் எறிந்தான். அதைப்பிடித்த குமரவேல் தான் கருணையுள்ள தமிழன். ஆனாலும் போர் என்று வரும்போது இரக்கமற்ற அரக்கனாக முடியும் என்பதை நிரூபித்தான். வினாடி நேரத்தில் மீண்டும் மன்னனளித்த வாளை ஏந்தித் தனது புரவிமீது தாவினான்.

சோழ தளபதிக்கும் சிங்கள மன்னனுக்கும் போர் மும்முரமாக நடந்தாலும் விஜயன் சண்டையைச் சீக்கிரம் முடிக்கவில்லை. இஷ்டப்படி வளைவதும் சர்ப்பம் போன்றதுமான தனது வாளால் எதிரியின் முரட்டுத் தாக்குதலைத் தடுத்தான் சில விநாடிகள். சில விநாடிகள் தமிழர் தலைவன் இதயத்துக்கு வாளைக்கொண்டு போய் இதயத்தைத் தொடாமல் மீண்டும் இழுத்துக் கொண்டான். எலியுடன் பூனை விளையாடுவதுபோல் விஜயபாகு தன்னிடம் விளையாடு வதைப் புரிந்துகொண்ட குமரவேல் தனது வாளை திரும்பத் திரும்ப விஜயன் தலைமீது கொண்டு போனான். திரும்பத்திரும்ப அவன் வாள் தடுக்கப்பட்டது. கடைசி ஒரு தட்டில் தமிழர் தலைவன் வாள் பறந்தது ஆகாயத்தை நோக்கி. அப்படியும் விடவில்லை தமிழர் தலைவன். பக்கத்திலிருந்த வேறொரு வீரனின் வாளை வாங்கிக் கொண்டு மறுபடியும் போரிட்டான்.

முகப்புச் சதுக்கமெங்கும் நடந்த கடும் போரில் தமிழர்படை மெள்ள மெள்ளப் பின்வாங்கலாயிற்று. சிறிது அவகாசம் இருந்தால் அந்தப் படையின் ஒரு பகுதியாவது மேற்கிலிருந்த அரண்மனை மண்டபத்தை அடைந்திருக்கும். அதற்கு ரவிதேவனும், காலனும் இடங்கொடுக்கவில்லை. கிழக்கிலும் தெற்கிலும் மதில்கள் மீதிருந்து குதித்து தங்கள் படைகளையும் குதிக்கச் செய்தார்கள். அந்த இருவர் படையும் அரண்மனைச் சுவர்களை அணைத்து நிற்கவே தமிழர் படை இடையே சிக்கிக் கொண்டது. என்ன செய்வதென்று தமிழர் தலைவன் நாற்புறமும் பார்த்தபோது நான்கு துறவிகள் வாளேந்திப் போரிட்டுக் கொண்டே மேற்கிலிருந்து சிறு சிறு வாசல்கள் வழியாக

zeevaa

நுழைந்து விட்டதையும் அவர்கள் போர் வெறி சாதாரண வீரர் போர் வெறியைவிட அதிகமாயிருந்ததையும் கண்டு என்ன செய்வதென்று புரியாமல் தவித்தான். அந்தத் துறவிகள் ''ஹரஹர மகாதேவ்'' என்று போர்க் கோஷத்தை எழுப்பியதால் அவர்கள் யார் பக்கம் என்பதை நிர்ணயிக்க முடியாத தமிழர் தலைவன் அவர்கள் எப்படி பௌத்தர்கள் பக்கம் இருக்கமுடியும் என்று சிந்தித்தான். விடை காணாததால் போரைத் தொடர்ந்து நடத்தினான்.

மூன்றாவது ஜாமம் முழுவதும் இடைவிடாது நடந்தது போர். நான்காம் ஜாமம் முடிந்ததும் நிற்கவில்லை. தமிழர் படை பெரிதும் தொகை குறைந்து சிறுபான்மையாகித் தவித்தது. கோட்டையிலிருந்த சிறு படையைவிட நான்கு மடங்கு அதிகமாக விஜயபாகுவின் படை எதிரிகளை அநேகமாக நிர்மூலம் செய்து விட்டது. அருணோதய சமயத்தில் போர் முடிந்து விட்டதால் கதிரவன் தனது செங்கதிர்களைப் புலஸ்திய நகரச்சதுக்கத்தில் பரப்பி அங்கிருந்த முண்டங்கள், பிண்டங்கள், குருதித் திட்டுக்கள், தசைச் சிதறல்கள் அனைத்து மீதும் பாய்ச்சிப் போரின் கோர முடிவை அதிகக் கோரமாக்கினான். கதிரவன் உதயமான சமயத்தில் சிங்கள விடுதலையும் உதயமாகி விட்டதை வலியுறுத்தச் சங்கங்கள் எங்கும் முழங்கின. முரசும் பலமாக ஒலித்தது. அப்பொழுது சிவதேவலே (தேவாலயத்தின்) வாயிலை அடைந்துவிட்ட தர்மரும் தமது பூஜை சங்கை ஊதினார். சிவதேவாலயத்தின் வாயிலுக்கு வந்த சுடர்விழியின் தலைமீது கைகளை வைத்து ஆசீர்வாதம் செய்தார். ''சுடர்விழி! விஜயன் மகேசிகளுக்குக் கிடைக்காத பெரும்பேறு உனக்குக் கிடைத்திருக்கிறது. விஜயன் வெற்றியில் நீ தான் பங்கு கொள்கிறாய்.'' என்று கூறினார். போரை முடித்துக் கொண்ட விஜயனும் தனது புரவியைச் செலுத்திக் கொண்டு சுடர்விழியை நோக்கி வந்தான். அந்த மகாவீரனின் உடலில் பல காயங்கள் இருந்தன. அவற்றிலிருந்து குருதியும் வந்து கொண்டிருந்தது. தனது

zeevaa

அருகாமையில் அவன் புரவி வந்ததும் சரிந்த விஜயனைத் தனது இரு கைகளாலும் தழுவினாள் சுடர்விழி.

"உன் மீது ரத்தம் படுகிறது," என்றான் விஜயன்.

"அதைவிடப் பாக்கியம் வேறு இல்லை," என்றாள் சுடர்விழி. அவன் கன்னத்தில் அப்பொழுது வழிந்த ரத்தத்தைத் தனது கையால் துடைத்து அந்த ரத்தத்தைக் கொண்டே விரல் ஒன்றால் அவனுக்கு விஜயதிலகமும் நெற்றியில் தீட்டினாள்.



zeevaa

# 70. போரின் முடிவும் துவக்கமும்

பொலனூருவா என்ற புலஸ்திய நகரத்தின் வீழ்ச்சியுடன் சிங்களத்தில் தமிழர் ஆதிக்கம் வீழ்ந்துவிட்டதையும், சிங்கள விடுதலைப் போரும் முடிந்துவிட்டதையும் காண விருப்ப முள்ளவன்போல், சாரதி அருணனின் செவ்விய கிரணங்களைக் கீறிக்கொண்டு தனது சுடு கிரணங்களுடன் கதிரவன் வானத்தே எழுந்தானானாலும், புலஸ்திய நகரத்துக்குள்ளும் வெளியேயும் காணப்பட்ட படுநாசத்தைப் பார்த்ததும் தனது முகத்தை அடுத்து எழுந்த கரிய மேகமொன்றில் புதைத்துக் கொண்டான். அந்த மேகத்தின் விளிம்பில் தெரிந்த சூரிய ஜோதி மட்டும் புலஸ்திய நகரத்தின் முகப்புச் சதுக்கத்தை நன்றாக எடுத்துக் காட்டியதால் அந்த ரணகளத்தைப் பார்த்த விஜயனும், விஜயதிலகம் இட்ட சுடர் விழியை நோக்கி, ''சுடர்விழி! உலகம் இத்தகைய நாசத்திலிருந்து எப்பொழுது விடுபடும்?'' என்று வினவினான்.

''மனிதன் ஆசையுள்ள வரையில் விடுபடாது,'' என்றாள் சுடர்விழி.

ரவிதேவன் மகள் இட்ட ரத்த திலகத்துடன் புரவியிலிருந்து இறங்கி, அவள் அரவணைப்பில் சிக்கிய விஜயன், ''சுடர்விழி! இது சமயமல்ல,'' என்று கூறினான்.

''எது?'' சுடர்விழி கேட்டாள்.

''இத்தனை காயங்களையுடைய என்னை நீ அணைப்பது,'' என்று விஜயன் சொன்னான்.

zeevaa



zeevaa

''இதுதான் முறை,'' என்றாள் சுடர்விழி. அப்பொழுதும் அவனைத் தழுவிய நிலையிலிருந்து விலகவில்லை அவள்.

''எல்லோரும் பார்க்கிறார்கள்.''

''இதில் ஒளிவு மறைவுக்கு இடமில்லை.''

''ஏன்?''

''இது வீர அணைப்பு. புராணத்தில் அனுமதிக்கப்பட்டது.''

''புராணமா? என்ன புராணம்?''

''காவியம்.''

''காவியமா?''

''ஆதிகாவியம். ராமாயணம், அன்று சீதை செய்ததை இன்று நான் செய்கிறேன்,'' என்ற சுடர்விழி, ''வீரரே! கரதூஷணாதிகளை சம்ஹாரம் செய்து உடல் பூரா காயங்களுடன் வந்த *ராமனை சீதை அப்படியே இறுகத் தழுவினாள். அதுவே அவன் காயங்களுக்கு இதமான ஒத்தடமாயிற்று எனறு விமர்சகர்கள் சொல்கிறார்கள்,'' என்றும் சுடர்விழி விளக்கினாள். ''இது சீதை காட்டிய வழி,'' என்றும் சொன்னாள்.

அந்த வீராங்கனையின் வீர அணைப்புக்கு அவளே சமாதானம் சொன்னாலும் விஜயபாகு, ''சுடர்விழி! சீதை ராமனைத் தழுவியது பர்ணசாலைக்குள். போர்க்களத்திலல்ல,'' என்று கூறி அவளுடைய தழுவலிலிருந்து சிறிது தன்னை விடுவித்துக் கொண்டான்.

---

★ *''தம் த்ருஷ்ட்வா சத்ருஹந்தாரம் மகர்ஷீணம் சுகாவகம், பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ பார்த்தாரம் பரிஷஸ்வஜே'' - வால்மீகி ராமாயணம் ஆரண்ய காண்டம் ஷஸ்வஜே தழுவுதல் - பரிஷஸ்வஜே - இறுகத் தழுவுதல்*

zeevaa

பிறகு தனது வாளிலிருந்த ரத்தத்தையும் சதைப் பற்றுக்களையும் தனது வலது கையால் துடைத்துவிட்டு அதை மீண்டும் உறையில் போட்டு ரணகளத்தை சுற்று முற்றும் நோக்கினான். ஏராளமான தமிழ் வீரர்களும் அவர்களில் கால் பங்கு சிங்கள வீரர்களும் மாண்டு கிடந்தார்கள். சில வீரர்களின் மேல் பாய்ந்த வேல்கள், அவர்கள் மல்லாந்து கிடந்ததால் அவர்கள் சடலத்திலிருந்து செங்குத்தாக நின்றன. இப்படி நின்ற பல வேல்கள் பாழடைந்த அனுராதபுரத்தின் விஹாரத் தூண்களைப் போல் விஜயன் கண்களுக்குக் காட்சியளித்தன. மற்றும் தலைகள் வெட்டப்பட்டதால் ஆங்காங்கு புரண்டு ஓடி, பனங்குலைப்பழங்கள் சிதறிவிட்டது போன்ற பிரமையை ஏற்படுத்தின. சுற்றிலுமிருந்த மதில் சுவர்கள்மீது உயிர்விட்ட சில வீரர்கள் கீழே விழாமல் அகலமான மேல்சுவரின் பாதியிலும், பாதி கீழுமாகத் தொங்கிக் கொண் டிருந்தது மிகப் பயங்கரமாக இருந்தது பார்ப்பதற்கு.

முகப்புச் சதுக்கத்தில் மல்லாந்து கிடந்த சில சடலங்களின் கண்கள் ஆகாயத்தை வெறித்து நோக்கிக் கொண்டிருந்ததால் சுவர்க்கத்தை எட்ட முயல்வதுபோல் தெரிந்தன. இன்னும் சில குப்புறவும், பக்கவாட்டிலும் கிடந்து பற்பல விபரீத நிலைகளைச் சிருஷ்டித்திருந்த கோரம் போரின் அநீதிகளைத் தெளிவாக்கியது. ஓரிரண்டு இடங்களில் நெருங்கிப் போரிட்ட சிங்களவரும் தமிழரும் சேர்ந்து மடிந்து மண்ணில் வீழ்ந்தபோதும் ஒருவர் கை இன்னொருவர் உடல்மீது கிடந்ததால் வாழ்வில் விரோதிகள், சாவில் நட்புக் கொண்டுவிட்டதை நிரூபித்தனர்.

இவற்றையெல்லாம் பார்த்த விஜயன், "சாவு மனிதர்களை ஒன்று படுத்துகிறது. செங்கோலும் மணி முடியும் சரிந்து மண்வெட்டி யுடனும், அரிவாளுடனும் மண்ணில் சமமாகக் கலந்துவிடுகிறது," என்று முணுமுணுத்தான் தனக்குள்.

"இந்த விபரீதங்கள் எப்பொழுது ஓயும்?" என்று சற்று இரைந்தே சொன்னான்

zeevaa

''மனிதனுக்கு மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை இருக்கும் வரையில் போகாது,'' என்ற சுடர்விழி, ''வாருங்கள்! நீராடி மேற்கொண்டு நடக்க வேண்டியதைக் கவனியுங்கள்,'' என்று சொல்லிக்கொண்டிருக்கையிலேயே வடக்கத்தி வாயிலில் பெரும ஓசை கேட்டது. கதவை இடிக்கும் வண்டிக்காகக் கொணரப்பட்ட யானைகள் இரண்டு உள்ளே வந்தன. ஒன்றின்மீது சிவகோகர்ண ஸ்வாமிகள் பெரிய குடத்துடன் உட்கார்ந்திருந்தார். நேராக யானை விஜயன் இருக்குமிடம் வந்ததும் யானை மீது உட்கார்ந்தபடியே, ''ஜெய விஜயீ பவ!'' என்ற கோஷத்துடன் குடத்திலிருந்த நீரைக் கொண்டு விஜயனுக்கு மங்களாபிஷேகம் செய்தார்.

விஜயன் சுவாமிகளுக்குத் தலை வணங்கி, ''சுவாமி! மங்களாபிஷேகத்துக்கு இடம் போர்க்களமில்லையே?'' என்றான்.

''விஜயாபிஷேகம் எங்கு நடப்பதும் பொருந்தும், அதுவும் இந்தத் தீர்த்தம் உன் முன்னோர்கள் நிர்மாணித்த தோபாவீவா (வாவி) யிலிருந்து எடுத்து வந்திருக்கிறேன்,'' என்று கூறிவிட்டு யானையை சிவ தேவாலயத்தை நோக்கிச் செலுத்தி அதை அங்கு மண்டியிடச் செய்து இறங்கி குடத்துடன் உள்ளே சென்றார். அங்கு இறங்கியதும் தனது சீடர்களை அழைத்து, ''நீங்கள் மீண்டும் துறவிகளாகலாம்,'' என்று உத்தரவிட தர்மர், அர்த்தர், காமர், மோக்ஷர் ஆகிய நால்வரும் கையிலிருந்து போர்க்கள ஆயுதங்களை எறிந்துவிட்டு ஏரியை நோக்கி விரைந்தனர்.

இத்தனைக்கும் விஜயன் மட்டும் போர்க்களத்தை விட்டு நகரவில்லை. மூர்சமதை அழைத்து எதிரி ஆயுதங்களையெல்லாம் திரட்டும்படியும், உயிருடனிருக்கும் எதிரி வீரர்களைச் சிறையில் வைக்குமாறும் உத்தரவிட்டான். ரவிதேவனையும், காலனையும் அழைத்துப் போர்க்களத்தைச் சுத்தம் செய்து, சடலங்களை யெல்லாம் நகருக்கு வெளியே புதைக்கும்படியும் உத்தரவிட்டான். அந்தச் சமயத்தில் ராட்சஸ நுவரகிரி விஜயனை நோக்கி வந்தார். ஏற்கனவே பயங்கரமான அவர் முகத்தில் ரத்தமும் சதைப்பற்றும்

தொங்கிக் கொண்டிருந்தன. வாயில்கூட ரத்தப்பசை இருந்ததால் அவர் பலரைப் பட்சித்து வந்த அரக்கன் போலவே காட்சியளித்தார். மன்னனிடம் வந்ததும் நுவரகிரி தனது பெரிய வாளை அவனது பாதங்களில் வைத்துத் தாமும் மண்டியிட்டு வணங்கினார். அவரைத் தனது இரு கைகளாலும் தூக்கிய விஜயன், "நுவரகிரி! இனி இலங்கை யாருக்கும் அடிமை இல்லை," என்றான்.

"தற்சமயம்," என்றார் நுவரகிரி.

புரிந்ததற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த விஜயன், "எதுவும் விதியைப் பொறுத்தது," என்று கூறி விட்டு, "சுடர்விழி! வா நீராட்டத்துக்குப் போவோம்." என்று கூறி அவள் பின்பற்றிவர, தோபாவீவா ஏரிக்குச் சென்றான். அந்தப் பரந்த நீர்ப்பரப்பில் நீராடினான் சுடர்விழியுடன். பிறகு தனது பாசறைக்குச் சென்று அங்கிருந்த புத்தாடைகளைப் புனைந்துகொண்டு சுடர்விழிக்கும் துறவிகளின் ஆடையொன்றைக் கொடுத்தான் உடுக்க.

"நான் துறவியல்லவே," என்று சுடர்விழி நகைத்தாள்.

"சில சமயங்களில் துறவியாவது தவறல்ல," என்று விஜயனும் நகைத்தான்.

"அவ்வப்பொழுது ஆசிரமம் மாறுமாக்கும்?" என்று சுடர்விழி மேலும் நகைத்தாள். நகைத்தபடி காஷாயத்தால் தன் உடலை மூடிக்கொண்டு சுய ஆடையை நெகிழ விட்டாள். பிறகு அவன் ஆடையையும் எடுத்துக் கொண்டு இருவர் ஆடைகளையும் உலர்த்த மரங்களில் கட்டினாள்.

"இது பணிப்பெண் வேலையல்லவா?" என்று விஜயன் கேட்டான்.

"இல்லை மனைவியின் வேலை," என்றாள் சுடர்விழி.

அவள் ஆடைகளை மரக்கிளைகளில் கட்டிய அழகைப் பார்த்துக் கொண்டே இருந்தான் விஜயன். எட்டாத கிளைகளை எட்ட அவள்

zeevaa

குதித்தபோது குலுங்கிய அவள் எழில் பகுதிகளைப் பார்த்துப் பரவசப்பட்டான். அந்த சமயத்தில் சற்று முன்பு நடந்த போரின் கோரம், நாசம் எல்லாம் அவன் மனத்திலிருந்து மறைந்தன. எந்த விபரீதத்தையும் மறக்க மனிதனின் புத்தியில் ஏதோ யந்திரம் இருப்பதைப் புரிந்து கொண்டான் விஜயன். சற்று நேரத்திற் கெல்லாம் ஆடைகளை மரத்தில் கட்டிமுடித்த சுடர்விழியுடன் அங்கிருந்த மரத்தின் அடியில் உட்கார்ந்து கொண்ட விஜயன், தான் நாட்டிலிருந்து கிளம்பிக் கலிங்கம் சென்ற நாளாக நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் எண்ணிப் பார்த்து, "நல்ல தியாகமும், கஷ்ட நஷ்டங்களும் இன்றிச் சுதந்திரம் வருவதில்லை. சம்பாதித்த சுதந்திரத்தைக் காப்பாற்றுவது சுதந்திரம் சம்பாதிப்பதை விடக் கஷ்டம். சுதந்திரத்தை அடைவதைவிட, சுதந்திரத்தைக் காப்பாற்றத் தியாகம் அதிகம் வேண்டும். இனி என்ன நடக்குமோ?" என்று உள்ளூர எண்ணமிட்டான்.

அன்று முழுவதும் அவன் புலஸ்திய நகரத்துக்குள் போகவில்லை. இரவு மூண்டபின்பே அவனுக்குப் பட்டணப் பிரவேசத்துக்கு அழைப்பு வந்தது சிவகோகர்ண ஸ்வாமியிட மிருந்து. நான்கு துறவிகளும் வந்து அவனை அழைத்தனர். "மன்னவா! உங்கள் அரண்மனை சித்தமாகி விட்டது. நகரமும் சுத்தமாகி விட்டது. போரும் முடிந்துவிட்டது." என்றார் தர்மர்.

"இல்லை," என்று மறுத்தார் அர்த்தர்.

வியப்புடன் அர்த்தரை நோக்கினார் தர்மர். அர்த்தர் பதில் சொல்லவில்லை. எட்டக் காட்டுக்குள் சுட்டிக் காட்டினார். காட்டின் ஊடே ஒரு ரதம் வந்து கொண்டிருந்தது.

"இப்பொழுதுதான் போர் துவங்குகிறது." என்றார் காமர்.

ரதம் சற்று எட்டவே நின்றதும் அதிலிருந்து திரிலோக சுந்தரியும் லீலாவதியும் குதித்து விஜயனை நோக்கி வந்தனர்.

zeevaa

# 71. நிர்வாணம்

அமாவாசையை அடுத்த அந்தப்பிரதமை திதியிலும் அமாவாசை இருளுக்குச் சிறிதும் குறையாத காரிருள் எங்கும் சூழ்ந்திருந்தாலும், அந்த இருளைக் கிழிக்கப் புலஸ்திய நகரத்தின் கோட்டை மதில்களில் எரிந்த பெரும் பந்தங்கள் வீசிய பொன்னிற வெளிச்சத்தின் ஊடே வந்த ரதமும், ரதத்தைக் காவல் புரிந்த வீரர்களும் நன்றாக விஜயன் கண்களுக்குப் புலனானதால் அவன் இதழ்களில் இளநகையொன்றைத் தவழவிட்டுக் கொண்டே, தேரிலிருந்து தேவதைகள் போல் இறங்கிய தனது தேவியர் இருவரையும் ஊன்றிக் கவனிக்கவே செய்தான். அந்த இரு மகேசிகளும் உயர்ந்த சேலைகளையும் ஆபரணங்களையும் அணிந்து அரியணை ஏறிய அரசிகளைப் போன்ற கம்பீரத்துடனும் நிமிர்ந்த தலையுடனும் அழகுகளெல்லாம் அசைய அவனை நோக்கி நடந்துவரத் துவங்கிய பின்பும், அருகே வந்த பிறகும் கூட அவர்களை வரவேற்காமலும், அவர்கள் வருகையைக் குறித்து மகிழ்ச்சியை இம்மியளவும் காட்டாமலும் கல்லென மரத்தடியில் விஜயன் உட்கார்ந்தபடி இருந்ததைக் கண்ட அவ்விருவரும் அவனெதிரே வந்ததும் சிலையென நின்றுவிட்டனர். தாங்கள் வந்ததைக் கணவன் ரசிக்கவில்லை என்பதை உணர்ந்ததும் அதற்கெல்லாம் காரணம் சுடர்விழியே என்று நினைத்து அவள்மீது சீற்றம் மிகுந்த விழிகளைத் திருப்பினார்கள் இரண்டு மகாராணிகளும், அப்பொழுது சுடர்விழி காலையில் விஜயன் அளித்த காஷாயத்துடனேயே நின்றிருப்பதைப் பார்த்த இரு மகாராணிகளில் லீலாவதியே பேசத் தொடங்கி, ''சுடர்விழி! நீ எப்பொழுது துறவியானாய்?'' என்று விசாரித்தாள்.

zeevaa

சுடர்விழி தனது பெரிய செவ்விய இதழ்களில் இன்பநகை கூட்டி, "இதில் என்னிஷ்டம் என்று ஒன்று இருக்கிறதா என்ன? அவர் துறவியாக்கினால் நான் துறவி, இல்லத்தாளாக்கினால் இல்லத்தாள்," என்று பதில் சொன்னாள்.

இதைக் கேட்டதும் திரிலோகசுந்தரி இகழ்ச்சி நகையைத் தனது இதழ்களில் படரவிட்டு, "சிங்களச் சக்கரவர்த்தி தான் உனக்குக் காஷாயம் அணிவித்தாரா?" என்று கேட்டாள் சொற்களில் இகழ்ச்சி ஒலிக்க.

"சுந்தரி! பொறாமையில் சொற்கள் மாறுகின்றன," என்று சுடர்விழி குறிப்பிட்டாள்.

"என்ன சொற்கள்? எப்படி மாறிவிட்டன?" கலிங்கன் மகள் வினவினாள்.

"காஷாயம் அளித்தாரா என்பதற்கும், அணிவித்தாரா என்பதற்கும் வித்தியாசமிருக்கிறதல்லவா?" சுடர்விழி வெட்கத்துடனும் சற்றுக் கோபத்துடனும் கேட்டாள்.

திரிலோகசுந்தரி இதற்குப் பதில் சொல்ல முடியாததால் சில விநாடிகள் தத்தளித்தாலும் சமாளித்துக் கொண்டு, "இப்படி நீ சொல்லாராய்ச்சி செய்வாயென்று எனக்குத் தெரியாது" என்று கூறினாள்.

"சொல்லாராய்ச்சி செய்யவில்லை சுந்தரி, ஆராய்ச்சி செய்தேன். வீணாக என்மீது பொறாமைப்பட்டுப் புலம்ப வேண்டாம். இதோ மகாராஜா இருக்கிறார். உங்களுக்கே அவர் புடவை கட்டிவிடட்டும். நான் போகிறேன்," என்று சொல்லிவிட்டுச் சுடர்விழி சற்று அப்புறமாக அடியெடுத்து வைத்தாள்.

அதுவரை அவர்கள் சம்பாஷணையில் குறுக்கிடாதிருந்த விஜயன், "சுடர்விழி! நில்," என்று அதட்டினான். பிறகு மகேசிகள்

zeevaa

வரவால் சற்று ஒதுங்கி நின்ற துறவிகள் நால்வரையும் அழைத்து, "இவர்களை சிவகோகர்ண ஸ்வாமியிடம் அழைத்துச் செல்லுங்கள். புலஸ்திய அரண்மனை அந்தப்புரத்தில் மகாராணிகள் இருவரும் தங்கட்டும்," என்று கூற, தர்மர் அவர்களை நோக்கி நடந்து வந்து, "மன்னர் சொன்னதைக் கேட்டீர்களல்லவா?" என்று வினவி, "வாருங்கள் செல்வோம்," என்று கூறி முன்னால் நடந்தார். நகரத்தின் வடபெரும் வாயிலை நோக்கி.

அர்த்தர், காமர், மோட்சரும் அவரைத் தொடர்ந்தார்களென்றாலும் இருந்த இடத்தைவிட்டு மகாராணிகள் இருவரும் அசையவில்லை. தர்மர் ஒருமுறை திரும்பித் தன் பின்னால் துறவிகள் மூவர் மட்டும் வருவதைப் பார்த்து, "இதற்கு என்ன அர்த்தம்?" என்று வினவினார்.

"மகாராணிகள் வரவில்லையென்று அர்த்தம்," என்றார் அர்த்தர்.

"காமம் அவர்களை ஆட் கொண்டு விட்டது," என்றார் காமர்.

"தற்சமயம் அவர்கள் இஷ்டத்திற்குக் கதிமோக்ஷம் கிடையாது," என்று மோட்சரும் தமது ரசனையையும் விஷமத்தையும் காட்டினார்.

மற்ற சீடர்களின் கருத்துக்களைக் கேட்டதாலும் மகாராணிகள் தொடராததாலும் திரும்ப விஜயனிடம் வந்த தர்மர், "மகாராஜா! மகாராணிகள் வருகிறார்களா இல்லையா?" என்று வினவினார்.

விஜயன் கோட்டையை நோக்கிய வண்ணம், "அவர்களையே கேளுங்கள்," என்று கூறினான்.

தர்மர் சொற்களைக் கொட்டாமல் கண்களினாலேயே கேள்வி கேட்டார்.

அவர் கண்களின் குறிப்பை அறிந்த லீலாவதி, "நாங்கள் மட்டும்தான் நகருக்குள் வரவேண்டுமா?" என்று எரிச்சலுடன் கேட்டாள்.

zeevaa

''சுடர்விழி என்ன செய்யப் போகிறாள்?'' என்று திரிலோகசுந்தரி சினம் தோய்ந்த சொற்களை உதிர்த்தாள்.

''சுடர்விழியைப் பற்றி மன்னர் உத்தர்வு ஏதும் இடவில்லை,'' என்றார் தர்மர்.

''உத்தரவிட்டால் உடனே பணியும் குணம் சுடர்விழிக்கு உண்டு,'' என்றார் அர்த்தர்.

இதனால் வெகுண்ட சுந்தரி, லீலாவதி இருவரும் தங்கள் சீற்றத்தை வெளிப்படையாகவே காட்டினார்கள். ''மன்னருக்கு நாங்கள் பணியமாட்டோமென்கிறீரா?'' என்று சுந்தரி கேட்டாள்.

''எங்கள் குணத்தைப் பற்றிப் பேச உங்களுக்கு என்ன உரிமையிருக்கிறது?'' என்று லீலாவதியும் வினவினாள்.

''வேறு வழியில்லை,'' என்றார் காமர்.

''எதற்கு?'' என்று சீறினாள் லீலாவதி.

''உங்களை நகருக்கு அழைத்துப்போக மன்னர் உத்தரவு. நீங்கள் இசையாததால் பேச்சு எழுந்தது. பேச்சு எழுந்ததால் குண விமர்சனம் அவசியமாயிற்று,'' என்றார் மோக்ஷர்.

மோக்ஷருக்குப் பதில் சொல்லாத சுந்தரி, ''எங்களை மன்னர் அழைத்துப் போனால் என்ன?'' என்று வினவினாள்.

இதற்குத் தர்மர் திட்டமாகவே பதில் சொன்னார், ''மன்னர் உங்களை அழைத்துப் போக முடியாது,'' என்று.

''ஏன்?'' லீலாவதி வியப்புடன் வினவினாள்.

''இன்னும் பட்டணப்பிரவேசம் நடக்கவில்லை. அதற்கு முன்பு மன்னர் நகருக்குள் நுழைய முடியாது. மன்னர்கள் நடவடிக்கைகளுக்குச் சில முறைகள் உண்டு,'' என்று சொன்ன தர்மர்,

''நான் என் சகாக்களுடன் முன்னால் போகிறேன். நீங்கள் உங்கள் காவல் வீரர்களுடன் ரதத்தில் வாருங்கள்,'' என்று முன்னால் போகத் தொடங்கினார். அப்பொழுதும், ''சுடர்விழி'' என்று ஏதோ பேசத் துவங்கிய லீலாவதியை, ''மீண்டும் மீண்டும் சுடர்விழியைப் பழிப்பதை நிறுத்துங்கள். அந்தச் சுடர்விழி சமயத்தில் வராவிட்டால் புலஸ்திய நகரம் மன்னர் கையில் விழுந்திருக்காது. நாளைக்கே நீங்கள் அரியணையில் அமர்ந்தால் அதற்குச் சுடர்விழிதான் காரணம். இந்த உண்மையை நீங்கள் புரிந்துகொள்வது நல்லது,'' என்றும் கூறிய தர்மர் வேகமாக நடந்துவிட்டார். மற்ற மூன்று துறவிகளும்கூட அவரைப் பின்தொடர்ந்தார்கள்.

மரத்தடியிலிருந்த பாறாங்கல்லில் உட்கார்ந்திருந்த மன்னனைப் பார்த்த சுந்தரி, ''அப்படியனால் நாங்கள் போகிறோம்'' என்றாள்.

சரி என்பதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் அசைத்தான் மன்னன். ''எங்களிடம் பேசக்கூட இஷ்டமில்லையா?'' என்று கேட்டாள் லீலாவதி.

''எப்படிப் பேசுவார் லீலாவதி? கோட்டையைப் பிடித்தவளிருக்க நம்முடன் ஏன் பேசவேண்டும்?'' என்ற சுந்தரி தலையை ஒருமுறை ஆட்டிவிட்டும் சுடர்விழியை உஷ்ணத்துடன் நோக்கி விட்டும் நடந்தாள், ரதத்தை நோக்கி லீலாவதி பின்தொடர.

ரதமும் ரதத்தின் காவலுக்கு வந்த புரவி வீரரும் வடபெரும் வாயிலுக்குள் நுழைந்தபோது பேரிகைகள் சப்தித்தன. நுவரகிரி எட்ட நின்று ராணிகளைத் தலைவணங்கி வரவேற்றார். அணிவகுத்து நின்ற வீரர்கள் மகாராணிகளுக்கு வாட்களைத் தாழ்த்தி அஞ்சலி செய்து ஜெயகோஷம் கிளப்பினார்கள். நன்றாகச் சுத்திகரிக்கப்பட்டிருந்த அந்த மாநகருக்குள் சென்ற ரதம் அரண்மனை முன்பு நிறுத்தப்பட்டதும் பணிப்பெண்கள் மங்கள கீதம் பாடி ஆரத்தி எடுத்து மகாராணிகளை அந்தப்புரத்துக்குள் அழைத்துச் சென்றனர்.

zeevaa

அந்தப்புரத்தைப் பார்த்த திரிலோகசுந்தரி பிரமிப்பின் உச்சத்தை அடைந்தாள். அதுவும் தனக்கும் லீலாவதிக்கும் பிரிந்து விடப்பட்டிருந்த இரு அறைகளின் அழகையும் பஞ்சணைகளையும் அலங்கார ஆசனங்களையும், ஆங்காங்கு வைக்கப்பட்டிருந்த வெண்கலச் சிலைகளையும் கட்டிலை அடுத்து நின்ற தூங்கா விளக்கு நாச்சியார் சிலைகளையும் பார்த்துப் பிரமித்து, 'அப்பா! சிங்கள மன்னர்கள் எந்த நாட்டு மன்னர்களுக்கும் குறைந்தவர்கள் அல்லர்,' என உள்ளூர சொல்லியும் கொண்டாள்.

லீலாவதி இந்த வைபோகத்தை ஏற்கனவே அறிந்திருந்தவளாதலாலும், தனது தந்தை ஜகதீபாலன் ஆட்சியிலேயே அரண்மனை போகத்தையும் செல்வாக்கையும் பார்த்திருந்த காரணத்தாலும் சர்வசகஜமாகவே அறைக்குள் நுழைந்தாள்.

இரு ராணிகளுக்கும் நீராட வசதிகளைப் பணிப்பெண்கள் செய்து கொடுத்ததால் இருவரும் நீராடி ஆடை அணிந்ததும் அவர்களுக்குப் பணிப்பெண்கள் உணவருந்த ஏற்பாடு செய்ய இருவரும் உணவருந்தாமல் சிறிது பாலை மட்டும் அருந்தி, தாழ்வரை மூலம் நகரைக் கவனித்தார்கள். அரண்மனையை அடுத்திருந்த சதுக்கத்தில் வீரர்கள் பெருவாரியாக உலாவிக் கொண்டிருந்தார்கள். வடக்கின் பெருவாசலின் பெருங்கதவுகள் திறக்கப்பட்டே இருப்பதையும் அங்கும் காவல் பலமாயிருப்பதையும் கவனித்த மகாராணிகள், அவ்வப்பொழுது வண்டிகளில் கொண்டுபோகப்பட்ட காயமடைந்த வீரர்களின் தொகையைப் பார்த்து, போர் மும்முரமாக நடந்திருப்பதையும் புரிந்து கொண்டார்கள். நகரத்தின் கோடி மூலை யொன்றிலிருந்து எழுந்த அழுகுரல்கள் மாண்ட வீரர்களின் குடும்பத்தாரின் புலம்பல் அது என்பதைப் புரிந்து கொண்டதால் துன்பத்துக்கும் அனுதாபத்துக்கும் வசப்பட்டார்கள். நாலா புறங்களிலும் கோட்டையிலும் ஒளி விட்ட வரிசையான பந்தங்களைப் பார்த்த சுந்தரி, "லீலாவதி! சுற்றிலும் ஒளிவிடும் இந்த விளக்குகளின் வரிசையைப் பார். இந்த நகரமே

zeevaa

மாணிக்க மாலை. அணிந்த பிரமையை ஏற்படுத்துகிறது." என்றாள். "இந்த மாலையை அணிவித்தவள் சுடர்விழி" என்றும் எரிச்சலுடன் சொன்னாள் லீலாவதி.

அவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் அங்கு வந்த நுவரகிரி, "மகாராணிகள் சௌக்கியத்தைப் பார்க்க வந்தேன். ஏதாவது தேவையிருந்தால் சொல்லுங்கள்," என்றார்.

"தேவை ஏதுமில்லை" என்ற சுந்தரி, நுவரகிரி! உங்களை ஒரு சந்தேகம் கேட்கலாமா?" என்றாள்.

"கேளுங்கள் மகாராணி."

"இந்த நகரத்தின் வீழ்ச்சிக்கும் மன்னர் வெற்றிக்கும் சுடர்விழிதான் காரணம் என்று சொல்கிறார்களே, இது உண்மையா?"

"முற்றிலும் சத்தியம். சுடர்விழி வராவிட்டால் கருங்கல் குகை இருப்பது எங்களுக்குத் தெரியாது. அது தெரியாவிட்டால் நகருக்குள் நுழையும் ரகசிய வழியும் தெரியாது."

"கருங்கல் குகையா?"

"ஆம்."

"அங்குதான் சுடர்விழி இருந்தாளா?"

"சுடர்விழி மட்டுமல்ல, மன்னரும் தங்கினார்."

"சுடர்விழியுடன்?"

"ஆம்."

"தனியாக?"

"ஆம் வேறு யார் அங்கு போக முடியும்?"

zeevaa

இதற்குமேல் ஆத்திரம் பொங்கியதால் பேசவில்லை சுந்தரி. லீலாவதி கேட்டாள். "இன்றிரவும் அங்கு தான் தங்குவார்களா?" என்று.

"வேறு இடம் ஏது?" என்று சொன்னார் நுவரகிரி சூதுவாது ஏதுமின்றி.

சுமார் நள்ளிரவுவரை உறக்கம் வராத மகாராணிகள் இருவரும் கோட்டைக்கு வெளியே போகத் தீர்மானித்து அந்தப்புரத்திலிருந்து கிளம்பியபோது, அவர்களை நோக்கி வந்த ஒரு புரவி வீரன், "எங்கு போகிறீர்கள்?" என்று வினவினான்.

"மன்னரும் சுடர்விழியும் இருக்குமிடத்துக்கு," என்றாள் சுந்தரி.

"குகைக்கா?" என்று வீரன் வினவினான்.

"ஆம்," என்றாள் லீலாவதி.

"அங்கு போய்ப் பயனில்லை," என்றான் வீரன்.

"ஏன்?" சுந்தரி வினவினாள் சினத்தால் உதடுகள் துடிக்க.

"இருவரும் நிர்வாணத்திலிருக்கிறார்கள்," என்று வீரன் சர்வசகஜமாகச் சொன்னான்.

"என்ன உளறுகிறாய்?" என்று இரைந்து சீறினாள் சுந்தரி.

"தவறாக நினைக்காதீர்கள்." என்று கெஞ்சினான் வீரன். "நிர்வாணம் என்றால் நீங்கள் நினைப்பதல்ல, பொருள் வேறு. நீங்கள் நிர்வாணம் அடையும் சமயம் வரும்," என்றும் கூறி ராணிகள் முன்பு மண்டியிட்டான்.

என்ன சொல்வது என்று அறியாமல் தவித்த ராணிகளுக்கு ஆதரவு தர அந்தச் சமயத்தில் சிவகோகர்ண ஸ்வாமியும் அங்கு வந்து சேர்ந்தார். நடந்த விஷயத்தைக் கேட்டதும் சுவாமிகள்

zeevaa

வாய்விட்டுப் பெரிதாக நகைத்தார். ''நிர்வாணத்துக்குச் சிறந்த பொருள் உண்டு.'' என்று நிர்வாணத் தத்துவத்தைப் பற்றி விவரிக்கவும் முற்பட்டு, ''கால் விஹாரத்துக்குப் போனால் உங்களுக்குப் புரியும்,'' என்று துவக்கினார்.



zeevaa

# 72. கண்ணின் இமை

சினத்துடன் நகரத்தின் உட்புறத்திலிருந்து வெளியேற முற்பட்ட மகாராணிகள் இருவரையும் இடையிலேயே சந்தித்த சிவகோகர்ண சுவாமிகள், அவர்கள் சினத்துக்குக் காரணத்தை உணர்ந்ததும் பெரிதாக நகைத்துவிட்டு நிர்வாணத்தின் மெய்ப்பொருளை விளக்க முற்பட்டு ''மகாராணிகளே! எந்தச் சொல்லும் சொல்பவர் பக்குவத்தைப் பொறுத்தது. நிர்வாணம் என்ன என்பதை நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை,'' என்று சொன்னார்.

இதைக் கேட்ட மகேசி லீலாவதி, ''சுவாமிகள் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறதாகத் தெரிகிறது'' என்று இகழ்ச்சி ததும்பும் குரலில் சொன்னாள்.

அந்த இகழ்ச்சியை சிறிதும் லட்சியம் செய்யாது சுவாமிகள், ''அதற்குத் தத்துவம் தெரிய வேண்டும்.'' என்று சொன்னார் உறுதியான குரலில்.

அதுவரை சினத்தை உள்ளடக்கிக் கொண்டு நின்ற திரிலோக சுந்தரி, ''என்ன தத்துவம்? நிர்வாண தத்துவமோ?'' என்று கேட்டாள், உள்ளூரக் குமுறல் இருந்ததால் உதடுகள் லேசாகத் துடிக்க.

''ஆம், பெண்ணே!'' என்று தமது சீடப்பெண்ணை ஏறெடுத்து நோக்கிய சிவகோகர்ண சுவாமிகள் ''மனிதன் பிறக்கும்போது ஆடை ஆபரணங்களைத் தரித்துக் கொண்டு பிறப்பதில்லை. நிர்வாணமாகப் பிறக்கிறான். போகும் போதும் சிதையில் சடலம் அழிவதற்கு முன்னால் அவன் துணிமணிகள் எல்லாவற்றையும்

zeevaa



zeevaa

அகற்றி விடுகிறார்கள். பிறப்பிலும் இறப்பிலும் நிர்வாணத்தை அடையும் மனிதன் இருக்கும்போது அந்தச் சொல்லுக்கே குற்றம் கற்பிக்கிறான். நமது மதத்திற்கும் புத்தபகவான் மதத்திற்கும் வித்தியாசங்கள் பல இருந்தாலும் அஸ்திவாரமான ஒன்றை மறுக்க முடியாது. உயிர் அழிவை நிறுத்த அவர் செய்த போதனை உலகமிருக்குமட்டும் அழியாதது. அப்பேர்ப்பட்ட புத்தர் கடைசியாக உயிர் நீத்து நிர்வாணம் அடைந்தார். அந்த மகா நிர்வாணத்தை உலகம் இன்றும் போற்றுகிறது. அந்த நிர்வாணம் காமக் கண்களுக்குப் புலப்படாது. எனினும் அதைப் புலப்பட வைக்க சிங்கள மன்னர்கள் கால் விஹாரம் என்ற அற்புதக் கலைச் சின்னத்தை சிருஷ்டித்திருக்கிறார்கள். அதைப் போய்ப் பாருங்கள் உங்கள் சித்தத்தில் சீற்றம் மறையும், சாந்தம் நிலவும்,'' என்று விளக்கினார். மகாராணிகளின் எதிரே அப்பொழுது மண்டியிட்ட வீரனை நோக்கி, ''மகாராணிகளைக் கால் விஹாரத்துக்கு அழைத்துப் போ,'' என்று உத்தரவும் இட்டார்.

''ரதம் கொண்டு வரட்டுமா?'' என்று வீரன் பணிவுடன் கேட்டான்.

''வேண்டாம்,'' -லீலாவதி சொன்னாள் எரிச்சலுடன்.

''புரவிகள்?'' என்று மீண்டும் ஒரு வினா தொடுத்தான் வீரன்.

''எந்த மண்ணாங்கட்டியும் வேண்டாம்,'' என்றாள் சுந்தரி.

''கொஞ்சம் தூரம் இருக்கிறது,'' என்றான் வீரன் பணிவுடன்.

''பாதகமில்லை. நடக்கிறோம்,'' என்று ராணிகள் இருவரும் ஒருமுகமாகச் சொன்னதும் வீரன் வழிகாட்டி நடக்க முற்பட்டான்.

அவனைப் பின்தொடர்ந்த மகாராணிகள் உள்ளத்தில் பொறாமைத்தீ சுடர்விழியை நினைத்துச் சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்ததால் அவர்கள் நடை ஓரளவு துரிதமாகவே இருந்தது. வீரன் சொன்னபடி கால் விஹாரம் அதிக தூரத்திலிருந்ததால்

zeevaa

கல்லிலும் முள்ளிலும் மகாராணிகள் நடக்கவேண்டி நேரிட்டது. இரண்டு நாழிகைகளுக்குப் பிறகு கால்விஹாரம் தூரத்தில் தெரிந்தபோது கூட அவர்கள் வேகம் நிற்கவில்லை.

பொலனுருவா என்ற புலஸ்திய நகரத்தில் வடக்குச் சுவரிலிருந்து நீண்ட தூரத்தில் இருந்த கால்விஹாரத்தை பார்த்ததும் மகாராணி களின் மன விகாரமும் பொறாமையும் கூட ஓரளவு நீங்கிற்று. நான்கு புத்தர் சிலைகளை உடையதும் சிங்களத்தின் மிகப்பெரிய சிற்பக் கலைக்குச் சான்றாக விளங்கியதுமான கால் விஹாரம் சரித்திரப் பிரசித்தி பெற்றது மட்டுமல்ல சரித்திர சர்ச்சையையும் உடையது. கால்விஹாரம் விஜயபாகுவின் பேரன் பாராக்கிரமபாகுவால் நிர்மாணிக்கப்பட்டது என்று சிங்கள சரித்திரமான மஹாவம்சம் கூறினாலும் ஆராய்ச்சியாளர்கள் அதை விஜயபாகு காலத்துக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இருந்ததாக மதிப்பிடுகிறார்கள் *கால் விஹாரத்தின் அற்புதமான பெரும் செங்கல்கள் 1200 வருஷத்தக்கு முந்தியவை என்பது ஆராய்ச்சியாளர்கள் கருத்து.

இத்தகைய பிராசீனமான கால் விஹாரத்தை நோக்கி அதன் தன்மையையோ அழகையோ பற்றி ஏதும் நினைக்காமலும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளாமலும், நடந்த மகாராணி களிருவரும் காரிருளையும், இரவில் பொலனுருவா வடக்குபகுதி கானகத்தின் விபரீத ஓசைகளையும் அலட்சியம் செய்தார்கள். ஒவ்வோரிடத்திலிருந்த மலைக் கற்கள் கால்களில் குத்தியும் அவற்றைப் பொருட்படுத்தாமலும், குத்திய கற்கள் பாதங்களில் விளைவித்த வலியைக்கூட உணராமலும் கால் விஹாரம் ஒன்றையே குறிக்கோளாகவும் அங்கிருந்த புத்தர் சிலைகளைவிடச் சிலைகளல்லாத நடமாடும் இருவரைப் பற்றி மட்டும் எண்ணியும்

---

* Galvihara at Polonurwa belong to the First Century After Christ it is now known that Paramabahu carried out some repairs to the original structure "Ancient Ceylon'! by H. Parker.

zeevaa

வேகமாக நடையைக் கட்டினார்கள். தொலை தூரத்தில் விஹாரம் தெரிந்ததும் அவர்கள் வேகம் அதிகமாயிற்று.

அவர்கள் கண்ணெதிரே கால் விஹாரம் மிகப் பெரிதாக எழுந்தது. அதை அடுத்திருந்த மலைப்பாறைகள் மீது முளைத்திருந்த சில செடிகள் உதிர்த்த புஷ்பங்கள் விஹாரத்தின் சில இடங்களில் விழுந்து நீண்டு பருத்திருந்த நிர்வாண புத்தருக்கு அர்ச்சனை செய்த பிரமையை அளித்தன. மேலே நிர்வாணத்தில் பளிச்சிட்ட நக்ஷத்திரங்கள் லேசாக மின்னிப் புத்த பகவான் சிலைகளை மனிதர்கள் அடையாளம் கண்டுகொள்ளச் சற்று உதவியும் செய்தன. அந்த மகோன்னதக் காட்சி மகாராணிகளின் உள்ளங்களையும் சிறிது தூய்மைப்படுத்தியிருக்க வேண்டும். அவர்கள் மௌனமாக அந்தப் புத்த சிலைகளைக் கவனித்தார்கள்.

''மகாராணிகள் விஹாரத்தின் அருகே சென்று தரிசிக்கலாம். புத்த பகவான் அருள் கிடைக்கும்,'' என்றான் வழிகாட்டி வந்த வீரன்.

பதிலுக்கு லீலாவதி ஒரே ஒரு வினா தொடுத்தாள். ''மகாராஜா எங்கே?'' என்று.

''இங்குதான் எங்காவது இருப்பார். பார்த்து வருகிறேன்,'' என்று வீரன் புறப்பட முயன்றான்.

''நீ பார்க்க வேண்டாம். நாங்களே பார்க்கிறோம்,'' என்றாள் சுந்தரி.

''இதைச் சுற்றிலும் வழி மிகக் கடுமை. சில சமயங்களில் துஷ்ட மிருகங்களும் வரும்,'' என்று வீரன் நிலையை எடுத்து வைத்தான்.

''வழியில் இதுவரை இல்லாத கடுமை என்ன இருக்க முடியும்?'' என்று லீலாவதி கேட்டாள்.

''குகைகளில் இருட்டு அதிகம்.'' வீரன் சமய சந்தர்ப்பம் தெரியாமல் பேசினான்.

''குகைகளா?'' சுந்தரி வினவினாள் இகழ்ச்சியுடன்.

zeevaa

''ஆம் மகாராணி! இங்குதான் மகாராஜா இருந்தார். இப்பொழுது காணோம். ஆகவே ஓய்வு எடுத்துக் கொள்ளச் சற்று எட்ட உள்ள குகைகளுக்குப் போயிருக்கலாம்.''

''அப்படியா?''

''ஆமாம்.''

''குகையில் தனியாகவா இருப்பார் மன்னர்.''

''அதெப்படி இருப்பார்? ராணியார்தான் இருக்கிறார்களே?''

''யாரடா அது ராணியார்?'' என்ற லீலாவதி, ''நீ போ,'' என்று விரட்டினாள் வீரனை.

வீரன் அசையவில்லை. ''மன்னர் இல்லாததால்...'' என்று உரையை நீட்டினான்.

''இல்லாததால்?'' சுந்தரி கேட்டாள்.

''இல்லாததால் இந்த விஹாரத்தின் தத்துவங்களை நானே எடுத்துச் சொல்லுவேன்,'' என்றான் வீரன்.

அவனை இரண்டு ராணிகளும் சினத்துடன் நெருங்கவே அவன் முதலில் பின்னால் இரண்டடி நகர்ந்து பிறகு திரும்பி வேகமாக நடந்தான். புலஸ்திய நகர வடக்குக் கோட்டைச் சுவரை நோக்கி, அவன் சென்றதும் சுந்தரியை நோக்கி லீலாவதி வினவினாள், ''சுந்தரி! நமது நிலையைப் பார்த்தாயா?'' என்று.

''பார்த்தேன். அவருக்குப் பதில் இவன் கால் விஹாரத்தைக் காட்டுகிறானாம். தத்துவம் சொல்கிறானாம். என்ன கேவலமாகி விட்டோம்?'' என்று சுந்தரி ஏக்கமும் கோபமும் இணைந்து ஒலித்த குரலில் பதில் சொன்னாள்.

''வா! சுந்தரி இந்த விஹாரத்திலுள்ள புத்தர் சிலைகளைப் பார்ப்போம்,'' என்று கூறிக்கொண்டே சிலைகள் இருந்த இடத்தை நோக்கி நடக்க முற்பட்டாள். ஏதும் பேசாமலும் சிந்தனை வசப்பட்டு

zeevaa

புத்தர் சிலைகளை அணுகியதும் அத்தனை காம விஹாரத்திலும் தூய்மை பெற்ற மனத்துடன் அந்தப் புத்தர்களைப் பார்த்தாள்.

மொத்தம் பிரும்மாண்டமான நான்கு புத்தர் சிலைகள் விஹாரத்திலிருந்தன. இடதுபுறத்திலிருந்து வலது புறமாக அமைந்திருந்த புத்தர் சிலைகளில் முதல் புத்தர் உட்கார்ந்த நிலையில் கண்களை மூடி தியானத்தில் ஆழ்ந்திருந்தார். அடுத்த புத்தர் உட்கார்ந்த வண்ணமே சீடர்களுக்குப் போதித்துக் கொண்டிருந்தார். மூன்றாவது புத்தர் நின்ற திருக்கோலத்தில் ஏதோ சிந்தித்துக் கொண்டும் துன்பத்துடனும் காணப்பட்டார். கடைசியாக இருந்த புத்தர் 43 அடி நீளத்துக்குப் படுத்துக் கிடந்தார். அவர் உயிர் நீத்து நிர்வாணமடைந்த நிலை இது.

இந்தச் சிலைகளைப் பார்த்து ஒவ்வொரு சிலையும் புத்தபிரானின் தத்துவங்களை விளக்குவதாகக் கருதிய ராணிகள் அவற்றின் முன்பு மண்டியிட்டுத் துதித்தார்கள். பிறகு லீலாவதி கேட்டாள். ''இதுதான் நிர்வாணமடைந்த புத்தர் சிலை. இதைப்பற்றி நாம் என்ன தவறாக நினைத்து விட்டோம். எத்தனை பாவம்!'' என்று.

சுந்தரி அதற்குப் பதில் சொல்லவில்லை. ''லீலாவதி! அவர் எங்கே என்று தெரியவில்லையே. அவரைத் தேடுவோம்'' என்று சுந்தரி கூறவே லீலாவதியும் கால் விஹாரத்திலிருந்து விலகி பக்கதிலிருந்த பாறைகளையும் காட்டுப் பகுதிகளையும் சுந்தரியுடன் சுற்றிப் பார்க்கத் தொடங்கினாள். இரண்டு மூன்று பாறைகளைக் கவனித்த பிறகு பெரிதாகத் தெரிந்த ஒரு குகையை நோக்கிச்சென்ற சமயத்தில் குகைக்குள்ளிருந்து விஜயன் குரல் கேட்டது. ''சுடர்விழி! இன்பமாயிருக்க வேண்டிய சமயத்தில் என் மனம் துன்பத்தில் ஆழ்ந்திருக்கிறது,'' என்றான் விஜயன்.

''துன்பத்திற்கு என்ன இருக்கிறது? புலஸ்திய நகரம் வீழ்ந்தது: சோழர்கள் முறியடிக்கப்பட்டார்கள். ராஜராஷ்டிரம் உங்கள் கைக்கு

zeevaa

வந்து விட்டது. இனி முடிசூட வேண்டியதுதானே பாக்கி?'' என்றாள் சுடர்விழி.

''சுடர்விழி! புலஸ்திய நகரம் சிங்களத்தின் இரண்டாவது தலைநகரம். மூத்த தலைநகரம் அனுராதாபுரம் என் வசமாக வேண்டும். அப்பொழுதுதான் சிங்களத்துக்குப் பூர்ண விடுதலை,'' என்றான் விஜயபாகு.

''அப்படியானால்?'' சுடர்விழி கேட்டாள்.

''நாளைக்கே அனுராதபுரம் புறப்படுகிறேன்.''

''என்னையும் அழைத்துப் போவீர்களா?''

''நீ எதற்கு?''

''உதவியாக இருப்பேன்.''

''என்ன உதவி நீ செய்ய முடியும்?''

''அப்படியானால் எனது சகோதரிகளை அழைத்துப் போங்கள்.''

''மூத்த மகாராணிகளா?''

''ஆம்.''

''உங்கள் எல்லோரையும்விடச் சிறந்த துணையை அழைத்துப் போகிறேன்.''

சுடர்விழி சீற்றம் அடைந்தாள். ''யார் அது?'' என்று சீற்றம் நிறைந்த குரலில் கேட்கவும் செய்தாள்.

''கண்களை எது பாதுகாக்கிறது?'' - இதை விஜயன் மன நெகிழ்ச்சியுடன் கேட்டான்.

''இமை,'' என்றாள் சுடர்விழி.

''அந்த இமையை அழைத்துப் போகிறேன்.''

''அந்த இமை யாரோ?''

zeevaa

''மூர்சமத்!'' என்று பதில் சொன்ன விஜயன் குரலில் அன்பு பெருக்கெடுத்தது.

இதைக் கேட்டதும் இரண்டு ராணிகளும் குகைக்குள் நுழைந்தார்கள். சுடர்விழியை அணைத்து நின்ற விஜயன் சரேலெனத் திரும்பி ராணிகளைப் பார்த்து, ''இங்கு எங்கு வந்தீர்கள்?'' என்று உஷ்ணத்துடன் வினவினான்.

''நிர்வாணத்தில் பங்கு கொள்ள'' என்றாள் லீலாவதி.

அவர்கள் வந்ததும் விஜயனை விட்டு சற்றே விலகிய சுடர்விழி ''வாருங்கள்,'' என்று அழைத்தாள்.

விஜயன் ஏதும் சொல்லவில்லை. ''பிறகு எங்கு வந்தீர்கள்?'' என்று கேட்டான்.

''வரக்கூடாதா? நாங்கள் வந்தது இடைஞ்சலாயிருக்கிறதா?'' என்று லீலாவதி கேட்டாள்.

''நீங்கள் வந்ததில் இடைஞ்சல் ஏதுமில்லை. அனுகூலமும் இல்லை. ஆனால் என் உத்தரவை மீறி வந்திருக்கிறீர்கள். கோட்டைக்குள் இருக்க உங்களை அனுப்பினேன். உத்தரவை மீறி வந்திருக்கிறீர்கள். கணவன் சொல் மீறாதிருப்பது கற்புடைய மகளிர் கடமை,'' என்று உஷ்ணமாகக் கூறினான்.

இரு மகாராணிகளும் மிகுந்த கோபத்துடன் குகையிலிருந்து வெளியேறத் துவங்கிய சமயத்தில் வேகமாக ஒரு புரவி வரும் ஒலி கேட்டது. விஜயனும் வாயிலுக்கு வந்தான். வேகமாக தனது பழுப்பு நிறப் புரவியில் வந்த மூர்சமத், ''மகாராஜா! சீக்கிரம் புறப்பட வேண்டும்,'' என்று அறிவித்துத் தலைவணங்கினான்.

''எங்கு?''

''அனுராதபுரத்துக்கு.''

''எதற்காக?''

zeevaa

''ஜேட்டதிஸ்ஸன் அவசரமாக அழைக்கிறார்.''

''காரணம் என்ன?''

காரணத்தைச் சொன்னான் மூர்சமத். விஜயன் மேற்கொண்டு ஏதும் பேசவில்லை. ''சரி எனது புரவியைக் கொண்டு வா,'' என்றான்.

''ராணிகள் வரப்போகிறார்களா?'' என்று மூர்சமத் வினவினான்.

''இல்லை.''

''கடைசி ராணி?''

''அவளும் வரவில்லை.''

''உங்களுக்கு?''

''துணை இமை.'' என்றாள் சுடர்விழி.

மூர்சமத் ஏதும் புரியாமல் விழித்தான்.

''நீ தான்,'' என்றாள் சுந்தரி.



zeevaa

## 73. சரச நாராசம்

ஒரு லட்சியத்தை நோக்கி நடக்கும் மனிதன் எப்பேர்ப் பட்டவனாயிருந்தாலும், எத்தனை பெரிய மனிதனாயிருந்தாலும், எத்தனையோ இடைஞ்சல்களையும் தாமதங்களையும் சகித்தவ னாயிருந்தாலும், தனது லட்சியம் கைகூடி விட்டது என்பதை அறியும்போது பல ஆண்டுகளின் தாமதத்தைப் பற்றிச் சிந்திக்காமல் அளவுக்கு மீறிய துரிதத்தையும் உணர்ச்சிகளின் வேகத்தையும் காட்டுகிறான். மூர்சமத் கொண்டு வந்த செய்தியைக் கேட்டதும் அத்தனை துரிதத்தையும் ஆவேசத்தையும் காட்டவே செய்தான் சிங்கள மகாராஜாவாகிவிட்ட விஜயபாகு.

மஹாநாககுலாவிலிருந்து வடமேற்குத் திசையில் கிளம்பிய ஜேட்டதிஸ்ஸன், சென்ற பல மாதங்களில் எந்தவித செய்தியும் அனுப்பாமல் திடீரென அனுராதாபுரத்துக்கு வரும்படி அழைப்பு அனுப்பவே, "எதற்கு அனுராதபுரத்துக்கு?" என்று ஜேட்டதிஸ்ஸன் செய்தியை அறிவிக்க வந்த மூர்சமதை வினவினான்.

"அனுராதபுரம் நமது கைவசமாகி விட்டதாம்; தாங்கள் வந்து அதை ஏற்றுக்கொள்ளும் வரையில் ஜேட்டதிஸ்ஸன் அந்த மாநகரின் வெளியிலேயே பாசறை அமைத்துத் தங்கியிருக்கிறார். உள்ளே உள்ள நமது கலைப்பொக்கிஷங்களைச் சுத்தி செய்யவும். சண்டையால் ஏற்பட்ட சில சேதங்களைச் சரிப்படுத்தவும் சிற்பி களை மட்டும் நகரத்துக்குள் அனுமதிக்கிறார். தங்கள் மூதாதைகளின் அந்தப் பழைய தலைநகரில் தங்கள் பட்டணப் பிரவேசம் நடந்த பிறகுதான் தானும் பிக்குவும் உள்ளே நுழைய முடியும் என்று செய்தி அனுப்பியிருக்கிறார்," என்று மூர்சமத் விளக்கியதும், "சரி, எனது

zeevaa



zeevaa

புரவியைக் கொண்டு வா'' என்று உத்தரவிட்ட விஜயபாகு, மூர்சமத் திரும்ப முயன்ற சமயத்தில், ''புலஸ்திய நகரத்துக்குள் இருக்கும் நுவரகிரியையும் சிவகோகர்ண ஸ்வாமியையும் வடக்கு வாசலுக்கு அழைத்து வா,'' என்றும் கட்டளையிட்டான். அடுத்து எட்ட நின்ற ராணிகளை நோக்கி, ''ராணிகளே! நீங்கள் இலங்கையின் சக்கரவர்த்தினிகளாகச் சிம்மாசனம் ஏறும் நாள் அதிக தூரத்தில் இல்லை. உங்கள் மூவரையும் அனுராதபுரத்திற்குள் அழைக்கும் முறையில் அழைக்கிறேன். இப்பொழுது அழைத்துப் போக வில்லையே என்று கோபிக்க வேண்டாம்,'' என்று அவர்களைச் சமாதானப்படுத்தினான்.

அவன் சமாதானத்தினால் அவர்கள் சினம் அடங்கியதாகத் தெரியவில்லை. மூவரும் மூன்று விதமாகத் தங்கள் வெறுப்பைக் காட்டினார்கள். லீலாவதி தனது முகவாய்க் கட்டையைத் தோளில் இடித்துக் கொண்டாள். திரிலோகசுந்தரி தனது இதழ்களை வெறுப்புடன் கடித்துக் கொண்டாள். சுடர்விழி இப்படி ஏதும் செய்யாவிட்டாலும் அவள் அமரிக்கையிலும் குனிந்து நிலத்தை நோக்கி அவள் நின்ற நிலையிலுமே எதிர்ப்பு இருந்தது. மூன்று ராணிகளையும் ஒருவர்மீது ஒருவராகத் தனது கண்களால் அளவெடுத்த விஜயன் புன்முறுவல் கொண்டு, ''பெண்களைத் திருப்திப்படுத்த யாராலும் முடியாது,'' என்று சற்று இரைந்தே சொன்னான். ''நீங்கள் மூவரும் எத்தனை நாட்கள் என்னுடன் தனித்து இருந்திருக்கிறீர்கள்! என்னை என்ன ஆட்டம் ஆட்டி வைத்திருக்கிறீர்கள்?'' என்றும் கூறி லேசாக நகைத்தான்.

அதுவரை வாளாவிருந்த லீலாவதி கேட்டாள் ''ஆட்டி வைத்தது நீங்களா? நாங்களா?'' என்று.

''உங்கள் மனச்சாட்சியைக் கேளுங்கள்,'' என்றான் விஜயன்.

''எங்கள் மனச்சாட்சி சரியாகத்தானிருக்கிறது. உங்கள் மன சாட்சியைக் கேட்டுக் கொள்ளுங்கள்,'' என்றாள் திரிலோகசுந்தரி.

zeevaa

''கேட்க என்ன இருக்கிறது?'' என்று விஜயன் கேட்டான்.

திரிலோகசுந்தரியின் முகத்தில் லேசாகச் சினம் படர்ந்தது. உறுதியாகவும் சினத்துடனும் பேசமுற்பட்ட திரிலோகசுந்தரி, ''கலிங்கத்திலிருந்து உங்கள் கஷ்டங்கள் சகலத்திலும் பங்கு கொண்டு உங்களைத் தொடர்ந்து வந்தேன். அப்பொழுதெல்லாம் ஒவ்வொரு நாளும் நான் வேண்டியிருந்தது. உங்கள் ஊருக்கு வந்தபின்பு 'என்னுடன் இங்குவராதே, அங்குவராதே, தாம்பல காமத்தில் இரு' என்று என்னை விலக்க ஆரம்பித்தீர்கள். போர் எனக்குப் புதிதா? மரக்கலத்தில் நடந்த போர்களைவிட, ஹண்டு மானின் பயங்கர நிகழ்ச்சிகளைவிட இங்கு என்ன பிரமாதமாக நடந்துவிட்டது?'' என்று வினவினாள், சினம் சொற்களிலும் ஊடுருவ.

லீலாவதியும் சொன்னாள், ''நான் ராஜபுத்ர ஸ்திரீ, போர் எங்கள் ரத்தத்தில் ஓடுகிறது,'' என்று.

சுடர்விழி ஏதும் பேசவில்லை. ''நீ ஏன் பேசவில்லை சுடர்விழி?'' என்று கேட்டான் விஜயன்.

சுடர்விழி நிலத்திலிருந்த தனது கண்களை உயர்த்தி, ''பேச என்ன இருக்கிறது பிரபு? நான் மகேசியல்ல. சாதாரணக் குடியில் பிறந்தவள். எனக்கு உங்கள் ராணியாகும் உரிமையை அளித்ததற்கே நான் கடமைப்பட்டிருக்கிறேன். உங்கள் சொல் எனக்கு உத்தரவு,'' என்றாள்.

இதைக் கேட்ட விஜயன் பதிலேதும் சொல்லவில்லை. லீலாவதியே சொன்னாள். ''இப்படிப் பசப்பிப் பசப்பிப் பேசித்தான் அவரைக் கைக்குள் போட்டுக் கொண்டிருக்கிறாய்,'' என்று.

சுடர்விழி தன் சுடுவிழிகளை லீலாவதியை நோக்கித் திருப்பினாள். ''மகாராணி! எனக்கு நடிக்கத் தெரியாது. நான் பேசியது பசப்பு வார்த்தையா அல்லவா என்பதுகூட எனக்குத்

zeevaa

தெரியாது. ஆனால் நான் சொன்னது கசப்பு வார்த்தையல்ல,'' என்றாள்.

''ஆம். அவருக்குக் கசக்காது,'' என்றாள் லீலாவதி.

''இனிக்கும்,'' என்றாள் திரிலோகசுந்தரி.

இந்தச் சண்டை இன்னும் முற்றியிருக்கும் எட்ட இருந்த வடக்கு வாசலில் முரசுகள் பெரிதாக ஒலிக்காவிட்டால். முரசுகள் பலமாக ஒலித்ததோடு மட்டுமல்லாமல் படை வீரர்களின் ஜயகோஷமும் பலமாக எழுந்தது. தன்னை வழியனுப்ப வாயிலுக்குச் சகலரும் வந்துவிட்டதை உணர்ந்த விஜயன் தன்னைத் தொடரும்படி ராணிகளுக்குச் சைகை செய்துவிட்டு வடக்கு வாயிலை நோக்கி நடந்தான்.

அங்கு விஜயனுக்கு வாழ்த்துக் கூற நுவரகிரியும் அவன் உபதலைவர்களும், சிவகோகர்ண ஸ்வாமிகளும், தர்மர், அர்த்தர், காமர், மோட்சர் ஆகியோரும் சித்தமாக நின்றிருந்தனர். விஜயனும் ராணிகளும் கோட்டை வாசலை அணுகியதுமே ''ஜய விஜயீ பவ'' என்று பெரிதாக வாழ்த்தொலி கிளப்பினார் சிவகோகர்ண ஸ்வாமிகள். அவரது சீடர்களும் நன்றாக இரைந்து சுவாமிகளின் தாஷ்டீகக் குரலுக்குத் தங்கள் குரல் தாழ்ந்ததில்லை என்பதை நிரூபித்தார்கள்.

சுவாமிகள் முன்பு மண்டியிட்டு வணங்கிய விஜயபாகு. ''சுவாமி! தங்கள் ஆசீர்வாதத்தால் எடுத்த காரியம் முடிந்தது. அனுராதபுரம் என்னை வரவேற்கச் சித்தமாயிருக்கிறது. நீங்கள் அனுமதித்தால் சென்று வருகிறேன்,'' என்றான் மிகுந்த பணிவுடன்.

சுவாமிகள் அவனைக் குளிர நோக்கி அவன் தலைமீது தனது கையை வைத்து, ''விஜயபாகு! சுதந்திரத்தை அடைவது கஷ்டம். அதைவிட அதைப் பாதுகாப்பது மிகக் கஷ்டம். இனிமேல்தான் உனக்குச் சோதனைகள் வரும். அதில் தேறி இலங்கையை முதன்

zeevaa

முதலாக ஒரு குடையின்கீழ் ஆண்ட சக்கரவர்த்தியாக விளங்குவாய்," என்று ஆசீர்வதித்தார்.

"ததாஸ்து", என்று அவரது சீடர் நால்வரும் ஆசீர்வாதம் செய்தார்கள்.

அவர்களை நோக்கியும் தலை வணங்கிய விஜயன், "சுவாமிகளே! விடைபெற்றுக் கொள்கிறேன்" என்று கூறிவிட்டு, "நுவரகிரி! அனுராதாபுரமும் நமது கைக்கு வந்து விட்டதால் சிங்களம் முழுவதையும் வெற்றிகொண்டு விட்டோம். இதை நாடு முழுவதும் பறையறைவித்துத் தெரியப்படுத்த ஏற்பாடு செய்யுங்கள். ஜேட்டதிஸ்ஸன் இஷ்டப்படி அனுராதபுரத்தில் நான் பிரவேசித்துவிட்டு வருகிறேன்," என்று ராட்சத நுவரகிரிக்கு உத்தரவிட்டான்.

சுவாமிகள் கேட்டார், "விஜயபாகு! தனியாகவா போகிறாய் அனுராதபுரத்துக்கு?" என்று.

"இல்லை, மூர்சமதும் வருகிறான்," என்றான் விஜயன்.

"உனது ராணிகள்?" சுவாமிகள் சற்று விஷமமாகக் கேட்டார்.

"உங்களிடமிருக்கட்டும்," என்று சொன்னான் சிங்கள மன்னன்.

"என்னிடமா?"

"ஆம்"

"அது பயனில்லை"

"ஏன் சுவாமி?"

"என் ஆசிரமத்தில்தான் திரிலோகசுந்தரி இருந்தாள் உன்னைக் கண்டதும் உன்னுடன் ஓடிவிட்டாள். ஒருத்தியை உன்னிடமிருந்து பாதுகாக்கவே என்னால் முடியவில்லை. மூவரை எப்படிப் பாதுகாக்க முடியும்?" என்று பேசிய சுவாமிகள் புன்முறுவல் செய்தார்.

zeevaa

''அனுராதபுரத்தில்...'' என்று ஏதோ பேசத் துவங்கினான் விஜயன்.

''பட்டணப் பிரவேசம் செய்வதுதான் முறை. ஆயிரம் புலஸ்திய நகரங்கள் பின்னால் வந்தாலும் அந்த ஆதி தலைநகருக்குத் தனிப்பெருமை உண்டு. அங்கிருந்த அரியணையில் தான் உன் மூதாதைகள் உட்கார்ந்தார்கள். நீயும் அதில் உட்கார்,'' என்றார் சுவாமிகள்.

''சித்தம் சுவாமி,'' என்றான் விஜயன்.

''அதற்கு நீ மட்டும் தனித்து போய்ப் பயனில்லை. ராணிகளையும் அழைத்துப் போ. மனைவிகளில்லாமல் மங்கள மில்லை. பட்டணப் பிரவேசத்தை மூன்று ராணிகளுடன் செய்,'' என்று உத்தரவிட்டார்.

சிறிது தயங்கிய விஜயபாகு, ''சுவாமி! போகும் வழி எப்படியிருக்குமோ? என்ன ஆபத்திருக்குமோ? பெண்களை அழைத்துப் போனால்...?'' என்று சொற்களை முடிக்காமல் விட்டான்.

''ஒரு ஆபத்தும் உன்னை அணுகாது. தைரியமாகப் போ. உன் மகுடாபிஷேகத்தை நானே முன்னின்று நடத்தி வைக்கிறேன். சென்று வா மன்னவா,'' என்றார்.

சுவாமிகள் அனுமதி தந்ததும் ''நுவரகிரி! தகுந்த பாதுகாப்புடன் ராணிகள் தொடரட்டும்,'' என்று உத்தரவிட்டு, தனது புரவி மீது தாவினான் விஜயன். அந்தக்கரிய புரவியுடன் ராஜநடை போட்டது. மூர்சமதைத் தாங்கிய பழுப்பு நிறப் புரவி.

அனுராதபுரத்தை நோக்கி விஜயன் பயணம் செய்யச் செய்ய இடையே ஜேட்டதிஸ்ஸன் வசப்பட்ட புத்தகாமம், அர்த்தகிரி முதலிய கோட்டைகளைப் பார்த்துப் பிரமிப்படைந்தான். அந்தப்பெரும் கோட்டைகளைச் சிங்களப்படைகள் பாதுகாத்து

zeevaa

நின்றன. மன்னனையும் அவன் பின்னால் தொடர்ந்த ராணிகளின் ரதத்தையும் கண்ட வீரர்கள் அவர்களை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார்கள். அந்தக் கோட்டைத் தலைவர்கள் மன்னனையும் ராணிகளையும் உபசரிக்க அந்த மரியாதைகளையெல்லாம் பெற்றுக் கொண்டாலும் எங்கும் தங்காமல் நான்கு நாட்கள் இடைவிடாமல் பயணம் செய்து ஐந்தாவது நாள் அனுராதபுரத்தின் முன் புரவியைச் சிறிது நிறுத்தி அந்த மாநகரை ஏறெடுத்து நோக்கினான் விஜயபாகு. சோழர்களால் பலமுறை தாக்கிச் சேதப்படுத்தப்பட்ட போதிலும் அத்தனை சேதங்களையும் தாங்கி, பல காயங்களுடன் நிற்கும் மகா வீரனைப்போல் மிகுந்த கம்பீரமாக நின்றது அந்த மாநகர்.

அதன் வாயிலில் நின்ற வண்ணமே அதன் பெரிய தாகபாக்களையும், 1600 தூண்கள் கொண்ட செம்பு அரண்மனையையும், பல தூண்களைத் தாங்கிய மயில் மாளிகையையும் பார்த்துக் கொண்டே நின்றுவிட்ட விஜயனை, ஜேட்டதிஸ்ஸன் வரவேற்பே இந்த உலகத்துக்கு இழுத்தது.

''மகாராஜா! உங்கள் மூதாதைகள் தலைநகர் உங்கள் வருகைக்காகக் காத்திருக்கிறது,'' என்றான் ஜேட்டதிஸ்ஸன்.

''சரி நுழைவோம் வாயிலுக்குள்'' என்றான் விஜயன்.

'மகாராஜா மகாராணிகளும் வரட்டும்,'' என்றான் ஜேட்டதிஸ்ஸன் சற்று எட்ட வந்து கொண்டிருந்த ரதத்தை நோக்கியவாறு.

மகாராணிகளும் வந்ததும் ஜேட்டதிஸ்ஸன் சைகை செய்ய நகருக்குள்ளிருந்து சிங்கார உடையணிந்து ருஹுணாவின் ஆபரணங்களை அணிந்த நூறு மங்கையர் வெளியே வந்தார்கள். அவர்கள் கையிலிருந்த கும்பங்களில் திரிகள் எரிந்து கொண்டிருந்தன. அந்த மங்கள தீபங்களைக் கொண்டு மன்னனைச் சுற்றிவந்த மங்கையர் விளக்குகளின் திரிகளில் விரலை நீட்டிப் புகையெடுத்து மன்னனுக்கும் மகாராணிகளுக்கும் திருஷ்டி கழித்தார்கள்.

zeevaa

விஜயன் தனது ராணிகளுடன் உள்ளே நுழைந்தான். தூரிய வாத்யங்கள் முழங்க, முரசுகள் ஒலிக்க, யாழ்களின் கீதம் மயில் மாளிகையிலிருந்து ஒலிக்க, பட்டணப்பிரவேசம் சகல சம்பிர தாயங்களுடன் நடந்தது.

அன்றிரவு மயில் மாளிகையில் சயனத்துக்குச் சென்ற விஜய பாகுவைத் தனியாக அழைத்த ஜேட்டதிஸ்ஸன், ''மகாராஜா! தங்கள் பட்டாபிஷேகம் உடனடியாக நடப்பதற்கில்லை,'' என்றான்.

''ஏன்?'' வியப்புடன் வினவினான் விஜயன்.

காரணத்தைக் காதோடு காதாகச் சொன்னான் ஜேட்டதிஸ்ஸன்.

''எத்தனை படைகளுடன் வந்திருக்கிறான்?'' என்று வினவினான் விஜயன்.

பலத்தையும் விளக்கினான் ஜேட்டதிஸ்ஸன்.

மகாராஜா பதில் சொல்லவில்லை. ''நான் அரியணையில் அமரக் காலம் வரவில்லை,'' என்று மட்டும் கூறிவிட்டு மயில் மாளிகையின் உட்புறத்தில் நுழைந்து விட்டான்.

அவனை எதிர்கொள்ள வந்த ராணிகளை அவன் ஏறெடுத்துப் பார்க்கவும் இல்லை. அவர்கள் மூவரும் சரச வார்த்தைகளை மதுரமாக இசைத்தார்கள். அவை விரசநாராசமாக விழுந்தன விஜயன் காதுகளில். ''வெண்ணெய் திரண்டு விட்ட சமயத்தில் இப்படி ஒரு விபரீதமா?'' என்று எண்ணமிட்டான் விஜயன்.

zeevaa

# 74. நான்காவது காதலி

மயில் மாளிகையில் மகேசிகளுடனும் ராணி சுடர்விழியுடனும் மகிழ்ச்சியுடன் இரவைக் கழிக்கும் நோக்கத்துடன் அம்மாளிகையில் புகுந்த சமயத்தில் ஜேட்டதிஸ்ஸன் அப்படியொரு விபரீதச் செய்தியைக் கொண்டு வந்தது சிங்கள மன்னன் மனத்தை அடியோடு கலக்கிவிட்டதால் சிறிது நேரம் மௌனமே சாதித்த அவன், "நான் அரியணை அமரக் காலம் வரவில்லை," என்று உணர்ச்சிகள் குலைந்த நிலையில் பேசினான்.

மன்னன் குரலிலிருந்த ஏமாற்றத்தையும் ஏக்கத்தையும் கண்டு, "மன்னவா! இது நீங்கள் பொருட்படுத்த வேண்டிய விஷயமல்ல. ஆனால் இது உங்களால் வந்த ஆபத்துதான். இவனை முறியடிக்க நானும் நமது படைகளுமே போதும். உத்தரவு கொடுத்தால் உடனடியாக புறப்படுகிறேன்," என்று வீரம் ஒலித்த குரலில் கூறினான் ஜேட்டதிஸ்ஸன்.

விஜயபாகு தனது படைத்தலைவனை உற்றுநோக்கி, "என்னால் வந்த ஆபத்தா?" என்று வினவினான் துயரத்திலும் வியப்பு ஒலித்த குரலில்.

"ஆம் மகாராஜா! இந்த ஆதிமல்லனைத் தீர்த்துக்கட்ட உங்களுக்கு வாய்ப்புக்கள் பல இருந்திருக்கின்றன. உங்களிடம் நான் கேட்ட விவரங்களிலிருந்து ஆதிமல்லன் உங்களைக் கலிங்கத்துக்குத் தொடர்ந்து வந்து அங்கு உங்களை அழிக்க முயன்றிருக்கிறான். பிறகு சூ-சின்னிடம் சிக்கி அழிந்திருப்பான். ஆனால் நீங்கள் கலிங்கத்திலும் பிறகு கடலிலும் அவனைக்

zeevaa




zeevaa

காப்பாற்றினீர்கள். ஹண்டுமானில் கலிங்க ராஜகுமாரியை அழித்துவிடப் பார்த்தான். அப்பொழுதும் கருணை காட்டினீர்கள். சாரியிடமிருந்து அவனையும் சூ-சின்னையும் காப்பாற்றி விட்டீர்கள். கருணைக்கு ஓர் அளவு உண்டு. பாத்திரமும் உண்டு." என்று உணர்ச்சியுடன் சொற்களை உதிர்த்தான் ஜேட்டதிஸ்ஸன்.

அவன் சொற்களைக் கேட்டதாலும் அவன் குரலில் காணப்பட்ட உணர்ச்சிப் பிரவாகத்தாலும் சுயநிலையையும் தனது பழைய இடத்தையும் அடைந்துவிட்ட விஜயன், "கருணைக்குக்கூடப் பாத்திரம் உண்டா? இதே சிங்கள நாட்டில் இராவண சக்கரவர்த்தி படைக் கலங்கள் போய் பலமற்று நின்றுவிட்ட சமயத்தில் போருக்கு மறுநாள் வரும்படி இராமன் சொல்லவில்லையா? தனது மனைவியைத் தூக்கிக் கொண்டு வந்தவனுக்கே கருணை காட்டிய சரித்திரம் இங்கேயே நடந்திருக்கும்போது நாம் அதைப் பின்பற்றுவது தவறாகுமா?" என்று வினவினான்.

ஜேட்டதிஸ்ஸன் மன்னன் விவரணத்தைக் கேட்டதும் லேசாகப் புன்முறுவல் கொண்டு, "மகாராஜா! சரித்திரம் காலத்துக்குக் காலம் மாறுகிறது. உலகமும் சூழ்நிலைகளும் கூட மாறுகின்றன. இந்த ஆதிமால்யன் இராவணனல்ல. அத்தனை வீரம் இவனுக்குக் கிடையாது. இராவணனைப் போல் சிவபக்தனுமல்ல. இவனை இராவணனுடன் ஒப்பிடுவது சரியாகாது. குணங்களைப் பார்த்துத் தான் நாம் இரக்கம் காட்ட வேண்டும் ஏகாதசி விரதம் நல்லதுதான். ஆனால் *புலி ஏகாதசி பட்டினி கிடந்தால் மறுநாள் துவாதசி பாரணைக்கு (விடியற்காலை போஜனத்துக்கு) பசுமாட்டை அடித்துத் தின்றுவிடும்* துஷ்டன் நல்ல காரியம் செய்தாலும் அது தீமையாகத்தான் முடியும். ஆகையால் ஆதிமால்யனை நீங்கள் அத்தனை நாள் உயிருடன் இருக்கவிட்டதே பிசகு." என்று சினத்துடனும் தர்க்க ரீதியிலும் உவமைகளுடனும் பேசினான்.

---

★ உபோஷிதஸ்ய வ்யாக்ரஸ்ய பாரணம் பசுமாரணம் சாடு ச்லோகம்.

zeevaa

இந்த விவரணத்தைக் கேட்ட விஜயபாகு புன்முறுவல் கொண்டான். ''வீரனே! நீ இத்தனை பெரிய புலவனென்பது எனக்குத் தெரியாது. ஆனால் மனித குணங்களை மாற்ற முடியாது. நான் எத்தனையோ கொடுமைகளை அனுபவித்தும் எதிரிகளிடம் வெறுப்புக் கொண்டதில்லை. போர் வெறி கொண்ட இந்தப் பாருக்கு அஹிம்ஸையையே போதிசத்வர் உபதேசித்திருக்கிறார். முடியுமானால் அந்த வழி செல்ல இஷ்டப்படுகிறேன். இல்லையேல் மன்னன் செய்யவேண்டிய கடமையைச் செய்வேன்,'' என்ற விஜயபாகு, ''ஜேட்டதிஸ்ஸா! விதி என்பது ஒன்று இருக்கிறது. அதை யாரும் மாற்றமுடியாது. காலையில் இருக்கும் மனித நிலை மாலையில் கிடையாது. இன்று காலை மகுடாபிஷேக உற்சாகத்துடன் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு நிர்மாணிக்கப்பட்ட இந்த மாநகரத்துக்கு, சிங்களத்தில் முதலானதும் முதன்மையானதுமான போதிசத்வர் கொள்கைகளுக்கெல்லாம் இலக்கணம் போன்றதுமான இந்த இணையிலாப் பட்டணத்துக்கு வந்தேன். இங்குள்ள புண்ணியமான அற்புதமான இடங்களையும் எனது பட்டமகிஷிக்கு - கலிங்கன் மகளுக்குக் காட்டினேன். உவகை மிகுந்து கிடந்தோம் இன்று மாலைவரை. மாலை கொண்டு வந்தது இந்தப் போர்ச் செய்தியை, மகுடாபிஷேகத்தை ஒத்திப் போட்டுவிட்டு, புலஸ்திய நகரத்துக்கும் செய்தி அனுப்பிவிடு. உடனடியாகப் போர் வேண்டாம். ஆதிமால்யனை எதிர்ப்பில்லாமல் உள்ளே வரவிடு. அவனைச் சந்திக்க வேண்டிய இடத்தில் சந்திக்கிறேன். அதுவரை எனது இருப்பிடம் இந்த அனுராதாபுரம் தான்,'' என்று திட்டமாகக் கூறிய விஜயபாகு மயில் மாளிகைக்குள் நுழைந்து விட்டான்.

முழுக்க முழுக்க வைரம் பாய்ந்த மரங்களால் நிர்மாணிக்கப் பட்டதும், கிறிஸ்து மகான் சகாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டில், அதாவது விஜயபாகுவின் காலத்துக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிர்மாணிக்கப்பட்டதும், வட்டமாகத் தூண்கள்

zeevaa

அமைபப்பட்டதும், வாயிலில் இரண்டு இறக்கைகள் (மயிலின் தோகைகளைப் போல்) செதுக்கப்பட்டு அந்த மாளிகைக்கு மயிலின் சாயலை அளித்ததும், உள்ளே நுழைய நுழையப் பலவித சிற்பங்கள் கடையப்பட்டு மனத்துக்கு ரம்மியத்தை அளித்ததும், சிங்கள மகாராஜாவின் உல்லாச மாளிகையுமான, அந்தச் சிற்ப ஜாலத்துக்குள் நுழைந்து சென்ற விஜயன், அந்த மாளிகையும் தன்னைப்போல் கால கதியாலும், இடைவிடாத போர்களாலும் ஓரளவு சீரழிந்து கிடப்பதையும் பார்த்துப் பெருமூச்சுவிட்ட வண்ணம் உள்ளே நடந்து சென்றான்.

அத்தனை காலத்துக்குப் பின்னும் அடியோடு அழியாத காரணத்தால் சிற்சில பகுதிகள் சிற்பச் சிறப்போடு இருப்பதைக் கண்ட விஜயபாகு அங்கிருந்த தூண்களையும் ஒரு கையால் தடவிக் கொண்டே ஆழ்ந்த சிந்தனையுடன் நடந்தான். ஓரிடத்தில் ஒரு தூண் நீண்ட மயில் தோகையுடன் காணப்பட்டதால் சற்று நின்று அதை இறுகப் பிடித்தவன் அது சிற்பத் தோகையல்ல என்பதை உணர்ந்து ஏறெடுத்து நோக்கினான். அவன் கையில் சிக்கியிருந்தது திரிலோகசுந்தரியின் அழகிய தோளிலிருந்த தோகை போலவே தரையில் புரண்டதும், கழுத்தை அசைத்ததும் மயிலின் சாயலைப் போலவே இருத்ததை விஜயன் கண்டான். உள்ளே எழுந்த உணர்ச்சிகளை மறைக்க, ''இங்கு எதற்காக நிற்கிறாய்?'' என்று சீறவும் செய்தான். கலிங்கன் மகளை நோக்கி, ''என்னை வரவேற்க நீ அவசியமில்லை,'' என்று காரணமில்லாமல் வெறுப்புடன் பேசினான் சிங்கள மன்னன், அதைக்கேட்டு அவள் சற்றே ஒதுங்க, அடுத்த தூணை நாடிச் சென்று விஜயபாகு அங்கு லீலாவதி நின்றிருப்பதையும் அவள் மெல்லிய சரீரமும் வளைந்து மயிலின் சாயலைப்போல் இருப்பதையும் பார்த்தான். அவளைத் தனது இடது கையால் ஒதுக்கிவிட்டு மேலே நடந்தவன் மூன்றாவதாகச் சுடர்விழி வழி மறித்திருப்பதையும் பார்த்தான். கைகளை உயரத் தூக்கி வழியை மறித்து நின்றதாலும், அன்று அவள் அணிந்திருந்த

மெல்லிய சேலை உடலில் எழுந்து விரிந்து கிடந்ததாலும், தோகை விரித்த புஷ்டியான மயிலைப்போலவே காணப்பட்டாள் சுடர்விழி. மற்ற இருவரிடம் காட்டிய சீற்றத்தை சுடர்விழியிடம் காட்டாத விஜயன் அவளைத் தாண்டிச் சற்று எட்ட இருந்த பஞ்சணையில் அமர்ந்தான்.

மூன்று மயில்களும் அவனை மூன்று பக்கங்களில் சூழ்ந்தன. சூழ்ந்த மூவரில் பின்னால் நின்ற சுடர்விழியின் மார்பில் அவன் தலை சாய்ந்து கிடந்தது. வலதுபக்கத்தில் மெதுவாக அமர்ந்த லீலாவதி, ''ஏன் ஏதோமாதிரி இருக்கிறீர்கள்?'' என்று விசாரித்து நெருங்கினாள் சரீர அமைப்பில் திட்டமாகவும் அந்தத் திட்டத்தினாலேயே பேரழகுடன் விளங்கிய திரிலோகசுந்தரி அவன் எதிரிலேயே நின்றாள். அவனை நெருங்கவோ கையால் தொடவோ முயலவில்லை அவள். அவளை உட்காரச் சொல்லவில்லை விஜயன். ஏதும் பேசாமல் அவன் மௌனமாகவே உட்கார்ந்திருந்தான். ''உங்களை இப்பொழுது பார்த்தால் இங்குள்ள ஸமாதி புத்தரைப்போல் இருக்கிறது,'' என்று மெதுவாகக் குற்றம் சாட்டுவதுபோல் பேசினாள் திரிலோகசுந்தரி.

விஜயன் கண்கள் அவள் கண்களை லேசாகச் சந்தித்தன. ''புத்தர் ஏன் சமாதி நிலை அடைந்தார்? உலக பந்தங்களிலிருந்து விடுதலை செய்து கொள்ள'' என்றான் விஜயன். மெதுவாக, ''புத்தரின் புத்தி உனக்கு இல்லை,'' என்றும் கூறினான்.

''காரணம் இருக்கிறது,'' என்றாள் திரிலோகசுந்தரி.

''என்ன காரணம்?'' விஜயன் கேட்டான் சலிப்புடன்.

''அவர் ஒரு மனைவியோடு நின்றுவிட்டார். மூன்று பேரை வளைக்கவில்லை.'' என்று திரிலோகசுந்தரி புன்முறுவல் செய்தாள்.

zeevaa

அதுவரை பேசாமல் இருந்த லீலாவதி, ''ஏன் நீ ஒருத்தியே இவருடன் இரு. நாங்கள் போகிறோம்.'' என்றாள்.

சுடர்விழி ஏதும் பேசவில்லை.

''நீ ஏன் ஏதும் பேசவில்லை?'' என்று கேட்டான் விஜயன்.

''நான் மகாராணியல்ல. கருத்துச் சொல்ல எனக்குத் தெரியாது. எனக்குச் சுயமாகக் கருத்தும் கிடையாது. உங்கள் கருத்துத்தான் என் கருத்து. உங்கள் பணிவிடைதான் எனக்குச் சொர்க்கம்.'' என்றாள் சுடர்விழி.

''கருத்து கிடையாது...'' என்று லீலாவதி சொற்களை முடிக்காமல் விட்டாள்.

''கணவனை வளைப்பதற்கு வேண்டிய கருத்து இருக்கிறது'' என்றாள் திரிலோகசுந்தரி.

இதற்குப்பதில் சொல்லவில்லை விஜயன். சுடர்விழியின் மடியில் தலையை வைத்த வண்ணம் ஏதோ யோசித்தான். ஒரு பக்கத்தில் சற்று உட்கார்ந்த திரிலோகசுந்தரி அவனது ஒரு கையை எடுத்து மடியில் வைத்துக் கொண்டாள். இன்னொரு பக்கத்தில் உட்கார்ந்த லீலாவதி அவன் இன்னொரு கையைச் சிறைப்படுத்திக் கொண்டாள்.

விஜயபாகு அப்பொழுதும் செயலிழந்து உட்கார்ந்திருந்தான். அந்த மூன்று அழகிகளின் சரச வார்த்தைகளையும், அவர்கள் தன்னை முப்புறத்திலும் தங்கள் அழகிடங்களை கொண்டு நெருக்கியதையும் லட்சியம் செய்யவில்லை விஜயன். சாதாரண சமயமாக இருந்தால் சொர்க்க போகத்தில் இருந்திருப்பான் சிங்கள இளவல். ஆனால் அன்று அவன் எண்ணமெல்லாம் எங்கோ சுழன்று கொண்டிருந்தன. அவ்ன் சிந்தனை தங்களிடம் இல்லை

zeevaa

என்பதை அறிந்த மூன்று ராணிகளும், ''என்ன சிந்திக்கிறீர்கள்?'' என்று வினவினார்கள்.

''இன்னொருத்தியை நினைக்கிறேன். அவளை அடைய முயன்றேன். எண்ணம் பூர்த்தியாகவில்லை. இன்னும் அவள் எனக்குச் சொந்தமாகவில்லை'' என்று விஜயன் சிந்தனையிலேயே சொற்களை உதிர்த்தான்.

அதைக் கேட்ட மூன்று ராணிகளும் பிரமித்தார்கள். இருப்பினும் லீலாவதி மட்டும் கேட்டாள், ''நாங்கள் மூவர் போதாதா உங்களுக்கு?'' என்று.

''உங்கள் மூவரையும் நான் அடைந்ததே அவளுக்குப் பணிவிடை செய்யத்தான்.'' இதை உணர்ச்சியோடு கூறினான் விஜயன்.

''நான்காவது காதலிக்கு எங்கள் பணிவிடையா?'' திரிலோகசுந்தரி கேட்டாள்.

''ஆம் சந்தேகமென்ன?'' விஜயன் வினவினான்.

''அவள் அழகு?'' சுந்தரி மீண்டும் வினவினாள்.

''கலையாத கட்டழகு''

''அப்படியா?''

''காலத்தில் அழியாதது''

''அப்படியும் ஒருத்தியா?''

''ஆம், சரித்திரம்படைத்தவள்''

இதைக் கேட்டதும் மூன்று மயில்களும் அவனை நோக்கி குனிந்தன. அந்த மயில்களில் மறைந்தான் சிங்கள மகாராஜா.

zeevaa

அவன் உடலைக் கட்டிலில் கிடத்தி மூன்று அழகிய தோகைகள் மறைத்து மூடிவிட்டன.

அடுத்து பேச்சு எதுவும் இல்லை. தர்க்கமோ பதிலோ எதுவுமே இல்லை. ஏதேதோ சப்தங்கள் மட்டுமே மயில் மாளிகையின் அந்தக் கட்டிலிலிருந்து எழுந்து பக்கங்களில் தாக்கி எதிரொலி செய்தன. என்ன விசித்திர சப்தங்கள்!




zeevaa

# 75. கலையில் சில நிலைகள்

மயில் மாளிகையின் அந்தரங்க மஹாலின் பெரும் பஞ்சணையில் மூன்று மயில்களின் பட்டு உடல்களால் மூடப்பட்டுப் படுத்துக்கிடந்த விஜயபாகுவின் மனம் காமாந்தகாரத்தில் மூழ்கவேண்டியிருக்க, அந்த வேட்கையைத் தாண்டிச் சரித்திர காலத்தில் சுழலத் தொடங்கவே, அவன் காலத்தின் இயற்கையாலும் போர்களின் செயற்கையாலும் சீரழிந்தாலும், சரித்திரத்தில் அழியாமல் நிலைத்துவிட்ட அனுராதாபுரத்தின் கலைச் சிறப்புக்களையும், பிரம்மாண்ட பெரும் ஏரிகளையும் குளங்களை யும், முதன் முதலாகத் தனது காலத்துக்கு 1200 ஆண்டுகளுக்கு முன்பு நிர்மாணிக்கப்பட்ட பெரும் நந்தவனத்தையும் நினைத்து மெய்மறந்து கிடந்தான்.

அந்த நினைப்பு அவன் ராணிகளுக்கு இல்லாமல் போகவே அவர்கள் அவனை முப்புறத்திலும் நெருக்கினார்கள். சுடர்விழி மேலிருந்து அவன் முகத்தைத் தனது மார்வினால் மூட, பக்கங்களில் லீலாவதியின் மெல்லிய உடலும், சுடர்விழியின் அளவுக்கு இல்லாவிட்டாலும் மிதமான எழுச்சிகளையும் அளவுமீற புஷ்டியையும் உடைய திரிலோகசுந்தரியின் பக்குவ மார்பும் அவனிருப்பது தெரியாமல் அடித்து விட்டாலும், அத்தனை மோகனாஸ்திரங்களையும் மீறி அவன் மனக்கண் முன்பு எழுந்த சிங்களர்களின் புராதனத் தலைநகரத்தின் கலை எழுச்சிகள் அவன் மனக்கண்ணில் வலம்வரத் தொடங்கியதால் அவன் படுத்த நிலையில் ஒருமுறை பெருமூச்செறிந்தான். அந்தப் பெருமூச்சினால் ஏறி இறங்கிய அவன் வஜ்ரமார்பில் தலைவைத்துப் படுத்திருந்த

zeevaa



zeevaa

திரிலோகசுந்தரி, "என்ன வேதனை உங்களுக்கு? ஏன் பெருமூச்சு விடுகிறீர்கள்?" என்று மெதுவாக வினவினாள்.

அவன் கன்னத்துக்குப் பக்கத்தில் தனது கன்னத்தை வைத்திருந்த லீலாவதி "நான்காவது காதலியை நினைத்துக் கொண்டிருப்பார்," என்று பொறாமையும் வேட்கையும் கலந்த குரலில் சொன்னாள்.

அவன் முகத்தைத் தனது பணைத்த மார்பில் புதைத்துக் கொண்டிருந்த சுடர்விழி மட்டும் ஏதும் கேட்காமல் மௌனமாக இருக்கவே விஜயன் தனது இதழ்களை விரித்து, "சுடர்விழி! நீ ஏன் ஏதும் கேட்கவில்லை?" என்று வினவினான்.

"கேட்பது என்றால் நீங்கள் சொல்வதைக் கேட்பது தான் எனது கடமை. கேள்விகளை வீசுவதற்கு நான் யார்?" என்று மெதுவாகச் சொல்லிவிட்டு "மகாராஜா! மன்னர்கள் மகாராணிகளை மட்டுமல்ல, ஆசை நாயகிகளையும் ஏராளமாக வைத்துக்கொள்வதும், அதற்காக அந்தப் புரங்களைக் கட்டுவதும் சரித்திரம் கண்ட உண்மை. ஆகவே நான்காவது ஒரு காதலி இருக்கும் பட்சத்தில் வியப்பதற்கு என்ன இருக்கிறது?" என்று கூறினாள். அத்துடன் சிறிது சிந்தித்துவிட்டு, "மகாராஜா! நான் உங்களை ஒரு சந்தேகம் கேட்கலாமா?" என்றாள்.

"கேள் சுடர்விழி" என்ற விஜயன் மெள்ளத் தனது தலையை உயர்த்தி அவள் மார்பிலிருந்து விடுதலையடைந்து கண்களை உயரத் தூக்கி அவளைப் பார்த்தான்.

சுடர்விழியின் சாகஸப் பேச்சினாலும், கேள்வி.யாலும், கேள்விக்கு விஜயன் இசைந்த காரணத்தாலும் சினமடைந்த இரு மகேசிகளும் அவன் உடலுக்குச் சுதந்திரமளித்து எழுந்து உட்கார்ந்தார்கள். தலைமாட்டில் ஒருத்தியும் பக்கங்களில் இரு பெண்களும் உட்கார்ந்திருந்த நிலையில் சுடர்விழியின் மடியில் சற்று எழுந்த வண்ணம் சாய்ந்து கொண்டு "உங்கள் மூவருக்கும் எந்தச் சந்தேகமிருந்தாலும் கேட்கலாம்," என்று கூறிய விஜயன் புன்முறுவல் கொண்டான்.

zeevaa

மற்ற இருவரும் ஏதும் கேட்காவிட்டாலும் சுடர்விழி மட்டும் கேட்டாள். ''உங்கள் நான்காவது காதலியைப் பற்றி ஏதாவது சொல்லலாமா?'' என்று.

''ஆகா, சொல்லலாம்,'' என்று உற்சாகத்துடன் துவங்கிய விஜயன் ''அவள் பேரழகி, அவளை அடைந்த பல மன்னர்கள் பல ஆபரணங்களை அவளுக்குப் பூட்டினார்கள். அவள் எழில், உலகத்தையே வியக்க வைத்தது...'' என்று பேசிக் கொண்டு போனவனை இடைமறித்து, ''பல மன்னர்களை வைத்துக் கொண' ருந்தவளா?'' என்று ஏளனத்தைக் காட்டினாள் லீலாவதி.

''ஆம். ஒவ்வொரு மன்னனும் விதவித ஆபரணங்களைப் பூட்டினான். அவற்றைப் பார்க்க உலகெங்கிலிருந்தும் ஏராளமான மக்கள் வந்தார்கள்...'' என்று சொல்லிக் கொண்டு போன விஜயனை, பேச்சை இடைபுகுந்து வெட்டிய திரிலோகசுந்தரி ''அவள் பெயர்'' என்று வினவினாள். அவள் குரலில் பொறாமையில்லை, பெருமிதமிருந்தது.

அதைக் கவனித்த விஜயன் பெருமை கலந்த புன்னகையைக் கொட்டினான். ''அவளை உங்களுக்கு நாளைக்கே காட்டுகிறேன். அவளைக்கண்டதும் என்னைப் போலவே நீங்களும் அவளுக்கு அடிமையாவீர்கள்,'' என்று விளக்கினான் புன்னகையின் ஊடே.

''அவள் பெயர்? அவள்?'' என்று உஷ்ணத்துடன் கேட்டாள் லீலாவதி.

''அவளிடம் நீங்கள் இருக்கிறீர்கள்...'' என்றான் விஜயன்.

''அவள் பெயர்?'' என்று இரண்டாவது முறை கேட்டாள் லீலாவதி.

''அனுராதா!'' இந்தப் பெயரை பயபக்தியுடன் சொன்னான் விஜயபாகு. ''நாம் இப்பொழுதிருக்கும் காலத்துக்கு 1400 ஆண்டுகளுக்கு முன்பு திஸ்ஸன் என்ற மகாராஜாவும் அவருக்குப்

zeevaa

பின்வந்த மன்னர்களும் இந்தப் பெண்ணுக்குப் பற்பல அலங்காரங்களைச் செய்தார்கள். இந்த அனுராதா சரித்திரம் கண்டவள், எழுச்சிகளையும் வீழ்ச்சிகளையும் கண்டவள், பெரும் நாகரீகத்தைக் கண்டவள். அவளை உங்களுக்கு நாளைக்குக் காட்டுகிறேன். போதிசத்வரின் மகாவிருட்சத்தையே இன்னும் அழியாமல் உடையவள். இந்த அரியணையில் அமரவே உங்களை அழைத்து வந்தேன். அதற்குக் காலம் வரவில்லை. நான் என்றோ அழித்திருக்க வேண்டிய ஒரு புல்லுருவி இருக்கிறான். அவனைக் களை எடுத்துவிட்டு இந்தப் புனித நகரத்துக்கு வருகிறேன்'' என்று உணர்ச்சியுடன் பேசிய விஜயபாகு சற்று நிதானித்து எதையோ உற்றுக் கேட்டான். வெளியே யாரோ காவலருடன் பேசும் சப்தம் கேட்கவே, ''சற்று இருங்கள், வருகிறேன்,'' என்று கூறிவிட்டு வெளியே சென்றான்.

வாயிலில் மயில் தோகைபோல் செதுக்கப்பட்ட இருமரத் தூண்களிடையே பிக்கு நின்றிருந்தார். ''மன்னவா! உன் உறக்கத்தைக் கெடுக்க இஷ்டமில்லை. ஆனால் ஒரு முக்கிய விஷயத்தைச் சொல்லாதிருக்க முடியவில்லை'' என்று பேசத் துவங்கினார்.

''சொல்லுங்கள் பிக்கு. உங்கள் உத்தரவு எதுவானாலும் ஏற்கிறேன்,'' என்றான் விஜயன்.

''அடுத்த சுபகாரியம் எதுவானாலும் அதற்கு முன்பு சிங்களத்தில் விதி ஒன்று இருக்கிறது. மன்னர்கள் இங்குள்ள தாகபாக்களை வணங்கி போதிமரத்தையும் ஸமாதிபுத்தரையும் வணங்கி பிறகு தான் போருக்குக் கிளம்புவது வழக்கம். அந்தவழியை நீயும் அனுசரிக்க வேண்டும். இந்த ஆதிமல்லனை எதிர்க்க அவசரம் இல்லை. அப்படி அவசரம் வந்தால் நானும் ஜேட்டதிஸ்ஸனும் கவனித்துக் கொள்கிறோம்,'' என்று கூறினார்.

'அப்படியே ஆகட்டும்,' என்று ஒப்புக் கொண்ட விஜயபாகு அன்றிரவை நித்திரையின்றியே தனது மூன்று ராணிகளுடன்

zeevaa

கழித்தான். மறுநாட் காலை நீராட்டத்தை முடித்துக்கொண்டு ராணிகளுடன் மயில் மாளிகையிலிருந்து வெளியே கிளம்பியவன் சுற்றுமுற்றும் கண்களை ஓட்டி ''லீலாவதி! சுடர்விழி உங்களிரு வருக்கும் இந்தப் பழைய தலைநகரம் புதிதல்ல. ஆகவே புதியவளான திரிலோக சுந்தரிக்கு மட்டும் இந்த மாநகரத்தின் கலைப் பொக்கிஷங்களைக் காட்டிவிட்டு வருகிறேன். நீங்கள் இங்கேயே இருங்கள்'' என்று விஜயன் தனது கையை நான்கு புறத்திலும் வீசிக் காட்டினான் சுந்தரிக்கு ''இந்த நகரத்தின் மத்தியப் பிரதேசம் மஹாமேகம் என்றழைக்கப்பட்டது. சுமார் ஒன்றரை யோஜனை (20 மைல்) சதுரமுள்ள இந்த நந்தவனத்தை அமைத்துப் புத்த சந்தியாசிகளுக்குத் தேவனாம்பிரியதிஸ்ஸ மகாராஜா காணிக்கையாக அளித்தார். மஹாதேரன் என்ற துறவிகளின் தலைவரால் சுட்டிக் காட்டப்பட்ட பூமியை மகாராஜா திஸ்ஸன் தனது பட்டத்து யானைகளான மகாபதுமம், குஞ்சரம் என்ற இரண்டையும் தங்கக் கலப்பையில் கட்டி உழச் செய்தார்.

அப்படி உழுத சதுர நிலம் புத்த துறவிகள் தவத்துக்கு அளிக்கப் பட்டது. அதில் பிரும்மாண்டமான தபோவனம் அமைக்கப்பட்டது. இதை மக்கள் மன்னனின் உல்லாச உத்தியானவனமென்றும், துறவிகளின் தபோவனமென்றும் அழைத்தார்கள். காலத்தால் இது பெரு அடவியாயிற்று. புத்த கோஷங்கள் இதில் சதா கேட்டுக் கொண்டிருந்தன. இதை அடுத்து மகாராஜா திஸ்ஸன் பெரும் ஏரியை நிர்மாணித்தான்,'' என்று விளக்கினான். பிறகு தனது புரவியுடன் மற்றொரு புரவியையும் கொண்டு வரச்சொல்லி, திரிலோகசுந்தரியை ஒரு புரவியில் ஏறச்சொல்லி தனது கரிய புரவியில் தான் ஏறிக்கொண்டு அனுராதாபுரத்தின் விந்தைகளை மகேசிக்குக் காட்டப் புரவியை ஏரி ஓரமாக நடத்தினான். அந்த ஏரியின் கரையில் புரவிமீதமர்ந்து சென்ற திரிலோகசுந்தரி சமுத்திரம் போன்ற அந்த ஏரியைக் கண்டு வியந்தாள். ''இதற்கு மகாராஜாதிஸ்ஸனின் பெயரே வைக்கப்பட்டிருக்கிறது. இதை திஸ்ஸாவீவா என்று அழைக்கிறோம்'' என்று விளக்கம் சொல்லிய

zeevaa

விஜயன் ''இந்த மாநகரில் சுபிட்சத்து;க்குக் குறைவில்லை. இந்த திஸ்ஸா வீவாவுக்கு வடக்கே பஸவக்குளம் என்றொரு ஏரியும், அதற்கும் வடக்கே பூலாங்குளம் என்ற சிற்றேரியும் இருக்கின்றன. இங்கு ஜலசுபிட்சம் எப்பொழுதும் இருக்கிறது. ஊருக்குள்ளே அரண்மனைகளில் இருக்கும் ராணிகளின் மாளிகைகளில் அமைக்கப்பட்டிருக்கும் போகுனாக்களுக்கு (குளிக்கும் அறைகளுக்கு) இந்த ஏரிகளிலிருந்து வெளிக்குத் தெரியாத உள்வாய்க்கால்கள் மூலம் நீர் பாய்ச்சப்படுகிறது'' என்று சொன்ன விஜயன் தனது புரவியை தெற்கு நோக்கித் திருப்பினான்.

திரிலோக சுந்தரியும் அந்தப் பெரிய ஏரிகளையும் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் காணப்பட்ட கலைச் சின்னங்களையும் பார்த்ததும் பிரமித்துத் தனது புரவியை விஜயனுடன் நடத்தினாள். திஸ்ஸாவீவாவிலிருந்து சிறிது தூரம் தெற்கே சென்றதுமே கண் முன்பாக எழுந்த பெரிய ஆலயமணிபோன்ற ஒரு கட்டிடத்தை காட்டிய சுந்தரி ''இது?'' என்று கேள்வி எழுப்பினாள்.

விஜயன் அதைத் தூரத்தில் நோக்கியபோதே தலை வணங்கி ''சிங்களத்தின் ஆதி தூபாராமா (துறவிகள் இருப்பிடம்) இது. இதில் மகாத்மாவான புத்தர்பிரானின் கழுத்திற்குக் கீழுள்ள புனித எலும்பு வைக்கப்பட்டிருக்கிறது. பிற்காலத்தில் இந்தத் தூபாரமாவுக் குள்ளேயே ஒரு ஆலயம் அமைக்கப்பட்டு அதில் புத்தர்பிரானின் கடைவாய்ப்பல் பிரதிஷ்டை செய்யப்பட்டது இந்த நிகழ்ச்சி கிறிஸ்துவுக்கு முன்பு 311-வது ஆண்டில் ஏற்பட்டது. இந்தியாவில் நடந்த போரின் விளைவாகப் புத்தருடைய பல்லைத் தனது தலைக் குழலில் மறைத்துக் கொண்டு ஒரு அரசகுமாரி இலங்கைக்கு ஓடி வந்து விட்டதாகவும் அந்தப்பல்லே இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.'' என்று கூறிய வண்ணம் அந்த தூபாராமாவின் முன்பு புரவியிலிருந்து இறங்கினான்.

ஏராளமான தூண்களால் சூழப்பட்ட அந்த ஆசிரமத்தை நோக்கினாள் திரிலோகசுந்தரி. தூண்களெல்லாம் கலைச்சின்னங்

zeevaa

களாகக் காணப்பட்டன. இந்த தூபாராமா பல மாடிகளுடன் ஒரு காலத்தில் பிரம்மாண்டமாயிருந்திருக்க வேண்டும் என்று நினைத்தாள்.

அந்த தூபாராமாவின் முன்பு தலை வணங்கிய விஜயன், "இது வயலில் நெல்குவிந்தாற்போல் இருக்கும் முக்கோண கோபுர வடிவில் முதலில் அமைக்கப்பட்டு பிறகு குப்புற வைத்த கோவில் மணியாகக் கட்டப்பட்டது," என்று கூறினான். "இதை மண்டியிட்டு வணங்கு திரிலோகசுந்தரி. இதிலுள்ள புத்தர்பிரானின் உறுப்புகள் உனக்குச் சிறந்த நலன்களைத் தரும்," என்றான்.

இருவரும் அங்கு வணங்கி எழுந்ததும் புரவியில் மீண்டும் ஏறி நகரத்தின் தென் கிழக்கிலிருந்த போதிசத்வர் ஞானஒளி பெற்ற மரத்தின் கிளை நடப்பட்ட இடத்திற்குச் சென்றனர். நன்றாக வளர்ந்தும் தழைத்தும் 2500 ஆண்டுகளாகச் சிறிதும் பட்டுப் போகாமலிருப்பதும் கப்பும் கிளைகளோடும் செழித்ததும், அசோகன் மகளான சங்கமித்திரை எடுத்து வந்து நட்டதுமான புனிதமான அந்த அரசமரத்தைக் காட்டினான் விஜயன். அந்தப்புனிதமரத்தின் முன்பு யானைகளிரண்டு மண்டியிட்டு நின்றன. விஜயனும், திரிலோகசுந்தரியுடன் மண்டியிட்டு வணங்கி, "இதன் புனிதக் காற்று எல்லாப் பிணிகளையும் மனத்தின் பிணி உட்பட சகலத்தையும் தீர்க்கும். கலிங்கன் மகளே! இதைத் தரிசிக்க நீ பாக்கியம் பெற்றாய்," என்றான்.

அடுத்து மேலும் தென்கிழக்கில் பயணம் செய்த விஜயன் ஈசுரமுனியா மலைக்கோயிலுக்குச் சுந்தரியை அழைத்து வந்தான். "இதில் ஒரு சரித்திரமிருக்கிறது சுந்தரி!" என்ற விஜயன், "இங்கு ஒரு மன்னனின் காதல் கதை இருக்கிறது!" என்று சொன்னான். சுந்தரி சற்றே திரும்பிக் கணவனை நோக்க விஜயன் விளக்கினான். "கிறிஸ்துவுக்கு முந்திய இரண்டாவது நூற்றாண்டில் இங்கு ஆட்சிபுரிந்த எனது மூதாதை துட்டகாமுனு என்ற மன்னனின் மூத்தகுமாரன் சாலியன் என்பவன் அசோகமாலா என்ற

zeevaa

கீழ்க்குலத்துப் பெண்ணைக் காதலித்தான். அவளை மணந்தால் அரசுக்கட்டில் ஏற முடியாது என்று மன்னன் கூறியும் அரசகுமாரன் அரசைத் துறந்து அசோகமாலாவை மணந்தான். அவர்களைப் பற்றிய சிற்பமும் இங்குள்ள கற்களில் வெட்டப்பட்டிருக்கிறது. தவிர மன்னர்களின் பிம்பங்களையும் புரவிகளையும் ரதங்களையும் தேர்களையும் கொண்ட பெரிய சிற்பங்களையும் பார்'' என்று மலைக்கோவிலான ஈசுரமுனியாவின் சிற்பங்களைச் சுற்றிக் காட்டினான். அடுத்து கிழக்கில் மீண்டும் பயணம் செய்து ஜேதவன தாகபாவுக்கு வந்து சேர்ந்தான்.

எகிப்தின் பெரிய பிரமிட்டுக்கு அடுத்தபடியாக மதிக்கப்படும் ஜேதவனதாகபா கண்ணுக்கு எதிரே பிரும்மாண்டமாகப் பெரிய மலைபோல் எழுந்து நின்றது. அதன் பக்கங்களில் மரங்கள் அடர்த்தியாக இருந்தன. உச்சியில் கட்டிடம் ஒன்றிருந்தது. ''இந்த தாகபா மஹாராஜா மஹாசேனனால் கட்டப்பட்டது. இலங்கை யிலேயே பெரியதாகபா,'' என்று சுட்டிக் காட்டினான். அடுத்து அதைப்போலவே இன்னொரு பெரிய அபயகிரி தாகபாவையும் துறவிகள் இருப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட ரத்னபாஸதாவையும் காட்டிய விஜயன், பொன்வேய்ந்ததும் துட்டகாமுனு மன்னனால் நிர்மாணிக்கப்பட்டதுமான குவன்வலி தாகபாவையும் காட்டி விட்டு, ''இப்படி எத்தனை எத்தனையோ கலை விசித்திரங்கள் இருக்கின்றன. ஆனால் தற்காலம் அழிந்து கிடப்பதும் சிங்களத்தின் பிரும்மாண்டமான அரண்மனையுமான வெண்கல அரண் மனையைக் காட்டுகிறேன்,'' என்று கூறி வடக்கிலிருந்த அந்தப் பெரிய சின்னத்திற்கு அழைத்துச் சென்றான்.

ஏராளமான தூண்களைக் கொண்ட அந்த விந்தையைப் பார்த்த திரிலோகசுந்தரி, ''இத்தனை பெரிய அரண்மனையா?'' என்றாள்.

விஜயன் சற்று உணர்ச்சி வசப்பட்டு நின்றான். மாலை நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. எதிரே கண்ணுக்கெட்டிய தூரம் வரையிலும் தெரிந்த தூண்களும், வெண்கலத்தகடுகளும் செப்புத்

zeevaa

தகடுகளும் அமைக்கப்பட்டு சீரழிந்து கிடந்த வெண்கலச் சுவர் பகுதிகளையும் பார்த்த சுந்தரி பெரும் பிரமைக்குட்பட்டாள்.

விஜயன் மெதுவாகப்பேசினான், "சுந்தரி! இலங்கையின் மகா உன்னத அரண்மனை இது. மன்னன் துட்ட காமுனுவால் கட்டப்பட்டு பிறகு மஹாசேனனால் அழிக்கப்பட்டது. 1600 தூண்களுக்கு மேல் கட்டப்பட்ட இந்த அற்புத மாளிகையில் ஒன்பது உப்பரிகை அடுக்குகள் இருந்தன. ஒவ்வொரு அடுக்கிலும் நூறு அறைகள் இருந்தன. ஒவ்வொரு அறையிலும் ஒவ்வொரு புத்தத்துறவி இருந்தார். மதத்தின் நலனுக்காக உலகத்தின் நலனுக்காகக் கட்டப்பட்ட இந்த அரண்மனை லோக பாஸாதா என்றும் வெண்கல அரண்மனையென்றும் அழைக்கப்பட்டு வந்தது. இதன் உள் தூண்கள் அந்தக் காலத்தின் தங்கப்பாளங்களையும் வெள்ளிப் பாளங்களையும் அணிகலனாகக் கொண்டதாகவும் கூறப்படுகிறது. பிறகு போர்கள் வந்தன, அழிவு வந்தது. போர்களால் வேறு என்ன வரும்!" என்று சோகத்துடன் பேசிய விஜயபாகு அந்தத் தூண்களின் ஊடே சென்றான், அவற்றைத் தடவிக்கொடுத்துக் கொண்டும் சென்றான்.

அவன் மனத்தில் உணர்ச்சி பொங்கி வழிவதைத் திரிலோக சுந்தரி பார்த்து. அவனை நெருங்கி அவன் கையைப் பிடித்துத் திருப்பி அழைத்தாள். அவளுடன் வந்து அந்தப் பெரும் அரண்மனையின் வாயிற்படிக்கு முன்பிருந்த அரைத்தாமரைப் பூவைப் போல கிடந்த ஒரு படியில் காலை வைத்த விஜயன், "இது என்ன தெரியுமா சுந்தரி?" என்று கேட்டான்.

"தெரியவில்லை." என்றாள் சுந்தரி.

இரவு நெருங்கிவிட்ட நேரத்திலும் அந்தக் கல் பெரிதாக சந்திரனைப்போல் பளபளத்தது. "இதுதான் சந்திரகாந்தக் கல். சிங்களத்தின் பிரத்தியேக சொத்து. இதை இலங்காபதி இராவணன் அனுபவித்தான். சந்திரன் கிரணங்களுக்கு இந்தக் கல் நீராக உருகும். அந்தநீரில் நீராட மஞ்சன கிருகத்தையே அமைத்து நீராடிய

zeevaa

இராவணன் சந்திரனையும் அடிமை கொண்டான். அப்பேர்பட்ட மன்னர்கள் இருந்த நாடு, இது,'' என்று விளக்கி விட்டு, ''இனி இந்த உள்ளக் கிளர்ச்சிகளை அடக்க ஸமாதி புத்தரிடம் போவோம்,'' என்று அடுத்திருந்த ஸமாதி புத்தரின் சிலைக்கு அருகே மண்டியிட்டான். ''நீதான் பட்டத்து ராணி. நீயும் மண்டியிடு. போதி சத்வரின் கடாட்சம் உனக்கும் கிட்டட்டும்,'' என்றான்.

சுந்தரியுடன் நெருங்கி உட்கார்ந்த விஜயன் கண்களை மூடி, ''இந்த நாட்டுக்கு அமைதியைக் கொடு.'' என்று பிரார்த்தித்தான். அவன் தலைமீதும் சுந்தரியின் தலை மீதும் புஷ்பங்கள் உதிர்ந்தன.



zeevaa

# 76. பாவ தண்டனை

பாரதத்தில் போதிமரத்தடியில் எந்தவித சமாதியில் உட்கார்ந்து புத்த பகவான் ஞானஒளி பெற்றாரோ அதே மாதிரி உட்கார்ந்த நிலையில் தீர்க்க தவத்திலிருந்த ஸமாதி புத்தரின் அற்புதச் சிலைக்கு முன்பாகத் திரிலோக சுந்தரியுடன் மண்டியிட்டு வணங்கிய சிங்கள இளவல் தனது நாட்டுக்கு நன்மையையும், அமைதியையும் பிரார்த்தித்த சமயத்தில், மேலிருந்து உதிர்ந்த புஷ்பங்களால் தனது பிரார்த்தனைக்கு ஸமாதி புத்தர் கருணை கூர்ந்து விட்டாரென்ற மனப்பூர்த்தியுடன் மெதுவாகக் கண்களைத் திறந்து, "புத்தம் சரணம் கச்சாமி! ஸங்கம் சரணம் கச்சாமி!" என்று மந்திரங்களை உச்சரித்தான். அன்று வரை புத்தமந்திரங்களை உச்சரிக்காத கலிங்கன் மகளும் அந்த இரட்டை மந்திரங்களை மதுரமான குரலில் உச்சரித்தாள். அழகான குரலில் காதல் அமுதமெனப் பாய்ந்த அந்த மந்திரங்களால் திரும்பித் திரிலோகசுந்தரியை நோக்கிய விஜயன், "சுந்தரி! நம் இருவருக்கும் போதி சத்வர் அனுக்கிரகம் செய்துவிட்டார்," என்று கூறினான். பின்னாலிருந்து யாரோ அவன் சொன்னதை ஆமோதிக்கும் முறையில், "ததாஸ்து! அப்படியே ஆகட்டும்," என்று கூறவே திரும்பிப் பின்புறம் நோக்கினான் விஜயபாகு.

அவனுக்குப் பின்னால் பிக்கு கண்களை மூடிய வண்ணம் நின்றிருந்தார், நின்ற நிலையில் ஸமாதியிலிருக்கும் இன்னொரு புத்தரைப்போல. அவரைக் கண்டதும் திரிலோகசுந்தரியை எழுப்பி, தானும் எழுந்திருந்து பிக்குவின் முன்பு விஜயன் வணங்கினான், சுந்தரியும் வணங்கினாள்.

zeevaa

பிக்கு தமது கண்களை அகல விரித்து அவர்களைக் குளிர நோக்கி "விஜயபாகு! உன்னால் சிங்களத்துக்கு விமோசனம் பிறந்து விட்டது. உனது மூதாதைகளுக்கு நடந்த அதே நாளில் அதே இடத்தில் உனது பட்டாபிஷேகமும் நடக்கும். அதற்கு ஸமாதிபுத்தர் கருணைபுரிந்து விட்டார். தியானத்திலிருக்கும் புத்த பகவானின் இந்த மூர்த்திக்கு இணையான சிற்பக்கலைச் சின்னம் எதுவும் உலகத்தில் கிடையாது. உன் தலையில் அவர் ஸமாதி நிலைக்குப் பின்னாலிருக்கும் புஷ்பச் செடி மலர்களை உதிர்த்ததே இந்தச் சிங்களத்தின் பிற்கால நன்மைக்கு அத்தாட்சி. ஆனால் நீ நிலையான கிரீடத்தைப் பெற மூன்று மாதங்கள் தவமிருக்க வேண்டும்," என்று கூறினார்.

அவர் சொற்கள் அவனுக்கு மட்டுமின்றிச் சுந்தரிக்கும் திகிலை அளித்ததால், இருவருமே அதிர்ச்சியுற்றாலும், "மூன்றுமாத காலமா பிக்கு?" என்று விஜயன் மட்டும் கேட்டான்.

"ஆம் மன்னவா! உன் முன்னோர்களுக்கெல்லாம் அப்படித்தான் மகுடாபிஷேகம் நடந்திருக்கிறது. அவர்கள் செய்த மூன்று மாத தவத்தால் அவர்கள் ஒரே குடைக்கீழ் இந்தச் சிங்களத்தை ஆண்டார்கள். இந்த மகா நகரிலிருக்கும் தாகபாக்களையும் ஆசிரமங்களையும், இதர மதக் கலைச் சின்னங்களையும் நிறுவ முடிந்தது. அந்த மாதிரி தவத்தை நீயும் மேற்கொள்," என்று கட்டளை யிட்டார் பிக்கு.

"மூன்று மாதத்தில் நான் என்ன செய்ய?" என்று வினவினான் விஜயன்.

"சிங்கள மகாராஜாக்களின் மகுடாபிஷேகத்துக்குப் பெரிய பாஸாதரா நிறுவவேண்டும். மற்றும் அரண்மனைகளில் பல ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இவற்றுக்கெல்லாம் குறைந்த பட்சம் மூன்று மாதம் பிடிக்கும். இந்த ஏற்பாடுகள் நடக்கும் காலத்தில் நீ தாகபாக்களிலும் இதர கோயில்களிலும் பிரார்த்தனை செய்ய லாம்." இதைப் பிக்கு மிகத் திட்டமாகச் சொன்னார்.

zeevaa

விஜயன் தீவிர சிந்தனையில் சில வினாடிகள் திளைத்தான். பிறகு கேட்டான் பிக்குவை நோக்கி, "ஆதிமால்யன் படையெடுத்திருக்கும் சமயத்தில் நான் தவத்திலிருந்தால் நாட்டு நிலைமை என்ன வாகும்?" என்று.

"ஏதும் ஆகாது. ஆதிமால்யன் உன் பிரார்த்தனை காலத்தில் போர் தொடங்கினால் உனது பிரார்த்தனையே அவனை அழித்துவிடும். இல்லையேல் மக்களே அழித்து விடுவார்கள். போதிசத்வரின் அபசாரத்துக்கு ஆளாக அவனும் யோசிப்பான். தவிர அவனைச் சமாளிக்க நானிருக்கிறேன். எனக்குப் படைகளை நடத்தத் தெரியும்," என்று சத்வானந்த பிக்கு சற்று சத்வகுணத்திற்கு எதிராகப் பேசினார்.

முடிவில் விஜயபாகு *மூன்றுமாத காலம் அனுராதா புரத்தில் தங்க ஒப்புக்கொண்டான். அங்கு மகுடாபிஷேக ஏற்பாடுகளைச் செய்யத் தனது அதிகாரிகளை நியமித்து அனுராதாபுரத்தின் தாகபாக்களில் தவம் செய்யத் தீர்மானித்தான்.

"அந்த மூன்று மாதங்களுக்குப் பிறகு நீ புலஸ்திய நகரம் சென்று. அங்கிருந்து ஆதிமால்யன் மீது போர் தொடு," என்று சத்வானந்த பிக்கு உத்தரவிட்டார்.

அதற்குப் பிறகு மயில் மாளிகைக்குத் திரும்பிய விஜயன் தனது மூன்று ராணிகளிம் தனது முடிவைத் தெரிவித்தான். மூன்று மாத காலம் அரசியல் தொல்லைகளோ போர்களோ இல்லாமல் தாங்கள் விஜயனுடன் உல்லாசமாயிருக்கலாமென்று நினைத்த மகிஷிகள் மகிழ்ச்சி கொள்ள அதை விஜயன் அன்றே உடைத்து விட்டான்.

---

* Since for the festival of the royal consecration a pasada and many other things had to be prepared he (likewise) charged one of his followers with this and after he had then done reverence to the various places deserving of honour, he returned, after a sojourn of three months, to Pulatthinagara - Wilhelm - Geiger's Culavamsa" - Part-1, Chapter - LIX- Page 209.

zeevaa

''மூன்று மாதகாலம் நான் உங்களை சந்திக்க மாட்டேன். பூர்ண பிரம்மசரியத்துடன் தாகபாக்களில் பிரார்த்தனை செய்வேன். ஒழிந்த சமயங்களில் அரசியலைக் கவனிப்பேன்...'' என்ற விஜயனை, ''நாங்கள் என்ன செய்வது?'' என்று லீலாவதி கேட்டாள்.

''நிம்மதியாக இந்த மயில் மாளிகையில் பொழுது போக்கலாம். இந்த அனுராதாபுரத்தையும் முக்கால் காதத்துக்கு அப்பாலிருக்கும் மிஹிந்தலே மலையையும் அதன் சிற்பங்களையும், அசோகன் மகனான மகிந்தர் பிரார்த்தனைத் திண்ணையையும் பார்க்கலாம். இங்கு ஆண்டு முழுவதும் பார்க்க புனித இடங்கள் இருக்கின்றன,'' என்ற விஜயன், ''இன்று முதல் இந்த நகரத்தின் வடக்குப் பகுதியிலுள்ள மகாசேனன் அரண்மனையில் நான் வசிப்பேன்,'' என்று தெரிவித்தான். அன்றிரவே தனது புரவியில் கிளம்பினான் மகாசேனன் அரண்மனைக்கு. மூர்சமத் தனது பழுப்பு நிறப் புரவியுடன் எஜமானனைப் பின்தொடர்ந்தான்.

அன்றிலிருந்து மறுநாள் முதல் தவம் மேற்கொண்ட விஜயபாகு மகுடாபிஷேகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யப் பிக்குவையே நியமித்தான். மூர்சமதைக் கடல் புறத்தில் எதிரிகள் இறங்காதபடி பார்த்துக் கொள்ளச் சிற்பியையும் சூ-சின்னையும் எச்சரிக்கை செய்ய அனுப்பினான். மகுடாபிஷேக ஏற்பாடுகள் துரிதமாக நடந்து கொண்டிருந்தன. தினமும் விஜயன் பிரார்த்தனையிலும் மீதி சமயங்களில் புலஸ்திய நகரத்துக்கு உத்தரவுகளை அனுப்புவதிலும் காலம் கழித்தான். திடீரென மாயாரட்டாவில் பெருமழை பொழிந்ததால் ஆதிமால்யன் முன்னேற்றம் தடைப்பட்டிருப்பதாகச் செய்தி வந்தது. எல்லாம் போதி சத்வரின் செயல் என்று தவத்தில் திளைத்தான் விஜயன்.

அந்த மூன்று மாதங்களில் கடற்கரைப் பாதுகாப்பு சிற்பியினாலும் சூ-சின்னாலும் மிகவும் பலப்பட்டுவிட்டதாகவும், காலேயில் வந்த ஐந்து மரக்கலங்களையும் சிற்பி போர்க்கலங்களாக்கி விட்டதையும் சூ-சின் பழையபடி கடலில் உக்கிரமாக

zeevaa

உலாவுவதாகவும் செய்திகள் வந்தன அனுராதபுரத்துக்கு. அனுராதாபுரம் பிக்குவின் மகுடாபிஷேக ஏற்பாடுகளால் புது நகரமாகக் காட்சியளித்தது. மகுடாபிஷேகத்துக்காகப் பிக்கு நிர்மாணித்த பெரும் பாஸாதா இந்திரன் மாளிகை போல் தெரிந்தது. பிக்குவும் தமது போர் வெறியை உதறிவிட்டுப் பெயருக்குத் தகுந்தபடி சத்வமும் ஆனந்தமும் இணைந்த புத்தத் துறவியானார்.

மூன்று மாதப் பிரார்த்தனை முடிவில் பிக்குவே விஜயனை புலஸ்திய நகரத்துக்கு அனுப்பி வைத்தார். தனது காலடியில் பணிந்த விஜயனை நோக்கி, "சிங்கள மன்னனே! புலஸ்திய நகரத்துக்குப் போ அதற்கருகில் தான் இந்த இறுதிப் போர் நடக்கும். வெற்றிவாகை சூடிவா. உன் மகிஷிகள் இங்கேயே இருக்கட்டும்," என்றார்.

"அவர்கள்..." என்று புருவத்தை உயர்த்தினான் விஜயபாகு.

"உன் மகுடாபிஷேகத்தன்று சந்திப்பார்கள்" என்றார் பிக்கு. அத்துடன் "மன்னவா! இவை என் கட்டளைகள் அல்ல, ஸமாதி புத்தர் நேற்று எனக்குக் கனவில் வந்து இட்ட கட்டளைகள் இவை," என்று சொல்ல விஜயன் மகிஷிகளுடன் விடைபெற்று, அவர்கள் இஷ்டமில்லாமல் விடை கொடுக்க மூர்சமதுடன் புலஸ்திய நகரத்தை நோக்கிக் கிளம்பினான். பிக்குவின் ஜோதிடம் சரியாயிருந்தது. அவன் புலஸ்திய நகரத்தை அணுகியதும் ஆதிமால்யன் தனது படைகளுடன் புலஸ்திய நகரத்தை நோக்கி வருவதாகச் செய்தி கிடைத்தது.

புலஸ்திய நகரத்தை அடைந்த இரவே போர் ஆலோசனையை நுவரகிரியுடனும் சிவகோகர்ண ஸ்வாமிகளுடனும் நடத்திய விஜயபாகு தானே படையை நடத்தி ஆதிமால்யனை எதிர் கொள்ளப் போவதாக அறிவித்தான்.

"நான் இல்லாமலா?" என்று ஏமாற்றத்தைக் காட்டினார் நுவரகிரி.

zeevaa

விஜயன் சொன்னான், ''நுவரகிரி! இது என் சொந்த யுத்தம். நான் சிங்களத்திலிருந்து கிளம்பிய நாட்களாக இந்த ஆதிமால்யன் என்னை அழிக்க அத்தனை முயற்சிகளையும் செய்தான். கலிங்கத்திலிருந்து அவன் துவங்கிய அட்டூழியங்களுக்கு இங்கு அவனுக்குத் தண்டனை கொடுக்கிறேன்,'' என்று. பிறகு தனது கையிலிருந்த சீலையொன்றை எதிரிலிருந்த மஞ்சத்தில் விரித்து, தனது குறுவாளை எடுத்து அந்தச் சீலை மீது எறிந்தான். அதன் நுனி நின்ற இடம் 'ஆண்டு' எனும் சிற்றூர்.

சிவகோகர்ண ஸ்வாமிகள், நுவரகிரி இருவருமே அதை ஆமோதிக்கும் வகையில் தலையாட்டினார்கள்.

அவர்களை அடுத்து நின்றிருந்த ரவிதேவனும் காலனும் கூட ஒப்புதலுக்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார்கள்.

சிவகோகர்ண ஸ்வாமிகளுக்குப் பின்புறத்தில் நின்ற தர்மர் முதலிய நால்வரும், ''எங்களுக்கு இதில் வேலை ஏதும் இல்லையே,'' என்று வெறுப்புடன் சீலையைப் பார்த்தார்கள்.

விஜயன் ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஓடிய எண்ணங்களைப் புரிந்து கொண்டு புன்னகை செய்து, ''துறவிகளே! இப்பொழுது நான் புரியபோவது போரல்ல, ஆதிமால்யனுக்குக் கொடுக்கும் தண்டனை. அதனால்தான் ஆண்டுவின் சமவெளியில் எதிரியைச் சந்திக்க திட்டமிட்டேன். நுவரகிரி! நாளைக்குக் காலையில் இங்குள்ள படைகளில் ஒரு பகுதி புறப்படட்டும். மூர்சமதும் ரவிதேவனும் காலனும் என்னுடன் வந்தால்போதும்,'' என்று கூறினான்.

மறுநாள் விடியற் காலையிலேயே பிரார்த்தனையை முடித்துக் கொண்ட விஜயன் பூர்ண போர்க் கோலத்துடன் தனது கரிய புரவியில் ஏறிப் படைகளின் முன்னணியில் சென்றான். தன்னைப் பின்பற்றிய புரவிப் படையுடனும் இரண்டாயிரம் காலாட் படையுடனும் எங்கும் தங்காமல் பயணம் செய்து முற்பகலிலேயே

zeevaa

ஆண்டு கிராமத்துக்கு வந்துவிட்ட விஜயன் எதிரியின் படைநிலையை அறிய முன்னோடிகளை அனுப்பினான்.

விஜயனுடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் முன்பே அறிந்திருந்த ஆதிமால்யன் தனது படைகளை அர்த்த சக்கிர வியூகமாக வகுத்து ஆண்டு சமவெளியில் நிறுத்தி இருந்தான். ஐயாயிரம் புரவி வீரரும் ஐயாயிரம் காலாட்படையையும் கொண்ட அந்தப் படை எந்தச் சமயத்திலும் முன்னேறச் சித்தமாயிருந்தது. அவர்களில் வில்லவர் பலரும் அரைச் சக்கர வியூகத்தின் நடுவில் நிறுத்தப்பட்டிருந்தனர். படைகளுக்கு நட்ட நடுவில் ஆதிமால்யன் தனது பெரும் புரவியில் அமர்ந்திருந்தான் உருவிய வாளுடன்.

இந்த நிலவரங்களை முன்னோடிகள் மூலம் முன்னதாகவே அறிந்து கொண்ட விஜயன், "மூர்சமத்! என்னைத் தொடர்ந்து வா. ரவிதேவனும் காலனும் இரு பிரிவுகளைக் கொண்ட அரைச்சக்கர வியூகத்தின் இரண்டு பகுதிகளில் பாய்ந்து அந்த வியூகத்தின் இறக்கைகளை முறித்து விடட்டும். நான் ஒரு பிரிவுடன் நேரில் ஆதிமல்லனை நோக்கிச் செல்கிறேன். அவனைத் தனித்துப் போராட மூர்சமதின் வீரர்கள் எனக்கு வசதி செய்து கொடுக்கட்டும்." என்று தனது போர் முறையை விளக்கினான். அவன் திட்டப்படி சமவெளியில் புகுந்ததும் அவன் படை மூன்றாகப் பிரிந்து வாயு வேகத்தில் புரவிகள் பாய்ந்து சென்றன.

புயலைப்போல் பாய்ந்து மூன்றாகப் பிரிந்த படைகளைச் சந்திக்கத் தனது படைகளுக்கு வாளைத் தூக்கிச் சைகை செய்த ஆதிமல்லன் விஜயனைச் சந்திக்கத் தனது புரவியில் விரைந்தான். அவன் கஷ்டமில்லாமல் விஜயனை அணுக வழிவிட்ட மூர்சமத் திடீரென்று தனது படைப் பிரிவைக் கொண்டு எதிரிகளின் படைகளை வளைத்துப் போராடிய வண்ணம் விஜயனும் ஆதிமல்லனும் தனித்துச் சந்திக்க வசதி செய்தான். விஜயனும் தனது மெல்லிய நீண்ட வாளை நாற்புறமும் சுழற்றிப் பலரை மாய்த்த வண்ணம் எதிரியை அணுகினான்.

zeevaa

பகல் நேரத்திற்குள் ரவிதேவனால் துண்டிக்கப்பட்ட அரைச் சக்கர வியூக இறக்கைகளால், போரில் உக்கிரம் பக்கப் பகுதிகளுக்குப் போய்விட்டது. இருமூலைகளிலும் பிரிந்த படைகள் போரிட்டன. விஜயன் அழைத்து வந்த காலாட் படையினர் வேல்களை எறிந்தனர். அம்புகள் இருதரப்பிலிருந்தும் பறந்தன.

தனது கேடயத்தால் எதிரி வேல்களையும் வாளிகளையும் தடுத்துக் கொண்டு ஆதிமல்லனை அணுகிவிட்ட விஜயன், "ஆதிமல்லா! இந்த நாட்டு மன்னனென்ற முறையில் உன்னைத் தண்டிக்க வந்திருக்கிறேன். வீரனாகப் போரிட்டு வீர சொர்க்கம் போ," என்று கூறித் தனது வாளை ஓங்கினான். ஆதிமல்லனும் தனது வாளால் விஜயன் வாளைத் தடுத்தான். சுற்றிலும் வந்த வீரர்களை மூர்சமத் தடுக்க இரு விரோதிகளுக்கிடையில் கடுமையான போர் நடந்தது.

விரோதத்தாலும் வெறியாலும் வேகமாகப் பேராடிய ஆதிமல்லனை நிதானமாக தனது வாள் வீச்சால் தடுத்துச் சிறிது நேரம் போராடிய விஜயன் மாலை நெருங்குவதைக் கண்டு வேகத்தைக் காட்டினான். ஆதிமல்லனின் ஆவேச வாள் வீச்சை ஒவ்வொரு இடத்திலும் தடுத்த விஜயன் ஆதிமல்லனை நோக்கி, "இது என்னைச் சோழ ஒற்றனாகக் கலிங்கத்துக்குத் தொடர்ந்ததற்கு, இது கலிங்கன் மகளைத் தூக்கிச் செல்ல முயன்றதற்கு, இது ஹண்டுமானில் சுந்தரியைத் தலையிலடித்துப் பாம்பு தீண்டும்படி விட்டுப் போனதற்கு," என்று குற்றங்களைச் சொல்லிச் சொல்லி ஆதிமல்லன் தேகத்தின்மீது தோள்களிலும் விலாப் பகுதிகளிலும் தனது வாளைப் பாய்ச்சினான். "இத்தனைக்கும் உன்னை மன்னித்துப் பல வழிகளில் காப்பாற்றினேன். நான் வந்த மரக்கலத்தையே உனக்களித்தேன். நீ நன்றிகெட்டு மீண்டும் சிங்கள சுதந்திரத்தைக் 'குலைக்க வந்தாய். இத்துடன் சிங்களத்துக்கு உன்னைப் பலி இடுகிறேன். நீ செய்த பாவங்களுக்குத் தண்டனையைச் சிங்கள மன்னர் என்ற முறையில் உனக்கு அளிக்கிறேன்," என்று கூறிவிட்டு ஆதிமல்லனின் இதயத்தில் தனது

zeevaa

வாளைப் பாய்ச்சி விட்டான். ஆதிமல்லன் ஒரு முறை புரவியில் தள்ளாடினான். பிறகு சரிந்தான் சிங்களத்து மண்ணில். அவன் உடல் ஒருமுறை துடித்து நின்றது. குருதி மட்டும் சிங்கள மண்ணைச் செம்மண்ணாக அடித்தது.

கதிரவனும் மலை வாயிலில் விழ எத்தனித்து, தனது செவ்விய முகத்தால் அந்த மண்ணை மேலும் சிவப்பாக்கினான். சங்கங்களும், கொம்புகளும் பலமாக ஊதப்பட்டு முரசுகளும் ஒலித்து, போரின் முடிவு அறிவிக்கப்பட்டதும் தனது வாளிலிருந்த குருதியை இடது கையால் துடைத்து உறையில் போட்டான் விஜயன். அவன் முகத்தை மாலைக் கதிரவன் கிரணங்கள் சிவக்க அடித்தன. ஜெயஸ்ரீ அவன் முகத்தில் தாண்டவமாடினாள்.



zeevaa

# 77. விஜய மோட்சம்

*ஆண்டு கிராம சமவெளிப் போரில் ஆதிமால்யன் எனும் ஆதிமல்லனை முடித்து, சிங்களச் சுதந்திரத்துக்கும் தன் மகுடாபி ஷேகத்துக்கும் இருந்த ஒரே ஒரு முட்டுக் கட்டையையும் நீக்கிவிட்ட சிங்கள இளவல் விஜயபாகு, அடுத்த சுக்ல பஷத்தின் ஆரம்பத்தில், சிங்களத்தின் புண்ய நதிகளில் ஒன்றான கலா ஓயாவின் (கலா நதியின்) தென்கரையில் தனது கரிய புரவிமீது ஆழ்ந்த சிந்தனை யுடன் அமர்ந்திருந்தான்.

அவன் பக்கத்தில் பழுப்பு நிறப் புரவியின்மீது அமர்ந்திருந்த மூர்சமத் மன்னனின் மனம் எதிலோ திளைத்திருப்பதை உணர்ந்து கொண்டதால் சில நிமிடங்கள் பேசாதிருந்தாலும் நேரம் ஆவதை முன்னிட்டு, "மகாராஜா என்ன யோசிக்கிறீர்கள்? மாலை நெருங்கி விட்டது. நாம் சீக்கிரம் ஆற்றைக் கடக்கவேண்டும்," என்று பணிவு நிரம்பிய குரலில் சொன்னான்.

விஜயன் அவனைத் திரும்பிப் பார்க்காமல் ஆற்றைப் பார்த்த வண்ணமே, "சமத்! ஆற்றைக் கவனித்தாயா? சமீபத்தில் பெய்த மழையால் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது," என்றான்.

---

* Adimalaya rebelled quite openly against the Monarch and came, the deluded one, hither with all his troops to fight, as far as the village known by the name of Andu, in the vicinity of the town, The Ruler of Lanka marched thither, destroyed the haughty one and returned to Pulatthinagara after bringing his troops. into his pawer-, Geiger's "Culavamsa"-part-1, Chapter LIX Page 209.

zeevaa




zeevaa

''ஆம் மகாராஜா!'' என்றான் மூர்சமத். மன்னன் எதற்காக கண்ணுக்குத் தெரிவதைப் பற்றிப் புதிர் போடுகிறான் என்பதை அறியாமல்.

விஜயபாகு ஆழ்ந்த சிந்தனையிலிருந்து சிறிதும் விலகாமல் பேச முற்பட்டு, ''சமத்! காலம் எத்தனை வேகமாக ஓடுகிறது! இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இப்படித்தான் நாம் ரிஷிகுல்யா நதியின் முன்பு நின்றிருந்தோம். அன்றும் இதே மாதிரி ரிஷிகுல்யாவில் வெள்ளம் அதிகமாயிருந்தது. அங்கு நம்முடன் அரசகுமாரி திரிலோகசுந்தரி வந்தாள். இன்று அதே அரசகுமாரி ஆற்றுக்கு அக்கரையில் பட்டத்து ராணியாகக் காத்திருக்கிறாள். ஆனால் இங்கு நதியைக் கடக்கப் படகு ஏது? பக்கத்துக் குடிசைகளில் பார்க்கிறாயா?'' என்று சிந்தனையும் கனவும் கலந்த குரலில் கேட்டான்.

இந்தக் கேள்விக்கு மூர்சமத் பதில் சொல்லு முன்பாகவே, ''குடிசைக் கூட்டம் இங்கில்லை. ஆனால் படகு இருக்கிறது,'' என்ற குரல்கேட்டு மூர்சமத், விஜயன் இருவருமே பிரமித்துத் திரும்ப, அவர்கள் எதிரில் படகோட்டிக் கிழவனாக நந்தன் நின்றிருந்தான்.

''பெரியவரே!'' என்று வியப்பும் மகிழ்ச்சியும் கலந்த குரலில் நந்தனை அழைத்த விஜயபாகு, ''இங்கு எப்படி வந்தீர்?'' என்றும் வினவினான்.

''அரசகுமாரியைப் பார்க்காமலிருக்க முடியாமல் கலிங்கத்திலிருந்து கிளம்பி வந்தேன். இங்கும் பழைய தொழில் கிடைத்தது. உங்களைக் கரைசேர்க்க ஆண்டவன் என்னை நியமித்திருக்கிறான்,'' என்று கூறி, தூரத்தே கலா ஓயாவில் பிணைக்கப்பட்டிருந்த் பெரிய படகைக் காட்டினான் நந்தன்.

அந்தப் படகை உற்று நோக்கிய சிங்கள இளவல் அன்பு கனிந்த முகத்துடன், ''பெரியவரே! இங்கு நீர் வந்து எத்தனை நாளாகிறது? எத்தனை நாளாக இந்தப் படகு விடும் தொழிலை நடத்துகிறீர்?'' என்று வினவினான்.

zeevaa

நந்தன் தனது விழிகளை விஜயன்மீது திருப்பி, "மகாராஜா! நான் இங்கு வந்து ஓராண்டுக் காலம் ஆகிறது. கலிங்க மகாராஜாவின் மகள், என் குடிசையை அடிக்கடி அலங்கரிக்கும் அந்த ஒளிவிளக்கு போன பிறகு எனக்கு வாழ்க்கை கசந்து விட்டது. ஆகவே, இங்கு கிளம்பி வந்தேன். எங்கள் அரகுமாரியின் இருப்பிடம் தெரியவில்லை. அவ்வப்பொழுது பல செய்திகளைக் கேள்விப் பட்டேன். எப்படியும் கலிங்கன் செல்வியைப் பார்த்துவிடுவது என்ற தீர்மானத்தில் சிங்களம் வந்தேன். இங்கு தங்க ஏதாவது ஒரு வேலை வேண்டுமல்லமா? இந்தப் பழைய வேலையை மேற்கொண்டேன். என்னை இந்தக் கலா நதிக்கு அழைத்து வந்ததும் இந்தத் தொழிலை ஏற்படுத்திக் கொடுத்ததும் சிம்மபுரச் சிற்பிதான்." என்றான் நந்தன்.

"உங்கள் மனைவி, எங்களுக்கு அமுதம் போல் பால் காய்ச்சிக் கொடுத்தாளே, அந்தப் பெருமாட்டி?" என்று விஜயன் வினவி னான்.

"ஊரிலிருக்கிறாள். அரச குமாரியைப் பார்த்ததும் நான் ஊருக்குத் திரும்பிவிடுவேன்," என்றான் நந்தன்.

அடுத்து நந்தனின் படகில் சமதுடனும் புரவிகளுடனும் ஏறி அக்கரையில் இறங்கியதும் நந்தன் தோள்மீது கையை ஆதரவுடனும் அன்புடனும் வைத்து, "பெரியவரே! அனுராதாபுரத்தக்கு வந்து சேரும். இன்னும் பத்து நாட்களில் எனக்கு மகுடாபிஷேகம் நடக்கப் போகிறது. அங்கு நீர் கலிங்க மன்னன் மகளையும் பார்க்கலாம்," என்று கூறிவிட்டுப் புரவியில் தாவி ஏறினான்.

நாட்கள் பத்தும் ஓடின.

அனுராதபுரம் புதுமணப் பெண்ணைப்போல் விளங்கியது. பிக்கு கட்டிய பாஸாதா பழைய வெண்கல அரண்மனையைப் போலிருந்தது. உள்ளேயிருந்த தூண்களில் தங்க, வெள்ளிச் சிலைகள் விளக்கேத்தி நின்றன. பாஸாதாவின் இருபுறங்களிலும்

zeevaa

ஏராளமான வீரர்களும் பிக்ஷுக்களும் படைத் தலைவர்களும் நின்றிருந்தார்கள். பாஸாதாவின் நடுவில் தந்தத்தால் செய்த சிம்மாசனம் போடப் பட்டு அதன்மீது ஒரு பெரிய மயில் தோகை கிடந்தது.

சிவகோகர்ண ஸ்வாமிகளும், தர்மார்த்த, காம, மோக்ஷத் துறவிகளும் அரியணை அருகே நின்றிருக்க அவர்கள் வேத கோஷங்களை ஓத, பிக்ஷுக்கள் புத்த சரண மந்திரங்களைக் கோஷிக்க, விஜயன் தனது மூன்று ராணிகளுடனும் பாஸாதாவில் நுழைந்தான். எங்கும் ஜயகோஷம் ஒலித்தது. தந்த அரியணை அருகே விஜயனும் மகிஷிகளும் சென்றதும் அரியணை மீதிருந்த மயில் விசிறியைப் பிக்கு எடுத்துச் சுடர்விழியின் கையில் கொடுத்தார். விஜயபாகு அரியணையில் ஏறி அமர்ந்தான். அவனுக்கு இரு புறத்திலும் திரிலோகசுந்தரியும் லீலாவதியும் அமர, சுடர்விழி மட்டும் பக்கத்தில் நின்று மயில் விசிறியால் வீசினாள் மூவருக்கும். அடுத்து நடந்த சம்பிரதாய விழா முடிந்ததும் சிங்களத்தின் பரம்பரை மௌலியை விஜயன் தலையில் பிக்கு தனது இரு கைகளாலும் சூட்டினார். சபையின் மகிழ்ச்சி ஆரவாரத்துக்கும் ஜெயகோஷத்துக்கும் இடையே.

முடி சூட்டியதும் அரங்கில் நின்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினான் விஜயபாகு. முதலில் சூ-சின்னைப் பார்த்து, "மகாதித்தாவைக் காத்ததற்காக உனக்கு நான்கு மரக்கலங்களில் ஒன்றைத் தருகிறேன். நீ பழையபடி கடல் வீரனாகச் செல்லலாம். ஆனால் கொள்ளையடிக் காதே," என்றான்.

பிறகு சிற்பியை நோக்கி, "சிங்களத்தின் கடல் பலத்தைப் பெருக்க உன்னை அழைத்து வந்தேன். காலே துறைமுகத்தில் பெரும் மரக்கலங்களை உற்பத்தி செய். நீதான் இனி சிங்களத்தின் கடல் அதிகாரி," என்றான்.

கடைசியாக சிவகோகர்ண ஸ்வாமிகளுக்குத் தலை வணங்கி, "சுவாமிகள் கலிங்கம் திரும்புவதானால் தாங்கள் வந்த மரக்கலம்

zeevaa

இருக்கிறது. இல்லையேல் மகாதித்தா துறைமுகத்திலேயே சிவாலயம் இருக்கிறது,'' என்றான்.

சிவகோகர்ண சுவாமிகள் எழுந்து அந்தப் பெரிய சபையை நோக்கினார். பிறகு மன்னனை நோக்கி, ''விஜயபாகு! நீ சிறந்த சக்கரவர்த்தியாக நீதி தவறாமல் இந்தச் சிங்களத்தை ஆண்டு வா. திரிலோகசுந்தரி உன்முதல் மகேசியாக இருக்கட்டும். தசரதன் போல் மூன்று மனைவிகளுடன் இந்த மாநிலத்தை ஆளச் சிவபிரான் உனக்கு அருள் புரியட்டும். மகேந்திரகிரி ஆசிரமத்துக்கு நான் எனது சீடர்களுடன் திரும்புகிறேன். அங்கு ஆசிரமக் கடமை இருக்கிறது எனக்கு,'' என்று தமது முடிவை அறிவித்தார்.

அடுத்து, விஜயன், ரவிதேவனை அருகில் அழைத்து, ''எனக்கு ஒரு மாணிக்கத்தைத் தந்திருக்கிறாய். அதற்குப் பதிலாகக் கொடுக்கக் கூடியது எதுவும் இல்லை என்னிடம்,'' என்று கூறிச் சுடர்விழி மீது கண்களைத் திருப்பினான்.

''அவள் சுகமே என் பரிசு மகாராஜா. வேறெதையும் நான் எதிர்பார்க்கவில்லை,'' என்றான் ரவிதேவன்.

அந்தச் சமயத்தில் கூட்டத்தில் ஒரு புறத்தில் சலசலப்பு ஏற்படவே, அங்கு கண்களைத் திருப்பிய விஜயபாகு அரியணையிலிருந்து இறங்கி அங்கு சென்று வீரர்களால் தடுக்கப்பட்டிருந்த நந்தனைக் கையைப் பிடித்து அரியணைக்கு அழைத்து வந்தான்.

மந்திரிகளும் பிரதானிகளும் படைத் தலைவர்களும் பிக்ஷுக்களும் நிறைந்த அந்தச்சபை பிரமையில் ஆழ்ந்தது. சக்கரவர்த்தி கையைப் பிடித்து அழைத்துவரும் அந்த ஏழையைப் பார்த்து, 'இவன் யார்?' என்று பரஸ்பரம் கூட்டத்தார் கேட்டுக் கொண்டதால் ஏற்பட்ட சலசலப்பைப் பொருட்படுத்தாமல் விஜயன் நந்தனை அரியணைக்கருகில் அழைத்துச் சென்று திரிலோக சுந்தரியை நோக்கி, ''மகாராணி! நாம் முதலில் சந்தித்த இடத்துக்குரியவர், நம்மைக் கரை சேர்த்தவர்,'' என்று அறிமுகப்படுத்தினான்.

zeevaa

அவனைச் சதஸுக்குக்கும் அறிமுகப்படுத்தினான். நந்தன் கண்களில் நீர் சுரந்தது. ''பிக்கு! நந்தன் எனது விருந்தாளி. கவனித்துக் கொள்ளுங்கள்,'' என்று அவரிடம் நந்தனை ஒப்படைத்துவிட்டு மாளிகைக்குள் செல்ல விஜயன் ராணிகளுடன் எழுந்தான்.

விஜயனுக்கு பின்னால் மூர்சமத் நின்றான். அவனைக் கண்ட விஜயன் புன்முறுவல் கொண்டான், ராணிகள் கோபநகை காட்டினர்.

அன்று சுதந்திர அனுராதாபுரத்தில் முழுமதி மிகுந்த பெருமை யுடன் எழுந்து அந்த மாநகரையும் அதன் கோவில்களையும் வெள்ளி மயமாக அடித்தாள். அந்த இரவில் பழைய அரண்மனை யின் உப்பரிகைத் தாழ்வரையில் தனது மூன்று ராணிகளுடன் நின்ற விஜயன் அவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்கள் அறைகளைக் காட்டினான். ''இனியொரு விதி செய்வோம். அதன்படி நடப்போம். இன்று முதல் மூன்று நாட்கள் தினம் ஒரு ராணியுடன் வசிப்பேன். அடுத்து உங்களுக்கு மூன்று பெரிய மாளிகைகளைக் கட்டித் தருகிறேன்,'' என்று கூறினான்.

''மாளிகை வேண்டாம் எனக்கு'' என்றாள், சுந்தரி.

''மணாளன் தான் வேண்டும்,'' என்றாள் லீலாவதி.

''நீங்களிருந்தால் குடிசைபோதும் எனக்கு,'' என்றாள் சுடர்விழி.

''அப்பா! மூவரை மணந்த கஷ்டம் இப்பொழுது தெரிகிறது எனக்கு'' என்ற விஜயனை மூவரும் நெருங்கி, ''என்ன சொன்னீர்கள்?'' என்று ஒரே சமயத்தில் வினவினார்கள்.

''அடடே! விடுங்கள் என்னை, உங்களிஷ்டப்படி நடக்கிறேன். இன்று நீங்கள் உங்கள் அறைகளுக்குள் செல்லுங்கள்,'' என்றான்.

''நீங்கள்?'' என்று வினவினாள் லீலாவதி.

''பட்டாபிஷேக தினத்தன்று சிங்கள மன்னர்கள் தவமிருப் பார்கள். காமத்தில் ஈடுபடமாட்டார்கள்,'' என்று கூறி, அவர்கள்

zeevaa

ஒவ்வொருவருக்கும் ஓர் அறையைக் காட்டி விட்டு அவர்கள் உள்ளே சென்றதும் உப்பரிகைத் தாழ்வரையில் அமர்ந்து கண்களை மூடிக்கொண்டான்.

மகாராணிகள் மூவரும் தங்கள் அறைகளில் நுழைந்தார்கள். நேரம் ஓடியது. வெண்மதியும் தியானத்தில் உட்கார்ந்திருந்த விஜயன் மீது தனது முழு நிலவைப் பொழிந்தான். தியானத்திலிருந்த மகாராஜா கண்களை விழித்து அப்புறமும் இப்புறமும் பார்த்துப் பூனைபோல் உப்பரிகையின் முதல் அறையை நோக்கி நடந்து அந்த அறைககதவை மெதுவாகத் திறந்தான். உள்ளே பஞ்சணையின் பக்கத்தில் நின்ற திரிலோகசுந்தரி தனது ஆடைகளை மெதுவாகக் களைந்து கொண்டிருந்தாள். சாளரத்தின் மூலம் அவள் மீது வெண்ணிலவும் விழுந்து அவள் மார்பகக் கச்சையை ஊடுருவ முயன்று கொண்டிருந்தது. கதவு திறந்ததும் அவள் திரும்பி நோக்கினாள், கதவை மூடிவிட்டு விஜயன் அவளை மெதுவாக அணுகி "உனக்கேன் கஷ்டம்?" என்று அவள் கச்சையை அவிழ்க்க முயன்றான்.

அவள் தடுக்கவில்லை. "இதுதான் தவமா?" என்று புன்னகை காட்டினாள்.

"ஆம் இதுவும் ஒருவித தவம். இதிலும் ஐம்பொறிகளும் நிலைக்கும்." என்றான்.

"ஓகோ!"

"ஆமாம்,"

"நீங்கள் இங்கு வந்தது...?"

"மூத்த மகேசி என்பதால்," என்று கூறிய விஜயன், அவளை மெதுவாகப் பஞ்சணையில் படுக்கவைத்து, "சுந்தரி! நான் இங்கிருந்து கிளம்பியபோது லீலாவதி சோழர்சிறையில் இருந்தாள். ஆகையால் அவளை மணக்க முடியவில்லை. உன்னைத்தான்

zeevaa

முதலில் மணந்தேன், சிவகோகர்ண ஸ்வாமிகள் முன்னிலையில். பிறகு சுடர்விழியைச் சந்தித்தேன். அவள் என் படைத் தலைவன் மகளாதலால் அவளை இரண்டாவது ராணியாக்க முடியவில்லை. அவள் மூன்றாவது....'' என்று சொல்லிக் கொண்டு போன விஜயனை, ''அவள் கைகேயியா?'' என்று வினவினாள் திரிலோகசுந்தரி.

''இல்லை, மகிஷி: அவள் ராதை, ருக்மணிக்கும் பாமாவுக்கும் அடுத்தபடி,'' என்றான் விஜயன்.

''அப்படியானால் அவளிடமே போகலாம். கிருஷ்ணனுக்கு ராதையிடம் தான் அதிக மோகம்,'' என்றாள் சுந்தரி.

''இருக்கலாம். ஆனால் ருக்மணி தான் அவனுக்கு உகந்தவள், பட்ட மகிஷி, உன்னைப்போல், சகல தர்மங்களுக்கும் உடனிருப் பவள். அவன் இஷ்டத்தை மீறாதவள். வீணாகப் பேசாதவள்,'' என்று கூறித் திரிலோகசுந்தரி மீது சாய்ந்து அவளைத் தழுவினான். அவள் ஆடைகள் கலைய முற்பட்டன. அவன் கைகள் உடல் பூராவையும் துழாவின.

''இதுதான் தவமா?'' என்று பழைய கேள்வியை மீண்டும் தொடுத்தாள் சுந்தரி.

''ஆம். இதுவும் ஒரு விதத் தவம்தான்.'' என்றான் விஜயன்.

''என்ன தவமோ?'' அவள் உணர்ச்சிகள் சுழன்றன, கட்டுமீறிக்கொண்டிருந்தன.

''இது நமது மதம் சொல்லும் மோக்ஷம்,'' என்று அவள் மார்புக்கருகில் முணுமுணுத்தான் விஜயன்.

''என்ன மத மோக்ஷமோ? அப்படி ஏதும் கேள்விப் பட்டதில்லையே!'' என்று சுந்தரி குழைந்தாள்.

''மதத்தில் அதற்கு வேறு பெயர்.''

zeevaa

''வேறு பெயரா?''

''ஆம். ஒரு நிலையை நிர்வாணம் என்று அழைக்கிறார்கள்.''

அந்த நிலையைத் தனக்குத் துரிதமாக அந்த வெறியன் அளிப்பதைப் புரிந்து கொண்டாள் திரிலோகசுந்தரி ''இது மதம் சொல்லும் மோட்சமல்ல, விஜய மோட்சம்.'' என்று முணு முணுத்தாள் அவள்.

முணுமுணுத்த மதுர இதழ்கள் மூடப்பட்டன, வெறிபிடித்த ஆடவனின் முரட்டு உதடுகளால். முரட்டுத்தனம் உதடுகளோடு நிற்கவில்லை. அவள் அழகின் எழுச்சிகளிலெல்லாம் முத்திரைகள் மூர்க்கத்துடன் பதிந்தன. கைகள் அவள் உடலைத் துப்பறிந்தன, துளைத்தன, நெறித்தன. அந்த வீரனின் உணர்ச்சிகள் அடியோடு சிதறிக் கிடந்தன. அந்த நேரத்தில் சாளரத்தின்மூலம் செவ்விய ஒளியொன்று வீசியது. அது மகாரத்தினத்தின் ஒளியென்பதை அறிந்து கொண்ட விஜயன், அது எதிர்ப்புற மாளிகையிலிருந்து வருவதை உணர்ந்தான். அதில் இருவரும் மூழ்கினார்கள். மாணிக்க உடல்கள் இரண்டும் வெறியுடன் இழைந்தன.




(முற்றும்)

zeevaa

பின்னுரை :

சோழர்கள் படையெடுக்கவில்லை சில ஆண்டுகளுக்கு. காரணம் அவர்கள் பலக் குறைவல்ல. சோழ நாட்டில் அரியணைப்போட்டி இருந்ததால் சிங்களத்தைக் கவனிக்க அவர்களுக்கு அவகாச மில்லை. இது வரலாறு கண்ட உண்மை.

விஜயபாகு அனுராதபுரத்தையும் புலஸ்திய நகரத்தையும் திரும்பப் பழுது பார்த்துப் பழைய நிலைக்குக் கொண்டு வந்தான் என்று மகாவம்சம் கூறுகிறது.

மூன்று மகிஷிகளுடன் தனித்தனியே உறவாடிய விஜயன் கடைசியில் புலஸ்திய நகரத்துக்கு வந்து வசித்தான் என்பதும் வரலாறு.

போர்களில் சிதைந்த தாகாபாக்கள் சீர்படுத்தப்பட்டன. புத்த மதம் மீண்டும் சிங்களத்தில் வளர்ந்தது. ஆனால் அதன் முக்கிய தத்துவமான அஹிம்சை வளரவில்லை. விஜயனுக்கு அடுத்த தலைமுறைகளிலும் போர்கள் மலிந்தன. போதிசத்வர் மதம் செழித்த நாட்டில்.

பிற்காலத்தில் பிக்கு சொன்னார், "மனிதன் வெறியை ஒடுக்கும் சக்தி மதத்தின் நெறிக்கு இல்லை" என்று. இந்தத் தத்துவத்தை காலம் நிரூபித்தது.

*****

zeevaa

# விஜயபாகு காலத்தில் 11–12'வது நூற்றுண்டுகளில் சிங்களம்




zeevaa

## சிங்களத் தீவு படத்தில் குறிக்கப்பட்டுள்ள முக்கிய இடங்களும் அங்கு நடந்த நிகழ்ச்சிகளும்

1. சிலாபம். சிங்களத்தின் முத்துக் குளிக்கும் துறை. ஹண்டுமானிலிருந்து சிங்களம் வந்த விஜயன் இங்கு இறங்குகிருன்.

2. சிலாபத்தில் இறங்கியதும் கலிங்கக் கப்பலையும் அதிலிருந்த மாலுமிகளையும் ஆதிமல்லனுடன் அனுப்பிவிட்டு, திரிலோகசுந்தரியை பிக்கு, சிற்பி, தர்மர் முதலானவர்களுடன் மகாகாமம் என்ற இடத்திலுள்ள புத்த விஹாரத்துக்கு அனுப்பி வைக்கிருன்.

3. சிலாபத்திலிருந்து மூர்சமதுடன் நுவரெலியாவின் அருகிலுள்ள அசோக வனத்தில் ரவிதேவன் மகளான சுடர் விழியை சந்தித்து அவளிடம் காதல் கொண்டு அவளுடன் இராவண மலைக்கு அருகிலுள்ள அவன் மலைக் குடிசைக்குச் செல்கிருன். அங்கு தனது படைத் தலைவர்களான ரவிதேவனையும் காலனையும் சந்தித்து அங்கு வந்த சோழர் படையொன்றை தோற்கடிக்கிருன்.

4. அங்கிருந்து சுடர்விழியுடனும் மூர்சமதுடனும் சீதாவகா நதிக்கு அருகிலுள்ள மலைக் குகையில் தங்குகையில் இளையகேசதாது என்பவன் சுடர்விழியை கடத்திச் சென்று ஒரு பாழடைந்த மண்டபத்தில் சிறை வைக்கிருன். அவனை நாடிச் சென்ற விஜயன் சுடர்விழியை விடுவித்து இளையகேசதாதுவை விரட்டிவிடுகிருன்.

5. பிறகு ஸமந்தகூட மலையுச்சியிலுள்ள புத்தர்பிரான் பாதத்தை தரிசிக்க சுடர்விழியுடனும் மூர்சமதுடனும் சென்று சுடர் விழியை மணப்பதாக ஸ்ரீபாதத்தின் முன்பு ஆணையிடுகிருன். அங்கு வந்த சூ—சின் தான் சிங்களத்துக்குச் செல்ல இயலாததால் வேறொரு மரக்கலத்தில் வந்துவிட்டதாகச் சொல்கிருன். அங்கிருந்து ஒரு பாழடைந்த மண்டபத்தில் சுடர்விழியுடன் கலந்திருக்கும்போது தனது போர்த் திட்டத்தை வகுக்கிருன். மகா காமத்திலிருந்து சுந்தரியை அழைத்து வர பிக்குவையும் மூர்சமதையும் அனுப்புகிருன்.

6. சோழர்களுடன் இறுதிப் போரை வலுப்படுத்துகிருன்.

7. அந்த சமயம் குட்டசாலக மண்டலத்தில் புரட்சி செய்த இளையகேசதாதுவை முறியடித்து விரட்டிவிடுகிருன்.

8. பிறகு சிங்களத்தின் தெற்குக் கோடியிலுள்ள மஹாநாககுலாவில் பாசறை அமைத்து படை திரட்டுகிருன்.

9. சிற்பியையும் சூ—சின்னையும் காலே துறை முகத்தில் உள்ள கப்பல்களுடன் மேலைக் கடலைப் பாதுகாக்கக் கட்டளையிடுகிருன். அங்கு சிவகோகர்ண ஸ்வாமிகள் சோழ நாட்டிலிருந்து ஒரு மரக்கலத்தில் லீலாவதியுடன் வரவே, அவர்களை மகாநாக குலாவுக்கு அழைத்து வருகிருன் விஜயன். தளவாடங்களையும் காலேயிலிருந்து பாசறைக்கு எடுத்து வருகிருன்.

10. மஹாநாககுலாவிலிருந்து ஜேட்டதிஸ்ஸன் தலைமையில் ஒரு படையை தக்ஷிண தேசத்தை அடுத்த மேற்கு வழியிலும், நுவரகிரியை ஒரு படையுடன் கிழக்கு கடலோர வழியாகவும் அனுப்புகிருன். ஜேட்டதிஸ்ஸன் புத்த காமத்தைப் பற்றி அனுராதாபுரம் செல்கிருன்.

11. கிழக்குக் கடலோர வழியாகச் சென்ற நுவரகிரி சோழர்கள் தலைநகரான புலஸ்திய நகரத்தை முற்றுகையிடுகிருர். மகாநாக குலாவிலிருந்து விஜயனும் பெரும் படையுடன் கிளம்பி மகாவலி கங்கைக் கரையோரமாக சென்று புலஸ்திய நகரத்தைத் தாக்குகிருன். இரு படைகளுக்கும் நடுவில் சிக்கிய புலஸ்திய நகரம் விழுந்து விடுகிறது. அப்பொழுது ஜேட்டதிஸ்ஸனிடமிருந்து அனுராதாபுரம் கைவசமாகிவிட்ட செய்தி வருகிறது.

12. புலஸ்திய நகரத்திலிருந்து தனது ராணிகளுடன் கிளம்பிய விஜயபாகு கலா ஓயா வழியாக அனுராதாபுரம் போகிருன்.

13. அனுராதாபுரம் சிங்களரின் புராதன தலைநகர். கடைசியில் விஜயன் இலங்கையின் சக்கரவர்த்தியாக முடிசூடுகிருன்.

14. சோழர்கள் படைகளை இறக்கும் துறைமுகம். அதுவும் இறுதியில் விஜயன்

zeevaa